பி.ஆர்.ஜெயராஜன்

நிருவாகமுறைச் சட்டம்

Administrative Law

5-ஆம் பதிப்பு

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்®

பி.ஆர்.ஜெயராஜன்

அவர்களின்...

நிருவாகமுறைச் சட்டம்

(பிரச்சனைகளுக்கான தீர்வுகளுடன்)

Administrative Law

(With Solutions to Problems)

• இது ஒரு ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ் தயாரிப்பு •

என்னுரை

பேரன்பு கொண்ட நெஞ்சங்களே,

வணக்கம்.

இந்த 'என்னுரை' வெறுமனே எனது உரை மட்டுமல்ல. இது நிருவாக முறைச் சட்டம் எனும் கட்டடத்தின் பெருங்கதவுகளை திறக்க உதவும் திறவுகோல் என்றே கூறலாம். இச்சட்டத்தின் அடிப்படையை இது மிக எளிய முறையில் விளக்குகிறது. எனவே இதை வாசித்துக் கொண்டால் இச் சட்டத்தை புரிந்து கொள்வது மிகச் சுலபம். மேலே தொடருவோமா?

அதாவது, ஒரு சட்டமென்றாலே நமது சிந்தனைக்கு உடனடியாக எட்டுவது, சட்டமன்றத்தால் அல்லது பாராளுமன்றத்தால் பல சட்டப் பிரிவுகளை உள்ளடக்கி இயற்றப்பட்ட சட்டம்தான். ஆனால் இங்கு நிருவாக முறைச் சட்டம் அப்படி இயற்றப்பட்ட ஒரு சட்டமல்ல. அதற்கென தனியாக சட்டப் பிரிவுகளும் இல்லை. நிருவாகமுறைச் சட்டம் என்பது, அரசியலமைப் புச் சட்டத்தை அடித்தளமாகக் கொண்டு, வழக்குகளின் பொழுது உச்ச அல்லது உயர் நீதிமன்றத்தால் கொடுக்கப்படும் தீர்ப்புவழிச் சட்டங்களின் (Case Laws) மூலமாக வேகமாக வளர்ந்து வரும் ஒரு சட்டமாகும். எனினும் இன்று நிருவாகமுறைச் சட்டம் தனக்கென தனியாக ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

பரந்த நிருவாகமுறைச் சட்டத்தை எளிய முறையில் அறிந்து கொள்ள, பின்வரும் சில அடிப்படையான விவரங்களை நாம் சுருக்கமாக அறிதல் மிகவும் அவசியமாகும். அஃதாவது, ஒரு அரசாங்கத்தின் அங்கங்கள் (Organs of the Government) மூவகைப்படும். அவை (1) சட்டமியற்றுத்துறை (Legislative); (2) நிருவாகத்துறை [Executive (or) Administrative]; (3) நீதித்துறை (Judiciary). இவை மூன்றிடமும் மூவகைப்பட்ட அதிகாரங்கள் அரசியலமைப் பால் அளிக்கப்பட்டுள்ளன. அதாவது சட்டமியற்றுத்துறை, சட்டங்களை இயற்றுகிறது. நிருவாகத்துறை என்பது, அச்சட்டங்களைக் கொண்டு நாட்டின் நிருவாகத்தைச் செய்கிறது. நீதித்துறை என்பது, தன் முன் எழும் வழக்குகளில் அச்சட்டங்களை அடிப்படையாக் கொண்டு நீதி வழங்குகிறது; அச்சட்டங்களுக்கு பொருள் விளக்கம் அளிக்கிறது.

முந்தய காலகட்டங்களில் செயல்பட்ட அரசுகள், மக்கள் நலனில் அதிகம் அக்கறை செலுத்தவில்லை. நாட்டின் பாதுகாப்பு குறித்து அந்த அரசுகள் கவலைப்பட்டதே தவிர, மக்கள் நலனை பேணிக்காக்க முயல வில்லை. மக்கள் நன்றாக இருந்தால்தான் நாடு வளம் பெறும் என்ற கொள்கையை கருத்தில் கொள்ளத் தவறிவிட்டன. நாளடைவில் (குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலகட்டங்களில்) அரசின் இந்த சித்தாந்தம் மாறத் தொடங்கியது. மக்கள் நலனில் அக்கறை செலுத்தாமல்

தலையிடாக் கொள்கையை (Policy of Laissez faire) பின்பற்றி வந்த அரசுகள், மக்களுக்காக அரசாங்கத்தை நடத்த வேண்டும் என்பதையும், ஆட்சியில் தொடர்ந்திருக்க மக்கள் நல அரசாக (Welfare State) மாற வேண்டும் என்பதையும் உணர்ந்தன. அப்போது அரசாங்கத்தின் பணிகளும் அதிகமாயின. மக்கள் நலனுக்காக எண்ணற்ற சட்டங்களை சூழ்நிலைக்கு ஏற்றவாறும், விரைவாகவும் இயற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டது.

ஆனால் எல்லா சூழ்நிலைகளுக்கும் பொருந்தும் வண்ணமோ, எதிர்வரும் காலத்தில் என்ன நிகழும் என்பதை அறிந்து அதற்கேற்றவாறோ சட்டங்களை இயற்ற சட்டமியற்றும் அங்கமான பாராளுமன்றத்தாலோ அல்லது சட்டமன்றத்தாலோ முடியவில்லை. ஏனெனில் நேரமின்மை, பணிச்சுமை, துறை சார்ந்த நுட்பமின்மை ஆகிய காரணங்களால் பாராளு மன்றமும், சட்டமன்றமும் தங்களுக்கே உரிய சட்டமியற்றும் அதிகாரத்தை (அதாவது விதியாக்க அதிகாரத்தை) நிருவாகத்துறையிடம் ஒப்படைத்தன [Delegation of Legislative Power (or) Delegated Legislation]. இந்த அதிகாரத்தைக் கொண்டு பாராளுமன்றம் அல்லது சட்டமன்றம் இயற்றிய தோற்றுவாய் சட்டங்களின் (Parent Act) கீழ் நிருவாகத்துறை அல்லது சட்டத்தால் அமைக்கப்பட்ட நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் (Administrative Authorities), முகவர் நிலைகள் (Administrative Agencies) ஆகியவை விதிகள் (Rules), ஒழுங்கு முறைகள் (Regulations), துணை-விதிகள் (Bye-laws), ஆணைகள் (Orders) ஆகியவற்றைச் செய்கின்றன. இது **நிருவாகத்துறையின் சட்டமியற்றும் பணி [Legislative Function of the Administrative]** எனப்படுகிறது.

இது ஒரு புறமிருக்க, மற்றொரு புறம் புதிது புதிதாக பல சட்டங்கள் இயற்றப்பட்டதால், அச்சட்டங்களின் கீழ் பல வழக்குகளும் எழுந்தன. ஆனால் அவற்றையெல்லாம் தீர்த்து வைக்க நீதித்துறைக்கு நேரமில்லாமல் இருந்தது. இதனால் நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்தால், அதில் தீர்வு கிடைக்க அதிக காலதாமதம், அலைச்சல் ஆகியவை ஏற்பட்டன. மேலும் நீதி கிடைக்க நீதிமன்றக் கட்டணம், வழக்குரைஞர் கட்டணம் ஆகியவற்றிற்கு அதிகம் செலவழிக்க வேண்டியிருந்தது. எனவே நீதித்துறையானது தனக்கே உரித்த நீதி வழங்கும் அதிகாரத்தை சில பிரச்சனைகள், தகராறுகளைப் பொறுத்து நிருவாகத்துறையிடம் ஒப்படைத்தது. நிருவாகத் துறையானது தீர்ப்பாயங்கள், விசாரணைக் குழுக்கள், ஆணையங்கள் ஆகியவற்றை சட்டங் களின் மூலமாக அமைத்து அவற்றின் வாயிலாக வழக்குகளைத் தீர்த்தன. இங்கு அலைச்சலில்லாமல், அதிகச் செலவில்லாமல், எளிய நடைமுறைகளின் கீழ் விரைவாக வழக்குகள் தீர்க்கப்பட்டன. இது நிருவாகத்துறையின் நீதித்தீர்ப்பு அதிகாரம் (Administrative Adjudication (or) Adjudicatory Power of Administrative) எனப்படுகிறது. மேலும் இதனை **நிருவாகத்துறையின் நீதித்தன்மை வாய்ந்த பணி (Quasi-judicial function of the Administrative)** என்றும் அழைப்பர்.

மேற்கண்ட இரண்டு அதிகாரங்கள் மட்டுமில்லாமல், நிருவாகத்

துறைக்கு சில விஷயங்களில் முடிவெடுக்க அல்லது நடவடிக்கைகள் மேற்கொள்ள தன்விருப்புரிமை அதிகாரமும் **(Discretionary Power of Administrative)** வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இன்றைய நிருவாகத்துறை அரசின் நிருவாகப் பணிகளைக் **(Administrative Functions)** கவனிக்கிறது; அதே சமயத்தில் சட்டமியற்றும் அதிகாரம், நீதித்தீர்ப்பு வழங்கும் அதிகாரம் எனும் மேற்கண்ட இரண்டு அதிகாரங்களைக் கூடுதலாகப் பெற்றுள்ளது. மேலும் தன்விருப்புரிமை அதிகாரத்தையும் பெற்றுள்ளது. அரசின் மேற்கண்ட மூன்று அங்கங்கள் தனித்தனியாக செய்ய வேண்டிய பணிகள், ஏறத்தாழ நிருவாகத் துறையிடம் ஒருங்கே ஒப்படைக்கப்பட்டுள்ளதை மேற்கண்ட நிலைப்பாடு சுட்டிக்காட்டுகிறது.

எங்கு அதிகாரங்கள் அதிகமாக உள்ளதோ, அங்கு ஆணவமும் குடிகொண்டுவிடும் என்பது எழுதப்படாத நியதி. அந்த வகையில் மேற்கண்ட வாறு அதிகாரங்களைப் பெற்றுள்ள நிருவாகத்துறையானது ஏதேச்சதிகாரமாக செயல்பட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட பிற உரிமைகளில் தலையிட்டால், அதை எப்படி தடுப்பது? அதிகார துஷ்பிரயோகம் செய்தால் அல்லது அதிகாரவரம்பு மீறிச் செயல்பட்டால் அதை எப்படி தட்டிக் கேட்பது? இதற்கு வகை செய்யும் முகமாக, பின்வரும் கட்டுப்பாடுகளும், வரம்புகளும் நிருவாகத்துறையின் மீது செயல்படுத்தப்படுகின்றன.

அவற்றில் முதலாவதாக, நிருவாகத்துறையின் சட்டமியற்றும் அதிகாரத்தின் மீது நீதித்துறையும், சட்டமியற்றுத்துறையும் சில கட்டுப்பாடுகளை (Judicial and Legislative Control over Delegated Legislation) விதித்துள்ளன. அக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் நிருவாகத் துறை தனது சட்டமியற்றும் அதிகாரத்தைச் செயல்படுத்த வேண்டும். அக்கட்டுப்பாடுகளை மீறினால், நிருவாகத்துறை செய்த விதிகள், ஒழுங்கு முறைகள், துணை-விதிகள், ஆணைகள், ஆகியவை அதிகாரவரம்பு மீறியதாகும்; செல்லாததாகும்.

இரண்டாவதாக, நிருவாகத்துறையானது (நிருவாகத்துறை அதிகார அமைப்புகள், தீர்ப்பாயம், ஆணையம் போன்றவை) தனக்களிக்கப்பட்டுள்ள நீதித் தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை (Adjudicatory Power of Administrative) துஷ்பிரயோகம் செய்து, தவறான தீர்ப்புகளை (முடிவுகளை) வழங்கினால், அதனால் பாதிக்கப்படுவது மக்கள்தாம். எனவே நிருவாகத்துறை தோற்றுவாய் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றியும், இயற்கை நீதிக் கோட்பாடுகளைப் (Principles of Natural Justice) பின் பற்றியும், தன் முன் உள்ள பிரச்சனையில் முடிவு அல்லது நடவடிக்கை எடுக்க வேண்டும். இயற்கை நீதிக் கோட்பாடுகள் மீறப்பட்டால், சம்பந்தப் பட்ட முடிவு அல்லது நடவடிக்கையானது இல்லா நிலையது (void) என்றும், செல்லாதது (invalid) என்றும் நீதிமன்றத்தால் விளம்பப்படும்.

மூன்றாவதாக, நிருவாகத்துறையானது தோற்றுவாய் சட்டத்தால்

தனக்களிக்கப்பட்டுள்ள தன்விருப்புரிமை அதிகாரத்தை (Administrative Discretion) தவறாகப் பயன்படுத்தாமலிருக்க, அந்த அதிகாரத்தின் மீது உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்களானது நீதிமுறை மறுஆய்வு (Judicial Review) மூலம் கட்டுப்பாட்டை செயல்படுத்துகின்றன. இது நிருவாகத்துறை தன்விருப்புரிமை அதிகாரத்தின் மீதான நீதிமுறைக் கட்டுப்பாடு அல்லது நீதி முறை மறுஆய்வு [Judicial Control over Administrative Discretion (or) Judicial Review on Administrative Discretion] எனப்படுகிறது.

நான்காவதாக, நிருவாகத்துறை நடவடிக்கைகளினால் (Administrative Actions) எவரது உரிமையேனும் பாதிக்கப்பட்டால், அவருக்கு அரசியலமைப்பின் கீழ் அய்ந்து வகையான நீதிப்பேராணைகளின் (Five kinds of Writs) வாயிலாக உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்கள் தீர்வழிகளை வழங்குகின்றன (Constitutional Remedies). மேலும் உரிமையியல் சட்டப்படி உறுத்துக்கட்டளை (Injunction), விளம்புகைத் தீர்வழி (Declaratory Relief) ஆகியவற்றையும் சாதாரண உரிமையியல் நீதிமன்றங்கள் (Civil Law Remedies) வழங்குகின்றன. மேலும் சட்டரீதியான தீர்வழிகளும் (Statutory Remedies) வழங்கப்படுகின்றன. இவையெல்லாம் நிருவாகத் துறை நடவடிக்கைகளின் மீதான நீதிமுறைக் கட்டுப்பாடு அல்லது நீதிமுறை மறுஆய்வு (Judicial Control or Judicial Review of Administrative Action) என்று அழைக்கப்படுகின்றன.

இவ்வாறு நிருவாகத்துறைக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களையும், அவற்றைக் கொண்டு அது ஏதேச்சதிகாரமாக செயல்படாமல் கண்காணிக்க கட்டுப்பாடுகளையும் விதித்து ஒழுங்குபடுத்துவதுதான் 'நிருவாகமுறைச் சட்டம்'. இதற்கு அடிப்படையாக பின்வரும் ஒரு கதையைக் கூறலாம்.

ஒரு முனிவன் இறைவனை நோக்கி கடுந்தவம் புரிந்தான். அவனது தவத்தை மெச்சி, இறைவன் தோன்றி, 'என்ன வரம் வேண்டும்?' என்று அவனிடம் கேட்டார். அதற்கு அவர் தனக்கு சாகாவரம் வேண்டும் என்றும், எவர் தலை மீதாவது தான் கை வைத்தால் அவருக்கு மரணம் ஏற்பட வேண்டும் என்றும் இரண்டு வரங்களைக் கேட்டான். அந்த வரங்களை இறைவன் அவனுக்கு கொடுத்தார். ஆனால் அவன் என்ன செய்தான் தெரியுமா? தனக்கு வரம் கொடுத்த இறைவன் தலை மீதே கை வைத்துப் பார்க்கத் துணிந்தான். தான் அளித்த வரங்களை அம்முனிவன் தனக்கெதிராகவே துஷ்பிரயோகம் செய்வதைக் கண்ட இறைவன், அவனை அழிக்க வழக்கம் போல் அவதாரம் எடுத்தார். அப்பொழுது அம்முனிவன் தனது தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்டான். அவனை இறைவன் மன்னித்து, பாப விமோசனம் கொடுத்தார். இதுதான் 'வரம் கொடுத்தவன் தலையில் கை வைக்கும் கதை'. ஆனால் இந்தக் கதைதான் நிருவாகமுறைச் சட்டத்திற்கும் அடிப்படையாக உள்ளது என்று சொன்னால் அதை மறுக்க முடியாது. ஏனெனில், இறைவன் இடத்தில் உள்ள சட்டமியற்றுத்துறையும், நீதித்துறையும் 'வாங்கள்' எனும் தங்கள் அதிகாரங்களை நிருவாகத்துறைக்கு அளிக்கின்றன. அந்த அதிகாரங்களை முறையான விதத்தில் பயன்படுத்தி மக்கள் சமுதாயம் மேம்பட பாடுபடாமல்,

அவற்றை துஷ்பிரயோகம் செய்து, மக்களுக்கு எதிராக நிருவாகத்துறை பயன்படுத்தினால், வரம் கொடுத்த சட்டமியற்றுத்துறையும், நீதித்துறையும் 'நிருவாகமுறைச் சட்டம்' எனும் அவதாரத்தை எடுக்கின்றன. அதன் மூலம் நிருவாகத்துறையின் ஏதேச்சதிகாரப் போக்கை கட்டுப்படுத்துகின்றன. நீதி முறை மறுஆய்வின் (Judicial Review) மூலம் தட்டிக் கேட்கின்றன. இதனால் நிருவாகத்துறை தவறான வழியில் நடக்காமல், தனக்களிக்கப்பட்ட அதிகாரங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நிருவாகமுறைச் சட்டம் வகை செய்கின்றது. இதனால் மக்களும் பயனடைகிறார்கள். எங்கு மக்கள் பயடையும் விதத்தில் அரசாங்கம் நடக்கின்றதோ, அங்கு மக்கள் நல அரசு மலர்கின்றது.

இத்துடன் நிருவாகமுறைச் சட்டம் நின்றுவிடவில்லை. அது ஒப்பந்தங்களில் மற்றும் தீங்குச் செய்கைகளில் அரசாங்கத்தின் பொறுப்பு நிலையாது (Contractual and Tortious Liablity of Government) என்பதையும், குடிமக்களின் குறைகளைக் களைய 'ஆம்புட்ஸ்மன்' (Ombudsman) எனும் பாராளுமன்ற நிருவாகமுறை ஆணையாளர் (Parliamentary Commissioner) நியமனத்தையும், அரசாங்கம் அளிக்கும் உறுதிமொழிகளுக்கு (Promissory Estoppel) அது எந்த அளவிற்கு கட்டுப்பட்டது என்பதையும், பொது (அரசு) நிறுவனங்கள் (Public Undertakings), பொதுக் கூட்டுருக்கள் (அல்லது) அரசுக் கழகங்கள் (Public Corporations) ஏற்படுத்தப்பட வேண்டியதின் அவசியத்தையும் விளக்குகிறது. இவ்வாறு மக்கள் நலத்தைப் பேணுவதில் நிருவாகமுறைச் சட்டத்தின் பணி மகத்தானதாக உள்ளது.

இத்தகு சிறப்பு மிகு நிருவாகமுறைச் சட்டத்தை எளிய மொழி நடையில், உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்கள் பல முக்கிய வழக்குகளில் வழங்கிய தீர்ப்புகளுடன் இந்நூலில் அழகுத் தமிழில் கோவையாக எடுத்துரைத்துள்ளேன். இன்று அரசாங்க நிருவாகத்துடன் தொடர்பு கொள்ளாமல் எவரும் தங்கள் அன்றாடப் பணிகளைச் செய்ய முடியாது என்று சொல்லலாம். எனவே ஒவ்வொருவரும் நிருவாகமுறைச் சட்டத்தை அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

அந்த வகையில் இந்நூல் அனைவருக்கும் பயன் நல்கும் என்ற நம்பிக்கையில் எனது என்னுரையை இங்கு முடிக்கின்றேன்.

வாழ்த்துகள்!

என்றும் அன்புடன்,

பி.ஆர்.ஜெ.

பொருளடக்கம்

1. நிருவாகமுறைச் சட்டம் - ஒரு அறிமுகம்
[Administrative Law - An Introduction] 1

– நிருவாகமுறைச் சட்டத்தின் வரையறை 1

- அறிஞர் அய்வர் ஜென்னிங்ஸ் கூறும் வரையறை 2
- அறிஞர் வாடே கூறும் வரையறை 2
- எழுத்தாளர் கென்னத் கல்ப் டேவிஸ் கூறும் வரையறை 2
- அறிஞர் கார்னர் அவர்களின் வரையறை 4
- அறிஞர்கள் கிரிஃபித் மற்றும் ஸ்டிரீட் கூறும் வரையறை 4
- அறிஞர்கள் ஜெயின் மற்றும் ஜெயின் கூறும் வரையறை 5
- அறிஞர் சி.கே.தக்வாணி கூறும் வரையறை 5

– நிருவாகமுறைச் சட்டத்தைக் கற்பதின் இன்றியமையாமை 7

- நிருவாகமுறைச் சட்டத்தின் குணாதிசயங்கள் 8

– நிருவாகமுறைச் சட்டத்தின் தன்மை மற்றும் பரவெல்லை 10

- தன்மை 10
- பரவெல்லை (அல்லது) நோக்கெல்லை (அல்லது) அளாவுகை 12

– நிருவாகமுறைச் சட்டமும் அரசியலமைப்புச் சட்டமும் 13

- நிருவாகமுறைச் சட்டத்திற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் உள்ள உறவு 14
- நிருவாகமுறைச் சட்டத்திற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடு 15

– நிருவாகமுறைச் சட்டத்தின் வேகமான வளர்ச்சியும் அதற்கான காரணங்களும் 17

– பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் இந்திய நாட்டில் நிருவாகமுறைச் சட்டத்தின் வளர்ச்சி 22

- பிரான்சு நாட்டில் 23
- இங்கிலாந்து நாட்டில் 26
- அமெரிக்க நாட்டில் 30
- இந்திய நாட்டில் 33

நிருவாகமுறைச் சட்டத்திற்கு அரசியலமைப்புச் சட்டம் வகுத்துக் கொடுத்த இரு அடிப்படைக் கொள்கைகள்
[Two Basic Constitutional Principles for Administrative Law] 43

– சட்டத்தின் ஆட்சி 43

- சட்டத்தின் ஆட்சி எனும் கோட்பாட்டின் தோற்றம் 46
- பேரா. டைசி கூறும் முன்று பலதரப்பட்ட பொருள்கள் 47
- குறைபாடுகள் - ஒரு திறனாய்வு 48
- சட்டத்தின் ஆட்சி முறை குறித்த டெல்லி பிரகடனம் 50
- சட்டத்தின் ஆட்சியும் நிருவாகமுறைச் சட்டமும் 50
- ட்ராய்ட் அட்மினிஸ்ட்ரேட்டிப்-ற்கு எதிராக பேரா. டைசி கூறிய குறைகள் 51
- 'இங்கிலாந்தில் நிருவாகமுறைச் சட்டம் இருந்ததில்லை' எனும் டைசியின் கூற்று எந்த அளவிற்கு உண்மை? 52
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சட்டத்தின் ஆட்சி எனும் கோட்பாடு இடம் பெற்றுள்ள விதம் 54
- சட்டத்தின் ஆட்சி மற்றும் நிருவாகமுறைச் சட்டம் - தொகுப்புரை 56

– அதிகாரப் பிரிவினை 57

- வரலாற்றுப் பின்னணி 59
- அறிஞர் மாண்டெஸ்கியூ கூறும் விளக்கம் 59
- அமெரிக்காவில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு 60
- இங்கிலாந்து நாட்டில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு 61
- இந்திய நாட்டில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு 62
- அதிகாரப் பிரிவினைக் கோட்பாடும் நிருவாகமுறைச் சட்டமும் 65
- அதிகாரப் பிரிவினைக் கோட்பாடும் தடைகள் மற்றும் சமநிலைகளின் கோட்பாடும் 66

3. சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு (அல்லது) ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின்படி சட்டமியற்றல் (அல்லது) விதியாக்கம் [Delegation of Legislative Power (or) Delegated Legislation] 68

– சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் விளக்கமும், அதன் வளர்ச்சிக்கான காரணங்களும் 68

- விளக்கம் 68
- வரையறை 69
- இயல்பு 69
- வளர்ச்சிக்கான காரணங்கள் 70

– சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் நற்கூறுகள், குறைகள் மற்றும் அதன் பல்வேறு வடிவங்கள் 73

– இந்தியாவில் சட்டமியற்றும் அதிகார ஒப்படைவும், அதன் வளர்ச்சியும் 76

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பு 78

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த பின்பு 81

– சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் வகைப்பாடு (அல்லது)
அனுமதிக்கத்தக்க அதிகார ஒப்படைவு (அல்லது)
அதிகார ஒப்படைவு செய்யலாமெனக் கூடிய பணிகள் 93

- விதியாக்கத்தின் வகைப்பாடு 93

– இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரம் (அல்லது)
அனுமதிக்கத்தகாத அதிகார ஒப்படைவு (அல்லது)
அதிகார ஒப்படைவு செய்ய முடியாத பணிகள் 100

- இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரம் 101

- அனுமதிக்கத்தகாத அதிகார ஒப்படைவு 101

- இன்றியமையாத மற்றும் இன்றியமையாத தன்மையற்ற
சட்டமியற்றும் அதிகாரம் - வேறுபாடு 105

– வரி விதிக்கும் அதிகாரத்தை ஒப்படைக்கலாமா? 105

– இந்தியாவில் சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மீதான வரம்புகள் 110

– நிபந்தனைக்குட்பட்டு சட்டமாக்கல் (அல்லது)
நிபந்தனைக்குட்பட்ட விதியாக்கம் 113

– எட்டாம் ஹென்றி விதி 117

– கீழ்ப்படையான அதிகார ஒப்படைப்பு 121

– நிருவாகமுறை ஏவுரைகள் (அல்லது) நிருவாகமுறைக் குறிப்புரைகள் 124

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு (அல்லது)
விதியாக்கத்தின் மீதான கட்டுப்பாடுகள்
**[Control over Delegation of Legislative Power (or)
Control over Delegated Legislation]** 128

– சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மீதான நீதிமுறைக்
கட்டுப்பாடு (அல்லது) விதியாக்கத்தின் மீதான நீதிமுறை மறுஆய்வு 128

- நிலைமுறை அதிகாரவரம்பு மீறல் 130

- நடைமுறை அதிகாரவரம்பு மீறல் 138

– சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் (அல்லது)
விதியாக்கத்தின் மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு 143

5. நிருவாகத்துறையின் பல்வேறு பணிகள் (அல்லது)
நிருவாகத்துறை செயல்பாடுகள் -
தன்மை, வகைப்பாடு மற்றும் நோக்கம்
**[Various Administrative Functions (or)
Administrative Actions - Nature,
Classification and Ambit]** 152

- தன்மை 154
- வகைப்பாடு 155
- நிருவாகத்துறையின் சட்டமியற்றுப் பணிகள் 156
- நீதிமுறைப் பணிகள் 157
- நீதித்தன்மை வாய்ந்த பணிகள் (அல்லது) நிதிப்போல்வு பணிகள் 158
- நிருவாகத்துறைப் பணிகள் 162

6 நிருவாகமுறை நீதித்தீர்ப்பு [Administrative Adjudication] 171

– நிருவாகமுறை நீதித்தீர்ப்பு 171

– இயற்கை நீதி 174

- இயற்கை நீதி கூறும் இரு கோட்பாடுகள் 176

– இயற்கை நீதிக் கோட்பாடுகள் 179

- எவரும் அவருடை வழக்கில் அவரே நீதிபதியாக இருத்தல் கூடாது (அல்லது) தீர்ப்பளிப்பவர் வழக்கோடு தொடர்பு கொண்டிருக்கக் கூடாது (அல்லது) மனச்சாய்விற்கெதிரான விதி 180
- பணம் சார்ந்த மனச்சாய்வு 182
- தனிப்பட்ட மனச்சாய்வு 184
- அலுவல் சார்ந்த மனச்சாய்வு (அல்லது) கருப்பொருள் குறித்த மனச்சாய்வு 187
- மனச்சாய்வை நிர்ணயிக்கும் சோதனை 191
- இருபுறங்கேட்டல் விதி (அல்லது) நியாயமாகக் கேட்டல் விதி 193
- விதியின் உட்கூறுகள் 194
- இருபுறங் கேட்டல் விதிக்கான விதிவிலக்குகள் 203

– காரணத்துடன் கூடிய தீர்ப்பு (அல்லது) காரணம் விளம்பும் ஆணை 209

– அமைப்புவழித் தீர்ப்புகள் (அல்லது) விசாரணை செய்வர்தாம் தீர்ப்பு வழங்க வேண்டும் 214

7. நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் [Administrative Tribunals] 220

– நோக்கம், வரையறை, குணாதிசயங்கள், வளர்ச்சிக்கான காரணங்கள், இந்தியாவில் நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் செயல்படும் விதம் 220

– நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களின் நன்மைகளும் குறைகளும் 226

- நீதிமன்றம், நிருவாகமுறைத் தீர்ப்பாயம் - வேறுபாடுகள் 228
- உள்ளகத்து தீர்ப்பாயம் 230
- அதிகாரவரம்பு பற்றிய பொருண்மை 232
- விசாரணை ஆணையம் 234
- நிருவாகமுறை முடிவுகளில் முன்தீர்ப்புத் தடை, முன் தீர்ப்பு முறை ஏற்பு மற்றும் முரண்தடை 236

8. நிருவாகத்துறை தன்விருப்புரிமை (அல்லது) நிருவாகத்துறை தன்விருப்புரிமை அதிகாரத்தின் மீதான நீதிமுறை மறுஆய்வு (அல்லது) நிருவாகத்துறை தன்விருப்புரிமையின் மீதான நீதிமுறைக் கட்டுப்பாடு [Administrative Discretion (or) Judicial Review on Administrative Discretion (or) Judicial Control over Administrative Discretion] 244

நிருவாகத்துறை தன்விருப்புரிமை - விளக்கம் 246
தன்விருப்புரிமை செயல்படுத்தப்படும் விதங்கள் 248
தன்விருப்புரிமையின் மீது நீதிமுறைக் கட்டுப்பாடு 249
நீதிமுறை மறுஆய்விற்கான அடிப்படைகள் (அல்லது) நிருவாகத்துறை தன்விருப்புரிமையின்பாற்பட்ட நடவடிக்கையை மறுதலிப்பதற்கான காரணங்கள் 249
- தன்விருப்புரிமை அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல் 249
  - தீயெண்ணம் 250
  - முறையற்ற நோக்கத்திற்காக பயன்படுத்தல் 253
  - தொடர்பற்ற பரிசீலனைகள் 254
  - தொடர்புடைய கூறுகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிடுதல் 255
  - கலவையான பரிசீலனை 256
  - நியாயமற்ற தன்மை 257
  - நன்கு மறைக்கும்படி தோற்றம் தரக்கூடிய விதத்தில் அதிகாரத்தை செயற்படுத்தல் 258
  - இயற்கை நீதிக் கோட்பாடுகளையும், நடைமுறைத் தேவைகளையும் கடைப்பிடிக்காது இருத்தல் 258
  - அதிகாரவரம்பை மீறிச் செல்லுதல் 259
- தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்த தவறுதல் 259
  - கவனம் செலுத்தாமை 260
  - மற்றொருவரின் கட்டளையின் கீழ் செயல்படுதல் 260

தானே ஏற்படுத்திக் கொண்ட கொள்கை விதிகளின் வாயிலாக தன்விருப்புரிமை அதிகாரத்தின் மீது தடைகளை விதித்துக் கொள்ளல் 262

- கீழ்ப்படையான அதிகார ஒப்படைப்பு (அல்லது) அதிகாரங்களைத் துறத்தல் 263
- கடமையுடன் இணைந்த அதிகாரம் 264

9. நிருவாகத்துறை நடவடிக்கைகளின் மீதான நீதிமுறை மறுஆய்வு (அல்லது) நீதிமுறை மற்றும் பிறவகையான தீர்வழிகள் [Judicial Review on Administrative Action (or) Judicial and Other Remedies] 267

– அரசியலமைப்புப்படியான தீர்வழிகள் (அல்லது) பேருரிமை வாய்ந்த தீர்வழிகள் 270

- ஷரத்து 32 மற்றும் 226-ன் பரவெல்லை மற்றும் அளவுகை 271
- அய்ந்து வகையான நீதிப்பேராணைகள் 274
  - ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை 274
  - நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை 277
  - செயலுறுத்தும் நீதிப்பேராணை 281
  - தடையுறுத்தும் நீதிப்பேராணை 287
  - தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை 289

– உரிமையியல் சட்டப்படியான தீர்வழிகள் (அல்லது) தகைமை நெறித் தீர்வழிகள் 292

- உறுத்துக்கட்டளை 292
  - வகைகள் 293
- விளம்புகை நடவடிக்கை 295

– சட்டரீதியான தீர்வழிகள் 298

- உரிமையியல் வழக்குகள் 298
- நீதிமன்றங்களிடம் மேல்முறையீடு செய்து கொள்ளல் 298
- தீர்ப்பாயங்களிடம் மேல்முறையீடு செய்து கொள்ளல் 299
- உயர் நீதிமன்றங்களின் மேற்பார்வையிடும் அதிகாரவரம்பு 299
- மேல்முறையீடு செய்ய உச்ச நீதிமன்றத்தின் சிறப்பு அனுமதி (அல்லது) சிறப்பு அனுமதி மனுக்கள் 300

– மாற்றுத் தீர்வழிகளை முதலில் தீர்த்தல் 301

– காலதாமதம் மற்றும் மட்டு மீறிய தாமதம் 304

– நீதிப்பேராணை நடவடிக்கைகளில் முன்தீர்ப்புத் தடை 305

10. அதிகாரவரம்பை விலக்கல் (அல்லது)

நீதிமுறை மறுஆய்வின் விலக்கல்
[Ouster of Jurisdiction (or)
Exclusion of Judicial Review] 308

- விளக்கம் 309
- அதிகாரவரம்பை விலக்கல் குறித்து உரிமையியல் நடைமுறைச் சட்டம் என்ன கூறுகிறது? 309
- அதிகாரவரம்பை விலக்கல் நிருவாகமுறைச் சட்டத்தில் எவ்வாறு இடம் பெறுகிறது? 309
- அதிகாரவரம்பை விலக்கும் பிரிவு நிருவாகமுறைச் சட்டத்தில் ஏன் அவசியமாகிறது? 310
- அதிகாரவரம்பு விலக்கி வைக்கப்படும் விதங்கள் 311
- அதிகாரவரம்பு விலக்கல் பிரிவு குறித்து நீதிமன்றங்களின் போக்கு 311
- அதிகாரவரம்பு விலக்கல் சட்டப் பிரிவுகளை நீதிமன்றங்கள் எவ்வாறு பொருள் கொள்கின்றன? (அல்லது) எப்பொழுது நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு விலக்கி வைக்கப்படுவதில்லை? (அல்லது) இந்தியாவில் விலக்கல் விதியின் மீதான தடைகள் 312

11. 'வழக்கு தொடுக்கும் உரிமை' எனும் கோட்பாடு
[Concept of 'Locus Standi'] 317

- விளக்கம் 318
- வழக்கு தொடுக்கும் உரிமையும் நீதிப்பேராணைகளும் 318
- வழக்கு தொடுக்கும் உரிமையும் பொது நல வழக்குகளும் 320
- வழக்கு தொடுக்கும் உரிமை குறித்த கோட்பாட்டை தளர்த்துவதற்குண்டான காரணங்களை எடுத்துக் கூறிய முக்கிய வழக்கு 320
- வழக்கு தொடுக்கும் உரிமை குறித்த முக்கிய வழக்குகள் 321

12. அரசின் அல்லது அரசாங்கத்தின் பொறுப்பு நிலை
[Liability of State (or) Government] 324

– ஒப்பந்தத்தில் அரசின் பொறுப்பு நிலை 324

- வரலாற்றுப் பின்னணி 325
- ஷரத்து 299(1) கூறுவதாவது (அல்லது) அரசு ஒப்பந்தங்கள் எப்பொழுது செயற்படுத்தப்படும்? 325
- அரசு சார்பாக அரசு அதிகாரிகள் கையொப்பம் இடும் ஒப்பந்தங்களில் அரசின் பொறுப்பு நிலை 327
- அரசாங்கத்துடன் செய்து கொண்ட செல்லத்தக்க ஒப்பந்தத்தால் ஏற்படும் விளைவு 329
- இல்லாநிலை ஒப்பந்தத்தால் ஏற்படும் பக்க விளைவு 330

- தனிப்பட்ட பொறுப்பு இல்லை 330
– அரசின் தீங்குப் பொறுப்பு நிலை 330
- இங்கிலாந்து நிலை 331
- இந்திய நிலை 331
- முக்கிய வழக்குகள் 332
- சட்ட ஆணையத்தின் பரிந்துரைகள் 335
- இறைமை நிலைச் செயல் 336

13. அரசாங்க சிறப்புரிமைகள் [Privileges of Government] 338

– சட்ட நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் சிறப்புரிமைகள் 338
- இங்கிலாந்து நிலை 339
- இந்திய நிலை 339
– நீதிமன்றத்தில் ஆவணங்களை சமர்ப்பிக்க மறுப்பதற்கு அரசாங்கத்திற்கு உள்ள சிறப்புரிமை 343
- இங்கிலாந்து நிலை (அல்லது) மன்னரின் சிறப்புரிமை 344
- இந்திய நிலை 347
- சில முக்கிய வழக்குகள் 349
– அரசாங்கத்தின் வேறு பல சிறப்புரிமைகள் 351

14. உறுதிமொழி முரண்தடை (அல்லது) வாக்குறுதி குறித்த முரண்தடை [Promissory Estoppel] 353

- பொருள் 353
- உறுதிமொழி முரண்தடை அரசிற்கு பொருந்துமா? 354
- உறுதிமொழி முரண்தடை அரசின் பிற அதிகார அமைப்புகளுக்கு பொருந்துமா? 354
- உறுதிமொழி முரண்தடையின் மீதான வரம்புகள் 355

15. பாராளுமன்ற நிருவாகமுறை ஆணையாளர் (அல்லது) ஆம்புட்ஸ்மன் [Promissory Estoppel] 358

- விளக்கம் 360
- ஆம்புட்ஸ்மன் எனும் அமைப்பின் தேவை (அல்லது) ஆம்புட்ஸ்மன் எனும் அமைப்பு உருவாக்கப் பட்டதற்கான காரணங்கள் 360
- தனி ஒருவரின் குறைகளை ஆம்புட்ஸ்மன் தீர்க்கும் விதம் (அல்லது) ஆம்புட்ஸ்மன் முறையின் சிறப்பம்சங்கள் (அல்லது) ஆம்புட்ஸ்மன் ஆற்றும் பணிகள் 363

- முறைகெட்ட செயலாட்சி' 364
- இங்கிலாந்து நாட்டில் ஆம்புட்ஸ்மன் முறை 364
- இந்திய நாட்டில் ஆம்புட்ஸ்மன் முறை 365
  - லோக்பால் - மத்திய அரசு ஆம்புட்ஸ்மன் 366
    - நியமனம், பணிகள் மற்றும் பதவிக்காலம் 367
  - லோகயுக்தா - மாநில அரசு ஆம்புட்ஸ்மன் 368
    - நியமனம், பணிகள் மற்றும் பதவிக்காலம் 368
      - உபலோகயுக்தா 370

16. பொதுக் கூட்டு நிறுவனங்களும் பொதுக் கூட்டுருக்களும் [Public Undertakings and Public Corporations] 372

– பொதுக் கூட்டு நிறுவனங்கள் 372
- பொருள் 373
- வகைப்பாடு - செயல்படும் விதத்தின் அடிப்படையில் 373
  - மேம்பாட்டு நிறுவனங்கள் 373
  - நிதி நிறுவனங்கள் 373
  - வணிக மற்றும் தொழில் நிறுவனங்கள் 374
  - பொதுப் பயன்பாட்டு நிறுவனங்கள் 374
- வகைப்பாடு - கட்டமைப்பின் அடிப்படையில் 374
  - பொதுக் கூட்டுரு (சட்டப்படியான கூட்டுரு) 374
  - அரசாங்க நிறுவனம் 374
  - அரசாங்கத் துறை நிறுவனம் 375
- பொதுக் கூட்டு நிறுவனங்களின் மீதான கட்டுப்பாடு 375

– பொதுக் கூட்டுருக்கள் 375
- பொருள் 376
- முக்கிய அம்சங்கள் (அல்லது) பண்புகள் 376
- வளர்ச்சிக்கான காரணங்கள் 377
- பொதுக் கூட்டுருக்கள் அமைக்கப்படுவதின் அடிப்படைத் தத்துவம் 378
- பொதுக் கூட்டுருக்களின் வகைப்பாடு 379
- பொதுக் கூட்டுருக்களின் மீதான கட்டுப்பாடு 379
  - பொதுக் கூட்டுருக்களின் மீது பாராளுமன்றம் செயல்படுத்தும் கட்டுப்பாடு 380
  - பொதுக் கூட்டுருக்களின் மீதான அரசாங்கக் கட்டுப்பாடு 381
  - பொதுக் கூட்டுருக்களின் மீதான நீதிமுறைக் கட்டுப்பாடு 381

-oOo-

சிறு குறிப்புகள்
[Short Notes]

1.	Conseil d' Etat	22
2.	Droit Administratif	22
3.	Lord Hewart's New Despotism	22
4.	Committee on Minister's Powers	22
5.	Donoughmore Committee	22
6.	Franks Committee	22
7.	Administrative Procedure Act 1946	40
8.	Rule of Law	46
9.	Relation between doctrine of separation of powers and administrative law	59
10.	Doctrine of Separation of Powers	59
11.	Henry VIII Clause	117
12.	Sub delegation	121
13.	Administrative direction	125
14.	Substantive Ultravires	129
15.	Procedural Ultravires	129
16.	Laying before Parliament	144
17.	Bias - Write short notes	206
18.	Pecuniary Bias	206
19.	Personal Bias	206
20.	Official bias	206
21.	R.C.Cooper v. Union of India	207
22.	Manaklal v. Premchand	207
23.	A.K.Kripak v. Union of India	207
24.	Gullapalli Nageswara Rao v. A.P.S.R.T.C.	207
25.	Reasonable suspicion test	207
26.	Ridge v. Baldwin	209
27.	Maneka Gandhi v. Union of India	209
28.	Post decisional hearing	209
29.	Right to cross examination	209
30.	Speaking Order	210
31.	Reasoned Decision	210
32.	Institutional Decisions	214
33.	Statutory Tribunal	220

34.	Merits and demerits of Special Tribunals	226
35.	Domestic Tribunal	230
36.	Jurisdictional fact	232
37.	Commission of Inquiry	234
38.	Discretionary power	245
39.	Subjective satisfaction	246
40.	Malafide	265
41.	Malafide action	266
42.	Colourable Exercise of Power	266
43.	Writ of Habeas Corpus	267
44.	Writ of Certiorari	268
45.	Certiorarified mandamus	268
46.	Mandamus	269
47.	Writ of Prohibition	269
48.	Quo Warranto	269
49.	Declaratory action	269
50.	Statutory Remedies	269
51.	Alternative remedy	301
52.	Adequate alternative remedy	301
53.	Laches	304
54.	Ouster of Jurisdiction	308
55.	Abuse of Jurisdiction	309
56.	Administrative finality	309
57.	Locus standi	318
58.	Contractual liability of the State	324
59.	Tortious liability of the Government	330
60.	Sovereign functions	331
61.	Act of State	336
62.	State liability	337
63.	Government Privileges in a litigation	338
64.	Superintendent and Rememberancer of Legal Affairs, West Bengal v. Corporation of Calcutta (AIR 1967 SC 997)	338
65.	Crown Privilege	343
66.	Promissory estoppel	353
67.	Ombudsman	359
68.	Lokpal	359
69.	Public Corporations	376

சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய வழக்குகளின் பட்டியல்
[List of Leading Cases Cited]

"A"

1. A.D.M., Jabalpur v. Shivakant Shukla 276
2. A.K.Karipak v. Union of India 54, 164, 178, 186, 393
3. Air India v. Nargesh Meerza 135, 391
4. Alridge v. Islington Corporation 135
5. Amar Singhji v. State of Rajasthan 242
6. Ammal v. Rama 278
7. Amratlal v. State 126
8. Avinder Singh v. State of Punjab 109

"B"

9. Bagga v. Murhar Rao 138
10. Banarasidas v. State of M.P. 107, 112
11. Bandu Mukti Morcha v. Union of India 321
12. Banglore W.C.Mills v. Banglore Corporation 107, 112
13. Banwarilal Agarwalla v. State of Bihar 141
14. Barium Chemicals Ltd. v. Company Law Board 260
15 Bates v. Lord Hailsham 389
16. Batul Chand v. State of W.B 276
17. Bharat Bank v. Employees 222
18. Bharat Kala Bhandar v. Dhaman Gaon Municipality 313
19. Bhikraj Jaipuria v. Union of India 328, 402
20. Bihar S.E. Board v. Subhash Chandra 204, 400
21. Board of Education v. Ghanshyamdas 397
22. Board of Education v. Rice 53
23. Board of High School and Intermediate Education v. Km. Chitra 54

"C"

24. C.E.Corporation v. Workers Union 259
25. Calvin's Case 176
26. Central Inland Water Transport Corporation v. Brojo Nath Ganguly 136
27. Chintaman Rao v. State of M.P. 132
28. Commissioner of Police v. Gordhandas 261
29. Conway v. Rimmer 346, 351

"D"

30. Daryao v. State of U.P. 306
31. Delhi Municipal Corporation v. Birla Cotton Mills Ltd. 108
32. Delhi University v. Ashok Kumar 240

33.	Devidas v. State of Punjab	107, 112
34.	Dhakeswari Cotton Mills Ltd. v. C.I.T.	198
35.	Dhulabhai v. State of M.P.	313
36.	Director of Rationing v. Corporation of Calcutta	339
37.	Dr. Bentlay's Case	176
38.	Dr. Bonham's Case	182
39.	Duncan v. Commell Laird & Co. Ltd.	344, 349
40.	Durga Shankar Mehta v. Raghuraj Singh	221
41.	Dwarka Prasad Lakshmi Narayan v. State of U.P.	134

"E"

42.	Edward Mills v. State of Ajmer	86
43.	Emperor v. Sibnath Banerji	260
44.	Empress v. Burah and Book Singh	79
45.	Express Newspapers (P) Ltd. v. Union of India	252

"F"

46.	Fertilizer Corporation Kamgar Union v. Union of India	320

"G"

47.	Ghulam Sarwar v. Union of India	307
48.	Gujarat State Financial Corporation v. Lotus Hotels Pvt. Ltd.	283
49.	Gullapalli Nageswara Rao v. A.P. State Road Transport Corporation (Gullapalli I Case)	188,202, 218
50.	Gullapalli Nageswara Rao v. A.P. State Road Transport Corporation (Gullapalli II Case)	189
51.	Gupta v. Union of India	196
52.	Gwalior Rayon Mills v. Asstt. Commissioner of Sales Tax	88, 109, 111

"H"

53.	Hamdard Dawakhana v. Union of India	86
54.	Hamphrey's Executor v. U.S.	31
55.	Hari Vishnu v. Syed Ahmed	279
56.	Harishankar Bagla v. State of M.P.	85, 111
57.	Harla v. State of Rajasthan	123, 142, 386
58.	Hira Nath Mishra v. Principal, Rajendra Medical College	200
59.	Hukam Chand v. Union of India	254

"I"

60.	I.T. Commissioner v. State of Madras	282
61.	In Re Chakkara Chettiar's Case	290
62.	In re Delhi Laws Act Case	37, 64, 82, 102, 111, 112
63.	Inder Singh v. State of Rajasthan	81,116
64.	Indira Nehru Gandhi v. Raj Narain	54

"J"

65. Jailal v. State 81, 116
66. James Bukshi v. Collector of Customs 399
67. Jatindra Nath Gupta v. Province of Bihar 80, 81, 115
68. Jeejeebhoy v. Asstt. Collector of Thana 183
69. Jitenderlal Banerjee v. Province of Bengal 81

"K"

70. Kamaladevi v. State of Punjab 275
71. Karamshi v. State of Bombay 327
72. Kasthuri Lal Ralia Ram Jain v. State of U.P. 334, 404
73 Kerala State Electricity Board v. Indian Aluminium Co. 91, 109
74. Keshavan Bhaskaran v. State of Kerala 263
75. Khatri v. State of Bihar 54
76. Kondala Rao v. v. A.P. State Road Transport Corporation 191
77. Kruse v. Johnson 135, 136

"L"

78. Lesson v. General Council 181
79. Local Government Board v. Alridge 53, 215

"M"

80. M.C.Metha v. Union of India 322
81. M.K.Papiah v. Excise Commissioner 90
82. M.L.Bagga v. Murhar Rao 112
83. M.P.Sugar Mills v. State of U.P. 354, 405
84. Makhan Singh v. State of Punjab 102, 112
85. Manak Lal v. Dr. Prem Chand 191, 394
86. Maneka Gandhi v. Union of India 169, 179, 197, 203
87. Manglass Tea Estate v. Their Workmen 185
88. Manik Chandra v. State 264
89. Margan v. United States 216
90. Mayor Simon v. Advocate General, Kerala 212
91. Mineral Development Ltd. v. State of Bihar 184
92. Mohd. Yasin v. Town Area Committee 133
93. Mulam Chand v. Madhya Pradesh 242
94. Municipal Council of Sydney v. Campbell 252
95. Muralidhar v. Kadam Singh 187, 396

"N"

96. Nakkuda Ali v. Jayaratne 168
97. Nalini Mohan v. District Magistrate 254
98. Narayani Devi v. State of Bihar 304
99. Narendra Kumar v. Union of India 134, 386

100. Nataraja Mudaliar v. S.T.A. Madras 255
101. Naubat Rai v. Union of India 284
102. Newpapers Ltd. v. State Industrial Tribunal 278

"O"

103. Olga Tellis v. Bombay Municipal Corporation 198
104. Orient Paper Mills v. Union of India 261
105. Orient Weaving Mills v. Union of India 107, 112

"P"

106. P.K.Bose v. Chief Justice of Bengal 218
107. Peninsular and Oriental Steam Navigation Co. v. Secretary of State of India 332, 334
108. Prag Ice and Oil Mills v. Union of India 390
109. Pratap Singh v. State of Punjab 185, 250
110. Province of Bombay v. Khushaldas Advani 165
111. Province of Bombay v. Municipal Corporation of the City of Bombay 339
112. Punjab National Bank v. All India Bank Employees Federation 195
113. Punjab Tin Supply v. Central Government 92

"Q"

114. Queen v. Burah 78, 81, 115

"R"

115. R. v. Burah 35
116. R. v. Deal Justices Exparte Curling 187
117. R. v. Metropolitan Police Commissioner, ex p Parker 168
118. R. v. Metropolitan Police Commr. 264
119. R. v. Newcastle-upon-Tyne Corpn. 264
120. R. v. Sussex Justices 181
121. R. v. University of Cambridge 194
122. R.C. Cooper v. Union of India 184
123 Rachapudi Subrahmanyam v. District Collector, East Godavari 407
124. Rajasthan State Elecricity Board v. Mohanlal 382
125. Rajnarin v. Chairman, P.A. Committee 141
126. Ram Jawaya v. State of Punjab 65, 162
127. Ram Manohar Lohia v. State of Bihar 255
128. Ramakrishna Dalmia v. Justice Tandolkar 235
129. Raman and Raman v. State of Madras 126
130. Ramana Dayaram Shetty v. International Airports Authority of India 392
131. Rambharosa Singh v. State of Bihar 261
132. Rameshwar Shaw v. D.M.Burdwan 257

133. Rampur Distillery v. Company Law Board 256
134. Raza Buland Sugar Co. v. Rampur Municipality 385
135. Registrar, University of Madras v. Sundara Shetti 355
136. Ridge v. Baldwin 30, 168, 178, 196
137. Rowjee v. State of A.P. 251

"S"

138. S.G.Jaisinghani v. Union of India 54
139. S.I.Syndicate v. Union of India 390
140. S.P.Gupta v. Union of India 321, 350
141. Sant Raj v. O.P.Singh 258
142. Sathyawati v. Union of India 335
143. Secretary of State v. Kamakshi Bai 337
144. Secretary of State v. Mark & Co. 315
145. Sheela Bose v. State of Maharashtra 275
146. Shibbanlal v. State of U.P. 257
147. Shivajirao Patil v. Mahesh Madhav 251
148. Siva Rama Krishna v. Armugha Mudaliar 290
149. State of Bombay v. Narraottamdas 116
150. State of Bombay v. United Motors 286
151. State of Gujarat v. Vora Fiddali 337
152. State of Haryana v. Bhajanlal 252
153. State of J.&K. v. Haji Vali Mohd. 196
154. State of M.P. v Mandawara 284
155. State of Maharashtra v. George 143, 386
156. State of Orissa v. Binapani Dei 169, 197, 199
157. State of Punjab v. Sodhi Sukdev Singh 349
158. State of Rajasthan v. Vidyawathi 333, 334
159. State of U.P. v. Mohd. Nooh 185, 395
160. State of U.P. v. S.R. Sharma 195
161. Sukhdev Singh v. Bhagatram 383
162. Sumanlal v. Collector, Central Excise 233
163. Superintendent and Rememberancer of Legal Affairs, West Bengal v. Corporation of Calcutta 341
164. Surajmal v. Municipal Board, Ganga Nagar 315

"T"

165. T.K.Chaudhary v. Datta 259
166. Tahir Hussain v. District Board, Mujaffar Nagar 134
167. Tara Chand v. Delhi Municipality 212
168. Tilokchand Motichand v. H.B.Munshi 305

"U"

169. U.P. Ware Housing Corporation v. Vijay Narayan 200

170. Union of India v. Bhanamal Gulzarimal 122
171. Union of India v. N.K.Ltd. 329
172. Union of India v. Rallia Ram 328
173. Union of India v. Subbi 341, 342

"V"

174. Venkateswara Rao v. State of A.P. 291
175. Visakapatanam Co-Op. Motor Transport Ltd. v. G.Bangaruraju 183

"W"

176. Workmen v. Board of Trustees 306

வேறுபாடுகள் [Distinctions]

1. Administrative Law and Constitutional Law 13
2. Eessential legislative function and Non-essential legislative function 100
3. Conditional legislaticn and Delegated legislation 113
4. Administrative directions and Delegated legislation 124
5. Procedural ultravires and Substantive ultravires 129
6. Legislative functions and Administrative functions 156
7. Judicial functions and Quasi-judicial functions 160
8. Administrative functions and Quasi-judicial functions 164
9. Court and Tribunal 228
10. Writ of certiorari and Writ of prohibition 269
11. Sovereign and Non-sovereign functions 330

பிரச்சனைகளும் தீர்வுகளும் [Problems and Solutions]

இந்நூலின் 384 முதல் 430 வரையுள்ள பக்கங்களில்
35 பிரச்சனைகளுக்கு தீர்வளிக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக வினாத்தாள்கள் [Question Papers]

ஜூன் 2022 வரையிலான அண்மைக்கால வினாத்தாள்கள்
அனைத்தும் இந்நூலின் 431 முதல் 487 வரையுள்ள பக்கங்களில்
தரப்பட்டுள்ளன.

நிருவாகமுறைச்சட்டம்

Administrative Law

நிருவாகமுறைச் சட்டம்
[Administrative Law]

1 நிருவாகமுறைச் சட்டம் - ஒரு அறிமுகம்
[Administrative Law - An Introduction]

நிருவாகமுறைச் சட்டத்தின் வரையறை
[Definition of Administrative Law]

1. Define Administrative Law (நிருவாகமுறைச் சட்டத்தை வரையறுக்க.)

(அல்லது)

"It is difficult to evolve a satisfactory definition of Administrative Law. There are many formulations in the field" - Explain. ("நிருவாக முறை சட்டத்திற்கு திருப்திகரமான வரையறை செய்வது கடினமானது. பல வித கூற்றுகள் களத்தில் உள்ளன"- விளக்குக.)

(அல்லது)

"Administrative law is relating to the administration". Discuss. ("ஆட்சி முறைச் சட்டம் என்பது ஆட்சியினரைப் பற்றிக் கூறுகிறது". விவாதிக்க.)

(அல்லது)

"Administrative Law is related to administration - determining organisations, powers and duties of administrative authorities." Discuss.("நிருவாகமுறைச் சட்டமென்பது அலுவலர் அமைப்பு, அவற்றின் அதிகாரம் மற்றும் கடமைகள் பற்றியது".-கருத்துரைக்க.)

(அல்லது)

"Administrative Law is the study of the pathology of Governmental powers". Explain. ("நிருவாகமுறைச் சட்டம் அரசின் அதிகாரத்தில் உள்ள குறைகளை கண்டறிய வந்த சட்டமாகும்". விளக்குக.)

முன்னுரை:

நிருவாகமுறைச் சட்டத்திற்கு அறிவியல்பூர்வமான, சுருக்கமான மற்றும் திருப்திகரமான ஒரு வரையறையைக் கூறுவது என்பது சற்று

கடினம்தான். இதற்கு வரையறை கொடுக்க சட்டவியல் அறிஞர்கள் பலரும் முயன்றனர். ஆனால் அவர்களால் நிருவாகமுறைச் சட்டத்தின் தன்மை, எல்லை மற்றும் உள்ளடக்கத்தை முழுமையாக அறுதியிட்டுக் கூற முடியவில்லை. சில வரையறைகள் தேவைக்கும் அதிகமானவற்றை உள்ளடக்கி அளவில் பரந்ததாகவும், வேறு சில வரையறைகள் தேவையான விபரங்களை உள்ளடக்காமல் அளவில் குறுகியதாகவும் உள்ளன. அறிஞர்களின் அத்தகு வரையறைகளைப் பின்வருமாறு காண்போமா?

அறிஞர் அய்வர் ஜென்னிங்ஸ் (Ivor Jennings) கூறும் வரையறை:

"நிருவாகமுறைச் சட்டம் நிருவாகமுறையோடு தொடர்புடையது. அது நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் கட்டமைப்பையும், அதிகாரங்களையும், கடமைகளையும் தீர்மானிக்கிறது",[1] என்று அறிஞர் அய்வர் ஜென்னிங்ஸ் நிருவாகமுறைச் சட்டத்தை வரையறுக்கிறார்.

இந்த வரையறை பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று எனக் கூறப்பட்டாலும், இதில் நிருவாகத்துறை அதிகார அமைப்புகளால் ஒருவரது உரிமைகள் பாதிக்கப்பட்டால், அவருக்கு கிடைக்கும் தீர்வழிகள் பற்றி ஏதும் கூறப்படவில்லை.

அறிஞர் வாடே (Wade) கூறும் வரையறை:

"நிருவாகமுறைச் சட்டம் என்பது அரசாங்க அதிகாரத்தின் மீது இயங்கும் கட்டுப்பாடு தொடர்பான சட்டம்"[2] என்று அறிஞர் வாடே வரையறுக்கிறார்.

இவரது வரையறைப்படி, நிருவாகமுறைச் சட்டத்தின் முதன்மை நோக்கம், அரசு அதிகாரங்களை அதன் சட்ட வரம்பிற்குள் வைத்து, அதன் மூலம் அவ்வதிகாரங்கள் குடிமக்களுக்கு எதிராக துஷ்பிரயோகப்படுத்தப் படுவதை தடுப்பதாகும். இவ்வரையறை நிருவாகமுறைச் சட்டத்தின் நோக்கம் குறித்து ஒரு தெளிவான கருத்தை எடுத்துக் கூறினாலும், நிருவாக முறைச் சட்டம் என்றால் என்ன, என்பது குறித்து விளக்கவில்லை. மேலும் இவ்வரையறை நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் குறித்தோ அல்லது அவற்றால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்தோ ஏதும் விளக்கவில்லை.

அமெரிக்க எழுத்தாளர் கென்னத் கல்ப் டேவிஸ் (K.C.Davis) கூறும் வரையறை:

"நிருவாகமுறைச் சட்டம் என்பது, நிருவாகத்துறை முகவர்

1. "Administrative Law is the law relating to administration. It determines the organisation, powers and duties of the administrative authorities." - **Ivor Jennings. The Law and the Constitution, 1959, p. 217.**

2. "Administrative Law is the law relating to the control of governmental power" **- Wade. Administrative Law, 1988, p.4.**

நிலைகளுடைய அதிகாரங்கள், நடைமுறைகள் பற்றிய சட்டமாகும்; அது சிறப்பாக நிருவாகமுறை நடவடிக்கைகள் பற்றிய நீதிமுறை மறுஆய்வை (Judicial Review) முறைப்படுத்தும் சட்டமாகும்",[3] என்று அறிஞர் கெ.சி.டேவிஸ் கூறுகிறார்.

இந்த வரையறை, **நிருவாகத்துறை முகவர் நிலைகள்,** அவைகளுடைய அதிகாரங்களை செயற்படுத்தும் பொழுது, அவை பின்பற்ற வேண்டிய நடைமுறை குறித்து விளக்குகிறது. இந்த வகையில் மேற்படி வரையறை சரியானதே.

ஆனால் பின்வரும் கருத்துகளின் அடிப்படையில், மேற்படி வரையறை குறை கூறப்படுகிறது. அதாவது, **முதலாவதாக,** நிருவாகத்துறை முகவர் நிலை என்பது ஒரு **அரசாங்க அதிகார அமைப்பு.**[4] இது ஒரு சட்டமன்றமும் அல்ல; நீதிமன்றமும் அல்ல. எனினும், இவை தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட விதிகள் இயற்றும் அதிகாரத்தின் (Rule making Power) வாயிலாகவும், பிரச்சனைகளை நீதிமுறையில் தீர்மானிப்பதாலும் (Administrative adjudication), தனி நபர்களின் உரிமைகளை பாதிக்கின்றன. ஆனால் இதில் நிருவாகத்துறையினருக்கே உரித்த தன்விருப்புரிமை அதிகாரங்கள் (Discretionary Powers) குறித்து ஏதும் விளக்கப்பட வில்லை. எனவே, இந்த வரையறையின்படி பார்த்தோமேயானால், நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு விதி இயற்றுதல் மற்றும் நீதிமுறையில் தீர்மானித்தல் ஆகிய இரண்டு மட்டுமே அதிகாரங்களாக உள்ளது போலவும், அவர்களது தன்விருப்புரிமை அதிகாரங்கள் நிருவாகமுறைச் சட்டத்தின் அதிகார வரம்பிற்குள் வராதது போலவும் தெரியும். ஆனால் இது சரியன்று.

இரண்டாவதாக, மேற்படி வரையறை, நீதிமுறை மறுஆய்வு ஒன்றுதான், நிருவாகத்துறை முகவர் நிலைகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக் கூடியது என்னும் பொருளில் விளக்குகிறது. ஆனால், அந்

---

3. "Administrative Law is the law concerning the powers and procedures of administrative agencies, including especially the law governing judicial review of administrative action". - **Kenneth Culp Davis. Administrative Law Text, 1959, p.1).**

4. "**நிருவாகத்துறை முகவர் நிலைகளும்**"(Administrative Agencies), "**நிருவாகத்துறை அதிகார அமைப்புகளும்**" (Administrative Authorities) ஒன்றே. முன்பு 'நிருவாகத்துறை முகவர் நிலைகள்' என்று அழைக்கப்பட்டவை, தற்பொழுது வேகமாக வளர்ந்து வரும் நிருவாகமுறைச் சட்டத்தில் 'நிருவாகத்துறை அதிகார அமைப்புகள்' என்று அழைக்கப்படுகின்றன. மற்றபடி இவை இரண்டிற்கும் இடையே பெரிதாக எந்த வேறுபாடும் இல்லை. ஒரு அரசாங்கம் தனது நிருவாகப் பணிகளை சட்டத்தால் உருவாக்கப்பட்ட தனது பல்வேறு முகவர் நிலைகளின் வாயிலாக, அதாவது நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் வாயிலாக நிறைவேற்றுகின்றது. இவற்றை அரசாங்க நிருவாகத்தின் கிளைகள் என்றும் கூறலாம். எனவே இந்நூலில் எங்கெல்லாம் 'நிருவாகத்துறை முகவர் நிலைகள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளதோ, அங்கெல்லாம் அப்பதம், நிருவாகத்துறை அதிகார அமைப்புகளைக் குறிப்பிடுவதாகவும் பொருள் கொள்ள வேண்டும் - ஆசிரியர்.

நடவடிக்கைகளை சட்டமன்றம் கட்டுப்படுத்தக் கூடிய (Legislative[5] control) வகையையும், நிருவாகத்துறை மேல்முறையீடுகள் மற்றும் சீராய்வுகள் (administrative appeals and revisions) மூலமாக கட்டுப்படுத்தக் கூடிய வகையையும் குறித்து மேற்படி வரையறையில் ஆய்வு ஏதுமில்லை.

அறிஞர் கார்னர் (Garner) அவர்களின் வரையறை:

அறிஞர் கார்னர் அவர்களும் கே.சி.டேவிஸ் கூறிய மேற்படி வரையறையை பின்பற்றி பின்வருமாறு கூறுகிறார். அஃதாவது, "நிருவாக முறைச் சட்டம் என்பதை அரசாங்கத்தின் நிருவாகம் தொடர்பானதும் மற்றும் அதனை ஒழுங்குபடுத்துவதுமான நீதிமன்றங்களால் சட்டமென அங்கீகரிக்கப்பட்டுள்ள விதிகளென விளக்கலாம்",[6] என்று வரையறுக்கிறார்.

அறிஞர்கள் கிரிஃபித் மற்றும் ஸ்டிரீட் (Griffith and Street) அவர்கள் கூறும் வரையறை:

இவர்களது வரையறையின்படி, நிருவாகமுறைச் சட்டத்தின் முக்கிய நோக்கம், நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் செயல்பாடும், அவற்றின் மீதான கட்டுப்பாடும் ஆகும். அது பின்வரும் மூன்று விஷயங்களைக் கையாளுவதாக இருக்க வேண்டும். அவை,

1. நிருவாகத் துறையினர் எந்த வகையான அதிகாரத்தை செயல்படுத்துகின்றனர்? (What sort of power does the administration exercise?)
2. அந்த அதிகாரங்களின் மீதான வரம்புகள் யாவை? (What are the limits of those powers?)
3. எந்த வழிகளின் மூலமாக நிருவாகத்துறையினர் அந்த வரம்புகளுக்குள் வைக்கப்பட்டுள்ளனர்? (What are the ways in which the administration is kept within those limits?)

இந்திய சட்ட கழகத்தின்படி (Indian Law Institute)[7] பின்வரும் இரண்டு விஷயங்களை மேற்கண்டவற்றுடன் சேர்த்துக் கொள்ளலாம். அப்படிச் செய்தால், நிருவாகமுறைச் சட்டம் குறித்த ஒரு முழுமையான கருத்திற்கு வர இயலும். அவை,

---

5. **'Legislative'** எனும் பதம் "சட்டமியற்றுகின்ற அமைப்பு" அல்லது "சட்டமியற்றுத்துறை" ஆகும். இது மாநிலத்தில் சட்டமியற்றும் அமைப்பான 'சட்டமன்றத்தையும்', மத்தியில் சட்டமியற்றும் அமைப்பான பாராளுமன்றத்தையும் குறிக்கும் பதமாகும். எனினும் இந்நூலில் **'Legislative'** என்று வரும் இடத்தில், அது பொதுவாக சட்டமன்றம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும், அப்பதம் பாராளுமன்றத்தையும் குறிக்கும் என்பதையும் அறிக. - ஆகிரியர்.

6. "Administrative Law may be described as those rules which are recognised by the courts as law and which relate to and regulate the administration of Government" - **Garner. Administrative Law, 1985, p. 4**

7. Cases and Materials on Administrative Law in India, 1956, Vol. I, p. 53.

4. நிருவாக அதிகார அமைப்புகளால் பின்பற்றப்படும் நடைமுறைகள் முறைகள் யாவை? (What are the procedures followed by the administrative authorities?)

5. நிருவாகத்துறையினரால் பாதிக்கப்பட்ட ஒரு நபருக்குக் கிடைக்கும் தீர்வழிகள் யாவை? (What are the remedies available to a person affected by administration?)

சட்டவியல் அறிஞர்கள் ஜெயின் மற்றும் ஜெயின் (Jain and Jain) அவர்கள் கூறும் வரையறை:

ஜெயின் மற்றும் ஜெயின் என்பார்கள், "நிருவாகமுறைச் சட்டம் நிருவாகத்துறையினுடைய அமைப்பு முறை, அதிகாரங்கள் மற்றும் பணிகள் பற்றியும், அதிகாரவரம்புகள் பற்றியும், அவ்வதிகாரங்களையும், பணிகளையும் செயலில் பயன்படுத்தும் செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் பற்றியும் மற்றும் நிருவாகத் துறையினரால் ஒருவருடைய உரிமைகள் மீறப்பட்டால் அவருக்குச் சட்டப்படி கிடைக்கக் கூடிய தீர் வழிகள் உட்பட அவைகள் எவ்வகைச் செயல்முறைகளால் கட்டுப்படுத்தப் படுகின்றன என்பது பற்றியும், செயல் தொடர்பு கொள்கின்றதென்றும்",[8] கூறுகிறார்கள்.

இந்த வரையறை மிக நீண்டதாக இருந்தாலும், நிருவாகமுறைச் சட்டத்தின் இயல்புகள் அல்லது குணாதிசயங்கள் யாவற்றையும் உள்ளடக் கியுள்ளது என்று கூறலாம். எனினும், இந்த வரையறையே சிறந்த வரையறை என்று கூறிவிடுமளவிற்கு இல்லை. ஏனெனில்; இந்த வரையறை சட்ட மன்றத்தினால் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அளிக்கப்படும் அதிகாரங்களை ஒப்படைப்பது (Delegation of Powers) பற்றிச் சிறப்பாக ஏதும் கூறவில்லை. மேலும் நிருவாகத்துறையினரின் நடவடிக்கைகள் மீது செய்யப்படும் நீதிமுறை மறுஆய்வு (Judicial Review) பற்றி மிகவும் மேலோட்டமாகவே குறிப்பிடுகின்றது.

சட்டவியல் அறிஞர் சி.கே.தக்வாணி (C.K.Takwani) கூறும் வரையறை:

சட்டவியல் அறிஞர் சி.கே.தக்வாணி அவர்கள் நிருவாகமுறைச் சட்டத்தை பின்வருமாறு வரையறுக்கிறார். அஃதாவது, "நிருவாகமுறைச் சட்டமென்பது அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு கிளை; அது நிருவாக அதிகார அமைப்புகளின் அதிகாரங்களையும் கடமைகளையும் விளக்கி, அவ்வதிகாரங்களைப் பயன்படுத்தும் பொழுதும் மற்றும் அக்கடமைகளை நிறைவேற்றும் பொழுதும் அந்த அதிகார அமைப்புகளால் பின்பற்றப்பட

8. "Administrative Law deals with the structure, powers and functions of the organs of administration, the limits of their powers, the methods and procedures followed by them in exercising their powers and functions, the methods by which their powers are controlled including the legal remedies available to a person against them when his rights are infringed by their operation" - **Jain and Jain.Principles of Administrative Law, 1986, pp. 12-13.**

வேண்டிய நடைமுறைகள் குறித்தும் மற்றும் அதிகார அமைப்புகளால் எடுக்கப்படும் நடவடிக்கை எதனாலும் ஒருவரது உரிமைகள் பாதிக்கப் பட்டால் அவருக்கு கிடைக்கும் தீர்வழிகள் பற்றியும் எடுத்துரைக்கிறது."[9]

முடிவுரை:

நிருவாகமுறைச் சட்டம் குறித்து மேலே கண்டவாறு பல வரையறைகள் நமக்குக் கிடைத்தாலும், ஒன்றில் உள்ள சாரம் மற்றொன் றில் இல்லை. ஒன்று அதன் நோக்கத்தைப் பற்றிக் கூறினால், மற்றொன்று அதன் தன்மையைக் குறிப்பிடுகின்றது; பிறிதொன்று அதன் செயல் பாட்டை விளக்குகிறது. மேற்கண்ட வரையறையில் அறிஞர்கள் **Griffith and Street** அவர்களின் விளக்கமும், அதில் **Indian Law Institute**-ஆல் சேர்க்கப்பட்ட இரு கூடுதல் விஷயங்களும், பின்னிட்டு சட்ட அறிஞர் **C.K.Takwani** அவர்கள் முத்தாய்ப்பாக கூறிய வரையறையும் ஓரளவு நிருவாகமுறைச் சட்டத்திற்கு ஒரு முழுமையான வடிவத்தைக் கொடுக்க முயல்கிறது.

எனவே, எல்லா வரையறைகளையும் முழுமையாகவும், தொகுத்தும் ஆராய்ந்தால், ஒருவேளை நிருவாகமுறைச் சட்டத்தின் கருப்பொருளை (subject matter) நாம் முழுதளவில் உணர முடியும். அவற்றின் தொகுப்பு வருமாறு.

நிருவாகமுறைச் சட்டம் பொதுவாக நிருவாகத்துறை சார்ந்த மூன்று அடிப்படைக் கூறுகளை ஆராய்கின்றது. அவை,

1. சட்டமன்றம், நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு விதிகளை உரு வாக்கக் கொடுத்த அதிகார ஒப்படைப்பு (Delegation of Legislative powers by the Legislatures to the Administrative Agencies)

2. நிருவாகத்துறை முகவர் நிலைகள் அவ்வதிகாரங்களை செலுத்துதல் (Exercise of such powers by the Administrative Agencies)

3. நிருவாக முறை நடவடிக்கைகள் மீதான நீதிமுறை மறுஆய்வு (Judicial Review on Administrative actions)

மேற்கண்டவற்றை மேலும் சில உட்கூறுகளாகப் பிரிக்கலாம். அவ்வாறு பிரித்துப் பார்ப்பின் நிருவாகமுறைச் சட்டம் பின்வரும் வினாக் களுக்கு விடை காணும் விதமாக அமைந்துள்ளது என்று கூறலாம்.

1. என்னென்ன வகைப்பட்ட அதிகாரங்கள் சட்டமன்றங்களால்

9. "Administrative Law is that of branch of Constitutional Law which deals with powers and duties of administrative authorities, the procedure followed by them in exercising the powers and discharging the duties and remedies available to an aggrieved person when his rights are affected by any action of such authorities." - **C.K.Takwani. Lectures on Administrative Law, 1996 p. 4.**

நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன?

2. எவ்வகைப்பட்ட அதிகாரங்களை நிருவாகத்துறை முகவர் நிலைகள் செலுத்துகின்றன?

3. அவ்வதிகாரங்கள் மீதான வரம்புகள் என்னென்ன?

4. நிருவாகத்துறை முகவர் நிலைகளை அவைகளின் அதிகார வரம்புக்குள் வைக்க என்னென்ன நடைமுறைகள் மற்றும் வழிகள் கையாளப்படுகின்றன?

5. நிருவாகத்துறை முகவர் நிலைகள் சட்டத்திற்கு புறம்பான வழியில் செயற்பட்டு தனி மனிதனுடைய உரிமைகளுக்கோ அல்லது நலன்களுக்கோ ஊறு விளைவித்தால், அவருக்கு கிடைக்கக் கூடிய தீர்வுகள் என்னென்ன?

6. நிருவாகத்துறை நடவடிக்கைகள் மீது எவ்வகை நீதிமுறை மறு ஆய்வு கிடைக்கப் பெறுகின்றது?

மேற்கண்ட விளாக்களுக்கு அளிக்கப்படும் விடையின் தன்மையைக் கொண்டு, ஒரு அரசின் நிருவாக அதிகாரம் நல்ல முறையில் செயலுறுத்தப்படுகின்றதா அல்லது அது மக்களுக்கு இன்னல் விளைவிக்கும் விதத்தில் உள்ளதா என்பதை கண்டறிந்து விடலாம். எனவே, **நிருவாக முறைச் சட்டத்தை அரசின் அதிகாரத்தில் உள்ள குறைகளை கண்டறிய வந்த சட்டமாகும்**[10], என்று **பேராசிரியர் உபேந்திரா பாக்ஸி** கூறியதில் தவறொன்றுமில்லை.

எவ்வகையில்[11] பொருத்து நிருவாகமுறைச் சட்டம் குறித்து கேட்டால், நேர்மறையான கண்ணோட்டத்தில், நிருவாகமுறைச் சட்டமெனப்படுது, சிக்கலான நிருவாகத்தை உடைய ஒரு அரசின் நிருவாகத் துறையின் செயற்பாடுகளை வெளிப்படுத்துகிறது; எதிர்மறையான கண்ணோட்டத்தில், நிருவாகத்துறை அதிகாரங்கள் தனியொரு மனிதருக்கு எதிராக துஷ்பிரயோகம் செய்யப்படுவதிலிருந்து அவரைப் பாதுகாக்கிறது.

நிருவாகமுறைச் சட்டத்தைக் கற்பதின் இன்றியமையாமை [Importance of the Study of Administrative Law]

2. What is Administrative Law? Mention the importance of studying Administrative Law. (நிருவாகமுறைச் சட்டம் என்றால் என்ன? அதைக் கற்பதன் இன்றியமையாமை பற்றிக் கூறுக.)

10. "Administrative Law is the study of the pathology of Governmental powers" - Prof. Upendra Baxi.

11. P.R.Jayarajan - Author of this book.

(அல்லது)

What are the characteristics of Administrative Law? Is it necessary to study Administrative Law? (நிருவாகமுறைச் சட்டத்தின் குணாதிசயங்கள் யாவை? நிருவாகமுறைச் சட்டத்தை கற்பது அவசியந்தானா?)

நிருவாகமுறைச் சுட்டம் - விளக்கம்:

(முந்தய வினாவின் விடையில் கூறப்பட்டுள்ள பல்வேறு வரையறைகளைச் சுருக்கமாகச் சுட்டிக்காட்டி, அதன் முடிவுரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை தெளிவாக எடுத்துரைக்கவும்.- ஆசிரியர்)

நிருவாகமுறைச் சட்டத்தின் குணாதிசயங்கள் (Characterstics of Administrative Law):

1. நிருவாகமுறைச் சட்டமானது, எவையெல்லாம் நிருவாகத் துறை அதிகார அமைப்புகள் (Administrative Authorites) என்பதை நிர்ணயிக்கிறது.

2. நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் அதிகாரங்களைத் தீர்மானிக்கிறது.

3. அந்த அதிகாரங்களைப் பயன்படுத்துவதின் மீதான வரம்புகளை எடுத்துரைக்கிறது.

4. நிருவாகத்துறையை கட்டுப்படுத்துவதற்குண்டான வழிகளை பகர்கிறது.

5. நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் தங்களது பணிகளை நிறைவேற்றும் பொழுது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை வகுத்துக் கொடுக்கிறது.

6. நிர்வாகத்துறை நடவடிக்கைகளினால் எந்நபராவது பாதிக்கப் பட்டால் அவருக்கு கிடைக்கும் தீர்வழிகளை விளக்குகிறது.

நிருவாகமுறைச் சட்டத்தைக் கற்பதின் இன்றியமையாமை (Importance of studying Administrative Law):

இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற சட்ட வளர்ச்சி, நிருவாகமுறைச் சட்டமாகும். ஒரு அரசு வெறுமனே நாட்டின் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு இவற்றை மட்டும் சிந்தித்துக் கொண்டிருக்கும் காவல் அரசாக (Police State) மட்டும் இருந்தால் போதாது. அது நாட்டு மக்களின் நல வாழ்விலும் அக்கறை கொண்டு செயல்படக் கூடிய மக்கள் நல அரசாக (Welfare State) இருத்தல் அவசியம் என மக்களாட்சி அரசுகள் உணர ஆரம்பித்த பொழுதே, நிருவாகமுறைச் சட்டமும் வேகமாக வளர்ச்சி அடையத் தொடங்கிவிட்டது என்று கூறலாம்.

இவ்வாறு மக்கள் நல அரசாக செயல்பட வேண்டுமெனில்

மக்களின் நலனை முன்னிறுத்தி சட்டங்கள் இயற்றப்படுதல் வேண்டும். அந்த வகையில் பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. அச்சட்டங்கள் அரசின் நிர்வாக ஆட்சிக்கு (Executive Government) எண்ணற்ற அதிகாரங்களை வழங்கின. அவற்றில் முக்கியமானது, (1) சட்டமன்றத்தைப் போல விதிகள் (சட்டங்கள்) இயற்றும் அதிகாரம் (Rule making power), (2) நீதிமுறையில் தீர்மானிக்கும் அதிகாரம் (Adjudication). (3) சில பிரச்சனைகளை தன்விருப்பத்தின் அடிப்படையில் தீர்மானிக்கும் தன்விருப்புரிமை அதிகாரம் (Discretionary power).

இவ்வாறு வழங்கப்பட்ட அதிகாரங்கள், சிக்கல் மிகுந்த நிருவாகப் பணிகளை மக்கள் நலனுக்காக எளிமைப்படுத்துவதற்காகத்தான் என்றாலும், இதனால் சில இன்னல்களும் மக்களுக்கு நேர வாய்ப்பு ஏற்பட்டன. அஃதாவது, மேற்கண்ட அதிகாரங்கள் நிருவாகத்துறையை ஏதேச்சதிகாரப் போக்கிற்கு (arbitrary) இட்டுச் சென்றது. அவர்கள் மக்களின் கருத்தை மதியாமல் செயல்படத் தொடங்கினர். மக்களின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் நிருவாகத்துறையினரின் ஏதேச்சதிகாரப் போக்கிலிருந்து காக்க நிருவாகமுறைச் சட்டம் உருவாயிற்று. அச்சட்டம் பல்வேறு தீர்ப்புகளின் வழியாக நாள்தோறும் வளர்ச்சியுற்றது.

நீதிமன்றங்களின் பக்கம் செல்லாமலேயே மனிதன் வாழ்ந்துவிட முடியும். ஆனால் நிருவாகத் துறையினரோடு எவ்விதத் தொடர்பும் கொள்ளாமல், மனிதனால் வாழ முடியாது. மனிதனுடைய வாழ்வு நிருவாகத் துறையினரோடு நாள்தோறும் தொடர்புடையதாகவே உள்ளது.

நிருவாகத்துறை பல பகுதிகளாக இயங்குகின்றது. நிருவாகத் துறையும் அதன் பல பகுதிகளும், பொதுவாக நிருவாகத்துறை முகவர் நிலைகள் (Administrative Agencies) எனப்படும். இவை நிருவாகத் துறை அதிகார அமைப்புகள் (Administrative Authorities) என்றும் கூறப்படுகின்றன. இவை மனிதனுடைய சாதாரண வாழ்க்கை முறையுடன் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. அவ்வாறான நிருவாகத்துறை முகவர் நிலைகளின், அதிகார அமைப்புகளின் நடவடிக்கைகள் குறித்து ஆழ்ந்து ஆய்வு செய்யும் சட்டம், நிருவாகமுறைச் சட்டமாகும்.

நிருவாகமுறைச் சட்டமானது, அனைவரும் நிருவாகத்துறை முகவர் நிலைகளிடமிருந்து நீதி பெற வழி செய்கின்றது. ஒவ்வொரு மனிதனும் அவன் அறிந்தோ, அறியாமலோ நிருவாகமுறைச் சட்டத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளான். நாகரிகமும், பண்பாடும், கலாச்சாரமும் ஓங்கிவரும் இந்நாளில் ஒவ்வொருவரும் நிருவாகமுறைச் சட்டம் பற்றி ஓரளவு அறிந்திருப்பாராயின், அவர் தன் உரிமைகளையும், நலன் களையும் நல்ல முறையில் பேணிப் பாதுகாத்துக் கொள்ள இயலும்.

ஆதலால், நிருவாகமுறைச் சட்டம் பற்றிய அறிவும், அதனைக் கற்க வேண்டியதின் அவசியமும் இன்றியமையாததாகும்.

நிருவாகமுறைச் சட்டத்தின் தன்மை மற்றும் பரவெல்லை [Nature and Scope of Administrative Law]

3. Write an essay on the nature and scope of administrative law. (நிருவாகமுறைச் சட்டத்தின் தன்மை மற்றும் பரவெல்லை பற்றி ஒரு கட்டுரை வரைக.)

நிருவாகமுறைச் சட்டத்தின் தன்மை (Nature of Adminstrative Law):

நிருவாகமுறைச் சட்டத்தின் தன்மையை அறிய, அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைத் தன்மையை சற்று கவனித்தல் அவசியமாகும். ஏனெனில், நிருவாகமுறைச் சட்டமும் அரசியலமைப்புச் சட்டமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையது. நிருவாகமுறைச் சட்டம், அரசியமைப்புச் சட்டத்திலிருந்து பிறந்ததாகக் கூட கூறலாம் (Constitutional Law is a source of Administrative Law). மேலும், அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு கிளையே, நிருவாகமுறைச் சட்டமெனவும் (Administrative Law is a branch of Constitutional Law) விளம்பலாம்.

அரசியலமைப்பின்படி, ஒரு அரசின் தலையாய அங்கங்கள் (Priniciple Organs of Government) மூன்று ஆகும். அவை, (1) சட்டமியற்றுத் துறை (Legislature), (2) நிருவாகத்துறை (Executive), (3) நீதித்துறை (Judiciary). சட்டமியற்றுத் துறை, சட்டங்களை இயற்றுகிறது; நிருவாகத் துறை, அச்சட்டங்களின் அடிப்படையில் மக்களை வழி நடத்தி, நிருவாகம் செய்கிறது; நீதித்துறை, தன் முன் எழும் வழக்குகளில் அச்சட்டங்களின் அடிப்படையில் நீதி வழங்குகிறது; சட்டங்களுக்கு பொருள்விளக்கம் அளிக்கிறது.



மக்களாட்சி நிலவும் நாட்டில் அரசின் பணிகள் அளப்பரியது. இதனால் மக்களின் தேவையை அறிந்து முழுமையான வடிவில் சட்டங்களை இயற்ற, சட்டமியற்றுத் துறையால் அதாவது சட்டமன்றத்தாலும், பாராளுமன்றத்தாலும் முடிவதில்லை. அவற்றால் நேரமும் ஒதுக்க முடிவதில்லை. இதனால் சட்டங்கள் இயற்றும் பணியை, அச்சட்டங்களால் மக்களை ஆட்சி செய்யும் நிருவாகத்துறையினரிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற்காக சட்டங்கள் இயற்றப்பட்டன. இச்சட்டத்தின் வாயிலாக நிருவாகத்துறை முகவர் நிலைகளும் (Administrative Agencies), நிருவாகத்துறை அதிகார அமைப்புகளும் (Administrative Authorites) தோற்றுவிக்கப்பட்டன. மேலும் அவற்றிடம் விதிகள் உருவாக்கும் அதிகாரம், மேற்படி சட்டத்தின் வாயிலாக ஒப்படைக்கப் பட்டன. இவை, மக்களின் தேவையை உடனுக்குடன் அறிந்து, அவர்கள் நலனுக்காக விதிகள் (Rules), ஒழுங்கு முறைகள் (Regulations), உபவிதிகள் (Bye-laws) ஆகியவற்றை உருவாக்கின. மேற்கண்ட நிருவாகத்துறை அதிகார அமைப்பு அல்லது நிருவாகத்துறை முகவர் நிலை என்பது, அரசாங்கத்தின் ஒரு நிருவாகக் கிளையே (executive branch of Government) ஆகும். இந்த அதிகாரம், **நிருவாகத்துறையினரின் சட்டமியற்றும் அதிகாரம் (Administrative legislative power).** இதனை சட்டமியற்றுமுறை போல்வு அதிகாரம் (quasi-legislative power) என்றும் அழைக்கலாம்.

மேலும், இவற்றிடம் நீதித்துறைக்கே உரிய நீதி வழங்கும் அதிகாரமும் ஒப்படைக்கப்பட்டது. இது நீதிமுறையில் பிரச்சனைகளை எளிய நடை முறைகளின்படி தீர்மானித்து, தீர்வழிகளை வழங்கியது. இது **நிருவாகத் துறையினரின் நீதிமுறை தீர்மானிப்பு அதிகாரம்** ஆகும் **(Administrative adjudicatory power).** இதனை நீதிமுறை போல்வு அதிகாரம் (quasi-judicial power) என்றும் அழைக்கலாம்.

இத்தோடு மட்டுமில்லாமல் நெருக்கடியான சூழ்நிலைகளில் உடனடியாக முடிவெடுப்பதற்கு வசதியாக **நிருவாகத்துறையினருக்கு தன்விருப்புரிமை அதிகாரமும் (Discretionary power)** உண்டு.

நிருவாகத்துறை அதிகார அமைப்புகளும், நிருவாகத்துறை முகவர் நிலைகளும் மேற்கண்ட அதிகாரங்களை துஷ்பிரயோகப்படுத்தி, மக்களுக்கு அரசியலமைப்பால் வழங்கப்பட்ட உரிமைகளையும், சுதந்திரங்களையும் பறித்துவிடக் கூடாது என்பதற்காக அந்த அதிகாரங்களின் மீது கட்டுப் பாடுகளும், வரம்புகளும் விதிக்கப்பட்டன.

மேற்கண்டவற்றை ஒழுங்குபடுத்த தோற்றுவிக்கப்பட்டதே, நிருவாகமுறைச் சட்டமாகும். அதாவது, நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் அவற்றால் அந்த அதிகாரங்கள் பயன்படுத்தப்படும் பொழுதும், பணிகள் நிறைவேற்றப் படும் பொழுதும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள், அந்த அதிகாரங்களின் மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் முறை மற்றும் அவற்றின் நடவடிக்கைகளின் விளைவாக எவரது உரிமையாவது மீறப்பட்டால்

அவருக்கு கிடைக்கக் கூடிய தீர்வழிகள் ஆகியவற்றை விளக்குவதே, நிருவாகமுறைச் சட்டத்தின் தன்மையாகும்.

சற்று விரிவாகச் சொன்னால், நிருவாகமுறைச் சட்டம், நிருவாகத் துறை அதிகார அமைப்புகளின் அதிகாரங்களின் மீதான கட்டுப்பாடுகள் குறித்து முக்கியமாக விளக்குகிறது. நிருவாகத்துறை அதிகாரங்களை எந்த வழிமுறைகளில் கட்டுப்படுத்துவது என்பதை நிருவாகமுறைச் சட்டம் முதற் நோக்கமாகவும் பணியாகவும் கொண்டுள்ளது. நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் ஏதேச்சதிகாரத்திலிருந்தும், சட்ட முரணான செயல்களிலிருந்தும் தனி நபர்களை நிருவாகமுறைச் சட்டம் பாதுகாக்கிறது. அத்தகு செயல்களினால் எந்நபரின் உரிமையாவது மீறப்பட்டால், அதற்கான தீர்வழிகளை எடுத்துரைக்கிறது. மேலும் அரசு ஊழியர்களால் செய்யப்பட்ட தீங்குச் செயல்களுக்கு அரசின் பொறுப்பு நிலை (Tortious liability) யாது என்பதைக் கூறுகிறது. அதுபோல், அரசின் ஒப்பந்தப் பொறுப்பு நிலையை (Contractual liability of the Government) விளக்குகிறது. நிருவாகமுறைச் சட்டம் சட்டத்தின் முன் அனைவருக்கும் சமம் எனும் சட்டத்தின் ஆட்சி (Rule of Law) நாட்டில் நடைபெற வழி வகுக்கிறது. நிருவாகமுறைச் சட்டத்தின் அடிப்படைத் தன்மை யாதெனில், நிருவாக முறை அதிகாரங்களுக்கும் தனி மனித சுதந்திரத்திற்கும் இடையே ஒரு சம நிலையை தோற்றுவிப்பதே ஆகும்.

நிருவாகமுறைச் சட்டத்தின் பரவெல்லை (அல்லது) நோக்கெல்லை (அல்லது) அளாவுகை (Scope of Adminstrative Law):

1. நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் கட்டமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பணிகள் (Composition, powers and functions of the administrative authorities): மக்களாட்சி தத்துவத்தைக் கொண்டு செயல்படும் அரசாங்கத்தில் நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் பல்வேறு அதிகாரங்களைச் செலுத்துகின்றன; பல பணிகளை செய்கின்றன. இந்த நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் கட்டமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பணிகளை நிருவாகமுறைச் சட்டம் விளக்குகிறது. (பின்வரும் அத்தியாயங்களில் நிருவாகமுறை அதிகார அமைப்புகளின் பல்வேறு அதிகாரங்களும், பணிகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.)

2. நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் தங்கள் அதிகாரங்களை செலுத்தும்பொழுதும், பணிகளை நிறைவேற்றும் பொழுதும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் (Procedures to be followed by the administrative authorities in the exercise of their powers and functions): எந்த நடைமுறையில் நிருவாகமுறை அதிகார அமைப்புகள் தங்கள் அதிகாரங்களை செலுத்த வேண்டும், தங்கள் பணிகளை நிறை வேற்ற வேண்டும் என்பதற்குண்டான வழிமுறைகளை நிருவாகமுறைச் சட்டம் எடுத்துரைக்கிறது. அவற்றில் இயற்கை நீதி (Natural Justice) மற்றும் பாரபட்சமில்லாத நியாயமான விசாரணை (Imparitial and Fair Hearing) ஆகியவை முக்கியமானவையாகும்.

3. நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் அதிகாரங்களின் மீது கட்டுப்பாடு விதிக்கும் வழிமுறைகள் (Methods of control of the powers of the administrative authorities): கட்டுப்பாடு இல்லாத அதிகாரம், கடிவாளம் இல்லாத குதிரையைப் போன்றது. எனவே, நிருவாகத்துறை அதிகார அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு அதிகாரங்களை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதற்குண்டான வழி முறைகளை ஆய்வு செய்து விளக்குவதும், நிருவாகமுறைச் சட்டத்தின் பரவெல்லைக்குட்பட்டதுதான்.

4. நிருவாகத்துறை அதிகார அமைப்புகளால் ஒருவரது உரிமைகள் மீறப்பட்டால் அவருக்கு கிடைக்கும் தீர்வழிகள் (Remedies available to a person in case of violation of his rights by the administrative authorities): இரண்டு வகையான தீர்வழிகள் வழங்கப் பெறுகின்றன. அவை (1) அரசியலமைப்புச் சட்டப்படியிலான தீர் வழிகள், (2) சாதாரண தீர்வழிகள். இவ்வாறு தீர்வழிகள் வழங்குவதும் நிருவாகமுறைச் சட்டத்தின் பரவெல்லைக்குள் வருகின்றது.

நிருவாகமுறைச் சட்டமும் அரசியலமைப்புச் சட்டமும் [Administrative Law and Constitutional Law]

4. Discuss the scope of Administrative Law and bring out the difference between Administrative Law and Constitutional Law (நிருவாகச் சட்டத்தின் நோக்கெல்லையை விவாதிக்கவும். நிருவாகச் சட்டத்திற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் உள்ள வேறுபாட்டை தெளிவு படுத்துக.)

(அல்லது)

Discuss the scope and development of Administrative Law in India and distinguish Administrative Law from Constitutional Law (இந்தியாவில் நிர்வாகச் சட்டத்தின் அளாவுகை மற்றும் வளர்ச்சியை விவாதிக்க. நிர்வாகச் சட்டம் எவ்வாறு அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்து வேறுபடுகிறது என்பதை தெளிவுபடுத்துக.)

(அல்லது)

"Administrative Law is a part of Constitutional Law. It has become an independent branch of study only recently". Discuss. ("நிருவாக முறைச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாகும். அது சமீபகாலத்தில்தான் ஆய்விற்குரிய ஒரு தனிக் கிளையாக ஆனது" விவாதிக்க.)

நிருவாகமுறைச் சட்டத்தின் நோக்கெல்லை (அல்லது) அளாவுகை (Scope of Adminstrative Law):

(வினா எண் 3-ன் விடையில் காண்க)

நிருவாகமுறைச் சட்டத்திற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் இடையிலுள்ள உறவு (The relationship between Adminstrative Law and Constitutional Law):

நிருவாகமுறைச் சட்டம், அரசியலமைப்புச் சட்டத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டதாகும். இது அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு கிளை என்றே அழைக்கப்படுகிறது. இரண்டு சட்டங்களும் பொது மக்களின் நலன் குறித்த பொதுச் சட்டத்தின் பகுதிகளேயாகும் (Both laws are parts of Public Law). நிருவாகமுறைச் சட்டத்தின் சரியான நிலையை அறிந்து கொள்ள, அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றி அறிந்திருப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

அரசியலமைப்புச் சட்டமானது, நிருவாகமுறைச் சட்டத்தின் முக்கியமான மூலங்களில் (sources) ஒன்றாகும். அதாவது நிருவாகமுறைச் சட்டம் பிறக்க அரசியலமைப்புச் சட்டமும் ஒரு காரணமாகும். பல்வேறு கொள்கைகள் அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து எடுக்கப்பட்டு, நிருவாக முறைச் சட்டத்தின் அடிப்படையாக கொள்ளப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்துகள் 32, 136, 226, 227 , 299 மற்றும் 300 ஆகியவை நிருவாகமுறைச் சட்டத்தைப் படிப்பதில் முக்கிய இடம் வகிக்கிறது. மேலும் ஷரத்து 263-ன்படி மாநிலங்களுக்கு இடையிலான குழுக்களும் (Inter-state Councils), ஷரத்து 280-ன்படி நிதி ஆணையமும் (Finance Commission) அமைக்கப்பட்டுள்ளது. இவை எல்லாம், நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் ஆகும். மேலும், நிருவாகத் துறை அதிகார அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்ட விதிகள் இயற்றும் அதிகாரத்தின் மீது, இந்திய அரசியலமைப்புச் சட்டம் வரம்புகளை விதிக்கிறது. மேலும் அவற்றின் ஏதேச்சதிகார நடவடிக்கைகளை, உயர் நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி நீதிமுறை மறுஆய்வு (Judicial Review) செய்யும் அதிகாரத்தை பெற்றுள்ளன. அரசியலமைப்புச் சட்டமும், நிருவாகமுறைச் சட்டமும் சில பொதுவான விஷயங்களில் ஒன்றுடன் ஒன்று இணைந்தும், இயைந்தும் செல்ல வேண்டியுள்ளது. இந்நிலையை பின்வரும் ஒரு வரைபடம் மேலும் தெளிவாக்கும்.



எனினும், மக்களின் தேவைகளும், அதற்கான சட்டங்களும் அதிகரித்துவிட்ட இந்தக் காலத்தில் நிருவாக முறைச் சட்டம் தனக்கென தனியான ஒரு அந்தஸ்த்தை அடைந்துள்ளது என்றே கூற வேண்டும். அரசியலமைப்புச் சட்டமில்லாமல், நிருவாக முறைச் சட்டம் தனித்து நிற்க இயலாது என்ற கூற்று படிப்படியாக மறைந்து வருகிறது. எனவே நிருவாக முறைச் சட்டத்தை அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டலாம்.

நிருவாகமுறைச் சட்டத்திற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் (The distinctions between Adminstrative Law and Constitutional Law):

அரசியலமைப்புச் சட்டம் என்பது ஒரு நாட்டின் அரசு அமைப்பைக் குறிக்கும் சட்டமாகும். **மெயிட்லண்ட் (Maitland)** எனும் அறிஞர், "அரசியலமைப்புச் சட்டம், ஒரு நாட்டு அரசியலமைப்பின் கட்டமைப்பை (structure) விவரிக்கிறது என்றும், நிருவாகமுறைச் சட்டம், அக்கட்டமைப்பின் அலுவல்கள் (functions) பற்றி விவரிக்கிறது,"[12] என்றும் கூறுகிறார்.

ஒரு அரசின் அங்கங்கள் (1) சட்டமியறுத்துறை, (2) நிருவாகத் துறை மற்றும் (3) நீதித்துறை என மூவகைப்படும். **ஹாலண்ட் (Holland)** எனும் சட்டவியல் அறிஞர், "ஒரு அரசின் மேற்கண்ட அங்கங்கள் இயங்காமல் இருக்கும் பொழுது, அவற்றின் நிலைப்பாடு யாது என்பது குறித்து விளக்குவதே அரசியலமைப்புச் சட்டம் என்றும், அந்த அங்கங்கள் இயங்கும் பொழுது, அவற்றின் நிலைப்பாடு யாது என்பது குறித்து விளக்குவதே நிருவாகமுறைச் சட்டம் என்றும்,"[13] அழகாக வேறுபடுத்திக் காட்டுகிறார்.

ஜே.எஃப். கார்னர் (J.F.Garner) எனும் அறிஞர், "மேற்கண்ட இரண்டு சட்டங்களுக்கும் இடையே உள்ளதாக கூறும் வேறுபாடு, வசதி (convenience) மற்றும் வழக்கத்தின்பாற்பட்டுக் (custom) கூறப்பட்டதே யன்றிக் காரண-காரியத் தொடர்புடன் (logic) கூறப்பட்டதன்று,"[14] கூறுகிறார்.

மேற்கண்ட வகையில் நாம் நிருவாகமுறைச் சட்டத்திற்கும், அரசியலமைப்புச் சட்டத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை பின் வருமாறு பட்டியலிட்டுக் காட்டலாம். அவை,

---

12. "Constitutional Law deals with structure while Administrative Law deals with function" - **Maitland.**

13. "The various organs of the government are described by the Constitutional Law as at rest, but Administrative Law describes them in motion" - **Holland, Jurisprudence, p. 506.**

14. "The distinction between the two laws is one rather of convenience and custom than logic" - **J.F.Garner, Law and the Constitution, p. 217.**

(1) நிருவாகமுறைச் சட்டம், அரசின் மூன்று தலையாய அங்கங்களில் ஒன்றான நிருவாகத்துறையையும் அதன் கிளை அமைப்புகளையும் குறித்து முக்கியமாக தொடர்பு கொண்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டம் அரசின் அம்மூன்று தலையாய அங்கங்களுடனும் அதாவது சட்டமியற்றுத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு அவற்றிற்கு சமமுக்கியத்துவம் அளிக்கிறது.

(2) அரசின் அங்கங்களுக்குரிய முக்கிய விதிகளையும், விரிவான கொள்கைகளையும் அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. அதே சமயத்தில் அவ்விதிகளின் பயன்பாடு மற்றும் விவாதத்தை நிருவாகமுறைச் சட்டத்தின் வசம் ஒப்படைத்துள்ளது.

(3) அரசின் அங்கங்கள் இயங்காமல் இருக்கையில் அவற்றின் நிலைப்பாடு குறித்து விவரிப்பது அரசியலமைப்புச் சட்டம்; அவை இயங்கும் பொழுது என்ன நடக்கிறது என்பதை விவரிப்பது நிருவாக முறைச் சட்டம்.

(4) அரசியலமைப்புச் சட்டம் மக்களின் அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட பல உரிமைகளைக் குறித்து விளக்குகிறது. அவ்வுரிமைகள் நிருவாகத்துறை அதிகார அமைப்புகளால் மீறப்படும் பொழுது, அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கக் கூடிய தீர்வழிகள் குறித்து விவரிப்பது நிருவாகமுறைச் சட்டம்.

(5) அரசியலமைப்புச் சட்டம், நிருவாகமுறைச் சட்டத்தை விட ஒரு படி மேலான அந்தஸ்த்தைப் பெற்றுள்ளது. இந்தியாவில் அரசியலமைப்புச் சட்டம் நாட்டின் மிக உயர்ந்த மற்றும் அடிப்படையான சட்டமாகும். எனவே, நிருவாகமுறைச் சட்டம் உள்ளிட்ட எந்தச் சட்டமானாலும், அது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக இருப்பின், அது வரம்பு மீறியது என்று நீதிமன்றத்தால் இரத்து செய்யப்படும். இந்த அடிப்படையில் நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் நடவடிக்கைகள் ஏதேனும், அரசியலமைப்புச் சட்டத்தின் வகைமுறைகளை மீறிய வகையில் இருப்பின், அவை வரம்புமீறியதாக (ultra vires) கூறப்பட்டு, இல்லா நிலையதென (void) நீதிமன்றத்தால் விளம்பப்படும்.

(6) அரசியலமைப்புச் சட்டம் தனிநபர்கள் உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. நிருவாகமுறைச் சட்டம் தனிநபர் உரிமைகளுக்கும் பொதுமக்களின் தேவைகளுக்கும் சம முக்கியத்துவம் அளிக்கிறது.

முடிவுரை:

சுருங்கக்கூறின், நிருவாகமுறைச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தோடு ஒட்டி நிற்கிறது; எனினும் அதனுடைய வேகமான வளர்ச்சி காரணமாகப் பிரிந்தும் நிற்கின்றது, என்பதே உண்மை. இந்த வளர்ச்சியின் காரணமாகத்தான் இன்று, நிருவாகமுறைச் சட்டம் தனக்கென ஒரு தனி அந்தஸ்த்தைப் பெற்றுள்ளது.

நிருவாகமுறைச் சட்டத்தின் வேகமான வளர்ச்சியும், அதற்கான காரணங்களும் [Reasons for the Rapid Growth of Administrative Law]

5. "Administrative Law has been characterised as the most outstanding legal development of the 20th century" - Elucidate. ("இருபதாம் நூற்றாண்டின் ஈடினையற்ற சட்ட வளர்ச்சியென நிருவாகமுறைச் சட்டம் மொழியப்படுகிறது". விளக்குக.)

முன்னுரை:

"இருபதாம் நூற்றாண்டின் ஈடினையற்ற சட்ட வளர்ச்சியென நிருவாகமுறைச் சட்டம் மொழியப்படுகிறது" என்று புகழ் பெற்ற சட்டவியல் அறிஞர் **Venderbilt** அவர்கள் நிருவாகமுறைச் சட்டத்தை வர்ணிப்பது முற்றிலும் உண்மைதான்.

விளக்கம்:

இருபதாம் நூற்றாண்டில்தான் நிருவாகமுறைச் சட்டம் வேகமாக வளர்ச்சியடைந்தது. ஆனால், இக்கூற்றைக் கொண்டு, இருபதாம் நூற்றாண்டிற்கு முன்பு நிருவாகமுறைச் சட்டம் என்று ஒரு சட்டமே இருந்தததில்லை என்று கூறிவிடக் கூடாது. நிருவாகமுறைச் சட்டம் ஏதேனும் ஒரு வடிவில் பல்லாண்டு காலமாகவே இருந்து வந்துள்ளது.

ஆனால் இருபதாம் நூற்றாண்டில்தான், ஆட்சி புரிவதில் அரசின் பங்கு மற்றும் செயல்பாடு குறித்த தத்துவம் (The philosophy as to the role and function of the State) அதீத மாறுதலுக்கு உள்ளானது. அரசாங்கப் பணிகள் எல்லையில் பரந்து விரிந்தது. இன்று அரசு என்பது, வெறுமனே நாட்டின் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை மட்டும் பராமரிக்கும் காவல் அரசாக மட்டுமில்லாமல், முன்னேற்றமடைந்து வரும் ஒரு மக்களாட்சி அரசாக, மக்கள் நல அரசாக (not merely a Police State; but a welfare State) விளங்குகிறது.

அது சமூகப் பாதுகாப்பையும், சமூக நலனையும் தனது மக்களுக்கு உறுதி செய்கிறது. அது, தொழிற்சாலை உறவுகளை ஒழுங்குபடுத்துகிறது. அத்தியாவசிப் பண்டங்களின் விளைச்சல், உற்பத்தி மற்றும் அவற்றின் பகிர்ந்தளிப்பு ஆகியவற்றின் மீது கட்டுப்பாடுகளை செலுத்தி, அவ் வளங்கள் அனைவருக்கும் சென்றடைய வழி செய்து வருகிறது. மேலும் அரசு பல தொழில் ஸ்தாபனங்களை (பொதுக் கூட்டு நிறுவனங்கள்) தொடங்கி, சமத்துவத்தை அடைய முயற்சிக்கிறது. சமமான பணிக்கு சமமான ஊதியத்தை அளிக்க உறுதி செய்கிறது. குடிசைப் பகுதிகளை மேம்படுத்துகிறது. மக்களின் சுகாதாரம், நல்லொழுக்கங்களைப் பேணிக் காக்கிறது. குழந்தைகளுக்கு கல்வியளிக்கிறது. இவ்வாறாக சமூக நீதியை (So-

cial Justice) வலியுறுத்தும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

இருபதாம் நூற்றாண்டிலிருந்து தொடங்கிய இத்தகு மக்கள் நல முன்னேற்றங்கள் யாவும், நிருவாகமுறைச் சட்டத்தின் பரவெல்லையை மற்றும் நோக்கத்தை விரிவுபடுத்தியுள்ளது என்றே கூற வேண்டும். எனவே, நிருவாகமுறைச் சட்டமானது, இருபதாம் நூற்றாண்டிலிருந்து வேகமாக வளர்ச்சியுறத் தொடங்கியது என்பது சரியே.

இவ்வாறு நிருவாகமுறைச் சட்டம் இருபதாம் நூற்றாண்டி லிருந்து வேகமாக வளர்ச்சியுற்றதற்கு காரணங்கள்தாம் என்ன? இதோ அக்காரணங்கள் பின்வருவாறு.

நிருவாகமுறைச் சட்டத்தின் வேகமான வளர்ச்சிக்கு காரணங்கள் (Reasons for the rapid growth of Administrative Law):

1. ஆட்சி முறைத் தத்துவத்தில் மாற்றம் (Change in the Government's Philosophy): ஒவ்வொரு அரசும் எத்தத்துவத்தின் அடிப் படையில் தமது அரசாங்கத்தை நடத்த வேண்டும் என்று நிர்ணயம் செய்து கொண்டு அதன்படி செயலுறுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரும் பாலுமான அரசுகள் **"தலையிடாக் கொள்கை" (Laissez faire)** எனும் தத்துவத்தின் அடிப்படையில் ஆட்சி முறையை நடத்தியது. இத்தலை யிடாக் கொள்கை என்பது என்ன? குறைந்தபட்ச அரசாங்க கட்டுப் பாடுகள், அரசின் தலையீடற்ற வாணிபம், தனித்துவம் (individualism) ஆகியவையே தலையிடாக் கொள்கையாகும். இத்தத்துவத்தின்படி, மக்களின் சமூக மற்றும் பொருளாதார நல வாழ்க்கை, அரசாங்கத்தின் பொறுப்பாக ஒருபோதும் கருதப்படவில்லை. மக்களே தங்களை வழி நடத்திக் கொள்ள வேண்டியது. அரசாங்கம் எந்த உதவியும் புரியாது. ஆனால் இருபதாம் நூற்றாண்டிலிருந்து மக்களின் சிந்தனை மாறியது. தங்களுக்குண்டான உரிமைகளை அரசு வரையறுத்துக் கொடுத்தால் மட்டும் போதாது; தங்களின் நல வாழ்விலும் அரசு அக்கறை காட்ட வேண்டும் என்ற கருத்து மக்கள் மனதில் வலுப்பெற்றது. இதனை அரசுகள் தட்டிக் கழிக்க இயலவில்லை.

எனவே, அரசுகள் தங்கள் ஆட்சி முறையை **"தலையிடாக் கொள்கை" (Laissez faire)** எனும் தத்துவத்திலிருந்து **"சமூக நல அரசு"** (அல்லது மக்கள் நல அரசு) **(Social Welfare State)** எனும் தத்துவத்திற்கு மாற்றிக் கொள்ள நேரிட்டது. இது அரசின் பணிகளை அதிமாக்கியது. மக்களின் நல வாழ்க்கைக்கு உகந்த பல சட்டங்களை இயற்ற வேண்டிய அவசியமும், அதன் மூலம் அரசிற்கு அதிக அளவில் நிர்வாக அதிகாரங் களைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. இவ்வாறு அதிகமாக நிருவாக அதிகாரங்களை அரசிற்கு கொடுக்க வேண்டி இருந்ததால், அதன் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதற்குண்டான வழிவகைகளை ஏற்படுத்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. ஏனென்றால் கட்டுப்பாடற்ற நிர்வாக

அதிகாரம், ஏதேச்சதிகாரமாக மாறி மக்களின் சுதந்திரங்களையும், அடிப்படை உரிமைகளையும் பறித்து விடக்கூடாதல்லவா? இப்படிப் பட்ட மாற்றம், நிர்வாக முறைச் சட்டம் வேகமாக வளர்ச்சியுற முதன்மைக் காரணமாக அமைந்தது என்று சொன்னால் அது மிகையன்று.

2. சட்டமியற்றும் அதிகாரங்களை ஒப்படைப்பதின் வளர்ச்சி (Growth of delegated legislation): மக்கள் நல அரசில் மக்களின் நல வாழ்விற்கு ஏற்ற விதத்தில் சட்டமன்றம் சட்டங்களை இயற்ற வேண்டும். இதனால் அதிக எண்ணிக்கையில் சட்டமன்றம் சட்டங்களை இயற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இது சட்டமன்றத்தின் வேலைப் பளுவை அதிகமாக்கியது. இதனால் அனைத்து விஷங்களையும் ஆராய்ந்து சட்ட மியற்ற சட்ட மன்றத்திற்கு நேரமில்லாமல் போனது. சட்டமும் இயற்றப்பட வேண்டும், அது முழுமையாகவும், காலம் மற்றும் சூழ்நிலைக்கேற்றவாறு மக்களுக்கு பயன் தரக் கூடிய வகையிலும் இருக்க வேண்டும். இந்த இக்கட்டான நிலையில்தான், சட்டமன்றத்திற்கே உரிய சட்டமியற்றும் அதிகாரத்தை (legislative power), மக்களை ஆட்சி செய்யும் அதிகாரம் கொண்ட நிருவாகத் துறையினரிடமும் (Executive Government), வேறு நிருவாகத் துறை முகவர் நிலைகளிடமும் (Other Administrative Agencies), நிருவாகத்துறை அதிகார அமைப்புகளிடமும் (Administrative Authorities) ஒப்படைத்து, அவர்கள் மூலம் விதிகள் (Rules), ஒழுங்கு முறைகள் (Regulations) முதலியவற்றை இயற்றினால் என்ன, என்ற எண்ணம் உதித்தது. இதனால் சட்டமியற்றும் அதிகாரங்களை நிருவாகத் துறையிடம் ஒப்படைக்கும் நடைமுறை வளர்ந்தது. இவ்வாறு ஒப்படைத் தது, நிருவாக முறைச் சட்டத்தின் தேவையை மேலும் அதிகமாக்கியது.

3. நீதித்துறையின் மெதுவான மற்றும் அதிகச் செலவு வைக்கும் செயல்பாடு (Slow and Expensive Judicial Process): நீதித்துறையின் செயல்பாடானது மிகவும் நுணுக்கமானதாகவும், அதிகச் செலவு வைக்கக் கூடியதாகவும், மெதுவாகச் செயல்படக் கூடியதாகவும் இருக்கிறது. புதிதாக இயற்றப்படும் சட்டங்கள் பல்வேறு புதிய பிரச்சனை களுக்கும் வழி வகுத்தன. தேங்கிக் கிடக்கும் வழக்குகளை தீர்த்து வைப்ப தற்கே நீதித்துறைக்கு நேரமில்லாத பொழுது, அப்புதிய பிரச்சனைகளை மட்டும் தீர்த்து வைக்க எப்படி நேரம் கிடைக்கும்? மேலும், ஏழை எளிய மக்கள் எளிதில் நீதிமன்றத்தை அணுக முடியாதபடி, நீதிமன்றக் கட்டணங் களும், வழக்குரைஞர் கட்டணங்களும், இதர நீதிமன்றச் செலவுகளும் இருந்தன. இலவச சட்ட உதவிக்கு அரசால் வகை செய்யப்பட்டிருந்தாலும், அதுவும் எளிதில் அவர்களுக்கு கிடைப்பதில்லை. இதனால் விரைவாகவும் மற்றும் அதிகமாகச் செலவு செய்யாமலும், வழக்குகளைத் தொடுத்து தக்க நிவாரணங்களைப் பெறுவதற்கு வகை செய்யும் பொருட்டு, நீதித்துறைக்கே உரித்த பல்வேறு நீதித்துறை பணிகள், **நிருவாகத்துறை முகவர் நிலை களுக்கு (Administrative Agencies)** அளிக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, நிதி ஆணையம் (Finance Commission), மாநிலங்களுக்கிடையிலான குழு (inter-state council), தேர்தல் ஆணையம் (Election Commission),

மாநிலங்களுக்கிடையிலான நதிநீர் தகராறு அதிகார அமைப்பு (Inter-state Water Dispute Authority) போன்று பலப்பல. மேலும் வழக்குகளை நீதிமுறையில் தீர்மானிப்பதற்காக பல்வேறு **தீர்ப்பாயங்கள் (Tribunals)** அமைக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, தொழிற் தகராறு தீர்ப்பாயங்கள் (Industrial Tribunals), இரயில் கட்டண தீர்ப்பாயம் (Railway Rates Tribunal), இரயில் கோருரிமை தீர்ப்பாயம் (Railway Claims Tribunal), வருமான வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (Income Tax Appellate Tribunal), சொத்து வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (Property Tax Appellate Tribunal), தேர்தல் தீர்ப்பாயம் (Election Tribunal), சுரங்கத் தீர்ப்பாயம் (Mines Tribunal) போன்று பலப்பல. இவையெல்லாம் நீதித்துறையைப் போன்று வழக்குகளை தீர்மானிக்கும் அதிகாரங்களைக் கொண்ட அமைப்பாக விளங்கின. (Quasi-judicial bodies having adjudicatory powers). நிருவாகத்துறையினரின் இத்தகு நீதிமுறை அதிகாரங்களும் பணிகளும், நிருவாகமுறைச் சட்டத்தின் எல்லையை மேலும் அதிகமாக்கியது.

4. நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களின் எளிய நடைமுறைகள் (Simple Procedures of Administrative Tribunals): ஒரு வழக்கை நீதி மன்றங்கள் விசாரித்து தீர்ப்பு வழங்க எண்ணிறைந்த நடைமுறைகளையும், சாட்சிய சட்டத்தின் சிக்கலான விதிகளையும் பின்பற்ற வேண்டும். ஆனால் முன் சென்ற பத்தியில் கண்டவாறு ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள், சாட்சிய சட்டத்தின் விதிகளுக்கோ அல்லது நடைமுறைகளுக்கோ கட்டுப்பட்டதல்ல. அவற்றைத் தவிர்த்து, சிக்கலான வழக்குப் பிரச்சனைகளைக் கூட, அவை அனுபவரீதியான கண்ணோட்டத்தில் (Practical view) அணுகி தீர்த்துவிடலாம். மேலும் எளிதாகவும், விரைவாகவும், அதிகச் செலவு வைக்கமாலும் தீர்வழிகளை வழங்கலாம். இவை நிருவாகத்துறையினரின் நீதிமுறை தீர்மானிப்புகள் (administrative adjudications) வளரவும், நிருவாகமுறைச் சட்டம் வேகமாக வளர்ச்சியுறவும் வழிவகுத்தன.

5. சோதனை செய்து பார்க்க வாய்ப்பு (Opportunity of Experiment): சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட விதிகளை மாற்றுவதோ அல்லது திருத்துவதோ அவ்வளவு எளிதன்று. அதற்கு படிப்படியான பல நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும் சட்டமன்றத்தின் அடுத்த கூட்டத் தொடர் கூடும் வரை காத்திருக்க வேண்டும். ஆனால் நிருவாக முறையின் சட்டமியற்றல் செயல்பாட்டின் (Administrative Legislative Process) வாயிலாக இயற்றப்பட்ட விதிகளை, சில காலம் கடைப் பிடிக்கலாம். பின்னிட்டு அவை கடைப்பிடிக்க முடியாத அளவிற்கு குறை பாடுடையதாக இருப்பின், அவ்விதிகளை எளிதாக மிகக் குறைந்த காலத்தில், சூழ்நிலைக்கொப்ப மாற்றியமைக்கலாம் அல்லது திருத்தியமைக்கலாம். ஏனெனில், நிருவாகமுறைச் செயல்பாடு மிகவும் நெகிழ்வானது. சட்டமன்ற செயல்பாட்டைப் (Legislative Process) போல கடினமானதல்ல. எனவே, நிருவாகமுறை செயல்பாட்டின் வாயிலாக செய்யப்பட்ட

விதிகளை சோதனை செய்து பார்க்கலாம். அதாவது, அவ்விதி, கருதிய விளைவை தரவில்லையானால், எளிதாக நீக்கிவிடலாம் அல்லது தேவைக் கேற்றவாறு திருத்தியமைக்கலாம். அதேசமயத்தில் அவ்விதி, கருதிய விளைவை தரும் வண்ணம் அமைந்து விட்டால், அதன் பயன்பாட்டை மேலும் அதிகமாக்கலாம் அல்லது தொடர்ந்து நீடித்திருக்கும் வண்ணம் செய்யலாம். இந்த எளிமைதான், நிருவாகமுறை சட்டம் வேகமாக வளர்வதற்கு கிரியாஊக்கியாக இருந்தது; இருக்கிறது.

6. நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் தடுப்பு நடவடிக்கைகள் (Preventive Measures of Administrative Authorities): ஏதேனும் ஒரு வழக்குடன் நீதிமன்றத்திற்கு செல்லும்பொழுதுதான், அவை அவ்வழக்கை தீர்க்கின்றன. ஆனால் நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் (Administrative Authorities) இவ்வாறு வழக்கு எழும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. வழக்கு எழுவதற்கு முன்பாகவே, சம்பந்தப்பட்ட உரிமைகளையும், கடமைகளையும், செயல்பாடுகளையும் ஒழுங்குபடுத்த தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கலாம். அதாவது, ஒருவர் சட்ட விதிகளை மீறி தவறு செய்த பிறகு அவரைத் தண்டிப்பதை விட, அத்தவறைச் செய்ய முடியாதபடி தடுக்கும் நடவடிக்கையே, தடுப்பு நடவடிக்கை எனப்படும். எடுத்துக்காட்டாக, உரிமம் வழங்குதல் (Licensing), கட்டணம் நிர்ணயித்தல் (Rate Fixing) போன்ற தடுப்பு நடவடிக்கைகளின் மூலமாக ஒருவரது செயல்களை சட்ட வரம்பிற்குள் கொண்டு வந்து, பின்னிட்டு எழலாமெனக் கூடிய பிரச்சனைகளை அல்லது வழக்குகளைத் நிருவாகத் துறை அதிகார அமைப்புகள் தடுக்கின்றன.

7. தடுப்பு நடவடிக்கைகளை வலியுறுத்தும் அதிகாரம் (Power to enforce the Preventice Measures): மேற்கண்ட தடுப்பு நடவடிக்கைகள் வெறும் ஏட்டளவில் மட்டும் இருந்துவிடாமல் அவற்றை வலியுறுத்திச் செயல்படுத்தும் அதிகாரத்தையும் நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, வழங்கிய உரிமத்தை நிறுத்தி வைத்தல் (Suspension of License), ரத்து செய்தல் (Revocation), நீங்குதல் (Cancellation), கெட்டுப்போன பொருட்களை அழித்தல் (Destruction of contaminated articles) போன்றவற்றைக் கூறலாம். ஆனால் இவற்றை எல்லாம் வழக்கமான நீதிமன்றங்களின் வழியாகப் பொதுவாகச் செய்ய முடியாது.

8. உரிமைகளை பாதுகாப்பதற்கு மக்கள் விடுக்கும் கோரிக்கை (Demand for the protection of rights): அரசு வெறுமனே தங்கள் உரிமைகளை வரையறுத்துக் கொடுத்தல் மட்டும் போதாது; அவற்றை பாதுகாக்கும் நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றுமக்கள் தற்பொழுது எதிர்பார்க்க ஆரம்பித்துவிட்டனர். எனவே, மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளையும், சுதந்திரங்களையும் அவர்கள் உண்மையிலேயே பெற்று, அனுபவிப்பதற்கு உண்டான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதுவும் நிருவாகமுறைச் சட்டம் வேகமாக வளர்ச்சியுற ஒரு காரணமாகும்.

பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் இந்திய நாட்டில் நிருவாகமுறைச் சட்டத்தின் வளர்ச்சி [Development of Administrative Law in France, Engalnd, America and India]

6. What do you mean by Administrative Law? How far it is developed step by step in England, France and in India? (நிருவாக முறைச் சட்டம் என்றால் என்ன? அது எவ்வாறு இங்கிலாந்து, பிரான்சு, இந்தியா முதலிய நாடுகளில் படிப்படியாக வளர்ந்தது?)

(அல்லது)

Conseil d' Etat - Write short notes. (கன்சில் டெட்டா - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Droit Administratif - Write short notes. (டிராய்ட் அட்மினிஸ்ட்ரேடிப் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Lord Hewart's New Despotism - Write short notes. (ஹீவார்டின் புதுக் கொடுங்கோன்மை - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Committee on Minister's Powers - Write short notes. (அமைச்சர்களின் அதிகாரங்கள் மீதான குழு - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Donoughmore Committee - Write short notes. (டுநோக்மோர் குழு - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Franks Committee - Write short notes. (ஃபிராங்ஸ் குழு - சிறு குறிப்பு வரைக.)

நிருவாகமுறைச் சட்டம் - விளக்கம்:

நிருவாகமுறைச் சட்டமென்பது அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு கிளை; அது நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் அதிகாரங்களையும் கடமைகளையும் விளக்கி, அவ்வதிகாரங்களைப் பயன்படுத்தும் பொழுதும் மற்றும் அக்கடமைகளை நிறைவேற்றும் பொழுதும் அந்த அதிகார அமைப்புகளால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்தும்

மற்றும் அதிகார அமைப்புகளால் எடுக்கப்படும் நடவடிக்கை எதனாலும் ஒருவரது உரிமைகள் பாதிக்கப்பட்டால் அவருக்கு கிடைக்கும் தீர்வழிகள் பற்றியும் எடுத்துரைக்கிறது. (விரிவாக விளக்கத்திற்கு நிருவாகமுறைச் சட்டத்தின் பல்வேறு வரையறைகளை விளா எண். 1-ல் காண்க - ஆசிரியர்)

நிருவாகமுறைச் சட்டத்தின் படிப்படியான வளர்ச்சி (Step by step development of Adminstrative Law):

நிருவாகமுறைச் சட்டம் என்று ஆட்சி தோன்றியதோ, அன்றே தோன்றியது என்று கூறலாம். ஆனாலும் அன்று இருந்த நிருவாகமுறைச் சட்டம் ஓர் இலக்கணத்திற்குள் அடங்காத மாறுபட்ட பல தன்மைகளைக் கொண்ட சட்டமாக இருந்தது. அதனுடைய விதிகளை அறுதியிட்டுக் கூறுவது என்பது இயலாத காரியமாக இருந்தது. அப்படியே ஆய்வு செய்து கூறினாலும், அந்த விதிகளுக்கும் இன்றைய நிருவாகமுறைச் சட்ட விதிகளுக்கும் தொடர்புகள் இருக்க வாய்ப்பில்லை. எனவே, நிருவாக முறைச் சட்டத்தின் வளர்நிலை அண்மைக்காலம் தொட்டு கணக்கிடுவதே பயனுள்ளதாக அமையும். இன்றைய நிருவாகமுறைச் சட்டத்தின் வளர்ச்சியை பிரான்சு நாட்டுச் சட்ட முறையிலிருந்து தொடர்ச்சியாகவும் படிப்படியாகவும் காணலாம். பிரான்சு நாட்டில்தான் நிருவாகமுறைச் சட்டம் முதன்முதலில் நிலைபெற்று வளர்ந்தோங்கியது என்று சொன்னால் அது மிகையன்று. அதனைத் தொடர்ந்து அமெரிக்காவிலும் இடம் பெற்று வளர்ச்சியடைந்தது. வெகுகாலம் நிருவாகமுறைச் சட்டம் என ஒன்று இருப்பதே மறுக்கப்பட்டாலும், இங்கிலாந்திலும் இறுதியாக அங்கீகாரம் பெற்றது. இந்தியாவிலும், இந்திய அரியலமைப்புச் சட்டம் மூலமாக ஒரு சிறப்பு இடத்தை நிருவாகமுறைச் சட்டம் பெற்றது. இப்படிப்பட்ட படிப்படியான வளர்ச்சியை பின்வருமாறு காண்போமா?

(1) பிரான்சு நாட்டில் நிருவாகமுறைச் சட்ட வளர்ச்சி (Development of Administrative Law in France):

பிரான்சு நாட்டில் இரு வகையான நீதிமன்றங்கள் உள்ளன. அவை ஒன்று, **கௌர் டி காசேசன்** (Cour de Cassation) எனப்படும். மற்றொன்று, **கன்சில் டெட்டா** (Conseil d' Etat) எனப்படும். உரிமையியல் வழக்குகளையும், குற்றவியல் வழக்குகளையும் **கௌர் டி காசேசன்** (Cour de Cassation) எனும் நீதிமன்றம் விசாரித்து தீர்ப்பு வழங்க அதிகாரம் படைத்தது. அதே சமயத்தில் பிரான்சு நாட்டின் நிருவாகத்துறை தொடர்பான வழக்குகளை **கன்சில் டெட்டா** (Conseil d' Etat) எனும் நீதிமன்றம் விசாரித்து தீர்ப்பு வழங்க அதிகாரம் படைத்தது.

இவ்வாறு நிருவாகத்துறை தொடர்பான வழக்குகளை மட்டும் விசாரித்து தீர்ப்பு வழங்க தனியாக ஒரு நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. அஃதாவது, பிரான்சு நாட்டில் நெப்போலியனுக்கு முன் ஆட்சி புரிந்த ஆதிகாவர்க்கத்தினரும், அலுவலர்களும் அவர்களுடைய அலுவல் சம்பந்தப்பட்ட செயல்களைப் பொறுத்த

வரையில் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் அல்லர் என்றும், நீதிமன்ற அதிகாரவரம்பிற்கு உட்பட்டவர்கள் அல்லர் என்றும் கருதப்பட்டது. இதனால் அவர்கள் ஏதேச்சதிகாரப் போக்குடன் செயல்பட ஆரம்பித்தனர். இதனால், அவர்களைச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கச் செய்யவும், நீதிமன்ற அதிகாரவரம்பிற்குள் கொண்டுவரவும் எண்ணி, 1799-ஆம் ஆண்டில் அரசன் நெப்போலியனால் உருவாக்கப்பட்டதே, **கன்சில் டெட்டா (Conseil d' Etat)** எனப்படும் தலைமை நிருவாகமுறை நீதிமன்றமாகும். குடிமக்களும், அரசு அலுவலர்களும் சமமாக இல்லாத காரணத்தால், சட்டத்தை சாதாரணமாக அவர்கள் மீது சமமாக அமல் செய்தால், அநீதி இழைக்கப்படும் என்று கருதி, அரசு அலுவலர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை மட்டும் விசாரித்து தீர்ப்பு வழங்கும் தலைமை நீதிமன்றமாக **கன்சில் டெட்டா (Conseil d' Etat)** ஏற்படுத்தப்பட்டது.

இந்த நீதிமன்றத்தில் பின்பற்றப்படும் சட்டம், பிரான்சு நாட்டின் ஏனைய சட்டங்களிலிருந்து வேறுபட்டிருந்தது. எனவே, அச்சட்டம் நிருவாகத்துறையோடு சம்பந்தப்பட்ட ஒரு தனிச் சட்டமாக உருவெடுத்தது. அந்தச் சட்டம், **ட்ராய்ட் அட்மினிஸ்ட்ரேட்டிப் (Droit Administratif)** என்று அழைக்கப்படலாயிற்று. இந்த **ட்ராய்ட் அட்மினிஸ்ட்ரேட்டிப்**-ஐ **குட்நியூ (Good New)** எனும் சட்டவியல் அறிஞரால் ஆங்கிலத்தில் **'அட்மினிஸ்ட்ரேடிவ் லா' (Administrative law)** என்று மொழி பெயர்க்கப்பட்டது. இதுவே, சட்டத் தமிழில் **'நிருவாகமுறைச் சட்டம்'** என்று வழங்கப்படலாயிற்று.

நான்கு அரசியலமைப்புச் சட்டங்களை உதறித் தள்ளிவிட்டு, அய்ந்தாவது அரசியலமைப்புச் சட்டத்துடன் விளங்கும் பிரான்சு நாட்டில் **கன்சில் டெட்டா (Conseil d' Etat)** மட்டும் எவ்வித மாற்றமும் பெறாமல் நாளுக்கு நாள் சிறப்புற்கு விளங்குகிறது.

கன்சில் டெட்டா (Conseil d' Etat) பிரான்சு நாட்டு சட்ட மன்றத்தின் ஒரு அங்கமாகும். அது ஆட்சியாளர் சம்பந்தப்பட்ட வழக்கு களில் நீதி வழங்குவதுடன், (1) அரசின் விதிமுறைகளை ஆக்குகின்றது. (2) ஆட்சி முறை நீதிமன்றங்களின் அலுவலர்களின் அதிகாரங்களை நிர்ணயிக் கின்றது. (3) பொதுப் பணித் துறைகளும், பொது நல அமைப்புகளும், குழுமங்களும் அமைத்திட யாருடைய அனுமதி தேவை என்பதை அறுதி செய்கிறது. (4) ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறது. இருப் பினும், நிருவாகத்துறை சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரித்து நீதி வழங்குவதே அதன் தலையாய பணியாகும். நிருவாகத்துறை அலுவலர் களிடையே அல்லது நிருவாகத்துறை அலுவலர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே எழும் வழக்குகளை விசாரித்து நீதித் தீர்ப்பு வழங்குகின்றது. நிருவாகத்துறை வல்லுநர்களும், சட்டம் பயின்றவர்களும் **கன்சில் டெட்டா-வில் (Conseil d' Etat)** நீதிபதிகளாக நியமிக்கப்படுகின்றார்கள். பிரான்சு நாட்டின் பொதுப் பணியாளர்கள் (Civil Servants), அதன் ஊழியர்களாக உள்ளனர். இன்று **கன்சில் டெட்டா (Conseil d' Etat)**

ஆலோசனை வழங்கும் பிரிவு, நீதிமுறைப் பிரிவு போன்று பலவாறு பிரிக்கப்பட்டுள்ளன.

கன்சில் டெட்டா (Conseil d' Etat) எனும் மேற்படி நிருவாகமுறை நீதிமன்றம், மேற்படி **ட்ராய்ட் அட்மினிஸ்ட்ரேட்டிப் (Droit Administratif)** எனும் நிருவாகமுறைச் சட்டத்தின்படி நீதி வழங்குகின்றது. இந்தச் சட்டம் **கன்சில் டெட்டா-வினால் (Conseil d' Etat)** முடிவு செய்யப்பட்ட தீர்ப்பு வழிச் சட்டங்களின் அடிப்படையில் தோன்றியதாகும். உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்கு நடைமுறைச் சட்ட விதிகள் எவையும் மேற்படி **கன்சில் டெட்டா-விற்கு (Conseil d' Etat)** பொருந்தாது. இந்தச் சட்டம் அதற்கேயுரிய தனி நடைமுறை விதிகளைக் கொண்டுள்ளது.

மேற்கண்ட **ட்ராய்ட் அட்மினிஸ்ட்ரேட்டிப் (Droit Administratif)** எனும் நிருவாகமுறைச் சட்டம், (1) நிருவாகத்துறை அமைப்பினையும், நிருவாகத்துறை அலுவலர்களின் பணிகளையும், கடமைகளையும் மற்றும் அவர்களது பணி சம்பந்தப்பட்ட விதிமுறைகளையும் அறுதியிடுகின்றது. (2) பொது மக்களுடைய உரிமைகளையும், அவைகளை நிருவாகத் துறையினர் பாதுகாக்க வேண்டிய முறைகளையும் தீர்மானிக்கிறது. (3) பொது மக்களுடைய உரிமைகள் நிருவாகத்துறை அலுவலர்களால் மீறப் பட்டால் அல்லது பாதிக்கப்பட்டால், அதற்கான தீர்வழிகளைக் கூறு கின்றது.

ஒரு வழக்கு சாதாரண நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிற்குள் வருகின்றதா அல்லது நிருவாகமுறை நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிற்குள் வருகின்றதா என்பதை நிர்ணயிக்க பிரான்சு நாடு, **டிரிபியூனல் டெஸ் கான்பிளிக்ட்ஸ் (Tribunal des conflicts)** எனும் ஒரு அமைப்பையும் ஏற்படுத்தியது. இதில் சாதாரண நீதிமன்றங்களிலிருந்தும், நிருவாகமுறை நீதிமன்றமான **கன்சில் டெட்டா-விலிருந்தும் (Conseil d' Etat)** சம எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிபதிகள் உள்ளடங்கியிருப்பர். இதனை நீதித்துறை அமைச்சர் தலைமை வகிப்பார். அதிகாரவரம்பு குறித்து இது எடுக்கும் முடிவே இறுதியானது. மேல்முறையீடு கிடையாது.

கன்சில் டெட்டா (Couseil d' Etat) முன் தீர்விற்கு எழுந்த முக்கிய வழக்கு: Fortune's Case -எனும் வழக்கில், பார்ச்சூன் என்பவர் உயர் அரசு அலுவலர் பணித் தேர்விற்கு மனுச் செய்திருந்தார். தலைமை அமைச்சரோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ மனுக்களை ஆய்வு செய்து தேர்விற்கு தகுதியுடையவர்களை தேர்வு செய்ய வேண்டும். ஆனால் பார்ச்சூனுடைய மனு, அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளராக இருந்தார் என்ற காரணத்தால் நிராகரிக்கப்பட்டது. அவர் உடனே இதை எதிர்த்து, **கன்சில் டெட்டா**-விடம் முறையீடு செய்தார். வழக்குச் சம்பந்தப் பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யுமாறு அரசை **கன்சில் டெட்டா** கேட்டுக் கொண்டது. ஆனால் அரசோ, தனது நடவடிக்கை, அரசு நட வடிக்கையின் (Act of State) பாற்படும் என்றும், அதனால் ஆவணங்களை

தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும் மறுத்துக் கூறியது. அரசின் இவ்வாதத்தை **கன்சில் டெட்டா** நிராகரித்து ஆவணங்களை கட்டாயம் தாக்கல் செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. இந்த ஆணைக்கு கீழ்ப்படிந்து அரசும் அவ்வாறே ஆவணங்களை தாக்கல் செய்தது. **கன்சில் டெட்டா** வழக்கைத் தானே எடுத்துக் கொண்டு, பார்ச்சூனை விலகியிருக்குமாறு ஆணை பிறப்பித்தது. பார்ச்சூனின் வழக்கைத் தயார் செய்யக் **கன்சில் டெட்டா** ஒருவரை நியமித்தது. அவரும் பார்ச்சூனின் வழக்கைத் தயார் செய்து சமர்ப்பித்தார். பார்ச்சூனின் தேர்வு மனுவை நிராகரித்தது, நீதிக்கு புறம்பானதல்ல என்று எடுத்துக்காட்டக் கோரி, **கன்சில் டெட்டா** அரசை கேட்டுக் கொண்டது. வழக்கு இறுதி நாளன்று வழக்கில் சம்பந்தப்பட்ட அனைவரும் அழைக்கப்பட்டனர். **கன்சில் டெட்டா** இறுதியாக, பார்ச்சூனின் மீதுள்ள குற்றத்தை மறுத்து அவர் தனது வாதத்தை எடுத்துக் கூற அவருக்கு இயற்கை நீதிப்படி அரசு வாய்ப்பளிக்கவில்லையென்றும், அரசானது பார்ச்சூனின் மனுவை நிராகரித்து எடுத்த நடவடிக்கை நீதிக்கு புறம்பானதல்ல என்று எடுத்துக் காட்டத் தவறிவிட்டதென்றும் கூறி, அரசு பார்ச்சூனின் மனுவை நிராகரித்தது செல்லாது என்று அறிவித்தது. இவ்வழக்கில் இருந்து தெளிவாகும் முக்கிய அம்சங்கள் யாதெனில், **கன்சில் டெட்டா-வின்** முன் (1) மனுச் செய்வதற்கு கட்டணம் இல்லை. (2) வழக்குரைக்க வழக்குரைஞர் நியமிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், **கன்சில் டெட்டா**-வே வழக்கினைத் தயார் செய்ய ஒருவரை நியமித்துக் கொள்ளும்; மேலும் (3) மனுச் செய்தவர் அரசின் நடவடிக்கை நீதிக்குப் புறம்பானது என்று நிரூபிக்கத் தேவையில்லை. ஏனெனில், அந்தப் பொறுப்பு அரசின் மீதே சுமத்தப்பட்டுள்ளது.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்று கூறுவதைப் போல, மேற்கண்ட வழக்கைப் போன்றே, அனைத்து வழக்குகளிலும், **கன்சில் டெட்டா** காரண-காரிய ஆய்வுகளுக்கு பொருந்திய வகையிலும், நீதிக்கு ஏற்புடைய முறையிலும் தீர்ப்பு வழங்கி வருகின்றது. **கன்சில் டெட்டா** மூலம், நிருவாகமுறைச் சட்டம் சிறப்புற வளர்ச்சியுற்றது என்று கூறினால் அது மிகையன்று.

ட்ராய்ட் அட்மினிஸ்ட்ரேட்டிப்-ற்கு எதிராக பேராசிரியர் டைசி கூறிய குறைகள் (Dicey's Criticisms against Droit Administratif):

(டைசி கூறும் குறைகளை வினா எண். 8-ன் விடையில் மேற்படி தலைப்பின் கீழ்க் காண்க.)

(2) இங்கிலாந்து நாட்டில் நிருவாகமுறைச் சட்ட வளர்ச்சி (Development of Administrative Law in England):

இங்கிலாந்து நாட்டில் வெகுகாலம் வரை நிருவாகமுறைச் சட்டம் என்று ஒன்று இருப்பதையே சட்டவியல் அறிஞர்கள் மறுத்தார்கள். இருப்பினும் நிருவாகமுறைச் சட்டம் மெல்ல, மெல்ல, ஆனால் உறுதியாக இங்கிலாந்து நாட்டில் வளர்ச்சியுற்றது.

இங்கிலாந்து நாட்டில் அரசரானவர், சட்டம் மற்றும் நீதியின் மொத்த உறைவிடமாகக் கருதப்பட்டார். **'அரசர் தவறு செய்யார்' (King can do no wrong)** என்ற கோட்பாட்டின்படி ஆட்சி நடந்தது. பதினேழாம் நூற்றாண்டு வரை இங்கிலாந்து பாராளுமன்றம் அதிக அதிகாரம் பெற்றிருக்கவில்லை. 1613-ஆம் ஆண்டில் இங்கிலாந்து நாட்டு அரசர் **முதலாம் ஜேம்ஸ் (James I)** என்பவர், அந்நாட்டின் தலைமை நீதிபதி **எட்வர்ட் கோக் (Edward Coke)** என்பவரை வேலை நீக்கம் செய்தார். இதற்குப் பின் இங்கிலாந்து பாராளுமன்றம் விழித்துக் கொண்டது. அது உடனடியாக அரசரின் அதிகாரங்களைப் பறிக்கத் தொடங்கியது. மேலும், 1628-ஆம் ஆண்டில் **'உரிமைகள் மனு' (The Petition of Rights)** இங்கிலாந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்குப் பின்னிட்டு, நாடாளுமன்றம் அனைத்து அதிகாரங்களையும் கொண்ட மாமன்றமாக திகழலாயிற்று.

அதிகாரம் கைக்கு வந்தால் ஆணவமும் கூட வர வேண்டும் என்பது எழுதப்படாத விதியே என்னவோ? மேற்கண்டவாறு அனைத்து அதிகாரங்களையும் கைக்கொண்ட இங்கிலாந்து பாராளுமன்றம் தன்விருப்பப்படி சட்டங்களை நிறைவேற்றி வந்தது. சில வழக்குகளில் ஏதேச்சதிகாரப் போக்குடன் தண்டனையும் வழங்கி வந்தது.

நீதிமன்றங்களின் வேலை, பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு பொருள் விளக்கம் அளிப்பது, வழக்குகளில் தீர்ப்பு வழங்குவது ஆகியன மட்டுமே என்று கருதப்பட்டது. இருப்பினும், நீதி மன்றங்கள் அவ்வப்போது, நிருவாகத்துறை முகவர் நிலைகள் (Administrative Agencies) மக்களின் சிறப்புரிமைகளிலும், உரிமைகளிலும் குறுக்கிடும் பொழுது, அவைகளைக் கட்டுப்படுத்தி வந்தது. 1750-ஆம் ஆண்டுவாக்கில் பொதுச் சட்ட நீதிமன்றங்கள் (Common Law Courts) அமைக்கப்பட்டன. இவை, நிருவாகத்துறை முகவர் நிலைகள் மக்களது உரிமைகளில் குறுக்கிட்டால், சிறப்புரிமை வாய்ந்த நீதிப்பேராணைகள் (Prerogative Writs) பிறப்பிப்பதின் வாயிலாக அவைகளைக் கட்டுப்படுத்தத் தொடங்கியது. அப்பொழுதே நிருவாகமுறைச் சட்டம் இங்கிலாந்தில் தோன்றிவிட்டது என்று கூறலாம்.

மேலும் 18, 19 ஆகிய நூற்றாண்டுகளில் தோன்றிய தொழிற்புரட்சி காரணமாக பாராளுமன்றம் பல தொழிற் சட்டங்களையும், மக்கள் நல் வாழ்வு சட்டங்களையும் ஆக்கியது. அந்தச் சட்டங்கள் மூலமாக பல நிருவாகத்துறை முகவர் நிலைகள் உண்டாக்கப் பெற்றன. அவைகளிடம் சட்டத்தின் கீழ் விதிகள் செய்யும் அதிகாரமும் (rule making power), வழக்குகளில் நீதி வழங்கும் அதிகாரமும் (adjudicatory power) ஒப்படைக்கப் பட்டன. நிருவாகத்துறை முகவர் நிலைகள் இந்த அதிகாரங்களைப் பயன்படுத்தும் பொழுது, மக்களது உரிமைகளும் சிறப்புரிமைகளும் பாதிக்கப்பட்டன. மக்களை உரிமைகளைப் பாதுகாக்க நீதிமன்றங்கள், நிருவாகத்துறை முகவர் நிலைகளின் நடவடிக்கைகளை நீதிமுறை மறுஆய்வு

(Judicial Review) செய்ய வேண்டி வந்தன; செய்யவும் தலைப்பட்டன. இவ்வாறாக, நிருவாக முறைச் சட்டம், இங்கிலாந்தில் 18, 19-ஆம் நூற்றாண்டுகளிலேயே நிலைபெறத் தொடங்கி விட்டது.

இங்கிலாந்து நாட்டில் நிருவாகமுறைச் சட்டம் கிடையாது - பேரா. டைசியின் கருத்துகள் (Dicey's view that there was no administra tive law in England): இங்கிலாந்தில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுவதால், அங்கு மக்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப் பட்டனர். எனவே, இங்கிலாந்தில் நிருவாகமுறைச் சட்டமே கிடையாது என்று டைசி கூறுகிறார். (விரிவான கருத்துகளுக்கு வினா எண். 8-ன் விடையில் மேற்படி தலைப்பின் கீழ்க் காண்க).

ஹிவார்ட் நீதிப்பெருமகனாரின் 'புதுக் கொடுங்கோன்மை' (Lord Hewart's 'New Despotism'): டைசியின் கருத்துக்களால் உந்தப் பட்டு, ஹிவார்ட் நீதிப்பெருமகனார் 1929-ஆம் ஆண்டில் அவருடைய 'புதுக் கொடுங்கோன்மை' (New Despotism) எனும் நூலில் இங்கிலாந்து பாராளுமன்றம், நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்குச் சட்டத்தின் கீழ் விதிகள் இயற்றும் அதிகாரத்தையும், வழக்குகளில் நீதிமுறைத் தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தையும் ஒப்படைப்பதை குறை கூறினார். அப்பொழுது, இங்கிலாந்து சட்ட முறையில் நிருவாகமுறைச் சட்டத்திற்கு இடமில்லை என்றும், அந்தச் சட்டம் நிருவாகத்துறை முகவர் நிலைகளின் ஏதேச்சதிகாரப் போக்கினை உண்மையில் கட்டுப்படுத்தவில்லையெனவும் கூறினார். நிருவாகமுறைச் சட்டத்தினால் நிருவாகத்துறை முகவர் நிலைகளின் தன்விருப்புரிமை அதிகாரங்களும் (Discretionary powers), மற்றைய அதிகாரங்களும் நீதிமன்றங்களின் மறுஆய்விலிருந்து நீக்கப்பட்டுவிட்டன வென்றும், அதனால் அவை கட்டுப்பாடின்றி ஏதேச்சதிகாரப் போக்கில் செயல்படுவதாகவும் குறை கூறினார்.

டுநோக்மோர் குழுவின் பரிந்துரைகள் (Recommendations of Donoughmore Committee): 1929-ஆம் ஆண்டில் இங்கிலாந்து நாடாளுமன்றம், **அமைச்சர்கள் அதிகாரங்கள் மீதான குழு (Committee on Minister's Powers)** ஒன்றை **டுநோக்மோர் (Donoughmore)** என்பவர் தலைமையில் நியமித்து, 'அதிகாரங்களை ஒப்படைத்தல்' (Delegation of Powers) என்பது பற்றி ஆய்வு செய்து அதனுடைய அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்குமாறு பணித்தது. இக்குழு, **டுநோக்மோர் குழு (Donoughmore Committee)** என்றழைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை 1932-ஆம் ஆண்டில் சமர்ப்பித்தது. அதில், பாராளுமன்றம் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அதிகாரங்களை ஒப்படைப்பதில் தவறில்லை என்றும், ஆனால் கட்டுப்பாடற்ற முறையில் அதிகாரத்தை ஒப்படைத்தல் கூடாது என்றும் மேற்படி குழு தெரிவித்திருந்தது. மேலும், இக்குழு, அதிகாரம் ஒப்படைப்பதில் தோற்றுவாய் சட்டத்தில் (Parent Act) என்னென்ன கொள்கைகள் (Policy), தரநிலைகள் (Standards), வழிகாட்டு நெறிகள் (Guide lines) கூறப்பட்டுள்ளனவோ, அவற்றையும் நிருவாகத்துறை முகவர்

நிலைகளுக்கு அளித்தல் விரும்பத் தக்கது என்றும், ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின்படி (Delegated Legislation) நிருவாகத்துறை முகவர் நிலைகள் செயல்படுகின்றனவா என்பதைக் பாராளுமன்றம் கண்காணிக்க வேண்டுமெனவும் பரிந்துரைத்தது.

இக்குழுவின் பரிந்துரைப்படி, பாராளுமன்றம் 1946-ஆம் ஆண்டில் **சட்டமுறை ஆவணங்கள் சட்டத்தை (The Statutory Instruments Act, 1946)** இயற்றியது. இச்சட்டம், நிருவாகத்துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின்படி, அவைகளைச் செயல்படுத்துவது சம்பந்தமாக நாடாளுமன்றம் அதனுடைய கட்டுப்பாட்டினை தொடர்ந்து செலுத்த வழிவகை செய்கின்றது. எடுத்துக்காட்டாக, இந்தச் சட்டம் நிருவாகத்துறை முகவர் நிலைகளினால் செய்யப்பட்ட விதிகள் பாராளு மன்றத்தின் முன் ஒரு குறிப்பிட்ட காலம் வரை வைக்கப்படுவதற்கும், விதிகள் முறையே வெளியிடப்படுவதற்கும் வகை செய்கின்றது.

ஃபிராங்ஸ் குழுவின் பரிந்துரைகள் (Recommendations of Franks Committee): மேற்கண்ட நிலையில், நிருவாகமுறை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் நடவடிக்கைகள் மீது அதிருப்தி நிலவியது. அவை சட்டத்திற்கு புறம்பான வழியில் செயல்பட்டு, நீதிக்கு மாறான தீர்ப்புகளை அளிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டது. பல வழக்குகளில் அவைகளின் தீர்ப்புகளின் மீது நீதிமன்றங்களுக்கு நீதிமுறை மறுஆய்வு செய்யும் உரிமை இருக்கவில்லை. அவைகளின் தீர்ப்புகளே இறுதியான தீர்ப்புகளாகக் கருதப்பட்டன. அவை ஏதேச்சதிகார முறையில் செயல்பட்டன. ஆகையால் அவைகளின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்ய ஒரு குழு **சர் ஆலிவர் ஃபிராங்ஸ் (Sir Oliver Franks)** என்பவர் தலைமையின் கீழ் 1955-ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டது. பிராங்ஸ் குழு, அதனுடைய அறிக்கையில் நிருவாகமுறை நீதிமன்றங்களும், தீர்ப்பாயங்களும் இயற்கை நீதிவிதிகள் படி அவைகளுடைய நடைமுறைகளை அமைத்துக் கொண்டு செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக அவை வழக்குளை விசாரிப்பதில் வெளிப் படையான தன்மை (openness), நேர்மை (fairness), நடுவு நிலை தவறாமை (impartiality) ஆகியவைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் கூறியது. மேலும் நிருவாக முறை நீதிமன்றங்கள் (Administrative Courts), தீர்ப்பாயங்கள் (Tribunals) இவைகளின் தீர்ப்புகளிலிருந்து மேல்முறையீடு செய்யத் தீர்ப்பாயங்கள் மன்றம் (Council of Tribunals) ஒன்று நிறுவப்பட வேண்டுமென்றும் பிராங்ஸ் குழு பரிந்துரைத்தது. இப்பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் 1958-ஆம் ஆண்டில் **தீர்ப்பாயங்கள் மற்றும் விசாரணைச் சட்டம் (The Tribunals and Enquiries Act, 1958)** பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் மூலமாக நிருவாகமுறை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களுடைய நடைமுறைகள் வரையறை செய்யப்பட்டு அவைகளின் தீர்ப்புகளின் மீது நீதிமன்றங்கள் நீதிமுறை மறு ஆய்வு (Judicial Review) செய்ய வகை செய்யப்பட்டது. **அரசர் தவறு செய்யார்'** (The King can do no wrong) என்ற நிலை மாற்றப்

பட்டு, அரசு தவறு இழைக்குங்கால் பொறுப்பினைக் காத்தி நஷ்ட ஈடு தொகை பெற 1947-ஆம் ஆண்டில் **அரசுரிமை நடவடிக்கைகள் சட்டம் (The Crown Proceedings Act, 1947)** பாராளுமன்றத்தால் நிறைவேற்றப் பட்டது. அரசு அலுவலர்கள் மீதும், நிருவாகத்துறை முகவர் நிலைகள் மீதும், மக்களது உரிமைகளை அல்லது நலன்களைப் பாதித்தமைக்காக அல்லது தவறு இழைத்தமைக்காக மக்கள் வழக்குத் தொடரவும், நஷ்ட ஈட்டுத் தொகை பெறவும் இச்சட்டம் வழிவகை செய்தது.

இவ்வாறாக, நிருவாகத்துறை முகவர் நிலைகளின் நடவடிக்கைகள் யாவும், சட்டத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன. அவைகளைக் கட்டுப்படுத்திய சட்டம், நிருவாகமுறைச் சட்டமேயன்றி வேறொன்றுமில்லை. இருப்பினும் சிலர் தொடர்ந்து டைசியின் கருத்துக்களின் ஆளுகைக்கு உட்பட்டு நிருவாகமுறைச் சட்டத்தை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டினார்கள். இந்த எதிர்ப்புகளிடையேயும், நிருவாகமுறைச் சட்டம் இங்கிலாந்தில் இன்று மக்களின் நல வாழ்வுடன் ஒன்றி நன்கு நிலைபெற்றுவிட்ட சட்டமாகத் திகழ்கிறது.

அனைத்திற்கும் மேலாக **Ridge v. Baldwin**[15] எனும் வழக்கில் நீதிப் பெருமகனார்கள் அவை (House of Lords), நிருவாகமுறைச் சட்டம் இயற்கை நீதி விதிகளுக்கு உயர்விடம் அளிக்க வேண்டும் என்றும், இங்கிலாந்து நாட்டில் மக்களின் உரிமைகளை, சிறப்புரிமைகளை மற்றும் நலன்களை நிருவாகத்துறை முகவர் நிலைகளின் ஏதேச்சதிகாரப் போக்கிலிருந்து பாதுகாப்பதில் நிருவாகமுறைச் சட்டத்தின் இன்றியமையாத தன்மையையும் மற்றும் சட்டமுறையில், நிருவாகமுறைச் சட்டத்தின் சிறப்பிடத்தையும் வலியுறுத்துகின்றது.

(3) அமெரிக்க நாட்டில் நிருவாகமுறைச் சட்ட வளர்ச்சி (Development of Administrative Law in America):

அமெரிக்க அய்க்கிய நாடுகளின் அரசியலமைப்புச் சட்டம் 1787-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பொழுதே, அரசின் மூன்று அங்கங்களுக்கும் மூன்று தனிப்பட்ட அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முறையே சட்டமன்றத்திற்கு சட்டமியற்றும் அதிகாரமும், நிருவாகத்துறைக்கு ஆட்சி நிருவாக அதிகாரமும், நீதித்துறைக்கு நீதி வழங்கும் அதிகாரமும் கொடுக்கப் பட்டுள்ளன. இவ்வாறு மூன்று துறைகளும் மூன்று தனிப்பட்ட அதிகாரங்களோடு இயங்குவதால் நிருவாகமுறைச் சட்டத்திற்கு அதிக இடமில்லை என்று நினைக்கத் தோன்றும். ஆனால் நடைமுறையோ வேறுவிதமாக அமைந்தது. நடைமுறையில் நிருவாகத்துறைக்கு, அஃதாவது, நிருவாகத் துறை முகவர் நிலைகளுக்கு (Adminsitrative Agencies) சட்டமியற்றும் அதிகாரமும், நீதி வழங்கும் அதிகாரமும் அளிக்கப்பட்டன. அதன் காரணமாக நிருவாகமுறைச் சட்டம் உருவெடுத்தது. பின்னர் வளர்ச்சியுற்று, சட்டமுறையில் தனியிடத்தைப் பெற்று விளங்குகின்றது.

15. 1963 2 All. E.R. 66.

அமெரிக்காவில் 1887-ஆம் ஆண்டில் **மாநிலங்களுக்கிடையிலான வணிகச் சட்டம்** (Inter-state Commerce Act, 1887) இயற்றப்பட்டது. இந்தச் சட்டம், **மாநிலங்களுக்கிடையே வணிக ஆணைக் குழுவினைத்** (Inter-state Commeice Commission) தோற்றுவித்தது. இதனைத் தொடர்ந்து வேறுபல ஆணைக் குழுக்களும் தோற்றுவிக்கப்பட்டன. அவைகளைப் பொதுவாக **ஒழுங்குமுறை ஆணைக் குழுக்கள்** (Regulatory Commission) என அழைத்தனர். இந்த ஆணைக் குழுக்களில் பாராளுமன்றச் சட்டப்படி அமெரிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இருப்பார்கள். இவ்வுறுப்பினர்களுள் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பார். இவ்வுறுப்பினர்கள் ஏழாண்டு காலத்திற்கு பதவியில் இருப்பார்கள். கடமை தவறியதற்கோ, ஒழுக்கக்கேடான நடத்தைக்கோ தவிர வேறு காரணங்களுக்காக இவர்களை நாடாளுமன்றச் சட்டப்படி பதவியிலிருந்து நீக்க முடியாது. இந்த ஒழுங்குமுறைக் ஆணைக் குழுக்கள், விதிகளை இயற்றும் அதிகாரத்தையும், நீதி வழங்கும் அதிகாரத்தையும், ஆட்சி நிருவாக அதிகாரத்தையும் தன்னகத்தே பெற்று விளங்கின. இவைகளின் அதிகாரத்தில் சாதாரணமாக பாராளுமன்றமோ, நீதிமன்றங்களோ குறுக்கிடலாகாது. இக்குழுக்கள் மூலமாக அமெரிக்க மக்கள் வழக்குகளில் செலவின்றி, மிக விரைவாக தீர்வழிகளைப் பெற்றார்கள். மக்களுடைய உரிமைகளுக்கும், சிறப்புரிமைகளுக்கும், நலன்களுக்கும், ஊறு எற்படாவண்ணம் இக்குழுக்கள் செயல்பட்டு வந்தன. இதனால், இக்குழுக்களின் நடவடிக்கைகளை மக்கள் வரவேற்றார்கள்.

இந்த ஒழுங்குமுறை ஆணைக் குழுக்களின் நடவடிக்கைகள் குறித்து, அமெரிக்க நீதிமன்றங்கள் ஏனோ அதிருப்தி கொண்டன. ஒரு அரசு சட்டமியற்றுத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை எனும் மூன்று தலையாய அங்கங்களின் வழியாக செயலுறுகின்றது; இவ்வாறிருக்கும் பொழுது, மேற்கண்ட ஒழுங்குமுறைக் குழுக்கள், நான்காவது அங்கமாக உருவெடுத்து மற்ற மூன்று அங்கங்களின் செயல்பாடுகளையும் சீர்குலைத்துவிட்டது என்று, ஒரு நீதிபதி கருத்துத் தெரிவித்தார். மேலும், சில சட்டவியல் அறிஞர்கள் இக்குழுக்களின் நடவடிக்கைகளைக் குறை கூறினர். அமெரிக்க வழக்கறிஞர்கள் சங்கம் இக்குழுக்களின் நடவடிக்கைகள் குறித்து ஆராய 1935-ஆம் ஆண்டில் ஒரு குழுவினை அமைத்தது. அமெரிக்க வழக்கறிஞர்கள் சங்கம் நியமித்த இக்குழு, மேற்படி ஒழுங்குமுறை ஆணைக் குழுக்கள் நீதிமுறைப்படி செயல்படச் செய்ய வேண்டும் என்று கருத்துரைத்தது.

அடுத்ததாக, Hamphrey's Executor v. U.S.[16] எனும் வழக்கில் அமெரிக்க உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, ஒழுங்குமுறை ஆணைக் குழுக்கள் பற்றி அமெரிக்க அரசை சிந்திக்க வைத்தது. மேற்படி வழக்கில் **ஹம்பரே** என்பவர், அமெரிக்க ஜனாதிபதி **ஹூவர்** (Hoover) என்பரால் 1931-ஆம் ஆண்டில் கூட்டாட்சி வர்த்தக ஆணைக் குழுவின் (Federal Trade Commission) தலைவராக ஏழு ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டார்.

16. 295 U.S. 602. 1935.

இரண்டு ஆண்டுகள் கழித்து, அமெரிக்க ஜனாதிபதி **ரூஸ்வெல்ட் (Roosvelt)** என்பார் அவருக்கு வேண்டியவரை, அந்த இடத்தில் நியமனம் செய்து, அவருடைய கொள்கைகளை நிறைவேற்றும் பொருட்டு, ஹம்பரே-வைப் பதவி நீக்கம் செய்தார். ஹம்பரே 1933-ஆம் ஆண்டில் இறந்து போனார். ஹம்பரே-விற்காக அவருடைய நிறைவேற்றுபவர் (Executor), ஹம்பரே-வை பதவி நீக்கம் செய்தது செல்லாது என்று அறிவிக்கக் கோரி வழக்குத் தொடர்ந் தார். அமெரிக்க உச்ச நீதிமன்றம் ஹம்பரே-வை பதவி நீக்கம் செய்தது செல்லாது என்றும், அதற்காக அவருக்கு நஷ்டஈட்டுத் தொகை அளிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பிலிருந்து அமெரிக்க ஜனாதிபதி கூட ஒழுங்குமுறை ஆணைக் குழுக்களின் செயல் திட்டங்களில் குறுக்கிட முடியாது என்பதும், அவை ஏதேச்சதிகாரமாக செயல்பட்டால், அவைக்களை யாராலும் கட்டுப்படுத்த இயலாது என்பதும் தெளிவாயிற்று.

இதனால், 1937-ஆம் ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதி ஒழுங்கு முறை ஆணைக் குழுக்களின் பணி பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு குழுவினை நியமித்தார். இக்குழு, மேற்படி ஒழுங்குமுறை ஆணைக் குழுக்கள் அரசின் தலைமையற்ற நான்காவது அங்மென்றும், பொறுப்பற்ற நிருவாகத்துறை முகவர் நிலைகளும், ஒருங்கிணைக்கப்படாத அதிகாரங் களும் தற்செயலாக ஒன்று சேர்க்கப்பட்டுள்ளனவென்றும் கருத்து தெரிவித்தது. மேலும் 40 உறுப்பினர்களைக் கொண்ட நிருவாகமுறை நீதிமன்றம் ஒன்று, ஒழுங்குமுறை ஆணைக் குழுக்களின் தீர்ப்புகளை மறுஆய்வு செய்ய நிறுவப்பட வேண்டுமென பரிந்துரை செய்தது. ஆனால் இந்தப் பரிந்துரையை அமெரிக்க ஜனாதிபதி ஏற்றுக் கொள்ளவில்லை.

இதனால் 1938-ஆம் ஆண்டில் **டீன் ரோஸ்கோ பவுண்ட் (Dean Roscoe Pound)** என்பவரின் தலைமையின் கீழ், அரசு சார்பற்ற குழு ஒன்று, ஒழுங்குமுறை ஆணைக் குழுக்கள் பணி பற்றி ஆராய நிறுவப்பட்டது. இக்குழு, ஒழுங்கு முறை ஆணைக் குழுக்களின் நீதிநெறி தவறிய முறையை யும், ஏதேச்சதிகாரப் போக்கினையும் எடுத்துரைத்தது. குறிப்பாக, ஒழுங்கு முறை ஆணைக் குழுக்களின் தீர்ப்புகளின் மீது நீதிமுறை மறுஆய்வு இல்லாமையும், சாட்சியங்கள் இல்லாமல் தீர்ப்பு வழங்குதலும், மேலும் மக்களுடைய உரிமைகள், சிறப்புரிமைகள், நலன்கள் ஆகியவை ஒழுங்கு முறை ஆணைக் குழுக்களின் நீதி தவறிய போக்கிலிருந்து நன்கு பாது காக்கப்பட வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தது.

1939-ஆம் ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதி, அமெரிக்க தலைமை வழக்கறிஞர் தலைமையில் மற்றொரு குழுவினை நியமித்து, ஒழுங்கு முறை ஆணைக் குழுவின் பணி பற்றி விசாரணை நடத்தி அறிக்கையொன்றினை சமர்ப்பிக்கும்படி கோரினார். இந்தக் குழு தனது அறிக்கையில் ஒழுங்கு முறை ஆணைக் குழுக்களின் நடைமுறையினை வரையறை செய்து சட்ட மொன்று இயற்றப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்தது.

அவ்வாறே, 1946-ஆம் ஆண்டில் **நிருவாகமுறை நடைமுறைச்**

சட்டம் (The Administrative Procedure Act, 1946) அமெரிக்க பாராளு மன்றத்தால் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தில் நிருவாகமுறை சட்டத்தின் கூறுகள் அனைத்தும் அடங்கியுள்ளன. இவ்வாறாக நிருவாகமுறைச் சட்டம் அமெரிக்க சட்டமுறையில் ஒரு நிலையான இடத்தைப் பெற்று விட்டது.

(4) இந்திய நாட்டில் நிருவாகமுறைச் சட்ட வளர்ச்சி (Development of Administrative Law in India):

(அடுத்த வினாவின் விடையில் காண்க.)

7. Trace the growth of admininstrative law in India. (இந்தியாவில் நிருவாக சட்டத்தின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுக.)

(அல்லது)

Trace out the causes for the growth of administrative law in India. (இந்திய ஆட்சி முறைச் சட்ட வளர்ச்சிக்கான காரணங்களை வரைக.)

(அல்லது)

Discuss the factors for the rapid growth and development of admininstrative law in India. (இந்தியாவில் நிருவாகச் சட்டம் மிகவும் வேகமாக வளர்ந்ததற்கு காரணங்களை விவாதிக்க.)

(அல்லது)

What are the reasons for the growth of of administrative law in the modern state? Discuss briefly the role of admininstrative law in a welfare state like India. (நவீன அரசில் ஆட்சி முறைச் சட்டத்தின் வளர்ச்சிக்கான காரணங்கள் யாவை? இந்தியா போன்ற பொது நல அரசுகளில் ஆட்சி முறைச் சட்டத்தின் பணியை விவாதிக்கவும்.)

(அல்லது)

Discuss briefly the role of administrative law in a welfare state like India. (இந்தியா போன்ற ஒரு மக்கள் நல அரசில் நிர்வாக முறைச் சட்டத்தின் பங்கை சுருக்கமாக விவாதிக்க.)

(அல்லது)

"The courts in India have played very creative role in relation to the growth and development of administrative law". Comment. (நிர்வாக சட்டத்தின் வளர்ச்சிக்கு இந்திய நீதிமன்றங்கள் ஆக்கப்பூர்வமான பணியை மேற்கொண்டது என்னும் கருத்தினை ஆராய்க.)

இந்தியாவில் நிர்வாக முறைச் சட்டத்தின் வளர்ச்சியும் அதற்கான காரணங்களும் (The Growth of Administrative Law in India and its Reasons):

இந்தியாவில் நிருவாகமுறைச் சட்டத்தின் வளர்ச்சியையும் அதற்கான காரணங்களையும் பின்வரும் மூன்று காலகட்டமாக பிரித்து காணலாம். அவை,

I. இந்தியாவில் பண்டைய காலத்தில் நிருவாக முறைச் சட்டத்தின் வளர்ச்சி (Growth in ancient times):

நிருவாகமுறைச் சட்டம் இந்தியாவில் பண்டைய காலந்தொட்டே இருந்து வந்துள்ளது. கிறுஸ்து பிறப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தியாவில் நன்கு அமைக்கப்பட்ட ஆட்சிமுறை இருந்தது. அப்பொழுதைய அரசர்கள் **தர்ம நெறிப்படி (Dharma)** ஆட்சி செலுத்தினர். அத்தர்ம நெறியிலிருந்து எவருக்கும் விலக்கு கிடையாது. யாரும் தர்ம நெறிக்கு அப்பாற்பட்டவர்கள் கிடையாது. அரசனே தவறு செய்தாலும், அவனுக்கும் தர்மநெறி பொருந்துவதாக இருந்தது. தன் மகனையே, அவன் செய்த தவறுக்காக தேர்க்காலில் இட்டுக் கொன்று நீதியை நிலை நாட்டிய சோழ அரசனை நாம் மறக்க முடியுமா? தான் தவறான தீர்ப்பு வழங்கியதால்தான் கண்ணகியின் கணவனது உயிர் பறிக்கப்பட்டது என்பதை அறிந்து தன்னுயிரை நீத்த மன்னனைத்தான் நாம் மறந்து விட முடியுமா? மேற்கண்ட தர்ம நெறியானது **இயற்கை நீதியின் (Natural Justice)** அடிப்படையில் இருந்தது. இந்த இயற்கை நீதியானது, **உரிய சட்ட முறை (Due Process of Law)** மற்றும் **சட்டத்தின் ஆட்சி (Rule of Law)** ஆகிய சொற்களை விட பரந்து விரிந்ததாகும்.

இந்தியாவில் பின்னிட்டு வந்த மௌரிய மன்னர்களும் குப்தர்களும் நீதிக்கு சிறப்பிடம் கொடுத்து, இயற்கை நீதி வழுவாத முறையில் அரச நடைமுறையை அமைத்துக் கொண்டு ஆட்சி செலுத்தி வந்தார்கள். இவ்வாறு பண்டைய காலம் முதலே, இந்தியாவில் நிருவாக முறைச் சட்டம் நிலவி வந்ததாகக் கூறலாம். எனினும், இன்று நிருவாகமுறைச் சட்டம் எந்த கருத்தில் இருக்கின்றதோ, அந்த கருத்தில் அப்பொழுது இல்லை என்றுதான் கூற வேண்டும்.

II. இந்திய நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன் நிருவாக முறைச் சட்டத்தின் வளர்ச்சி (Growth before Indian Independence):

இந்திய நாட்டை ஆங்கிலேயர்கள் அடிமைப்படுத்திய பொழுது, இந்தியாவில் நிலவி வந்த நீதிமுறையும், நிருவாக முறையும் சீர் குலைந்து போனது. இந்திய ஆட்சி வெறும் **காவல் ஆட்சியாகவும் (Police State)**, வரி வசூலிக்கும் ஆட்சியாகவும் மாறியது. அப்பொழுது ஏற்பட்ட பல நீதிமன்றங்கள் நன்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைப் பெற்றிருக்கவில்லை. நிருவாகத்துறையினரின் நடவடிக்கைகளின் மீது, முறையான **நீதிமுறை மறுஆய்வு (Judicial Review)** இருக்கவில்லை.

பின்னிட்டு காலம் செல்லச் செல்ல நாட்டை தொடர்ந்து ஆட்சி செய்யவும், மக்களின் நல்லெண்ணத்தை ஈர்க்கவும் சில நல்வாழ்வுத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமென அக்காவல்

ஆட்சியும் உணர்ந்தது. இந்த வகையில் சில சட்டங்கள் பொதுப் பாதுகாப்பு, பொது நலவாழ்வு, ஒழுக்க நெறி, போக்குவரத்து, தொழில், தொழிலாளர் நலன், வணிகம் ஆகியவைகள் பற்றி செய்யப்பட்டன. எடுத்துக்காட்டாக பின்வரும் சில சட்டங்களைச் சுட்டிக் காட்டலாம்.

(1) 1854-ன் இந்திய இருப்புப் பாதைகள் சட்டம் (The Indian Railways Act, 1854) *(2) 1878-ன்* படைக்கலன்கள் சட்டம் (The Arms Act, 1878) *(3) 1913-ன்* இந்திய நிறுவனங்கள் சட்டம் (The Companies Act, 1913) *(4) 1918-ன்* திரைப்படச் சட்டம் (The Cinemotograph Act, 1918) *(5) 1923-ன்* பணியாளர் நஷ்டஈட்டுச் சட்டம் (The Workman's Compensation Act, 1923) *(6) 1929-ன்* இந்தியத் தொழிற் தகராறுகள் சட்டம் (The Indian Industrial Disputes Act, 1929) *(7) 1934-ன்* தொழிற்சாலைகள் சட்டம் (The Factories Act, 1934) *(8) 1934-ன்* இந்தியக் காப்புவரிச் சட்டம் (The Indian Tariff Act, 1934) *(9) 1934-ன்* இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் (The Indian Reserve Bank Act, 1934) *(10) 1935-ன்* இந்திய பாதுகாப்புச் சட்டம் (The Defence of India Act, 1935).

மேற்கண்ட சட்டங்களைப் போன்று மேலும் பல சட்டங்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ்ச் செயல்பட்ட இந்திய சட்டமன்றத்தால் இயற்றப்பட்டன. இந்தச் சட்டங்கள் மூலமாக பல **நிருவாகத்துறை முகவர் நிலைகள் (Adminstrative Agencies)** தோற்றுவிக்கப்பட்டன. அவைகளிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டன (Delegation of Powers). இதனால் அவைகள் விதிகள் இயற்றும் அதிகாரமும் (Rule making power), நீதி வழங்கும் அதிகாரமும் (Adjudication) உடையவையானது. நீதித்துறையும் செம்மைப்படுத்தப்பட்டது. அப்பொழுதைய கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய நகரங்களில் இயங்கிய உயர் நீதிமன்றங்களுக்கு நீதிப்பேராணை (Writs) வழங்கும் அதிகாரமும் வழங்கப்பட்டது. மற்றைய நீதிமன்றங்களில் நிருவாகத்துறை முகவர் நிலைகள் மீது உரிமை வழக்குகள் தொடர வழி வகை செய்யப்பட்டது. இவ்வாறு நிருவாகத்துறை முகவர் நிலைகள் தோற்றுவிக்கப்பட்டு, அவற்றிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டு, அவை விதிகளை இயற்றும் அதிகாரத்தின்படியும், நீதி வழங்கும் அதிகாரத்தின்படியும் செயல்பட ஆரம்பித்த பொழுதே, நிருவாகமுறைச் சட்டமும் இந்தியாவில் காலூன்ற தொடங்கிவிட்டதெனக் கூறலாம்.

இங்கிலாந்து நாட்டின் உச்ச நீதிமன்றமாக விளங்கிய பிரிவி கவுன்சில் (Privy Council) வழங்கிய முக்கியத் தீர்ப்பு: R. v. Burah[17] - எனும் வழக்கில் பிரிவி கவுன்சிலானது, அஸ்ஸாம் மாநில துணை நிலை ஆளுநர் (Lieutenant Governor) சட்டத்தையோ, அதன் பகுதியையோ வேறு சில இடங்களுக்கு விரிவுபடுத்தி அமல் செய்யலாம் எனக் கூறியது. இந்த வழக்கில் சட்டத்தை விரிவுபடுத்தும் அதிகாரத்தைச் சட்டமன்றம், ஆளுநருக்கு அளித்தலாகாதென்றும், இந்தியச் சட்டமன்றம் இங்கிலாந்து பாராளுமன்றத்தின் முகவரென்றும், (Agent) மேலும் இப்படி முகவராக

17. 1869-5. I-A 72.

இருக்கும் இந்திய நாடு, தனது அதிகாரங்களை மீண்டும் தனக்கு கீழ் அமைந்துள்ள முகவர்களிடம் (இங்கு அஸ்ஸாம் மாநில துணை நிலை ஆளுநர்) ஒப்படைக்கலாகதென்றும் வாதிடப்பட்டது. பிரிவி கவுன்சில் இந்த வாதத்தை ஏற்றுக் கொள்ள வில்லை. மேலும், இந்தியச் சட்டமன்றம் அதன் அதிகார எல்லைக்குள் நிருவாகத்துறை முகவர் நிலைக்கு அதிகாரத்தை ஒப்படைக்கலாம் என்ற கருத்தினை அறிவித்தது. இந்த வழக்கின் தீர்ப்பினால் அதிகாரத்தை ஒப்படைப்பது பற்றி இருந்த அய்யப்பாடு நீங்கியது.

III. இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பின் நிருவாக முறைச் சட்டத்தின் வளர்ச்சி (Growth after Indian Independence):

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னராகவே மேற்கண்டவாறு நிருவாகமுறைச் சட்டம் இந்தியாவில் நிலவி வந்ததென்றாலும், இச்சட்டம் முழு வீச்சில் வளர்ச்சியடைந்தது, இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகுதான் என்று கூற வேண்டும்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, அதன் செயற்பாடுகளும், பணிகளும் மேலும் அதிகமாயின. இச்சமயத்தில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் சமூக நலனுக்கென பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. எடுத்துக் காட்டாக, 1948-ன் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் (The Minimum Wages Act, 1948), 1948-ன் தொழிற்சாலைகள் சட்டம் (The Factories Act, 1948), 1948-ன் தொழிலாளர்கள் மாநிலக் காப்பீட்டுச் சட்டம் (The Employee's State Insurance Act,1948) போன்றவை.

இந்நிலையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம், 1950-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26-ஆம் நாளில் அமலுக்கு வந்த போது, நிருவாகமுறைச் சட்டமும் முழுதளவில் அதனூடே இந்தியாவில் நுழைந்தது. ஒரு **மக்கள் நல அரசு (Welfare State)** எதனடிப்படையில் செயல்பட வேண்டும் என்பதற்கு உண்டான கோட்பாடுகள், இந்திய அரசியலமைப்பில் பொலிவுடன் சேர்க்கப்பட்டிருந்தன. அதன் **முகப்புரையிலேயே (Preamble)** அனைத்து குடி மக்களுக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி (Justice in Social, Economic and Political) கிடைக்கச் செய்யவும் தகுநிலை மற்றும் வாய்ப்பில் சமத்துவம் (Equlity of Status and Opportunity) கிடைக்கச் செய்யவும் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. பொது நலத்திற்காக சமூக வளங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனும் வழி வகையும், செல்வமும் உற்பத்தியும் ஓரிடத்தில் குவியக் கூடாது எனும் வகைமுறையும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கொணரப்பட்டன.

மேற்கண்டவற்றை அடைவதற்காக இந்தியப் பாராளுமன்றமும் பல்வேறு சட்டங்களை இயற்றியது. எடுத்துக்காட்டாக, (1) 1951-ன் தொழிற்சாலை (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் [The Industrial (Development and Regulation) Act, 1951], (2) 1955-ன் அத்தியாவசியப்

பண்டங்கள் சட்டம் (The Essential Commodities Act, 1955), (3) 1956-ன் நிறுவனங்கள் சட்டம் (The Companies Act, 1956), (4) 1961-ன் மகப் பேறு நலன் சட்டம் (The Maternity Benefit Act, 1961), (5) 1969-ன் வங்கி நிறுவனங்கள் (கையகப்படுத்துதல் மற்றும் பொறுப்பேற்புகளை மாற்றுதல்) சட்டம் [The Banking Companies (Acquisition and Transfer of Undertakings) Act, 1969], (6) 1976-ன் சம ஊதியச் சட்டம் (The Equal Remunaration Act, 1976), (7) 1976-ன் நகர நில (உச்ச வரம்பு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் [The Urban Land (Ceiling and Regulation) Act, 1976], (8) 1976-ன் பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டம் (The Beedi Worker's Welfare Fund Act, 1976) போன்று சொல்லிக் கொண்டே போகலாம்.

இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கிய முக்கியமான தீர்ப்பு: In Re Delhi Laws Act[18] - எனும் வழக்கில் இந்தியப் பாராளுமன்றம் நிருவாகத் துறை முகவர் நிலைகளுக்கு அதிகாரங்களை ஒப்படைவு (Delegation of Powers to Administrative Agencies) செய்யலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. இத்தீர்ப்பின் அடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு பாராளுமன்றத்தாலும், மாநில சட்டமன்றங்களாலும் இயற்றப்பட்ட பல சட்டங்கள் பல நிருவாகத்துறை முகவர் நிலைகளைத் தோற்றுவித்தன. அவைகளிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின்படி, அவைகள் விதிகள் இயற்றும் அதிகாரமும், நீதி வழங்கும் அதிகாரத்தையும் கொண்டு விளங்கின. அந்த வகையில், நிதிக் ஆணையம் (Finance Commission), மாநிலங்களுக்கிடையிலான குழு (Inter-state Council), தேர்தல் ஆணையம் (Election Commission), மாநிலங்களுக்கிடையிலான நீர் தகராறு அதிகார அமைப்பு (Inter-state Water Dispute Authority) போன்ற பல நிருவாகத்துறை முகவர் நிலைகள் அமைக்கப்பட்டன.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், குடிமக்களுக்கு பல்வேறு அடிப்படை உரிமைகளை (Fundamental Rights) வழங்கியுள்ளது. அவ்வுரிமைகள் அரசினால், நிருவாகத்துறை முகவர் நிலைகளால் மீறப்பட்டால், அவ்வுரிமைகளை நிலை திறுத்த, நீதிப்பேராணைகளை (Writs) பிறப்பிக்கும் அதிகாரத்தை இந்திய அரசியலமைப்பானது தனது ஷரத்துகள் 226 மற்றும் 32-ன் வழியாக முறையே உயர் மற்றும் உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கியுள்ளது. இதனால் குடிமக்கள் அரசியலமைப்பால் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ள பல்வேறு அடிப்படை உரிமைகளையும், சுதந்திரங்களையும் எவ்வித தடங்கலுமின்றி துய்க்க முடிகின்றது.

மேலும், நிருவாகத்துறை முகவர் நிலையின் எந்நடவடிக்கையேனும் மக்களது நலன்களையோ, உரிமைகளையோ, சிறப்புரிமைகளையோ பாதிக்குமானால் உச்ச நீதிமன்றம் அந்நடவடிக்கைகளை நீதிமுறை மறுஆய்வு (Judicial Review) செய்யும் அதிகாரத்தை பெற்றுள்ளது. நிருவாகத்துறை

18. A.I.R. 1951 S.C. 332.

முகவர் நிலைகள் பிறப்பிக்கும் உத்திரவுகள் சட்டத்தின் அல்லது இந்திய அரசியலமைப்பின் வரம்பை மீறியதாக இருப்பின், அவ்வுத்திரவுகளை நசித்து போகும்படி (quash) அல்லது இரத்தாக்கும்படி (set aside) மேற்கண்ட நீதிமுறை மறுஆய்வின் மூலம் நீதிமன்றங்கள் உத்திரவிடலாம். மேலும் அம்முகவர் நிலைகளால் செய்யப்பட்ட விதிகள் அல்லது உத்திரவுகள் அவர்களது அதிகாரத்திற்கப்பாற்பட்டதாக இருப்பின், அவற்றை நீதிமுறையில் மறுஆய்வு செய்து, அவை வரம்புமீறியது (ultra vires), அரசியலமைப்பற்றது (unconstitutional), சட்ட முரணானது (illegal) அல்லது இல்லாநிலையது (void) என்று நீதிமன்றங்கள் விளம்ப இந்திய அரசியலமைப்பால் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா போன்ற மக்கள் நல அரசுகளில் நிருவாகமுறைச் சட்டத்தின் பங்கு (The Role of Adminsitrative Law in a Welfare State like India):

மக்கள் நல அரசு என்றால் என்ன? மக்களின் நலனுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு, மக்களுக்காக நடை பெறும் மக்களாட்சி அரசே, மக்கள் நல அரசாகும். இந்தியா ஒரு மக்களாட்சி நாடு. இன்று ஏறத்தாழ உலக நாடுகள் அனைத்திலும் இந்தியாவைப் போன்று மக்களாட்சி நடைபெறுகிறது. இந்தியாவைப் பொருத்தவரை, அதிகாரங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு அவற்றை மூன்று அங்கங்கள் செயலுறுத்துகின்றன. அவை, (1) சட்டமியற்றுத் துறை (Legislature), (2) நிர்வாகத்துறை (Executive), (3) நீதித்துறை (Judiciary). சட்டமியற்றுத் துறை, சட்டங்களை இயற்றுகிறது; நிருவாத்துறை, நாட்டின் நிருவாகத்தை ஏற்று நடத்துகிறது; (3) நீதித்துறை, வழக்குகளில் நீதி வழங்குகிறது. மக்கள் நலனுக்குகந்த சட்டங்களை இயற்றும் பணி, பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களின் கையில் உள்ளது. இவ்வதிகாரம், அரசியலமைப்பால் வழங்கப் பெறுகின்றது.

ஒரு நாட்டின் நிருவாகம், அந்நாடு இயற்றும் சட்டங்களைப் பொறுத்து என்று கூறுவார்கள். மக்கள் மலர்ச்சி அல்லது மக்கள் புரட்சி, என்பது ஒரு நாட்டில் இயற்றப்படும் சட்டத்தைப் பொறுத்தது. ஆனால், மக்களின் சட்டப்பூர்வமாக தேவையை அறிந்து, அவர்கள் நலனுக்காக உடனுக்குடன் சட்டங்களை இயற்ற பாராளுமன்றத்தாலும், சட்ட மன்றங்களாலும் முடிவதில்லை. ஏனெனில் வளர்ந்து வரும் மக்கள் நல அரசுகளின் பணி எண்ணற்றது.

எனவே, இந்த சட்டமியற்றும் அதிகாரத்தை, நிருவாகத்துறை யினரிடமும் ஒப்படைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இந்த நிர்ப்பந்தம் ஒன்றே, நிருவாகமுறைச் சட்டம் என்று ஒன்று இருக்க வேண்டியது அவசியம் என்பதை உணர்த்திக் காட்டும் கூறாகும். சட்டமியற்றும் அதிகாரத்தை நிருவாகத்துறையினரிடம் ஒப்படைக்க வேண்டி, பல சட்டங்கள் இயற்றப்படுகின்றன. அதாவது சட்டமியற்றும் அதிகாரம், நிருவாகத் துறையினருக்கும் பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

இச்சட்டங்கள் நிருவாகத் துறை முகவர் நிலைகளைத் தோற்றுவிக்கின்றன. இவை தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, மக்கள் நலனுக்குகந்த விதிகளை உடனுக்குடன் இயற்று கின்றன.

நிர்வாகத்துறையினர் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதி காரத்தைப் துஷ்பிரயோகப்படுத்தி, மக்களின் உரிமைகளை மீறினால் அல்லது எந்தச் சட்டம் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அதிகாரம் வழங்கியதோ அந்த சட்டத்தையே அது மீறினால், அவற்றை கால தாமதம் இல்லாமலும், அதிகச் செலவில்லாமலும் நீதிமுறையில் தீர்த்து வைத்தல் வேண்டும். சாதாரண மற்றும் வழக்கமான நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்தால், இவை சாத்தியமாகாது. தேங்கிக் கிடக்கும் வழக்குகளில் ஒன்றாக, அவ்வழக்கும் தூங்கிவிடும். எனவே, நீதிமுறையில் தீர்த்து வைக்க ஒரு அமைப்பு அல்லது குழுமம் வேண்டும். இதற்கும் வகை செய்யப் பட்டுள்ளது. அதாவது நிருவாகத்துறை முகவர் நிலைகளிலேயே அடங்கி யிருக்கும்படி, நீதித்தீர்ப்பு கூறும் குழுமங்கள் (Adjudicative Bodies) ஏற்படுத்தப்பட்டுள்ளன. இங்கு நீதித்துறைக்கே உரித்த நீதி வழங்கும் அதிகாரம் இந்தக் குழுமங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது என்று கூறலாம். ஆனாலும் இது நீதித்துறையன்று. நீதித்துறை போன்றது (Quasi-judicial). இந்த நீதித்தீர்ப்பு கூறும் குழுமங்கள், நிருவாகத்துறை தீர்ப்பாயங் களாக (Administrative Tribunals), விசாரணை ஆணையங்களாக (Commission of Inquiry) உள்ளன.

இவ்வாறு நிருவாகத்துறை முகவர் நிலைகளின் ஒரு அங்கமாகத் திகழும் நீதித்தீர்ப்பு கூறும் குழுமங்கள், நிருவாகத்துறையினரின் செயல் பாட்டால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடுக்கும் வழக்குகளில், தவறான தீர்ப்பு வழங்கினால் அதற்கு தீர்வழி இல்லையா, என்று கேட்டால் அங்கு உதவிக்கு வருகிறது நீதிமுறை மறுஆய்வு (Judicial Review) எனும் அதிகாரம். அதாவது, நிருவாகத்துறையின் நீதித்தீர்ப்பு கூறும் குழுமங்களின் தவறான தீர்ப்புகளை, நீதிமுறை மறுஆய்வு செய்து, தக்க தீர்ப்பு வழங்கும் படி, அத்தீர்ப்பால் பாதிக்கப்பட்டவர் முறையிடலாம். இந்த நீதிமுறை மறுஆய்வு செய்யும் அதிகாரம் உயர் நீதிமன்றங்களுக்கும், உச்ச நீதிமன்றத் திற்கும் அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நீதித்தீர்ப்பு கூறும் குழுமங்கள் (நிருவாகமுறைத் தீர்ப் பாயங்கள்) கூறும் தீர்ப்புகள் அல்லது நிருவாகத்துறை முகவர் நிலைகளின் நடவடிக்கைகள், சம்பந்தப்பட்டவரின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் வண்ணம் இருப்பின் அல்லது இயற்கை நீதியை மீறும் வண்ணம் இருப்பின், அவற்றிற்கெதிராக நீதிப்பேராணைகளை (Writs) பிறப்பிக்கும் அதிகாரமும் உயர் நீதிமன்றங்களுக்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் உண்டு.

இந்நிலை இந்தியா மட்டுமில்லாது, மக்களாட்சி நடைபெறும் மக்கள் நல அரசுகளில் அனைத்திலும் காணப்படுகிறது. ஒரு புறம் மக்களின்

நலனுக்குகந்த சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். சட்டங்களை உடனுக்குடன் இயற்ற, சட்டமியற்றும் அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்க வேண்டும். மறுபுறம் இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தினால், அரசியலமைப்பால் குடிமக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் மீறப்பட்டு விடக் கூடாது. இந்த இரண்டிற்கும் இடையே ஒரு சமநிலையை தோற்றுவித்து, மக்கள் நலனை மேம்படுத்த பிறந்ததே, நிருவாகமுறைச் சட்டம். இதுவே, இந்தியா போன்ற மக்கள் நல அரசுகளில் நிருவாகமுறைச் சட்டம் கொண்டுள்ள பங்கும், பணியும் ஆகும்.

7(a). Administrative Procedure Act 1946 - Write short notes. (நிருவாக முறை நடைமுறைச் சட்டம், 1946 - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

இந்தியாவில் நிருவாகமுறை நடைமுறைகள் குறித்து தனியாக சட்டம் எதுவும் இயற்றப்படவில்லை. ஆனால் அமெரிக்காவில் 1946-ஆம் ஆண்டில் நிருவாகமுறை நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கென்று தனியாக ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அது **நிருவாகமுறை நடைமுறைச் சட்டம் (Administrative Procedure Act)** எனும் பெயரில் வழங்கப்படலாயிற்று. இச்சட்டத்தை அமெரிக்க நிருவாகமுறைச் சட்ட வளர்ச்சியில் ஒரு மைல் கல் என்று குறிப்பிடலாம்.

இச்சட்டத்தின் நோக்கம் (Purpose of the Act):

அமெரிக்க நிருவாகமுறை நடைமுறைச் சட்டமானது, ஒரே மாதிரியான மற்றும் நேர்மையான நிருவாகமுறை நடைமுறைகளை அமெரிக்க நாட்டில் ஏற்படுத்தும் நோக்கங்கொண்டு இயற்றப்பட்டது.

இச்சட்டத்தின் பரவெல்லை (Scope of the Act):

இச்சட்டம் நிருவாகத்துறையின் சட்டமியற்றும் (விதியாக்க) பணி (delegated legislation ie. law making function) மற்றும் நீதிமுறைத் தீர்ப்பு வழங்கும் பணி (quasi judicial ie. adjudicatory function) ஆகிய இரண்டு பணிகளையும் நடைமுறைப்படுத்துகிறது. இப்பணிகளை நிறைவேற்றும் பொழுது நிருவாகத்துறை பின்பற்றப்பட வேண்டிய குறைந்த பட்ச நடைமுறைகளை மேற்படி சட்டம் விளக்குகிறது. மேலும் நிருவாகத்துறை நடவடிக்கைகளின் மீதான நீதிமுறை மறுஆய்வு (Judicial Review) குறித்தும் இச்சட்டம் குறிப்பிடுகிறது.

சட்டமியற்றும் பணி குறித்து இச்சட்டம் கூறும் வகைமுறைகள் (Provisions relating to Delegated Legislation):

இச்சட்டத்தின் 4-வது பிரிவானது, செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விதிகள் குறித்த பொது அறிவிப்பை நிருவாகத்துறை கூட்டாட்சி பதிவேட்டில் (Federal Register) வெளியிட வேண்டும் என்று கூறுகிறது.

அந்த அறிவிப்பில் எந்த அதிகாரத்தின் கீழ் அவ்விதிகள் செய்யப்படுகிறது என்பதும், அவ்விதிகளின் உள்ளடக்கம் குறித்தும் விளக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்விதிகளில் அக்கறையுடைய தரப்பினர்கள் அவ்விதிகள் குறித்து தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பு அளிக்க வேண்டும். தொடர்புடைய அனைத்து கருத்துக்களையும் விஷயங் களையும் பரிசீலித்த பிறகு, அவ்விதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

நீதிமுறைத் தீர்ப்பு அல்லது நீதித்தன்மை வாய்ந்த பணி குறித்து இச்சட்டம் கூறும் வகைமுறைகள் (Provisions relating to Quasi-judicial or Adjudicatory function):

இச்சட்டத்தின் பிரிவு 5(c)-ஆனது, நிருவாகத்துறைக்கு எதிரான ஒரு வழக்கை விசாரிக்கும் அலுவலர், புலனாய்வு செய்யும் அலுவல ராகவோ அல்லது வழக்கு தொடுக்கும் அலுவலராக இருத்தல் கூடாது. அவர்களிலிருந்து வேறுபட்டவராக, சுதந்திரமானவராக இருக்க வேண்டும். அவர் தன் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் தனது முடிவை வழங்க வேண்டும். இந்த வகைமுறைகள், அவர் வழங்கும் முடிவு மனச்சாய்வற்றதாக, பாரபட்சமற்றதாக இருக்கும் பொருட்டு மேற்படி சட்டத்தில் சேர்க்கப்பட்டதாகும்.

பிரிவுகள் 7 மற்றும் 8 ஆனது, நீதித்தன்மை வாய்ந்த பணிகளை ஆற்றும் பொழுது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து விளக்குகிறது. வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்கள் தங்கள் வாதங்களை எழுத்து மூலமாக (written arguments) தாக்கல் செய்யலாம். வாய் மொழி வாதம் செய்ய உரிமையில்லை. பிரிவு 8(b)-யின்படி, வழக்கை விசாரிக்கும் அலுவலர் தனது முடிவிற்கு உண்டான காரணங்களைக் குறிப்பிட வேண்டும் என்று விதிக்கிறது.

நீதிமுறை மறுஆய்வு குறித்து இச்சட்டம் கூறும் வகைமுறைகள் (Provisions relating to Judicial Review):

இச்சட்டத்தின் 10-வது பிரிவானது, நிருவாகமுறை நடவடிக்கை யினால் எவருக்கேனும் ஊறு நேர்ந்தால், அவர் அந்த நடவடிக்கையை நீதிமுறையில் மறுஆய்வு செய்து, இல்லாநிலையதென விளம்ப (declaring as void) அல்லது நசித்துப் போக (quashing) மனுச் செய்யலாம், என்று வகை செய்கிறது. இந்த நீதிமுறை மறுஆய்வு நீதிப்பேராணை, விளம்புகை நடவடிக்கை (declaratory action) அல்லது உறுத்துக் கட்டளை (injunction) ஆகிய வடிவில் அமைகிறது.

நிருவாகத்துறையின் ஒரு நடவடிக்கைக்கு எதிராக பின்வரும் அடிப்படைகளில் நீதிமுறை மறுஆய்வு செய்ய அதனால் பாதிக்கப்பட்ட நபர் கோரலாம். அவை,- (1) நிருவாகத்துறை தனது அதிகாரத்தை துஷ் பிரயோகம் செய்தும், ஏதேச்சதிகாரமாக செயல்பட்டும் நடவடிக்கை எடுத்திருப்பின்; (2) நிருவாகத்துறையின் நடவடிக்கை அரசியலமைப்புப்

படியான உரிமைகள், அதிகாரங்கள், சிறப்புரிமைகள், பாதுகாப்புரிமைகளுக்கு முரண்பட்டதாக இருப்பின்; (3) அதிகப்படியாக அதிகார வரம்பை செயற்படுத்தி நடவடிக்கை எடுத்தல்; (4) சட்டப்படி தேவைப்படும் நடைமுறைகளை கடைப்பிடிக்காமல் நடவடிக்கை எடுத்தல்; (5) தக்க சான்றுகள் துணை இல்லாமல் நடவடிக்கை எடுத்தல் அல்லது முடிவு செய்தல்.

தகவல் பெறுவது குறித்து இச்சட்டம் கூறும் வகைமுறைகள் (Provisions relating to Public Information):

இச்சட்டத்தின் 3-வது பிரிவு, அரசாங்கம் தனது செயற்பாடுகளை பொது மக்களுக்கு வெளியிட வேண்டும் (சில செயற்பாடுகளுக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது) என்றும், அது குறித்த தகவல்களை பொது மக்கள் எவ்வாறு பெறுவது என்பது குறித்தும் கூறுகிறது.

முடிவுரை:

நிருவாக நடைமுறைக்கென தனியாக ஒரு சட்டத்தை இயற்றிக் கொண்ட வகையில், அமெரிக்க நாடு, நிருவாகமுறைச் சட்ட வளர்ச்சி குறித்த வரலாற்றில் ஒரு தனி இடத்தை பெற்றுள்ளது என்றே கூற வேண்டும்.

2 நிருவாகமுறைச் சட்டத்திற்கு அரசியலமைப்புச் சட்டம் வகுத்துக் கொடுத்த இரு அடிப்படைக் கொள்கைகள் [Two Basic Constitutional Principles for Administrative Law]

உங்கள் கவனத்திற்கு

அரசியலமைப்புச் சட்டத்தின் சில கொள்கைகள், நிருவாக முறைச் சட்டத்தின் வளர்ச்சி மற்றும் பயன்பாட்டில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனவே அக்கொள்கைகளை முதலில் புரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாத தாகும். அப்பொழுதுதான் நிருவாகமுறைச் சட்டத்தை முழுமையாக அறிந்து கொள்ள முடியும். அந்த வகையில் பொதுவாக இன்றைய அரசியலமைப்புகளில் காணப்படும் **(1) சட்டத்தின் ஆட்சி (Rule of Law); (2) அதிகாரப் பிரிவினை (Separation of Powers)** எனும் இரு முக்கிய கொள்கைகளை நாம் அடுத்து காண உள்ளோம். இக் கொள்கைகள் நமது இந்திய அரசியலமைப்பில் எவ்வாறு இடம் பிடித்துள்ளன என்பதையும் அறிய உள்ளோம். மேலே தொடர்வோமா?

சட்டத்தின் ஆட்சி [Rule of Law]

8. Explain the theory of Rule of Law. Critically examine the views of Prof. Dicey on Rule of Law. (சட்டத்தின் ஆட்சி என்ற கொள்கையை விவரி. பேராசிரியர் டைசியின் கருத்துக்களை சீராய்க.)

(அல்லது)

What is Rule of Law? Discuss fully Dicey's exposition of the doctrine of Rule of Law. (சட்டத்தின் ஆட்சி என்றால் என்ன? சட்டத்தின் ஆட்சி எனும் கோட்பாட்டின் மீது டைசியின் விளக்கத்தை முழுமையாக விவாதிக்க.)

(அல்லது)

What is 'rule of law'? Discuss its impact on administrative law.

(சட்ட ஆட்சி என்றால் என்ன? அதன் மீது ஆட்சிமுறைச் சட்டத்தின் விளைவை விளக்குக.)

(அல்லது)

"Administrative law does not contradict, but promote rule of law"- Analyse. ("நிர்வாகமுறைச் சட்டம் சட்ட ஆட்சியுடன் முரண்பட வில்லை; ஆனால் அதை வளர்க்க உதவுகிறது."- ஆராய்க.)

(அல்லது)

Explain the reasons for the growth of administrative law. Is the growth of administrative law incosistant with the rule of law? (நிருவாக முறைச் சட்டத்தின் வளர்ச்சிக்குரிய காரணங்களை விளக்குக. நிருவாகமுறைச் சட்டத்தின் வளர்ச்சி, சட்ட ஆட்சிக்கு ஒவ்வாததாக உள்ளதா?)

(அல்லது)

"Administrative law is as opposed to Rule of Law" - Dicey. Explain. ("நிருவாகமுறைச் சட்டம், சட்டத்தின் ஆட்சிக்கு எதிரானது". டைசி. விளக்குக.)

(அல்லது)

Explain the reasons for the growth of administrative law. Do you agree that the growth of administrative law adversely affects the rule of law? (நிருவாக முறைச் சட்டத்தின் வளர்ச்சிக்கான காரணங்களை விளக்குக. நிருவாகமுறைச் சட்டத்தின் வளர்ச்சியானது சட்ட ஆட்சியை பெரிதளவும் பாதிக்கின்றது என்பதை நிவீர் ஒத்துக் கொள்கிறீரா?)

(அல்லது)

"The entire basis of administrative law is the doctrine of the rule of law". Examine. ("நிர்வாக இயல் சட்டத்திற்கு முழுமையான அடிப்படை சட்ட ஆட்சி கோட்பாடாகும்." -ஆராய்க.)

(அல்லது)

"The rule of law has a number of different meanings and corollaries" Explain. Do you agree with Dicey that Administrative Law incompatiable with the rule of law? ("சட்டத்தின் ஆட்சி பல்வேறுபட்ட பொருள்களையும், தொடர் முடிவுகளையும் பெற்றுள்ளது" விளக்குக. ஆட்சிமுறைச் சட்டம் சட்ட ஆட்சியுடன் ஒத்துச் செல்லவில்லை என்ற டைசியின் கூற்றை நீங்கள் ஏற்கிறீர்களா?)

(அல்லது)

Explain the concept of 'Rule of Law' and compare it with droit administratif of France. (சட்ட ஆட்சி எனும் கருத்துருவினை விளக்கி, அதனை பிரான்ஸ் நாட்டு ஆட்சிமுறைச் சட்டத்தோடு ஒப்பிடுக.)

(அல்லது)

Explain 'droit administratif' of France. How does it differ from the rule of law? (பிரெஞ்சு நாட்டு ஆட்சி முறைச் சட்டத்தினை விளக்குக. அது எவ்வாறு சட்டத்தின் ஆட்சியிலிருந்து வேறுபடுகிறது?

(அல்லது)

Explain different meanings of 'Rule of law' and compare it with 'Droit administratif' of France. (சட்ட ஆட்சி என்பதனை விளக்கி, அதனை பிரெஞ்சு நாட்டு ஆட்சி முறைச் சட்டத்தோடு ஒப்பிடுக.)

(அல்லது)

Explain the concept of Rule of Law as enunciated by Dicey. How far is his assertion that in England there was no administrative law true? (டைசி வகுத்தளித்த "சட்ட ஆட்சி" தத்துவத்தை விளக்குக. இங்கிலாந்தில் நிருவாகமுறை சட்டம் இருந்ததில்லை என்னும் அவரது கூற்று எந்த அளவுக்கு உண்மை என்பதை ஆய்க.)

(அல்லது)

Briefly explain Dicey's enunciation of the Rule of law. Compare it with the Delhi Declaration on the Rule of law. (டைசியின் சட்ட ஆட்சி முறை பற்றி சிறு குறிப்பு வரைக. அதை, சட்ட ஆட்சி முறை குறித்த டெல்லி பிரகடனத்துடன் ஒப்பிடுக.)

(அல்லது)

How Dicey's concept of Rule of Law is reconcilable with the growth of administrative process in India? (டைசியின் 'சட்டத்தின் ஆட்சி' கருத்துக்கள் இந்திய ஆட்சி முறைச் சட்ட வளர்ச்சியோடு எவ்வாறு ஒத்து வருகிறது?)

(அல்லது)

Critically examine Dicey's 'Rule of Law' and reasons for development of Administrative Law in England and India. (டைசியின் 'சட்டத்தின் ஆட்சி' பற்றி ஆராய்க. இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஆட்சிமுறைச் சட்ட வளர்ச்சிக்கான காரணங்களைக் ஆய்க.)

(அல்லது)

What does the expression "Rule of Law" signify? Discuss how far the concept of rule of law has helped in safeguarding and preserv-

ing traditions of basic freedoms of the people in England and in India. ("சட்டத்தின் ஆட்சி" எனும் சொற்றொடர் எதைக் குறிப்பிடுகிறது? சட்டத்தின் ஆட்சி எனும் கருத்துரு எவ்வாறு இங்கிலாந்திலும் இந்தியாவிலும் மக்களின் அடிப்படை சுதந்திரங்களின் பாரம்பரியத்தை பேணிப் பாதுகாப்பதில் உதவி புரிந்துள்ளது என்பதை விவாதிக்க.)

(அல்லது)

What is meant by Rule of Law according to Prof. Dicey? To what extent it finds a place in the Constitution of India? (பேராசிரியர் டைசி அவர்களின் கருத்துப்படி சட்டத்தின் ஆட்சி என்பது என்ன? இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இந்தக் கோட்பாடு எம்மட்டில் இடம் பெற்றுள்ளது? விளக்குக.)

(அல்லது)

"Absence of arbitrary power to interfere with freedom of individuals and equlity before law is Rule of Law" - Dicey. Comment. ("தனி நபர் சுதந்திரத்திலும், சட்டத்தின் முன் சமம் என்பதிலும் ஏதேச்சதிகார மின்மையே சட்டத்தின் ஆட்சியாகும்" டைசி. விமர்சிக்க.)

(அல்லது)

Rule of Law - Write Short Notes. (சட்டத்தின் ஆட்சி - சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

சட்டத்தின் ஆட்சி எனும் கோட்பாடு இங்கிலாந்து அரசியலமைப்பின் குறிப்பிடத்தக்க கூறுகளுள் ஒன்றாகும். மேலும் இக்கோட்பாடு அமெரிக்க மற்றும் இந்திய அரசியலமைப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளது. நிருவாகமுறைச் சட்டத்தின் அடிப்படை அஸ்திவாரமே, மேற்கண்ட சட்டத்தின் ஆட்சி எனும் கோட்பாடுதான் என்றால் அது மிகையாகாது.

சட்டத்தின் ஆட்சி எனும் கோட்பாட்டின் தோற்றம் (Origin of the doctrine of Rule of Law):

சட்டத்தின் ஆட்சி எனும் கோட்பாடு, முதலாம் ஜேம்ஸ் எனும் இங்கிலாந்து அரசரின் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக இருந்த **சர் எட்வர்ட் கோக் (Sir Edward Coke)** என்பவரால் உருவாக்கப்பட்டதாகும். தலைமை நீதிபதிக்கும் அரசருக்கும் இடையில் ஏற்பட்ட சச்சரவில், அரசர் என்பவர் கடவுளுக்கும் சட்டத்திற்கும் உட்பட்டவர் என்று தலைமை நீதிபதி வாதிட்டார்; அரசின் நிருவாகத்துறை அதிகாரத்தை விட சட்டம்தான் உயர்ந்தது என்ற கருத்தை அவர் வலியுறுத்தினார். இதன் விளைவாக எட்வர்ட் கோக் 1613-ல் தனது தலைமை நீதிபதி பதவியையே இழக்க நேரிட்டது. ஆனால், அவர் கொண்ட கருத்து, படிப்படியாக

ஆக்கம் பெற்று, 1885-ல் **ஏ.வி.டைசி (A.V.Dicey)** என்ற பேராசிரியரால் **சட்டத்தின் ஆட்சி (Rule of Law)** என்ற கோட்பாடாக உருவாக்கம் பெற்றது. இதை டைசி அவர்கள் **'சட்டமும் அரசியலமைப்பும்' (The Law and the Constitution)** என்ற தனது நூலில் தெளிவுபட எடுத்துரைத்துள்ளார். அவர் சட்டத்தின் ஆட்சி எனும் பதத்திற்கு மூன்று விதங்களில் பொருள் கொடுக்கிறார். அவை பின்வருமாறு.

"சட்டத்தின் ஆட்சி" - பேரா. டைசி கூறும் மூன்று பலதரப்பட்ட பொருள்கள் (Three different meanings by Prof. Dicey to Rule of Law)

1. சட்டத்தின் உயர்வான நிலை (Supremacy of law):

"சட்டத்தை நிலைநிறுத்துகின்ற நீதிமன்றங்கள் முன்னிலையில் **ஒருவன் ஒரு குறிப்பிட்ட சட்டத்தை மீறிவிட்டான் என்று சட்டப் பூர்வமாக தெளிவாக்கி முடிவெடுக்கும் வரையில் எந்த ஒரு மனிதனும் தண்டிக்கப்படமாட்டான்; அவனுடைய உடலுக்கோ உடமைகளுக்கோ எந்த ஒரு துன்பமும் இழைக்கப்பட மாட்டாது,**" என்று டைசி முதற்கண் கூறுகிறார். அதாவது மனிதன் சட்டத்தினால் தண்டிக்கப்பட வேண்டுமே தவிர, மற்றொரு மனிதனால் அல்ல. ஆட்சியில் உள்ளவர்களுடைய ஏதேச்சதிகாரத்தினாலோ (Arbitrary Power), பாகுபாடு காட்டுகின்ற அதிகாரத்தினாலோ (Discriminatory Power) அல்லது அரசின் சிறப்பு அதிகாரத்தினாலோ (Prerogative Power) மனிதன் தண்டிக்கப்படக் கூடாது. மனிதன் மீது செலுத்தப்படும் ஆட்சி சட்டத்தினால் மட்டுமே இருக்க வேண்டும். சட்ட ஆட்சியின் இந்தக் கூறு, சட்டத்தின் உயர்ந்த நிலையைக் குறிக்கிறது. அது சட்டத்தை தவிர, வேறு எந்த அரசியல் அதிகாரத்தினாலும், மனிதன் தண்டிக்கப்படக் கூடாது என்று பறை சாற்றுகிறது.

2. சட்டத்தின் முன் சமம் (Equality before law):

"**எந்தக் குடிமகனும் சாதாரணச் சட்ட திட்டங்களை விட உயர்ந்தவனாக மாட்டான்; சட்டத்தின் முன் அனைவரும் சமம்,**" என்று டைசி அடுத்து கூறுகிறார். அதாவது, ஒவ்வொரு மனிதனும் எவ்வளவு உயர்ந்தவனாக இருந்தாலும் அல்லது எத்தகைய தன்மையுடையவனாக இருந்தாலும், அவன் நாட்டில் நிலவிவரும் சாதாரண சட்டங்களுக்கு உட்பட்டவன். அவன் நாட்டில் உள்ள சாதாரண நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவன். சட்ட ஆட்சியின் இந்தக் கூறு, சட்டத்தின் முன்பும் நீதிமன்றங்களின் முன்பும் அனைவரும் சமம், என்று சுட்டிக் காட்டுகிறது.

3. சட்ட ஆற்றலின் உயர்விடம் (Predominance of legal spirit):

பல்வேறு சட்டங்கள் இயற்றப்படலாம். ஆனால் அவற்றை எடுத்துரைக்கும் ஆற்றல் யாரிடம் உள்ளது? நீதிமன்றங்கள்தாம் அத்தகு ஆற்றலைப் பெற்றதாகும். எனவே, இந்த மூன்றாவது கூறைப் பொறுத்த வரை டைசி, **தனி நபர்களின் உரிமைகள் சாதாரண சட்ட விதிகளால்**

நீதிமன்றங்களின் வாயிலாக நிர்ணயிக்கப்படுகின்றனவே தவிர, அரசியலமைப்பு பிரகடனங்களால் அல்ல என்று கூறுகிறார். உலகின் பல நாடுகளிலும் தனிநபர் சுதந்திரம் (Individual Liberty), சங்கம் அமைக்கும் உரிமை (Freedom to form Association) மற்றும் பேச்சுரிமை எழுத்துரிமை (Freedom of Speech and Expression) போன்ற அடிப்படை உரிமைகள் எழுதப் பெற்ற அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாக மக்களுக்கு உத்திர வாதம் அளிக்கப்பட்டுள்ளன. ஆனால் இங்கிலாந்தில் இவ்வாறு இல்லை. ஏனெனில் இங்கிலாந்தின் அரசியலமைப்புச் சட்டம், எழுதப் பெற்றது அல்ல. எனவே, குடிமக்களுடைய உரிமைகள் அவ்வப்பொழுது மீறப்படும் பொழுது, நீதிமன்றங்கள் அவற்றை விசாரணை செய்து வழங்கும் தீர்ப்புகளிலிருந்து, மேற்படி உரிமைகளின், **மூலம் (Source)** கிடைக்கப் பெறுகின்றது. அதாவது, இங்கிலாந்தில் அரசியலமைப்புச் சட்டம் நீதிபதி களால் செய்யப்பட்ட சட்டமாகும். எனவே, குடிமக்களின் உரிமைகள், நீதிமன்றத் தீர்ப்புகளின் வாயிலாக பிறக்கின்றன. இதனால் குடிமக்களின் உரிமைகள் நன்கு பாதுகாக்கப்படுகின்றன. சுருங்கக் கூறின், நீதிமன்றங்கள் தாம் மக்களின் சுதந்திர உரிமைகளுக்கு சிறந்த முறையில் உத்திரவாதம் அளித்து அவற்றை வலியுறுத்தி செயல்படுத்தும் உயர்ந்த ஆற்றலைப் பெற்றுள்ளதே தவிர, அவ்வுரிமைகளை பிரகடனப்படுத்தும் அரசிய லமைப்புகள் அல்ல. ஏனெனில் அரசியலமைப்புகள், மக்களின் உரிமை களை கட்டுப்படுத்தலாம் அல்லது புறக்கணிக்கலாம். ஏட்டளவிலான பிரகடனங்கள் வெறும் பகட்டைக் காட்டக் கூடியதே தவிர, மக்களின் உரிமைப் பறிப்பு எனும் பரிதவிப்பை உணரும் ஆற்றல் நீதிமன்றங்களிடம் தான் உள்ளன.

பேரா. டைசி அவர்களின் "சட்டத்தின் ஆட்சி" கோட்பாட்டிற்கெதிரான குறைபாடுகள் - ஒரு திறனாய்வு (Criticisms):

"சட்டத்தின் ஆட்சி" என்பதற்கு பேரா. டைசி கூறிய மூன்று பொருள்களைப் பற்றி அறிஞர் **ஜென்னிங்ஸ் (Jennings)** அவர்கள் திறனாய்வு செய்து, டைசி சொல்வதை அப்படியே சட்ட ஆட்சியின் குறிக் கோள்களாக ஏற்றுக் கொள்ள இயலாது என்று கூறுகிறார். அவர் கூறும் காரணங்களாவன.

1. டைசியின் முதற் பொருள், சட்டம் உயர்நிலையில் உள்ளது என்று கூறுகிறது. அச்சட்டத்தை இயற்றுவது பாராளுமன்றமாகும். எனவே, பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் உயர்வுடையது என்று கொண்டால், அதன்படி எந்த ஒரு செயலையும் செய்யலாம் என்றால், பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஏதேச்சதிகார சட்டங்களையும் உயர்வுடைய சட்டங்களாகவே ஏற்க வேண்டி வரும். எனவே, உண்மையான சட்ட ஆட்சிக்கு பாராளுமன்றமும் சட்ட விதிகளுக்கு கட்டுப்பட்டு இயங்கி ஏதேச்சதிகாரமற்ற முறையில் உரிய சட்டங்களை இயற்ற வேண்டும். அவ்வாறு இயற்றப்படாவிடில், அச்சட்டங்களை உயர்வுடைய சட்டங்க ளாக கருத முடியாது. சட்ட ஆட்சி பொய்த்து விடும்.

2. டைசியின் இரண்டாவது கூறு, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று கூறுகிறது. இதனை ஒரு பொதுப்படையான விதியாக ஏற்கலாமே தவிர, எல்லோருக்கும் எல்லாச் சூழ்நிலைகளிலும் பொருந்தும் விதியாக ஏற்றுக் கொள்ள இயலாது. காவல் துறையினரையும், மற்றவர் களையும் ஒரே சட்டத்தின் கீழ் கொண்டு வர இயலாது. காவல் துறையினர் செம்மையாகச் செயல்பட, எல்லோருக்கும் பொதுவான சட்டத்திலிருந்து அவர்களுக்கெனச் சில விதிவிலக்குகள் தேவைப்படுகின்றன. ஆட்சியிலுள்ள அதிகாரிகள் திறம்படச் செயல்பட, அவர்களுக்கும் பொதுவான சட்டத் திலிருந்து சில விதிவிலக்குகள் தேவைப்படுகின்றன. குழந்தைகளுக்கும் பெண்டிருக்கும் தனிப் பாதுகாப்புகள் கொடுக்கப்பட வேண்டியுள்ளன. ஆணும் பெண்ணும் சமம்; எனவே, பெண்களுக்கென தனிப் பாதுகாப்பு கிடையாது என்னும் கோட்பாடு சமுதாயத்தைச் சமத்துவத்திற்கு பதிலாக சமத்துவமின்மைக்கே இட்டுச் செல்லும். ஆகவே, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று கூறுவது, சமமான சூழ்நிலைகளில் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று பொருள் கொள்ளலாமே தவிர, எல்லாச் சூழ்நிலைகளிலும் எல்லோரும் சமம் என்று பொருள் கொள்ளலாகாது. சமமில்லாத சூழ்நிலைகளில் இருப்பவர்களை சமமாகப் பாவித்தால், அதனால் சமமின்மையே ஏற்படும்; சமத்துவம் தோன்றாது. நீதிக்குப் பதிலாக அநீதியே மிகும். எனவே, ஒத்த சூழ்நிலைகளில் உள்ளவர்களை சமமாகக் கருதலாம். எல்லோரும் எப்பொழுதும் சமமாக மாட்டார்கள். சூழ்நிலைகள் வேறுபடுவதாலும், எல்லோரையும் சட்டத்தின் முன் சமமாக கருத இயலாமையாலும், சில தனிப்பட்ட வழக்குகளை விசாரிக்க தனிப்பட்ட நீதிமன்றங்கள் தேவைப்படலாம். தனிப்பட்ட நீதிமன்றங்கள் இருப்பதாலோ, சில சலுகைகள் சிலருக்கு காட்டப்படுவதாலோ சட்டத்தின் ஆட்சி நடைபெறவில்லை என்று கொள்ளலாகாது.

3. டைசியின் மூன்றாவது கூறின்படி, இங்கிலாந்தின் எழுதப் பெறாத அரசியலமைப்புச் சட்டமும், குடிமக்களுக்கு கிடைக்கப் பெற்ற பல உரிமைகளும் தனிப்பட்ட வழக்குகளில், நீதிமன்றங்களினால் கொடுக்கப் பட்ட தீர்ப்புகளின் பலனாக இருக்கலாம். ஆனால், மற்ற நாடுகளில் இவ்வுரிமைகள் மக்களுக்கு எழுதப்பெற்ற அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாகக் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறாக ஜென்னிங்ஸ் திறனாய்வு செய்து, டைசி கொடுத்துள்ள சட்ட ஆட்சியின் மூன்று கூறுகளையும் அப்படியே ஏற்றுக் கொள்ள இயலாது என்று கூறுகிறார்.

மேலும் **கென்னத் கல்ப் டேவிஸ் (Kennath Culp Davis)** எனும் அமெரிக்க எழுத்தாளர் சட்டத்தின் ஆட்சி என்றால், சட்டமும் ஒழுங்கும்(Law and Order) என்றும், நிர்ணயிக்கப்பட்ட விதிகள் (Fixed Laws) என்றும், உரிய சட்ட முறை (Due process of Law) என்றும், இயற்கைச் சட்டம் (Law of Nature) என்றும், நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு முதன்மை அளிப்பது (Preference to

Judicial Decesions) என்றும், நீதிமுறை மறு ஆய்வு (Judicial Review) என்றும் பொருள் கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்.

சட்டத்தின் ஆட்சி முறை குறித்த டெல்லி பிரகடனம் (Delhi Declaration on the Rule of Law):

1959-ஆம் ஆண்டில் டெல்லியில் **சர்வதேச சட்டவியல் அறிஞர்களின் குழு (International Commission of Jurists)** கூடி, சட்டத்தின் ஆட்சி எனும் கோட்பாடு, இயற்கைச் சட்டத்தின் நவீன வடிவமாகும் (as a modern form of law of nature) என்ற கருத்தை ஏற்றுக் கொண்டது. சட்டத்தின் ஆட்சி குறித்து இக்குழு கூறிய கருத்துரைகள் **"டெல்லி பிரகடனம்" (Delhi Declaration)** என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது. அக்கருத்துரைகள் வருமாறு.

(1) சட்டமன்றங்கள் தனி மனிதனுடைய மதிப்பைப் பேணிக் காக்க வேண்டும். சட்டமன்றங்கள் தனி மனிதனுக்குச் சமூக அரசியல் உரிமைகள் கிடைக்க வழிகாட்ட வேண்டும். அவன் சிறப்புடன் முழு மெய்மை நிலைமை அடைந்து வாழ இன்றியமையாதனவாகிய சமூக, பொருளதார, கலாச்சார சூழ்நிலைகளையும், நல்ல கல்வி கற்கும் வாய்ப்பினையும் ஏற்படுத்தித் தர வேண்டும். இந்நிலை ஏற்படச் சட்ட மன்றங்களால் இயற்றப்பட்ட சட்டங்கள் வழிவகுக்குமானால் சட்டத்தின் ஆட்சி நிலவும்.

(2) ஆட்சியிலுள்ளவர்கள் அதிகாரங்களைத் தவறான வழியில் பயன்படுத்துவதைத் தடுப்பதை மட்டும் குறிப்பதன்று. சட்டத்தின் ஆட்சி. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தக் கூடியதும், போதுமான சமூக பொருளாதாரச் சூழ்நிலைகளை ஏற்படுத்தித் தந்து, திறம்பட இயங்கும் நல்லரசையும் சட்டத்தின் ஆட்சி குறிக்கும். இத்தகைய வாய்ப்பு மக்களுக்கு கிட்டுமானால், அங்கு சட்டத்தின் ஆட்சி நிலவும்.

(3) சுதந்திரமாக இயங்கும் நீதித்துறையும், கட்டுப்பாடற்ற சட்டத் தொழிலும் சுதந்திர நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலவ மிகவும் இன்றியமையாத நிலைகளாகும். இந்நிலை எங்குக் காணப்படுகின்றதோ அங்கு சட்டத்தின் ஆட்சி நிலவும்.

சட்டத்தின் ஆட்சியும் நிருவாகமுறைச் சட்டமும் - பேராசிரியர் டைசியின் கண்ணோட்டங்கள் (Rule of Law and Administrative Law - Views of Prof. Dicey):

சட்டத்தின் ஆட்சியும், நிருவாகமுறைச் சட்டமும் ஒன்றுக்கொன்று எதிரானவை, முரண்பாடுடையவை என்று டைசி விமர்ச்சிக்கிறார். இதற்கு அவர் பிரான்சு நாட்டின் நிருவாகமுறைச் சட்டத்தை சட்டத்தின் ஆட்சிக்கு எதிரானது என்றும், இங்கிலாந்தில் சட்டத்தின் ஆட்சிதான் உள்ளதே தவிர, நிருவாகமுறைச் சட்டம் என்பதே கிடையாது என்றும் கூறுகிறார். சற்று விரிவாக பின்வருமாறு.

(1) சட்டத்தின் ஆட்சியும், பிரான்சு நாட்டின் நிருவாகமுறைச் சட்டமும் (Rule of Law and Droit Administratif of France) (அல்லது) ட்ராய்ட் அட்மினிஸ்ட்ரேட்டிப்-ற்கு எதிராக பேராசிரியர் டைசி கூறிய குறைகள் (Dicey's Criticisms against Droit Administratif):

பிரான்சு நாட்டின் நிருவாகமுறைச் சட்டமான **ட்ராய்ட் அட் மினிஸ்ட்ரேட்டிப்** மற்றும் நிருவாகமுறை வழக்குகளுக்கான தனி நீதிமன்றம் **கன்சில் டெட்டா** ஆகிய இரண்டையும் பேராசியரியர் டைசி சந்தேகக் கண்களுடன் பார்த்தார். பிரான்சு நாட்டின் நிருவாகமுறைச் சட்டத்தைக் கருத்தில் கொண்டு, நிருவாகமுறைச் சட்டமும், சட்டத்தின் ஆட்சியும் ஒன்றுக்கொன்று எதிரானவை, முரண்பாடுடையவை என்று கூறுகிறார். அதாவது, சட்டத்தின் ஆட்சியும் நிருவாகமுறைச் சட்டமும் ஒன்றுக் கொன்று ஒவ்வாதன என்றும், நேர் எதிரானவை **(Rule of Law versus Droit Adminstratif)** என்றும் தான் எழுதிய நூலில் (The Law and the Constitution) குறிப்பிடுகிறார். பிரான்ஸ் நாட்டில் ஆட்சியாளர்கள் சாதாரணமாக எல்லோருக்கும் பொருந்தும்படியான சட்டங்களுக்கு உட்படாத நிலையில் இருக்கிறார்கள். ஆட்சித்துறைச் சட்டம், அவர்களுக் குண்டான தனிச் சட்டமாக இருந்து வருகிறது. அவர்கள் பிரான்ஸ் நாட்டில் உள்ள சாதாரணமாக எல்லோருக்கும் பொருந்தும்படியான நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிற்கு உட்பட்டவர்கள் அல்லர். அவர்களுக் கென தனி நீதிமன்றங்கள் உள்ளன. பொது மக்களுக்கும் அவர்களுக்கும் இடையே எழும் வழக்குகள், தனிப்பட்ட நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்கு மட்டுமே உட்பட்டதாக உள்ளன. இக்காரணங்களால் பிரான்ஸ் நாட்டில் மக்கள் அனைவரும் சமம் என்று கொள்ள இயலாது, என்று டைசி கூறுகிறார். மேலும், நிருவாகமுறைச் சட்டப்படி, ஆட்சி அலுவலரே, குற்றமிழைப்பவராகவும், நீதிவழங்குபவராகவும் விளங்குவ தால், குற்றமிழைக்கின்ற அலுவலர்பால் ஆதரவு காட்டக் கூடுமாதலால், சட்டத்தின் நோக்கமே தோல்வியுறும். நீதிபதிகளின் பாரபட்சமற்ற தன்மையும் நியாய ஒழுங்கமைப்பும் இதனால் சீர் குலைந்து விடும். பாது காப்பு பெற்றிருக்கும் அலுவலர்கள் தங்கள் அதிகாரத்தை விரிவுபடுத்துவ தற்கு முனைந்து பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டு குடிமக்களின் உரிமை வரம்பினைக் கடந்து, அவர்களுடைய அடிப்படை உரிமைகளைத் தாக்கலாம் என்றும் டைசி கூறுகிறார்.

நிருவாகமுறை நீதிமன்றம் என்பது நிருவாகத் துறையின் ஒரு அங்கம் என்றும், அதற்கு நீதித்துறையை போன்று சுதந்திரமான அந்தஸ்து ஏதும் கிடையாது என்றும், எனவே குடிமக்களுக்கெதிராக நிருவாகத் துறையினர் எடுக்கும் ஏதேச்சதிகார நடவடிக்கைகளை நிருவாக முறை நீதிமன்றமானது தட்டிக்கேட்க வாய்ப்பில்லை என்றும் பேரா. டைசி நம்பினார். மேலும், நிருவாகமுறை நீதிமன்றங்களானது, சாதாரண நீதிமன்றங்களின் பிடியிலிருந்து அரசு அலுவலர்களை பாதுகாக்கும் நோக்குடன்தான் அமைக்கப்பட்டுள்ளது கூறினார். இவ்வாறு அரசு

அலுவலர்களின் நலன்கள் மீது சிறப்பான அக்கறை கொள்வது, சட்டத்தின் ஆட்சியால் (Rule of Law) ஏற்படுத்தப்பட்ட **'சட்டத்தின் முன் அனைவரும் சமம்'** என்ற கொள்கையை மீறுவதாக உள்ளது என்றும் குறை கூறினார். இதனால் பிரான்சு நாட்டில் சட்டத்தின் ஆட்சியே கிடையாது என்றும், எனவே, சட்டத்தின் ஆட்சியை பின்பற்றும் நாட்டிற்கு நிருவாகமுறைச் சட்டமானது ஒரு எதிரியே என்றும் கடுமையாக விமர்சனம் செய்தார்.

ஆனால் பேரா. டைசியின் மேற்கண்ட குறைகள் அடிப்படை முகாந்திரமற்றது. பிற நாடுகளில் உள்ள சாதாரண நீதிமன்றங்களை ஒப்பிடும் பொழுது, **கன்சில் டெட்டா**-வானது, நிருவாகத்துறையினரின் ஏதேச்சதிகாரப் போக்கிலிருந்து குடிமக்களை மிக நல்ல முறையில் பாது காத்து வருகின்றது என்பதை சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நிருவாகமுறைச் சட்டத்தின் வேகமான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, பேரா. டைசி தனது இறுதி நாட்களில், **ட்ராய்ட் அட்மினிஸ்ட்ரேட்டிப்** மற்றும் **கன்சில் டெட்டா**-விற்கு எதிராக தான் கூறிய குறைகள் தவறானது என்பதை உணர்ந்தார்.

(2) "இங்கிலாந்தில் நிருவாகமுறைச் சட்டம் இருந்ததில்லை" எனும் டைசியின் கூற்று எந்த அளவிற்கு உண்மை? (How far is Dicey's assertion that in England there was no administrative law true?):

இங்கிலாந்தில் நிருவாகமுறைச் சட்டம் என்ற ஒரு சட்டமே கிடையாது என்று டைசி நம்பினார். இதற்கு காரணமாக அவர் பின்வரும் கருத்துக்களை சுட்டிக் காட்டுகிறார். அஃதாவது, பிரான்சு நாட்டின் **ட்ராய்ட் அட்மினிஸ்ட்ரேட்டிப்** போன்ற நிருவாகமுறைச் சட்டமோ அல்லது நிருவாகத்துறை வழக்குகளை விசாரிப்பதற்கென **கன்சில் டெட்டா** போன்ற தனி நீதிமன்றங்களோ, இங்கிலாந்தில் கிடையாது. ஏனெனில் இங்கிலாந்தில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது. இதனால் அங்கு தனி நபர்களின் உரிமைகளும் சுதந்திரங்களும் நன்கு மேம்பாடு அடைந்துள்ளன. மேலும் நிருவாகத் துறையினரின் ஏதேச்சதிகாரப் போக்கிலிருந்து அவ் வுரிமைகளும், சுதந்திரங்களும் சாதாரண நீதிமன்றங்களால் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. எனவே, இங்கிலாந்து நாட்டு சட்ட முறையில் நிருவாகமுறைச் சட்டத்திற்கு இடம் இல்லை என்று திட்டவட்டமாகக் கூறினார்.

ஆனால் டைசியின் இக்கூற்று உண்மையல்ல என்று பலராலும் குறை கூறப்பட்டது. அக்குறைகளின் தொகுப்பு வருமாறு:

பேரா. டைசி இங்கிலாந்தின் உண்மையான நிலையை ஆராய வில்லை. அவர் சட்டத்தின் ஆட்சிக்கு கூறிய இரண்டாவது பொருளான, சாதாரண சட்டதிட்டங்களின் முன் அனைவரும் சமம் என்பதை நிருவாகமுறைச் சட்டத்துடனும் சமமாக்கி விட்டார். இது தவறு. நிருவாகமுறை நீதிமன்றங்கள், அவை கொண்டுள்ள ஒழுங்கு மற்றும் நிருவாகமுறையில் அந்நீதிமன்றங்கள் கொண்டுள்ள நிபுணத்துவம்

ஆகியவற்றின் காரணமாக நாட்டின் நிருவாகம் சிறந்து விளங்க உதவி புரியும் என்பதை ஆராயவில்லை. மேலும் இங்கிலாந்தின் வளர்ச்சியின் காரணமாக, நிருவாகத்துறையின் பணிகளும், நிருவாகத்துறையினரின் அதிகாரங்களும் வளர்ச்சியுற்றன. இதனால் நிருவாகத்துறையினருக்கு தன் விருப்பம் போல் முடிவெடுக்கும் தன்விருப்புரிமை அதிகாரங்கள் பரந்த அளவில் கொடுக்க சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. இவற்றையெல்லாம் டைசி எடை போடத் தவறிவிட்டார்.

பேராசிரியர் டைசினுடைய சமகாலத்தவரான **மெயிட்லண்ட் (Maitland)** என்பவர், இங்கிலாந்து நாட்டில் நிருவாகமுறைச் சட்டத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் அறிந்திருந்தார். அரசியின் ஆயப் பிரிவின் (Queen's Bench) தீர்ப்புகளை நோக்கினால், ஏறத்தாழ அய்ம்பது சதவிகித வழக்குகள் நிருவாகமுறைச் சட்ட விதிகளின்படி முடிவு செய்யப் பட்டிருப்பதை உணர முடியும் என்று மெயிட்லண்ட் கூறியுள்ளார்.

பேராசிரியர் **வாடே (Wade)**, டைசியின் காலத்திலேயே நிருவாக முறைச் சட்டம் நிறைவான அளவிற்கு இங்கிலாந்து நாட்டில் காணப் பட்டதாகக் கூறுகின்றார். நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு பாராளு மன்றத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் நிருவாகமுறைச் சட்டத்தினால் நெறிப்படுத்தப்பட்டன என்று வாடே கூறுகின்றார்.

நிருவாகமுறைச் சட்டம் என்ற ஒன்று இங்கிலாந்து நாட்டில் இல்லை என்று மறுத்து வந்த டைசியே, **Board of Education v. Rice**[1] மற்றும் **Local Government Board v. Alridge**[2] ஆகிய இரு வழக்குகளில் எழுந்த தீர்ப்புகளைக் கண்ணுற்ற பிறகு, தமது கருத்தை மாற்றிக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. பேரா. டைசி 1915-ஆம் ஆண்டில் **'Law of Quarterly Review'** எனும் சஞ்சிகையில், **'இங்கிலாந்தில் நிருவாகமுறைச் சட்டத்தின் வளர்ச்சி' (The Development of Administrative Law in England)** என்ற ஒரு கட்டுரையை எழுதி அதன் மூலமாக நிருவாகமுறைச் சட்டம் இங்கிலாந்தில் நடைமுறையில் இருப்பதை மிகவும் வருத்தத்துடன் ஏற்றுக் கொண்டார்.

மேலும் நிருவாகமுறைச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் களைய **டுநோக்மோர் குழு (Donoughmore Committee), ஃபிராங்ஸ் குழுவின் (Franks Committee)** ஆகிய குழுக்களை நியமித்து, அக்குழுக் களின் பரிந்துரைகளின்படி சில சட்டங்களை நிறைவேற்றி, அக்குறைபாடு களை இங்கிலாந்தில் அகற்றினார்கள்.

எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையிலும், மேலும் பேரா. டைசியே மேற்கண்டவாறு இங்கிலாந்தில் நிருவாக முறைச் சட்டம் இருந்ததை ஏற்றுக் கொள்வதாலும், அவர் முன்னதாக இங்கிலாந்தில்

1. 1911, A.C. 129.

2. 1915, A.C. 120.

நிருவாகமுறைச் சட்டம் என்ற ஒன்று இருந்ததேயில்லை என்ற கூற்று உண்மையல்ல என்பதுதான் உண்மை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சட்டத்தின் ஆட்சி எதும் கோட்பாடு இடம் பெற்றுள்ள விதம் (அல்லது) இந்திய அரசியலமைப்புச் சட்டமும் சட்டத்தின் ஆட்சியும்:

இந்திய அரசியலமைப்புச் சட்டம் சட்டத்தின் ஆட்சியை மையமாகக் கொண்டே இயற்றப்பட்டது. சட்டத்தின் ஆட்சியின் பொருள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது. இது அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டுள்ளது. எனவே, இதனை பாராளுமன்றம் கூட நீக்கவோ அல்லது அழிக்கவோ முடியாது[3]. மேலும் இயற்கை நீதியின் ஒரு பகுதியாக பாவிக்கப்படுகிறது[4]. இந்திய அரசியலமைப்பின் கீழான அரசின் ஒவ்வொரு உறுப்பும் சட்டத்தின் ஆட்சியாலேயே ஒழுங்குபடுத்தப்படுகிறது மற்றும் கட்டுப்படுத்தப்படுகிறது[5]. ஏதேச்சதிகாரமின்மையே சட்ட ஆட்சியின் முதற் கூறாக உள்ளது[6]. ஆட்சித் துறை அதிகாரிகளின் தன்விருப்புரிமை அதிகாரம் தெளிவாக வரம்பிடப்பட்ட எல்லைக்குள் இருக்க வேண்டும் என்று சட்டத்தின் ஆட்சி கூறுகிறது[7] வறியவர்களுக்கு இலவச சட்ட உதவி மற்றும் குற்றவியல் வழக்குகளில் விரைவான விசாரணை ஆகியவை சட்ட ஆட்சியின் தேவையான துணைக் கூறுகளாக உள்ளன[8]. நமது இந்திய அரசியலமைப்பில் சட்டத்தின் ஆட்சி பின்வரும் ஷரத்துகளால் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. அவை,

(1) **ஷரத்து 13** : இந்திய அரசியலமைப்புச் சட்டம், நாட்டின் மிக உயர்ந்த சட்டமாகும். பிற சட்டங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும். மாறாக அப்பிற சட்டங்கள் ஏதேனும், அரசியலமைப்புச் சட்டத்தை மீறுவதாக இருப்பின், அவற்றை ஷரத்து 13-ன்படி செல்லாததது மற்றும் இல்லாநிலையது என்று விளம்பும் அதிகாரம் இந்திய உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு.

(2) **ஷரத்து 14** : இச்ஷரத்து, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றும் அவர்களுக்கு சட்டங்கள் சம பாதுகாப்பை அளிக்கும் என்றும் கூறுகிறது. ஆனால், ஒத்த சூழ்நிலைகளில் உள்ளவர்களிடையே மட்டும்

3. Indira Nehru Gandhi v. Raj Narain, AIR 1975 SC 2299
4. Board of High School and Intermediate Education v. Km. Chitra, (1970) 1 SCC 121.
5. A.K.Kraipak v. Union of India, (1971) 1 SCC 457
6. S.G.Jaisinghani v. Union of India, AIR 1967 SC 1427
7. Ibid.
8. Khatri v. State of Bihar, AIR 1981 SC 928

இந்த சமத்துவ நிலை கிட்டும், என்று நாம் ஏற்கனவே கண்ட கருத்தை இங்கு மறந்து விடக் கூடாது.

(3) **ஷரத்து 19 :** இச்ஷரத்து, இந்திய குடிமக்களுக்கு ஆறுவிதமான சுதந்திர உரிமைகளை அளிக்கிறது. இந்த சுதந்திர உரிமைகள் ஆட்சித் துறையினரால் பாதிப்பிற்குள்ளாகும் பொழுது, உயர் நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் அவற்றை தட்டிக் கேட்கின்றன. பாதிக்கப்பட்டவருக்கு தக்க நிவாரணம் வழங்குகின்றன.

(4) **ஷரத்து 20 : ஷரத்து 20 (1)**-ன்படி, ஒரு குற்றமென குற்றஞ் சாட்டப்பட்ட செயல் செய்யப்பட்ட காலத்தில் அமலில் இருந்த சட்டத் தினை மீறியதனைத் தவிர வேறு எந்தக் குற்றத்திற்காகவும் ஒரு நபர் தண்டிக் கப்படவியலாது என்று கூறுகிறது. மேலும், குற்றம் நடந்த காலத்தில் அமலில் இருந்த சட்டத்தின் கீழ் எது தண்டத் தொகையாக விதிக்கப் பட்டிருக்குமோ அதற்கு மேற்பட்ட தண்டத் தொகைக்கு ஒரு நபரை உட் படுத்தக் கூடாது என்றும் கூறுகிறது.

ஷரத்து 20 (2)-ஆனது, எந்த நபரும் ஒரே குற்றத்திற்கு ஒரு தடவைக்கு மேல் குற்ற வழக்கிடப்பட்டு தண்டிக்கப்படக் கூடாது, என்று கூறுகிறது.

ஷரத்து 20 (3)-ஆனது, ஒரு குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப் பட்டுள்ள ஒரு நபர் தனக்கே எதிராக ஒரு சாட்சியமாக ஆக்கப்படுவதற்கு வற்புறுத்தக் கூடாது என்று கூறுகிறது.

ஷரத்து 20-ன் மேற்கண்ட உட்கூறுகள், இந்தியாவில் சட்ட ஆட்சி நடைபெறுகிறது என்பதை முரசொலித்துக் காட்டுகிறது. இவை மீறப்பட்டால், உச்ச நீதிமன்றம் பாதிக்கப்பட்டவனுக்கு தக்க நிவாரணம் அளிக்கிறது.

(5) **ஷரத்து 21 :** இச்ஷரத்து, எந்த நபரின் வாழ்க்கையோ அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தையோ சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறை களில் தவிர பிறவழிகளில் மீறப்படக் கூடாது என்று கூறுகிறது.

(6) **ஷரத்து 22 :** இச்ஷரத்து, ஏதேச்சதிகரமாக கைது செய்தல் மற்றும் சிறை வைத்தலுக்கு எதிரான பாதுகாப்பை வழங்குகிறது.

(7) **ஷரத்து 265 :** இச்ஷரத்து, சட்டத்தின் அதிகாரமின்றி வரி விதிக்கவோ அல்லது வசூலிக்கவோ கூடாது என்று கூறுகிறது.

இவ்வாறு இந்திய அரசியலமைப்புச் சட்டம், சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துதோடு மட்டுமில்லாமல், அவற்றை பாதுகாக்கவும் வலியுறுத் தவும் உரிய வகைமுறைகளை நீதித்துறையின் வாயிலாகச் செய்துள்ளது. எடுத்துக்காட்டாக, உச்ச நீதிமன்றத்தால் (Supreme Court) விளம்பப்படும் சட்டம், இந்திய எல்லைக்குள் உள்ள அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப் படுத்துவதாகும் என்று **ஷரத்து 141** கூறுகிறது. மேலும், உச்ச நீதிமன்றம் தனது அதிகாரவரம்பை செலுத்தும் பொழுது, தனது முன்னர் நிலுவையில் இருக்கும் வழக்குகளில் முழுமையாக நீதியை நிலைநிறுத்த தீர்ப்பாணைகள்

அல்லது உத்தரவுகளை பிறப்பிக்கலாம், என்று **ஷரத்து 142** கூறுகிறது. அவ்வாறு பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணை அல்லது உத்தரவு இந்திய எல்லை முழுவதும் செயல்படுத்தத் தக்கதாகும். **ஷரத்து 144**-ஆனது, இந்திய எல்லைக்குள் உள்ள அனைத்து அதிகாரிகளும் (குடிமைத் துறை அல்லது நீதித்துறை), உச்ச நீதிமன்றத்திற்கு உதவும் வகையில் செயல்பட வேண்டும் என்று கூறுகிறது. இவை மட்டுமல்லாது உயர் மற்றும் உச்ச நீதிமன்றத்திற்கு **ஷரத்துக்கள் 32, 136, 226 மற்றும் 227**-ன் கீழ் நீதிமுறை மறு ஆய்வு (Judicial Review) அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குடிமக்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் பொழுது ஷரத்து 32-ன் கீழ் உச்ச நீதிமன்றம் நீதிப் பேராணைகளை (Writs) பிறப்பித்து தக்க நிவாரணம் வழங்கலாம். அதே போல், அடிப்படை உரிமைகளோ அல்லது குடிமக்களின் பிற உரிமைகளோ மீறப்படும் பொழுது, ஷரத்து 226-ன் கீழ் உயர் நீதிமன்றங்கள் நீதிப் பேராணைகளை அல்லது தக்க உத்திரவுகளை பிறப்பித்து சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்கலாம். உச்ச நீதிமன்றம், பல வழக்குகளில் சட்டத்தின் ஆட்சி பற்றி கூறுகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டம் எனும் மாளிகை, "சட்டத்தின் ஆட்சி" எனும் கடினமான பாறையின் மீது எழுப்பப் பட்டுள்ளது என்று கூறியுள்ளது.

சட்டத்தின் ஆட்சி மற்றும் நிருவாகமுறைச் சட்டம் - ஒரு தொகுப்புரை:

நிருவாகமுறைச் சட்டம் இன்றைய ஆட்சியமைப்பில் இன்றியமை யாததொரு சட்டமாகும். இச்சட்டம் நீதியை, நிருவாகத்துறையினரின் ஏதேச்சதிகாரத்திலிருந்து காக்கவும், அதன் மூலம் மக்களைக் காக்கவும் வழிவகுக்கின்றது. இங்கு நீதியே முடிவாகும். நிருவாகமுறைச் சட்டம் அதை அடையும் ஒரு வழியாகும். பிரான்சு நாட்டில் தொன்றுதொட்டே ஆட்சியாளர்களிடமிருந்து நீதியினைப் பெற ஒரு வழியாகவே நிருவாக முறைச் சட்டம் கருதப்பட்டது. நாளடைவில் இங்கிலாந்து நாட்டிலும் அவ்வாறே கருதப்படலாயிற்று. இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் அவ்வாறே கருதப்படுகிறது. இவ்வாறு பார்க்குங்கால் சட்டத்தின் ஆட்சியும் நிருவாகமுறைச் சட்டமும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்லது முரண்பாடனவை என்று கூறவியலாது. இரண்டும் நீதியை அடையும் இரு வழிகள் ஆகும். இரண்டும் நீதியை நிலைநாட்டுவதற்காகவே பயனறு கின்றன. இரண்டும் இரு பாதைகள்; நீதி, அந்த இருபாதைகளும் சங்கமம் ஆகும் இடமாகும். எனவே, சட்டத்தின் ஆட்சியும் நிருவாகமுறைச் சட்டத்திற்கு ஒன்றுக்கொன்று எதிரானதல்ல.

முடிவுரை:

ஒத்த சூழ்நிலைகளில் உள்ளவர்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமம் என்பதும், சட்டத்தின் பாற்பட்டன்றி வேறு வழிகளில் மனிதர்கள் தண்டிக்கப்படக் கூடாது என்பதும் சட்ட ஆட்சியின் தலையாய தத் துவங்கள். இந்தத் தன்மைகளைக் கொண்ட சட்ட ஆட்சி, நிருவாகத்துறை யினரின் நடவடிக்கைகளை உரைத்துப் பார்க்கும் உரைகல்லாக இன்று

அமைகின்றது. சட்டத்தின் ஆட்சித் தத்துவப்படி, ஆட்சி, மனிதர்களின் ஆட்சியாக இல்லாமல் சட்டத்தின் ஆட்சியாக இருக்க வேண்டும். ஆட்சி, மனிதர்களுடைய ஆட்சியாக மட்டும் இருக்குமானால், அது ஆட்சியில் உள்ளவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப நடைபெறும். சட்டம் புறக்கணிக்கப்படும். இந்நிலை தவிர்க்கப்பட வேண்டுமானால், ஆட்சியில் உள்ளவர்கள் யாராக இருப்பினும், பிரதம மந்திரி, முதல் அமைச்சர் முதல் கடைநிலை ஆட்சியாளர் வரை, சட்டத்தின் ஆட்சி கூறும் விதிகளுக் கேற்றாவாறே ஆட்சியை நடத்துதல் வேண்டும்.

அதிகாரப் பிரிவினை
[Separation of Powers]

9. What do you mean by the "Doctrine of Separation of Powers"? Discuss its importance in relation to Administrative Law ("அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு" என்பதால் நிவீர் அறிவது யாது? அதன் முக்கியத்துவத்தை நிருவாகமுறைச் சட்டத்துடன் தொடர்புபடுத்தி விவாதிக்க.)

(அல்லது)

Critically examine the doctrine of separation of powers. (அதிகார பங்கீடு கோட்பாட்டை பற்றி திறனாய்வு செய்க.)

(அல்லது)

What is meant by "separation of powers"? Examine its applicability to the constitution of India. ("அதிகாரப் பிரிவுக் கொள்கை" என்றால் என்ன? இந்திய அரசு அமைப்புச் சட்டத்தில் அதன் ஏற்புடைமையை ஆராய்க.)

(அல்லது)

What is meant by "separation of powers"? Is it applicable to the constitution of India. ("ஆட்சி அதிகாரப் பிரிவுக் கொள்கை" என்பதை விளக்கி, அது இந்திய அரசு அமைப்புச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளதா என்பதை எடுத்துக் கூறுக.)

(அல்லது)

What is doctrine of Separation of Powers? How far is it recognised under the Indian Constitution? (அதிகாரப் பிரிவு கோட்பாடு என்பது யாது? இது எந்த அளவிற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது?)

(அல்லது)

Explain separation of power theory and its relevancy to Indian Con-

stitutional Law. (அதிகாரப் பகிர்வு கொள்கையையும் அது எந்த அளவிற்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உள்ளது என்பதையும் விளக்குக.)

(அல்லது)

Explain the doctrine of Separation of Powers. Discuss how far the doctrine of separation of powers is incorporated under the constitutions of India and U.S.A. (அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை விவரி. இந்திய மற்றும் அமெரிக்க அரசியல் சாசன சட்டங்களில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு எந்த அளவிற்கு உட்கொணரப்பட்டுள்ளது என்பதை விவாதிக்கவும்.)

(அல்லது)

What do you understand by 'separation of powers'? Why is it said that, with the development of administrative law, the theory of separation of powers has become largely inapplicable? ('ஆட்சியுரிமைகள் பிரிவு கொள்கை' என்பதனால் நீங்கள் அறிவதென்ன? நிர்வாகச் சட்டம் வளர்ச்சியடைவதால் ஆட்சியுரிமை பிரிவு கொள்கை பெரும்பாலும் பொருத்தமற்றதாய் இருக்கிறது என்று எதனால் சொல்லப்படுகிறது?)

(அல்லது)

Discuss the doctrine of separation of powers and its significance in the light of modern needs and techniques of administration. Is this doctrine applicable to the Constitution of India? (அதிகாரங்கள் பிரித்தல் கோட்பாட்டினையும் அதன் முக்கியத்துவத்தையும் தற்கால தேவைகளையும் நிருவாக நுட்பங்களையும் கவனத்தில் கொண்டு ஆய்க. இக்கோட்பாடு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதனை விளக்குக.)

(அல்லது)

Examine the doctrine of separation of powers with reference to Ram Jawaya V. State of Punjab. (இராம் ஜவாய எதிர் பஞ்சாப் மாநிலம் என்ற வழக்கின் துணை கொண்டு அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டினை மதிப்பிடுக.)

(அல்லது)

What are the reasons for the growth of Administrative law? How separation of powers doctrine has influenced it? (நிருவாக முறைச் சட்டம் வளர்ச்சியுறுவதற்கு காரணங்கள் யாவை? அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு எவ்வாறு அதனை பாதித்தது?)

(அல்லது)

Relation between doctrine of separation of powers and administrative law - Write short notes. (அதிகாரப் பிரிவு கோட்பாட்டிற்கும், நிருவாகமுறைச் சட்டத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குக.)

(அல்லது)

Doctrine of Separation of Powers- Write short notes. (அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு- சிறு குறிப்பு வரைக)

அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு - வரலாற்றுப் பின்னணி (Historical Background of the Doctrine of Separation of Powers):

அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை முதலில் எடுத்துக் கூறியவர் அரசியல் அறிஞர் **அரிஸ்டாடில் (Aristotle)**[9] ஆவர். இவர், **ஆராய்ந்து செய்தல் (Deliberative), தண்டலாளர் நெறியிருத்தல் (Magisterial), நீதி வழங்குதல் (Judicial)** என அரசின் அதிகாரங்களை மூவகையாகப் பிரித்துள்ளார். **சிசரோ (Cicero), பொலிபியஸ் (Polybius)** போன்ற உரோமானிய அறிஞர்கள், அந்நாட்டின் அரசியலமைப்பு **'தடைகளும் சமநிலைகளும்' (checks and balances)** பெற்ற அதிகாரத்தைக் கொண்டு இருப்பதாக கூறியுள்ளனர். பின்னர், இக்கோட்பாட்டிற்கு அறிஞர் **லாக் (Lock)**[10] அவர்களால் சற்று மேம்பட்ட வடிவம் கொடுக்கப்பட்டது. எனினும் மாண்டெஸ்கியு எனும் பிரான்சு நாட்டு அறிஞரால்தான் இதற்கு அடிப்படையான விளக்கம் பகரப்பட்டது.

அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு - அறிஞர் மாண்டெஸ்கியூ கூறும் விளக்கம் (Views of Montesquieu):

சென்ற பத்தியின் இறுதியில் கூறப்பட்டபடி அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டிற்கு சிறப்பு வரையறை கொடுத்து அதை பிரபலமாக்கியவர், பிரான்சு சட்ட அறிஞர் **மாண்டெஸ்கியூ (Montesquieu)** அவர்கள்தான். இவர், 1748-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தமது **"சட்டங்களின் உயிர்ப்பு" (L'Espirit Des Lois - Sprit of the Laws)** எனும் நூலில் சிறப்பு வாய்ந்த அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டைப் பற்றி எழுதியுள்ளார். இவரது கூற்றுப்படி, அரசாங்கமானது **சட்டத்துறை (Legislature), நிருவாகத்துறை (Executive), நீதித்துறை (Judiciary)** என்று மூன்று அங்கங்களைக் **(Organs)** கொண்டதாகும். சட்டமியற்றுத்துறையின் பணி சட்டங்களை இயற்றுவதாகும்; நிருவாகத்துறையினரின் பணி அச்சட்டங்களை நிறைவேற்றுதலாகும்; நீதித்துறை, அச்சட்டங்களை தன் முன்னர் வரும் வழக்குகளில் நிலைநாட்டுகிறது, வலியுறுத்துகிறது மற்றும் பொருள் விளக்கம் கொடுக்கிறது.

9. Politics, IV 14
10. Civil Government



இம்மூன்று துறைகளும் மேற்கண்ட மூவகை அதிகாரங்களைக் கொண்டுள்ளது.இங்கு ஒரு துறையினரின் அதிகாரம் மற்றொரு துறையினரின் அதிகாரத்தில் தலையிடக் கூடாது. இவை தனித்தனியே பிரிந்திருக்க வேண்டும். மேலும் இவை மூன்றும் ஒன்று சேர ஒரே அமைப்பிடம் இருப்பின், அங்கு கொடுங்கோலாட்சிதான் நிலவும். இதுவே, அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் அடிப்படை விளக்கமாகும்.

அறிஞர் **மாண்டெஸ்கியூ** அவர்கள் மேற்படி கோட்பாட்டை மேலும் விளக்குகையில், "சட்டமியற்றும் அதிகாரமும், நிருவாக அதிகாரமும், ஒரே மனிதனிடம் சேர்ந்து அளிக்கப்பட்டாலோ அல்லது ஒரே குழுவிடம் ஒப் படைக்கப்பட்டாலோ, அங்கு சுதந்திரத்திற்கு இடமில்லாது போய்விடும். ஏனென்றால், ஓரரசன் கொடுமையான சட்டங்களையியற்றி அவற்றைத் தானே கொடுமையான முறையில் நிறைவேற்றலாம். நீதி வழங்கும் அதிகாரம், சட்டமியற்றும் மற்றும் நிருவாக அதிகாரமிடமிருந்து பிரிக்கப்படா விட்டால், அங்கு மீண்டும் சுதந்திரத்திற்கு இடம் கிடையாது. நீதி வழங்கும் அதிகாரம், சட்டமியற்றும் அதிகாரத்தோடு இணைக்கப்பட்டிருந்தால், அங்கு குடிமக்களுடைய வாழ்வும் உரிமைகளும் ஏதேச்சதிகார கட்டுப் பாட்டிற்கு எளிதில் இலக்காகும்; ஏனெனில், நீதிபதியே சட்டமியற்றுபவ ராக அப்பொழுது இருப்பர். நீதி வழங்கும் அதிகாரம், நிருவாக அதிகாரத் தோடு இணைக்கப்பட்டிருந்தால், அங்கு நீதிபதி வன்முறையோடும் அடக்கு முறையோடும் நடக்கத் தலைப்படுவார்[11]," என்று கூறுகிறார்.

அமெரிக்க அய்க்கிய நாடுகளில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு (The Doctrine of Separation of Powers in United States of America):

அமெரிக்க அரசியலமைப்பை உருவாக்கியவர்கள், அறிஞர் மாண்டெஸ்கியூ கூறிய அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டினை ஏற்றுக்

11. "When the legislative and executive powers are united in the same person, or in the same body of magistrates, there can be no liberty; because apprehensions may arise, lest the same monarch or senate should enact tyrannical laws, and execute them in a tyrannical manner. Again there is no liberty if the judiciary power be not separated from the legislative and executive. Were it joined with the legislative, the life of liberty of the subject would be exposed to arbitrary control; for the judge would be then the legislator. Were it joined to the executive power the judge might behave with violence and oppression"
-Montesquieu : Sprit of the Laws - Bk. VI - 6.

கொண்டு அதனடிப்படையிலேயே அமெரிக்க அரசியலமைப்பையும் 1787-ஆம் ஆண்டில் உருவாக்கினர். அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தின் 1-வது ஷரத்துப்படி, அனைத்து சட்டமியற்றும் அதிகாரங்களும், அமெரிக்க பாராளுமன்றத்திற்கே (Congress) அளிக்கப்பட்டுள்ளது. நிருவாகத்துறை அதிகாரங்கள் அனைத்தும், ஷரத்து 2-ன்படி, அமெரிக்க அய்க்கிய நாடுகளின் ஜனாதிபதிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே 3-வது ஷரத்தின்படி, நீதித்துறை அதிகாரங்கள் யாவும் அமெரிக்க அய்க்கிய நாடுகளின் உச்ச நீதிமன்றத்திற்கும் (Supreme Court) மற்றும் அதன் கீழ் அமைந்துள்ள கீழமை நீதிமன்றங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. சில அமெரிக்க மாநில அரசு அரசியலமைப்புச் சட்டங்களிலும் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டு, அவை முறையே மாநில அரசின் மூன்று அங்கங்களிடம் கொடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக மாசாசெட்ஸ் (Massachusetts) எனும் மாநில அரசின் அரசியலமைப்புச் சட்டம், மாண்டெஸ்கியூவின் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டிற்கு சிறப்பிடம் அளிக்கிறது.

இவ்வாறு அமெரிக்க அய்க்கிய நாடுகளில் அதிகாரங்கள் பிரிக்கப் பட்டு அரசின் மூன்று அங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், நடை முறையில் ஓர் அங்கத்தின் அதிகாரத்தை மற்றொரு அங்கம் பயன்படுத்தியே வருகிறது என்பதுதான் உண்மை. இதற்குக் காரணம் நிருவாகத்துறை செயல்பாடுகளின் வேகமான வளர்ச்சிதான் என்றால் அது மிகையன்று. இதனால் காலத்தின் போக்கில் அதிகாரப் பிரிவினைகளை தளர்த்த வேண்டியதாயிற்று; ஒரு அங்கம் மற்றொரு அங்கத்தின் அதிகாரங்களை பயன்படுத்த வேண்டிய சூழலும் ஏற்பட்டது. எடுத்துக் காட்டாக, நீதி வழங்கும் அதிகாரம், அமெரிக்க அரசியலமைப்புச் சட்டப்படி, அமெரிக்க உச்ச நீதிமன்றமான கூட்டாட்சி நீதிமன்றத்திடமும் அதன் கீழமை நீதிமன்றங்களிடமும் இருந்தாலும், நடைமுறையில் நிருவாகத்துறை சம்பந்தப்பட்ட வழக்குகளை, நிருவாகத்துறையினரோ அல்லது அதனால் ஏற்படுத்தப்பட்ட நீதி வழங்கும் அதிகார அமைப்பு களோ விசாரித்து நீதி வழங்குகிறது. சட்டமியற்றும் அதிகாரம், அமெரிக்க அரசியலமைப்புச் சட்டப்படி, பாராளுமன்றத்திடம் பிரித்து அளிக்கப் பட்டிருந்தாலும், நிருவாகத் துறையினர் அப்பாராளுமன்றத்தால் இயற்றப் பட்ட சட்டத்தின் கீழ்ப் பல விதிகளைச் செய்கின்றார்கள். இவ்வாறு ஒரு அங்கம், மற்றொரு அங்கத்தின் அதிகாரங்களை பயன்படுத்துவது அமெரிக்காவில் தவிர்க்க இயலாத ஒன்றாகிவிட்டது.

இங்கிலாந்து நாட்டில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு (The Doctrine of Separation of Powers in England):

அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு இங்கிலாந்து நாட்டில் முழுமை யாகவோ அல்லது கடுமையாகவோ பின்பற்றப்படவில்லை. நிருவாகத் துறை மற்றும் சட்டமியற்றுத் துறை அதிகாரங்களுக்கிடையே குழப்பங்கள் மிகுந்து காணப்படுகிறது. இங்கிலாந்து நாட்டு அரசியார் நிருவாகத் துறைக்கு பெயரளவில் மட்டுமே தலைமைப் பொறுப்பேற்றுள்ளார்

(nominal head of the executive). நாட்டின் உண்மையான நிருவாக அதிகாரம், பிரதம மந்திரியை தலைமையாகக் கொண்ட அமைச்சரவையிடம் இருந்தது. பிரதம மந்திரி உள்ளிட்ட அமைச்சரவை உறுப்பினர்கள் இங்கிலாந்து பாராளுமன்றத்தின் மக்களவைக்கு கூட்டுப் பொறுப்பை உள்ளவர்களாக (collectively responsible to the House of Commons) விளங்கினார்கள். மேலும் அவர்கள் மக்களவையின் நம்பிக்கைக்கு உரிய வரை பதவி வகித்தார்கள். மக்களவை அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தால், அவர்கள் பதவி ஆட்டம் கண்டு விடும். இங்கிலாந்து அரசி, பிரதம மந்திரியை தலைமையாகக் கொண்ட அமைச்சரவையின் ஆலோசனைக்கு கட்டுப்பட்டே, அவரது அதிகாரத்தைச் செலுத்த வேண்டும். பிரதம மந்திரியும் அவரது அமைச்சரவை உறுப்பினர்களும், பாராளுமன்றத்திலும் உறுப்பினர்கள் ஆவர். சட்டங்களை இயற்றுவதை தனது அதிகாரமாகக் கொண்ட இங்கிலாந்து நாட்டு பாராளுமன்றம், நீதித்துறை அதிகாரங்களையும் கொண்டு விளங்குகிறது. பாராளுமன்றத்தின் மேலவையான பெரு மகனார்கள் அவை (House of Lords), மேல்முறையீடு தொடர்பான உச்ச நீதிமன்றமாக விளங்குகிறது. இவ்வாறாக இங்கிலாந்தில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு முழுமையாக பின்பற்றப்படவில்லை என்றே கூற வேண்டும்.

இந்திய நாட்டில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு (The Doctrine of Separation of Powers in India) (அல்லது) அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எந்த அளவு பொருந்தும்? (How far the Doctrine of Separation of Powers is applicable to the Constitutional Law of India?) (அல்லது) அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு இந்திய அரசியலமைப்பால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா? (Is the doctrine of separation of powers applicable to the Constitution of India?):

இந்தியாவில் சட்டமியற்றும் அதிகாரம், பாராளுமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. நிருவாக அதிகாரம், குடியரசுத் தலைவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. நீதித்துறை அதிகாரம், உச்ச நீதிமன்றத்திற்கும் அதன் கீழுள்ள நீதிமன்றங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தனித் தனியே அதிகாரங்கள் பிரித்தளிக்கப்பட்டுள்ளதை வைத்து இந்தியாவில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு முழு வீச்சில் செயல்படுவதாகக் கருதினால், அது தவறு என்றே கூற வேண்டும். மேலோட்டமாக இந்திய அரசியலமைப்பை ஆராயும் எவருக்கும், இந்தியாவில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு செயல்படுவதாகவே தெரியும். ஆனால் ஆழ்ந்தும், நுணுகியும் ஆராயும் பொழுதுதான், அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு இந்தியாவில் அப்படியே ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது புலனாகும். **இந்தியாவில் எந்தெந்த நிலைகளில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதற்கு சான்றுகள் இதோ,-**

1. சட்டமியற்றும் அதிகாரத்திற்குரிய அமைப்பு பாராளுமன்றம் ஆகும். ஆனால், அது தானே அனைத்துச் சட்டங்களையும் இயற்றாமல், சில சட்டங்களை இயற்றும் அதிகாரத்தை நிர்வாக அமைப்பிடம் ஒப்படைக்கிறது (Delegation of legislative powers to the Executive). மேலும் **ஷரத்து 61-ன்படி,** பாராளுமன்றம் குடியரசுத் தலைவரின் மீது பழிச்சாட்டி அவரை நீக்கம் (Impeachment of President) செய்யலாம். இங்கு பாராளுமன்றம் நீதித்துறை அதிகாரத்தை கைக் கொள்கிறது.

2. நாட்டின் நிருவாக அதிகாரம், பெயரளவில் குடியரசுத் தலைவரிடம் உள்ளது. உண்மையான நிருவாக அதிகாரம் பிரதமரை தலைவராகக் கொண்ட அமைச்சரவையிடம்தான் உள்ளது. அவர்களது உதவி மற்றும் ஆலோசனையின் பேரில்தான், குடியரசுத் தலைவர் தனது அதிகாரங்களையும் பணிகளையும் செயல்படுத்த வேண்டும். **ஷரத்து 74-ன்படி,** அந்த ஆலோசனை சாதாரணமாக குடியரசுத் தலைவரைக் கட்டுப்படுத்தக் கூடியதாகும். எனினும் அந்த ஆலோசனையை மறு பரிசீலனை செய்ய அவர் கோரலாம். அவ்வாறு மறுபரிசீலனை செய்து அமைச்சரைவையால் வழங்கப்பட்ட ஆலோசனையின்படி, குடியரசுத் தலைவர் செயல்பட வேண்டியுள்ளது. இது ஒருபுறம் என்றால், மறுபுறம் குடியரசுத் தலைவர் பாராளுமன்றத்தின் ஒரு பகுதியாகவும் உள்ளார். எனவே, அவர் நிருவாகத்துறை மற்றும் சட்டமியற்றுத் துறை ஆகிய இரண்டு துறைகளின் அங்கமாக விளங்குகிறார். எனவே, அவருக்கு சட்டமியற்றும் அதிகாரமும் உள்ளது. பாராளுமன்றம் கூட்டத் தொடரில் இல்லாத பொழுது, குடியரசுத் தலைவர் **ஷரத்து 123-ன்படி** அவசரச் சட்டங்களை (Ordinances) பிரகடனப்படுத்தலாம். மேலும் மக்களவையை **ஷரத்து 85-ன்படி** குடியரசுத் தலைவர் கலைக்கவும் செய்யலாம். மேலும் **ஷரத்து 86-ன்படி** பாராளுமன்றத்தின் இரு அவைகளின் எதில் வேண்டுமானாலும் அல்லது இரண்டு அவைகள் கூடியிருக்கும் பொழுது அந்த இரண்டு அவைகளிலும், குடியரசுத் தலைவர் உரை நிகழ்த்தலாம். இவையனைத்திற்கும் மேலாக, ஒரு மசோதா (Bill), சட்டமாக இயற்றப்பட வேண்டுமெனில், குடியரசுத் தலைவர் தனது ஒப்புதலை அளிக்க வேண்டும். **(ஷரத்து 111).** அதுபோல், சில மசோதாக்களை பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்துவதற்கே குடியரசுத் தலைவரின் பரிந்துரை முன்னதாக பெறப்பட வேண்டும். எடுத்துக் காட்டாக, **ஷரத்து 117 (1)**-ன்படி பண மசோதாக்களையோ (Money Bill), அல்லது **ஷரத்து 3-ன்படி** புதிய மாநிலங்களை அமைத்தல் அல்லது இருக்கும் மாநிலங்களின் பரப்பளவை, எல்லைகளை, பெயரை மாற்றுதல் தொடர்பான மசோதாக்களையோ, அறிமுகப்படுத்த முன்னதாக குடியரசுத் தலைவரின் பரிந்துரை பெறப்பட வேண்டும். நெருக்கடிக் காலங்களில், மாநில அரசின் மீது சட்டமியற்றும் அதிகாரத்தை குடியரசுத் தலைவர் பெற்றுள்ளார். **ஷரத்து 124(2)-ன்படி** உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் மற்றும் **ஷரத்து 218-ன்படி** உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பதவி நியமனத்தை செய்யும் அதிகாரம் குடியரசுத் தலைவரிடம்தான் உள்ளது. மேலும் பாராளுமன்றம் இயற்றும் சட்டத்தால்

மேற்படி நீதிபதிகளின் ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது. **(ஷரத்து 125 மற்றும் 221)**.

3. நீதித்துறை அதிகாரத்தைப் பொறுத்தவரை, உச்ச நீதிமன்றத் திடமும் அதன் கீழுள்ள நீதிமன்றங்களிடமும் நீதியை நிலை நிறுத்தும் அதிகாரம் உள்ளது. **ஷரத்து 227-ன்படி** ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் தனது அதிகாரவரம்பிற்குள் வருகின்ற அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களை மேற்பார்வையிடும் அதிகாரத்தை பெற்றுள்ளன. இது உண்மையில் ஒரு நிருவாக அதிகாரமாகும். மேலும் உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்கள் தங்களுடைய **நடைமுறை பற்றிய விதிகளை (Rules of Procedure)** தாங்களே இயற்றிக் கொள்வதற்கு அதிகாரம் பெற்றுள்ளன. இது நீதித்துறையின் சட்டமியற்றும் அதிகாரமாகும்.

மேற்கண்டவற்றிலிருந்து, அரசாங்கத்தின் மூன்று அதிகாரங் களாகிய சட்டமியற்றல், நிருவாகம், நீதிநிறுத்தல் ஆகியவை இந்தியாவில் தனித்தனியாக இல்லை; மாறாக ஆங்கங்கே இணைந்தும் பிணைந்தும் காணப்படுகின்றன என்பது புலனாகும். உண்மையில் இந்த மூன்று அதிகாரங் களின் பணிகளை அறுதியாக வரையறுத்துக் கூறுவது என்பது இயலாத செயலாகும். அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டினை விரிவாக எடுத்துக் கூறிய மாண்டெஸ்கியூ கூட, சட்டமியற்றும் அதிகாரம் மற்றும் நிர்வாக அதிகாரம் ஆகியவை ஒன்று மற்றொன்றின் மீது தாக்கமோ அல்லது கட்டுப்பாடோ கொண்டிருக்கக் கூடாது என்று கூறவில்லை; மாறாக, அவைகளில் எதுவும் அனைத்து அதிகாரங்களையும் முழுமையான பிடிவாதத்துடன் கொண்டிருக்கக் கூடாது என்றே அவர் கூறுகிறார். எனினும், அந்த அதிகாரங்களின் பணிகள் போதுமான அளவு வேறு படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்க வேண்டும், என்றும் கூறுகிறார்.

இந்தியாவில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு பரந்த கண் ணோட்டத்துடன் செயல்படுத்தப்படுகிறதே தவிர கண்டிப்பான முறையில் பின்பற்றப்படவில்லை. எடுத்துக்காட்டாக பாராளுமன்றம் சில சட்டங்களை இயற்றும் அதிகாரத்தை நிருவாகத் துறையிடம் ஒப்படைக்கிறது என்றால், அது அதற்கான சட்டமியற்றுக் கொள்கைகள் மற்றும் அவ்வாறு ஒப்படைக்கப்பட்டதை கையாளுவதற்குண்டான வழிவகைகள் ஆகிய வற்றையும் சேர்த்தே ஒப்படைக்கிறது. இதற்குட்பட்டே நிருவாகத் துறையும் சட்டமியற்ற முடியும். ஆனால், அரசியலமைப்பால், பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள முக்கிய சட்டமியற்றுப் பணிகளை, நிருவாகத் துறையினரிடமோ அல்லது வேறு துறையினரிடமோ ஒப்படைக்க இயலாது என்று **In re Delhi Laws Act** [12] வழக்கில் கூறப்பட்டுள்ளது. அதாவது, ஒரு அதிகாரம், மற்றொரு அதிகாரத்தை அதன் முழுமைக்கும் எடுத்துக் கொள்ள இயலாது. இவ்வாறுதான் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை பரந்த பொருளில் (wider sense) எடுத்துக் கொள்ள

12. A.I.R. 1951 S.C. 332.

வேண்டும். இந்த வகையில்தான், நமது இந்திய அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்களின் (Basic structure of Constitution) ஒரு பகுதியாக அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு விளங்குகிறது.

முக்கிய வழக்கு:

மேற்கண்டவற்றை கருத்தில் கொண்டு கூர்ந்து ஆராயும் பொழுது, **Ram Jawaya v. State of Punjab**[13] எனும் வழக்கில் **நீதியரசர் முகர்ஜி** அவர்கள் அதிகாரப் பிரிவினை குறித்து பின்வருமாறு கூறிய கருத்துக்கள் ஏற்புடையதே. அதாவது, **1. இந்திய அரசியலமைப்பு, அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை அப்படியே அங்கீகரிக்கவில்லை. 2. செயல்முறை நோக்கத்திற்காக, அரசாங்கத்தின் பணிகள் போதுமான அளவு வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. 3. கண்டிப்பான அதிகாரப் பிரிவினை, இந்தியாவில் சாத்தியமானதோ அல்லது நடைமுறைக்குட் பட்டதோ அல்ல. 4. நீதித்துறையின் சுதந்திரம் நன்கு பாதுகாக்கப் பட்டுள்ளது.** "அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டிற்கு இந்திய அரசியலமைப்பில் இடமில்லை" என்று கூறுவதை விட, நீதியரசர் முகர்ஜி கூறியபடி, "இந்திய அரசியலமைப்பு, அதிகாரப் பிரிவினைக் கோட் பாட்டை அப்படியே அங்கீகரிக்கவில்லை" எனும் மேற்படி கருத்துதான் ஏற்புடையதாகும்.

அதிகாரப் பிரிவினைக் கோட்பாடும் நிருவாகமுறைச் சட்டமும் (Doctrine of Separation of Powers and Administrative Law):

நிருவாகமுறைச் சட்டம், அதிகாரங்களின் பிரிவினைக்கு உட்பட்ட தன்று. அதிகாரங்களின் பிரிவு இல்லாத நிலையில்தான், நிருவாகமுறைச் சட்டமே எழுந்தது. பிரான்சு நாட்டில் அதிகாரங்களின் பிரிவு கிடையாது. எனவே, அங்குதான் நிருவாகமுறைச் சட்டம் முதன்முதலில் எழுந்தது. எந்த நாட்டிலும் அரசின் ஓர் அங்கம் மற்றோர் அங்கத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்துவது நடைமுறையில் தொன்றுதொட்டு நிலவி வரும் பழக்கம். அரசின் நிருவாகத்துறை, மற்ற இரண்டு துறையினருடைய அதிகாரங்களை நடைமுறையில் பயன்படுத்துகிறது. நிருவாகமுறைச் சட்டம் அதனைத் தவிர்க்க முடியாதெனக் கருதி அப்படியே ஏற்கிறது. நடைமுறையில் மற்ற இரண்டு அங்கங்களின் அதிகாரங்களை, அரசின் நிருவாக அங்கம் ஏற்றுச் செயல்படும் பொழுது அதனை நெறிமுறைப்படுத்துகிறது, நிருவாகமுறைச் சட்டம்.

அமெரிக்காவில் அதிகாரங்கள் அரசின் மூன்று அங்கங்களுக்கு பிரித்து வழங்கப்பட்டிருந்தாலும், ஒரு அங்கம் மற்றொரு அங்கத்தின் அதிகாரத்தை பயன்படுத்துவதை நாம் மேலே கண்டோம். அதேபோல், அதிகாரங்களின் பிரிவினைக் கோட்பாடு, இங்கிலாந்திலும், இந்தியாவிலும் முழுமையாகவோ அல்லது கண்டிப்புடனோ பின்பற்றப்படவில்லை

13. A.I.R. 1955 S.C. 549.

என்றும் நாம் முன் சென்ற பத்திகளில் கண்டோம். நாளுக்கு நாள் மக்களாட்சி அரசின் பணிகள் பெருகி வருகின்றன. ஒவ்வொரு அங்கமும் அதற்குரிய அதிகாரங்களை மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது நடைமுறைச் சாத்தியமல்ல. மக்களின் நலன் கருதி, அரசின் நிருவாகத்துறையானது, அரசின் மற்ற இரண்டு அங்கங்களான சட்டமியற்றுத் துறை மற்றும் நீதித்துறையின் அதிகாரங்களையும் பயன்படுத்த வேண்டியுள்ளது. அவ்வாறு பயன்படுத்தும் பொழுது, அது நிருவாகத்துறையினரின் ஏதேச்சதிகாரத்திற்கு வழிவகுத்துவிடக் கூடாது என்பதற்காகவும், அந்த அதிகாரங்களை நிருவாகத்துறை எப்படி பயன் படுத்துவது என்பதற்குண்டான நெறிமுறைகளை வகுத்துக் கொடுப்பதற் காகவும் உருவாகியதே, நிருவாகமுறை சட்டமாகும். எனவே, நிருவாக முறைச் சட்டம், அதிகாரங்களின் பிரிவினைக் கோட்பாட்டிற்கு எதிரான தல்ல. மேற்கண்டவாறு அதிகாரங்களின் பிரிவினை நடைமுறைச் சாத்திய மற்ற தன்மையில் செயலற்றிருக்கும் பொழுது, நிருவாகமுறைச் சட்டம் அரசு நிருவாகத்துறையினர் மீது நடைமுறை விதிகளை விதித்து மக்களை நிருவாகத்துறையினரது ஏதேச்சதிகாரம், கொடுங்கோன்மை ஆகிய வற்றிலிருந்து காக்கிறது. சில விதிகளுக்கு கட்டுப்பட்டு இயங்கச் செய்கிறது.

அதிகாரப் பிரிவினைக் கோட்பாடும் தடைகள் மற்றும் சமநிலைகளின் கோட்பாடும் (Doctrine of Separation of Powers and Doctrine of Checks and Balances):

அமெரிக்க, இங்கிலாந்து, இந்தியா உள்ளிட்ட பல உலக நாடு களிலும் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டிருந்தாலும், அவற்றிற்கிடையே பிணைப்புகளும் உள்ளன என்பதை நாம் மேலே கண்டோம். எனவே, அதிகாரப் பிரிவினைக்குப் பதிலாக **அதிகாரங்களை சமநிலைப்படுத்த லாம் (Balance of Powers)**. அதற்கு அந்த அதிகாரங்கள் ஒன்று மற்றொன்றின் நேரடிச் செயல்பாட்டில் தலையிடாமல் இருக்க **தடைகளும்**, அதே சமயத்தில் அந்த அதிகாரங்கள் ஒன்று மற்றொன்றை விட விஞ்சி விடாதபடி **சமநிலைகளுடனும் (checks and balances)** அமைக்கப்பட வேண்டும். இத்தகு தடைகளையும் சமநிலைகளையும் நிருவாகமுறைச் சட்டம், நிருவாகத்துறையினர் மீது விதிக்கிறது. இதனால் நிருவாகத்துறையினரின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன; முறைப்படுத்தப்படுகின்றன.

முடிவுரை:

அதிகாரங்களின் பிரிவினை ஏட்டளவில் மட்டுமே சாத்தியமாகும். நடைமுறையில் சாத்தியமல்ல. மக்கள் நலனுக்காக, அரசின் ஒரு அங்கம், மற்றொரு அங்கத்தின் அதிகாரங்களைக் பயன்படுத்துவது இன்றியமை யாததாக உள்ளது. குறிப்பாக அரசின் நிருவாகத்துறை அங்கம், அரசின் மற்ற இரு அங்கங்களான சட்டமியற்றுத் துறை மற்றும் நீதித்துறையின்

அதிகாரங்களை பரந்த அளவில் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதனால் நிருவாகத்துறையினர் மக்களின் தேவைகளை உடனுக்குடன் அறிந்து சட்ட விதிகளை உடனுக்குடன் இயற்ற முடிகிறது; வழக்குகளை நீதித்துறைதான் தீர்க்க வேண்டுமென்ற கட்டாயம் தளர்த்தப்பட்டு, நிருவாகத்துறையினரும், நிருவாகத்துறை நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் ஆகியவற்றின் வாயிலாக விரைவாகத் தீர்த்து, நீதி வழங்க முடிகிறது.

எனவே, நாட்டு மக்களின் நலனை முன்னிறுத்தி, அதிகாரங்களைப் பிரிப்பதற்கு பதிலாக அதிகாரங்கள் பகிர்ந்து ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதில் நிருவாத்துறையினரிடம் அதிக அளவில் அதிகாரங்கள் பகிர்ந்து ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அதிகாரங்களை பகிர்ந்து அளிக்கப்பட்டுவிட்டதே, அந்த அதிகாரங்களைக் கொண்டு நிருவாகத்துறையினர் ஏதேச்சதிகாரமாக செயல்பட்டு, மக்களை கொடுமைப்படுத்தினால் என்ன செய்வது? அந்த அதிகாரங்களை அவர்கள் சட்டத்திற்கு உரிய முறையில் பயன்படுத்துவ தற்கு என்ன செய்வது? இதற்கு வழி கூறும் முகமாக உருவானதுதான், நிருவாகமுறைச் சட்டமாகும்.

இது நிருவாகத்துறையினரின் அதிகாரங்களை நெறிமுறைப் படுத்தி, ஒரு கட்டுக்குள் கொண்டு வருகிறது. மேலும், நிருவாகத்துறையினர், மற்ற இரு துறைகளின் அதிகாரங்களின் விஞ்சி விடாதபடி தடைகளை விதிக்கிறது நிருவாகமுறைச் சட்டம். அதே சமயத்தில் நிருவாகத் துறையினரை, மற்ற இரு துறைகளின் அதிகாரங்களுடன் சமநிலையிலும் வைக்கிறது நிருவாக முறைச் சட்டம். முடிவாக, நிருவாகமுறைச் சட்டத்தின் வளர்ச்சி, அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் பலத்தைக் குறைத்து விட்டது என்றே கூற வேண்டும்.

3 சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு (அல்லது) ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின்படி சட்டமியற்றுதல் (அல்லது) விதியாக்கம் [Delegation of Legislative Power (or) Delegated Legislation]

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் விளக்கமும், அதன் வளர்ச்சிக்கான காரணங்களும் [Definition of Delegated Legislation and Reasons for its Growth]

10. What is delegated legislation? State the reasons for its growth. (சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு என்றால் என்ன? அதன் வளர்ச்சிக்கான காரணங்களை எடுத்துரைக்க.)

(அல்லது)

State why does the delegated legislation become inevitable. (சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு ஏன் தவிர்க்க முடியாததாகி விட்டது என்பதை குறிப்பிடுக.)

(அல்லது)

Explain the importance of delegated legislation (விதியாக்கத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.)

சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு (Delegation of Legislative Power) விளக்கம்:

அரசின் தலையாய அங்கங்கள் மூன்று என்றும், அவற்றின் அதிகாரங்கள் முறையே சட்டமியற்றுதல், ஆட்சி நிருவாகம் செய்தல், நீதிநிறுத்தல் என்றும் நாம் சென்ற வினாக்களில் கண்டோம். அந்த வகையில் சட்டமியற்றும் அதிகாரம் சட்டமன்றத்திடம்தான் (பாராளு மன்றத்திடம்) உள்ளது என்றாலும், நடைமுறையில் ஆட்சி நிருவாகத் துறை அங்கம், சட்டமியற்றும் பணியை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது. சட்டமியற்றும் அதிகாரத்தை சட்டமன்றம், தன்னால் இயற்றப்பட்ட சட்டத்தின் வாயிலாக ஆட்சி நிருவாக அங்கத்திற்கும் (Executive organ of the State) மற்றும் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கும் (Administrative Agencies) வழங்குகின்றது. அதாவது ஒப்படைக்கிறது.

இவ்வாறு சட்டமியற்றும் அதிகாரத்தை சட்டமன்றம், நிருவாகத்துறைக்கு ஒப்படைப்பதே, **சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு [Delegation of Legislative Power (or) Delegation of Power]** எனப்படுகிறது. இதனை **"விதியாக்கம்" (Delegated Legislation)** என்றும், **"சார்பு சட்ட ஆக்கம்"** அல்லது **"துணைமை சட்ட ஆக்கம்" (Subordinate Legislation)** என்றும் கூறுவர்.

சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு (Delegation of Legislative Power) - வரையறை:

ஒப்படைப்பு என்றால் அதிகாரத்தை ஒருவர் மற்றொருவரிடம் ஒப்படைப்பதாகும். சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு என்றால், சட்டமன்றம் தனது சட்டமியற்றும் அதிகாரத்தை, நிருவாகத் துறையிடம் ஒப்படைப்பதாகும்.

சட்டமியற்றும் அதிகாரத்தை ஒப்படைத்தல் எனும் பதத்திற்கு **அமைச்சர்களின் அதிகாரங்கள் குறித்த டோனோக்மோர் குழு (The Donoughmore Committee on Ministers' Powers)** பின்வரும் இரண்டு பொருள்களைக் கூறுகிறது. அவை (1) பாராளுமன்றத்தினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் நிருவாகத்துறையானது சட்டமியற்றும் பணியை ஆற்றுதல்; (2) இந்தப் பணியை ஆற்றும் பொழுது, நிருவாகத் துறை செய்யும் விதிகள், ஒழுங்குமுறைகள், உபவிதிகள், ஆணைகள் ஆகியவையும் சட்டமியற்றும் அதிகாரத்தை ஒப்படைத்தல் என்ற பெயரிலேயே அழைக்கப்படுகிறது. இந்த இரண்டாவது பொருளை **'விதியாக்கம்'** என்று அழைப்பதே சரியானதாகும். ஏனெனில் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு நிருவாகத்துறை மேற்கண்டவாறு விதிகள், ஒழுங்குமுறைகள், உபவிதிகள், ஆணைகள் ஆகியவற்றைச் செய்கிறது. நிருவாகமுறைச் சட்டத்தில், நாம் மேலே கண்ட இரண்டு பொருள்களில் முதற் பொருள் குறித்தே அதிகம் கவனம் செலுத்துகிறோம்.

எந்தச் சட்டத்தின் மூலம் சட்டமியற்றும் அதிகாரமானது சட்டமன்றத்தால் நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்படுகிறதோ, அச்சட்டம் **'தோற்றுவாய் சட்டம்' (Parent Act)** என்று அழைக்கப்படுகிறது.

விதியாக்கம் (அல்லது) சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பின் இயல்பு (Nature of Delegated Legislation):

சட்டங்களை இயற்ற நிருவாகத்துறையினருக்கு இரண்டு விதமான அதிகாரங்கள் உள்ளன. முதல் விதத்தில், அரசியலமைப்புச் சட்டமானது, மத்திய நிருவாகத்துறைத் தலைவரான குடியரசுத் தலைவருக்கும், மாநில நிருவாகத்துறைத் தலைவரான ஆளுநருக்கும்

சட்டங்களை இயற்ற சுதந்திரமான அதிகாரத்தை வழங்கியுள்ளது. மற்றொரு விதத்தில், சட்டமன்றம் சட்டங்களை இயற்ற நிருவாகத் துறையிடம் ஒப்படைத்துள்ள அதிகாரமாகும். எடுத்துக்காட்டாக குடியரசுத் தலைவர் அவசரச் சட்டங்களை (Ordinances) பிறப்பிக்கலாம்; சில மத்திய அரசு நிலப்பரப்புகளின் (Union Territories) அமைதி, மேம்பாடு மற்றும் நல்லாட்சிக்காக ஒழுங்குமுறை விதிகளை உருவாக்கலாம். இந்த நிகழ்வில், குடியரசுத் தலைவரின் மேற்கண்ட சட்டமியற்றும் அதிகாரம், அரசியலமைப்புச் சட்டத்தின் வகை முறைகளுக்கு மட்டுமே கட்டுப்பட்டதாகும். மேலும் பொதுவாக பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரத்துடன் உடனிணைந்து செல்பவையாகும் (co-extensive).

ஆனால் ஒரு சட்டத்தின் வாயிலாக சட்டமியற்றும் அதிகாரங்களானது, நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்படும் பொழுது, அந்த அதிகாரங்களானது, அரசியலமைப்புச் சட்டத்திற்கு கட்டுப்பட்டதோடு மட்டுமல்லாமல், எச்சட்டம் அதிகாரம் ஒப்படைத்ததோ அந்த தோற்றுவாய் சட்டத்தின் வகைமுறைகளுக்கும் கட்டுப்பட்டதாகும். தோற்றுவாய் சட்டம் அதிகப்படியான அதிகாரங்களை நிருவாகத் துறையிடம் ஒப்படைவு செய்தால், அதனை அதிகப்படியான அதிகார ஒப்படைப்பு அல்லது அதிகப்படியான விதியாக்கம் (excessive delegation) எனும் அடிப்படையில் வினா எழுப்ப, அதனால் பாதிக்கப் பட்டவருக்கு உரிமை உண்டு. நீதிமன்றங்களும் அவ்விதமான அதிகார ஒப்படைப்பை செய்த சட்டத்தை அல்லது சட்டப் பிரிவை செல்லாதது என்று விளம்பலாம்.

சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பின் வளர்ச்சிக்கான காரணங்கள் (Reasons for the growth of Delegation of Legislative Power):

மாறி வரும் சமுதாய அமைப்பில் மக்களின் தேவைகள் பெருகி விட்டன. இன்று மக்கள் அரசிடமிருந்து தங்கள் நல வாழ்விற்கான சட்டத திட்டங்களை எதிர்நோக்குகிறார்கள். மக்களுக்கு நன்மை செய்யும் அரசே தொடர்ந்து ஆட்சியில் நிலைத்திருக்க முடியும் என்பதை அரசும் உணர்ந்து விட்டது. எனவே, வெறுமனே காவல் அரசாக (Police State) மட்டும் செயல்படாமல், மக்கள் நல அரசாக (Welfare State) செயல்பட வேண்டிய அவசியத்தில் அரசு இன்று உள்ளது. அரசு மக்களாட்சி வழியில் நின்று சட்டங்கள் பல செய்து மக்கள் எல்லாத் துறைகளிலும் மேம்பாடு அடைய வழிவகைகள் காண வேண்டியுள்ளது. இயற்றப்பட்ட சட்டங்கள் எல்லா விதமான சூழ்நிலைகளுக்கும் பொருந்துமாறு இருத்தல் வேண்டியுள்ளது. அவ்வாறு எல்லா விதமான சூழ்நிலைகளுக்கும் பொருந்துமாறு சட்டம் இயற்றுவதென்பது இயலாத செயலாகும். மக்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு பயன் தரக் கூடிய விதத்தில் சட்டங்கள் பலவற்றை இயற்ற வேண்டிய நிர்ப்பந்தம்

சட்டமன்றத்திற்கு ஏற்பட்டுள்ளது. இதனால் சட்டமன்றத்தின் பணி நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. இதனால் சட்டமியற்றும் அதிகாரத்தை சட்டமன்றம், நிருவாகத்துறையினரிடமும் ஒப்படைக்க வேண்டியதாகிவிட்டது. **அமைச்சர்களின் அதிகாரங்கள் மீதான குழு (Committee on Ministers' Powers)** செய்த கருத்துரைகளின்படி, பின்வருவன சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பின் வளர்ச்சிக்கு காரணங்களாக உள்ளன. அதாவது, பின்வரும் காரணங்களால், சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு தவிர்க்கமுடியாததாகிவிட்டது. அவை,

1. சட்டமன்றத்தின் போதிய நேரமின்மை (Legislature has no sufficient time): தற்கால மக்கள் நல அரசின் பணிகள் மிகவும் அதிகரித்து விட்டதால், சட்டங்களையும் அதிக அளவில் இயற்ற வேண்டியுள்ளது. இதனால் எல்லா விஷயங்களையும் ஆராய்ந்தறிந்து சட்டங்களை இயற்ற சட்டமன்றத்திற்கு போதிய நேரம் கிடைப்பதில்லை. ஆண்டு முழுவதும் இயங்கினால் கூட, சட்டமன்றமே எல்லாச் சட்டங்களையும் இயற்றிட இயலாது. எனவே, சட்டமன்றமானது, பொதுக் கொள்கையை (general policy) வகுத்துக் கொடுக்கிறது. அதனடிப்படையில் நிருவாகத்துறையினர் விதிகள் (Rules), ஒழுங்கு முறை விதிகள் (Regulations), உப விதிகள் (Bye-laws), ஆணைகள் (Orders) போன்றவற்றை செய்து வெளியிட அதிகார மளிக்கப்படுகின்றனர். இங்கு சட்டமன்றம் வகுத்துக் கொடுக்கும் பொதுக் கொள்கை, எலும்புக் கூடு என்றால், அதனடிப்படையில் நிருவாகத் துறையினர் செய்யும் விதிகளும், ஒழுங்குமுறை விதிகளும் அந்த எலும்புக் கூட்டிற்கு அவர்கள் கொடுக்கும் சதையும் இரத்தமும் போன்றது என்று **Garner** எனும் அறிஞர் சிறப்பாக குறிப்பிடுகிறார்.

2. தொழில்நுட்பம் (Technicality): எல்லாச் சட்டங்களையும் செய்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு போதுமான தொழில்நுட்ப அறிவு இருப்பதில்லை. ஏனெனில் அவர்கள் மக்கள் தேவைகளை சட்டமன்றத்தில் பிரதிபலிக்கக் கூடிய மக்கள் பிரதிநிதிகளே தவிர, துறை சார்ந்த வல்லுநர்கள் அல்லர். இதனால் பொறியியல், மருத்துவம், சட்டம், அணுசக்தி, போதை மருந்துகள், தற்பொழுது கணினி ஆகியவை பற்றிய சட்டங்களைச் செய்வதற்கும் மற்றும் தொழில் நுட்பத் துறை பற்றிய சட்டங்கள் செய்வதற்கும் அந்தந்த துறையின் சிறப்புத் தொழில் நுட்ப அறிவு தேவைப்படுகிறது. இந்த அறிவு இல்லாது போனால், இயற்றப்படும் சட்டங்கள் முழுப் பலனையும் தரக் கூடிய அளவிற்கு இராது. எனவே, இந்த தொழில் நுட்ப பிரச்சனையைக் களைந்து தகுந்த முறையில் சட்டமியற்ற, சட்டமியற்றும் அதிகாரமானது அந்தந்த துறையின் வல்லுநர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது.

3. நெகிழும்தன்மை (Flexibility): எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை அறிந்து அதற்காக முன்கூட்டியே சட்டங்கள் இயற்ற

முடியாது. எனவே, எதிர்பாராத சூழ்நிலைகளில், அச்சூழ்நிலைக்கு ஏற்ப, ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள சட்டங்களை திருத்தியமைத்தல் இன்றியமையாதது. சட்டமன்றத்தின் வாயிலாக சட்டத்தை திருத்துவது என்பது உடனடியாக நடக்கக்கூடிய காரியமல்ல. அதற்கு காத்திருக்க வேண்டும். மேலும் பல நடைமுறைகளைக் கடந்து வர வேண்டும். ஆனால் சட்டமியற்றும் அதிகாரங்களை நிருவாகத்துறையினரிடம் ஒப்படைப்பதின் காரணமாக, அவர்கள் நிகழ்வு சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, அதற்கேற்ப உடனடியாக சட்டங்களில் திருத்தங்களை கொண்டு வர முடியும். எடுத்துக் காட்டாக, வங்கி வட்டி விகிதம், காவல் துறை ஒழுங்கு முறை விதிகள், ஏற்றுமதி-இறக்குமதி, அன்னியச் செலாவணி ஆகியவற்றில் சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பின் வாயிலாக, நிருவாகத்துறையினர் சூழ்நிலைக்கேற்றவாறு அடிக்கடி கொண்டு வரும் திருத்தங்களைக் குறிப்பிடலாம். இந்நோக்கத்திற்காக சட்டமன்றம் இயற்றும் பெரும்பாலான தோற்றுவாய் சட்டங்களில் **"இடர்பாடுகளை அகற்றுதல்" (removal of difficulties)** எனும் ஒரு சட்டப் பிரிவு, அச்சட்டத்தின் இறுதியில் வழக்கமாகக் கொடுக்கப் பட்டிருக்கும். இந்த சட்டப் பிரிவின் மூலமாக அச்சட்டத்தை செயலாக்கு வதில் ஏற்படும் இடர்பாடுகளை உடனுக்குடன் களைவதற்கு நிருவாகத் துறையினருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

4. சோதனை செய்து பார்க்கும் வாய்ப்பு (Opportunity tc Experiment): சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பானது, சட்டங்களை சோதனை செய்து பார்க்கும் ஒரு வாய்ப்பை நிருவாகத் துறையினருக்கு ஏற்படுத்தித் தருகிறது. ஒரு விதியை நிரந்தரமாக்குதற்கு முன்னர், அவ் விதியின் பயன்பாடு குறித்து மக்களிடையே ஒரு சோதனையை நடத்த நிருவாகத் துறையினர் அனுமதியளிக்கப்பட்டுள்ளனர். அச்சோதனை முடிவினால் கிடைக்கும் அனுபவத்தைக் கொண்டு, அவ்விதியை அவர்கள் நிரந்தரமாக்கலாம் அல்லது மாற்றியமைக்கலாம். எடுத்துக் காட்டாக, சாலைப் போக்குவரத்து குறித்த விஷயங்களில், ஒரு சோதனையை நடத்தி விட்டு, அந்த சோதனையின் மூலமாக கிடைக்கப் பெற்ற அனுபவத்தைக் கொண்டு, அதில் தேவையான மாற்றங்களை நிருவாகத்துறையினர் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தைக் கொண்டு எளிதாகச் செய்து விடமுடியும். ஆனால் சட்டமன்றம் மூலம் இவ்வாறு சோதித்து பார்த்து சட்டமியற்ற முடியாது.

5. நெருக்கடி (Emergency): நெருக்கடியான சூழ்நிலை ஏற்படும் பொழுது, அடுத்து என்ன செய்வது என்று கையை பிசைந்து கொண்டிருக் காமல், அச்சூழ்நிலையை சமாளிக்க உடனடி நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். அதற்குத் தக்கவாறு விதிகளை உடனுக்குடன் இயற்ற வேண்டும். ஆனால் இவ்வாறு அதிரடியாகச் செயல்பட சட்டமன்றத்தால் முடியாது. அப்பொழுது கைக்கு கை கொடுத்து உதவுவது போல உதவிக்கு வருவது, சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பே. எனவே, போர்க்கால நெருக்கடி

நிலை மற்றும் இதர தேசிய நெருக்கடி நிலைகளின் பொழுது, சட்டமியற்றும் அதிகாரம் நிருவாகத்துறையினர் வசம் ஒப்படைக்கப்படுகின்றது. இரண்டு உலகப்போர்களின் பொழுது, இந்த சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு கணிசமான அளவில் வளர்ச்சியுற்றது. மேலும் நாட்டில் ஏற்படும் பஞ்சம், பட்டினி, வெள்ளம், பூகம்பம், நிதி நெருக்கடி நிலை ஆகிய வற்றின் பொழுது, மக்களைக் காக்க நிருவாகத்துறையினர் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தின் மூலம் உடனடியாக செய்யும் விதிகளே, தகுந்த நிவாரண வழிகளாக உள்ளன. சட்டமன்றம்தான் தக்க சட்டங்களை இயற்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தால், பஞ்சம், பட்டினியில் முடியும். பட்டினி, சாவில் முடியும். இறுதியாக மக்கள் வாழ்வே, மாயையாகிவிடும்.

6. இரகசியத் தன்மை (Secrecy): சில சூழ்நிலைகளில் சட்டமானது அமலுக்கு வரும் வரை, அது மக்களுக்கு அறிவிக்கப்படக் கூடாத அவசியம் ஏற்படுதுண்டு. எடுத்துகாட்டாக, ஏற்றுமதி-இறக்குமதி கொள்கை, பொருளதார விஷயங்கள் குறித்த சட்டங்கள். இம்மாதிரியாக இரகசியம் காக்க வேண்டுமெனில், அது நிருவாகத்துறை செய்யும் விதியாக்கத்தினால் மட்டுமே முடியும்.

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் நற்கூறுகள், குறைகள் மற்றும் அதன் பல்வேறு வடிவங்கள் [Merits, Demerits and Different Forms of Delegated Legislation]

11. Examine the merits and demerits of delegated legislation. Describe briefly the different forms of delegated legislation. (விதி ஆக்கலின் நற்கூறுகளையும் குறைகளையும் ஆய்க. பல்வேறு வகை விதி ஆக்கலை சுருக்கமாக விவரிக்க.)

முன்னுரை:

சட்டமன்றமானது தனது சட்டமியற்றும் அதிகாரத்தை தான் இயற்றிய சட்டங்களின் வாயிலாக, நிருவாகத்துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைவு செய்வது **'சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு' (Delegation of Legislative Powcr)** எனப்படுகிறது. இந்த அதிகார ஒப்படைப்பின் வாயிலாக அந்நிருவாகத்துறை முகவர் நிலைகள், அதிகார அமைப்புகள் ஆகியவை செய்யும் விதிகள், ஆணைகள், ஒழுங்குமுறைகள், உப-விதிகள் ஆகியவை **'விதியாக்கம்' (Delegated Legislation)** எனப்படுகிறது. இப்படிப்பட்ட விதியாக்கலினால் பல விதமான நன்மைகள் (நற்கூறுகள்) ஏற்படுகின்றன. அதே சமயத்தில் விதியாக்கலில் தீமைகளும் (குறைகளும்) உண்டு. அவற்றை சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

விதியாக்கலின் நற்கூறுகள் (அல்லது) சட்டமியற்றும் அதிகார ஒப்படைப் பினால் விளையும் நன்மைகள் (Merits of Delegated Legislation):

*(வினா எண் 10-ன் விடையில் **'சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பின் வளர்ச்சிக்கான காரணங்கள்'** எனும் தலைப்பில் உள்ள 5 கூறுகளைக் குறிப்பிடுக.)*

விதியாக்கலின் குறைகள் (அல்லது) சட்டமியற்றும் அதிகார ஒப்படைப் பினால் விளையும் தீமைகள் (Demerits of Delegated Legislation):

1. பாராளுமன்ற விவாதம் கிடையாது (No Parliament Deliberation): ஒரு மக்களாட்சி நாட்டின் சாரமே, அது மக்கள் பிரதிநிதி களைக் கொண்டு, பாராளுமன்றத்தில் (சட்டமன்றத்தில்) கூட்டாக விவாதித்து மக்களுக்கு தேவையான சட்டங்களை இயற்றுவதில்தான் அடங்கியுள்ளது. ஆனால் சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பில், நிருவாகத்துறையினரால் விதிகள் இயற்றப்படுகின்றன. இங்கு மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு விவாதித்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை. அரசு அதிகாரவர்க்கத்தினரின் கையில் சட்டமியற்றுதல் உள்ளதால், அவர்கள் ஏதேச்சதிகாரமாக செயல்பட்டு, மக்களின் விதியை தாங்கள் இயற்றும் விதிகளால் மாற்றக் கூடிய அபாயம் உண்டு.

2. பொது மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பில்லை (Public Opinion cannot influence): தற்கால சட்டமியற்றுதல் செயல்பாட்டின் படி, ஒரு சட்டத்திற்கான மசோதா வரையப்பட்டவுடன், அது குறித்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களையும் குறைகளையும் எடுத்துக் கூற வாய்ப்பளித்து, அவர்கள் பார்வைக்காக வெளியிடப்படுகிறது. இதனால் பொது மக்கள் குறைகளை பாராளுமன்றம் அறிய முடிகிறது. ஆனால் இவ்வழிமுறையை நிருவாகத்துறையினர் எப்பொழுதாவதுதான் கடைப் பிடிக்கிறார்களே தவிர, எப்பொழுதும் கடைப்பிடிப்பதில்லை. அதாவது சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பில், பொது மக்களின் கருத்தை நிருவாகத்துறையினர் கேட்பது எப்பொழுதும் சாத்தியமல்ல.

3. நிருவாகத்துறை முகவர் நிலைகள் செய்யும் விதிகளை அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்காமை (Non-availability of the opportunity to know the rules made by the administrative agencies): ஒவ்வொருவரும் சட்டங்களை அறிந்திருத்துள்ளார்கள் என்ற அனுமானத்தின் அடிப்படையில் பாராளுமன்றம் சட்டங்களை இயற்று கிறது. ஏனெனில் பாராளுமன்றமும், சட்டமன்றமும் இயற்றும் சட்டங்களை ஒவ்வொரு குடிமகனும் எளிதில் அறிந்து கொள்ள முடியும். இவ்வகையிலேயே சட்டங்களும் வெளியிடப்படுகின்றன. ஆனால், அதிகார ஒப்படைப்பின் வாயிலாக நிருவாகத்துறை முகவர் நிலைகள் பல்வேறு சட்டங்களின் கீழ் செய்யும் பல்வேறு விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு போதிய விளம்பரம் இல்லை. மேலும் நிருவாகத்துறை முகவர் நிலைகள் அடிக்கடி செய்யும் பல்வேறு விதிகளையும் ஒரு

குடிமகன் அறிந்திருக்க வேண்டும் என்பது சாத்தியமற்ற ஒன்றாக உள்ளது.

4. சட்டமன்றத்தின் கட்டுப்பாடு போதுமானதாக இல்லை (Control by the legislature is not adequate): சட்டமன்றத்தின் பணிச் சுமை காரணமாக, தான் ஒப்படைவு செய்த அதிகாரத்தைக் கொண்டு நிருவாகத்துறை முகவர் நிலைகள் முறையாக விதிகளை இயற்று கின்றனரா அல்லது அவர்கள் செய்த விதிகள் முறையானதாக உள்ளதா என்று கண்காணிக்க சட்டமன்றத்தால் முடிவதில்லை. இதனால் தகுந்த கட்டுப்பாடுகளை சட்டமன்றத்தால் விதிக்க முடிவதில்லை.

5. நீதிமுறைக் கட்டுப்பாடு வலுவானதாக இல்லை (Judicial Control is ineffective): சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பின் மீதான நீதிமுறைக் கட்டுப்பாடு போதுமானதாக இல்லை. ஏனெனில், நிருவாகத் துறை முகவர் நிலைகளுக்கு அதிகார ஒப்படைப்பு செய்யும் சட்டப் பிரிவுகளில் சட்டமன்றம் பயன்படுத்தியுள்ள வார்த்தைகள் பெரும் பாலும் குழப்பமானதாகவும், இரு பொருள் தொனிக்கக் கூடியதாகவும் உள்ளது. இவை நீதிமுறைக் கட்டுப்பாட்டை வலுவிழக்கச் செய்யக் கூடியதாக உள்ளது. மேலும் நிருவாகத்துறை முகவர் நிலைகள் செய்த விதிகள் தோற்றுவாய் சட்டத்திற்கு முரண்பட்டதாகவோ அல்லது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்டதாகவோ இருப்பின், அதனால் பாதிப்படைந்தவர் நீதிமன்றத்தை அணுகி நிவாரணம் பெற அதிகச் செலவாகிறது; அதிக காலம் பிடிக்கிறது. இவற்றையெல்லாம் சமாளித்து அவர் நிவாரணம் பெற வேண்டும். இந்த அவல நிலை நிருவாகத்துறை முகவர் நிலைகளிடம் சட்டமியற்றும் அதிகாரத்தை ஒப்படைப்பதால்தானே ஏற்படுகிறது?

விதியாக்கத்தின் பல்வேறு வடிவங்கள் (Different forms of Delegated Legislation):

பின்வரும் ஆறு முக்கியமான வடிவங்களில் சட்டமியற்றுத் துறையானது நிருவாகத்துறைக்கு சட்டமியற்றும் அதிகாரத்தை ஒப்படைக்கிறது அவை,

1. மத்திய சட்டமானது சட்டமியற்றும் அதிகாரத்தை மத்திய அரசிடம் ஒப்படைக்கலாம். எடுத்துக்காட்டாக, (i) 1962-ஆம் ஆண்டின் இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் 3-வது பிரிவு. (ii) 1951-ஆம் ஆண்டின் அனைத்திந்திய பணிகள் சட்டத்தின் 3-வது பிரிவு.

2. மத்திய சட்டமானது சட்டமியற்றும் அதிகாரத்தை மாநில அரசிடம் ஒப்படைக்கலாம். எடுத்துக்காட்டாக, (i) 1878-ஆம் ஆண்டின் அபினி (Opium) சட்டத்தின் 8-வது பிரிவு. (ii) 1923-ஆம் ஆண்டின் இஸ்லாமியர்கள் வக்ஃப் சட்டத்தின் 2-வது பிரிவு.

3. மத்திய சட்டமானது சட்டமியற்றும் அதிகாரத்தை மத்திய

மற்றும் மாநில அரசுகளிடம் ஒப்படைக்கலாம். எடுத்துக்காட்டாக, (i) 1957-ஆம் ஆண்டின் சுரங்கங்கள் மற்றும் தாதுப் பொருட்கள் சட்டத்தின் 13-வது பிரிவானது மத்திய அரசிற்கும், அதே சட்டத்தின் 15-வது பிரிவு மாநில அரசிற்கும் விதிகள் இயற்றும் அதிகாரத்தை ஒப்படைக்கிறது. (ii) 1985-ஆம் ஆண்டின் நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் சட்டத்தின் 35-வது பிரிவி மத்திய அரசிற்கும், 36-வது பிரிவு மாநில அரசிற்கும் விதிகள் இயற்றும் அதிகாரத்தை ஒப்படைக்கிறது.

4. மத்திய சட்டமானது சட்டமியற்றும் அதிகாரத்தை சட்டப் படியான அமைப்புகளிடம் (Statutory bodies) ஒப்படைக்கலாம். எடுத்துக்காட்டாக, (i) 1961-ஆம் ஆண்டின் வழக்கறிஞர்கள் சட்டத்தின் 49-வது பிரிவு இந்திய வழக்கறிஞர்கள் குழுமத்திற்கு (Bar Council of India) மேற்படி சட்டத்தின் கீழ் விதிகள் இயற்றும் அதிகாரத்தை ஒப்படைக் கிறது.

5. மாநில சட்டமானது சட்டமியற்றும் அதிகாரத்தை மாநில அரசிடம் ஒப்படைக்கலாம். எடுத்துக்காட்டாக, 1959-ஆம் ஆண்டின் ஆந்திர பிரதேச பஞ்சாயத்து சமிதிகள் சட்டத்தின் 69-வது பிரிவு மேற்படி சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு விதிகள் இயற்றும் அதிகாரத்தை ஆந்திர பிரதேச மாநிலத்திடம் ஒப்படைக்கிறது.

6. மாநில சட்டமானது சட்டமியற்றும் அதிகாரத்தை சட்டப் படியான அமைப்புகளிடம் (Statutory bodies) ஒப்படைக்கலாம். எடுத்துக்காட்டாக, தமிழ்நாடு மின்சார சட்டமானது, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு (Tamil Nadu Electricity Board) மேற்படி சட்டத்தின் கீழ் விதிகள் இயற்றும் அதிகாரத்தை ஒப்படைக்கிறது.

இந்தியாவில் சட்டமியற்றும் அதிகார ஒப்படைவும், அதன் வளர்ச்சியும் [Delegated Legislation and its Growth in India]

12. Explain the growth of delegated legislation in India. (இந்தியாவில் விதியாக்கத்தின் வளர்ச்சியை விளக்குக.)

(அல்லது)

Explain the constitutionality of delegated legislation in India. (இந்தியாவில் விதியாக்கத்தின் அரசியலமைப்புத்தன்மையை விளக்குக.)

(அல்லது)

Explain with reference to decided cases the principles governing the delegation of legislative power in India. (இந்தியாவில்

சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு பற்றிய முடிவான வழக்குகளைக் குறிப்பிட்டு விளக்குக.)

இந்தியாவில் விதியாக்கத்தின் அரசியலமைப்புத்தன்மை (Constitutionality of delegated legislation in India):

சட்டமியற்றுத்துறை தனது சட்டமியற்றும் அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைப்பதற்கு அதிகாரம் கொடுக்கும் வண்ணம் வெளிப்படையான வகைமுறை (express provision) ஏதும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்படவில்லை. ஆனால் இந்திய அரசிலயமைப்புச் சட்டத்தின் **ஷரத்து 13 (3) (a)** கூறும் வாசகங்களில் இருந்து, மேற்கண்டவாறு சட்டமியற்றுத் துறை நிருவாகத் துறைக்கு சட்டமியற்றும் அதிகாரத்தை ஒப்படைக்க உட்கிடையாக அதிகாரம் (implied authority) அளித்துள்ளதை அறிய முடிகிறது.

ஷரத்து 13 (3) (a) -ஆனது, 'சட்டம்' என்ற பதத்திற்கு வரையறை தருகிறது. அவ்வரையறையின்படி, 'சட்டம்' எனும் பதத்தில் இந்திய எல்லைக்குள் சட்டத்தின் வலிமை கொண்ட விதிகள், ஒழுங்குமுறைகள், உப-விதிகள், ஆணைகள், அறிக்கை ஆகியவை அடங்கும், என்று கூறுகிறது. 'சட்டம்' எனும் பதத்தில் மேற்கண்டவையெல்லாம் அடங்கும் என்று பரந்த பொருளில் மேற்கண்ட **ஷரத்து 13 (3) (a)** கூறுவது, நிருவாகமுறைச் சட்டத்தின் கீழான விதியாக்கத்தையும் உள்ளடக்கி நிற்கிறது. ஏனெனில், நிருவாகத்துறையானது தம்மிடம் ஒப்படைக்கப் பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தைக் கொண்டு சட்டமியற்றுவதாக நாம் கண்டோம். ஆனால் அவை உண்மையில் சட்டமன்றத்தைப் போல சட்டங்களை இயற்றவில்லை. ஆனால் மேற்கண்ட **ஷரத்து 13 (3) (a)** கூறுவதைப் போல, சட்டத்தின் வலிமை கொண்ட விதிகள், ஒழுங்கு முறைகள், உப-விதிகள், ஆணைகள், அறிக்கைகள் முதலியவற்றையே செய்கின்றன. எனவே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி நிருவாகத் துறை அல்லது அதன் முகவர் நிலைகள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தைக் கொண்டு செய்யும் மேற்கண்ட விதிகள், ஒழுங்கு முறைகள், உப-விதிகள், ஆணைகள், அறிக்கைகள் ஆகியவை செல்லத்தக்கதே. இதனை (சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பின் கீழான) விதியாக்கம் என்று கூறுகிறோம். இந்தியாவில், இந்த விதியாக்கம் எந்த அளவிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது அல்லது அதன் வளர்ச்சி யாது அல்லது விதியாக்கத்தின் அரசியலமைப்புத் தன்மை என்ன என்பதை இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்ததை அடிப்படையாகக் கொண்டு நாம் பின்வருமாறு காண உள்ளோம்.

சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு இந்தியாவில் அனுமதிக்கப்பட்டுள்ள அளவு (அல்லது) இந்தியாவில் விதியாக்கத்தின் வளர்ச்சி:

இந்தியாவில் சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு (அல்லது

விதியாக்கம்) எந்த அளவிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டறிய, நாம் இதுவரைக்குமான காலத்தை பின்வரும் இரண்டு கால கட்டங்களாக பிரித்துப் பார்க்க வேண்டியது அவசியமாக உள்ளது. அவை,

1. இந்திய அரசியமைப்புச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பு (அதாவது 1833-லிருந்து 1950 வரையிலான காலம்) (Pre-Constitution period)

2. இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு (அதாவது 1950-லிருந்து இன்று வரையிலான காலம்) (Post-Constitution period)

1. இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பு (1833-1950) (Pre-Constitution period):

வாணிப நோக்கத்தோடு இந்தியாவில் காலடி எடுத்து வைத்த ஆங்கிலேய கிழக்கு இந்தியக் கம்பெனி, மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக இந்திய அரசியலில் ஈடுபட்டு இறுதியாக இந்தியாவையே கைப்பற்றியது. இங்கிலாந்து பாராளுமன்றத்தால் 1833-ஆம் ஆண்டு செய்யப்பட்ட இந்தியச் சட்டமன்றச் சட்டம் (The Indian Council Act, 1833) இந்திய ஆட்சி முறையிலும் கிழக்கு இந்தியக் கம்பெனியின் அமைப்பிலும் முக்கிய மாறுதல்களை ஏற்படுத்தியது. அது வரையில் கிழக்கிந்தியக் கம்பெனியிடம் இருந்து வந்த இந்திய ஆட்சியானது, இங்கிலாந்து நாட்டு மன்னரின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதே சமயத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி, இந்திய அரசின் பொறுப்புரிமை அமைப்பாக (Trust) மாற்றப் பட்டது. மேற்படி 1833-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, தலைமை ஆளுநர் சட்டமன்றத்தில் இருக்கையில் (Governor General in Council), அவரிடம் இந்திய அரசின் சட்டமியற்றும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டதும், ஆட்சி நிருவாகத்துறை தலைவரான அவர் சட்டங்களைச் செய்தார். இங்கிலாந்து நாட்டு பாராளுமன்றத்தால் செய்யப்பட்ட சட்டங்களின் கீழ் விதிகள் இயற்றினார்; சட்டங்களைத் திருத்தினார்; மாற்றினார். இவ்வாறாக சட்டமியற்றும் எல்லா அதிகாரங்களும் அவரிடமே இருந்தன. சட்டங்கள் செய்யும் அதிகாரமும், அவைகளை அமல் செய்யும் அதிகாரமும் அவரிடமே இரண்டறக் கலந்திருந்தன. இவ்வாறாக தலைமை ஆளுநரிடம் எல்லா அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. இந்த அதிகார ஒப்படைவு எந்தக் கோட்பாட்டிற்கும் உட்பட்டிருக்கவில்லை. இந் நிலையை நாம் பின்வரும் சில முக்கிய வழக்குகளின் துணையோடு விளக்கலாம். அவை,

Queen v. Burah[1]

இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, இங்கிலாந்து பாராளு மன்றம், 1861-ல் இந்தியச் சட்டமன்றங்கள் சட்டம் (The Indian Councils

1. (1878) 5 IA 178: ILR 4 Cal. 172 (P.C.)

Act, 1891) என்றொரு சட்டத்தை நிறைவேற்றி, அதன் மூலமாகத் தலைமை ஆளுநர் சட்டமன்றத்தில் இருக்கையில், அவருக்கு இந்தியா முழுமைக்கும் இந்தியாவில் உள்ள எல்லோர் மீதும் அமல் செய்யக்கூடிய சட்டங்கள், விதிமுறைகள் முதலியன செய்யவும், அவைகளைத் திருத்துவதற்கும், மாற்றுவதற்குமான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. ஆனால் அந்தச் சட்டத்தில், தலைமை ஆளுநருக்கு தோற்றுவாய் சட்டத்தை (Parent Act) அஃதாவது, 1861-ஆம் ஆண்டின் இந்திய சட்டமன்றங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கோ (Amend), நீக்குவதற்கோ (Repeal) அதிகாரம் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் தலைமை ஆளுநர் அவருடைய சட்டமன்றத்தின் மூலமாக, 1869-ஆம் ஆண்டில் **'காரோ குன்றுகள் சட்டம்'** (The Garo Hills Act, 1869) என்றொரு சட்டத்தை இயற்றினார். அந்தச் சட்டத்தின் மூலமாக காரோ குன்றுகள் குற்றவியல் மற்றும் உரிமையியல் சட்டங்களிலிருந்தும், நீதிமன்றங்களிலிருந்தும் விலக்கி வைக்கப்பட்டன.

மேலும் அதே சட்டத்தின் மூலமாக அஸ்ஸாம் மாநில துணை நிலை ஆளுநருக்கு (Lieutenant Governor) அந்தச் சட்டத்தின் விதிகளை மொத்தமாகவோ, பிரித்தோ **ஜெயின்ஸா (Jaintia), நாக (Naga), காசி (Khasi)** குன்றுகளுக்கு ஒரு குறிப்பிட்ட தேதியில் அரசிதழில் அறிவிப்புச் (Notification in Govt. Gazette) செய்த பின்னர் அமலுக்கு கொண்டு வரும் அதிகாரம் வழங்கப்பட்டது. அஸ்ஸாம் மாநில துணை நிலை ஆளுநர், அரசிதழில் அறிவிப்புச் செய்த பின்னர் 1871, அக்டோபர் 14-ல் அச்சிட்ட விதிகளின்படி மேற்படி சட்டத்தை காசி மற்றும் ஜெயின்ஸா குன்றுகளுக்கு விரிவுபடுத்தினார். இதன் பயனாக குற்றவியல் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்குத் தண்டனை வழங்கத் தனிச் சட்டமும், தனி நீதிமன்றமும் ஏற்படலாயின. **பூரா (Burah)** என்பரும், **பூக் சிங் (Book Singh)** என்பரும் காரோ குன்றுகள் சட்டத்தை மாநில துணை நிலை ஆளுநர் காசி மற்றும் ஜெயின்ஸா குன்றுகளுக்கு விரிவுபடுத்தியதை ஆட்சேபித்தார்கள். இதற்குக் காரணம், இவர்கள் இருவரும் மீதும் அந்தச் சட்டவிதிகள் விரிவு செய்யப்பட்ட பிறகு, தனிக் குற்றவியல் சட்டத்தின் மூலமாகக் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, ஆயுள் தண்டனை வழங்கப்பட்டிருந்தது. இத்தண்டனையிலிருந்து தப்புவதற்காக, மேற்கண்டவாறு விதிகள் விரிவாக்கப்பட்டது செல்லாது என்று வாதிட்டார்கள். மேலும், சட்டத்தை விரிவாக்கும் (அதாவது விஸ்தரிக்கும்) அதிகாரம், சட்டமியற்றும் அதிகாரம் என்றும், சட்டமியற்றும் அதிகாரம், தலைமை ஆளுநர் சட்டமன்றத்தில் இருக்கையில்தான் இங்கிலாந்து பாராளுமன்றத்தால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், அந்த அதிகாரத்தை தலைமை ஆளுநர், மாநில துணை நிலை ஆளுநருக்கு அதிகார ஒப்படைவு செய்ய அவருக்கு அதிகாரமில்லை என்றும் வாதிட்டார்கள்.

கல்கத்தா உயர் நீதிமன்றம் [**Empress v. Burah and Book Singh,** ILR 3 Cal. 64: 1 CLR 161 (FB)], மேற்கண்ட வாதங்களை ஏற்றுக்

கொண்டு, அவ்வாறு அதிகார ஒப்படைவு செய்த 'காரோ குன்றுகள் சட்டம்' செல்லாதது என்று தீர்ப்பளித்தது. ஆனால் இங்கிலாந்து நாட்டு ஆட்சிக்குட்பட்ட குடியரசுரிமை பெறாத நாடுகளின் உச்ச நீதிமன்றமாக இருந்த **பிரிவி கவுன்சிலானது (Privy Council)**, கல்கத்தா உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை, மேல்முறையீட்டின் பொழுது நிராகரித்துவிட்டது. மேற்கண்டவாறு அதிகார ஒப்படைவு செய்தது செல்லும் என்றும் பிரிவி கவுன்சில் கூறியது. மேலும், அந்த அதிகார ஒப்படைவு விதிகள் செய்யும் அதிகார ஒப்படைவு (delegated legislation) இல்லை என்றும், நிபந்தனைக்குட்பட்ட சட்டமியற்றும் அதிகார ஒப்படைவாகும் (conditional legislation) என்றும், துணை நிலை ஆளுநர் புதிதாக சட்டங்கள் எதையும் செய்யவில்லை என்றும், அவர் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள சட்டத்தின் எல்லையை வெறுமனே விரிவுபடுத்தியுள்ளார் என்றும் கூறியது. இத்தோடு மட்டுமில்லாமல், இந்தியச் சட்டமன்றம், இங்கிலாந்து பாராளு மன்றத்தின் முகவரோ (Agent) அல்லது பிரதிநிதியோ (Represetative) அல்ல என்றும், இந்தியச் சட்டமன்றம் தனது சட்டமியற்றும் அதிகார வரம்பிற்குட்பட்டு மற்ற ஆட்சி நிருவாக அங்கங்களுக்கு அதிகார ஒப்படைவு செய்யலாமெனவும் கருத்தறிவித்தது. **"ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது"** (அதாவது ஒருவரிடம் ஒப்படைக் கப்பட்ட அதிகாரத்தை, அவர் அதை மீண்டும் மற்றொருவரிடம் ஒப்படைக்க முடியாது) (Delegatus non potest delegare) என்ற கோட்பாடு இந்தியச் சட்டமன்றத்திற்கு பொருந்தாது என்றும் பிரிவி கவுன்சில் தெளிவாக்கியது.

Jatindra Nath Gupta v. Province of Bihar[2]

இவ்வழக்கில் பீகார் பொது ஒழுங்கு பராமரிப்புச் சட்டத்தை (The Bihar Maintenance of Public Order Act) மேலும் ஒரு ஆண்டிற்கு அறிவிப்பு மூலமாக நிருவாகத்துறை முகவர் நிலையானது, கால நீட்டிப்புச் செய்யலாமா என்ற கேள்வி எழுந்தது. இவ்வழக்கு இந்தியக் கூட்டாட்சி நீதிமன்றத்தின் (Federal Court of India) முன் எழுந்தது. அதன் பெரும் பான்மை நீதிபதிகள், ஒரு சட்டத்தின் காலத்தை நீட்டிப்பு செய்யும் அதிகாரத்தை நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு ஒப்படைவு செய்யக் கூடாதென தீர்ப்பு கூறினார்கள். மேலும் நிபந்தனைகளுக்குட்பட்டுச் சட்டமியற்றும் அதிகாரத்தைத் (conditional legislation) தவிர வேறு விதிகள் செய்யும் அதிகாரத்தை (delegated legislation) ஆட்சி நிருவாக அங்கங்களிடம் ஒப்படைக்கக் கூடாது என்றும் கருத்துத் தெரிவித்தனர். எனினும் மேற்படி வழக்கில் **நீதிபதி ஃபாஸில் அலி** அவர்கள் அளித்த மறுதலைத் தீர்ப்பில் (dissenting judgment), ஒரு சட்டத்தின் காலத்தை மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்தது, புதிதாக ஒரு சட்டத்தை இயற்றியதற்கு ஒப்பாகாது என்றும், அது சட்ட மன்றத்தாலேயே வகுத்துக்

2. A.I.R. 1949 F.C. 175: 1949 FCR 595.

கொடுக்கப்பட்டுள்ள உச்ச கால வரம்பிற்குள் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்கு அச்சட்டத்தின் வாழ்நாளை தொடர்ந் திருக்குமாறு செய்தது மட்டுமேயாகும் என்றும் கூறினார்.

Jitenderlal Banerjee v. Province of Bengal[3]

இவ்வழக்கிலும் இந்தியக் கூட்டாட்சி நீதிமன்றம், சட்டத்தில் குறிப்பிடப்பட்ட காலத்திற்கு மேல் அச்சட்டத்தைக் கால நீட்டிப்பு செய்யும் அதிகாரம் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு வழங்கலாகாது என்று தீர்ப்புக் கூறியது.

ஆனால், **Jailal v. State**[4] எனும் வழக்கிலும் **Inder Singh v. State of Rajesthan**[5] எனும் வழக்கிலும் மேற்கண்ட **Jatindra Nath Gupta v. Province of Bihar**[6] எனும் வழக்கிலும் **Jitenderlal Banerjee v. Province of Bengal**[7] எனும் வழக்கிலும் இந்தியக் கூட்டாட்சி நீதிமன்றம் கூறிய தீர்ப்புகளை, இந்திய உச்ச நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

2. இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த பின்பு (1950-லிருந்து இன்று வரையிலான காலம்) (Post-Constitution period):

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26-ஆம் நாள் அமலுக்கு வருகையில் அதிகார ஒப்படைவு பற்றி நீதிபன்றங்களிடையே தெளிவான கருத்து ஏதும் இல்லை. **Queen v. Burah**[8] என்ற வழக்கில் பிரிவி கவுன்சிலானது, ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின்படி விதிகள் செய்யும் அதிகாரத்தை நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அதிகார ஒப்படைவு செய்யலாமெனக் கருத்து தெரிவித்தது. ஆனால் இந்தியக் கூட்டாட்சி நீதிமன்றம் **Jatindra Nath Gupta v. Province of Bihar**[9] எனும் வழக்கில் ஆட்சி நிருவாக அங்கங்களுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டுச் சட்டமியற்றும் அதிகாரங் களைத்தான் வழங்கலாமே தவிர, மேலே குறிப்பிடப்பட்டபடி விதிகள் செய்யும் அதிகாரங்களை வழங்கக் கூடாது என்று கருத்துத் தெரிவித்தது. இரண்டு நீதிமன்றங்களின் கருத்துகளும் ஒன்றோடொன்று ஒவ்வாதிருந்த படியால், இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த பொழுது, விதிகள் செய்யும் (delegated legislation) அதிகாரத்தை அதிகார

3. A.I.R. 1949 FCR 596.
4. (1952) S.C.R. 127
5. A.I.R. 1957 S.C. 510.
6. A.I.R. 1949 F.C. 175: 1949 FCR 595.
7. Ibid foot notes 3
8. (1878) 5 IA 178: ILR 4 Cal. 172 (P.C.)
9. Ibid foot notes 6

ஒப்படைவு (delegation of power) செய்யலாமா என்பது பற்றித் தெளிவான கருத்தில்லை. மேலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அதிகார ஒப்படைவு செய்யும் அதிகாரம் சட்டமன்றங்களுக்கு அளித்தல் பற்றி எதுவும் கூறப் படவில்லை. இதனால் அதிகார ஒப்படைவு இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி செய்யலாமா என்ற வினாவும் எழுந்தது. அதிகார ஒப்படைப்பைப் பொருத்தவரை, இந்தியா, அமெரிக்க நாட்டின் அதிகார ஒப்படைவுக் கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டுமா அல்லது இங்கிலாந்து நாட்டில் நிலவிவரும் அதிகார ஒப்படைவுக் கோட் பாடுகளைப் பின்பற்ற வேண்டுமா என்பதில் கருத்து வேறுபாடுகள் தோன்றலாயின. இதற்கெல்லாம் விடை பகரும் முகமாக பின்வரும் வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் கூறிய தீர்ப்பு அமைந்தது. அவ்வழக்கு வருமாறு.

In Re Delhi Laws Act Case[10]

இந்தியாவில், அதிகார ஒப்படைவு பற்றிச் சரியான விளக்கம் பெற இந்தியக் குடியரசு தலைவர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 143-வது ஷரத்தின்படி, இந்திய உச்ச நீதிமன்றத்திடம் ஆலோசனை வழங்குமாறு மேற்படி வழக்கின் பொழுது கேட்டுக் கொண்டார். அதிகார ஒப்படைவு பற்றிய ஆலோசனை பின்வரும் சட்டங்களுக்காக கேட்கப்பட்டிருந்தது. அச்சட்டங்கள் (1) 1912-ஆம் ஆண்டின் டெல்லிச் சட்டங்கள் (The Delhi Laws Act, 1912), (2) 1949-ஆம் ஆண்டின் ஆஜ்மீர் மீர்வாரச் (சட்டங்கள் விரிவாக்கச்) சட்டம் [The Ajmer Merwara (Extension of Laws) Act, 1949], (3) 1950-ஆம் ஆண்டின் பகுதி 'இ' மாநிலங்கள் (சட்டங்கள்) சட்டம் [The Part 'C' States (Laws) Act, 1950].

1912-ஆம் ஆண்டின் டெல்லிச் சட்டங்கள் மூலமாக மாநில அரச அரசிதழில் அறிவிக்கை செய்தன் வாயிலாக பிரிட்டிஷ் இந்தியாவில் மற்ற எந்த பாகத்திலும் அமலில் இருக்கும் சட்டத்தை டெல்லி மாநகருக்கு விரிவு படுத்தும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது.

அதுபோல், 1949-ஆம் ஆண்டின் ஆஜ்மீர் மீர்வாரச் (சட்டங்கள் விரிவாக்கச்) சட்டத்தின் மூலமாக மத்திய அரசுக்கு ஆஜ்மீர் மீர்வாரா பகுதிக்கும் மற்ற பகுதிகளில் அமலில் உள்ள சட்டங்களை விரிவாக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

மேலும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு இயற்றப்பட்ட 1950-ஆம் ஆண்டின் பகுதி 'இ' மாநிலங்கள் (சட்டங்கள்) சட்டமானது, அரசிதழ் அறிவிக்கை மூலமாக பகுதி 'அ' மாநிலங்களில்

10. A.I.R. 1951 S.C. 332

உள்ள சட்டங்களை பகுதி 'இ' மாநிலங்களுக்கு வரையறைகளுடனோ (restrictions) அல்லது மாற்றங்களுடனோ (modifications) விரிவு படுத்தும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு அதன் 2-வது பிரிவின் வாயிலாக வழங்கியிருந்தது. இவ்வாறு சட்ட விஸ்தரிப்பு செய்கையில் மத்திய அரசுக்குப் பகுதி 'இ' மாநிலங்களில் அமலில் இருக்கும் மத்திய சட்டம் அல்லாத மற்ற தொடர்புடைய சட்டங்களைத் (Corresponding Laws) திருத்துவதற்கும் (amend), நீக்குவதற்குமான (repeal) அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

உச்ச நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் அமர்ந்து இந்த வழக்கை விசாரித்தார்கள். அவர்கள் எழுவரும் தங்களுடைய ஆலோசனைக் கருத்துகளை (Advisory opinions) தனித்தனியே அளித்தார்கள். அவற்றில் பெரும்பான்மை நீதிபதிகளால் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துகள் வருமாறு. **அக்கருத்துகளை மேற்படி வழக்கில் விளைந்த கொள்கைகள் (Priniciples laid down in Delhi Laws Act Case)** என்றும் கூறலாம்.

1. நவீனசமுதாயத்தில் தோன்றும் எண்ணற்ற பிரச்சனைகளுக்குத் தீர்வு காண அவ்வப்போது சட்டமன்றம் கூடிச் சட்டங்கள் இயற்ற இயலாது. பிரச்சனைகள் எந்த வடிவில் தோன்றும் என்று முன்கூட்டியே அறிய இயலாது. எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காணும் வகையில் பொதுவான சட்டத்தை இயற்றவும் இயலாது. ஒரு பிரச்சனையை முன் வைத்து இயற்றப்பட்ட சட்டம், மற்றொரு பிரச்சனைக்குத் தீர்வு காணாது. இந்நிலையில் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அதிகார ஒப்படைவு செய்தல் இன்றியமையாததாகிறது. நிருவாகத்துறை முகவர் நிலைகள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின் மூலமாகப் பிரச்சனைகளுக்கு எளிதில் தீர்வு காண முடியும். இன்றைய ஆட்சியில் அதிகார ஒப்படைவு செய்யாமல், ஆட்சியை நடத்துவது என்பது இயலாத செயலாகும்.

2. இந்தியச் சட்டமன்றங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமாகத் தங்களுடைய சட்டமியற்றும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. எனவே, இந்தியச் சட்டமன்றங்கள், இந்திய அரசியலமைப் பிற்கு உட்பட்டுச் செயலாற்றுதல் வேண்டும். இந்தியச் சட்டமன்றங்கள் இங்கிலாந்து நாட்டு பாராளுமன்றத்திற்கு இணையான அதிகாரங்கள் பெற்றவைகளல்ல. இங்கிலாந்து பாராளுமன்றம் எழுதப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு இயங்குவதன்று. அம்மன்றம் எல்லா அதிகாரங்களையும் பெற்றுத் தன்னிகரற்று மேலான நிலையில் உள்ளது. ஆதலால், இந்தியச் சட்டமன்றங்களின் சட்டமியற்றும் அதிகாரங்களை இங்கிலாந்து நாட்டு பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரங்களுடன் ஒப்பிடலாகாது. இந்தியச் சட்டமன்றங்கள், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இயங்குவதால் ஒரு வரம்பிற்குட்

பட்டே அதிகார ஒப்படைவு செய்ய இயலும். இங்கிலாந்தில் இந்நிலை இல்லை. எனவே, இந்தியச் சட்டமன்றங்கள் தங்கள் விருப்பப்படி எல்லா அதிகாரங்களையும் அதிகார ஒப்படைவு செய்ய இயலாது.

3. இந்தியச் சட்டமன்றங்கள் இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரங்களை (Essential legislative powers) நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அதிகார ஒப்படைவு செய்தல் கூடாது. அவ்வாறு செய்தால் அது இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு முரண்பட்டதாகும்.

4. இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரங்களைத் தவிர, மற்ற சட்டமியற்றும் அதிகாரங்களை (Non-essential legislative powers) நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அதிகார ஒப்படைவு செய்யலாம். அவ்வாறு செய்கையில், நிருவாகத் துறை முகவர் நிலைகள் அச் சட்டத்தின் கீழ் எவ்வாறு முறையாக செயல்பட்டு விதிகளை இயற்றலாம் என்பதற்குண்டான கொள்கைகளை (Policies) தோற்றுவாய் சட்டத்தில் (Parent Act) விளக்கப்பட்டிருக்க வேண்டும்; வழிகாட்டும் நெறிகளும் (Guidelines), தரநிலைகளும் (Standards) கூறப்பட்டிருக்க வேண்டும். இவை இல்லாமல் சட்டமியற்றும் அதிகாரமானது, நிருவாகத்துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைவு செய்யப்பட்டிருப்பின், அது அரசியலமைப்பு சட்டத்திற்கு முரண்பட்டதாகும். இக்கோட்பாடு அமெரிக்க நாட்டு அதிகார ஒப்படைவுக் கோட்பாட்டிற்கேற்ப உள்ளது.

5. நிபந்தனைகுட்பட்டுச் சட்டமியற்றல் (Conditional Legislation) அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்டதன்று. தோற்றுவாய் சட்டத்தில் நிபந்தனைகள் கொடுக்கப்பட்டிருந்தால் அந்நிபந்தனைகளுக்குட்பட்டு விதிகள் செய்யலாம்.

6. ஓரிடத்தில் நிலவி வரும் சட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தையும், அதை மற்றோர் இடத்திற்கு இடத்திற்கேற்ப மாறுபாடுகளுடனோ (modifications) அல்லது வரையறைகளுடனோ (restrictions) விஸ்தரிக்கும் அதிகாரத்தை நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்குச் சட்டமன்றம் வழங்கலாம். ஆனால் சட்டத்தைத் தேர்ந்தெடுத்து மற்றோர் இடத்திற்கு விரிவுபடுத்துகையில் அதன் இன்றியமையாத தனிச் சிறப்பியல்புகளை (essential features) மாறுபடுத்துதல் கூடாது. இவ்வாறு செய்தல், அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்டதாகும். மேலும் தோற்றுவாய்ச் சட்டத்தைத் திருத்தும் அதிகாரத்தையோ, நீக்கம் செய்யும் அதிகாரத்தையோ சட்டமன்றம் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு வழங்குதல் கூடாது. அதுபோல், இன்றியமையாச் சட்டமியற்றும் அதிகாரங்களையும் (Essential Legislative powers), நிருவாகத்துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைவு செய்தல் கூடாது. அவ்வாறு ஒப்படைத்தால், அது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்டதாகும்.

உச்ச நீதிமன்றம இவ்வாறாக சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு குறித்த பொதுக் கொள்கைகளை விளக்கிய பின்னர், மேற்படி (1) 1912-ஆம் ஆண்டின் டெல்லிச் சட்டங்கள் (The Delhi Laws Act, 1912), (2) 1949-ஆம் ஆண்டின் ஆஜ்மீர் மீர்வாரச் (சட்டங்கள் விரிவாக்கச்) சட்டம் [The Ajmer Merwara (Extension of Laws) Act, 1949], (3) 1950-ஆம் ஆண்டின் பகுதி 'இ' மாநிலங்கள் (சட்டங்கள்) சட்டம் [The Part 'C' States (Laws) Act, 1950] ஆகிய சட்டங்களின் மூலமாக நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள சட்ட விஸ்தரிப்பு அதிகாரம், அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டதே எனக் கூறியது. ஆனால் பகுதி 'இ' மாநிலங்கள் (சட்டங்கள்) சட்டத்தின் மூலமாக நிருவாகத்துறை முகவர் நிலைக்கு (மத்திய அரசு நிருவாகத் துறை) அளிக்கப்பட்டுள்ள சட்டத்தைத் திருத்தும் அதிகாரமும், சட்டத்தை நீக்கும் அதிகாரமும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு அப்பாற் பட்டதெனக் கருத்துத் தெரிவித்தது. இந்த ஆலோசனைக் கருத்து பின்னர் எழுந்த பல வழக்குகளிலும் உறுதி செய்யப்பட்டது.

உச்ச நீதிமன்றம் கூறிய மேற்கண்ட கருத்துகளின் சாரம்சப்படி, சட்டமன்றங்கள் கொள்கைகளையும் (policies), வழிகாட்டு நெறி களையும் (guidelines), தரநிலைகளையும் (standards), தனது தோற்றுவாய் சட்டத்தில் (Parent Act) கொடுத்த பின்னரே, நிருவாகத் துறை முகவர் நிலைகளுக்கு அதிகார ஒப்படைவு செய்தல் வேண்டும். இவை இல்லாமல் அதிகார ஒப்படைவு செய்தால், அது அதிகப்படியான மற்றும் கட்டுப்பாடற்ற அதிகார ஒப்படைப்பாக (excess and uncontrollable delegation of power) கருதப்படும். இப்படிப்பட்ட அதிகார ஒப்படைப்பைக் கொண்டு நிருவாகத்துறை முகவர் நிலைகள் செய்யும் விதிகள், இல்லா நிலையதாகும். மேலும் இன்றியமையா சட்டமியற்றும் அதிகாரத்தை ஒப்படைக்கக் கூடாது.

Harishankar Bagla v. State of M.P.[11]

1946-ஆம் ஆண்டின் அத்தியாவசிய பண்டங்கள் அளிப்பு (தற்காலிக அதிகாரங்கள்) சட்டத்தின் [The Essential Supplies (Temporary Powers) Act, 1946] 3-வது பிரிவானது, அத்தியாவசியப் பண்டங்களின் உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றை ஒழுங்குமுறைப் படுத்தும் பொருட்டு ஆணைகளை பிறப்பிப்பதற்கு மத்திய அரசிற்கு அதிகாரம் அளிக்கிறது. அதே சட்டத்தின் 6-வது பிரிவு பின்வருமாறு கூறுகிறது. அஃதாவது, "பிரிவு 3-ன் கீழ் செய்யப்பட்ட ஒரு ஆணை யானது, மேற்படி சட்டத்தைத் தவிர வேறு சட்டங்கள் எதிலாவது அதற்கு முரண்பாடாக யாது கூறப்பட்டிருப்பினும் அதைப் பொருட் படுத்தாமல் இயங்கும் (அதாவது செல்லத்தக்கதாகும்)" என்று கூறுகிறது. மேற்கண்ட இரண்டு சட்டப் பிரிவுகளும், சட்டமியற்றும் அதிகார

11. A.I.R. 1954 S.C. 465

மானது அதிகப்படியாக ஒப்படைவு (excessive delegation of legislative power) செய்யப்பட்டுள்ளது எனும் அடிப்படையில் மேற்படி வழக்கில் எதிர்க்கப்பட்டது. வழக்கை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கூறியது. அதன்படி, பிரிவு 6-ஆனது, மேற்படி சட்டத்தின் பிரிவு 3-ன் கீழ்ச் செய்யப்பட்ட ஆணையானது, வேறு எந்தச் சட்டத்திற்கு முரண்பாடாக இருந்தாலும் செல்லத்தக்கதாகும் என்பதைத்தான் குறிக்கிறதே தவிர, நடைமுறையில் அந்த ஆணைக்கு முரண்பாடாக உள்ள சட்டத்தை நீக்குவதற்காக அன்று என்றும், மேலும் அச்சட்டத்தில் சட்டமியற்றுவதற்கான கொள்கை (legislative policy) வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அதன்படிதான் மேற்கண்டவாறு ஆணைகளை செய்யும் அதிகாரமானது மத்திய அரசுக்கு ஒப்படைவு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே அதிகப்படியான அதிகாரங்கள் எதுவும் ஒப்படைவு செய்யப்படவில்லை என்றும் கூறி மேற்கண்ட பிரிவுகள் 3 மற்றும் 6 செல்லத் தக்கதே என்று தீர்ப்பளித்தது.

Edward Mills v. State of Ajmer[12]

1948-ஆம் ஆண்டின் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தில் (Minimum Wages Act, 1948) கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் (Schedule), மேற்படி சட்டம் பொருந்தக் கூடிய தொழிற்சாலைகளின் பட்டியல் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அப்பட்டியலில் வேறு ஏதேனும் தொழிற்சாலையைச் சேர்ப்பதற்கு உரிய அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. மேற்படி சட்டத்தின் வகைமுறைகள் பொருந்தக் கூடிய தொழிற்சாலையை முடிவு செய்யும் அதிகாரமானது, அரசாங்கத்தின் அபிப்பிராயத்திற்கு விடப்பட்டுள்ளது. ஆனால் அதற்கென எந்த வழிகாட்டு நெறிகளும் அச்சட்டத்தில் கூறப்படவில்லை. எனினும் உச்ச நீதிமன்றம் அச்சட்டம் செல்லத்தக்கதே என்று தீர்ப்பளித்தது. உச்ச நீதிமன்றத்தின் கருத்துப்படி, மேற்படி சட்டத்தின் கொள்கை அதன் முகப்புரையிலேயே தெளிவாக உள்ளது. அதாவது, உழைப்பை முதலாளி வர்க்கத்தினர் சுரண்டுவதை தவிர்க்கும் பொருட்டு, பணியாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதுதான் மேற்படி சட்டத்தின் நோக்கம் மற்றும் அடிப்படைக் கொள்கை. ஆனால் அச்சட்டத்தின் அட்டவணையில் எந்தெந்த வகையான தொழிற்சாலைகளை சேர்ப்பது என்பதற்குண்டான சோதனை, அச்சட்டத்தில் கொடுக்கப்படவில்லை. எனவே, மேற்படி சட்டத்தை செல்லத்தக்கதுதான் என்று விளம்பும் பொருட்டு, அதற்கான நெறிகளை உச்ச நீதிமன்றமே மேற்படி வழக்கில் வகுத்துக் கொடுத்தது.

Hamdard Dawakhana v. Union of India[13]

இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் ஒரு மாறுபட்ட தீர்ப்பை

12. A.I.R. 1955 S.C. 25
13. A.I.R. 1960 S.C. 554

வழங்கியது. அதன்படி அதிகப்படியாக அதிகாரங்கள் ஒப்படைவு (excessive delegation) செய்யப்பட்டுள்ளது எனும் காரணத்திற்காக மத்திய அரசின் ஒரு சட்டத்தை வரம்புமீறியது (ultra-vires) என்று உச்ச நீதிமன்றம் விளம்பியது. மேற்படி வழக்கில் பிரச்சனையில் மாட்டிக் கொண்ட சட்டம், 1954-ஆம் ஆண்டின் மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (ஆட்சேபகரமான விளம்பரங்கள்) சட்டமாகும். [The Drugs and Magic Remedies (Objectionable Remedies) Act, 1954] இச்சட்டமானது, சில மருந்துகளை விளம்பரம் செய்வதைக் கட்டுப் படுத்துவதற்காக பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டதாகும். இச்சட்டத்தின் 3-வது பிரிவில் ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் விளம்பரம் செய்ய தடை செய்யப்பட்ட நோய்களின் பெயர்கள் கொடுக்கப் பட்டுள்ளன. மேலும் அப்பிரிவு 3, அந்தப்பட்டியலில் வேறு ஏதேனும் நோய்களைச் சேர்ப்பதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. ஆனால் இவ்வாறு சேர்ப்பதற்கு எந்த தரநிலைகளும்; கொள்கைகளும் மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. எனவே, மத்திய அரசிற்கு மேற்கண்ட நோக்கத்திற்காக ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரமானது, எவ்வித வழிகாட்டுதல்களுமற்றது என்றும், கட்டுப்பாடற்றது என்றும் உச்ச நீதிமன்றம் கூறி, மேற்படி சட்டத்தை வரம்புமீறியது என்ற அறிவித்தது.

ஆனால் இத்தீர்ப்பை, நாம் ஏற்கனவே கண்ட **Edward Mills v. State of Ajmer** வழக்கின் தீர்ப்புடன் ஒப்பிட்டு பார்த்தால் உங்களுக்கு தவறான தீர்ப்பாக தோன்றும். இதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில் உச்ச நீதிமன்றம் **Hamdard Dawakhana v. Union of India** வழக்கில் கொண்ட கண்ணோட்டம் தவறானதே. இவ்வாறு கூறுவதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. முதற்கண், மேற்கண்ட இரண்டு வழக்குகளின் பொருண்மைகளும் ஒரே மாதிரியானதாக உள்ளது. ஆனால் அவற்றில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டனவாக உள்ளது. **Edward Mills v. State of Ajmer** வழக்கில், தொழிற் சாலைகளை குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ்க் கொண்டு வருவதற்கு மத்திய அரசிற்கு எவ்விதி வழிகாட்டு நெறிகளும் அச் சட்டத்தில் கொடுக்கப்படவில்லையென்றாலும் கூட, அச்சட்டத்தின் கொள்கை அதன் முகப்புரையிலேயே (Preamble) தெளிவாக உள்ளது என்றும், அதனால் அந்தச் சட்டம் கட்டுப்பாடற்ற நிலையில் அதிகப்படியான அதிகாரங்களை மத்திய அரசிற்கு கொடுத்ததாக கூறுதற்கில்லை என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. இதன்படி பார்த்தால் **Hamdard Dawakhana v. Union of India** வழக்கில் பிரச்சனைக்கு உள்ளான 1954-ஆம் ஆண்டின் மருந்துகள் மற்றும் மாயாஜால நிவாரணங்கள் (ஆட்சேபகரமான விளம்பரங்கள்) சட்டத்தின் முகப் புரையிலும், தலைப்பிலும் அதன் சட்டமியற்றுக் கொள்கை தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சட்டத்திலேயே விளம்பரம் செய்யத் தடை செய்யப்பட்ட நோய்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்நோய்களை ஒத்த வேறு நோய்களை அப்பட்டியலில் சேர்க்க மத்திய அரசிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதே தவிர, அந்நோய்களை ஒத்தவாறு இல்லாத நோய்களை அப்பட்டியலில் கொண்டு வர மத்திய அரசிற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. இதுவே ஒரு தெளிவான வழிகாட்டு நெறியாகும். இவ்வாறிருக்க இதில் ஆட்சேபணை செய்யவோ அல்லது பாராளுமன்றம் அதிகப்படியான அதிகாரங்களை மத்திய அரசிற்கு ஒப்படைவு செய்துவிட்டது என்று கூறுதற்கோ எவ்வித முகாந்திரமும் இல்லை. எனவே, மேற்படி சட்டத்தை வரம்புமீறியது என்று உச்ச நீதிமன்றம் கூறியது, **Edward Mills v. State of Ajmer** வழக்கில் இதே உச்ச நீதிமன்றம் கூறிய தீர்ப்பிற்கு மாறுபட்டதாகவும் முரண்பட்டதாகவும் உள்ளது.

சட்டமன்றம் தனது கொள்கையில் அனைத்து விபரங்களையும் 'உள்ளது உள்ளபடி' என்ற நிலையில் குறிப்பிட வேண்டுமென்ற அவசியமில்லை. சட்டமன்றம், தான் கொண்ட கொள்கையின் அடிப்படையில் புள்ளி வைத்து அதிகாரம் ஒப்படைக்கிறது. அதைக் கொண்டு, புள்ளிகளை விட்டு விலகாமல் நிருவாகத்துறையினர் கோலம் போடுவது தான், சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு. சில சமயங்களில் சில புள்ளிகளை வைக்கச் சட்டமன்றம் தவறிவிடலாம். ஆனால் அந்த இடத்தில் புள்ளி இருந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நிருவாகத் துறையினர் வரையும் கோலம் தவறாகிவிடாது. இங்கு புள்ளி என்பது சம்பந்தப்பட்ட சட்டத்தின் முகப்புரை, தலைப்பு போன்றவை. அதிலிருந்து அச்சட்டத்தின் கொள்கைகள், வழிகாட்டு நெறிகளை அறியலாம். கோலம் என்பது நிருவாகத்துறையினர் செய்யும் விதிகள், ஆணைகள், ஒழுங்கு முறைகள் போன்றவை.

Gwalior Rayon Mills v. Asstt. Commissioner of Sales Tax[14]

இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, 1956-ஆம் ஆண்டின் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (The Central Sales Tax Act, 1956) பிரிவு 8 (2) (b)-ன் கீழ், பாராளுமன்றமானது, மத்திய விற்பனை வரிக்குண்டான விகிதம் எதையும் நிர்ணயம் செய்யவில்லை. மாறாக, உரிய மாநிலங்களுக்குள் செய்யப்படும் பொருட்கள் கொள்முதல் அல்லது விற்பனையானது 10 சதவீதத்திற்கு மிகும் பொழுது, அதற்குப் பொருந்தக் கூடிய வரி விகிதத்தை அப்படியே ஏற்றுக் கொண்டது. இவ்வாறு பாராளுமன்றம் ஏற்றுக் கொள்வதால், அது தனது சட்டத்தில் எந்த சட்டமியற்றுக் கொள்கையையும் (legislatie policy) குறிப்பிடவில்லை என்பதையும், இதனால் பாராளுமன்றம் தனது சட்டமியற்றுப் பணியை துறந்துவிட்டது (abdiction of legislative function) என்பதையுமே சுட்டிக்காட்டுகிறது எனும் அடிப்படையில் மேற்படி பிரிவு மனுதாரர்களால் எதிர்க்கப்பட்டது. வரி விகிதம் எதையும்

14. A.I.R. 1974 S.C. 1660

நிர்ணயம் செய்யாமல், அதை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை நிருவாகத்துறையினருக்கு (மத்திய அரசிற்கு) அதிகார ஒப்படைவு செய்வது, அதிகப்படியான அதிகாரத்தை ஒப்படைவு செய்ததற்கு சமம் என்றும் அவர்களால் வாதிடப்பட்டது.

விற்பனை வரித் துறையினர் பின்வரும் வாதத்தை உச்ச நீதிமன்றத் தின் முன் வைத்தனர். அஃதாவது, நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு விதிகள் செய்யும் அதிகார ஒப்படைவு செய்யும் பொழுது, சட்டமன்ற மானது தனது தோற்றுவாய் சட்டத்தில் அதற்கான கொள்கைகளையோ அல்லது வழிகாட்டு நெறிகளையோ குறிப்பிட வேண்டியதில்லை. ஏனெனில், சட்டமன்றத்தால் தனது தோற்றுவாய் சட்டத்தையோ அல்லது அதிகார ஒப்படைவு செய்யும் சட்டப் பிரிவையோ நீக்கம் செய்ய முடியும் என்றால், அதுவே அந்த அதிகார ஒப்படைப்பின் மீதான போதுமான கட்டுப்பாடாகும், என்று வாதிட்டனர்.

மேற்படி வழக்கை அய்ந்து நீதிபதிகள் கொண்ட ஆயம் விசாரித்தது. முடிவில் மேற்படி சட்டம் செல்லத்தக்கதே என்ற தீர்ப்பளித்தது. ஆனால் அதற்காக அந்த நீதிபதிகளில் மூவர் கொண்ட அணுகு முறையும், இருவர் கொண்ட அணுகு முறையும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாகும்.

மூவர் கொண்ட பெரும்பான்மை நீதிபதிகளின் **(நீதிபதிகள் கண்ணா, அழகிரிசாமி மற்றும் பகவதி)** கருத்துரை வருமாறு. மேற்கண்ட பெரும்பான்மை நீதிபதிகள் விற்பனை வரித் துறையினரின் வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள், அதிகார ஒப்படைவு செய்வதற்கு சட்டமன்றமானது, தனது சட்டத்தில் அதற்கான ஒரு கொள்கையை, வழி காட்டு நெறியை, தரநிலையை குறிப்பிட வேண்டுமென்றும் வலியுறுத் தினர். மேலும், அதிகப்படியான சட்டமியற்று அதிகாரத்தை ஒப்படைப் பதற்கு எதிரான விதி, மக்களின் அளித்துள்ள இறைமை அதிகாரத் திலிருந்து எழுகிறது என்றும், மக்களின் பிரதிநிதிகளால் வெளியிடப் படும் மக்கள் விருப்பமான சட்டமியற்றுக் கொள்கைக்கு பதிலாக, நிருவாகத்துறையின் தனிப்பட்ட அலுவலர்களின், அதிகார அமைப்பு களின் கருத்துக்களை எடுத்துக் கொள்வது அனுமதிக்கத்தக்கதல்ல என்றும், வருமான வரித் துறையினரின் வாதத்தை ஏற்றுக் கொள்வது பயங்கர விளைவுகளுக்கு இட்டுச் செல்லும் என்றும் கருத்து தெரிவித்தனர். மக்கள் பிரதிநிதிகளால் மக்களின் நலனுக்கேற்ற வகையில் சட்டங்கள் சட்டமன்றத்தால் செய்யப்படுகின்றன. இதை விடுத்து, சட்டமன்றத்தின் எவ்வித வழிகாட்டுதல்களும் இல்லாமல், நிருவாகத் துறை அலுவலர் ஒருவரிடம் சட்டத்தை இயற்றும் பணி முழுவதையும் ஒப்படைத்தால், அது சட்டமியற்றும் அதிகாரத்தை அதிகப்படியாக ஒப்படைத்ததாகத்தானே பொருளாகும். மேலும், சம்பந்தப்பட்ட நிருவாகத்துறை அலுவலர் ஒருவரால் செய்யப்பட்ட சட்டத்தை பாராளுமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால், அது அச்சட்டத்தை

நீக்கம் செய்யலாம் என்று கூறுவது சரியான பதிலாகாது. எனினும் மேற்கண்ட சட்டம், மத்திய விற்பனை வரி செலுத்துவதை ஏய்ப்பதை தடுப்பதை மட்டிலும் நோக்கமாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளதால், அச்சட்டத்தில் அதிகார ஒப்படைவு செய்யும் சட்டப் பிரிவு செல்லத் தக்கதே என்று மேற்படி பெரும்பான்மை நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

இருவர் கொண்ட சிறுபான்மை நீதிபதிகளின் **(நீதிபதிகள் மாத்யூ மற்றும் ரே)** கருத்துரை வருமாறு. அஃதாவது, அதிகார ஒப்படைவு என்பதில் தன்விருப்புரிமை அதிகாரமும் உள்ளடங்கியதாகும்; ஆனால் அதிகார ஒப்படைவிற்கு வழிவகுக்கும் சட்டத்தைப் பொறுத்த இறுதியான அதிகாரம் சட்டமன்றத்திடம்தான் உள்ளது. இங்கு தடை செய்யப்பட் வேண்டியது யாதெனில், சட்டமன்றத்தின் சட்டமியற்றுப் பணித் துறப்புதான். அதாவது, அதிகார ஒப்படைவின் மீது எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்காமல், நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அதிகார ஒப்படைவு செய்தல். இவ்வாறு செய்தால், சட்டமன்றம், தான் செய்ய வேண்டிய சட்டமியற்றுப் பணியையே துறந்து, அதை முழுக்க நிருவாகத்துறை முகவர் நிலைகள் வசமே ஒப்படைவு செய்து அதனிடம் சரணாகதியாகி விட்டதாகப் பொருளாகும். ஆனால் சட்டமன்றம் தனது சட்டத்தை எந்த நிமிடத்திலும் நீக்கம் செய்துவிட்டு, தான் நிருவாகத் துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைவு செய்த அதிகாரத்தை பறித்துக் கொள்ளலாம் என்ற நிலை இருப்பின், சட்டமன்றம் தனது சட்டமியற்றுப் பணியை துறந்து விட்டதாகக் கூற முடியாது, என்று கூறினர்.

மேற்படி வழக்கிலும் பாராளுமன்றம் மேற்படி சட்டத்தை எப்பொழுது வேண்டுமானாலும் நீக்கம் செய்யலாம் என்ற நிலை உள்ளது. எனவே அது தனது சட்டமியற்றுப் பணியை துறந்துவிட வில்லை. இது ஒன்றே, தான் ஒப்படைவு செய்த அதிகாரத்தின் மீதான கட்டுப்பாடாக இயங்கப் போதுமானது. எனவே இம்மாதிரியான சூழலில் பாராளுமன்றம் தனது அதிகார ஒப்படைவிற்கு எவ்வித கொள்கைகளோ அல்லது வழிகாட்டு நெறிகளோ தனது சட்டத்தில் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை என்றும் உச்ச நீதிமன்றத்தின் மேற்படி சிறுபான்மை நீதிபதிகள் கூறி, மேற்படி சட்டத்தின் மேற்படி பிரிவு செல்லத்தக்கதே என்று தீர்ப்பளித்தனர்.

M.K.Papiah v. Excise Commissioner[15]

இவ்வழக்கில் 1966-ஆம் ஆண்டின் கர்நாடாகா கலால் சட்டத்தின் (Excise) 22-வது பிரிவு பின்வரும் ஒரு அதிகாரத்தை அரசாங்கத்திற்கு அளிக்கிறது. அதன்படி, அரசாங்கமே கலால் தீர்வையை நிர்ணயம் செய்து கொள்ள அதிகாரம் படைத்தது. மேலும், அச்சட்டத்தின் 71-வது பிரிவானது விதிகள் செய்யும் அதிகாரத்தையும் அரசாங்கத்திற்கு

15. A.I.R. 1975 S.C. 1007 : (1975) 1 SCC 492

அளிக்கிறது. ஆனால் அரசாங்கம் பிரிவு 71-ன் கீழ் செய்யும் விதிகளை இயன்ற அளவில் விரைவாக மாநில சட்டமன்றத்தின் முன் வைக்க வேண்டும். இந்த இரண்டு சட்டப் பிரிவுகளும், சட்டமியற்றும் அதிகாரத்தை அனுமதிக்கத்தகாத ஒப்படைவு (impermissible delegation of legislative power) செய்துள்ளது எனும் அடிப்படையில் மனுதாரர்களால் எதிர்த்து வழக்காடப்பட்டது.

நிருவாகத்துறையினரால் செய்யப்பட்ட விதிகளை சட்ட மன்றத்தின் முன் வைக்க வேண்டும் என்பது, ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரத்தின் மீதான போதுமான கட்டுப்பாடாகும் என்று நீதிபதி மாத்யூ உள்ளிட்ட உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கூறினர். எனினும் மனுதாரர்கள் பின்வருமாறு அடுத்து வாதிட்டனர். அஃதாவது, நிருவாகத்துறையினரால் விதிகள் செய்யப்பட்டவுடன் அவை அமலுக்கு வருகின்றன; இந்நிலையில் அவ்விதிகளை சட்டமன்றத்தின் முன் வைத்த பின்னர்தான் அது அவ்விதிகள் முறைப்படி செய்யப்பட்டுள்ளனவா என்பதை ஆராய்ந்து பார்த்து, அவ்வாறு முறைப்படியானதாக இல்லை என்றால் அவற்றை நீக்கம் செய்யவியலும். இவ்வாறு இருக்கையில், அவ்விதிகளை சட்டமன்றத்தின் முன் வைப்பது எவ்வாறு அதிகார ஒப்படைப்பின் மீதான போதுமான கட்டுப்பாடாக கருதவியலும் என்று வாதிட்டனர். ஆனால் நீதிபதிகள் இவ்வாதத்தை நிராகரித்துவிட்டு, நவீன வாழ்வுமுறையின் கட்டாயங்கள் மற்றும் சிக்கல்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும் பொழுது, மேற்கண்ட கட்டுப்பாடு போதுமான ஒன்றே என்று கூறினர்.

Kerala State Electricity Board v. Indian Aluminium Co.[16]

இவ்வழக்கில் நாம் ஏற்கனவே கண்ட **Gwalior Rayon Mills v. Asstt. Commissioner of Sales Tax** வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் பெரும்பான்மை நீதிபதிகள் கூறிய கருத்தான, அதிகார ஒப்படைவு செய்வதற்கு சட்டமன்றமானது, தனது சட்டத்தில் அதற்கான ஒரு கொள்கையை (policy), வழிகாட்டு நெறியை (guideline), தரநிலையை (standard) குறிப்பிட வேண்டும் என்பதே மீண்டும் வலியுறுத்தப்பட்டது. மேலும் சட்டமியற்றுக் கொள்கையை தீர்மானித்தலை (determination of legislative policy) உள்ளடக்கிய இன்றியமையா சட்டமியற்றும் பணியை (essential legislative function) அரசு ஒப்படைவு செய்ய முடியாது என்றும், சட்டமியற்றுக் கொள்கை, வழிகாட்டு நெறி, தரநிலை ஆகிய இவற்றை வகுத்துரைக்காமல் அதிகார ஒப்படைவு செய்வதென்பது, சட்டமன்றம் தனது இன்றியமையா சட்டமியற்றும் பணியை துறந்துவிட்டதாகப் பொருளாகும் என்றும், சட்டமன்றம் மட்டுமே செய்ய வேண்டிய இன்றியமையா சட்டமியற்றும் பணியை, அது நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அதிகார ஒப்படைவு செய்

16. A.I.R. 1976 S.C. 1031 : (1976) 1 SCC 466

தால், அது அதிகப்படியான அதிகார ஒப்படைவு (excessive delegation of power) என்ற வகையினத்தில் வந்துவிடும் என்றும், இப்படிப்பட்ட அதிகார ஒப்படைவு அனுமதிக்கப்படத்தக்கதல்ல (excessive delegation is not permissible) என்றும் கூறியது.

Punjab Tin Supply v. Central Government[17]

இவ்வழக்கில் சட்டத்தின் செயல்பாட்டிலிருந்து விலக்கி வைக்கும் அதிகாரத்தை நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு சட்டமன்றம் அளிக்கலாமென்றும், ஆனால் அதற்கு சட்டமியற்றுக் கொள்கை அச்சட்டத்தில் வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

முடிவுரை:

மேற்கண்டவாறு இன்னும் எத்தனையோ வழக்குகள்; அவற்றில் எத்தனையோ தீர்ப்புகள். ஆனால் அத்தனையும் கூறும் அடிப்படைக் கருத்து என்னவென்றால், கட்டுப்பாடில்லாத அதிகாரத்தை சட்டமன்றம் நிருவாகத் துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைவு செய்யக் கூடாது என்பதுதான். மேலும் பின்வரும் கருத்துக்களையும் பல வழக்குகளிலும் உச்ச நீதிமன்றம் திரும்பத் திரும்ப வலியுறுத்தியுள்ளது. அஃதாவது, அதிகார ஒப்படைவு செய்யும் சட்டத்தில் அதற்கான கொள்கைகளும், வழிகாட்டு நெறிகளும், தரநிலைகளும் சட்டமன்றத்தால் வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவற்றின் வரம்பிற்குட்பட்டே, நிருவாகத்துறை முகவர் நிலைகள் விதிகள், ஆணைகள், ஒழுங்குமுறைகள் ஆகியவற்றைச் செய்தல் வேண்டும். சட்டமன்றம் ஒருபோதும் தனது இன்றியமையா சட்டமியற்றும் பணியை நிருவாகத்துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைவு செய்தல் கூடாது. இன்றியமையாத சட்டப் பணி என்பது, அதிகார ஒப்படைப்பிற்கான சட்டமியற்றுக் கொள்கை, வழிகாட்டு நெறி, தரநிலைகள் ஆகியவற்றை வகுத்துக் கொடுப்பது. மேற்கண்டவை இன்றி செய்யப்படும் அதிகார ஒப்படைவு, அதிகப் படியான அதிகார ஒப்படைவாக கருதப்படும். இவை அனுமதிக்கப் படுவதில்லை.

மேலும் மேற்கண்ட வழக்குகளிலெல்லாம் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புகளைப் பார்த்தோமேயானால், நிருவாகத்துறைக்கு சட்டமியற்றுத்துறை சட்டமியற்றும் அதிகாரத்தை ஒப்படைவு செய்வது, இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கதே என்பதை பறை சாற்றுகிறது. ஆனால் ஒரு நிபந்தனை யாதெனில், நாம் மேலே கண்ட வாறு சட்டமியற்றுத்துறையே செய்ய வேண்டிய இன்றியமையா சட்ட மியற்றும் பணியை நிருவாகத்துறையிடம் ஒப்படைவு செய்யக் கூடாது என்பதுதான். இந்த அளவிற்கு சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு (அல்லது) விதியாக்கம் இந்தியாவில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

17. A.I.R. 1984 S.C. 87

13. (a) What are the advantages of Delegated Legislation?

(b) What are the leading principles laid down by the Supreme Court in the In re Delhi Laws Act case?

(அ) விதி ஆக்கத்தின் நன்மைகள் யாவை?

(ஆ) உச்ச நீதிமன்றத்தால் டெல்லி சட்டங்கள் செய் சட்டம் வழக்கில் வகுத்துரைக்கப்பட்ட முக்கிய சட்ட நெறிகள் யாவை?

(அ) வினா எண். 11-ல் காண்க.

(ஆ) வினா எண். 12-ல் காண்க.

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் வகைப்பாடு (அல்லது) அனுமதிக்கத்தக்க அதிகார ஒப்படைப்பு (அல்லது) அதிகார ஒப்படைவு செய்யாலமெனக் கூடிய பணிகள் [Classification of Delegated Legislation (or) Permissible Delegation (or) Functions which can be delegated]

14. How delegated legislation is classified? (விதியாக்கம் எவ்வாறு வகைப் படுத்தப்படுகிறது?)

(அல்லது)

What are the different types of Delegated Legislation? (பல்வேறு விதியாக்கங்கள் யாவை?)

(அல்லது)

What are all the permissible delegation? Explain. (எவையெல்லாம் அனுமதிக்கத்தக்க விதியாக்கமாகும்? விளக்குக.)

முன்னுரை:

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் அல்லது விதியாக்கத்தின் வகைப்பாட்டை, பல்வேறு நூலாசிரியர்களும் பல்வேறு அடிப்படையில் (basis) விளக்கியுள்ளனர். அவற்றைப் பின்வருமாறு காண்போமா?

விதியாக்கத்தின் வகைப்பாடு (Classification of Delegated Legislation):

1. தலைப்பின் அடிப்படையிலான வகைப்பாடு (Title Based Classification):

நிருவாகத்துறையானது தன்னிடம் ஒப்படைவு செய்யப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்தி இயற்றுபவைகளுக்கு, தோற்றுவாய் சட்டத்தில் வகுத்துரைக்கப்பட்டுள்ளபடி ஒரு தலைப்பைச்

கொடுக்கிறது. அத்தலைப்புகளின் அடிப்படையில் செய்யப்படும் விதியாக்கமே, தலைப்பின் அடிப்படையிலான விதியாக்கம் எனப் படுகிறது. அவை வருமாறு:-

(i) விதிகள் (Rules): நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் தன்மையைச் சார்ந்து, அது பின்வரும் நான்கு வகையான விதிகளைச் செய்கிறது. அவை, (அ) பொதுவான பயன்பாடு உள்ள பொது விதிகள் (General Rules); (ஆ) ஒரு குறிப்பிட்ட வகையான மக்களுக்கு அல்லது குறிப்பிட்ட நிலப்பரப்பிற்கு மட்டும் பொருந்தக் கூடிய குறிப்பிட்ட விதிகள் (Particular Rules); (இ) பொருள்களுக்கு வரையறை செய்யும் நிலைமுறை விதிகள் (Substantive Rules). எடுத்துக்காட்டாக 1939-ஆம் ஆண்டின் இந்திய பாதுகாப்புச் சட்டம்; (ஈ) நடைமுறை விதிகள் (Procedural Rules). எடுத்துக்காட்டாக 1948-ஆம் ஆண்டின் அணு சக்தி சட்டம்.

(ii) ஒழுங்குமுறைகள் (Regulations): எடுத்துக்காட்டாக அன்னிய செலாவணி ஒழுங்குமுறைச் சட்டம் (Foreign Exchange Regulation Act), அச்சட்டத்தின் வகைமுறைகளை திறன் மிகுந்த முறையில் செயல்படுத்தும் பொருட்டு தக்க ஒழுங்குமுறைகளைச் செய்ய மத்திய அரசிற்கு அதிகாரம் அளிக்கிறது.

(iii) ஆணைகள் அல்லது உத்திரவுகள் (Orders): விதிகளுக்கும் ஆணைகளுக்கும் அதிக வேறுபாடு இல்லை. நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் தன்மையைச் சார்ந்து, அது பின்வரும் இரண்டு வகையான ஆணைகளைச் செய்கிறது. அவை, (அ) பொதுவான ஆணை; (ஆ) குறிப்பிட்ட ஆணை. எடுத்துக்காட்டாக, 1955-ஆம் ஆண்டின் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் 3-வது பிரிவானது, அச்சட்டத்தின் வகைமுறைகளை சிறந்த முறையில் அமல்படுத்த, மத்திய அரசிற்கு ஆணைகள் செய்யும் அதிகாரத்தை ஒப்படைக்கிறது.

(iv) உப-விதிகள் அல்லது துணை-விதிகள் (Bye-Laws): பகுதியளவு அரசாங்க கட்டுப்பாடு உள்ள அதிகார அமைப்புகளால் (semi-governmental authorities) செய்யப்படுபவை உப-விதிகள் எனப்படும். எடுத்துக்காட்டாக, 1963-ஆம் ஆண்டின் தென்னை நார்த் தொழிற்சாலைச் சட்டம், கூட்டுறவு சங்கங்கள் சட்டம் ஆகியவற்றின் கீழ் உப-விதிகள் மேற்கண்ட அதிகார அமைப்புகளால் செய்யப்படுகின்றன.

(v) ஏவுரைகள் (Directions): ஒரு அரசுத் துறையின் உட்செயல் பாடுகளை (internal functions of a department) ஒழுங்குபடுத்து வதற்காக அத்துறையின் தலைவரால் செய்யப்படுபவை, ஏவுரைகள் எனப்படும். இவை, கட்டாயப்படுத்தக் கூடியதாகவோ (mandatory) அல்லது பரிந்துரைப்பதாகவோ (recommendatory) இருக்கலாம்.

(vi) திட்டங்கள் (Schemes): இது, சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பு ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் எவ்வாறு செயல்பட வேண்டும்

என்பதை விரிவாக விளக்கி, நிருவாகத்துறையால் செய்யப்படும் ஒரு அடிப்படைக் கட்டமைப்பாகும். இந்தக் கட்டமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் அந்த அதிகார அமைப்பு செயல்பட வேண்டும்.

2. நோக்கத்தின் அடிப்படையிலான வகைப்பாடு (Purpose Based Classification) (அல்லது) அனுமதிக்கத்தக்க அதிகார ஒப்படைப்பு (Permissible delegation) (அல்லது) அதிகார ஒப்படைவு செய்யப் படலாமெனக் கூடிய பணிகள் (Functions which can be delegated):

இவ்வகைப்பாட்டில், எந்த நோக்கத்திற்காக சட்டமியற்றும் பணி நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டதோ, அது கருத்தில் கொள்ளப்படுகிறது. இவ்வகைப்பாட்டின் கீழ் பின்வரும் முக்கியான விதியாக்கங்கள் வருகின்றன. அவை,

(i) ஒரு சட்டத்தை அமலுக்கு கொண்டு வருவதற்கான அதிகாரம் (Power to bring an Act into Operation): அனைத்து சட்டங்களின் ஆரம்பத்திலும் **"தொடங்குதலுக்கு வகை செய்யும் சட்டப் பிரிவு" (commencement clause)** ஒன்று காணப்படும். பெரும் பாலான சட்டங்களில் இப்பிரிவானது, எந்த தேதியிலிருந்து அச் சட்டம் அமலுக்கு வரத்தக்கது என்பதற்கான ஒரு நாளை நியமிப்பதற்கு அரசிற்கு (அதாவது நிருவாத்துறைக்கு) அதிகாரம் அளிக்கிறது (commencement clause empowers the government to appoint a day for the Act to come into force). இம் மாரியான தருணங்களில், சம்பந்தப்பட்ட சட்டம் எந்த தேதியிலிருந்து அமலுக்கு வரத்தக்கது என்பது அரசின் முடிவைப் பொருத்ததாகும். எடுத்துக்காட்டாக, 1961-ஆம் ஆண்டின் வழக்கறிஞர்கள் சட்டத்தின் பிரிவு 1(3)-ஆனது இந்நிலைப் பாட்டை விளக்குகிறது. அஃதாவது, "இச்சட்டம் மத்திய அரசு, அரசிதழில் வெளியிட்டு நியமிக்க லாகும் அத்தகு தேதியிலிருந்து அமலுக்கு வரத்தக்கது" என்று குறிப் பிடுகிறது. எனவே, ஒரு சட்டத்தை அமலுக்கு கொண்டு வரும் அதிகாரம் அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ii) ஒரு சட்டத்தின் ஆயுளை நீட்டிக்கும் அதிகாரம் (Power to extend the life of an Act): சில சமயங்களில் பாராளுமன்றமானது (அல்லது சட்டமன்றமானது) ஒரு சட்டத்தை இயற்றும் பொழுது, அது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத்தான் நீடித்திருக்க வேண்டும் என்று வரம்பிட்டும், அதற்குப் பின்னிட்டு அதன் ஆயுளை தேவையெனில் நீட்டிக்கும் அதிகாரத்தை நிருவாகத்துறைக்கு வழங்கியும் இயற்றும். இவ்வாறு எவ்வளவு காலத்திற்கு நீட்டிக்கலாம் மற்றும் எத்தனை முறை நீட்டிக்கலாம் என்பதற்குண்டான வகைமுறை அச்சட்டத்திலேயே (அதாவது அதிகாரம் வழங்கும் அத்தோற்றுவாய் சட்டத்திலேயே) (Parent Act) கொடுக்கப்பட்டிருக்கும். அதற்கு உட்பட்டு நிருவாகத்துறை அச்சட்டத்தின் ஆயுளை நீட்டிக்கலாம்.

(iii) ஒரு சட்டத்தை பிற நிலப்பரப்புகளுக்கும் நீட்டிக்கும்

அதிகாரம் (Power to extend the Act to other territories) : இந்த வகையில், சட்டமன்றமானது ஒரு சட்டத்தை ஒரு சில குறிப்பிட்ட நிலப் பரப்புகளுக்கு மட்டும் பொருந்தக் கூடிய வகையில் இயற்றி, அச் சட்டத்தை பிற நிலப்பரப்புகளுக்கும் நீட்டிக்கச் செய்யும் அதிகாரத்தை அரசிடம் ஒப்படைவு செய்கிறது. எடுத்துக்காட்டாக, 1882-ஆம் ஆண்டின் சொத்துரிமை மாற்றுச் சட்டம் சில குறிப்பிட்ட நிலப் பரப்புகள் தவிர, இந்தியா முழுமைக்கும் பொருந்துமாறு இயற்றப் பட்டது. ஆனால், அவ்வாறு விலக்கப்பட்ட நிலப்பரப்புகளுக்கும் பொருந்துமாறு சொத்துரிமை மாற்றுச் சட்டத்தை நீட்டிக்கச் செய்ய அரசிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(iv) உள்ளடக்கும் அதிகாரம் (Power to include): இந்த வகையில் சட்டமன்றமானது, குறிப்பிட்ட தனிநபர்கள், குறிப்பிட்ட வகுப்பினர், அமைப்புகள் அல்லது பொருட்களுக்கு பொருந்துமாறு சட்டத்தை இயற்றிவிட்டு, அச்சட்டத்தின் வரம்பிற்குள் வேறு வகைப் பட்ட தனிநபர்கள், வகுப்பினர், அமைப்புகள் அல்லது பொருட்களையும் உள்ளடக்கும் அதிகாரத்தை அரசிடம் ஒப்படைக்கிறது. எடுத்துக் காட்டாக, குறைந்தபட்ச ஊதியச் சட்டம் பொருந்தும் தொழிற் சாலைகளின் பெயர்கள் அடங்கிய ஒரு பட்டியலானது அச்சட்டத்தின் அட்டவணைப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. அப்பட்டியலில் வேறு எந்த தொழிற்சாலையையும் மேலும் சேர்க்க அச்சட்டத்தின் 27-வது பிரிவானது, மத்திய அரசிற்கு அதிகாரம் அளிக்கிறது.

(v) விலக்கிவைக்கும் அதிகாரம் (Power to exclude): சில சட்டங்கள் அதன் செயல்பாட்டிலிருந்து குறிப்பிட்ட சில நபர்களை, வகுப்பிரை, அமைப்புகளை, நிலப்பரப்புகளை, பொருட்களை விலக்கி வைக்க அரசுக்கு அதிகாரம் வழங்குவதுண்டு. எடுத்துக்காட்டாக, 1965-ஆம் ஆண்டின் போனஸ் வழங்கல் சட்டத்தின் (The Payment of Bonus Act) 30-வது பிரிவானது, அதன் செயல்பாட்டிலிருந்து எந்த ஒரு ஸ்தாபனத்தையும் விலக்கி வைக்க அரசிற்கு அதிகாரம் அளித்துள்ளது.

(vi) பிற மாநிலங்களிலிருந்து சட்டங்களை ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் (Power to adopt laws from other States): இந்த வகையில், நிருவாகத்துறையானது பிற மாநிலங்களில் அமலில் உள்ள சட்டங்களை தனதாக ஏற்றுக் கொள்ள அரசிற்கு அதிகாரம் அளிக்கிறது.

(vii) விபரங்களைப் பூர்த்தி செய்து கொள்ளும் அதிகாரம் (Power to fill in details): இந்த வகை விதியாக்கம் மிகவும் பரவலாக நடைமுறையில் இருப்பதாகும். இங்கு சட்டமன்றமானது அடிப்படைக் கட்டமைப்பின் (frame work) வடிவில் சட்டங்களை இயற்றி, அதில் அச்சட்டத்தின் கொள்கை மற்றும் நோக்கத்திற்கேற்ப தகுந்த விபரங்களை பூர்த்தி செய்து கொள்ளும் அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைக் கிறது. அதாவது சட்டமன்றம் எலும்புக்கூடு வடிவில் சட்டங்களை

இயற்றுகிறது. அதில் நிருவாகத்துறை இரத்தம் மற்றும் சதை இட்டு உருப்படுத்துகின்றது. இவ்வாறு அதிகாரம் அளிக்கும் அளிக்கும் சட்டங்கள் பெரும்பாலும் மிகக் குறுகிய சட்டங்களாகவே உள்ளன. ஆனால் அதனடிப்படையில் நிருவாகத்துறை செய்யும் விதிகளும், ஆணைகளும் மிக அதிகமாக உள்ளன. எடுத்துக்காட்டாக, 1947-ஆம் ஆண்டின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (ஒழுங்குமுறைச்) சட்டத்தில் மொத்தம் 8 சட்டப்பிரிவுகளே உள்ளன. ஆனால் அவற்றின் கீழ் மேற்கண்ட அதிகார ஒப்படைப்பை பயன்படுத்தி, நிருவாகத்துறை செய்த விதிகளும் ஆணைகளும் கணக்கிலடங்கா.

(viii) தண்டனைகளை வகுத்துரைக்கும் அதிகாரம் (Power to prescribe punishments): இந்த வகையில் சட்டமன்றமானது முழுமையான வடிவில் சட்டங்களை இயற்றுகிறது. ஆனால் அதன் மீறுகைக்குண்டான தண்டனைகளின் அளவுகளை நிர்ணயிக்கும் அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கிறது. ஆனால் இந்த அளவு, அதற்கு அதிகாரமளிக்கும் தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் உச்ச அளவிற்கு மிகாமால் இருக்க வேண்டும். அந்த உச்ச அளவை மீறி, ஒரு தண்டனையின் அளவை நிருவாகத்துறை நிர்ணயித்து விதிகள் செய்தால், அது அதிகப்படியான அதிகார ஒப்படைப்பு (excessive delegation) என்பதின் அடிப்படையில் செல்லாத ஒன்றாகிவிடும்.

(ix) மாற்றும் அதிகாரம் (Power to modify): சில சட்டங்கள், அச்சட்டங்களை அமல்படுத்துவதற்கு முன்பு, அவற்றில் உடன் விளைவான (incidental) மாற்றங்களை செய்ய அரசுக்கு அதிகாரம் அளிக்கும். ஆனால், இவ்வாறு நிருவாகத்துறை மாற்றுவது அச்சட்டத்தின் கொள்கையையே மாற்றுமளவிற்கு இருத்தல் கூடாது. மேற்கண்ட அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்குண்டான தெளிவான வரம்புகளை சட்டமன்றம் தனது தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிட்டிருந்தால்தான், இவ்வகையான விதியாக்கம் செல்லும்.

(x) இடர்பாடுகளை களையும் அதிகாரம் (Power regarding removal of difficulties): சில சமயங்களில் சட்டத்திற்கு செயல்விளைவு கொடுப்பதில் ஏற்படும் இடர்பாடுகளை களையும் பொருட்டு அச் சட்டத்தின் ஒரு சட்டப் பிரிவின் வாயிலாக நிருவாகத்துறைக்கு அதிகாரமளிக்கப்படும். இந்த அதிகாரத்தின்படி நிருவாகத்துறையால் செய்யப்படும் விதிகள், அதற்கு அதிகாரம் வழங்கும் தோற்றுவாய் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரண்பாடுடையதாக இருத்தல் கூடாது. எடுத்துக்காட்டாக, 1993-ஆம் ஆண்டின் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (The Protection of Human Rights Act) 42-வது பிரிவானது பின்வருமாறு கூறுகிறது. அஃதாவது, "இந்த சட்டத்தின் வகைமுறை களுக்கு செயல்விளைவு கொடுப்பதில் இடர்பர்டுகள் ஏதேனும் எழுந் தால், மத்திய அரசானது, அரசிதழில் வெளி யிடப்பட்ட உத்திரவு மூலம், இடர்பாடுகளைக் களைய தனக்கு அவசியமென அல்லது அவசரமெனத்

தோன்றக் கூடியதும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுடன் முரண்படாததுமான அத்தகு வகை முறைகளை இயற்றலாம்", என்று கூறுகிறது.

மேற்கண்ட 10 தலைப்புகளின் கீழ் நாம் இதுகாறும் கண்ட விதியாக்கங்களை **"அனுமதிக்கத்தக்க அதிகார ஒப்படைப்பு" (Permissible Delegation)** என்றும், **"அதிகார ஒப்படைவு செய்யத்தக்க பணிகள்" (Functions which can be delegated)** என்றும் அழைக்கலாம்.

3. தன்விருப்புரிமையின் அடிப்படையிலான வகைப்பாடு (Discretion Based Classification):

இந்த வகைப்பாடானது, **சார்பு விதியாக்கம் (Subordinate delegation)** என்றும், **வருநிலை அல்லது நிபந்தனை விதியாக்கம் (Contingent or Conditional delegation)** என்றும் இரு வகைகளாகப் பிரிக்கப் படுகிறது.

முதல் வகையின்படி, சட்டமியற்றுத் துறை, நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரம் அளிக்கிறது. இவ் வகையான அதிகாரம் பொதுவாக அனைத்து விதியாக்கங்களின் அடிப்படையாக உள்ளது.

இரண்டாவது வகையின்படி, சட்டமியற்றுத்துறை நிருவாகத் துறை முகவர் நிலைகளுக்கு அதிகாரம் ஒப்படைக்கும் சட்டங்களை இயற்றுகிறது. ஆனால் அதில் சில நிபந்தனைகளை விதிக்கிறது. இந் நிபந்தனைகளுக்கு உட்பட்டே நிருவாகத்துறையானது விதியாக்கம் செய்தல் வேண்டும்.

4. அதிகாரத்தின் அடிப்படையிலான வகைப்பாடு (Authorituy Based Classification):

இந்த வகைப்பாட்டின் கீழ் விதியாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பட்டுள்ள நிருவாகத்துறை முகவர் நிலையானது, தனது விதியாக்கம் செய்யும் அதிகாரத்தை தனக்கு கீழ் அமைந்துள்ள மற்றொரு நிருவாகத் துறை முகவர் நிலையிடம் ஒப்படைத்து, அம்முகவர் நிலை விதியாக்கம் செய்தலாகும். இதனை **துணைமை விதியாக்கம் (Sub-delegated legislation)** என்றும் அழைப்பர்.

5. தன்மையின் அடிப்படையிலான வகைப்பாடு (Nature Based Classification):

இந்த வகைப்பாடானது, நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அளிக்கப்படும் அதிகாரத்தின் தன்மை மற்றும் பரவெல்லையைப் பொறுத்து அமைகிறது. இது **இயல்பான விதியாக்கம் (Normal Delegation)** மற்றும் **விதிவிலக்கான விதியாக்கம் (Exceptional Delegation)** என்று இரு வகைப்படும்.


விதியாக்கத்தின் வகைப்பாடுகள் (Classifications of Delegated Legislation)
தலைப்பின் அடிப்படையில்
நோக்கத்தின் அடிப்படையில்
தன்விருப்புரிமையின் அடிப்படையில்
அதிகாரத்தின் அடிப்படையில்
தன்மையின் அடிப்படையில்
1. விதிகள்
2. ஒழுங்குமுறைகள்
3. ஆணைகள்
4. உப-விதிகள்
5. ஏவுரைகள்
6. திட்டங்கள்
1. சார்பு விதியாக்கம்
2. வருநிலை அல்லது நிபந்தனை விதியாக்கம்
இயல்பான விதியாக்கம்
விதிவிலக்கான விதியாக்கம்
1. நேர்மறை விதியாக்கம்
2. எதிர்மறை விதியாக்கம்
1. ஒரு சட்டத்தை அமலுக்கு கொண்டு வருவதற்கான அதிகாரம்
2. ஒரு சட்டத்தின் ஆயுளை நீட்டிக்கும் அதிகாரம்
3. ஒரு சட்டத்தை பிற நிலப்பரப்புகளுக்கும் நீட்டிக்கும் அதிகாரம்
4. உள்ளடக்கும் அதிகாரம்
5. விலக்கிவைக்கும் அதிகாரம்
6. பிற மாநிலங்களிலிருந்து சட்டங்களை ஏற்றுக் கொள்ளும் அதிகாரம்
7. விபரங்களைப் பூர்த்தி செய்து கொள்ளும் அதிகாரம்
8. தண்டனைகளை வகுத்துரைக்கும் அதிகாரம்
9. மாற்றும் அதிகாரம்
10. இடர்பாடுகளை களையும் அதிகாரம்

இயல்பான விதியாக்கமானது **நேர்மறை விதியாக்கம் (Positive Delegation)** என்றும், **எதிர்மறை விதியாக்கம் (Negative Delegation)** என்றும் மேலும் இரண்டாகப் பிரித்துக் கூறப்படுகிறது. நேர்மறை விதியாக்கத்தில், ஒப்படைவு செய்யப்படும் அதிகாரத்தின் வரம்புகள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கும். எதிர்மறையான விதியாக்கத்தில், ஒப்படைவு செய்யப்படும் அதிகாரத்தில் சில செயல்களைச் செய்யும் அதிகாரம் உள்ளடங்காது.

விதிவிலக்கான விதியாக்கத்தில், நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு வழக்கம் போல் விதிகள் செய்யும் அதிகாரம் அளிக்கப்படுகிறது. ஆனால் அத்துடன் சட்ட வகைமுறைகளைத் திருத்தும் மற்றும் நீக்கும் அதிகாரமும் அளிக்கப்படுகிறது.

இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரம் (அல்லது) அனுமதிக்கத்தகாத அதிகார ஒப்படைப்பு (அல்லது) அதிகார ஒப்படைவு செய்ய முடியாத பணிகள் [Essential Legislative Function (or) Impermissible Delegation (or) Functions which cannot be delegated]

15. What is meant by 'Essential legislative function'? In the light of decided cases examine how far it is used as a yardstick to determine the permissible limits of delegated legislation in India. (இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரம் என்றால் என்ன? அது இந்தியாவில் விதியாக்கத்தின் அனுமதிக்கத்தக்க வரையறையை நிர்ணயிப்பதில் எந்த அளவிற்கு ஓர் அளவுகோலாக பயன்படுகிறது என்பதை வழக்குத் தீர்ப்புகளின் துணையோடு ஆராய்க.)

(அல்லது)

Distinquish between essential legislative function and non-essential legislative function. In the light of decided cases discuss how far the "Policy and guidence" test is effective in deciding the permissible limits of delegated legislation. (இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரத்தை இன்றியமையாத தன்மையற்ற சட்டமியற்றும் அதிகாரத்திலிருந்து வேறுபடுத்துக. விதியாக்கத்தின் அனுமதிக்கத்தக்க வரையறையை நிர்ணயம் செய்வதில் "நெறிகளும் பின்பற்ற வேண்டிய வழி முறைகளும்" என்பதை வழக்குத் தீர்ப்புகளின் துணையோடு விவாதிக்க.)

(அல்லது)

What are all the impermissible delegation? Explain. (எவையெல்லாம்

அனுமதிக்கத்தகாத விதியாக்கமாகும்? விளக்குக.)

இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரம் (அல்லது பணி) (Essential legislative function) - வரையறை:

'இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரம்' எனும் பதத்தை வரையறுப்பது சற்று கடினமே. எனினும் இப்பதத்தை வரையறுக்காமல் நிருவாகமுறைச் சட்டத்தை ஆய்வு செய்வது விழலுக்கு இறைத்த நீர் போல் வீணாகும். ஏனெனில் இப்பதம் சட்டமியற்றும் அதிகாரத்தை நிருவாகத்துறைக்கு ஒப்படைப்பதின் மீதான வரம்பை நிர்ணயித்துக் காட்டுகிறது. நிருவாகத்துறையின் விதியாக்கம் அனுமதிக்கத்தக்கதா என்பதே, இந்த அதிகாரத்தைப் பொறுத்துதான் என்று கூட சொல்லாம். இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரத்தை சட்டமன்றமானது, நிருவாகத்துறை அல்லது நிருவாகத்துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைக்கக் கூடாது; அப்படி ஒப்படைத்தால் சட்டமன்றத்திற்கே உரிய பணியான அடிப்படை சட்டமியற்றும் பணியையும் நிருவாகத் துறையிடம் ஒப்படைத்ததற்கு சமமாகிவிடும். பின்பு நிருவாகத்துறையும் ஒரு சட்டமன்றமாகிவிடும் அபாயம் உள்ளது, என்று பல வழக்குகளிலும் இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

ஆனால் உச்ச நீதிமன்றமானது இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரத்திற்குண்டான பொதுக் கருத்தை விளக்கும் வகையிலோ அல்லது அதை எவ்வாறு தீர்மானிப்பது என்பதற்குண்டான விளக்கத்தை தரும் வகையிலோ அறுதியான ஒரு கொள்கையை இதுகாறும் வகுத்துரைத்துக் கூறவில்லை. ஆனால் பல தனிப்பட்ட வழக்குகளில் சில செயல்பாடுகளை இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரமாக அல்லது பணியாக குறிப்பிட்டு தீர்ப்பளித்துள்ளது. இதனை சுருக்கமாக வரையறுக்க வேண்டுமெனில், ஒரு சட்டத்தின் கொள்கையை மற்றும் நோக்கத்தை அச்சட்டத்தில் சட்டமன்றம் வகுத்துரைப்பதாகும் (laying of the policy and object of the Act by the legislature). எனினும் இதில் மேலும் பல விஷயங்களும் உள்ளடங்கும். பின்வரும் அதிகாரங்கள் அல்லது பணிகள் இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரங்களாக பல வழக்குகளில் இந்திய நீதித்துறையால் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரம் குறித்து கூறிய தீர்ப்புகளின் அடிப்படையில்தான் இந்தியாவில் விதியாக்கத்தின் அனுமதிக்கத்தக்க வரைறையும் நிர்ணயிக்கப்படுகிறது என்று சொன்னால் அது மிகையன்று. இந்நிலைப்பாட்டை பின் வருமாறு காண்போமா?

இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரம் இந்தியாவில் விதியாக்கத்தின் அனுமதிக்கத்தக்க வரையறையை நிர்ணயிப்பதில் எந்த அளவிற்கு ஒரு அளவுகோலாக பயனாகிறது? (அல்லது) அனுமதிக்கத்தகாத அதிகார ஒப்படைப்பு (Impermissible Delegation) (அல்லது) அதிகார ஒப்படைவு செய்ய முடியாத பணிகள் (Functions which cannot be delegated):

இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரத்தை பின்வரும் தலைப்புகளில் காணலாம். இந்த செயல்பாடுகளெல்லாம், இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரங்களாக இந்திய உச்ச நீதிமன்றத்தால் நிலை நிறுத்தப்பட்டனவாகும். இந்த அதிகாரங்களை நிருவாகத்துறையிடம் சட்டமன்றம் ஒப்படைத்தால், அது **'அனுமதிக்கத்தகாத அதிகார ஒப்படைப்பு (அல்லது விதியாக்கம்)' (Impermissible Delegation)** என்று கூறப்படும்.

1. ஒரு சட்டத்தின் கொள்கை மற்றும் நோக்கத்தை அச் சட்டத்தில் வகுத்துரைப்பது (Laying of Policy and Object of the Act): ஒரு சட்டம் எதற்காக இயற்றப்படுகிறது, எக்குறிக்கோள்களை அடைவதற்காக இயற்றப்படுகிறது என்பதற்குண்டான விளக்கங்களை அச்சட்டத்தின் கொள்கை மற்றும் நோக்கம் எனக் கொள்ளலாம். இவற்றை அச்சட்டத்தை இயற்றும் சட்டமன்றமே, அச்சட்டத்தில் வகுத்துரைக்க வேண்டும். இது சட்டமன்றம் மட்டுமே செய்ய வேண்டிய பணியாகையால், இது ஒரு இன்றியமையாத சட்டமியற்றும் அதிகார மாகும். எனவே, ஒரு சட்டத்தின் கொள்கை மற்றும் நோக்கத்தை வகுத்துரைக்கும் அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கக் கூடாது. அவ்வாறு ஒப்படைத்தால், அது அனுமதிக்கத்தக்கதல்ல. மேலும் அதனடிப்படையிலான விதியாக்கம் செல்லாத ஒன்றாகிவிடும்.

2. சட்டத்தை நீக்குதல் (Repeal of law): In Re Delhi Laws Act[18] - வழக்கிலும், **Makhan Singh v. State of Punjab**[19] - வழக்கிலும் ஒரு சட்டத்தை நீக்கும் அதிகாரம், சட்டமன்றத்தின் இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரமாகும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. எனவே, இந்த அதிகாரத்தை சட்டமன்றம், நிருவாகத் துறையிடம் ஒப்படைக்கக் கூடாது. சட்டமன்றம் ஒரு சட்டத்தை இயற்றி அதன் மூலமாகத்தான் ஒரு சட்டத்தை நீக்க வேண்டுமே தவிர, அதனை நீக்கும் அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைத்து விடக் கூடாது. மீறி ஒப்படைத்தால், அது அதிகப்படியாக அதிகார ஒப்படைப்பாகி (excessive delegation), வரம்புமீறியதாகிவிடும் (ultravires).

3. சட்டத்தை மாற்றுதல் (Modification of law): ஒரு சட்டத்தில் மாறுதல்கள் செய்யும் அதிகாரம், சட்டமன்றத்தின் இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரங்களில் முக்கியமான ஒன்றாகும். எனவே, இந்த அதிகாரத்தின் மீது தகுந்த வரம்புகளை விதிக்காமல் நிருவாகத் துறையிடம் ஒப்படைப்பது அனுமதிக்கத்தக்கதல்ல.

In Re Delhi Laws Act[20] - எனும் வழக்கில் சட்டத்தை நிலைமைக்

18. A.I.R. 1951 S.C. 332.
19. A.I.R. 1964 S.C. 381.
20. Ibid foot notes 18.

கேற்ப மாற்றியமைத்து விஸ்தரிக்கும் அதிகாரம் நிருவாகத்துறைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் சட்டத்தைப் பொதுவாக நிலைமைக்கேற்ப மாற்றியமைத்து மற்ற இடங்களுக்கு விஸ்தரிக்கும் அதிகாரம் வழங்கப்படலாமென்றும், ஆனால் சட்டத்தின் இன்றியமையாத தனிச் சிறப்பியல்புகளை (Essential features) மாற்றியமைத்து விஸ்தரிக்கும் அதிகாரத்தை நிருவாத்துறைக்கு வழங்க லாகாதென்றும் கருத்துத் தெரிவித்தது.

4. சட்டத்தை திருத்துதல் (Amendment of law): சட்டத்தில் மாற்றங்கள் செய்தலுக்கும், சட்டத்தில் திருத்தங்கள் செய்தலுக்கும் பெரிய அளவில் வேறுபாடுகள் ஒன்றும் இல்லை. ஒரு சட்டத்தை திருத்துதல், சட்டமன்றத்தின் இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரங்களில் அதிமுக்கியமானதாகும். எனவே, இந்த அதிகாரத்தை நிருவாத்துறையிடம் ஒப்படைக்கக் கூடாது.

5. விதிவிலக்களித்தல் (Exemption): ஒரு சட்டத்தின் செயல் பாட்டிலிருந்து ஒரு சில தனிப்பட்ட நபர்களை, வகுப்பினரை, நிலப் பரப்பை, பொருள்களை விலக்கி வைத்தல், விதிவிலக்களித்தல் எனப் படும். இதுவும் ஒரு இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரமே. சட்டமன்றம் இந்த அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கக் கூடாது. எனினும் அவ்வாறு ஒப்படைக்க வேண்டுமெனில், விதி விலக்களிக்கும் அதிகாரத்தை நிருவாகத்துறை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதற்கான வழிகாட்டு நெறிகள் மற்றும் தரநிலைகளை அச்சட்டத்தில் சட்டமன்றம் வகுத்துரைக்க வேண்டும்.

6. இடர்பாடுகளைக் களைதல் (Removal of difficulties): ஒரு சட்டத்தை செயற்படுத்துவதில் ஏற்படும் இடர்பாடுகளைக் களைவதற் காக விதியாக்கம் செய்வதற்கு நிருவாகத்துறைக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது. ஆனால் இதைக் காரணமாகக் கொண்டு சட்டமன்றமானது **ஹென்றி VIII கூறை (Henry VIII clause)** இயற்றி, அதன் மூலம் இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைத்துவிட முடியாது.

7. சட்டத்தின் முன்மேவும் தன்மையுடைய செயற்பாடு (அல்லது) முன்மேவு அதிகாரம் (Retrospective operation): ஒரு சட்டத்திற்கு இரண்டு விதமான செயற்பாடுகளை சட்டமன்றம் அளிக்க லாம். அவை **வருமேவு (Prospective)** மற்றும் **முன்மேவு (Retrospective)** செயற்பாடுகளாகும். வருமேவு செயற்பாடு என்பது, ஒரு சட்டம் இயற்றப்பட்ட தேதியிலிருந்து, அது அமலுக்கு வரும் தன்மையுடைய தாக இயற்றுவது. அதாவது அதற்குப் பின்னிட்டு நிகழும் செயற்பாடு களுக்குத்தான் அச்சட்டம் பொருந்தும். ஆனால் ஒரு சட்டம் இயற்றப் பட்ட தேதிக்கு முந்தய தேதியிலிருந்து அது அமலுக்கு வரத்தக்கதாக இருப்பின், அச்சட்டம் முன்மேவு செயற்பாடுடையதாகும். இந்த இரண்டு வகையான செயற்பாடுகளில், ஒரு சட்டத்திற்கு முன்மேவு செயற்பாடு

கொடுத்து சட்டமியற்றுவது, சட்டமன்றத்திற்கே உரிய இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரமாகும். எனவே, இந்த அதிகாரத்தை, நிருவாகத் துறையிடம் ஒப்படைக்கக் கூடாது.

8. எதிர்காலச் சட்டங்களை ஏற்றுக்கொள்ளுதல் (Adopting future Acts): நிருவாகத்துறையானது, பிற மாநிலங்களில் நிலவும் சட்டங்களை ஏற்றுக் கொள்ளவும், அவற்றை தமக்கு பொருந்துமாறு செய்து கொள்ளவும் சட்டமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், எதிர்காலத்தில் இயற்றப்பட உள்ள சட்டங்களை ஏற்றுக் கொள்ள நிருவாகத்துறைக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. ஏனெனில், எதிர்காலச் சட்டங்களை ஏற்றுக் கொள்வது, சட்டமன்றத்திற்கே உரிய இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரமாகும்.

9. நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை நீக்குதல் (Ouster of jurisdiction of courts): நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை நீக்கும் அதிகாரத்தை சட்டமன்றம், நிருவாகத்துறையிடம் ஒப்படைக்க முடியாது. ஏனெனில் இது முழுக்க முழுக்க சட்டமன்றத்திற்கே உரிய இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரமாகும்.

10. குற்றங்களையும் தண்டனைகளையும் வரையறுத்தல் (Defining offences and punishments): ஒரு செயலை அல்லது செயல் தவிர்க்கையை குற்றமென வரையறுத்துக் கூறுவதும், அதற்கான தண்டனையை வரையறுப்பதும் சட்டமன்றத்தின் இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரமாகும். எனவே இதை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்க முடியாது. எனினும், ஒரு செயலை குற்றமாக வரையறுப்பதற்கு நிருவாகத்துறை பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிகளையும், கொள்கைகளையும் சட்டமன்றம் அச்சட்டத்தில் வகுத்துரைத்தும், அதற்குண்டான தண்டனையின் மீதான வரம்புகளை நிர்ணயித்தும் அதிகாரத்தை நிருவாகத்துறைக்கு ஒப்படைத்திருப்பின், அது அனுமதிக்கத்தக்க அதிகார ஒப்படைவேயாகும்.

11. வரிவிதித்தல் (Imposition of Tax): வரிவிதிக்கும் அதிகாரம் சட்டமன்றத்தின் இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரமாகும். எனவே, சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின் வாயிலாகத் தான், வரி விதிக்கப்பட வேண்டுமே தவிர, வேறு வகையில் விதித்தல் கூடாது என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 265-வது ஷரத்து வலியுறுத்துகிறது. இங்கு 'சட்டம்' என்பது சட்டமன்றத்தால் (பாராளுமன்றத்தால்) இயற்றப்பட்ட ஒரு சட்டத்தைக் குறிக்கிறதே தவிர, அதிகார ஒப்படைவின் மூலமாக நிருவாகத்துறையால் செய்யப்படும் ஒரு விதியைக் குறிப்பிடவில்லை. எனவே, வரிவிதிக்கும் அதிகாரத்தை நிருவாகத் துறையிடம் ஒப்படைத்தல் கூடாது. எனினும் இது சில விதிவிலக்குகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது. (அவற்றை அடுத்த வினாவில் விரிவாகக் காண்க.)

இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரம் மற்றும் இன்றியமையாத தன்மையற்ற சட்டமியற்றும் அதிகாரம் - வேறுபாடு (Distinction between the Essential legislative function and Non-essential legislative function):

1. எந்த அதிகாரத்தை சட்டமன்றம், நிருவாகத்துறையிடம் ஒப்படைத்து அதன் மூலம் விதிகள், ஒழுங்குமுறைகள், ஆணைகள் போன்றவற்றை செய்யக் கூடாதோ, அந்த அதிகாரமே, இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரம் எனப்படுகிறது. அதுபோல் எந்த அதிகாரத்தை சட்டமன்றம், நிருவாகத்துறையிடம் ஒப்படைத்து அதன் மூலம் விதிகள், ஒழுங்குமுறைகள் போன்றவற்றை செய்ய முடியுமோ அந்த அதிகாரமே இன்றியமையாத தன்மையற்ற சட்டமியற்றும் அதிகாரம் எனப்படுகிறது.

2. இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரம் என்பது, சட்ட மன்றமானது தான் இயற்றும் ஒரு சட்டத்தின் கொள்கை மற்றும் நோக்கத்தை அச்சட்டத்தில் வரையறுப்பதாகும். இந்தப் பணியை சட்டமன்றம் மட்டுமே செய்தல் வேண்டும். இந்த அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் சட்டமன்றம் ஒப்படைக்கக் கூடாது. ஆனால், மேற்கண்ட கொள்கை மற்றும் நோக்கத்தின் அடிப்படையில் விதிகளைச் செய்ய நிருவாகத்துறையிடம் சட்டமன்றத்தால் ஒப்படைக்கப்படும் அதிகாரம், இன்றியமையாத தன்மையற்ற சட்டமியற்றும் அதிகார மாகும்.

3. இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரத்தை நிருவாகத் துறையிடம் ஒப்படைத்தால், அது அதிகப்படியான அதிகார ஒப்படைப் பாகக் கருதப்பட்டு (excessive delegation), செல்லாததாகிவிடும். ஆனால் இன்றியமையாத தன்மையற்ற சட்டமியற்றும் அதிகாரமானது, நிருவாகத் துறையிடம் ஒப்படைவு செய்வதற்கென்றே உள்ள அதிகாரமாகும். எனவே, இங்கு அதிகார ஒப்படைவு செல்லும். ஆனால் இதற்கென சட்டமன்றத்தால் வகுத்துரைக்கப்படும் வழிகாட்டு நெறிகள் மற்றும் தரநிலைகளுக்குட்பட்டே நிருவாகத்துறை தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும்.

வரி விதிக்கும் அதிகாரத்தை ஒப்படைக்கலாமா? [Can the Power to impose Tax be Delegated?]

16. What is delegated legislation? To what extent is it permitted in India? (சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு என்றால் என்ன? எந்த அளவிற்கு அது இந்தியாவில் அனுமதிக்கப்பட்டுள்ளது?)

(அல்லது)

What is the extent of permissible delegation of legislative power?

Discuss with the aid of cases. (சட்ட விதியாக்க அதிகார ஒப்படைவு எவ்வளவு இருக்கலாம்? வழக்குகள் உதவியுடன் விவாதி.)

(அல்லது)

How far delegation of legislative power is permissible in India? Can power to impose tax be delegated? (இந்தியாவில் விதியாக்க அதிகார அளிப்படைவு எந்த அளவிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது? வரி நிர்ணய அதிகாரம் அளிப்படைவு செய்யப்படலாமா?)

சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு (Delegation of Legislative Power) (அல்லது) விதியாக்கம் (Delegated Legislation) - விளக்கம்:

(வினா எண். 10-ன் விடையின் தொடக்கத்தில் காண்க.)

இந்தியாவில் சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு அனுமதிக்கப்பட்டுள்ள அளவு (The extent of delegation of legislative power permitted in India):

(வினா எண். 12-ன் விடையின் கீழ் இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பு இருந்த மற்றும் அதற்கு பின்பு இருக்கின்ற சட்டமியற்றும் அதிகார ஒப்படைவை சற்று சுருக்கமாக விளக்கிவிட்டு, வினா எண். 14-ன் விடையில் 2-வது பெருந்தலைப்பின் கீழான 10 அனுமதிக்கத்தக்க சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்புகளை தேர்வில் விவரிக்கவும்.)

வரி விதிப்பு (அல்லது) வரி நிர்ணய அதிகாரத்தை ஒப்படைக்கலாமா? (Can the power to impose tax be delegated?)

பொது விதி:

சனநாயக அரசில் வரிவிதிப்பு அதிகாரம் மிக முக்கியமான அதிகாரமாகும். இந்த அதிகாரம் சட்டமன்றங்களுக்கே உரியது. **சட்டத்தின்** மூலமாகத் தவிர, வேறு வழிகளில் வரிவிதிக்கவோ அல்லது வரி வசூலிக்கவோ கூடாதென இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 265-வது ஷரத்து கூறுகின்றது. இங்கு 'சட்டம்' என்று பதம் சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தைக் குறிக்கிறது. அதிகார ஒப்படைவின் மூலம் நிருவாகத்துறை செய்யும் விதிகளை அல்ல. எனவே, இது சட்டமன்றத் திற்கே உரிய இன்றியமையாத சட்டமியற்றும் அதிகார மாகும். இதனால் நாம் முன்னரே விளக்கமாக கண்டுள்ளவாறு, இன்றியமையாத இந்த சட்டமியற்று அதிகாரமான வரி வதிக்கும் அதிகாரத்தை நிருவாகத் துறையிடம் ஒப்படைக்கக் கூடாது. இது ஒரு பொது விதியாகும்.

விதிவிலக்கு:

மேற்கண்டவாறு பொது விதி இருந்தாலும், நடைமுறையில் இவ்விதி சற்றே தளர்த்தப்பட்டு, நிருவாகத்துறைக்கும் வரி விதிக்கும்

அளிக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது. அதாவது ஒப்படைக்கப் படுகிறது. எடுத்துக்காட்டாக நாம் பின்வரும் சில முக்கிய வழக்குகளையும், அவற்றில் கூறப்பட்ட கொள்கைகளையும் சுட்டிக் காட்டலாம்.

முக்கிய வழக்குகள்:

Orient Weaving Mills v. Union of India [21]- இவ்வழக்கில் கலால் தீர்வையிலிருந்து (Excise Duty) சில பொருட்களுக்கு முழுவது மாகவோ அல்லது பகுதியாகவோ விலக்கு அளிக்க மத்திய அரசிற்கு, சம்பந்தப்பட்ட சட்டத்தின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், அவ்வதிகாரத்தை மத்திய அரசிற்கு அளிக்கலாம் என்றும், அது அதிக அதிகார ஒப்படைவு (excessive delegation) என்று கொள்ள முடியாது என்றும் தீர்ப்பளித்தது.

Banarasidas v. State of M.P.[22] - இவ்வழக்கில் மத்திய அரசு அதிகார ஒப்படைவு மூலமாக விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் சில பொருட்களைக் கொண்டு வந்தது. இவ்வாறு செய்தது, அதிக அதிகார ஒப்படைவு (excessive delegation) அல்ல என்றும், எனவே செல்லத் தக்க அதிகார ஒப்படைவே என்றும் தீர்ப்பளித்தது.

Banglore W.C.Mills v. Banglore Corporation[23] - இவ்வழக்கில் பெங்களூர் மாநகராட்சிக்கு, மாநகராட்சி எல்லைக்குள் கொண்டு வரப்படும் பொருட்களுக்கு சுங்க வரி (Octroi Duty) விதிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. சுங்க வரியில் புதிதாக பொருட்களைச் சேர்க்கும் அதிகாரமும் அளிக்கப்பட்டிருந்தது. உச்ச நீதிமன்றம் இந்த அதிகார ஒப்படைவை முறையானதென ஏற்றுக் கொண்டது.

Devidas v. State of Punjab[24] - சில சமயங்களில் சட்டமன்றம் வரியை விதித்துவிட்டு, வரி வீதத்தின் அளவை (rate of tax) நிர்ணயிக்கும் அதிகாரத்தை நிருவாகத்துறைக்கும் அதன் முகவர் நிலைகளுக்கும் அளிக்கிறது. இவ்வாறு அதிகார ஒப்படைவு செய்யலாமா என்ற வினா மேற்படி வழக்கில் எழுந்தது. மேற்படி வழக்கில் மத்திய அரசிற்கு இரண்டு சதவீதத்திற்கு மேற்படாத வகையில் வரி வீதத்தின் அளவை நிர்ணயிக்கும் அதிகாரமும், மற்றும் சில பொருட்கள் மீது அதிகபட்ச வீதம் குறிக்கப்படாமல் வரி வீதத்தின் அளவை நிர்ணயிக்கும் அதிகாரமும் அளிக்கப்பட்டிருந்தது. மேற்படி வழக்கை ஆராய்ந்த உச்ச நீதிமன்ற மானது, நியாயமான அளவில் வரி வீதத்தின் அளவை நிர்ணயிக்க நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு தன் விருப்புரிமை அதிகாரம் (dis-

21. A.I.R. 1963 S.C. 98
22. A.I.R. 1958 S.C. 909
23. A.I.R. 1962 S.C. 1263
24. A.I.R. 1967 S.C. 1895

cretion) உள்ளது என்றும், மேற்படி வழக்கில் இரண்டு சதவீதத்திற்குள் வரி வீதத்தின் அளவை நிர்ணயிக்கும் அதிகாரத்தை நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அளித்திருப்பது, அதிக அதிகார ஒப்படைப்பு (excessive delegation) ஆகாதென்றும், குறைந்தபட்ச வரி வீதத்திற்கும், அதிகபட்ச வரி வீதத்திற்கும் அதிக இடைவெளி இருக்கக் கூடாது என்றும், அவ்வாறு இருந்தால் அதை வேண்டுமானால் அதிக அதிகார ஒப்படைப்பு என்று கூறலாமென்றம் கூறியது. மேலும் இந்த வழக்கிலேயே மத்திய அரசிற்கு அதிகபட்ச வீதம் (maximum rate) குறிக்கப்படாமல் வரி வீதத்தை நிர்ணயிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டி வாதம் புரியப்பட்ட பொழுது, அது அதிக அதிகார ஒப்படைவாகும் என்றும், எனவே செல்லாது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. **ஆனால் பின்வரும் வழக்கில் மாறுபட்ட தீர்ப்பு வழங்கப்பட்டது கவனிக்கத்தக்கதாகும்.**

Delhi Municipal Corporation v. Birla Cotton Mills Ltd.[25]- இவ்வழக்கில் டெல்லி மாநகராட்சிக்கு அதிகபட்ச வரிவிகித அளவு குறிக்கப்படாமலேயே மின் வரி (Electricity Tax) வீதத்தின் அளவை நிர்ணயிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. கட்டுப்பாடற்ற முறையில் அதிக அதிகாரம் டெல்லி மாநகராட்சிக்கு சட்டமன்றம் அளித்து விட்டது என்றும், எனவே, மேற்கண்ட **தேவிதாஸ் வழக்கின்** அடிப்படையில் பார்க்கையில் அது செல்லாது என்றும் வாதிடப்பட்டது. ஆனால் உச்ச நீதிமன்றம் இவ்வாதத்தை நிராகரித்து தீர்ப்பு வழங்கியது. அதன்படி, டெல்லி மாநகராட்சி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அடங்கிய நகரசபையாக இயங்குவதால், அது அதிக அளவில் வரி விதிக்காதென்றும், அவ்வாறு விதித்தால் அவர்கள் தேர்தலில் மக்களால் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள் என்றும் கூறி, டெல்லி மாநகராட்சிக்கு அதிக அதிகாரம் அளிக்கப்படவில்லை யென்று உச்ச நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது. மேலும் அதிக அதிகார ஒப்படைவைப் பார்க்கையில் என்னென்ன அதிகாரங்கள் ஒப்படைக்கப் பட்டுள்ளன என்பதைப் பார்ப்பதோடு, யார் யாருக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன என்பதையும் பார்க்க வேண்டுமெனவும் உச்ச நீதிமன்றம் அறிவித்தது. இந்த வழக்கில் டெல்லி மாநகராட்சிக்கு அதிக பட்சவரம்பு குறிக்கப்படாமல் வரி விதிக்கும் அதிகாரம் வழங்கப் பட்டிருப்பதால், இந்த வழக்கை **தேவிதாஸ் வழக்கோடு** ஒப்பிடலாக தென்றும், வேறுபடுத்தியே பார்க்க வேண்டுமென்றும் மேலும் உச்ச நீதிமன்றம் கூறியது. **இந்தக் கருத்து மாநகராட்சி போன்ற உள்ளாட்சி அரசுகளுக்கு (Local Governments) அதிக அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் எழுந்ததாக தோன்றுகிறதே தவிர, அதிகார ஒப்படைவு பற்றிய சட்டக் கோட்பாடுகளுக்கு ஏற்புடையதாகத் தோன்றவில்லை.**

25. A.I.R. 1968 S.C. 1232.

Gwalior Rayon Mills v. Asstt. Commissioner of Sales Tax[26] - எனும் வழக்கிலும், இதற்கு பின்னிட்டு எழுந்த **Kerala State Electricity Board v. Indian Aluminium Co.**[27] - எனும் வழக்கிலும், வரியை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கும் சட்டத்தில், அதற்கான ஒரு கொள்கையை (policy), வழிகாட்டு நெறியை (guideline), தரநிலையை (standard) சட்டமன்றம் குறிப்பிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியது. இதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தையும் நிருவாகத் துறையிடம் ஒப்படைப்பது என்பது, அதிக அதிகார ஒப்படைவாகும் என்றும் கூறியது.

Avinder Singh v. State of Punjab[28] - எனும் வழக்கில் மக்கள் பிரதிநிதிகளால் நடத்தப்படும் ஒரு அமைப்பிற்கு (அதாவது உள்ளாட்சி அரசுகள்) வரி விதிக்கும் அதிகாரத்தை ஒப்படைவு செய்கையில், அந்த அமைப்பிற்கு அதிகாரம் வழங்கும் சட்டத்தில் **'இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக'** (for the purposes of the Act) வரி விதிக்கப்படுதல் வேண்டும் எனும் சொற்றொடரை, போதுமான ஒரு வழிகாட்டு நெறியாக (sufficient guideline) கருதுதல் வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

வரி விதிக்கும் அதிகார ஒப்படைப்பு குறித்த கொள்கைகளின் தொகுப்பு (Principles regarding delegation of taxing power): மேற்கண்டவாறு உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் அளித்த தீர்ப்புகளிலிருந்து, நாம் வரி விதிக்கும் அதிகார ஒப்படைவு குறித்த கொள்கைகளை பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்.

(1) வரி விதிக்கும் அதிகாரம் சட்டமன்றத்தின் இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரமாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 265-வது ஷரத்தின்படி, சட்டத்தின் மூலமகத்தான் வரி விதிக்கப்படவும், வசூலிக்கப்படவும் வேண்டும். இங்கு சட்டம் என்பது சட்டமன்றம் மட்டுமே இயற்றும் சட்டத்தைத் குறிப்பிடுகிறதே தவிர, சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மூலமாக நிருவாகத்துறை செய்யும் சட்ட விதிகளையல்ல. எனவே, வரி விதிக்கும் அதிகாரத்தை நிருவாகத்துறை மற்றும் அதன் முகவர் நிலைகளிடம் ஒப்படைக்க இயலாது. இது ஒரு பொது விதி.

(2) மேற்கண்ட பொது விதி கூறும் வரம்பிற்குட்பட்டு, சில பொருட்களை வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கவும், மேலும் சில பொருட்களை வரி விதிப்பின் வரம்பிற்குள் கொண்டு வரவும் அரசிற்கு (அதாவது நிருவாகத்துறைக்கு) அதிகாரம் அளிக்கலாம்.

26. A.I.R. 1974 S.C. 1660
27. A.I.R. 1976 S.C. 1031 : (1976) 1 SCC 466
28. A.I.R. 1979 S.C. 321

(3) நாம் ஏற்கனவே கண்டவாறு வரியை நிர்ணயிக்கும் அதிகாரம் சட்டமன்றத்தின் இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரமாகும். சட்ட மன்றம் மட்டுமே வரி விதிக்கும் சட்டங்களை இயற்றும் அதிகாரம் பெற்றது. எனினும், வரி விதிக்கும் சட்டத்தில் வரியை நிர்ணயம் செய்வ தற்குண்டான வழிகாட்டு நெறிகளும், சட்டமன்றத்தின் கொள்கைகளும் குறிக்கப்பட்டிருப்பின், அங்கு வரியை நிர்ணயிக்கும் அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கலாம். எனினும் ஒரே வகையைச் சார்ந்த பொருட்களுக்கு வெவ்வேறு விதத்திலும், எந்த நியாயமான அடிப்படையும் இல்லாமல் பாரபட்சமான வீதத்திலும் வரி நிர்ணயம் செய்தால் அது அனுமதிக்கப்படாது.

(4) பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி போன்ற உள்ளாட்சி அதிகார அமைப்புகள் நிர்ணயம் செய்யும் வரிகள், அவை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு நிர்வகிக்கப் படுகிறது என்ற காரணத்தால் செல்லத்தக்கவை என்றோ அல்லது அதிக அதிகார ஒப்படைவின்பாற்பட்டதல்ல என்றோ கண்மூடித்தனமாகக் கூறிவிட முடியாது. அவை நிர்ணயிக்கும் வரியின் தன்மையைக் கொண்டு தான் முடிவெடுக்கப்படும்.

(5) வரி விதிக்கும் சட்டங்களுக்கு கண்டிப்பான முறையில்தான் நீதிமன்றங்கள் பொருள் விளக்கமளிக்க வேண்டும் (strict interpretation should be given to the taxing statutes). அச்சட்டத்தின் ஒரு வகைமுறை இரு பொருள் தரக்கூடியதாக (ambiguous) இருப்பின், அதில் வரி விதிக்கப்பட்டவருக்கு (assessee) அனுகூலமாக உள்ள பொருளையே நீதிமன்றங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்தியாவில் சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மீதான வரம்புகள் [Limits on the Delegated Legislation in India]

17. Explain with the aid of decided cases, the limits on the delegation of legislative powers in India. (இந்தியாவில் சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு மீதுள்ள வரம்புகளை முடிவான வழக்குகள் துணையுடன் விளக்குக.)

முன்னுரை:

இந்திய நாட்டைப் பொறுத்த அளவில், சட்டமியற்றும் பணியை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கும் அதிகாரத்தின் மீதான வரம்பு களானது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அடங்கியுள்ளது. இந்தியச் சட்டமன்றங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமாகத் தங்களுடைய சட்டமியற்றும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. எனவே, இந்தியச் சட்டமன்றங்கள், இந்திய அரசியலமைப்பிற்கு உட்பட்டுச்

செயலாற்றுதல் வேண்டும். இவ்வாறு, இந்தியச் சட்டமன்றங்கள், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இயங்குவதால் ஒரு வரம்பிற்குட்பட்டே நிருவாகத்துறையிடம் சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு செய்ய இயலும். எனவே, இந்தியச் சட்டமன்றங்கள் தங்கள் விருப்பப்படி எல்லா அதிகாரங்களையும் அதிகார ஒப்படைவு செய்ய இயலாது. அதன் மீது இந்திய அரசியலமைப்புச் சட்டம் உட்கிடையாகவும் வெளிப்படையாகவும் விதித்துள்ள பல்வேறு வரம்புகளை பல்வேறு வழக்குகளில் நீதி மன்றம் எடுத்துக் கூறியுள்ளது. (அவ்வழக்குகளின் பொருண்மைகளை விரிவாக ஏற்கனவே நாம் சென்ற வினாக்களில் கண்டுள்ளோம்.) அவற்றின் தொகுப்பை பின்வருமாறு காண்போமா?

இந்தியாவில் சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மீதான வரம்புகள்:

1. அடிப்படை வரம்பாக, சட்டமன்றம் மட்டுமே செய்ய வேண்டிய இன்றியாமையா சட்டமியற்றும் பணியை (Essential Legislative Function), அது நிருவாகத்துறையிடம் ஒப்படைக்க இயலாது. அவ்வாறு செய்தால் அது இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு முரண்பட்டதாகும். **[In Re Delhi Laws Act Case[29]].**

2. இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரங்களைத் தவிர, மற்ற சட்டமியற்றும் அதிகாரங்களை (Non-essential legislative powers) நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அதிகார ஒப்படைவு செய்யலாம். அவ்வாறு செய்கையில், நிருவாகத் துறை முகவர் நிலைகள் அச் சட்டத்தின் கீழ் எவ்வாறு முறையாக செயல்பட்டு விதிகளை இயற்றலாம் என்பதற்குண்டான கொள்கைகளை (Policies) தோற்றுவாய் சட்டத்தில் (Parent Act) விளக்கப்பட்டிருக்க வேண்டும்; வழிகாட்டும் நெறிகளும் (Guidelines), தரநிலைகளும் (Standards) கூறப்பட்டிருக்க வேண்டும். இவை இல்லாமல் சட்டமியற்றும் அதிகாரமானது, நிருவாகத் துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைவு செய்யப்பட்டிருப்பின், அது அரசியலமைப்பு சட்டத்திற்கு முரண்பட்டதாகும். **[In Re Delhi Laws Act Case[30], Harishankar Bagla v. State of M.P.[31] & Gwalior Rayon Mills v. Asstt. Commissioner of Sales Tax[32]].**

3. ஓரிடத்தில் நிலவி வரும் சட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தையும், அதை மற்றோர் இடத்திற்கு இடத்திற்கேற்ப மாறுபாடுகளுடனோ (modifications) அல்லது கட்டுவரம்புகளுடனோ (restrictions) விஸ்தரிக்கும் அதிகாரத்தை நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்குச் சட்டமன்றம் வழங்கலாம். ஆனால் சட்டத்தைத் தேர்ந்

29. A.I.R. 1951 S.C. 332
30. Ibid.
31. A.I.R. 1954 S.C. 465
32. A.I.R. 1974 S.C. 1660

தெடுத்து மற்றோர் இடத்திற்கு விரிவுபடுத்துகையில் அதன் இன்றியமை யாத தனிச் சிறப்பியல்புகளை (essential features) மாறுபடுத்துதல் கூடாது. இவ்வாறு செய்தல், அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரண் பட்டதாகும். **[In Re Delhi Laws Act Case[33]].**

4. தோற்றுவாய்ச் சட்டத்தைத் (Parent Act) திருத்தும் அதிகாரத்தையோ, நீக்கம் செய்யும் அதிகாரத்தையோ சட்டமன்றம் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு வழங்குதல் கூடாது. **[In Re Delhi Laws Act Case[34] & Makhan Singh v. State of Punjab[35]].**

5. சட்டமன்றம் ஒப்படைத்த சட்டமியற்றும் அதிகாரங்களைக் கொண்டு நிருவாகத்துறையானது **வருமேவு விளைவு (Prospective Effect)** கொண்ட சட்டங்களைத்தான் செய்ய வேண்டுமே தவிர, **முன்மேவு விளைவு (Retrospective Effect)** அளிக்கும் வண்ணம் சட்டங்களைச் செய்தல் கூடாது. அதாவது நிருவாகத்துறை இயற்றிய விதிகளானது, அது இயற்றப்பட்ட தேதிக்கும் முன்னதான ஒரு தேதியிலிருந்து அமலுக்கு வரத்தக்கதாக இருக்கக் கூடாது; அது இயற்றப்பட்டுள்ள தேதியிலிருந்து அமலுக்கு வரத்தக்கதாகத்தான் இருத்தல் வேண்டும். **[M.L.Bagga v. Murhar Rao[36]]**

6. வரி விதிக்கும் அதிகாரம் சட்டமன்றத்திற்கே உரித்த பணியாகும். அதை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கக் கூடாது. ஒரு சட்டமன்றம் இயற்றும் சட்டங்கள் மூலமாகத்தான் வரி விதிக்கப்பட வேண்டும். (எனினும், சில பொருட்களை வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கவும், மேலும் சில பொருட்களை வரி விதிப்பின் வரம்பிற்குள் கொண்டு வரவும், வரி வீதத்தின் அளவை நிர்ணயிக்கவும் அரசிற்கு (அதாவது நிருவாகத்துறைக்கு) அதிகாரம் அளிக்கலாம்). **[Orient Weaving Mills v. Union of India[37], Banarasidas v. State of M.P.[38], Banglore W.C.Mills v. Banglore Corporation & Devidas v. State of Punjab[39]]**

7. ஒரு செயலைக் குற்றமெனக் கூறி, அதற்கு தண்டனை விதிக்கும் சட்டங்களை இயற்றுவது, சட்டமன்றத்திற்கு மட்டுமுள்ள அதிகார மாகும். அதனை அதிகார ஒப்படைவு மூலம் நிருவாகத்துறையிடம் அளிக்க முடியாது. அதாவது நிருவாகத்துறையானது, தண்டனை

33. Ibid foot note 29.
34. Ibid foot note 29.
35. A.I.R. 1964 S.C. 381
36. A.I.R.1956 Hyd. 35
37. A.I.R. 1963 S.C. 98.
38. A.I.R. 1958 S.C. 909.
39. A.I.R. 1967 S.C. 1895.

விதிக்கும் சட்ட விதிகளை இயற்ற முடியாது. எடுத்துக்காட்டாக, இந்திய தண்டனைச் சட்டத்தை குறிப்பிடலாம். இச்சட்டத்தின் கீழ் விதிகள் இயற்றும் அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்க முடியாது.

7. நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை விலக்கும் வண்ணம் விதிகள் எதையும் சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மூலம் நிருவாகத்துறை செய்ய முடியாது. ஏனெனில் இது முழுக்க முழுக்க சட்டமன்றத்திற்கே உரிய இன்றியமையாத சட்டமியற்றும் அதிகார மாகும்.

8. சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மூலம் நீதிமுறை மறு ஆய்வின் (Judicial Review) எல்லையை விலக்க அல்லது கட்டுப்படுத்த நிருவாகத் துறையால் முடியாது.

9. நிருவாகத்துறையானது, பிற மாநிலங்களில் நிலவும் சட்டங்களை ஏற்றுக் கொள்ளவும், அவற்றை தமக்கு பொருந்துமாறு செய்து கொள்ளவும் சட்டமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், எதிர்காலத்தில் இயற்றப்பட உள்ள சட்டங்களை ஏற்றுக் கொள்ள நிருவாகத்துறைக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. ஏனெனில், எதிர்காலச் சட்டங்களை ஏற்றுக் கொள்வது, சட்டமன்றத்திற்கே உரிய இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரமாகும்.

10. அரசால் ஒருவரது நிலம் கையகப்படுத்தப்பட்டதற்காக அவருக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டை நிர்ணயம் (Determination of compensation for land acquisition) செய்யும் அதிகாரம் சட்டமன்றத்தின் கைகளில்தான் உள்ளது. இந்த அதிகாரத்தை நிருவாகத் துறையிடம் சட்டமன்றம் ஒப்படைக்கக் கூடாது.

11. ஒரு சட்டத்தின் செயல்பாட்டிலிருந்து ஒரு சில தனிப்பட்ட நபர்களை, வகுப்பினரை, நிலப்பரப்பை, பொருள்களை விலக்கி வைத்தல், விதிவிலக்களித்தல் (Exemption from the operation of law) எனப்படும். இதுவும் ஒரு இன்றியமையாத சட்டமியற்றும் அதிகார மாகும். சட்டமன்றம் இந்த அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கக் கூடாது. எனினும் இவ்வாறு ஒப்படைக்க வேண்டுமெனில், அதற்குரிய வழிகாட்டு நெறிகளை அச்சட்டத்தில் சட்டமன்றம் வகுத்திருக்க வேண்டும்.

நிபந்தனைக்குட்பட்டு சட்டமாக்கல் (அல்லது) நிபந்தனைக்குட்பட்ட விதியாக்கம் [Conditional Legislation]

18. Distinquish between conditional legislation and delegated legislation. Refer to decided cases. (நிபந்தனைக்குட்பட்டு சட்டமாக்

கலையும், அதிகார ஒப்படைவினால் சட்டமியற்றுதலையும் வேறு படுத்திக் காட்டுக. முடிவுற்ற வழக்குகளை சுட்டிக் காட்டுக.)

அதிகார ஒப்படைவினால் சட்டமியற்றுதல் அல்லது விதியாக்கம் (Delegated Legislation)- விளக்கம்:

சட்டமன்றமானது தனது சட்டமியற்றும் அதிகாரத்தை தான் இயற்றிய சட்டங்களின் வாயிலாக, நிருவாகத்துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைவு செய்வது **'சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு' (Delegation of Legislative Power)** எனப்படுகிறது. இந்த அதிகார ஒப்படைப்பின் வாயிலாக அந்நிருவாகத்துறை முகவர் நிலைகள், அதிகார அமைப்புகள் ஆகியவை செய்யும் விதிகள், ஆணைகள், ஒழுங்குமுறைகள், உப-விதிகள் ஆகியவை **'விதியாக்கம்'** அல்லது **'அதிகார ஒப்படைவினால் சட்டமியற்றுதல்' (Delegated Legislation)** எனப்படுகிறது. நிருவாகத் துறைக்கு விதிகள் செய்ய அதிகாரமளிக்கும் சட்டம், **'தோற்றுவாய் சட்டம்' (Parent Act)** எனப்படுகிறது. ஆனால் இவ்வாறு செய்யப்படும் விதியாக்கம் அல்லது சட்டமியற்றுதல், **நிபந்தனைக்குட்பட்ட சட்ட மாக்கலிலிருந்து (Conditional Legislation)** வேறுபடுகின்றது.

நிபந்தனைக்குட்பட்டு சட்டமாக்கல், அதிகார ஒப்படைவினால் சட்ட மியற்றுவதிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

நிபந்தனைக்குட்பட்டு சட்டமியற்றல் என்பது உண்மையில் சட்டமியற்றலை குறிக்கும் பதமல்ல. இங்கு சட்டமெதுவும் இயற்றப் படுவதில்லை. நிபந்தனைக்குட்பட்டு சட்டமியற்றலில் சட்டமன்றத்தால் செய்யப்பட்ட தோற்றுவாய்ச் சட்டம், சட்டமன்றத்தை விட்டு வெளிவருகையிலேயே முழுமை பெற்று வருகின்றது. இதனால் விதிகள் செய்யும் அதிகாரம் நிருவாகத்துறை முகவர்நிலைகளிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் ஏதும் ஏற்படுவதில்லை.

நிபந்தனைக்குட்பட்டு சட்டமியற்றலில் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அளிக்கப்படும் அதிகாரம் என்னவென்றால், தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை உருவாகுமே யானால், அப்பொழுது அச்சட்டத்தை அமல் செய்யும் அதிகாரம் அல்லது அமல் செய்யாமல் இருக்கும் அதிகாரம் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அளிக்கப்படுகிறது. நிருவாகத்துறை முகவர் நிலைகள் தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி யாகிவிட்டனவா என்பதை மட்டும் முடிவு செய்ய வேண்டும். நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுமானால், தோற்றுவாய்ச் சட்டத்தில் கண்டுள்ள விதிகளுக்கேற்ப அச்சட்டத்தை அமல் செய்ய வேண்டும். அல்லது செய்யாமல் இருத்தல் வேண்டும்.

தோற்றுவாய் சட்டமானது, நிருவாகத்துறை முகவர் நிலை களுக்கு அச்சட்டத்தை நிபந்தனைக்குட்பட்டுக் குறிப்பிட்ட காலத்தில்

அல்லது குறிப்பிட்ட சூழ்நிலையில் அமல் செய்யும் அதிகாரத்தை அளிக்கிறது. அல்லது குறிப்பிட்டமக்கள் மீது குறிப்பிட்ட சூழ்நிலையில் அமல் செய்யும் அதிகாரத்தை அளிக்கிறது. அல்லது குறிப்பிட்ட செயல்பாட்டை குறிப்பிட்ட சூழ்நிலையில் அமல் செய்யும் அதிகாரத்தை அளிக்கிறது. அல்லது குறிப்பிட்ட சட்டங்களை குறிப்பிட்ட சூழ்நிலை யில் மற்றப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தும் அதிகாரங்களை அளிக்கிறது. அல்லது குறிப்பிட்ட சூழ்நிலைகளில் காலாவதியாகிவிட்ட சட்டங்களை மேலும் குறிப்பிட்ட காலத்திற்கு அமலில் வைத்திருக்கும் அதிகாரத்தை அளிக்கிறது.

இங்கு நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு அளிக்கப்பட்ட அதிகாரம் என்னவென்றால், தோற்றுவாய்ச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டனா இல்லையா என்பதை நிர்ணயிக்கும் உரிமை மட்டுமேயாகும்; சட்டமியற்றம் அதிகார ஒப்படைவின் மூலமான விதிகள் செய்யும் உரிமையன்று.

எடுத்துக்காட்டாக, நெருக்கடி நிலை (Emergency) நிலவும் போது, சில சட்டங்களை அமல் செய்யும் அதிகாரம் நிருவாகத்துறை முகவர் நிலைக்கு அளிக்கப்பட்டிருந்தால், இங்கு அந்நிருவாகத்துறை முகவர் நிலை நெருக்கடி நிலை நிலவுகின்றதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். நெருக்கடி நிலை நிலவுவதாகத் தீர்மானித்தால், நிருவாகத் துறை முகவர் நிலை அச்சட்டங்களை அமல் செய்ய வேண்டும். அவ் வாறில்லையெனில், அச்சட்டங்களை அமல் செய்யக் கூடாது.

முடிவுற்ற முக்கிய வழக்குகள்:

Queen v. Burah[40] - எனும் வழக்கில் சட்டத்தின் மூலம் சில இடங்களுக்கு நிபந்தனைகளுடன் சட்டத்தை விரிவுபடுத்தும் (விஸ்தரிக் கும்) அதிகாரம் நிருவாகத்துறை முகவர் நிலை களுக்கு கொடுக்கப் பட்டிருந்தால், அவ்வதிகார ஒப்படைப்பு விதிகள் செய்யும் அல்லது விதியாக்க அதிகாரத்தின்பாற்படாது (Delegated Legislation) என்றும், நிபந்தனைகளுக்குட்பட்டுச் செய்யப்பட்ட சட்டத்தின்பாற்படும் என்றும் பிரிவி கவுன்சில் (Privy Council) கூறியது.

Jatindra Nath Gupta v. Province of Bihar[41] - எனும் வழக்கில் சட்டம் அமலில் இருக்கும் காலத்தை (அதாவது சட்டத்தின் ஆயுளை) மேலும் நீட்டிக்கும் அதிகாரம், நிபந்தனைகளுக்குட்பட்ட சட்ட மியற்றலில் சேராது என்று அப்பொழுது இருந்த இந்திய கூட்டாட்சி நீதிமன்றம் (Federal Court of India) கூறியது.

ஆனால் இத்தீர்ப்பு இந்திய உச்ச நீதிமன்றத்தால் பின்வரும்

40. 1869-51 A. 72.
41. 1949 - F.I.J. 225.

வழக்குகளில் ஒதுக்கித் தள்ளப்பட்டது. அதாவது, **Jailal v. State**[42] . என்ற வழக்கிலும், **Inder Singh v. State of Rajasthan**[43]- என்ற வழக்கிலும் தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு மேல் நிபந்தனைகளின் பேரில் சட்டங்களை அமலில் வைத்திருக்கும் அதிகாரத்தை நிருவாகத் துறை முகவர் நிலைகளிடம் சட்டமன்றம் ஒப்படைக்கலாம் என்றும், அவ்வதிகார ஒப்படைப்பு (Delegation of Power), விதிகள் செய்யும் அதிகாரமாகாது (Delegated Legislation) என்றும், அது நிபந்தனைகள் மீது சட்டமியற்றும் அதிகாரத்தில்தான் சேரும் என்றும் உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது.

State of Bombay v. Narraottamdas[44] - எனும் வழக்கில், மாநகர உரிமையியல் வழக்கு நீதிமன்றத்தின் அதிகார வரம்பை ரூபாய் 11,000/-லிருந்து ரூபாய் 25,000/-க்கு நிபந்தனையின் பேரில் உயர்த்தும் அதிகாரம் அரசுக்கு சட்டமன்றத்தால் அளிக்கப் பட்டிருந்தது. பம்பாய் உயர் நீதிமன்றத்தில் அசல் அதிகாரவரம்புக்குள் வரும் வழக்குகளின் அதிக எண்ணிக்கையை குறைப்பதற்காக இந்த அதிகாரம் அரசுக்கு அளிக்கப்பட்டிருந்தது. பம்பாய் உயர் நீதிமன்றத்தின் அசல் அதிகார வரம்புக்குள் வந்த வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்த பொழுது, மாநகர உரிமையியல் வழக்கு நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு ரூபாய் 11,000/-லிருந்து ரூபாய் 25,000/-க்கு உயர்த்தப்பட்டது. வழக்கை ஆய்ந்த இந்திய உச்ச நீதிமன்றம், இந்த அதிகார ஒப்படைப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு சட்டமாக்கும் (Conditional Legislation) தன்மையை உடையதென்றும், சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மூலமான விதிகள் செய்யும் அதிகாரமாகக் (Delegated Legislation) கொள்ள லாகாது என்றும் கூறியது.

முடிவுரை:

இறுதியாக, சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மூலமான விதியாக்கத்திற்கும், நிபந்தனைக்குட்பட்டு சட்டமாக்கலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை பின்வருமாறு நாம் தொகுத்துரைக்கலாம். அவை,

1. சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பின் மூலமாக நிருவாகத் துறை முகவர் நிலைகள் விதிகளைச் செய்கின்றன. அதாவது சட்டங்களை இயற்றுகின்றன. ஆனால் நிபந்தனைக்குட்பட்ட சட்டமாக்கலில், மேற்கண்டவாறு விதிகள் எதையும் நிருவாகத்துறை முகவர் நிலைகள் செய்வதில்லை.

2. சட்டமியற்றும் அதிகார ஒப்படைவில் சட்டமன்றம் எலும்புச் கூடு வடிவில் சட்டங்களை இயற்றுகின்றன. அதில் இரத்தம் சதை

42. 1952 - S.C.R. 127.
43. A.I.R. 1957 S.C. 510.
44. 1951 - S.C.R. 51.

போன்ற தேவையான விபரங்களை இட்டு நிருவாகத்துறை முகவர் நிலைகள், அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை, வழிகாட்டு நெறிகள், தரநிலைகள் ஆகியவற்றின்படி விதிகளை இயற்றுகின்றன. ஆனால் நிபந்தனைக்குட்பட்ட சட்டமாக்கலில், சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம், சட்டமன்றத்தை விட்டு வெளி வரும் பொழுது முழுமையான வடிவுடனே வருகிறது. எனவே, அதன் கீழ் மேலும் சட்டங்களை இயற்ற வேண்டிய அவசியம் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு இல்லை; அத்தகு அதிகாரமும் நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு சட்டமன்றத்தால் கொடுக்கப்படுவதில்லை. இங்கு நிருவாகத்துறை முகவர் நிலைகள் செய்ய வேண்டியதெல்லாம், அச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனா, இல்லையா என்பதைக் கவனிப்பதுதான். இதையொட்டி, அச்சட்டத்தை அமல் செய்யும் அல்லது அமல் செய்யாமல் நிறுத்தி வைக்கும் அதிகாரம் மட்டுமே நிருவாகத்துறை முகவர் நிலைகள் பெற்றுள்ளன.

3. சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின்படி நிருவாகத்துறை முகவர் நிலைகள் செய்யும் விதிகள் சில சமயங்களில் ஏதேச்சதிகாரத்திற்கு வழி வகுத்துவிடும். எனவே பாதுகாப்பற்றது. ஆனால் நிபந்தனைகளுக்குட் பட்ட சட்டமாக்கலில், சட்டமன்றம் அச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டே நிருவாகத்துறை முகவர் நிலைகள் செயல் பட வேண்டியுள்ளது. இங்கு நிருவாகத்துறை முகவர் நிலைகள் சட்டம் எதையும் செய்யவியலாது. எனவே, இங்கு நிருவாகத்துறையினர் கைகள் கட்டுப்பட்டுள்ளது. இதனால், இது மிகவும் பாதுகாப்பானது.

4. மேற்கண்ட காரணங்களால், சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின்படியிலான விதியாக்கமும் (Delegated Legislation), நிபந்தனைகளுக்குட்பட்ட சட்டமாக்கலும் (Conditional Legislation) ஒன்றல்ல; வெவ்வேறானது.

எட்டாம் ஹென்றி விதி
[Henry VIII Clause]

19. Henry VIII Clause - Write Short Notes. (எட்டாம் ஹென்றி விதி - சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

சட்டமன்றம் சட்டங்களை இயற்றும் அதிகாரம் படைத்தது. ஆனால் நாளடைவில் சட்டமன்றத்தின் பணிகள் பெருகப்பெருக, அது தனது சட்டமியற்றும் அதிகாரத்தை, தான் இயற்றிய சட்டங்களின் வாயிலாக நிருவாகத்துறை முகவர் நிலைகளைத் தோற்றுவித்து, அச் சட்டங்களின் கீழ் விதிகள் செய்யும் அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைத்தது. இது **சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு** (Delegation

of Legislative Power) எனப்படுகிறது. இந்த அதிகாரத்தின் மூலம் நிருவாகத்துறையினர் செய்யும் விதிகள், **விதியாக்கம் (Delegated Legislation)** எனப்படுகிறது. இவற்றையெல்லாம் சென்ற வினாக்களில் போதுமான அளவு விரிவாகக் கண்டோம். ஆனால் பொதுவாக இந்த விதியாக்க அதிகாரத்தின் மூலம் நிருவாகத்துறையானது, சட்டமன்றம் இயற்றிய **தோற்றுவாய் சட்டத்திலுள்ள சட்ட வகைமுறைகளை (Parent Act)** திருத்தவோ அல்லது மாறுபடுத்தவோ அதிகாரம் பெற்றதல்ல. இவற்றை சட்டமன்றம் மட்டுமே செய்ய அதிகாரம் படைத்தாகும். ஆனால் இங்கிலாந்தில் **அரசர் எட்டாம் ஹென்றியின்** ஆட்சிக்காலத்தில் இருந்த நடைமுறையோ முற்றிலும் மாறுபட்டதாகும். அதை சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

அரசர் எட்டாம் ஹென்றியின் ஆட்சியில் விதியாக்கம் (அல்லது) எட்டாம் ஹென்றி விதி:

இங்கிலாந்தை ஆட்சி புரிந்த எட்டாம் ஹென்றி, சர்வ வல்லமை பொருந்திய அரசராக இருந்தார். அவரே அனைத்து அதிகாரங்களையும் கொண்டு தன் விருப்பத்திற்கேற்றபடி ஆட்சி புரிந்தார். அவர் இவ்வாறு தனது விருப்பத்தை வலியுறுத்தி ஆட்சி புரிகையில் எண்ணற்ற இடர் பாடுகளை எதிர் கொள்ள வேண்டி வந்தது. இந்த இடர்பாடுகளைக் களையும் பொருட்டு, அவர் இங்கிலாந்து பாராளுமன்றத்தால் இயற்றப் பட்ட சட்டங்களைக் கூட தனது விருப்பு வெறுப்பிற்கேற்ப திருத்தினார் மற்றும் நீக்கினார். அரசர் என்பவர் நிருவாகத்துறையின் தலைவர். அவர் பாராளுமன்றம் இயற்றிய சட்டங்களை திருத்துவது மற்றும் நீக்குவது என்பது, விதியாக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரண்பட்ட தாகும். ஏனெனில் ஒரு சட்டத்தை திருத்துவதும், நீக்குவதும் சட்ட மன்றத்திற்கே உரிய இன்றியமையா சட்டமியற்றும் அதிகாரமாகும். இந்த அதிகாரத்தை நிருவாகத் துறையிடம் ஒப்படைக்கக் கூடாது. இதை நிருவாகத்துறையும் கைக் கொள்ளலாகாது. ஆனால், அரசர் எட்டாம் ஹென்றியோ இந்த அதிகாரத்தையும் விட்டு வைக்காமல், தன்வசம் கொண்டு அதிகார துஷ்பிரயோகம் செய்து வந்தார். இவ்வாறு தோற்று வாய் சட்டத்தையே திருத்தும் மற்றும் நீக்கும் அளவிற்கு நிருவாகத் துறைக்கு அதிகாரமளித்து இங்கிலாந்தில் இயற்றப்பட்ட சட்டங்கள், எட்டாம் ஹென்றி விதி என்ற புனைப் பெயரால் அழைக்கப் பட்டன.

இன்றும் கூட, தோற்றுவாய் சட்டத்தின் வகைமுறை ஒன்று (சட்டக் கூறு - Clause), அச்சட்டத்தையே திருத்தும் நீக்கும் அல்லது மாற்றும் அதிகாரத்தை, நிருவாகத்துறை முகவர் நிலைக்கு வழங்கு மாயின், அவ்வகைமுறையை (அவ்விதிக்கூறை), **எட்டாம் ஹென்றி விதி** அல்லது **எட்டாம் ஹென்றி விதிக்கூறு** என்று அழைப்பர்.

எட்டாம் ஹென்றி விதிக்கு எடுத்துக்காட்டு:

1911-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தேசிய காப்பீட்டு சட்டத்தைக்

(National Insurance Act, 1911) இதற்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம். இந்தச் சட்டமானது, காப்பீட்டு ஆணையாளர்களுக்கு (Insurance Commissioners) பின்வருமாறு அதிகாரமளிக்கிறது. அஃதாவது, "இச் சட்டத்தை அமலுக்கு கொண்டு வருவதில் இடர்பாடுகள் ஏதேனும் எழுந்தால், காப்பீட்டு ஆணையாளர்கள் தாங்கள் அவசியமெனவும் உகந்ததெனவும் கருதும் எதையும் செய்ய மற்றும் அந்த நோக்கத்திற்காக இச் சட்டத்தை தானே மாற்றியமைக்கவும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர்", என்று குறிப்பிடுகிறது. மேற்படி சட்டத்தின் இக்கூறு, **எட்டாம் ஹென்றி விதி** ஆகும்.

எட்டாம் ஹென்றி விதியினால் இங்கிலாந்தில் ஏற்பட்ட தாக்கம்

சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு எனும் பெயரில், எட்டாம் ஹென்றியின் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்து பாராளுமன்றம் தனக்கே உரிய அனைத்துச் சட்டமியற்றும் அதிகாரங்களையும் நிருவாகத்துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைத்தது. இதனால், அவை கட்டுப்பாடற்ற முறையில் செயல்படத் துவங்கின. விதிகள் செய்வது எனும் போர்வையில், நிருவாகத்துறை முகவர் நிலைகளானது, சட்டங்களை இயற்றும் அதிகாரத்தையும், அவற்றை அமல்படுத்தும் மற்றும் நீக்கும் அதிகாரத்தையும் கைக் கொண்டன. இதனால் நிருவாகத்துறை முகவர் நிலைகள் ஏதேச்சதிகாரப் போக்குடன் நடந்து கொண்டன. இது நாளுக்கு நாள் அதிகரித்தது. இதனை இங்கிலாந்தில் தலைமை நீதிபதியாக இருந்த **நீதிப் பெருமகனார் ஹீவர்ட் (Lord Hewart)** அவர்கள் 1929-ஆம் ஆண்டில் **'புதுக் கொடுங்கோன்மை' (The New Despotism)** எனும் ஒரு நூலை எழுதி, அதில் நிருவாகத்துறை முகவர் நிலைகளின் மேற்கண்ட ஏதேச்சதிகாரப் போக்கை கடுமையாகச் சாடினார். நிருவாகத்துறை முகவர் நிலைகளுக்கு விதிகள் செய்யும் அதிகாரம் கொடுக்கப்படக் கூடாதென வாதிட்டார்.

ஹீவர்டின் கருத்துகள் மக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இதன் காரணமாக, சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பில் குறைகள் இருப்பின் அவற்றைக் கண்டறிந்து களையும் பொருட்டு, இங்கிலாந்து பாராளுமன்றமானது, 1929-ஆம் ஆண்டில் டூனாக்மோர் என்பவர் தலைமையின் கீழ் குழு ஒன்றை அமைத்தது. இது **டூநோக்மோர் குழு (Donoughmore Committee)** என்று அழைக்கப்படும். இதனை **அமைச்சர்களின் அதிகாரங்களின் மீதான குழு (Committee on Minister's Powers)** என்றும் அழைப்பர். இக்குழு தனது அறிக்கையில், பரந்த அளவில் சட்டமியற்றும் அதிகாரங்களை நிருவாகத்துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைப்பது, பாராளுமன்ற அரசாங்கமுறைக் கொள்கைகளுக்கும், சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பின் மீதான அனுமதிக்கப்பட்ட வரம்புகளுக்கும் எதிரானது என்று குறிப்பிட்டது. மேலும் ஹென்றி எட்டாம் விதி குறித்து பின்வரும் பரிந்துரைகளைத் தனது அறிக்கையில் செய்தது. அவை, (1) எட்டாம் ஹென்றி விதி போன்ற சட்டமியற்றும் அதிகார ஒப்படைவை இயன்ற வரை தவிர்த்தல்

வேண்டும்; அவ்வாறு தவிர்க்க முடியாத அசாதாரண சூழ்நிலைகளில் மட்டுமே, ஹென்றி எட்டாம் விதியைக் கையாள வேண்டும். மேலும், (2) எட்டாம் ஹென்றி விதியானது, தோற்றுவாய் சட்டம் இயற்றப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு வரையில் மட்டுமே அமலில் இருக்க வேண்டும். அதுவும், தோற்றுவாய் சட்டத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வரும் பொழுது, ஏதேனும் இடர்பாடுகள் ஏற்பட்டால் மட்டுமே, அவற்றைக் களைய (for removing difficulties arising in the implementation of the Parent Act) ஹென்றி எட்டாம் விதியின்படி விதிகள் செய்தல் வேண்டும். மேற்கண்ட பரிந்துரைகளுக்குப் பின்னர், இங்கிலாந்தில் கிட்டத்தட்ட எட்டாம் ஹென்றி விதியை பின்பற்றி விதிகள் செய்வது நின்று போனது என்றுதான் கூற வேண்டும்.

இந்தியாவில் எட்டாம் ஹென்றி விதி:

இந்தியாவிலும் கடந்த காலகட்டங்களில் எட்டாம் ஹென்றி விதியைப் பயன்படுத்தி, நிருவாகத்துறை முகவர் நிலைகள் விதிகள் செய்தன என்பதை நாம் மறுக்கவோ அல்லது மறைக்கவோ இயலாது. ஆனால் ஒரு ஆறுதல் என்னவென்றால், மேற்படி விதி மிகக் குறைந்த அளவிலேயே நிருவாகத்துறையால் பயன்படுத்தப்பட்டது. எடுத்துக் காட்டாக, 1956-ஆம் ஆண்டின் மாநில புனரமைப்புச் சட்டத்தின் (The State Reorganisation Act, 1956) 120 மற்றும் 128-வது பிரிவுகள், மேற் கண்ட எட்டாம் ஹென்றி விதியை உள்ளடக்கியிருந்தன. (தற்பொழுது மேற்படி சட்டம் நீக்கப்பட்டு விட்டது). இந்தியாவில் தற்பொழுது எந்தச் சட்டத்திலும் எட்டாம் ஹென்றி விதியை உள்ளடக்கியிருக்கவில்லை.

எவையெல்லாம் எட்டாம் ஹென்றி விதியாக உச்ச நீதிமன்றத்தால் விளம்பப்பட்டுள்ளது?

எட்டாம் ஹென்றி விதியை சட்டமன்றம் தான் இயற்றும் சட்டத்தில் உள்ளடக்கி வெளியிடுவதில்லை. இருப்பினும், பின்வரும் சில அதிகாரங்களும் எட்டாம் ஹென்றி விதியைப் போன்றதே என உச்ச நீதி மன்றத்தால் பல வழக்குகளில் விளம்பப்பட்டு, அவை செல்லாதவை என அறிவிக்கப்பட்டுள்ளன. அவை, (1) சட்டமியற்றும் கொள்கையையே வகுக்கும் அதிகாரத்தை சட்டமியற்றுத் துறை, நிருவாகத்துறையிடம் ஒப்படைத்தல்; (2) அதிகார ஒப்படைவின் மீதான வரம்புகள் ஏதும் குறிப்பிடப்படாமல் பரந்த அளவில் நிருவாகத்துறைக்கு சட்டமியற்றும் அதிகாரத்தை ஒப்படைத்தல்; (3) நிருவாகத்துறைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை சாதாரண நீதிமன்றங்களின் வாயிலாக கேள்வி கேட்க முடியாதபடிக்கு அதனிடம் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்று அதிகாரம் அமைத்திருத்தல் ஆகியவை.

'எட்டாம் ஹென்றி விதி' மற்றும் 'இடர்பாடுகளை களையும் அதிகாரம்' ஆகியவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு (Difference between 'Henry VIII Clause' and 'Removal of Difficulties'):

எட்டாம் ஹென்றி விதி போன்ற அதிகார ஒப்படைவானது, இடர்பாடுகளை களைவதற்கான அதிகார ஒப்படைவிலிருந்து வேறு பட்டதாகும். இடர்பாடுகளை களையும் அதிகாரத்தின்படி, சட்டமன்றம் இயற்றிய தோற்றுவாய் சட்டத்திற்கு செயலாக்கம் கொடுப்பதில் ஏதேனும் இடர்பாடுகள் எழுந்தால், அவற்றைக் களைய தக்க விதிகள் மற்றும் ஆணைகள் போன்றவற்றை செய்ய நிருவாகத்துறைக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. ஆனால், அத்தோற்றுவாய் சட்டத்திற்கு முரண்பாடாக நிருவாகத்துறை எந்த விதிகளையும், ஆணைகளையும் செய்ய இயலாது. மாற்றங்களையும் ஏற்படுத்த இயலாது. ஆனால், எட்டாம் ஹென்றி விதி போன்ற அதிகார ஒப்படைவின் கீழ், நிருவாகத் துறையானது 'அடி மடியிலேயே கை வைத்தாற்போன்று' தோற்றுவாய் சட்டத்தைக் கூட மாற்றி விடலாம். இத்தகு பரந்த மற்றும் கட்டுப் பாடில்லாத அதிகாரம் எட்டாம் ஹென்றி விதியால் நிருவாகத் துறையிடம் ஒப்படைக்கப்படுகிறது.

கீழ்ப்படையான அதிகார ஒப்படைப்பு [Sub-Delegation of Power]

20. What is sub delegation of powers? Refer legal provisions and cases. (கீழ்ப்படையான ஒப்படைவு அதிகாரம் என்பது என்ன? சட்டப் பிரிவுகளையும் வழக்குகளையும் சுட்டிக்காட்டுக.)

(அல்லது)

Sub delegation - Write short notes (துணை அதிகார அளிப்படைவு - சிறு குறிப்பு வரைக.)

கீழ்ப்படையான அதிகார ஒப்படைவு (Sub delegation of Powers)- விளக்கம்:

சட்டமியற்றுத்துறை, தனது சட்டமியற்றும் (விதிகள் செய்யும் அதிகாரத்தை) அதிகாரத்தை தான் இயற்றிய தோற்றுவாய் சட்டங்களின் வாயிலாக நிருவாகத் துறையிடம் ஒப்படைப்பது, சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு (Delegation of Legislative Power) எனப்படும். இவ்வாறு தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை நிருவாகத் துறையானது, மீண்டும் தனக்கு கீழ் அமைந்துள்ள நிருவாகத்துறை அதிகார அமைப்புகளிடம் (Administrative Authorities) அல்லது நிருவாகத் துறை முகவர் நிலைகளிடம் (Administrative Agencies) ஒப்படைத்தால், அது **கீழ்ப்படையான அதிகார ஒப்படைப்பு (Sub Delegation of Power)** எனப்படுகிறது. இது படிப்படியாக நடைபெறுகிறது.

எடுத்துக்காட்டு:

1955-ஆம் ஆண்டின் இன்றியமையாப் பண்டங்கள் சட்டமானது

தனது 3-வது பிரிவின் வாயிலாக, மத்திய அரசுக்கு விதிகள் செய்யும் அதிகாரத்தை அளிக்கிறது. இது முதற்கண் சட்டமியற்றும் அதிகார ஒப்படைவாகிறது (Delegation of Legislative Power). அதே சமயத்தில் இச்சட்டத்தின் 5-வது பிரிவானது, மத்திய அரசாங்கத்திற்கு அதனிடம் அளிக்கப்பட்ட அதிகாரத்தை அதன் கீழ்ப் பணி புரியும் அலுவலர் களிடமும், மாநில அரசிடமும், அதன் கீழ்ப் பணி புரியும் அலுவலர் களிடமும் அதிகார ஒப்படைவு செய்ய அனுமதி வழங்குகிறது. இவ்வாறு மத்திய அரசின் அலுவலர்களுக்கும், மாநில அரசுக்கும், அதன் அலுவலர் களுக்கும் அதிகாரமானது மத்திய அரசின் மூலமாக அளித்திருப்பது, இரண்டாவது படிநிலை (second stage) அதிகார ஒப்படைவாகும். மேற்கண்டவாறு அதிகாரம் பெற்ற மாநில அரசும், அதன் அலுவலர் களும் அதிகாரத்தை மேலும் கீழ்ப்படியாக அளிப்பார்களானால், அது மூன்றாவது படிநிலை (third stage) அதிகார ஒப்படைவாகும். இங்கு இரண்டாவது படிநிலையின்படியும், மூன்றாவது படிநிலையின்படியும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருப்பதற்குத்தான், **கீழ்ப்படையான அதிகார ஒப்படைவு (Sub Delegation of Power)** என்று பெயர்.

கீழ்ப்படையான அதிகார ஒப்படைவின் நிலைப்பாட்டை எடுத்துரைத்த முக்கிய வழக்கு:

Union of India v. Bhanamal Gulzarimal[45] - இவ்வழக்கில் பின் வரும் ஒரு முக்கிய கேள்வி முன் வைக்கப் பட்டது. அதாவது, தோற்று வாய்ச் சட்டம் மூலமாக அதிகாரம் பெற்ற மத்திய அரசு கீழ்ப்படையான விதிகள் செய்யும் அதிகாரத்தை அதன் கீழுள்ள அலுவலர்களுக்கு அளிக்கையில் சட்டமியற்றுக் கொள்கை (Legislative Policy) குறித்த விளக்கமும், வழிகாட்டு நெறிகளும் (Guide lines) தர வேண்டுமா என்பதே அக்கேள்வியாகும். இதற்கு விளக்கமளிக்கையில் உச்ச நீதி மன்றமானது பின்வருமாறு கூறியது. அஃதாவது, மத்திய அரசானது தனியாக சட்டமியற்றுக் கொள்கை குறித்த விளக்கத்தையும், வழிகாட்டு நெறிகளையும் கீழ்ப்படையான அதிகார ஒப்படைவு (Sub delegation) செய்யும் பொழுது தர வேண்டியதில்லை என்றும், தோற்றுவாய்ச் சட்டத்தில் (Parent Act) கொடுக்கப்பட்டிருக்கும் சட்டமியற்றுக் கொள்கை மற்றும் வழிகாட்டு நெறிகளே, கீழ்ப்படையான அதிகார ஒப்படைவிற்கும் பொருந்துவதாகும் என்றும், அதற்கேற்றவாறே கீழ்ப் படையான அதிகார ஒப்படைவு பெறும் நிருவாகத்துறை அலுவலர் களும், நிருவாகத் துறை முகவர் நிலைகளும் செயல்பட்டு விதிகளை இயற்ற வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடக் கூறியது.

கீழ்ப்படையான அதிகார ஒப்படைவு குறித்த கொள்கைகள்

கீழ்ப்படையான அதிகார ஒப்படைவிற்கு நன்கு நிலைபெற்ற கொள்கைகள் சில உள்ளன. அவை

45. A.I.R. 1960 S.C. 475.

(1) கீழ்ப்படையான அதிகார ஒப்படைவைப் பெற்ற கீழ் நிலை நிருவாகத் துறை அதிகார அமைப்புகள் அல்லது முகவர் நிலைகள், தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகார அளவிற்கு அப்பாற்பட்ட நிலையில் செயல்படக் கூடாது.

(2) கீழ்ப்படையான அதிகார ஒப்படைவைச் செய்யும் அதிகாரம் தோற்றுவாய் சட்டத்திலேயே கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு கொடுக்கப்படவில்லையென்றால், சட்டமியற்றும் அதிகார ஒப்படைவைப் பெற்ற நிருவாகத் துறையானது, தன் கீழுள்ள நிருவாகத் துறை முகவர் நிலைகளுக்கு கீழ்ப்படையான அதிகார ஒப்படைப்பை செய்தல் கூடாது. இது **'ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை மீட்டளிக்க முடியாது' (Delegatus Non Potest Delegare)** என்று இலத்தீன் முதுமொழியிலிருந்து பிறந்த கொள்கையாகும். இதன்படி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை, அவர் மீண்டும் மற்றொருவரிடம் ஒப்படைக்க முடியாது. ஆனால் அவ்வாறு மீண்டும் ஒப்படைக்கலாம் என்று அதிகாரத்தை ஒப்படைக்கும் பொழுதே குறிப்பிடப்பட்டால், அவர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை மற்றொருவரிடம் ஒப்படைக்கலாம். இந்த விதிதான் கீழ்ப்படையான அதிகார ஒப்படைவிலும் பின்பற்றப்படுகிறது.

(3) கீழ்ப்படையான அதிகார ஒப்படைவை தோற்றுவாய் சட்டத்தில் மிகவும் விரிவான வார்த்தைகளால் குறிப்பிடக் கூடாது. தோற்றவாய் சட்டத்தில் கீழ்ப்படையான அதிகார ஒப்படைவு குறித்து எந்தக் குறிப்பும் இல்லாத பொழுது, கீழ்ப்படையான அதிகார ஒப்படைவை அனுமதிக்கக் கூடாது.

(4) கீழ்ப்படையான அதிகார ஒப்படைவை செய்வதற்கு முன்னதாக அனுசரிக்கப்பட வேண்டிய சில காப்புவிதிகளை (safe-guards) தோற்றுவாய் சட்டத்தின் மூலமாக நேரடியாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிக்கு (Delegate) (அதாவது சட்டமியற்றும் அதிகாரம் பெற்ற நிருவாகத் துறைக்கு) கொடுக்கப்பட வேண்டும். மேலும் அவை தோற்றுவாய் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

(5) கீழ்ப்படையான அதிகாரம் பெற்ற நிருவாகத்துறை முகவர் நிலைகள் செய்யும் விதிகள், முறையாக வெளியீடு (publication) செய்யப்படுதல் வேண்டும்.

Harla v. State of Rajasthan[46] - எனும் வழக்கில், சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மூலமாக நிருவாகத் துறை செய்யும் விதிகளை வெளியிடுதல் வேண்டும் என்றும், அவ்வாறு வெளியிடப்படாமல் செய்யப்படும் விதிகளின் கீழ் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படக் கூடாதென்றும், அவ்வாறு நடவடிக்கை எடுத்தால் அது இயற்கை நீதிக்கு (Natural Justice) முரண்பட்டதென்றும் உச்ச நீதிமன்றம் கருத்துரைத்

46. A.I.R. 1951 S.C. 467.

துள்ளது. இக்கருத்தின்படி, அதிகார ஒப்படைவின் மூலம் நிருவாகத்துறை செய்யும் எல்லா விதிகளும் வெளியிடப்படுதல் வேண்டும். கீழ்ப்படை யான அதிகார ஒப்படைவின் மூலமாக நிருவாகத்துறை முகவர் நிலைகள் (அதாவது துணைப் பிரதிநிதி) (Sub-delegate) செய்யும் விதிகள் இதற்கு விதிவிலக்கல்ல. இவ்விதிகளும் வெளியிடப்பட வேண்டும்.

(6) தோற்றுவாய் சட்டத்தின் மூலம் நேரடியாக அதிகாரம் பெற்ற நிருவாகத்துறை பிரதிநிதி (Delegate) செய்யும் விதிகளையும் (Rules), அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற கீழ்ப் பிரதிநிதி (Sub-delegate) செய்யும் துணை விதிகளையும் (Sub-Rules), ஆணைகளையும் (Orders), மற்றவைகளையும் வெளியீடு செய்வதற்கான நடைமுறையானது (Procedure), தோற்றுவாய் சட்டத்தில் குறிக்கப்பட வேண்டும்.

(7) தோற்றுவாய் சட்டத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் துணை விதிகளையும், மற்றவைகளையும் வெளியீடு செய்தல் வேண்டும். எனினும் இவ்விதிகளை சட்டமன்றத்தின் முன் (laying before Legislative) வைக்க வேண்டிய அவசியமில்லை.

மேற்கண்டவற்றில் 4, 5, 6 மற்றும் மற்றும் 7-வது கொள்கைகளை பாராளுமன்ற துணை சட்டக் குழு (Committee on Subordinate Legislation) வகுத்துரைத்ததாகும்.

நிருவாகமுறை ஏவுரைகள்
(அல்லது)
நிருவாகமுறைக் குறிப்புரைகள்
[Administrative Directions (or) Instructions]

21. What are the differences between administrative directions and delegated legislation? How to distinquish one from the other? (நிருவாக முறை ஏவுரைகளுக்கும் அதிகார ஒப்படைவு பெற்று செய்யப்படும் விதிகளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? ஒன்றினை மற்றொன்றிடமிருந்து வேறுபடுத்துவது எவ்வாறு?)

(அல்லது)

"The technique of issuing directions is an integral part of modern administrative process". Explain pointing out the need for resort to this technique. ("ஏவுரைகள் வழங்கும் நிலை தற்கால நிருவாக முறையின் ஒரு முழுமையான பகுதியாகும்". இம்முறையை கையாள வேண்டிய தேவையை சுட்டிக் காட்டி இதனை விளக்குக.)

(அல்லது)

Explain the distinction between delegated legislation and adminis-

trative directions. Can the administrative directions be enforced by Courts? Discuss with decided cases. (விதியாக்கச் சட்டத்திற்கும் நிருவாக ஏவுரைகளுக்கும் உள்ள வேறுபாட்டினை எடுத்துரைக்கவும். நிருவாக ஏவுரைகளை நீதிமன்றங்களால் நிறைவேற்ற இயலுமா? வழக்குகளை எடுத்துக்காட்டி விவாதிக்கவும்.)

(அல்லது)

Administrative direction - Write short notes. (நிருவாக உத்திரவு - சிறு குறிப்பு வரைக.)

நிருவாகமுறை ஏவுரைகள் (Administrative Directions) - விளக்கம்:

நிருவாகமுறை ஏவுரைகள் என்பன, நிருவாகத்துறையின் உயர் அதிகார அமைப்பு ஒன்று, தனக்கு கீழ் அமைந்துள்ள கீழ் நிலை அதிகார அமைப்புகள் தன்விருப்புரிமை அதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்குண்டான வழிகாட்டு நெறிகளை வகுத்து, அவற்றிற்கு அளிப்பதாகும். இவற்றை **நிருவாகமுறை குறிப்புரைகள் அல்லது நிருவாக உத்திரவுகள் (Administrative Instructions)** என்றும் அழைக்கலாம். மேலும் ஒரு சில குறிப்பிட்ட விஷயங்களில் அரசாங்கத்தின் கொள்கை என்னவாக இருக்கும் என்பதை பொதுமக்களுக்கு அறிவிக்கும் குறிப்புரைகளாகவும், மேற்கண்ட நிருவாக முறை ஏவுரைகள் இருக்கும்.

நிருவாகமுறை ஏவுரைகளுக்கும் (Administrative Directions), அதிகார ஒப்படைவினால் செய்யப்படும் விதிகளுக்கும் (Rules made under Delegated Legislation) உள்ள வேறுபாடுகள்:

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவினால் நிருவாகத்துறையால் செய்யப்படும் விதிகள், ஆணைகள் ஆகியவை சட்டத்தின் வலிமையைக் கொண்டவை. அவ்விதிகளை மீறுபவர்கள், சட்டத்தால் பொறுப்பு நிலைக்குள்ளாக்கப்படுவார்கள். மேலும் அவற்றை வலியுறுத்திச் செயல் படுத்த முடியும். இத்தோடு மட்டுமில்லாமல் அவ்விதிகளினால் பாதிக்கப் பட்டவர்கள், அவற்றின் செல்லுதன்மை குறித்து நீதிமன்றத்தில் வழக்கிட்டு எதிர்க்க முடியும்.

ஆனால் நிருவாகமுறை ஏவுரைகள் சட்டத்தின் வலிமையைக் கொண்டவையல்ல. இந்த ஏவுரைகளை தனிநபர் ஒருவர் நிருவாகத் துறைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கிட்டு வலியுறுத்திச் செயல் படுத்தும் தீர்ப்பைப் பெற முடியாது. மேலும் இந்த ஏவுரைகளுக்கு கீழ் நிலை நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் கீழ்ப்படியவில்லையானால் அல்லது பின்பற்றவில்லையானால், அதற்கு நீதிமுறையில் தீர்வழி பெற முடியாது; மாறாக நிருவாகமுறையில்தான் தீர்வழி பெற முடியும். மேலும் இந்த ஏவுரைகளினால் பாதிக்கப்பட்ட தனிநபர், செயலுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Mandamus) பிறப்பிக்க வேண்டி உயர் அல்லது உச்ச நீதிமன்றத்தை அணுக முடியாது; அவர் அணுக வேண்டிய இடம்

நிருவாகத்துறைதான்; நீதித்துறை அல்ல. எனவே நிருவாகமுறை ஏவுரைகள் சட்டங்களும் அல்ல; அதிகார ஒப்படைவினால் நிருவாகத் துறையால் செய்யப்படும் விதிகளும் அல்ல.

நிருவாகமுறை ஏவுரையிலிருந்து, அதிகார ஒப்படைவினால் செய்யப்படும் விதியை எவ்வாறு வேறுபடுத்துவது?

நிருவாகத்துறையால் செய்யப்படும் ஒரு விதி நிருவாகத்துறை அதிகார அமைப்பை மட்டும் கட்டுப்படுத்தக் கூடியது என்றால், அது நிருவாகமுறை ஏவுரை ஆகும். ஆனால் அவ்விதி அந்த அரசின் பொது மக்கள் அனைவரையும் கட்டுப்படுத்தக் கூடியது என்றால், அது சட்டமியற்றும் அதிகார ஒப்படைவால் நிருவாகத்துறையால் செய்யப் பட்ட விதியாகும். இவ்வாறு ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்தும் சூத்திரம் பின்வரும் வழக்கில் கூறப்பட்டது.

Raman and Raman v. State of Madras[47] - எனும் வழக்கில், சட்டமியற்றும் அதிகார ஒப்படைவினால் நிருவாகத் துறையால் செய்யப் படும் விதிகள், மூன்றாவது நபரைக் கட்டுப்படுத்தக் கூடியது என்றால், நிருவாகமுறை ஏவுரைகள் நிருவாகத்துறை அதிகார அமைப்புகளை மட்டுமே கட்டுப்படுத்தக் கூடியதாகும் என்று மேற்கண்ட இரண்டிற்கு மிடையிலான வேறுபாடு மிக அழகாக உச்ச நீதிமன்றத்தால் எடுத்துரைக் கப்பட்டது.

நிருவாகமுறை ஏவுரைகள் எப்பொழுது கட்டுப்படுத்தக் கூடியதாகிறது? (Administrative Directions when binding):

நாம் மேலே கண்டவாறு பொதுவாக நிருவாகமுறை ஏவுரைகளுக்கு சட்டத்தின் வலிமை கிடையாது; அதுபோல், அதனை நீதிமன்றங்களின் மூலம் வலியுறுத்திச் செயல்படுத்த முடியாது. எனினும் சில சூழ்நிலை களில் நிருவாகமுறை ஏவுரைகளை நீதிமன்றங்கள் கருத்தில் கொண்டு அவற்றிற்கு செயல்விளைவைக் கொடுக்கின்றன. ஆனால் அவை நிருவாகத் துறையின் விதிகள் எனும் அடிப்படையில் செயல்விளைவு கொடுக்கப் படுவதில்லை; மாறாக பிற அடிப்படையில்தாம் செயல்விளைவு கொடுக்கப்படுகின்றன என்பதை நாம் இங்கு மறந்துவிடக் கூடாது.

எடுத்துக்காட்டாக, **Amratlal v. State**[48] - எனும் வழக்கில், குஜராத் மாநில அரசு 'குஜராத் உதவித் தொகை அளிப்பு விதித் தொகுப்பு' (Gujarat Grant-in-Aid Code) ஒன்றை வெளியிட்டது. இதில் அந்த மாநிலத்தில் செயல்படும் பள்ளிகள் அரசிடமிருந்து உதவித் தொகை பெறுவதற்குண்டான விதிகள் வகுக்கப்பட்டிருந்தன. இந்த விதிகளை நிருவாகமுறை ஏவுரைகளாக குஜராத் உயர் நீதிமன்றம் அறிவித்த போதிலும், இவை பள்ளிகள் உதவித் தொகை பெறுவதற்கான

47. A.I.R. 1959 S.C. 694.
48. A.I.R. 1972 Gujarat 260.

ஒரு நியாயமான உரிமையை (equitable right) உருவாக்குகிறது என்று கூறியது. மேலும், கல்வித்துறை இயக்குநர், தனது தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு பள்ளிக்கு உதவித் தொகை அளிப்பதை நிறுத்தி வைக்கலாம் அல்லது உதவித் தொகையை குறைத்தும் வழங்கலாம். எனவே, அவர் அந்த தன்விருப்புரிமையை அதிகாரத்தை சட்ட நெறிகளுக்கு உட்பட்டு முறைப்படி செயல்படுத்த வேண்டும். இல்லாதுபோனால் அதில் நீதிமன்றம் தலையிடும் என்றும், அப்பொழுது அந்த ஏவுரைகள் நிருவாகத்துறைக்கு எதிராக வலியுறுத்தப்படும் என்றும் குஜராத் உயர் நீதிமன்றம் நிருவாகத்துறைக்கு எச்சரிக்கை விடுக்கும் விதத்தில் தீர்ப்பளித்தது.

4 சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு (அல்லது) விதியாக்கத்தின் மீதான கட்டுப்பாடுகள் [Control over Delegation of Legislative Power (or) Control over Delegated Legislation]

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மீதான நீதிமுறைக் கட்டுப்பாடு (அல்லது) விதியாக்கத்தின் மீதான நீதிமுறை மறுஆய்வு [Judicial Control over Delegated Legislation (or) Judicial Review on Delegated Legislation]

22. Discuss the scope of judicial control of delegated legislation. (அதிகார ஒப்படைப்பில் நீதிமன்ற கட்டுப்படுத்தலின் நோக் கெல்லையை விவாதிக்க.)

(அல்லது)

Write an essay on Judicial Review of Delegated legislation. (விதியாக்கத்தின் மீதுள்ள நீதிமன்றக் கட்டுப்பாட்டை பற்றி ஒரு கட்டுரை வரைக.)

(அல்லது)

Examine with the help of decided cases the scope and effect of Judicial Control over Delegated Legislation in India. (இந்தியாவில் சார்பு சட்ட விதியாக்கத்தின் மீது நீதித்துறைக்கான நீதிமுறை ஆளுகையின் வீச்சையும், விளைவையும் முடிவுற்ற வழக்குகளின் உதவிக் கொண்டு ஆராய்க.)

(அல்லது)

Discuss how far the publication of rules and consultation of interests affected are the essential requirements for the validity of delegated legislation. (விதிகளை வெளியீடு செய்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை கலந்தாலோசித்தல் என்பவை எந்த அளவிற்கு விதியாக்கத்தின் செல்லும் நிலைக்கு இன்றியமையாத தேவை என்பதை விவாதிக்க.)

(அல்லது)

"Courts exercise control on delegated legislation through the doc-

trine of ultra vires" - Explain. ("அதிகார ஒப்படைவு விதியாக்கத்தின் மீது நீதிமன்றங்கள் வரம்பிகந்தமை கோட்பாடு வழியாக கட்டுப் பாட்டை செயல்படுத்துகிறது". விளக்குக.)

(அல்லது)

What do you understand by procedural ultra vires? What is the remedy in such cases? (நடைமுறை அதிகாரவரம்பு மீறல் என்பதால் நீவிர் அறிவது என்ன? அத்தகு நிகழ்வுகளில் தீர்வழி யாது?)

(அல்லது)

Examine the scope of the doctrine of ultra-vires. How does procedural ultra vires differ from substantive ultra vires? (அதிகார வரம்பிகந்தமை என்ற கோட்பாட்டின் தன்மையினை ஆய்க. நடை முறை அதிகார வரம்பிகந்தமை நிலைமுறை அதிகார வரம்பி கந்தமையினின்று எங்ஙனம் வேறுபடும்?)

(அல்லது)

Distinquish between
Procedural ultravires and substantive ultravires

வேறுபடுத்திக் காட்டுக.
செயல்முறையானதற்கு அப்பாற்பட்ட நிலை மற்றும் தன்னுரிமைக்கு அப்பாற்பட்ட நிலை

(அல்லது)

Substantive Ultravires - Write short notes. (தன்னுரிமைக்கு அப்பாற் பட்ட நிலை - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Procedural Ultravires - Write short notes. (நடைமுறை அதிகார வரம்பிகந்தமை - சிறு குறிப்பு வரைக.)

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மீதான நீதிமன்றக் கட்டுப்பாடு - விளக்கம்:

இன்று நிருவாகமுறைச் சட்டம் வேகமாக வளர்ந்து கொண்டு வருகிறது. சட்டமியற்றும் அதிகாரமானது நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, அவைகள் விதிகள், ஆணைகள் போன்றவற்றை செய்கின்றன. இவ்வாறு சட்டமன்றத்திற்கே உரிய சட்டமியற்றும் அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைப்பது, நன்றா அல்லது தீதா என்று ஆராய்வது பயனற்றது. ஏனெனில், நாம் ஏற்கனவே கண்ட காரணங்களின் அடிப்படையில் சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு தவிர்க்க இயலாதது. ஆனால், நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட

சட்டமியற்றும் அதிகாரத்தை அது தவறுதலாக பயன்படுத்தாமல் இருப்பதற்கும், அதிகாரவரம்பை மீறி செயல்படாமல் இருப்பதற்கும், அதிகார துஷ்பிரயோம் செய்யாமல் இருப்பதற்கும் என்ன வழி என்று ஆராய்வது பயனுள்ளதாகும். இதற்கு அந்த அதிகாரத்தின் மீது தக்க கட்டுப்பாடுகள் விதிப்பதே சரியானதாகும்.

சட்டமன்றம் சட்டமியற்றும் (விதிகள் செய்யும்) அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைவு செய்கையில் சில குறிக்கோள்களுக்குட்பட்டு செயல்பட வேண்டியுள்ளது. அஃதாவது, தனது தோற்றுவாய் சட்டத்தில் அதிகார ஒப்படைவிற்கான சட்டமியற்றுக் கொள்கையை (Legislative Policy) அறிவிக்க வேண்டும். அல்லது வழிகாட்டும் நெறிகளை (Guide lines) கொடுக்க வேண்டும். அல்லது தரநிலைகளை (Standards) வகுத்துரைக்க வேண்டும். இல்லையேல் அத்தோற்றுவாய் சட்டமே செல்லாதவையாக ஆகி விடும். ஆக சட்டமன்றத்தை விட்டு சட்டம் வெளியேறுவதற்கு முன்னதாகவே விதிகள் செய்யும் அதிகாரத்தை அளிப்பதில் ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும். இது ஒரு புறமிருக்க, மற்றொரு புறத்தில் நிருவாகத்துறையானது தோற்றுவாய் சட்டத்தின் கீழ் விதிகள் செய்து அமல் செய்ய முற்படுகையில் மேலும் சில கட்டுப்பாடுகளை விதிப்பதும் அவசியமாகும். இந்தப் பணியை நீதிமன்றம் தனது **நீதிமுறை மறு ஆய்வு** அதிகாரத்தின் **(Judicial Review)** மூலமாக மேற்கொள்கிறது. இதுவே சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் மீதான **நீதிமன்றக் கட்டுப்பாடு (Judicial Control)** எனப்படுகிறது. இக்கட்டுப்பாடு **அதிகாரவரம்பு மீறல் கோட்பாட்டின் (Doctrine of Ultra vires)** வாயிலாக செயல்படுத்தப்படுகிறது. இதனை **'அதிகாரவரம்பிக்கந்தமை'** என்றும் அழைப்பர்.

அதிகாரவரம்பு மீறல் (Ultra vires) - விளக்கம்:

பொதுவாக, நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தை மீறி நிருவாகத்துறை சென்று விதிகளைச் செய்தால், அது அதிகாரவரம்பு மீறல் எனப்படுகிறது. இது பின்வருமாறு இருவகைப்படும்.

அதிகாரவரம்பு மீறல் (Ultra vires) - வகைகள்:

அதிகாரவரம்பு மீறல், **நிலைமுறை அதிகாரவரம்பு மீறல் (Substantive Ultra vires)** என்றும், **நடைமுறை அதிகாரவரம்பு மீறல் (Procedural Ultra vires)** என்றும் இரு வகைப்படும். இந்த இரு வகைகளின் கீழ் அதிகார ஒப்படைவின் மீதான நீதிமன்றக் கட்டுப்பாடு செயலுறுத்தப்படுகின்றது. இதன் விரிவான விளக்கத்தைத்தான் நாம் பின்வருமாறு காண உள்ளோம்.

(1) நிலைமுறை அதிகாரவரம்பு மீறல் (Substantive Ultra vires):

சட்டமன்றம் இயற்றும் தோற்றுவாய் சட்டமானது, நிருவாகத்

துறையிடம் விதிகள், ஆணைகள் முதலானவற்றை செய்யும் அதிகாரத்தை ஒப்படைக்கிறது. இவ்வாறு அதிகாரம் வழங்கிய தோற்றுவாய் சட்டத்தை அல்லது நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்புச் சட்டத்தை மீறி நிருவாகத்துறையானது விதிகள், ஆணைகள் முதலானவற்றைச் செய்தால், அது **'நிலைமுறை அதிகாரவரம்பு மீறல்'** எனப்படுகின்றது.

எந்தெந்த சூழ்நிலைகளில் நிலைமுறை அதிகாரவரம்பு மீறல் ஏற்படுகிறது?

பின்வரும் சூழ்நிலைகளில் நிருவாகத்துறை செய்த விதிகள், ஆணைகள் முதலானவை நிலைமுறை அதிகாரவரம்பு மீறலாகிறது. எனவே, அவை செல்லாதவையாகிறது. அச்சூழ்நிலைகள் இதோ,-

(i) தோற்றுவாய் சட்டம் அரசியலமைப்பற்றதாக ஆகுமிடத்து (Where Parent Act is unconstitutional): தோற்றுவாய்ச் சட்டம், நிருவாகத்துறைக்கு சட்டமியற்றும் அதிகாரத்தை அளிக்கிறது. எனவே அச்சட்டம் முதற்கண் செல்லத்தக்கதாகவும், அரசியலமைப்பிற்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும். இவ்வாறு இல்லையெனில், தோற்றுவாய் சட்டத்தின் அடிப்படையில் நிருவாகத் துறை செய்த விதிகள், ஆணைகள் முதலானவைகளும் செல்லாதவை யாகவும், அரசியலமைப்பற்றதாகவும் ஆகி விடும். 'நூலைப் போல் சேலை; தாயைப் போல் பிள்ளை' என்பார்கள். தோற்றுவாய் சட்டமே, அரசியலமைப்பை மீறியதாக இருப்பின், அதனடிப்படையில் நிருவாகத் துறையால் செய்யப்படும் விதிகளும், ஆணைகளும் அதிகாரவரம்பு மீறியதே. எனவே, தோற்றுவாய் சட்டம் ஒழுங்கானதாக இருந்தால், அதனடிப்படையில் செய்யப்பட்ட விதியாக்கமும் ஒழுங்காக அமையும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

தோற்றுவாய் சட்டம் அரசியலமைப்பை மீறியதாக ஆகும் சூழல்கள் மூவகைப்படும். இவை அரசியலமைப்பால் விதிக்கப்பட்டுள்ள **வெளிப்படையான கட்டுப்பாடுகள் (Express Limits)** எனப்படும். அவை,

(அ) இந்திய அரசியலமைப்பில் மூவகைப் பட்டியல்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அஃதாவது, **மாநில பட்டியல் (State List), மத்திய பட்டியல் Central List) மற்றும் இணைப்பு பட்டியல் (Concurrent List). ஷரத்து 246-ன்படி** சட்டமியற்றும் அதிகாரமானது இந்த மூன்று பட்டியல்களின் வாயிலாக பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது. அஃதாவது, மாநிலப் பட்டியலில் உள்ள துறைகளைப் பொறுத்து மாநில அரசுகள் மட்டும் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன. அதுபோல், மத்திய பட்டியலில் உள்ள துறைகளைப் பொறுத்து மத்திய அரசு மட்டும் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன. இணைப்புப் பட்டியலில் உள்ள துறைகளைப் பொறுத்து மாநில அரசுகளும், மத்திய அரசும் சட்டமியற்ற லாம். இந்த ஒழுங்கமைவை மீறி இயற்றப்படும் தோற்றுவாய் சட்டங்கள்

அரசியலமைப்பற்றதாகும். எடுத்துக்காட்டாக, மாநில அரசு மத்திய பட்டியலில் உள்ள துறைகளைப் பொறுத்து சட்டமேதும் இயற்றக் கூடாது. அதுபோல், மத்திய அரசு மாநில பட்டியலில் உள்ள துறை களைப் பொறுத்து சட்டமேதும் இயற்றக் கூடாது. அப்படி இயற்றினால், அது செல்லாதவையாகிவிடும். எனவே, அரசியலமைப்பற்றதான தோற்றுவாய் சட்டங்களின் அடிப்படையில், சட்டமியற்றும் அதிகார ஒப்படைவைப் பெற்ற நிருவாகத்துறையானது விதிகள், ஆணைகள் எதையும் செய்தால் அவைகளும் அரசியலமைப்பற்றதே.

(ஆ) இந்திய அரசியலமைப்பின் **245-வது ஷரத்தின்படி** ஒரு மாநில அரசு, தனக்கு அதிகாரவரம்பு இல்லாத ஒரு நிலப்பரப்பின் மீது தனது சட்டங்களை நீட்டிக்க (அதாவது பொருந்துமாறு செய்ய) முடியாது. எனவே, மாநில அரசின் ஒரு தோற்றுவாய் சட்டம், புற நிலை அதிகாரவரம்பு (Extra-territorial jurisdiction) உடையதாக இருப்பின், அது அரசியலமைப்பற்றதாகும். ஆகவே, இதனடிப்படையில் சட்டமியற்றும் அதிகார ஒப்படைப்பு பெற்ற நிருவாகத்துறை செய்யும் விதிகளும், ஆணைகளும் அரசியலமைப்பற்றதே. எனவே, அவை செல்லாதவையாகும்.

(இ) இந்திய அரசியலமைப்பின் **மூன்றாவது பகுதி (Part III)** குடிமக்களின் **அடிப்படை உரிமைகள் (Fundamental Rights)** பற்றி விளக்குகிறது. இந்த அடிப்படை உரிமைகளை மீறியோ அல்லது அவற்றின் மீது நியாயமற்ற கட்டுப்பாடுகளை (unreasonable restrictions) விதித்தோ சட்டமியற்ற சட்டமன்றத்திற்கு அதிகாரமில்லை. எனவே, சட்டமன்றம் இயற்றிய ஒரு தோற்றுவாய் சட்டம், அடிப்படை உரிமைகளை மீறியதாக இருப்பின் அத்தோற்றுவாய் சட்டமும், அதனடிப்படையில் அதிகார ஒப்படைவு பெற்ற நிருவாகத்துறையால் செய்யப்படும் விதிகள், ஆணைகள் போன்றவைகளும் அரசியலமைப்பற்றதாகி, செல்லாதவையாகிவிடும்.

Chintaman Rao v. State of M.P.[1] -இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 19 (1)(g)-ஆனது, எந்த தொழில், வணிகம் அல்லது வியாபாரத்தையும் புரிய குடிமக்களுக்கு அடிப்படை உரிமை அளிக்கிறது. இந்நிலையில் 1948-ஆம் ஆண்டில் பீடி உற்பத்தி ஒழுங்குமுறைச் சட்டம் (The C.P. Regulation of Manufacture of Bidies Act, 1948) இயற்றப் பட்டது. இது சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு தோற்றுவாய்ச் சட்டமாகும். இச்சட்டமானது நிருவாகத்துறை முகவரான துணை ஆணையாளருக்கு (Deputy Commissioner), விவசாயம் செய்யும் பருவத்தில் பீடி செய்யும் தொழிலை யாரும் செய்யக் கூடாதென தடை விதிக்க அதிகாரம் அளித்தது. இந்த அதிகாரத்தின் அடிப்படையில், துணை ஆணையாளரும் பீடித் தொழிலுக்கு தடை விதித்து ஆணை ஒன்றை பிறப்பித்தார். ஆனால் இங்கு பீடித் தொழிலை தடை செய்யும் மேற்படி தோற்றுவாய் சட்டமே, அரசியலமைப்புச் சட்டத்தின் மேற்படி ஷரத்து 19 (1) (g) கூறும் அடிப்படை உரிமையை மீறிவதாக உள்ளது.

1. A.I.R. 1951 S.C. 118.

எனவே மேற்படி தோற்றுவாய் சட்டம் அரசியலமைப்பற்றதெனவும், அதனடிப்படையில் அதிகாரம் பெற்ற துணை ஆணையாளர் பிறப்பித்த ஆணையும் அரசியலமைப்பற்றதே என்றும், எனவே அந்த ஆணை செல்லத் தக்கதல்ல என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேற்கண்ட மூவகை வெளிப்படையான கட்டுப்பாடுகளைத் தவிர, இந்திய அரசியலமைப்பால் சில **உட்கிடையான கட்டுப்பாடுகளும் (Implied Limits)** நிருவாகத்துறையின் சட்டமியற்றும் அதிகாரத்தின் மீது விதிக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒரு தோற்றுவாய் சட்டம் மீறினாலும், அத்தோற்றுவாய் சட்டம் அரசியலமைப்பற்றதாகும். இதனால் நிருவாகத்துறை செய்யும் விதிகள், ஆணைகள் ஆகியவைகளும் அரசியலமைப்பற்றதாகும். அந்த உட்கிடையான கட்டுப்பாடுகள் வருமாறு. (அ) தோற்றுவாய் சட்டத்திலேயே, அச்சட்டத்தின் விரிவான கொள்கை (legislative policy) கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். (ஆ) நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தை அது எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பதற்குண்டான வழிகாட்டு நெறிகள் (guidelines) அத்தோற்றுவாய் சட்டத்தில் கொடுக்கப் பட்டிருக்க வேண்டும்.

(ii) அதிகார ஒப்படைப்பு மூலமாக நிருவாகத்துறையால் செய்யப்பட்ட விதியாக்கம் தோற்றுவாய் சட்டத்திற்கு முரணாக இருக்குமிடத்து (Where delegated legislation is inconsistent with the Parent Act): தோற்றுவாய்ச் சட்டம், சட்டமியற்றும் அதிகாரத்தை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கிறது. அதனடிப்படையில் நிருவாகத் துறை விதிகளை ஆக்குகின்றது. இங்கு நிருவாகத்துறையின் விதியாக்கம், தோற்றுவாய் சட்டத்தின் நோக்கத்திற்கும், குறிக்கோள்களுக்கும், கொள்கைகளுக்கும் ஒத்திசைந்து இருக்க வேண்டும். இவ்வாறு இல்லாமல் தோற்றுவாய் சட்டத்திற்கு முரணாக இருந்தால், நிருவாகத் துறை செய்த விதிகள், ஆணைகள் போன்றவை செல்லாதவையாகும். அதாவது தோற்றுவாய் சட்டம் அளித்த அதிகாரத்திற்கு அப்பாற் சென்று நிருவாகத்துறையானது விதியாக்கம் ஏதும் செய்தல் கூடாது.

Mohd. Yasin v. Town Area Committee[2] - இவ்வழக்கில் தோற்றுவாய் சட்டத்தின் கீழ், நகர்ப்புற குழுவானது, தனது உடைமையை (property) பிறர் பயன்படுத்துங்கால் (use) அல்லது அனுபவிக்குங்கால் (occupation), கட்டணம் (fee) விதிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது. ஆனால் நகர்ப்புற குழுவானது, தனது உடைமையை பயன்படுத்திற்கோ அல்லது அனுபவித்ததற்கோ அல்லாமல் வேறு காரணங்களுக்காக துணை விதிகளை (Bye-Laws) இயற்றி அதன் மூலம் கட்டணம் வசூலித்தது. இத்துணை விதிகள் தோற்றுவாய் சட்டத்தின் மூலமாக கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மீறுவதால், அவை செல்லாதவையென உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

2. A.I.R. 1952 S.C. 115.

Tahir Hussain v. District Board, Mujaffar Nagar[3] - இவ் வழக்கில் தோற்றுவாய் சட்டத்தின் மூலமாக மாவட்ட வாரியத்திற்கு, சந்தைகளை (markets) ஒழுங்குபடுத்துவதற்கும், சுற்றுப்புறச் சுகா தாரத்தை மேம்படுத்துவதற்குமான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. மாவட்ட வாரியம் அந்த அதிகாரத்தின் அடிப்படையில் செய்த துணை விதிகளின் (Bye-Laws) மூலமாக கால்நடைச் சந்தை (cattle market), கூடுவதையே தடை செய்துவிட்டது. இது தோற்றுவாய் சட்டத்தை மீறிய தாகும் என்று உச்ச நீதிமன்றம் கூறி, அத்துணை விதிகளை செல்லாதவை யென அறிவித்தது.

(iii) அதிகார ஒப்படைப்பு மூலமாக நிருவாகத்துறையால் செய்யப்பட்ட விதியாக்கம் அரசியலமைப்பற்றதாக ஆகுமிடத்து (Where delegated legislation is unconstitutional): சில சமயங்களில் தோற்றுவாய் சட்டம் அரசியலமைப்பிற்குட்பட்டதாகவும் செல்லத்தக்க தாகவும் இருக்கும். மேலும் அதனடிப்படையில் அதிகார ஒப்படைவு பெற்று நிருவாகத்துறை செய்த விதிகளும் தோற்றுவாய் சட்டத்துடன் ஒத்திசைந்து இருக்கும். எனினும், அவ்விதிகள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்டதாக இருப்பின், அரசியலமைப்பற்றதாகி, செல்லாதவையாகிவிடும். எனவே, நிருவாகத்துறையின் விதியாக்கம் தோற்றுவாய் சட்டத்துடன் ஒத்திசைந்து இருந்தால் மட்டும் போதாது; அரசியலமைப்புச் சட்டத்துடனும் ஒத்திசைந்து இருக்க வேண்டும்.

Narendra Kumar v. Union of India[4] - இவ்வழக்கில் தோற்றுவாய் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்துடன் ஒத்திசைந்து இருந்தாலும், அதன் கீழ் நிருவாகத்துறையால் ஆக்கப்பட்ட விதிகள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்டதாக இருப்பின், அவ்விதிகள் செல்லத்தக்கவை யல்ல என்று உச்ச நீதிமன்றம் திட்ட வட்டமாக தீர்ப்பளித்தது.

Dwarka Prasad Lakshmi Narayan v. State of U.P.[5] - இவ் வழக்கின் பொருண்மைகளின்படி 1946-ஆம் ஆண்டின் இன்றியமையாப் பண்டங்கள் (தற்காலிக அதிகாரங்கள்) சட்டத்தின் (தோற்றுவாய் சட்டம்) கீழ் 1953-ஆம் ஆண்டில் உத்திர பிரதேச நிலக்கரி கட்டுப்பாடு ஆணை (மாநில அரசின் விதியாக்கம்) பிறப்பிக்கப்பட்டது. இவற்றில் மேற்கண்ட தோற்றுவாய் சட்டம் அரசியலமைப்பிற்குட்பட்டதாக இருந் தாலும், அதன் கீழ் செய்யப்பட்ட மேற்படி ஆணை அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 19 (1) (g) -யை மீறுவதாக இருந்தது. எனவே, மேற்படி ஆணை செல்லாது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்தது. மேற்படி ஆணையின் சட்டக் கூறு 3 (2) (b)-ஆனது நிலக்கரி வியாபாரத்திற்கு தேவையான உரிமம் பெறுவதிலிருந்து எந்தபருக்கும் விலக்களிக்க மாநில

3. A.I.R. 1954 S.C. 630.
4. A.I.R. 1954 S.C. 747.
5. A.I.R. 1954 S.C. 224.

நிலக்கரி கட்டுப்பாட்டாளருக்கு (State coal controller) அதிகாரம் அளிக்கிறது. இக்கூறு (clause), எவ்வித வழிகாட்டு நெறிகளும் இல்லாமல் நிருவாகத்துறைக்கு வரம்பற்ற, ஏதேச்சதிகாரமான அதிகார மளிக்கிறது. எனவே, அரசியலமைப்பின் 19 (1) (g) -யின்படியிலான தொழில், வணிகம், வியாபாரம் செய்ய எந்நபருக்கும் உள்ள அடிப்படை உரிமையை மேற்படி கூறு மீறுவதாக உள்ளதால், செல்லாதது என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடக் கூறியது.

(iv) நியாயமற்றதன்மை (Unreasonableness): தோற்றுவாய் சட்டத்தின் கீழ் நிருவாகத்துறை முகவர் நிலைகளான நகராட்சிகள் (Corporations), இதர வட்டார அமைப்புகள் (other Local Bodies) ஆகியவை செய்யும் துணை விதிகள் (Bye-Laws), நியாயமற்றவையாக இருப்பின், அவற்றை செல்லாதது, இல்லாநிலையது என்று நீதிமன்றம் அறிவிக்கலாம். இப்படிப்பட்ட ஒரு நிலைப்பாடு இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஒன்றாகவே காணப்படுகிறது.

இங்கிலாந்து வழக்குகள்: Alridge v. Islington Corporation[6] எனும் வழக்கில், தோற்றுவாய் சட்டமொன்றின் கீழ் நகராட்சி மன்றம் ஆக்கிய துணை விதிகளானது, வீட்டுச் சொந்தக்காரர்கள் தங்களால் வாடகைக்கு விடப்பட்ட வீடுகளை ஆண்டுக்கொருமுறை சுத்தம் செய்ய வேண்டும் என்றும், அவர்கள் அப்படி செய்யவில்லையானால் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும் கூறின. இந்த வழக்கில் வீட்டுச் சொந்தக்காரர் வாடகைக்கு குடியிருப்பவரோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறினாலொழிய அல்லது அத்துமீறி வீட்டினுள் நுழைந்தாலொழிய வீட்டினைச் சுத்தம் செய்ய இயலாதென எடுத்துக் கூறப்பட்டது. வழக்கினை விசாரித்த நீதிமன்றம், நியாயமற்ற விதிகளை இயற்றும் அதிகாரத்தை நகராட்சி மன்றத்திற்குச் சட்டமன்றம் அளித்திருப்பதாக கருத மேற்படி துணை விதிகள் இடமளிக்கின்றன என்றும், எனவே அவை செல்லாதவை என்றும் தீர்ப்பளித்தது.

Kruse v. Johnson[7] - எனும் முக்கிய வழக்கில் தோற்றுவாய் சட்டத்தின் கீழ் நகர்மன்ற குழுவால் செய்யப்பட்ட ஒரு துணை விதியானது, குடியிருக்கும் வீட்டிலிருந்து அய்ம்பது கெசம் (fifty yards) தொலைவிற்குள் உள்ள எந்தவொரு பொது இடத்திலும் அல்லது நெடுஞ்சாலையிலும் எவரும் இசைக்கவோ அல்லது பாடவோ கூடாது, என்று தடை விதிக்கிறது. இது நியாயமற்றதாகும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்திய வழக்குகள்: Air India v. Nargesh Meerza[8] - எனும் வழக்கில் தோற்றுவாய் சட்டத்தின் கீழ் ஏர்-இந்தியா நிறுவனத்தால் ஒரு

6. (1909) 2 KB 127.
7. (1898) 2 QB 91: 67 LJQB 782: 79 LT 647
8. (1981) 4 SCC 335 : A.I.R. 1981 S.C. 1829

ஒழுங்குமுறை (regulation) விதி செய்யப்பட்டது. இதன்படி, ஒரு விமான பணிப்பெண் கர்ப்ப வதியானால், அவளது பணி முடிவிற்கு வரும். இந்த ஒழுங்குமுறையானது ஏதேச்சதிகாரமானதாகவும், நியாயமற்றதாகவும், நாகரிமடைந்த ஒரு சமுதாயத்தின் கருத்துகளுக்கு களங்கம் கற்பிப்பதாக வும், மனித சுபாவத்தின் இயற்கையான நடைமுறைகளில் தலையீடுவதாக வும் உள்ளது என்றும், எனவே மேற்படி ஒழுங்குமுறை செல்லாது என்றும் உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

Central Inland Water Transport Corporation v. Brojo Nath Ganguly[9] எனும் வழக்கில் தோற்றுவாய் சட்டத்தின் கீழ் ஒரு நிருவாகத் துறை முகவர் நிலையால் செய்யப்பட்ட ஒரு விதியானது, நிரந்தரப் பணியாளர் ஒருவரை, அவர் பணி மூப்பிற்கான வயதை அடையும் முன்னரே, பணியிலிருந்து நீக்க வகை செய்தது. இது நியாயமற்றது என்றும், பொதுக் கொள்கைக்கு எதிரானது என்றும், எட்டாம் ஹென்றி விதியைப் போன்றது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(v) தீயெண்ணம் (Mala fide - Bad faith): இங்கிலாந்தில், தகுதி வாய்ந்த ஒரு சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தை, அது தீயெண்ணத்துடன் அல்லது தகாத நோக்கத்துடன் இயற்றப்பட்டுள்ளது எனும் அடிப்படையில் எவரும் நீதிமன்றத்தில் வழக்கிட்டு எதிர்க்க முடியாது. ஒரு சட்டத்தை இயற்றுவதற்கு சட்டமன்றத்திற்கு தகுதி உள்ளது என்பது நிலைநிறுத்தப்பட்டால், அச்சட்டம் செல்லத்தக்கதே. ஆனால் இதற்கு ஒரு கட்டுப்பாடு உள்ளது. அஃதாவது, சட்டமன்றம் எப்பொழுதெல்லாம் நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு சட்டமியற்றும் அதிகாரத்தை அளிக்கிறதோ, அப்பொழுதெல்லாம் அந்த அதிகாரத்தை நிருவாகத்துறை அதிகார அமைப்பானது நல்லெண்ணத்தோடுதான் (bona fide - good faith) பயன்படுத்த வேண்டும். அதில் தீயெண்ணம் உள்ளதாக நீதிமன்றம் கருதுமேயானால், அந்த அதிகாரப் பயன்பாட்டை அதிகாரவரம்பு மீறியதாக நீதிமன்றம் அறிவிக்கலாம்.

நாம் ஏற்கனவே கண்ட **Kruse v. Johnson**[10] எனும் வழக்கில் பிரச்சனைக்குள்ளான துணை விதியானது, நகர்மன்றக் குழுவின் தீயெண்ணத்தைச் சுட்டிக் காட்டுகிறது என்றும், இதனடிப்படையிலும் அத்துணை விதியை அதிகாரவரம்பு மீறியது என்று நீதிமன்றங்கள் அறிவிக்கலாம் என்றும் **நீதிப்பெருமகனார் ருஸ்ஸெல் (Lord Russel)** கூறினார்.

இந்தியாவிலும் மேற்கண்ட நிலைப்பாடு காணப்படுவதை வழக்குகளின் மூலம் அறிய முடிகிறது. நிருவாகத்துறையானது, தனது சட்டமியற்றும் அதிகாரத்தை தீயெண்ணத்துடன் பயன்படுத்தியுள்ளதா அல்லது நல்லெண்ணத்துடன் பயன்படுத்தியுள்ளதா என்று உச்ச

9. (1986) 3 SCC 156 : A.I.R. 1986 S.C. 1571
10. (1898) 2 QB 91: 67 LJQB 782: 79 LT 647

நீதிமன்றம் சில வழக்குகளில் ஆராய்ந்துள்ளது. ஆனால் திட்டவட்ட மான கருத்து எதையும் உச்ச நீதிமன்றம் இதுகாறும் கூறவில்லை.

(vi) கீழ்ப்படையான அதிகார ஒப்படைப்பு (Sub-delegation): நாம் ஏற்கனவே கண்ட இலத்தீன் முதுமொழியான **'ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை மீட்டளிக்க முடியாது' (Delegatus Non Potest Delegare)** என்பதின்படி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை, அவர் மீண்டும் மற்றொருவரிடம் ஒப்படைக்க முடியாது. ஆனால் அவ்வாறு மீண்டும் ஒப்படைக்கலாம் என்று அதிகாரத்தை ஒப்படைக்கும் பொழுதே குறிப்பிடப்பட்டால், அவர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை மற்றொருவரிடம் ஒப்படைக்கலாம். இந்த விதிதான் கீழ்ப்படையான அதிகார ஒப்படைவிலும் பின்பற்றப்படுகிறது. எனவே தோற்றுவாய் சட்டத்தின் கீழ் நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தை நிருவாகத்துறை அதன் கீழ் அமைந்துள்ள நிருவாகத்துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைக்க இயலாது. ஆனால் இவ்வாறு ஒப்படைக்கலாம் என்று அந்த தோற்றுவாய் சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டிருந்தால் நிருவாகத்துறையானது, தன்னிடம் ஒப்படைக் கப்பட்ட அதிகாரத்தை மீண்டும் தனது கீழ் அமைந்துள்ள நிருவாகத் துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைக்கலாம். எனினும் இவ்வாறு ஒப்படைப்பதற்கு சில வரம்புகளும், காப்பு விதிகளும் விதிக்கப்பட வேண்டியது அவசியமாகும். இல்லையென்றால் கீழ்ப்படையான அதிகார ஒப்படைவைப் பெற்ற நிருவாகத்துறை முகவர் நிலைகள் ஏதேச்சதிகாரமாக செயல்படக் கூடும். அத்தகு வரம்புகளும், காப்பு விதிகளும் (Limitations and Safeguards) வருமாறு.

(அ) தோற்றுவாய் சட்டம் கீழ்ப்படையான அதிகார ஒப்படைவை ஒரு குறிப்பிட்ட பதவிக்கும் மேல் அமைந்த அதிகாரிகள் மற்றும் அதிகார அமைப்புகளிடம் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டால், அவர்களைத் தவிர வேறு எவரிடமும் கீழ்ப்படையான அதிகார ஒப்படைவைச் செய்தல் கூடாது.

(ஆ) கீழ்ப்படையான அதிகார ஒப்படைவைப் பெற்ற நிருவாகத் துறை முகவர் நிலைகள் (அதாவது துணைப் பிரதிநிதி - Sub-delegate) தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்திற்கும் அப்பாற் சென்று விதியாக்கம் செய்தல் கூடாது.

(இ) தோற்றுவாய் சட்டத்தின் மூலம் நேரடியாக அதிகாரம் பெற்ற நிருவாகத்துறையானது (பிரதிநிதி) சில நிபந்தனைகளை விதித்து, தனது கீழ் அமைந்துள்ள நிருவாகத்துறை முகவர் நிலைகளிடம் (துணைப் பிரதிநிதி) கீழ்ப்படையான அதிகார ஒப்படைவு செய்தால், அந் நிபந் தனைகளை அத்துணைப் பிரதிநிதி பூர்த்தி செய்தல் வேண்டும். இல்லாது போனால், அத்துணைப் பிரதிநிதி செய்யும் விதிகள், ஆணைகள் போன்றவை அதிகாரவரம்பு மீறியதாகி செல்லாதவையாகிவிடும்.

எனவே மேற்கண்ட வரம்புகளையும், காப்பு விதிகளையும் பின் பற்றாமால் கீழ்ப்படையான அதிகார ஒப்படைவு பெற்ற நிருவாகத்துறை முகவர் நிலைகள் (துணை பிரதிநிதிகள்) செய்யும் விதிகளும், ஆணை களும் வரம்பு மீறியவை என்றும், செல்லாதவை என்றும் நீதிமன்றத்தால் அறிவிக்கப்படும்.

(vii) நீதிமுறை மறுஆய்வினை விலக்கல் (Exclusion of Judicial Review): நிருவாகத்துறை செய்யும் விதியாக்கத்தின் செல்லுதன்மை குறித்து நீதிமன்றத்தில் வழக்கிட்டு எதிர்த்து வழக்காட முடியும். உயர் நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும் நிருவாகத்துறையின் விதியாக்கத்தை நீதிமுறையில் மறுஆய்வு செய்து நீக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளன. இந்நிலையில், நிருவாகத்துறை செய்த ஒரு விதியில், அவ்விதியின் செல்லு தன்மை குறித்து எந்நீதிமன்றத்தின் வாயிலாகவும் வினவக் கூடாது போன்று நீதிமன்றத்தின் மறுஆய்வு அதிகாரத்தை விலக்கும் வண்ணம் தடைகள் ஏதேனும் விதிக்கப்பட்டிருப்பின் அவ்விதி செல்லாது. ஏனெனில் நீதிமுறை மறுஆய்வு அதிகாரம் என்பது, இந்திய அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பில் (Basic Structure of Constitution) ஒரு கூறாகும். இதை எச்சட்டத்தின் வாயிலாகவும் விலக்கவோ அல்லது பறிக்கவோ முடியாது.

(viii) முன்மேவும் அதிகாரம் (Retrospective operation): நிருவாகத்துறையானது தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தை பயன்படுத்தி செய்யும் எந்த ஒரு விதிக்கும் அல்லது ஆணைக்கும், முன்மேவும் அதிகாரம் வழங்க இயலாது. அதாவது அவ்விதி அல்லது ஆணை செய்யப்பட்ட தேதிக்கும் முன்பான ஒரு தேதியிலிருந்து அமலுக்கு வரத்தக்க விதத்தில் விதியாக்கம் செய்ய இயலாது. அவ்வாறு செய்தால் அது அதிகாரவரம்பு மீறியதாகும். எனவே செல்லாதவை என நீதிமன்றத்தால் அறிவிக்கப்படத்தக்கதாகும்.

Bagga v. Murhar Rao[11] - எனும் வழக்கில், நிருவாகத்துறை யானது 25-2-1955ல் விதிகளைச் செய்தது. அவ்விதிகள் 19-3-1955-ஆம் தேதியில் அரசிதழில் வெளியிடப்பட்டன. இதற்கு முன்னதான ஒரு தேதியிலிருந்து அமலுக்கு வரத்தக்க விதத்தில் அவ்விதிகளுக்கு நிருவாகத் துறையானது முன்மேவும் அதிகாரம் வழங்க இயலாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(2) நடைமுறை அதிகாரவரம்பு மீறல் (Procedural Ultra vires):

சட்டமன்றம் இயற்றும் தோற்றுவாய் சட்டத்தில் சில நடை முறைகள் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த நடைமுறைகளின்படி செயல் பட்டுதான் நிருவாகத்துறையானது விதிகள், ஆணைகள் போன்ற வற்றைச் செய்ய வேண்டும். அல்லது செயல்பட வேண்டும். இந்த

11. A.I.R. 1956 Hyd. 35.

நடைமுறைகளை மீறி நிருவாகத்துறை செயல்பட்டால், அது **'நடை முறை அதிகாரவரம்பு மீறல்'** எனப்படும்.

எந்தெந்த சூழ்நிலைகளில் நடைமுறை அதிகாரவரம்பு மீறல் ஏற்படுகிறது?

சட்டமன்றம் சட்டமியற்றும் (விதியாக்கம்) அதிகாரத்தை நிருவாகத் துறையிடம் ஒப்படைக்கும் பொழுது, தனது தோற்றுவாய் சட்டத்தில் (Parent Act) சில நடைமுறைகளைக் குறிப்பிட்டு அதன்படி நடவடிக்கைகளை மேற்கொள்ள நிருவாகத் துறையைக் கோருகிறது. அந்நடைமுறைகள் *(1)* முன் வெளியீடு (Pre-publication); *(2)* பாதிக்கப் படுவோரை கலந்தாய்தல் (Consultation of affected interests); *(3)* வெளியீடு (Publication) போன்றவைகளாகும். நிருவாகத்துறையானது மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றவில்லையானால், அதன் நடவடிக்கைகள் நடைமுறை அதிகாரவரம்பு மீறலாகிவிடும்.

இங்கு நாம் மற்றொரு முக்கியமான விஷயத்தையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அஃதாவது, எந்த நடைமுறையில் நிருவாகத் துறை செயல்பட வேண்டும் என்று அறிவிக்கும் வகைமுறை (சட்டப் பிரிவு -Provision) **வலியுறுத்தும் தன்மையுடையதா (Mandatory)** அல்லது **அறிவுறுத்தும் தன்மையுடையதா (Directory)** என்பதைக் கவனிக்க வேண்டும். வலியுறுத்தும் தன்மையுடையதாக இருப்பின், அவ்வகைமுறையை கட்டாயமாக பின்பற்ற வேண்டும். இல்லையெனில் நிருவாகத்துறையின் நடவடிக்கைகள் செல்லாதவையாகிவிடும். அறிவுறுத்தும் தன்மையுடையதாக இருப்பின், அவ்வகைமுறை மீறப் பட்டாலும், நிருவாகத்துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் செல்லாததென்று அறிவிக்கப்படமாட்டாது. எனவே நிருவாகத் துறையின் நடவடிக்கை ஒன்றை செல்லாததென்று அறிவிப்பதற்கு முன்பாக, நடைமுறைகளைக் குறிப்பிடும் வகைமுறை வலியுறுத்தும் தன்மையுடையதா அல்லது அறிவுறுத்தும் தன்மையுடையதா என்பதை நீதிமன்றங்கள் கவனிக்கின்றன; கவனிக்க வேண்டும்.

தற்பொழுது நாம் மேலே கண்ட மூவகை நடைமுறைகள் குறித்து சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

(i) முன் வெளியீடு (Pre-publication): தோற்றுவாய் சட்டத்தின் மூலம் அதிகாரம் பெற்று நிருவாகத்துறையானது விதிகளைச் செய்கிறது. இதற்கென முதலில் வரைவு-விதிகளை (Draft Rules) நிருவாகத்துறை வரைகிறது. இவ்வரைவு விதிகளை முதலில் வெளியிட்டு சம்பந்தப்பட்ட வர்களின் கருத்துகளைப் பெற்றால், வரைவு விதிகளில் உள்ள குறைகளை அறியவும், அவற்றைக் களையவும் ஏதுவாக இருக்கும். இவ்வாறு செய்யப் பட வேண்டின், தோற்றுவாய் சட்டத்திலேயே வரைவு விதிகள் முன்ன தாக வெளியிடப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு குறிப்பிடப்படவில்லையானால், நிருவாகத்துறையானது வரைவு விதிகளை முன்னதாக வெளியிட வேண்டிய அவசியமில்லை.

நிருவாகத்துறை முன்னதாக வரைவு விதிகளை வெளியிடுமானால், அதனால் ஏற்படும் விளைவுகள் அதிகம். 1897-ஆம் ஆண்டின் பொதுக் கூறுகள் சட்டத்தின் (The General Clauses Act, 1897) 23-வது பிரிவின்படி, முன்னதாக வெளியீடு செய்தலின் விளைவுகள் வருமாறு.

(அ) நிருவாகத்துறையின் விதிகளால் பாதிக்கப்படுபவர்கள் அறிவதற்காக வரைவு விதிகள் வெளியிடப்படுகின்றன.

(ஆ) எத்தகைய வெளியீடு போதுமானதென நிருவாகத் துறை கருதுகிறதோ, அந்த வகையில் வரைவு விதிகள் வெளியிடப்படும்.

(இ) எந்தத் தேதிக்குப் பிறகு வரைவு விதிகள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பது பற்றிய அறிக்கையும் வரைவு விதிகளோடு வெளியிடப்படும்.

(ஈ) வரைவு விதிகள் அறுதி செய்யப்படுகையில் (finalising the draft rules) யோசனைகளும், (suggestions) அதனால் பாதிக்கப்படும் பொதுமக்களால் கொடுக்கப்படும் ஆட்சேபணைகளும் (objections) ஆராய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

அடுத்ததாக, நிருவாகத்துறையின் விதிகளை முன் வெளியீடு செய்தல் வேண்டும் என்று தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிடப் பட்டிருந்தும், அவ்வாறு முன் வெளியீடு செய்யப்படவில்லையானால், நிருவாகத்துறையின் நடவடிக்கை அதிகாரவரம்பு மீறியதாகுமா என்ற வினா இங்கு எழுகிறது. 1897-ஆம் ஆண்டின் பொதுக் கூறுகள் சட்டத்தின் (The General Clauses Act, 1897) 23 (5)-வது பிரிவின்படி, நிருவாகத்துறை செய்த விதிகள் அரசிதழில் வெளியிடப்பட்டுவிட்டால், அவ்விதிகள் முறையாகச் செய்யப்பட்டவை என்பதற்கு அறுதியான சான்றுறுதியாகும் (conclusive proof). இதனால் வரைவு விதிகளை முன்னதாக வெளியிடாவிட்டாலும், அவ்விதிகளை அறுதியாக்கிய பிறகு அரசிதழில் வெளியிட்டு விட்டால், அவ்விதிகள் முறையாகச் செய்யப் பட்டன எனும் சான்றுறுதியைப் பெறுகின்றன. இந்த நிலை இருப்பதால், முன் வெளியீடு செய்ய வேண்டும் எனும் நடைமுறையை, வலியுறுத்தும் தன்மையுடையது என்று கூற இயலாது. அது அறிவுறுத்தும் தன்மை யுடையதாகவே கருதப்படும். ஒருவேளை அறுதியான சான்றுறுதி என்று கூறும் சட்டப்பிரிவு இல்லாமலிருக்குமானால், முன் வெளியீடு செய்தல், வலியுறுத்தும் தன்மையுடையதாக அமையும்.

நிருவாகத்துறையின் விதிகளை முன் வெளியீடு செய்தல் பல நன்மைகளைக் கொண்டிருந்தாலும், பல இந்திய தோற்றுவாய் சட்டங்களில், அவை சட்ட நடைமுறையின் ஒரு பகுதியாக குறிப்பிடப் படவில்லை. ஒரு சில சட்டங்களில்தாம் காணப்படுகின்றன.

(ii) பாதிக்கப்படுவோரை கலந்தாய்தல் (Consultation of affected interests): நிருவாகத்துறையின் விதியாக்கத்தால் பாதிக்கப்

படுவோரைக் கலந்து அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு, அவற்றில் ஏற்கக் கூடியவைகளை ஏற்று, விதிகள் செய்யப்பட்டால், அனைவருக்கும் அவ்விதிகளால் மனநிறைவு ஏற்படும். பாதிக்கப்படுவோர் தங்கள் கருத்துக்களை விதிகள் செய்யப்படுமுன் நிருவாகத்துறையிடம், அதன் முகவர் நிலைகளிடம் எடுத்துக் கூறும் வாய்ப்பைப் பெறுவர். இக் கருத்துக்களை ஆராய்ந்த பிறகே இறுதி முடிவுகள் எடுக்கப்படும்; விதிகள் செய்யப்படும்; இவ்வாறு செய்யப்பட்ட விதிகளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும். எளிதில் அமலாகும்; விதிகள் செய்யும் அதிகாரங்கள் நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்படுவதால் ஏற்படும் சிக்கல்கள் நீங்கும்; நிருவாகத்துறை, ஏதேச்சதிகார மனப்பான்மையுடன் தான் நடந்து கொள்ளும் எனும் கண்ணோட்டம் மாறும்; மறையும்.

மேற்கண்டவாறு பல நன்மைகள், பாதிக்கப்பட்டோரைக் கலந்தாய்தலில் இருந்தாலும், இந்தியாவில் பல தோற்றுவாய் சட்டங்களில் இந்த நடைமுறை சேர்க்கப்படுவதில்லை. தோற்றுவாய் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தாலொழிய, நிருவாகத்துறையானது பாதிக்கப்படுவோரைக் கலந்து அவர்களது கருத்துக்களை கேட்டறிய வேண்டுமென்ற அவசியமில்லை. தோற்றுவாய் சட்டத்தில் இந்த நடைமுறை சேர்க்கப்பட்டிருந்து, அது நிருவாகத்துறையால் பின்பற்றப் படவில்லையானால், நிருவாகத்துறை செய்த விதிகள் அதிகாரவரம்பு மீறியதாகும்; செல்லாதவையென நீதிமன்றத்தால் அறிவிக்கப்படும். இந்த நடைமுறை தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால், அது வலியுறுத்தும் தன்மையுடையதாக கருதப்படும்.

Rajnarin v. Chairman, P.A. Committee[12] எனும் வழக்கில் வரி விதிக்கும் சட்டக் கூறை (Taxing Clause) விஸ்தரிக்கும் முன், பாதிக்கப்படுவோர்களின் ஆட்சேபணைகளைப் பதிவு செய்யும் வாய்ப்பு தோற்றுவாய் சட்டத்தில் அளிக்கப்பட்டிருந்தது. அச்சட்டக் கூறை மாற்றி, ஆட்சேபணைகளைப் பதிவு செய்யும் வாய்ப்பு அளிக்காமல் அது விஸ்தரிக்கப்பட்டது. நிருவாகத்துறையின் இந்த நடவடிக்கை செல்லத் தக்கதல்ல என்று உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

Banwarilal Agarwalla v. State of Bihar[13] எனும் வழக்கின் பொருண்மைகளின்படி, சுரங்கச் சட்டத்தின் (The Mines Act) 59-வது பிரிவின்படி, நிருவாகத்துறை முகவர் நிலையானது வரைவு ஒழுங்குமுறைகளைச் (Draft Regulations) சுரங்க வாரியங்களுக்கு (Mining Boards) அனுப்பி, அவைகளின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னரே, அவ் வொழுங்குமுறை விதிகளை அறுதி செய்ய வேண்டும். இந்த நடைமுறை நிருவாகத்துறை முகவர் நிலையால் பின்பற்றப்படவில்லை. எனவே நிருவாகத்துறை முகவர் நிலை செய்த ஒழுங்குமுறை விதிகள் செல்லாதவையென உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

12. A.I.R. 1954 S.C. 569.
13. A.I.R. 1961 S.C. 849.

(iii) வெளியீடு (Publication): 'சட்ட அறியாமை மன்னிக்கப் பட மாட்டாது' (Ignorance of law is no excuse) என்று இலத்தின் சட்ட முதுமொழி கூறுகிறது. ஆனால் எப்பொழுது சட்டம் பற்றி அறிந்து கொள்ளாமல் இருப்பது மன்னிக்கப்பட முடியாததாக ஆகிறது என்றால், ஒரு சட்டம் முறைப்படி பொது மக்கள் அறிந்து கொள்வதற் காக வெளியிடப்பட்ட பின்னர், ஒருவர் தனக்கு அச்சட்டம் குறித்து எதுவும் தெரியாது என்று கூறினால், அந்த அறியாமை மன்னிக்கப்பட மாட்டாது. எனவே முறைப்படி வெளியிடப்படாத சட்டம் குறித்து ஒருவர் அறிந்து வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. வேறு விதத்தில் சொல்லப்போனால், வெளியிடப்படாத சட்டத்தை ஒருவர் எப்படி அறிந்திருக்க முடியும்? இந்தப் பொருளில்தான் மேற்படி முதுமொழி அமைந்துள்ளது. எனவே, சட்டம் இயற்றப்பட்ட பிறகு அது முறைப்படி அரசிதழில் வெளியிடப்பட்டுவிட்டால், அச்சட்டத்தைப் பற்றி எதுவும் தெரியாது என்று யாரும் கூற முடியாது. ஏனெனில் அனைவருக்கும் சட்டம் தெரிந்திருக்குமென்றே அனுமானம் கொள்ளப்படுகிறது. முறைப்படி வெளியிடப்பட்ட ஒரு சட்டம் பற்றித் தெரியாது என்று கூறி எவரும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. இந்த நிலைப்பாடு தோற்றுவாய் சட்டத்தின் கீழ் நிருவாகத்துறையால் ஆக்கப் பட்ட விதிகள், ஆணைகள் போன்றவைகளுக்கும் பொருந்தக் கூடியதே. எனவே, நிருவாகத்துறையும், அதன் முகவர் நிலைகளும், அதிகார அமைப்புகளும் செய்யும் அனைத்து விதிகளையும் முறையாக வெளியிட்டாக வேண்டும்.

இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் நிருவாகத்துறை செய்யும் விதிகளை முறைப்படி வெளியிட வேண்டுமென்பது கண்டிப்பாக பின்பற்றப்படுகிறது. ஆனால் இந்தியாவில் நிருவாகத்துறையின் விதிகள் கட்டாயமாக வெளியிடப்பட வேண்டும் என்று எந்த தோற்றுவாய் சட்டமும் பொதுவாகக் கூறவில்லை. 1897-ஆம் ஆண்டின் பொதுக் கூறுகள் சட்டமானது (The General Clauses Act, 1897) நிருவாகத் துறையால் செய்யப்படும் விதிகள் அரசிதழில் வெளியிடப்பட்டால், அதுவே அவ்விதிகள் முறையாகச் செய்யப்பட்டன என்பதற்கு அறுதியான சான்றுறுதியாகும் என்று குறிப்பிடுகிறது. இதைத் தவிர அச்சட்டம், விதிகள் கட்டாயமாக வெளியிடப்பட வேண்டும் என்று வலியுறுத்தவில்லை. எனினும் பொரும்பாலான தோற்றுவாய் சட்டங்கள், அவற்றின் கீழ் நிருவாகத்துறையால் ஆக்கப்பட்ட விதிகள் அரசிதழில் வெளியிடப்பட வேண்டுமென கூறுகின்றன. எனவே விதிகள் அமல் செய்யப்பட வேண்டுமானால், அவை முறைப்படி வெளியிடப்பட்ட விதிகளாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அவை செல்லத் தக்கவையல்ல.

Harla v. State of Rajasthan[14] - எனும் வழக்கில் நிருவாகத்

14. 1952 SCR 110 : A.I.R. 1951 S.C. 467.

துறை செய்த விதிகள் வெளியிடப்படவில்லை. மேலும் வேறு எந்த வழிகளின் மூலமாகவும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும்படியும் செய்யப்படவில்லை. இதனால் அவ்விதிகளை அமல்படுத்தியதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ள வில்லை. விதிகள் வெளியிடப்பட வேண்டியது இயற்கை நீதியின் அடிப்படையில் அவசியமென உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியது.

State of Maharashtra v. George[15] - எனும் வழக்கில் எந்த விதத்தில் விதிகள் வெளியிடப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அதன்படி, (1) தோற்றுவாய்ச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் அமலுக்கு வருவதற்கு முன்பு அவை வெளியிடப்பட வேண்டும் என்று அத்தோற்றுவாய் சட்டமே கூறாது போனாலும், விதிகள் வெளியிடப்படுதல் வேண்டும். (2) விதிகள் எந்த விதத்தில் வெளியிடப்பட வேண்டும் என்று குறிப்பிடாதபொழுது, அவைகளை வழக்கமாக வெளியிடக் கூடிய முறையில் வெளியிடுதல் வேண்டும். (3) இந்திய அரசிதழில் (Gazette of India) வெளியீடு செய்தல், வழக்கமாக வெளியிடக் கூடிய முறையில் சம்பந்தப் பட்டவர்களுக்கு அறிவிப்பு செய்வது போன்றதாகும்.

முடிவுரை:

நிருவாகத்துறைக்கு சட்டமியற்றும் அதிகாரம் கொடுக்க வேண்டும். ஆனால் அவ்வதிகாரம் ஏதேச்சதிகாரமாக மாறி விடவும் கூடாது. இதற்கு உள்ள ஒரே வழி அந்த அதிகாரத்தின் மீது கட்டுப் பாடுகளை விதிப்பதுதான். அந்தக் கட்டுப்பாடுகளை செயல்படுத்த தகுதியான அமைப்பு, நீதித்துறைதான். உயர் நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும் தங்கள் நீதிமுறை மறுஆய்வு அதிகாரத்தை (Judicial Review) பயன்படுத்தி, நிருவாகத்துறையும், அதன் முகவர் நிலைகளும் மேற்கண்டவாறு அதிகாரவரம்பை மீறி எப்பொழுதெல்லாம் விதியாக்கம் செய்கின்றதோ, அப்பொழுதெல்லாம் அதனைத் தட்டிக் கேட்டு, செல்லாதது என்றும், இல்லாநிலையது என்றும் அறிவிக்கிறது. நீதி மன்றக் கட்டுப்பாடு இந்த அளவிற்கு கடுமையாக இருப்பதால்தான், நிருவாகத்துறையின் விதியாக்க செயல்பாடு ஒரு கட்டுக்குள் அடங்கியுள்ளது, என்று கூறினால் அது மிகையன்று.

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் (அல்லது) விதியாக்கத்தின் மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு [Parliamentary (or) Legislative Control over Delegated Legislation]

23. Examine the law under which the legislatures of U.K. and India control delegated legislation. (விதியாக்கங்கள் எவ்வாறு

15. A.I.R. 1965 S.C. 722.

இங்கிலாந்து மற்றும் இந்திய நாடாளுமன்றங்களால் கட்டுப்படுத்தப் படுகின்றன எனத் தேர்க.)

(அல்லது)

Explain the provisions of Parliamentary control of delegated legislation. (சட்டம் இயற்றும் அதிகார ஒப்படைப்பை பாராளுமன்றம் எவ்வாறு கட்டுப்படுத்துகிறது என்பதை விளக்குக.)

(அல்லது)

Examine the effectiveness of parliamentary control over delegated legislation in India. (இந்தியாவில் விதி ஆக்கத்தின் மேல் பாராளு மன்ற கட்டுப்பாட்டின் செம்மையை விளக்குக.)

(அல்லது)

What are non-judicial control of delegated legislation? How far they are effective? (சட்டமியற்றும் அதிகாரப் பகிர்வினை எவ்வாறு நீதிமன்ற முறை அல்லாத வகையில் கட்டுப்படுத்தப்படுகிறது? அவை எந்த அளவிற்கு பயன் விளையத்தக்கதாக இருக்கிறது?)

(அல்லது)

Examine briefly the various methods of legislative control over delegated legislation (ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின்படியிலான விதியாக்கத்தின் மீதான பாராளுமன்றக் கட்டுப்பாட்டின் பல்வேறு முறைகளை சுருக்கமாக ஆய்க.)

(அல்லது)

Laying before Parliament - Write short notes. (நாடாளுமன்றம் முன் வைத்தல் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

நிருவாகத்துறையின் விதிகள் செய்யும் அதிகாரத்தை (விதியாக்கம்) நீதிமன்றங்கள் தங்களது நீதிமுறை மறுஆய்வு (Judicial Review) அதிகாரத்தின் வாயிலாக கட்டுப்படுத்துவதை சென்ற வினாவின் விடையில் விரிவாகக் கண்டோம். அதுபோல், சட்டமன்றங்கள் (பாராளுமன்றம்), நிருவாகத் துறையின் விதியாக்க அதிகாரத்தின் மீது கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. இது **விதியாக்கத்தின் மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு (Parliamentary Control)** எனப்படுகிறது.

பாராளுமன்றக் கட்டுப்பாட்டின் செயல்படுத்தப்படும் விதங்கள்:

பாராளுமன்றக் கட்டுப்பாடு பின்வரும் இரு விதங்களில் செயல் படுத்தப்படுகிறது. அவை **(1) ஆய்விற்காக முன் வைத்தல் (Laying on the Table) (2) ஆய்வுக் குழு (Scrutiny Committee)**. இவ்விரண்டு கட்டுப்

பாடுகளும் இங்கிலாந்து மற்றும் இந்திய நாட்டில் சற்று மாறுபட்ட வகையில் செயல்படுத்தப்படுகிறது. விரிவாகப் பின்வருமாறு.

(1) ஆய்விற்காக முன் வைத்தல் (Laying on the Table):

ஆய்விற்காக முன் வைத்தல் என்பது, நிருவாகத்துறை செய்த விதிகளை சட்டமன்றத்தின் ஆய்விற்காக அதன் முன் வைத்தலாகும். இதனால் பின்வரும் இரண்டு நன்மைகள் எழுகின்றன. அவை (1) நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் (விதியாக்க) அதிகாரத்தைப் பயன்படுத்தி, அது என்னென்ன விதிகளை செய்துள்ளது என்பதை சட்டமன்றம் அறிந்து கொள்ள முடிகிறது. (2) இவ்வாறு அறிந்து கொள்ள முடிவதால் நிருவாகத்துறை ஏற்கனவே செய்துள்ள விதிகளின் அல்லது செய்ய உத்தேசித்துள்ள விதிகளின் செல்லுதன்மை குறித்து வினா எழுப்ப அல்லது எதிர்க்க சட்டமன்றத்தால் முடிகிறது.

இங்கிலாந்து நாட்டைப் பொருத்தவரை ஆய்விற்காக முன் வைத்தலானது, பின்வரும் ஏழு விதங்களில் செயலாக்கப்படுகிறது. அவை,

(i) மேற்கொண்டு கட்டுப்படுத்த வகை செய்யாமல் ஆய்விற்காக முன் வைத்தல் (Laying without further provision for control): நிருவாகத்துறையானது விதிகள் ஏதேனும் செய்தால் அவற்றை பாராளுமன்றத்தின் முன் ஆய்விற்காக வைத்தல் வேண்டும் என்று மட்டும் தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பின், அது மேற்கண்ட விதத்தை சார்ந்ததாகும். அவ்விதிகள் பாராளுமன்ற அவைகளின் முன் வைக்கப்பட்ட தேதியிலிருந்தே அமலுக்கு வந்து விடும். இதன் மூலம் நிருவாகத்துறை அதிகாரஅமைப்புகளால் என்ன விதிகள் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்த தகவலை மட்டுமே பாராளுமன்றம் பெறுகிறது. மாறாக அவ்விதிகளை ஆய்வு செய்யும் எந்த வாய்ப்பும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கிடைப்பதில்லை. இதனால் இங்கு பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு அரிதாக உள்ளது.

(ii) விதிகள் அமலுக்கு வருவதை தாமதிக்கும் நிபந்தனைக்குட்பட்டு முன் வைத்தல் (Laying with deferred operation): நிருவாகத்துறை செய்யும் விதிகளை பாராளுமன்ற அவையின் முன் வைத்து, அதன் உறுப்பினர்கள் ஆய்வு செய்த பின்தான், அவை அமலுக்கு வர வேண்டும் என்று தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பின், அது மேற்கண்ட விதத்தை சார்ந்ததாகும். இதனால் அவ்விதிகள் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டவுடன் அமலுக்கு வருவதில்லை. அவை அமல் செய்யப்படுவது, பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆய்வு செய்து முடிக்கும் வரை தாமதிக்கப்படுகிறது. எனவே, இங்கு பாராளுமன்றம் நிருவாகத்துறையின் விதியாக்கத்தை செம்மையாக கட்டுப்படுத்த முடிகிறது.

(iii) விதிகளை உடனடியாக அமல்படுத்தும் வண்ணம்

ஆனால் பாராளுமன்றத்தின் இரத்தாக்கல் அதிகாரத்திற்குட்பட்டு முன்வைத்தல் (Laying with immediate effect but subject to annulment): இங்கு நிருவாகத்துறையின் விதிகள் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டவுடன் அமலுக்கு வருகிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பாராளுமன்றம் அவ்விதிகளை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளவிடில் (அதாவது இரத்து செய்துவிட்டால்), அவை செயல் இழந்த விதிகளாகின்றன.

(iv) ஒரு குறிப்பிட்ட காலம் முடிவுறும் முன்னர் நடிவடிக்கை எடுத்தல் கூடாது எனும் தீர்மானத்திற்குட்பட்டு விதிகளை அதன் வரைவு நிலையில் முன் வைத்தல் (Laying in draft but suject to resolution that no further proceedings be taken): இதன்படி, தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு நிருவாகத்துறை செய்த விதிகள் பாராளுமன்றத்தின் முன் ஆய்விற்காக வைக்கப்படுகிறது. ஆனால், ஒரு குறிப்பிட்ட காலம் முடியும் முன்னர், அவ்விதிகளுக்கு அமலாக்கம் கொடுக்கப்படுக் கூடாது எனும் தீர்மானத்திற்குட்பட்டு, அவை முன் வைக்கப்படுகிறது. இது **'எதிர்மறைத் தீர்மான'** நடைமுறை **(negative resolution procedure)** என்றும் அழைக்கப்படுகிறது. இதனால் அக் குறிப்பிட்ட காலத்திற்குள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அவ்விதிகளை ஆய்வு செய்ய முடிகிறது.

(v) நேர்மறை தீர்மானத் தேவைக்குட்பட்டு விதிகளை அதன் வரைவு நிலையில் முன் வைத்தல் (Laying in draft and requiring affirmative resolution): இது **'நேர்மறை தீர்மான'** நடைமுறையைச் **(positive resolution procedure)** சார்ந்ததாகும். இதன்படி, மேற்கண்ட எதிர்மறைத் தீர்மான நடைமுறையை விட, மிகவும் சிறப்பாக பாராளு மன்றமானது நிருவாகத்துறையின் விதியாக்கத்தின் மீது கட்டுப்பாடு கொள்ள முடிகிறது. இங்கு நிருவாகத்துறை முன் வைக்கும் வரைவு விதிகளானது பாராளுமன்றத்தால் ஆராயப்பட்டு, அதனை அமல் படுத்தலாம் என்று ஒப்புதல் அளிக்கும் வரை, அவை அமலுக்கு வருவதில்லை. இதனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்விதிகளின் நிறை-குறைகளை தேவையான கால அவகாசம் எடுத்துக் கொண்டு அலசி ஆராய முடிகிறது. அவ்விதிகளுக்கு பாராளுமன்றம் ஒப்புதல் அளிக்கா விடில், அவற்றை நிருவாகத்துறை அமல் செய்ய முடியாது.

(vi) நேர்மறை தீர்மானத்தின் வாயிலாக ஒப்புதல் அளிக்கும் வரை விதிகளின் அமலாக்கம் தாமதிக்கப்படும் எனும் நிபந்தனைக்குட்பட்டு முன் வைத்தல் (Laying with operation deferred until approval given by affirmative resolution): இங்கு நிருவாகத்துறை செய்யும் விதிகள் பாராளுமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்படும் வரை அமலுக்கு வருவதில்லை. இந்த நடைமுறைக்கும், நாம் ஏற்கனவே கண்ட **'நேர்மறை தீர்மான'** நடைமுறைக்கும் **(positive resolution procedure)** இடையே வேறுபாடு ஏதும் இல்லை.

(vii) விதிகளை உடனடியாக அமல்படுத்தும் வண்ணம் ஆனால் அவ்வாறு அமல்படுத்தியது தொடர வேண்டுமெனில் பாராளுமன்றத்தின் நேர்மறை தீர்மானம் தேவை எனும் நிபந்தனைக் குட்பட்டு முன் வைத்தல் (Laying with immediate effect but requiring affirmative resolution as a condition for continuance): நிருவாகத்துறை செய்த விதிகளை அமல்படுத்த வேண்டியது மிகவும் இன்றியமையாததாகவும் அதே சமயத்தில் பாராளுமன்றத்தின் கடுமையான கட்டுப்பாடும் வேண்டும் எனும் பொழுதும், மேற்கண்ட வகையான முன் வைத்தல் பின்பற்றப்படுகிறது. நிருவாகத்துறை செய்த விதிகளை பாராளுமன்றம் ஏற்றுக் கொண்டு செய்த தீர்மானமானது, அவற்றை உயிருடன் வைக்கிறது. அதாவது தொடர்ந்து அமலில் வைக்கிறது. தீர்மானம் வேறுவிதமாக மாறிவிட்டால் அவ்விதிகளும் இறந்துபட்ட ஒன்றாக ஆகிவிடுகிறது. இந்நடைமுறை பெரும்பாலும் வரி விதிக்கும் விதிகள் அல்லது அவசரகாலத்தின் பொழுது செய்யப்படும் விதிகளுக்கு பொருந்துவதாக உள்ளது.

இந்திய நாட்டைப் பொருத்தவரை நிருவாகத்துறையால் செய்யப்படும் அனைத்து விதியாக்கமும், பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டும் என்று எந்தச் சட்டமும் குறிப்பிடவில்லை. எனினும் **ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின்படியிலான விதியாக்கத்தின் மீதான குழுவானது (Committee on Delegated Legislation)**, தோற்றுவாய் சட்டங்கள், பின்வரும் நான்கு விதமான முன் வைத்தல்களைக் உள்ளடக்கி உள்ளது என்று கூறுகிறது. அவை,

(i) ஒரு சில தோற்றுவாய் சட்டங்கள், நிருவாகத்துறை செய்யும் விதிகளை அரசிதழில் வெளியிட்டால் போதும் என்று கூறுகின்றன;

(ii) சில சட்டங்கள் நிருவாகத்துறை செய்யும் விதிகளை அரசிதழில் வெளியிட வேண்டும் என்றும், பாராளுமன்றத்தின் முன் வைக்க வேண்டும் என்றும் கூறுகின்றன.

(iii) வேறு சில சட்டங்கள் நிருவாகத்துறையால் முன் வைக்கப்பட்ட விதிகளை பாராளுமன்றம் திருத்தம் செய்ய அனுமதிக்கின்றன.

(iv) இன்னும் சில சட்டங்கள் நிருவாகத்துறை செய்யும் விதிகள் அரசிதழில் வெளியிடப்படு முன்னர், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பாராளுமன்றத்தின் முன் வைக்க வேண்டும் என்று கூறுகின்றன.

இந்தியாவில் நிருவாகத்துறை செய்த விதிகளை பாராளுமன்றத்தின் முன் வைப்பதற்கு ஒரே மாதிரியான நடைமுறை ஏதும் இல்லாததால், **பாராளுமன்ற ஆய்வுக் குழுவானது (Scrutiny Committee)**, இது குறித்து பின்வரும் பரிந்துரைகளைச் செய்தது. அவை,

(i) அனைத்து தோற்றுவாய் சட்டங்களும், அதன் கீழ் நிருவாகத் துறையால் செய்யப்பட்ட விதிகளை **'இயன்றவரை விரைவாக' (as soon as possible)** பாராளுமன்ற அவையின் முன் வைக்க வேண்டும் என்று ஒரே மாதிரியாக (uniform) கோர வேண்டும்;

(ii) இவ்வாறு முன் வைக்கும் காலமானது ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். மேலும், விதிகள் இறுதியாக வெளியிடப்படும் தேதிக்கு முன்னராக முடியும் வகையில் முப்பது நாட்கள் அவை பாராளு மன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டும்;

(iii) மேற்கண்ட விதிகளை அவசியம் ஏற்படும் பொழுது மாற்றி யமைக்கும் அதிகாரத்தை பாராளுமன்றம் தக்க வைத்திருக்க வேண்டும்.

இன்று நிறைவேற்றப்படும் அனைத்து தோற்றுவாய் சட்டங் களும், அதன் கீழ் நிருவாகத்துறையால் செய்யப்பட்ட விதிகள், பாராளு மன்றத்தின் முன் முப்பது நாட்களுக்கு வைக்கப்பட வேண்டுமென்று கூறுகின்றன. இதனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த விதிகள் பற்றி விவாதிக்கும் வாய்ப்பு பெறுகின்றனர். தோற்றுவாய் சட்டத்தின் கொள்கைகளுக்கும், வழிகாட்டு நெறிகளுக்கும் ஒவ்வாத விதிகளையும், தேவையற்றவை என்று ஒதுக்கத்தக்க விதிகளையும் நீக்கி விடுகின்றனர் அல்லது மாற்றிவிடுகின்றனர். **(நாம் இதுகாறும் கண்ட பாராளுமன்றம் எனும் சொல்லானது மாநில சட்டமன்றங்களையும் குறிக்கும் என்பதை கவனத்தில் கொள்க).**

(2) ஆய்வுக் குழு (Scrutiny Committee):

நிருவாகத்துறை செய்யும் விதிகளை கண்டிப்பாக பாராளு மன்றத்தின் முன் வைத்தே ஆக வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை. ஏனெனில் இக்கட்டுப்பாடு வலியுறுத்தும் தன்மையுடையதல்ல; மாறாக அறிவுறுத்தும் தன்மையுடையதாகும். எனவே மேற்கண்ட ஆய்விற்கு முன் வைத்தல் நடைமுறையின்படி, நிருவாகத்துறை செய்த விதிகள் பாராளு மன்றத்தின் முன் வைக்கப்பட்டாலும், அந்த விதிகள் முறைப்படி பரிசீலனை செய்யப்பட்டு, அலசி ஆராயப்பட்டால்தான் பாராளுமன்றம் நிருவாகத் துறையின் விதியாக்கத்தின் மீது முழுமையான கட்டுப்பாடு கொண்டுள்ளதாக பொருளாகும்; மேலும் கட்டுப்பாட்டின் முழுமை யான பயனையும் அடைய முடியும். இத்தகு ஆய்வை யார் மேற்கொள்வது, என்ற வினா எழுந்த பொழுது, **பாராளுமன்ற ஆய்வுக் குழுக்கள் (Scrutiny Committees)** அமைக்கப்பட்டன. இக்குழு நிருவாகத்துறை செய்யும் விதிகளை ஆய்வு செய்து, விதியாக்கத்தின் மீதான பாராளுமன்றக் கட்டுப்பாட்டை மேலும் வலிமையுடையதாக மாற்றி வருகிறது என்றே கூற வேண்டும்.

இங்கிலாந்தில் இயற்றப்பட்ட சட்டமுறை ஆவணங்களின் மீதான தேர்வுக் குழு (The Select Committee on Statutory Instru-

ments) ஒன்று 1944-ஆம் ஆண்டில் இங்கிலாந்து பாராளுமன்ற மக்களவையால் (House of Commons) அமைக்கப்பட்டது.

இந்தியாவில் பின்வரும் இரண்டு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப் பட்டன. அவை **(1) துணை நிலை விதியாக்கத்தின் மீதான மக்களவைக் குழு (The Lok Sabha Committee on Subordinate Legislation); (2) துணை நிலை விதியாக்கத்தின் மீதான மாநிலங்களவைக் குழு (The Rajya Sabha Committee on Subordinate Legislation).**

இக்குழுக்களின் பணி யாதெனில், அரசியலமைப்பால் அல்லது பாராளுமன்றத்தின் தோற்றுவாய் சட்டத்தால் நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட விதிகள், ஒழுங்குமுறைகள், ஆணைகள், துணை விதிகள் ஆகியவை செய்யும் அதிகாரமானது, முறைப்படி பயன்படுத்தப் பட்டுள்ளதா, அவற்றிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் வரம்பிற்குள் அவை செயல்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து, பாராளுமன்றத்தின் அந்தந்த அவைகளுக்கு அறிக்கை அனுப்புவதாகும். சுருங்கக் கூறின் இக்குழுக்கள், **'தனது எஜமானனின் வீட்டிற்குள் யாரேனும் அத்துமீறி நுழைவதைக் கண்டால் உடனே குலைத்து, அவரை விழிக்க வைக்கும் காவல் நாய்களைப் போல் செயல்படுகின்றன'**[16] என்று கூறலாம்.

நிருவாகத்துறையின் விதியாக்கத்தின் மீது எத்தகு கட்டுப் பாடுகளை விதிப்பது என்பது குறித்து, **துணை நிலை விதியாக்கத்தின் மீதான இந்தியக் குழு (The Indian Committee on Subordinate Legislation)**, பின்வரும் பல்வேறு பரிந்துரைகளையும், யோசனைகளையும் பாராளுமன்றத்திற்கு தெரிவித்துள்ளது. அவை,

(1) நிருவாகத்துறையின் விதிகள் மூலமாக, அவ்விதிகளை ஆய்வு செய்வதற்கு உயர் மற்றும் உச்ச நீதிமன்றத்திற்கு உள்ள நீதிமுறை மறுஆய்வு அதிகாரத்தை பறித்துவிடக் கூடாது அல்லது தடை செய்து விடக் கூடாது.

(2) நிருவாகத்துறையானது தனது விதிகளின் மூலமாக வரி எதையும் விதித்ததல் கூடாது.

(3) நிருவாகத்துறை செய்யும் விதிகளின் மொழிநடையானது எளிமையானதாகவும், தெளிவானதாகவும் இருத்தல் வேண்டும். மாறாக் இருபொருள் தரக் கூடியதாகவோ அல்லது சிக்கலானதாகவோ இருத்தல் கூடாது.

(4) விதிகளுக்கு வருமேவு செயலாக்கம் (Prospective operation) மட்டுமே கொடுக்கப்பட வேண்டும். முன்மேவு செயலாக்கம் (Retrospective operation) கொடுத்தல் கூடாது.

16. 'The Scrutiny Committees act as watch-dogs which bark and arouse their master from slumber when they find that an invasion on the premises has taken place' - **Delegated Legislation in India, I.L.I., 1964, p. 201.**

(5) தோற்றுவாய் சட்டத்தின் சட்டமியற்றுக் கொள்கை, சட்ட மன்றத்தால் மட்டுமே வகுக்கப்பட்டு, அது அச்சட்டத்திலேயே சேர்க்கப் பட வேண்டும். அதற்குண்டான விபரங்களை அளிக்கும் அதிகாரத்தை மட்டுமே நிருவாகத்துறையிடம் ஒப்படைக்க வேண்டும். மாறாக சட்டமியற்றுக் கொள்கையை வகுக்கும் அதிகாரத்தை நிருவாகத் துறையிடம் ஒப்படைத்தல் கூடாது.

(6) கீழ்ப்படையான சட்டமியற்றும் அதிகார ஒப்படைவை (Sub-delegation) மிக விரிவாக மொழி நடையில் செய்தல் கூடாது. மேலும் அதிகார ஒப்படைவு பெற்ற ஒரு நிருவாகத்துறை பிரதிநிதி, தனது அதிகாரத்தை தனக்கு கீழ் அமைந்துள்ள மற்றொரு துணைப் பிரதி நிதியிடம் ஒப்படைக்கும் பொழுது பின்பற்றப்பட வேண்டிய காப்பு விதிகள் (safeguards) தோற்றுவாய் சட்டத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

(7) நிருவாகத்துறையானது பாகுபடுத்தும் விதிகளைச் (Discriminatory Rules) செய்தல் கூடாது.

(8) தோற்றுவாய் சட்டத்தால் அளிக்கப்பட்ட அதிகாரத்தை மீறி, நிருவாகத்துறையால் செய்யப்பட்ட விதிகள் செல்லக் கூடாது.

(9) நிருவாகத்துறையானது விதிகளை உடனடியாகச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்வதில் தேவையற்ற காலதாமதம் ஏதும் ஏற்படுதல் கூடாது.

(10) நிருவாகத்துறை செய்த விதிகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை அது உடனடியாக களைதல் வேண்டும்.

(11) நிருவாகத்துறையால் செய்யப்பட்ட விதிகள் பாராளு மன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டும் என்று தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பின், இயன்றளவு விரைவாக அவ்வாறு முன் வைக்க வேண்டும். அசாதாரணமான காலதாமதல் ஏதேனும் ஏற்பட்டால், அதற்கான காரணங்கள் அடங்கிய விளக்கக் குறிப்பு ஒன்று அந்த விதிகளுடன் இணைக்கப்பட்டு, பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட வேண்டும்.

(12) நிருவாகத்துறையால் செய்யப்பட்ட விதிகளுக்கு பொருள் விளக்கமளிக்கும் இறுதியான அதிகாரம் (final authority of interpretation), நிருவாகத்துறையிடம் இருத்தல் கூடாது.

(13) நிருவாகத்துறையால் செய்யப்பட்ட விதிகளானது குறுந் தலைப்புகள் (short titles), விளக்கக் குறிப்புகள் (explanatory notes), முந்தைய சட்டத் திருத்தங்கள் பற்றிய குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

(14) விதிகள் மற்றும் ஆணைகளும் போதுமான விளம்பரம்

கொடுக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் அவற்றை அறிந்து கொள்ள ஏதுவாக இருக்கும்.

முடிவுரை:

நாம் இதுகாறும் கண்ட இரண்டு விதமான பாராளுமன்றக் கட்டுப்பாடுகளில், ஆய்வுக் குழுவின் மூலமான கட்டுப்பாடு மிகவும் செம்மையாகவும் திருப்திகரமாகவும் செயலுறுகின்றது என்றே கூற வேண்டும். இதனால் நிருவாகத்துறையின் போக்கு, ஒரு மக்கள் நல அரசு செல்ல வேண்டிய சரியான வழிக்கு கொண்டு வரப்படுகிறது.

5 நிருவாகத்துறையின் பல்வேறு பணிகள் (அல்லது) நிருவாகத்துறை செயல்பாடுகள்- தன்மை, வகைப்பாடு மற்றும் நோக்கம் [Various Administrative Functions (or) Administrative Actions - Nature, Classification and Ambit]

நிருவாகத்துறையின் பல்வேறு பணிகள் - தன்மை, வகைப்பாடு, அதன் அவசியம், வேறுபாடுகள் [Various Administrative Functions - Nature, Classification, its Need,Distinctions between the functions]

24. Discuss referring to leading cases the distinguishing features of "Judicial", Quasi Judicial" and "Administrative" functions. Is it still necessary to classify the functions into these categories? ("நீதிமுறை", "நீதிமுறைப் போல்வு" மற்றும் "நிருவாகமுறை" செயல்களின் வேறுபடுக்கூடிய கூறுகளை முக்கிய வழக்குகளைக் குறிப்பிட்டு விவாதிக்க. மேற்கண்ட வகைகளின்படி செயல்களை வகைப்படுத்த வேண்டியது இன்னமும் அவசியமா?)

(அல்லது)

State critically and evaluate the classification of the functions of the administration with special reference to the committee on Ministers powers. (நிர்வாகத்தின் பணிகள் மற்றும் பாகுபாடுகளை அமைச்சர்களின் அதிகாரங்கள் பற்றி அமைக்கப்பட்ட குழுவின் கருத்தினை கொண்டு திறனாய்வு செய்து விளக்குக.)

(அல்லது)

Bring out with the help of decided cases the distinction between administrative function and quasi judicial function. Explain how far this distinction if relevant today. (முடிவுற்ற வழக்குகளின் துணையுடன் செயலாட்சி அலுவலை நீதித்தன்மை வாய்ந்த அலுவலினின்று வேறுபடுத்திக் காட்டுக. இவ்வேறுபாடு தற் காலத்தில் எந்த அளவிற்கு பொருந்தும் என்பதை விளக்குக.)

(அல்லது)

How Legislative and Judicial functions of administrative authori-

ties are distinquished? (நிருவாக அலுவலரின் சட்டமியற்றுதலும் நீதித்தீர்ப்பும் எவ்வாறு வேறுபடுகின்றன?)

(அல்லது)

With the help of cases, discuss the distinction between quasi judicial and administrative functions. (முடிவுற்ற வழக்குகளின் துணையுடன் நீதிப்போல்வு செயல் மற்றும் நிருவாக செயல்களுக்கான வேறுபாட்டினை ஆய்வு செய்க.)

(அல்லது)

Distinquish Quasi-Judicial action from the Judicial and Administrative action. When does an administrative authority act Quasi-Judicially? (நீதித்தன்மை வாய்ந்த நடவடிக்கையினை நீதி மற்றும் ஆட்சி முறை நடவடிக்கையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுக. எப்போது ஆட்சிப் பொறுப்பிலுள்ளோர் நீதித்தன்மை வாய்ந்த முறையில் செயல்படுகின்றார்கள்?)

(அல்லது)

How Judicial and Quasi Judicial Decisions are distinquished? (நீதித் தீர்ப்புகளும், முகவரின் நீதித்தன்மைத் தீர்ப்புகளும் எவ்வாறு வேறுபடுத்தப்படுகின்றன?)

(அல்லது)

Distinquish between
Administrative function and Quasi-judicial function.

வேறுபடுத்திக் காட்டுக.
நிர்வாகத்துறை அலுவல் மற்றும் நீதித்தன்மை வாய்ந்த அலுவல்.

(அல்லது)

How administrative rule making is differentiated from quasi adjudication? (ஆட்சி முறை விதியாக்கம் எவ்வாறு ஆட்சித் தீர்ப்பாய முறையினின்றும் மாறுபடுகின்றது?)

(அல்லது)

Explain referring to decided cases the grounds for characterising a function as quasi-judicial. (ஒரு செயல் நீதிமுறை செயல் போல்வு எனத் தீர்மானிக்கும் அடிப்படைகளை முடிவுற்ற வழக்குகளின் உதவியோடு விளக்குக.)

(அல்லது)

"The dividing line between administrative power and quasi judicial power is quite thin and is being gradually obliterated". Dis-

cuss. ("ஆட்சி முறை செயலையும், நீதிமுறை போல்வான செயலையும் பாகுபடுத்தும் கோடு மிகவும் மெல்லியதாக இருப்பதோடு இது மெதுவாக அழிக்கப்பட்டும் வருகிறது". விவாதிக்க.)

நிருவாகத்துறை செயல்பாடு (அல்லது) நிருவாகத்துறையின் பல்வேறு பணிகள் - தன்மை (Administrative Process (or) Various Administrative Fun tions - Nature) :

நாம் இந்நூலின் ஆரம்ப அத்தியாயங்களில் கண்டது போல், அரசின் செயற்பாடுகள், அரசியலமைப்பின்படி, பின்வரும் மூன்று தலையாய அங்கங்களின் (Priniciple Organs of Government) வாயிலாக பிரிக்கப்பட்டு வழிநடத்தப்படுகிறது. அவை, *(1)* சட்டமியற்றுத்துறை (Legislative), *(2)* நிருவாகத்துறை (Executive), *(3)* நீதித்துறை (Judiciary). இவை மூன்றும் மூன்று மாறுபட்ட பணிகளைச் செய்கின்றது. அதாவது, சட்டமியற்றுத்துறை, சட்டங்களை இயற்றுகிறது; நிருவாகத்துறை, அச்சட்டங்களின் அடிப்படையில் மக்களை வழி நடத்தி, நிருவாகம் செய்கிறது; நீதித்துறை, தன் முன் எழும் வழக்குகளில் அச்சட்டங்களின் அடிப்படையில் நீதி வழங்குகிறது; சட்டங்களுக்கு பொருள்விளக்கம் அளிக்கிறது. பின்வரும் எளிய வரைபடம் இவற்றைச் சுட்டிக்காட்டுகிறது.



அதிகாரப்பிரிவினைக் கோட்பாட்டின்படி பொதுவாக, ஒரு துறை மற்றொரு துறையின் செயல்பாட்டில் தலையிட முடியாது என்றாலும், நடைமுறையில் நிருவாகத்துறை மட்டும், தனக்குரிய நிருவாக அதிகாரத்துடன் மற்ற இரு துறைகளின் அதிகாரங்களையும் கொண்டு விளங்குகிறது.

எடுத்துக்காட்டாக, நிருவாகத்துறையானது ஒரு பிரச்சனையை புலனாய்வு செய்தல், வழக்கு தொடுத்தல், நலத் திட்டங்களை வகுத்தல் மற்றும் ஏற்றுக் கொள்ளுதல், உரிமங்களை வழங்குதல் மற்றும் இரத்து செய்தல் போன்ற நிருவாகப் பணிகளைச் (administrative functions) செய்கின்றது. அதே சமயத்தில் விதிகள், ஆணைகள், ஒழுங்குமுறைகள், துணை விதிகள் இயற்றுதல், விலைகளை நிர்ணயத்தல் போன்ற சட்டமியற்றும் பணிகளையும் (legislative functions) செய்கின்றது. மேலும் தகராறுகளை நீதிமுறையில் தீர்மானித்தல், அபராதம் மற்றும் தண்டனைகளை விதித்தல் போன்ற நீதித்துறை பணிகளையும் (judicial

functions) மேற்கொள்கின்றது. இவ்வாறு அரசின் மூன்று தலையாய அங்கங்களின் பணிகளையும் நிருவாகத்துறை மேற்கொள்கின்றது. நிருவாக அதிகாரம் தவிர, சட்டமியற்றும் மற்றும் வழக்குகளை நீதிமுறையில் தீர்மானிக்கும் அதிகாரத்தையும் நிருவாகத்துறைக்கு சட்டப்படி வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயத்தால் தவிர்க்க இயலாத ஒன்றாகிவிட்டது. இங்கு தற்பொழுது எழும் பிரச்சனை யாதெனில், நிருவாகத்துறையின் மேற்கண்ட பணிகளை பிரித்துப் பார்க்க வேண்டியது அவசியமா, இல்லையா என்பதுதான்.

நிருவாகத்துறைப் பணிகளை அல்லது செயல்பாடுகளை வகைப்பாடு செய்வதின் அவசியம் (Need for Classification of Administrative Fun tions):

நிருவாகத்துறை அதிகார அமைப்புகளால் (Administrative Authorities) செய்யப்படும் பணிகளை முழுக்க முழுக்க நிருவாகம் மட்டும் சார்ந்தது என்றோ அல்லது சட்டமியற்றுதல் மட்டும் சார்ந்தது என்றோ அல்லது நீதி வழங்குதல் மட்டும் சார்ந்தது என்றோ எளிய முறையில் வகைப்படுத்துவது கடினம். சில சமயங்களில் நிருவாகத் துறையின் ஒரு செயலானது, அரசின் மூன்று அங்கங்களுக்குரிய பணிகளையும் கொண்டிருக்கும். அப்பொழுது அவற்றை பாகுபடுத்தி முடிவெடுக்க நீதிமன்றங்கள் சற்றே இடருக்குள்ளாகின்றன என்றே கூற வேண்டும். எனினும் நிருவாகத்துறையின் பணிகளை பாகுபடுத்தியாக வேண்டிய அவசியம் பின்வரும் காரணங்களால் எழுகின்றது. அவை

எடுத்துக்காட்டாக, நிருவாகத்துறையானது, நீதிமுறையிலான (judicial) அல்லது நீதித்தன்மை வாய்ந்த (quasi-judicial) பணிகளைச் செய்யும் பொழுது, அது இயற்கை நீதிக் கோட்பாடுகளை (principles of natural justice) பின்பற்ற வேண்டியுள்ளது; மேலும் அவற்றை நெறிமுறையுறுத்தும் மற்றும் தடையுறுத்தும் நீதிப்பேராணைகளுக்கு (Writ of Certiorari and Prohibition) உட்படுத்தலாம். ஆனால் நிருவாகத் துறை, ஒரு நிருவாகப் பணியை அல்லது சட்டமியற்றும் பணியை மேற் கொள்ளும் பொழுது மேற்கண்ட நிலைப்பாடு கிடையாது.

அதேபோல், நிருவாகத்துறையானது சட்டமியற்றும் பணியை மேற்கொள்ளும் பொழுது, அது தான் இயற்றும் விதிகள், ஒழுங்கு முறைகள், ஆணைகள், துணை விதிகளை முறைப்படி வெளியிட வேண்டும் மற்றும் பாராளுமன்றத்தின் முன் ஆய்விற்காக வைத்தல் வேண்டும். ஆனால், இக்கட்டுப்பாடு நிருவாகத்துறையானது, முழுக்க முழுக்க நிருவாகப் பணியை மட்டும் மேற்கொள்ளும் பொழுது கிடையாது. எனவே, நிருவாகத்துறையானது என்ன மாதிரியான பணிகளை மேற்கொள்கிறது என்று வகைப்படுத்திக் காண வேண்டியது அவசியமாக உள்ளது. அப்பொழுதுதான் அந்தந்த நேர்விற்கேற்ப மேல் நடவடிக்கைகள் எடுக்க முடியும். உதாரணமாக, நிருவாகத்துறை, நீதி முறையில் செயற்பட்டு தீர்ப்பு வழங்கும் பொழுது, அது இயற்கை நீதிக்

கோட்பாடுகளைப் பின்பற்றவில்லையானால், அந்த தீர்ப்பை செல்லாதது என்று விளம்பக் கோரி நீதிமன்றத்தில் முறையிடலாம்; அல்லது முறைப்படி வெளியிடாமல் விதிகளை அமல்படுத்தினால், அந்த விதிகளை அதிகாரவரம்பு மீறியது என்று அறிவிக்கக் கோரி நீதிமன்றத்திற்கு செல்லலாம். எனவே நிருவாகத்துறையின் பணிகளை வகைப்படுத்தினால் தான், தீர்வழி கிடைக்கும்.

நிருவாகத்துறையின் சட்டமியற்றும் பணிகள் (Legislative functions of Administrative Authority):

சட்டமன்றத்தால் நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரத்தின்படி (Delegation of legislative powers), நிருவாகத்துறையானது விதிகள், ஆணைகள், ஒழுங்குமுறைகள், துணை விதிகள் ஆகியவற்றை செய்கின்றன. ஆனால் நிருவாகத்துறையின் இத்தகு சட்டமியற்றும் பணியையும், அதே நிருவாகத்துறையின் நிருவாகப் பணியையும் வேறுபடுத்திப் பார்ப்பது அவ்வளவு எளிதல்ல என்றாலும், அந்த ஒவ்வொரு பணியின் வாயிலாக எழும் விளைவுகளைக் கொண்டு அவற்றிக்கிடையேயான வேறுபாடுகளை வகுத்து விடலாம் என்று **de Smith** (Judicial Review of Administrative Action, 1980, pp. 71-73) கூறுகின்றார். அவர் கூறிய வேறுபாடுகள் வருமாறு.

நிருவாகத்துறையின் சட்டமியற்றும் பணிகளுக்கும், நிருவாகப் பணிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் (Distinctions between Legislative and Administrative Functions of Administrative Authority):

நிருவாகத்துறையின் சட்டமியற்றும் பணிகள் (Legislative Functions)	நிருவாகத்துறையின் நிருவாகப் பணிகள் (Administrative Functions)
1. நிருவாகத்துறையின் ஒரு ஆணை சட்டமியற்றும் தன்மை வாய்ந்ததாக இருப்பின், அதனை குறிப்பிட்ட முறைப்படி வெளியீடு செய்தல் அவசியமாகும்.	நிருவாகத்துறையின் ஒரு ஆணை, நிருவாகத் தன்மை வாய்ந்ததாக இருப்பின், அவ்வாறு வெளியீடு செய்தல் அவசியமில்லை.
2. நிருவாகத்துறையின் ஒரு ஆணை சட்டமியற்றும் தன்மை வாய்ந்ததாக இருப்பின், அதனை செல்லாதது (to quash) என்று விளம்ப நீதிமன்றங்கள் நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையை (writ of certiorari) பிறப்பிக்க கூடாது.	நிருவாகத்துறையின் ஒரு ஆணை, நிருவாகத் தன்மை வாய்ந்ததாக இருப்பின், அதனை செல்லாதது (to quash) என்று விளம்ப நீதிமன்றங்கள் நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையை (writ of certiorari) பிறப்பிக்கலாம். ஏனெனில் இங்கு அந்த ஆணையை பிறப்

	பிக்கும் நிருவாகத்துறை அதிகார அமைப்பு நீதிமுறையில் செயல்பட வேண்டியுள்ளது.
3. பொதுவாக நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரங்களின்படி அது செய்யும் விதியாக்கமானது நியாயமற்ற தன்மை (unreasonableness) கொண்டதாக உள்ளதென்ற அடிப்படையில் செல்லாதது என்று அறிவிக்க முடியாது. எனினும், அந்த நியாயமற்ற தன்மை தீயெண்ணத்துடன் கூடியதாகவோ அல்லது ஏதேச்சதிகாரமானதாகவோ உள்ளது என்பது நிரூபிக்கப் பட்டால், அந்த விதியாக்கத்தை செல்லாதது என்று அறிவிக்க முடியும்.	இங்கு நிருவாகத்துறை செய்த ஒரு ஆணையானது, நியாயமற்றதாக இருப்பின், அதனால் பாதிக்கப் பட்ட நபர் அந்த ஆணையை செல்லாதது என்று அறிவிக்கக் கோரி நீதிமன்றங்களின் கதவுகளை தட்டலாம். அதற்கு அவருக்கு சட்டப்படியான உரிமை உள்ளது. தக்க தீர்வழி பெறலாம்.
4. நிருவாகத்துறையின் சட்டமியற்றும் அதிகாரங்களை மிகவும் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே, கீழ்ப்படையான அதிகார ஒப்படைவு (sub-delegation) செய்ய முடியும்.	இங்கு நிருவாகத்துறையின் நிருவாக அதிகாரங்களை அது, தனக்கு கீழ் அமைந்துள்ள நிருவாகத்துறை முகவர் நிலைகளிடம் அல்லது அதிகார அமைப்புகளிடம் சாதாரணமாக கீழ்ப்படையான அதிகார ஒப்படைவு செய்ய முடியும்.
5. சட்டமியற்றும் தன்மை வாய்ந்த ஆணைகளுக்குண்டான காரணங்கள் எதையும் நிருவாகத் துறை கூற வேண்டியதில்லை.	இங்கு நிருவாகத் தன்மை வாய்ந்த ஆணைகளுக்குண்டான காரணங்களை நிருவாகத்துறை அவசியம் கூற வேண்டும்.

நீதிமுறைப் பணிகள் (Judicial Functions):

இங்கிலாந்து நாட்டில் நியமிக்கப்பட்ட **அமைச்சர்களின் அதிகாரங்களின் மீதான டோநோக்மோர் குழு (Donoghumore Committee on Ministers Powers)** 1932-ஆம் ஆண்டில் சமர்ப்பித்த அதனுடைய அறிக்கையில், நீதிமுறைப் பணியின் தனிப்பண்புகளை (characterstics of judicial function) பின்வருமாறு கூறுகிறது.

நீதிமுறைப் பணியானது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர்களுக்கிடையே தகராறு (dispute) இருப்பதை முன்னதாகக் கொண்டு, (pre-supposes) மேலும் நான்கு அவசியக் கூறுகளை (requisites) உள்ளடக்குகிறது என்று மேற்படி குழு கூறுகிறது. அவை

(1) தகராறுக்குரிய தரப்பினர்கள் தங்களுடைய வழக்கை முன்னிலைப்படுத்துகை (presentation of their case by the parties to the dispute);

(2) அவர்களிடையே உள்ள தகராறு பொருண்மை குறித்த பிரச்சனையாக (question of fact) இருப்பின், தகராறுக்குரிய தரப்பினர்களால் அளிக்கப்படும் சாட்சியத்தின் வாயிலாகவும், அத்தரப்பினர்களின் சார்பாக முன் வைக்கப்படும் வாதங்களின் துணையுடனும், அப் பொருண்மையை தீர்மானித்தல்;

(3) அவர்களிடையே உள்ள தகராறு சட்டம் குறித்த பிரச்சனையாக (question of law) இருப்பின், தகராறுக்குரிய தரப்பினர்களால் எடுத்துரைக்கப்படும் சட்டஞ் சார்ந்த வாதங்களின் (legal argument) வாயிலாக அச்சட்டப் பிரச்சனையை தீர்மானித்தல்; மற்றும்

(4) வழக்கின் பொருண்மைகளைக் கண்டறிந்தும், அவற்றிற்கு சட்டத்தைப் பொருத்தியும், அவ்வழக்கு குறித்த விஷயம் முழுவதையும் தீர்க்கத் தக்க வகையில் தீர்ப்பு அளித்தல்.

மேற்படி நான்கு அவசியக் கூறுகளும் இருப்பின், அதன் வாயிலாக செய்யப்படுவது, முழுக்க முழுக்க நீதிமுறைப் பணியாகும் (pure judicial function). ஒரு தீர்ப்பு, நீதிமன்றத்தைத் தவிர, ஒரு அமைச்சரால், நிருவாக அதிகார அமைப்பால், நிருவாக அதிகாரியால் அல்லது நிருவாக தீர்ப்பாயத்தால் பிறப்பிக்கப்பட்டாலும், அது மேற்கண்ட நான்கு அவசியக் கூறுகளையும் உள்ளடக்கியிருப்பின், அத்தீர்ப்பு நீதிமுறைத் தீர்ப்பேயாகும்.

நீதித்தன்மை வாய்ந்த பணிகள் (அல்லது) நீதிப்போல்வு பணிகள் (Quasi-Judicial Functions):

'Quasi' என்பதை, தமிழில் **'போல்வு'** என்றழைப்பார்கள். 'போல்வு' என்பதை, 'போன்ற' என்று குறிப்பிடலாம். எனவே 'ஒன்றைப் போன்று உள்ளது; ஆனால் அதன் சாரம்சம் அனைத்தும் இல்லை' என்பதே 'போல்வு' எனப்படும். இங்கு நீதிப் போல்வு என்றால் 'நீதிமுறையைப் போன்றது' அல்லது 'நீதித்தன்மை வாய்ந்தது' என்று கூறலாம். நிருவாகத் துறை அதிகார அமைப்பு ஒன்றின் செயல்பாடு நீதிமுறையின் அனைத்து கூறுகளையும் உள்ளடக்காமல், சில கூறுகளை மட்டும் உள்ளடக்கியிருப்பின், அந்த அதிகார அமைப்பு **'நீதித்தன்மை வாய்ந்த அதிகார அமைப்பு'** (quasi-judicial authority) என்றும், அதன் செயல்பாடு **'நீதித்தன்மை வாய்ந்த பணி'** (quasi-judicial function) என்றும் அழைக்கப்படுகிறது.

அமைச்சர்களின் அதிகாரங்களின் மீதான டுநோக்மோர் குழு (Donoghumore Committee on Ministers Powers) கூறும் கருத்துப் படி, இங்கும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர்களுக் கிடையே தகராறு இருப்பதாக முன்னதாகக் கொண்டு, நாம் ஏற்கனவே கண்ட நீதிமுறைப் பணிக்குண்டான நான்கு அவசியக் கூறுகளில் முதலிரண்டு கூறுகளை அத்தகராறு உள்ளடக்கியதாக இருப்பின், அது **நீதித்தன்மை வாய்ந்த பணியாகும் (Quasi-judicial function).** அவை,

(1) தகராறுக்குரிய தரப்பினர்கள் தங்களுடைய வழக்கை முன்னிலைப்படுத்துகை (presentation of their case by the parties to the dispute);

(2) அவர்களிடையே உள்ள தகராறு பொருண்மை குறித்த பிரச்சனையாக (question of fact) இருப்பின், தகராறுக்குரிய தரப் பினர்களால் அளிக்கப்படும் சாட்சியத்தின் வாயிலாகவும், அத்தரப் பினர்களின் சார்பாக முன் வைக்கப்படும் வாதங்களின் துணையுடனும், அப்பொருண்மையை தீர்மானித்தல்;

நீதித்தன்மை வாய்ந்த பணியானது, நீதிமுறைப் பணியின் மூன்றாவது அவசியக் கூறினைக் (requisite) கட்டாயத் தேவையாகக் கொண்டிருப்பதில்லை. மேலும் நான்காவது அவசியக் கூறு எழுவதே இல்லை. நீதித்தன்மை வாய்ந்த பணியானது, சட்டம் பற்றிய பிரச்சனை யோடு எப்பொழுதும் சம்பந்தப்பட்டிருக்கும் என்று சொல்வதற்கில்லை. அதுபோல் நீதித்தன்மை வாய்ந்த தீர்ப்பானது, சட்ட வாதங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. அதாவது, நீதித்தன்மை வாய்ந்த தீர்ப்பு பொருண்மையை கண்டறிந்து, அதற்கு சட்டத்தைப் பொருத்தி, மொத்த விஷயத்தையும் முடிவு செய்யும் ஒரு தீர்ப்பன்று. பொருண்மையுடன் சட்டத்தைப் பொருத்திப் பார்ப்ப தற்கு பதிலாக, நிருவாகத்துறையானது, அரசாங்கக் கொள்கைகளைப் பொருத்திப் பார்க்கின்றது. சூழ்நிலைக்கேற்றவாறு சமுதாய மாற்றங் களுக்கு உகந்தவாறு தீர்ப்பளிக்கின்றது. தீர்ப்பு கூறுதல் நிருவாகத் துறை அதிகார அமைப்பின் விருப்பத்திற்கு உட்பட்டதாகும். அதாவது அதன் தன்விருப்புரிமை அதிகாரத்திற்குட்பட்டதாகும். இது சில சமயங்களில் அமைச்சர்களின் விருப்பத்திற்கேற்பவும் அமைகின்றது.

எனவே நீதித்தன்மை வாய்ந்த பணியில், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர்கள் தங்கள் வழக்குப் பிரச்சனைகளை நிருவாகத்துறை அதிகார அமைப்பிடம் முன் வைக்கிறார்கள். அவர்கள் அளிக்கும் சாட்சியங்களிலிருந்து பொருண்மை குறித்த பிரச்சனை தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் இந்த இரண்டும், எல்லா நீதித்தன்மை வாய்ந்த தீர்ப்புகளிலும் இருப்பதில்லை. முதற்கண், நிருவாகத் துறை யானது இரு வேறுபட்ட நபர்களுக்கிடையிலான வழக்கை தீர்ப்ப தில்லை. தனக்கும், தன்னால் பாதிக்கப்பட்ட மற்றொரு தனி நபருக்கும்

இடையிலான வழக்கையே பெரும்பாலும் தீர்க்கிறது. **எடுத்துக் காட்டாக,** நிலங்களை கட்டாயமாக நிருவாகத்துறை ஆர்ஜிதம் செய்ததால் பாதிக்கப்பட்ட நில உரிமையாளர், அந்த நிருவாகத் துறையிடம் தான், தனது வழக்கை முன்வைக்கிறார். எனவே இங்கு வழக்குத் தரப்பினரே, நிருவாகத்துறையாக உள்ளது. எனினும் அந்த நிருவாகத் துறையே அவ்வழக்கைத் தீர்க்கும் அதிகாரமும் பெற்றுள்ளது. நிருவாகத்துறை தனது வழக்கை எந்த நீதிமன்றத்திடமும் அல்லது அதிகார அமைப்பிடமும் எடுத்துரைப்பதில்லை. எனவே இங்கு, 'அம்பை எய்தவனிடமே நியாயம் கேட்கும்' செயல் நடக்கிறது. **இரண்டாவதாக,** நிருவாகத்துறையின் முன் வைக்கப்படும் சில வழக்குகளில், தரப்பினர்கள் சாட்சியம் அளிக்க வேண்டியதில்லை. எனினும் கட்டணம் அல்லது விலை நிர்ணயம் செய்தல் தொடர்பான வழக்குகளில், நிருவாகத்துறை தரப்பினர்களிடமிருந்து சாட்சியம் பெறுகின்றது. **மூன்றாவதாக,** ஒரு வழக்கில் நிருவாகத்துறையானது கண்டறிந்த பொருண்மைகளுக்கு அது சட்ட விதிகளை பொருத்திப் பார்க்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. அது பொதுக் கொள்கை மற்றும் நிருவாக தன்விருப்புரிமை ஆகிய வற்றின் அடிப்படையில் தனது தீர்ப்பை கூறிவிடலாம். இவையெல்லாம் வழக்கமான நீதிமன்றங்கள் அறியாத ஒன்றாகும். எனவே, நீதிமுறைப் பணிகளுக்கும், நீதித்தன்மை வாய்ந்த பணிகளுக்கும் இடையே மிகுந்த வேறுபாடுகள் உண்டு என்பதை மேற்கண்டவை கோடிட்டு காட்டுகிறது. அவ்வேறுபாடுகளை மேலும் தெளிவாக பின்வரும் அட்டவணை விளக்குகிறது.

நீதிமுறைப் பணிகளுக்கும், நீதித்தன்மை வாய்ந்த பணிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் (Distinctions between Judicial and Quasi-Judicial Functions):

நீதிமுறைப் பணிகள் (Judicial Functions)	நீதித்தன்மை வாய்ந்த பணிகள் (Quasi-Judicial Functions)
1. நீதிமுறைப் பணிகள் நீதிமன்றத்தால் செய்யப்படக் கூடிய ஒன்று	நீதித்தன்மை வாய்ந்த பணிகள் நிருவாகத் துறையால் அல்லது அதன் முகவர் நிலைகளால் (அதிகார அமைப்புகளால்) செய்யப்படக் கூடிய ஒன்று.
2. நீதிமுறை பணிகள், நீதிமுறைக்கே உரித்து அனைத்து கூறுகளையும் கொண்டிருக்க வேண்டும்.	நீதிமுறையின் எல்லா கூறுகளையும் உள்ளடக்காமல், அவற்றில் சில கூறுகளை மட்டும் ஒரு நிருவாகத் துறை அதிகார அமைப்பு பின்பற்றி வழக்கைத் தீர்மானித்தால், அது

	நீதித்தன்மை வாய்ந்த பணியைச் செய்வதாக பொருளாகும்.
3. இரு வேறுபட்ட தரப்பினர்கள் தங்களுக்குள் வழக்காட வேண்டும். இதுவே நீதிமுறைப் பணியின் அடிப்படைப் பண்பாகும்.	இங்கு பெரும்பாலும், வழக்கைத் தீர்க்கும் அதிகாரம் பெற்ற நிருவாகத் துறையே அவ்விரண்டு தரப்பினர்களில் ஒரு தரப்பினராக இருக்கிறது.
4. நீதிமன்றங்கள் சாட்சிய சட்ட விதிகளையும், நடைமுறைகளையும் மிகக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.	இங்கு அவ்வாறு பின்பற்றப்படுவதில்லை.
5. ஒத்த வழக்குகளில் வழங்கப் பட்ட தீர்ப்புகளை நீதிமன்றங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது முன் தீர்ப்புநெறியை (precedents) பின்பற்ற வேண்டும்.	இங்கு அவ்வாறு பின்பற்றப்படுவதில்லை.
6. ஒரு நீதிமன்றம், தனது வழக்கிற்கு தானே நீதிபதியாக இருக்கக் கூடாது. (நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் தவிர).	நீதித்தன்மை வாய்ந்த பணிகளை செய்ய அதிகாரம் பெற்ற ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு, சம்பந்தப்பட்ட வழக்கில் ஒரு தரப்பினராக இருக்கலாம். அதே சமயத்தில் அவ்வழக்கையும் தீர்மானிக்கலாம்.

நீதித்தன்மை வாய்ந்த பணிகளுக்கு எடுத்துக்காட்டுகள் (Illustrations for Quasi-Judicial Functions):

(1) மாணவர்களுக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கைகள்;

(2) துர்நடத்தை காரணமாக தொழிலாளி ஒருவரை பணி நீக்கம் செய்தல்;

(3) 1878-ஆம் ஆண்டின் கடல் சுங்க வரிச் சட்டத்தின் கீழ் பொருட்களை கையகப்படுத்தல்;

(4) உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு உரிமத்தை நீக்குதல், நிறுத்தி வைத்தல், இரத்து செய்தல், புதுப்பிக்க மறுத்தல்;

(5) குடியுரிமையை தீர்மானித்தல்;

(6) சட்டப்படியான தகராறுகளை தீர்மானித்தல்;

(7) ஒய்வூதியம் அல்லது பணிக் கொடையை பறித்தல்.

நிருவாகத்துறைப் பணிகள் (Administrative Functions):

Ram Jawaya v. State of Punjab[1] - எனும் வழக்கில் தலைமை நீதியரசர் **Mukherjea** அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். அதன்படி, "நிருவாகத்துறைப் பணிகள் என்றால் என்ன பொருள் மற்றும் அது எதைக் குறிப்பிடுகிறது என்பதற்கு ஒரு முழுமையான வரையறையை வகுப்பது என்பது இயலாத செயல். சாதாரணமாக, அரசாங்கத்தின் சட்டமியற்றும் மற்றும் நீதித்துறைப் பணிகள் போக, எஞ்சியிருக்கும் அரசுப் பணிகளே நிருவாக அதிகாரமாகும்"[2] என்று கூறுகிறார்.

எனவே, நிருவாகத்துறை பணிகள் என்பன, சட்டமியற்றும் அல்லது நீதித்துறை பணிகள் அல்லாத ஒன்றாகும். **பொதுவாக நிருவாகத் துறைப் பணிகளில் பின்வரும் கூறுகள்** அடங்கியிருக்கும். அவை,

(1) நிருவாகத்துறை செய்யும் ஒரு ஆணை பொதுவாக அரசாங்கக் கொள்கையின் அடிப்படையிலோ அல்லது சூழ்நிலைக்கு உகந்தவாறோ அமைந்திருக்கும்.

(2) நிருவாகத்துறை எடுக்கும் முடிவுகளில், சம்பந்தப்பட்ட பிரச்சனையை நீதிமுறையில் அணுக வேண்டும் என்ற சட்டக் கடப்பாடு ஏதும் கிடையாது.

(3) நிருவாகத்துறை அதிகார அமைப்பு ஒன்று, பொதுவாக சாட்சிய சட்டத்தின் விதிகளையோ அல்லது நடைமுறைகளையோ கடைப்பிடிக்க வேண்டியதில்லை. எனினும் அவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்று தொடர்புடைய சட்டத்தால் ஒரு கடப்பாடு நிருவாகத் துறையின் மீது விதிக்கப்பட்டிருப்பின், அவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும்.

(4) சட்டப்படியான அதிகாரத்தை செயல்படுத்தி அல்லது அவ்வாறு சட்டப்படியான அதிகாரம் இல்லையென்றாலும் கூட, நிருவாகத்துறை அதிகார அமைப்பானது முடிவொன்றை எடுக்கலாம். ஆனால் அந்த முடிவு அல்லது நடவடிக்கை எச்சட்டத்தின் வகை முறைகளுக்கும் முரண்பட்டதாக இருக்கக் கூடாது.

(5) நிருவாகத்துறைப் பணிகளை அதன் மற்ற அதிகார அமைப்பு களிடம் ஒப்படைக்கலாம்; மேலும் கீழ்ப்படையான அதிகார ஒப்படைவும்

---

1. (1955) 2 SCR 225: A.I.R. 1955 S.C. 549

2. "It may not be possible to frame an exhaustive definition of what executive function means and implies. Ordinarily the executive power connotes the residue of governmental functions that remain after legislative and judicial functions are taken away" - Ibid. at p. 555 (A.I.R.)

செய்யலாம் (Administrative functions may be delegated and sub-delegated). ஆனால் இதற்கு சட்டத்தால் குறிப்பிட்ட வகையில் எந்த தடையும் விதிக்கப்பட்டிருக்கக் கூடாது.

(6) நிருவாகத்துறையானது வழக்கொன்றில் ஒரு முடிவை எடுக்கும் பொழுது, அது தன் முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களை கருத்தில் கொள்வதோடு மட்டுமல்லாமல், தனது தன்விருப்புரிமை அதிகாரத்தையும் பயன்படுத்தலாம்.

(7) ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு எப்பொழுதுமே கட்டுப்பட்டதல்ல. எனினும் அவ்வாறு கட்டுப்பட வேண்டும் என்று சட்டத்தால் அதன் மீது வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையான குறிப்பின் வாயிலாவோ ஒரு கடமை சுமத்தப்பட்டிருக்கும் பொழுது, இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு கட்டுப்பட்டு நீதிமுறையிலும், நியாயமாகவும் செயல்பட வேண்டும்.

(8) நிருவாகத்துறையால் செய்யப்பட்ட ஒரு ஆணையை நியாயமற்றது எனும் அடிப்படையில் செல்லாது என்று அறிவிக்க இயலும்.

(9) நிருவாகத்துறை நடவடிக்கைகளுக்கு எதிராக நெறிமுறையுறுத்தும் மற்றும் தடையுறுத்தும் நீதிப் பேராணைகளை அனைத்துச் சூழ்நிலைகளிலும் பிறப்பிக்க இயலாது.

நிருவாகத்துறைப் பணிகளுக்கு எடுத்துக்காட்டுகள் (Illustrations for Administrative Functions):

(1) ஒருவரை தடுப்புக் காவலில் வைக்க பிறப்பிக்கப்பட்ட ஆணை (an order of preventive detention);

(2) சொத்தைக் ஆர்ஜிதம் (acquisition) செய்ய அல்லது கேட்டுப் பெற (requisition) பிறப்பிக்கப்படும் ஆணை;

(3) ஒரு விசாரணை ஆணையத்தை அமைப்பதற்காக பிறப்பிக்கப்படும் ஆணை (an order setting up a commission of inquiry);

(4) 1947-ஆம் ஆண்டின் தொழிற்தகராறுகள் சட்டத்தின் கீழ் ஒரு குறிப்பீட்டை செய்து அல்லது செய்ய மறுத்து பிறப்பிக்கப்படும் ஆணை;

(5) பல்வேறு விற்பனை வரிச் சட்டங்களின் கீழ் வரி விதித்து பிறப்பிக்கப்படும் ஆணை;

(6) உரிமத்தை அல்லது அனுமதியை வழங்குவதற்கான அதிகாரம் (power to issue licence or permit);

(7) காவல்துறை பதிவேட்டில் பெயர்களை பதிவு செய்தல்.

நிருவாகத்துறைப் பணிகளுக்கும், நீதித்தன்மை வாய்ந்த பணிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் (Distinctions between Administrative and Quasi-Judicial Functions):

ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பின் செயற்பாடுகளானது, முழுக்க முழுக்க நிர்வாகத்துறை சார்ந்ததாகவோ அல்லது சட்டமியற்றுத் துறை அல்லது நீதித்துறை தன்மை வாய்ந்ததாகவோ இருக்கலாம். முழுக்க முழுக்க நிருவாகத்துறை சார்ந்த தீர்ப்புகள் (முடிவுகள்), நீதித்துறை மற்றும் நீதித்தன்மை வாய்ந்த தீர்ப்புகளிலிருந்து முழுவதும் வேறுபட்டதாகும். எனவே அவற்றை வேறுபடுத்தி அறிதல் அவசியம். இது மிகக் கடினமான பணியாகும். நிருவாகத்துறை பணி எங்கு முடிகிறது என்றோ அல்லது நீதிமுறைப் பணி எங்கு தொடங்குகின்றது என்றோ அறுதியிட்டு திட்டவட்டமாகக் கூற நீதிமன்றங்களால் இன்றளவும் இயலவில்லை.

A.K.Kraipak v. Union of India[3] எனும் முக்கியமான வழக்கில் நீதியரசர் **Hegde** அவர்கள் பின்வருமாறு கருத்துரைக்கின்றார். அதன்படி,

> "**நிருவாகத்துறை அதிகாரத்திற்கும், நீதித்தன்மை வாய்ந்த அதிகாரத்திற்கும் இடையே உள்ள பிரிவினைக் கோடு மிகவும் மெல்லியதாக உள்ளது; மேலும் அது படிப்படியாக மறைந்து வருகின்றது**..... சமீப ஆண்டுகளில் நீதித்தன்மை வாய்ந்த அதிகாரம் குறித்த கருத்துருவானது, ஒரு வேகமான மாறுதலுக்கு உள்ளாகிக் கொண்டே வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு எது நிருவாகத்துறை அதிகாரமாக கருதப்பட்டதோ, அது தற்பொழுது நீதித்தன்மை வாய்ந்த அதிகாரமாக கருதப்படுகிறது."[4]

இக்கருத்து, மேற்கண்ட இரண்டு பணிகளுக்கும் இடையிலான வேறுபாடு குறித்த நீதிமன்றத்தின் கண்ணோட்டத்தில் ஒரு முன்னேற்றமான மாறுதலை ஏற்படுத்தியது என்றே கூற வேண்டும். ஏனெனில் ஒரு பணி, நிருவாகத்துறை சார்ந்ததா அல்லது நீதித்தன்மை வாய்ந்தா என்று முந்தய காலகட்டங்களில் எதற்காக வேறுபடுத்திப் பார்த்தார்கள் என்றால், சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பு, நீதித்தன்மை வாய்ந்த பணிகளைச் (quasi-judicial functions) செய்யக் கூடியதாக இருப்பின், அதற்கு எதிராக நெறிமுறையுறுத்தும் நீதிப் பேராணையை (writ of certiorari) பிறப்பித்து, அது இயற்கை நீதிக் கோட்பாடுகளை (principles of natural justice) பின்பற்றி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று

---

3. (1969) 2 SCC 262: A.I.R. 1970 S.C. 150

4. "The dividing line between an administrative power and a quasi judicial power is quite thin and is being gradually obliterated..... In recent years the concept of quasi-judicial power has been undergoing a radical change. What was considered as an administrative power some years back is now being considered as a quasi-judicial power"-Ibid. at pp 268-69 (SCC): at p. 154 (A.I.R.)

வலியுறுத்துவதற்காகத்தான். அதாவது முந்திய கால கருத்தின்படி, ஒரு அதிகார அமைப்பின் முடிவு, முழுக்க முழுக்க நிருவாகத்துறை முடிவாக (pure administrative decision) இருப்பின், அதனை செல்லாதது என்று விளம்ப, அதற்கு எதிராக நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையை பிறப்பிக்க இயலாது. மேலும் அந்த அதிகார அமைப்பு முழுக்க முழுக்க நிருவாகத்துறை பணிகளை (pure administrative functions) மேற் கொள்ளும் பொழுது, அது இயற்கை நீதிக் கோட்பாடுகளை பின்பற்றி செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தவும் முடியாது.

ஆனால் மேற்கண்ட வழக்கில் கூறப்பட்ட "**நிருவாகத்துறை அதிகாரத்திற்கும், நீதித்தன்மை வாய்ந்த அதிகாரத்திற்கும் இடையே உள்ள பிரிவினைக் கோடு மிகவும் மெல்லியதாக உள்ளது; மேலும் அது படிப்படியாக மறைக்கப்பட்டு வருகின்றது**, எனும் தற்கால புதிய அணுகுமுறை, நிருவாகத்துறைப் பணிகளில் சட்டத்தின் ஆட்சியை (Rule of Law) வலிமையுடையதாக ஆக்கியுள்ளது. ஒரு நாட்டின் நிருவாகத் துறையும், அதன் முகவர் நிலைகளும் தங்களுடைய பணிகளை நியாயமான மற்றும் சரியான முறையில் நிறைவேற்ற வேண்டும் என்ற கடப்பாடு அவற்றிற்கு விதிக்கப்படாது போனால், அங்கு சட்டத்தின் ஆட்சி எனும் கருத்து வலுவிழந்து போகும்.

மேற்கண்ட கருத்தினால், தற்பொழுது ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு முழுக்க முழுக்க நிருவாகத்துறை பணிகளைச் செய்தாலும், அது இயற்கை நீதிக் கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டும். மேலும் அனைத்து வகையான நிருவாகத்துறை பணிகளுக்கும் எதிராக உயர் மற்றும் உச்ச நீதிமன்றம் நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணைகளை பிறப்பிக்கவும் முடியும், எனும் வரவேற்கத்தக்க நிலை உருவானது.

நிருவாகத்துறைப் பணிகளை, நீதித்தன்மை வாய்ந்த பணிகளி லிருந்து வேறுபடுத்திப் பார்க்க நாம் பின்வரும் இரண்டு சொற்களின் விளக்கத்தை அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. அவை

(1) சட்ட வழக்கு (Lis): Province of Bombay v. Khushaldas Advani[5] எனும் வழக்கில், **நீதியரசர் தாஸ்** அவர்கள் பின்வருமாறு கருத் துரைக்கிறார். அதன்படி,

> "ஒரு தரப்பினரால் சட்டப்படி செய்யப்பட்ட ஒரு கோரிக்கை யானது மற்றொரு தரப்பினரால் மறுக்கப்பட்டதால் எழும் தகராறை தீர்ப்பதற்காக சட்டமொன்று அதிகார அமைப்பொல் றிற்கு அதிகாரம் அளித்திருந்து, அந்த அமைப்பு அவ்வாறு எதிர்த்து வழக்காடும் தரப்பினர்களுக்குண்டான உரிமைகளை தீர்மானித்தால் அங்கு ஒரு சட்ட வழக்கு உள்ளது எனலாம்."[6]

5. 1950 SCR 621: A.I.R. 1950 S.C. 222

6. Ibid. at p 260 (A.I.R.).

ஒரு பணியை நிருவாகத்துறை பணியிலிருந்து வேறுபடுத்தி, அதனை நீதித்தன்மை வாய்ந்த பணியெனக் கூற வேண்டுமெனில், அங்கு தரப்பினர்களிடையே சட்ட வழக்கொன்று இருத்தல் வேண்டும்; அதை நிருவாகத்துறை அதிகார அமைப்பு ஒன்று தீர்த்து, அச்சட்ட வழக்கில் தீர்ப்பு வழங்க வேண்டும். இம்மாதிரியான சூழ்நிலைகளில், சம்பந்தப் பட்ட நிருவாகத்துறை அதிகார அமைப்பு, நீதித்தன்மை வாய்ந்த பணிகளைச் செய்வதாகக் கூறப்படும்.

சில நிருவாகத்துறை அதிகார அமைப்புகள், நீதித்தன்மை வாய்ந்த பணிகளைச் செய்யும் அதிகார அமைப்புகளாகவும் (quasi-judicial authorities), அதன் தீர்ப்புகள், நீதித்தன்மை வாய்ந்த தீர்ப்பு களாகவும் (quasi-judicial decisions) நிலைநிறுத்தப்பட்டுள்ளன. ஏனெனில் மேற்கண்ட வகையான **சட்ட வழக்கு (Lis)** அங்கு உள்ளது. **எடுத்துக்காட்டாக,** நில உரிமையாளருக்கும், அவரது வாடகை தாரருக்கும் இடையில் வாடகைச் சொத்தின் 'நியாயமான வாடகையை' தீர்மானிக்கும் ஒரு வாடகைக் கட்டுப்பாட்டு தீர்ப்பாயம் (Rent Control Tribunal), போட்டி வேட்பாளர்களுக்கிடையிலான தேர்தல் தகராறை தீர்க்கும் ஒரு தேர்தல் ஆணையம், தொழிற்சாலைத் தகராறுகளைத் தீர்க்கும் ஒரு தொழிற்துறை தீர்ப்பாயம் (Industrial Tribunal).

(2) சட்டத்தன்மை வாய்ந்த வழக்கு (Quasi-lis): நாம் ஏற்கனவே கண்டது போல், அனைத்து நேர்வுகளிலும் இரு வேறுபட்ட தரப்பினர் களுக்கிடையிலான சட்ட வழக்குகளை மட்டும் நிருவாகத்துறை அதிகார அமைப்பு தீர்ப்பதில்லை. அதற்கும் ஒரு படி மேலாக, அந்த இரு தரப்பினர்களில் ஒரு தரப்பினராக நிருவாகத்துறை அதிகார அமைப்பே இருந்து, அந்த வழக்கையும் அந்த நிருவாகத்துறை அதிகார அமைப்பே தீர்க்கும் நேர்வுகளும் எழுவதுண்டு. இம்மாதிரியான வழக்குகள், சட்டத் தன்மை வாய்ந்த வழக்குகள் **(Quasi-lis)** எனப்படும். ஆனால், இங்கும் கூட அந்த நிருவாகத்துறை அதிகார அமைப்பு கூறும் முடிவு, நீதித் தன்மை வாய்ந்த தீர்ப்புகள் (quasi judicial decisions) எனப்படுகின்றன. எனினும், இவ்வாறு தீர்ப்பு கூறும் பொழுது, அந்த அதிகார அமைப்பு நீதிமுறையில் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, நிருவாகத்துறை அதிகார அமைப்பு ஒன்று, வசதியில்லாத ஒருவருக்கு சட்ட உதவி வழங்க பிறப்பிக்கும் ஆணை, தொழிலாளி ஒருவரை பணி நீக்கம் செய்யும், உரிமம் ஒன்றை வழங்க மறுக்கும், இரத்து செய்யும், நிறுத்தி வைக்கும் அல்லது நீக்கறவு செய்யும் அதிகார அமைப்புகள், முறையற்ற வழியைப் பயன்படுத்தி தேர்ச்சியுற்ற ஒரு மாணவனின் தேர்வு முடிவுகளை இரத்து செய்யும் அதிகார அமைப்பு ஆகியவையும் நீதித்தன்மை வாய்ந்த பணிகளைச் செய்யும் அதிகார அமைப்புகளாகவும் (quasi-judicial authorities), அதன் மேற்கண்ட தீர்ப்புகள், நீதித்தன்மை வாய்ந்த தீர்ப்புகளாகவும் (quasi judicial decisions) கருதப்படுகின்றன.

அனைத்து வழக்குகளிலும், நிருவாகத்துறை அதிகார அமைப்பின் முன்பு இரு தரப்பினர்கள் இருப்பதில்லை. வழக்கின் மற்றொரு தரப்பினராக எவரேனும் இருப்பின், அது அந்த நிருவாகத் துறை அதிகார அமைப்பாகத்தான் இருக்கும். எனினும், அதன் முடிவு ஒரு நபரின் உரிமைகளை பாதிப்பதாக அமையுமேயாயின், அங்கு ஒரு சட்ட வழக்கு (Lis) இருப்பதாகப் பொருளாகும். இந்த மாதிரியான சூழல்களில், அந்த நிருவாகத்துறை அதிகார அமைப்பு, அந்நபரின் ஆட்சேபணைகளை கேட்டுப் பெற்று, அதனைக் கருத்தில் கொண்டு முடிவெடுக்க வேண்டும். அந்த அதிகார அமைப்பு தனது அதிகாரத்தை மீறி செயல்பட்டாலோ அல்லது துஷ்பிரயோகம் செய்தாலோ, அதற்கு எதிராக நெறி முறையுறுத்தும் நீதிப்பேராணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும். எனவே இதனை நீதிப்பெருமகனார் **Greene, M.R.** அவர்கள் 'சட்டத் தன்மை வாய்ந்த வழக்குகள்' **(Quasi-lis)** என்று சரியாகக் குறிப்பிடுகிறார்.

நிருவாகத்துறை பணியிலிருந்து, நீதித்தன்மை வாய்ந்த பணியை வேறுபடுத்த உதவும் உண்மைான சோதனை (The Real Test for distinguishing a Quasi-Judicial Function from an Administrative Function):

ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு, நிருவாகத்துறை பணியை செய்கிறதா அல்லது நீதித்தன்மை வாய்ந்த பணியைச் செய்கிறதா என்பதை எப்படிக் கண்டறிவது? அதற்கு உதவ வருகிறது, **'நீதிமுறையில் செயல்பட வேண்டிய கடமை' (Duty to act judicially)** எனும் சோதனை. அதாவது ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு, நீதிமுறையில் செயல்பட்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் எனும் கடமையைக் கொண்டிருப்பின், அது நீதித்தன்மை வாய்ந்த பணியைச் செய்வதாகக் கருதப்படும். இப்படிப்பட்ட கடமை அதற்கு இல்லையானால், அது வெறுமனே நிருவாகத்துறை பணியை மட்டும் செய்வதாகப் பொருளாகும்.

இவ்வாறு ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு, நீதிமுறைப்படி செயல்பட வேண்டிய கடமை கொண்டிருப்பதாக எப்பொழுது கூறப்படுகிறதென்றால், அந்த நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு அதிகாரம் வழங்கும் சட்டத்திலேயே அவ்வாறு நீதிமுறையில் செயல்பட்டு நடவடிக்கை (முடிவு) எடுத்தல் வேண்டும் என்று வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருப்பின், அந்த அதிகார அமைப்பு ஒரு நீதித்தன்மை வாய்ந்த அதிகார அமைப்பாகும் (Quasi-judicial Authority). அதன் பணிகள், நீதித்தன்மை வாய்ந்த பணிகளாகும்.

அடுத்து நம் முன்பு எழும் வினா யாதெனில், இவ்வாறு நீதி முறையில் செயல்பட வேண்டும் என்று சட்டத்தால் வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருக்கும் பொழுதுதான், ஒரு நிருவாகத் துறை அதிகார அமைப்பு செய்யும் பணிகள், நீதித்தன்மை வாய்ந்த பணிகளாக ஆகுமா என்பதுதான். பொதுவாக அனைத்து சட்டங்களிலும் இம்மாதிரி

யானதொரு கடமை நிருவாகத்துறை அதிகார அமைப்புகளுக்கு விதிக்கப் பட்டிருப்பதில்லை. எனினும், பாதிக்கப்பட்ட உரிமைகளின் தன்மை குறித்த கூட்டு விளைவு, எப்படி தகராறை தீர்ப்பது, அளிக்கப்பட்ட அதிகாரத்தின் தன்மை ஆகியவற்றை அந்த சட்டத்தின் வாசகங் களிலிருந்து, நீதிமுறையில் செயல்பட வேண்டிய கடமை உள்ளதா, இல்லையா என்பதை நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் ஊகித்தறிந்து கொள்ளலாம். இந்நிலைப்பாட்டை மேலும் தெளிவாக அறிந்து கொள்ள, நமக்கு பின்வரும் சில வழக்குகள் உதவி புரியும்.

Nakkuda Ali v. Jayaratne[7] - எனும் வழக்கில் ஜவுளி விற்பனை யாளர் ஒருவரின் உரிமத்தை, அவர் ஒரு ஜவுளி விற்பனையாளராக (textile dealer) தொடர்ந்து நீடித்திருக்கும் தகுதியை இழந்து விட்டார் எனும் காரணத்தின் அடிப்படையில் ஜவுளித் துறை கட்டுப்பாட்டாளர் (Controller of Textiles), இரத்து செய்து விட்டார். இந்த ஆணையை பிறப் பிப்பதற்கு முன்னர், மேற்படி கட்டுப்பாட்டாளர், அந்த விற்பனை யாளரின் ஆட்சேபணைகளைக் கேட்கவில்லை. இந்த ஆணையினால் பாதிக்கப்பட்ட அவ்விற்பனையாளர், அக்கட்டுப்பாளருக்கெதிராக எடுத்த நீதிமன்ற நடவடிக்கையில், கட்டுப்பாட்டாளர் மேற்கண்டவாறு உரிமத்தை இரத்து செய்து எடுத்த நடவடிக்கையானது, ஜவுளி விற்பனையாளருக்கு நிருவாகத்துறையால் அளிக்கப்பட்டிருந்த ஒரு சிறப்புரிமையை திரும்பப் பெறுவது தொடர்பான ஒரு நிருவாகத்துறை நடவடிக்கையேயாகும். எனவே அவர் நீதிமுறையில் செயல்பட வேண்டிய கடமை எதையும் கொண்டுள்ளவரல்ல என்று பிரிவி கவுன்சில் கூறியது.

R. v. Metropolitan Police Commissioner, ex p Parker[8] - எனும் வழக்கிலும் வாடகை கார் ஒன்றின் ஓட்டுநரின் உரிமம், அவரது துர்நடத்தையின் காரணமாக இரத்து செய்யப்பட்டது. இங்கும் அவர் மீது செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்துக் கூற அவருக்கு எந்த சந்தர்ப்பமும் அளிக்கப்படவில்லை. இங்கு உரிமம் வழங்குவது என்பது அனுமதி வழங்குவது என்று பொருளாகும். அந்த அனுமதியை, எப்பொழுது வேண்டுமானலும், அதை வழங்கியவர் இரத்து செய்ய அவருக்கு உரிமை உண்டு. அவ்வாறு செய்கையில், அவர் நீதிமுறையில் செயல்படக் கடமைப்பட்டவரல்ல என்று நீதிமன்றம் கூறியது.

Ridge v. Baldwin[9] - எனும் வழக்கின் தீர்ப்பின் மூலமாக மேற் கண்ட சர்ச்சை ஒரு முடிவிற்கு வந்ததாகக் கூறலாம். இதில் தீர்ப்பு வழங்கிய நீதிப் பெருமகனார் **Lord Reid** அவர்கள், ஒரு தனிநபரின் உரிமைகள் என்னவாக இருக்க வேண்டும் என்று மட்டும் ஒரு நிருவாகத்

7. (1951) AC 66 (78-79): 54 Cal WN 853
8. (1953) 1 WLR 1150: (1953) 1 All ER 717
9. (1964) AC 40: (1963) 2 All ER 66: (1963) 2 WLR 935

துறை அதிகார அமைப்பு தீர்மானித்தால் போதாது; அது நீதிமுறையில் செயல்பட்டு தீர்மானிக்கும் கடமை கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

இத்தீர்ப்பின் அடிப்படையில் **State of Orissa v. Binapani Dei**[10] - எனும் இந்திய வழக்கில், நீதியரசர் **ஷா** அவர்கள், "நீதிமுறையில் செயல்பட வேண்டிய கடமை, நிருவாகத்துறையால் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பணியின் அடிப்படைத் தன்மையிலிருந்து எழுகிறது. அது கூடுதலாக சேர்க்கப்பட்டதாக காண்பிக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு நபருக்கு ஏற்பட்ட பாதகங்களை தீர்மானித்து முடிவெடுக்கும் அதிகாரம் உள்ளதெனில், அந்த அதிகாரத்தை செயல்படுத்துவதில் நீதிமுறையில் செயல்பட வேண்டிய கடமையும் உள்ளதென்பது உட்கிடையானதாகும்", என்று தெளிவுபடக் கூறினார்.

Maneka Gandhi v. Union of India[11] - எனும் மிக முக்கியமான வழக்கிலும், மேற்கண்ட கருத்தே உச்ச நீதிமன்றத்தால் வலியுறுத்தப் பட்டது. நீதிமுறையில் செயல்பட வேண்டிய கடமையை சட்டத்தில் கூடுதலாக 'superadded) சேர்க்க வேண்டிய அவசியமில்லை. அக் கடமையை, நிருவாகத்துறையிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் தன்மை, அதை செயல்படுத்தும் முறை, அது பாதிக்கப்பட்ட நபரின் உரிமைகளின் மீது ஏற்படுத்தும் விளைவு ஆகியவற்றிலிருந்து ஊகித்தறிய லாம் எனப்பட்டது.

வேறுபாடுகளைக் காட்டும் அட்டவணை:

நிருவாகத்துறைப் பணிகள் (Administrative Functions)	நீதித்தன்மை வாய்ந்த பணிகள் (Quasi-judicial Functions)
1. அரசாங்கத்தின் கொள்கைகளை policy of government) நிறை வேற்றுவதே, நிருவாகத்துறைப் பணியாகும். இங்கு தகராறுகள் ஏதும் தீர்க்கப்படுவதில்லை.	இரண்டு வேறுபட்ட தரப்பினர் களுக்கிடையிலான அல்லது தமக்கும்,தமக்கெதிரான மற்றொரு தரப்பினருக்கும் இடையிலான ஒரு வழக்கை நிருவாகத்துறை அதிகார அமைப்பு தீர்க்கும் பணியைச் செய் தால், அது நீதித்தன்மை வாய்ந்த பணியாகும்.
2. நிருவாகத்துறைப் பணியானது முக்கியமாக, சம்பந்தப்பட்ட நிரு	நீதித்தன்மை வாய்ந்த பணியைப் பொறுத்தவரை, அவ்வாறு செயல்

10. (1967) 2 SCR 625: AIR 1967 S.C. 1269
11. (1978) 1 SCC 248, 287: AIR 1978 S.C. 597, 672

வாசுத்துறை அதிகார அமைப்பின் தன்விருப்புரிமை அதிகாரத்தை (discretionary powers of the authority) சார்ந்துள்ளது.	படும் அதிகார அமைப்பு நீதி முறையில் செயல்பட வேண்டிய கடமையைக் (duty to act judicially) கொண்டுள்ளது.
3. சட்டத்தால் குறிப்பாக அத்தகு ஒரு கடப்பாடு விதிக்கப்பட்டிருந் தாலொழிய, முழுக்க முழுக்க நிருவாகத்துறை தன்மை வாய்ந்த பணியானது எந்த சட்ட நடை முறைக்கும் கட்டுப்பட்டதல்ல.	நீதித்தன்மை வாய்ந்த பணியைச் செய்யும் அதிகார அமைப்புகள், இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு கட்டுப்பட்டதாகும்.

6

நிருவாகமுறை நீதித்தீர்ப்பு
[இயற்கை நீதி மற்றும் மனச்சாய்வு]

Administrative Adjudication
[Natural Justice and Bias]

நிருவாகமுறை நீதித்தீர்ப்பு
[Administrative Adjudication]

25. Explain "Administrative adjudication". What are the reasons for the growth of this phenomenon? ("நிருவாகமுறை நீதித்தீர்ப்பு" என்பதனை விளக்குக. இத்தகைய இயல் நிகழ்ச்சியின் வளர்ச்சிக்கு காரணம் என்ன?)

நிருவாகமுறை நீதித்தீர்ப்பு (Administrative Adjudication) - விளக்கம்:

வளர்ந்து வரும் இன்றைய நிருவாகத்துறைக்கு எண்ணற்ற அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சட்டமியற்றுத்துறை தனக்குரிய சட்டமியற்றும் அதிகாரத்தை, நிருவாகத்துறையிடம் ஒப்படைத்துள்ளது. இதன் மூலம் நிருவாகத்துறையானது விதிகள், ஆணைகள், ஒழுங்கு முறைகள், துணை விதிகள் ஆகியவற்றை செய்யும் விதியாக்க அதிகாரத்தை (delegated legislation) பெறுகிறது. இது காலத்தின் கட்டாயத்தால் தவிர்க்க இயலாத ஒன்றாகிவிட்டது. அவ்வாறே சட்டமியற்றுத்துறை பல நிருவாகத்துறை அதிகார அமைப்புகளை, முகவர் நிலைகளை நிறுவி, அவற்றிடம் தகராறுகளை நீதிமுறையில் தீர்க்கும் அதிகாரத்தையும் வழங்கியுள்ளது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, அந்த நிருவாகத்துறை அதிகார அமைப்புகள், முகவர் நிலைகள் வழங்கும் தீர்ப்புகள், **"நிருவாகமுறை நீதித்தீர்ப்புகள்" (Administrative Adjudications)** எனப்படுகின்றன. சில சமயங்களில் இவ்வாறு தீர்ப்பு வழங்கும் அதிகாரம், நிருவாகத்துறை அதிகார அமைப்புகளுக்கு இடைவிளைவாக (incidental) கொடுக்கப்பட்டது. சில சமயங்களில் இடைவிளைவாக அல்லாமல் நீதித்துறை போன்றே, நீதித் தீர்ப்புக் கூறும் அதிகாரமும் வழங்கப்பட்டது. நாட்கள் செல்லச் செல்ல மேலும் மேலும் அதிக நிருவாகத்துறை அதிகார அமைப்புகளும், முகவர் நிலைகளும் ஏற்படுத்தப்பட்டன. அவைகளிடமும் நீதித் தீர்ப்பு கூறும் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டன. இந்த நிலை இந்தியாவிற்கு மட்டுமே பொருந்தும் என்பதில்லை. இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஏனைய மக்களாட்சி நாடுகளிலும் இதே நிலைதான் உள்ளது. இதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. அவை வருமாறு.

நிருவாகமுறை நீதித் தீர்ப்பின் வளர்ச்சிக்கு காரணங்கள் (The Reasons for the growth of Administrative Adjudication):

நிருவாகமுறை நீதித் தீர்ப்பின் வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாக, நாட்டில் ஏற்பட்ட சமூக-பொருளாதார மாற்றங்ளைச் சுட்டிக் காட்டலாம். எடுத்துக்காட்டாக, இன்றைக்கு அரசு சமூகப் பணிகளையும், வேலை வாய்ப்புகள் தேடிக் கொடுக்கும் பணியையும், சுகாதார முன்னேற்றத்தையும், இலவசக் கல்வியளித்தலையும், குடிசை மாற்றுத் திட்டங்களையும் மற்றும் வறுமையைப் போக்கும் ஏனைய திட்டங் களையும் மேற்கொண்டு மக்கள் வாழ்வை மலரச் செய்கின்றது.

அரசு இந்தப் பணியில் ஈடுபடுங்கால் சில சமயங்களில் தகராறுகள் தலை தூக்குகின்றன. தகராறுகள் தனிமனிதர்களுக்கிடையேயோ அல்லது தனிமனிதர்களுக்கும் நிருவாகத்துறை அதிகார அமைப்புகளுக்கு இடையேயோ தோன்றும். தனிமனிதர்கள், தங்களுடைய உரிமைகள் மற்றும் நலன்கள் பாதிக்கப்பட்டுவிட்டதென எண்ணுங்கால், வழக்குத் தொடுக்கின்றனர். இந்த வழக்குகள் யாவும் நீதிமன்றத்தின் முன் வைக்கப் பட்டு நீதிமன்றம் தீர்ப்புக் கூற வேண்டுமானால், அதிகக் காலதாமதம் ஏற்படும்; வளர்ச்சிப் பணிகள் தடைபடும். மேலும் நீதிமன்றம் சட்டத்திற் கேற்ப நீதி வழங்கும். அந்தத் தீர்ப்பு சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங் களுக்கேற்பவும், சூழ்நிலைகளுக்கு உகந்த முறையிலும், வளர்ச்சிப் பணிக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் இருக்காது. நீதிமன்றத் தீர்ப்பினைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் அதிகச் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்பவும், சூழ்நிலைக்கு உகந்த முறையிலும் கொள்கை அடிப்படையில் சம்பந்தப்பட்ட துறையில் உள்ள வல்லுநர்களால் முடிவு எடுக்கப்படுமானால், அது, ஆக்கப் பணிகளுக்கு மேலும் ஊக்கமளிப்பதாக அமையும். மாறாக சட்டத்தில் மட்டும் தேர்ச்சியுற்ற நீதிபதிகளின் தீர்ப்பானது இலக்கணரீதியான பொருளைத் (literal meaning) தரும் சட்ட நுணுக்கஞ் சார்ந்த (technical) தீர்ப்பாக அமையுமே தவிர, சமுதாய வளர்ச்சிக்கேற்ப வளைந்து ஈடு கொடுக்கும் தீர்ப்பாக அமையாது. இந்நிலை தவிர்க்கப்பட வேண்டு மெனில், வல்லுநர்களைக் கொண்ட நிருவாகத்துறை அதிகார அமைப்பு களுக்குத் தகராறுகளைத் தீர்க்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டியுள்ளது. அவற்றிற்கு நீதிமன்றத்தில் கையாளப்படும் விரிவான சட்ட நடைமுறைகளைப் பின்பற்றாமல், சுருக்கமான முறையில் தீர்ப்புக் கூறும் அதிகாரமும் வழங்கப்பட வேண்டியுள்ளது. ஆதலால் நாம் முன்னரே விளக்கமாகக் கண்டபடி, நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் வழங்கும் தீர்ப்புகள் சட்டத்தின்படி அமையாதிருப்பதில் வியப்பேதுமில்லை. கொள்கை அடிப்படையில் ஏற்படும் மாற்றங்களுக் கேற்பவும், சூழ்நிலைக்கு உகந்த முறையிலும் அவை அமையும்; சமுதாய வளர்ச்சிக்கு வளைந்து கொடுத்து ஆக்கம் தருவனவாக அமையும்.

இப்படிப்பட்ட தீர்ப்பு வழங்கும் அதிகாரம் நிருவாகத்துறை அதிகார அமைப்புகளுக்கு வழங்கப்பட்டதனால், நீதிமன்றங்களின் முன் குவிந்த வழக்குகளின் எண்ணிக்கையும் குறையத் தலைப்பட்டது.

மக்களுடைய உரிமைகள் பாதிக்கப்படும் பொழுதோ, அல்லது அவர்களது நலன்களுக்கு ஊறு நேரும் பொழுதோ, பாதிக்கப்பட்டவர் களுக்கு வாய்ப்பளித்து அவர்களுடைய வழக்குகளைக் கேட்டறிந்து பிறகு நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்பாக நிருவாகத்துறை அதிகார அமைப்புகளில் அடங்கியிருக்கும் நீதித்தீர்ப்பு கூறும் குழுமங்கள் (Adjudicative Bodies) அவைகளுடைய தீர்ப்புகளைக் கூற வேண்டும். அதற்குப் பின்னரே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

இத்தீர்ப்புளும் சில நடைமுறைகளை பின்பற்றி எடுக்கப்பட்ட தீர்ப்புகளாக அமைதல் வேண்டும். அந்த சில நடைமுறைகளும் பின்பற்றப்படாவிட்டால், அது நிருவாகத்துறையின் ஏதேச்சதிகாரப் போக்கிற்கு வழிவகுத்துவிடும். ஆதலால் நிருவாகமுறைச் சட்டம், நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் மீது சில நடைமுறைகளை விதித்து அவைகளுக்கேற்ப அந்த அதிகார அமைப்புகளை இயங்கச் செய்கின்றது; முடிவு எடுக்கச் செய்கின்றது.

முடிவுரை:

முடிவாகக் கூறின், நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் சில நடைமுறை விதிகளை (அதாவது இயற்கை நீதிக் கோட்பாடுகள் குறிப்பிடும் நடைமுறைகளைப்) பின்பற்றி அவைகளின்படி இயங்கி, பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் பற்றி தீர்மானித்து வழங்கும் தீர்ப்புகளுக்கு **"நிருவாகமுறை நீதித்தீர்ப்புகள்" (Administrative Adjudications)** என்று பெயர்.

இந்த தீர்ப்புகளை, ஒரு நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புடன் சமமாக வைத்துப் பார்ப்பதற்கில்லை. ஏனெனில் நாம் ஏற்கனவே கண்டவாறு ஒரு நீதிமுறைத் தீர்ப்பில் இருக்க வேண்டிய அனைத்து அவசியக் கூறுகளும், நிருவாகமுறை நீதித் தீர்ப்பில் இருக்காது. மேலும் இது நீதி வழங்கு தலையே தொழிலாகக் கொண்ட நீதித்துறையினால் வழங்கப்படும் தீர்ப்பல்ல; இது நிருவாகத்துறையால் வழங்கப்படும் தீர்ப்பாகும். இதன் காரணமாக நிருவாகத்துறை அதிகார அமைப்புகள், முகவர் நிலைகள் கொடுக்கும் தீர்ப்புகள், **நீதித்தன்மை வாய்ந்த தீர்ப்புகள் (Quasi-judicial Decisions)** எனப்படுகின்றன.

(நிருவாகமுறை அதிகார அமைப்புகள், நிருவாகமுறை நீதித் தீர்ப்புகள் வழங்கும் பொழுது பின்பற்ற வேண்டிய நடைமுறை விதி களான இயற்கை நீதிக் கோட்பாடுகளை (Principles of Natural Justice) நாம் அடுத்த அத்தியாயத்தில் விரிவாகக் காண உள்ளோம்.)

இயற்கை நீதி
[Natural Justice]

26. "The horizon of natural justice is constantly expanding"-Discuss with decided cases. ("இயற்கை நீதியின் எல்லை தொடர்ந்து விரிவடைந்து கொண்டிருக்கிறது"- இந்தக் கூற்றை முடிவு செய்யப் பட்ட வழக்குகள் மூலமாக உறுதி செய்க.)

(அல்லது)

Trace the development of the concept of fair play in administrative law. (நிருவாகமுறைச் சட்டத்தில் நடுநிலை கோடாமை என்ற கருத்துப்படிவத்தின் வளர்ச்சிப்படி நிலையை ஆய்க.)

(அல்லது)

What is meant by administrative adjudication? Enumerate the methods by which "openness, fairness and impartiality" can be integrated into administrative adjudication. (அமைப்பு வழித் தீர்ப்புகள் என்பதால் அறியப்படுவது யாது? அமைப்பு வழித் தீர்ப்புகளில் "திறந்திருத்தல், நேர்மை மற்றும் சாயாதிருத்தல்" உட்கொணர்வதற்கான முறைகளை மதிப்பீடு செய்க.)

முன்னுரை:

நீதித்தீர்ப்பு கூறும் நிருவாகத்துறை குழுமங்கள் (Adjudicatory Bodies), அவ்வாறு தீர்ப்பு கூறுகையில், சில நடைமுறை விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்று சென்ற வினாவின் விடையில் கண்டோம். அந்த நடைமுறை விதிகள், நீதிக்கு ஆக்கம் தரும் வகையிலும், வெளிப் படையானதாகவும் (openness), நியாயமானதாகவும் (fair), பாரபட்ச மில்லாததாகவும் (impartial) இருக்க வேண்டும். அதே சமயத்தில் நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் சுதந்திரமாகச் செயல்படுவதை பறிக்காத வகையிலும் இருக்க வேண்டும். அதன் செயல் திட்டங்கள் பாதிக்கப்படக் கூடாது. மேலும் அச்செயல் திட்டங்களை அமல் படுத்துவதில் ஏற்படும் பிரச்சனைகளும் நீக்கப்பட வேண்டும். இப் பிரச்சனைகள் நீதிமன்றங்களால் பின்பற்றப்படும் நிலைமுறைச் சட்டங்களால் (Substantive Laws) களையப்பட முடியாது. இந்நிலை அகற்றப்பட நாம் மேலே கண்டவாறு நீதித்தீர்ப்பு கூறும் நிருவாகத்துறை குழுமங்கள், சில நடைமுறைகளை விதிகளைப் பின்பற்ற வேண்டியுள்ளன. இந்த நடைமுறை விதிகள், **பொது நடைமுறை விதிகள் (General Rules of Procedure)** என்றும், **சிறப்பு நடைமுறை விதிகள் (Speciall Rules of Procedure)** என்றும் இருவகைப்படும்.

சிறப்பு நடைமுறை விதிகள், நீதித்தீர்ப்பு கூறும் குழுமங்களை

தோற்றுவித்த தோற்றுவாய் சட்டங்களிலேயே கொடுக்கப்பட்டிருக்கும். இவை நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் தன்மைக்கேற்பவும், அதனுடைய செயல் நோக்கத்திற்கேற்பவும் வேறுபடும். இதன்படி நீதித் தீர்ப்பு கூறும் குழுமங்கள் செயல்பட்டு, தீர்ப்புகள் வழங்க வேண்டும். எனவே இவ்விதிகளைப் பற்றி அதிகம் கூற வேண்டியதில்லை.

ஆனால், பொது நடைமுறை விதிகள் அனைத்து நீதித்தீர்ப்பு கூறும் குழுமங்களாலும் எவ்வித விதிவிலக்குமின்றி பின்பற்றப்பட வேண்டும். ஏனெனில் பொது நடைமுறை விதிகள் இன்றியமையாத் தன்மை வாய்ந்தவை. இவ்விதிகள் பின்பற்றப்படவில்லையானால், அங்கு நேர்மையான செயல்பாடு (fair play action) இருக்காது; நீதி பிறழும்; நீதித் தீர்ப்பில் சந்தேகம் எழும். அப்படி எதைத்தான் இந்த பொது நடைமுறை விதிகள் கூறுகின்றன என்றால், அவ்விதிகள் சம்பந்தப் பட்டவர்களுக்கு அவர்களுடைய வழக்குகளை எடுத்துரைக்க காரண ஆய்வுகளுக்கு பொருந்தும் வகையில் வாய்ப்பு அளித்து, நடுநிலை தவறாது நீதி கிடைக்கப் பெறுவதற்கான வழிவகைகளை வகுத்துரைக் கின்றன.

இந்த பொது நடைமுறை விதிகளை **"இயற்கை நீதிக் கோட்பாடுகள்" (Principles of Natural Justice)** பெற்றெடுத்த குழந்தைகளே என்று கூறலாம். எனவே இந்த பொது நடைமுறை விதிகளை, இயற்கை நீதிக் கோட்பாடுகள் என்று கூறுவதிலும் தவறொன்றுமில்லை. இதைப் பின்பற்றித்தான் நீதித்தீர்ப்பு கூறும் நிருவாகத்துறை குழுமங்கள் தீர்ப்பளிக்க வேண்டும்.

இயற்கை நீதி - எங்கிருந்து பிறந்தது? (அல்லது) இயற்கை நீதியின் வரையறை:

நீதித் தீர்ப்பு கூறும் நிருவாகத்துறை குழுமங்கள், இயற்கை நீதி வழுவாது செயல்பட வேண்டும் என்பது நிருவாகமுறைச் சட்டத்தில் நன்கு நிலைக்கப் பெற்ற சட்ட விதியாகும்.

இயற்கை நீதி என்ற சொல், உரோமானியர்களுடைய **"ஜஸ் நேச்சுரலே" (Jus Naturale)** எனும் கருத்துருவிலிருந்து தோன்றிய தாகும். இது இயற்கைச் சட்டத்தின் கோட்பாடுகளைக் (Principles of Natural Law) குறிக்கும்; தகைமை நெறியைக் (Equity) குறிக்கும்; நன்மனச் சான்றினைக் (Good Conscience) குறிக்கும். இது என்றும் எந்நாட்டிற்கும் நிலையானது; மாறாதது; எந்நாட்டுச் சட்ட முறைக்கும் பொருந்தும்; நீதி கூறும் பணியைச் செய்யும் எவருக்கும் பொருந்தும்; எப்பொழுதும் பொருந்தும்; சட்டத்திற்கு அடிப்படையானது; நீதிக்கு அவசியமானது; இயற்கையோடு ஒட்டியது; இது இன்றி நீதியில்லை. எனவே இது இயற்கை நீதியேயன்றி வேறில்லை.

இயற்கை நீதியின் வேறு பெயர்கள்:

மேற்கண்ட சிறப்புகள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற

இயற்கை நீதியை, அதன் அத்தகு தன்மையின் அடிப்படையில் **'அடிப் படை நீதி' (Fundamental Justice)** என்றும், **'அனைத்துலக நீதி' (Universal Justice)** என்றும், **'நேர்மையான செயல்பாடு' (Fair play action)** என்றும் வேறு பெயர்களால் அழைப்பதுமுண்டு.

இயற்கை நீதி கூறும் இரண்டு கோட்பாடுகள்:

இயற்கை நீதி பின்வரும் இரண்டு முக்கியமான கோட்பாடு களைக் குறிப்பிடுகிறது. அவை,

(1) எவரும் அவருடைய வழக்கில் அவரே நீதிபதியாக இருத்தல் கூடாது (Nemo Debet Ease-Judex in Propria Causa);

(2) இரு புறங் கேட்டல் (Audi Alteram Partem). அதாவது வழக்கை விசாரிக்கமால் யாரையும் கண்டனம் செய்தல் கூடாது.

இதையே ஆங்கிலத்தில்

(1) No man a judge in his own cause (No man shall be a judge in his own cause)

(2) Hear the other side (No man shall be condemned unheared)

என்று கூறுவார்கள்.

இந்திய நாட்டில் இயற்கை நீதிக் கோட்பாடுகள் வளர்ச்சியுற்ற விதத்தை அறிய வேண்டுமெனில், அது இங்கிலாந்தில் எவ்வாறு வளர்ச்சியுற்றது என்பதையும் நாம் அறிதல் அவசியம்.

இங்கிலாந்தில் இயற்கை நீதி வளர்ச்சியுற்ற விதம்:

இங்கிலாந்து நாட்டில் எழுந்த மிகப் பழைய வழக்குகளை உற்று நோக்குவோமானால், நீதிமன்றங்கள் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களை விட இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு அதிக முக்கியத் துவம் அளித்து வந்ததை அறியலாம்.

Calvin's Case[1] - இவ்வழக்கில், ஒழுக்க நெறிகள் (Law of Morals) சட்டமென்பது இயற்கைச் சட்டமாகும் என்றும், அது இறைவனால் உண்டாக்கப் பெற்றதென்றும், அதனால் அது மாறும் இயல்பற்ற தென்றும், சிதைக்க முடியாதது என்றும், பாராளுமன்றம் கூட இயற்கைச் சட்டம் கொடுக்கும் பாதுகாப்பை பறிக்க முடியாது என்றும், குறைக்க முடியாது என்றும், அது எல்லாச் சட்டங்களின் சட்டம் (Law of All Laws) என்றும் நீதிமன்றம் கூறியது.

Dr. Bentlay's Case - இவ்வழக்கில் இறைவனுடைய சட்டமும் (Law of God), மனிதனுடைய சட்டமும் (Law of Man) வழக்கின் இரு

1. 77 E.R. 377.

தரப்பினர்களும் தங்களுடைய வழக்குகளை எடுத்துரைக்க வாய்ப்பு தருகின்றதென்று நீதிமன்றம் கூறியது. எடுத்துக்காட்டாக, ஆதிகால மனிதன் ஆடமிற்கு (Adam) தண்டனை வழங்குவதற்கு முன்னதாக, அவனுக்கு அவனுடைய வழக்கை எடுத்துரைக்க இறைவன் வாய்ப்பளித் தான். இது இயற்கை நீதியின் 'இருபுறங் கேட்டல்' எனும் கோட்பாட்டை மீறக் கூடாது எனும் உயர் நிலையை பறை சாற்றுகிறது.

இவ்வாறாக இங்கிலாந்து நாட்டில் ஆரம்ப காலம் தொட்டு 1824-ஆம் ஆண்டு வரை இயற்கை நீதிக்கு மாறாக, பாராளுமன்றம் கூட சட்டங்களை இயற்றலாகாது என்ற கருத்து நீதிமன்றங்களிடையே நிலவி வந்தது. பின்னர் இந்தக் கருத்து காலப்போக்கில் மறையத் தொடங்கியது. நாளடைவில் இங்கிலாந்து பாராளுமன்றம் இயற்றிய சட்ட விதிகள் எப்படியிருப்பினும், அதுவே சட்டமாகும் என்ற கருத்து வளரத் தொடங்கியது. பாராளுமன்றம் இயற்றிய சட்ட விதிகள் இயற்கை நீதி விதிகளுக்கு முரண்பட்டிருப்பினும், அவை செல்லுமென்ற நிலை உருவெடுத்தது. மேலும் சட்டத்தில் நீதித்தன்மை வாய்ந்த முறையில் (quasi-judicial) செயல்பட வேண்டுமெனக் குறித்திருந்தாலொழிய நீதித் தீர்ப்பு கூறும் நிருவாகத்துறை குழுமங்கள் (Adjudicatory Bodies) இயற்கை நீதி விதிகட்கு உட்பட்டுச் செயல்பட வேண்டியதில்லை என்ற கருத்துப்பட நீதிமன்றங்கள் பல வழக்குகளில் கூறிற்று.

எனினும், இங்கிலாந்து நாட்டில் 1929-ஆம் ஆண்டில் அமைக்கப் பெற்ற **அமைச்சர்களின் அதிகாரங்களின் மீதான டுநோக்மோர் குழு வானது (Donoghmore Committee on Ministers Powers)**, இயற்கை நீதி பற்றி 1932-ஆம் ஆண்டில் சில பரிந்துரைகளை செய்தது. அதன்படி, இயற்கை நீதி, சமூக அல்லது நீதி முறைமை பற்றியதே தவிர, அதனை சட்டவிதியென எண்ணுவது தவறாகும் என்றும், இயற்கை நீதி நிலை முறைச் சட்டத்தின்பாற்படும் (Substantive Law) என்றும், இங்கிலாந்தில் இயற்கை நீதி விதிகள் நன்கு வரையறை செய்யப்பட்டதும், நிலைக்கப் பெற்றதுமான சட்ட விதிகளுக்குள் வரவில்லையென்றாலும், நீதித் தன்மை வாய்ந்த தீர்ப்புகள் (quasi-judicial decisions) யாவும் இயற்கை நீதி விதிகளுக்கு ஏற்புடையனவாக இருக்க வேண்டுமென்ற நிலை நிலவுகின்றதெனவும், இயற்கை நீதி, சட்டத்தின் ஆட்சிக்கு ஏற்புடைய தென்றும், இயற்கை நீதி விதிகள் கடைப்பிடிக்கப்படாவிட்டால் சட்டத்தின் ஆட்சி (Rule of Law) சரிவர நடைபெறாதெனவும் மேற்படி குழு கூறியது. அஃதாவது, நீதித் தீர்ப்பு கூறும் நிருவாகத்துறை குழுமங்கள், நீதித்தன்மை வாய்ந்த தீர்ப்புகள் அளிக்கையில், இயற்கை நீதிக் கோட்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதைத்தான் மேற்படி குழு மேற்கண்டவாறு கூறுகிறது.

இந்நிலையில், 1955-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் அமைக்கப் பட்ட **ஃபிராங்ஸ் குழுவானது (Franks Committee)**, தீர்ப்பாயங்கள் பற்றி தனது கருத்தைத் தெரிவிக்கையில், நீதித் தீர்ப்புக் கூறுகையில்,

வெளிப்படையான தன்மை (openness), நேர்மை (fairness), பாரபட்சமின்மை (impartiality) ஆகிய தன்மைகளுடன் நடைமுறையில் செயல்பட வேண்டுமெனக் கூறிற்று. இக்கருத்தின்படி, தீர்ப்பாயங்கள் நீதிமன்றங்கள் அல்லவென்றாலும், அவைகளுடைய நடைமுறையில் இயற்கை நீதிக் கோட்பாடுகளைப் புறக்கணித்தல் கூடாது என்பது தெளிவாகிறது. இந்த பரிந்துரைகளின்படி 1958-ஆம் ஆண்டில் தீர்ப்பாயங்கள் மற்றும் விசாரணைகள் சட்டம் (The Tribunals and Inquiries Act, 1958) இங்கிலாந்தில் இயற்றப்பட்டது. இதனால் இயற்கை நீதியை பின்பற்றுவதில் இடையே ஏற்பட்ட தொய்வு நீங்கி, அதன் முக்கியத்துவம் மீண்டும் வலுப்பெற்றது.

இது மேலும் **Ridge v. Baldwin**[2] எனும் முக்கிய வழக்கில் வழங்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பின் வாயிலாக உறுதி செய்யப்பட்டது. இதில் ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு முழுக்க முழுக்க நிருவாகத்துறை பணிகளைச் செய்யும் பொழுது கூட (pure administrative function), 'இரு தரப்பினரையும் விசாரித்தறிய வேண்டும்' எனும் இயற்கை நீதிக் கோட்பாட்டைப் பின்பற்ற வேண்டும் என்று நீதிப் பெருமகனார்கள் அவை தீர்ப்பு வழங்கியது. இத்தீர்ப்பு பின்னிட்டு பல வழக்குகளிலும் பின்பற்றப்பட்டது.

இந்தியாவில் இயற்கை நீதி:

ஆரம்ப காலத்தில் இயற்கை நீதிக் கோட்பாடுகள் நீதிமுறைப் பணிகளுக்கு மட்டுமே பொருத்தப்பட்டது. ஆனால் பின்னிட்டு நீதித் தன்மை வாய்ந்த பணிகளுக்கும் இயற்கை நீதிக் கோட்பாடுகளை பொருத்த வேண்டும் என்ற நிலை உருவானது. (at first the principles of natural justice were applied only to judicial functions; later on they were extended to quasi-judicial functions).

இதற்குப் பிறகு **Ridge v. Baldwin**[3] வழக்கில் கூறப்பட்டவாறு ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு முழுக்க முழுக்க நிருவாகத்துறை பணிகளைச் செய்யும் பொழுது கூட (pure administrative function), இயற்கை நீதி கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டும் என்ற வரவேற்கத் தக்க நிலைப்பாடு உதயமானது. இத்தீர்ப்பு, இந்தியாவில் எழுந்த **A.K.Karipak v. Union of India**[4] எனும் வழக்கிலும் எதிரொலித்தது. இவ்வழக்கில் உச்ச நீதிமன்றமானது, **"நிருவாகத்துறை அதிகாரத்திற்கும், நீதித்தன்மை வாய்ந்த அதிகாரத்திற்கும் இடையே உள்ள பிரிவினைக் கோடு மிகவும் மெல்லியதாக உள்ளது; மேலும் அது படிப்படியாக மறைந்து வருகின்றது....."** என்று கூறிற்று.

2. (1963) 2 WLR 935 : 1964 AC 40
3. Ibid.
4. (1969) 2 SCC 262 : A.I.R. 1970 S.C. 150

மேலும் ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு ஒருவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முன்பாக அவருக்கு அது குறித்து அறிவித்து, அதற்கெதிரான காரணங்களை காட்டுமாறு அவரைக் கோர வேண்டும். சம்பந்தப்பட்ட சட்டத்தில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை யென்றாலும், இயற்கை நீதியின்படி மேற்கண்டவாறு செயல்பட வேண்டும் என்று **Maneka Gandhi v. Union of India**[5] எனும் வழக்கில் உச்ச நீதிமன்றம் மேலும் ஒரு படி மேலே சென்று தீர்ப்புரைத்தது.

முடிவுரை:

மேற்கண்டது போன்ற பல முக்கியமான வழக்குகளில் வழங்கப் பட்டுள்ள தீர்ப்புகளினால், **"இயற்கை நீதியின் எல்லை தொடர்ந்து விரிவடைந்து கொண்டிருக்கிறது"** (**"The horizon of natural justice is constantly expanding"**) என்றே கூற வேண்டும். இயற்கை நீதிக் கோட் பாடுகள்தாம், நிருவாகமுறை நீதித் தீர்ப்புகளில், வெளிப்படையான தன்மை, நேர்மை மற்றும் பாரபட்சமற்ற தன்மையை நிலைநிறுத்துவ தாகும். (அடுத்து வரும் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளையும் இந்த வினாவின் விடைக்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாக இருக்கும்.)

இயற்கை நீதிக் கோட்பாடுகள்
[Principles of Natural Justice]

27. Explain the principles of Natural Justice. (இயற்கை நீதி கொள்கைகளை விளக்குக.)

(அல்லது)

Write an essay on Principles of Natural Justice. (இயற்கை நீதி பற்றி ஒரு கட்டுரை வரைக.)

(அல்லது)

Discuss the two principles of natural justice citing relevant cases. (பொருத்தமான வழக்குகளை எடுத்துக்காட்டி இயற்கை முறை நீதிக் கொள்கைகளிரண்டை விவாதிக்க.)

(அல்லது)

"One of the essential elements of administrative process is that the judge should be impartial and neutral and in a position to apply his mind objectively". Comment. (நீதிபதி பாரபட்சமற்ற வராகவும் நடுநிலையுடனும் இருத்தல் வேண்டும் என்பது நிருவாக முறைச் செயல்பாட்டின் முக்கியக் கூறுகளுள் ஒன்றாகும் மற்றும் அவர்

5. (1978) 1 SCC 248 : A.I.R. 1978 S.C. 597

தனது மனதை புறப்பொருள் மெய்மை காணுவதற்காக பயன்படுத்த வேண்டும்". விமர்சிக்க)

(அல்லது)

What are the principles to be followed by Tribunals? (தீர்ப்பாயங்கள் பின்பற்ற வேண்டிய நெறிகள் யாவை?)

இயற்கை நீதி - விளக்கம்:

(சென்ற வினாவின் விடையில் காண்க.)

இயற்கை நீதி கூறும் இரண்டு கோட்பாடுகள்:

இயற்கை நீதி பின்வரும் இரண்டு முக்கியமான கோட்பாடுகளைக் குறிப்பிடுகிறது. அவை,

(1) எவரும் அவருடைய வழக்கில் அவரே நீதிபதியாக இருத்தல் கூடாது (Nemo Debet Ease-Judex in Propria Causa);

(2) இரு புறங் கேட்டல் (Audi Alteram Partem). அதாவது வழக்கை விசாரிக்கமால் யாரையும் கண்டனம் செய்தல் கூடாது.

இதையே ஆங்கிலத்தில்

(1) No man a judge in his own cause (No man shall be a judge in his own cause)

(2) Hear the other side (No man shall be condemned unheared)

என்று கூறுவார்கள். இக்கோட்பாடுகளை சற்று விரிவாக வழக்குகளுடன் பின்வருமாறு காண்போமா?

(1) எவரும் அவருடைய வழக்கில் அவரே நீதிபதியாக இருத்தல் கூடாது (Nemo Debet Ease-Judex in Propria Causa)
(அல்லது)
தீர்ப்பளிப்பவர் வழக்கோடு தொடர்பு கொண்டிருக்கக் கூடாது
(Nemo judex in causa sua)
(அல்லது)
மனச்சாய்விற்கெதிரான விதி (Rule against Bias)

எவரும் அவருடைய வழக்கில் அவரே நீதிபதியாக இருத்தல் கூடாது. (இங்கு நீதிபதி எனும் சொல் நீதிமன்ற நீதிபதியை மட்டும் குறிப்பிடுவதல்ல; அது நிருவாகத்துறையில் நீதித்தீர்ப்பு வழங்கும் அதிகார அமைப்புகளையும் உள்ளடக்கியதாகும்). அதாவது வழக்கை தீர்க்கும் அதிகாரம் பெற்றவர், பாரபட்சமின்றி, மனச்சாய்வற்று நடத்தல்

வேண்டும். எனவே இக்கோட்பாட்டை **மனச்சாய்விற்கெதிரான விதி (Rule against Bias)** என்று குறிப்பிடுவர்.

மனச்சாய்வு - விளக்கம்:

ஒரு வழக்கைத் தீர்க்கும் அதிகாரம் பெற்ற நபர், அவ்வழக்கைத் தீர்ப்பதற்கு அவ்வழக்கில் அளிக்கப்பட்டுள்ள சாட்சியத்தை விட்டுவிட்டு வேறு எதனாலாவது உந்தப்பட்டு அல்லது அவ்வாறு உந்தப்படுவற்கு காரணமாக இருக்கலாமெனக் கருதப்படுவதைக் கொண்டு தீர்ப்பு வழங்குவாரேயானால், அது மனச்சாய்வு எனப்படும்.

மனச்சாய்விற்கெதிரான விதிக்கு அடிப்படையாக உள்ள மூன்று மூதுரைகள்:

நிருவாகமுறைச் சட்டத்தில் மனச்சாய்விற்கெதிரான விதியானது, மூன்று சட்ட மூதுரைகளின் வாயிலாக வலியுறுத்தப்படுகிறது. அவை,

(1) எவரும் அவருடைய வழக்கிற்கு அவரே நீதிபதியாக இருத்தல் கூடாது (No man shall be a judge in his own cause).

(2) நீதி செய்யப்பட்டால் மட்டும் போதாது, அது செய்யப் பட்டதாக வெளிப்படையாகவும் அய்யப்படுமின்றியும் தோற்றமளிக்க வேண்டும். (Justice should not only be done, but manifestly and undoubtedly be seen to be done)[6].

(3) நீதிபதிகள், சீசரின் மனைவிளைப் போல அய்யப் பாட்டிற்கு அப்பால் இருத்தல் வேண்டும் (Judges, like Caesar's wife should be above suspicion)[7].

மனச்சாய்விற்கெதிரான விதி விளக்குவதாவது:

ஒரு தீர்ப்பை நீதிமன்றம் கூறினாலும் அல்லது நீதித் தீர்ப்பு கூறும் நிருவாகத்துறை அதிகார அமைப்பு கூறினாலும், அது மனச்சாய்வின்றி அமைதல் வேண்டும். மனச்சாய்வு ஒரு தரப்பினர்பால் அல்லது ஒரு தரப்பு பொருண்மை மீது அமையுமானால், அங்கு நீதியை காணும் தன்மை மறையும். இதனால் அத்தீர்ப்பு நடுநிலை தவறிய தீர்ப்பாகிவிடும். எனவே ஒரு தீர்ப்பை நோக்கும் எவரும், அத்தீர்ப்பு அவ்வழக்கில் அளிக்கப்பட்ட சாட்சியத்தின் அடிப்படையிலில்லாமல் வேறு ஒரு காரணக் கூறினால் உந்தப்பட்டுக் கொடுக்கப்பட்டதென்று எண்ண இடமிருத்தல் கூடாது. மேலும், தீர்ப்பு முறையாகக் கொடுக்கப் பட்டாலும், மற்றவர்கள் மனதில் அய்யம் எழும் வகையிலும் அத்தீர்ப்பு அமைதல் கூடாது.

6. Lord Hewart in R. v. Sussex Justices, (1924) 1 KB 256 (259) : (1923) All ER 233

7. Justice Bowen in Lesson v. General Council, (1886-90) All ER 78.

இந்நிலைப்பாடு நீதித்தன்மை வாய்ந்த தீர்ப்புகளை வழங்கும் நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் எடுக்கும் முடிவிற்கும் பொருந்தக் கூடியதாகும். எடுத்துக்காட்டாக, அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், அவருடைய நெருங்கிய உறவினர் ஒருவரை வட்டாட்சியராக தேர்ந்தெடுப்பாராயின், மற்றவர்களுக்கு அய்யம் எழத்தான் செய்யும். உண்மையில் அத்தலைவர், அவரை அவரது தகுதியின் அடிப்படையில் வட்டாட்சியராக தேர்ந்தெடுத்திருக்கலாம். ஆனாலும் பார்ப்பவர்கள் மனதில் அய்யம் அகலாது. ஏனெனில், உறவினர் என்ற காரணத்தால் அத்தேர்வாணையத் தலைவரின் மனம் அவருடைய உறவினரை தேர்வு செய்வதில் நாட்டம் கொண்டிருக்கலாம். சாய்வுற்று இருந்திருக்கும் அல்லது இருந்திருக்கலாம். எனவே ஒரு நடவடிக்கையில் நேர்மையான நடப்பு (fair transaction) இருந்தால் மட்டும் போதாது. அந்த நேர்மையான நடப்பின் மீது எவ்வித அய்யப்பாடும் எழாதவாறும் இருத்தல் வேண்டும். எனவே வழக்கின் இரு தரப்பினரையும் விசாரித்து நீதி செய்தால் மட்டும் போதாது. அந்நீதி செய்யப்பட்டதாகவும் வெளிப்படையாகத் தோற்றமளிக்க வேண்டும். எனவே நீதி, நீதியாகத் தோற்றமளிக்க வேண்டுமானால், பார்ப்பவர் மனதில் நீதி செய்யப்பட்ட முறை குறித்து அய்யுறவு எழாமல் இருக்க வேண்டும். இதற்கு மனச்சாய்வு அடியோடு அகற்றப்பட வேண்டும்; நீதிபதிகள் சந்தேகத்திற்கப்பாற் பட்டவர்களாக இருக்க வேண்டும். மேற்கண்ட மனச்சாய்வு, மூன்று விதங்களில் எழலாம். அவை வருமாறு.

மனச்சாய்வின் வகைகள் (Types of Bias):

மனச்சாய்வு மூவகைப்படும். அவை, **(1) பணம் சார்ந்த மனச் சாய்வு (Pecuniary Bias); (2) தனிப்பட்ட மனச்சாய்வு (Personal Bias); மற்றும் (3) அலுவல் சார்ந்த மனச்சாய்வு அல்லது கருப் பொருள் குறித்த மனச்சாய்வு (Official Bias or Bias as to subject-matter).** இவற்றினை சற்று விளக்கமாக பின்வருமாறு காண்போமா?

பணம் சார்ந்த மனச்சாய்வு (Pecuniary Bias):

"பணம் சார்ந்த மனச்சாய்வு எவ்வளவு சிறிதாக இருந்தாலும், ஒருவரை நீதிபதியாக இருக்கத் தகுதியற்றவராக்கிவிடும்" என்று **Griffith and Street**[8] எனும் அறிஞர்கள் கூறியுள்ளனர். இது நீதித்தன்மை வாய்ந்த தீர்ப்புகளைக் கூறும் நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் மற்றும் தீர்ப்பாயங்களின் நடவடிக்கைகளுக்கும் பொருந்துவதாகும். இங்கிலாந்து நாட்டில் எழுந்த பல வழக்குகளில் பணம் சார்ந்த மனச்சாய்வு நீதிபதிக்கு இருக்குமானால், அவர் நீதிபதியாக இருக்கத் தகுதியற்றவர் என நீதி மன்றம் கூறியுள்ளது.

Dr. Bonham's Case[9] - இப்பழைய வழக்கில், கேம்பிரிட்ஜ்

8. Priniciples of Administrative Law, 4th Edn., p. 156.
9. (1610) 8 Co. Rep. 113 b: 77 ER 646

பல்கலைக்கழகத்தின் மருத்துவர் ஒருவர் மருத்துவர்கள் கல்லூரியின் (College of Physicians) உரிமம் ஏதும் பெறாமல் இலண்டனில் மாநகரில் தொழில் புரிந்தமைக்காக அக்கல்லூரியால் அபராதம் விதிக்கப்பட்டார். எச்சட்டத்தின் கீழ் அக்கல்லூரி செயல்பட்டதோ, அச்சட்டத்தில், அபராதத்தில் ஒரு பாதி அரசருக்கும், மறு பாதி கல்லூரிக்கும் செல்ல வேண்டும் என்று வகை செய்யப்பட்டிருந்தது. அந்த மறு பாதியை அக்கல்லூரி கேட்டது. ஆனால் இக்கோரிக்கையை தலைமை நீதிபதி **Coke** அவர்கள் ஏற்க மறுத்து, அதற்கு பின்வரும் காரணங்களைக் கூறினார். அதன்படி மேற்கண்ட கல்லூரி, அம்மருத்துவருக்கு எதிராக வழங்கிய தீர்ப்பிற்கு அடிப்படையாக அபராதத்தில் பாதி பெற வேண்டும் என்ற பணம் சார்ந்த மனச்சாய்வு அதற்கு இருந்துள்ளதென்றும், எனவே ஒருவர் தனது வழக்கிற்கு தானே நீதிபதியாக இருக்க முடியாது என்றும் குறிப்பிட்டார். **இனி சில இந்திய வழக்குகளை காண்போமா?**

Visakapatanam Co-Op. Motor Transport Ltd. v. G.Banga-ruraju[10] - எனும் வழக்கில் கூட்டுறவு சங்கம் ஒன்று, தனது சங்கத்தின் நலனுக்காக ஒரு அனுமதி வேண்டி, வட்டார போக்குவரத்து அதிகார அமைப்பிடம் விண்ணப்பித்தது. அந்த அமைப்பும் அனுமதி வழங்கி விட்டது. ஆனால் இந்த அனுமதியை சென்னை உயர் நீதிமன்றம், இயற்கை நீதிக் கோட்பாடுகளை மீறியது என்ற அடிப்படையில் செல்லாதது என்று அறிவித்தது. இதற்கு வலுவான காரணம் உள்ளது. அஃதாவது, மேற்படி சங்கத்தின் தலைவராக (President of a Co-Op. Society), பொறுப்பேற்றிருந்தவர் ஒரு மாவட்ட ஆட்சியாளர். அவர், அதே சமயத்தில் மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட வட்டார போக்குவரத்து அதிகார அமைப்பின் பெருந்தலைவராகவும் (Chairman of Regional Transport Authority) பதவியில் இருந்தார். இது ஒன்று போதாதா, பணம் சார்ந்த மனச்சாய்விற்கு?

Jeejeebhoy v. Asstt. Collector of Thana[11] - எனும் வழக்கில், கூட்டுறவு சங்கம் ஒன்றிற்காக ஒருவரின் நிலம் அரசால் கையகப்படுத்தப் பட்டது. இதை எதிர்த்து அந்நிலத்தின் உரிமையாளர் தொடுத்த வழக்கை விசாரிக்கும் ஆயத்தின் (Bench) உறுப்பினராக அப்பொழுதைய உச்ச நீதிமன்ற தலைமை நீதியரசர் சுஜேந்திர சுட்கர் இருந்தார். ஆனால் அவர் அதே கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினராகவும் அச்சமயத்தில் இருந்தார். இதனால் அவர் ஆயத்தின் உறுப்பினராக செயல்பட ஆட்சேபணை செய்யப்பட்டது. இதையடுத்து அவர் அந்த ஆயத்தின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். இதற்குக் காரணம், வழங்கப்படும் நீதி எவ்வித மனச்சாய்வின்றியும் இருக்க வேண்டும் என்றும், நீதிபதிகள் அய்யப்பட்டிற்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று அவர் நினைத்ததுதான் என்று சொன்னால் அது மிகையன்று.

10. A.I.R. 1955 Mad. 709

11. A.I.R. 1965 S.C. 1096.

R.C. Cooper v. Union of India[12] எனும் வழக்கில், நீதி ஆயத்தில் (Bench) அமர்ந்திருந்த உச்ச நீதிமன்ற நீதிபதிகளில் சிலர், மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் (Nationalised Banks) பங்குதாரர்களாக (Share-holders) இருந்தனர். இருப்பினும் நீதி ஆயத்தில் அவர்களும் அமர்ந்து வழக்கினை விசாரித்துத் தீர்ப்புக் கூறினார்கள். ஆனால், அவர்கள் வழக்கினை விசாரிக்கத் தொடங்குவதற்கு முன்பாக, அவர்கள் சம்பந்தப்பட்ட வங்கிகளில் பங்கு வைத்திருப்பதாகத் தெரிவித்து மனுதாரர்களுடைய வழக்குரைஞர்களின் ஆட்சேபணைகளைக் கேட்டார்கள். அவர்களுக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என்று கூறிய பிறகே, வழக்கை விசாரிக்கத் தொடங்கினார்கள்.

தனிப்பட்ட மனச்சாய்வு (Personal Bias):

தனிப்பட்ட மனச்சாய்வு என்பது, வழக்குத் தரப்பினர்களின் மீது மனச்சாய்வு கொண்டிருத்தல் என்று பொருளாகும். இதனை **'நபர் மனச் சாய்வு'** என்றும் கூறுவர்கள்.

பல சூழல்கள், தனிப்பட்ட மனச் சாய்விற்கு வழி வகுக்கிறது என்றே கூற வேண்டும். வழக்கை விசாரிக்கும் நீதிபதி, ஒரு தரப் பினருடைய உறவினராகவோ, நண்பராகவோ அல்லது வேறு வழிகளில் வேண்டியவராகவோ, வேண்டாதவராகவோ இருக்கலாம். இதனால் அவர் விசாரிக்கும் வழக்கில் தனக்கு வேண்டிய ஒரு தரப்பினருக்கு சார்பாகவோ அல்லது தனக்கு வேண்டாத ஒரு தரப்பினருக்கு எதிராகவோ அவர் தீர்ப்பு வழங்கக் கூடும். நீதிபதி என்பவர் விருப்பு வெறுப்பின்றி இரு தரப்பினரையும் ஒத்த நிலையில் வைத்து, எந்த ஒரு பக்கமும் மனச்சாய்வு கொள்ளாமல் தீர்ப்பளிக்க வேண்டும். இதற்கு முரணாக மனச்சாய்வு கொண்டு தீர்ப்பளித்தால், அவர் வழங்கிய தீர்ப்பு செல்லாது; மேலும் அவர் அந்த வழக்கில் ஒரு நீதிபதியாக பதவி வகிக்க தகுதியற்றவராகிவிடுவார். மேற்கண்ட சூழல்களில் ஒரு நீதிபதி நேர்மை யாகத் தீர்ப்பு வழங்கினாலும், அவருக்கு தனிப்பட்ட மனச்சாய்வு இருந்த தாகக் கருதப்படும்; அல்லது அவ்வாறு கருத வாய்ப்பளிக்கும். எனவே, இதன் பொருட்டு அந்நீதிபதி தார்மீக பொறுப்பேற்று, அவ்வழக்கை விசாரித்தல் கூடாது.

இந்த நிலைப்பாடு நீதித்தன்மை வாய்ந்த நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் (quasi-judicial administrative authorities) மற்றும் தீர்ப்பாயங்களின் (tribunals) நடவடிக்கைகளுக்கும் பொருந்துவ தாகும்.

Mineral Development Ltd. v. State of Bihar[12] - இவ்வழக்கில் வருவாய்த் துறை அமைச்சர் (Revenue Minister), மனுதாருடைய கனிப்

12. A.I.R. 1970 S.C. 564.
13. A.I.R. 1960 S.C. 468.

பொருள் தோண்டி எடுக்கும் உரிமத்தை ஓர் ஆணை பிறப்பித்து, இரத்துச் செய்துவிட்டார். வழக்கு விசாரணையின் போது மனுதாரருக்கும், வருவாய்த்துறை அமைச்சருக்கும் இடையே அரசியல் பகைமை இருந்ததாகவும், பொதுத் தேர்தலில் மனுதாரரின் முயற்சியால் அமைச்சர் தோற்கடிக்கப்பட்டதாகவும் மெய்ப்பிக்கப்பட்டது. மனுதாரர் மீது அமைச்சர் பகைமையுணர்ச்சியின் காரணமாகக் குற்ற வழக்கு ஒன்று தொடுத்திருப்பதாகவும் எடுத்துக் கூறப்பட்டது. வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், மேற்கண்ட அமைச்சர் தனிப்பட்ட மனச்சாய்வினால் உந்தப்பட்டு மனுதாரரின் உரிமத்தை இரத்து செய்து விட்டார் என்று கருத இடமிருக்கிறது என்று கூறி, அந்த உரிமம் இரத்து செய்யப்பட்டது செல்லாது என்று தீர்ப்பு கூறியது.

Manglass Tea Estate v. Their Workmen[13] - இவ்வழக்கில் தொழிலாளி ஒருவர் டீ எஸ்டேட் மேலாளர் (Manager) ஒருவரை அடித்துவிட்டதற்காக அந்த மேலாளரே அத் தொழிலாளிக்கு எதிராக விசாரணை ஒன்றை நடத்தினார். இவ்விசாரணை நடவடிக்கைகள், தனிப்பட்ட மனச்சாய்வின் அடிப்படையில் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

Pratap Singh v. State of Punjab[14] - இவ்வழக்கில் மேல் முறையீடு செய்த மருத்துவருக்கு எதிராக, முதலமைச்சர் தனிப் பகைமை யுணர்ச்சி கொண்டிருந்தாரென்றும், அதன் காரணமாக அம்மருத்துவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டாரென்றும் மெய்ப்பிக்கப்பட்டது. இந்த வேலை நீக்கம் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

State of U.P. v. Mohd. Nooh[15] - இவ்வழக்கில் தலைமைக் காவலர் மீது சில குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, காவல் துறை கண் காணிப்பாளர் தலைமையில் விசாரணை நடந்தது. இவ்விசாரணையில் அக்காவல் துறை கண்காணிப்பாளரே சாட்சியம் கூற வேண்டியிருந்தது. எனவே உதவிக் கண்காணிப்பாளரை விசாரணையை நடத்தச் செய்து விட்டு அக்கண்காணிப்பாளரே சாட்சியம் கூறினார். முடிவில் கண் காணிப்பாளர், அத்தலைமை காவலரை பணியிலிருந்து நீக்கிவிட்டார். அதாவது இவ்வழக்கில் தீர்ப்பு வழங்க வேண்டிய நடுவரே சாட்சியாகவும் மாறினார். மேலும் எப்படியும் அத்தலைமை காவலரின் மீதான குற்றச் சாட்டு மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தார். எனவே தனிப்பட்ட மனச்சாய்வின் அடிப்படையில் நடுவராக இருக்கும் தகுதியை இழந்தார். அவர் நடத்திய விசாரணை நடவடிக்கை முழுவதையும் செல்லாதது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

13. A.I.R. 1963 S.C. 1719.
14. A.I.R. 1964 S.C. 72.
15. A.I.R. 1958 S.C. 86.

A.K.Kraipak v. Union of India[16] - தனிப்பட்ட மனச்சாய்வு என்றாலே உடனே நினைவிற்கு வரவேண்டிய இம்முக்கிய வழக்கில் கரைபாக் என்பவரும் மற்றவர்களும் மனுதாரர்களாவர். இவர்கள் ஜம்மு-காஷ்மீர் மாநில அரசின் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளாவர். இவர்கள் 1951-ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதிச் சட்டத்தின் (The Indian Administrative Act, 1951) அடிப்படையில் புதிதாக அமைக்கப்பட்ட இந்திய வனப் பணியாளர் தொகுதிக்கு (Indian Forest Service) தேர்ந்தெடுக்கப்பட விண்ணப்பித்தனர். இந்திய வனப் பணியாளர் தொகுதிக்கு, அலுவலர்களைத் தேர்ந்தெடுத்து, இந்திய அரசுக்கு அவர்களை பரிந்துரை செய்வது, மத்திய பொதுப் பணியாளர் தேர்வாணையத்தின் (Union Public Service Commission) பணியாகும். அவ்வாறே இந்தியப் பணியாளர் தேர்வாணையமும் அலுவலர்களைத் தேர்ந்தெடுத்து, இந்திய அரசுக்கு அவர்களை நியமனம் செய்ய பரிந்துரைத்தது. அவ்வாறு தேர்ந்தெடுக்கும் பொழுது, நக்குஸ்பண்ட் என்பவர் பதவி வழி உறுப்பினராக (Ex Officio) அமர்ந்து பணி வேட்பாளர்களை தேர்ந்தெடுத்தார். **மேலும், நக்குஸ்பண்ட் ஒரு பணி வேட்பாளராகவும் (Candidate) தேர்வாணையத்தின் முன் தோன்றினார்.** அவரும் மற்றவர்களுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் கரைபாக் என்பவரும் மற்ற மனுதாரர்களும் தேர்ந்தெடுக்கப் படவில்லை.

இங்குதான் மேற்படி வழக்கு சூடு பிடித்தது என்று கூற வேண்டும். மனுதாரர்கள், (மற்ற காரணங்களுக்கிடையே), நக்குஸ்பண்ட் என்பவர், தான் தேர்ச்சியுறுவதில் நாட்டமுடையவராக இருந்த காரணத்தினால், மனச்சாய்வுடன் செயல்பட்டுத் தேர்வாணையத்தின் மீது அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி தேர்வு பெற்றாரென்றும், அவர் அவ்வாறு தேர்வு பெற்றது மனுதாரர்கள் முறையாகத் தேர்வு பெறுவதற்குத் தீங்கு விளைவித்து விட்டதாகவும், அதனால் அவரது தேர்வை செல்லாது என்று அறிவிக்கும்படியும் வாதிட்டார்கள்.

உச்ச நீதிமன்றம் மனுதாரர்களுடைய வாதத்தை ஏற்றுக் கொண்டு, பணியாளர் தேர்வு முறை நிருவாகமுறை நடைமுறையின் பாற்பட்டதென்றாலும், இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு அது மாறுபட்டு அமையுமானால் அத்தேர்வு நடைமுறை முற்றிலும் செல்லத்தக்கதன்று என அறிவித்தது.

அப்பொழுது உச்ச நீதிமன்றம், இயற்கை நீதிக் கோட்பாடுகள் நிருவாகத்துறை அதிகார அமைப்புகளுக்குச் (Administrative Authorities) சோர்வூட்டுகின்ற சுமையாகத் தோன்றினாலும், மக்கள் சமுதாயத்தின் மீது சட்டத்தின் ஆட்சி செம்மையாக நடைபெற வேண்டுமானால், நீதி நிலைநாட்டப்படுகிறதென்று மக்கள் மன அமைதி கொள்ள

16. (1969) 2 SCC 262 : A.I.R. 1970 S.C. 150.

வேண்டுமானால், அதை நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் தாங்கியே தீர வேண்டும் என்று கருத்துரைத்தது. மேலும் உச்ச நீதிமன்றம் இயற்கை நீதிக் கோட்பாடுகள் அனுசரிக்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்பது நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் அவைகளுடைய தன்விருப்புரிமை அதிகாரங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் முடிவுகளைப் பொறுத்தும், நிறைவேற்றப்படும் ஆணைகளைப் பொறுத்தும் அமைவதல்ல என்றும், மாறாக உரிமைகளுக்கு இழைக்கப்படும் அல்லது நேரக்கூடிய ஊறுகளைப் பொறுத்தே அமைவதென்றும் விளக்கமளித்தது.

(3) அலுவல் சார்ந்த மனச்சாய்வு அல்லது கருப் பொருள் குறித்த மனச்சாய்வு (Official Bias or Bias as to subject-matter):

ஒரு வழக்கை விசாரிக்கும் நீதிபதிக்கு அவ்வழக்கின் கருப் பொருள் மீது மனச்சாய்வு இருப்பின், அது அலுவல் சார்ந்த மனச்சாய்வு அல்லது கருப்பொருள் குறித்த மனச்சாய்வு எனப்படும். இதனால் அவர் அவ்வழக்கிற்கு நீதிபதியாக பதவி வகிப்பதற்கு தகுதியற்றவராகிறார். மேலும் அவர் வழக்கை விசாரித்து தீர்ப்பு ஏதேனும் வழங்கியிருப்பின், அது செல்லாததாகவும் ஆகிறது.

அறிஞர்கள் **Griffith and Street** அவர்கள், அலுவல் சார்ந்த மனச்சாய்வு மிகவும் அரிதான சூழல்களில் மட்டுமே வழக்கு நடவடிக்கைகளையும், தீர்ப்பையும் செல்லாததாக்குகின்றது, என்று குறிப்பிடுகின்றனர். வழக்கின் கருப்பொருளில் ஒரு பொதுவான நோக்குடன் அக்கறை கொண்டிருப்பது ஒன்று மட்டுமே, அவ்வழக்கை விசாரிக்கும் நீதிபதியை பதவியிழக்குமாறு செய்யாது. மாறாக, அந்த அக்கறை அவ்வழக்குடன் நேரடியாக தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

Muralidhar v. Kadam Singh[17] - இவ்வழக்கில் **தேர்தல் தீர்ப்பாயத்தின் தலைவருடைய** மனைவி சார்ந்த கட்சியின் வேட்பாளர் தேர்தலில் மனுதாரரை தோற்கடித்தார். இது குறித்து தேர்தல் தீர்ப்பாயம் முன்பு முறையீடு ஒன்று எழுந்தது. அப்பொழுது உச்ச நீதிமன்றம், தேர்தல் தீர்ப்பாயத்தின் தலைவர் அலுவல் சார்ந்த அல்லது கருப்பொருள் குறித்த மனச்சாய்வு கொண்டுள்ளதாக கருதுவதற்கில்லை என்று தீர்ப்பு கூறியது.

இங்கிலாந்து நாட்டில் எழுந்த **R. v. Deal Justices Exparte Curling**[18] - எனும் வழக்கில், குற்றவியல் நீதித்துறை நடுவர் (Magistrate) உயிர்வதைத் தடுப்புச் சங்கத்தில் உறுப்பினராக இருந்தார். அந்தச் சங்கம் கொண்டு வந்த குற்ற வழக்குகளில் அவர் அமர்ந்து தீர்ப்பளிக்கும் தகுதி இழந்தவராகமாட்டார் என்று நீதிமன்றம் தீர்ப்பு கூறியது. ஏனெனில் அந்தச் சங்கம் கொண்டு வரும் குற்றச் சாட்டுகளுடன் அவர் சம்பந்தப்

17. A.I.R. 1954 M.B. 111.
18. 1881-45 I.T. 439.

பட்டிருக்கவில்லை. அந்தச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கின்ற ஒரே காரணத்தினால் அவர் அலுவல் சார்ந்த மனச்சாய்வு பெற்றிருப்பார் என்பதில்லை. அலுவல் சார்ந்த மனச்சாய்வு காரணமாக ஒருவர் தகுதியிழப்பதற்கு அவர் சம்பந்தப்பட்ட அலுவல் அல்லது கருப்பொருள் மீது கொண்டுள்ள கருத்து ஈடுபாட்டிற்கும் அல்லது வேறுபாட்டிற்கும், வழக்கிற்கும் நெருங்கிய நேரடித் தொடர்பு இருக்க வேண்டும். அப்படி இருந்தால் அவர் அலுவல் சார்ந்த மனச்சாய்வு பெற்றிருப்பதாகக் கருதப்படும். இல்லாவிடில் அவ்வாறு கருதப்படமாட்டார்.

நிருவாகத்துறை சம்பந்தப்பட்ட வழக்குகளில், நிருவாகத்துறை அதிகார அமைப்புகளே முதலில் வழக்குகளை விசாரித்து தீர்ப்பளிக் கின்றன. மேலும், இந்த அமைப்புகளே தங்களது துறை சார்ந்த கொள்கைகளையும் (policies) வகுக்கின்றன. அந்த அமைப்புகளில் இருப்பவர்கள், நிருவாகத் துறை அலுவலர்களே. எனவே, அவர்கள் தங்களது நிருவாகத்துறை கொள்கைகளில் பற்றும், ஈடுபாடும் கொண்டவர்களாக இருப்பார்கள் என்பதில் அய்யமில்லை. சற்று மனச் சாய்வும் கொண்டிருக்கக் கூடும். ஆக, நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் அலுவர்களும், அவற்றின் நீதித்தீர்ப்பு கூறும் குழுமங் களும், தீர்ப்பாயங்களும் அறவே அலுவல் சார்ந்த மனச்சாய்வின்றி வழக்குகளை விசாரிப்பார்கள் என்று கூற முடியாது. ஆனால், நீதித் தன்மை வாய்ந்த தீர்ப்புகளை அளிக்கும் நிருவாகத்துறை அலுவலர்கள், முழுக்க முழுக்க நிருவாகத்துறை கொள்கைகளை நிறைவேற்றுவதில் ஈடுபட்டிருந்தாலொழிய அல்லது அலுவல் சார்ந்த மனச்சாய்வு மிகுதியாகக் கொண்டிருந்தாலொழிய அவர்களுடைய அலுவல் சார்ந்த மனச்சாய்வு வழக்கிற்குத் தீங்கு விளைவிப்பதில்லை. இதன் காரணமாக, அலுவல் சார்ந்த மனச்சாய்வு அய்யத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப் பட்டாலொழிய, நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் தீர்ப்புகள் செல்லாதவையெனக் கூற முடியாது. மேலும் அந்தந்தத் துறை விசாரணையும் (Enquiry of the domestic tribunal) அலுவல் சார்ந்த மனச்சாய்வின் காரணமாக, இயற்கை நீதிக்கு முரண்பட்டதெனக் கருதப் படுவதில்லை. இந்நிலையில் அலுவல் சார்ந்த மனச்சாய்வு என்றாலே, நமது நினைவை விட்டு சற்றும் அகலக் கூடாத இரண்டு முக்கியமான இந்திய வழக்குகளை நாம் இங்கு காணுதல் அவசியமாகும்.

Gullapalli Nageswara Rao v. A.P. State Road Transport Corporation[19] - இவ்வழக்கை **குல்லபள்ளி நாகேஸ்வர ராவ் முதலாம் வழக்கு (Gullapalli I Case)** என்று சிறப்பாக அழைப்பார்கள். இவ்வழக்கில் ஆந்திரப் பிரதேச மாநில அரசின் சாலைப் போக்குவரத்து செயலாளர் (Secretary of Andra Pradesh State Road Transport), பேருந்து வழித்தடங்களை நாட்டுடைமையாக்கும் திட்டமொன்றைத் (Scheme for nationalisation of motor transport) தயாரித்து

19. A.I.R. 1959 S.C. 308.

அரசிதழில் வெளியிட்டார். அத்திட்டத்தில் அச்செயலாளர் அத்திட்டம் குறித்த ஆட்சேபணைகளைக் கோரிப் பெறவும், அவற்றின் மீது விசாரணை நடத்தவும், அதன் மீதான முடிவை (தீர்ப்பை) முதலமைச்சர் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டிருந்தது. இந்நிலைப்பாடு குறித்து உச்ச நீதிமன்றத்தில் பின்வருமாறு வாதிடப்பட்டது. அஃதாவது, மேற்படி செயலாளர் தம்மை விடுவித்த கொள்ள முடியாத அளவிற்கு அத் திட்டத்தில் ஈடுபட்டுள்ளாரென்றும், அவர் தயாரித்த திட்டத்தை எவ்வாறேனும் செயல்படுத்தவே விழைவார் என்றும், இதனால் அவர் அலுவலக மனச்சாய்வு கொண்டவராக திகழ்வார் என்றும், இதனால் அவருடைய செயல்பாடு இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு புறம்பான தாக அமையும் என்றும் வாதிடப்பட்டது. உச்ச நீதிமன்றம் இந்த வாதத்தினை ஏற்றுக் கொண்டு, மேற்படி செயலாளர் அத்திட்டத்தில் அலுவல் சார்ந்த மனச்சாய்வு கொண்டுள்ளார் என்றும், அவரது விசாரணையின் பேரில் முதலமைச்சர் அத்திட்டத்தை அங்கீகரித்து பிறப்பித்த முடிவு இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு முரண்பட்டதாகும் என்றும் கூறி, அதனை இரத்து செய்ய உத்திரவிட்டது.

இதனால் பின்னர் இத்திட்டம் சற்று மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி, மாநில அரசு சாலைப் போக்குவரத்துத் துறை செயலாளர் திட்டத்தை வகுத்து, அதன் மீதான ஆட்சேபணைகளைக் கோரிப் பெறவும், **ஆனால் அவற்றின் மீதான விசாரணையைச் செய்து முடிவு வழங்கும் அதிகாரம், போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு (Minister for Transport)** வழங்கவும் வழிவகை செய்யப்பட்டது. இருப்பினும் அதே பொருண்மைகளின் அடிப்படையில் மேற்படி **குல்லபள்ளி நாகேஸ்வர ராவ்** இரண்டாவதாக ஒரு வழக்கைத் தொடுத்தார். அவ்வழக்கின் பொருண்மைகள் வருமாறு.

Gullapalli Nageswara Rao v. A.P. State Road Transport Corporation[20]-இவ்வழக்கை, **குல்லபள்ளி நாகேஸ்வர ராவ் இரண்டாம் வழக்கு (Gullapalli II Case)** என்று சிறப்பாக அழைப்பார்கள். இவ் வழக்கில் போக்குவரத்துத் துறைச் செயலாளரால் பேருந்து வழித் தடங்களை தேசியமயமாக்கும் திட்டத்திற்குண்டான ஆட்சேபணைகள் மீண்டும் புதிதாக கோரப்பட்டது. அத்திட்டத்தில் செய்யப்பட்ட மாற்றத் தின்படி, அந்த ஆட்சேபணைகளின் மீதான விசாரணையை போக்கு வரத்துத் துறையை தனது பொறுப்பில் கொண்டிருந்த முதலமைச்சர் செய்தார். முடிவில் அந்த ஆட்சேபணைகளையெல்லாம் தள்ளுபடி செய்து, ஆரம்பத்தில் மேற்படி திட்டம் எவ்வாறு போக்குவரத்து துறை செயலாளரால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டதோ, அதன்படியே பேருந்து வழித் தடங்களை நாட்டுடைமையாக்கலுக்கு அங்கீகாரம் வழங்கிவிட்டார்.

முதலமைச்சரின் இந்த முடிவை எதிர்த்து மீண்டும் குல்லபள்ளி

20. A.I.R. 1960 S.C. 1376.

நாகேஸ்வர ராவ் வழக்கிட்டார். அவரது வாதங்கள் வருமாறு:- மேற்படி திட்டத்தின் மீதான ஆட்சேபணைகளை விசாரித்து முதலைமைச்சர், போக்குவரத்து செயலாளரை விட அலுவல்ரீதியாக அதிக மனச்சார்பை உடைய நபராவார். பேருந்து வழித் தடங்களை நாட்டுடைமையாக்க அரசு தீர்மானித்துள்ளதாக ஏற்கனவே முதலைமைச்சர் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தியுள்ளார் (ஆனால் இக்கூற்று வழக்கின் பொழுது குல்லபள்ளியால் மெய்ப்பிக்கப்படவில்லை). எனவே, அலுவல் சார்ந்த மனச் சாய்வினால் உந்தப்பட்டு முதலமைச்சர் வழங்கிய முடிவு (தீர்ப்பு) செல்லாதது என்று அறிவிக்க வேண்டும் என அவர் வாதம் புரிந்தார்.

ஆனால் இந்த வாதத்தை உச்ச நீதிமன்றம் நிராகரித்துவிட்டு, ஒரு அமைச்சரின் பதவி நிலைக்கும் மற்றும் ஒரு செயலாளரின் பதவி நிலைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை எடுத்துரைத்தது. அதன்படி, செயலாளர் என்பவர் சம்பந்தப்பட்ட துறையின் ஒரு அங்கமாவார். ஒரு அமைச்சர் என்பவர், சம்பந்தப்பட்ட துறையின் ஒரு அங்கமல்ல; ஆனால் அவர் அந்தத் துறை குறித்த அலுவலை முடிவு செய்வதற்கு அடிப்படைப் பொறுப்புடையவர் ஆவார். எனவே அவருக்கெதிராக அலுவல் சார்ந்த மனச்சாய்வை சுமத்த முடியாது. எனவே அவரது தீர்ப்பை செல்லாததாக அறிவிக்க இயலாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

மேற்கண்ட இரண்டு வழக்குகளிலும் உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை சற்று ஆராய்வது இங்கு அவசியம். அதாவது, போக்குவரத்து துறைச் செயலாளரும் மற்றும் அந்தத் துறையின் அலுவலர்களும் அந்தத் துறையின் கொள்கையையும், திட்டத்தையும் நிர்ணயம் செய்வதில் சம்பந்தப்பட்டவர்களாவார்கள். அதே சமயத்தில் போக்குவரத்து துறை அமைச்சர் அத்துறையின் அலுவலை முடிவு செய்யும் பொறுப்பிலுள்ளவர் ஆவார். இங்கு **குல்லபள்ளி நாகேஸ்வர ராவ் முதலாம் வழக்கில்** உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, போக்குவரத்துத் துறை சம்பந்தப்பட்ட வழக்குகளில் செயலாளர் தீர்ப்பு வழங்குவாராயின், அத்தீர்ப்பு அலுவல் (கொள்கை) சார்ந்த மனச் சாய்வினால் பாதிக்கப் பட்ட தீர்ப்பாகக் (முடிவாகக்) கருதப்படும். ஆனால் இதே தீர்ப்பை போக்குவரத்துத் துறை அமைச்சர் வழங்கினால், அது அலுவல் சார்ந்த மனச்சாய்வினால் பாதிக்கப்பட்டதாகக் கருதப்படாது. ஏனெனில், அமைச்சர் அத்துறையின் கொள்கையோடு சம்பந்தப்பட்டவர் அல்லர், எனும் தொனியில் மேற்படி **குல்லபள்ளி நாகேஸ்வர ராவ் இரண்டாம் வழக்கின்** தீர்ப்பு ஒலிக்கிறது.

ஆனால் உச்ச நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பு அவ்வளவு ஏற்புடையதன்று. ஏனெனில் அமைச்சர்கள்தாம் நடைமுறையில், அந்தந்த துறையின் கொள்கையை, திட்டத்தை உருவாக்குவதில் முக்கியப் பங்கு ஏற்கிறார்கள். கொடுக்கப்பட்ட கொள்கைக்கேற்ப, அந்தந்தத் துறைச் செயலாளரும், மற்றவர்களும் செயல்படுகிறார்கள். அமைச்சர்

நீதித்தீர்ப்புக் கூறுவாராயின் அவர் தனது அலுவல் (கொள்கை) சார்ந்த மனச்சாய்வினால் உந்தப்படாமல் நீதித் தீர்ப்பு கூறுவார் என்று உச்ச நீதிமன்றம் கூறுவது சற்று வியப்பாகவே உள்ளது.

Kondala Rao v. v. A.P. State Road Transport Corporation[21] -இவ்வழக்கிலும் போக்குவரத்துத்துறை அமைச்சர், அலுவல் சார்ந்த மனச்சாய்வு கொண்டு தீர்ப்பளித்து விட்டார், என்று மனுதார ரால் வாதிடப்பட்டது. ஆனால் உச்ச நீதிமன்றம் **குல்லபள்ளி நாகேஸ்வர ராவ் இரண்டாம் வழக்கின்** தீர்ப்பைப் பின்பற்றி, அமைச்சரின் மீது அலுவல் சார்ந்த மனச்சாய்வைத் திணிக்க முடியாது என்று தீர்ப்பு வழங்கியது.

பொதுவாக நிருவாகத்துறையின் நீதித் தீர்ப்புகள், முடிவுகள் மிகவும் நேர்மையற்றும் தீயெண்ணத்தால் பாதிக்கப்பட்டதாக உள்ள தாகவும் இருப்பதாக நேரடியாக மெய்ப்பிக்கப்பட்டாலொழிய, அத் தீர்ப்பு அலுவல் சார்ந்த மனச்சாய்வினால் எழுந்த ஒன்று என சாதாரண மாகக் கூற முடியாது. எனவே அலுவல் சார்ந்த மனச்சாய்வு குறித்த சிக்கல், நிருவாகமுறை எனும் உடலில் மறைந்திருக்கும் தீர்க்கமுடியாத நோய் என்று வருத்தத்துடன் குறிப்பிடுவதைத் தவிர வேறு வழியில்லை.

மனச்சாய்வை நிர்ணயிக்கும் சோதனை (Test for determining Bias) (அல்லது) அறிவுக்குப் பொருந்திய ஐய விதி (Reasonable Suspicion Test):

நாம் இதுகாறும் மூன்று வகையான மனச்சாய்வுகளைக் கண்டோம். அதன்படி, பணம் சார்ந்த மனச்சாய்வு எவ்வளவு சிறியதாக இருப்பினும், அது ஒருவரை அவ்வழக்கில் நீதிபதியாக செயல்பட தகுதியிழக்கச் செய்கிறது. ஆனால் தனிப்பட்ட மனச்சாய்வு மற்றும் அலுவல் சார்ந்த மனச்சாய்வில் இந்நிலைப்பாடு இல்லை. எனவே, இங்கு மனச்சாய்வு உள்ளதா இல்லையா என்பதைக் கண்டறிய ஒரு சோதனையை மேற்கொள்ள வேண்யது இன்றியமையாததாக உள்ளது. அது நீதிபதியின் செயல்பாட்டில் **"உண்மையில் மனச்சாய்வு நிகழக்கூடிய சாத்தியக் கூறு"** (Real likelihood of bias) உள்ளதா என்று கண்டறிவதுதான்.

"உண்மையில் மனச்சாய்வு நிகழக்கூடிய சாத்தியக் கூறு" என்றால், "குறைந்தபட்சம் கணிசமான மனச்சாய்வு நிகழக்கூடிய சாத்தியக் கூறு" (at least substantial possibility of bias) என்று பொருளாகும் என்று அறிஞர் **de Smith**[22] அவர்கள் குறிப்பிடுகிறார். இந்நிலையை பின்வரும் ஒரு முக்கியமான இந்திய வழக்கைக் கண்டால் தெளிவாகும்.

Manak Lal v. Dr. Prem Chand[23] - இவ்வழக்கில், மனேக் லால்

21. A.I.R. 1961 S.C. 82.
22. Judicial Review of Administrative Action, 1980, p. 262.
23. 1957 SCR 575 : A.I.R. 1957 S.C. 425.

என்பவர் இராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தில் வழக்குரைஞராக தொழி லாற்றுபவர். அவர் தனது தொழிலில் முறைகேடாக (Professional misconduct) நடந்து கொண்டதாக பிரேம் சந்த் என்பவர் வழக்குரைஞர் மன்றத்திற்கு (Bar Council) முறையீடு செய்தார். இராஜஸ்தான் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஒரு தீர்ப்பாயத்தைத் தோற்றுவித்து, சம்பந்தப்பட்ட வழக்கை விசாரிக்கச் செய்தார். அத்தீர்ப்பாயத்தில் ஒருவரைத் தலைவராகவும், இருவரை உறுப்பினர்களாகவும் நியமித்தார். அத்தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு ஏற்ப மனேக் லால் தனது தொழிலில் முறைகேடாக நடந்து கொண்டமைக்காக வழக்குரைஞர் மன்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டார். அத்தீர்ப்பாயத்தின் தலைவர், முறையீடு செய்தவருக்காக, ஒரு வழக்கில் வழக்குரைஞராக ஆஜராகியிருந்தார் என்னும் காரணத்தால், அவர் தனிப்பட்ட மனச்சாய்வினால் உந்தப் பட்டுத் தீர்ப்புக் கூறினார் என்று கொள்ள இடமிருக்கிறது என்று மனேக் லால் சார்பாக வாதிடப்பட்டது. ஆனால் உச்ச நீதிமன்றம், அத் தீர்ப்பாயத் தலைவருக்கும் அவரது கட்சிக்காரருக்கும் இடையே தனிப் பட்ட தொடர்பு ஏதும் இல்லையென்றும், எந்த வழக்கில் முறையீடு செய்தவருக்காக ஆஜரானார் என்பதைக் கூட அவர் நினைவில் கொண்டிருக்கவில்லை என்றும், இதனால் அங்கு உண்மையில் மனச் சாய்வு நிலைக்கூடிய சாத்தியக் கூறு (real likelihood of bias) ஏதும் இல்லையென்றும் கூறியது. எனினும் அத்தீர்ப்பாயத் தலைவர், அப்பதவி வகிக்கத் தகுதி பற்றவர் என்று தீர்ப்பு வழங்கியது. இதற்குக் காரணமாக மனச்சாய்வு குறித்த ஒரு **சோதனையைக் (test)** குறிப்பிட்டது.

அதன்படி, **"மனச்சாய்வு ஒரு தீர்ப்பினை பாதித்துள்ளதா என்று அறிவதை விட, தீர்ப்பாயத்தின் உறுப்பினர் ஈடுபாடு கொண்டுள்ள மனச் சாய்வானது, அத்தீர்ப்பாயம் வழங்கும் இறுதித் தீர்ப்பில் தனக்கெதிராக பிரதிபலிக்கக் கூடும் என்று அவ்வழக்கின் தரப்பினரை அந்த மனச்சாய்வு நியாயமான அச்சத்திற்குள்ளாக்கு கிறதா என்பதையே சோதித்தறிய வேண்டும்"** என்று உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது.

மேற்படி வழக்கில் அத்தீர்ப்பாயத்தின் தலைவர், பிரேம் சந்த் சார்பாக ஒரு வழக்கில் ஆஜராகி உள்ளார் எனும் கூற்றினால், அவர் தனக்கெதிராக தீர்ப்பு வழங்கக்கூடும் என்ற நியாயமான அச்சத்திற்கு மனேக் லால் ஆளானார். இங்கு அத்தீர்ப்பாயத் தலைவரின் மீது சந்தேகம் கொள்ள மனேக் லால் நியாயமான காரணம் (reasonable suspicion) கொண்டுள்ளார். எனவே, அத்தீர்ப்பாயத் தலைவர் மனேக் லாலுக்கு எதிராக நடத்திய வழக்கு நடவடிக்கைகளையும் தீர்ப்பையும் செல்லாதது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

மேற்கண்ட சோதனையில் வரும் **நியாயமான அச்சமானது (reasonable apprehension)** தகுந்த சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததாக இருக்க வேண்டும். ஒருவர் மனச்சாய்வுடன் செயல்

பட்டு தனக்கெதிராக தீர்ப்பு வழங்கிவிடுவாரோ என்று எவ்வித அடிப்படை ஆதாரமுமில்லாமல், அச்சம் கொள்வது, நியாயமான அச்சமாகாது. அதுபோல் ஒரு நீதிபதி மனச்சாய்வுடன் தனக்கெதிராக தீர்ப்பு வழங்கிவிடுவாரோ என்று அவர் மீது வீணாண மற்றும் அற்பத்தனமான சந்தேகத்தைக் கொள்வதும், மனச்சாய்வு உள்ளது என்பதை மெய்ப்பிக்காது. எனவே உண்மையில் மனச்சாய்வு நிகழக் கூடிய சாத்தியக் கூறு உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட, சம்பந்தப்பட்ட மனச்சாய்வினால் தனக்கெதிராக தீர்ப்பு வழங்கப்படக் கூடும் என்பதற்குண்டான ஆதாரத்துடன் கூடிய நியாயமான அச்சம் இருத்தல் வேண்டும். அதற்கு அறிவுக்கு பொருந்திய வகையிலான சந்தேகம் இருக்க வேண்டும். இதனால் இதனை **'அறிவுக்குப் பொருந்திய ஐயச் சோதனை'** என்றும் அழைப்பார்.

இதுவே, மற்றொரு வடிவில், **ஒரு வழக்கின் நீதி பரிபாலனத்தில் தனிப்பட்ட மனச்சாய்வு (Personal Bias) இருப்பது மட்டுமல்லாமல், அது அவ்வழக்கின் முடிவில் மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை கட்சிக்காரர் நிரூபிக்க வேண்டும்,** என்று கூறப்படுகிறது.

எனவே, நீதி செய்யப்பட்டால் மட்டும் போதாது; அது செய்யப்படுவதாக வெளிப்படையாகவும், அய்யத்திற்கிடமில்லாமலும் தோற்றமளிக்க வேண்டும் என்று **ஹீவார்ட் நீதிப்பெருமகனார்** குறிப்பிடுகிறார்.

(2) இரு புறங் கேட்டல் (Audi Alteram Partem) அல்லது நியாயமாகக் கேட்டல் விதி (The Rule of Fair Hearing)

மேற்படி கோட்பாடு விளக்குவதாவது:

இயற்கை நீதியின் இரண்டாவது கோட்பாடு, **'இருபுறங் கேட்டல்'** என்பதாகும். இது **'Audi Alteram Partem'** எனும் சட்ட மூதுரையில் இருந்து தோன்றியதாகும். 'Audi Alteram Partem' என்றால், 'மற்றொரு தரப்பினரை விசாரிக்க' (hear the other side) என்றும், 'வழக்கை விசாரிக்காமல் எவரையும் கண்டனம் செய்தல் கூடாது' (no one should be condemned unheard) என்றும், 'தீர்ப்பு கூறும் முன்னர், இரு தரப்பினரையும் விசாரித்தல் வேண்டும்' (both the sides must be heard before passing any order) என்றும் பொருளாகும். இக்கோட்பாட்டின்படி, வழக்கின் ஒரு தரப்பினரை மட்டும் விசாரித்து விட்டு தீர்ப்பு வழங்குதல் கூடாது. வழக்கின் மற்றொரு தரப்பினருக்கும், அவரது ஆட்சேபணைகளை எடுத்துக் கூறி வாதம் புரிய வாய்ப்பளிக்க வேண்டும். அதாவது இரு தரப்பினரையும் முழுமையாக விசாரித்தறிந்த பிறகே, எந்தத் தீர்ப்பையும் கூறுதல் வேண்டும்.

இக்கோட்பாடு வழக்குத் தரப்பினர்களை விசாரித்துதான் எந்த முடிவையும் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துவதால், இதனை

'நியாயமாகக் கேட்டல் விதி' (அல்லது) 'நியாயமான விசாரணை விதி' (Rule of Fair Hearing) என்றும் அழைப்பர். எனவே இவ்வாறு இரு புறமும் கேளாமல் அதாவது நியாயமான விசாரணைக்கு வாய்ப்பளிக் காமல், வழங்கப்படும் தீர்ப்பு, மேற்படி இயற்கை நீதிக் கோட்பாட்டிற்கு முரண்பட்டதாகும். எனவே செல்லாதென நீதிமன்றத்தால் அறிவிக்கப் படும்.

இருபுறங் கேட்டல் கோட்பாடு அல்லது நியாயமாகக் கேட்டல் விதியின் உட்கூறுகள் (Ingredients of Fair Hearing):

நியாயமாகக் கேட்டல் விதி **(1) அறிவிப்பு (Notice); (2) கேட்டல் (Hearing)** எனும் இரண்டு கருத்துக்களின் (two basic ideas) அடிப் படையில் இயங்கினாலும், அவ்விதி மேலும் பல உட்கூறுகளால் வளர்ச்சியுற்றதாகும். அவற்றை பின்வருமாறு சுருக்கமாகக் காண்போமா?

(1) அறிவிப்பு (Notice): எந்நடவடிக்கை எடுப்பதற்கும் முன்பாக, அதற்கு எதிரான காரணங்களைக் (ஆட்சேபணைகளைக்) காட்டுமாறு (show cause notice) எதிர்தரப்பினருக்கு அறிவிப்பு அனுப்புதல் வேண்டும். இது கேட்டலின் ஆரம்ப நிலையாகும். இவ்வாறு அறிவிப்பு அனுப்பாமல் நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டால் அல்லது தீர்ப்பு ஏதேனும் வழங்கப்பட்டால் இது இயற்கை நீதிக்கு புறம்பானதாகும். எனவே அவை இல்லாநிலையதாகும்.

R. v. University of Cambridge[24] - எனும் வழக்கில், டாக்டர் பென்ட்லி என்பவரின் மருத்துவர் பட்டங்கள், அவர் மீது சுமத்தப்பட்ட தொழில் தவறான நடத்தைக் குற்றச்சாட்டிற்காக கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தால் பறிக்கப்பட்டன. ஆனால் இவ்வாறு பறிப்பதற்கு முன்பாக அவருக்கு எவ்வித அறிவிப்பும் வழங்கப்படவில்லை; அவரது வாதமும் கேட்கப்பட வாய்ப்பளிக்கப்படவில்லை. எனவே அரசரின் தீர்ப்பாய மன்றம் (Court of King's Bench) மேற்கண்டவாறு டாக்டர் பென்ட்லியின் பட்டங்களை பறித்தது செல்லாது என்றும், இல்லாநிலையது என்றும் தீர்ப்பளித்தது.

மேற்படி வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி **Fortescue** அவர்கள் கூற்றுப்படி, மனித வரலாற்றில் முதன் முதலாக நியாயமாகக் கேட்டல் எனும் வாய்ப்பு அளிக்கப்பட்ட இடம், ஈடனின் தோட்டமாகும் (Garden of Eden). அங்கு ஆதிகால மனிதன் ஆடம், ஒரு மரத்தின் பழங்களை தின்றதால், அவருக்கு கடவுள் தண்டனை வழங்கினார். ஆனால் அதற்கு முன்னதாக அவனுக்கு பின்வருமாறு ஒரு வாய்ப்பை அளிக்கிறார். அஃதாவது, **"ஆடம், நீ எங்கிருக்கிறாய்? நான் உண்ணக் கூடாது என்று கடை செய்த மரத்தின் பழங்களை நீ தின்றாயா?"** என்று கடவுள் கேட்கிறார். இதிலிருந்து கடவுள் கூட, ஆடமிற்கு எதிராக நடவடிக்கை

24. (1723) 1 Str 757: 93 ER 698

எடுப்பதற்கு முன் அவனுக்கு அவனது வாதத்தை எடுத்துக் கூற ஒரு நியாயமான வாய்ப்பை அளித்திருக்கிறார் என்பது புலனாகிறது. எனவே கடவுளின் சட்டங்கள் கூட எவரையும் நியாயமாக கேட்காமல் கண்டனம் செய்தல் கூடாது என்று வலியுறுத்துகின்றன.

ஒரு அறிவிப்பு **நியாயமானதாகவும் போதுமானதாகவும் (reasonable and adequate)** இருக்க வேண்டும். அஃதாவது, எந்த தேதியிலும், இடத்திலும், முறையிலும் சம்பந்தப்பட்டவருக்கு எதிராக விசாரணை செய்யப்படவுள்ளது, அவர் மீதான குற்றச்சாட்டுகள் யாவை, அக்குற்றச் சாட்டுகள் மெய்ப்பிக்கப்படும் பொழுது, அவருக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தண்டம் அல்லது அவர் தனது எதிர்வாதத்தை சிறப்புற செய்வதற்கு தேவையான விபரங்கள் ஆகியவற்றை அந்த அறிவிப்பு கொண்டிருத்தல் வேண்டும். இந்த விபரங்களைக் கொண்ட அறிவிப்பானது அவருக்கு முறைப்படி சார்வு (அனுப்பப்பட) செய்யப் பட வேண்டும். ஒரு அறிவிப்பு செல்லத்தக்கதாக இருக்க வேண்டுமெனில், அதில் மேற்கண்ட விபரங்கள் இருக்க வேண்டும் என்று நமது நாட்டின் எச்சட்டத்திலும் கூறப்படவில்லை. ஆனால் ஒரு அறிவிப்பு நியாயமான தாகவும், போதுமானதாகவும் இருக்க வேண்டுமெனில், அதில் மேற் கண்ட விபரங்கள் இருக்க வேண்டியது அவசியமென நமது நாட்டு நீதி மன்றங்கள் பல வழக்குகளில் எடுத்துரைத்துள்ளன.

அறிவிப்பு அனைத்து நேர்வுகளிலும் எழுத்து மூலமாகவே இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. சில விதிவிலக்கான சூழல்களில் வாய்மொழியான அறிவிப்பு கூட செல்லத்தக்கதாகவே பாவிக்கப்படும்.

ஒரு அறிவிப்பு தெளிவானதாகவும், குறித்த வகையிலும், குழப்ப மற்றதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு இல்லாது போனால், சம்பந்தப்பட்ட அனைத்து பின்நடவடிக்கைகளும் செல்லாததாகிவிடும்.

State of U.P. v. S.R. Sharma[25]-எனும் வழக்கில் ஒரு தொழிலாளி மோசடி செய்துவிட்டதாக அவர் மீது குற்றஞ்சாட்டி, அவருக்கு குற்ற அறிக்கை அளிக்கப்பட்டது. ஆனால் அக்குற்ற அறிக்கையில் அந்த மோசடியின் விபரங்கள் குறிப்பிடப்படவில்லை. எனவே இது ஒரு செல்லத்தக்க அறிவிப்பாகாது என்று நீதிமன்றம் கூறியது.

Punjab National Bank v. All India Bank Employees Federation[26]-எனும் வழக்கில் ஒரு அறிவிப்பில் சில குற்றச்சாட்டுகள் செய்யப் பட்டிருந்தன. ஆனால் அக்குற்றச்சாட்டுகளுக்குண்டான தண்டம் (Penalty) குறித்து அதில் குறிப்பிடப்படவில்லை. இந்த அறிவிப்பு குறை பாடானது என்றும், எனவே அக்குற்றச்சாட்டுகளுக்கு விதிக்கப்பட்ட தண்டம் இல்லாநிலையது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

25. A.I.R. 1960 All. 543.
26. A.I.R. 1960 S.C. 16

State of J.&K. v. Haji Vali Mohd.[27] - ஒரு அறிவிப்பில் கண்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்ய ஒரு நியாயமான கால அவகாசம், எதிர்தரப்பினருக்கு அளிக்கப்படுதல் வேண்டும். மேற்படி வழக்கில், பாழடைந்துள்ள ஒரு கட்டிடத்தை அறிவிப்பு கண்ட 24 மணி நேரங்களுக்குள் இடித்துவிட வேண்டும் என்னும் வாசகங்களுடன் அறிவிப்பு அனுப்பப்பட்டது. இவ்வாறு 24 மணி நேரம் அளித்திருப்பது, ஒரு நியாயமான கால அவகாசம் கிடையாது என்றும், எனவே அது ஒரு செல்லத்தக்க அறிவிப்பாகாது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Gupta v. Union of India[28]-எனும் வழக்கில் ஒருவர் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்த குற்றச்சாட்டிற்கு தண்டிக்கப்படுவதற்கு பதிலாக அறிவிப்பில் குறிப்பிடப்படாத வேறொரு குற்றச்சாட்டிற்காக தண்டிக்கப் பட்டார். இங்கு அப்புதிய குற்றச்சாட்டு குறித்து அறிவிப்பு ஏதும் இல்லாததால், அத்தண்டனையை இல்லாநிலையது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

(2) வழக்கில் வாதம் கேட்கப்பட நியாயமான வாய்ப்பளித்தல் [Reasonable Opportunity of being heard (or) Opportunity of Fair Hearing]: ஒரு வழக்கில் ஒருவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முன், அவரது தரப்பு வாதம் கேட்கப்பட வேண்டும். இதற்கு அவருக்கு ஒரு நியாயமான வாய்ப்பளிக்க வேண்டும். இது **"இருபுறங் கேட்டல்"** கோட்பாட்டின் அடிப்படை கூறாகும். இந்த வாய்ப்பு மறுக்கப்பட்டால் அங்கு **"நியாயமாக கேட்டல் விதி" (Rule of Fair Hearing)** மீறப் பட்டுள்ளதாகப் பொருளாகும்.

Ridge v. Baldwin[29] - இவ்வழக்கு, **இயற்கை நீதியின் மகா சாசனம் (Magna Carta of Natural Justice)** என்று **சி.கே. அலன்** எனும் அறிஞரால் புகழப்படுகிறது. இவ்வழக்கின் வாதி ஒரு தலைமைக் காவலர் (Chief Constable). அவர் மீதும் மற்றும் இரு காவலர்கள் மீதும் தீச்செயலுக்காக குற்றஞ்சாட்டப்பட்டது. ஆனால் தலைமைக் காவலரின் மீதான குற்றம் மெய்ப்பிக்கப்படாததால், அவரை குற்றச்சாட்டிலிருந்து நீதிமன்றம் விடுதலை செய்தது; மற்றுமுள்ள இரண்டு காவலர்களுக்கு தண்டனை வழங்கியது. அவ்வாறு செய்கையில், தண்டனையடைந்த அந்த இரண்டு காவலர்களும் நல்லொழுக்கமுள்ள தலைமையைப் (good moral leadership) (அதாவது அவர்கள் நல்லொழுக்கமுள்ள தலைமைக் காவலரைப்) பெற்றிருக்கவில்லை என்றும், அதனால் அவர்கள் மீது பரிவு காட்டி அவர்களுக்கு குறைவான தண்டனையே வழங்கியிருப்பதாக தனது தீர்ப்பில் நீதிமன்றம் கூறியது. அந்த இரண்டு காவலர்களுக்கும் தலைமைப் பொறுப்பு வகிக்கும் அத்தலைமைக் காவலர் நல்லொழுக்க

27. (1972) 2 SCC 402 : A.I.R. 1972 S.C. 2538.
28. 1989 Supp (1) SCC 416 : A.I.R. 1989 S.C. 1393
29. (1964) AC 40: (1963) 2 ALL ER 66: (1963) 2 WLR 935 (HL)

முடையவர் அல்லர் என அத்தீர்ப்பில் கூறப்பட்ட காரணத்தால், அவரை காவல் துறை கண்காணிப்புக் குழு (Watch Committee) பணியிலிருந்து நீக்கியது.

ஆனால் அதற்கு முன்னதாக அவர் தன்னுடைய வாதத்தை எடுத்துக் கூற வாய்ப்பளிக்கப் படவில்லை. அதாவது அவரது வாதம் கேட்கப்படவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட அத்தலைமைக் காவலர், தன்னை பணியிலிருந்து தவறாக நீக்கியமைக்காக இழப்பீடு கோரி வழக்கொன்றைத் தொடுத்தார். அவ்வழக்கில் மேற்படி கண்காணிப்பு குழு, இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு (அதாவது நியாயமாகக் கேட்டல் விதிக்கு) கட்டுப்பட்டதா என்ற வினா எழுந்தது. அப்பொழுது, தலைமை காவலரை கண்காணிப்பு குழு பணியிலிருந்து நீக்கியது நிருவாகத்துறை அதிகாரத்தின்பாற்பட்டதாகும் (administrative power). அது நீதி முறையிலான (judicial power) அல்லது நீதித்தன்மை வாய்ந்த அதிகாரம் (quasi-judicial power) எதையும் பயன்படுத்தி அவரைப் பணியிலிருந்து நீக்கவில்லை. எனவே அக்குழுவிற்கு இயற்கை நீதிக் கோட்பாடுகள் பொருந்தாது; இதனால் அவரைப் பணியிலிருந்து நீக்க பிறப்பித்த ஆணையில் தலையிட முடியாது என்று மேல்முறையீட்டு நீதிமன்றம் (Court of Appeal) தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை எதிர்த்து அத்தலைமைக் காவலர் நீதிப் பெருமகனார்கள் அவைக்கு (House of Lords) மேல் முறையீடு செய்தார். அங்கு மேற்படி மேல்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு மறுதலையாக (reversing the decision of Court of Appeal) தீர்ப்பளிக்கப்பட்டது. அஃதாவது, அக்கண்காணிப்புக் குழுவின் நிருவாகத்துறை அதிகாரத்திற்கும் இயற்கை நீதிக் கோட் பாடுகள் பொருந்தக் கூடியதாகும்; தலைமைக் காவலரின் வாதத்தைக் கேட்காமல், அவரைப் பணியிலிருந்து கண்காணிப்புக் குழு நீக்கிய செயல், நியாயமாகக் கேட்டல் விதிக்கு புறம்பானதாகும்; எனவே அவரை பணி நீக்கம் செய்ய பிறப்பிக்கப்பட்ட ஆணை (Dismissal Order) இல்லாநிலையது, சட்ட விரோதமானது என்று நீதிப் பெருமகனார்கள் அவை தீர்ப்பளித்தது.

State of Orissa v. Binapani Dei[30] - எனும் வழக்கில் பினாபானி தேய் என்பவர் 55 வயதைப் பூர்த்தி செய்து விட்டபடியால், அவருக்கு பணியிலிருந்து கட்டாய ஒய்வு வழங்கப்பட்டது. ஆனால் இந்த ஆணையை பிறப்பிப்பதற்கு முன்பாக, பினாபானி தேயின் வாதம் கேட்கப்பட வில்லை. அவருக்கு அதற்கான வாய்ப்பு அளிக்கப்படவில்லை. எனவே இந்த ஆணை இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு முரண்பட்டதாகும் என்று கூறி, அதனை இரத்து செய்ய உச்ச நீதிமன்றம் உத்திரவிட்டது.

Maneka Gandhi v. Union of India[31] - எனும் வழக்கில் திருமதி.

30. A.I.R. 1967 S.C. 1269.

31. (1978) 1 SCC 248 : A.I.R. 1978 S.C. 597.

மேனகா காந்தியின் பாஸ் போர்ட் பொது நலனை முன்னிட்டு இந்திய அரசால் பறித்து வைக்கப்பட்டது. ஆனால் இதற்கு முன்னதாக மேனகா காந்தியின் வாதத்தைக் கேட்க அவருக்கு வாய்ப்பு ஏதும் அளிக்கப்பட வில்லை. பாதிக்கப்பட்ட நபரின் வாதத்தைக் கேட்காமல், அவருடைய பாஸ்போர்ட்டை பறிக்க பிறப்பிக்கப்பட்ட ஆணை, இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு முரண்பட்டதாகும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

Olga Tellis v. Bombay Municipal Corporation[32] - இவ்வழக்கு **'நடைபாதை வசிப்பாளர்கள் வழக்கு' (Pavement Dwellers' Case)** எனப் பிரபலமாக அழைக்கப்படுகிறது. இவ்வழக்கிற்கு தொடர்புடைய சட்டத்தின் ஒரு சட்டப்பிரிவில் நடைபாதையில் அனுமதியின்றி செய்யப் பட்டுள்ள ஆக்ரமிப்புகளை எவ்வித அறிவிப்பும் இன்றி, ஆணையாளர் இடித்துத் தள்ளலாம் என்று வகை செய்யப்பட்டிருந்தது. ஆனால் உச்ச நீதிமன்றம் இதற்கு மாறுபட்ட ஒரு பொருள் விளக்கத்தை அளித்தது. அதாவது, மேற்படி சட்டப்பிரிவு ஒரு இயல்விக்கும் சட்டப் பிரிவே (enabling provision) தவிர, 'ஆக்ரமிப்புக் கட்டிடங்களை இடிப்பதற்கு அறிவிப்பு ஏதும் கொடுக்க வேண்டாம்' என்று கட்டளையிடும் சட்டப் பிரிவல்ல (not a commanding provision). எனவே, ஆணையாளர் மேற்படி சட்டப் பிரிவின்படி தனது தன்விருப்புரிமை அதிகாரத்தை செயல்படுத்துவதற்கு முன்பாக, சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிப்பு கொடுத்து, அவர்கள் தரப்பு நியாயத்தை கேட்க வேண்டும்; இயற்கை நீதிக் கோட்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

(3) சாட்சியங்களை முன்னிலைப்படுத்தும் உரிமை (Right to present the Evidence): ஒரு வழக்கை நியாயமாகக் கேட்டல் என்பது, சம்பந்தப்பட்ட தரப்பினர் தனது வழக்கிற்குண்டான சாட்சியத்தை சம்பந்தப்பட்ட தீர்ப்பாய அதிகாரியின் முன் சமர்ப்பிப்பதற்கு அவருக்கு நியாயமான வாய்ப்பளித்தலையும் உள்ளடக்கியதாகும். இந்த வாய்ப்பு மறுக்கப்பட்டால், அந்நபர் தனக்காதரவான விபரங்களை முன்னிலைப் படுத்த இயலாது.

Dhakeswari Cotton Mills Ltd. v. C.I.T.[33] - எனும் வழக்கில் வருமான வரித் தீர்ப்பாயம், வரி விதிக்கப்பட்டவருக்கு எதிராக எடுத்த ஒரு நடவடிக்கையில், அச்சமயத்தில் அவரிடம் இல்லாத கணக்குப் பேரேடுகளை முன்னிலைப்படுத்த அவருக்கு போதிய அவகாசம் வழங் காமல் செய்த தீர்ப்பை செல்லாதென உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

(4) சாட்சியங்கள் குறித்து மறு தரப்பினருக்கு அறிவித்தல் வேண்டும் (Disclosure of Evidence to the Party): நீதித் தீர்ப்பு

32. (1985) 3 SCC 545 : A.I.R. 1986 S.C. 180.

33. A.I.R. 1955 S.C. 55.

வழங்கும் ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு (Adjudicating Authority), ஒரு நபருக்கு எதிராக சில ஆவணச் சாட்சியங்களை கொண்டிருப்பின், அவற்றை பார்வையிட்டு, அதன் நகல்களை எடுத்துக் கொள்ள அந்நபருக்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும். இவ்வாறு அளிக்காமல் அந்த ஆவணத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கினால் அது செல்லாததாகும். எனவே நியாயமான கேட்டல் என்பது, ஒரு தரப்பினரின் சாட்சியத்தை மறுக்க அல்லது குறை கூற எதிர் தரப்பினருக்கு வாய்ப்பளித்தலையும் உள்ளடக்கியதாகும்.

State of Orissa v. Binapani Dei[34] - எனும் வழக்கில், விசாரணை அலுவலர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில், எதிர்மனுதாரர் பினாபானி என்பவரை, அரசாங்கம் அவருக்கு கட்டாய ஓய்வளித்து பணியிலிருந்து விடுவித்தது. ஆனால் இந்த அறிக்கையானது பினாபானிக்கு அளிக்கப்படவில்லை. எனவே அரசின் ஆணையை செல்லாதென உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

(5) எதிரிடையாக உள்ள சாட்சியத்தை மறுக்கும் வாய்ப்பு (Opportunity to rebut adverse evidence): ஆவண சாட்சியங்களை மேற்கண்டவாறு எதிர்தரப்பினருக்கு அளித்தால் மட்டும் போதாது. அச்சாட்சியம் எதிர்தரப்பினருக்கு பாதகமாக இருப்பின், அதை மறுத்துக் கூறவும் அவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

(6) எதிர்தரப்பினர் இல்லாத பொழுது, சாட்சியம் எடுக்கப்படக் கூடாது (No evidence should be taken in the absence of the Other party): ஒரு வழக்கில் அனைத்து சாட்சியங்களும், குற்றஞ்சாட்டப்பட்டவர் முன்னிலையில் எடுக்கப்பட வேண்டும் என்பது பொது விதி. இந்த விதியை நிருவாகமுறை நீதித் தீர்ப்பு நடவடிக்கைகளிலும் பின்பற்ற வேண்டும். எனினும் சில விதிவிலக்கான சூழ்நிலைகளில் மேற்படி விதி தளர்த்தப்படுகிறது.

(7) குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பு (அல்லது) குறுக்கு விசாரணை செய்வதற்கான உரிமை [Opportunity of Cross-examination (or) Right to Cross-examination]: ஒரு வழக்கில் உண்மையை நிலைநிறுத்தவும், பொய்மையை சுட்டிக்காட்டவும் உதவிக்கு வரும் மிக வலிமையான ஆயுதம், குறுக்கு விசாரணையாகும். பொதுவாக நிருவாக முறை நீதித் தீர்ப்பு நடவடிக்கைகளில் குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று நீதிமன்றங்கள் வலியுறுத்துவதில்லை. எனினும், குறுக்கு விசாரணை செய்யாமல், சிறந்த முறையில் எதிர்வாதம் செய்ய வியலாது என்ற சூழ்நிலை உள்ளபொழுது, அதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டால் அது நியாயமாக கேட்டல் விதியை மீறியதாகும். இயற்கை நீதிக்கு அப்பாற்பட்டதாகும்.

34. A.I.R. 1967 S.C. 1269.

U.P. Ware Housing Corporation v. Vijay Narayan[35] - எனும் வழக்கில் கார்ப்பரேஷன் தொழிலாளிக்கு எதிரான ஒரு நடவடிக்கையில் கார்ப்பரேஷன் சார்பாக சாட்சியமளிக்க ஒரு சாட்சி ஆஜரானார். ஆனால் அவரை குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பு அத்தொழிலாளிக்கு அளிக்கப்படவில்லை. எனவே அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட கார்ப்பரேஷன் நடவடிக்கைகள் செல்லாது என்றும், அத்தொழிலாளியை பணி நீக்கம் செய்து பிறப்பிக்கப்பட்ட ஆணை இல்லாநிலையது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

எனினும், ஒரு வழக்கில் அளிக்கப்பட வேண்டிய சாட்சியமானது, பிரமாணப் பத்திரிக்கையின் (evidence on proof affidavit) வாயிலாக இருப்பின், அங்கு குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பு தளர்த்தப்படுகிறது.

Hira Nath Mishra v. Principal, Rajendra Medical College[36] -எனும் வழக்கில் மருத்துவக் கல்லூரியின் சில குறும்புக்கார மாணவர்கள், அக்கல்லூரி மாணவிகள் தங்கியிருந்த விடுதியில், இரவில் நிர்வணமாக நுழைந்தனர். இதனால் கொதிப்படைந்த 36 மாணவிகள், அக்கல்லூரி முதல்வரிடம் இரகசியமாக புகார் செய்தனர். அவர் ஒரு விசாரணைக் குழுவை அமைத்தார். அந்தக் குழுவின் முன்பு, அம்மாணவர்களுக்கு எதிராக, அம்மாணவிகள் சாட்சியமளித்தனர். ஆனால் அப்பொழுது, அம்மாணவர்கள் ஆஜராக அனுமதிக்கப்படவில்லை. மேலும் குறும்பு செய்த மாணவர்களின் புகைப்படங்களை, பிற மாணவர்களின் புகைப்படங்களுடன் கலந்து வைத்த பொழுது, அவற்றில் அக்குறும்பு செய்த மாணவர்களின் புகைப்படங்களை அம்மாணவிகள் அடையாளம் காட்டினர். பின்னர், சம்பந்தப்பட்ட குறும்புக்கார மாணவர்களை அவ்விசாரணைக் குழு அழைத்து, அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை எடுத்துரைத்தது. ஆனால் அவர்கள் அக்குற்றச்சாட்டுகளை மறுத்து, தாங்கள் அம்மாணவிகளின் விடுதிப்பக்கமே செல்லவில்லை என்று வாதிட்டனர். இறுதியாக, அம்மாணவர்கள் குற்றம் செய்துள்ளதாகக் கூறி, அக்குழு அவர்களை கல்லூரியிலிருந்து வெளியேற ஆணை பிறப்பித்தது.

ஆனால் அம்மாணவர்கள், தாங்கள் விசாரணையில் ஆஜராத பொழுது தங்களுக்கு தெரியாமல் மாணவிகளின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டுள்ளதென்றும், அம்மாணவிகளை குறுக்கு விசாரணை செய்ய தங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லையென்றும், இதனால் தங்களை கல்லூரியிலிருந்து வெளியேற்ற பிறப்பிக்கப்பட்ட ஆணை இயற்கை நீதிக் கோட்பாடுகளை முரணாணது என்றும், அதை இல்லா நிலையது என்று அறிவிக்கும்படியும் உச்ச நீதிமன்றத்திடம் மேல்

35. A.I.R. 1980 S.C. 2117.

36. (1973) 1 SCC 805 : A.I.R 1973 S.C. 1260

முறையீடு செய்தனர். ஆனால் உச்ச நீதிமன்றம் அவர்களது வாதத்தை நிராகரித்துவிட்டது. உச்ச நீதிமன்றத்தின்படி, "புகார் கொடுத்த மாணவிகள், குறும்புக்கார மாணவர்களின் முன்னிலையில் சாட்சியமளிக்கத் துணியவில்லை. அப்படி அவர்கள் துணிந்து சாட்சியமளித்திருந்தால், அவர்கள் அம்மாணவர்களின் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கும், தொந்தரவுகளுக்கும் நிச்சயமாக ஆளாகியிருப்பார்கள். கல்லூரி நிர்வாகமோ கல்லூரி வளாகத்திற்கு வெளியே மாணவிகளைப் பாதுகாக்க இயலாத சூழலில் உள்ளது." எனவே, அம்மாணவர்களுக்கு மாணவிகளை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளிக்காதது சரியே என்றும், விசாரணைக் குழு பிறப்பித்த ஆணை சரியே என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆக, நிருவாகமுறை நடவடிக்கைகளில் குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளிப்பது என்பது வழக்கின் சூழ்நிலைகளுக்கும், அந்த நிருவாக முறை அதிகார அமைப்பின் தன்விருப்புரிமை அதிகாரத்திற்கும் உட்பட்டதாகும்.

(8) வழக்குரைஞரை நியமித்து வாதிடும் உரிமை (Right to representation through a Counsel): பொதுவாக நிருவாகமுறை நீதித் தீர்ப்பு நடவடிக்கைகளில் தரப்பினர் ஒருவர் தனது சார்பாக வழக்குரைஞர் ஒருவரை நியமித்து வாதிடும் உரிமை, நியாயமாகக் கேட்டலின் ஒரு முக்கிய உட்கூறாகக் கருதப்படுவதில்லை. இந்தியச் சட்டங்களும் பலவும் இதற்கு அனுமதிப்பதில்லை. மேலும், சில நிகழ்வுகளில் இந்த உரிமையை அளிப்பது, நிருவாகமுறை நீதித் தீர்ப்பு கூறும் அமைப்புகளின் தன்விருப்புரிமைக்குட்பட்டதாகவும் உள்ளது. எனினும், வழக்கின் ஒரு தரப்பினர் கல்லாதவராக இருந்தாலோ, அல்லது சம்பந்தப்பட்ட வழக்கு சிக்கல் மற்றும் நுட்பம் மிகுந்ததாக இருந்தாலோ, அல்லது அவ்வழக்கில் சட்டப் பிரச்சனை இருந்தாலோ அல்லது வழக்கின் ஒரு தரப்பினர் நன்கு அனுபவம் வாய்ந்த வழக்குரைஞரை நியமித்து அவர் மூலம் வாதங்களை எடுத்துரைத்தாலோ, அங்கு வழக்குரைஞரை நியமித்து வாதிடும் வாய்ப்பை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்குதல் வேண்டுமென இந்திய நீதிமன்றங்கள் பல வழக்குகளில் தீர்ப்புரைத்துள்ளன. எனினும், பொதுவாக இந்த உரிமை மறுக்கப்பட்டால், அது நியாயமாகக் கேட்டல் விதியை மீறியதாகாது.

(8) வழக்கைக் கேட்கும் நபரே தீர்ப்பு வழங்குதலும் வேண்டும் (One who hears must decide): சாதாரண நீதிமன்ற நடவடிக்கைகளில் வழக்கின் விசாரணையை கேட்கும் நபரே, தீர்ப்பையும் வழங்குகிறார். ஆனால் நிருவாகமுறை நீதித் தீர்ப்பு வழங்கும் நடவடிக்கைகளில், இந்நிலை பின்பற்றப்படுவதில்லை. பெரும்பாலும் ஒரு அலுவலர் வழக்கின் விசாரணையைக் கேட்டறிகிறார். அந்த விசாரணைக் குறிப்புகளின் அடிப்படையில் மற்றொரு அலுவலர் தீர்ப்பு வழங்குகிறார். இதனை **அமைப்பு வழித் தீர்ப்புகள்** என்று கூறுவர். **(Institutional De-**

cisions) இவ்வாறு பொறுப்பை பகிர்ந்து கொள்வது, இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கும், நியாயமாகக் கேட்டல் விதிக்கும் எதிரானதாகும். இந்தப் பிரச்சனை இந்தியாவில் பல வழக்குகளில் எழுந்துள்ளது. அவற்றிற்கு நீதிமன்றங்கள் ஒரே மாதிரியான தீர்ப்பை வழங்காமல் வெவ்வேறான நிலைப்பாட்டை எடுத்துரைக்கும் தீர்ப்புகளை வழங்கியுள்ளன. ஒரு தீர்ப்பு மேற்கண்ட நிலை சரியென்று சொன்னால், மற்றொரு தீர்ப்பில் அந்நிலைப்பாடு தவறு என்று கூறப்பட்டுள்ளது.

Gullapalli Nageswara Rao v. A.P. State Road Transport Corporation[37] - இவவழக்கை **குல்லபள்ளி நாகேஸ்வர ராவ் முதலாம் வழக்கு (Gullapalli I Case)** என்று அழைப்பர். இவ்வழக்கில் ஆந்திரப் பிரதேச மாநில அரசின சாலைப் போக்குவரத்து செயலாளர் (Secretary of Andra Pradesh State Road Transport), பேருந்து வழித்தடங்களை நாட்டுடைமையாக்கும் திட்டமொன்றைத் (Scheme for nationalisation of motor transport) தயாரித்து அரசிதழில் வெளியிட்டார். அத்திட்டத்திற் கெதிரான ஆட்சேபணைகளை கோரிப் பெற்று, அவற்றின் மீதான விசாரணையைச் செய்யும் அதிகாரம் அச்செயலாளருக்கும், அவ் விசாரணையின் பேரில் இறுதி முடிவு (தீர்ப்பு) வழங்கும் அதிகாரம் முதலமைச்சருக்கும் அத்திட்டத்தின் வாயிலாக வழங்கப்பட்டிருந்தது. இதன்படி மேற்படி திட்டத்திற்கான ஆட்சேபணைகளை தனியார் பேருந்து உரிமையாளர்களிடமிருந்து மேற்படி செயலாளர் பெற்று, அதன் மீதான விசாரணையை மேற்கொண்டார். அவரது விசாரணைக் குறிப்புகளின் அடிப்படையில் முதலமைச்சர், அந்த ஆட்சேபணைகள் அனைத்தையும் தள்ளுபடி செய்துவிட்டு, அத்திட்டத்திற்கு அப்படியே அங்கீகாரம் வழங்கிவிட்டார். இதனால் பாதிக்கப்பட்ட மேற்படி தனியார் பேருந்து உரிமையாளர்கள், இது 'வழக்கின் விசாரணையைக் கேட்பவரே தீர்ப்பளிக்க வேண்டும்' எனும் இயற்கை நீதிக் கோட்பாட்டிற்கு முரண்பட்டதாகும் என்று வாதிட்டனர். இந்த வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, முதலமைச்சரின் தீர்ப்பானது, நியாயமாகக் கேட்டல் விதிக்கு புறம்பானது என்று கூறி அதனை செல்லாதது என்று அறிவித்தது.

எனினும், நிருவாகமுறைச் சட்டத்தில் வழக்கின் விசாரணையைக் கேட்கும் நபரே, அவ்வழக்கின் தீர்ப்பையும் கூற வேண்டும் என்று நிர்பந்திப்பது, நடைமுறைச் சாத்தியமல்ல என்றுதான் கூற வேண்டும்.

தீர்ப்பிற்கு பின்னர் கேட்டல் (அல்லது) தீர்ப்பிற்கு பிந்திய விசாரணை (Post-decisional Hearing):

தீர்ப்பிற்கு பின்னர் கேட்டல் என்பது, ஒரு வழக்கில் அல்லது பிரச்சனையில் தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு, அத்தீர்ப்பினால் பாதிக்கப் படுவோரின் வாதத்தை கேட்டறிதல் என்று பொருளாகும். ஆனால், சில

37. AIR 1959 S.C. 308.

நெருக்கடிக் காலங்களின் (emergency) பொழுது அல்லது பொது நலனை (public interest) முன்னிட்டு, சம்பந்தப்பட்ட வழக்கில் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்பாக விசாரித்தறிய (prior hearing) வேண்டும், என்ற நிபந்தனை தளர்த்தப்படுவதுண்டு. இம்மாதிரியான தருணங்களில் தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகாவது அதனால் பாதிக்கப் பட்டவருக்கு அவரது வாதத்தை எடுத்துக் கூற வாய்ப்பளிக்க வேண்டும் என்று சில வழக்குகளில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. அந்த வகையில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு வழக்காக திருமதி. மேனகா காந்தியின் வழக்கைக் குறிப்பிடலாம். அதன் பொருண்மைகள் வருமாறு:

Maneka Gandhi v. Union of India[38] - இவ்வழக்கில் பாஸ்போர்ட் சட்டத்தின் 10 (C)-பிரிவின்படி, பொது நலனை முன்னிட்டு திருமதி. மேனகா காந்தியின் பாஸ்போர்ட் பறிக்கப்பட்டது. ஆனால் இவ்வாறு பறிக்கப்படுவதற்கு முன்பாக, திருமதி. மேனகா காந்தியின் வாதம் கேட்கப்பட அவருக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. இது இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு முரண்பட்டதாகும் என்றும், நெருக்கடி அல்லது பொது நலனை முன்னிட்டு, ஒருவருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்னதாக, அவருக்கு அவரது தரப்பு நியாயத்தை எடுத்துக் கூற வாய்ப்பளிக்காவிட்டாலும், அந்த நடவடிக்கைக்கு பிறகாவது அவருக்கு அத்தகு வாய்ப்பளிக்கபபட வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் எடுத்துரைத்தது. எனவே மேற்படி வழக்கில் திருமதி. மேனகா காந்தியின் பாஸ்போர்ட்டை பறிப்பதற்காக இடப்பட்ட ஆணையை உச்ச நீதிமன்றம் இரத்து செய்யாமல், அவரது வாதத்தை கேட்ட பின்பு முடிவெடுக்குமாறு அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்திரவிட்டது.

தீர்ப்பு வழங்கிய பின்பு, அத்தீர்ப்பினால் பாதிக்கப்பட்டவரை விசாரிப்பது என்பது சற்று நெருடலாகவே உள்ளது. பல வழக்குகளில் இது தவறான அணுகுமுறை என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. எனினும் வழக்கை எடுத்துரைக்க வாய்ப்பளிக்காமலேயே தீர்ப்பு வழங்கும் நிலைப் பாட்டை விட, அத்தீர்ப்பிற்கு பிறகாவது, வழக்கைக் கேட்க வகை செய்யப்படுகிறதே என்பது சற்று ஆறுதலாக உள்ளது. இருப்பினும், தீர்ப்பிற்கு பின்பு விசாரணையைக் கேட்டல் நடைமுறையை மேற்கண்ட விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் தவிர, வேறு வழிகளில் ஊக்குவிக்க நீதிமன்றங்கள் துணை நின்று விடக்கூடாது.

இருபுறங் கேட்டல் விதியை தவிர்க்கக் கூடிய சூழ்நிலைகள் (அல்லது) இருபுறங் கேட்டல் விதிக்கான விதிவிலக்குகள் (Exclusion (or) Exceptions of the Rule of Audi Alteram Partem - Circumstances):

சில விதிவிலக்கான சூழ்நிலைகளில், இருபுறங் கேட்டல் விதி தளர்த்தப்படுகிறது. இதனால் வழக்குத் தரப்பினரை விசாரிக்காமலேயே தீர்ப்பு வழங்கப்படுகிறது. அச்சூழ்நிலைகளை நீதிமன்றமும் அங்கீகரித்

38. A.I.R. 1978 S.C. 597.

துள்ளது. ஏனெனில், அதனால் சம்பந்தப்பட்ட வழக்குத் தரப்பினருக்கு எவ்வித அநீதியும் விளைவதில்லை. அத்தகு சூழ்நிலைகள் வருமாறு.

(1) நெருக்கடி நிலைகளில் (Emergency situations): அமைதிக்கு பங்கம் ஏற்படுதல், போர், பஞ்சம் போன்ற நெருக்கடி நிலைகள் ஏற்படும் பொழுது, நிருவாகத்துறை உடனடியாக செயல்பட்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. எனவே அச்சமயங்களில் வழக்கின் விசாரணையை கேட்ட பிறகு முடிவெடுக்க வேண்டும் என்ற இயற்கை நீதி விதி தளர்த்தப்படுகிறது.

(2) இராணுவம் மற்றும் அரசாங்க இரகசியங்களில் (Defence or State secrets): இராணுவம் மற்றும் அரசாங்க இரகசியம் தொடர்பான வழக்குகளில், இருபுறங் கேட்டல் விதி தவிர்க்கப்படுகிறது.

(3) ஒழுங்கு நடவடிக்கைகளில் (Disciplinary actions): அரசுப் பணியாளர்களுக்கு (Civil Servants) எதிராக ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் பொழுது, பின்வரும் மூன்று சூழல்களில் அவர்களது நியாயமான விசாரணைக்கு எவ்வித வாய்ப்பும் அளிக்காமல், தீர்ப்பளிக்க இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 311 (2)-வது ஷரத்தானது, அரசுக்கு அதிகாரமளிக்கிறது. அவை

(அ) ஒரு பணியாளர் ஒரு குற்றச்சாட்டிற்காக தண்டிக்கப் பட்டிருப்பதின் அடிப்படையில், அவரை பணியிலிருந்து நீக்கும் பொழுது அல்லது பதவிக் குறைப்பு செய்யும் பொழுது;

(ஆ) விசாரணையை மேற்கொள்ள வேண்டியது சில காரணங் களின் அடிப்படையில் நடைமுறைச் சாத்தியமல்ல என்று, விசாரணை அதிகாரி கருதி, அதற்கான காரணங்களை எழுத்து வடிவில் பதிவு செய்யும் பொழுது;

(இ) நாட்டின் பாதுகாப்பு கருதி, விசாரணை நடத்த வேண்டியது உகந்ததல்ல என்று அரசாங்கம் திருப்தியுறும் பொழுது.

(4) அதிக எண்ணிக்கை (Innumerable number): ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பின் அல்லது வழங்கப்பட வேண்டிய தீர்ப்பு பொதுவான தன்மை கொண்ட தாக இருப்பின், அத்தரப்பினர்களின் விசாரணை கேட்கப்பட வேண்டும் என்று இயற்கை நீதி விதிக்கும் நிபந்தனை தவிர்க்கப்படுகிறது.

Bihar S.E. Board v. Subhash Chandra[39] -என்ற வழக்கில் ஒரு தேர்வு மையத்தில் தேர்வு எழுதிய மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் தேர்வுகள், அவர்கள் ஒட்டுமொத்தமாக 'காப்பி'யடித்து (mass copying) தேர்வுகளை எழுதியுள்ளனர் என்ற அடிப்படையில் கல்வி வாரியத்

39. A.I.R. 1970 S.C. 1269.

தால் இரத்து செய்யப்பட்டன. மேலும் அவர்களை அடுத்து வரும் துணைத் தேர்வில் (supplemetary examination) தேர்வில் மீண்டும் ஆஜராகி தேர்வு எழுதுமாறு மேற்படி வாரியம் ஆணையிட்டது. ஆனால் இவ்வாறு ஆணையிடுவதற்கு முன்பாக தங்களின் வாதத்தை மேற்படி வாரியம் கேட்கவில்லை எனும் அடிப்படையில் அம்மாணவர்கள் அந்த ஆணையை எதிர்த்து பாட்னா உயர் நீதிமன்றத்தில் வழக்கிட்டனர். வழக்கை விசாரித்த பாட்னா உயர் நீதிமன்றம் அந்த ஆணையை இரத்து செய்ய உத்திரவிட்டது. ஆனால் இதை எதிர்த்து கல்வி வாரியம் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தது. அங்கு, மேற்படி கல்வி வாரியம் பிறப்பித்த ஆணை, தன்மையில் பொதுவானது என்றும், எந்த ஒரு குறிப் பிட்ட மாணவர் மீதும் தனிப்பட்ட விதத்தில் காப்பியடித்த குற்றம் சாட்டப்படவில்லை என்றும், இம்மாதிரியான சூழ்நிலைகளில் அம் மாணவர்கள் ஒவ்வொருவரையும் காப்பியடித்த குற்றத்திற்காக விரிவாக விசாரணை செய்ய வேண்டும் என்று கல்வி வாரியத்தைக் கட்டாயப் படுத்துவது முறையாகாது என்றும், எனவே பாட்னா உயர் நீதிமன்றம் மேற்படி ஆணை இரத்து செய்து பிறப்பித்த உத்திரவு இல்லாநிலையது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

முடிவுரை:

முடிவாக, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று ஏற்பட, சட்டத்தின் ஆட்சி நடைபெற, நீதி உண்மையில் வழங்கப்படுகின்றதென மக்கள் மன அமைதி கொள்ள நிருவாகமுறை நடைமுறைகள் இயற்கை நீதி கோட்பாடுகளுக்கேற்ப அமைய வேண்டும். நிருவாகமுறை நடை முறைகள் இயற்கை நீதி கோட்பாடுகளைப் புறக்கணித்தலாகாது. எனவே, இத்தகு பெருமை வாய்ந்த இயற்கை நீதிக் கோட்பாடுகள், நிருவாகமுறை நீதித்தீர்ப்பு கூறும் அதிகார அமைப்புகளின் செயல் பாட்டின் செல்லுதன்மையை அளக்கும் ஒரு அளவுகோலாக உள்ளது என்று கூறினால் அது மிகையன்று.

28. Explain the maxim "nemo judex in re sua" ("தீர்ப்பளிப்பவர் வழக்கோடு தொடர்பு கொண்டிருக்கக் கூடாது" என்ற முதுமொழி கூறுவதை விளக்குக.)

(அல்லது)

"No man shall be a judge in his own cause". Explain. ("எவரும் அவருடைய வழக்கில் நடுவராக அமையார்". விளக்குக.)

(அல்லது)

Explain tne rule against bias citing relevant decisions. (மனச் சாய்விற்கு எதிரான விதியை அதன் தொடர்பான தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டி விளக்குக.)

(அல்லது)

Explain the different kinds of bias. (மனச்சாய்வின் வகைகளை விளக்குக.)

(அல்லது)

Examine the different types of bias known to Administrative Law. (நிருவாகமுறைச் சட்டத்தில் ஏற்படும் பல மாதிரி மனச்சாய்வுகளை ஆராய்க.)

(அல்லது)

What is personal bias? Is it necessary that a party should prove not only the existence of bias but also that has influenced the decision? Discuss it with reference to case - laws. (தனிப்பட்ட மனச் சாய்வு என்றால் என்ன? ஒரு வழக்கின் நீதி பரிபாலனத்தில் தனிப்பட்ட மனச்சாய்வு இருப்பது மட்டுமல்லாமல் அது அவ் வழக்கின் முடிவில் மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை கட்சிக்காரர் நிருபிக்க வேண்டியது அவசியமா? வழக்குகளை குறிப்பிட்டு விவாதிக்க.)

(அல்லது)

Explain the statement of Lort Hewart that it is of fundamental importance that justice should not only be done, but should manifestly and undoubtedly be seen to be done. (நீதி வழங்கினால் மட்டும் போதாது, சந்தேகத்திற்கு இடமின்றியும், வெளிப்படை யாகவும் மற்றும் பிறருக்குத் தெரியும்படியும் நீதி வழங்கப்பட வேண்டும் என்கிற ஹெவர்ட் பிரபுவின் கூற்றை விளக்கவும்.)

(அல்லது)

Bias - Write short notes. (மனச்சாய்வு - சிறு குறிப்பு வரைக)

(அல்லது)

Pecuniary Bias - Write short notes. (பணம் சார்ந்த மனச்சாய்வு - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Personal Bias - Write short notes. (தனிப்பட்ட மனச்சாய்வு - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Official bias - Write short notes. (அலுவலகம் சார்ந்த மனச்சாய்வு - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

R.C.Cooper V. Union of India - Write short notes. (ஆர்.சி.கூப்பர் எதிர் மத்திய அரசு - சிறு குறிப்பு எழுதுக)

(அல்லது)

Manaklal Vs. Premchand - Write short notes. (மனேக் லால் எதிர் பிரேம் சந்த் - சிறு குறிப்பு எழுதுக)

(அல்லது)

A.K.Kripak V. Union of India - Write short notes. (ஏ.கே.கிரைபாக் எதிர் மத்திய அரசு - சிறு குறிப்பு எழுதுக)

(அல்லது)

Gullapalli Nageswara Rao V. A.P.S.R.T.C. - Write short notes. (குல்லப்பள்ளி நாகேஸ்வர ராவ் எதிர் ஆந்திர மாநில அரசு போக்குவரத்துக் கழகம் - சிறு குறிப்பு எழுதுக)

(அல்லது)

Reasonable suspicion test - Write short notes. (அறிவுக்கு பொருந்திய ஐய விதி - சிறு குறிப்பு வரைக.)

(மேற்கண்ட வினாக்களுக்கு விடையாக இயற்கை நீதிக் கோட்பாடுகளின் முதலாவது கோட்பாட்டில் உள்ள பொருத்தமான பகுதிகளைப் படித்துக் கொள்ளவும். அக்கோட்பாடு **வினா எண் 27-ன்** விடையில் 1-வது எண்ணிடப்பட்ட பெருந்தலைப்பின் கீழ் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.)

29. Explain the principle of audi alteram partem referring to decided cases. ('இரு தரப்பினரையும் கேட்டல்' என்ற கோட்பாட்டை முடிவுற்ற வழக்குகளைக் கொண்டு விவாதிக்க.)

(அல்லது)

What do you understand by the maxim "Audi Alteram Partem"? Examine the scope of its applicability in administrative adjudications. ('இருபுறங் கேட்டல்" சால்புரையிலிருந்து நீங்கள் அறிவ தென்ன? ஆட்சிமுறை நீதி தீர்ப்புகளில் அது பயன்படுத்தப்படக் கூடிய அளாவுகையை ஆய்வு செய்க.)

(அல்லது)

What are the components of Audi Alteram Partem? Explain. (மறுபக்கம் விசாரணை செய் என்பதின் உட்கூறுகள் யாவை? விளக்குக.)

(அல்லது)

Audi alteram partem - Write short notes. (மறுபுறம் கேட்டல் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Bring out with the help of decided cases, the essential ingredients of Fair hearing. When is post decisional hearing considered sufficient? (நியாயமாக கேட்டலின் இன்றியமையாக் கூறுகளை முடிவுற்ற வழக்குகளின் துணையுடன் வெளிக்கொணர்க. "முடிவுக்கு பின் கேட்டல்" எப்போது போதுமானதாகக் கொள்ளப்படும்?)

(அல்லது)

"The various componets of Fair hearing are not fixed but are flexible and their scope and applicability differ from case to case" - Elucidate. ("நேரிய விசாரணை என்பதன் பல்வேறு கூறுகள் நிலையானவை அல்ல. அவை நெகிழ்வுத் தன்மை கொண்டவை. மேலும் அவற்றின் அளாவுகையும் பொருந்தும் தன்மையும் வழக்கிற்கு வழக்கு மாறுபடும்" - விளக்கவுரை தருக.)

(அல்லது)

Explain the concept of fair-hearing with the help of decided cases. (ஒருதலை சாய்வின்றி வழக்கு விசாரணை முறை கருத்துப்படிவத்தை முடிவுற்ற வழக்குகளின் உதவியோடு விளக்குக.)

(அல்லது)

"The concept of fair - hearing implies two ideas" - Explain. ("ஒரு தலைச் சார்பின்றி வழக்குக் கேள்வி முறை இரண்டு கருத்துக்களைக் குறித்துக் காட்டுகிறது" - விளக்குக.)

(அல்லது)

Explain the essentials of fair hearing. (இருபுறம் கேட்டலின் மூலக்கூறுகளை விளக்குக.)

(அல்லது)

"The rule ensures that no one should be condemned unheard". Explain. ("வழக்கை கேட்காமலும், விசாரிக்காமலும் யாரையும் கண்டனமோ, தண்டிக்கவோ கூடாது" என்ற விதியை விளக்குக.)

(அல்லது)

With the help of decided cases examine the circumstances under which Audi Alterem Partem rule can be excluded. (எந்தெந்த சந்தர்ப்பங்களில் இருபுறம் கேட்டல் விதியை தவிர்க்கலாம் என்பதை வழக்குத் தீர்ப்புகளின் துணையோடு ஆராய்க.)

(அல்லது)

Ridge Vs. Baldwin - Write short notes. (இரிட்ஜ் எதிர் பால்ட்வின் - சிறு குறிப்பு எழுதுக)

(அல்லது)

Maneka Gandhi V. Union of India - Write short notes. (மேனகா காந்தி எதிர் மத்திய அரசு - சிறு குறிப்பு எழுதுக)

(அல்லது)

Post decisional hearing - Write short notes. (முடிவிற்கு பின் விசாரணை - சிறு குறிப்பு எழுதுக)

(அல்லது)

Right to cross examination - Write short notes. (குறுக்கு விசாரணை செய்வதற்கான உரிமை - சிறு குறிப்பு எழுதுக)

(மேற்கண்ட வினாக்களுக்கு விடையாக இயற்கை நீதிக் கோட்பாடுகளின் இரண்டாவது கோட்பாட்டில் உள்ள பொருத்தமான பகுதிகளைப் படித்துக் கொள்ளவும். அக்கோட்பாடு **வினா எண் 27-ன்** *விடையில் 2-வது எண்ணிடப்பட்ட பெருந்தலைப்பின் கீழ் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.)*

காரணத்துடன் கூடிய தீர்ப்பு (அல்லது) காரணம் விளம்பும் ஆணை [Reasoned Decision (or) Speking Order]

30. "The proposition is now firmly established that reasons should be given by an adjudicatory authority, and the failure to do so would invalidate the order". Discuss. ("நிருவாக அதிகாரி ஒருவர் தாம் பிறப்பிக்கும் ஆணைக்குக் காரணங்கள் காட்ட வேண்டும். அவ்வாறு காரணங்கள் காட்டத் தவறினால் அவரது ஆணை செல்லு படியாகாது என்னும் கருத்துரை வாசகம் இன்றைய தினம் நன்கு நிலைபெற்றுவிட்ட ஒன்றாகும்". விவாதிக்க.)

(அல்லது)

"It is now firmly established that adjudicatory authority should give reasons for its decisions". Discuss. ("நிருவாக அதிகாரி தாம் பிறப்பிக்கும் ஆணைகளுக்கு காரணங்கள் காட்ட வேண்டும் என்பது இன்றைய தினம் நிலை பெற்றுவிட்ட ஒன்றாகும்". விவாதிக்கவும்)

(அல்லது)

Is it necessary to give reasoned decisions in all cases of administrative decisions? Refer to cases. (எல்லா நிருவாகமுறை தீர்ப்புகளிலும் காரண ஆய்வுகளோடு தீர்ப்பளித்தல் அவசியமா? வழக்குகளை மேற்கோள் காட்டவும்.)

(அல்லது)

Speaking Order - Write short notes. (காரணம் விளம்பும் ஆணை - சிறு குறிப்பு எழுதுக)

(அல்லது)

Reasoned Decision - Write short notes. (காரணத்துடன் கூடிய தீர்ப்பு - சிறு குறிப்பு எழுதுக)

பொருள்:

தீர்ப்பைக் கூறுபவர் தனது தீர்ப்பிற்கு எவையெல்லாம் காரணங்களாக இருந்தன என்று அக்காரணங்களை தனது தீர்ப்பில் குறிப்பிட்டால், அத்தீர்ப்பு **'காரணத்துடன் கூடிய தீர்ப்பு'** அல்லது **'காரணம் விளம்பும் ஆணை'** எனப்படுகிறது.

நிருவாகமுறை அதிகார அமைப்புகளுக்கு இது பொருந்துமா? (அல்லது) காரணங்களுடன் கூடிய தீர்ப்பைக் கூற வேண்டியது அவசியமா?

இந்தியாவில் முதலில் அமைக்கப்பட்ட சட்ட ஆணையம் (First Law Commission in India), நீதித்தீர்ப்பு கூறும் நிருவாகத்துறை அதிகார அமைப்புகள், காரணத்துடன் கூடிய தீர்ப்புகளைப் பகர வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. ஆனால், இந்தியாவில் எந்தச் சட்டமும், மேற்படி நிருவாகத்துறை அதிகார அமைப்புகளோ அல்லது நீதித்தன்மை வாய்ந்த பணிகளைச் செய்யும் நிருவாகமுறை குழுமங்களோ (administrative adjudicatory authorities or quasi-judicial bodies) தங்களது தீர்ப்பிற்குண்டான காரணங்களை தங்களது தீர்ப்பில் குறிப்பிட வேண்டும் என்று கூறவில்லை. எனினும் நீதித்துறையானது, நீதித் தீர்ப்பு கூறும் நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் ஒரு வழக்கில் இரு தரப்பினரையும் கேட்டு, நேர்மையான முறையில் விசாரணை நடத்தியுள்ளது என்பதற்கு ஆதாரமே, அது வழங்கும் தீர்ப்பில், அதற்கான காரணங்களை குறிப்பிடுதலேயாகும்; எனவே அவை காரணங்களுடன் கூடிய தீர்ப்பையே பகருதல் வேண்டும் என்ற கடப்பாட்டை அந்த அமைப்புகளின் மீது விதிக்கின்றது. மேலும் முழுக்க முழுக்க நிருவாகமுறைப் பணிகளைச் சார்ந்த விஷயங்களில் கூறப்படும் முடிவுகளும் (pure administrative decisions), காரணங்களுடன் இருக்க வேண்டும் என்பதையே நீதித்துறை விரும்புகின்றது. ஆனால் அதே சமயத்தில் உச்ச நீதிமன்றமானது, எல்லா நிருவாகத்துறை மற்றும் நீதித்தன்மை வாய்ந்த அதிகார அமைப்புகளும் (administrative and quasi-judicial authorities or bodies) தங்களது தீர்ப்பிற்குண்டான காரணங்களைப் பகர வேண்டும்

என்ற கடப்பாட்டை விதித்து எந்த பொது விதியையையும் குறிப்பிட வில்லை. எனினும் இது ஒரு எழுதப்படாத விதியாகவே உள்ளது.

காரணங்களுடன் கூடிய தீர்ப்பின் முக்கியத்துவம்:

ஒரு தீர்ப்பு, அதற்கான காரணங்களுடன் கூடியதாக இருப்பின், அது சம்பந்தப்பட்ட தகராறு எவ்வாறு நீதித்தீர்ப்பு கூறும் குழுமங்களால் அணுகப்பட்டுள்ளது என்பது குறித்த ஒரு தெளிவான நிலையை எடுத்துரைக்கிறது; எதன் பொருட்டு தமக்கெதிராக நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்பது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. அதில் கூறப்பட்டுள்ள காரணங்கள் நியாயமானதாக இல்லையென்றால், அத்தீர்ப்பை (அக்காரணங்களை) எதிர்த்து, அவர் மேல்முறையீட்டு மன்றத்திற்கு மேல்முறையீடு செய்ய வழி கிடைக்கிறது. இதனால், சம்பந்தப்பட்ட மேற்படி அதிகார அமைப்புகளும், தங்கள் முன் வரும் தகராறுகளில் அல்லது வழக்குகளில், தங்களது சிந்தனையை அவ்வழக்குகளின் பொருண்மை மற்றும் சட்டப் பிரச்சனைகளில் அதிக கவனத்துடனும், செம்மையாகயும் செலுத்தி, **தீர்ப்பு அல்லது முடிவு அல்லது ஆணை** பிறப்பிக்க முன் வருகின்றன. இதனால் அந்த அமைப்புகள் ஏதேச்சதிகாரத்துடன் செயல்படுவது தடுக்கப்படுகிறது அல்லது ஓரளவேனும் குறைகிறது எனலாம். எனவே நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் அல்லது நீதித்தன்மை வாய்ந்த குழுமங்கள், காரணங்களுடன் கூடிய தீர்ப்பையே பகர வேண்டும் என்று நீதி மன்றங்கள் வலியுறுத்துகின்றன.

காரணங்களுடன் கூடிய தீர்ப்பு குறித்த சட்ட நிலைப்பாடு :

(1) ஒரு குறிப்பிட்ட சட்டத்தில் காரணங்களுடன் கூடிய தீர்ப்பையே நிருவாகத்துறை அதிகாரஅமைப்புகள் பகர வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தால், அவை அவ்வாறே காரணங்களைக் குறிப்பிட வேண்டும். அதிலிருந்து எந்த விலக்கையும் பெற இயலாது.

(2) ஒரு குறிப்பிட்ட சட்டத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப் படவில்லையானால், அங்கு இயற்கை நீதிக் கோட்பாடுகள் எழுகிறது. அவற்றின்படி நிருவாகமுறை அதிகார அமைப்புகள் தங்களது தீர்ப்பிற்கு காரணங்களைக் குறிப்பிடுதல் வேண்டும்.

(3) காரணங்களைக் குறிப்பிடுவதற்கென்று எந்த ஒரு தனிப் பட்ட முறையோ அல்லது படிவமோ கிடையாது (no format or style prescribed for reasons). எனினும் அக்காரணங்கள் விரிவானதாக இருக்கக் கூடாது. தொடர்புடைய காரணங்களை மட்டும் குறிப்பிட் டால் போதும்.

(4) ஒரு ஆணை அல்லது தீர்ப்பு, மேல்முறையீடு அல்லது சீராய்வுக்கு உட்பட்டதாக இருப்பின், அங்கு காரணங்களை குறிப்பிட வேண்டியது மிகவும் அவசியமாகும். இல்லாது போனால் மேற்கண்ட

மேல்முறையீட்டு தீர்வழிகளை சிறப்பான முறையில் அடைய இயலாது.

(5) மேல்முறையீட்டு மன்றமானது, தனக்கு கீழ் அமைந்துள்ள அதிகார அமைப்பு வழங்கியவுள்ள தீர்ப்பை அப்படியே ஊர்ஜிதம் செய்து தீர்ப்பளித்தால், அதற்கான காரணங்களைக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.

(6) ஆனால் கீழமை அதிகார அமைப்பு வழங்கிய தீர்ப்பிற்கு மாறுபட்ட வகையில் மேல்முறையீட்டு மன்றமானது தீர்ப்பு வழங்குமானால், அத்தீர்ப்பிற்குண்டான காரணங்களை கட்டாயம் கூற வேண்டும்.

(7) தீர்ப்பில் கொடுக்கப்பட்டுள்ள காரணங்கள் முற்றிலும் தொடர்பற்றதாகவோ அல்லது வீணானதாகவோ இருப்பின், அத்தீர்ப்பு இரத்து செய்யப்படக் கூடும்.

(8) காரணங்களை பதிவு செய்தல் வேண்டும் என்பது எல்லா நிருவாகமுறை நீதித்தீர்ப்புகளுக்கும் கட்டாயமானதல்ல.

முக்கிய வழக்குகள்:

Mayor Simon v. Advocate General, Kerala[40] - இதில் மனுதாரர் ஒரு பொதுநல டிரஸ்டிற்கு (public trust) எதிராக வழக்கு தொடுக்கும் பொருட்டு அனுமதி வேண்டி, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் 92-வது பிரிவின் கீழ் தலைமை வழக்குரைஞரிடம் (Advocate General) விண்ணப்பித்தார். அத்தலைமை வழக்குரைஞரோ அதற்கான அனுமதி வழங்கவில்லை. மேலும் அதற்குண்டான காரணங்களையும் தனது முடிவில் குறிப்பிடவில்லை. காரணங்கள் குறிப்பிடப்படாத மேற்கண்ட முடிவை எதிர்த்து, மனுதாரர் கேரளா உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அனுமதி வழங்க மறுத்து தலைமை வழக்குரைஞர் கூறிய முடிவில், அவர் அதற்கான காரணங்களைப் பதிவு செய்திருக்க வேண்டும் என்றும், அப்பொழுது தான், எக்காரணங்களின் அடிப்படையில் தனது விண்ணப்பம் மறுக்கப்பட்டுள்ளது என்பதை ஒரு குடிமகன் அறிந்து கொண்டு, அதற்கெதிராக மேல்முறையீடு செய்ய இயலும் என்றும், இதனால் காரணங்களைக் குறிப்பிடாத அவரது மேற்படி முடிவு, இல்லாநிலையது என்றும் கேரளா உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Tara Chand v. Delhi Municipality[41] - ஒழுங்குமுறைக் குழுவால் (Diciplinary Committee) ஒரு பணியாளருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் பொழுது, அது தொடர்பாக விசாரணை செய்த விசாரணை அதிகாரியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகள்

40. A.I.R. 1975 Ker. 57.
41. A.I.R. 1977 S.C. 567.

மற்றும் முடிவுகளுக்கு முரணாக, அக்குழு ஏதேனும் முடிவு செய்யுமானால், அதற்கான காரணங்களை தனது முடிவில் கூற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. ஒருவேளை அந்த அதிகாரியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள முடிவுகளை, அக்குழு அப்படியே ஏற்றுக் கொண்டு முடிவு கூறுமானால், அதற்கான காரணங்களைக் தனியாகக் கூற வேண்டுமென்பதில்லை. அந்த அறிக்கையில் கண்டுள்ள காரணங்களே, அக்குழுவின் முடிவிற்கான காரணங்களாக பாவிக்கப்படும்.

அமெரிக்க நிலை:

அமெரிக்காவில் 1946-ஆம் ஆண்டின் நிருவாக நடைமுறைச் சட்டத்தின் (The Administrative Procedure Act, 1946) பிரிவு 8 (b)-ன்படி, எல்லா நிருவாகமுறை முடிவுகளும், தீர்ப்புகளும், அதற்குண்டான காரணங்கள், அடிப்படைகள் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுகிறது.

இங்கிலாந்து நிலை:

இங்கிலாந்தில் 1971-ஆம் ஆண்டின் தீர்ப்பாயங்கள் மற்றும் விசாரணைகள் சட்டப்படி (The Tribunals and Enquiries Act, 1971), தரப்பினர்கள் கேட்டுக் கொண்டால், நீதித்தீர்ப்பு கூறும் நிருவாக முறை அமைப்புகள் தங்களது தீர்ப்பிற்குண்டான காரணங்களைக் கூறிட வேண்டும். இக்காரணங்களை வெளியிட்டால், அதனால் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் விளையும் என்று அந்த அமைப்புகள் கருதினால், அவற்றை வெளியிடாமல் நிறுத்தி வைக்கலாம்.

முடிவுரை:

"நீதி செய்யப்பட்டால் மட்டும் போதாது. அது செய்யப் படுவதாக வெளிப்படையாகவும், அய்யத்திற்கிடமின்றியும் தோற்ற மளிக்க வேண்டும்" எனும் கோட்பாட்டை நமது நாட்டின் நிருவாக முறைச் சட்டம் பின்பற்றுகிறது. இது எப்பொழுது சாத்தியமாகும் என்றால், நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் தங்களது தீர்ப்புகளை காரணங்களுடன் பகரும் பொழுதுதான். காரணம் குறிப்பிடாத தீர்ப்புகள் அல்லது முடிவுகள் நீதிமுறையானதாக தோற்றமளிக்கலாம். ஆனால் பாதிக்கப்பட்டவரின் கண்களுக்கு நீதி செய்யப்பட்டதாக தோன்றாது. தனக்கு ஏதோ அநீதி விளைவிக்கப்பட்டுள்ளதாகத்தான் அவர் அறிவார். எனவே எல்லா நிருவாகத்துறை அதிகார அமைப்பின் முடிவுகளும், தீர்ப்புகளும் அதற்குண்டான காரணங்களுடன் கூடியதாக இருக்க வேண்டும் என்பதையும், காரணங்கள் கூறாத தீர்ப்புகள் செல்லாதவை என்றும் நமது நாட்டின் நீதிமன்றங்கள், பல வழக்குகளில் தங்களது தீர்ப்புகளின் வாயிலாக வலியுறுத்தியுள்ளன; வலியுறுத்தியும் வருகின்றன. எனவே, இது இன்று ஓரளவு நிலைபெற்று விட்ட விதியாகவும் மாறிவிட்டது என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை.

அமைப்புவழித் தீர்ப்புகள் (அல்லது) விசாரணை செய்பவர்தாம் தீர்ப்பு வழங்க வேண்டும் [Institutional Decisions (or) One who hears must Decide]

31. Institutional Decisions - Write short notes. (அமைப்புவழித் தீர்ப்புகள் - சிறு குறிப்பு எழுதுக)

(அல்லது)

'One who decide must hear'. Examine this doctrine in the light of decided cases. ('தீர்ப்பு வழங்குபவர்தான் விசாரணை செய்ய வேண்டும்' என்கிற கோட்பாட்டை முடிவுற்ற வழக்குகளின் மூலம் ஆராய்க.)

அமைப்புவழித் தீர்ப்புகள் (Institutional Decisions) - விளக்கம்:

நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் தீர்ப்பானது, ஒருவரால் எடுக்கப்படும் முடிவன்று. ஒவ்வொரு நிருவாகத்துறை அதிகார அமைப்பிலும் பல அலுவலர்கள் இருப்பார்கள். அவர்களில் பலர், பிரச்சனைக்குரிய விஷயத்துடன் சம்பந்தப்பட்டிருப்பார்கள். கீழிலிருந்து மேலாகச் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களும் அவர்களுடைய குறிப்பை, மேல்நிலை நிருவாக அதிகாரிகளுக்கு அனுப்புவார்கள். அந்த மேலதிகாரி இறுதியாக அவருடைய முடிவைச் சொல்வார். அதாவது இறுதி நிலையாக அந்த மேலதிகாரியால் செய்யப்பட்ட முடிவு, அவருக்குக் கீழேயுள்ள அலுவலர்கள் கொடுத்த குறிப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கும். அவர் இறுதியாகச் செய்த முடிவு நிருவாகத்துறை அதிகார அமைப்பின், தீர்ப்பாகும் (முடிவாகும்) (Decision of Administrative Authority or Agency). இவ்வாறு நிருவாகத்துறை அதிகார அமைப்பில் அங்கம் வகிக்கும் பலரும் அதாவது எழுத்தர் முதல் இறுதி மேலதிகாரி வரை அந்த நிருவாகத்துறை அதிகார அமைப்பின் தீர்ப்பில் ஏதேனும் ஒரு வகையில் சம்பந்தப்பட்டிருப்பதால், அத்தீர்ப்பிற்கு 'அமைப்புவழித் தீர்ப்பு' (Institutional Decision) என்று பெயர்.

அமைப்புவழித் தீர்ப்பு, நீதிமன்றத் தீர்ப்பிலிருந்து வேறுபடும் விதம்:

அமைப்புவழித் தீர்ப்பு, நீதிமன்றத் தீர்ப்பிலிருந்து வேறுபட்டதாகும். நீதிமன்றத்தில் நீதிபதி வழக்கினை விசாரணை செய்கின்றார்; இருதரப்பினருடைய வாதங்களையும் கேட்கின்றார். இறுதியாகத் தீர்ப்பு கூறுகின்றார். எனவே நீதிமன்றத் தீர்ப்பில் வழக்கினை விசாரிப்பதும், இருதரப்பினர்களுடைய வாதங்களைக் கேட்பதும், முடிவான தீர்ப்பைக் கூறுவதும் ஒருவரே. நீதிபதியின தீர்ப்பு அவருக்குக் கீழ் உள்ள அலுவலர்களின் எண்ணத்தின் அலலது குறிப்பின் அடிப்படையில் அமைந்தன்று.

அமைப்புவழித் தீர்ப்பிற்கு எடுத்துக்காட்டு:

எடுத்துக்காட்டாக, ஒரு திரையரங்கம் கட்ட வேண்டுமானால், சம்பந்தப்பட்ட நகராட்சி அல்லது மாநகராட்சியிடமிருந்து உரிமம் பெற வேண்டும். எனவே அந்த உரிமம் வேண்டி, நகராட்சியிடம் மனு செய்ய வேண்டும். நகராட்சி தனது அலுவலர்களை அனுப்பி, திரையரங்கம் கட்ட போதுமான இடம் இருக்கின்றதா என்றும், திரையரங்கம் கட்டுவ தால் அங்கு குடியிருக்கும் பொது மக்களுடைய நலனைப் பாதிக்குமா என்றும், பொதுச் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்குமா என்றும் கண்டறி யும். மேலும் நகராட்சி அலுவலர்கள் சுற்றுப்புறத்தில் உள்ள பொது மக்களின் ஆட்சேபணைகளையும் கேட்டு, அவர்களுடைய கருத்தை மேல் அதிகாரிகளின் முன் வைப்பார்கள். இத்துடன் திரையரங்கம் கட்டுவதனால், அந்த இடத்தில் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க முடியுமா என்பது பற்றிக் காவல்துறையினருடைய கருத்தையும் நகராட்சி கேட்டறியும். நகராட்சி மன்றம் அதனுடைய அலுவலர்கள், அதன் முன் வைத்த கருத்து மற்றும் குறிப்பின் அடிப்படையிலும், காவல்துறையின் கருத்தின் அடிப்படையிலும், அதனுடைய முடிவை (தீர்ப்பை), மனு செய்தவருக்கு அறிவிக்கும். இங்கு இறுதி முடிவு நகராட்சி மன்றத்தால் செய்யப்பட்டதென்றாலும், அந்த முடிவுக்கு நகராட்சி அலுவலர்களின் எண்ணமும், குறிப்பும், காவல்துறையின் கருத்தும் அடிப்படையாக அமைகின்றன. இதுவே அமைப்புவழித் தீர்ப்பாகும்.

'விசாரணை செய்பவர்தான் தீர்ப்பு வழங்க வேண்டும்' ('One who hears must decide) - விளக்கமும் விதிவிலக்கும்:

ஒரு வழக்கை யார் விசாரணை செய்கின்றாரோ, அவர்தான் அந்த வழக்கின் முடிவான தீர்ப்பையும் வழங்க வேண்டும், என்பது பொது விதி. அதாவது விசாரிப்பது ஒருவராகவும், தீர்ப்பு வழங்குபவர் மற்றொருவராகவும் இருத்தல் கூடாது. இது நீதிமன்றத் தீர்ப்புகளின் பொழுது பின்பற்றப்படக் கூடியதாகும். இந்த விதி, நிருவாகமுறை அதிகார அமைப்புகள் வழங்கும் தீர்ப்புகளுக்கு பொருந்துமா, என்று கேட்டால், பொருந்தாது என்றுதான் நாம் விளக்கமளிக்க முடியும். மேற்படி விதி, நிருவாகமுறை அதிகார அமைப்புகளின் தீர்ப்புகளுக்கு விதிவிலக்காகும். இதற்கு அடிப்படையாக நாம் இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் நமது இந்தியாவில் எழுந்த வழக்குகளை சற்று கண்ணோக்க வேண்டியுள்ளது.

இங்கிலாந்தில் எழுந்த மிக முக்கியமான வழக்கு:

Local Government v. Alridge[42] - இவ்வழக்கில் ஒரு வீட்டைக் வாடகைக்கு எடுத்தவர் பேரூர் நகராட்சியால், (Borough Council) அந்த வீட்டை பழுதுபார்க்கக் கோரப்பட்டார் அவரோ வீடு நல்ல நிலையில் இருப்பதாகவும், பழுது பார்க்கத் தேவையில்லை என்றும மொதிட்டார்.

42. 1958 A.C. 120.

அவர் உள்ளாட்சி வாரியத்திற்கு (Local Government Board) மேல் முறையீடு செய்தார். உள்ளாட்சி வாரியமானது, வீட்டு ஆய்வாளர் (Housing Inspector) ஒருவரை அனுப்பி, வீட்டைப் பார்க்கச் செய்து, ஓர் அறிக்கை அனுப்பக் கோரியது. ஆய்வாளரும் அவ்வாறே செய்தார். இதற்கிடையில் வீட்டை வாடகைக்கு எடுத்தவர், பொறியியல் வல்லுநர் சிலரிடம், அவ்வீடு நல்ல நிலைமையில் இருப்பதாகச் சான்றிதழ் வாங்கி தாக்கல் செய்தார். உள்ளாட்சி வாரியம் எல்லாவற்றையும் பார்த்த பிறகு, வீடு பழுது பார்க்கப்பட வேண்டும் என்று தீர்ப்புக் கூறியது. அந்தத் தீர்ப்பு செல்லாதென அவர், நீதிப்பெருமகனார்கள் அவைக்கு மேல் முறையீடு செய்தார். வேறு காரணங்களுக்கிடையே, ஆய்வாளரின் அறிக்கையின் அடிப்படையில், உள்ளாட்சி வாரியம் தீர்ப்பளித்தது சரியல்ல என்றும், வழக்கை ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட உள்ளாட்சி வாரியம் விசாரணை ஏதும் செய்யவில்லை என்றும், எனவே அதன் தீர்ப்பு நேர்முகத் தீர்ப்பாகாது (Personal Decision) என்றும் அவர் வாதம் புரிந்தார்.

ஆனால் நீதிப் பெருமகனார்கள் அவையானது, நிருவாகத்துறை அதிகார அமைப்புகள், **நேர்முகத் தீர்ப்பு (Personal Decision)** வழங்க வேண்டும் என்று கோருவதற்கு யாருக்கும் உரிமை இல்லையென்றும், **வழக்கை விசாரிப்பது ஒருவரும், தீர்ப்பு கூறுவது வேறொருவருமாக இருக்கலாம்** என்றும் தீர்ப்பளித்தது.

அமெரிக்காவில் எழுந்த மிக முக்கியமான வழக்குகள்:

அமெரிக்காவில் எழுந்த **மார்கன் வழக்குகளில் (Margan Cases)**, அமெரிக்க உச்ச நீதிமன்றம் (Supreme Court of United States), வழக்கை விசாரிப்பது ஒருவராகவும், தீர்ப்பளிப்பது மற்றொருவராகவும் இருக்கலாம் என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. அவ்வழக்குகளும், அதில் நிலைநிறுத்தப்பட்ட கருத்துரைகளும் வருமாறு.

Margan v. United States[43] - இவ்வழக்கின் பொருண்மைகளின் படி, அரசின் விவசாயச் செயலாளர் (Secretary of Agriculture), வீட்டு விலங்குகள் விற்பனைக்கு உயர்வெல்லை வீதங்களை (maximum rates) நிர்ணயம் செய்தார். அவருடைய துறை அதிகாரிகளைக் கலந்து அவர்களுடைய கருத்துக்களைப் பெற்ற பிறகே அவர் அவ்வாறு உயர்வெல்லை வீதங்களை நிர்ணயம் செய்தார். அதாவது, விவசாயத் துறை ஆய்வாளர் (Inspector of Agriculture) விசாரணை நடத்தினார். அந்த விசாரணையில், விவசாயத் துறையைச் சார்ந்தவர்களும், வழக்கில் சம்பந்தப்பட்டவர்களும் சாட்சியம் கூறினார்கள். அதற்குப் பிறகு, உதவிச் செயலாளரிடம் (Assistant Secretary) அவர்களுடைய வாதங்களை எடுத்துரைத்தார்கள். இறுதியாக, செயலாளர் முடிவான ஆணை (Final Order) பிறப்பித்தார்.

43. (1936) 298 U.S. 468.

இந்த ஆணையை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டது. அப்பொழுது உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கூறியது. அதன்படி, (1) மேற்படி நடவடிக்கைகள் முழுக்க முழுக்க நிருவாகத்துறைப் பணியை சார்ந்ததல்ல. (2) முழு விசாரணை என்பது, நீதிமன்ற விசாரணை போன்று, சாட்சியங்களைக் கொண்டு, பொருண்மையைக் கண்டு, அதற் கேற்றவாறே தீர்மானித்தல் வேண்டும். (3) யார் விசாரணை நடத்து கின்றாரோ, அவரே தீர்மானிக்க வேண்டும். (4) விசாரணை என்பது சாட்சியத்தையும், வாதங்களையும் கேட்பதாகும்; எனவே இவற்றைக் கேளாதவர் தீர்ப்பு வழங்கினால், அத்தீர்ப்பு சாட்சியம் மற்றும் வாதத்தின் அடிப்படையில் கொடுக்கப்படவில்லை என்று பொருள்படும். மேற் கண்ட காரணங்களின் அடிப்படையில் செயலாளரின் நடவடிக்கைகள் நசித்துப் (quashed) போகத்தக்கதென உச்ச நீதிமன்றம் அறிவித்து, வழக்கை மறு விசாரணை செய்யும்படி, அதை அந்த நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கே திருப்பி அனுப்பியது.

மறு விசாரணையில் சம்பந்தப்பட்டவர்கள் அவர்களுடைய வாய்மொழி வாதங்களையும் (oral arguments), பத்திரங்களையும் விவசாயத்துறை ஆய்வாளர்கள் முன்னிலையில் சமர்ப்பித்தனர். இறுதியாக இம்முறையும், செயலாளரே முடிவான ஆணை (Final Order) பிறப் பித்தார். இந்த ஆணையைப் பிறப்பிக்கையில், அவர் **பதிவுக் கட்டுகளை ஆழ்ந்து படித்துப் பார்த்த பின்னரே (Dipping into the records)** அந்த ஆணையை பிறப்பித்ததாக கூறியிருந்தார்.

இம்முறை உச்ச நீதிமன்றம் அந்த முடிவான ஆணை முழு விசாரணைக்குப் பின்னரே பிறப்பிக்கப்பட்டதாகக் கொள்ள வேண்டு மெனக் கருத்துத் தெரிவித்தது. மேலும், முடிவு செய்பவரே (தீர்ப்பு கூறுபவரே) விசாரணை செய்தல் வேண்டும் எனும் விதியானது, முடிவு செய்பவரே நேர்முக விசாரணை (Personal Hearing) நடத்த வேண்டு மென்பதில்லை என்றும், முடிவு செய்பவர் எல்லாப் பதிவுக் கட்டு களையும் (records), வாதங்களையும் (arguments) நன்கு சீர்தூக்கி அளவிட்டுப் பார்த்த பிறகே முடிவு செய்வாரானால், அது முழு விசாரணைக்குச் சமமாகும் என்றும் தீர்ப்புரைத்தது. மேற்கண்ட தீர்ப்பிலிருந்து நமக்கு **இரண்டு விதிகள்** கிடைக்கின்றன. அவை,

(1) முதல் மார்கன் வழக்கில், அமெரிக்க உச்ச நீதிமன்றம், முடிவு செய்பவரே விசாரிக்க வேண்டுமென்றும் **(One who decides must hear)**, அப்பொழுதுதான் அது முழு விசாரணையாகும் என்றும் கூறிற்று. இது **முதல் மார்கன் விதி (First Margan Rule)** எனப்படுகிறது.

(2) இரண்டாம் மார்கன் வழக்கில், அமெரிக்க உச்ச நீதிமன்றம், முடிவு செய்பவர் எல்லாப் பதிவுக் கட்டுகளையும், வாதங்களையும் நன்கு சீர்தூக்கி அளவிட்டுப் பார்த்த பிறகே முடிவு செய்வாரானால், அது முழு விசாரணைக்குச் சமமாகும் என்று கூறிற்று. இது **இரண்டாவது மார்கன் விதி (First Margan Rule)** எனப்படுகிறது.

இந்த இரண்டு விதிகளும் "விசாரணை செய்பவரே தீர்ப்பும் வழங்க வேண்டும்" என்ற பொது விதியின் இடம், நிருவாகமுறைத் தீர்ப்புகளில் எங்குள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று கூறலாம்.

இந்தியாவில் எழுந்த மிக முக்கியமான வழக்குகள்:

Gullapalli Nageswara Rao v. A.P. State Road Transport Corporation[44] - இந்தியாவில் எழுந்த இவ்வழக்கில் மேற்கண்ட முதல் மார்கன் விதி, இந்திய உச்ச நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டது. ஆந்திர மாநிலத்தில் குறிப்பிட்ட பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமையாக்கப் பட்ட பொழுது, அது பற்றிய ஆட்சேபணைகளை போக்குவரத்துத் துறைச் செயலாளர் விசாரித்தார். ஆனால் அதன் மீதான முடிவான ஆணையை (அதாவது தீர்ப்பை) முதலமைச்சர் கூறினார். முதலமைச்சர் நேர்முக விசாரணை (Personal Hearing) எதையும நடத்தவில்லை. உச்ச நீதிமன்றத்தின் பெரும்பான்மை நீதிபதிகள், விசாரணை செய்யாத ஒருவர், முடிவெடுப்பது என்பது, நீதிமுறை விசாரணைக்குப் (judicial hearing) புறம்பானதென்றும், அது நீதிமுறை விசாரணை என்ற கருத்துருவையே சிதைப்பதாகும் என்றும் கூறினார்கள். இது முதலாம் மார்கன் விதியை ஒட்டியதாகும்.

P.K.Bose v. Chief Justice of Bengal[45] - எனும் வழக்கில் இரண்டாம் மார்கன் விதி, உச்ச நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப் பட்டது. இவ்வழக்கின்படி, மேற்கு வங்காள உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் (Registrar of High Court of W.B.), தவறான நடத்தைக்காக குற்றஞ் சாட்டப்பட்டு விளக்கம் கோரப்பட்டார். உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, அந்த நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியை நியமித்து, விசாரணை நடத்தி அறிக்கை ஒன்று கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். அந் நீதிபதியும் விசாரணை நடத்தி அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார். அதில் மேற்படி பதிவாளர், குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ள சில குற்றங்களைப் புரிந்துள்ளார் என்றும், அதற்கான சாட்சியங்கள் உள்ளன என்றும் அவர் தெரிவித்திருந்தார். தலைமை நீதிபதி, அந்த அறிக்கையில் கண்டுள்ளவை களை ஏற்றுக் கொண்டு, பதிவாளரை பணியிலிருந்து நீக்கினார். இந்த தீர்ப்பை எதிர்த்து அப்பதிவாளர் உச்ச நீதிமன்றத்திடம் மேல்முறையீடு செய்தார். அங்கு தலைமை நீதிபதி தமக்குரிய அதிகாரத்தை வேறொரு நீதிபதியிடம் அளித்தல் கூடாதென்றும், வழக்கில் தீர்ப்பு கூறிய அவரே, அவ்வழக்கையும் விசாரித்திருக்க வேண்டும் என்றும் அப்பதிவாளர் வாதிட்டார். ஆனால் இவ்வாதத்தை உச்ச நீதிமன்றம் நிராகரித்து, பின்வருமாறு தீர்ப்பு கூறியது. அதன்படி, பணி நீக்கம் செய்வது நிருவாக முறை அதிகாரம் என்றும், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தும்

44. A.I.R. 1959 S.C. 308.

45. A.I.R. 1956 S.C. 285.

பொறுப்பைத் தலைமை நீதிபதி தட்டிக்கழிக்காதவரை, அது அவராலேயே செய்யப்பட்டதாகக் கருதப்படும் என்றும், மற்றொரு நீதிபதியை நியமித்து விசாரணை நடத்தச் செய்து, அறிக்கை பெறுவது வழக்கத்திற்கு மாறானதல்ல என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. இங்கு உச்ச நீதிமன்றம் இரண்டாம் மார்கன் விதியை பின்பற்றியுள்ளதை அறியலாம்.

முடிவுரை:

உச்ச நீதிமன்றத்தின் கருத்தினை மேற்கண்ட இரு வழக்குகளிலும் பார்க்கையில் அது, யார் வழக்கை விசாரிக்கின்றரோ, அவரேதான் தீர்ப்பு வழங்க வேண்டும், வேறு யாரும் தீர்ப்புச் சொல்லக் கூடாது என்ற பொருளில் கூறாதது புலனாகும். அதாவது, தீர்ப்புச் கூறும் நிருவாகத் துறை அதிகார அமைப்பானது, மொத்தப் பதிவுக் கட்டுகளையும் பார்த்து, அதன் முன் உள்ள சாட்சியங்களின் அடிப்படையில் தீர்ப்புக் கூற வேண்டும். சாட்சியங்கள் நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் முன் இல்லாமல் இருக்கும் பொழுதோ, அல்லது அவைகளைக் கவனிக்காமலோ, தீர்ப்பு சொல்லக் கூடாதென்ற பொருளில்தான் வழக்கை விசாரிப்பவரே தீர்ப்புக் கூற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறுகிறது. மேலும் ஒருவர் விசாரணை நடத்தலாம் மற்றொருவர் இறுதித் தீர்ப்பு (முடிவு) வழங்கலாம். ஆனால் விசாரணையின் பதிவுக் கட்டுகள், நிருவாகத்துறை அதிகார அமைப்பால் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்கள் மற்றும் அதனிடம் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள் ஆகியவை தீர்ப்பு வழங்கும் மேலதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அவர் அவற்றை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்து இறுதித் தீர்ப்பு (முடிவு) வழங்குதல் வேண்டும். இவ்வாறு வழங்கப்பட்ட தீர்ப்பு அல்லது எடுக்கப்பட்ட முடிவு, யார் வழக்கை விசாரிக்கின்றாரோ, அவரே தீர்ப்பு வழங்க வேண்டும் என்ற குறிக்கோளுக்கு மாறுபட்டதன்று எனெனில், அமைப்பு வழித் தீர்ப்பு என்பது, ஒருவரையொருவர் கலந்து ஆய்வு செய்து, இறுதியாக மேலதிகாரியால் எடுக்கப்படும் முடிவாகும் (அல்லது கொடுக்கப்படும் தீர்ப்பாகும்).

7 நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் [Administrative Tribunals]

நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள்

[நோக்கம், வரையறை, குணாதிசயங்கள், வளர்ச்சிக்கான காரணங்கள், இந்தியாவில் நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் செயல்படும் விதம்]

Administrative Tribunals

[Purpose, Definition, Characteristics, Reasons for its growth and the Functioning of Administrative Tribunals in India]

32. For what purpose, the administrative tribunals have been created? Distinquish between a Tribunal and a Court. How for the Administrative Tribunal functions in India. (நிருவாகமுறை தீர்ப்பாயங்கள் எதற்காக ஏற்படுத்தப்படுகின்றன? தீர்ப்பாயத்திற்கும் நீதிமன்றத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? இந்தியாவில் தீர்ப்பாயங்கள் எவ்வாறு செயல்படுகின்றன?)

(அல்லது)

In your opinion, is there a case for introducing more administrative tribunals in India? (உங்களது கருத்துரையில், இந்தியாவில் மேலும் அதிகமான நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களை அறிமுகப் படுத்த வேண்டிய நிகழ்வு உள்ளதா?)

(அல்லது)

"The greatest draw back of the present day Indian Administrative Law is that there are not a many tribunal type bodies". Discuss. ("இந்திய நிருவாகமுறைச் சட்டத்தின் மிகப்பெரிய குறைபாடு யாதெனில், அதிக எண்ணிக்கையிலான தீர்ப்பாயங்கள் போன்ற அமைப்புகள் இல்லாமையேயாகும்". விவாதிக்க.)

(அல்லது)

Statutory Tribunal - Write short notes. (சட்டரீதியாக அமைக்கப் படும் தீர்ப்பாயம் - சிறு குறிப்பு எழுதுக)

நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களை அமைக்க வேண்டிய அவசியம் (அல்லது) நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்படுவதற்கான நோக்கங்கள்:

நாம் ஏற்கனவே ஆரம்ப அத்தியாயங்களில் கண்டவாறு சமூக

நலச் சட்டங்களை நிறைவேற்றுகையில் பல சிக்கல்கள் தோன்றுகின்றன. தகராறுகள் தலையெடுக்கின்றன. அவை எல்லாவற்றையும் நீதிமன்றங்கள் முன் எடுத்துச் செல்ல முடியாது. அது விரும்பத்தக்கதுமன்று. மேலும் நீதிமன்றங்களின் தீர்ப்பு, நிருவாகத்துறைக் கொள்கையின் அடிப்படையில் சமூக நலச் சட்டங்களை நிறைவேற்ற ஊக்கம் தரும் வகையில் அமையாது; கால தாமதம் பிடிக்கும். சமூக நலம் பாதிக்கப்படலாம் அதிகச் செலவாகும். அதே சமயத்தில், அனைத்து சிக்கல்களையும், தகராறுகளையும் தீர்க்கும் பொறுப்பை நிருவாகத்துறை முகவர் நிலைகளிடம் ஒப்படைக்கவும் முடியாது. அதனிடம் ஏற்கனவே சட்டங்களை நிறைவேற்றும் பணி ஒப்படைக்கப்பட்டிருப்பதால், அவைகளுடைய நடவடிக்கைகள் பற்றி எழும் வழக்குகளில், அவைகள் நடுநிலை தவறாது தீர்ப்பு வழங்கும் என்றும் கூறுதற்கில்லை. அப்படியே நடுநிலை தவறாது தீர்ப்பு வழங்கினாலும், அத்தீர்ப்பு அய்யப்பாட்டுடன் தான் பார்க்கப்படும். சுருங்கக் கூறின், நீதித்துறையிடமும் (Judiciary), நிருவாகத் துறையிடமும் (Executive) இந்தப் பணியை ஒப்படைக்க முடியாது. இப்படிப்பட்ட இக்கட்டான சூழலில் நீதித்துறைக்கும், நிருவாகத்துறைக்கும் இடையே, சட்டத்தால் தோற்றுவிக்கப்பட்டதே **நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் (Administrative Tribunals)** ஆகும். இவ்வாறு நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் சட்டத்தால் தோற்றுவிக்கப் படுதால், இவை **சட்டப்படியான தீர்ப்பாயங்கள் (Statutory Tribunals)** என்றும் குறிப்பிடப்படுகின்றன. இவை, தங்கள் முன் வைக்கப் பெறும் வழக்குகளில் நீதித் தீர்ப்புக் (adjudication) கூறுகின்றது. ஆனால் இது நீதித்துறையின் பிரிவன்று.

நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் - வரையறை (Definition):

பொதுவாக "தீர்ப்பாயம்" எனும் பதத்திற்கு மிகவும் சரியான வரையறை கொடுப்பது என்பது இயலாத செயல். **வெப்ஸ்டர் அகராதிப் படி[1], 'ஒரு நீதிமன்றத்தில் ஒரு நீதிபதி அமரும் இருக்கை அல்லது நீதிபதிகள் அமரும் பலகையே', ('tribunal' means 'a seat or bench upon which a judge or judges sit in a court')** தீர்ப்பாயம் என்று பொருளாகும். ஆனால் இந்தப் பொருள், சாதாரண நீதிமன்றங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய விதத்தில் மிகவும் பரந்ததாக உள்ளது. ஆனால் நிருவாகமுறைச் சட்டத்தில், சாதாரண நீதிமன்றங்கள் தவிர உள்ள நீதித்தீர்ப்பு கூறும் அதிகார அமைப்புகளே, நிருவாகமுறை தீர்ப்பாயங்கள் என்று பொருள்படும்.

நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 136 மற்றும் 227-வது ஷரத்துகளில் 'தீர்ப்பாயம்' எனும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளதே தவிர, அவற்றிற்கான வரையறை ஏதும் அவற்றில் கொடுக்கப்படவில்லை. எனினும், **Durga Shankar Mehta v. Raghuraj Singh[2]** - எனும் வழக்கில்

1. Webster's New World Dictionary, 1972, p. 1517.
2. (1955) 1 SCR 267 : A.I.R. 1954 S.C. 520.

'தீர்ப்பாயம்' எனும் பதத்தை உச்ச நீதிமன்றம் வரையறை செய்துள்ளது. அதன்படி, "ஷரத்து 136-ல் பயன்படுத்தப்பட்டுள்ள 'தீர்ப்பாயம்' எனும் பதம் 'நீதிமன்றம்' போன்ற அதே பொருளைக் கொடுக்கவில்லை. ஆனால், அது அனைத்து நீதித்தீர்ப்பு கூறும் குழுமங்களையும் அதன் எல்லைக்குள் உள்ளடக்குகிறது. இருப்பினும், அவை அரசால் அமைக்கப் பட்டு, அவற்றிடம் நிருவாகத்துறை அல்லது நிறைவேற்றுத்துறை பணி களில் இருந்து வேறுபடுகின்ற நீதிமுறை பணிகள் செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்"[3]

Bharat Bank v. Employees[4] - எனும் வழக்கில், தீர்ப்பாயங்கள் ஒரு நீதிமன்றத்தின் பல உடைமைகளை தனதாக எடுத்து அணிந்து கொண்டிருந்தாலும், மேலும் அவை நீதித்தன்மை வாய்ந்த பணிகளைச் செய்தாலும், அவை முழுமையான நீதிமன்றங்கள் ஆகா, என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

எனவே, ஒரு தீர்ப்பாயம் என்பது இரண்டு தரப்பினர்களுக்கு இடையிலான தகராறுகளை, முரண்பாடுகளை தீர்த்து நீதித்தீர்ப்பு கூறும் ஒரு குழுமம் ஆகும். அது முழுமையான நிருவாகத்துறை பணிகளி லிருந்து வேறுபட்டு நிற்கும் நீதிமுறை அதிகாரங்களை செயல்படுத்து கின்றது. அவை ஒரு நீதிமன்றத்தின் சில கூறுகளை தனதாக கொண்டுள்ளதே தவிர, அனைத்தையும் அல்ல.

நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களின் குணாதிசயங்கள் (Characteristic features of Administrative Tribunals):

(1) சட்டமியற்றுத்துறையால் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின் கீழ் அரசால் அல்லது இயற்றப்பட்ட சட்டமொன்றால் நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் அமைக்கப் பெறுகின்றன.

(2) இவை நீதித்தன்மை வாய்ந்த பணிகளைச் (quasi-judicial functions) செய்கின்றன.

(3) இவற்றின் நடவடிக்கைகள், நீதிமுறை நடவடிக்கைகளாக கருதப்படுகின்றன.

(4) இவை உரிமையியல் நடைமுறைச் சட்டத்திற்கோ அல்லது சாட்சியச் சட்டத்திற்கோ கட்டுப்பட்டவையல்ல. ஏனெனில், இந்நடை முறைச் சட்டங்களை தீர்ப்பாயங்கள் பின்பற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டால், எதற்காக நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டனவோ அந்த நோக்கமான 'விரைவான மற்றும் அதிகச்

3. "The expression 'Tribunal' as used in Article 136 does not mean the same thing as 'Court' but inclues, within its ambit, all adjudicating bodies, provided they are constituted by the State ans are invested with judicial as distinquished from administrative or executive functions."

4. A.I.R. 1950 S.C. 188.

செலவு வைக்காத நீதி' என்பது கிட்டாது போய்விடும். எனவே இந்த தீர்ப்பாயங்கள், அவை அமைக்கப் பெற காரணமாக இருக்கும் சட்டங் களில் கூறப்பட்டுள்ள சிறப்பு நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன.

(5) இவைகள், ஒரு உரிமையியல் நீதிமன்றத்தைப் போல தங்கள் முன் நடக்கும் வழக்கு நடவடிக்கைகளில் சாட்சிகளை ஆஜராகச் சொல்லி கட்டாயப்படுத்தலாம்.

(6) இவைகள் எடுக்கும் வழக்கு நடவடிக்கைகளில் இயற்கை நீதிக்கோட்பாடுகளான 'வெளிப்படையான தன்மை, நியாயம் மற்றும் பாரபட்சமின்மை' (openness, fairness and impartiality) ஆகியவை பின்பற்றப்பட வேண்டும்.

(7) இவைகள் சுதந்திரமானவை. இவற்றின் பணிகள் எந்த நிருவாகக் குறுக்கீடுகளுக்கும் அப்பாற்பட்டது.

(8) இவைகள் முக்கியமாக மக்கள் நல அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களிலிருந்து எழும் தகராறுகளை தீர்க்கின்றன.

நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களின் வளர்ச்சிக்கான காரணங்கள் (Reasons for the growth of Administrative Tribunals):

(1) நாம் ஆரம்பத்தில் கண்டவாறு, மக்களின் நலத்தை பேண வேண்டியதின் அவசியத்தை, அரசு உணர்ந்தது. இதனால் அது மக்கள் நலனுக்குற்ற பல புதிய சட்டங்களை இயற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால் அச்சட்டங்களை நிறைவேற்றுகையில் பல புதிய சிக்கல்களும், தகராறுகளும், வழக்குகளும் எழுந்தன. அவற்றை தீர்த்து வைக்க நீதித்துறை போதுமானதாக இல்லை. எனவே அவற்றை தீர்த்து வைக்க பல நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் அரசாலும், சட்டத்தாலும் ஏற்படுத்தப்பட்டன.

(2) அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை, பல புதிய வழக்குகள் எழ வழிவகுத்தன. அவையெல்லாம் நீதிமன்றம் சந்திக்காத மற்றும் சிந்திக்காத ஒன்றாக இருந்தன. எனவே அவற்றைத் தீர்க்க நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் அதிக அளவில் அமைக்கப்பட்டன.

(3) சாதாரண நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்து, நீதி பெற கால தாமதமும், அதிகச் செலவும் ஆனது. இவற்றைக் களைந்து விரைவாகவும், அதிகச் செலவில்லாமலும், எளிமையான நடைமுறைகளின் கீழ் நீதி கிடைக்கச் செய்வதற்காக, நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் தோன்றின.

இந்தியாவில் நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் செயல்படும் விதம் (The functioning of Administrative Tribunals in India):

இந்தியாவில் தீர்ப்பாயங்கள் சட்டமியற்றுத்துறையினால் இயற்றப் பட்ட சட்டங்களின் மூலமாகத் தோற்றுவிக்கப்படுகின்றன. தீர்ப்பாயங் களின் நடைமுறைகளை ஒழுங்குபடுத்த சட்டங்கள் ஏதும் இந்தியாவில்

கிடையாது. இதனால் அவை பின்பற்றுவதற்கென்று **பொதுவான நடைமுறைகள் (General Procedures)** குறித்து ஏதும் வகை செய்யப் படவில்லை.

இந்தியாவில் உள்ள தீர்ப்பாயங்கள் பல வகைப்படும். ஒவ்வொரு தீர்ப்பாயமும் ஒவ்வொரு நோக்கத்தோடு தோற்றுவிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, தொழில் தகராறுகளை தீர்க்க தொழிலாளர் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. வருமான வரி விதிப்பு பிரச்சனைகளைத் தீர்க்க வருமான வரித் தீர்ப்பாயம் தோற்றுவிக்கப்பட்டது. இவை போன்ற தீர்ப்பாயங்கள் சிறப்பாக இயங்க, இவற்றின் நோக்கத்திற்கேற்பச் சில **'தனிச் சிறப்பு நடைமுறைகள்' (Special Individual Procedures)** தேவைப்படுகின்றன. இந்த நடைமுறைகள், தீர்ப்பாயங்களைத் தோற்று வித்த சட்டத்தினாலேயே கொடுக்கப்படுகின்றன. மற்ற பொது நடை முறைகள் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வழிச் சட்டம் **(Case Law)** மூலமாகத் தெளிவாக்கப்படுகின்றன.

இந்தியாவில் உள்ள தீர்ப்பாயங்கள் அனைத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி உச்ச நீதிமன்றத்திற்கும், உயர் நீதிமன்றங் களுக்கும் கட்டுப்பட்டவை. தீர்ப்பாயங்களின் தீர்ப்புகளின் மீது நீதிமுறை மறுஆய்வு (judicial review) செய்யும் அதிகாரத்தை உச்ச நீதிமன்றமும் உயர் நீதிமன்றங்களும் பெற்றுள்ளன. பொதுவாக தீர்ப்பாயங்கள் வழங்கிய தீர்ப்பில் சட்டம் பற்றிய பிரச்சனை (question of law) இருப்பின், அவற்றை மேற்கண்ட நீதிமன்றங்கள் மறு ஆய்வு செய்கின்றன. பொருண்மைப் பிரச்சனை (question of fact) பற்றிய தீர்ப்புகளில், நீதிமன்றங்கள் குறுக்கிடுவதில்லை. ஆனால் சாட்சியங்களின்றி (no evidence) தீர்ப்பாயங்களின் தீர்ப்புகள் அமையுமேயானால், அத்தீர்ப்பு களில் நீதிமன்றங்கள் குறுக்கிடும். அத்தீர்ப்புகளை நீதிமன்றம் நீதிமுறை மறுஆய்வு செய்யும்.

இந்தியாவில் மேலும் அதிகமான நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களை அறிமுகப்படுத்த வேண்டிய நிகழ்வு உள்ளதா? (Is there a case for introducing more administrative tribunals in India?):

நமது இந்திய நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பிலிருந்தே, தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வந்தன. ஆனால் சுதந்திரம் அடைந்த பிற பல தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டன. இந்தியாவில் செயல்படும் சில முக்கியத் தீர்ப்பாயங்கள் வருமாறு. இரயில்வே நிர்வாகத்திற்கு எதிரான முறையீடுகளை தீர்ப்பதற்காக 1980-ஆம் ஆண்டின் இந்திய இரயில்வே சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இரயில்வே கட்டண தீர்ப்பாயம் (Railway Rates Tribunal), பணிகொடுப்பவர்களும்-பணியாளர்களுக்கும் இடையிலான தகராறுகளைத் தீர்ப்பதற்காக 1947-ஆம் ஆண்டின் தொழிற்த் தகராறுகள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தொழிற்த் தீர்ப்பாயம் (Industrial Tribunal), சாலை விபத்திற்கான நஷ்டஈட்டுக் கோரிக்கைகளை தீர்ப்பதற்காக 1939-ஆம் ஆண்டின் இயக்கவூர்தி

சட்டப்படி அமைக்கப்பட்ட விபத்து கோருரிமை தீர்ப்பாயம் (Motor Accidents Claims Tribunal), வருமான வரிச் சட்டத்தின் கீழ் அமைக்கப் பட்ட வருமான வரித் தீர்ப்பாயம் (Income Tax Appellate Tribunal).

காலப் போக்கில் வழக்குகளை விரைவாகத் தீர்க்கவும், நீதித் துறையின் பணிச் சுமையைக் குறைக்கவும், அதிக அளவில் தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட வேண்டியதின் அவசியத்தை நமது இந்தய அரசு உணர்ந்தது. இதனால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 1976-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட 42-வது சட்டத் திருத்தத்தின்படி, 323-A மற்றும் 323-B எனும் இரு ஷரத்துகள் XIV-A எனும் ஒரு புதிய பகுதியின் கீழ் புதிதாக சேர்க்கப்பட்டன.

மேற்படி ஷரத்து 323-A -ஆனது, அரசுப் பணியாளர்களின் பணி சார்ந்த பிரச்சனைகளை தீர்ப்பதற்கு, தீர்ப்பாயம் அமைக்க வகை செய் கிறது. இதன்படி, 1985-ஆம் ஆண்டில் **நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் சட்டத்தை (The Administrative Tribunals Act, 1985)** பாராளு மன்றம் இயற்றியது. (இது நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களின் பொதுவான நடைமுறைகளை பற்றி எதையும் விளம்பவில்லை. மாறாக அரசுப் பணியாளர்களின் பணி சார்ந்த பிரச்சனைகளை தீர்ப்பதற்காக மட்டுமே ஏற்படுத்தப்பட்டது என்பதை கவனத்தில் கொள்வது நன்று.)

ஷரத்து 323-B -ஆனது பிற பிரச்சனைகளை தீர்ப்பதற்காக தீர்ப் பாயங்கள் அமைக்க வகை செய்கிறது. அதன்படி, பின்வரும் விஷயங்கள் குறித்து சட்டமியற்ற அதிகாரம் படைத்த உரிய சட்ட மன்றமானது, அவை குறித்து எழும் தகராறுகள், புகார்கள் அல்லது குற்றங்களில் நீதித்தீர்ப்பு வழங்க அல்லது விசாரிக்க தீர்ப்பாயங்களை அச்சட்டத்தின் மூலம் அமைக்கலாம் என்று கூறுகிறது. அவ்விஷயங்கள் வருமாறு,-

(அ) எந்த வரியையும் விதித்தல், நிர்ணயம் செய்தல், வசூலித்தல் மற்றும் வரி செலுத்த வலியுறுத்தல்;

(ஆ) அன்னியச் செலாவணி, சுங்க எல்லை தாண்டிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி;

(இ) தொழிற்சாலை மற்றும் தொழிலாளர்கள் தகராறுகள்;

(ஈ) ஷரத்து 31-A -ல் வரையறுக்கப்பட்டபடி சொத்து எதையும் அரசு கையகப்படுத்துவதின் வாயிலாக செய்யும் நிலச் சீர்திருத்தம் அல்லது அதிலிருந்து எழும் எந்த உரிமையும் அல்லது அந்த உரிமைகளை முடிவிற்கு கொண்டு வருதல் அல்லது மாற்றியமைத்தல் அல்லது வேளாண்மை நில உச்ச வரம்பின் வாயிலாக அல்லது பிற வழிகளின் வாயிலாக செய்யப்படும் நிலச் சீர்திருத்தம்;

(உ) பாராளுமன்றத்தின் இரு அவைகளைப் பொறுத்த தேர்தல்கள் அல்லது மாநில சட்டமன்றப் பேரவைத் தேர்தல்கள்;

(ஊ) உணவுப் பொருட்களின் (சமையல் எண்ணெய்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் உள்ளிட்டவை) உற்பத்தி, சேகரிப்பு, அளிப்பு மற்றும் பங்கீடு மற்றும் இன்றியமையாத பண்டங்கள் என்று குடியரசுத் தலைவரால், பொது அறிக்கையின், வாயிலாக விளம்பப்பட்ட உணவுப் பொருட்கள் மற்றும் அத்தகு பொருட்களின் விலை கட்டுப்பாடு;

(எ) மேற்கண்ட விஷயங்கள் தொடர்பாக இயற்றப்பட்ட சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் அவ்விஷயங்கள் குறித்த கட்டணங்கள்;

(ஏ) மேற்கண்ட விஷயங்களுக்கு உடனிகழ்வாக எழும் எந்த விஷயமும்.

முடிவுரை:

மேற்கண்ட விஷயங்களிலிருந்து எழும் தகராறுகள், புகார்கள் அல்லது குற்றங்களை விசாரிக்க சில தீர்ப்பாயங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தாலும், அவற்றில் சிலவை குறித்து நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் இன்னமும் சரிவர அமைக்கப்படவில்லை. எனவே அவை குறித்து தீர்ப்பாயங்களை அமைக்க சட்டங்களை இயற்ற வேண்டியது அவசியமாகும். மேலும் நீதிமன்றங்களில் தேங்கியிருக்கும் வழக்குகளின் எண்ணிக்கையும் குறைந்தபாடில்லை. நாளுக்கு நாள் வழக்குகள் பெருகுகின்றன. ஆனால் அவற்றைத் தீர்க்க சட்ட அமைப்புகள் போதுமானதாக இல்லை. இக்குறையை அதிக அளவிலான தீர்ப்பாயங்கள் அமைப்பதின் மூலமாகத்தான் நிவர்த்தி செய்ய முடியும். எனவே, இந்தியா போன்ற மக்கள் நல அரசில், மக்கள் நலத்தை உரிய முறையில் பேண, அவர்களது பிரச்சனைகளுக்கு காலதாமதமின்றி, அதிகச் செலவில்லாமல், எளிய முறையில் தீர்வளிக்க அதிக அளவிலான நிருவாக முறைத் தீர்ப்பாயங்களை அறிமுகப்படுத்த வேண்டிய நிகழ்வு உள்ளது என்றுதான் கூற வேண்டும்.

நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களின் நன்மைகளும் குறைகளும் [Merits and Demerits of Administrative Tribunals]

33. Examine the merits and demerits of Administrative Tribunals. (நிருவாக முறைத் தீர்ப்பாயங்களின் நன்மைகளையும், குறைபாடுகளையும் விவாதிக்க.)

(அல்லது)

Merits and demerits of Special Tribunals - Write short notes. (சிறப்பு தீர்ப்பாயங்களின் நலன் மற்றும் குறைகள் - சிறு குறிப்பு எழுதுக.)

நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களின் நற்கூறுகள் (அல்லது) நன்மைகள் [Merits (or) Advantages of Administrative Tribunals]:

(1) நிருவாகமுறை நீதிமன்றங்கள் சாதாரண நீதிமன்றங்களின் பணிச் சுமையை வெகுவாகக் குறைத்து, அரசின் சமூக நலத்திட்டங்கள் மக்களை சிக்கலில்லாமல் அடைய வழிவகுக்கிறது.

(2) நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் எளிய நடைமுறைகளின் கீழ் செயல்படுவதால், தங்கள் முன் எழும் வழக்குகளை கால தாமதமின்றி தீர்த்து, விரைவாக நீதி வழங்குகின்றன.

(3) சாதாரண நீதிமன்றங்களை ஒப்பிடும் பொழுது, நிருவாக முறைத் தீர்ப்பாயங்களில் வழக்கிட குறைவான செலவே ஆகிறது. எனவே அதிகச் செலவில்லாமல் நீதி கிடைக்கிறது.

(4) நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களில் வழக்கை தீர்த்து வைக்கும் தலைவரும் உறுப்பினர்களும், சம்பந்தப்பட்ட துறையில் அனுபவமும், நிபுணத்துவமும் உடையவர்கள். எனவே அவர்கள் சம்பந்தப்பட்ட தகராறுகளை அனுபவரீதியாக அணுகி, நல்தீர்ப்பை நல்குகின்றனர்.

(5) நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள், சாதாரண நீதிமன்றங்கள் சட்டப்படி தீர்ப்பு வழங்குவதைப் போலல்லாமல் அரசுக் கொள்கைகளின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு தகராறில் பொது நலன் என்ன அல்லது மக்கள் நலத்திற்கு உகந்தது என்ன என்பதை அறிந்து அதற்கொப்ப தீர்ப்பளிக்கின்றன. இதனால் அவற்றின் தீர்ப்புகள் சிறப்பானதாக அமைந்துள்ளன.

சுருங்கக் கூறின் நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் வளர்ச்சியுற எவையெல்லாம் காரணமாக அமைந்தனவோ (நாம் சென்ற தலைப்பில் கண்டது) அவையெல்லாம், அத்தீர்ப்பாயங்களின் நற்கூறுகளாக விளங்குகின்றன என்று சொன்னால், அதில் தவறொன்றுமில்லை.

நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களின் குறைகள் (அல்லது) தீமைகள் [Demerits (or) Disadvantages of Administrative Tribunals):

(1) இந்தியாவில் தீர்ப்பாயங்கள் சட்டமியற்றுத்துறையினால் இயற்றப்பட்ட சட்டங்களின் மூலமாகத் தோற்றுவிக்கப்படுகின்றன. தீர்ப்பாயங்களின் நடைமுறைகளை ஒழுங்குபடுத்த அமெரிக்காவில் இருப்பது போன்று **'நிருவாகமுறை நடைமுறைச் சட்டமோ' (The Administrative Procedure Act)** அல்லது இங்கிலாந்தில் இருப்பது போன்று **'தீர்ப்பாயங்கள் மற்றும் விசாரணைகள் சட்டமே (The Tribunals and Inquiries Act)** அல்லது பிரான்சு நாட்டில் இருப்பதைப் போன்று தீர்ப்பாயங்களின் நடைமுறைகளை ஒழுங்குபடுத்த **'கன்சில் டெட்டா' (Conseil d' Etat)** எனும் ஒரு சீரிய தலைமைத் தீர்ப்பாயமோ இந்தியாவில் இல்லை. எனவே தீர்ப்பாயங்கள் பின்பற்றுவதற்கென்று ஒரு **பொதுவான நடைமுறை (General Procedure)** இந்தியாவில்

கிடையாது. அவை மாறுபட்ட நடைமுறைகளை பின்பற்றுகின்றன. இதனால் ஒத்த மாதிரியான தீர்ப்பாயங்கள் ஒத்த வழக்குகளில் பல சமயங்களில் மாறுபட்ட தீர்ப்புகளை வழங்குகின்றன. (எனினும் சில சமயங்களில் நிருவாகமுறைச் சட்டம் அமைக்கப்படுவதற்கு காரணமாக இருக்கும் சட்டங்களில், அவை பின்பற்றுவதற்கென்று தனிச் சிறப்பு நடைமுறைகள் (Special Individual Procedures) வகுத்துக் கொடுக்கப் படுகின்றன. இந்த நடைமுறைகளும் சட்டத்திற்கு சட்டம் மாறுபடக் கூடியதாக உள்ளது.)

(2) நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வதில் ஒரே மாதிரியான முறை இல்லை. நிருவாக முறைத் தீர்ப்பாயங்களை ஏற்படுத்தும் சட்டங்களும், பல்வேறு விதமான மேல்முறையீட்டு முறைகளை குறிப்பிடுகின்றன. ஒரு சில சட்டங்களில் மேல்முறையீட்டை மேல் நீதிமன்றத்திற்கும், வேறு சில சட்டங்களில் மேலமை தீர்ப்பாயத்திற்கும், பிற சில சட்டங்களில் அரசிடமும் மேல் முறையீடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளன. எனவே மேல்முறையீடு செய்வதில் சிக்கல் நிலவுகிறது.

(3) பல வழக்குகளில் நிருவாகமுறைத் தீர்ப்பாயத்தால் செய்யப் படும் தீர்ப்புகளில், மேல்முறையீட்டிற்கான வகை செய்யப்படுவதில்லை.

(4) தீர்ப்பாயங்களில் அமரும் உறுப்பினர்கள், சட்ட நிபுணர் களாகவோ அல்லது சட்ட அறிவுத் தகுதி உடையவர்களாகவோ இருக்க வேண்டுமென்பதில்லை.

(5) சாட்சிய சட்டத்தின் நுணுக்கமான விதிகள் நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களுக்கு பொருந்துவதில்லை.

(6) நிருவாகமுறைத் தீர்ப்பாயங்களின் தீர்ப்புகள் சூழ்நிலைக்கு உகந்தவாறும், சட்டஞ்சாராதவைகளின் அடிப்படையிலும் அமைகின்றன.

(7) நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் வழங்கும் தீர்ப்புகள் அலுவல் சார்ந்த மனச்சாய்வின் (Official Bias) காரணமானதாகவும் உள்ளது. அதாவது அவற்றின் தீர்ப்பு நிருவாகத்துறைக்கு சாதகமாகவே இருக்கும் என்ற அய்யப்பாடு எப்பொழுதும் நிலவுகிறது.

(8) பெரும்பாலான நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் தங்கள் தீர்ப்பிற்கு அல்லது முடிவிற்கு காரணங்கள் கூறுவதில்லை.

நீதிமன்றம், நிருவாகமுறைத் தீர்ப்பாயம் - வேறுபாடுகள் [Court and Administrative Tribunal - Distinctions]

34. Distinquish between: Court and Tribunal

வேறுபடுத்திக் காட்டுக:
நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாயம்

நீதிமன்றத்திற்கும் தீர்ப்பாயத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் (Distinction between Court and Tribunal):

நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள், நீதிமன்றங்களின் கூறுகளில் சிலவற்றைக் கொண்டுள்ளன. அஃதாவது, அவை இரண்டும் அரசால் சட்டப்படி உருவாக்கப்பட்டதாகும். அவை இரண்டிடமும் வழக்குகளை தீர்க்கும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனினும் அவை இரண்டும் பின்வரும் கூறுகளில் வேறுபடுகின்றன. அவ்வேறுபாடுகளை ஒரு எளிய அட்டவணையின் வாயிலாகக் காண்போமா?

நீதிமன்றம் (Court)	தீர்ப்பாயம் (Tribunal)
1. நீதிமன்றமென்பது பாரம்பரிய மான நீதிமுறையின் ஒரு அமைப் பாகும்.	தீர்ப்பாயமென்பது சட்டத்தால் சமூக நலனுக்காக அவ்வப்போது ஏற்படுத்தப்படும் ஒரு அமைப் பாகும்.
2. ஒரு நீதிமன்றத்திடம் அனைத்து விஷயங்களையும் பொறுத்த பொதுவான அதிகாரவரம்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. (உரிமையியல் நீதிமன்றம் - உரிமை யியல் விஷயங்கள், குற்றவியல் நீதி மன்றம் - குற்றவியல் விஷயங்கள்.)	தீர்ப்பாயத்தின் அதிகாரவரம்பு வரம்பிடப்பட்டதாகும். அது ஒரு குறிப்பிட்ட பிரச்சனையை மட்டும் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட தாகும். எடுத்துக்காட்டாக தேர்தல் தீர்ப்பாயம், தேர்தல் குறித்த பிரச்சனையை மட்டும் தீர்க்கக் கூடியதாகும்.
3. நீதிமன்றங்கள் அனைத்து நடை முறைச் சட்டங்களையும், சாட்சியச் சட்டத்தின் வகைமுறை களையும் மிகக் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும். இதிலிருந்து எந்த விலக்கும் ஒரு நீதிமன்றத் திற்கு கிடையாது.	தீர்ப்பாயம் அமைக்கப்பட வழி வகுத்த சட்டமானது, அவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்று குறிப்பிட்டாலொழிய அது நடை முறைச் சட்டங்களுக்கோ அல்லது சாட்சிய சட்டத்திற்கோ கட்டுப் பட்டதல்ல.
4. சட்ட அறிவுத் தகுதி பெற்ற மற்றும் வழக்குகளை நீதிமுறையில் தீர்ப்பதற்குண்டான பயிற்சி அளிக்கப்பட்டவர், நீதிமன்றத்தில் நீதிபதி பதவி வகிக்கிறார்.	இங்கு எல்லா நேர்வுகளிலும் இம்மாதிரி அமைவதில்லை.

5. ஒரு நீதிமன்றம் தன் முன் சமர்ப் பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட வழக்கின் எல்லா பிரச்சனைகளையும் புறநிலை மெய்மை (objectively) காணும் நோக்குடன் தீர்த்தல் வேண்டும். அஃதாவது நீதிமன்றம் சட்டப் படியும் சாட்சியங்களின்படியும் வழக்குகளைத் தீர்க்க வேண்டும்.	ஒரு தீர்ப்பாயம் வழங்கும் தீர்ப்பு அல்லது முடிவு அகநிலை மெய்மை காணும் (subjectively) நோக்குடன் இருக்கும். அஃதாவது, அது சில தருணங்களில் அரசாங்கத்தின் கொள்கைகளின் அடிப்படையிலும் அல்லது சூழ்நிலைக்கு உகந்த வாறும் வழக்குகளை தீர்க்கலாம்.
6. நீதிமன்றம் முன் தீர்ப்பு நெறி களையும் (precedents), முரண் தடைக் கோட்பாட்டையும் (prin-ciples of res judicata) பின்பற்ற வேண்டும்.	இங்கு அவ்வாறு கண்டிப்புடன் பின்பற்றப்படுவதில்லை.
7 உயர் அல்லது உச்ச நீதிமன்றம் ஒரு சட்டத்தின் அல்லது நிருவாகத் துறை செய்த ஒரு விதியின் செல்லு தன்மை குறித்து ஆராய்ந்து, அது அதிகாரவரம்பு மீறியதாக இருப் பின், அதனை இல்லாநிலையது, செல்லாதது என விளம்பலாம்	ஒரு தீர்ப்பாயத்தால் இவ்வாறு செய்ய இயலாது.
8. நீதிமன்றத்தின் பணி நீதியை நிலைநாட்டுவதே தவிர, புலனாய்வு செய்வதல்ல.	பல தீர்ப்பாயங்கள் புலனாய்வு (invetigatory) பணியை மேற் கொள்கின்றன.
9. நீதிமன்றத்தின் வாயிலாக நீதி பெற அதிகச் செலவும், கால தாமதமும் ஆகலாம்.	இங்கு அவ்வாறு பெரும்பாலும் ஆவதில்லை.

உள்ளகத்து தீர்ப்பாயம்
[Domestic Tribunal]

35. Domestic Tribunal - Write short notes. (உள்ளகத்து தீர்ப்பாயம் - சிறு குறிப்பு எழுதுக)

(அல்லது)

What are the characterstic features of a tribunal. Distinguish between a statutory tribunal and a domestic tribunal (ஒரு நீர்ப்பாயத்தின் குணாதிசியங்கள் யாவை? சட்டரீதியாக அமைக்கப்படும் நீர்ப்பாயம் உள் நீர்ப்பாயங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?)

(அல்லது)

Explain and classify 'Domestic Tribunals'. To what extent do the courts exercise jurisdiction over such tribunals (உள்ளகத்துத் நீர்ப்பாயங்களை விளக்கி வகைப்படுத்துக. அதன் மீது நீதிமன்றங்கள் எந்த அளவிற்கு அதிகாரம் செலுத்துகிறது என்பதை விளக்குக)

உள்ளகத்து நீர்ப்பாயம் (Domestic Tribunal) - விளக்கம்:

சில குழுக்களின் (associations), குழுமங்களின் (bodies) அல்லது நிலையங்களின் (institutions) உள் ஒழுங்கமைவை ஒழுங்குபடுத்துவதற்காக அமைக்கப்படும் நீதித்தீர்ப்பு வழங்கும் அமைப்புகளே (adjudicatory bodies) **'உள்ளகத்து நீர்ப்பாயம்'** அல்லது **'உள்ளுறை நீர்ப்பாயம்'** என்று அழைக்கப்படுகிறது. அந்த குழுக்களின் உறுப்பினர்கள் அல்லது நிலையங்களின் பணியாளர்கள், முறையே அக்குழுக்களின் அல்லது நிலையங்களின் ஒழுங்குமுறைகள் எவற்றையேனும் மீறினால், அவ்வாறுப் பினருக்கு தண்டனை ஏதும் வழங்கப்பட வேண்டுமா என்பதை மேற்படி உள்ளகத்து நீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

உள்ளகத்து நீர்ப்பாயத்தின் வகைகள் (Types of Domestic Tribunal):

உள்ளகத்து நீர்ப்பாயம், (1) **சட்டப்படியான உள்ளகத்து நீர்ப்பாயம்** (Statutory domestic tribunal) என்றும், (2) **தனிப்பட்ட உள்ளகத்து நீர்ப்பாயம்** (Private domestic tribunal) என்றும் இரு வகைப்படும்.

சட்டப்படியான உள்ளகத்து நீர்ப்பாயமானது பொதுவாக சட்டப்படி அல்லது சட்டத்தால் அமைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, (1) 1961-ஆம் ஆண்டு வழக்குரைஞர்கள் சட்டப்படி அமைக்கப்பட்ட வழக்குரைஞர் குழுமங்கள் (Bar Councils under the Advocates Act, 1961; (2) 1956-ஆம் ஆண்டு மருத்துவ குழுமச் சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட மருத்துவ குழுமங்கள் (Medical Councils under the Medical Council Act, 1961; (3) 1965-ஆம் ஆண்டு பத்திரிக்கை குழுமச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட இந்திய பத்திரிக்கைக் குழுமம் (The Press Council of India under Press Council Act, 1965);

தனிப்பட்ட உள்ளகத்து நீர்ப்பாயமானது பொதுவாக தனியார் நிருவாகத்தினால் ஏற்படுத்தப்படுகிறது. இது தனது நிர்வாக பணியாளர்களின் ஒழுக்கக்கேட்டை விசாரித்து முடிவு கூறுகிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு தனியார் கல்லூரி நிருவாகமானது தனது பணியாளர்களின் ஒழுக்கக்கேட்டை விசாரிக்க அமைத்துக் கொள்ளும் தீர்ப்பாயம் மேற்படி வகையைச் சார்ந்ததாகும்.

உள்ளகத்து தீர்ப்பாயத்தின் மீது நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு அல்லது கட்டுப்பாடு (Jurisdiction of Courts over Domestic Tribunal):

சட்டப்படியான உள்ளகத்து தீர்ப்பாயங்கள் தங்கள் பணிகளை செவ்வனே செய்கிறதா என்பதை உயர் நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் தங்களுக்குள்ள நீதிப்பேராணை வெளியிடும் அதிகாரவரம்பின் வாயிலாக சிறப்பாக கண்காணிக்கலாம். அவற்றின் தீர்ப்புகள் இயற்கை நீதிக் கோட்பாடுகளை மீறியதாக இருப்பின், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 136 மற்றும் 227-ன்படி தக்க தீர்வழிகள் கூட பாதிக்கப் பட்டவருக்கு வழங்கலாம். மேலும் ஒரு தீர்ப்பாயத்தின் செயல்பாடுகளை, சாதாரண உரிமையியல் நீதிமன்றங்கள் உறுத்துக்கட்டளை (injunction) அல்லது விளம்புகை (declaration) தீர்வழி வழங்குவதன் வாயிலாகவும் கண்காணிக்கலாம்.

ஆனால் தனிப்பட்ட உள்ளகத்து தீர்ப்பாயத்தின் செயல்பாடு களுக்கு எதிராக நீதிப்பேராணைகளை (writs) பிறப்பிக்க இயலாது. ஆனால் சாதாரண உரிமையியல் நீதிமன்றங்கள் அச்செயல்பாடுகளுக்கு எதிராக உறுத்துக் கட்டளை அல்லது விளம்புகை தீர்வழி ஆகியவற்றைக் கொடுக்க அதிகாரவரம்பு படைத்தது.

அதிகாரவரம்பு பற்றிய பொருண்மை
[Jurisdictional Facts]

36. Jurisdictional fact - Write short notes. (அதிகாரவரம்பு பற்றிய பொருண்மை - சிறு குறிப்பு வரைக.)

அதிகாரவரம்பு பற்றிய பொருண்மை (Jurisdictional fact) - விளக்கம்:

நிருவாகமுறைச் சட்டத்தில் பொருண்மைகள் இருவகைப்படும். அவை, (1) ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு தன் முன் உள்ள தகராறைத் தீர்ப்பதற்கு தீர்மானிக்க வேண்டிய பொருண்மைகள்; (2) ஒரு தகராறில் ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு தனது அதிகார வரம்பை செலுத்துவதற்கு இருக்க வேண்டிய பொருண்மைகள்.

இவற்றில் இரண்டாவதாக நாம் காணும் பொருண்மைகளே, **அதிகாரவரம்பு பற்றிய பொருண்மைகள்** எனப்படுகின்றன. அதாவது, ஒரு தகராறைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு அதிகாரவரம்பு (Jurisdiction) உள்ளது என்பதற்குண்டான பொருண்மைகள் அத்தகராறில் இருக்க வேண்டும். அப்பொழுதுதான்

அது அத்தகராறை தீர்க்க அதிகாரம் படைத்ததாகும். எனவே ஒரு தகராறைத் தீர்ப்பதற்கு முன் தனக்கு அத்தகராறைத் தீர்க்க, அத்தகராறில் அதிகாரவரம்பு பற்றிய பொருண்மைகள் உள்ளன என்பதை சம்பந்தப் பட்ட நிருவாகத்துறை அதிகார அமைப்பு மெய்ப்பிக்க வேண்டும்.

அதிகாரவரம்பு பற்றிய பொருண்மை இன்றி தகராறு தீர்க்கப்படும் பொழுது ஏற்படும் விளைவு:

ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு தானாகவே அதிகார வரம்பை தன் கையில் எடுத்துக் கொள்ள முடியாது. அதிகாரவரம்பு பற்றிய பொருண்மைகள் இன்றி, ஆனால் தனக்கு அதிகாரவரம்பு உள்ளதாக அனுமானித்துக் கொண்டு ஒரு அதிகார அமைப்பு சம்பந்தப் பட்ட தகராறைத் தீர்மானிக்க முடியாது. பொதுவாக நீதிமன்றங்கள் பொருண்மை பற்றிய பிரச்சனைகள் குறித்த தீர்மானிப்பில் தலையிடாது என்றாலும், ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு அதிகாரவரம்பு பற்றிய பொருண்மைகளை தவறாக தீர்மானித்திருப்பின் அல்லது இல்லாத அதிகாரவரம்பை இருப்பதாக எடுத்துக் கொண்டு அத்தகராறை தீர்மானித்திருந்தால், அதன் முடிவை நீதிமன்றங்கள் மறு ஆய்வு செய்து நீக்கலாம்.

முக்கிய வழக்கு:

Sumanlal v. Collector, Central Excise[5] - *1958-ஆம் ஆண்டின் தங்கக் (கட்டுப்பாடுச்) சட்டத்தின் பிரிவு 8(1)-ஆனது, எவரேனும் 'கச்சாத் தங்கத்தை' (primary gold) தனது உடைமையில், பாதுகாப்பில், கட்டுப் பாட்டில் அல்லது வேறுவிதமாக அடைந்திருந்தால், அதற்கெதிரான ஒரு தடையை விதிக்கிறது.*

மேற்படி வழக்கில் எழுந்த பிரச்சனை யாதெனில், மனுதாரர் மேற்படி பிரிவிற்கு எதிராக கச்சாத் தங்கத்தை தன் உடைமையில் கொண்டிருந்தாரா என்பதுதான். மனுதாரர் வைத்திருந்த சம்பந்தப்பட்ட பொருளானது கச்சாத் தங்கமா, இல்லையா என்பது அதிகாரவரம்பு பற்றிய பொருண்மையாகும் என்றும், எனவே இந்தப் பொருண்மையை கண்டறிந்த பிறகே சம்பந்தப்பட்ட நிருவாகத்துறை அதிகார அமைப்பு அதனை தீர்ப்பதற்குண்டான அதிகாரவரம்பை பெறுகிறது என்றும் கல்கத்தா உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது. மேலும் சம்பந்தப்பட்ட பொருள், கச்சாத் தங்கம் அல்ல என்ற முடிவிற்கு கல்கத்தா உயர் நீதிமன்றம் வந்து, அது சம்பந்தப்பட்ட பிரச்சனையை தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பிற்கு அதிகாரவரம்பு இல்லை என்றும், அது குறித்து மனுதாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அவருக்கு அனுப்பட்ட அறிக்கை அதிகாரவரம்பற்றது என்றும், எனவே அந்த அறிக்கை இல்லாநிலையது என்றும் தீர்ப்பளித்தது.

5. A.I.R. 1974 Cal. 158.

விசாரணை ஆணையம்
[Commission of Inquiry]

37. Commission of Inquiry - Write short notes. (விசாரணை ஆணையம் - சிறு குறிப்பு வரைக.)

விசாரணை ஆணையம் - தோற்றம்:

விசாரணை ஆணையம் என்பது ஒரு நிருவாகமுறைக் குழும மாகும் (administrative body). இது பற்றிய சட்ட விதிகள், 1950-ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தில் (The Commission of Inquiry Act, 1952) சொல்லப்பட்டிருக்கின்றன. உரிய அரசாங்கம் அரசிதழில் அறிக்கை செய்து, விசாரணை ஆணையத்தை அமைக்கலாம்.

விசாரணை ஆணையத்தின் பணிகள்:

விசாரணை ஆணையம் (1) பொது முக்கியத்துவம் வாய்ந்த, வரையறை செய்யப்பட்ட பொருள் குறித்து விசாரணை நடத்தவும்; (2) அரசிதழ் அறிக்கையில் குறிக்கப்பட்ட செயல்களை எந்தக் காலத்திற்கு முன் செய்து முடிப்பதற்காக விசாரணை ஆணையம் அமைக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டதோ, அதனை அந்தக் காலத்திற்கு முன் செய்து முடிக்கவும் அமைக்கப்படும்.

விசாரணை ஆணையத்தின் அமைப்பு:

உரிய அரசாங்கம் (Appropriate Government) ஒருவரையே, ஒன்றுக்கு மேற்பட்டவரையோ விசாரணை ஆணைய உறுப்பினர்களாக நியமிக்கும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் நியமிக்கப்பட்டால், அதில் ஒருவர் தலைவராக (Chairman) நியமிக்கப்படுவார். பெரும்பான்மைக் கருத்தே, அதன் முடிவாக அமையும்.

விசாரணை ஆணையத்தின் அதிகாரங்கள்:

விசாரணை ஆணைம் உரிமையியல் வழக்கினை நடத்துகையில் ஒரு உரிமையியல் நீதிமன்றம் எத்தகு அதிகாரங்களை பெற்றிருக்குமோ, அந்த அதிகாரங்கள் அனைத்தையும் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்படி (Civil Procedure Code) பெற்றிருக்கும். அந்த அதிகாரங்கள் வருமாறு:

(1) எவரையும் விசாரணை ஆணையத்தின் முன் ஆஜராகுமாறு உத்திரவிடுதல், அவருடைய வருகையை கட்டாயப்படுத்தல், மற்றும் உறுதிமொழி மீது விசாரணை நடத்தல்;

(2) எந்த ஆவணத்தையும் கண்டுபிடித்து, தாக்கல் செய்ய வேண்டும் என்று கோருதல்;

(3) பிரமாணப் பத்திரம் (affidavit) மீது சாட்சியம் பெறுதல்;

(4) அரசாங்க பொதுப் பதிவேட்டையோ (Public Record) அதனுடைய நகலையோ நீதிமன்றத்திடமிருந்து வேண்டுகோள் விடுத்துப் பெறுதல்;

(5) சாட்சியம் பெற அல்லது ஆவணங்கள் பற்றி விசாரிக்க ஆணையர்களை (Commissioners) நியமித்தல்;

(6) குறித்துரைக்கப்படலாகும் மற்ற எந்தப் பொருள் குறித்தும் விசாரணை செய்தல்.

விசாரணை ஆணையத்தின் நடைமுறை:

விசாரணை ஆணையம் தன்னுடைய நடைமுறைகளை தானே (regulates its own procedure) வகுத்துக் கொள்கிறது.

விசாரணை முடிவுற்ற பிறகு, விசாரணை ஆணையம் தன்னுடைய அறிக்கையை, தன்னை நியமித்த உரிய அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கிறது இந்த அறிக்கையை, நீதிமுறையில் தீர்த்து வைத்தல் (adjudication) என்று கொள்வதற்கில்லை.

இந்த அறிக்கையின்படி நடவடிக்கை மேற்கொள்வதும் மேற் கொள்ளாததும் உரிய அரசாங்கத்தின் தன்விருப்புரிமையைப் பொறுத்த விஷயமாகும்.

விசாரணை ஆணையத்தின் நீதிமுறைத் தன்மை குறித்து விளக்கமளித்த முக்கிய வழக்கு:

Ramakrishna Dalmia v. Justice Tandolkar[6] - இவ்வழக்கில் 1952-ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின்படி அமைக்கப் பட்ட விசாரணை ஆணையத்தின் நீதிமுறைத் தன்மை (judicial character) பற்றி வினா எழுப்பப்பட்டது. அப்பொழுது உச்ச நீதிமன்றமானது, விசாரணை ஆணையம் அதனுடைய முடிவை அப்படியே அமல் செய்யக் கூடிய பொருளில் நீதிமுறையில் தீர்த்து வைக்கும் அதிகாரம் (adjudication) பெற்றிருக்கவில்லை என்றும், இது நீதிமுறையாகத் தீர்த்து வைப்ப திலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்றும், விசாரணை ஆணையம் புலனாய்வு (investigation) செய்து கண்டுணர்ந்த முடிவுகளையும், பரிந்துரைகளையும் (recommendations), மற்றைய பதிவுக் குறிப்பு களையும் குறிப்பெடுத்து, அறிக்கையாக (report) அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கும் அதிகாரத்தை மட்டும் பெற்றுள்ளது என்றும், எனவே, விசாரணை ஆணையத்தின் அறிக்கையை நீதிமுறைத் தீர்ப்பாக ஏற்பதற் கில்லை என்றும், அதை அப்படியே அதனாலேயே அமல் செய்ய இயலாது என்றும் கருத்துரைத்தது.

6. A.I.R. 1968 S.C. 538.

நிருவாகத்துறை முடிவுகளில் முன்தீர்ப்புத் தடை, முன் தீர்ப்பு முறை ஏற்பு மற்றும் முரண்தடை [Resjudicata, Stare Decisis and Estoppel in Administrative Decisions]

38. Examine the applicability of the principles of Estoppel, stare decisis and Res Judicata in case of Administrative decisions. (நிருவாகத்துறை முடிவுகளில் மறுப்புத் தடை, முன் தீர்ப்பு முறை ஏற்பு, முன்தீர்ப்புத் தடை குறித்த கோட்பாடுகள் செயல்படுத்தல் குறித்து ஆராய்க.)

முன்னுரை:

முன்தீர்ப்புத் தடை (Res Judicata), முன் தீர்ப்பு முறை ஏற்பு (Stare Decisis), மறுப்புத் தடை (முரண்தடை) (Estoppel) ஆகியவை நீதிமன்ற நடவடிக்கைகளில் வழங்கப்படும் தீர்ப்புகளில் பின்பற்றப்படும் சட்டக் கொள்கைகளாகும். இவை நிருவாகத்துறை முடிவுகளுக்கு பொருந்துமா என்பதைத்தாம் நாம் இங்கு காண உள்ளோம். இவற்றில் முரண்தடை என்பதை அடுத்து வரும் வினாவில் விரிவாகக் காண்போம். மீதமுள்ள முன்தீர்ப்புத் தடை, முன் தீர்ப்பு முறை ஏற்பு (முன் தீர்ப்பு நெறி) ஆகியவற்றை இங்கு பின்வருமாறு காண்போம்.

முன்தீர்ப்புத் தடை (Res Judicata):

இந்த முன்தீர்ப்புத் தடைக் கோட்பாட்டின்படி, தகுதி வாய்ந்த நீதிமன்றத்தில் ஒரு வழக்கு மூலத்தின் (cause of action) அடிப்படையில் முறையாக ஒரு வழக்கு தொடரப்பட்டு அதில் தீர்ப்பு வழங்கப் பட்டிருப்பின், பின் அதே வழக்கு மூலத்தின் அடிப்படையில் தீர்ப்பிற்காக மற்றொரு வழக்கை, அந்த வழக்கின் தரப்பினர்கள் அதே நீதிமன்றத்திலோ அல்லது சம அதிகாரவரம்பு படைத்த வேறொரு நீதிமன்றத்திலோ தொடர முடியாது. அதாவது முன் வழங்கப்பட்ட தீர்ப்பு, அதே வழக்கில் மற்றொரு தீர்ப்பு வழங்கப்படுவதைத் தடை செய்கிறது. இதுவே முன் தீர்ப்புத் தடை எனப்படுகிறது. இக்கோட்பாடு உரிமையியல் நடை முறைச் சட்டத்தின் 11-வது பிரிவிலும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 403-வது பிரிவிலும் தொகுக்கப்பட்டுள்ளது. ஆனால் முன் தீர்ப்புத் தடை, சம்பந்தப்பட்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேல் நீதிமன்றங்களுக்கு (Higher Courts) மேல்முறையீடு செய்வதைத் தடை செய்யாது.

முன்தீர்ப்புத் தடைக் கோட்பாடு நிருவாகத்துறை முடிவுகளுக்கு பொருந்துமா?:

முன் தீர்ப்புத் தடை நீதிமன்றத்தின் நேரத்தை மிச்சப்படுத்து

வதற்கும், நீதிமன்றச் செலவைக் குறைப்பதற்கும், சட்ட அடிப்படையில் வழக்கு இறுதியாக முடிவு செய்யப்படுவதற்கும் ஏற்பட்ட பொதுவான சட்டக் கோட்பாடாகும். இந்தக் கோட்பாடு, நீதிமன்றங்களால் பிறப் பிக்கப்படும் தீர்ப்புகளுக்கு மட்டுமே பொருந்துவதாகும். நிருவாகத் துறையால் வழங்கப்படும் முடிவுகளுக்கு பொருந்தாது. ஏனெனில் நிருவாகத் துறை முடிவு, வழக்கினைச் சட்ட அடிப்படையில் இறுதியாக முடிவு செய்வதில்லை. இங்கு அரசுக் கொள்கைகளின் (policy) அடிப்படையில் முடிவுகள் வழங்கப்படுகின்றன. எனவே கொள்கைகள் மாறும் பொழுது, முடிவுகளும் மாறுவது இயற்கையே. சில சமயங்களில் சூழ்நிலைக்கு உகந்தவாறும் (expediency) முடிவுகள் வழங்கப்படு கின்றன. ஆதலால், சட்ட அடிப்படையில் எழுந்த கோட்பாடு, கொள்கை அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகளுக்குப் பொருந்துவதில்லை.

எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்ட நபர் ஓர் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய வருமான வரியானது, வருமான வரித் தீர்ப்பாயத்தின் தீர்ப்பினால் அறுதி செய்யப்பட்டால், அந்தத் தீர்ப்பு அதற்கு அடுத்த ஆண்டில் எழக்கூடிய வருமான வரி வழக்கிற்கு முன் தீர்ப்புத் தடையாக அமையாது. வேண்டுமானால், அந்தக் குறிப்பிட்ட ஆண்டைப் பொறுத்த வரை அந்தத் தீர்ப்பு அதே வழக்கிற்கான வழக்கு மூலத்தின் மீது எழும் வழக்குகளுக்கு முன்தீர்ப்புத் தடையாக அமையலாம். வருமான வரிச் சட்டப்படி, அதே ஆண்டில் கூடத் தவறு அல்லது மோசடி காரணமாக அதே வழக்கினைத் திரும்ப விசாரணை செய்து தீர்ப்பு வழங்கலாம். ஆக, நிருவாகத்துறை முடிவுகளுக்கு முன்தீர்ப்புத் தடைக் கோட்பாடு பொருந்துவதில்லை என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை.

முன்தீர்ப்பு முறை ஏற்பு (Stare Decisis):

ஒரு வழக்கில் மேல் நீதிமன்றம் கூறிய தீர்ப்பை, அதையொத்த மற்ற வழக்குகளிலும் கீழ் நீதிமன்றங்கள் பின்பற்றி தீர்ப்பு வழங்கும் முறையே முன் தீர்ப்பு முறை ஏற்பு எனப்படும். நீதிமன்றத் தீர்ப்புகளில் அறுதிப்பாட்டையும், முடிவான தன்மையையும், தொடர்ச்சியையும் தோற்றுவிப்பதற்காக ஏற்படுத்தப்படுத்தப்பட்டதே மேற்படி சட்டக் கோட்பாடாகும். இதனால் ஒத்த வழக்குகளில் மாறுபட்ட தீர்ப்பு வழங்கப்படுவது தவிர்க்கப்படுகிறது. இதனை **"முன் தீர்ப்பு நெறி நிற்றல்"** என்றும் அழைப்பர்.

முன்தீர்ப்பு முறை ஏற்பு நிருவாகத்துறை முடிவுகளுக்கு பொருந்துமா?:

முன் தீர்ப்பு முறை ஏற்புக் கோட்பாடு நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாகும். நிருவாகத்துறை முடிவுகள் முன் கூறியபடி கொள்கை (policy) அடிப்படையிலும், உகந்தமை (expediency) அடிப்படையிலும் கொடுக்கப்படுவதால், முன் தீர்ப்பு முறை ஏற்புக் கோட்பாடு நிருவாகத்துறை முடிவுகளுக்குப் பொருந்தாது. ஏனெனில், நிருவாகத்துறை கொள்கைகள் மாறும் தன்மையுடையன. அதற்கொப்ப

முடிவுகளும் மாறக் கூடியதாகும். எனவே ஒத்த தகராறுகளில் ஒரே மாதிரியான முடிவை எதிர்நோக்க முடியாது.

எடுத்துக்காட்டாக, தொழில் தகராறு வழக்குகளில் ஊதிய உயர்வு அல்லது ஈட்டுத் தொகை பற்றி தொழில் தீர்ப்பாயத்தினால் ஓர் ஆண்டில் கொடுக்கப்பட்ட முடிவு, அடுத்த ஆண்டில் சம்பந்தப்பட்ட கொள்கை மாறுபடுமானால், அந்த அடுத்த ஆண்டிற்குப் பொருந்தாது. எனவே முதல் ஆண்டு கொடுக்கப்பட்ட முடிவினை, மறு ஆண்டில், அதாவது ஊதிய உயர்வு பற்றிய கொள்கை மாறிய பின், முன் தீர்ப்பு முறையாக ஏற்க இயலாது. எனவே இந்தக் கோட்பாடு நிருவாகத்துறை முடிவுகளுக்கு முற்றிலும் பொருந்துவதில்லை.

39. Whether the State is bound by estoppel? Mention Indian cases. (அரசு மறுப்பு அல்லது முரண்தடைக்கு கட்டுப்பட்டதா? இந்திய வழக்குகளைக் கூறவும்.)

(அல்லது)

Examine the extent to which the rule of estoppel is applied against the State. (முரண்தடை விதி எம்மட்டில் அரசுக்கு எதிராக அளிக்கப் படும் என்பதை ஆராய்க.)

(அல்லது)

Explain the doctrine of Estoppel as applied in Administrative Law. (நிருவாக முறைச் சட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள முரண் தடைக் கோட்பாட்டினை விளக்குக.)

(அல்லது)

Estoppel - Write short notes. (முரண்தடை - சிறு குறிப்பு வரைக.)

முரண்தடை (Estoppel) - பொது விளக்கம்:

ஒருவர் தனது பேச்சு மற்றும் செயல்களுக்குக் கட்டுப்பட்டவர். ஒருமுறை ஒன்றைப் பேசிவிட்டு, பின்னர், தான் அவ்வாறு பேசவில்லை என்று முரண்பாடாக கூறுவதை சட்டம் அனுமதிப்பதில்லை. இது செயல்களுக்கும் பொருந்தும். இதைத்தான் இந்திய சாட்சிய சட்டம் **"முரண்தடை"** அல்லது **"மறுப்புத் தடை"** என்று கூறுகிறது.

முரண்தடையும் அரசாங்க செயற்பாடுகளும்:

நிருவாகமுறைச் சட்டத்தின்படி அரசாங்க அலுவலர்களிடம் அதிக அளவில் தன்விருப்புரிமை அதிகாரமும், நீதி வழங்கும் அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால், அவர்கள் நிருவாகத்துறைக்கு எதிராக வழக்குகள் எழுவதற்கு முன்பாகவே, தங்களுடைய அதிகாரங்களை எவ்வாறு, எப்படி, யார்யார் மீது செலுத்த உள்ளோம் என்று முன்கூட்டியே மக்கள் யாவருக்கும் அறியச் செய்கிறார்கள். அப்படி

அறியச் செய்யும் பொழுது, அதிகாரங்கள் சில வழிகளில்தாம் செலுத்தப் படும் என்றும், மற்றைய வழிகளில் செலுத்தப்படமாட்டா என்றும் வாக்குறுதி (promise) அளிக்கின்றார்கள். அவர்கள் எடுக்கும் நடவடிக்கை களுக்கு உட்பட்டு நடக்க ஆலோசனை (advice) பகர்கின்றார்கள். அவ்வாறு நடந்தால் மக்களுடைய உரிமைகளும், நலன்களும் உடைமை களும் நன்கு பாதுகாக்கப்படுமென்று உறுதி (assurance) அளிக்கின்றார் கள். அப்படியில்லாவிடில், மக்கள் பாதிக்கப்படக் கூடும் என்று எடுத்துரைக்கின்றார்கள் (representations). இவ்வாறு அரசாங்க அலுவலர்களால் அரசாங்கத்தின் சார்பில் செய்யப்படும் வாக்குறுதிகளும், ஆலோசனைகளும், உறுதிகளும், எடுத்துரைத்தல்களும் எந்த அளவிற்கு நம்பக் கூடியவை என்ற வினா பொதுவாக எல்லோர் மனத்திலும் இயல்பாக எழக்கூடிய ஒன்றாகும். இந்த வினாவிற்கு விடை காண்பது, மற்றொரு வினாவிற்கு கிடைக்கும் விடையைப் பொறுத்துள்ளது. அஃதாவது, அரசாங்கம் தன்னுடைய வாக்குறுகளுக்கும், ஆலோசனை களுக்கும், உறுதியுரைகளுக்கும் முரணாகச் செயல்படுவதிலிருந்து தடைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதாகும். இதனால் முரண் தடைக் கோட்பாட்டினை அரசாங்கத்தின் மீது பொருத்தி வைத்துப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

முரண்தடை குறித்து இந்திய சாட்சிய சட்டம் கூறுவதாவது:

இந்திய சாட்சியச் சட்டத்தின் **115-வது பிரிவு** முரண் தடைக் கோட்பாட்டினைப் பற்றி பின்வருமாறு கூறுகின்றது. அதன்படி,

> "ஒருவர் மற்றொருவரைத் தம் கூற்றினாலோ, செயலாலோ, செய்யாமையாலோ ஒன்றை உண்மை என்று வேண்டுமென்றே நம்பும்படிச் செய்து அல்லது நம்புவதற்கு இடம் கொடுத்து மற்றொருவரைச் செயல்படச் செய்வாரானால், அவ்வாறு நம்பி நடந்தவர் அல்லது அவரது பிரதிநிதிக்கும், நம்ப வைத்தவர் அல்லது அவரது பிரதிநிதிக்கும் இடையே ஏற்படுகின்ற உரிமையியல் வழக்கில் அல்லது நடவடிக்கையில், நம்ப வைத்தவர் அல்லது அவரது பிரதிநிதி உண்மை அன்றென மறுக்க அனுமதிக்கப்பட மாட்டார்."

அதாவது ஒரு முறை உண்மை என்று நம்பச் செய்து ஏற்றுக் கொள்ளு மாறு பேசியதை அல்லது செய்ததை, பின்நாளில் உண்மை அல்ல என்று மறுத்துக் கூற சட்டம் அனுமதிப்பதில்லை. இதுவே முரண்தடைக் கோட்பாட்டின் அடிப்படையாகும்.

முரண்தடைக் கோட்பாட்டிற்கு அரசு கட்டுப்பட்டதா?

மேற்கண்ட முரண்தடைக் கோட்பாடு தனிநபர்களுக்கிடையே எழும் உரிமையியல் வழக்குகளுக்கு மட்டும் பொருந்துவதாகும். இது அரசால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு எதிராகச் செல்லாது. அரசாங்கச் சட்டத்தில் கூறப்பட்டதற்கு மாறுபட்ட முறையில் வாக்குறுதியோ,

அறிவுரையோ, உறுதியுரையோ அரசாங்க அலுவலர்களால் அளிக்கப் படுமானால், அரசாங்கத்தை அவ்வாக்குறுதியை, அறிவுரையை அல்லது உறுதியுரையை பின்பற்றி நடக்குமாறு வற்புறுத்த முரண்தடைக் கோட்பாட்டால் இயலாது.

ஏனெனில் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம், அரசாங்கத் தினால் அல்லது அதனுடைய அலுவலர்களால் மக்களுக்கு அளிக்கப் படும் வாக்குறுதிக்கும், ஆலோசனைக்கும், உறுதியுரைக்கும் கட்டுப் படுமானால், அச்சட்டத்தின் தன்மையும், அதன் பொருளும் மாற்றம் பெறும். அத்தகைய நிலையை எதிர்பார்த்துச் சட்டமன்றம் சட்டத்தினை இயற்றி இருக்காது. சட்டம், அரசாங்கம் எதிர்காலத்தில் அளிக்கும் வாக்குறுதி, ஆலோசனை அல்லது உறுதியுரையை கருத்தில் கொள்ளாமல் செய்யப்பட்டதாகும். எனவே, சட்டமன்றம் சட்டத்தின் மூலமாகக் கூறுவதை வாக்குறுதி, ஆலோசனை அல்லது உறுதியுரையால் கட்டுப்படுத்த இயலாது. அரசாங்கம் வாக்குறுதியும், ஆலோசனையும் அல்லது உறுதியுரையும் அளித்த பின்னர், அவைகளுக்கு முரண்பட்டு, அஃதாவது சட்டத்திற்கேற்பச் செயல்படுவதை முரண்தடைக் கோட் பாட்டின் மூலமாகத் தடை செய்ய இயலாது. ஆனால் சட்டத்திற்கு எதிராக இல்லாமல், அரசாங்கம் வாக்குறுதி அல்லது உறுதியளித்து கூறிய சங்கதிகளுக்கு எதிராக முரண்தடைக் கோட்பாட்டினை செயற் படுத்தலாம். இந்நிலைப்பாட்டை பின்வரும் வழக்கு விளக்குகிறது.

முரண்தடைக் கோட்பாடு பின்பற்றப்படலாம் என்று தீர்ப்பு வழங்கப்பட்ட முக்கிய இந்திய வழக்கு:

Delhi University v. Ashok Kumar[7] இந்த வழக்கு டெல்லி பல்கலைக்கழகத்துடன் சம்பந்தப்பட்டது என்றாலும், இந்த வழக்கில் கூறப்பட்ட பொதுக் கோட்பாடு அரசுக்கும் பொருந்தும். ஏனெனில் டெல்லி பல்கலைக்கழகம், இயற்றப்பட்ட ஒரு சட்டத்தினால் தோற்று விக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, ஒரு மாணவன் குஜராத் கல்வி வாரியத்தால் நடத்தப்பட்ட பள்ளி இறுதியாண்டுத் தேர்வில் வெற்றி பெற்ற பின், டெல்லி பல்கலைக் கழகத்தில் பி.ஏ. முதலாண்டு வகுப்பில் சேர மனுச் செய்து, அதில் சேர்ந்தான். பி.ஏ. முதலாண்டு வகுப்பில் ஓராண்டு படித்துத் தேர்விலும் வெற்றி பெற்றான். அதன்பின், டெல்லி பல்கலைக் கழகம், குஜராத் பள்ளி இறுதியாண்டுத் தேர்வு பெற்றதானது மெட்ரிக் தேர்வுக்குச் சமம் என்றும், பி.ஏ. முதலாண்டில் சேர்வதற்கு மேல்நிலைக் கல்வித் தேர்வில் (Higher Secondary Education) வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்றும் கூறி, அவன் பி.ஏ. வகுப்பில் படிக்கப் பல்கலைக்கழக விதிகளின்படி தகுதியற்றவரெனக் கூறி அவனைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளி யேற்ற முனைந்தது. அவனை ஓர் ஆண்டு பி.ஏ. வகுப்பில் படிக்க டெல்லி

7. A.I.R. 1969 Del. 131.

பல்கலைக்கழகம் அனுமதித்துவிட்டபடியால், அதற்குப் பிறகு அவனுடைய ஆரம்பத் தகுதிகள் அடிப்படையில் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றக் கூடாதெனவும், முரண்தடைக் கோட்பாட்டிற்குப் பல்கலைக் கழகம் கட்டுப்பட்டதெனவும் அவன் நீதிமன்றத்தில் வழக்கிட்டு வாதிட்டான். பல்கலைக்கழகமோ, சட்டத்திற்கு எதிராக முரண்தடைக் கோட்பாட்டைச் செயல்படுத்த முடியாது என்று எதிர்வாதம் செய்தது.

டெல்லி உயர் நீதிமன்றம், டெல்லி பல்கலைக்கழகத்தின் மேற்படி வாதத்தை ஏற்க மறுத்துவிட்டது. மேலும், அதிகாரவரம்பு மீறிய செயல் (Ultra vires act) என்பது, முறையற்ற செயல் (irregular act) என்பதிலிருந்து வேறுபட்டதெனவும், அதிகாரவரம்பு மீறிய செயலுக்கு முரண்தடைக் கோட்பாடு பொருந்தாதெனவும், ஆனால் முறையற்ற செயலுக்கு முரண்தடைக் கோட்பாடு பொருந்துமெனவும், பல்கலைக் கழகத்திற்கு எதிராக பயன்படுத்த இயலுமெனவும் டெல்லி உயர் நீதிமன்றம் கூறிற்று.

டெல்லி உயர் நீதிமன்றம் மேலும் கருத்துரைக்கையில், பல் கலைக்கழகச் சட்டம், பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைப் பல்கலைக் கழகத்தில் சேர்த்தல் பற்றிய விதிகளைத் தளர்த்தும் அதிகாரம் அளித் துள்ளதென்றும், அதனால் முறையற்ற விதத்தில் ஒரு மாணவர் பல்கலைக் கழகத்தில் அனுமதிக்கப்பட்டால், அது பல்கலைக்கழகத்தின் முறையற்ற செயலின்பாற்படுமேயன்றி அதிகாரவரம்பு மீறிய, அதாவது சட்டத் திற்கு எதிரான செயலின்பாற்படாதெனக் கூறி, முரண்தடைக் கோட் பாட்டினைப் பயன்படுத்தி பல்கலைக்கழகம் ஓராண்டு ஒரு மாணவனை பி.ஏ. வகுப்பில் படிக்க அனுமதித்த பின்னர் அவனுடைய தகுதி அடிப்படையில் அவனை வெளியேற்றக் கூடாதெனத் தடை விதித்தது.

இந்த வழக்கிலிருந்து கிடைக்கும் பொதுக் கோட்பாடு யாதெனில், அரசாங்கம், அதிகாரவரம்பு மீறிய நிலையில் செயல்பட்டிருந்தால், முரண்தடைக் கோட்பாட்டினைப் பயன்படுத்தி அரசாங்கத்தை அச் செயலைப் பற்றி நிற்கச் செய்ய முடியாது. ஆனால் அச்செயல் முறையற்ற விதத்தில் செய்யப்பட்டிருந்தால், முரண்தடைக் கோட்பாட்டினை பயன்படுத்தி அரசாங்கத்தை அச்செயலை பற்றி நிற்கச் செய்ய முடியும். அதாவது சட்டத்திற்கு எதிராக மட்டும்தான் முரண்தடைக் கோட் பாட்டினை செயற்படுத்த முடியாது. சட்டத்திற்குட்பட்ட ஆனால் முறையற்ற விதத்தில் அரசாங்கம் செயல்பட்டிருக்குமானால், அரசாங்கத் திற்கு எதிராக முரண்தடைக் கோட்பாட்டினைச் செயற்படுத்த முடியும்.

முரண்தடைக் கோட்பாடு பின்பற்றப்பட முடியாது என்று தீர்ப்பு வழங்கப்பட்ட சில முக்கிய இந்திய வழக்குகள்:

பொதுவாகச் சொல்வதென்றால், தனிநபரை முரண்தடைக் கோட்பாடு எவ்வாறு கட்டுப்படுத்துமோ, அவ்வாறு அரசாங்கத்தை அது கட்டுப்படுத்தாது. அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில்

எழுந்த சில வழக்குகளிலும் இந்நிலைப்பாடு விளக்கப்பட்டுள்ளது. இதைப் பின்பற்றி, இந்திய நீதிமன்றங்களும் பல்வேறு வழக்குகளில் முரண்தடைக் கோட்பாட்டினைச் சட்டத்திற்கு எதிராகச் செயல்படுத்த முடியாதென்று கூறியுள்ளது. எடுத்துக்காட்டாக பின்வரும் சில இந்திய வழக்குகளைக் காண்போம்.

Amar Singhji v. State of Rajasthan[8] - இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, மாவட்ட ஆட்சியர், மனுதாரரின் ஊழிய மானிய நிலங்களை (jaghir) அவருடைய வாழ்நாளில் அரசாங்கத்தால், 1952-ஆம் ஆண்டு இராஜஸ்தான் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்படி கைப்பற்றப்படாதென்று வாக்குறுதியளித்திருந்தார். ஆனால், சில நாட்களுக்குப் பிறகு, மேற்படி சட்டத்தின்படி, அவருடைய ஊழிய மானிய நிலங்களை கோரிப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது தன்னுடைய மானிய நிலங்கள் கைப்பற்றப்படாது என்று மாவட்ட ஆட்சியர் தனக்கு அளித்த வாக்குறுதியை மீறுகிறது என்றும், எனவே நிலத்தை கைப்பற்றுவதற்குண்டான நடவடிக்கையை முரண்தடைக் கோட்பாட்டின்படி தடை செய்ய வேண்டுமென்றும் மனுதாரர் மனுச் செய்தார். வழக்கை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம், இராஜஸ்தான் நிலச் சீர்திருத்தச் சட்டமானது, சில மானிய நிலங்களை கைப்பற்றுவதிலிருந்து விதிவிலக்களிக்கும் அதிகாரத்தை அரசாங்கத்திற்குச் அளிக்கவில்லை யெனவும், அரசாங்கம் சட்டப்படி செயல்பட்டாக வேண்டுமெனவும், சட்ட அதிகாரவரம்பு மீறிய முறையில் அரசாங்கத்தின் சார்பில் அரசாங்க அலுவலரால் கொடுக்கப்பட்ட வாக்குறுதி அரசாங்கத்தை கட்டுப்படுத்தாதெனவும், ஆதலால் அரசாங்கம் சட்டப்படி செயல் படுவதை முரண்தடைக் கோட்பாட்டின் மூலம் தடை செய்ய முடியாதெனவும் தீர்ப்புரைத்தது.

Mulam Chand v. Madhya Pradesh[9] - இவ்வழக்கில் உச்ச நீதிமன்றமானது, அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் சட்ட நிறைவு பெறாமல் இருப்பின், ஒப்பந்தங்களில் உள்ள வாக்குறுதி அடிப்படையில் அரசாங்கத்திற்கு எதிராக முரண்தடைக் கோட்பாட்டினைச் செயற்படுத்த முடியாதென அறிவித்தது. அவ்வாறு முரண் தடைக் கோட்பாடு அரசாங்கத்திற்கு எதிராக ஒப்பந்தங்கள் மூலமாக அமல்படுத்தப்பட்டால் அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் பற்றி கூறும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வகை முறைகளையே திருத்துவதாக அமையுமென மேலும் உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது.

முடிவுரை:

முரண்தடைக் கோட்பாடு அரசாங்கத்திற்கு எதிராக பெரும்

8. A.I.R. 1955 S.C. 504.
9. A.I.R. 1968 S.C. 1218.

பான்மையான வழக்குகளில் செயற்படுத்தப்படாமையால், மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அரசாங்க அலுவலர்களின் வாக்குறுதி மற்றும் ஆலோசனைகளை நம்பி மக்கள் செயற்படுகிறார்கள். பின்னர் அரசாங்கம் அதனுடைய அலுவலர்கள் அளித்த வாக்குறுதியைப்பற்றி நிற்காமல் மாறுதலாகச் செயற்படும் போது மக்கள் இழப்புக்கு ஆளாகின்றார்கள். இந்திய சாட்சியச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள முரண் தடைக் கோட்பாட்டினை அவ்வாறே செயல்படுத்தா இயலாவிட்டாலும், குறைந்தபட்சம் தமைமை நெறியின் (Equity) (அதாவது நியாயத்தின் அடிப்படையில்) அடிப்படையிலாவது அரசாங்கம் அது கொடுத்த வாக்குறுதிகளைப்பற்றி நிற்கும்படி செய்யப்படுதல் வேண்டும். இதனை உணர்ந்த நீதிமன்றம் சில வழக்குகளில் அரசாங்கம் தகைமை நெறியின் அடிப்படையில் அதனுடைய வாக்குறுதிகளையும், உறுதியுரைகளையும் பற்றி நிற்க வேண்டுமெனத் தீர்ப்புரைத்துள்ளது. அத்தீர்ப்புகளில் முரண் தடைக் கோட்பாடு பின்பற்றப்பட்டுள்ளது. (அவ்வழக்குகளை **'உறுதி மொழி முரண்தடை' (Promissory Estoppel)** குறித்து விளக்கும் வினா எண். 54-ல் காண்க.)

8

நிருவாகத்துறை தன்விருப்புரிமை
(அல்லது)
நிருவாகத்துறை தன்விருப்புரிமை அதிகாரத்தின் மீதான நீதிமுறை மறுஆய்வு
(அல்லது)
நிருவாகத்துறை தன்விருப்புரிமையின் மீதான நீதிமுறைக் கட்டுப்பாடு

[Administrative Discretion (or) Judicial Review on Administrative Discretion (or) Judicial Control over Administrative Discretion]

40. What is administrative discretion? Explain with the help of decided cases how the exercise of discretion is subjected to judicial scrutiny. (நிருவாகத்துறை தன்விருப்புரிமை என்றால் என்ன? தன்விருப்புரிமை பழக்கம் எவ்வாறு நீதித்துறை கண்ணோட்டத்திற்கு ஆளாக்கப்படுகிறது என்பதை முடிவுற்ற வழக்குகளின் உதவியோடு விளக்குக.)

(அல்லது)

To what extent administrative discretion is subjected to judicial review? Refer to cases. (நிர்வாகத்தின் தன்விருப்புரிமை எவ்வாறு நீதித்துறையின் மேலாய்விற்கு உட்படுத்தப்படுகிறது? தீர்ப்புகளை சுட்டிக்காட்டுக.)

(அல்லது)

Show the nature and extent of judicial review on administrative discretion. (தன்விருப்புரிமை அதிகாரத்தின் மீதான நீதிமுறை மறு ஆய்வின் தன்மை மற்றும் அளாவுகையை சுட்டிக்காட்டுக.)

(அல்லது)

Discuss the grounds for challenging the discretionary action of administration. (நிர்வாகத்தின் உளத்தேர்வு நடவடிக்கையை மறுதலிப்பதற்கான காரணங்களை விளக்குக.)

(அல்லது)

What are the grounds on which administrative discretion may be challenged? (உளத் தேர்வு செயல்கள் எக்காரணங்களுக்காக நீதிமன்ற மறு ஆய்வு செய்யப்படும்?)

(அல்லது)

What are the various grounds for holding the exercise of discretionary power as invalid? (உளத் தேர்வு அதிகார நடைமுறையை செல்லத்தகாதது என்று கொள்வதற்கான பல்வேறு காரணங்கள் யாவை?)

(அல்லது)

"A discretion is not to be disused, misused or exercised at the dictation of another" - Elucidate. ("உளத்தேர்வின்படி செயல் படுத்தும் அதிகாரத்தை செயற்படுத்தாமல் இருக்கவோ, தவறாகப் பயன்படுத்தவோ மற்றொருவரின் கட்டளையின் கீழ் செயல் படுத்தவோ கூடாது" - விளக்கவுரை தருக.)

(அல்லது)

"Discretionary power shall not be exercised under dictation". Discuss. ("தன்விருப்புரிமையின்படி செயல்படுவதற்கான அதிகாரங்கள் அதிகார ஆணையின் கீழ் பயன்படுத்தக் கூடாது" விவாதிக்கவும்.)

(அல்லது)

Examine the different grounds on which the courts can give remedy in case of abuse of discretion. (உளத் தேர்வினை தவறான வழியில் பயன்படுத்தப்பட்டமை பற்றிய சூழ்நிலைகளின் பல்வேறு காரணங்கள் கொண்டு நீதிமன்றங்கள் தீர்வழி கொடுக்க இயலும் என்பதை ஆய்க.)

(அல்லது)

"The exercise of discretion must not be arbitrary, fanciful and influenced by extraneous considerations" - Elucidate. ("உளத் தேர்வின்படி செயல்படுத்தப்படும் அதிகாரத்தை விதிக்கட்டுப் பாடின்றி உளப்போக்கில் தொடர்பற்ற காரணங்களை கருத்தில் கொண்டு செயல்படுத்தக் கூடாது" - தெளிவாக்கம் செய்க.)

(அல்லது)

What are the restrictions on the confirmation of the Administrative Discretion and how they are effected? (நிருவாகத்துறை தன்விருப்புரிமை அதிகாரத்தை ஊர்ஜிதம் செய்வதின் மீதான தடைகள் யாவை மற்றும் அவை எவ்வாறு செயற்படுத்தப் படுகின்றன?)

(அல்லது)

Discretionary power - Write short notes. (விருப்புரிமை அதிகாரம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Subjective satisfaction - Write short notes. (அகஉணர்வு நிலை மன நிறைவு - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

(a) Explain "Administrative discretion" giving examples.

(b) What is meant by discretion exercisable on subjective satisfaction?

(அ) "நிருவாகத்துறை தன்விருப்புரிமையை" உதாரணங்கள் கொடுத்து விளக்குக.

(ஆ) அகஉணர்வு மனநிறைவு நிலையின் பேரில் தன்விருப்புரிமையை பயன்படுத்தல் என்பதன் பொருள் யாது?

நிருவாகத்துறையின் தன்விருப்புரிமை (Administrative Discretion) தன்விருப்புரிமை அதிகாரம் (Discretionary Power) - விளக்கம்:

நிருவாகத்துறையின் தன்விருப்புரிமை என்பது,ஒரு விஷயத்தைப் பொறுத்து முடிவு செய்வதற்கு பல மாற்று வழிகள் (alternative courses of action) இருக்கும் பொழுது, அவற்றில் எவற்றையாவது தேர்ந்தெடுந்து அதன்படி முடிவு செய்யும் உரிமையாகும். இதனை **"உளத் தேர்வு"** என்றும் அழைப்பர். ஆனால் அங்கு முடிவு எடுப்பதற்கு சட்டப்படி ஒரே ஒரு வழிமுறை மட்டும் இருப்பின், அங்கு தன்விருப்புரிமை கிடையாது. தன்விருப்புரிமை என்றவுடன் தன் சொந்த விருப்பத்திற்கு உட்பட்டு எப்படி வேண்டுமானாலும் செயல்படுவதன்று.

தன்விருப்புரிமை என்பது மெய்மைக்கும் பொய்மைக்கும், சரியானவற்றிற்கும் தவறானவற்றிற்கும், நிழலுக்கும் நிஜத்திற்கும் இடையிலான வேறுபாட்டை அறியும் ஒரு விஞ்ஞானம் என்று கூறுகிறார் **நீதியரசர் கோக் (Justice Coke)** அவர்கள். எனவே மெய்மையையும், சரியானவற்றையும் நிலை நிறுத்த மட்டுமே தன்விருப்புரிமையை பயன் படுத்துதல் வேண்டும். மேலும் தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன் படுத்துதல் சட்டப்படியானதாகவும், முறையானதாகவும் இருத்தல் வேண்டும். அதுபோல் கட்டுப்பாடில்லாத மற்றும் வரம்பிடப்படாத நிருவாகத்துறை தன்விருப்புரிமை அதிகாரம் ஏதேச்சதிகாரத்திற்கு வழி வகுத்துவிடும்.

தன்விருப்புரிமை அதிகாரத்தை நிருவாகத்துறைக்கு வழங்க வேண்டிய அவசியம்:

நாம் ஏற்கனவே இந்நூலின் தொடக்க அத்தியாயங்களில் கண்டவாறு, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப கால கட்டங்களில் அரசுகள் தங்கள் ஆட்சி முறையை **"தலையிடாக் கொள்கை" (Laissez faire)**

எனும் தத்துவத்திலிருந்து **"சமூக நல அரசு"** (அல்லது மக்கள் நல அரசு) **(Social Welfare State)** எனும் தத்துவத்திற்கு மாற்றிக் கொள்ள நேரிட்டது. இது அரசின் பணிகளை அதிமாக்கியது. மக்களின் நல வாழ்க்கைக்கு உகந்த பல சட்டங்களை இயற்ற வேண்டிய அவசியமும், அதன் மூலம் அரசிற்கு அதிக அளவில் நிருவாக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. இதனால் நிருவாகத் துறையினருக்கு சட்டம் இயற்றும் அதிகாரமும் (விதியாக்க அதிகாரம்), தகராறுகளில் நீதித்தீர்ப்பு வழங்கும் அதிகாரமும் வழங்கப்பட்டது. மேலும், பொது நலன் அடிப்படையில் நெருக்கடியான சூழ்நிலைகளை சமாளிக்க, அதற்கு உகந்தவாறு முடிவுகளை எடுக்க பரந்த அளவில் **தன்விருப்புரிமை அதிகாரங்களைக் (Discretionary Powers)** கொடுக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

இந்த தன்விருப்புரிமை அதிகாரமானது முறையாகக் கட்டுப் படுத்தப்படவில்லையானால், அது அதிகார துஷ்பிரயோகத்திற்கு வழி வகுத்துவிடும். இதனால் மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, இந்த அதிகாரத்தை செயல்படுத்துவதற்கு வழிகாட்டு நெறிகளும், கொள்கை களும், தரநிலைகளும் சட்டமியற்றுத்துறையால் சம்பந்தப்பட்ட தோற்று வாய் சட்டத்திலேயே அளிக்கப்படுவதுண்டு. எனினும் இவற்றையும் மீறி தன்விருப்புரிமை அதிகாரத்தை நிருவாகத்துறை அதிகார அமைப்பு அல்லது நிருவாகத் துறை முகவர் நிலைகள் துஷ்பிரயோகம் செய்யு மானால், அதனைக் கட்டுப்படுத்த இயற்கை நீதி (Natural Justice), அதிகப்படியான அதிகார ஒப்படைப்பு, (Excessive Delegation) அதிகாரவரம்பு மீறல் (Ultra vires) ஆகிய கோட்பாடுகளின் அடிப் படையில் உயர் அல்லது உச்ச நீதிமன்றம் அதனை **நீதிமுறை மறு ஆய்வு (Judicial Review)** செய்து நீக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன.

நிருவாகத் துறையின் தன்விருப்புரிமை அதிகாரம் எவ்வாறு செயலுறுத்தப்படுகின்றது, அதை எந்த அடிப்படைகளின் கீழ் செல்லத் தகாதது அல்லது துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்று கூறலாம், எப்பொழுது நிருவாகத் துறை தனது தன்விருப்புரிமை அதிகாரத்தை செயல்படுத்த தவறியதாகிறது என்பன போன்ற வினாக்களுக்கெல்லாம் நாம் அடுத்து விடை காண உள்ளோம்.

நிருவாகத்துறையின் தன்விருப்புரிமை அதிகாரத்தை குறிப்பிடும் சொற்றொடர்கள்:

நிருவாகத்துறை அதிகார அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கும் சட்டங்களிலேயே, அந்த அமைப்புகள் தன்விருப்புரிமை அதிகாரத்தை செயல்படுத்தக் கூடிய விதத்தில் சொற்றொடர்கள் அமைந்திருக்கும். எடுத்துக்காட்டாக, **'அவசியமான' (necessary), நியாயமான (reasonable), திருப்தியுற்றால் (is satisfied), அபிப்பிராயத்தில் (is of opinion),** பொது நலனில் **(public interest),** பொது நோக்கத்தில் **(public**

purpose), சிறந்த (efficient), போதுமான (adequate), நலன் தரக்கூடிய (advisable), உரிய (appropriate), பயன்தரக்கூடிய (beneficial), வசதியான (convenient), உகந்த (expedient), நேர்மையான (fair), பொருத்தமுடைய (fit), சரியான (proper), நம்புவதற்கு காரணமான (reason to belive), அவர் கருதினால் (if he thinks) போன்ற சொற் றொடர்களும், அதற்கு எதிரான பொருளைத் தரக்கூடிய சொற்றொடர் களும் ஒரு சட்டத்தில் கொடுக்கப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு தன்விருப்புரிமை அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகப் பொருளாகும்.

சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள மேற்கண்ட சொற்றொடர்களின் அடிப்படையிலேயே, தன்விருப்புரிமை அதிகாரத்தையும் பயன்படுத்துதல் வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு சட்டத்தில் **'அவசியமான'** என்ற சொற்றொடர் கொடுக்கப்பட்டிருப்பின், அச்சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எது அவசியமாக உள்ளதோ, அதனைத் தேர்ந் தெடுத்து, அதற்கு செயலாக்கம் கொடுக்கலாம் அல்லது முடிவெடுக்க லாம். ஒருவேளை நிருவாகத்துறை அதிகார அமைப்பு மேற்கண்ட தன் விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி எடுத்த முடிவு 'அவசியமான' ஒன்றாக இல்லாது இருப்பின், அதை நீதிமுறை மறுஆய்வு மூலம் எதிர்த்து வழக்கிடலாம்.

தன்விருப்புரிமை செயல்படுத்தப்படும் விதங்கள் (Types of Discretion):

நிருவாகத்துறை அதிகார அமைப்பு, **திருப்தியடைதலின் (satisfaction)** பேரில் தன்விருப்புரிமை அதிகாரம் செயல்படுத்தப்பட வேண்டும் என்பது தன்விருப்புரிமை அதிகாரத்தின் முக்கியப் பண்பாகும். இந்த திருப்தியடைதலின் அடிப்படையில், தன்விருப்புரிமை அதிகாரம் இரண்டு விதமாக வகைப்படுத்தப்படுகிறது. அவை,

1. அகநிலை திருப்தியடைதல் (Subjective Satisfaction Type): ஒரு முடிவை எடுப்பதற்குண்டான வரம்புகளை தானே நிர்ணயித்துக் கொள்ளும் அதிகாரத்தை ஒரு சட்டமானது, நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு வழங்கியிருப்பின், அந்த வகையான தன்விருப்புரிமை அதிகாரம், அகநிலை திருப்தியடைதல் எனப்படும். எடுத்துக்காட்டாக, **அவரது அபிப்பிராயத்தில் (if in his opinion), அவர் பொருத்தமெனக் கருதினால் (if he thinks fit), அவர் கருதினால் (if he considers)** போன்ற சொற்றொடர்கள், அகநிலை திருப்தியுறலை சுட்டிக்காட்டு பவையாகும்.

2. புறநிலை திருப்தியடைதல் (Objective Satisfaction Type): எந்தச் சட்டம் ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு தன் விருப்புரிமை அதிகாரத்தை வழங்குகிறதோ, அச்சட்டமே அந்த தன் விருப்புரிமை அதிகாரத்தை எந்த வரம்பிற்கும் பயன்படுத்த வேண்டும் என்று வரையறுத்திருந்து, அந்த வரம்பிற்குள் வரும் ஒன்றைத் தேர்ந்

தெடுத்து அந்த நிருவாகத்துறை அதிகார அமைப்பு முடிவெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பின், அது புறநிலை திருப்தியடைதல் எனப்படும். இதனை தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்துவதற்குண்டான ஒரு முன்நிபந்தனை (condition precedent) என்றும் கூறலாம்.

நிருவாகத்துறை தன்விருப்புரிமையின் மீது நீதிமுறைக் கட்டுப்பாடு (Judicial Control over Administrative Discretion):

நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்படும் தன்விருப்புரிமை அதிகாரத்தை அது செயல்படுத்துகையில், அது ஒரு தனி நபரின் தனிப்பட்ட (தடுப்புக்காவலில் சிறை வைத்தல்) மற்றும் சொத்து குறித்த உரிமைகளை (சொத்துக்களை கையகப்படுத்தல், பறிமுதல் செய்தல், அழித்தல்) பாதிப்பதாக உள்ளது. எனவே அளிக்கப்பட்ட தன்விருப்புரிமை அதிகாரத்தை நிருவாகத்துறை சரியான வழியில் பயன்படுத்தியுள்ளதா என்று ஆய்வு செய்தல் அவசியம். இந்த ஆய்வை, உயர் மற்றும் உச்ச நீதிமன்றமானது, **நீதிமுறை மறுஆய்வின் (Judicial Review)** வழியாக செய்கின்றது. இதுவே, நிருவாகத்துறை தன்விருப்புரிமை அதிகாரத்தின் மீதான நீதிமுறைக் கட்டுப்பாடு எனப்படுகிறது. இந்தக் கட்டுப்பாடு இல்லாது போனால், நிருவாகத்துறையின் தன்விருப்புரிமை அதிகாரம், ஏதேச்சதிகாரத்திற்கு வழிவகுத்துவிடும்.

நீதிமுறை மறுஆய்விற்கான அடிப்படைகள் (Grounds for Judicial Review) (அல்லது) நிருவாகத்துறை தன்விருப்புரிமையின்பாற்பட்ட நடவடிக்கையை மறுதலிப்பதற்கான காரணங்கள் (Grounds for challenging the Discretionary Action of Administration):

நீதித்துறையானது பின்வரும் இரண்டு முக்கிய அடிப்படைகளின் அல்லது காரணங்களின் கீழ் நிருவாகத்துறை தன்விருப்புரிமையின் மீது கட்டுப்பாட்டை செயல்படுத்தலாம். அதாவது நீதித்துறையானது அந்த அடிப்படைகளின் கீழ் நிருவாகத்துறையின் தன்விருப்புரிமை அதிகாரத்தில் தலையிடலாம் அவை, **(I) தன்விருப்புரிமை அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல் அல்லது மீறுதல் (Abuse of Discretion or Exceeding the Discretion) (II) தன்விருப்புரிமை அதிகாரத்தை செயல்படுத்த தவறுதல் (Failure to exercise Discretion).** இவற்றை சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

(I) தன்விருப்புரிமை அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல் (Abuse of Discretion):

தன்விருப்புரிமை அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல் என்றால், அதனைத் தவறாகப் பயன்படுத்துதல் (misuse of discretion) என்று பொருளாகும். பின்வரும் பல்வேறு சூழ்நிலைகளில் நிருவாகத்துறையானது தனக்களிக்கப்பட்ட தன்விருப்புரிமை அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக அனுமானிக்கலாம். அவை வருமாறு.

(1) தீயெண்ணம் (Mala fide):

பொது விளக்கம்: நிருவாகத்துறை அதிகார அமைப்பால் செயல் படுத்தும் அனைத்து அதிகாரங்களும், நியாயமான மற்றும் சட்டப் படியான முறையில் இருத்தல் வேண்டும். எனவே நிருவாகத்துறைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை, அது முறையாகவும், சட்டப் படியாகவும், நல்லெண்ணத்துடனும் பயன்படுத்துகிறதா என்று கவனிக்க வேண்டியது நீதித்துறையின் கடமையாகும். இவ்வாறு நல்லெண்ணத் துடன் பயன்படுத்தப்படாத அதிகாரம், தீயதாகும் மற்றும் அதன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை சட்ட முரணானதாகும்.

வரையறை (Definition): 'தீயெண்ணம்' எனும் பதத்திற்கு சுருக்க மான மற்றும் விஞ்ஞானபூர்வமான வரையறை தருவது என்பது இயலாத செயல். எனினும், தீயெண்ணத்திற்கு தீய-விருப்பு (ill-will), நேர்மையற்ற கருத்து (dishonest intention) அல்லது கெட்ட உள்நோக்கம் (corrupt motive) என்று பொருள் பகரலாம். ஒரு அதிகாரம் தீங்கான எண்ணத் துடன் (maliciously), தனிப்பட்ட பகையுணர்வு (out of personal animosity), தீய-விருப்பு (ill-will) அல்லது பழிவாங்கும் உணர்வுடன் (vengeance) மற்றும் அதிகாரம் அளித்த சட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒரு நோக்கத்தை அடையும் கருத்துடன் (with intent to achieve an object foreign to the statute) பயன்படுத்தப்பட்டால் அந்த அதிகாரத்தை தீயெண்ணத்துடன் கூடியது என்று அழைக்கலாம்.

வகைகள் (Types): தீயெண்ணம் இரண்டு வகைப்படும். அவை (a) வெளிப்படையான தீயெண்ணம் அல்லது பொருண்மை நிலைப் பாட்டில் தீயெண்ணம்; (b) உட்கிடையான தீயெண்ணம் அல்லது சட்ட நிலைப்பாட்டில் தீயெண்ணம். இவற்றின் விளக்கம் பின்வருமாறு.

(a) வெளிப்படையான தீயெண்ணம் அல்லது பொருண்மை நிலைப்பாட்டில் தீயெண்ணம் [Express Malice (Malafide) (or) Malice in fact]: நிருவாகத் துறையின் ஒரு நடவடிக்கையானது தனிப்பட்ட பகையுணர்வு (out of personal animosity), தீய-விருப்பு (ill-will), பழிவாங்கும் உணர்வு (vengeance) அல்லது நேர்மையற்ற கருத்து (dishonest intention) ஆகியவற்றின் காரணமாக எடுக்கப்பட்டது என்றால், அது வெளிப் படையான தீயெண்ணம் அல்லது பொருண்மை நிலைப்பாட்டில் தீயெண்ணம் எனப்படும். எனவே அந்நடவடிக்கையை செல்லாது என்றோ அல்லது நசித்துப் போகத்தக்கது (quashed) என்றோ நீதி மன்றங்கள் உத்திரவிட வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக பின்வரும் சில வழக்குகளைக் கண்டால், மேற்படி கருத்துரை மேலும் தெளிவாகும்.

Pratap Singh v. State of Punjab[1] - எனும் வழக்கில் மனுதாரர்

1. A.I.R. 1964 S.C. 72.

பிரதாப் சிங் ஒரு பொது அறுவை மருத்துவர். அவர் ஓய்வு பெறுவதற்கு முன்னதான விடுமுறையை (leave preparatory to retirement) எடுத்துக் கொண்டார். ஆரம்பத்தில் அவருக்கு மேற்கண்ட விடுமுறை அளிக்கப் பட்டது. ஆனால் பின்னர் அது இரத்து செய்யப் பட்டது. அவர் இடைக் கால பணி நீக்கம் (suspension) செய்யப்பட்டார். இதனால் அவருக்கெதி ராக துறை சார்ந்த விசாரணை (departmental inquiry) தொடங்கப் பட்டது. இறுதியாக அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். மனுதாரர் இதை எதிர்த்து தொடுத்த வழக்கில், மாநில முதலமைச்சர் செய்த சட்ட விரோதமான கோரிக்கைகளுக்கு தான் செவி சாய்க்காததால் ஏற்பட்ட தனிப்பட்ட பல காயுணர்வின் காரணமாக, அவரது தூண்டுதலின் பேரில் தான் தனக்கெதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது; மேலும் தான் பதவியிலிருந்து நீக்கப்பட்டேன் என்று வாதம் புரிந்தார். இந்த வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, அவரை பதவியிலிருந்து நீக்கியது தீயெண்ணத்துடன் கூடியது என்றும், அதிகார துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே அது செல்லாது என்றும் தீர்ப்புரைத்தது.

Rowjee v. State of A.P.[2] - எனும் வழக்கில் சில போக்குவரத்து வழித்தடங்களை தேசியமயமாக்குவதற்கு உண்டான ஒரு திட்டத்தை மாநில சாலைப் போக்குவரத்துக் கழகம் தயாரித்தது. இத்திட்டம் அப்பொழுதைய முதலமைச்சரின் ஏவுரைகளின் படி தயாரிக்கப் பட்டதாகும். இதை எதிர்த்து மனுதாரர் ராவ்ஜீ என்பவர், சம்பந்தப் பட்ட சாலை உள்ள பகுதியில் உள்ள தனியார் பேருந்து உரிமை யாளர்கள் அம்முதலமைச்சர் சார்ந்துள்ள கட்சிக்கு எதிராக உள்ள கட்சியின் ஆதரவாளர்கள்; எனவே அவர்களை பழிவாங்கும் நோக்குடன் அக்குறிப்பிட்ட சாலைகள் தேசியமயமாக்கலுக்காக தேர்ந்தெடுக்கப் பட்டன என்று வாதம் புரிந்தார். இந்த வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, அத்திட்டம் தீயெண்ணத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே அதற்கான உத்திரவு செல்லாதது என்றும் தீர்ப்புரைத்தது.

Shivajirao Patil v. Mahesh Madhav[3] - எனும் வழக்கில் தீயெண்ணத்தை நிரூபிக்க நேரடி சான்றுகள் இல்லாத பொழுதும், அது பிற சூழ்நிலைகளிலிருந்து உச்ச நீதிமன்றத்தால் அனுமானம் செய்யப் பட்டது (ஊகிக்கப்பட்டது). இவ்வழக்கின் பொருண்மைகளின்படி மகராஷ்டிரா மாநிலத்தின் அப்பொழுதைய முதலமைச்சரின் மகள் எம்.டி.. பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்தார். அவர் அந்தப் படிப்பின் தேர்வில் தேர்ச்சியுறுவதற்காக, அவரது மதிப்பெண் பட்டியலில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும், அவரது தேர்ச்சியை இரத்து செய்யும்படியும் ஒரு நீதிப் பேராணை மனு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதை மெய்ப்பிக்க நேரடி சாட்சியங்கள் ஏதும்

2. A.I.R. 1964 S.C. 962.
3. (1987) 1 SCC 227 : A.I.R. 1987 S.C. 294

இல்லாதபொழுதும், பல்வேறு சூழ்நிலைகளிலிருந்து, உச்ச நீதிமன்ற மானது, அப்பொழுதைய முதலமைச்சரின் சொல்படி தேர்வை நடத்திய வரே மதிப்பெண் பட்டியலையும் திருத்தியுள்ளார் என்ற அனுமானத் திற்கு வந்து, இது தீயெண்ணத்துடன் கூடியது என்று தீர்ப்பளித்தது.

(b) உட்கிடையான தீயெண்ணம் அல்லது சட்ட நிலைப்பாட்டில் தீயெண்ணம் [Implied Malice (Malafide) (or) Malice in law]: நிருவாகத் துறையால் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை அல்லது செயலுறுத்தப்பட்ட அதிகாரம், சரியான மற்றும் நியாயமான காரணத்துடன் இல்லாது இருப்பின் அல்லது சம்மந்தப்பட்ட சட்டத்தின் நோக்கத்திற்கு அப்பாற் பட்டதாக இருப்பின், அந்த நடவடிக்கை தீயதாகும் மற்றும் அங்கு செயலுறுத்தப்பட்ட அதிகாரம், அதிகாரவரம்பு மீறியதாகும். இது குறித்து ஒரு பழமையான ஆங்கில வழக்கையும், இரண்டு இந்திய வழக்குகளையும் காண்போமா?

Municipal Council of Sydney v. Campbell[4] - எனும் ஆங்கில வழக்கில் சம்பந்தப்பட்ட சட்டத்தின் கீழ் நகராட்சி குழுமமானது "நகரத்தின் எந்தவொரு பகுதியையும் புனரமைப்பு செய்வதற்காக அல்லது வளர்ச்சிப் பணிகளை செய்வதற்காக" நிலங்களை கையகப்படுத்த அதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. ஒரு தெருவை அகலப்படுத்த பிரச் சனைக்குரிய ஒரு நிலத்தை அக்குழுமம் கையகப்படுத்தியது. ஆனால் உண்மையில் நெடுஞ்சாலை ஒன்றை உருவாக்குதன் மூலமாக அந்த இடத்தின் நில மதிப்பை அதிகரிக்கச் செய்து பலன் பெறும் நோக்கில் தான் மேற்படி நிலம் கையகப்படுத்தப்பட்டது. வளர்ச்சிப் பணி மேற் கொள்வதற்கோ அல்லது புனரமைப்பு செய்வதற்கோ எந்த திட்டமும் உத்தேசிக்கப்படவில்லை அல்லது அக்குழுமத்தால் விவாதிக்கப்படவு மில்லை. எனவே இங்கு நிலங்களை கையகப்படுத்த செயலுறுத்தப்பட்ட அதிகாரம் உள்நோக்கம் கொண்டது என்றும், அதிகாரவரம்பு மீறியது என்றும் நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.

Express Newspapers (P) Ltd. v. Union of India[5] - எனும் புகழ்பெற்ற இந்திய வழக்கில், எக்ஸ்பிரஸ் செய்தித்தான் நிறுவன கட்டிடத்தின் குத்தகை உரிமை பறிக்கப்பட்டு, அச்சொத்தில் உள் நுழைந்து சுவாதீனம் எடுக்க மத்திய அரசு அனுமதித்தது. இதையொட்டி அக்கட்டிடத்தை இடிக்கப் போவதாகவும் மிரட்டப்பட்டது. இது எக்ஸ்பிரஸ் செய்தித்தாள் நிறுவனத்திற்கு எதிராக ஆளும் கட்சியினரால் அரசியல்ரீதியாக அனுமதிக்கப் பட்ட ஒரு நடவடிக்கையாகும்; எனவே இது தீயெண்ணமுடையது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

ஆனால் **State of Haryana v. Bhajanlal**[6] - எனும் வழக்கில்

4. (1925) AC 338.
5. (1986) 1 SCC 133 : A.I.R. 1986 S.C. 872.
6. 1992 Supp (1) SCC 335 : A.I.R. 1992 S.C. 604

1947-ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவுகளின் கீழ் முதலமைச்சருக்கு எதிராக குற்ற வழக்கு தொடர எடுக்கப்பட்ட நடவடிக்கையை உச்ச நீதிமன்றம் தீயெண்ணமுடையதல்ல என்றும், எனவே அந்நடவடிக்கை நசித்து போகத்தக்கதன்று என்றும் உச்ச நீதிமன்றம் விளம்பியது.

மெய்ப்பிக்கும் சுமை (Burden of Proof): யார் நிருவாகத்துறை நடவடிக்கை அல்லது முடிவு அல்லது அதிகாரம் தீயெண்ணம் கொண்டது என்று கூறுகின்றாரோ, அவர்தான் அதை மெய்ப்பிக்க வேண்டிய கடமையும் கொண்டவர். மெய்ப்பிக்கும் சுமை அவ்வாறு குற்றஞ்சாட்டுபவர் மேல் உள்ளது. ஆனால் இச்சுமை அதிகப்படியானதாகும். அதாவது எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் தீயெண்ணத்தை மெய்ப்பித்தல் வேண்டும். ஏனெனில், நிருவாகத் துறையானது தனது அதிகாரத்தை எப்பொழுதும் நல்லெண்ணத்துடன் தான் செயலுறுத்துகின்றது என்றே அனுமானிக்கப்படுகிறது. எனவே இந்த அனுமானத்தை தகர்க்க, மிகவும் நம்பத்தக்க சாட்சியத்தைக் கொண்டுதான் நிருவாகத்துறையின் தீயெண்ணத்தை மெய்ப்பித்தல் வேண்டும். எனவே, தீயெண்ணத்தை, வழக்கில் தோல்வியுறக்கூடிய நிலையில் உள்ள வழக்காடிக்கு இருக்கும் கடைசி ஆயுதம் என்று கூறலாம்.

சுருக்கமுறையில் தள்ளுபடி செய்தல் (Summary Dismissal): மனுதாரர் நிருவாகத்துறையின் தீயெண்ணம் தொடர்பாக கடுமையான குற்றச்சாட்டுகளை தனது மனுவில் கூறியிருக்கும் பொழுது, அது குறித்த எதிர்வாதங்களைக் கேட்க எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பாமலேயே அம்மனுவை நீதிமன்றம் முதனிலையிலேயே சுருக்க முறையில் தள்ளுபடி செய்தல் கூடாது. எனினும், அம்மனுவில் தீயெண்ணம் குறித்த முதற்தோற்ற வழக்கு (prima facie case) அல்லது அது சம்பந்தப்பட்ட உறுதியான விபரங்கள் ஏதும் இல்லாது போனால் அதனை நீதிமன்றம் எடுப்பிலேயே தள்ளுபடி செய்துவிடலாம். ஆனால் அவ்வாறு தள்ளுபடி செய்வதற்கு முன் சம்பந்தப்பட்ட நடவடிக்கை தீயெண்ணம் கொண்டதா என்பதை சம்பந்தப்பட்ட வழக்கில் உள்ள சூழ்நிலைகளை தனித்தனியாக ஆராயாமல் ஒட்டு மொத்தமாக ஆராய்ந்து பார்த்து முடிவெடுக்க வேண்டும்.

(2) முறையற்ற நோக்கத்திற்காக பயன்படுத்தல் (Use for improper purpose):

எந்த நோக்கத்திற்காக தன்விருப்புரிமை அதிகாரம் நிருவாகத் துறைக்கு அளிக்கப்பட்டதோ, அந்நோக்கத்திற்காக மட்டுமே அத்தன் விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும். வேறு நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டால், அது தன்விருப்புரிமை அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாகும். எனவே சம்பந்தப்பட்ட நடவடிக்கை செல்லாத ஒன்றாக நீதிமன்றத்தால் விளம்பப்படும். 'முறையற்ற நோக்கம்' என்பது 'தீயெண்ணத்திலிருந்து' வேறுபட்டதாகும். தீயெண்ணம்

என்பது தீய-விருப்பு, பகைமையுணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் எழுவதாகும். ஆனால் முறையற்ற நோக்கம் அவ்வாறு எழுவதல்ல. சில சமயங்களில், ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு பொது நலனை உள்நோக்கமாகக் கொண்டு ஒரு நடவடிக்கை எடுத்தாலும், அது சட்டத்தில் கூறப்பட்டுள்ள நோக்கத்தின் வரம்பிற்குள் வராது இருப்பின், அந்நடவடிக்கை செல்லாத ஒன்றே. அதாவது நல்லெண்ணத்துடன் ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், அது, நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு அதிகாரம் அளித்த சட்டத்தில் கூறப்பட்டுள்ள நோக்கத் திற்கு அப்பாற்பட்டதாக இருப்பின், அந்நடவடிக்கை இரத்து செய்யப் படத்தக்கதே.

Hukam Chand v. Union of India[7] - எனும் வழக்கில் மனு தாரரின் தொலைபேசி இணைப்பானது, அவர் வேளாண் பொருட்களை சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்காக பயன்படுத்திய காரணத்தால் துண்டிக்கப்பட்டது. 1885-ஆம் ஆண்டின் தொலைத் தொடர்பு சட்டத்தின் 5(1)-வது பிரிவின் கீழ் மத்திய அரசு அல்லது மாநில அரசானது, அவ்வாறு தொலைபேசி இணைப்பை துண்டிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு துண்டிக்க வேண்டுமானால், அங்கு நெருக்கடியான சூழ்நிலை நிலவ வேண்டும் அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு பங்கப்படும் சூழல் இருக்க வேண்டும். இங்கு மேற்படி அதிகாரமானது பொது மக்கள் பாதுகாப்பிற்கு அல்லாத வேறு காரணத் திற்காக தொலைபேசி இணைப்பைத் துண்டிக்கப் பயன்படுத்தப் பட்டதால், மேற்படி நடவடிக்கை செல்லாது என்று உச்ச நீதிமன்றத்தால் விளம்பப்பட்டது.

Nalini Mohan v. District Magistrate[8] - எனும் வழக்கில் இனக் கலவரம் காரணமாக பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றப்பட்ட நபர் களுக்கு புனர்வாழ்வளிக்க சம்பந்தப்பட்ட சட்டம், ஒரு நிருவாகத் துறை அதிகார அமைப்பிற்கு அதிகாரம் வழங்கியிருந்தது. இங்கு அந்த அதிகார அமைப்பு, மருத்துவ விடுப்பில் பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்த ஒரு நபருக்கு அடைக்கலம் கொடுக்க தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி உத்திரவிட்டது. இந்த உத்திரவு முறையற்ற நோக்கத்திற்காக பிறப்பிக்கப்பட்டது என்ற அடிப்படையில் அதனை இரத்து செய்ய கல்கத்தா உயர் நீதிமன்றம் உத்திரவிட்டது.

(3) தொடர்பற்ற பரிசீலனைகள் (Irrelevant Considerations):

பொதுவாக நிருவாகத்துறை அதிகார அமைப்புகளுக்கு தன் விருப்புரிமை அதிகாரத்தை அளிக்கும் சட்டத்தில், அந்த நிருவாகத்துறை அதிகார அமைப்பு ஒரு பிரச்சனையில் ஒரு முடிவிற்கு வருவதற்கு எத்தகு தொடர்புடைய கூறுகளை பரிசீலனை (relevant factors to be con-

7. A.I.R. 1976 S.C. 789.
8. A.I.R. 1951 Cal. 346.

sidered) செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுக் கூறும். சில சமயங்களில் இத்தகு தொடர்புடைய கூறுகள் அச்சட்டத்தில் காணப்படாமலும் இருக்கலாம். இச்சூழலிலும்கூட, அந்த நிருவாகத்துறை அதிகார அமைப்பு, தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்தி முடிவு செய்கையில் தொடர்புடைய கூறுகளை பரிசீலனை செய்தல் வேண்டும். அதுபோல், தொடர்பற்ற கூறுகளையும் நிருவாகத்துறை அதிகார அமைப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுதல் கூடாது. இவ்வாறு தொடர்பற்ற கூறுகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, அதனடிப் படையில் ஏதேனும் முடிவுகள் செய்தால் அல்லது நடவடிக்கை எடுத்தால், அது செல்லாததாகும்; இரத்து செய்யப்படத் தக்கதாகும்.

Ram Manohar Lohia v. State of Bihar[9] - எனும் வழக்கில் மனுதாரர் **சட்டம் மற்றும் ஒழுங்கின்** பராமரிப்பிற்கு (maintenance of **law and order**) குந்தகம் விளைவிக்கும் வண்ணம் செயல்படுவதிலிருந்து அவரைத் தடுக்கும் பொருட்டு, அவர் இந்திய பாதுகாப்புச் விதிகளின் கீழ் சிறைப் படுத்தப்பட்டார். ஆனால் மேற்படி விதிகள், ஒருவர் **பொது ஒழுங்கின்** பராமரிப்பிற்கு (maintenance of **public order**) குந்தக மானவர் என்பது தெரிய வந்தால், அவரைச் சிறைப்படுத்த மேற்படி விதிகள் அதிகாரம் அளிக்கின்றன. எனவே உச்ச நீதிமன்றம், மேற்படி வழக்கில் மனுதாரரை சிறைப்படுத்த பிறப்பிக்கப்பட்ட உத்திரவு தொடர் பற்ற கூறுகளின் பரிசீலனையின் அடிப்படையில் அமைந்ததென்று கூறி, அவ்வுத்தரவை இரத்து செய்தது. இங்கு உச்ச நீதிமன்றம், "சட்டம் மற்றும் ஒழுங்கு" எனும் பதத்தை "பொது ஒழுங்கு" எனும் பதத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டியது.

Nataraja Mudaliar v. S.T.A. Madras[10] - எனும் வழக்கில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு சரக்கேற்றி வாகனம் இயங்கிவந்தது. இவ்வாறு இயங்குவதற்கான அனுமதி காலவதியாகி விட்டது. எனவே அந்த அனுமதியை புதுப்பிப்பதற்காக அந்த சரக்கேற்றி வாகனத்தின் உரிமையாளர் மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்தார். ஆனால், அது நிராகரிக்கப்பட்டது. இதற்கு காரணமாக, பொதுத் துறை அமைப்புகள் (public sector undertakings) அளித்துள்ள சரக்கேற்றி வசதிகள் போதுமான அளவு இருப்பதால், தனியாரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது என்று கூறப்பட்டது. ஆனால் இது தொடர்பற்ற கூறுகளின் பரிசீலனையின் அடிப்படையில் அமைந்த முடிவு என்று உச்ச நீதிமன்றம் கூறி, அதனை இரத்து செய்தது.

(4) தொடர்புடைய கூறுகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாமல் விட்டுவிடுதல் (Leaving out Relevant Consideration):

நாம் மேற்கண்டபடி, ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு

9. A.I.R. 1966 S.C. 740.
10. A.I.R. 1974 S.C. 144.

தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி முடிவு அல்லது நடவடிக்கை எடுக்கையில், தொடர்புடைய கூறுகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு எடுத்துக் கொள்ள தவறுதல், சம்பந்தப்பட்ட முடிவை செல்லாததாக்கும். ஆனால் சம்பந்தப்பட்ட முடிவில் தொடர்புடைய கூறுகள் பரிசீலனை செய்யப்படவில்லை என்பதை அனுமானம் செய்யுமளவிற்கு விரிவான காரணங்கள் இல்லாது போனால், அத்தொடர்புடைய கூறுகளை நிருவாகத்துறை அதிகார அமைப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்று மெய்ப் பித்தல் மிகவும் கடினமானதாகும்.

Rampur Distillery v. Company Law Board[11] - எனும் வழக்கில் ஒரு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரின் (திரு. டால்மியா) கடந்த கால செயல்பாடுகள் நீதியரசர் விவின் போஸ் அவர்கள் தலைமையில் அமைந்த ஆணையத்தால் மிகவும் கடுமையாக விமர்சிக்கப்பட்டதால், அந்நிறுவனத்தின் மேலாண்மை முகமையை (managing agency) புதுப்பித்தலுக்கு உண்டான அனுமதியை வழங்க நிறுவன சட்ட வாரியம் (Company Law Board) மறுத்துவிட்டது. நீதிமன்றமும் அந்நிறுவன இயக்குநர்களின் கடந்த செயல்பாடுகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு தொடர்புடைய கூறே என்று ஏற்றுக் கொண்டது. ஆனால், அந்நிறுவனத்தின் மேலாண்மை முகமையை புதுப்பிப்பதற்கு நெருங்கிய தொடர்புடைய கூறு, அதன் இயக்குநர்களின் தற்கால செயல் பாடுகள்தான். அவற்றை நிறுவன சட்ட வாரியம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள தவறிவிட்டது என்று உச்ச நீதிமன்றம் மேல்முறையீட்டில் கூறியது.

(5) கலவையான பரிசீலனை (Mixed Consideration):

சில சமயங்களில் நிருவாகத்துறையானது தனது தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்தி முடிவு அல்லது நடவடிக்கை எடுக்கையில் தொடர்புடைய மற்றும் தொடர்பற்ற கூறுகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுவிடுவதுண்டு. இம்மாதிரியான சூழ்நிலையில், நீதிமன்றமானது, தொடர்பற்ற பரிசீலனைகளை விலக்குவதால், அதன் இறுதி முடிவு பாதிப்படையுமா, இல்லையா என்பதை ஆராய்ந்து பார்த்து தீர்ப்பளிக் கும். அதாவது தொடர்பற்ற பரிசீலனைகளை விலக்குவதால், நிருவாகத் துறையின் இறுதி முடிவு பாதிக்கப்படும் என்று நீதிமன்றம் திருப்தியுற் றால், அந்த முடிவை செல்லாத ஒன்றென நீதிமன்றம் விளம்பும். ஆனால், அவ்வாறு பாதிப்படையாது என்று நீதிமன்றம் திருப்தியுற்றால், சம்பந்தப் பட்ட நிருவாகத்துறை அதிகார அமைப்பு தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி எடுத்த முடிவு செல்லாத ஒன்றென விளம்பாது.

எனினும் தடுப்புக் காவல் சிறை வைப்பு வழக்குகளில் இந்நிலைப் பாட்டை நீதிமன்றங்கள் சற்று கடுமையான முறையில் அணுகுகின்றன.

11. A.I.R. 1970 S.C. 1789.

அதாவது ஒருவரைத் தடுப்புக் காவலில் சிறை வைக்க பிறப்பிக்கப்பட்ட உத்திரவில் தொடர்புடைய மற்றும் தொடர்பற்ற கூறுகள் கலவையாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பின், அந்த உத்திரவை செல்லாதென நீதிமன்றங்கள் விளம்புகின்றன. அவற்றைப் பிரித்துப் பார்த்து பார்த்து ஆராய்வதில்லை. எடுத்துக்காட்டாக பின்வரும் வழக்கொன்றை கவனிப்போம்.

Shibbanlal v. State of U.P.[12] - எனும் வழக்கில் ஒரு நபர் பின் வரும் இரண்டு அடிப்படைகளின் கீழ் தடுப்புக் காவலில் சிறை வைக்கப் பட்டார். அவை, (1) அவரது செயற்பாடுகள், சமூகத்திற்கு இன்றியமை யாததாக உள்ள தேவைகளை அளித்தலின் பராமரிப்பிற்கு குந்தகம் (prejudicial to the maintenance of supplies necessary to the community) விளைவிப்பதாக உள்ளது; (2) அவரது நடவடிக்கைகள் சட்டம் மற்றும் ஒழுங்கின் பராமரிப்பிற்கு கேடு விளைவிப்பதாக உள்ளது. இந்த இரண்டு அடிப்படைகளில், முதல் அடிப்படை தொடர்பற்ற கூறாகும். ஆனால் இரண்டாவது கூறு, தொடர்புடைய கூறாகும். எனினும், இவற்றை உச்ச நீதிமன்றம் மேற்கண்டவாறு பிரித்துப் பார்த்து ஆராய வில்லை. மாறாக அத்தடுப்புக் காவல் சிறை வைப்பு உத்திரவு தொடர்பற்ற மற்றும் தொடர்புடைய பரிசீலனைகளின் (அதாவது கலலையான பரிசீலனையின்) அடிப்படையில் இருந்த காரணத்தால் அவ்வுத்திரவு முழுவதையுமே செல்லாத ஒன்றென உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

(θ) நியாயமற்ற தன்மை (Unreasonableness):

நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு வழங்கப்பட்ட தன் விருப்புரிமை அதிகாரத்தை அது நியாயமான முறையில் பயன்படுத்த வேண்டும். அது நியாயமற்ற முறையில் பயன்படுத்தப்பட்டால், அது அதிகார துஷ்பிரயோகம் ஆகும். எனவே இதனடிப்படையில் எடுக்கப் பட்ட நடவடிக்கை அல்லது முடிவு செல்லாத ஒன்றென நீதிமன்றத்தால் அறிவிக்கப்படும். நிருவாகத்துறை அதிகார அமைப்பின் ஒரு முடிவு, எந்த ஒரு சராசரி மனிதனும் எடுக்கக் கூடிய ஒரு முடிவு அல்ல என்றாலோ அல்லது அந்த முடிவை நியாயப்படுத்துவதற்கு எக்காரணங்களும் சாட்சியங்களும் இல்லையென்றாலோ அல்லது இழிவானதாகவோ இருந்தால், அம்முடிவு நியாயமற்றதாகும்.

Rameshwar Shaw v. D.M.Burdwan[13] - எனும் வழக்கில் மனுதாரர் ஏற்கனவே சிறையில் இருக்கும் பொழுது, அவரை தடுப்புக் காவலில் வைக்க உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த உத்திரவும் அவர் இருக்கும் சிறைக்கு அனுப்பப்பட்டது. ஒரு நபர் பொது ஒழுங்கிற்கு குந்தகம் விளைவிப்பதிலிருந்து அவரைத் தடுக்கும் பொருட்டே, தடுப்புக் காவலில் சிறை வைக்க உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது. ஆனால் மனுதாரர்

12. A.I.R. 1954 S.C. 179.
13. A.I.R. 1964 S.C. 334.

சிறையில் உள்ளார். சிறையில் உளள ஒரு நபரால் பொது ஒழுங்கு எவ்வாறு பாதிக்கப்படும்? எனவே அந்த உத்திரவு நியாயமற்றது எனும் அடிப்படையில் உச்ச நீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்டது.

Sant Raj v. O.P.Singh[14] - எனும் வழக்கில் ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு ஒன்றை செய்ய தன்விருப்புரிமை அதிகாரம் பெற்றிருக்கும் பொழுது, அந்த அதிகார அமைப்பு அதனை காரண-காரியத்தின் மற்றும் நீதியின் அடிப்படையிலும்தான் செய்ய வேண்டுமேயொழிய, தனிப்பட்ட அபிப்பிராயத்தின் பேரில் செய்தல் கூடாது என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடக் கூறியுள்ளது.

(6) நன்கு மறைக்கும்படி தோற்றம் தரக்கூடிய விதத்தில் அதிகாரத்தை செயற்படுத்தல் (Colourable Exercise of Power):

ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பால் தன்விருப்புரிமை அதிகாரம் பயன்படுத்தப்படும் பொழுது, அதை மேலீடாகப் பார்க்கையில், எந்த நோக்கத்திற்காக அந்த அதிகாரம் வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டது போல் தோன்றும்; ஆனால் உண்மையில் பார்க்கையில் அந்த தன்விருப்புரிமை அதிகாரம் மாறுபட்ட வேறொரு நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது தெரிய வரும். இதுவே நன்கு மறைக்கும்படி தோற்றம் தரக்கூடிய விதத்தில் அதிகாரத்தை செயற்படுத்தல் எனப்படுகிறது. இது பெரும்பாலும் எந்த முறையில் ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு தனக்களிக்கப்பட்ட தன்விருப்புரிமை அதிகாரத்தை செயற்படுத்துவது என்பது குறித்து, அதற்கு அதிகாரம் அளித்த சட்டத்தில் குறிப்பிடப்படாமல் இருக்கையில், அந்த அதிகார அமைப்பு சட்டத்தன்மை எனும் போர்வையில் அந்த அதிகாரத்தை பயன்படுத்தும் பொழுது எழுகிறது. இது ஏறத்தாழ தன்விருப்புரிமை அதிகாரத்தை ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு **முறையற்ற நோக்கத்திற்காக பயன்படுத்துதலை (Use for improper purpose)** ஒத்துள்ளது. (இதனை நாம் ஏற்கனவே முன்சென்ற 2-வது எண்ணிட்ட பத்தியில் விரிவாகக் கண்டுள்ளோம்.) எனவே மேற்கண்டவாறு ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு தனக்களிக்கப்பட்ட தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்தி ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் அல்லது முடிவு செய்தால், அது செல்லாதது என்று நீதி மன்றத்தால் அறிவிக்கப்படும்.

(7) இயற்கை நீதிக் கோட்பாடுகளையும், நடைமுறைத் தேவைகளையும் கடைப்பிடிக்காது இருத்தல் (Non-compliance with Procedural Requirements and Principles of Natural Justice):

ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு தனது தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்துவதற்குண்டான நடைமுறைத் தேவைகள்,

14. A.I.R. 1985 S.C. 677.

அதற்கு அத்தகு அதிகாரம் அளித்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்து, அவற்றை அந்த அமைப்பு கடைப்பிடிக்காது போனால், அங்கு பயன்படுத்தப்பட்ட அதிகாரம், குறைபாடுடையதாகும் மேலும் அங்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது முடிவு செல்லாத ஒன்றாகும். அதுபோல், ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு, தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்தி முடிவு செய்கையில், இயற்கை நீதிக் கோட்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டும். இக்கோட்பாடுகளைக் கடைப்பிடிக்காமல் எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது முடிவு, இல்லா நிலையதாகும். (நாம் இது குறித்து ஏற்கனவே வினா எண். 27 -ல் விரிவாகக் கண்டுள்ளோம்.)

(8) அதிகாரவரம்பை மீறிச் செல்லுதல் (Exceeding Jurisdiction):

தன்விருப்புரிமை அதிகாரம் வழங்கிய சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள வரம்பிற்குட்பட்டு அல்லது அச்சட்டத்திற்குட்பட்டு, ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு அத்தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும். இதை மீறி எடுக்கப்படும் நடவடிக்கை அல்லது முடிவு அதிகாரவரம்பை மீறியதாகும் (ultra vires). எனவே இல்லா நிலையதாகும் (void). எடுத்துக்காட்டாக பின்வரும் இரண்டு வழக்குகளைக் கவனிப்போம்.

C.E.Corporation v. Workers Union[15] - எனும் வழக்கில், பணியாட்களுக்கான மருத்துவ உதவித் தொகை வழங்க ஒரு அதிகார அமைப்பிற்கு சட்டத்தால் அதிகாரம் வழங்கப்பட்டிருந்து, அந்த அதிகார அமைப்பு அப்பணியாட்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் மருத்துவ உதவித் தொகை வழங்கினால், அது அதிகாரவரம்பை மீறியதாகும்.

T.K.Chaudhary v. Datta[16] - எனும் வழக்கில் ஆசிரியர்களை பணிநீக்கம் செய்ய ஒரு அதிகார அமைப்பிற்கு அதிகாரம் அளிக்கப் பட்டிருந்தது. ஆனால் அந்த அதிகார அமைப்பு முதல்வர் (Prinicipal) ஒருவரை பணிநீக்கம் செய்தது. இது அதிகாரவரம்பை மீறியது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

(II) தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்தத் தவறுதல் (Failure to Exercise Discretion):

நாம் இதுகாறும் தன்விருப்புரிமை அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துதல் (துஷ்பிரயோகம் செய்தல்) குறித்து கண்டோம். இனி, அளிக்கப்பட்டுள்ள தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தத் தவறுதல் குறித்து காண உள்ளோம்.

அதாவது, ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு தன்

15. A.I.R. 1959 S.C. 1191.
16. A.I.R. 1958 S.C. 722.

விருப்புரிமை அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கும் பொழுது, அது தன் முன் உள்ள வழக்கின் பொருண்மைகளிலும், சூழ்நிலைகளிலும் தனது கவனத்தைச் செலுத்தி அத்தன்விருப்புரிமை அதிகாரத்தைப் செயல் படுத்த வேண்டும். இவ்வாறு செய்யாத பொழுது, அந்த அதிகார அமைப்பு தனக்களிக்கப்பட்ட தன்விருப்புரிமை அதிகாரத்தை செயல் படுத்தத் தவறிவிட்டதாகக் கருதப்படும். இதனால், அது தனது தன் விருப்புரிமை அதிகாரத்தைச் செயல்படுத்தாமல் எடுத்த நடவடிக்கை அல்லது பிறப்பித்த உத்திரவு அல்லது செய்த முடிவு தீயதாகும் (bad). எனவே செல்லாததாகும். பின்வரும் அடிப்படைகளின் கீழ், ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு, தான் செலுத்த வேண்டிய தன் விருப்புரிமை அதிகாரத்தை செலுத்தத் தவறியதாகக் கருதப்படும்.

(1) கவனம் செலுத்தாமை (Non-application of Mind):

ஒரு நிருவாகத்துறை அமைப்பு தன்முன் உள்ள வழக்கின் பொருண்மைகளிலும், சூழ்நிலைகளிலும் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது முடிவு செய்தல் வேண்டும். இப்படி கவனம் செலுத்தாமல், அது எடுத்த நடவடிக்கை அல்லது முடிவு, செல்லாத ஒன்றென நீதிமன்றத்தால் விளம்பப்படும்.

Emperor v. Sibnath Banerji[17] - எனும் பழைய வழக்கில் ஒருவரைத் தடுப்புக் காவலில் வைக்க பிறப்பிக்கப்பட்ட உத்திரவு இரத்து செய்யப்பட்டது. ஏனெனில், அவ்வுத்திரவு, காவல் துறையினர் செய்யும் வழக்கமான பரிந்துரைகளின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டதாகும். மேலும் அவ்வுத்திரவைப் பிறப்பிப்பதில், உள்துறை செயலாளர் கூட தனது கவனத்தைச் செலுத்தவில்லை என்று கூறப்பட்டது.

Barium Chemicals Ltd. v. Company Law Board[18] - எனும் வழக்கில் மனுதாரர் நிறுவனத்தை புலனாய்வு செய்வதற்குண்டான உத்திரவு, மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்டது. 1956-ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டப்படி, **'ஒரு நிறுவன மேலாண்மையில் மோசடி நடந்துள்ளது என்பதற்குண்டான சூழ்நிலைகள் இருந்தால்'** மேற் கண்ட உத்திரவைப் பிறப்பிக்க மத்திய அரசு அதிகாரம் படைத்ததாகும். ஆனால் இவ்வாறு உத்திரவு பிறப்பிக்கப்பட, எந்தெந்த சூழ்நிலைகள் காரணமாக இருந்தன என்பதை அந்த உத்திரவில் மத்திய அரசு குறிப்பிட வேண்டும் என்றும், அவ்வாறு குறிப்பிடப்படாமல் பிறப்பிக்கப்பட்ட மேற்படி உத்திரவு செல்லத்தக்கதல்ல என்றும், இங்கு மத்திய அரசு அச்சூழ்நிலைகளில் கவனம் செலுத்தத் தவறிவிட்டது என்றும் உச்ச நீதிமன்றம் கூறி, அதனை இரத்து செய்ய உத்திரவிட்டது.

(2) மற்றொருவரின் கட்டளையின் கீழ் செயல்படுதல் (Acting under Dictation):

17. 1945 FCR 191 : A.I.R. 1945 P.C. 156.
18. 1966 Supp SCR 311 : A.I.R. 1967 S.C. 295.

பொதுக் கருத்து: சில சமயங்களில் தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பெற்றுள்ள ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு, அந்த அதிகாரத்தை தானே செயல்படுத்துவதில்லை. மாறாக, மற்றொரு மேல் நிலை அதிகார அமைப்பின் (superior authority) கட்டளையின்படி செயல்படுவதுண்டு. அதாவது, இங்கு ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு பெற்றுள்ள தன் விருப்புரிமை அதிகாரம், மற்றொரு அதிகார அமைப்பால் செயல் படுத்தப்படுகிறது. சம்பந்தப்பட்ட அந்த அதிகார அமைப்பு தானே சுயமாக சிந்தித்து எதையும் செய்வதில்லை; கவனம் செலுத்துவதில்லை. அது, மற்றொரு மேலமை அதிகார அமைப்பின் சொல்படி நடக்கிறது. நிருவாகமுறைச் சட்டத்தில், இந்நிலைப்பாடும், தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தத் தவறுதல் என்றே கூறப்படுகிறது. எனவே இங்கு எடுக்கப்படும் நடவடிக்கையும் முடிவும் தீயதே; செல்லாததே.

முக்கிய வழக்குகள்: Commissioner of Police v. Gordhandas[19] எனும் வழக்கில் 1902-ஆம் ஆண்டின் பம்பாய் நகர காவல் துறை சட்டத்தின் கீழ், திரையரங்கம் ஒன்றைக் கட்டுவதற்கு காவல் துறை ஆணையர் உரிமம் அளித்தார். ஆனால் பின்னிட்டு அவர், மாநில அரசாங்கத்தின் ஏவுரையின் (direction) கீழ் அந்த உரிமத்தை இரத்து செய்ய உத்திரவிட்டார். உச்ச நீதிமன்றம், இந்த உத்திரவை இரத்து செய்ய உத்திரவிட்டது. காரணம், அக்காவல் துறை ஆணையர், வழங்கிய உரிமத்தை இரத்து செய்யலாமா என்பதில் தனது கவனத்தைச் செலுத்தி ஆராயாமல், வெறுமனே அரசாங்கத்தின் ஒரு முகவராக நின்று, அரசாங்கத்தின் சொல்படி நடந்ததுதான். அதாவது அவருக்கு வழங்கப் பட்ட தன்விருப்புரிமை அதிகாரத்தை அவர் செயல்படுத்தாமல், மற்றொரு மேலமை அதிகார அமைப்பின் (இங்கு மாநில அரசு) சொல்படி நடந்து கொண்டுள்ளார். எனவே இது தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்த தவறியமையாகும்.

Orient Paper Mills v. Union of India[20] - எனும் வழக்கில் தொடர்புடைய சட்டத்தின் கீழ், கலால் தீர்வை (excise) விதிப்பதற்கு துணைக் கண்காணிப்பாளர் (Deputy Superintendant) அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தார். அவர் தன்னிச்சையாக முடிவு செய்து கலால் தீர்வை விதிப்பதற்கு பதிலாக, மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த ஏவுரை களின்படி செயல்பட்டு கலால் தீர்வை விதிக்க உத்திரவிட்டார். இந்த உத்திரவை, உச்ச நீதிமன்றம் இரத்து செய்ய உத்திரவிட்டது. காரணம், துணைக் கண்காணிப்பாளர், தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தை பயன் படுத்தத் தவறியமையாகும்; மற்றொரு அதிகார அமைப்பின் சொல்படி (மாவட்ட ஆட்சியர்) சொல்படி தனது அதிகாரத்தை பயன்படுத்தியதாகும்.

Rambharosa Singh v. State of Bihar[21] - எனும் வழக்கில்

19. A.I.R. 1952 S.C. 16.
20. (1970) 3 SCC 76 : A.I.R. 1970 S.C. 1498.
21. A.I.R. 1953 Pat. 370

தொடர்புடைய சட்ட விதிகளின் கீழ், ஆணையர் பிறப்பிக்கும் ஏவுரைகளுக்கு உட்பட்டு, அரசுப் படகுகளை வாடகைக்கு விட மாவட்ட குற்றவியல் துறை நடுவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இங்கு ஆணையர் அத்தகு ஏவுரைகளை பிறப்பிப்பதற்கு பதிலாக, அரசு சில ஏவுரைகளைப் பிறப்பித்தது. இந்த ஏவுரைகளைக் கொண்டு, மாவட்ட குற்றவியல் துறை நடுவர் செயல்பட்டு அரசுப் படகுகளை வாடகைக்கு விட உத்திரவிட்டார். இது தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்த தவறியமை எனும் அடிப்படையில் அவ்வுத்திரவை இரத்து செய்ய பாட்னா உயர் நீதிமன்றம் உத்திரவிட்டது.

ஒரு வேறுபாடு: மேற்கண்ட வழக்குகளிலிருந்து ஒரு நிருவாகத் துறை அதிகார அமைப்பு, தனது மேலமை அதிகார அமைப்பின் சொல்படி தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தல், தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தத் தவறுதல் என்பது தெளிவாகிறது. ஆனால் இங்கு நாம் ஒன்றை கவனத்தில் கொள்வது நலம். அஃதாவது, மேலமை அதிகார அமைப்பின் ஆலோசனை அல்லது உதவியுடன் (advise and assistance) தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்துவது, அதன் சொல்படி அப்படியே தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்துவதிலிருந்து வேறுபட்டதாகும். இங்கு மேலமை அதிகார அமைப்பின் ஆலோசனை அல்லது உதவியை கருத்தில் கொண்டு, அதனடிப்படையில் முழுக்க முழுக்க கண்மூடித்தனமாக, இயந்திரகதியில் செயல்படாமல், சம்பந்தப்பட்ட விஷயத்தில் கவனத்தைச் செலுத்தி, நியாயமான முடிவுகளை எடுப்பதற்கு தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தலாம். இதை இரத்து செய்வதிற்கில்லை.

எடுத்துக்காட்டாக, உரிமம் வழங்கும் ஒரு அதிகார அமைப்பு, உரிமங்கள் வழங்குவதில் அரசாங்கத்தின் பொதுக் கொள்கைகளை கருத்தில் கொண்டு, தனது தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி முடிவெடுக்கலாம். ஆனால் அப்படி முடிவெடுக்கையில் சம்பந்தப்பட்ட பிரச்சனைக்குண்டான நற்கூறுகளை ஆராய்ந்து, அவற்றினடிப்படையில் முடிவெடுக்க வேண்டும்.

(3) தானே ஏற்படுத்திக் கொண்ட கொள்கை விதிகளின் வாயிலாக தன்விருப்புரிமை அதிகாரத்தின் மீது தடைகளை விதித்துக் கொள்ளல் (Imposing fetters on discretion by self-imposed rules of policy):

தன்விருப்புரிமை அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஒரு நிருவாகத் துறை அதிகார அமைப்பு, அதனை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்றால், தன்முன் வரும் ஒவ்வொரு வழக்கையும் அல்லது பிரச்சனையையும் தனித்தனியே ஆராய்ந்து பார்த்து, அதற்கொப்ப பயன்படுத்த வேண்டும். ஆனால் இவ்வாறு செய்வதற்குப் பதிலாக, அந்த அதிகார அமைப்பு, தன் முன் வரும் அனைத்து வழக்குகளுக்கும் அல்லது பிரச்சனைகளுக்கும் பொருந்தக் கூடிய விதத்தில் சில கொள்கை விதிகளை

ஏற்படுத்திக் கொண்டு, அவற்றினடிப்படையில் தனது தன்விருப்புரிமை அதிகாரத்தின் மீது தானே தடைகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. இப்படிச் செய்வதும், தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தத் தவறியதேயாகும். அதாவது அனைத்து வழக்குகளுக்கும் பொருந்தக் கூடிய விதத்தில் பொது விதிகளை ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு ஏற்படுத்திக் கொண்டால், அங்கு ஒவ்வொரு வழக்கையும் தனித்தனியே அதன் பொருண்மைகளின் அடிப்படையில் பரிசீலனை செய்வதும், தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்துவதும் கேள்விக் குறியாகிவிடுகிறது. எனவே இங்கு அந்த அதிகார அமைப்பால் எடுக்கப்படும் முடிவு அல்லது நடவடிக்கை செல்லாத ஒன்றாகிவிடும்.

Keshavan Bhaskaran v. State of Kerala[22] - எனும் வழக்கில் தொடர்புடைய சட்ட விதியானது, 15 வயது பூர்த்தி அடையாத எவருக்கும், பள்ளி இறுதிச் சான்றிதழ் வழங்கப்படக் கூடாது என்று கூறுகின்றது. எனினும் சில சூழ்நிலைகளில் இந்த விதியிலிருந்து விதிவிலக்களிக்க கல்வித்துறை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது. ஆனால், அவர் மேற்கண்ட 15 வயதுக்கும் குறைவாக உள்ளவர்கள் பள்ளி இறுதிச் சான்றிதழ் கேட்கும் பொழுது, அவர் அந்த 15 வயதிலிருந்து இரண்டு ஆண்டுகள் மட்டும் குறைவாக இருந்தால்தான் அவருக்கு பள்ளி இறுதிச் சான்றிதழ் வழங்கப்படும். அதற்கு மேல் இருந்தால் மேற்கண்ட விதியிலிருந்து விதிவிலக்களிக்க முடியாது, எனும் ஒரு மாற்ற முடியாத விதியை ஏற்படுத்திக் கொண்டார். (அதாவது இவ்விதியின்படி ஒரு மாணவருக்கு, 13 வயது இருப்பின் அவர் பள்ளி இறுதிச் சான்றிதழ் பெறும் வயது குறித்த விதியிலிருந்து விதிவிலக்களிக் கப்படுவார். ஆனால் அவர் 12 வயதுடையவராக இருந்தால், அவருக்கு விதிவிலக்கு பொருந்தாது. அவர் பள்ளி இறுதிச் சான்றிதழ் பெற முடியாது.). இந்தக் கொள்கை சட்டத்திற்கு முரணானது என்றும், தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்த தவறியதாகும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

(4) கீழ்ப்படையான அதிகார ஒப்படைப்பு (Sub-delegation) அல்லது அதிகாரங்களைத் துறத்தல் (Abdiction of functions):

தன்விருப்புரிமை அதிகாரத்தை ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு வழங்கும் ஒரு சட்டம், அத்தன்விருப்புரிமை அதிகாரத்தை அந்த நிருவாகத்துறை அதிகார அமைப்பு அதற்கு கீழ் அமைந்துள்ள மற்றொரு நிருவாகத்துறை அதிகார அமைப்பின் வாயிலாகச் செயல் படுத்தலாம் என்று வெளிப்படையாக வகை செய்திருந்தால், அது கீழ்ப் படையான அதிகார ஒப்படைப்பு எனப்படுகிறது. இவ்வாறு அச் சட்டத்தில் வெளிப்படையாக வகை செய்யப்படாமல் இருந்து, ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு தனக்கு வழங்கப்பட்ட தன் விருப்புரிமை அதிகாரத்தை தனக்கு கீழ் அமைந்துள்ள மற்றொரு

22. A.I.R. 1961 Ker. 23.

நிருவாகத்துறை அதிகார அமைப்பிடம் ஒப்படைத்து, அதன் மூலம் அத்தன்விருப்புரிமை அதிகாரத்தை செயல்படுத்துவது செல்லாததாகும். ஏனெனில், அந்த நிருவாகத்துறை அதிகார அமைப்பு தனக்கு வழங்கப் பட்டுள்ள தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்த தவறியதாகிறது. மேலும் அந்த நிருவாகத்துறை அதிகார அமைப்பு தனது தன்விருப்புரிமை அதிகாரத்தை துறந்ததாகிறது.

Manik Chandra v. State[23] - எனும் வழக்கின் பொருண்மை களின்படி, சில பேருந்து வழித்தடங்களை தேசியமயமாக்கும் திட்டத்தை மாநில சாலை போக்குவரத்துக் கழகம் பரிசீலனை செய்து முடிவெடுக்க வேண்டும் என்று தொடர்புடைய சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் அத்திட்டம் மாநில சாலைப் போக்குவரத்து கழகத்தின் மேலாளரால் வெளியிடப்பட்டது. அக்கழகம் பரிசீலனை செய்து அத்திட்டத்தை வெளியிடவில்லை. இது தன்விருப்புரிமை அதிகாரத்தை மற்றொரு கீழ் நிலை அலுவலரிடம் ஒப்படைத்ததாகும் என்றும், அதிகாரங்களைத் துறந்ததாகும் என்றும் கவுஹாத்தி உயர் நீதிமன்றம் கூறி, அதனை செல்லாததென விளம்பியது.

(5) கடமையுடன் இணைந்த அதிகாரம் (Power coupled with duty):

இன்ன நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால், அங்கு தன் விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும் என்று, நிருவாகத் துறை அதிகார அமைப்பிற்கு தன்விருப்புரிமை அதிகாரத்தை வழங்கிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பின், அங்கு அந்த அதிகார அமைப்பு தனது தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்தியே ஆக வேண்டும். இதுவே கடமையுடன் இணைந்த அதிகாரம் எனப்படுகிறது. ஒருவேளை அவ்வாறு பயன்படுத்த மறுத்தால், அது தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்தத் தவறியதாகும். இதனால் சம்பந்தப்பட்ட முடிவு அல்லது நடவடிக்கை செல்லாத ஒன்றாகிவிடும்.

R. v. Metropolitan Police Commr.[24] - எனும் வழக்கில் சட்டப் படியான நடைமுறைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்பட்சத்தில், வாடகைக் கார்களை (cab-drivers) ஓட்டும் ஓட்டுநர்களின் உரிமத்தை, உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு (licensing authorities) புதுப் பித்துக் கொடுக்க வேண்டும்; அதை மறுக்கவியலாது என்று கூறப்பட்டது.

R. v. Newcastle-upon-Tyne Corpn.[25] - எனும் வழக்கில், நகராண்மை துணை விதிகளின்படி கட்டிட வரைபடங்கள் இருப்பின், அதற்கு நகராண்மை அதிகார அமைப்பு அனுமதி கொடுத்தே ஆக வேண்டும்; அதை மறுக்கவியலாது என்று கூறப்பட்டது.

23. A.I.R. 1973 Gua. 1.
24. (1911) 2 QB 1131.
25. (1889) 60 LT 963.

முன்சென்ற வழக்குகளின்படி, சம்மந்தப்பட்ட சட்ட நடை முறைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின், அங்கு ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு தன்விருப்புரிமை அதிகாரத்தை வேறுவிதமாக (எதிராக) பயன்படுத்த முடியாது அல்லது பயன்படுத்தாமலும் இருக்க முடியாது.

முடிவுரை:

மேற்கண்ட விரிவுரையிலிருந்து, தன்விருப்புரிமை அதிகாரம் ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளதே என்று அது அந்த அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தவும் முடியாது; அதே சமயத்தில் பயன்படுத்தாமலும் இருக்க முடியாது என்பதை நாம் அறிந்தோம். இதற்கு முரணாக நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் ஏதேனும் முடிவுகள் செய்தால் அல்லது நடவடிக்கைகள் எடுத்தால், அதைத் தவறு என்றும், செல்லாதது என்றும் நீதிமுறை மறுஆய்வு மூலம் உயர் மற்றும் உச்ச நீதிமன்றமானது விளம்புகிறது. இது நிருவாகத்துறை தன்விருப்புரிமை அதிகாரத்தின் மீதுள்ள செம்மையான ஒரு கட்டுப் பாடாகும்; நிருவாகத்துறையின் ஏதேச்சதிகாரப் போக்கிற்கு நீதித்துறை அடிக்கும் சாவு மணியாகும். எனவேதான், **"உளத்தேர்வின்படி செயல் படுத்தப்படும் அதிகாரத்தை (தன்விருப்புரிமை அதிகாரத்தை) விதிக்கட்டுப்பாடின்றி உளப்போக்கில் தொடர்பற்ற காரணங்களை கருத்தில் கொண்டு செயல்படுத்தக் கூடாது" ("The exercise of discretion must not be arbitrary, fanciful and influenced by extraneous considerations")** என்று கூறப்படுகிறது.

41. Examine the concept of malafides. Discuss the malafides as a ground for challeging discretionary action of the administration. (தீயயெண்ண கருத்து வடிவத்தை ஆராய்க. நிருவாகத்தின் உளக்கிட நடவடிக்கை தீய எண்ணம் கொண்டது என்ற காரணம் கொண்டு எடுத்துரைத்தல் பற்றி விளக்குக.)

(அல்லது)

Explain the concept of malafides. Discuss the malafides as a ground for challenging discretionary action of the administration. (தீயயெண்ண கருத்துக் கோட்பாட்டினை விளக்குக. நிருவாகத்தின் விருப்பத்தேர்வு நடவடிக்கை தீய எண்ணம் கொண்டது என்ற அடிப்படையில் மறுதலித்தலை பற்றி விவாதிக்கவும்.)

(அல்லது)

Malafide - Write short notes. (தீய எண்ணம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Malafide action - Write short notes. (தீயெண்ணச் செயல் - சிறு குறிப்பு வரைக.)

*(முந்தய வினாவின் விடையில் "**தன்விருப்புரிமை அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல்**" எனும் பெருந் தலைப்பின் கீழ் 1-வது எண்ணிட்ட பத்தியில் உள்ளவற்றை படித்துக் கொள்ளவும்.)*

42. Colourable Exercise of Power - Write Short Notes. (நன்கு மறைக்கும்படி தோற்றம் தரக்கூடிய விதத்தில் அதிகாரத்தை செயற் படுத்தல் - சிறு குறிப்பு வரைக.)

*(முந்தய வினாவின் விடையில் "**தன்விருப்புரிமை அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல்**" எனும் பெருந் தலைப்பின் கீழ் 6-வது எண்ணிட்ட பத்தியில் உள்ளவற்றை படித்துக் கொள்ளவும்.)*

9 நிருவாகத்துறைத் நடவடிக்கைகளின் மீதான நீதிமுறை மறுஆய்வு (அல்லது) நீதிமுறை மற்றும் பிறவகையான தீர்வழிகள் [Judicial Review on Administrative Action (or) Judicial and Other Remedies]

உங்கள் முக்கியமான கவனத்திற்கு

இது ஒரு முக்கியமான அத்தியாயமாகும். இந்த அத்தியாயத்தில் இருந்து பல கோணங்களில் தேர்வில் வினாக்கள் கேட்கப்படுகின்றன. ஒவ்வொரு வினாவிற்கும் தனித்தனியாக விடையளிப்பது என்பது இந்த அத்தியாயத்தின் கட்டுக் கோப்பையும், தொடர்ச்சியையும் சிதைப்பது போலாகி விடும். எனவே இதுகாறும் இந்த அத்தியாயம் தொடர்பாக தேர்வில் கேட்கப்பட்டுள்ள பல வினாக்களையும் கீழே கொடுத்துள்ளேன். அவற்றிற்கு பொருத்தமான விடைகளை இவ்வினாக்களுக்கு அடுத்து வரும் விடைப்பகுதியில் இருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளவும். அவ்வாறு தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு வசதியாக, அவற்றிற்கு தனியாக தலைப்பிட்டு காண்பித்துள்ளேன். எனினும் இந்த அத்தியாயத்தின் தொடர்ச்சியை பாதிக்காத சில வினாக்களையும் அவற்றின் விடைகளையும் இந்த அத்தியாயத்தின் பின் பகுதியில் தனியாகவும் கொடுத்துள்ளேன். - **ஆசிரியர்.**

43. Examine the scope of the writ jurisdiction of the High Courts. (நீதிப்பேராணை சம்பந்தமாக உயர் நீதிமன்றங்களின் அதிகார வரம்பினைப் பரிசீலனை செய்க.)

(அல்லது)

Writ of Habeas Corpus - Write short notes. (ஆட்கொணரும் நீதிப்பேராணை - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

What are the circumstances in which a Writ of Certiorari is available? (என்னென்ன சூழ்நிலைகளில் "வழக்குக் கட்டுகளை அனுப்புக" எனும் நீதிப்பேராணை அளிக்கப்படலாம்?)

(அல்லது)

Examine the significance of the Writ of Certiorari as a means to control the administrative action. (நிருவாகத்துறைச் செயலைக் கட்டுப்படுத்தும் ஒரு வழி வகையாக நெறிமுறை உறுத்தும் நீதிப்பேராணை அமைவதன் முக்கியத்துவத்தை ஆராய்க.)

(அல்லது)

Critically examine "Error of law apparent on the face of the record" as a ground for the issuance of the writ of certiorari. ("பதிவேட்டைப் பார்த்த மாத்திரத்திலேயே உணரத்தக்க வகையிலான சட்டம் பிழைபட்ட நிலைமை" என்பது நெறிமுறை உறுத்தும் நீதிப்பேராணை வழங்குவதற்கு காரணமாக இருத்தலை திறனாய்வு செய்க.)

(அல்லது)

Writ of Certiorari - Write short notes. (நெறியுறுத்து நீதிப்பேராணை - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

What is an 'alternative remedy' in certiorari? Explain. (சான்றளிப்பு பேராணையின் 'மாற்றுத் தீர்வழி' என்பது யாது? விளக்குக.)

(அல்லது)

Certiorarified mandamus - Write short notes. (நெறிமுறை உறுத்தும் நீதிப்பேராணை இணைந்த செயலுறுத்தும் நீதிப்பேராணை - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Examine the grounds for the issue of writ of mandamus. Can this writ be issued to enforce a civil liability arising out of a contract? (செயலுறுத்தும் நீதிப்பேராணை வழங்குவதற்குரிய காரணங்களை ஆய்க. ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் எழும் கடப்பாட்டினை வலியுறுத்த செயலுறுத்தும் நீதிப்பேராணை வழங்க முடியுமா?)

(அல்லது)

What is meant by writ of mandamus? Examine its role in the judicial control of administrative action (செயலுறுத்தும் நீதிப்பேராணை என்றால் என்ன? ஆட்சிமுறை நடவடிக்கை மீதுள்ள நீதிமன்றக் கட்டுப்பாட்டில் அதனுடைய பங்கினை ஆராய்க.)

(அல்லது)

What are the conditions under which a writ of mandamus is issued? (செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிப்பதற்கான நிபந்தனைகள் யாவை?)

(அல்லது)

Examine how far law recognises promissory estoppel as a ground for the issue of writ of mandamus. (செயலுறுத்தும் நீதிப்பேராணை வழங்குவதற்குத் தன் உறுதிமொழியே முரண்தடையாவதைச் சட்டம் எவ்வளவுக்கு அங்கீகரித்திருக்கிறது என்பதை ஆய்க.)

(அல்லது)

Mandamus - Write short notes. (செயலுறுத்துப் பேராணை - சிறு குறிப்பு வரைக.)

அல்லது)

Writ of Prohibition - Write short notes. (தடையுறுத்தும் நீதிப் பேராணை - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Quo Warranto - Write short notes. (தகுதி வினவும் நீதிப்பேராணை - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Distinquish between

a writ of certiorari from a writ of prohibition.

வேறுபடுத்துக.

நெறிமுறையுறுத்தும் மற்றும் தடையுறுத்தும் நீதிப்பேராணை

(அல்லது)

Write a critical note on abuse of power as a ground for quashing administrative action. (நிர்வாக செயல்முறைகளை ரத்து செய்வதற்கு அதிகார துஷ்பிரயோகம் எவ்வாறு காரணமாக உள்ளது என்பதை ஆராய்க.)

(அல்லது)

Explain the use of declaratory action in administrative law. (நிருவாகச் சட்டத்தில் விளம்புவகை நடவடிக்கைகளின் பயனை விளக்குக.)

(அல்லது)

Declaratory action - Write short notes. (விளம்புவகை வழக்கு - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Statutory Remedies - Write short notes. (சட்டரீதியான தீர்வழிகள் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

சட்டமியற்றுத் துறையும், நீதித்துறையும் தங்களுக்குள்ள பணிச் சுமை மற்றும் நேரமின்மை காரணமாக தங்களது அதிகாரங்களை நிருவாகத் துறையிடம் அதிகார ஒப்படைவு (Delegation of Legislative and Judicial Powers) செய்துள்ளன. இவ்வாறு ஒருபுறம் அதிகாரங்களை நிருவாகத் துறையிடமும் ஒப்படைக்க வேண்டும். மற்றொரு புறம் அவ்வதிகாரங்களை நிருவாகத்துறை துஷ்பிரயோகம் செய்யாமலும் இருக்க வேண்டும். இதன் பொருட்டு அதே சட்டமியற்றுத் துறையும், நீதித்துறையும் தாங்கள் நிருவாகத்துறையிடம் ஒப்படைத்த அதிகாரங்களின் மீது சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. அக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நிருவாகத் துறை தனது அதிகாரங்களை செயல்படுத்த வேண்டும் என்று அதனைப் பணித்துள்ளன. எனினும் இதையும் மீறி நிருவாகத் துறையின் அதிகார துஷ்பிரயோகமான மற்றும் சட்டத்திற்கு முரணான செயல்பாட்டினால் ஒருவரது உரிமைகள் பாதிக்கப்பட்டால், அவருக்கு தீர்வழிகள் வழங்கப்பட வேண்டும். அந்த வகையில் நிருவாகமுறைச் சட்டத்தில் பின்வரும் மூன்று வகையான தீர்வழிகளை நீதித்துறை வழங்குகிறது. அவை

I. அரசியலமைப்புப்படியான தீர்வழிகள் அல்லது பேருரிமை வாய்ந்த தீர்வழிகள் [Constitutional Remedies (or) Prerogative Remedies];

II. உரிமையியல் சட்டப்படியான தீர்வழிகள் அல்லது தகைமை நெறித் தீர்வழிகள் [Civil Law Remedies (or) Equitable Remedies].

III. சட்டரீதியான தீர்வழிகள் [Statutory Remedies].

இவை மூன்றும் நீதிமுறைத் தீர்வழிகள் (Judicial Remedies) எனப்படுகின்றன. இவற்றை சற்று விரிவாகப் பின்வருமாறு காண்போமா?

I. அரசியலமைப்புப்படியான தீர்வழிகள் [Constitutional Remedies] (அல்லது) பேருரிமை வாய்ந்த தீர்வழிகள் [Prerogative Remedies]

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 32-வது ஷரத்தின் கீழ் உச்ச நீதிமன்றங்களும், 226-வது ஷரத்தின் கீழ் உயர் நீதிமன்றங்களும் அய்ந்து வகையான நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்க அதிகாரம் கொண்டுள்ளன. அவை, (1) ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை (Writ of Habeas Corpus); (2) நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Certiorari); (3)

செயலுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Madamus); (4) தடையுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Prohibition); (5) தகுதிமுறை வினவும் நீதிப் பேராணை (Writ of Quo-warranto). அரசின் நிருவாகத் துறை அதிகார அமைப்புகளால், குடிமகன் ஒருவருக்கு அரசியலமைப்புச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டாலும், இதர சட்டப்படியான உரிமைகள் மீறப்பட்டாலும், மேற்கண்ட நீதிப் பேராணைகள் உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்களால் பிறப்பிக்கப் படுகின்றன. மேற்கண்ட நீதிப்பேராணைகளை **'நீதிமுறை மறுஆய்வின் பொழுது பிறப்பிக்கப்படும் நீதிப்பேராணைகள்' (Writs issued during Judicial Review)** என்றும் அழைப்பர். மேலும் இத்தீர்வழிகளை **'பேருரிமை வாய்ந்த தீர்வழிகள்' (Prerogative Remedies)** என்றும் பெருமைபடச் செல்வதுண்டு.

மேலும் 227-வது ஷரத்தின்படி மாநிலத்தில் உள்ள அனைத்து நிருவாகமுறைத் தீர்ப்பாயங்கள் மற்றும் நீதிமன்றங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரத்தை அம்மாநில உயர் நீதிமன்றம் கொண்டுள்ளது. இத்தோடு மட்டுமில்லாமல் 136-வது ஷரத்தானது, இந்திய நிலப் பரப்பிற்குள் உள்ள எந்த நிருவாகமுறைத் தீர்ப்பாயமாவது (அல்லது எந்த நீதிமன்றமாவது) பிறப்பித்த தீர்ப்புரை, தீர்ப்பாணை, முடிவு, தண்டனைத் தீர்ப்பு அல்லது உத்திரவிற்கெதிராக மேல்முறையீடு செய்ய சிறப்பு அனுமதி அளிக்கும் அதிகாரத்தை உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கியுள்ளது. இவையெல்லாம் நிருவாகத்துறை நடவடிக்கை மற்றும் செயல்பாட்டினால் குடிமக்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், அவர்களுக்கு தீர்வழி வழங்குவதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் வகை செய்யப்பட்டுள்ள சிறப்பான ஏற்பாடுகள் ஆகும்.

ஷரத்து 32 மற்றும் 226-ன் பரவெல்லை மற்றும் அளவுகை (The Scope and Extent of Articles 32 and 226):

ஷரத்து 32-ன் பரவெல்லை (அல்லது) உச்ச நீதிமன்றத்தின் நீதிப்பேராணை வெளியிடும் அதிகாரவரம்பின் பரவெல்லை: அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பகுதியால் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை வலியுறுத்திச் செயல்படுத்த தக்க நடவடிக்கை கள் (by appropriate proceedings) மூலம் உச்ச நீதிமன்றத்திற்கு செல்லும் உரிமைக்கு **ஷரத்து 32(1)** உத்திரவாதமளிக்கிறது. அதாவது நீதிப்பேராணைகள் பிறப்பிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்திற்கு செல்வதே, ஒரு அடிப்படை உரிமையாகும்.

அவ்வுரிமைகளை வலியுறுத்த, உச்ச நீதிமன்றம் தக்க ஏவுரை அல்லது உத்திரவு அல்லது மேற்கண்ட அய்ந்து வகையான நீதிப் பேராணைகளில் வழக்கின் சூழலுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பிறப்பிக்க உச்ச நீதிமன்றத்திற்கு **ஷரத்து 32(2)** அதிகாரமளிக்கிறது.

ஷரத்து 32(2)-ன்படி, உச்ச நீதிமன்றத்திற்கு உள்ள எல்லா அல்லது

எந்த அதிகாத்தையாவது, மற்ற எந்த நீதிமன்றங்களுக்கும் தங்களுடைய அதிகாரவரம்பின் வட்டார எல்லைக்குட்பட்டு செயல்பட, பாராளு மன்றம், சட்டத்தின் மூலமாக அதிகாரமளிக்கலாம், என்று **ஷரத்து 32(3)** கூறுகிறது. இந்த ஷரத்து உச்ச நீதிமன்றம் தனது நீதிப்பேராணை வெளியிடும் அதிகாரத்தை மற்ற கீழ்நிலை நீதிமன்றங்களுக்கு அளிக்க வழி வகுக்கிறது.

ஷரத்து 32-ஆல் நீதிப்பேராணைகள் பிறப்பிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்திற்கு செல்லும் உரிமையானது, அரசியலமைப்பில் கூறப் பட்டுள்ள வழிகளில் தவிர மற்ற வழிகளில் மீறப்படக் கூடாது, என்று **ஷரத்து 32(4)** கூறுகிறது. அதாவது இவ்வுரிமையை சாதாரண சட்டங்களின் மூலம் தடுக்கவோ அல்லது தடைப்படுத்தவோ முடியாது.

ஷரத்து 32-ன் அளாவுகைகள் நிருவாகத்துறை செயல்பாட்டால் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்ட ஒருவர் நீதிப்பேராணை வேண்டும் மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல், நேரடியாக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். மீறப்பட்ட அடிப்படை உரிமைகளை வலியுறுத்திச் செயல்படுத்த உச்ச நீதிமன்றம் நீதிப் பேராணைகளை பிறப்பிக்கிறது. அத்தோடு மட்டுமில்லாமல் ஏவுரைகள் (directions), உத்திரவுகள் (orders) ஆகியவற்றையும் பிறப்பிக்க உச்ச நீதிமன்றம் அதிகாரம் கொண்டுள்ளது. எனவே பாதிக்கப்பட்டவரின் அடிப்படை உரிமைகள் எவ்வகையிலாவது பாதுகாக்க உச்ச நீதிமன்றம் பாடுபடுகிறது. எனவே உச்ச நீதிமன்றத்தை **'அடிப்படை உரிமைகளின் பாதுகாவலன்' (Guardian of Fundamental Rights)** என்றும் சிறப்பாக அழைப்பர். ஷரத்து 32-அய், ஒரு போதும் செயலிழக்கச் செய்யவோ அல்லது நிறுத்தி வைக்கவோ முடியாது. (ஆனால் ஒரு அரசியலமைப்புச் திருத்தச் சட்டத்தால் முடியும்.) அதாவது உச்ச நீதிமன்றத்தின் நீதிப் பேராணை பிறப்பிக்கும் அதிகாரவரம்பு, நிலையானது. ஒருவரின் அடிப் படை உரிமை மீறப்பட்டு அம்மீறலைத் தடுக்க போதுமான மாற்றுத் தீர்வழி (adequate alternative remedy) இருப்பினும், அவர் ஷரத்து 32-ன்படி உச்ச நீதிமன்றத்தில் வழக்கிடலாம். எனவே நீதிப் பேராணை களைப் பிறப்பிப்பதில், உச்ச நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு ஷரத்து 226-ன் கீழான உயர் நீதிமன்றங்களின் நீதிப் பேராணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரவரம்பை விடப் பரந்தது என்று கூறலாம்.

ஷரத்து 226-ன் பரவெல்லை மற்றும் அளாவுகை (அல்லது) உயர் நீதிமன்றத்தின் நீதிப்பேராணை வெளியிடும் அதிகாரவரம்பின் பரவெல்லை மற்றும் அளாவுகைகள் நாம் சென்ற பத்திகளில் கண்ட அய்ந்து வகையான நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம், ஷரத்து 226-ன்படி உயர் நீதிமன்றங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. குடிமக்களுக்கு இந்திய அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ள அடிப் படை உரிமைகள் அரசின் நிருவாகத்துறையால் மீறப்பட்டதற்காகவும் அல்லது **'வேறு எந்த நோக்கத்திற்காகவும்'** (any other purpose) உயர்

நீதிமன்றம் பிறப்பிக்கலாம். 'வேறு எந்த நோக்கத்திற்காகவும்' எனும் பதம் அரசியலமைப்பு கூறும் அடிப்படை உரிமைகள் தவிர, குடிமக்களுக்கு பிற சட்டங்களின் வாயிலாக வழங்கப்பட்ட உரிமைகள் மீறப்பட்டதற் காகவும் உயர் நீதிமன்றம் நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்கலாம் என்பதை உணர்த்துகிறது. எனவே இந்த வகையில் உயர் நீதிமன்றங்களின் நீதிப்பேராணை பிறப்பிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்தின் அத்தகு அதிகாரத்தை விட பரந்தது என்று கூறலாம். எனவே நிருவாகத் துறையின் அதிகார துஷ்பிரயோக செயல்களை கட்டுப்படுத்துவதில், உயர் நீதிமன்றங்களுக்கு அதிகப்படியான நீதிமுறை அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மறுக்க முடியாது.

மேலும், நிருவாகத்துறையின் ஒரு நடவடிக்கை அல்லது முடிவே இறுதியானது என்று ஒரு சட்டம் கூறினாலும், அதனை எதிர்த்து ஷரத்து 226-ன் கீழ் நீதிப்பேராணை கோரி உயர் நீதிமன்றத்திற்கு செல்ல முடியும். எனவே அரசாங்கத்தின் அனைத்து அதிகார அமைப்புகளுக்கும் எதிராக நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்க உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரமுண்டு. எனினும் ஒரு வழக்கில் நீதிப்பேராணை பிறப்பிக்கலாமா வேண்டாமா என்பது இங்கு உயர் நீதிமன்றத்தின் பரந்த தன்விருப்புரிமை அதிகாரத் திற்குட்பட்டதாகும் (discretionary power). இதனால் நீதிப்பேராணை கோரி தொடுக்கப்படும் ஒரு மனுவில் மனுதாரருக்கு (1) போதுமான மாற்று தீர்வழி கிடைக்க வாய்ப்பிருக்கிறது எனும் பொழுதோ (existence of adequate alternative remedy) , (2) அம்மனு காலந்தாழ்ந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனும் பொழுதோ (if there is delay or laches in filing the writ petition), (3) அம்மனுவில் பொருண்மை குறித்த பிரச்சனைகள் உள்ளது எனும் பொழுதோ (the petition involves disputed question of fact), அல்லது (4) அம்மனுவின் பேரில் நீதிப் பேராணை பிறப்பிப்பது வீணானது (granting of writ would be futile) எனும் பொழுதோ, உயர் நீதிமன்றம் நீதிப்பேராணை பிறப்பிக்க மறுக்கலாம்.

ஷரத்து 226-ன்படி உயர் நீதிமன்றத்திற்கு உள்ள நீதிப்பேராணை பிறப்பிக்கும் அதிகாரத்திற்கும், ஷரத்து 32-ன்படி உச்ச நீதிமன்றத்திற்கு நீதிப்போரணை பிறப்பிக்கும் அதிகாரத்திற்கும் உள்ள வேறுபாடு:

1. ஷரத்து 226-ன்படி உயர் நீதிமன்றம் நீதிப்பேராணை பிறப்பிக்கும். ஷரத்து 32-ன்படி உச்ச நீதிமன்றம் நீதிப்போரணை பிறப்பிக்கும்.

2. நீதிப்பேராணை கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கிடுவது ஒரு அடிப்படை உரிமையல்ல; சாதாரண உரிமையே. ஆனால் நீதிப்பேராணை கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்கிடச் செல்வதே ஒரு அடிப்படை உரிமையாகும்.

3. ஷரத்து 226-ன்படி தீர்வழி கேட்கும் உரிமையை நெருக்கடி-நிலைமை பிரகடனத்தின் (during the period of emergency) பொழுது

நிறுத்தி வைக்க முடியாது. ஆனால் ஷரத்து 32-ன்படியான உரிமையை நிறுத்தி வைக்க முடியும்.

4. அடிப்படை உரிமை மீறப்பட்டதற்கு மாற்றுத் தீர்வழி இருப்பின், ஒரு உயர் நீதிமன்றம் நீதிப்பேராணை பிறப்பிக்காது. அடிப்படை உரிமை மீறப்பட்டதற்கு மாற்றுத் தீர்வழி இருப்பினும், உச்ச நீதிமன்றம் நீதிப் பேராணையை பிறப்பிக்கும். ஏனெனில் இது ஒரு அடிப்படை உரிமை யாகும்.

5. அடிப்படை உரிமைகளைத் தவிர சாதாரண சட்ட உரிமைகள் மீறப்பட்டாலும், உயர் நீதிமன்றம் நீதிப்போரணையை பிறப்பிக்கும். ஆனால் உச்ச நீதிமன்றமோ அடிப்படை உரிமைகள் மீறப்படும் பொழுது மட்டுமே, நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்கும்.

இனி மேற்கண்ட அய்ந்து வகையான நீதிப்பேராணைகளின் விளக்கத்தை வழக்குகளுடன் பின்வருமாறு காண்போமா?

அய்ந்து வகையான நீதிப்போராணைகள் (Five Kinds of Writs)

(1) ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை [Writ of Habeas Corpus]

விளக்கம்:

'Habeas Corpus' எனும் பதம் இலத்தீன் மொழியிலிருந்து பிறந்த தாகும். இதன் பொருள், 'ஆளைக் கொணர்க' [have (produce) the body] என்பதாகும்.

எவரையும் சட்டமுறைப்படி இன்றி சிறைப்படுத்தல் கூடாது. அப்படி ஒருவர் சட்டமுறைக்கு மாறாக அரசினால் காவலில் வைக்கப் பட்டாலோ அல்லது தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டாலோ, அவர் மேற் கண்ட ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணையைப் பிறப்பித்து தன்னை விடுவிக்குமாறு உயர் அல்லது உச்ச நீதிமன்றத்தை வேண்டிக் கொள்ள லாம். அதன்படி, சிறைப்படுத்தியது சட்ட முறையானதா அல்லது சட்ட முறையற்றதா என்பதை நீதிமன்றம் ஆராய்வதற்காக மேற்கண்டவாறு சிறை வைக்கப்பட்ட நபரை நீதிமன்றத்தின் முன் கொணரும்படி (ஆஜர் செய்யும்படி), அவரை சிறைப்படுத்திய அதிகார அமைப்பிற்கு மேற்கண்ட நீதிப்பேராணையின் மூலம் உத்திரவிடுகிறது. மேலும் அவ்வாறு சிறைப் படுத்தியதற்குண்டான காரணத்தை விளக்குமாறு சிறைப்படுத்தியவருக்கு நீதிமன்றம் ஆணையிடுகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டமானது தனது 21-வது ஷரத்தின் வழியாக தனிமனித சுதந்திரத்திற்கு உத்திரவாதமளிக்கிறது. இந்த சுதந் திரத்திற்கெதிராக ஒருவரை சட்ட முறையற்ற காரணங்களின் அடிப்

படையில் அரசாங்க அதிகார அமைப்பு சிறைப்படுத்தினால், அவ்வாறு சிறைப்படுத்தியதற்குண்டான முகாந்திரங்கள் பற்றி ஆய்வு செய்ய இப் பேராணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படுகிறது. அரசின் தடுப்பு காவல் சட்டங்களும், காவல் துறை அதிகார அமைப்பின் அளவுக்கு மீறிய ஏதேச்சதிகாரப் போக்குமே, இப்பேராணை பிறப்பிக்கப்பட வேண்டிய தற்கு முக்கியத்துவமாக விளங்குகிறது எனில் அது மிகையன்று.

யார் இந்த நீதிப்பேராணை பெற வேண்டி மனுச் செய்ய முடியும்?:

பொதுவாக பாதிக்கப்பட்டவர்தான் தீர்வழி வேண்டி வழக்கு தொடுக்க உரிமை படைத்தவர் என்று, **'வழக்கு தொடுக்கும் உரிமை' (locus standi)** குறித்த கோட்பாடு கூறுகிறது. ஆனால் இக்கோட்பாடு கூறும் மேற்படி கடுமையான நிபந்தனையானது, ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்படும் மனுக்களில் உச்ச நீதிமன்றத்தால் பெரிதும் தளர்த்தப்பட்டுள்ளது. எனவே சிறைப் படுத்தப்பட்டவரோ, அவரது சார்பாக அவரது உறவினர்களோ அல்லது நண்பர்களோ இந்த நீதிப்பேராணை பிறப்பிக்க வேண்டி உயர் அல்லது உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்ய முடியும். அதாவது பாதிக்கப்படாத நபர் கூட, சிறைப்படுத்தப்பட்டவரின் சார்பாக மேற்படி நீதிப்பேராணை வேண்டி மனுச் செய்யலாம்.

Sheela Bose v. State of Maharashtra[1] - எனும் வழக்கில் சட்ட முரணாக சிறை வைக்கப்பட்டவர்தான் ஆட்கொணர்விக்கும் நீதிப் பேராணை வேண்டி மனு தாக்கல் செய்ய வேண்டுமென்பதில்லை; அவரது சார்பாக எவர் வேண்டுமானாலும் அம்மனுவைத் தாக்கல் செய்யலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

Kamaladevi v. State of Punjab[2] - எனும் வழக்கில், ஆட் கொணர்விக்கும் நீதிப்பேராணை மனுவை பாதிக்கப்பட்டவர் சார்பாக ஒரு அயலவர் (stranger) அல்லது சமூக சேவகர் (social worker) கூட தாக்கல் செய்யலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

எப்பொழுது ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை பிறப்பிக்கப்படும்?:

(1) எச்சட்டத்தின் கீழ் ஒருவர் சிறை வைக்கப்பட்டாரோ அச்சட்டம் அரசியலமைப்பினை மீறியதாக இருக்கும் பொழுது, (2) அச் சட்டம், அரசியலமைப்பின் 14, 19, 22(1), 22(2), 22(5)-வது ஷரத்துக்களை மீறியிருக்கும் பொழுது, (3) ஒரு நபரை சிறைப்படுத்த உத்திரவிடும் அதிகார அமைப்பிற்கு அவ்வாறு உத்திரவிட அதிகாரவரம்பு இல்லாத பொழுது, (4) அந்த அதிகார அமைப்பின் உத்திரவானது, தடுப்புக் காவல் சட்டத்தின் வகைமுறைகளை மீறியிருக்கும் பொழுது. இவற்றில் ஏதேனும் ஒன்றின் காரணமாக இந்நீதிப்பேராணை பிறப்பிக்கப்படும்.

1. A.I.R. 1983 S.C. 378.
2. (1985) 1 SCC 41.

Batul Chand v. State of W.B.[3] - எனும் வழக்கில், ஒருவரை சிறை வைத்திருப்பது சட்ட முரணாக இல்லாமல் (not illegal) இருந்தால் (அதாவது சட்டப்படி இருப்பின்), அங்கு ஆட்கொணர்விக்கும் நீதிப் பேராணை கோரி தாக்கல் செய்யப்படும் மனு நிலைக்கத்தக்கதல்ல; தள்ளுபடியாகத்தக்கது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

A.D.M., Jabalpur v. Shivakant Shukla[4] - இவ்வழக்கு **'Habeas Corpus Case'** என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது. 1975-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 25-ஆம் தேதியில் திருமதி. இந்திரா காந்தி அரசாங்கத்தால் நாட்டில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. இதனால் ஷரத்து 19-ன் கீழ் குடி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஏழு வகையான சுதந்திர உரிமைகளும் தானாக செயலிழந்து போயின. அன்றிரவு பலரும் உள் நாட்டு பாதுகாப்பு பராமரிப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டனர். அவர்களில் பலருக்கு தாம் எதற்காக கைது செய்யப்பட்டுள்ளோம் என்பதற்குண்டான காரணங்கள் கூட விளக்கப் படவில்லை. எனவே அவர்களில் சிலர் தங்களை சிறைப்படுத்தியது சட்ட முறையற்றது என்றும், எனவே ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை பிறப்பிக்க வேண்டும் என்றும் ஷரத்து 226-ன் கீழ் பல்வேறு உயர் நீதிமன்றங்களில் மனு தாக்கல் செய்தனர்.

இந்நிலையில் குடியரசுத் தலைவர் ஷரத்து 359(1)-ன் கீழ் தனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஷரத்துகள் 14, 21 மற்றும் 22-ன் கீழ் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளையும் நிறுத்தி வைக்க உத்திரவு பிறப்பித்தார். இவ்வாறு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கும் பொழுது, ஆட்கொணர்விக்கும் நீதிப் பேராணை பிறப்பிக்க வேண்டி மனுச் செய்ய முடியாது என்று உயர் நீதி மன்றங்கள் தீர்ப்புரைத்தன. எனவே இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அங்கும் உயர் நீதிமன்றங்களால் வழங் கப்பட்ட தீர்ப்பு ஊர்ஜிதம் செய்யப்பட்டு, மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. அதாவது குடியரசுத் தலைவர் ஷரத்து 359(1)-ன் கீழ் மேற்கண்டவாறு உத்திரவு பிறப்பித்திருக்கும் பொழுது, ஆட்கொணர் விக்கும் நீதிப்பேராணை பிறப்பிக்கக் கோரும் மனுக்கள் நிலைக்கத்தக்க தல்ல என்று உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு ஆயம் கருத்துரைத்தது.

ஆனால் உச்ச நீதிமன்றத்தின் இத்தீர்ப்புரை தவறானது என்றும், சட்டத்தின் ஆட்சிக்கு முரணானது என்றும், ஷரத்து 21-ன் கீழான உரிமையின் முக்கியத்துவத்தை உச்ச நீதிமன்றம் ஆராயத் தவறிவிட்டது என்றும், அதன் கீழான 'தனிநபர் சுதந்திர உரிமையை' பறிப்பதற்கு நிருவாகத்துறைக்கு அதிகாரமில்லை என்றும் சட்ட அறிஞர்கள் பலராலும் குறை கூறப்பட்டது.

3. A.I.R. 1974 S.C. 2285
4. (1976) 2 SCC 521 : A.I.R. 1976 S.C. 1207.

(2) நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை [Writ of Certiorari]

விளக்கம்:

நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை என்பது, கீழ் நிலை நீதி மன்றங்கள் அல்லது நீதித்தன்மை வாய்ந்த அல்லது நிருவாகத் துறை அமைப்புகளின் (quasi-judicial or administrative body) முன்னர் விசாரணையிலிருக்கின்ற வழக்கு பதிவுக் கட்டுகளை தனது ஆய்விற்கு அனுப்பும்படி உச்ச நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றம் பிறப்பிப்ப தாகும். அவ்வாறு அனுப்பட்ட வழக்குப் பதிவுக் கட்டுகள் ஆராயப்பட்டு, அதில் கீழ்நிலை நீதிமன்றங்கள் அல்லது நீதித்தன்மை வாய்ந்த நிருவாகத் துறை அமைப்புகள் பிறப்பித்துள்ள உத்திரவு அல்லது எடுத்துள்ள முடிவு, அதிகாரவரம்பற்றதாக இருப்பின் அல்லது இயற்கை நீதிக் கோட் பாடுகளுக்கு எதிரானதாய் இருப்பின், அவ்வுத்திரவை அல்லது முடிவை நசித்துப் போகும்படி (quashed) உச்ச அல்லது உயர் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கும். இந்த நீதிப்பேராணை, தவறுகளைத் திருத்தும் தன்மை யுடையதாக (corrective in nature) உள்ளது. இது சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பின் முன் உள்ள வழக்குப் பதிவுக் கட்டுகளுக்கு எதிராக மட்டுமே பிறப்பிக்கப்படுகிறது; மாறாக அந்த அதிகார அமைப்பின் அலுவலருக்கு எதிராகப் பிறப்பிக்கப்படுவதில்லை.

சுருங்கக் கூறின், நீதிமன்றங்கள், நீதிமுறை சார்ந்த அலுவல்களைச் செய்யும் தீர்ப்பாயங்கள், நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் (administrative authorities or bodies) ஆகியவை தம் அதிகாரவரம்பை மீறிச் செயல்பட்டாலோ அல்லது உத்திரவு பிறப்பித்தாலோ அல்லது இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கைகள் எடுத்தாலோ, அவற்றை நீதிமுறையில் மறு ஆய்வு செய்வதற்கென அவை சம்பந்தப் பட்ட வழக்குப் பதிவுக் கட்டுகளை தமக்கு அனுப்புமாறு உச்ச அல்லது உயர் நீதிமன்றம் ஆணையிடுவதுதான், நெறிமுறையுறுத்தும் நீதிப் பேராணை எனப்படும்.

நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிப்பதற்குண்டான அடிப்படைகள் (Grounds for issuing the Writ of Certiorari):

[1] அதிகாரவரம்பின்மை (Lack of Jurisdiction): ஒரு விஷயத்தை அல்லது பிரச்சனையை தீர்மானிக்க சம்பந்தப்பட்ட கீழமை நீதிமன்றத் திற்கு அல்லது நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு அதிகாரவரம்பே இல்லாத பொழுது, அவ்விஷயத்தை அல்லது அப்பிரச்சனையை தீர்மானித்தால், அது அதிகாரவரம்பின்மை எனப்படுகிறது. பின்வரும் நிலைப்பாடுகள்அதிகாரவரம்பின்மைக்கு எடுத்துக்காட்டாகக் குறிப் பிடலாம். அவை

(அ) ஒரு அதிகார அமைப்பு சட்ட முறைப்படி அமைக்கப்

படாததாக இருப்பின் (if an authority is not properly constituted). **Ammal v. Rama**[5] - எனும் வழக்கில், தொடர்புடைய சட்டமானது, ஒரு தீர்ப்பாயம் அமைக்கப்பட மூன்று உறுப்பினர்கள் தேவை என்று விதிக்கிறது. ஆனால் அத்தீர்ப்பாயம் இரண்டு உறுப்பினர்களை மட்டும் கொண்டு அமைக்கப்படுகிறது. இங்கு அத்தீர்ப்பாயம் சட்ட முறைப்படி அமைக்கப்படவில்லை என்றும், அதற்கு அதிகாரவரம்பில்லை என்றும், எனவே அதன் முடிவு இல்லா நிலையது என்றும், நசித்துப் போகத்தக்கது என்றும் சென்னை உயர் நீதிமன்றம் கூறி, அதற்காக மேற்கண்ட நீதிப் பேராணையைப் பிறப்பித்தது.

(ஆ) வழக்கில் சம்பந்தப்பட்ட கருப் பொருள், நபர் அல்லது நிலப்பரப்பு குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு அதிகார அமைப்பிற்கு தகுதியில்லாமல் இருப்பின். **Newpapers Ltd. v. State Industrial Tribunal**[6] - எனும் வழக்கில், ஒரு தகராறை தீர்ப்பதற்கு அதனை அரசாங்க மானது, தொழிற் தகராறு தீர்ப்பாயத்திற்கு (Industrial Tribunal) அனுப்பியது. ஆனால் அத்தகராறு 1947-ஆம் ஆண்டின் தொழிற் தகராறுகள் சட்டத்தின்படியிலான ஒரு தொழிற் தகராறு அல்ல. எனவே அத்தீர்ப்பாயத்திற்கு அத்தகராறை விசாரித்து முடிவு கூற தகுதி இல்லை என்று கூறி, அத்தீர்ப்பாயத்தால் செய்யப்பட்ட முடிவை நசித்துப் போகும்படி (quash) மேற்கண்ட நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையை உச்ச நீதிமன்றம் பிறப்பித்தது.

(இ) ஒரு அதிகார அமைப்பு அதிகாரவரம்பு குறித்த பொருண்மை களில் (jurisdictional facts) தவறுகை புரிந்து, அதன் மூலம் தனக்கு அதிகாரவரம்பு உள்ளதாக தவறாகக் கருதிக் கொண்டு, முடிவுகள் ஏதேனும் செய்தால், அதுவும் அதிகாரவரம்பின்மை எனப்படுகிறது. இதற்கெதிராகவும் நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையை பிறப்பிக்க லாம். (இந்நிலைப்பாடு குறித்த வழக்குகளை நாம் ஏற்கனவே வினா எண். 36-ல் கண்டுள்ளோம்.)

(ஈ) ஒரு அதிகார அமைப்பிற்கு அதிகாரவரம்பை அளிக்கும் சட்டமே, அரசியலமைப்பிற்குட்படாததாக இருக்கும் பொழுது.

[2] அதிகப்படியாக அதிகாரவரம்பை செயற்படுத்தல் (Excess of Jurisdiction): ஒரு அதிகார அமைப்பு, தனக்கு சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள அதிகாரவரம்பிற்கு அதிகப்படியாக செயல்படும் பொழுது, அச்செயல் பாடு நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையால் நசித்துப் போகும்படி ஆணையிடப்படுகிறது.

[3] அதிகாரவரம்பை துஷ்பிரயோகம் செய்தல் (Abuse of Jurisdiction): ஒரு அதிகார அமைப்பு தனக்கு சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள

5. A.I.R. 1953 Mad. 129.
6. A.I.R. 1957 S.C. 532.

அதிகாரத்தை முறையற்ற நோக்கங்களுக்காகவோ, தீய எண்ணத்தின் அடிப்படையிலோ, தொடர்புடைய கூறுகளை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாமலோ பயன்படுத்தினால், அது தனது அதிகாரவரம்பை துஷ் பிரயோகம் செய்ததாக கூறப்படும். இவ்வாறு அதிகார துஷ்பிரயோகம் செய்து எடுக்கப்பட்ட நடவடிக்கையை அல்லது முடிவை நசித்துப் போகும்படி மேற்கண்ட நீதிப்பேராணை பிறப்பிக்கப்படும்.

[4] பதிவேட்டைப் பார்த்த மாத்திரத்திலேயே உணரத்தக்க வகையிலான சட்டம் பிழைபட்ட நிலைமை (Error of Law apparent on the Face of the Record): இதன் பொருள் யாதெனில், சம்பந்தப்பட்ட வழக்கின் பதிவுக் கட்டைப் ஒரு பார்வை பார்த்த மாத்திரத்திலேயே, அதில் சட்டத் தவறு செய்யப் பட்டுள்ளது தெளிவாகத் தெரியக் கூடிய நிலையாகும். வழக்கின் பதிவுக் கட்டில் உள்ள பிரச்சனைகளில் கீழ்நிலை நீதிமன்றம் அல்லது நிருவாகத் துறை அதிகார அமைப்பு சட்டத் தவறு செய்துள்ளது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. மாறாக அப்பதிவுக் கட்டை பார்க்கும் பொழுதே, அதை எவரும் உணரலாம்.

ஒரு அதிகார அமைப்பிற்கு ஒரு விஷயம் அல்லது பிரச்சனை குறித்து முடிவெடுக்க அதிகாரவரம்பிருந்து, ஆனால் அந்த முடிவை எடுப்பதில் சட்டத் தவறு ஏதேனும் செய்திருப்பின், அங்கு இம்மாதிரி யான சட்டம் பிழைபட்ட (தவறு) நிலைமை எழுகிறது.

பின்வருவன **'பதிவேட்டைப் பார்த்த மாத்திரத்திலேயே உணரத் தக்க வகையிலான சட்டம் பிழைபட்ட நிலைமை'** என்பதற்கு சான்று பகரும் எடுத்துக்காட்டுகள் ஆகும். அதாவது ஒரு அதிகார அமைப்பு பின்வரும் அடிப்படையில் தன் முன் உள்ள பிரச்சனையில் முடிவெடுத் தால், அதனை **'பதிவேட்டைப் பார்த்த மாத்திரத்திலேயே உணரத் தக்க வகையிலான சட்டம் பிழைபட்ட நிலைமை'** என்று கூறலாம். அவை, (1) தொடர்புடைய சட்டத்தின் வகைமுறைகளுக்கு தவறாக அளிக்கப்பட்ட பொருள் விளக்கத்தின் அடிப்படையில் அம்முடிவு அமைதல்; (2) சட்டத்தை கருத்தில் கொள்ளாமல் முடிவெடுத்தல் அல்லது சட்டத்தை புறக்கணித்திருத்தல்; (3) தொடர்புடைய தீர்ப்பு வழிச் சட்டங்களை கவனத்தில் கொள்ளாமல் விட்டிருத்தல்; (4) சட்டப் படி தவறாக உள்ள காரணங்களின் அடிப்படையில் அம்முடிவு அமைந்திருத்தல். இம்மாதிரியான சூழலில்களில் மேற்கண்ட நீதிப் பேராணையை வேண்டிப் பெற முடியும்.

Hari Vishnu v. Syed Ahmed[7] - எனும் வழக்கில் தேர்தல் சட்ட விதிகள் சிலவற்றை புறக்கணித்துவிட்டு, ஒரு பிரச்சனையில் தேர்தல் தீர்ப்பாயமானது முடிவு ஒன்றை எடுத்தது. இது **'பதிவேட்டைப் பார்த்த மாத்திரத்திலேயே உணரத்தக்க வகையிலான சட்டம் பிழைபட்ட**

7. A.I.R. 1955 S.C. 233.

நிலைமை' என்பதின் அடிப்படையில் அம்முடிவை நசித்துப் போகச் செய்தவற்காக, உச்ச நீதிமன்றம் மேற்கண்ட நெறிமுறையுறுத்தும் நீதிப் பேராணையைப் பிறப்பித்தது.

[5] இயற்கை நீதிக் கோட்பாடுகளை மீறுதல் (Violation of the Principles of Natural Justice): ஒரு அதிகார அமைப்பு அல்லது தீர்ப்பாயம் இயற்கை நீதிக் கோட்பாடுகளைப் பின்பற்றாமல், முடிவு அல்லது நடவடிக்கை ஏதேனும் எடுத்திருந்தால், அதற்கெதிராக மேற்கண்ட நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையை உச்ச அல்லது உயர் நீதிமன்றம் பிறப்பிக்கலாம். (இது குறித்த பல வழக்குகளை நாம் வினா எண். 27-ல் விரிவாகக் கண்டுள்ளோம்.)

நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையில் மாற்றுத் தீர்வழி (Alternative Remedy in Writ of Certiorari):

நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிப்பது நீதிமன்றங்களின் தன்விருப்புரிமை அதிகாரத்திற்குட்பட்டதாகும். எனவே பாதிக்கப்பட்ட நபருக்கு மாற்று தீர்வழி கிடைக்க வாய்ப்பிருப்பின், நீதிமன்றங்கள் தங்கள் தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்க மறுக்கலாம்.

எனினும் இது சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒரு கடுமையான விதியல்ல. ஒருவருக்கு மாற்றுத் தீர்வழி கிடைக்கத்தக்கதாக இருப்பினும், பின்வரும் சூழ்நிலைகள் நிலவினால் அங்கு மேற்படி மாற்றுத் தீர்வழி பெற முதலில் முயல வேண்டும் என்ற நிபந்தனையை தளர்த்தி நெறிமுறையுறுத்தும் நீதிப் பேராணையை உயர் நீதிமன்றங்கள் பிறப்பிக்கலாம். அவை,

(1) கீழ் நீதிமன்றத்தின் அல்லது தீர்ப்பாயத்தின் பதிவேட்டை பார்த்த மாத்திரத் திலேயே அதில் செய்யப்பட்டுள்ள சட்டத் தவறு புலனாகும் பட்சத்தில்; (2) அதிகாரவரம்பில்லாமல் கீழ் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் செயற்பட்டிருக்கும் பொழுது; (3) கீழ் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் தங்களது அதிகாரவரம்பை அதிகப்படியாக செலுத்தியிருக்கும் பொழுது; (4) இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு முரணாகச் செயல்பட்டிருக்கும் பொழுது; (5) மனுதாரரின் அடிப்படை உரிமைகளை மீறியிருக்கும் பொழுது.

மேற்கண்ட அய்ந்து சூழ்நிலைகளும் நெறிமுறையுறுத்தும் நீதிப் பேராணை பிறப்பிப்பதற்குண்டான அடிப்படைகளாக உள்ளன. இந்த அடிப்படைகளில் ஏதேனும் ஒன்று இருந்தால்தான், அங்கு நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையே பிறப்பிக்கப்படுகிறது. எனவே பொதுவாக மாற்றுத் தீர்வழியை முதலில் பெற வேண்டும் எனும் விதி, நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணைக்கு பொருந்தாது என்றுதான் கூற வேண்டும்.

(3) செயலுறுத்தும் நீதிப்பேராணை [Writ of Mandamus]

விளக்கம்:

இவ்வாணை நிருவாகத்துறை அதிகார அமைப்புகளுக்கும், அரசின் பொதுக் கூட்டுரு அமைப்புகளுக்கும் (Public Corporations) எதிராக உயர் அல்லது உச்ச நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படக் கூடியதாகும். இவ்வமைப்புகள் பொது மக்களுக்கு செய்யக் கூடிய பொதுக் கடமைகளிலிருந்து தவறினால், அக்கடமைகளை அவர்களுக்குச் செய்யும்படி உயர் அல்லது உச்ச நீதிமன்றம் இவ்வாணையை அவ்வமைப்புகளுக்கு அனுப்பலாம். மேலும் தீர்ப்பாயம் ஒன்று, தான் தீர்மானித்துச் செய்ய வேண்டிய கடமை ஒன்றைச் செய்யத் தவறினால், அதைச் செய்யுமாறும் இவ்வாணை பிறப்பிக்கப்படும்.

சுருங்கக் கூறின், பொதுக் கடமையான ஒரு செயலை ஓர் அலுவலர், நிருவாகத்துறை அதிகார அமைப்பு, தீர்ப்பாயம், பொதுக் கூட்டுரு அல்லது கீழ் நீதிமன்றம் செய்யத் தவறினால், அக்கடமையைச் செய்யுமாறு உயர் அல்லது உச்ச நீதிமன்றத்தால் இடப்படும் ஆணையே, செயலுறுத்தும் நீதிப்பேராணையாகும்.

செயலுறுத்தும் நீதிப்பேராணை கோருவதில் வழக்கு தொடுக்கும் உரிமை (Locus standi in Writ of Mandamus):

எவர் ஒருவரது உரிமைகள் பாதிக்கப்பட்டதோ, அவரே வழக்கு தொடுக்கும் உரிமையுடையவர் ஆவார் என்பது 'வழக்கு தொடுக்கும் உரிமை' குறித்த கோட்பாடு கூறும் விதியாகும். இவ்விதி செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்படும் மனுக்களில் மிகவும் கண்டிப்புடன் பின்பற்றப்படுகிறது. எனினும் பொது நலனின் அடிப்படையில் மேற்கண்ட நீதிப்பேராணை பிறப்பிக்கக் கோரும் மனுக்களில் மேற்கண்ட விதி தளர்த்தப்பட்டுள்ளது. எனவே பொதுவாக செயலுறுத்தும் நீதிப்பேராணை கோருபவரின் உரிமைகள், சம்பந்தப்பட்ட அலுவலர் அல்லது நிருவாகத்துறையானது ஒரு பொதுக் கடமையை செய்யாதிருந்ததினால் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

செயலுறுத்தும் நீதிப்பேராணையின் பரவெல்லைக்குள் வரும் அமைப்புகள் (The Authorities coming under the ambit of Writ of Mandamus):

பின்வரும் அதிகார அமைப்புகளுக்கு எதிராக செயலுறுத்தும் நீதிப் பேராணையை பிறப்பிக்க முடியும். அவை (1) அரசாங்கம், (2) பகுதியளவு அரசாங்கத் தன்மை கொண்ட அமைப்புகள், (2) அனைத்து பொது அதிகார அமைப்புகள், (4) நீதித்துறை, (5) தீர்ப்பாயங்கள், (6) சட்டப் படியான பொதுக் கூட்டுருக்கள், (7) சட்டத்தால் அமைக்கப்படாத

அமைப்புகள், (8) பல்கலைக்கழகங்கள், (9) ஒரு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றுள்ள தனியார் கல்லூரி நிருவாக அமைப்பு, (10) அரசு அலுவலர். சுருக்கமாக அனைத்து விதமான நிருவாகத்துறை அமைப்பு களுக்கும் மற்றும் அவற்றின் நடவடிக்கைகளுக்கும் எதிராக இந்த நீதிப் பேராணையை வேண்டிப் பெற முடியும்.

செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிப்பதற்கான நிபந்தனைகள் (The Conditions for the Grant of Writ of Mandamus):

[1] பொதுக் கடமை ஒன்று இருத்தல் வேண்டும் (There must be a Public Duty): நீதிமன்றம் அல்லது நிருவாகத்துறை அதிகார அமைப்பு அல்லது தீர்ப்பாயம் பொதுக் கடமை ஒன்றை செய்யாதிருக்கும் பொழுதுதான், அதைச் செய்யக் கோரி ஆணையிட மேற்படி நீதிப்பேராணை பிறப் பிக்கப்படுகிறது. இங்கு பொதுக் கடமை என்பது, அரசியலமைப்பால், இயற்றப்பட்ட ஒரு சட்டத்தால் அல்லது பொதுச் சட்டத்தால் விதிக்கப் பட்டதாக இருத்தல் வேண்டும். அதாவது அப்பொதுக் கடமை சட்டப் படியானதாக இருக்க வேண்டும். அதுபோல் அப்பொதுக் கடமையை வலியுறுத்திச் செயல்படுத்தக் கூடிய உரிமை, இந்நீதிப்பேராணை வேண்டுபவருக்கு இருக்க வேண்டும்.

சுருங்கக் கூறின் இந்நீதிப்பேராணையை பெற விழைவோர் முதலில் தொடர்புடைய நீதிமன்றம் அல்லது நிருவாகத்துறை அதிகார அமைப்பு அல்லது தீர்ப்பாயம் தனக்கு, சட்ட அடிப்படையில் சில பொதுக் கடமைகளை செய்ய வேண்டிய பொறுப்புடையதாக உள்ளது என்றும், அக்கடமைகளைச் செய்யத் தவறிவிட்டது என்றும், அதைச் செய்யுமாறு அவற்றைப் பணிக்க தனக்கு சட்டப்படி உரிமை உண்டு என்றும் நீதிமன்றத்தின் மன நிறைவுக்கு ஒப்ப எடுத்துக்காட்ட வேண்டும்.

நாம் முன் கண்டவாறு இந்நீதிப்பேராணை பொதுக் கடமைகளை வலியுறுத்திச் செயல்படுத்துவதற்காக மட்டுமே பிறப்பிக்கப்படும். எனவே தனிப்பட்ட விதத்தில் எழும் ஒரு கடமையை (a private duty) அல்லது **ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் எழும் கடமையை (a duty arising out of a contract)** வலியுறுத்திச் செயல்படுத்த மேற்கண்ட நீதிப் பேராணை பிறப்பிக்க முடியாது. இந்நிலையை பின்வரும் இரண்டு வழக்குகள் எடுத்துக்காட்டுகின்றன.

I.T. Commissioner v. State of Madras[8] - இவ்வழக்கில் ஒரு ஒப்பந்தத்திலிருந்து எழும் கடமைகளை நிறைவேற்ற அரசாங்கத்திற்கு ஆணையிடும்படி மனுதாரர் செயலுறுத்தும் நீதிப்பேராணை வேண்டி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்தார். ஆனால் ஒப்பந்தத்திலிருந்து எழும் கடமைகள் பொதுக் கடமைகள் அல்ல எனும் அடிப்படையில் சென்னை உயர் நீதிமன்றம் மேற்படி மனுவை தள்ளுபடி செய்துவிட்டது. **ஆனால்,**

8. A.I.R. 1954 Mad. 24.

Gujarat State Financial Corporation v. Lotus Hotels Pvt. Ltd.[9] - எனும் வழக்கில், ஓட்டல் ஒன்றைக் கட்டுவதற்கு கடன் அளிப்பதற்காக குஜராத் மாநில நிதிக் கழகம் (பொதுக் கூட்டுரு), லோட்டஸ் ஓட்டல் நிருவாகத்திடம் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டது. ஆனால் அவ்வுடன்படிக்கையின்படி ஒத்துக் கொள்ளப்பட்ட கடன் தொகையை அக்கழகம், லோட்டஸ் ஓட்டலுக்கு அளிக்கவில்லை. எனவே உடன் படிக்கைப்படி கடன் தொகையை அளிக்க அக்கழகத்திற்கெதிராக செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்குமாறு லோட்டஸ் ஓட்டல் நிருவாகம் குஜராத் உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்தது. அதன்படி ஒத்துக் கொள்ளப்பட்ட கடன் தொகையை அளிக்க உத்திரவிட்டு, அக்கழகத்திற்கெதிராக மேற்படி நீதிப்பேராணையை குஜராத் உயர் நீதிமன்றம் பிறப்பித்தது. அப்பொழுது, அக்கழகத்திற்கும், லோட்டஸ் ஓட்டல் நிருவாகத்திற்கும் இடையிலான ஒப்பந்தத்தில் சட்டத் தன்மை உள்ளது என்றும், அது சட்டக் கட்டுப்பாடற்ற ஒரு ஒப்பந்தம் அல்ல என்றும் குஜராத் உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது.

இதை எதிர்த்து அக்கழகம் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தது. அங்கும் குஜராத் வழங்கிய மேற்படி தீர்ப்பு ஊர்ஜிதம் செய்யப் பட்டது. இங்கு அக்கழகம் ஒப்பந்தப்படி உறுதி மொழி அளித்ததை மீற முடியாது என்றும், **இது உறுதிமொழி முரண்தடையின்பாற்பட்டது (promissory estoppel)** என்றும் கூறப்பட்டது.

[2] சம்பந்தப்பட்ட பொதுக் கடமை நிபந்தனைகளற்ற முழுமையான கடமையாக இருத்தல் வேண்டும் (The Public Duty must be an Absolute Duty): நிபந்தனைகளற்ற முழுமையான கடமை என்பது, சம்பந்தப்பட்ட நிருவாக அதிகார அமைப்புகள் செய்ய வேண்டிய பொதுக் கடமைகள் சட்டத்தின் அடிப்படையில் கட்டாயமானவையாக இருக்க வேண்டும். (mandatory in nature). மாறாக அவற்றின் தன்விருப்புரிமையின் (discretion) அடிப்படையில் அக்கடமைகள் செய்யப்படக் கூடியவைகளாக இருத்தல் கூடாது. எனினும் ஒரு அதிகார அமைப்பிற்கு ஒரு விஷயத்தில் முடிவெடுக்க சட்டத்தால் தன்விருப்புரிமை அதிகாரம் வழங்கப் பட்டிருந்து, அத்தன்விருப்புரிமை அதிகாரத்தை அந்த அதிகார அமைப்பு பயன்படுத்தாமல் இருந்தால், அதைப் பயன்படுத்தி முடிவெடுக்கும்படி செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்கப்படலாம். அதுபோல் சம்பந் தப்பட்ட தன்விருப்பிரிமை அதிகாரத்தை அந்த அதிகார அமைப்பு துஷ்பிரயோகம் செய்திருந்தால் அல்லது முறைகேடாக பயன்படுத்தி யிருந்தால், அதுவும் தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்தத் தவறியமை ஆகும். எனவே இங்கும் தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தும்படி அந்த அதிகார அமைப்பை செயலுறுத்தும் நீதிப் பேராணையின் வாயிலாக கட்டாயப்படுத்தலாம்.

9. A.I.R. 1983 S.C. 848.

State of M.P. v Mandawara[10] - எனும் வழக்கில், மத்திய பிரதேச அரசு, தனது அலுவலர்களுக்கு பஞ்சப்படி மற்றும் உதவித் தொகை வழங்க வேண்டுமென்றும், அஃது அரசின் தன்விருப்பரிமைப்படியே வழங்க வேண்டுமென்றும் விதிகள் செய்யப்பட்டன. இங்கு ஒன்றைக் கவனித்தல் அவசியம். அதாவது அரசின் தன் விருப்புரிமைப்படிதான் பஞ்சப்படி வழங்கப்படும்; மாறாக பஞ்சப்படி வேண்டிக் கேட்க அலுவலர்களுக்கு எவ்வித சட்ட உரிமையும் அளிக்கப்படவில்லை; அரசிற்கும் பஞ்சப்படியை கொடுத்தே தீர வேண்டும் என்று எவ்வித சட்டக் கடப்பாடும் கடமையும் கிடையாது. எனவே பஞ்சப்படி அளிக்கக் கோரி மேற்படி செயலுறுத்தும் நீதிப்பேராணையைப் பெற அலுவலர் களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

[3] பொதுக் கடமையை ஆற்ற வேண்டும் என்று குறித்தவகையில் கேட்கப்பட்டு, அது மறுக்கப்பட்டிருத்தல் வேண்டும் (There must be Specific Demand and Refusal to do the Public Duty): ஒரு பொதுக் கடமையை ஆற்ற செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்க வேண்டும் என்று மனுச் செய்பவர், அப்பொதுக் கடமையை ஆற்றுக, என சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பை குறித்த வகையில் கோரியிருக்க வேண்டும். மேலும் அந்த அதிகார அமைப்பு அப்பொதுக் கடமையை ஆற்ற குறித்த வகையில் மறுத்திருக்க வேண்டும். இதை அம்மனுதாரர் முதற்கண் நிரூபித்தல் வேண்டும். அப்பொழுதுதான் அம்மனு மேற்கொண்டு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். எனினும் அவ்வாறு கோருதலும், மறுத்தலும் வெளிப்படையானதாக இருக்க வேண்டுமென்பதில்லை. உட்கிடையாக உணர்ந்து கொள்ளும் வகையிலும் இருக்கலாம். இந்நிலைப்பாடு செயலுறுத்தும் நீதிப்பேராணை கோரும் மனுக்களில் ஏன் வலியுறுத் தப்படுகிறது என்றால், பொதுக் கடமையை ஆற்றுக என்று கோரும் பொழுது, அக்கோரிக்கையை சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பு பரிசீலனை செய்து, அப்பொதுக் கடமையை ஆற்றுவதற்கு ஒரு வாய்ப்பு அதற்கு கிடைக்கிறது. பொதுக் கடமையை ஆற்றும்படி கோரிக்கை செய்யப்பட்ட பிறகும், அப்பொதுக் கடமையை ஆற்றாது இருப்பதும், பொதுக் கடமையை ஆற்ற மறுத்ததற்கு ஒப்பாகும். எனவே இச் சூழலிலும் செயலுறுத்தும் நீதிப்பேராணை கோர வழி ஏற்படுகிறது.

Naubat Rai v. Union of India[11] - எனும் வழக்கில், மனுதாரர் தன்னை மீண்டும் பணியில் அமர்த்த அரசாங்கத்திற்கு எதிராக செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்கக் கோரினார். ஆனால் இம்மனுவை பஞ்சாப் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. ஏனெனில், மனுதாரர் பணியிலிருந்து நீக்கப்பட்ட பிறகு, அவர் தன்னை மீண்டும் பணியிலமர்த்த வேண்டும் என்று அரசாங்கத்தின் சம்பந்தப்

10. A.I.R. 1954 S.C. 493.
11. A.I.R. 1953 Pun. 137.

பட்ட நிருவாகத்துறையை கோரவே இல்லை. விண்ணப்பம் எதையும் செய்யவில்லை.

ஆனால் இவ்வாறு கோருவதும் மறுப்பதும் ஒரு கண்டிப்பான விதியல்ல. பொருத்தமான மற்றும் அவசரமான சூழ்நிலைகளில் இவ் விதியை தளர்த்தி, உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்கள் செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்கலாம்.

[4] சம்பந்தப்பட்ட பொதுக்கடமை ஆற்றப்படாமல் இருக்க வேண்டும் (Subsisting Duty): எந்தப் பொதுக் கடமையை ஆற்றக் கோரி செயலுறுத்தும் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்படுகிறதோ, அப்பொதுக் கடமை அம்மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியில் ஆற்றப்படாமல் இருக்க வேண்டும்.

செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிப்பதற்குண்டான அடிப் படைகள் (Grounds for issuing the Writ of Mandamus):

பொதுவாக ஒரு பொதுக் கடமையை ஆற்றுவது முழுக்க முழுக்க சம்பந்தப்பட்ட நிருவாகத்துறையின் தன்விருப்புரிமைக்கு உட்பட்டது என்றால், அங்கு செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்கப்பட மாட்டது. இதை நாம் ஏற்கனவே சென்ற பத்திகளில் விரிவாகக் கண்டோம். ஆனால் அத்தன்விருப்புரிமையைப் பயன்படுத்துவதில் பின்வரும் அடிப்படைகளில் ஏதேனும் ஒன்றின்படி சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பு செயல்பட்டால், அங்கு செயலுறுத்தும் நீதிப் பேராணை பிறப்பிக்கப்படும். அவை,

(1) சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பு சட்டத்தால் தனக்களிக்கப் பட்டுள்ள அதிகாரவரம்பை மீறி தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளது.

(2) பிரச்சனைக்கு சம்பந்தமில்லாத விஷயங்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, அந்த அதிகார அமைப்பு முடிவு ஏதேனும் செய்திருந்தால்.

(3) நியாயமற்ற முறையில் தன்விருப்புரிமை அதிகாரத்தை துஷ் பிரயோகம் செய்திருந்தால். இந்த அதிகார துஷ்பிரயோகம் பின்வரும் வழிகளில் எழுகிறது. அவை (அ) அலுவலகரீதியாக பழிவாங்கும் நோக்குடன் தன்விருப்புரிமை அதிகாரத்தை பயன்படுத்தல், (ஆ) விரும்பத்தகாத விளைவுகளுக்காக தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தல், (இ) தன்விருப்புரிமை அதிகாரத்தை அசட்டையுடன் பயன்படுத்தல், (ஈ) சட்டத்தின் நோக்கத்திற்கு தொடர்பற்ற கூறுகளைப் பரிசீலனை செய்யும் முகமாக தன் விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தல்.

(4) சட்டத்தின் வகை முறைகளை மீறுதல்.

(5) அதிகாரத்தை தீயெண்ணத்துடன் பயன்படுத்தல்.

செயலுறுத்தும் நீதிப்பேராணை கோருவதில் கால தாமதமும், மாற்றுத் தீர்வழியும் (Laches and Alternative remedy in the Writ of Mandamus):

பொதுவாக செயலுறுத்தும் நீதிப்பேராணை கோரும் மனுவை மனுதாரர் காலந் தாழ்ந்து தாக்கல் செய்திருந்தாலோ அல்லது அவரது பிரச்சனைக்கு போதுமான மாற்றுத் தீர்வழி இருந்தாலோ, அங்கு செயலுறுத்தும் நீதிப்பேராணையை பிறப்பிக்க நீதிமன்றம் மறுக்கலாம். எனினும் இவ்வாறு மறுப்பதும் அனுமதிப்பதும் நீதிமன்றத்தின் தன் விருப்புரிமைக்கு உட்பட்டதாகும். அந்த வகையில் **State of Bombay v. United Motors**[12] - எனும் வழக்கில் நிருவாகத்துறையின் செயல் பாட்டால் அல்லது நடவடிக்கையால் மனுதாரரின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டால், அங்கு அவருக்கு மாற்றுத் தீர்வழி விதி, செயலுறுத்தும் நீதிப்பேராணை கோருவதற்கு ஒரு தடையாகாது. அதாவது அவரது பிரச்சனைக்கு போதுமான மாற்றுத் தீர்வழி இருப்பினும், இந்நீதிப் பேராணையை அவர் கோரலாம் எனப்பட்டது.

யாருக்கெதிராக மற்றும் எப்பொழுது செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்கப்படமாட்டது? (Against whom and When a Writ of Mandamus will not be issued?):

பின்வரும் நபர்களுக்கெதிராகவும், நடவடிக்கைகளுக்கெதிராகவும் செயலுறுத்தும் நீதிப்பேராணை உச்ச மற்றும் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படமாட்டாது.

(1) குடியரத் தலைவர் மற்றும் ஆளுநரின் அதிகாரங்களையும், கடமைகளையும் வலியுறுத்திச் செயல்படுத்தமாறு செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்கப்படமாட்டாது.

(2) ஒரு சட்டத்தை நிறைவேற்ற அல்லது நிறைவேற்றுவதிலிருந்து தடுக்க ஒரு சட்டமியற்றுத்துறை அமைப்பிற்கெதிராக (சட்டமன்றம்) செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்கப்படமாட்டாது.

(3) பாராளுமன்ற அல்லது சட்டமன்ற அவைகளின் ஒழுங்கமைவை பராமரிக்கும், நடைமுறைகளை ஒழுங்குபடுத்தும், செயற்பாடுகளை நடத்தும் அதிகாரம் கொண்ட அத்தகு பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற அலுவலர்களுக்கெதிராக செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்கப் படமாட்டாது.

(4) ஒரு நீதிமுறைப் பணியை வலியுறுத்திச் செயல்படுத்தும் பொருட்டு செயலுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்கப்படமாட்டாது.

(5) ஒரு ஒப்பந்தத்தின் மறு தரப்பினராக அரசாங்கமே இருந்தாலும் ஒப்பந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றும்படி செயலுறுத்தும் நீதிப்

12. A.I.R. 1953 S.C. 252.

பேராணை பிறப்பிக்கப்பட முடியாது. (இது உறுதிமொழி முரண்தடை எனும் விதிவிலக்கிற்குட்பட்டது.)

(6) தீங்கியல் சட்டப்படி எழும் ஒரு உரிமையியல் பொறுப்பை வலியுறுத்திச் செயல்படுத்த, இப்பேராணை பிறப்பிக்கப்படாது.

(7) தனி நபர்கள், நிறுவனங்கள், தனியார் கழகங்கள், தொழிற் சங்கங்களுக்கு எதிராக இப்பேராணை பிறப்பிக்கப்படாது. (அவர்கள் பொது அதிகாரத்தை செயல்படுத்துவதாக இருந்தால், பிறப்பிக்கப்படும்.)

(8) தேர்தல் நடைமுறைகளில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக.(இங்கு தேர்தல் மனு (Election Petition) மட்டுமே தாக்கல் செய்ய முடியும்.)

(9) இந்நீதிப்பேராணை பிறப்பிப்பது வீணாணதாக இருக்கும் பட்சத்தில்.

(10) சட்டத்தின் வலிமையற்ற நிருவாகமுறை ஏவுரைகளுக்கு எதிராகவோ அல்லது ஒரு அமைச்சுப் பணியை நிறைவேற்றக் கோரியோ இப்பேராணை பிறப்பிக்கப்படாது.

செயலுறுத்தும் நீதிப்பேராணை குறித்து முடிவாகக் குறிப்பிட வேண்டுமெனில், இன்றைய நிருவாகத்துறையின் ஏதேச்சதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதில் ஒரு வலிமையான ஆயுதமாக திகழ்கிறது. அது போல், நிருவாகத்துறை செயல்பட்டால், நடவடிக்கையால் அல்லது முடிவால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு தகுந்த தீர்வழிகள் வழங்குவதில், தாயன்போடு செயல்படுகிறது எனலாம். சுருங்கக் கூறின் நிருவாகமுறை நடவடிக்கைகளின் மீதான நீதிமுறைக் கட்டுப்பாட்டின் பிறப்பிடமே, செயலுறுத்தும் நீதிப்பேராணை எனலாம்.

(4) தடையுறுத்தும் நீதிப்பேராணை [Writ of Prohibition]

விளக்கம்:

தடையுறுத்தும் நீதிப்பேராணையானது, கீழ் நீதிமன்றங்களோ, நீதித்தன்மை வாய்ந்த அதிகார அமைப்புகளோ, நிருவாகத்துறை அதிகார அமைப்புகளோ அல்லது தீர்ப்பாயமோ தங்கள் முன் உள்ள ஒரு வழக்கு நடவடிக்கையில் தங்களது அதிகாரவரம்பை மீறி அல்லது சட்ட முறைக்கு முரணாக ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் அதை மேற் கொண்டு அந்த அமைப்புகள் நடத்துவதைத் தடை செய்வதற்காக உச்ச அல்லது உயர் நீதிமன்றத்தல் பிறப்பிக்கப்படுதாகும்.

இந்த விளக்கம், ஏறத்தாழ நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணைக் குண்டான விளக்கத்தை ஒத்திருப்பதாக நமக்குத் தோன்றினால், அதில் தவறொன்றுமில்லை. ஏனெனில் நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையும், தடையுறுத்தும் நீதிப்பேராணையும் ஒத்த தன்மையுடைய நீதிப்பேராணை

களாகும். எனினும் இவை இரண்டிற்கும் சில முக்கிய வேறுபாடுகள் உள்ளன.

நெறிமுறைறுத்தும் நீதிப்பேராணை மற்றும் தடையுறுத்தும் நீதிப் பேராணை - வேறுபாடுகள் (Difference between a Writ of Certiorari and a Writ of Prohibition):

மேற்கண்ட இரு நீதிப்பேராணைகளும் அவற்றின் பரவெல்லை மற்றும் விதிகள் ஆகியவற்றில் பொதுவான பண்புகளைக் கொண்டிருக்கின்றன. இவ்விரண்டு நீதிப்பேராணைகளும், கீழ் நிலை நீதிமன்றங்கள், நீதித்தன்மை வாய்ந்த அதிகார அமைப்புகள், நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் ஆகியவற்றிற்கெதிராக பிறப்பிக்கப்படுகிறது. இந்த நீதிப் பேராணைகளின் நோக்கம், மேற்கண்ட அமைப்புகள் தங்களுடைய அதிகாரவரம்பை மீறிச் செல்வதை தட்டிக் கேட்பதாகும். ஆனால் தட்டிக் கேட்கும் விதத்தில்தான் இந்த இரண்டு நீதிப்பேராணைகளும் பின்வருமாறு வேறுபடுகிறது.

(1) நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை, கீழ் நிலை நீதிமன்றங்கள், நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் தங்களது அதிகாரவரம்பை மீறிச் செய்த முடிவுகளை நசித்துப் (quash) போகும்படிச் செய்கிறது. ஆனால் தடையுறுத்தும் நீதிப்பேராணை, ஒரு கீழ் நிலை நீதிமன்றத்தின் அல்லது நிருவாகத்துறை அதிகார அமைப்பின் பரிசீலனையில் உள்ள ஒரு வழக்கு நடவடிக்கையில், அவை தங்களது அதிகாரவரம்பை மீறிச் செயல் பட்டால், அவ்வழக்கு நடவடிக்கை மேலும் தொடர்ந்து நடத்தப் படுவதை தடை செய்வதற்காக (to stop any further proceedings) பிறப்பிக்கப்படுகிறது.

(2) இந்நீதிப்பேராணைகள் பெறுவதின் படிநிலைகளில் வேறுபாடு உண்டு. அதாவது நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையை வழக்கு நடந்து, அதில் தீர்ப்பு கொடுக்கப்பட்டப் பின்னர்தான், வேண்டிப் பெறலாம். ஆனால் தடையுறுத்தும் நீதிப்பேராணையை வழக்கின் நடைமுறைகள் ஒரு கீழ் நிலை நீதிமன்றத்தில் அல்லது நீதித்தன்மை வாய்ந்த நிருவாகத்துறை அதிகார அமைப்பின் முன் நடந்து கொண்டிருக்கும் பொழுதே, அதனை தடுத்து நிறுத்துவதற்காக மனுச் செய்து பெறலாம்.

(3) நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை நீதிவழியிலான குறைகளை குறைந்த அளவில்தான் சார்ந்து உள்ளது. ஆனால் தடையுறுத்தும் நீதிப்பேராணை நீதிவழியிலான குறைகளையே முற்றிலும் சார்ந்துள்ளது.

தடையுறுத்தும் நீதிப்பேராணை குறித்து சுருக்கமாக குறிப்பிட வேண்டுமெனில், கீழ் நிலை நீதிமன்றங்களும், நிருவாகத்துறை அதிகார அமைப்புகளும், தீர்ப்பாயங்களும் தங்கள் முன் உள்ள வழக்குகளில் அல்லது பிரச்சனைகளில் தங்களது அதிகாரவரம்பை மீறிச் செல்லாமல்

ஆரம்பத்திலேயே (அதாவது அவ்வழக்கு நடந்து கொண்டிருக்கையிலேயே) தடுப்பதேயாகும்.

(5) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை [Writ of Quo-warranto]

விளக்கம்:

"Quo-warranto" என்றால் **"உனக்கென்ன தகுதியுள்ளது?"** என்று வினவுதல் ஆகும்.

பொது அதிகாரப் பதவியில் உள்ளவர் அல்லது பொது உரிமை பெற்றவர் அதற்கான தகுதி பெற்றவராக இருத்தல் வேண்டும். சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள தகுதிகள் உடையவரே, பொது அதிகாரப் பதவியில் இருக்க முடியும். அப்பதவியில் உள்ள ஒருவர் அத்தகைய தகுதி இல்லாதவரென்று மனுச் செய்யப்பட்டால், அவர் எந்த தகுதியில் அப்பொதுப் பதவியை வகிக்கிறார் என்று வினவி உச்ச அல்லது உயர் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கலாம். இவ்வகையான ஆணையே **'தகுதி முறை வினவும் நீதிப்பேராணை'** எனப்படுகிறது.

வேறுவிதத்தில் கூறுவதென்றால், தகுதிமுறை வினவும் நீதிப் பேராணை என்பது, ஒருவர் சட்டரீதியான தகுதிகளின்றி ஓர் பொது அதிகார பதவியை அல்லது அலுவலைப் பறித்துக் கொள்வரானால், வகிப்பாரானால் அல்லது ஒரு பொது அதிகாரப் பதவிக்கு அல்லது அலுவலுக்கு நியமிக்கப்படுவரானால், அந்த பதவியிலிருந்து அல்லது அலுவலிலிருந்து அவரைத் தகுதியற்றவர் என நீக்க வழங்கப்படும் தீர்வழியாகும்.

நிருவாகமுறைச் சட்டத்தில் தகுதிமுறை வினவும் நீதிப்பேராணையின் முக்கியத்துவம்:

நிருவாகமுறைச் சட்டத்தில் இந்நீதிப்பேராணை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. ஏனெனில், பொது அதிகாரப் பதவிகளின் நியமனத்தில் எழும் பிரச்சனைகளில், இந்நீதிப்பேராணையின் வாயிலாக நீதிமன்றம் தலையிட்டு, அப்பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துகிறது. எவரேனும் ஒருவர் சுதந்திரமான பொது அதிகாரப் பதவியை அல்லது அப்பதவியில் நியமனம் செய்யப்படுவதற்குண்டான வாய்ப்பைப் பறித்து, தமதாக்கிக் கொண்டால், அவர் எந்தத் தகுதியின் அடிப்படையில் அவ்வாறு செய்யத் துணிந்தார் என்று அவரைக் காரணங் காட்டக் கோர, இந்நீதிப்பேராணை உச்ச மற்றும் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படுகிறது. எனவே இந்நீதிப்பேராணை கோரி தாக்கல் செய்யப்படும் மனுவில், பொதுப் பதவி வகிக்கும் அல்லது பொதுப் பதவியைப் பறித்துக் கொண்ட அந்நபர், அவர் அப்பதவி வகிப்பதற்குண்டான சட்டத் தகுதிகளையும், சட்டத்தால் அவருக்கு

வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தையும், உரிமையையும் நீதிமன்றத்தின் முன் எடுத்துக் கூறி, அவர் அவ்வாறு பதவி வகிப்பது சட்டப்படி நியாயமானதுதான் என்று மெய்ப்பிக்க வேண்டும். இவ்வாறு மெய்ப்பிக்கா விடில், அவருக்கெதிராக தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை பிறப்பிக்கப்படும். அவரது பொது அதிகாரப் பதவி பறிக்கப்படும். இதனால் அரசு நிருவாகத்தில் தகுதியற்றவர் பதவி வகிப்பது தடுக்கப்படும். அப்பொது பதவிக்கு தகுதியுடைய குடிமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

தகுதிமுறை வினவும் நீதிப்பேராணையில் 'வழக்கு தொடுக்கும் உரிமை' குறித்த கோட்பாடு (The Doctrine of Locus standi in the Writ of Quo-warranto):

பொதுவாக பாதிக்கப்பட்டவர்தான் தீர்வழி வேண்டி வழக்கு தொடுக்க உரிமை படைத்தவர் என்று, **'வழக்கு தொடுக்கும் உரிமை' (locus standi)** குறித்த கோட்பாடு கூறுகிறது. ஆனால் இந்தக் கோட்பாடு கூறும் மேற்படி கடுமையான நிபந்தனையானது, தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை கோரி தொடுக்கப்படும் மனுக்களில் உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்களால் தளர்த்தப்பட்டுள்ளது என்றே கூற வேண்டும். எனவே, ஒருவர் தனிப்பட்ட விதத்தில் பாதிக்கப்படவில்லையென்றாலும் கூட அல்லது அவருக்கு அந்த பொது அதிகாரப் பதவியில் எவ்வித அக்கறையும் இல்லையென்றாலும் கூட, அவர் மேற்படி தகுதிமுறை வினவும் நீதிப் பேராணை கோரி மனு தாக்கல் செய்யலாம். எனினும் இது குறித்த ஆரம்ப கால கட்ட முக்கிய வழக்கொன்றில், சென்னை உயர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பு மாறுபட்டதாகும். அவ்வழக்கு வருமாறு.

In Re Chakkara Chettiar's Case[13] - எனும் வழக்கில் சட்டமன்ற மேலவையின் நியமன உறுப்பினரான திரு. இராஜாஜி அவர்கள் (அப்பொழுதைய) சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக நியமனம் செய்யப்பட்டதை எதிர்த்து சர்க்கரை செட்டியார் என்பவர் தகுதிமுறை வினவும் நீதிப்பேராணையை பிறப்பிக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். ஆனால் திரு. இராஜாஜி முதலமைச்சராக நியமனம் செய்யப்பட்டதால் மனுதாரரின் தனிப்பட்ட உரிமைகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படையவில்லை என்றும், எனவே அம்மனுவைத் தாக்கல் செய்ய சர்க்கரை செட்டியாருக்கு வழக்கு தொடுக்கும் உரிமை இல்லை என்றும் கூறி, அம்மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியது. ஆனால் இத்தீர்ப்பு பின்வரும் வழக்கொன்றின் மூலமாக அதே சென்னை உயர் நீதிமன்றத்தால் ஒதுக்கித் தள்ளப்பட்டது (overruled).

Siva Rama Krishna v. Armugha Mudaliar[14] - எனும் வழக்கில் நல்லெண்ணத்துடன் செயல்படும் எவர் வேண்டுமானாலும் தகுதிமுறை

13. 2 MLJ 779.

14. A.I.R. 1957 Mad. 17.

வினவும் நீதிப்பேராணை கோரி மனுச் செய்யலாம்; அவரது உரிமைகள் தனிப்பட்ட விதத்தில் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதில்லை என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறியது. இதே கருத்து **Venkateswara Rao v. State of A.P.**[15] - எனும் வழக்கிலும் உச்ச நீதிமன்றத்தால் கூறப் பட்டது. எனவே தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை கோர 'வழக்கு தொடுக்கும் உரிமை' இருக்க வேண்டிய அவசிமில்லை (locus standi is not necessary) என்பது தெளிவு.

தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை பிறப்பிப்பதற்கான நிபந்தனைகள் (The Conditions for the Grant of Writ of Quo-warranto):

[1] சம்பந்தப்பட்ட பதவி, பொதுப் பதவியாக இருக்க வேண்டும் (The Office must be a Public Office): பொதுப் பதவி என்பது பொதுக் கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு அரசியலமைப்பால் அல்லது இயற்றப்பட்ட ஒரு சட்டத்தால் உருவாக்கப்பட்டதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, அமைச்சர் பதவி, சபாநாயகர் பதவி, தலைமை வழக்குரைஞர் பதவி போன்று. எனவே தகுதி முறை வினவும் நீதிப் பேராணையை, தனியார் பதவிகளுக்கு எதிராக பிறப்பிக்க முடியாது. எடுத்துக்காட்டாக, ஒரு சங்கத்தின் உறுப்பினர் பதவி, தனியார் பள்ளிக் கூடத்தின் நிருவாகக் குழுப் பதவி, அரசியல் கட்சிகளின் பதவி போன்று.

[2] சம்பந்தப்பட்ட நபர் அப்பதவியை உண்மையில் வகிப்பவராக இருக்க வேண்டும். (The Person must be in Actual Possession of the Office): பொதுப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் அல்லது நியமனம் செய்யப்படும் ஒரு நபர், அப்பதவிக்கான பொறுப்புகளை உண்மையில் (actually taken charge of the office) எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். பதவிக்கான பொறுப்புகளை எடுத்துக் கொள்ளும் முன்பு, மேற்படி நீதிப்பேராணை பிறப்பிக்கப்படமாட்டாது.

[3] சட்டத்திற்கு முரண்பட்ட நிலையில் அப்பதவி வகிக்கப்பட்டிருக்க வேண்டும். (The Office must be held in contravention of Law): ஒரு நபர் பொதுப் பதவியை வகித்துக் கொண்டிருப்பது சட்டத்திற்கு முரண் பட்டதாக இருக்க வேண்டும். இந்நிலை தெளிவாக நிரூபிக்கப்பட்டதால் தான், மேற்கண்ட நீதிப்பேராணை பிறப்பிக்கப்படும்.

[4] பின்னிட்டு ஏற்படும் தகுதியிழப்பு (Subsequent Disqulification): சில நிகழ்வுகளில், ஒரு நபரை ஒரு பொதுப் பதவிக்கு நியமிக்கும் பொழுது, அவர் அப்பதவியை வகிக்க சட்டப்படி தகுதியுடையவராக இருப்பார். ஆனால், பின்னிட்டு சில காரணங்களால் (திறமையின்மை, பித்தராதல் போன்று) அவர் அப்பதவியை வகிக்கும் தகுதியை இழப்பாரானால், இந்த அடிப்படையிலும் தகுதிமுறை வினவும் நீதிப்பேராணையை அவருக்கெதிராகக் கோரிப் பெற முடியும்.

15. A.I.R. 1966 S.C. 828.

தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை எப்பொது மறுக்கப்படும்? (When the Writ of Quo-warranto may be denied?):

தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை பிறப்பிப்பது நீதிமன்றங்களின் தன்விருப்புரிமை அதிகாரத்திற்குட்பட்டதாகும். எனவே அதை பின்வரும் காரணங்களின் அடிப்படையில் நீதிமன்றங்கள் பிறப்பிக்க மறுக்கலாம். அவை, (1) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை கோரும் மனுவை தாக்கல் செய்வதில் அசாதாரணமான காலதாமதம் இருப்பின், அதாவது சம்பந்தப்பட்ட நபர் பதவி வகித்து வெகுகாலம் வரை அது குறித்து ஆட்சேபணை ஏதும் செய்யாமலிருத்தல், அல்லது (2) மனுதாரருக்கு போதுமான மாற்றுத் தீர்வழிக்கு வாய்ப்பிருப்பின், அல்லது (3) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை பிறப்பிப்பதால் எந்த பலனும் ஏற்படாது; அது வீணாகும் என்றால்.

II. உரிமையியல் சட்டப்படியான தீர்வழிகள் [Civil Law Remedies] (அல்லது) தகைமை நெறித் தீர்வரிகள் [Equitable Remedies]

நாம் இதுகாறும் கண்ட அரசியலமைப்புப்படியான தீர்வழிகள் மட்டுமில்லாது, நிருவாகத்துறையின் சட்ட முரணான நடவடிக்கைகளுக்கு எதிராக, அதனால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு உரிமையியல் சட்டப்படியும் தீர்வழிகள் கிடைக்கின்றன. அவை, (1) உறுத்துக்கட்டளை கோருதல் (Injunction); (2) விளம்புகை நடவடிக்கை (Declaratory Action). இந்த தீர்வழிகள் **'தகைமை நெறித் தீர்வழிகள்' (Equitable Remedies)** எனப்படுகின்றன. ஏனெனில் இத் தீர்வழிகள், இயற்கை நீதி மற்றும் நியாயத்தின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. இத்தீர்வழிகள் மிகவும் மதிப்புடையதாக கருதப்படுகின்றன. ஏனெனில், குறைந்த பொருட் செலவிலும், எளிதான முறையிலும் இவற்றின் வாயிலாக தீர்வழி கிடைக்கின்றது. எனினும் இங்கு வழக்கு தொடுக்கும் முன்பு, உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் 80-வது பிரிவின்படி, சம்பந்தப்பட்ட அரசு நிருவாகத்துறைக்கு இரண்டு மாத கால அவகாசம் கொடுத்து சட்டப்படியான அறிவிப்பு அனுப்புதல் வேண்டும். இந்த நிபந்தனை தளர்த்தப்பட்டுவிட்டால், நிருவாகத்துறைக்கெதிரான தீர்வழிகள் மேலும் சிறப்பு உடையதாகவும், வலிமையுடையதாகவும் மாறும். அத்தீர்வழிகளை சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

(1) உறுத்துக்கட்டளை [Injunction]

விளக்கம்:

ஒன்றைச் செய்வதிலிருந்து தடுக்கவோ அல்லது ஒரு செயலைச்

செய்யவோ ஒரு தரப்பினருக்கு உத்திரவிடும் ஒரு நீதிவழி நடைமுறையே **'உறுத்துக்கட்டளை' (Injunction)** எனப்படும் என்று நீதிப்பெருமகனார் ஆல்சுபெரியின் (Lord Halsbury) சட்டச் சொல் அகராதி 'உறுத்துக் கட்டளைக்கு' பொருள் கூறுகிறது. இதனை **'தடுப்பு வகை தீர்வழி' (Preventive Relief)** என்றும் அழைக்கலாம். ஏனெனில் ஒரு நபரின் சட்டப் படியான அல்லது நியாயப்படியான உரிமைகளுக்கு இடையூறு ஏற்படும் பொழுதோ அல்லது இடையூறு ஏற்படுத்தப்போவதாக அச்சுறுத்தப் படும் பொழுதோ, மேற்கண்ட உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்படுகிறது.

உறுத்துக்கட்டளைத் தீர்வழி வழங்குவது, நீதிமன்றங்களின் தன் விருப்புரிமை அதிகாரத்திற்குட்பட்டதாகும் (discretionary power). மேலும் இது நீதி, நேர்மை, நியாயம் எனும் தகைமை நெறிகளின் அடிப்படையில் பிறப்பிக்கப்படுவதாகும். எனவே உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டும் என்று முறையிடுபவர், உறுத்துக்கட்டளை பிறப் பிக்கப்படாவிடில் எதிர்தரப்பினரை விட தனக்குத்தான் அதிகத் துன்பமும், அநீதியும் ஏற்படும் என்பதை நீதிமன்றம் மனநிறைவு கொள்ளும் வகையில் நிரூபிக்க வேண்டும்.

உறுத்துக்கட்டளை பிறப்பித்தல் தொடர்பான வகைமுறைகளை **1963-ஆம் ஆண்டின் குறித்தவகை தீர்வழிச் சட்டம் (Specific Relief Act, 1963)** குறிப்பிடுகிறது.

உறுத்துக்கட்டளையின் வகைகள்:

மேற்படி குறித்தவகை தீர்வழிச் சட்டம், நான்கு வகையான உறுத்துக்கட்டளைகளை முக்கியமாகக் கூறுகிறது. அவை,



மேற்கண்ட நான்கு வகையான உறுத்துக்கட்டளைகளின் விளக் கத்தை பின்வருமாறு காண்போமா?

(1) தற்காலிக உறுத்துக்கட்டளை (Temporary Injunction): இது

குறித்து குறித்தவகை தீர்வழிச் சட்டத்தின் **37(1)-வது பிரிவு** கூறுகிறது. அதன்படி, குறிப்பிட்ட காலம் வரை அல்லது நீதிமன்றம் மேலும் ஆணையிடும் வரை அமலில் இருக்கும் வண்ணம் பிறப்பிக்கப்படுவதே, தற்காலிக உறுத்துக் கட்டளையாகும். இது, ஒரு வழக்கின் எந்த நிலையிலும் வழங்கப்படலாம். நீதிமன்றம், வழக்கை இறுதியாக முடிவு செய்யும் வரை வழக்கின் கருப்பொருளையோ (matter) அல்லது வாதத்திற்குரிய சொத்தையோ முன்பிருந்த நிலையில் அப்படியே பாதுகாப்பாக வைத் திருப்பதே (preserve matters in Status Quo) இதன் நோக்கமாகும். இத்தற்காலிக உறுத்துக்கட்ளை எந்த உரிமையையும் முடிவு செய்யாது அல்லது ஊர்ஜிதப்படுத்தாது.

(2) நிலையான உறுத்துக்கட்டளை (Perpetual Injunction): இது குறித்து குறித்தவகை தீர்வழிச் சட்டத்தின் **37(2)-வது பிரிவு** கூறுகிறது. அதன்படி, ஒரு வழக்கின் இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த பின்னர், அவ்வழக்கின் நற்கூறுகளை ஆய்ந்து அவற்றினடிப்படையில் நீதிமன்றம் முடிவாக பிறப்பிப்பதே, நிலையான உறுத்துக்கட்டளை ஆகும். வாதியின் உரிமைகளுக்கு மாறானதாக உள்ள ஒரு உரிமையை உறுதிப்படுத்துவதிலிருந்து அல்லது ஒரு செயலைச் செய்வதிலிருந்து பிரதிவாதி இந்த உறுத்துக்கட்டளையின் மூலம் நிலையாக தடுக்கப் படுகிறார் அல்லது கட்டுப்படுத்தப்படுகிறார்.

எடுத்துக்காட்டாக, வாதி ஆண்டு அனுபவித்துவரும் தூய காற்று, சூரிய ஒளி போன்றவற்றை தடுக்கும் பொருட்டு நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் (இங்கு பிரதிவாதி) ஏதேனும் நடவடிக்கை எடுத்தால், அச்செயல்களைச் செய்யக் கூடாது என்றும், வாதியின் உரிமைகளை பாதிக்கக் கூடாது என்றும் நீதிமன்றம் மேற்படி உறுத்துக்கட்டளையை பிறப்பிக்கலாம்.

(3) தடையுறுத்துக்கட்டளை (Prohibitory Injunction): இது வாதியின் உரிமைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வண்ணம் பிரதிவாதி செய்யும் ஒரு செயலை தடுப்பதற்காக பிறப்பிக்கப்படுவதாகும். அதாவது அச்செயலை மேற்கொண்டு செய்ய இங்கு பிரதிவாதி மேற்கண்ட உறுத்துக்கட்டளையால் தடுக்கப்படுகிறார்.

(4) செயலுறுத்துக்கட்டளை (Mandatory Injunction): இது குறித்து குறித்தவகை தீர்வழிச் சட்டத்தின் **39-வது பிரிவு** கூறுகிறது. அதன்படி, சில சமயங்களில் கடப்பாடு மீறலைத் தடுக்க ஒரு குறிப்பிட்ட செயலை நிறைவேற்ற கட்டாயப்படுத்துவது, அவசியமானதாகலாம். அவ்வித செயலை நிறைவேற்ற கட்டாயப்படுத்த நீதிமன்றம் தகுதி பெற்றிருந்தால், தனது தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி, நீதிமன்றம் (1) முறையீடு செய்யப்பட்ட மீறலைத் தவிர்க்கவும், (2) அவசியமான செயல்களை நிறைவேற்ற கட்டாயப்படுத்தவும், உறுத்துக் கட்டளை ஒன்றை வழங்கலாம். அது செயலுறுத்துக்கட்டளை எனப்

படுகிறது. சுருங்கக்கூறின், செயலுறுத்துக்கட்டளை என்பது சரியான செயலின் மூலம் ஒரு தவறான செயலை முடிவிற்கு கொண்டு வருவது குறித்தோ (prohibitory) அல்லது குறிப்பிட்ட செயலைச் செய்யச் சொல்லி அச்செய்கையின் வாயிலாக முன்பிருந்த நிலையினை திரும்ப அடைதல் குறித்தோ (restitutory) ஆகும்.

மேற்கண்ட உறுத்துக்கட்டளைகளின் வாயிலாக ஒரு நிருவாகத் துறை அதிகார அமைப்பு சட்ட முரணான செயலைச் செய்வதிலிருந்து தடுக்கப்படலாம். அதுபோல் அது நிறைவேற்ற கடமை கொண்ட ஒரு குறிப்பிட்ட செயலை நிறைவேற்றவும் (செய்யவும்) உத்திரவிடப்படலாம். அது தற்காலிகமானதாகவோ அல்லது நிலையானதாகவோ இருக்கலாம். இதுகாறும் பற்பல வழக்குகளில் அரசாங்கத்திற்கும் நிருவாகத்துறைக்கும் எதிராக உறுத்துக்கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(2) விளம்புகை நடவடிக்கை [Declartory Action]

விளக்கம்:

விளம்புவகை நடவடிக்கை பற்றி **குறித்தவகை தீர்வழிச் சட்டத்தின் 34-வது பிரிவு** விளக்குகிறது. ஒரு நபரின் சட்டப்பூர்வமான தன்மையை (legal character) அல்லது உரிமையை (right) மறுக்கும் மற்றொரு நபருக்கு எதிராக அத்தகு சட்டப்பூர்வமான தன்மைக்கு அல்லது சொத்தின் உரிமைக்கு, அந்நபர் உரிமையுடையவரென அறிவிப்பு செய்வதற்காக எடுக்கப்படும் நீதிமன்ற நடவடிக்கையே, 'விளம்புகை நடவடிக்கை' எனப்படுகிறது. சுருங்கக் கூறின், வழக்குத் தொடுக்கும் நபரின் சட்டப்பூர்வமான தன்மையையும், உரிமையையும் நீதிமன்றம் அனைவரும் அறியச் செய்யும் வண்ணம் விளம்புகிறது.

மேற்படி பிரிவில் ஒரு நபரின் 'சட்டப்பூர்வமான தன்மை' எனும் சொற்றொடர், அந்நபரின் சட்டப்படியான தகுநிலையையும் (legal status), மேலும் பல சட்ட உரிமைகளையும் குறிப்பிடுகிறது. எடுத்துக் காட்டாக, இறந்து போன ஒரு இந்துக் கணவருக்கு அவர் வேலை பார்த்த ஒரு அரசாங்கத் துறையிடமிருந்து சேர வேண்டிய ஷேம நல நிதி, மரணக் கொடை ஆகியவற்றைப் பெற அவனது இரு மனைவிகள் விண்ணப்பம் செய்தனர். அரசாங்கத் துறையோ 'இறந்து போனவரை சட்டப்படி திருமணம் செய்து கொண்ட மனைவிக்கே' அத்தொகையை வழங்க முடியும் என்று கூறுகிறது. இங்கு அந்த இரு மனைவிகளில் ஒருவர் மட்டுமே சட்டப்படியான நடைமுறைகளையும், சடங்குகளையும் பின்பற்றி இறந்து போனவரை திருமணம் செய்து கொண்டவர் ஆவர். மற்றொருவர், இறந்து போனவரின் வைப்பாட்டி ஆவர். இந்நிலையில் சட்டப்படியாக திருமணம் செய்து கொண்ட அம்மனைவி, தாம்தான் இறந்து போனவரின் சட்டப்பூர்வமான மனைவி என்று அறிவிக்கக்

கோரி, அதற்குண்டான ஆவணங்களான திருமணப் பத்திரிக்கை, புகைப் படங்கள் ஆகியவற்றை தாக்கல் செய்கிறார். இங்கு அம்மனைவிக்கு நீதிமன்றம் வழங்குவது விளம்புகைத் தீர்வழியாகும். இந்த விளம்புகை யினால், அம்மனைவிக்கு உள்ள 'மனைவி' சட்டப்பூர்வமான தன்மை அல்லது தகுநிலை நீதிமன்றத்தால் விளம்பப்படுகிறது.

இதே நிலைப்பாடு நிருவாகமுறைச் சட்டத்திலும் உள்ளது. அதாவது அரசாங்கமோ, நிருவாகத்துறை அதிகார அமைப்புகளோ ஒரு நபரின் சட்டப்பூர்வமான தன்மைக்கு ஊறு விளைவிக்குமானால் அல்லது ஊறு விளைவிக்கும் நிலையில் நடவடிக்கை மேற்கொள்ளு மானால், மேற்கண்ட விளம்புகை நடவடிக்கைகளின் மூலம் அந்த சட்டப் பூர்வமான தன்மைகளும் உரிமைகளும் நீதிமன்றத்தால் அறுதியிடப் பட்டு விளம்பப்படும். எடுத்துக்காட்டாக, வாதியின் வேட்பு மனு முறையற்ற வழியில் நிராகரிக்கப்பட்டுவிட்டதாகவோ அல்லது பிரதி வாதி முறையற்ற வழியில் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவோ விளம்புகை செய்யுமாறு வாதி நீதிமன்றத்தில் வழக்கிட்டு கோரலாம்.

மேற்கண்ட விளக்கத்தை காணும் பொழுது, இங்கு தரப்பினர்களின் உரிமைகள் மட்டுமே விளம்பப்படுவது தெளிவாகும். மாறாக மேற் கொண்டு தீர்வழிகள் ஏதும் வழங்கப்படுவதில்லை. அதாவது இந்த விளம்புகையின் மூலம் வழக்குத் தொடுக்கும் வாதிக்கு புதிதாக எவ்வித சட்டப்பூர்வமான தன்மையையோ அல்லது உரிமையையோ நீதிமன்றம் வழங்குவதில்லை. ஏற்கனவே வாதிக்கு இருந்த உரிமைகளுக்கு நீதிமன்றம் சட்டத்தின் பலத்தைக் கொடுக்கிறது. அதனை நீதிமன்றம், தான் பிறப் பிக்கும் விளம்புகைத் தீர்ப்பாணையின் (Declaratory Decree) மூலமாக அனைவருக்கும் அறிவிக்கிறது.

எனவே, இந்த விளம்புகையானது தரப்பினர்களின் சட்டப்பூர்வ மான தன்மையின் அல்லது உரிமைகளின் மீதான அய்யப்பாடுகளை நீக்குவதோடு மட்டுமில்லாமல், அவ்வுரிமைகளை அவர்கள் எவரது இடையூறும் இல்லாமல் அனுபவிக்கவும் வழி செய்கிறது.

இந்த விளம்புகைத் தீர்வழி நேர்மறைத் தன்மையிலோ அல்லது எதிர்மறைத் தன்மையிலோ நீதிமன்றத்தால் வழங்கப்படலாம். எடுத்துக் காட்டாக (1) வாதி கோரும் உரிமை, அதிகாரம் அல்லது சிறப்புரிமைக்கு அவருக்கு உரிமை உள்ளது எனும் விளம்புகை; (2) வாதி உறுதியுரைக்கும் கடமையிலும் பொறுப்பு நிலையிலும் பிரதிவாதி உள்ளார் எனும் விளம்புகை; (3) பிரதிவாதி கோரும் உரிமை, அதிகாரம் அல்லது சிறப்புரிமை அவருக்கு இல்லை எனும் விளம்புகை; (4) பிரதிவாதி உறுதியுரைக்கும் கடமையிலும், பொறுப்புநிலையிலும் வாதி இல்லை எனும் விளம்புகை.

விளம்புகைத் தீர்வழி பெற நிபந்தனைகள் (The Essential Conditions for seeking Declaratory Relief):

விளம்புகைத் தீர்வழி பெற பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாகி யிருக்க வேண்டும். அவை,

(1) வழக்கு தொடரும் பொழுது, வாதி சட்டப்பூர்வமான தன்மைக்கோ அல்லது ஏதாவது சொத்தின் உரிமைக்கோ உரியவராக இருக்க வேண்டும்.

(2) பிரதிவாதி அவரது சட்டப்பூர்வமான தன்மையினை மறுத் திருக்க வேண்டும் அல்லது சொத்தின் மீதான உரிமையை மறுத்திருக்க வேண்டும் அல்லது சட்டப்பூர்வமான தன்மையினை அல்லது உரிமையை மறுப்பதில் அல்லது ஊறு விளைவிப்பதில் ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும். வெறுமனே ஊகமான காரணங்களுக்காக விளம்புகைத் தீர்வழி கோர முடியாது.

(3) கோரப்பட்டிருக்கும் விளம்புகை, சட்டப்பூர்வமான தன்மை அல்லது சொத்தின் உரிமைக்கு வாதி உரியவராகிறார் எனும் விளம்புகை யாக இருக்க வேண்டும்.

(4) வெறுமனே விளம்புகைத் தீர்வழி பெறுவதோடு, வேறு கூடுதல் தீர்வழிக்கும் உரிமையுடையவராக வாதி இருந்தால், அந்தத் தீர்வழியையும் வாதி கோருதல் வேண்டும்.

(5) நீதிமன்றம் வழக்கின் அனைத்து சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு, தனது தன்விருப்புரிமை அதிகாரத்தைப் (Discretionary Power) பயன்படுத்தி, விளம்புகைத் தீர்வழிக்கான தீர்ப்பாணையினை வழங்கும்.

(6) விளம்புகைத் தீர்வழி ஒரு நிருவாகத்துறை (அரசு) அதிகார அமைப்பிற்கு எதிராக கோரப்படும் பொழுது, அதற்கு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் 80-வது பிரிவின்படி இரண்டு மாத கால அவகாசம் அளித்து அறிவிப்பு ஒன்றை வாதி அனுப்பியிருக்க வேண்டும்.

எப்பொழுது விளம்புகைத் தீர்வழி மறுக்கப்படும்? (When Declaratory Relief is Denied?):

பின்வரும் சூழ்நிலைகளில் விளம்புகைத் தீர்வழி வழங்க நீதிமன்றம் மறுக்கலாம். அவை, (1) விளம்புகைத் தீர்வரி கோர வாதிக்கு எவ்வித சட்டப்பூர்வமான தன்மையோ அல்லது உரிமையோ இல்லையென்றால்; (2) சட்டப்பூர்வமான தன்மைக்கு அல்லது உரிமைக்கு ஊறு ஏற்படும் முன்னரே அல்லது ஊறு விளையலாம் என்பதற்கு முன்னரே, வாதி விளம்புகைத் தீர்வழி கோரினால்; (3) உண்மையல்லாத கற்பனையான காரணங்களின் அடிப்படையில்; (4) எந்த சூழ்நிலையை அடிப்படை யாகக் கொண்டு விளம்புகைக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதோ, அச்சூழ்நிலையே நிலவாது இருந்தால்; (5) வாதியின் கோரிக்கையை பிரதிவாதி மறுக்காமலிருந்தால்; (6) மோசடியான நோக்கங்களுக்காக

வாதி விளம்புகை வழக்கு தாக்கல் செய்திருந்தால்; (7) விளம்புகைத் தீர்வழி கோருபவருக்கு அதைப் பெறுவதினால் எவ்வித சிறந்த பயனும் ஏற்படாது என்றால்; (8) வழக்கைத் தாக்கல் செய்வதில் அசாதாரணமான காலதாமதம் ஏற்பட்டிருப்பின்; (9) போதுமான மாற்றுத் தீர்வழி இருப்பின்.

III. சட்டரீதியான தீர்வழிகள் [Statutory Remedies]

சட்டரீதியான தீர்வழிகள் - விளக்கம்:

நிருவாகத்துறை நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அரசியலமைப்புப்படியாகவும், உரிமையியல் சட்டப்படியாகவும் தீர் வழிகள் கிடைப்பதை நாம் இதுகாறும் அறிந்தோம். இந்த இருவகையான தீர்வழிகள் மட்டுமல்லாது, அவருக்கு சட்டரீதியான தீர்வழிகளும் கிடைக்கின்றன. அதாவது நிருவாகத்துறை நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு பல்வேறு சட்டங்கள் தீர்வழி பகருகின்றன. எனவே இத்தீர்வழிகள் **'சட்டரீதியான தீர்வழிகள்'** எனப்படுகின்றன. அவற்றை பின்வரும் அய்ந்து தலைப்புகளின் கீழ் நாம் காண உள்ளோம்.

(1) உரிமையியல் வழக்குகள் [Civil Suits]

நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் நடவடிக்கையால் பாதிக் கப்பட்ட ஒருவர், அது குறித்து உரிமையியல் வழக்கு தொடர்ந்து தீர்வழி பெறலாம். உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் 9-வது பிரிவு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வெளிப்படையாகவோ அல்லது உட் கிடையாகவோ தடை செய்யப்பட்ட வழக்குகள் தவிர, உரிமையியல் தன்மை கொண்ட அனைத்து வழக்குகளையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதிமன்றத்திற்கு அதிகாரவரம்பு உண்டு, என்று கூறுகிறது. எனவே ஒரு பிரச்சனை 'உரிமையியல் தன்மை' (Civil Nature) கொண்டதாக இருப்பின், அதை உரிமையியல் நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்து தீர்வழி பெறலாம். ஆனால் இதற்கு உள்ள ஒரே நிபந்தனை என்னவென்றால், அவ்வாறு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள சட்டத்தால் வெளிப்படையாகவோ அல்லது அவசியத்தின் காரணமாக உட்கிடையாகவோ அவ்வழக்கு தடை செய்யப்பட்டிருத்தல் கூடாது.

(2) நீதிமன்றங்களிடம் மேல்முறையீடு செய்து கொள்ளல் [Appeals to Courts]

நிருவாகத்துறை அதிகார அமைப்புகளால் (Administrative Authorities) வழங்கப்பட்ட முடிவுகளை எதிர்த்து நீதிமன்றத்திடம்

மேல்முறையீடு செய்து கொள்ள அல்லது சீராய்விற்கு மனுச் செய்ய பல்வேறு சட்டங்கள் வகை செய்துள்ளன. எடுத்துக்காட்டாக, மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயத்தால் (Motor Accident Claims Tribunal) அளிக்கப்பட்ட இழப்பீடு குறித்த முடிவை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம். இதற்கு 1988-ஆம் ஆண்டின் மோட்டார் வாகன சட்டம் வகை செய்துள்ளது. இது போன்று பல சட்டங்கள் மேல்முறையீடுகளின் வழியாக தீர்வழிக்கு வகை செய்துள்ளன.

(3) தீர்ப்பாயங்களிடம் மேல்முறையீடு செய்து கொள்ளல் [Appeals to Tribunals]

நிருவாகத்துறை அலுவலர்கள் தங்கள் மூல அதிகாரவரம்பின் (original jurisdiction) கீழ் பிறப்பித்த உத்திரவுகளுக்கு எதிராக மேல் முறையீடு செய்து கொள்வதற்கு வகை செய்யும் பொருட்டு, சட்டத்தால் மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (Appellate Tribunal) அமைக்கப் படுவதுண்டு. அந்த மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக வாடகைக் கட்டுப்பாட்டு சட்டத்தின் (Rent Control Act) கீழ் ஒரு வாடகைக் கட்டுப்பாட்டாளரால் (Rent Controller) பிறப்பிக்கப்பட்ட உத்திரவை எதிர்த்து, வாடகைக் கட்டுப்பாட்டு மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திடம் (Rent Control Appellate Tribunal) மேல்முறையீடு செய்து கொள்ளலாம். 1957-ஆம் ஆண்டின் பதிப்புரிமைச் சட்டத்தின் (Copyright Act) கீழ் பதிப்புரிமை பதிவாளர் (Copyright Registrar) செய்த முடிவிற்கு எதிராக பதிப்புரிமை வாரியத்திடம் (Copyright Board) மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

(4) உயர் நீதிமன்றங்களின் மேற்பார்வையிடும் அதிகாரவரம்பு [Supervisory Jurisdiction of High Courts]

இந்திய அரசியலமைப்பின் **227-வது ஷரத்தானது** மாநிலத்தில் உள்ள அனைத்து கீழ் நீதிமன்றங்களையும், தீர்ப்பாயங்களையும் மேற் பார்வையிடும் அதிகாரத்தை உயர் நீதிமன்றத்திற்கு வழங்கியுள்ளது. உயர் நீதிமன்றத்தின் இந்த அதிகாரம் நீதிமுறை சார்ந்ததாகவும் உள்ளது. அதே சமயத்தில் நிருவாகமுறை சார்ந்ததாகவும் உள்ளது. இதனால் மாநிலத்தில் தனக்கு கீழ் அமைந்துள்ள நீதிமன்றங்களும், தீர்ப்பாயங்களும் தங்களுடைய பணிகளையும், அதிகாரங்களையும், கடமைகளையும் முறையாகவும், சட்டப்படியாகவும் செயற்படுத்துகின்றனவா என்பதையும், சட்டத்திற்கு கீழ்ப்படிந்து நடக்கின்றனவா என்பதையும் உயர் நீதிமன்றம் கண்காணிக் கிறது. உயர் நீதிமன்றத்தின் இந்த அதிகாரத்தின் மீது எவ்வித வரம்பு களும், தடைகளும் விதிக்க முடியாது. (ஆனால் ஒரு அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் வரம்பிட முடியும்.).

எனவே கீழ் நீதிமன்றத்தின் அல்லது தீர்ப்பாயத்தின் முடிவால் அல்லது நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட ஒருவர், ஷரத்து 227-ன் கீழ் உயர் நீதிமன்றத்திடம் முறையிடலாம். ஆனால் இதனை ஒரு மேல் முறையீடு போன்று செய்ய முடியாது. மேலும் ஷரத்து 227-ன் கீழ் உயர் நீதிமன்றம், ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றமாகவும் செயல்படாது. மாறாக சம்பந்தப்பட்ட கீழ் நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தை அவற்றின் அதிகாரவரம்பிற்கு உட்பட்டும், சட்டத்திற்கு கட்டுப்பட்டும் நடக்க அறிவுறுத்தும். மேலும் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு வேறு மாற்றுத் தீர்வழி கிடைக்கத்தக்கதாக இருப்பின், ஷரத்து 227-ன் கீழான தனது அதிகாரத்தை பயன்படுத்தாது. இவ்வதிகாரம் உயர் நீதிமன்றத்தின் தன் விருப்புரிமைக்குட்பட்டதாகும்.

(5) மேல்முறையீடு செய்ய உச்ச நீதிமன்றத்தின் சிறப்பு அனுமதி
[Special Leave to Appeal by the Supreme Court]
(அல்லது)
சிறப்பு அனுமதி மனுக்கள்
[Special Leave Petitions - S.L.P.]

இந்திய அரசியலமைப்பின் **136-வது ஷரத்தானது,** எந்த நீதி மன்றத்தாலும் அல்லது எந்த தீர்ப்பாயத்தாலும் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை, தீர்ப்பாணை, முடிவு, தண்டனைத் தீர்ப்பு அல்லது உத்திரவை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்குண்டான சிறப்பு அனுமதியை வழங்க உச்ச நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த அதிகாரம், பரந்த அளவிலான மற்றும் முழுமையான அதிகாரமாகும். இந்த அதிகாரத்தின் மீது எந்த வரம்பையும், தடையையும் சட்டத்தால் விதிக்க முடியாது. எனவே இதன் வழியாகவும் பாதிக்கப்பட்டவருக்கு தீர்வழி கிடைக்கின்றது.

ஒரு தீர்ப்பு அல்லது உத்திரவை எதிர்த்து மேல்முறையீடு செய்ய சட்டத்தில் வழி இல்லையென்றாலும், மேற்படி ஷரத்து 136-ன் கீழ் மேல்முறையீட்டிற்கு சிறப்பு அனுமதி கோரி உச்ச நீதிமன்றத்திற்கு மனுச் செய்யலாம். மேலும் சம்பந்தப்பட்ட சட்டத்தின் கீழ் வேறு மாற்றுத் தீர்வழிகள் பாதிக்கப்பட்டவருக்கு கிடைக்கத்தக்கதாக இருந்தாலும் அல்லது தீர்ப்பாயம் பிறப்பித்த உத்திரவு இறுதிநிலையை (order of tribunal becomes final) அடைந்த ஒன்றாக இருந்தாலும், மேற்படி சிறப்பு அனுமதி மனுவை உச்ச நீதிமன்றத்திடம் தாக்கல் செய்யலாம்.

பொதுவாக ஒரு நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிப்ப தற்கு எவையெவை அடிப்படைக் காரணங்களாக உள்ளனவோ, அந்த அடிப்படைகளின் கீழ் ஷரத்து 136-ன் கீழ் மேல்முறையீட்டிற்கான சிறப்பு அனுமதியை உச்ச நீதிமன்றம் வழங்கலாம். எனினும் இந்த சிறப்பு அனுமதியை சில சூழ்நிலைகளில் வழங்க மறுக்கவும் உச்ச நீதிமன்றம்

தன்விருப்புரிமை அதிகாரம் படைத்தது. ஏனெனில் இது தனித்தன்மை வாய்ந்த, சிறப்பான சூழ்நிலைகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப் படும் அசாதாரணமான தீர்வழியாகும் (extraordinary remedy).

முடிவுரை:

நிருவாகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட சட்டமியற்றும், நீதித் தீர்ப்பு வழங்கும் மற்றும் தன்விருப்புரிமை அதிகாரத்தை கொண்டு, அது ஏதேச்சதிகாரமாக செயல்பட்டு அல்லது அவ்வதிகாரங்களை துஷ் பிரயோகம் செய்து எவருக்கேனும் பாதிப்புகளை ஏற்படுத்திவிட்டால், அதற்கு தக்க தீர்வழிகள் வழங்கப்பட வேண்டியதுதான் சட்டத்தின் ஆட்சி, என்பதை உணர்ந்ததன் விளைவாகத்தான் மேற்கண்ட மூன்று வகையான தீர்வழிகள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளன என்று கூறினால் அது மிகையன்று.

மாற்றுத் தீர்வழிகளை முதலில் தீர்த்தல் [Exhaustion of Alternative Remedies]

44. Exhaustion of alternate remedies - Write short notes. (மாற்றுத் தீர்வழிகளைத் தீர்த்தல் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

"Courts do not insist an exhaustion of alternative remedies in all cases" . Criticise. ("எல்லா வழக்குகளிலும் நீதிமன்றங்கள் மாற்று நிவாரணங்களை முதலில் பெற முயல வேண்டும் என்று வலியுறுத் துவதில்லை". ஆராய்க.)

(அல்லது)

Alternative remedy - Write short notes. (மற்றுமொரு சட்டப் பரிகாரம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Adequate alternative remedy - Write short notes. (போதுமான மாற்றுத் தீர்வழி - சிறு குறிப்பு வரைக.)

மாற்றுத் தீர்வழிகளை முதலில் தீர்த்தல் அல்லது பெறுதல் (Exhaustion of Alternative Remedies) - விளக்கம்:

பொதுவாக நீதிப்பேராணை பெற மனுச் செய்வதற்கு முன், சம்பந்தப்பட்ட பிரச்சனைக்கு போதுமான மாற்றுத் தீர்வழி சட்டத்தால் வழங்கப்பட்டிருப்பின், முதலில் அதை பெற முயற்சி செய்திருக்க வேண்டும். அதில் தோல்வி ஏதேனும் ஏற்பட்ட பிறகுதான் நீதிப் பேராணைகளை பெற மனுச் செய்தல் வேண்டும். இவ்வாறு மாற்றுத்

தீர்வழிகளை முதலில் தீர்த்துக் கொள்ளாமல், ஷரத்து 226-ன் கீழ் நீதிப் பேராணை பெற மனுச் செய்தால் அதை உயர் நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்ளாது.

எடுத்துக்காட்டாக, 1939-ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தில் வாகனங்களுக்குண்டான 'பெர்மிட்' வழங்குதல் குறித்து முழுமையான வகைமுறைகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு 'பெர்மிட்' வழங்குவதில் ஏதேனும் தவறுகள் நடந்தால், அதனால் பாதிக்கப் பட்டவருக்கு தக்க தீர்வழிகள் வழங்கவும் அச்சட்டத்திலேயே வகை செய்யப்பட்டுள்ளன. எனவே ஒரு வாகனத்திற்கு 'பெர்மிட்' வழங்க மறுக்கப்பட்டால், அதனால் பாதிப்படைந்த வாகன உரிமையாளர், முதலில் அச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள தீர்வழிகளைப் பெற முயல வேண்டும் (அதாவது முதலில் வட்டார போக்குவரத்து அலுவரிடம் (Regional Transport Authority) முறையிட்டு தீர்வழி பெற முயலலாம்). மாறாக எடுத்தளடுப்பிலேயே ஷரத்து 226-ன் கீழ் உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை பிறப்பிக்கக் கோரி மனுச் செய்தல் கூடாது. அப்படி தாக்கல் செய்யப்படும் மனு தள்ளுபடி செய்யப்படும்.

மாற்றுத் தீர்வழிகளை முதலில் தீர்த்துக் கொண்டு வர வேண்டும் எனும் நிபந்தனை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் நீதிப்பேராணை களுக்கு பொருந்துமா? (Whether 'Exhaustion of Alternative Remedies' will be applicable to the Writs filed before Supreme Court?):

அசாதாரண சூழ்நிலைகளில்தாம் நீதிப்பேராணைகள் பொதுவாக பிறப்பிக்கப்படுகின்றன. எனவே நீதிப்பேராணைகளின் வழியாக வழங்கப் படும் தீர்வழிகளை, அசாதாரணத் தீர்வழிகள் (extraordinary remedies) என்று கூறலாம். இதனால், சம்பந்தப்பட்ட வழக்குப் பிரச்சனைக்கு போதுமான மாற்றுத் தீர்வழி பாதிக்கப்பட்டவருக்கு கிடைக்கத்தக்கதாக இருப்பின், அங்கு நீதிப்பேராணைகளை பிறப்பிக்க நீதிமன்றம் மறுக்கும். ஆனால் இது ஷரத்து 226-ன் கீழான உயர் நீதிமன்றங்களின் நீதிப் பேராணை அதிகாரவரம்பிற்கு மட்டுமே பொருந்தக் கூடிய நிலைப் பாடாகும். எனவே ஒருவருக்கு ஒரு வழக்குப் பிரச்சனையில் போதுமான மாற்றுத் தீர்வழி கிடைக்கத்தக்கதாக இருப்பினும், அவர் ஷரத்து 32-ன் கீழ் உச்ச நீதிமன்றத்தை அணுகி நீதிப்பேராணை கோரி மனு தாக்கல் செய்யலாம். அதற்கு தடையேதும் இல்லை. ஏனெனில் ஷரத்து 32-ன் கீழ் நீதிப்பேராணை கோரி உச்ச நீதிமன்றத்தை அணுகுவதே குடிமகனுக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள ஒரு அடிப் படை உரிமையாகும். இதை மறுக்க உச்ச நீதிமன்றத்திற்கு தன் விருப்புரிமை அதிகாரம் ஏதும் இல்லை. நீதிப்பேராணை கோரும் மனு தாரர் தனது அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) மீறப்பட்டு விட்டதாக உச்ச நீதிமன்றம் மன நிறைவு அடையும் வகையில் நிரூபித் தால், அங்கு தக்க நீதிப்பேராணைகளை உச்ச நீதிமன்றம் பிறப்பித்தே ஆக வேண்டும்.

அடிப்படை உரிமைகள் மீறல் விஷயத்தில் உயர் நீதிமன்றங்களின் நீதிப் பேராணை அதிகாரவரம்பு (Writ Jurisdiction of High Courts in the matters of violation of fundamental Rights):

இந்திய அரசியலமைப்பால் குடிமகன் ஒருவருக்கு வழங்கப் பட்டுள்ள **'அடிப்படை உரிமைகளை' (Fundamental Rights)** அரசாங்கமோ அல்லது அதன் நிருவாகத்துறை அதிகார அமைப்புகளோ மீறிவிட்டால், அதை எதிர்த்து ஷரத்து 226-ன் கீழ் நீதிப்பேராணை பிறப்பிக்க வேண்டி, அக்குடிமகன் உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம். இங்கு மாற்றுத் தீர்வழிகளை முதலில் தீர்த்தல் எனும் நிபந்தனை பொருந்தாது. அதாவது மாற்றுத் தீர்வழிகள் இருந்தாலும் அல்லது அம்மாற்றுத் தீர்வழிகளை முதலில் பெறாவிட்டாலும், அடிப்படை உரிமைகள் மீறல் விஷயத்தில் ஷரத்து 226-ன் கீழ் உயர் நீதிமன்றம் வழக்கின் சூழலுக்கேற்ற நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்கும். ஆனால் அக்குடிமகனின் அடிப்படை உரிமைகள் அல்லாத **'வேறு உரிமைகள்' (any other rights)** மீறப்பட்டிருப்பின், அங்கு சட்டத்தால் அவருக்கு வேறு மாற்றுத் தீர்வழிகள் கிடைக்கத்தக்கதாக இருப்பின், அவர் அதை முதலில் தீர்த்துக் கொள்ள முயற்சித்திருக்க வேண்டும். அதன் மூலம் தீர்வழி கிடைக்காதபட்சத்தில்தான், அவர் ஷரத்து 226-ன் கீழ் உயர் நீதிமன்றத்தை நீதிப்பேராணைக்காக அணுக முடியும். எனவே 'வேறு உரிமைகள்' குறித்த விஷயத்தில் அவ்வுரிமை பாதிக்கப்பட்ட ஒருவருக்கு மாற்றுத் தீர்வழி கிடைப்பதாக இருப்பின், அங்கு ஷரத்து 226-ன் கீழ் உயர் நீதிமன்றம் நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்காது.

"எல்லா வழக்குகளிலும் நீதிமன்றங்கள் மாற்றுத் தீர்வழிகளை முதலில் பெற முயல வேண்டும் என்று வலியுறுத்துவதில்லை". ("Courts do not insist an exhaustion of alternative remedies in all cases") - விளக்கம்:

மாற்றுத் தீர்வழிகளை முதலில் தீர்த்துக் கொண்டு வர வேண்டும்; அப்பொழுதுதான் நீதிப்பேராணை கோரும் மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனும் நிபந்தனை, ஒரு சட்ட நிபந்தனை அல்ல. இவ்வாறு இந்திய அரசியலமைப்பும் கூறவில்லை. இது நீதிமன்றங்களே தங்களது வசதிக்காகவும், நீதிப்பேராணை பிறப்பிப்பதில் எவ்வாறு தன் விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்துவது என்பதற்கான கொள்கைக் காகவும் ஏற்படுத்திக் கொண்ட ஒரு விதியாகும் அல்லது விதித்துக் கொண்ட ஒரு நிபந்தனையாகும். சுருங்கக்கூறின், நீதிமன்றங்கள் தங்களுக்கு தாங்களே விதித்துக் கொண்ட ஒரு கட்டுப்பாடே மேற்படி நிபந்தனையாகும். எனவே இதனை ஒரு கடுமையான நிபந்தனை என்று கூற முடியாது. இந்நிபந்தனை வழக்கின் சூழ்நிலைக்கேற்ப பல வழக்குகளில் தளர்த்தப்பட்டுள்ளது. அச்சூழ்நிலைகள் வருமாறு.

(1) தன்னுடைய தவறுகையின் காரணமல்லாமல், வேறு காரணங்

களின் நிமித்தமாக மாற்றுத் தீர்வழி பெறுதலை மனுதாரர் இழந்து விட்டிருப்பின், (2) மாற்றுத் தீர்வழி பெறுதல் அதிகக் காலதாமதம் ஆவதாகவும், வெறும் கண்துடைப்பாகவும் இருப்பின், (3) சம்பந்தப் பட்ட நிருவாகத்துறை அதிகார அமைப்பால் எடுக்கப்பட்ட முடிவு, இயற்கை நீதிக் கோட்பாடுகளை மீறியதாக இருப்பின், (4) சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பு சட்டத்தின் அனுமதியின்றி ஏதேச்சதிகாரமாக செபல் பட்டிருந்தால், (5) மாற்றுத் தீர்வழி கோரும் வழக்கு நடவடிக்கையில், அவ்வழக்கைத் தீர்ப்பதற்கு அல்லது அத்தீர்வழி வழங்குவதற்கு சம்பந்தப் பட்ட அதிகார அமைப்பிற்கு அதிகாரவரம்பு இல்லை எனும் பொழுது,

இம்மாதிரியான சூழ்நிலைகளில் உயர் நீதிமன்றங்கள் **"நீதிப் பேராணைகளைப் பிறப்பிக்க மாற்றுத் தீர்வழிகளை முதலில் பெற முயல வேண்டும் என்று வலியுறுத்துவதில்லை"**

காலதாமதம் மற்றும் மட்டு மீறிய தாமதம் [Delay and Laches]

45. Laches - Write short notes. (மட்டு மீறிய தாமதம் - சிறு குறிப்பு வரைக.)

காலதாமதம் மற்றும் மட்டு மீறிய தாமதம் (Delay and Laches):

இந்திய அரசியலமைப்பின் 226-வது ஷரத்தின் கீழ் நீதிப்பேராணை களை பிறப்பிக்க உயர் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரவரம்பு, அதன் தன் விருப்புரிமை அதிகாரத்திற்குகுட்பட்டதாகும். இதில் எந்த விதமான மாற்றுக் கருத்தும் இல்லை. எனவே ஷரத்து 226-ன் கீழ் நீதிப்பேராணை களைப் பிறப்பிக்க உயர் நீதிமன்றங்கள் மறுக்கவும் செய்யலாம். அதற்குண் டான பல காரணங்களில் ஒன்று, மட்டு மீறிய கால தாமதம். அதாவது நீதிப்பேராணை பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்படும் மனுவை வழக்கிற்குண்டான காரணம் எழுந்தவுடன், எவ்வளவு விரைவாக தாக்கல் செய்ய முடியுமோ, அவ்வளவு விரைவாக தாக்கல் செய்தல் வேண்டும். அதில் அசாதாரணமான (மட்டு மீறிய) கால தாமதம் ஏதும் செய்தல் கூடாது. அப்படி கால தாமதம் செய்து நீதிப்பேராணை கோரும் மனுவை தாக்கல் செய்தால், அதை உயர் நீதிமன்றம் தனது தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி ஏற்றுக் கொள்ள மறுக்கலாம்.

Narayani Devi v. State of Bihar[16] - எனும் வழக்கில், அரசாங்க உத்திரவால் அல்லது நிருவாகத்துறை நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட நபர்கள், நீதிப் பேராணை பெற விழைந்தால், அவர்கள் உடனடியாக உயர் நீதிமன்றத்தை அணுக வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியது.

16. C.A.No. 140 of 1964, decd. on 22-9-1964 (SC).

காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்படும் நீதிப்பேராணை மனுக்களை நீதிமன்றங்கள் ஏன் ஏற்றுக் கொள்வதில்லை?

காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்படும் நீதிப்பேராணை மனுக்களை நீதிமன்றங்கள் நிராகரிக்கவே செய்கின்றன. இதற்கு அடிப்படையாக பல காரணங்கள் உள்ளன. அவை, (1) காலதாமதத்துடன் செய்யப்படும் அரசிற்கெதிரான கோரிக்கைகளை நீதிமன்றங்கள் ஊக்குவிப்பதில்லை; (2) ஏற்கனவே முடிந்து போன பிரச்சனைகளை மீண்டும் கிளருவதாக அமையும்; (3) காலதாமதத்திற்கிடையில் சம்பந்தப்பட்ட பிரச்சனையில் வேறு மூன்றாவது நபர்களுக்கு உரிமை ஏதேனும் நோன்றியிருக்கும். (4) காலதாமதம் ஏற்பட்டதற்கு நியாயமான காரணம் ஏதும் இருக்காது.

Tilokchand Motichand v. H.B.Munshi[17] - எனும் வழக்கில், காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்படும் நீதிப்பேராணை மனுக்களை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்ளாது எனும் கோட்பாடு, அடிப்படை உரிமைகள் மீறல் (Violation of Fundamental Rights) குறித்த வழக்குகளுக்கும் பொருந்தும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை எவ்வாறு அளவிடுவது?

நீதிப்பேராணை கோரும் மனு ஒன்று காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அக்காலதாமதத்தை எவ்வாறு நீதிமன்றங்கள் அளவிடுகின்றன என்பது இங்கு எழும் கேள்வியாகும். ஏனெனில், நீதிப்பேராணை மனுக்களுக்கு காலவரையறைச் சட்டம் (Limitation Act) பொருந்துவதில்லை. மேலும் ஷரத்து 32-ன் கீழ் உச்ச நீதிமன்றத்திற்கோ அல்லது ஷரத்து 226-ன் கீழ் உயர் நீதிமன்றத்திற்கோ நீதிப்பேராணை வேண்டிச் செல்ல எந்த கால வரையறையையும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் குறிப்பிடவில்லை. எனவே காலதாமதம் ஏற்பட்டுள்ளதா, இல்லையா என்பதைத் தீர்மானித்தல் நீதிமன்றங்களின் தன்விருப்புரிமை அதிகாரத்திற்குட்பட்டதாக உள்ளன என்று கூறலாம்.

நீதிப்பேராணை நடவடிக்கைகளில் முன்தீர்ப்புத் தடை [Res-judicata in Writ Proceedings]

46. Explain

(a) resjudicata in writ proceedings
(b) alternative remedy rule

விளக்குக

(அ) நீதிப்பேராணை நடவடிக்கைகளில் முன் தீர்ப்புத் தடை

17. (1969) 1 SCC 110 : A.I.R 1970 S.C. 898.

(ஆ) மாற்று நிவாரண விதி

(அ) நீதிப்பேராணை நடவடிக்கையில் முன் தீர்ப்புத் தடை:

இந்திய அரசியலமைப்பின் **226-வது ஷரத்தின்** கீழ் நீதிப்பேராணை பெற உயர் நீதிமன்றத்திடம் செய்யப்படும் மனுவிற்கு, முன் தீர்ப்புத் தடைக் கோட்பாடு பொருந்தும். அதாவது, ஷரத்து 226-ன் கீழான ஒரு நீதிப்பேராணை மனு, விசாரணை செய்யப்பட்டு, அதன் நற்கூறுகளின் அல்லது தகுதிகளின் அடிப்படையில் (on merits of the case) தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டால், பின்னர் அதே காரணங்களின் அடிப்படையில் மீண்டும் புதிதாக மற்றொரு நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்ய முடியாது. இது முன் தீர்ப்புத் தடைக் கோட்பாட்டால் தடுக்கப்படுகிறது.

எனினும் நீதிப்பேராணை கோரும் ஒரு மனு எவ்வித காரணமும் கூறப்படாமல் கோப்பிற்கு எடுக்கப்பட்டவுடனே தள்ளுபடி செய்யப் பட்டுவிட்டாலோ (dismissed inlimine without passing speaking order) அல்லது வழக்கு தொடுக்கும் உரிமை இல்லை எனும் அடிப் படையில் நிராகரிக்கப்பட்டுவிட்டாலோ (rejected for no locus standi) அது முன் தீர்ப்புத் தடையாக செயற்படாது. இங்கு அதே காரணங்களின் அடிப்படையில் மீண்டும் மனுச் செய்யலாம்.

Daryao v. State of U.P.[18] - எனும் வழக்கில் ஷரத்து 226-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவை உயர் நீதிமன்றம், அதன் நற்கூறுகள் அல்லது தகுதிகளின் அடிப்படையில் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கிவிட்டால், அத்தீர்ப்பு அதே காரணங்களின் அடிப் படையில் மீண்டும் புதிதாக ஒரு நீதிப்பேராணை மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன் தீர்ப்புத் தடையாக விளங்கும் என்றும், மேலும் அதே காரணங்களின் அடிப்படையில் ஷரத்து 32-ன் கீழ் நீதிப்பேராணை பிறப்பிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தை அணுகுவ தற்கும் அத்தீர்ப்பு ஒரு முன் தீர்ப்புத் தடையாகச் செயற்படும் என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடக் கூறியது.

அதுபோல **ஷரத்து 32-ன்** கீழ் உச்ச நீதிமன்றத்திடம் தாக்கல் செய்யப்பட்ட ஒரு நீதிப்பேராணை மனுவை, உச்ச நீதிமன்றம் விசாரித்து அம்மனுவின் நற்கூறுகளின் அடிப்படையில் தள்ளுபடி செய்துவிட்டால், பின்னிட்டு அதே காரணங்களின் அடிப்படையில் மற்றொரு மனுவை ஷரத்து 226-ன் கீழ் உயர் நீதிமன்றத்திடம் தாக்கல் செய்ய முடியாது. அந்த இரண்டாவது மனு, முன் தீர்ப்புத் தடைக் கோட்பாட்டால் தடை செய்யப்படுகிறது என்று **Workmen v. Board of Trustees**[19] - எனும் வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது.

எனினும் இந்த முன் தீர்ப்புத் தடைக் கோட்பாடு, **ஆட்கொணர்**

18. A.I.R. 1961 S.C. 1457.
19. A.I.R. 1978 S.C. 1283.

விக்கும் நீதிப்பேராணை மனுவிற்கு (The Doctrine of Res-judicata will not be applicable to the Writ of Habeas Corpus) பொருந்தாது. ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை முன் தீர்ப்புத் தடைக் கோட்பாட்டிற்கு ஒரு விதிவிலக்காகும் என்று **Ghulam Sarwar v. Union of India**[20] - எனும் வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

மேற்படி வழக்கில் மனுதாரர் ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை பிறப்பிக்க வேண்டி ஷரத்து 226-ன் கீழ் உயர் நீதிமன்றத்திடம் மனு செய்தார். ஆனால் உயர் நீதிமன்றம் அம்மனுவை அதன் நற்கூறுகளின் அடிப்படையில் தள்ளுபடி செய்துவிட்டது. பின்னிட்டு மனுதாரர் அதே பொருண்மைகளின் அடிப்படையில் ஷரத்து 32-ன் கீழ் உச்ச நீதிமன்றத்திடம் ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணைக்காக மனுச் செய்தார். இதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, முன் தீர்ப்புத் தடை ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை விஷயத்தில் பொருந்தாது என்று விளக்கமளித்தது.

(ஆ) மாற்று நிவாரண விதி (Alternative Remedy Rule):

(இதற்கான விடையை வினா எண். 44-ல் காண்க.)

20. A.I.R. 1967 S.C. 1335.

10 அதிகாரவரம்பை விலக்கல் (அல்லது) நீதிமுறை மறுஆய்வின் விலக்கல் [Ouster of Jurisdiction (or) Exculusion of Judicial Review]

47. What is meant by ouster of jurisdiction? Examine how the courts construe ouster clauses. (அதிகாரவரம்பை விலக்கல் என்றால் என்ன? விலக்கல் விதிகளை எவ்வாறு நீதிமன்றங்கள் பொருள்படுத்துகின்றன என்பதை ஆய்க.)

(அல்லது)

What is meant by "Ouster of Jurisdiction"? Examine how the courts construe ouster clauses. Are there any checks on such ouster clauses in India? (அதிகாரவரம்பை விலக்கல் என்றால் என்ன? விலக்கல் விதி களை எவ்வாறு நீதிமன்றங்கள் பொருள்படுத்துகின்றன? இந்தியாவில் விலக்கல் விதிகளுக்கு ஏதாவது தடை உள்ளதா?)

(அல்லது)

"Ouster clause does not bar the jurisdiction of the courts if the action is ultravires the powers of the administrative authority"- Explain. ("நிர்வாக அதிகாரியின் செயல் வரம்பு மீறியதாக அமையுமேயானால் விலக்கல் விதி நீதிமன்றத்தின் அதிகார எல்லையை தடை செய்யவில்லை"- விளக்குக.)

(அல்லது)

"Ouster clause does not bar the jurisdiction of the Courts, if the action is ultravires of the powers of the administrative authority" - Explain. ("நிர்வாக அதிகாரியின் செயல் வரம்பு மீறியதாக அமையுமேயானால், நீதிமன்றத்தின் அதிகார வரம்பினை அகற்றும் பிரிவு தடை செய்யவில்லை" - விளக்குக.)

(அல்லது)

What is meant by ouster of jurisdiction? What are the views of the Supreme Court regarding this? (நீதித்துறை அதிகாரவரம்பு விலக்கல் என்றால் என்ன? அதைப் பற்றிய உச்ச நீதிமன்ற கருத்துக்கள் யாவை?)

(அல்லது)

What is the effect of exclusion clause in a statute? Will it pre-

vent judicial review? (ஒரு சட்டத்தில் விலக்கல் விதியின் விளை பயன் என்ன? அது நீதிமுறை மறுஆய்வினை தடை செய்யுமா?)

(அல்லது)

Abuse of Jurisdiction - Write short notes. (அதிகாரவரம்பு துஷ்பிரயோகம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Administrative finality - Write short notes. (நிருவாகமுறை இறுதி முடிவு - சிறு குறிப்பு வரைக.)

அதிகாரவரம்பை விலக்கல் (Ouster of Jurisdiction) - விளக்கம்:

ஒரு சட்டத்தில் உள்ள சட்டப் பிரிவு, ஒரு வழக்கை கோப்பிற்கு எடுத்துக் கொண்டு விசாரிப்பதற்கு சாதாரண நீதிமன்றங்களுக்குள்ள அதிகாரவரம்பை தடை செய்தால், அது **அதிகாரவரம்பை விலக்கல் (Ouster of Jurisdiction)** எனப்படுகிறது. இது **'நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை அகற்றும் பிரிவு' (Ouster Clause)** என்றும், **இறுதித்தன்மையாக்கும் சட்டக் கூறு (Finality Clause)** என்றும் அழைக்கப்படுகிறது.

அதிகாரவரம்பை விலக்கல் குறித்து உரிமையியல் நடைமுறைச் சட்டம் என்ன கூறுகிறது?

1908-ஆம் ஆண்டின் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் (Civil Procedure Code) **9-வது பிரிவு** பின்வருமாறு கூறுகிறது. அஃதாவது, " உரிமையியல் தன்மை கொண்ட அனைத்து வழக்குகளையும் விசாரிப்பதற்கு உரிமையியல் நீதிமன்றங்களுக்கு அதிகாரவரம்பு உண்டு" என்று பொதுவான ஒரு அதிகாரவரம்பை உரிமையியல் நீதிமன்றங்களுக்கு அளிக்கிறது. ஆனால் அதே சமயத்தில் அதன் தொடர்ச்சியாக, "அந்த உரிமையியல் நீதிமன்றங்களுக்குள்ள வழக்குகளை விசாரிக்கும் அதிகாரவரம்பு உட்கிடையாகவோ அல்லது வெளிப்படையாகவோ விலக்கப்பட்டிருக்கக் கூடாது" என்றும் அதே பிரிவில் கூறப்பட்டுள்ளது. எனவே, ஒரு உரிமையியல் வழக்கை விசாரிப்பதற்கு உட்கிடையாகவோ அல்லது வெளிப்படையாகவோ சட்டத்தால் தடை ஏதேனும் விதிக்கப் பட்டிருந்தால், அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உரிமையியல் நீதிமன்றங்களுக்கு அதிகாரவரம்பு இல்லை. இங்கு அதன் அதிகாரவரம்பு விலக்கி வைக்கப்படுகிறது.

அதிகாரவரம்பை விலக்கல் நிருவாகமுறைச் சட்டத்தில் எவ்வாறு இடம் பெறுகிறது?

இயற்றப்பட்ட சட்டங்களின் மூலமாக நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் மற்றும் நிருவாகத்துறை முகவர் நிலைகள் தோற்றுவிக்கப் பட்டு, அவற்றிடம் சட்டமியற்றும் அதிகாரங்களும், நீதித்தீர்ப்பு வழங்கும்

அதிகாரங்களும் ஒப்படைக்கப்படுவதாக நாம் ஆரம்ப அத்தியாயங்களில் கண்டோம். அப்படி அதிகாரங்களை ஒப்படைக்கும் சட்டங்களில், அந்த நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் எடுக்கும் முடிவுகளே அல்லது நடவடிக்கைகளே இறுதியானவையாகும் என்றும், அவற்றை எதிர்க்க முடியாது என்றும், அவற்றிற்கு எதிராக நீதிமன்றங்கள் நீதிமுறையில் மறுஆய்வு **(Judicial Review)** செய்ய இயலாது என்றும், நீதி மன்றங்களின் அதிகாரவரம்பு விலக்கி வைக்கப்படுகிறது என்றும் அச் சட்டத்தின் ஒரு பிரிவில் வகை செய்யப்பட்டிருப்பின், அதுவே நிருவாக முறைச் சட்டத்தைப் பொறுத்து **'அதிகாரவரம்பை விலக்கல்' (Ouster Clause)** என்பதாகும். இதனால் அந்த முடிவுகள் மற்றும் நடவடிக்கை களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கிட்டு சட்டப்படி தீர்வழி பெறும் உரிமை தடுக்கப்படுகிறது.

Institute of Patent v. Lockwood[1] - எனும் வழக்கில் **Lord Herschell** என்பார், நிருவாகத்துறை இயற்றிய விதிகளின் (delegated legislation) செல்லுதன்மை குறித்து கேள்வி கேட்பதற்கு நீதிமன்றங் களுக்கு அதிகாரவரம்பை விலக்கி வைக்க முடியும் என்று கூறினார். இது **ஹெர்சல் விதி (Herschell Doctrine)** எனப்படுகிறது.

அதிகாரவரம்பை விலக்கும் பிரிவு ஏன் நிருவாகமுறைச் சட்டத்தில் அவசியமாகிறது?

மேற்கண்டவாறு நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் எடுக்கும் முடிவுகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு இறுதித்தன்மை கொடுத்து, அவற்றை நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிலிருந்து விலக்கி வைப்பதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் தன் முன் வரும் பிரச்சனைகளை சூழ்நிலைக்கு உகந்தவாறு ஆராய்ந்து, எளிமையான நடைமுறையில், துரிதமாக முடிவுகளை அல்லது நடவடிக்கைகளை எடுக்கின்றன. இவற்றை எதிர்த்து மீண்டும் நீதிமன்றத்தில் வழக்கிட்டால், அது மீண்டும் கால தாமதத்தை உண்டு செய்யும். மேலும் நீதிமன்றங்களின் வேலைப்பளுவை அதிகமாக்கும். அதாவது எந்த நோக்கத்திற்காக நிருவாகத்துறை அதிகார அமைப்பு களும், நிருவாகத்துறை முகவர் நிலைகளும் தோற்றுவிக்கப்பட்டனவோ, அந்த நோக்கமே சிதைந்து போகக் கூடும். எனவே, நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் முடிவுகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு இறுதித் தன்மை கொடுத்து, அவற்றை நீதிமன்றங்களின் அதிகாரவரம்பில் இருந்து விலக்கி வைத்தல் நிருவாகமுறைச் சட்டத்தில் அவசியமாகின்றது.

எடுத்துக்காட்டாக, ஒரு வாடகைதாரரின் (tenant) உரிமைகள் தொடர்பாக ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு முடிவு ஏதேனும் செய்தால், அதை நீதிமுறையில் மறு ஆய்வு செய்ய இயலாது. அதன் முடிவே இறுதியானதாகும். எனவே இங்கு நீதிமன்றங்களின் அதிகார

1. (1894) AC 347 : 63 LJPC 75 : 71 LT 205.

வரம்பு விலக்கப்படுகிறது. (உதாரணம்: 1948-ஆம் ஆண்டின் பம்பாய் வாடகை மற்றும் வேளாண் நிலங்கள் சட்டத்தின் 85-வது பிரிவு). அதுபோல் சில தொழிலாளர் நல சட்டங்களில், தொழிலாளர்களின் சார்பாக வழங்கப்பட்ட முடிவுகளை நீதிமுறையில் மறுஆய்வு செய்ய இயலாது; இங்கும் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு விலக்கி வைக்கப் பட்டுள்ளது. (உதாரணம்: 1948-ஆம் ஆண்டின் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் 24-வது பிரிவு).

அதிகாரவரம்பு விலக்கி வைக்கப்படும் விதங்கள் (Types of Ouster of Jurisdiction (or) Methods of Exclusion):

நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு பல விதங்களில் விலக்கி வைக்கப்படுகிறது. அவற்றில் முக்கியமான இரண்டு வருமாறு:

(i) வெளிப்படையான விலக்கல் (Express Exclusion): ஒரு சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்திரவை எதிர்த்து எந்த நீதி மன்றத்திலும் வழக்காடக் கூடாது என்றும், அந்தச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட முடிவே இறுதியானதாகும் என்றும் அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பின், அது வெளிப்படையான விலக்கல் எனப்படும். இதனை **'முழுமையான விலக்கல்' (Total Exclusion)** என்றும் அழைப்பர். எடுத்துக்காட்டாக, 1946-ஆம் ஆண்டின் வெளிநாட்டவர்கள் சட்டத்தின் 2-வது பிரிவைக் குறிப்பிடலாம். அதன்படி மேற்படி சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட முடிவை அல்லது நடவடிக்கையை எதிர்த்து எந்த நீதிமன்றத்திலும் வழக்கிட முடியாது.

(ii) உட்கிடையான விலக்கல் (Implied Exclusion): சம்பந்தப் பட்ட ஒரு சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஒரு முடிவு இறுதியானது என்று அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால், அது உட்கிடையான விலக்கல் எனப்படுகிறது. ஏனெனில் இங்கு நீதிமன்றங்களின் நீதிமுறை மறுஆய்வு அதிகாரவரம்பை தடை செய்யும் சட்ட வாசகங்கள் வெளிப் படையாக இல்லாததுதான் காரணமாகும். எனவே, இவ்வாறு ஒரு சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட முடிவிற்கு இறுதித்தன்மை வழங்கப் பட்டிருந்தால், அங்கு நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு விலக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதை உட்கிடையாக உள்ளது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, தொழிற் தகராறுகள் சட்டத்தின் 17(2)-வது பிரிவானது, அச்சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட நிருவாகத்துறை அதிகார அமைப்பால் செய்யப்படும் முடிவுகள் இறுதியானவை என்று கூறுகிறது.

அதிகாரவரம்பு விலக்கல் பிரிவு குறித்து நீதிமன்றங்களின் போக்கு (The Judicial Trend regarding Ouster of Jurisdiction cluase or Exclusion Clause):

தொடர்புடைய ஒரு சட்டத்தில் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறை அதிகார அமைப்பு எடுக்கும் முடிவு அல்லது நடவடிக்கையே

இறுதியானது மற்றும் அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கிட முடியாது என்று குறிப்பிடப்பட்டிருந்தால் அதனை அதிகாரவரம்பு விலக்கல் பிரிவு என்று கூறுகிறோம். ஆனால் இதனால் உண்மையில் என்ன நடக்கிறது? அந்த முடிவு அல்லது நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவரின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றன; மீறப்படுகின்றன. அவர் அவற்றை எதிர்த்து நீதிமன்றத்தில் வினா எழுப்ப முடியாமல் போகிறது. இதனால் நிருவாகத் துறை ஏதேச்சதிகாரப் போக்குடன் செயல்படவும் வாய்ப்புண்டு. பாதிக்கப்பட்டவருக்கு தீர்வழி கிடைக்க வேண்டும் என்பது சட்டத்தின் ஆட்சியாகும். எனவே, அதற்காக நீதிமன்றத்தை அணுகும் உரிமை அவருக்கு தரப்பட வேண்டும். எனவே இம்மாதிரியான அதிகாரவரம்பு விலக்கல் சட்டப்பிரிவுகளை, நீதிமன்றங்கள் அப்படியே வேத வாக்காக கருத்தில் கொண்டு, நிருவாகத்துறையின் சம்பந்தப்பட்ட முடிவை அல்லது நடவடிக்கையை மறுஆய்வு செய்யாமல் விட்டுவிடுவதில்லை. அதாவது கைகழுவிவிடுவதில்லை. இம்மாதிரியான சட்டப்பிரிவுகளை எந்த சூழ்நிலையில் தளர்த்தி, பாதிக்கப்பட்டவருக்கு தீர்வழி வழங்கலாம் என்று ஆராய்கின்றன. அதற்காக பல பொருள்விளக்க விதிகளை (Rules of Construction or Interpretation) உருவாக்கியுள்ளன.

எனவே, பின்வரும் சூழ்நிலைகள் நிலவும் போது, நீதி மன்றங்களின் அதிகாரவரம்பு விலக்கி வைக்கப்படுவதில்லை. அங்கு நீதிமன்றங்களானது, நிருவாகத்துறையின் முடிவை அல்லது நடவடிக்கையை நீதிமுறையில் மறுஆய்வு செய்து தக்க தீர்ப்பு நல்குகின்றன.

அதிகாரவரம்பு விலக்கல் சட்டப் பிரிவுகளை நீதிமன்றங்கள் எவ்வாறு பொருள் கொள்கின்றன? (How the Courts construe the Ouster clauses?) (அல்லது) எப்பொழுது நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு விலக்கி வைக்கப்படுவதில்லை? (When the Jurisdiction of Courts not excluded?) (அல்லது) இந்தியாவில் விலக்கல் விதியின் மீதான தடைகள் (Checks on Ouster clauses in India):

(i) அரசியலமைப்புபடியான தீர்வழிகள் பெற உரிமையிருக்கும் பொழுது (Right to Constitutional Remedies): இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 32, 226 மற்றும் 227-வது ஷரத்துகளின் கீழ் நிருவாகத் துறை அதிகார அமைப்புகளின் நடவடிக்கைகளை நீதிமுறையில் மறு ஆய்வு செய்ய முடியும். ஒரு சட்டத்தில் நீதிமன்றங்களின் அதிகார வரம்பை விலக்கும் ஒரு சட்டப்பிரிவு உள்ளது என்பதால், மேற்கண்ட ஷரத்துகளின் வழியாக நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக ஒருவர் அரசியலமைப்புச் சட்டப்படி தீர்வழி பெறும் உரிமையை தடுக்க முடியாது.

(ii) ஒரு சட்டம் அரசியலமைப்பற்ற தன்மை கொண்டதாக இருக்கும் பொழுது (Unconstitutionality of the statute): இயற்றப்படும் அனைத்துச் சட்டங்களும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டதாகும். எனவே எந்த ஒரு சட்டமும் அரசியலமைப்புச் சட்டத்தை

மீறிச் செல்ல முடியாது. அப்படி ஒரு சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தை மீறி அரசியலமைப்பற்ற தன்மை கொண்டதாக விளங்கு மானால் அல்லது அச்சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட நிருவாகத்துறை அதிகார அமைப்பால் எடுக்கப்பட்ட முடிவு அல்லது நடவடிக்கை அரசியலமைப்புச் சட்டத்தை மீறியதாக இருக்குமானால், அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வினா எழுப்ப முடியும். இங்கு அச்சட்டத்தில், நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை விலக்கும் சட்டப்பிரிவு இருந்தாலும் அதைப் பற்றி நீதிமன்றங்கள் அக்கறை கொள்வதில்லை; கவலைப் படுவதும் இல்லை.

Bharat Kala Bhandar v. Dhaman Gaon Municipality[2] - எனும் வழக்கில், ஒரு சட்டத்தில் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவே, அரசியலமைப்பற்ற தன்மை கொண்டதாக இருப்பின், அது இல்லாநிலையதாகும். மேலும் அச்சட்டப் பிரிவின் வாயிலாக நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை தடைப்படுத்த இயலாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

Dhulabhai v. State of M.P.[3] - எனும் வழக்கில் நிருவாகத்துறை அதிகார அமைப்பின் முடிவு இறுதித்தன்மை வாய்ந்தது என்பதை, அரசியலமைப்பற்ற மற்றும் இல்லாநிலையான சட்டங்களை, தீர்வழி ஏதும் வழங்காமல் அப்படியே செயலாக்குதல் வேண்டும் என்ற பொருளில் கொள்ளக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் விளக்கமளித்தது.

(iii) அதிகாரவரம்பு பற்றிய தவறு (Jurisdictional Error): அதிகாரவரம்பு பற்றிய தவறு என்பது, ஒரு பிரச்சனையைத் தீர்க்க அதகாரவரம்பில்லாத பொழுது, அப்பிரச்சனையைத் தீர்க்க தனக்கு அதிகாரவரம்பு உள்ளதாக நினைத்து, அந்த அதிகாரவரம்பை தனதாக எடுத்துக் கொண்டு அப்பிரச்சனையைத் தீர்த்தலாகும். இது இல்லா நிலையதாகும். அதாவது, ஒரு பிரச்சனை குறித்து நடவடிக்கை எடுக்க அல்லது முடிவு செய்ய சம்பந்தப்பட்ட ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு அதிகாரவரம்பே இல்லாத பொழுது, அது எடுத்த நடவடிக்கை அல்லது முடிவை எதிர்த்து நீதிமன்றத்தில் வினா எழுப்ப முடியும். இங்கு நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவிற்கு எந்த முக்கியத்துவத்தையும், விளைவையும் நீதிமன்றங்கள் கொடுப்பதில்லை. அதாவது மேற்கண்ட சூழ்நிலையில் நிருவாகத்துறை அதிகார அமைப்பின் முடிவு அல்லது நடவடிக்கையை எதிர்த்து தொடுக்கப்படும் வழக்குகளை நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவு தடை செய்ய முடியாது. எனவே இம்மாதிரியான சூழலில், நீதிப்பேராணைகள் உள்ளிட்ட பிறவகையான அரசியலமைப்பு தீர்வழிகள் (Constitutional remedies including writs) மட்டுமல்லாது,

2. A.I.R. 1966 S.C. 249.
3. A.I.R. 1969 S.C. 78.

உறுத்துக்கட்டளை, விளம்புகை தீர்வழி (remedies of injunction and declaration) ஆகியவற்றையும் நிருவாகத்துறை அதிகார அமைப்பின் நடவடிக்கை அல்லது முடிவிற்கு எதிராக கேட்டுப் பெற இயலும்.

அதிகாரவரம்பு பற்றிய தவறு பின்வரும் ஏதேனும் ஒரு வழியில் எழலாம். அஃதாவது, (அ) சம்பந்தப்பட்ட நிருவாகத்துறை அதிகார அமைப்பு முறைப்படி தோற்றுவிக்கப்படாமல் இருந்தால்; (ஆ) சம்பந்தப்பட்ட பிரச்சனைக்குரிய வட்டார எல்லை, நபர் அல்லது கருப் பொருள் குறித்து நடவடிக்கைகளை எடுக்க அந்த அதிகார அமைப்பு சட்டத் தகுதியற்றதாக இருக்கும் பொழுது; (இ) அதிகாரவரம்பு பற்றிய பொருண்மைகளில் சம்பந்தப்பட்ட நிருவாகத்துறை அதிகார அமைப்பு தவறுகை புரிந்து, தனக்கு அதிகாரவரம்பே இல்லாத விஷயத்தில் அதிகாரவரம்பு உள்ளதாக நினைத்து அதிகாரவரம்பை தனதாக எடுத்துக் கொள்ளும் பொழுது; (ஈ) நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு அதிகாரவரம்பைக் கொடுக்கும் சட்டப் பிரிவே அரசியலமைப்பற்றதாக இருக்கும் பொழுது; (உ) ஒரு பிரச்சனையை தீர்மானிக்கையில், அந்த அதிகார அமைப்பு தனது அதிகாரவரம்பை மீறியிருக்கும் பொழுது; மற்றும் (ஊ) நிருவாகத்துறை அதிகார அமைப்பு தனது அதிகாரவரம்பை தவறாகப் பயன்படுத்தியிருக்கும் பொழுது (misused) அல்லது துஷ் பிரயோகம் செய்திருக்கும் பொழுது (abused).

(iv) அதிகாரவரம்பு மீறிய நிருவாகத்துறை நடவடிக்கை (Ultra vires Administrative Action): ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு எடுத்த நடவடிக்கை அல்லது முடிவு அதிகாரவரம்பு மீறியதாக இருப்பின், அங்கு நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவிற்கு எந்த முக்கியத்துவத்தையும் நீதிமன்றங்கள் அளிப்பதில்லை. அதாவது அந்த முடிவு அல்லது நடவடிக்கையை எதிர்த்து தொடுக்கப் படும் வழக்குகளை நீதிமன்றங்கள் தங்கள் ஆய்விற்கு எடுத்துக் கொள் கின்றன. மாறாக நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு எவ்வித தடைக்கும் உள்ளாவதில்லை.

இந்த விதி, **நிலைமுறை அதிகாரவரம்பு மீறலுக்கு (Substantive Ultra vires)** மட்டுமல்லாது, **நடைமுறை அதிகாரவரம்பு மீறலுக்கும் (Procedural Ultra vires)** பொருந்தக் கூடியதாக உள்ளது. அதாவது ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு, சட்டத்தால் அதற்களிக்கப்பட்ட அதிகாரத்தை அல்லது அதிகாரத்தை மீறி செயல் படும் பொழுதோ அல்லது சட்டத்தால் வகுத்துரைக்கப்பட்டுள்ள நடைமுறைகளை மீறி நடவடிக்கை ஏதும் எடுக்கும் பொழுதோ, அதன் முடிவு அல்லது நடவடிக்கை இறுதித் தன்மை வாய்ந்ததாக கொள்ளப் படாது. அதாவது, அதிகாரவரம்பு விலக்கல் சட்டப் பிரிவு, நீதி மன்றங்களின் அதிகாரவரம்பை தடை செய்யாது.

இந்நிலைப்பாடுதான், **"நிர்வாக அதிகாரியின் செயல் வரம்பு**

மீறியதாக அமையுமேயானால் விலக்கல் விதி நீதிமன்றத்தின் அதிகார எல்லையை தடை செய்யவில்லை" என்று கூறப்படுகிறது. **("Ouster clause does not bar the jurisdiction of the courts if the action is ultravires the powers of the administrative authority")**

Surajmal v. Municipal Board, Ganga Nagar[4] - எனும் வழக்கில் சம்பந்தப்பட்ட சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டிராத பொழுது, நகராட்சியானது வரிகளை வசூல் செய்தது. இது அதிகாரவரம்பு மீறிய நடவடிக்கையாகும். மேலும் இதே சட்டத்தில் நகராட்சியின் நடவடிக்கைகளை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்கிட முடியாது என்று அதிகாரவரம்பு மீறல் சட்டப் பிரிவும் இருந்தது. ஆனால் நகராட்சியின் மேற்கண்ட நடவடிக்கை அதிகாரவரம்பு மீறியது என்பதால், அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவிற்கு எந்த விளைவும் கொடுக்கப்படக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

(v) சட்டப் பிரிவுகளை பூர்த்தி செய்யாமை (Non-compliance with the provisions of the Statue): சம்பந்தப்பட்ட சட்டத்தின் வகைமுறைகளை ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு பூர்த்தி செய்யாமல் முடிவு அல்லது நடவடிக்கை ஏதேனும் எடுத்தால், அங்கு அதிகாரவரம்பு விலக்கல் பிரிவு நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை தடை செய்யாது. அம்முடிவை அல்லது நடவடிக்கையை ஆய்வு செய்ய நீதி மன்றங்களுக்கு அதிகாரவரம்பு உண்டு.

(vi) இயற்கை நீதிக் கோட்பாடுகளை மீறுதல் (Violation of the Principles of Natural Justice): ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு பிறப்பித்த முடிவு, இயற்கை நீதிக் கோட்பாடுகளை மீறியதாக இருப்பின், சம்பந்தப்பட்ட சட்டத்தில் உள்ள அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவு, நீதிமன்றங்களை அதிகாரவரம்பை தடை செய்ய இயலாது. அந்த முடிவை நீதிமன்றங்கள் நீதிமுறையில் மறுஆய்வு செய்ய அதிகார வரம்பு கொண்டுள்ளது.

Secretary of State v. Mark & Co.[5] - எனும் பழைய வழக்கில் ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு அல்லது தீர்ப்பாயமானது நீதிமுறை நடவடிக்கைகளின் அடிப்படைக் கோட்பாடுகளான இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு இயைந்த வகையில் செயல்படவில்லையானால், அங்கு நீதிமன்றங்களின் அதிகாரவரம்பானது, அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவால் தடை செய்யப்பட முடியாது என்று பிரிவி கவுன்சில் நீதிமன்றம் கூறியது.

(vii) அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவு, சட்டப் பிரச்சனைக்கு தொடர்புடையதாக இல்லாமல் பொருண்மைப்

4. A.I.R. 1977 S.C. 246.
5. A.I.R. 1940 P.C. 105.

பிரச்சனைக்கு தொடர்புடையதாக இருக்கும் பொழுது (When the Ouster Clause relates to the question of fact and not of law): ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு அல்லது தீர்ப்பாயம் பொருண்மைகளின் அடிப்படையில் வழங்கிய முடிவு இறுதிதன்மை வாய்ந்தது என்று சம்பந்தப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பின், அங்கு அந்த முடிவில் சம்பந்தப்பட்ட சட்டப் பிரச்சனை குறித்து நீதிமன்றங்கள் மறுஆய்வு செய்யலாம். இதை அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவு தடை செய்ய இயலாது.

(viii) அடிப்படை உரிமைகள் மீறப்படும் பொழுது (When Fundamental Rights are violated): சம்பந்தப்பட்ட சட்டத்தில் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவு இருந்தாலுமே கூட, அந்தச் சட்டத்தின் கீழ் ஒரு நிருவாகத்துறை அதிகார அமைப்பு எடுத்த நடவடிக்கை அல்லது முடிவு ஒரு தரப்பினரின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக இருப்பின், அங்கு அந்த விலக்கல் பிரிவு, நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை தடை செய்ய முடியாது. அதிகார வரம்பை விலக்கும் சட்டப் பிரிவு எனும் போர்வையின் கீழ், நிருவாகத்துறை அதிகார அமைப்புகளானது அரசியலமைப்புச் சட்டத்தால் குடிமக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீற முடியாது.

முடிவுரை:

ஒரு சட்டத்தில் காணப்படும் அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவு, நாம் முன்கண்டவாறு சில நன்மைகளைத் தந்தாலும், அதைக் கொண்டு நிருவாகத்துறை அதிகார அமைப்புகளானது அல்லது தீர்ப்பாயங்களானது ஏதேச்சதிகாரமாக செயல்படக் கூடாது. எனவே தான், அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவுகளை அப்படியே நீதிமன்றங்கள் எடுத்துக் கொள்வதில்லை. எந்தச் சூழலில் அல்லது எதன் அடிப்படையில் நிருவாகத்துறை அதிகார அமைப்பு நடவடிக்கை அல்லது முடிவு எடுத்துள்ளது என்பதை நீதிமன்றம் ஆய்ந்து, அந்தச் சட்டப் பிரிவை பொருள் கொள்கின்றது. நாம் சென்ற பத்திகளில் கண்ட ஒன்பது வகையான சூழ்நிலைகளில், நீதிமன்றங்களின் அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவுகளை நீதிமன்றங்கள் கருத்தில் கொள்வதில்லை. மாறாக நிருவாகத்துறை அதிகார அமைப்பு எடுத்து முடிவு அல்லது நடவடிக்கையை நீதிமுறையில் மறுஆய்வு செய்கின்றன. நிருவாகத்துறை அதிகார அமைப்பின் முடிவால் பாதிக்கப்பட்டவருக்கு போதுமான மாற்றுத் தீர்வழிக்கு அச்சட்டத்திலேயே வகை செய்யப்பட்டிருப்பின் அங்கு அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவை நீதிமன்றங்கள் கருத்தில் கொள்கின்றன; மேலும் நிருவாகத்துறை எடுத்த முடிவு அல்லது நடவடிக்கையிலிருந்து, விலகியிருக்கின்றன என்று கூறலாம். ஒருவேளை அவ்வாறு போதுமான மாற்றுத் தீர்வழிக்கு ஏதும் வகை செய்யப்படாதிருக்குமிடத்து, அதிகாரவரம்பை விலக்கும் சட்டப் பிரிவு குறித்து பொருட்படுத்தாமல், நீதிமன்றங்களே தக்க தீர்வழி கொடுக்கின்றன.

11 'வழக்கு தொடுக்கும் உரிமை' எனும் கோட்பாடு [Concept of 'Locus Standi']

48. "The concept of locus standi has been changed beyond recognition" - Elucidate. ("வழக்கிடு உரிமை என்ற கோட்பாடு உரு தெரியாத அளவிற்கு மாற்றப்பட்டுள்ளது" - விளக்குக.)

(அல்லது)

What do you understand by the term 'Locus Standi'? Examine to what extent this concept has been applied in public interest litigation. ('வழக்கிடுவதற்கு தகுதி' என்றால் என்ன? பொதுநலன் சார்ந்த வழக்குகளில் இக்கோட்பாடு எந்த அளவுக்கு செயல்படுத்தப் படுகிறது என்பதை ஆராய்க.)

(அல்லது)

Explain 'Locus standi'. Discuss the liberalization of "locus standi" by the Indian Courts. (நீதிமன்ற வருகை உரிமையை விளக்குக. நீதிமன்ற வருகை உரிமையை இந்திய நீதிமன்றங்கள் தளர்த்தும் நிலையை விவாதிக்கவும்.)

(அல்லது)

Examine how the liberalisation of 'Locus Standi' has resulted in better judicial protection of individual rights from administrative actions. (வழக்கிடு உரிமை கொள்கை தளர்ச்சி பெற்றதன் காரணமாக தனிநபர் உரிமைகள் நிர்வாகத்துறை செயல்பாடுகள் தொடர்பாக நீதித்துறையின் சீரிய பாதுகாப்பில் அமைந்துள்ளது என்பதனை ஆய்வு செய்க.)

(அல்லது)

What is "Locus standi"? When a writ of mandamus is available? ("ஈடுபாட்டு நிலை" என்றால் என்ன? செயலுறுத்தும் நீதிப்பேராணை எப்போது அளிக்கப்படலாம்?)

(அல்லது)

What do you understand by the term 'Locus standi'? What are the grounds on which a writ of 'Quo warranto' will lie? ('வழக்கிடு வதற்கு தகுதி' என்பதை எவ்வாறு புரிந்து கொள்கிறாய்? எந்தெந்த அடிப்படையில் ஒருவர் தகுதி இல்லாமல் நியமனம் செய்யப்பட்டிருக் கிறார் என்று கோரி ஒரு நீதிப்பேராணை தாக்கல் செய்ய முடியும்?)

(அல்லது)

Locus standi - Write short notes. (வழக்குரை உரிமை - சிறு குறிப்பு வரைக.)

வழக்கு தொடுக்கும் உரிமை (Locus standi) - விளக்கம்:

'Locus Standi' என்றால் தமிழில் **'நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கும் உரிமை'** என்று பொருளாகும். வழிவழி வந்த மரபின்படி, எவர் ஒருவருடைய உரிமைகள் மீறப்பட்டனவோ, அவர்தாம் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து தீர்வழி பெறவியலும். அதாவது பாதிக்கப் பட்டவர்தான் வழக்கிட இயலும். மற்றவர்கள் வழக்கிட முடியாது. இதுவே **'வழக்கு தொடுக்கும் உரிமை எனும் கோட்பாடு அல்லது கருத்துரு' (Concept of Locus standi)** உணர்த்தும் பொருளாகும்.

வழக்கு தொடுக்கும் உரிமையும் நீதிப்பேராணைகளும் (Locus standi and Writs) - விளக்கம்:

பாதிக்கப்பட்டவர் மட்டுமே வழக்கு தொடுக்க முடியும் எனும் கடுமையான நிபந்தனை, காலப் போக்கில் நீதிமன்றங்களால் தளர்த்தப் பட்டது என்றே கூற வேண்டும். அதிலும் குறிப்பாக நீதிப்பேராணைகள் [ஆட்கொணர்விக்கும் (Writ of Habeas Corpus) மற்றும் தகுதி நிலை வினவும் (Writ of Quo-warranto) நீதிப்பேராணைகள் தவிர] பிறப்பிக்கக் கோரி தொடுக்கப்படும் வழக்குகளிலும், உரிமையியல் சட்டத் தீர்வழி (Civil law remedy) கோரி தொடுக்கப்படும் வழக்குகளிலும், பாதிக்கப் பட்டவர்தான் வழக்கு தொடர வேண்டும் எனும் நிபந்தனை தளர்த்தப் பட்டுள்ளது. **இன்று வழக்கு தொடுக்கும் உரிமை (வழக்கிடு உரிமை) என்ற கோட்பாடு உரு தெரியாத அளவிற்கு மாற்றப்பட்டுள்ளது** என்றே கூற வேண்டும். இதன் விளக்கத்தை சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்துகள் 32 மற்றும் 226-ன் கீழ் உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்களால் நீதிப்பேராணைகள் பிறப்பிக்கப் படுகின்றன. ஆனால் அச்ஷரத்துகளில் நிருவாகத்துறையின் அதிகார துஷ்பிரயோகத்திற்கெதிராக எவரெல்லாம் நீதிப்பேராணைகள் பிறப் பிக்கக் கோரி நீதிமன்றத்தில் வழக்கிட முடியும் என்பது குறித்து எதுவும் கூறப்படவில்லை. எனவே ஒருவரின் வழக்கு தொடுக்கும் உரிமையை தீர்மானிப்பது நீதிமன்றங்களின் தன்விருப்புரிமை அதிகாரத்திற்கு உட் பட்டதாக உள்ளது. எனினும் இவ்வுரிமையை தீர்மானிப்பதில் நீதி மன்றங்கள் சில நிகழ்வுகளில் குறுகிய, கடுமையான அணுகுமுறையையும், வேறு சில நிகழ்வுகளில் பரந்த, இலகுவான அணுகுமுறையையும் பின் பற்றுகின்றன. அனைத்து வழக்குகளுக்கும் பொருந்தக் கூடிய விதத்தில் ஒரே மாதியாக விதிகள் எதுவும் வழக்கு தொடுக்கும் உரிமை குறித்து செய்யப்படவில்லை.

பொதுவாக பின்பற்றப்பட்டு வரும் விதியின்படி, நெறிமுறையுறுத்தும் (Writ of Certiorari), செயலுறுத்தும் (Writ of Mandamus) மற்றும் தடையுறுத்தும் (Writ of Prohibition) நீதிப்பேராணைகளுக்குண்டான மனுவை, பாதிக்கப்பட்டவர்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். இவ்விதி, **உரிமைகளும் தீர்வழிகளும் ஒன்றிற்கொன்று தொடர்புடையவை** என்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். எனவே எவரது உரிமைகள் நிருவாகத்துறையால் பாதிக்கப்பட்டுள்ளதோ, அவர்தாம் தீர்வழியையும் கோர முடியும்.

வழக்கு தொடுக்கும் உரிமை குறித்து மேற்படி விதி கூறும் குறுகிய அணுகுமுறை, பல விரும்பத்தகாத விளைவுகளுக்கு இட்டுச் செல்கின்றது என்றே கூற வேண்டும். அவை,

(1) சில சமயங்களில் நிருவாகத்துறையின் ஒரு செயல்பாட்டை எதிர்த்து வழக்கிட எவருக்கும் உரிமை இல்லாது போய்விடலாம். எனவே அந்நிருவாகத்துறையானது, தான் தவறாக செயல்பட்டாலும், அதைத் தட்டிக் கேட்க யாரும் இல்லை எனும் மனப் போக்கில் அத்தவறை தொடர்ந்து செய்யலாம். எனவே இதனால் பெருமளவில் பாதிக்கப்படும் பொது மக்கள் தீர்வழி காணாது துன்பப்பட நேரும். ஏனெனில் அங்கு தான் வழக்கு தொடுக்கும் உரிமை எவருக்கும் இல்லையே. இந்நிலை எவ்வாறு எழுகிறது என்பதற்கு **எடுத்துக்காட்டாக** பின்வரும் ஒரு நிகழ்வைக் குறிப்பிடலாம். அஃதாவது நிருவாகத்துறையின் ஒரு செயல்பாட்டின் காரணமாக காற்றில் மாசு ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். இது ஒரு குறிப்பிட்ட நபர் என்று இல்லாமல், அக்காற்றை சுவாசிக்கும் அனைத்து பொது மக்களையும் பாதிப்படையச் செய்கிறது. இங்கு அப்பொது மக்களின் சார்பாக ஒருவர் வழக்கிடும் பொழுது, மாசுடைய அக்காற்றினால் பாதிக்கப்பட்ட நபர் எங்கே என்று கேட்பது அபத்தமாகும். ஏனெனில் பாதிப்பு ஏற்படுவதற்கு முன் காப்பதுதான் சட்டம். எனவே இங்கு சட்டத்தின் நோக்கமே சிதறிப் போய்விடுகிறது.

(2) அடுத்து, இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டில் வறுமை, கல்லாமை, அறியாமை ஆகிய காரணங்களால், ஏழை எளிய மக்கள் தங்கள் குறைகளுக்கு நீதிமன்றங்களின் வாயிலாக தீர்வழி காண்பது கடினமானதாக உள்ளது. நீதிமன்றங்களின் கதவைத் தட்ட அதிகப் பொருட் செலவு ஏற்படுகிறது. அன்றாட வாழ்க்கைக்கே அல்லல்படும் நமது மக்கள், 'நமக்கேன் வம்பு' எனும் ரீதியில் ஒதுங்கிச் செல்ல கற்றுக் கொண்டுள்ளனர். எனவே நிருவாகத்துறையின் செயல்பாட்டால் ஏற்படும் கேட்டை தாங்கிக் கொள்ள தயாராகிவிட்டனர்.

இந்நிலை களையப்பட வேண்டுமெனில், பாதிக்கப்பட்டவர்தான் வழக்கிட முடியும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டு, அவர்களின் சார்பாக மற்றவர்களும் வழக்கிடலாம் என்ற நிலை உதயமாக வேண்டும். இதன் பொருட்டு கொண்டு வரப்பட்டதுதான் **'பொது நல வழக்குகள்'**

எனும் கருத்துரு **(Concept of Public Interest Litigation - P.I.L.)** ஆகும். இன்றைய நீதிமன்றங்கள் இப்படிப்பட்ட பொது நல வழக்குகளை ஆதரிக்கின்றன.

வழக்கு தொடுக்கும் உரிமையும் பொது நல வழக்குகளும் (Locus standi and Public Interest Litigations) - விளக்கம்:

மேற்கண்ட விரும்பத்தகாத விளைவுகளால், பாதிக்கப்பட்டவர் தான் வழக்கிட முடியும் என்ற கோட்பாடு இன்று பழங்கதையாகி விட்டது. இந்நிபந்தனையை உச்ச நீதிமன்றம் சமீபத்தில் எழுந்த பல வழக்குகளிலும் தளர்த்தி, சமுதாயம் விரும்பும் நல்தீர்ப்பு நல்கியுள்ளது. இதன் பொருட்டு பொது முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் மனித சமுதாயத்திற்கு பயன் தரக்கூடிய பொது நல வழக்குகளை உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்கள் தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கின்றன. இங்கு வழக்கு தொடுத்தவர் நிருவாகத் துறையின் செயல்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளரா என்பதை நீதிமன்றம் ஆராய்வதில்லை. மாறாக அவர் தொடுத்த வழக்கு பொது நலன் குறித்ததாக உள்ளதா என்பதையும், மற்றும் அதில் வழங்கப்படும் தீர்ப்பின் பயனாளிகள் பொது மக்களாக உள்ளனரா என்பதையும் மட்டுமே நீதிமன்றம் ஆராய்கின்றது. எனவே நீதிமன்றங்களின் கதவைத் தட்டி தீர்வழி கோர முடியாத அளவிற்கு சமூதாயத்திலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியுள்ள பொதுமக்களின் சார்பாக, அவர்களுக்கு இந்திய அரசியலமைப்பாலும், பிற சட்டங்களாலும் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை வலியுறுத்திச் செயல்படுத்த, சமூக உணர்வு கொண்ட எவரும் நீதிமன்றத்தில் வழக்கிடலாம். இங்கு வழக்கு தொடுக்கும் உரிமை குறித்த கோட்பாட்டிற்கு எந்த இடமும் (no place for the concept of locus standi) இல்லை.

வழக்கு தொடுக்கும் உரிமை குறித்த கோட்பாடை தளர்த்துவற்குண்டான காரணங்களை எடுத்துக் கூறிய முக்கிய வழக்கு (The Case Law which gave reasons for the relaxation of the Concept of Locus standi):

Fertilizer Corporation Kamgar Union v. Union of India[1]- இவ்வழக்கில் **நீதியரசர் கிருஷ்ணா அய்யர்** அவர்கள், வழக்கு தொடுக்கும் உரிமை குறித்த கடுமையான கோட்டை தளர்த்த வேண்டும் என்றும், அதற்குண்டான பின்வரும் காரணங்களையும் எடுத்துரைத்தார். அவை,

(1) அரசாங்கத்தில் ஊழல் ஊடுருவிக் காணப்படும் பொழுது, அரசின் அதிகாரம் எந்நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டுமோ அதற்கு தொடர்பில்லாத நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும். அச்சூழ்நிலையில், நிருவாக முறைகேடுகளுக்குண்டான உரிமையியல் தீர்வழிகள், தனிப்பட்ட குடிமக்கள் எடுக்கும் சட்ட நடவடிக்கையையே சார்ந்து உள்ளது.

1. (1981) 1 SCC 568 : A.I.R. 1981 S.C. 344.

(2) வேறு கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் செய்யப்படும் வரை, சமூக நீதி நிலவ நிருவாகத் துறை செயல்பாட்டின் மீது அதிகக் கட்டுபாடுகளற்ற, தாராளமான நீதிமுறை மறுஆய்வு (liberal judicial review) தேவை.

(3) வழக்கு தொடுக்கும் உரிமை குறித்த கண்டிப்பான விதிகள், நிருவாகமுறைச் சட்டத்தின் ஆரோக்கியத்திற்கு எதிரானதாகும். நல்ல வழக்கொன்றுடன் வரும் வாதியை, அவர் போதுமான அளவு தனிப் பட்ட விதத்தில் பாதிக்கப்படவில்லை எனும் காரணத்தினால் திருப்பி அனுப்பினால், அங்கே ஏதோ ஒரு நிருவாகத்துறை, சட்டத்தை மீறிச் செயல்பட வாய்ப்பளிக்கப்பட்டதாகப் பொருளாகும். இது பொது நலனுக்கு விரோதமானதாகும்.

(4) இந்தியாவில் அடிப்படை சுதந்திரங்கள் நலிவுற்ற நிலையில் உள்ளன. பொது நீதி நிலைநிறுத்தப்பட அதற்குண்டான பங்களிப்பில் விறுவிறுப்பு தேவை. எனவே பொது நல உணர்வு கொண்ட குடி மக்களுக்கு சட்ட செயல்முறையின் மீது நம்பிக்கை வைக்க வாய்ப்பளிக் கப்பட வேண்டும். மாறாக வழக்கு தொடுக்க உரிமை வேண்டும் எனும் கோட்பாட்டின் அடிப்படையில் அவரது வாய்ப்பு மறுக்கப்படக் கூடாது.

வழக்கு தொடுக்கும் உரிமை குறித்த முக்கிய வழக்குகள்:

S.P.Gupta v. Union of India[2] - இவ்வழக்கை **"நீதிபதிகள் பணி மாற்றல் வழக்கு"** என்று சிறப்பாக அழைப்பார்கள். இவ்வழக்கில் கூடுதல் நீதிபதிகள் நியமனம் குறித்தும், ஒரு உயர் நீதி மன்றத்திலிருந்து மற்றொரு உயர் நீதிமன்றத்திற்கு நீதிபதிகள் மாற்றப்பட்டது குறித்தும் வினவி பல மனுக்களை பல்வேறு உயர் நீதிமன்றங்களில் வழக்குரைஞர்கள் தாக்கல் செய்தனர். அவற்றில் இவ்வாறு நீதிபதிகளை மாற்றி அரசாங்கம் செயல்பட்டது, நீதித்துறையின் சுதந்திரத்திற்கு களங்கம் கற்பிப்பதாகும் என்று அவ்வழக்குரைஞர்கள் குரல் கொடுத்திருந்தனர். அம்மனுக்கள் அனைத்தும் தீர்விற்காக உச்ச நீதிமன்றத்திடம் மாற்றி அனுப்பி வைக்கப்பட்டது. அப்பொழுது முதற்கண் எழுந்த பிரச்சனை யாதெனில், இவ்வாறு மனுக்களை தாக்கல் செய்ய அவ்வழக்குரைஞர்களுக்கு உரிமை உள்ளதா என்பதுதான். அதாவது மேற்படி பிரச்சனையில் வழக்கு தொடுக்கும் உரிமை வழக்குரைஞர்களுக்கு இருக்கிறதா என்பதை உச்ச நீதிமன்றம் முதலில் தனது ஆய்விற்கு எடுத்துக் கொண்டது. அப்பொழுது நீதித்துறையின் சுதந்திரமான செயல்பாட்டில் வழக்குரைகளுக்கும் அக்கறை உள்ளது. எனவே நீதித்துறையின் சுதந்திரத்தை பாதிக்கும் விஷயம் குறித்து வழக்கு தொடுக்க அவர்களுக்கு உரிமை உள்ளது என்று உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது.

Bandu Mukti Morcha v. Union of India[3] - இவ்வழக்கில்

2. A.I.R. 1982 S.C. 149.
3. A.I.R. 1984 S.C. 802.

கொத்தடிமைகளை விடுவிக்கும் நோக்கம் கொண்டு செயலாற்றும் ஒரு தொண்டு நிறுவனம், ஃபரிதாபாத் மாவட்டத்தில் கொத்தடிமைகள் உள்ளதாகவும், அவர்களை விடுவிக்க நீதிப்பேராணை பிறப்பிக்கக் கோரியும், உச்ச நீதிமன்றத்திற்கு கடிதமொன்றை அனுப்பினர்.

அக்கடிதத்தையே உச்ச நீதிமன்றம் நீதிப்பேராணை மனுவாக பாவித்து, குழு ஒன்றை அமைத்து, அங்கு கொத்தடிமைகள் அவ்வாறு உள்ளனரா என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க உத்திரவிட்டது. 1976 - ஆம் ஆண்டின் கொத்தடிமைகள் முறை (ஒழிப்புச்) சட்டத்தின் வகைமுறைகளை அமல்படுத்த எந்த நடவடிக்கைகளையும் எடுக்காமல் இருந்த அரசாங்கத்தின் செயல்படாத நிலைப்பாட்டை எதிர்த்து வழக்கிட அத்தொண்டு நிறுவனத்திற்கு உரிமை உண்டு என்று உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில் நிலைநிறுத்தியது.

M.C.Metha v. Union of India[4] - இவ்வழக்கைத் தொடுத்த எம்.சி.மேத்தா என்பவர் சமூக உணர்வு மிக்கவர். அவர் தொழிற்சாலை ஒன்றிலிருந்து வாயு கசிந்து மாண்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று பொது நல வழக்கிட்டார். இதை ஏற்று அவர்களுக்கு நஷ்டஈடு வழங்க நீதிமன்றம் உத்திரவிட்டது. இங்கு எம்.சி.மேத்தா-விற்கு அவ்வாயுக் கசிவினால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென்றாலும் கூட, அவருக்கு வழக்கிடும் உரிமை உள்ளது எனும் அடிப்படையில் நீதிமன்றம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வழி வழங்கியது.

M.C.Metha v. Union of India[5] - இது அதே எம்.சி.மேத்தா தொடுத்த மற்றொரு பொது நலன் வழக்காகும். இதில் கங்கை நதியில் தொழிற்சாலை மாசுக்கள் கலப்பதை தடுக்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம் அவ்வாறு மாசு கலப்பதை தடுக்கும்படி கான்பூர் மாநகராட்சிக்கு உத்திரவிட்டது. இங்கும் எம்.சி.மேத்தாவிற்கு வழக்கு தொடுக்கும் உரிமை உள்ளது என்பதை உச்ச நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது.

செயலுறுத்தும் நீதிப்பேராணை கோருவதில் வழக்கு தொடுக்கும் உரிமை (Locus standi in Writ of Mandamus):

(வினா எண். 43-ல் காண்க.)

தகுதிமுறை வினவும் நீதிப்பேராணையில் 'வழக்கு தொடுக்கும் உரிமை' குறித்த கோட்பாடு (The Doctrine of Locus standi in the Writ of Quo-warranto):

(வினா எண். 43-ல் காண்க.)

4. A.I.R. 1987 S.C. 1086.
5. A.I.R. 1988 S.C. 2217.

முடிவுரை:

பாதிக்கப்பட்டவர்தான் வழக்கு தொடுக்க வேண்டும் என்று, 'வழக்கு தொடுக்கும் உரிமை' குறித்த கோட்பாடு வலியுறுத்துகிறது. ஆனால் இது உச்ச நீதிமன்றத்தால் பல்வேறு வழக்குகளில் பொது நலனின் அடிப்படையில் தளர்த்தப்பட்டுள்ளதையும், பாதிக்கப்படாதவர் கூட வழக்கிட்ட நிலைப்பாட்டையும் நாம் மேற்கண்ட வழக்குகளின் மூலம் அறிந்தோம். ஆனால் இதைக் கொண்டு இக்கோட்பாடு முற்றிலும் தளர்த்தப்பட்டு விட்டதாகவோ அல்லது கைவிடப்பட்டுவிட்டதாக நாம் கருதுதல் கூடாது. வழக்கு தொடுக்கும் உரிமை குறித்த விதியை தளர்த்துவதா, வேண்டாமா என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம், நீதிமன்றத்தின் தன்விருப்புரிமை அதிகாரத்திற்குட்பட்டதாக உள்ளது. எனவே இன்றும் கூட நிருவாகத்துறை செயல்பாட்டால் ஒருவரது தனிப்பட்ட உரிமைகள் பாதிக்கப்படின், அவரது உரிமைகளை நீதிப்பேராணைகள் மூலம் வலியுறுத்திச் செயல்படுத்த, அவர்தாம் வழக்கிட வேண்டும். பொது நலன் சார்ந்த உரிமைகள் பாதிக்கப்பட்டால், அங்கு வழக்கு தொடுக்கும் உரிமை குறித்த விதியை நீதிமன்றம் தளர்த்தலாம். ஆனாலும் வழக்கு தொடுக்கும் உரிமை குறித்த கோட்பாட்டில் முன்பிருந்த தீவிரமும், கடுமையும் தற்பொழுது இல்லை என்பதை மறுக்க முடியாது.

12 அரசின் அல்லது அரசாங்கத்தின் பொறுப்பு நிலை [Liability of State (or) Government]

ஒப்பந்தத்தில் அரசின் பொறுப்புநிலை [Contractual Liability of State (or) Government]

49. Write an essay on government contracts. (அரசு ஒப்பந்தங்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.)

(அல்லது)

When government contracts can be enforced? Whether void contracts stand for collateral purpose. (அரசு ஒப்பந்தங்கள் எப்பொழுது செயற்படுத்தப்படும்? இல்லா நிலை ஒப்பந்தத்தால் பக்க விளைவு உண்டா?)

(அல்லது)

Discuss the liablity of State in regard to the contracts signed by its officers. (அரசு சார்பாக அரசு அதிகாரிகள் கையொப்பம் இடும் ஒப்பந்தங்களில் அரசின் பொறுப்பு நிலையினை விவரிக்க.)

(அல்லது)

Contractual liability of the State - Write short notes. (அரசின் ஒப்பந்தத்தைச் சார்ந்த கடப்பாடு - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

வளர்ந்து வரும் இன்றைய மக்கள் நல அரசு தனது கொள்கைகளையும் திட்டங்களையும் நிறைவேற்ற தனியார்களுடன் பலவகையான ஒப்பந்தங்களை மேற்கொள்கின்றது. இம்மாதிரியான தருணங்களில், எவ்வாறு அத்தனியார் அவ்வொப்பந்தங்களிலிருந்து எழும் நலன்களை அடைய உரிமையுடையவரோ அல்லது கடமைகளுக்கு பொறுப்புடையவரோ, அவ்வாறே அந்த அரசும் உரிமையும், பொறுப்பும் உடையதாக ஆக்கப்பட வேண்டியுள்ளது. எனினும் மக்களின் பொதுநலனிற்காக அரசு ஒப்பந்தங்களை மேற்கொள்வதால், அரசுக்கு அந்த ஒப்பந்தங்களிலிருந்து சில பாதுகாப்புரிமைகளை கொடுக்க வேண்டியதும் அவசியமாக உள்ளது. இந்தியாவைப் பொறுத்த வரை, ஒப்பந்தங்களை இந்திய ஒப்பந்த சட்டம் நடைமுறைப்படுத்துகிறது. அந்த வகையில் ஒரு செல்லத்தக்க ஒப்பந்தத்திற்கான அனைத்து கூறுகளையும் இந்திய அரசும்

பின்பற்ற வேண்டும். **எனினும் அதே சமயத்தில் அதற்கும் கூடுதலாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஷரத்து 299 (1)-ன் மூலமாகக் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஒரு அரசு ஒப்பந்தம் செல்லத்தக்க ஒப்பந்தமாகும்.** அவற்றையெல்லாம் சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

வரலாற்றுப் பின்னணி (Historical Backgroumd):

இங்கிலாந்தில் இயற்றாப் பொதுச் சட்டப்படி (Common Law) அரசுக்கு எதிராக ஒப்பந்தங்கள் குறித்த உரிமையியல் வழக்குகளை (Suits in Contracts) நீதிமன்றத்தில் தொடர முடியாது. இந்தச் சிறப்புரிமை **'மன்னர் தவறு செய்யார்'** என்ற கோட்பாட்டினையும், அரசாங்கத்திற்கு எதிராக அதனுடைய நீதிமன்றங்களிலேயே வழக்குத் தொடரக் கூடாது என்ற கோட்பாட்டினையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. காலம் செல்லச் செல்ல, அரசாங்கத்தினால் இந்தச் சிறப்புரிமை விலக்கிக் கொள்ளப்பட்டது. குறிப்பாக இங்கிலாந்தில் 1947-ஆம் ஆண்டில் அரசுரிமை நடவடிக்கைகள் சட்டம் (The Crown Proceedings Act, 1947) இயற்றப்பட்ட பின், ஒப்பந்தங்களுக்கு அரசும் பொறுப்புடையதே எனும் கொள்கை வலுப் பெற்றது. அதாவது இச்சட்டம் அரசாங்கத்தின் மீது சாதாரண நபர் போன்று ஒப்பந்தங்கள் குறித்த வழக்குத் தொடர யாவருக்கும் அனுமதி தந்தது. சுருங்கக் கூறின் ஒப்பந்தங்களிலிருந்து எழும் வழக்குகள் பற்றிய அரசாங்கத்தின் சிறப்புரிமைகள் இந்தச் சட்டம் அமலுக்கு வந்த பின் அடியோடு மறைந்தன என்று கூறலாம்.

இந்தியாவில் 1935-ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கச் சட்டமானது (The Government of India Act, 1935), இந்திய அரசியமைப்புச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பாக இந்தியா மற்றும் மாநில அரசாங்கங்கள் மீது ஒப்பந்தங்களிலிருந்து எழும் உரிமையியல் வழக்குகளைத் தொடர வழி வகை செய்திருந்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு, நாம் மேற்கண்டபடி, அதன் 299(1)-வது ஷரத்தானது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் ஒப்பந்தங்களில் ஈடுபடும் போது பின்பற்ற வேண்டிய நிபந்தனைகளைக் கூறுகின்றது. அதாவது, அரசாங்கத்தின் மீது ஒப்பந்தங்கள் குறித்த வழக்கு தொடர வேண்டுமெனில், ஷரத்து 299(1)-ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 299(1) கூறுவதாவது (Article 299(1) of the Constitution of India) (அல்லது) அரசு ஒப்பந்தங்கள் எப்பொழுது செயற்படுத்தப்படும்? (When Government Contracts can be enforced?):

இந்திய அரசியலமைப்பின் **298-வது ஷரத்தானது,** இந்திய அரசாங்கம் ஒப்பந்தத்தில் ஈடுபட அதற்கு அதிகாரம் அளிக்கிறது. ஆனால் அவ்வொப்பந்தம் ஷரத்து 299(1)-ல் கூறப்பட்டுள்ள நிபந்தனை

களைப் பின்பற்றி அமைய வேண்டும். அப்பொழுதுதான் அவ்வொப் பந்தம் செயற்படுத்தப்படும். அந்நிபந்தனைகள் வருமாறு,-

(1) ஒப்பந்தமானது அந்தந்த நேர்விற்கேற்ப குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரின் பெயரால் (in the name of the President or the Governor of the State) செய்யப்படுகிறது என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும்;

(2) ஒப்பந்தமானது அந்தந்த நேர்விற்கேற்ப குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரின் சார்பாக கையொப்பமிடப்பட்டு முத்திரை வைக்கப்பட்டு எழுதிக் கொடுக்கப்பட (executed) வேண்டும்.

(3) குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் அவ்வொப்பந்தத்தை, யாரால் எவ்விதமாகச் செய்ய வேண்டுமென்று கட்டளையிடுகிறாரோ (direction) அல்லது இசைவு ஆணை (authorise) அளிக்கிறாரோ அவ்வாறே அந்த நபர்களால் அவ்விதமாகக் கையொப்பமிடப்பட்டு முத்திரை வைக்கப்பட்டு முற்றுப் பெற்றிருக்க வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டால், ஒரு ஒப்பந்தத்தில் இந்திய அரசு அல்லது மாநில அரசு அதற்கு பொறுப் புடையதாக ஆகிவிடும். எனவே மேற்படி நிபந்தனைகள் கண்டிப்பாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் (mandatory requirement). மீறினால் அவ்வொப்பந்தம் இல்லாநிலையதாகிவிடும் (void).

மேற்கண்ட நிபந்தனைகளால் ஏற்பட்ட சிக்கல்களும், அவற்றை நீதிமன்றங்கள் அணுகிய விதமும்:

அரசாங்கத்தால் இசைவாணை அளிக்கப்படாத ஒப்பந்தங்களி லிருந்து (un-authorised contracts) எழும் பொறுப்பு நிலையிலிருந்து அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காகத்தான், மேற்கண்ட வகைமுறைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டன. ஆரம்ப கால கட்டங்களில், அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங் களுக்கு மேற்கண்ட மூன்று நிபந்தனைகளும் கண்டிப்பாக பின்பற்றப் பட்டிருக்க வேண்டும் என்று நீதிமன்றங்கள் வழக்குகளின் பொழுது வலியுறுத்தின. இந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுவதில் சிறிய மாறுபாடு இருந்தாலும், அதை நீதிமன்றங்கள் பெரிதாக எடுத்துக் கொண்டு, சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தையே இல்லாநிலையதெனவும், வலியுறுத்திச் செயல்படுத்த முடியாததெனவும் அறிவித்தன.

நீதிமன்றங்களின் இந்தக் கண்டிப்பு, நடைமுறையில் பல சிக்கல் களைத் தோற்றுவித்தன என்று கூறலாம். ஏனெனில், பெருகி வரும் அரசாங்கப் பணிகளுக்கிடையே, ஷரத்து 299(1)-ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றி அரசாங்கத்தால் ஒப்பந்தங்களை மேற் கொள்ள இயலவில்லை. இதனால் அரசாங்கம் தனியார்களுடன் வெறுமனே ஒரு எளிய கடிதத அல்லது தகவல் பரிமாற்றத் தொடர்பின்

(by a simple correspondence) வாயிலாக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டது. எனவே ஷரத்து 299(1)-ல் கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாமல் அரசாங்கம் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களில், அவ்வொப் பந்தத்தில் ஈடுபடும் தனியார் நபர்களின் உரிமைகளையும் நலன்களையும் காக்க வேண்டிய சூழ்நிலை நிலவுவதை இந்திய நீதித்துறை உணர்ந்தது. ஒருபுறம் அரசாங்கம் ஷரத்து 299(1)-ல் கண்டுள்ள நிபந்தனைகளை கண்டிப்பாக பூர்த்தி செய்ய வேண்டும். மற்றொருபுறம், அந்நிபந்தனை களை புறக்கணித்துவிட்டு அரசாங்கம் தனியார்களுடன் எளிய முறையில் ஒப்பந்தம் செய்து கொள்ளுதலும் வேண்டும். இருதலைக் கொள்ளி எறும்பு போன்ற இந்த இரண்டு இக்கட்டான நிலைகளுக்கிடையே ஒரு சமரச நிலையை நீதித்துறை தோற்றுவித்தது. இதனால், ஷரத்து 299(1)-ல் கண்டுள்ள நிபந்தனைகளிலிருந்து அரசாங்கம் சிறிய அளவில் மாறுபட்டு (slight variations) சென்றிருந்தால், அதை நீதிமன்றங்கள் பொருட் படுத்தாமல் அந்த ஒப்பந்தங்களுக்குக் கூட செயலாக்கம் கொடுத்தன. அந்த வகையில் ஷரத்து 299(1) கூறும் நிபந்தனைகளை முக்கிய வழக்கு களுடன் பின்வருமாறு காண்போமா?

அரசு சார்பாக அரசு அதிகாரிகள் கையொப்பம் இடும் ஒப்பந்தங்களில் அரசின் பொறுப்பு நிலை (The Liability of State in Contracts signed by its Officers):

1. குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரின் பெயரால் ஒப்பந்தம் செய்யப்படுகிறது (Contract to be made in the name of the President or the Governor): ஷரத்து 299(1)-ல் காணப்படும் முதல் நிபந்தனை மேற்கண்டவாறு கூறுகிறது. இதை விளக்க பின்வரும் வழக்கொன்றைக் காண்போம்.

Karamshi v. State of Bombay[1] - இவ்வழக்கில் கண்காணிப்பு பொறியாளருக்கும் (Superintendent Engineer), கரும்புத் தோட்டம் வைத்திருக்கும் ஒரு நபருக்குமிடையே, கால்வாய் நீரை, அவருடைய கரும்புத் தோட்டத்திற்கு விடுவதற்கான ஓர் உடன்படிக்கை, கடிதங்கள் மூலமாக ஏற்பட்டது. ஆனால் இதன் பொருட்டு ஆளுநரின் பெயரில் முறையான ஒப்பந்தம் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. சிறிது காலத்திற்கு நீர் அளிக்கப்பட்ட பிறகு, அந்நீர் அளிப்பு நிறுத்தப்பட்டது. உச்ச நீதிமன்றமானது, அரசாங்கத்திற்கும் சம்பந்தப்பட்ட நபருக்குமிடையே ஒப்பந்தம் உண்டானதை ஆவணச் சான்று மூலம் அறிந்து கொண்டது. ஆனால் ஆளுநரின் பெயரில் ஒப்பந்த ஆவணம் ஏதும் எழுதிக் கொடுக் கப்படவில்லை. மேலும், இவ்வொப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள கண்காணிப்பு பொறியாளர், ஒப்பந்தத்தில் ஈடுபட சட்டப்படி இசைவளிக்கப்பட்ட வரா என்பது தெளிவாக இல்லை. ஆகவே இவ்வொப்பந்தத்தை செயற் படுத்த முடியாது என்று உச்ச நீதிமன்றம் விளம்பியது.

1. A.I.R. 1964 S.C. 1714.

2. முறையான ஒப்பந்த ஆவணம் (Formal Document): ஷரத்து 299(1)-ன் இரண்டாவது நிபந்தனையில் காணப்படும் **'எழுதிக் கொடுக்கப் பட்டது' (executed)** எனும் பதம் ஒரு ஒப்பந்தம் அரசாங்கத்தால் முறை யாக இசைவளிக்கப்பட்ட ஒரு அலுவலரால் முறைப்படி கையொப்ப மிடப்பட்டிருக்க வேண்டும் என்பதையோ அல்லது அவ்வொப்பந்தத் தின் மறுதரப்பினரும் அதில் கையொப்பமிட்டிருக்க வேண்டும் என்பதையோ குறிக்கவில்லை. மேலும் ஒரு ஒப்பந்தம் இன்ன வடிவில் தான் அல்லது இன்ன படிவத்தில்தான் இருக்க வேண்டும் என்று ஷரத்து 299(1)-ல் எங்கும் குறிப்பிடப்படவில்லை. எனவே அரசாங்கத்திற்கும், ஒரு தனியாருக்கும் இடையே நடக்கும் ஒரு எளிய கடிதத் தொடர்பு கூட ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கலாம். அவ்வாறு எழும் ஒப்பந்தத்திற்கும் அரசாங்கம் பொறுப்புடையதே. இதைப் பின்வரும் மிக முக்கியமான வழக்கு விளக்குகிறது.

Union of India v. Rallia Ram[2] - இந்த வழக்கில், இந்திய அரசாங் கத்தின் கொள்முதல் துறையின் தலைமை இயக்குநர் (Chief Director of Purchases) சில சிகரெட்டுகளை வாங்குவதற்காக, ஒப்பந்தப் புள்ளிகளை (Tender) வரவேற்றார். எதிர்மனுதாரரின் ஒப்பந்தப் புள்ளி ஏற்கப்பட்டு, அந்த ஏற்புக் கடிதம் இயக்குநரால் கையொப்பமிடப்பட்டது. (இங்கு முறையான ஒப்பந்த ஆவணம் எதுவும் எழுதிக் கொள்ளப்படவில்லை) முறையான ஒப்பந்த ஆவணம் மூலமாகத்தான், ஒப்பந்தம் ஏற்பட வேண்டும் என்று ஷரத்து 299(1) வலியுறுத்தவில்லை. மேலும் ஒரு ஒப்பந்தம் எங்ஙனம் எழுதிக் கொடுக்கப்பட வேண்டும் என்ற முறையை குடியரசுத் தலைவர் அறிவிக்காமல் இருக்கும்பட்சத்தில், தரப்பினர்களுக் கிடையே நடைபெறும் கடிதப் போக்குவரத்தே ஒப்பந்தம் ஏற்படுவதற்கு போதுமானது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேற்படி வழக்கில் தரப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட கடிதத் தொடர்பே ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கியது.

3. குடியரசுத் தலைவரால் அல்லது ஆளுநரால் முறைப்படி இசைவாணை அளிக்கப்பட்ட ஒரு நபரால் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் (Contract must be executed by a person duly authorised by the President or the Governor): ஷரத்து 299(1)-ன் மூன்றாவது நிபந்தனை மேற்கண்டவாறு கூறுகிறது. இவ்வாறு இசைவு ஆணை அளிக்கப்படாத நபரால் எழுதிக் கொடுக்கப்படும் ஒப்பந்தம், செல்லாததாகும்.

Bhikraj Jaipuria v. Union of India[3] - இவ்வழக்கில் இரயில்வே நிருவாகத்தின் கோட்டக் கண்காணிப்பாளருக் கும் (Divisional Superintendent), ஒரு தனிநபருக்கும் இடையே உணவுத் தானியங்களை

2. A.I.R. 1963 S.C. 1685.
3. A.I.R. 1962 S.C. 113.

இரயில்வேக்கு வழங்குதல் பற்றி ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் அவ்வாறு ஒப்பந்தத்தில் ஈடுபட அவருக்கு (கோட்டக் கண்காணிப் பாளர்) வெளிப்படையாக எந்த அதிகாரமும் (express authority) அளிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் வழக்கின் சூழ்நிலைகளிலிருந்து அவர் ஒப்பந்தத்தில் ஈடுபட அவருக்கு உட்கிடையான அதிகாரம் (implied authority) அளிக்கப்பட்டிருந்தது என்பதை உச்ச நீதிமன்றம் ஊகித்தறிந்தது. ஏனெனில், ஒப்பந்தத்தில் ஈடுபட்ட அத்தனிநபர் அளித்த உணவு தானியங்களை, இரயில்வே நிருவாகம் ஏற்றுக் கொண்டுள்ளது; மேலும் அந்த தானியங்கள் அதன் அலுவலர்களுக்கு பகிர்ந்து அளிக்கப் பட்டுள்ளது. அதற்கான விலையில் ஒரு பகுதி அத்தனிநபருக்கு அளிக்கப் பட்டுள்ளது. இவற்றைக் கொண்டு ஒப்பந்தத்தில் ஈடுபட அக்கோட்டக் கண்காணிப்பாளருக்கு அரசாங்கம் உட்கிடையாக அதிகாரம் (இசைவாணை) அளித்துள்ளது என்பதை உச்ச நீதிமன்றம் ஊகிந்தறிந்து, அவ்வொப்பந்தத்தில் ஈடுபட மேற்படி கோட்டக் கண்காணிப்பாளருக்கு அரசால் வெளிப்படையாக எந்த அதிகாரமும் அளிக்கப்படவில்லை, எனவே அவ்வொப்பந்தம் செல்லாது என்று அரசாங்கம் கூறிய வாதத்தை நிராகரித்தது. இந்த வகையில் அவ்வொப்பந்தம் செல்லத்தக்கதே என்று உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது. [ஆனால், அவ்வொப்பந்தம் (அப்பொழுதைய) இந்திய தலைமை ஆளுநரின் (Governor-General) பெயரால் எழுதிக் கொடுக்கப்படுகிறது என்பதை வெளிப்படுத்தாத காரணத்தால், செல்லாதது என்று தீர்ப்புரைத்தது.]

Union of India v. N.K.Ltd.[4] - இவ்வழக்கில் குடியரசுத் தலைவரின் சார்பாக ஒரு இயக்குநர் ஒப்பந்தத்தை எழுதிக் கொடுக்க இசைவாணை அளிக்கப்பட்டிருந்தார். ஆனால் அவ்வொப்பந்தம் செயலாளரால் செய்யப் பட்டது. இங்கு ஒப்பந்தத்தில் ஈடுபட இசைவாணை அளிக்கப்படாத ஒரு நிருவாகத்துறை அலுவலர் (செயலாளர்), அவ்வொப்பந்தத்தை எழுதிக் கொடுத்ததால், அது செல்லாது என்று உச்ச நீதிமன்றம் விளம்பியது.

அரசாங்கத்துடன் செய்து கொண்ட செல்லத்தக்க ஒப்பந்தத்தால் ஏற்படும் விளைவு (Effect of a valid contract with Government):

ஷரத்து 299(1)-ல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றி அரசாங்கத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டால், அது ஒரு செல்லத்தக்க ஒப்பந்தமாகும். எனவே அந்த ஒப்பந்தத்தில் ஈடுபட்ட அரசாங்கமும், அவ்வொப்பந்தத்தின் மறு தரப்பினரும் அவ்வொப்பந்தத் திற்கு கட்டுப்பட்டராவர். எனவே அவ்வொப்பந்தத்தை அரசாங்கம் வலியுறுத்திச் செயல்படுத்தலாம். அதே போல அரசாங்கத்திற்கு எதிராகவும் வலியுறுத்திச் செயல்படுத்தலாம் (can be enforced by or against the Government).

4. A.I.R. 1972 S.C. 915.

இல்லாநிலை ஒப்பந்தத்தால் ஏற்படும் பக்கவிளைவு (அல்லது) ஒப்பந்தத்தின் ஏற்புறுதி (Ratification of Contract):

ஒரு ஒப்பந்தத்தில் அரசாங்கம் ஈடுபடும் பொழுது ஷரத்து 299(1)-ல் கூறப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் அரசாங்கம் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். அவற்றை கடைப்பிடிக்காத பொழுது அந்த ஒப்பந்தம் இல்லாநிலையதாகிறது (void contract). எனவே செல்லாத கிறது. இவ்வாறு இல்லாநிலையதான ஒப்பந்தத்தை பின்னாளில், அரசாங்கம் ஏற்புறுதி செய்து அதை ஒரு செல்லும் ஒப்பந்தமாக்க முடியாது. மேலும் இல்லாநிலையதான ஒப்பந்தத்தை அரசாங்கத்திற்கு எதிராக வலியுறுத்தி செயல்படுத்த முடியாது (unenforceable).

தனிப்பட்ட பொறுப்பு இல்லை (No Personal Liability):

அரசாங்க ஒப்பந்தம் குடியரசுத் தலைவர் அல்லது மாநில ஆளுநரின் பெயரால் எழுதிக் கொடுக்கப்பட்டாலும், அவ்வொப்பந்த மீறுகைக்காக குடியரசுத் தலைவரோ அல்லது மாநில ஆளுநரோ அல்லது அவர்கள் சார்பில் ஒப்பந்தத்தை எழுதிக் கொடுக்கும் நிருவாகத்துறை அலுவலர் களோ தனிப்பட்ட விதத்தில் பொறுப்புடையவர்கள் அல்லர், என **ஷரத்து 299(2)** கூறுகிறது. அரசாங்கமே பொறுப்புடையதாகும்.

அரசின் தீங்குப் பொறுப்பு நிலை
[Tortious Liability of State (or) Government]

50. Examine the scope of the liability of the State for the torts committed by its servants. (அரசாங்க அலுவலர்களின் தீங்கு செய்கைகளுக்கு அரசாங்கத்தின் பொறுப்பு நிலையைப் பரிசீலனை செய்க.)

(அல்லது)

Examine the liability of the administration for tortious act committed by its servants. (நிருவாக ஊழியர்களால் செய்யப்படும் தீங்குகளுக்கு நிருவாகத்தின் பொறுப்பு நிலையைக் குறித்து ஆய்க.)

(அல்லது)

Tortious liability of the Government - Write short notes. (அலுவலர்களின் தீங்கிற்கு அரசின் கட்டுப்பாடு - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Bring out the distincion between sovereign and non-sovereign functions for determining the liability of the State in tort. Refer leading cases. (அரசாங்கத்தின் தீங்குப் பொறுப்பு நிலையை

தீர்மானிப்பதற்காக, தனிப் பேராட்சிச் செயல்களுக்கும் மற்றைய செயல்களுக்கும் உள்ள வேறுபாட்டை தெளிவுபடுத்துக. முக்கிய வழக்குகளை குறிப்பிடுக.)

(அல்லது)

Sovereign functions - Write short notes. (இறைமைச் செயல்கள் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

'King can do little wrongs'. To what extent this is applicable in India. ('சிறு தீங்குகளையே அரசு இழைக்கிறது" என்பது எவ் வகையில் இந்தியாவிற்குப் பொருந்தும்?)

முன்னுரை:

இந்தியாவில் அரசாங்க அலுவலர்கள் செய்யும் தீங்குகளுக்கு அரசாங்கத்தின் பொறுப்பு நிலை என்ன என்பதை, நாம் இங்கிலாந்து நிலையுடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டியுள்ளது.

இங்கிலாந்து நிலை:

இங்கிலாந்து நாட்டில் **"மன்னர் தவறு செய்யார்" (King can do no wrong)** எனும் இயற்றாப் பொதுச் சட்டக் கோட்பாடு அப்பொழுது அமலில் இருந்தது. அதாவது, அக்கோட்பாட்டின்படி, அரசு அலுவலர்கள் செய்த தீங்கிற்கு, இங்கிலாந்து மன்னரைப் பொறுப்பாக்க முடியாது. ஆனால் இங்கிலாந்தில் 1947-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட அரசுரிமை நடவடிக்கைகள் சட்டமானது (The Crown Proceedings Act, 1947) மேற்கண்ட நிலையை நீக்கியது. எனவே, இங்கிலாந்தில் இன்று சட்டத் தகுதி (Legal Capacity) வாய்ந்த வயது வந்த ஒரு நபரைப் போன்றே அரசாங்க அலுவலர்களின் தீங்குச் செயல்களுக்காக அரசாங் கத்திற்கு எதிராக, உரிமையியல் வழக்குகளைத் தொடர முடியும்.

இந்திய நிலை:

நம் இந்தியா நாட்டை இங்கிலாந்து அரசு ஆட்சி புரிந்த வரலாற்றை நாமனைவரும் அறிவோம். அப்பொழுது இந்திய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்படவில்லை. எனவே அச்சமயத்தில் ஏதேனும் சட்டப் பிரச்சனை எழுந்தால், அது இங்கிலாந்து நாட்டின் சட்டங்களை பின்பற்றி தீர்க்கப்பட வேண்டிய நிலை இருந்தது.

இந்நிலையில் இந்தியா நாடு சுதந்திரம் பெற்று, தனக்கென ஒரு அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றிக் கொண்டது. அதன் **ஷரத்து 300(1)**-ஆனது, அரசாங்க அலுவலர்களின் தீங்குச் செய்கைகளுக்காக அரசாங்கத் தின் மீது பகரப் பொறுப்பில் (vicarious liability) உரிமையியல் வழக்கு தொடர்வது பற்றிக் கூறுகின்றது. ஆனால் அது

நேரடியாக எதையும் கூறாமல் சுற்றி வளைத்து விளக்கம் கூறுகிறது. அது இன்றைய இந்திய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கம் மீது தீங்குச் செய்கைகளுக்காக, அதற்குப் பதிலாக அப்பொழுதிருந்த (இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு) இந்திய ஆட்சியுரிமை அரசாங்கம் அல்லது அதன் கீழிருந்த மாகாணங்கள் அல்லது இந்திய மாநில அரசாங்கங்கள் மீது இந்திய அரசியலமைப்பு அமலுக்கு வருவதற்கு முன்பாக எவ்வாறு தீங்குச் செய்கைகளுக்காக உரிமை வழக்குகள் தொடரப்பட்டிருக்குமோ, அவ்வாறே தீங்குரிமை வழக்குகள் தொடரப்பட வேண்டுமென்று கூறுகிறது. இது நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்டமன்றம் இயற்றும் சட்டங்களுக்கு உட்பட்டதெனவும் கூறுகிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் வருவதற்கு முன், அரசு அலுவலர்களின் தீங்குச் செய்கைகளுக்கு இங்கிலாந்தின் கிழக்கிந்தியக் கம்பெனியும், 1858-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் (The Government of India Act, 1858) அமலுக்கு வந்தவுடன், இந்திய அரசின் செயலாளரும் (Secretary of State in Council) பகரப் பொறுப்பு வகித்தனர்.

ஆக, ஷரத்து 300 உட்கிடையாக உணர்த்துவது என்னவென்றால், இங்கிலாந்தின் கிழக்கிந்தியக் கம்பெனி மீது எவ்வாறு தீங்குச் செய்கைகளுக்காக உரிமையியல் வழக்குகள் தொடரப்பட்டிருக்குமோ, அவ்வாறே இன்றைய இந்திய அரசாங்கம் மற்றும் மாநில அரசாங்கங்கள் மீதும் தீங்குச் செய்கைகளுக்காக உரிமையியல் வழக்குகள் தொடர முடியும் என்பதுதான்.

அந்த வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பும், பின்பும் எழுந்த முக்கியமான வழக்குகளைப் பின்வருமாறு காண்போமா?

முக்கிய வழக்குகள்:

Peninsular and Oriental Steam Navigation Co. v. Secretary of State of India[5] - இவ்வழக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பு எழுந்ததாகும். மேலும் இவ்வழக்கில்தான் அரசாங்கத்தின் இறைமைச் செயல்கள் (Sovereign functions of the State) மற்றும் இறைமையல்லாத செயல்கள் (Non-Sovereign functions of the State) குறித்தும் விவாதிக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது.

இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, கிடர்பூர் அரசாங்க கப்பல் துறைமுக தொழிலாளர்கள் அருகில் உள்ள பொதுச் சாலை வழியாக கப்பல் துறைமுகத்திற்கு (Dockyard), இரும்பு எஃகுத் துண்டுகளை எடுத்துச் செல்லுகையில், வாதியின் குதிரைகள் மீது கவனக்குறைவு (negligence) காரணமாக மோதிவிட்டார்கள். அதனால் வாதியின் குதிரைகளுக்கு காயம் ஏற்பட்டது. வாதி, இந்திய அரசு செயலாளருக்கு (Secre-

5. (184) 5 Bom. H.C.R. App. 1 Supreme Court of Calcutta.

tary of State) எதிராக, அரசுத் தொழிலாளர்களின் கவனக்குறைவினால் ஏற்பட்ட காயத்திற்காக தீங்கீடு (damages) கோரி வழக்கு தொடுத்தார். அரசு ஊழியர்களின் கவனக்குறைவிற்கு, வாதிக்கு இந்திய அரசு செயலாளர், தீங்கீடு கொடுக்க பொறுப்புடையவர் ஆவார், என்று அப்பொழுதைய கல்கத்தா உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் இறைமைச் செயல் (Sovereign function) மற்றும் இறைமையல்லாத செயல் (Non-Sovereign function) எனும் கொள்கையையும் நீதிமன்றம் பின்வருமாறு வகுத்தது.

ஒரு செயலானது இறைமைத் தன்மையில் செய்யப்பட்டால், அதாவது அச்செயல் தனியார் முகமைகளால் செய்ய இயலாத மற்றும் அரசு மட்டுமே செய்யக் கூடியதாக உள்ள பொழுது, ஒரு அரசு அலுவலர் அல்லது ஊழியர் தனது பணிக்காலத்தில் புரியும் தீங்குச் செயல்களுக்கு அரசு பொறுப்பேற்காது. ஆனால், ஒரு செயலானது இறையல்லாத தன்மையில் செய்யப்படும் பொழுது, அதாவது அச்செயலானது அரசாங்கம் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின் (Delegation of Powers) வாயிலாக ஒரு தனி நபர் போன்றோ அல்லது தனியார் முகமை போன்றே இருந்து செய்யப்படுகையில் எழும் பொறுப்புகளுக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும்.

மேற்படி வழக்கில் கப்பல் துறைமுக பராமரிப்பானது, ஒரு இறைமையல்லாத செயலாகக் கருதப்பட்டது. அதனை அரசு அதிகாரம் பெற்ற எந்த ஒரு தனிநபரும் மேற்கொள்ளலாம்.

ஆனால், செயல்களை, இறைமைச் செயல் என்றும், இறைமை யல்லாத செயல் என்றும் பிரித்துணர்தல் கடினமாகும். எனவே, அரசின் செயல் (Act of State) தவிர, அனைத்து நேர்வுகளிலும் அரசாங்க அலுவலர்களின் தீங்குச் செயல்களுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்ற கருத்து மலர்ந்தது. இதில் முதற்கட்டமாக அரசு அலுவலர்களின் தீங்குச் செயல்களுக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்ற கருத்தை பின்வரும் வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது.

State of Rajasthan v. Vidyawathi[6] - இவ்வழக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த பின்பு எழுந்ததாகும்.

இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, மாவட்ட ஆட்சியருடைய அரசாங்க ஜீப் ஓட்டுநர், பட்டறையிலிருந்து ஜீப்பினை மாவட்ட ஆட்சியருடைய இல்லத்திற்கு ஓட்டிச் செல்லுகையில், பாதசாரி ஒருவர் மீது கவனக்குறைவாக மோதி அவரைக் கொன்று விடுகிறார். உச்ச நீதி மன்றம், ஜீப் ஓட்டுநரின் கவனக்குறைவான தீங்குச் செயலுக்கு அரசாங்கமே பகரப் பொறுப்புடையதாகும் என்றும், தீங்கீடு வழங்க கடமைப்பட்ட தாகும் என்றும் தீர்ப்பளித்தது. இவ்வழக்கில் ஜீப் ஓட்டுநரின் செயல் இறைமைத் தன்மையில் செய்யப்பட்டதா (அதாவது அரசாங்க

6. A.I.R. 1962 S.C. 933.

செயல்களைச் செய்யும் பொழுதா) அல்லது இறைமையல்லாத் தன்மையில் செய்யப்பட்டதா என்றெல்லாம் உச்ச நீதிமன்றம் எடை போடவில்லை. மாறாக அரசாங்க அலுவர்களின் தீங்குச் செயல்களுக்கு அரசாங்கமே பகரப் பொறுப்புடையதாகும் என்று மட்டுமே கூறியது. இது ஒரு வரவேற்கத்தக்க தீர்ப்பாக அப்பொழுது அமைந்தது. இத்தீர்ப்பு பின்னிட்டு எழுந்த பல வழக்குகளிலும் பின்பற்றப்பட்டது. எனினும், பின்வரும் வழக்கில் இறைமைச் செயல் குறித்த வினா மீண்டும் எழுந்தது. அதற்கு உச்ச நீதிமன்றம் தக்க பொருள் விளக்கத்தை அளித்தது.

Kasthuri Lal Ralia Ram Jain v. State of U.P.[7] - இவ்வழக்கில் வியாபாரி ஒருவரை சந்தேகப்பட்டு, அவரிடமிருந்த அணிகலன்களை (தங்கம், வெள்ளி பொருட்கள்) கைப்பற்றிய தலைமைக் காவலர், அவற்றைக் கையாடல் (Misappropriation) செய்து பாகிஸ்தானுக்கு ஓடி விட்டார். அப்பொருட்கள் காவல் நிலையத்தின் பாதுகாப்பில் இல்லை. அவ்வியாபாரி குற்றமற்றவரென விடுவிக்கப்பட்ட பிறகு தன்னுடைய பொருட்களை திரும்பக் கொடுக்கும்படியோ அல்லது அதற்கு பணத்தை யாவது இழப்பீடாக கொடுக்கும்படியோ அவர் நீதிமன்றத்தில் அரசாங் கத்திற்கெதிராக வழக்குத் தொடர்ந்தார். ஆனால் தலைமைக் காவலர் இறைமைத் தன்மையில் செயற்பட்டு (அரசாங்கக் கடமையற்றும் பொழுது), அப்பொருட்களைக் கைப்பற்றியதாகவும், எனவே உரிமையியல் வழக்கு அரசாங்கத்தின் இறைமைச் செயலுக்கு எதிராக எழாதென்றும் அரசாங்கம் வாதிட்டது. அரசாங்கத்தின் இந்த வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு, அரசாங்கம் இழப்பீடு கொடுக்க பொறுப் புடையதல்ல என்று தீர்ப்புரைத்தது.

இந்த வழக்கில் நாம் முன் கண்ட **Peninsular and Oriental Steam Navigation Co. v. Secretary of State of India**[8] வழக்கில் அச்சமயத்தில் இருந்த கல்கத்தா உச்ச நீதிமன்றம் கூறிய தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டுள்ளது. **State of Rajasthan v. Vidyawathi**[9] - வழக்கின் பொருண்மைகளிலிருந்து மேற்படி **Kasthuri Lal Ralia Ram Jain v. State of U.P.**[10] வழக்கின் பொருண்மைகள் மாறுபட்டு இருந்ததை உச்ச நீதிமன்றம் சுட்டிக் காட்டியது. அதன்படி கஸ்தூரி லால் ரலியா ராம் ஜெயின் வழக்கில், ஜீப் ஓட்டுநர் ஒரு அரசு ஊழியர்தான். ஆனால் அவர் அரசுக்கு சொந்தமான ஜீப்பை பட்டறையிலிருந்து மாவட்ட ஆட்சியரின் இல்லத்திற்குத்தான் ஓட்டிச் சென்றுள்ளாரே தவிர, அரசாங்க காரியத்திற் காக ஓட்டிச் செல்லவில்லை. எனவே அது இறைமையல்லாத செயல். அப்பொழுது நேர்ந்த விபத்திற்கு அரசாங்கமே பொறுப்புடையதாகும். இதிலிருந்து அரசாங்கம் விலக்குரிமை கோர முடியாது. ஆனால்,

7. A.I.R. 1965 S.C. 1039.
8. Ibid foot note 5.
9. Ibid foot note 6.
10. Ibid foot note 7.

வித்யாவதி வழக்கில் சந்தேகப்படும்படியான ஒரு நபரிடமிருந்து காவல் துறை அலுவலர் ஒருவர் பொருட்களைக் கைப்பற்றிய செயல், இறைமைச் செயலாகும். ஏனெனில், அவர் அரசின் சட்டம் வழங்கிய அதிகாரத்தின் படி செயல்பட்டுள்ளார். எனவே இதில் ஏற்பட்ட தீங்குச் செய்கைக்காக அரசாங்கத்தைப் பொறுப்பாக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் விளக்கமளித்தது.

Sathyawati v. Union of India[11] - இவ்வழக்கில் விமானப் படையைச் சேர்ந்த வாகனம் ஒன்று கூடைப்பந்து மற்றும் ஹாக்கி விளையாட்டு வீரர்களை இந்திய விமானப் படைத் தளத்திலிருந்து ஆடுகளத்திற்கு அழைத்துச் சென்றது. ஆட்டம் முடிந்த பிறகு, அந்த வாகனத்தை ஓரிடத்தில் நிறுத்துவதற்காக அதன் ஓட்டுநர் ஓட்டிச் சென்றார். அப்பொழுது கவனக்குறைவாக விபத்தொன்றை ஏற்படுத்திவிட்டார். பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீடு கோரி தொடுத்த வழக்கில், இந்திய அரசு இழப்பீடு கொடுக்க பொறுப்புடையது என்று டெல்லி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இங்கு விளையாட்டு வீரர்களை, வாகனத்தில் அழைத்துச் சென்றதும், திரும்ப வந்ததும் இறைமைப் பணியை ஆற்றும் பொழுது செய்யப்பட்ட (அரசுச்) செயலாகாது என்று விளக்கமளிக்கப்பட்டது.

சட்ட ஆணையத்தின் பரிந்துரைகள் (Recommendations of the Law Commission):

நாம் ஏற்கனவே கண்டவாறு, இங்கிலாந்தில் ஆரம்பத்தில் அரசாங்க அலுவலர்களின் தீங்குச் செய்கைகளுக்காக அரசாங்கத்திற்கு எதிராக உரிமையியல் வழக்கு தொடரமுடியாது என்ற நிலை இருந்தது. ஆனால் 1947-ஆம் ஆண்டில் அரசுரிமை நடவடிக்கைகள் சட்டம் இயற்றப்பட்ட பின் இந்நிலை நீங்கியது. இச்சட்டத்தின்படி சில விதிவிலக்குகளுக்கு உட்பட்டு, அரசாங்க அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தீங்குச் செயல்களுக்கு அரசாங்கமே பொறுப்புடையதாகும். இதனால் ஒரு செயல் இறைமைச் செயலா அல்லது இறைமையல்லாத செயலா என்று பகுத்தறிய வேண்டிய நிலை அங்கு இல்லாமல் போனது. எனவே அரசாங்க அலுவலர்களின் தீங்குச் செயல்களால் பாதிக்கப்பட்டவர் தக்க தீர்வழி பெற்றனர். ஆனால் இம்மாதிரியான சட்டங்கள் ஏதும் இந்திய நாட்டில் இயற்றப்படவில்லை. எனினும் இது குறித்து தக்க சட்டங்களை இயற்ற இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 300-வது ஷரத்தானது மத்திய பாராளுமன்றத்திற்கும் மாநில சட்டமன்றத்திற்கும் அதிகாரமளித்துள்ளது. எனவே இதற்கான பரிந்துரைகளை செய்யும்படி இந்திய சட்ட ஆணையம் பணிக்கப்பட்டது.

அந்தப் பணியை ஏற்று இந்திய சட்ட ஆணையமானது, அரசாங்க அலுவலர்களின் தீங்குச் செய்கைகள் பற்றியும், அவைகளுக்கு அளிக்கப் பட்டுள்ள விதிவிலக்குகள் பற்றியும் ஆராய்ந்து, தன்னுடைய அறிக்கையை

11. A.I.R. 1967 Delhi 98.

1956-ஆம் ஆண்டு அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில் இந்திய சட்ட ஆணையமானது, தீங்கீடு கோரும் உரிமையியல் வழக்குகளில் அரசாங்கத்திற்கு இப்பொழுது உள்ள சட்ட விதிவிலக்குகளைக் குறைத்திட வேண்டும் என்றும், இறைமைச் செயல்களுக்கும், மற்றைய இறைமையல்லாத செயல்களுக்கும் காட்டப்படும் வேறுபாடு நீக்கப்பட வேண்டும் என்றும், தனி நபர் போன்றே அரசாங்கமும், அரசாங்க அலுவலர்களின் தீங்குச் செயல்களுக்காகப் பகரப் பொறுப்பு நிலையில் வைக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. மேலும் அரசாங்கத்தின் தீங்குப் பொறுப்பு நிலை (Tortious Liability) பற்றிய சட்டம் முழுவதையும் முறையாக வரையறை செய்து தொகுக்க வேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்தது. இந்தப் பரிந்துரைகளின் காரணமாக, 1965-ஆம் ஆண்டில் அரசாங்க (தீங்குப் பொறுப்பு நிலை) மசோதா (The Governmental Liability in Tort Bill) ஒன்று தயாரிக்கப்பட்டு, பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டது. ஆனால் என்ன காரணம் பற்றியோ அம்மசோதா நிறைவேற்றப்படவில்லை. பின்னர் அம்மசோதா 1967-ஆம் ஆண்டில் மீண்டும் பாராளுமன்றத்தின் முன் விவாதத்திற்காக வைக்கப்பட்டது. 1969-ஆம் ஆண்டின் பாராளுமன்றக் கூட்டுக் குழு (Joint Committee) அந்த மசோதாவில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமெனக் கருத்துத் தெரிவித்தது. ஆனால் அந்த மசோதா இன்று வரை நிறைவேற்றப்படவில்லை. அதற்குண்டான உறுதியான காரணங்களும் தெரியவில்லை. எனினும் உயர் மற்றும் உச்ச நீதிமன்றம் வழக்குகளில் வகுத்துக் கொடுத்த தீர்ப்பு வழிச் சட்டங்களின்படி தீங்குரிமை வழக்குகளில் அரசாங்கத்தின் பொறுப்பு நிலை தீர்மானிக்கப்பட்டு வருகிறது.

முடிவுரை:

தீங்கீடு கோரும் உரிமையியல் வழக்குகளைப் பொருத்தவரை, இந்தியாவில் இன்று நிலவி வரும் சட்டம் வளர்ச்சியின்றியும், தெளிவில்லாமலும் உள்ளது. ஒருபுறம் மக்கள் தங்களுடைய உரிமைகளுக்கு அரசாங்க அலுவலர்களால் தீங்கு நேரிட்ட பொழுது, தீங்கீடு கோரி அரசாங்கத்திற்கு எதிராக உரிமையியல் வழக்குகளைக் கொணர முடியாமல் தவிக்கின்றனர். தீர்வழி காணாது அல்லலுறுகின்றனர். மற்றொருபுறம் சட்டத்தின் தெளிவின்மையையும், அறுதி செய்யப்படாமையையும், தொகுக்கப்படாமையையும் பயன்படுத்திக் கொண்டு, இறைமைச் செயல் என்று வேறுபடுத்தி தீங்கீடு கோரும் வழக்குகளிலிருந்து அரசாங்கம் தப்பிவிடுகின்றது. இந்த நிலை அகற்றப்பட வேண்டும். இதற்கு அரசாங்கத்தின் தீங்குப் பொறுப்பு நிலை குறித்து பாராளுமன்றத்தால் ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும். இதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்?!

51. Act of State - Write short notes. (இறைமை நிலைச் செயல் - சிறு குறிப்பு வரைக.)

'Act of State' என்பதை தமிழில் **'இறைமை நிலைச் செயல்'** என்றும், **'அரசின் செயல்'** என்றும் குறிப்பிடுவர். இப்பதத்திற்கு பல

பொருள்கள் உண்டு. இதன் பொதுவான பொருளின்படி, அரசு என்பது சட்டத்தின் பிறப்பிடம் ஆகும். எனவே சட்டத்தை பெற்றெடுத்த அரசே, அதற்கு கீழ்ப்படையான நிலையில் வைக்கப்படக் கூடாது என்பதாகும். இந்திய சட்டமுறையின்படி, மேற்படி பதமானது, அரசால் துய்க்கப்படும் பேருரிமை வாய்ந்த மற்றும் சிறப்பான பாதுகாப்புரிமைகளை எதிர்த்து நீதிமன்றத்தில் வினா எழுப்பக் கூடாது என்பதைக் குறிக்கிறது. **எடுத்துக் காட்டாக** வெளிநாட்டு மற்றும் அண்டை நாட்டு விவகாரங்களில் அரசாங்கம் ஆற்றும் செயல்கள், இறைமைச் செயல்கள் அல்லது அரசுச் செயல்கள் எனப்படுகின்றன. இச்செயல்களை ஆற்றுவதற்குண்டான அதிகாரத்தை அரசாங்கம் சாதாரண உள்நாட்டுச் சட்டங்களின் வாயிலாகப் பெறுவதில்லை. எனவே அச்செயல்கள் சரியானதா அல்லது முறையானதா என்று ஆராய சாதாரண நீதிமன்றங்களுக்கு அதிகார வரம்பு கிடையாது. எனவே அரசாங்கத்தின் அரசுச் செயலால் ஒருவருக்கு தீங்கு நேரிடுமானால், அதற்கு அரசாங்கத்திடமிருந்து தீங்கீடு கோரிப் பெற முடியாது. ஆனால், தனது குடிமக்களுக்கு எதிராகவே அரசின் செயல்கள் எனும் அடிப்படையில் வாதம் செய்து அரசாங்கம் பாதுகாப்புரிமை தேட முடியாது. இது குறித்த முக்கிய வழக்குகள் வருமாறு.

Secretary of State v. Kamakshi Bai[12] - இவ்வழக்கில் தஞ்சாவூர் அரசர், வாரிசுகள் எவரும் இல்லாமல் இறந்து போனதால், அவருடைய சில சொத்துக்களை அப்பொழுதைய இங்கிலாந்து கிழக்கிந்தியக் கம்பெனி கையகப்படுத்திக் கொண்டது. இதை எதிர்த்து அரசரின் விதவை சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அவ்வுயர் நீதிமன்றமும், அரசரின் சொத்துக்களை திரும்ப அவ்விதவையிடம் ஒப்படைக்க உத்திரவிட்டது. ஆனால் இதை எதிர்த்து கிழக்கிந்தியக் கம்பெனி, பிரிவி கவுன்சில் நீதிமன்றத்திடம் மேல்முறையீடு செய்தது. அப்பொழுது, வெளிநாட்டைச் சார்ந்த குடிமக்களின் சொத்துக்களை கிழக்கிந்தியக் கம்பெனி கையகப் படுத்தியது 'அரசின் செயலாகும்' என்றும், எனவே இதில் உள்நாட்டு நீதிமன்றங்கள் எந்த தீர்ப்பையும் வழங்க முடியாது என்றும் கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சார்பாக தீர்ப்பளித்தது.

State of Gujarat v. Vora Fiddali[13] - இவ்வழக்கிலும் இந்திய உச்ச நீதிமன்றம், இறைமை நிலைச் செயல் எனப்படும் அரசுச் செயல்கள் உள்நாட்டுச் சட்டத்திற்கு கட்டுப்பட்டதல்ல என்றும், நீதிமன்றம் அச்செயலை நீதிமுறை மறுஆய்வு செய்ய அதிகாரம் பெற்றதல்ல என்றும் கூறியது.

51(a). State liability - Write short notes (அரசுப் பொறுப்பு - சிறு குறிப்பு வரைக.)

(இவ்வினாவிற்கு விடையாக முன்சென்ற வினா எண்கள். 49 மற்றும் 50-ன் விடைகளை சுருக்கமாகச் சுட்டிக்காட்டவும்.)

12. 7 MIA 476, 1859.
13. A.I.R. 1964 S.C. 1043.

13 அரசாங்க சிறப்புரிமைகள் [Privileges of Government]

சட்ட நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் சிறப்புரிமைகள் [Privileges of Government in Legal Proceedings]

52. What are the privilegs of government in legal proceedings? (சட்ட நடவடிக்கைகளில் அரசாங்க சிறப்புரிமைகள் யாவை?)

(அல்லது)

Discuss the extent of the privileges enjoyed by the Government in legal proceedings. (சட்ட நடவடிக்கைகளில் அரசு எந்த அளவிற்கு சிறப்புரிமைகளை அனுபவிக்கிறது என்பதை விவாதிக்க.)

(அல்லது)

Government Privileges in a litigation - Write short notes. (வழக்கில் அரசின் சிறப்புரிமைகள் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Whether the State is bound by a statute? What is its position about documents and notice? (அரசு இயற்றப்பட்ட சட்டத்திற்கு கட்டுப்பட்டதா? ஆவணங்கள் மற்றும் அறிவிப்பில் அரசின் நிலை என்ன?)

(அல்லது)

Superintendent and Rememberancer of Legal Affairs, West Bengal v. Corporation of Calcutta (AIR 1967 SC 997) - Write short notes. (கண்காணிப்பாளர் மற்றும் சட்ட விவகார அலுவலர், மேற்கு வங்காளம் எ. கல்கத்தா மாநகராட்சி (ஏ.ஐ.ஆர் 1967 எஸ்.சி. 997) - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

இன்று அரசாங்கம் பல நடவடிக்கைகளையும் தனியாருக்கு போட்டியாக அல்லது தனியாரை விலக்கி மேற்கொண்டு வருகிறது. தனியார் நடவடிக்கைகள் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டும்; பொறுப்புகளை ஏற்க வேண்டும்; சட்டத்திற்கு கட்டுப்பட்டு இயங்க வேண்டும். தனியார் நடவடிக்கைகளில் குற்றங் குறைகள் இருப்பின், சட்டத்தின் வாயிலாக நீதிமன்றத்தில் வழக்கிட்டு

தீர்வழி தேடலாம். ஆனால் அரசாங்க நடவடிக்கைகளில் குற்றங் குறைகள் இருப்பின், சட்டத்தின் வாயிலாக நீதிமன்றத்தில் வழக்கிட்டு தீர்வழி தேடுவது கடினம். ஏனெனில் அரசாங்கத்திற்குப் பல சிறப்புரிமைகள் உள்ளன. எனவே இங்கு அரசாங்கச் சிறப்புரிமைகள் (Government Privileges) பற்றிச் சில வினாக்கள் எழுகின்றன. அஃதாவது, அரசாங்க நடவடிக்கைகள் இயற்றப்பட்ட சட்டத்திற்கு கட்டுப்பட்டனவா? அதிலும் குறிப்பாக அரசாங்கம், ஒரு தனியார் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்கையில் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு இயங்க வேண்டுமா? அல்லது சிறப்புரிமைகள் மூலமாக, அரசு நடவடிக்கைகள் சட்ட விலக்கு பெறுமா? அவ்வாறு பெறுமாயின் எந்த அளவிற்கு சட்டத்திற்கு கட்டுப்படும்? இந்த வினாக்களுக்கெல்லாம் விடை பகரும் முகமாக பின்வரும் பத்திகள் அமைகின்றன. அவற்றைப் பார்ப்போமா?

இங்கிலாந்து நிலை (Position in England):

இங்கிலாந்தில் இயற்றாப் பொதுச் சட்ட சிறப்புரிமைப்படி (Common Law Privilege), சட்டங்களில் வெளிப்படையாகக் கூறப் பட்டிருந்தலன்றி அரசாங்கம் சட்டங்களுக்கு கட்டுப்பட்டதன்று. இஃது **"மன்னர் தவறு செய்யார்" (King can do no wrong)** என்ற கோட்பாட்டின் அடிப்படையில் எழுந்ததாகும். இதன்படி, அரசாங்கத்தினால் செய்யப்பட்ட சட்டம் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தாது என்றும், அரசாங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்ட மக்களைத்தாம் கட்டுப்படுத்தும் என்றும் கொள்ளப்பட்டது. இந்தச் சிறப்புரிமை இந்தியாவிலும் பின்வருமாறான தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்திய நிலை (Position in India):

இங்கிலாந்தில் பின்பற்றப்பட்ட மேற்கண்ட இயற்றாப் பொதுச் சட்டச் சிறப்புரிமை சுதந்திரம் அடைவதற்கு முன்பாக இந்தியாவிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Province of Bombay v. Municipal Corporation of the City of Bombay[1] - எனும் வழக்கில், அப்பொழுதைய உச்ச நீதிமன்றமான பிரிவி கவுன்சிலானது, இயற்றாப் பொதுச் சட்டச் சிறப்புரிமை இந்தியாவிற்கும் பொருந்துமென அறிவித்தது.

அதுபோல் இந்தியா சுதந்திரம் பெற்றுக் குடியரசான பிறகும் இயற்றாப் பொதுச் சட்டச் சிறப்புரிமை இந்தியாவிற்குப் பொருந்துமென பின்வரும் முக்கியமான வழக்கொன்றில் இந்திய உச்ச நீதிமன்றம் கூறியது.

Director of Rationing v. Corporation of Calcutta[2] - எனும் வழக்கில் 1923-ஆம் ஆண்டின் கல்கத்தா நகராட்சிச் சட்டத்தின் 386(1) (a)-

1. A.I.R. 1947 P.C. 34.
2. A.I.R. 1960 S.C. 1355.

வது பிரிவானது, கல்கத்தா நகராட்சியின் எல்லைக்குட்பட்ட எந்த இடத்திலும் யாரும் கல்கத்தா நகராட்சியிடமிருந்து உரிமம் பெறாமல் அரிசி, மாவு முதலிய பண்டங்களைச் சேமித்து வைத்தல் கூடாதென தடை விதித்திருந்தது. மேற்கு வங்காள அரசு உணவுத் துறையின் பங்கீட்டு இயக்குநர் (Director of Rationing), கல்கத்தா நகராட்சியிடமிருந்து உரிமம் பெறாமல், உணவுப் பண்டங்களைச் சேகரித்து வைத்திருந்ததற்காக, அவர் மீது நகராட்சி சட்டப்படி (மேற்படி பிரிவின்படி) குற்றவியல் நடவடிக்கை (prosecution) தொடரப்பட்டது.

இந்த வழக்கில் தீர்வு காண, அரசாங்கம் சட்டத்திற்குக் கட்டுப் பட்டதா அல்லது சிறப்புரிமைகள் மூலம் விதிவிலக்குப் பெறுமா என்ற வினாவிற்கு முதலில் விடை காண வேண்டிய சூழல் ஏற்பட்டது. உச்ச நீதிமன்றத்தின் பெரும்பான்மை நீதிபதிகள், பழைய இயற்றாப் பொதுச் சட்டச் சிறப்புரிமைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த பிறகும் கூட, அரசாங்கத்திற்கு உண்டெனக் கூறினார்கள். அப்பொழுது விளக்கமளிக்கையில், சட்டம் வெளிப்படையாக அல்லது உட்கிடையாக உணர்த்தினாலன்றிச் சட்டம் அரசாங்கத்தினைக் கட்டுப் படுத்தாதென்றும், அரசாங்கத்தின் சிறப்புரிமைகள் காரணமாகச் சட்டத்திலிருந்து அரசாங்கத்திற்கு விதிவிலக்கு அளிக்கப்படுமென்றும், அமெரிக்க போன்ற குடியரசு நாடுகளில் கூட, அத்தகைய சிறப்புரிமை களை அரசாங்கம் பெறுகின்றதென்றும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூட இயற்றாப் பொதுச் சட்ட சிறப்புரிமைகள் இந்திய அரசாங்கத்திற்கு பொருந்தாது என்று கூறப்படவில்லை என்றும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 372-ஆவது ஷரத்து (Article 372), இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பாக இந்தியாவில் நிலவி வந்த சட்டங்களைத் தொடர்ந்து நிலவி வர வழி வகை செய்கிற தென்றும், இயற்றாப் பொதுச் சட்டச் சிறப்புரிமைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பாகவே இந்தியாவில் அமலில் இருந்ததென்றும், அதனால் இத்தகைய சிறப்புரிமைகள் இன்றைய அரசாங்கத்திற்கும் உண்டென்றும் அவர்கள் கூறினார்கள்.

நீதிபதி வாஞ்சு அவர்கள் தன்னுடைய மாறுபட்ட தீர்ப்பில் (Dissenting Judgment) இந்திய அரசியலமைப்புச் சட்டம், சட்டத்தின் ஆட்சியை (Rule of Law) முதன்மையாகக் கொண்டுள்ளது என்றும், இயற்றாப் பொதுச் சட்ட சிறப்புரிமைகள் சட்டத்தின் ஆட்சிக்கு முரண் பட்டுள்ளது என்றும், அதனால் அரசாங்கத்திற்குச் சிறப்புரிமைகள் மூலம் சட்ட விலக்குகள் உண்டென்று, சட்டம் வெளிப்படையாக அல்லது உட்கிடையாக உணர்த்தினாலன்றி, அத்தகு சிறப்புரிமைகள் அரசாங்கத்திற்கு கிடையாது என்றும் மேற்கண்ட பெரும்பான்மை நீதிபதிகள் அளித்த தீர்ப்பிற்கு சற்று மாறுபட்ட கண்ணோட்டத்தில் விளக்கமளித்தார். அவர் மேலும், மேற்படி வழக்கில் அரசாங்கத்தின் மீது சட்ட மீறலுக்காக அபராதம் (fine) விதிக்க வேண்டி வருவதாலும்,

அப்படி விதிக்கப்படும் அபராதத் தொகை அரசாங்கத்திற்கே (இங்கு அரசாங்கமே குற்றமிழைத்துள்ளது) செல்ல இருப்பதாலும், இது அவசியத்தின் காரணமாக அரசு உட்கிடையாக (by necessary implication) சட்டத்திலிருந்து விதிவிலக்கை சட்டத்தின் மூலமாகவே பெறுவதாகக் கருத வேண்டுமென்றும், மேற்படி வழக்கு அரசாங்கத்திற்கு விரோதமாக மேற்கொண்டு செல்லாதென்றும் கூறினார்.

ஆனால் இந்தத் தீர்ப்பிற்கு பின்னர் என்ன நடந்தது என்பதுதான் இங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது.

Superintendent and Rememberancer of Legal Affairs, West Bengal v. Corporation of Calcutta[3] எனும் வழக்கில், நாம் மேலே கண்ட வழக்கில் பெரும்பான்மை நீதிபதிகளால் கொடுக்கப்பட்ட தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ஒதுக்கித் தள்ளிவிட்டு (over ruled), நீதிபதி வாஞ்சு கூறிய தீர்ப்பின் அடிப்படையை பின்பற்றி, அரசாங்கம், நகராட்சிக்கு அபராதத் தொகையைக் கட்டியாக வேண்டும் என்று உத்திரவிட்டது. இந்த வழக்கின் தீர்ப்புப்படி, சட்டம் வெளிப்படையாக அல்லது அவசியத்தின் காரணமாக உட்கிடையாக (by express or by necessary implication) அரசாங்கத்தின் சட்டப் கடப்பாடுகளிலிருந்து விதிவிலக்களிக்கப்பட வேண்டுமென்று உணர்த்தினாலொழிய, அரசு இயற்றாப் பொதுச் சட்ட சிறப்புரிமைகள் அடிப்படையில் சட்ட விதிவிலக்கு பெற சிறப்புரிமை பெற்றதல்ல என்று உச்ச நீதிமன்றம் அறுதியிட்டுக் கூறியது.

இயற்றாப் பொதுச் சட்டச் சிறப்புரிமைகள் கோட்பாட்டினை இந்தியாவில், இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு பின்பற்றாமைக்கு மேற்படி வழக்கில் நீதிமன்றம் கூறிய காரணங்களாவன:-

(1) இந்தியாவில் மன்னராட்சி (Crown) கிடையாது;

(2) குடியரசு நாட்டில் அரசாங்க சிறப்புரிமைகள் அடிப்படையிலும், அரசு தவறு செய்யாது என்ற கோட்பாட்டின் அடிப்படையிலும் அரசாங்கத்திற்கு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கத் தேவையில்லை;

(3) அனைவரும் சட்டத்தின் முன் சமமானவர்கள் என்ற சமத்துவத்தின் அடிப்படையில் அமைந்த சட்டத்தின் ஆட்சிக் கோட்பாட்டிற்கு (Rules of Law), இயற்றாப் பொதுச் சட்டச் சிறப்புரிமைகள் எதிரானவையாகும்.

மேற்கண்ட அறுதியுரைகளை, உச்ச நீதிமன்றம் **Union of India v. Subbi**[4] - எனும் வழக்கில் மேலும் உறுதிப்படுத்தியது. மேற்படி வழக்கில்

3. A.I.R. 1967 S.C. 997.
4. A.I.R. 1968 S.C. 360.

சம்பந்தப்பட்ட சட்டமானது, நிலச் சொந்தக்காரர்களுடைய நில உடைமை உரிமைகளைக் குத்தகைக்குப் பயிர் செய்பவர்கள் சட்டத்தில் குறிப்பிட்டவாறு ஈட்டுத் தொகை கொடுத்துப் பெற்று விடலாம் என்று கூறிற்று. ஒரு சிலர் அரசாங்க நிலங்களைக் குத்தகைக்குப் பயிரிட்டு வந்தனர். அவர்கள் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் மூலம் அரசாங்கத்தின் நில உடைமை உரிமைகளை ஈட்டுத் தொகை கொடுத்துப் பெற முடியுமா என்ற வினா எழுந்தது. உச்ச நீதிமன்றம் நிலச் சொந்தக்காரர்களின் நில உடைமை உரிமைகளை நீக்குவதே அந்தச் சட்டத்தின் நோக்கமென்றும், அந்தச் சட்டம் அரசாங்கத்திற்கும் மற்றவர்களுக்கும் இடையே வேறுபாடு காட்டுவதாக அமையவில்லை என்றும், அரசாங்கம் அந்தச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டதென்றும், அரசாங்கத்திற்கு உட்கிடையாகச் சட்ட விலக்கு அளிக்கப்படுவதாக ஊகித்தறிய அவசியம் எதுவும் இல்லையென்றும் கூறியது.

முடிவுரை:

சட்டத்தில் வெளிப்படையாக அல்லது அவசியத்தின் காரணமாக உட்கிடையாக கூறப்பட்டாலொழிய, அரசாங்கம் இயற்றப்பட்ட சட்டத்திற்கு கட்டுப்பட்டதே. இங்கு சட்டத்தில் வெளிப்படையாகவே கூறப்பட்டிருந்தால், அரசாங்கத்திற்கு இயற்றாப் பொதுச் சட்ட சிறப் புரிமைகள் உண்டு. ஆனால் அவசியத்தின் காரணமாக உட்கிடையாக கூறப்பட்டிருப்பதை எப்படிக் கண்டறிவது? இதனை சூழ்நிலை களிலிருந்துதான் ஊகித்தறிய வேண்டும். **எடுத்துக்காட்டாக,** ஒரு குற்ற வழக்குத் தொடர்வில், அரசாங்கத்திற்குச் சட்ட விலக்கு உட்கிடையாக இருப்பதாகக் கொள்ள வேண்டும். ஏனெனில், அரசாங்கத்தைத் தனிமனிதன் போன்று, செய்த குற்றத்திற்கு தண்டனையாக சிறையில் வைக்க முடியாது. அதேபோன்று, அரசாங்கத்திற்கு எதிராக அபராதத் தொகை விதிக்கப்பட்டாலும், அந்தத் தொகை அரசாங்கத்திற்கே, அஃதாவது குற்றம் செய்தவருக்கே சென்று சேரும். அரசாங்கத்தின் ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு தொகை மாற்றப்படும். எனவே அத்தகைய வழக்குகளில் சம்பந்தப்பட்ட சட்டங்களின் மூலம் அரசாங்கம் உட்கிடையாகச் சட்ட விலக்குகள் பெறுவதாக ஊகித்தறிய வேண்டும். குற்ற வழக்குகளைத் தவிர மற்றைய வழக்குகளில் சம்பந்தப் பட்ட சட்டங்கள் மூலம் அரசாங்கம் உட்கிடையாகச் சட்ட விலக்குகள் பெறுகின்றதா என்பதை ஊகித்தறிவது சற்று கடினமான பணியாகும். இதனை நீதிமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும். அந்த வகையில் முடிவு செய்து, அரசாங்கதிற்கு உட்கிடையாக சட்ட விலக்கு அளிக்கப்படுதாக ஊகித்தறிய வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்று உச்ச நீதிமன்றத் தால் கூறப்பட்ட வழக்கே, நாம் ஏற்கனவே கண்ட **Union of India v. Subbi**[5] எனும் வழக்காகும்.

முடிவாக, சட்டத்தின் முன் அனைவரும் சமம். அந்த வகையில்

5. Ibid foot note 4.

அரசாங்கமும் சட்டத்தின் முன் சமமாக வைக்கப்படுதல் வேண்டும்; அரசாங்கமும் சட்டத்திற்கு கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும். இதுவே செம்மையான சட்ட ஆட்சி ஏற்பட வழிவகுக்கும். இயற்றாப் பொதுச் சட்ட சிறப்புரிமைகள் எனும் போர்வையில், அரசாங்கத்திற்கு சிறப் புரிமைகள் அளிப்பது, அனைத்துச் சூழலுக்கும் ஏற்புடையதாகாது. (இதைத் தொடர்ந்து, அடுத்துவரும் வினாவின் விடையையும் தேர்வில் சுருக்கமாக சுட்டிக்காட்டுவது, இந்த வினாவின் விடைக்கான முழு மதிப் பெண்களையும் வழிவகுக்கும் - ஆசிரியர்.)

நீதிமன்றத்தில் ஆவணங்களை சமர்ப்பிக்க மறுப்பதற்கு அரசாங்கத்திற்கு உள்ள சிறப்புரிமை [Privilege of Government to withhold production of Document before Court]

53. Explain with the help of decided cases the scope of privilege of the Government to withhold production of document. (ஆவணங்களை சமர்ப்பிக்க மறுப்பதற்கு அரசுக்குள்ள விலக்குரிமை யின் நோக்கொல்லையை முடிவுற்ற வழக்குகளின் உதவியோடு விளக்குக.)

(அல்லது)

Examine the scope and extent of the privileges of the government in respect of production of documents before a court of law. (ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க மறுப்பதற்கு அரசுக்குள்ள விலக்குரிமையின் நோக்கெல்லையை விளக்குக.)

(அல்லது)

Discuss the executive privilege to withhold disclosure of documents before courts for evidence in India and United Kingdom. (இந்தியாவிலும், இங்கிலாந்திலும் அரசு தன் ஆவணங்களை நீதிமன்றத்தில் சாட்சியத்திற்கு ஒப்படைக்காமலிருக்க உள்ள சிறப்புரிமையை விவரி.)

(அல்லது)

State the special privileges of the Administration before the Courts. (நீதிமன்றங்களின் முன் நிருவாகத்திற்கு இருக்கும் சிறப்புரிமைகளைக் கூறவும்.)

(அல்லது)

Crown Privilege - Write short notes. (மன்னரின் சிறப்புரிமை - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

அரசாங்கம் அதனுடைய பதிவேடுகளையும் (Records), ஆவணங்களையும் (Documents) மற்றும் குறிப்புகளையும் (notes) நீதிமன்றத்தின் முன் பொது (மக்கள்) நலனை முன்னிட்டு தாக்கல் செய்ய மறுக்க, அதற்கு சிறப்புரிமை உண்டு. இது இங்கிலாந்தில் **"மன்னரின் (அரசின்) சிறப்புரிமை"** என்று அழைக்கப்படுகிறது. இச்சிறப்புரிமை **"மக்கள் நலனைக் காக்கும் சட்டமே, மகத்துவமான சட்டம்" (solus populi est suprema lex - Public welfare is the highest law)** எனும் முதுமொழியின் அடிப்படையில் அமைந்ததாகும். இந்தச் சிறப்புரிமை இந்தியாவிலும் அரசாங்கத்திற்கு உண்டு. அச்சிறப்புரிமையை சற்று விரிவாகப் பின்வருமாறு காண்போமா?

இங்கிலாந்து நிலை (Position in England) (அல்லது) மன்னரின் சிறப்புரிமை (Crown Privilege):

இங்கிலாந்தில் அரசாங்கமானது, ஒரு குறிப்பிட்ட பதிவேடு களையும், ஆவணங்களையும் மற்றும் குறிப்புகளையும் நீதிமன்றம் ஆய்வு செய்ய மேற்கண்ட மன்னரின் சிறப்புரிமை அடிப்படையில் எதிர்ப்புத் தெரிவிக்குமானால், நீதிமன்றம் அவைகளை ஆய்வு செய்யாது.

பொது நலன் அடிப்படையில் அரசாங்கம், பதிவேடுகளையும், ஆவணங்களையும் மற்றும் குறிப்புகளையும் நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்ய மறுக்கலாம். இவ்வாறு மறுத்தால், அதுவே முடிவானதாகும். அவை உண்மையில் பொதுநலன் அடிப்படையில் தாக்கல் செய்ய மறுக்கப்பட்டனவா, இல்லையா என்பதை ஆராயவும் நீதிமன்றத்திற்கு உரிமையில்லை. இச்சிறப்புரிமை, தனிப்பட்ட பதிவேடுகளுக்கும், ஆவணங்களுக்கும் மற்றும் குறிப்புகளுக்கும் மட்டுமன்றி ஒருவகையைச் சார்ந்த பதிவேடுகளுக்கும், ஆவணங்களுக்கும், குறிப்புகளுக்கும் கூடக் கோரப்படலாம். அரசாங்கத்திற்கும் தனிப்பட்ட நபர்களுக்கும் இடையே எழும் வழக்குகளில் மட்டுமன்றி தனிப்பட்ட நபர்களுக்கிடையே எழும் வழக்குகளில் கூட பதிவேடுகளும், ஆவணங்களும் மற்றும் குறிப்புகளும் தாக்கல் செய்யும்படி நீதிமன்றத்தால் கேட்கப்பட்டால், அவற்றை பொது நலன் கருதித் தாக்கல் செய்வதிலிருந்து விதிவிலக்கு கோர அரசாங்கத் திற்கு சிறப்புரிமை உண்டு. இந்த விதிமுறைகள் யாவும் பின்வரும் வழக்கில் நீதிப்பெருமகனார்கள் அவையால் (House of Lords) எடுத்துரைக்கப் பட்டது.

Duncan v. Commell Laird & Co. Ltd.[6] - இந்த முக்கியமான வழக்கு இரண்டாவது உலகப் போரின் போது 'திட்டிஸ்' (Submarine Thetis) எனும் நீர்முழ்கிக் கப்பல் பெரும் விபத்திற்குள்ளானபோது எழுந்தது. இந்த வழக்கின் எதிர்மனுதாரர் (Respondent) கடற்படை

6. (1942) AC 624 : (1942) 1 All. ER 587

ஆட்சிக் குழுவினுடன் (Admirality) செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட முதனிலைப் படிவப்படி (Blue Print), மேற்கண்ட நீர்முழ்கியினை கட்டி முடித்தார். அந்த நீர்முழ்கியை வெள்ளோட்டம் (trial) விட்டுப் பார்த்த பொழுது, பெரும் விபத்திற் குள்ளானது. இதனால் அதிலிருந்த 99 பேர்கள் உயிரிழந்தனர். எதிர்மனு தாரர் முதனிலைப்படிவப்படி நீர்முழ்கியை கட்டாமல் கவனக்குறைவாக செயல்பட்டுள்ளதால்தான் (negligence) மேற்படி விபத்து நிகழ்ந்தது என்றும், எனவே எதிர்மனுதாரர் தீங்கிடு (damages) தர வேண்டும் என்றும், அவ்விபத்தில் இறந்தவர்களின் ஆதரவில் வாழ்ந்து வந்தவர்கள் (dependants) மனுச் செய்தனர். எனவே, அந்நீழ்முழ்கியானது, முதனிலைப் படிவப்படி கட்டப்பட்டுள்ளதா என்று ஆய்வு செய்ய, அரசாங்கத்திட மிருந்து சில பதிவேடுகளை தருவிக்குமாறு மனுதாரர்கள் நீதிமன்றத்தைக் கோரினார்கள். நீதிமன்றமும் கப்பற்படை ஆட்சிக் குழுவினைச் சம்பந்தப்பட்ட பதிவேடுகளைத் தாக்கல் செய்யக் கோரியது. கப்பற்படை ஆட்சிக்குழு அமைச்சர் (First Lord of Admirality), அப்பதிவேடுகளைத் தாக்கல் செய்து அவைகளுடைய பொருளடக்கங்களை வெளிப்படுத்துவது பொது நலனுக்கு உகந்தது அல்ல என்று அவருடைய ஆணையுறுதிப் பத்திரத்தில் (affidavit) நீதிமன்றத்திற்கு அறிவித்தார். எனவே இதுபற்றி ஆய்வு செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்று நீதிப்பெரு மகனார்கள் அவை தீர்ப்பளித்தது.

இத்தீர்ப்பின்படி, பொது நலன் கருதி அரசாங்கம் குறிப்பிட்ட பதிவேடுகளை வெளியிட முடியாது என்று நீதிமன்றத்திற்கு அறிவித்தால், அதுவே முடிவானதும், இறுதியானதுமாகும். உண்மையில் பொது நலன் கருதி அவ்வாறு கூறப்பட்டதாவென ஆராய நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை. நீதிப்பெருமகனார்கள் அவையின் கருத்துப்படி உண்மையான பாதுகாப்பைக் கருதி அல்லது மற்றைய பொது நலன்களைக் கருதி மட்டுமே பதிவேடுகளையும், ஆவணங்களையும் மற்றும் குறிப்புகளையும் நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்வதிலிருந்து விதிவிலக்கு பெற முடியும். மாறாக, பாராளுமன்றத்தில் அரசாங்கமானது இடித்துரைக்கப்படலாம் அல்லது இழப்பீடு கொடுக்க வேண்டி வரும் அல்லது அரசாங்க வழக்கு தோற்றுப் போகும் போன்ற காரணங்களின் அடிப்படையில் அரசாங்கம் அவைகளை நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்ய மறுக்க முடியாது. ஆனால் அரசாங்கத்தின் முடிவே இறுதி முடிவாக அமைவதால், நீதிமன்றம் அரசாங்கத்தின் கூற்றை அப்படியே ஏற்றுக் கொள்வதால், அரசாங்கம் தீய நோக்குடன் பதிவேடுகளையும், ஆவணங்களையும் மற்றும் குறிப்புகளையும் நீதிமன்றத்தின் முன் சிறப்புரிமைகள் காரண மாக தாக்கல் செய்ய மறுத்தால், நீதிமன்றம் எதுவும் செய்வதிற்கில்லை. ஆதலால் இவ்வழக்கின் மேற்படி தீர்ப்பு, அரசாங்கம் அதனுடைய பதிவேடுகளையும், ஆவணங்களையும், குறிப்புகளையும் நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்வதிலிருந்து விலக்கு பெற எல்லையற்ற சிறப்புரிமையை பெற்றுள்ளது என்பதையே சுட்டிக்காட்டுகிறது. எனவே, இத்தீர்ப்பு

சட்ட வல்லுநர்களால் குறை கூறப்பட்டது; கடிந்துரைக்கப்பட்டது. ஆனால் இதற்கடுத்து எழுந்த வழக்கில் ஒரு மாறுபட்ட தீர்ப்பு வழங்கப்பட்டது.

Conway v. Rimmer[7] - நாம் முன்கண்ட **Duncan** வழக்கில் வழங்கப்பட்ட மேற்படி தீர்ப்பானது, இந்த வழக்கில் நீதிப்பெரு மகனார்கள் அவையால் ஒதுக்கித் தள்ளப்பட்டது (over ruled). இந்த வழக்கில், முன்னாள் தகுதிகாண் பருவ நிலைக் காவலர் (Probationer Constable), முன்னாள் காவலர் கண்காணிப்பாளருக்கு (Police superintendent) எதிராக வன்மத்துடன் குற்ற வழக்கு (malicious prosecution) தொடுத்த காரணத்திற்காக, இழப்பீடு கோரி உரிமையியல் வழக்கு (suit) தொடர்ந்தார். மனுதாரர் அவருடைய வழக்கினை மெய்ப்பிக்க அரசாங்க பதிவேடுகள் சிலவற்றை தருவிக்குமாறு கோரினார். நீதிமன்றம் அவற்றை தருவிக்கும்படி உத்திரவிட்டபொழுது, அரசாங்கத்தின் சார்பில் அவைகளைத் தாக்கல் செய்வதிலிருந்து விடுபெற சிறப்புரிமைகள் கோரப்பட்டன. மேலும் அந்தப் பதிவேடுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டால், பொது நலனுக்கு ஊறு நேருமெனவும் அரசாங்கத்தின் சார்பில் கூறப்பட்டது.

ஆனால் வழக்கை ஆராய்ந்த நீதிப்பெருமகனார்கள் அவை, சம்பந்தப்பட்ட பதிவேடுகள் முன்னாள் தகுதிகாண் பருவநிலை காவலரைப் பற்றிய வழக்கமான பதிவேடுகளெனவும் (routine records), அவைகளை நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்வதால் பொது நலன் பாதிக்கப் படாதெனவும் கூறி, அரசாங்கத்தை அப்பதிவேடுகளைத் கட்டாயமாகத் தாக்கல் செய்யுமாறு பணித்தது.

இந்த வழக்கிலிருந்து கிடைக்கும் தீர்ப்புவழிச் சட்டம் யாதெனில், அரசாங்கம் சிறப்புரிமைகளைப் பொது நலன் அடிப்படையில் கோரினால், அவ்வாறு கோரியதற்காகவே சிறப்புரிமைகளைப் பெறாது. மாறாக நீதிமன்றம், அரசாங்கம் சிறப்புரிமைகளைப் பெற அருகதை யுடையதா என்பதை ஆய்வு செய்து முடிவெடுக்கும். அரசாங்கம் சிறப்புரிமைகளுக்கு உரியதானால், சம்பந்தப்பட்ட பதிவேடுகளையும், ஆவணங்களையும், குறிப்புகளையும் நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்து அவைகளுடைய பொருளடக்கங்களை வெளிப்படுத்துவதிலிருந்து விலக்களிக்கும். மாறாக நீதிமன்றமானது, பொது நலன் பாதிக்கப்படாது என்று முடிவு செய்யுமானால், சம்பந்தப்பட்ட பதிவேடுகளை, ஆவணங்களை மற்றும் குறிப்புகளை நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்வதிலிருந்து அரசாங்கத்திற்கு விலக்களிக்காது.

முடிவாக, 1947-ஆம் ஆண்டின் இங்கிலாந்து நாட்டின் அரசுரிமை நடவடிக்கைகள் சட்டத்தின்படியும் (The Crown Proceedings Act, 1947), எந்த பதிவேடாவது அல்லது ஆவணமாவது நீதிமன்றத்தின் முன்

7. (1968) AC 910 : (1968) 1 All. ER 874 : (1968) 2 WLR 998.

தாக்கல் செய்து வெளிப்படுத்தப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படச் சிறப்புரிமை பெற்றது என்று அரசாங்கம் கோரினாலும், அந்தக் கோரிக்கையின் மீது சம்பந்தப்பட்ட பதிவேட்டை அல்லது ஆவணத்தை ஆய்வு செய்து முடிவெடுக்க வேண்டிய அதிகாரம் நீதிமன்றத்தையே சார்ந்ததாகும். அதாவது இச்சிறப்புரிமையை அரசாங்கத்திற்கு கொடுப்பதும், மறுப்பதும் நீதிமன்றத்தின் ஆய்விற்கு உட்பட்டதாகும்.

இந்திய நிலை (Position in India):

இந்தியாவில் அரசாங்கம், சிறப்புரிமைகளை அதிகம் பெறுகின்றன. பதிவேடுகளையும், ஆவணங்களையும் மற்றும் குறிப்புகளையும் அரசாங்கம் பொது நலன் கருதி நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்ய மறுக்கலாம். மேலும் உண்மையில் பொதுநலன் கருதிதான் அவ்வாறு மறுக்கப்பட்டதா என்பதை ஆய்ந்தறிய நீதிமன்றம் விழைவதில்லை. அரசாங்கத்தின் கூற்றை அப்படியே நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும்.

இந்நிலைப்பாடு குறித்து **இந்திய சாட்சிய சட்டத்தின் (Indian Evidence Act)** சில பிரிவுகள், நெறிமுறைகளை வகுத்துக் கொடுத்துள்ளன. அவை வருமாறு.

இந்திய சாட்சிய சட்டத்தின் **123-வது பிரிவின்படி**, "அரசாங்க விஷயங்கள் சம்பந்தப்பட்ட (affair of State), வெளியிடப்படாத அலுவல் பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட சாட்சியம் எதையும், சம்பந்தப் பட்ட துறையின் தலைமையலுவலரின் அனுமதியுடன் அல்லாமல், கொடுப்பதற்கு எவரும் அனுமதிக்கப்படுதல் கூடாது; அந்த அலுவலர் தாம் பொருத்தமெனக் கருதினால், அத்தகு அனுமதி கொடுக்கலாம் அல்லது கொடுக்காமலுமிருக்கலாம்".

123-வது பிரிவின்படி, "அலுவல் முறையில் நம்பகமாகப் பொது அலுவலர் எவரிடமும் தெரிவிக்கப்பட்ட தகவல்களை வெளியிடுவதன் மூலம் பொது நலன்கள் பாதிக்கப்படும் என்று அவர் கருதும் போது அவற்றை வெளியிடுமாறு அவர் கட்டாயப்படுத்தப்படக் கூடாது".

162-வது பிரிவானது ஆவணங்களைத் தாக்கல் செய்தல் குறித்துக் கூறுகிறது. அதன்படி, "ஆவணமொன்றைத் தாக்கல் செய்ய அழைப்பாணை அனுப்பப்பட்ட சாட்சி ஒருவர், அது அவரது வசமோ, அதிகாரத்திலோ இருக்குமானால், அதைத் தாக்கல் செய்வதற்கோ அல்லது அதை சாட்சியமாக அனுமதிப்பதற்கோ ஆட்சேபணை ஏதேனும் இருந்தாலும் கூட, அதை நீதிமன்றத்திற்கு கொண்டு வருதல் வேண்டும். அத்தகைய ஆட்சேபணை செல்லுமா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும்", என்று கூறுகிறது.

அதே பிரிவின் அடுத்த பத்தியில் தொடர்ந்து பின்வருமாறு கூறப் பட்டுள்ளது. அதன்படி "ஆவணமொன்று அரசாங்க விஷயங்களை குறிப்பிடுவதாய் இருந்தாலன்றி, நீதிமன்றம் தனக்கு பொருத்தமெனப்

பட்டால் அதை ஆய்வு செய்யலாம். அல்லது ஆவணத்தை அனுமதிப்பது பற்றித் தீர்மானிப்பதற்குத் தன்னை இயல்விக்க மற்ற சாட்சியத்தை எடுக்கலாம்."

மேலும் **உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை 11 விதி 19(2)**-ஆனது **[Order XI Rule 19(2) of the Civil Procedure Code]** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, "நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்யப்படுவதிலிருந்து ஒரு ஆவணத்திற்கு விதிவிலக்குக் கோரப் பட்டால், அந்த ஆவணத்தை நீதிமன்றம் ஆய்வு செய்து சிறப்புரிமை களுக்கு, அஃதாவது விதிவிலக்களிக்கப்படுவதற்கு உரியதாவெனக் கண்டறியும்".

அதுபோல், **இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 74(2)**-ஆனது, "அச்சரவையால் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அறிவுரை கூறப்பட்டதாவென்றும், அப்படியானால் என்ன அறிவுரை கூறப்பட்ட தென்றும் எந்த நீதிமன்றமும் விசாரணை செய்யக் கூடாது" என்று கூறுகிறது.

மேலும் **ஷரத்து 163(3)**-ன்படி, "மாநில அமைச்சரவையால் மாநில ஆளுநருக்கு அறிவுரை கூறப்பட்டதாவென்றும், அப்படியானால் என்ன அறிவுரை கூறப்பட்டதென்றும் எந்த நீதிமன்றமும் விசாரணை செய்யக் கூடாது" என்று கூறுகிறது.

மேற்கூறிய சட்ட விதிகளைத் தொகுத்துப் பார்த்தோமேயானால் பின்வரும் அறுதியுரைகள் கிடைக்கும். அவை,

(1) அரசாங்க விஷயங்கள் அடங்கிய வெளியிடப்படாத பதிவேடு களையும்;

(2) பொது நலனைக் கருத்திற் கொண்டு அரசாங்க தகவல்கள் அடங்கிய பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் குறிப்புகளையும்;

(3) குடியரசுத் தலைவருக்கு அல்லது மாநில ஆளுநருக்கு முறையே மத்திய மற்றும் மாநில அமைச்சரவை கூறிய அறிவுரைகளையும்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு அரசாங்கத்தினை நீதிமன்றம் கோர முடியாது. அவை அரசாங்கத்திற்குரிய சிறப்புரிமைகள் அடிப் படையில் நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்யக் கோரப்படுவதிலிருந்து விதிவிலக்களிக்கப்படுவனவாகும்.

ஆனால் இந்தச் சிறப்புரிமைகளை அரசின் எல்லாப் பதிவேடு களுக்கும், ஆவணங்களுக்கும் மற்றும் குறிப்புகளுக்கும் அரசாங்கம் கோரிப் பெற முடியாது. இச்சிறப்புரிமைகளை அரசாங்கம் கோரிப் பெற, சம்பந்தப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள், குறிப்புகள் ஆகியவை அரசாங்க ஆட்சி விஷயத்துடன் தொடர்புடையதாகவும், பொது நலன் கருதி வெளியிடப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டியனவாகவும்

இருத்தல் வேண்டும். அஃதாவது, அரசாங்கத்தின் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் குறிப்புகள் தனி நபர்களுடைய பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் குறிப்புகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டக்கூடிய பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அவை ஒரு தனிவகையாகக் (class) கருதப்பட வேண்டியதாக உள்ளன என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும். மேலும் அவைகளை வேறுபடுத்தியும் மற்றும் வகைப் படுத்தியும் காட்டும் அடிப்படைக் காரணங்களுக்கும் சிறப்புரிமைகள் அளிக்கும் சட்டத்தின் நோக்கத்திற்கும் இடையே காரண ஆய்வுகளுக்கு பொருந்திய நெருக்கமான தொடர்பு (logical relation) இருத்தல் வேண்டும். மேலும் அவை மேற்கண்ட பண்புகளைப் பெற்றிராவிடில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 14-வது ஷரத்தின் வழியாக கூறப் பட்டுள்ள "சட்டத்தின் முன் சமம்" எனும் கோட்பாட்டை அவை குலைப் பதாக உள்ளது எனும் அடிப்படையில் சிறப்புரிமை மறுக்கப்படும்.

சில முக்கிய வழக்குகள் (Leading Cases):

State of Punjab v. Sodhi Sukdev Singh[8] - இவ்வழக்கு, மேற்கண்ட நிலைப்பாடு தொடர்பாக இந்தியாவில் எழுந்த முதல் முக்கிய மான வழக்காகும். இவ்வழக்கில் நாம் ஏற்கனவே கண்ட **Duncan v. Commell Laird & Co. Ltd.**[9] - எனும் வழக்கில் நீதிப்பெருமகனார்கள் அவை அளித்த குறைபாடுடைய தீர்ப்பு பின்பற்றப்பட்டுள்ளது. இவ் வழக்கின் பொருண்மைகளின்படி, **Sodhi Sukdev Singh** எனும் மாவட்ட மற்றும் செஷன்ஸ் நீதிபதி, இந்தியக் குடியரசுத் தலைவரால் பணி நீக்கம் செய்யப்பட்டார். பின்னர் அவர் செய்த வேண்டுகோளின் படி, அவருக்கு மீண்டும் நீதிபதி பணி அளிக்கப்பட்டது. இதன் பின்னிட்டு தன்னை பணியிலிருந்து நீக்கியது செல்லாது, இல்லா நிலையது என்று அவர் விளம்புகை பரிகாரம் கோரி நீதிமன்றத்தில் உரிமையியல் வழக் கொன்றைத் தொடர்ந்தார். மேலும் அதில் தனது சம்பள பாக்கியையும் கோரியிருந்தார். இத்தோடு மட்டுமில்லாமல் அரசாங்கத்தின் சில ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்படி அரசாங்கத்திற்கு உத்திரவிட வேண்டும் என்றும் அவர் மனு செய்தார். அப்பொழுது அந்த ஆவணங்களை தாக்கல் செய்வதிலிருந்து விலக்களிக்கும்படி அரசாங்கம் சிறப்புரிமை கோரியது. வழக்கை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம் சம்பந்தப் பட்ட அந்த ஆவணங்கள் இந்திய சாட்சிய சட்டத்தின் 123-வது பிரிவின் கீழ் பாதுகாப்பு பெற்றதாகும்; எனவே, அந்த ஆவணங்களை பொது நலன் கருதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமலிருக்க அரசாங்கத்திற்கு சிறப்புரிமை உண்டு எனும் அடிப்படையில் அவரது மனுவை தள்ளுபடி செய்து விட்டது.

அதாவது அரசாங்கம் மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட

8. (1961) 2 SCR 371 : A.I.R. 1961 S.C. 493.
9. (1942) AC 624 : (1942) 1 All. ER 587.

ஆவணங்களை **பொது நலன்** கருதி நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்ய இயலாது என்று அறிவித்ததை உச்ச நீதிமன்றம் எவ்வித விசாரணையும் இன்றி அப்படியே ஏற்றுக் கொண்டது. அப்பொழுது, எந்த நீதிமன்றமும் ஆவணங்களை வெளியிடுவதன் மூலமாகப் பொது நலனுக்கு ஊறு நேருமாவென விசாரணை நடத்தாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும் பொது நலனுக்கு ஊறு நேருமா, நேராதா என்பதை அரசாங்கம் தான் முடிவு செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு அரசாங்கம் முடிவு செய்யுமானால், அதனுடைய முடிவே இறுதியானதென்றும், அதன் மீது நீதிமன்றம் விசாரணை நடத்தாது என்றும் உச்ச நீதிமன்றம் விளம்பியது. சுருங்கக் கூறின், ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதால் பொது நலன் பாதிக்கப்படும் என்று அரசாங்கம் தனது பிரமாணப் பத்திரத்தின் வாயிலாகக் குறிப்பிட்டாலே போதும்; அந்த ஆவணத்தை தாக்கல் செய்வதிலிருந்து அரசாங்கத்திற்கு நீதிமன்றம் விலக்களிக்க வேண்டும்; அது குறித்து எவ்வித விசாரணையும் மேற்கொள்ளக் கூடாது என்று கருத்துப்பட மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. ஆனால் உச்ச நீதிமன்றத்தின் இந்நிலைப்பாடு சரியானதல்ல என்று சட்ட வல்லுநர்கள் பலராலும் குறை கூறப்பட்டது. எனவே இத்தீர்ப்பு, மேற்படி வழக்கிற்கு பிறகு எழுந்த முக்கிய வழக்கொன்றில் பெரிதும் மாற்றம் பெற்று சரியான நிலைக்கு வந்தது.

S.P.Gutha v. Union of India[10] - இவ்வழக்கு, **"நீதிபதிகளின் பணி மாற்றல் வழக்கு" (Judges' Transfer Case)** சிறப்பாக அழைக்கப்படுவ தாகும். நாம் ஏற்கனவே **Sodhi Sukdev Singh** வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பை உச்ச நீதிமன்றம் இவ்வழக்கின் தீர்ப்பின் பொழுது ஏற்றுக் கொள்ளவில்லை. இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, உயர் நீதி மன்றங்களுக்கு கூடுதல் நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டார்கள் மற்றும் சில நீதிபதிகள் பணிமாற்றம் செய்யப்பட்டார்கள். இது செல்லாது, அரசியலமைப்பற்றது எனும் அடிப்படையில் மனுதாரரால் எதிர்க்கப்பட்டது. இவ்வழக்கின் பொழுது, மனுதாரர் அரசாங்கத்திற்கும் இந்திய தலைமை நீதிபதிக்கும் இடையே நடந்த அனைத்து தகவல் களையும், அவை அடங்கிய ஆவணங்களையும் தாக்கல் செய்ய அரசாங் கத்திற்கு உத்திரவிடுமாறு நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டார். ஆனால் அரசாங்கம் சிறப்புரிமையின் அடிப்படையில் அவற்றை நீதிமன்றத்திற்கு ஆய்விற்கு சமர்ப்பிக்க விலக்கு கோரியது.

எனினும் உச்ச நீதிமன்றம் அந்த ஆவணங்கள் அரசாங்க சிறப் புரிமைக்கு உட்பட்டதா இல்லையா என்பதையும், அவற்றை நீதி மன்றத்தில் தாக்கல் செய்து அவற்றின் உள்ளடக்கங்களை பகிரங்கப் படுத்தினால் பொது நலனுக்கு ஊறு நேருமா, நேராதா என்பதையும் **மூடிய நீதிமன்ற அறைக்குள் (in camera perusal)** ஆய்வு செய்வதற்காக தாக்கல் செய்யும்படி அரசாங்கத்திற்கு உத்திரவிட்டது. அதன்படி

10. 1981 Supp SCC 87 : A.I.R. 1982 S.C. 149.

அரசாங்கமும் அந்த ஆவணங்களைத் தாக்கல் செய்தது. அவற்றை மூடிய நீதிமன்ற அறைக்குள் ஆய்வு செய்த உச்ச நீதிமன்றம், அவற்றை பகிரங்கப் படுத்தினால் பொது நலன் ஏதும் பாதிக்கப்படாது எனும் முடிவிற்கு வந்தது. எனவே அரசாங்கத்திற்கு ஆவணங்களை தாக்கல் செய் வதிலிருந்து விலக்கு பெறும் சிறப்புரிமையை மறுத்து, அவற்றை திறந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்படி அரசாங்கத்திற்கு உத்திரவிட்டது. இங்கு உச்ச நீதிமன்றம் நாம் ஏற்கனவே கண்ட **Conway v. Rimmer**[11] வழக்கில் நீதிப்பெருமகனார்கள் அவை வழங்கிய தீர்ப்பைப் பின்பற்றி, "ஒரு ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமலிருக்கு அரசாங்கம் சிறப்புரிமை பெற்றது என்பதை, அந்த அரசாங்கமே முடிவு செய்யக் கூடிய விஷயமல்ல என்றும், அந்த ஆவணங்களை நீதிமன்றங்கள் (மூடிய அறைக்குள்) ஆய்வு செய்து, அவற்றை தாக்கல் செய்வதிலிருந்து அரசாங்கத்திற்கு சிறப்புரிமை வழங்கலாமா வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டியது நீதிமன்றங்கள்தாம் என்றும்" உச்ச நீதிமன்றம் தெளிவுபட விளம்பியது.

எனவே, இத்தீர்ப்பிலிருந்து, அரசாங்கம் ஒரு ஆவணத்தை பொது நலனின் அடிப்படையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமலிருக்க தனக்கு சிறப்புரிமை உள்ளது என்று கூறிவிட்டால், நீதிமன்றங்கள் உடனே கை கட்டி, வாய் பொத்தி சென்று விடாது. மாறாக, அங்கு அவ்வாறு ஆவணங்களை தாக்கல் செய்வதால் உண்மையிலேயே பொது நலனுக்கு ஊறு நேரும் நிகழ்வு ஏதேனும் உள்ளதா என்பதை நீதிமன்றங்கள் விசாரணை செய்து, ஆய்ந்தறிந்தே முடிவெடுக்கும், என்பது தெளிவா கிறது. எனவே அரசாங்க சிறப்புரிமை நீதிமன்றத்தின் ஆய்விற்கு உட் பட்டது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இது ஒரு வரவேற்கத் தக்க தீர்ப்பாகும். இதனால் அரசாங்கமும், நிருவாகத்துறை அலுவலர் களும் நீதிமன்றத்தில் ஆவணங்களை தாக்கல் செய்ய தங்களுக்கு சிறப்புரிமை உண்டு என்று எடுத்ததெற்கெல்லாம் கூறி அதிகார துஷ் பிரயோகம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் வேறு பல சிறப்புரிமைகள் (Miscellaneous Privileges of Government):

நாம் இதுகாறும் கண்ட அரசாங்க சிறப்புரிமைகள் தவிர, வேறு பல சிறப்புரிமைகளும் அரசாங்கத்திற்கு சட்டங்கள் வழங்கியுள்ளன. அவை வருமாறு:-

(1) அரசாங்கத்திற்கு எதிராக உடனடியாக உரிமையியல் வழக்கு (தாவா - Suit) தொடர முடியாது. உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் 80-வது பிரிவின்படி (Section 80 of the Civil Procedure Code) அரசாங்கத்திற்கு இரண்டு மாத கால அவகாசம் கொடுத்து அவ்வழக்கு சம்பந்தப்பட்ட கோரிக்கையை எழுத்து மூலமாக தெரிவித்து அறிவிப்பு

11. (1968) AC 910: (1968) 1 All. ER 874: (1968) 2 WLR 998

ஒன்றை அனுப்புதல் வேண்டும். அந்த இரண்டு மாத காலம் முடிவுற்ற பின்னரே, அரசாங்கத்திற்கெதிராக வழக்கு தொடர முடியும். இந்த சிறப்புரிமை எதற்காக அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளதென்றால், அந்த இரண்டு மாத கால அவகாசத்திற்குள் அந்த அறிவிப்பில் கண்ட கோரிக்கையை ஏற்று நடக்கலாமா, கூடாதா என்பதைத் தீர்மானிப்பதற் காகத்தான். அவ்வாறு ஏற்று நடக்கலாம் எனும் முடிவிற்கு அரசாங்கம் வந்தால், அறிவிப்பு அனுப்பியவருக்கு வழக்கு தொடராமலே நிவாரணம் கிடைத்து விடுகிறது. அரசாங்கத்தின் பணிச் சுமையும் குறைகிறது. இது, **அறிவிப்பு பெற அரசாங்கத்திற்கு உள்ள சிறப்புரிமை** எனப்படுகிறது **(Government's Privilege in Notice).**

(2) உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கட்டளை *27*-ன் கீழான விதி *5*-B-யின்படி (Order XXVII Rule 5-B of the Civil Procedure Code), அரசாங்கத்திற்கு எதிரான வழக்குகளில் ஒரு தீர்வு (settlement) ஏற்பட நீதிமன்றம் துணை புரிய வேண்டும் என்று நீதிமன்றத்தின் மீது ஒரு கடமையைச் சுமத்துகிறது.

(3) கட்டளை *27*-ன் கீழான விதி *8*-A-யின்படி, அரசாங்கத்திற்கு எதிரான வழக்குகளில் பிணையத் தொகை (security) எதையும் வழங்குமாறு அரசாங்கத்தை நீதிமன்றம் கட்டாயப்படுத்தி உத்திரவிடக் கூடாது.

(4) மேற்கண்ட உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் *82*-வது பிரிவின்படி, மத்திய அல்லது மாநில அரசாங்கத்திற்கு எதிராக தீர்ப் பாணை (Decree) ஏதேனும் பிறப்பிக்கப்பட்டால், அத்தீர்ப்பாணை பிறப் பிக்கப்பட்ட தேதியிலிருந்து தொடர்ந்து மூன்று மாதங்கள் வரை அத் தீர்ப்பாணைக்குரிய தொகையை அரசாங்கம் செலுத்தாது இருக்கும் பொழுது மட்டுமே, (அந்த மூன்று மாதங்கள் கழித்து) அத்தீர்ப்பாணையை நிறைவேற்ற (to execute the decree), தீர்ப்பாணை பெற்றவர் நிறைவேற்று மனு (execution petition) தாக்கல் செய்தல் வேண்டும்.

(5) ஒரு வழக்கைத் தொடர, காலவரையறைச் சட்டப்படி அந்த வழக்கின் தன்மையைப் பொறுத்து மூன்றிலிருந்து பனிரெண்டு ஆண்டுகள் கால அவகாசம் உண்டு. இது தனியார் நபர்களுக்கு பொருந்தக் கூடியதாகும். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரை இந்திய கால வரையறைச் சட்டத்தின் *112*-வது பிரிவின்படி, மத்திய அரசால் அல்லது மாநில அரசால் ஒரு வழக்கானது முப்பது ஆண்டு காலத்திற்குள் தொடுக்கப்படலாம். இங்கு கால வரம்பு நீட்டிக்கப்பட்டுள்ளது.

14 உறுதிமொழி முரண்தடை (அல்லது) வாக்குறுதி குறித்த முரண்தடை [Promissory Estoppel]

54. "The principle of 'Promissory Estoppel' has been evolved by equity to avoid injustice." - Comment. ("உறுதிமொழி முரண்தடை கோட்பாடு அநீதியைத் தடுப்பதற்கு தகைமை முறை கோட்பாடு வழிமுறை வளர்ச்சி நிலையினை அடைந்துள்ளது." - விளக்குக.)

(அல்லது)

"The principle of promissory estoppel has come to be firmly established in administrative law". Discuss. ("வாக்குறுதி குறித்த முரண்தடைக் கோட்பாடு நிருவாகமுறைச் சட்டத்தில் நன்கு வேருன்றி உள்ளது". விவாதிக்க.)

(அல்லது)

Promissory estoppel - Write short notes. (உறுதி மொழி முரண்தடை - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

ஆதிகாலத்தில் **'மன்னர் தவறு செய்யார்' (King can do no wrong)** எனும் முதுமொழியின் கீழ் அரசு பல்வேறு சிறப்புரிமைகளை அனுபவித்து வந்தது. ஆனால் தற்பொழுதைய மக்கள் நல அரசில், அதிலும் குறிப்பாக நிருவாகமுறைச் சட்டம் வேகமாக வளர்ச்சியுற்று வரும் இந்த நவீன காலகட்டத்தில் அச்சிறப்புரிமைகளின் ஆதிக்கம் படிப்படியாக குன்றி விட்டன. இன்று ஒரு சாமானியர் போன்ற நிலையிலேயே அரசாங்கமும் வைக்கப்பட்டுள்ளது என்று சொல்லலாம். அப்படிப்பட்ட சிறப்புரிமைகளில் ஒன்று 'முரண்தடைக் கோட்பாடு அரசாங்கத்திற்கு எதிராகப் பொருந்தாது' (non-application of the Doctrine of Estoppel against the State) என்பதாகும். அதாவது அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீர வேண்டும் எனும் கடப்பாடு அரசிற்கு கிடையாது; அவ்வாக்குறுதியை மீறியும் அரசாங்கம் செயல்படலாம். ஆனால் காலத்தின் போக்கில் அரசின் இச்சிறப்புரிமை பல வழக்குகளில் நீதித் துறை உருவாக்கிய **'உறுதிமொழி முரண்தடை' (Doctrine of Promissory Estoppel)** எனும் கோட்பாட்டால் வலுவிழந்து போனது.

உறுதிமொழி முரண்தடை என்றால் என்ன? - பொருள்:

ஒருவர் தனது பேச்சால் அல்லது செயலால் வாக்குறுதி அல்லது உறுதியுரை ஒன்றைச் செய்துவிட்டு, அந்த வாக்குறுதியின் பேரில்

மற்றொரு தரப்பினர் நடந்து அவருக்கு ஊறு ஏதேனும் ஏற்படுமானால், அவ்வாக்குறுதியை அல்லது உறுதியுரையைச் செய்தவர், அத்தகு வாக்குறுதி அல்லது உறுதியுரையிலிருந்து மாறிச் செல்ல அல்லது மாற்றிச் சொல்ல அனுமதிக்கப்படமாட்டார். அதாவது ஏற்கனவே கொடுத்த வாக்குறுதிக்கு அல்லது செய்த செயலுக்கு முரணாக சொல்ல அல்லது செயல்பட அனுமதியில்லை. இதுவே **'உறுதிமொழி முரண்தடை'** அல்லது **'வாக்குறுதி குறித்த முரண்தடை'** எனப்படுகிறது. இக்கோட்பாடு, நிருவாகமுறைச் சட்டம் குறித்த ஆய்விற்கு புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளது என்றால் அது மிகையல்ல.

உறுதிமொழி முரண்தடை அரசிற்கு பொருந்துமா?

ஆரம்ப காலகட்டத்தில் உறுதிமொழி முரண்தடையை அரசிற்கு எதிராக செயல்படுத்த முடியாது என்றும், அது தனிநபர்கள் அளிக்கும் வாக்குறுதிகளுக்கே பொருந்தும் என்றும், சில வழக்குகளில் நீதிமன்றங்களால் எடுத்துரைக்கப்பட்டது. (இது குறித்து நாம் ஏற்கனவே வினா எண். 39-ல் விரிவாகக் கண்டுள்ளோம்.)

ஆனால் காலப்போக்கில், உறுதிமொழி முரண்தடையை அரசிற் கெதிராகவும் செயல்படுத்தலாம் என்ற கருத்து உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளால் வலுப்பெற்றது. சம்பந்தப்பட்ட வழக்கு வருமாறு.

M.P.Sugar Mills v. State of U.P.[1] - எனும் வழக்கில், 1948-ஆம் ஆண்டின் உத்திர பிரதேச விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், உத்திரப் பிரதேசத்தில் தொடங்கப்படும் புதிய தொழிற்சாலைகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பதாக அம்மாநில அரசாங்கம் உறுதிமொழி அளித்தது. மேலும் அவ்வுறுதிமொழியை செய்தித்தாள்களிலும் விளம்பரம் செய்தது. இந்த விதிவிலக்கை பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு, மனுதாரர்கள் அம் மாநிலத்தில் ஒரு சர்க்கரை ஆலையை ஆரம்பித்தனர். ஆனால் பின்னிட்டு, அம்மாநில அரசாங்கம் தனது மேற்படி உறுதிமொழியை பின்வலித்துக் கொண்டு, மனுதாரர்கள் மீது விற்பனை வரி விதித்தது. வழக்கை ஆய்ந்த உச்ச நீதிமன்றம் மேற்படி உறுதிமொழி முரண்தடைக் கோட்பாட்டைப் பயன்படுத்தி, கொடுத்த உறுதிமொழியிலிருந்து அரசாங்கம் பின்செல்ல முடியாது என்றும், மனுதாரர்களிடமிருந்து வசூலித்த விற்பனை வரித் தொகையை மனுதாரர்களுக்குச் திரும்பிச் செலுத்தும்படியும் உத்திரவிட்டது.

உறுதிமொழி முரண்தடை அரசின் பிற அதிகார அமைப்புகளுக்கு பொருந்துமா? (Whether the other Authorities of the State are bound by the Doctrine of Promissory Estoppel?):

உறுதிமொழி முரண்தடை அரசாங்கத்திற்கு எவ்வாறு பொருந்து

1. A.I.R. 1979 S.C. 621.

கிறதோ, அவ்வாறே அரசாங்க நிருவாகத்தின் முகவர் நிலைகளான, பிற அதிகார அமைப்புகளுக்கும் பொருந்தக் கூடியதே என்று பின்வரும் வழக்கில் கூறப்பட்டது.

Registrar, University of Madras v. Sundara Shetti[2] - இவ் வழக்கில், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேர்ச்சியுற்றவர்களின் பட்டியலில் மேற்படி வழக்கின் எதிர்மனுதாரரான சுந்தரா ஷெட்டியின் பெயரும் இருந்தது. மேலும் அவர் தேர்ச்சியுற்றதற்கான சான்றிதழும் பள்ளி கல்வி வாரியத்தால் வழங்கப்பட்டது. அதில் அவர் கல்லூரிப் படிப்பைத் தொடர தகுதியுடையவர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனால் அவர் ஒரு கல்லூரியில் சேர்ந்து, அங்கு இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தார். ஆனால் அச்சமயத்தில் அவருக்கு வழங்கப்பட்ட எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி சான்றிதழ் பள்ளி கல்வி வாரியத்தால் இரத்து செய்யப்பட்டது. ஆனால் இவ்வாறு இரத்து செய்தது செல்லாது என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதற்குக் காரணம், உறுதி மொழி முரண்தடையாகும். தேர்வில் எதிர்மனுதாரரான சுந்தரா ஷெட்டி தேர்ச்சியுற்றுவிட்டார் என்று அறிவித்து விட்டு, பின்னர் அவர் தேர்ச்சியுற வில்லை எனும் அடிப்படையில் அவரது தேர்ச்சிச் சான்றிதழை பள்ளிக் கல்வி வாரியம் உறுதிமொழி முரண்தடையின்படி இரத்து செய்ய முடியாது என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இங்கு அரசின் பிற அதிகார அமைப்பான பள்ளிக் கல்வி வாரியத்திற் கெதிராகவும் உறுதிமொழி முரண்தடைக் கோட்பாடு நீதிமன்றத்தால் செயற்படுத்தப்பட்டுள்ளது.

உறுதிமொழி முரண்தடையின் மீதான வரம்புகள் (Limitations on the Doctrine of Promissory Estoppel):

உறுதிமொழி முரண்தடையின்படி அரசாங்கமும், அதன் பிற நிருவாக அதிகார அமைப்புகளும் கொடுத்த வாக்குறுதிகளை மீற முடியாது என்றாலும், உறுதிமொழி முரண்தடையை அனைத்து சூழலிலும் அரசாங்கத்திற்கு எதிராக பயன்படுத்த முடியாது. அது சில வரம்புகளுக்கு உட்பட்டே அரசாங்கத்திற்கெதிராக இயங்கும். அதாவது அவ்வரம்புகளுக்குட்பட்ட சூழல்களில், அரசாங்கத்திற்கெதிராக உறுதி மொழி முரண்தடை இயங்காது என்றே கூற வேண்டும். அவ்வரம்புகள் வருமாறு,-

(1) பொது நலன் குறித்த விஷயங்களில் (In the matters of Public Interest): அரசாங்க நிருவாகத்தில் ஏற்பட்ட மாறுதல்களின் காரணமாகவும், பொது நலனின் அடிப்படையிலும் அரசாங்கம் தான் ஏற்கனவே கொடுத்த வாக்குறுதிகளை செயல்படுத்தாமல் இருக்கலாம் அல்லது மாற்றிக் கொள்ளலாம். இச்சூழலில், அரசாங்கத்திற்கெதிராக உறுதிமொழி முரண்தடையை நீதிமன்றம் செயற்படுத்தாது. ஏனெனில்,

2. A.I.R. 1956 Mad. 309.

ஒரு மக்கள் நல அரசில், பொது நலனை முன்னிட்டு, தனி நபர்கள் தங்கள் நலனை விட்டுக் கொடுக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

(2) சட்டமியற்றும் பணிகளுக்கு எதிராக (Against Legislative Functions): சட்டமியற்றும் அமைப்புகளான சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் பணிகளுக்கு எதிராக உறுதிமொழி முரண்தடையை செயற்படுத்த முடியாது. அதாவது அவை ஏற்கனவே இயற்றியுள்ள சட்டங்களை மாற்றவோ, திருத்தவோ அல்லது சூழ் நிலைக்கு உகந்த புதிய சட்டங்களை இயற்றவோ உறுதிமொழி முரண் தடையின் மூலம் தடை செய்ய முடியாது.

(3) சட்டமியற்றும் அல்லது விதியாக்க அதிகார ஒப்படைவில் (In Delegated Legislation): சட்டமியற்றுத் துறையால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின்படி நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் சட்டத்தின் வலிமையுடைய விதிகளை இயற்றுகின்றன. இந்தப்பணிக்கு எதிராகவும் உறுதிமொழி முரண்தடையை பிரயோகிக்க முடியாது. ஏனெனில் சட்டமன்றமும், பாராளுமன்றமும் தாங்கள் இயற்றிய தோற்றுவாய் சட்டத்தின் மூலம் எந்த நோக்கத்தை அடையக் கருதியதோ, அதனை அடையும் பொருட்டு நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் விதிகளை, துணை விதிகளை, ஒழுங்கு முறைகளை இயற்றுகின்றன. எனவே இதில் நீதிமன்றம் உறுதிமொழி முரண்தடையின் மூலம் தலையிட முடியாது.

(4) அதிகாரவரம்பு மீறிய வாக்குறுதி (Ultra vires Promise): ஒரு அரசு அலுவலர் சட்டத்தால் தனக்களிக்கப்பட்ட அதிகாரவரம்பை மீறி, வாக்குறுதி எதையும் செய்வாரானால், அங்கு உறுதிமொழி முரண் தடையை செயற்படுத்த முடியாது. இது அரசாங்கத்தின் ஒரு குறிப்பிட்ட துறை அளிக்கும் அதிகாரவரம்பு மீறிய வாக்குறுதிக்கும் பொருந்தும்.

(5) மோசடி செய்து பெறப்பட்ட வாக்குறுதி (Promise obtained by Fraud): அரசாங்கத்திடமிருந்து ஒரு வாக்குறுதியை மோசடி அல்லது திரித்துக்காட்டலின் மூலம் ஒருவர் பெறுவாரானால், அதற்கெதிராக உறுதிமொழி முரண்தடையை செயற்படுத்த முடியாது.

(6) தகைமை நெறியின் அடிப்படையில் (Equity): உறுதிமொழி முரண்தடை என்பது, தமைகை நெறியின் (நேர்மை, நியாயம், நன்மனச் சான்று) அடிப்படையில் எழும் கோட்பாடாகும். இத்தகைமை நெறியின் அடிப்படையில் உறுதிமொழி முரண்தடையை அரசாங்கத்திற்கெதிராக செயற்படுத்த முடியும். ஆனால் அதே சமயத்தில், இதே தகைமை நெறியின் அடிப்படையில் அரசாங்கம் தனக்கெதிராக உறுதிமொழி முரண்தடையை செயற்படுத்தக் கூடாது என்று கோரவும் முடியும். அதாவது, தான் வாக்குறுதியை மாற்றிக் கொண்டதற்கு நியாயம் கற்பிக்கும் வகையிலான சூழ்நிலைகளையும் பொருண்மைகளையும் அரசாங்கம் எடுத்துக் கூறினால், அங்கு உறுதிமொழி முரண்தடையை அரசாங்கத்திற்கெதிராக நீதிமன்றம் செயற்படுத்த முன்வராது.

முடிவுரை:

இந்திய நிருவாகமுறைச் சட்டத்தில் உறுதிமொழி முரண்தடை என்பது வளர்ந்து வரும் ஒரு கோட்பாடாகும். அது இன்னமும் முழுமையான வளர்ச்சியடையவில்லை. குழந்தைப் பருவத்திலேயே உள்ளது. அரசாங்கத்தின் பல்வேறு பணிகளுக்கும் உறுதிமொழி முரண் தடைக் கோட்பாட்டை பொருந்தும் வண்ணம் செய்ய வேண்டியது உச்ச நீதிமன்றத்தின் கைகளில் உள்ளது. அதற்குண்டான தெளிவான பாதையை வகுக்கவும், உறுதிமொழி முரண்தடையை அரசாங்கத்திற்கெதிராக செயற்படுத்துவதில் உள்ள அய்யப்பாடுகளை களையவும் உச்ச நீதிமன்றம் இனிவரும் காலங்களில் தனது ஆற்றல் மிகு தீர்ப்புகளின் வழியாக செயல்படும் என்று நம்புவோமாக.

பாராளுமன்ற நிருவாகமுறை ஆணையாளர் (அல்லது) ஆம்புட்ஸ்மன்

15

[Parliamentary Commissioner (or) Ombudsman]

55. What is the role of Ombudsman in remedying citizens grievances against the administration. (நிருவாகத்திற்கு எதிராக குடிமக்கள் முறையீடுகளை சரி செய்வதில் "ஆம்புட்ஸ்மன்" என்பவரின் பங்கு என்ன?)

(அல்லது)

Examine the role of Ombudsman in remedying citizen's grievances arising out of Mal-administration. (முறை தவறிய செயலாட்சியால் பாதிக்கப்பட்ட நபருக்கு பரிகாரம் வழங்குவதில் ஆம்புட்ஸ்மென் என்பவரின் பங்கு குறித்து ஆராய்க.)

(அல்லது)

"The quest for effective control over the administration lead the people to adopt the institution of Ombudsman". State the measures taken in India to introduce a similar system. ("நிர்வாகத்தின் மீது ஆற்றல் மிக்க கட்டுப்பாடு வேண்டும் என்கிற வேட்கைதான் மக்களை ஆம்புட்ஸ்மேன் என்ற அமைப்பை மேற்கொள்ளச் செய்தது". இது போன்ற ஒரு அமைப்பு ஏற்படுத்துவதற்கு இந்தியாவில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கூறுக.)

(அல்லது)

State the reasons for the necessity of having Ombudsman. (நாடாளுமன்ற ஆணையரை நியமித்தலுக்கான காரணங்களை எடுத்துரை.)

(அல்லது)

Explain the necessity, scope and function of the institution of 'Ombudsman'. ('ஆம்புட்ஸ்மன்' என்ற அமைப்பின் தேவை, நோக்கெல்லை மற்றும் அலுவல்களை விளக்குக.)

(அல்லது)

What is the need for an Ombudsman? In what way he will redress the grivances of an individual? Will the Office of Ombuds-

man succeed in Indian Political climate? ('ஆம்புட்ஸ்மன்' என்பரை நியமிக்க வேண்டியதவசியமா? அவர் எந்த விதத்தில் தனி ஒருவருடைய குறைபாடுகளைத் தீர்க்க முடியும்? இந்திய அரசியல் நிலையில் ஆம்புட்ஸ்மன் பதவி வெற்றியடையுமா?)

(அல்லது)

Who is 'Parliamentary Commissioner'? Compare proposed Lokpal powers and procedures. (நாடாளுமன்ற ஆணையர் என்பவர் யார்? வரவுள்ள லோக்பால் அமைப்பின் அதிகாரம் மற்றும் நடை முறையினை ஒப்பிடுக.)

(அல்லது)

(a) Who is an Ombudsman?
(b) What are the powers and limitations of the proposed Lokpal?

(அ) ஆம்புட்ஸ்மன் என்பவர் யார்?
(ஆ) வரவிருக்கும் லோக்பால் அமைப்பின் அதிகாரங்களும் வரை முறைகளும் யாவை?

(அல்லது)

Ombudsman - Write short notes. (ஆம்புட்ஸ்மன் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Lokpal - Write short notes. (லோக்பால் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

What is 'Lokpal'? Analyse similar institutions in practise. ('லோக்பால்' என்பது யாது? நடைமுறையிலுள்ள அதைப் போன்ற நிறுவனங்களை ஆய்க.)

(அல்லது)

Attempt an evaluation of the legislative attempts in India to establish a Lokpal as a mechanism against corruption and mal administration. (இந்தியாவில் லஞ்ச ஊழல் மற்றும் முறை கெட்ட செயலாட்சிக்கெதிராக லோக்பால் அமைப்பினை நிறுவிட சட்டமன்ற முயற்சிகளை மதிப்பீடு செய்து காட்டுக.)

(அல்லது)

What is "mal-administration"? Comment on the necessity of "Lokpal" in India. ("முறைகெட்ட செயலாட்சி" என்பது யாது? இந்தியாவிற்கு "லோக்பாலின்" அவசியத்தை விவாதிக்கவும்.)

ஆம்புட்ஸ்மன் (அல்லது) பாராளுமன்ற நிருவாகமுறை ஆணையாளர் - விளக்கம்:

நிருவாகத்துறை அதிகார அமைப்புகளிடம் (Administrative Authorities) மற்றும் முகவர் நிலைகளிடம் (Administrative Agencies) சட்டத்தால் மூவகை அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவை, (1) நிருவாகத்துறை அதிகாரங்கள் (Administrative Powers) (2) நீதித்துறை அதிகாரங்கள் (Judicial Powers) (3) விதியாக்க அதிகாரங்கள் (Legislative Powers). இந்த மூவகையான அதிகாரங்களைக் கொண்டு, நிருவாகத் துறையானது மனித சமுதாயத்தை அனைத்து வழிகளிலும் கட்டுப் படுத்துகின்றது. இந்த அதிகாரங்களை நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் துஷ்பிரயோகம் செய்துவிடாமல் இருப்பதற்காக, அவற்றின் மீது நீதித்துறையும், பாராளுமன்றமும் ஓரளவு கட்டுப்பாடுகளை விதித்து ஒழுங்குபடுத்துகின்றன. இவற்றையெல்லாம் நாம் ஆரம்ப அத்தியாயங் களில் விரிவாகக் கண்டுள்ளோம்.

மேற்கண்டவாறு நிருவாகத்துறை அதிகாரங்களின் மீது நீதித் துறையும் பாராளுமன்றமும் கட்டுப்பாடுகள் கொண்டிருந்தாலும், அவை பல சமயங்களில் போதுமானதாக இருப்பதில்லை. எனவே அந்த அதிகாரங்களை ஒழுங்குபடுத்துவதற்காக கண்டுபிடிக்கப்பட்ட **கட்டுப் பாட்டு செயலமைப்புத் திட்டம்தான் (Control Mechanism),** பிரான்சு நாட்டின் கன்சில் டெட்டா (Conseil d' Etat) ஆகும். அதை நாம் தொடக்கத்திலேயே பிரான்சு நாட்டிலுள்ள நிருவாகமுறை நீதிமன்றம் என்று கண்டோம். இத்தாலியிலும், மேற்கு ஜெர்மனியிலும் அதே முறை பின்பற்றப்படுகிறது. ஆனால் மற்றைய நாடுகளில் வேறு முறை கையாளப் படுகிறது. அந்த வேறு முறைதான் **'ஆம்புட்ஸ்மன்'** என்பதாகும். ஆங்கிலத்தில் 'ஆம்புட்ஸ்மன்' என்றால், **'அரசாங்க அலுவலர்'** என்று பொருளாகும். நிருவாகத்துறை அதிகார அமைப்புகளின் ஏதேச்சதிகாரப் போக்கினை கட்டுப்படுத்த நியமிக்கப்படும் உயர்தர அரசாங்க அலுவலர் என்ற காரணத்தால் 'ஆம்புட்ஸ்மன்' என்ற பதத்தை **'பாராளுமன்ற நிருவாகமுறை ஆணையாளர்' (Parliamentary Commissioner)** என்று தமிழில் கொள்ளலாம்.

இவரது பணியை சுருக்கமாக குறிப்பிட வேண்டுமெனில், இவர் முறை கெட்ட செயலாட்சிக்கு (mal-administration) எதிராகக் கூறப் படும் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்து, நிருவாகத் துறையினரின் ஏதேச்சதிகாரப் போக்கிலிருந்து குடிமக்களைப் பாதுகாக்கிறார்.

ஆம்புட்ஸ்மன் எனும் அமைப்பின் தேவை (The Necessity of the Institution of Ombudsman) ஆம்புட்ஸ்மன் எனும் அமைப்பு உருவாக்கப் பட்டதற்கான காரணங்கள் (Reasons for the creation of the institution of Ombudsman):

நாம் சென்ற பத்திகளில் கண்டவாறு, நிருவாகத்துறை அதிகாரங்

களின் மீது நீதித்துறையும், பாராளுமன்றம் கொண்டுள்ள கட்டுப்பாடுகள் போதுமானதாக இல்லை. அவை நிருவாகத்துறையின் அதிகாரங்களை முழுதளவில் கட்டுப்படுத்தவில்லை. ஒருபுறம் நாளுக்கு நாள் நிருவாகத் துறையின் அதிகாரங்கள் கூடிக் கொண்டே செல்கின்றன. மற்றொரு புறம், அந்த அதிகாரங்களை, நிருவாகத்துறை அலுவலர்கள் துஷ்பிர யோகம் செய்வதும் கூடிக்கொண்டே போகிறது.

பின்வரும் பல்வேறு காரணங்களால் நீதித்துறை தனது கட்டுப் பாட்டை நிருவாகத்துறை அதிகாரங்களின் மீது முழுமையாக செயல் படுத்த முடியவில்லை. அவை

(1) நிருவாகத்துறை அதிகார அமைப்புகளால் தீர்மானிக்கப்பட்ட பொருண்மைகளை (facts) நீதிமன்றம் மறுஆய்வு செய்ய முடிவதில்லை;

(2) நிருவாகத்துறையின் ஏதேச்சதிகாரத்திற்கு எதிராக ஒருவர் வழக்கு தொடுத்தால், அதனை நிரூபிக்க வேண்டிய கடமை, வழக்கு தொடுத்த அவர் மீதுதான் முழுமையாக உள்ளது. பல சமயங்களில் நிருவாகத்துறையின் முறைகெட்ட செயலாட்சியை வழக்கு தொடுக்கும் நபரால் நிரூபிக்க முடிவதில்லை. ஏனெனில், அரசாங்கம் தனது பதிவேடுகளையும், ஆவணங்களையும், குறிப்புகளையும் நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்வதிலிருந்து விதிவிலக்க சிறப்புரிமை கோருகின்றது.

(3) பெரும்பாலான தன்விருப்புரிமை அதிகாரங்கள் அமைச்சர் களின் கையில் உள்ளது. எனவே அவை நீதிமுறை மறுஆய்விலிருந்து எளிதில் தப்பி விடுகின்றன. இதனால், அமைச்சர்கள் பொது நலன் எனும் போர்வையில் தனிநபர்களின் உரிமைகளை மதிக்காமல் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தன்விருப்புரிமை அதிகாரங்களை பயன்படுத்தி பல தவறுகளைச் செய்கின்றனர். அத்தவறுகளை முறைகெட்ட செயலாட்சி என்று அழைத்தாலும், அவற்றை சட்ட விரோதமானது என்று எளிதில் கூறி விட முடியாது. ஏனெனில் தன்விருப்புரிமை அதிகாரத்தில் நீதித் துறை குறுக்கிடுவதில்லை. அநீதி இழைக்கப்பட்டாலுமே, சம்பந்தப் பட்ட நடைமுறை ஒழுங்காகப் பின்பற்றப்பட்டிருக்குமாயின், சட்ட நிபந்தனைகள் நிறைவு பெற்றுவிடும்.

(4) நிருவாகத்துறை அதிகார அமைப்புகளில் படிப்படியான கட்டுப் பாடுகள் காணப்படுகின்றன. ஆனால் அவற்றில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, நிருவாகத்துறை அதிகார அமைப்பில் உள்ள ஒரு அலுவலர் செய்யும் முடிவை மறுஆய்வு செய்யுமாறு அவருக்கு மேல் உள்ள அலுவலரைக் கோரலாம். இவ்வாறாகப் படிப் படியாக அரசாங்கம் வரை மறுஆய்வு (review) செய்யுமாறு கேட்டு மனுச் செய்யலாம். ஆனால், இத்தகைய மறுஆய்வில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை. நிருவாகத்துறை அதிகார அமைப்பின் ஒரு அங்கம் செய்த முடிவை மற்றோர் அங்கம் மாற்றும் என்று பொதுவாக எதிர்பார்க்கப்படுவதில்லை. கீழ் அங்கம் செய்த முடிவை மேல் அங்கம்

பொதுவாக ஊர்ஜிதம் செய்யும் என்றே மக்கள் நினைக்கிறார்கள். எனவே இதுவும் தோல்வியடைந்த ஒரு கட்டுப்பாடாகவே விளங்குகிறது என்று கூறினால் அது மிகையன்று.

(5) நிருவாகத்துறை அதிகார அமைப்பால் எடுக்கப்படுகின்ற எந்த முடிவிற்கும் அது காரணங்களைக் கூற வேண்டிய அவசியமில்லை. இதனால் அதன் நடைமுறைகளையும், நடவடிக்கைகளையும் மக்கள் அய்யக் கண்களுடனே பார்க்கின்றார்கள்.

அதுபோல் பாராளுமன்றக் கட்டுப்பாடுகளும் திறம்பட இல்லை. ஏனெனில், பாராளுமன்றமும், சட்டமன்றங்களும் வேலைப்பளுவின் காரணமாகவும், காலமின்மை காரணமாகவும் நிருவாகத்துறை அதிகார அமைப்புகளுக்கு விதிகள் செய்யும் அதிகாரங்களை அளிக்கின்றன (delegation of legislative powers). ஆனால், அவை போதுமான கொள்கை (policy) விளக்கத்துடனும், வழிகாட்டும் நெறிகளுடனும் (guide lines), தரநிலைகளுடனும் (standards) அளிக்கப்படுவதில்லை. இதனால், நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் தங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்ய ஏதுவாகின்றது. மேலும் நிருவாகத்துறையின் அதிகார துஷ்பிரயோகத்திற்கு எதிரான தனி நபர்களின் குறைகள் பாராளுமன்ற அல்லது சட்டமன்ற அவையில் விவாதிக்கப்படுவதுமில்லை.

இந்நிலையில்தான் ஏதேச்சதிகாரமாக செயல்படும் முறைகெட்ட செயலாட்சியைக் கட்டுப்படுத்த, குறிப்பாக நீதிமுறைக் கட்டுப்பாடுகளை செயலாக்க முடியாத நிருவாகத்துறை சார்ந்த பகுதிகளைக் கட்டுப்படுத்த, திறம் மிகுந்த ஒரு அமைப்பை உருவாக்கிட வேண்டும் என்ற எண்ணம் எழுந்ததின் விளைவாக உருவாக்கப்பட்டதுதான் **'ஆம்புட்ஸ்மன்'** எனும் அமைப்பாகும்.

முதன்முதலாக இந்த அமைப்பு 1809-ஆம் ஆண்டில் சுவீடன் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, அங்கு ஆம்புட்ஸ்மன் நியமனம் செய்யப்பட்டார். பின்னர் ஃபின்லாந்தில் 1909-ஆம் ஆண்டிலும், அதைத் தொடர்ந்து டென்மார்கில் 1953-ஆம் ஆண்டிலும், நார்வே நாட்டில் 1963-ஆம் ஆண்டிலும், ஆம்புட்ஸ்மன் நியமனம் செய்யப்பட்டார். பாராளுமன்ற சனநாயம் நிலவிவரும் நியுசிலாந்து நாட்டில் 1962-ஆம் ஆண்டிலும், இங்கிலாந்தில் 1966-ஆம் ஆண்டிலும் இந்த ஆம்புட்ஸ்மன் முறை ஏற்கப்பட்டது. இந்தியாவில் இந்த அமைப்பு சில மாநிலங்களில் **(லோகயுக்தா -Lokayukta)** உருவாக்கப்பட்டது. ஆனால் மத்தியில் இந்த அமைப்பு **(லோக்பால் -Lokpal)** இன்னுமும் செயல்வடிவம் பெறவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் 'ஆம்புட்ஸ்மன்' எனும் அமைப்பு வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டாலும், 'ஆம்புட்ஸ்மன்' அல்லது **'பாராளுமன்ற நிருவாகமுறை ஆணையாளர்'** என்பதை பொதுப் பெயராகக் கொள்ளலாம்.

தனி ஒருவரின் குறைகளை ஆம்புட்ஸ்மன் தீர்க்கும் விதம் (The way in which Ombusman redress the grivances of an individual) (அல்லது) ஆம்புட்ஸ்மன் முறையின் சிறப்பம்சங்கள் (Salient Features of Ombudsman System) (அல்லது) ஆம்புட்ஸ்மன் ஆற்றும் பணிகள் (The Functions of Ombudsman):

ஆம்புட்ஸ்மன் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டதின் முக்கிய நோக்கமே, முறைகெட்ட செயலாட்சியை (mal-administration) கட்டுப் படுத்துவதுதான். இந்த முறையின் முக்கிய சிறப்பம்சமே, ஆம்புட்ஸ் மனிடம் நிருவாகத்துறையின் முறைகெட்ட செயலாட்சி குறித்து கூறப்படும் புகாரை, அவ்வாறு புகார் செய்யும் புகார்தாரர் நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. இதனால் அதற்குண்டான சாட்சியங்களை அளிக்க வேண்டியதுமில்லை. இங்கு அப்புகார்தாரரின் (Complainant) வழக்குரைஞராக ஆம்புட்ஸ்மன் செயல்படுகிறார். அவரே அப்புகார் சரியானதா இல்லையா என்பதைக் கண்டறிய விசாரணை செய்கிறார். மேலும் ஆம்புட்ஸ்மனிடம் அளிக்கப்படும் புகாருக்கு, புகார்தாரர் நீதி மன்றக் கட்டணம் எதையும் செலுத்த வேண்டியதில்லை. ஆம்புட்ஸ்மன் செய்யும் விசாரணையும், எந்த விளம்பரமும் இல்லாமல், சட்ட நடை முறைகளும் இல்லாமல் செய்யப்படுகிறது. எனவே ஆம்புட்ஸ்மன் அமைதியாக, மௌனமாக செயல்படுகிறார் என்று கூற வேண்டும். இதனால், அரசாங்கத்திடம் முகத்திலடித்தாற் போல் எதையும் கேட்காமல், தவறுகளைத் திருத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.. இத்தோடு மட்டுமில்லாமல், அரசாங்க நிருவாகத்தின் எந்த அங்கத் திலாவது முறை கெட்ட செயலாட்சி நடைபெறுவதாக, ஆம்புட்ஸ்மன் உணர்ந்தால், அவரே தன்னிச்சையாக அது குறித்து விசாரணையை (suo-mottu enquiry) தொடங்கலாம். யாரும் புகார் செய்ய வேண்டுமென்ற அவசியமும் இல்லை. பொதுவாக புகார் செய்த புகார்தாரருக்கு வேறு வழிகளில் போதுமான தீர்வழி கிடைக்க வாய்ப்பிருந்து, அவர் அதனையும் நாடியிருப்பின், அந்தப் புகாரை ஆம்புட்ஸ்மன் தனது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளமாட்டார்; அப்புகாரை நிராகரிக்க அவருக்கு உரிமையுண்டு.

ஆம்புட்ஸ்மன் எந்த உத்திரவையும் பிறப்பிக்கவோ அல்லது முடிவையும் எடுக்கவோ அதிகாரம் படைத்தவர் அல்லர். எனவே, அவர் சம்பந்தப்பட்ட புகாரை பரிசீலனை செய்ததின் அடிப்படையில் அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட நிருவாகத்துறைக்கு பரிந்துரைகள் மட்டுமே செய்ய முடியும். இந்தக் குறைபாட்டின் காரணமாக, ஆம்புட்ஸ்மன் எனும் அமைப்பு, **"குலைக்கும் காவல் நாய்; ஆனால் கடிக்காது"** எனும் ஒரு அவப்பெயரை எடுத்துள்ளது என்றே கூற வேண்டும். ஆம்புட்ஸ்மன் தனது பணிகள் பற்றிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திடம் ஆண்டுதோறும் சமர்பிக்க வேண்டும். அப்பொழுது, ஆம்புட்ஸ்மன் செய்த ஒரு குறிப்பிட்ட பரிந்துரையின் அடிப்படையில்

சம்பந்தப்பட்ட நிருவாகத்துறையானது எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லையானால், அது குறித்து அறிக்கையை அவர் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிப்பார். இவ்வாறாக ஆம்புட்ஸ்மன் எனும் அமைப்பு தனி நபர்களின் குறைகளை தனது சுதந்திரமான விசாரணையின் மூலம் களைந்து, முறைகெட்ட செயலாட்சியினால் அதிருப்தி அடைந்த பொது மக்களுக்கு நலம் பயக்கிறது.

முறைகெட்ட செயலாட்சி (Mal-administration) - விளக்கம்:

நாம் இதுகாறும் கண்ட பத்திகளில் 'முறைகெட்ட செயலாட்சி' எனும் பதம் அடிக்கடி வருவதைக் கண்டோம். முறைகெட்ட செயலாட்சி என்றால் என்ன? அரசாங்க நிருவாகத்துறையானது தனது செயல் பாட்டில், நடவடிக்கைகளில் அல்லது நடைமுறைகளில் மனச்சாய்வு கொள்ளுதல் (bias) , கவனமின்மையாக செயல்படுதல் (negligence), நடவடிக்கை எடுக்காமல் செயலற்றிருத்தல் (inaction), காலதாமதம் (delay), நடவடிக்கை எடுக்கத் தகுதியற்று இருக்கும் பொழுது நடவடிக்கை எடுத்தல் (அதிகாரவரம்பின்றி செயல்படுதல்) (incompetence), முறைகெட்டு செயல்படுதல் (perversity), ஏதேச்சதிகாரமாக செயல் படுதல் (arbitrary action), அநீதி விளைவித்தல் (injustice), துன்பம் விளைத்தல் (oppression), அதிகார துஷ்பிரயோகம் செய்தல் (misuse of power), நியாயமில்லாத வகையில் செயல்படுதல் (unreasonableness), தீயெண்ணத்துடன் செயல்படுதல் (malafide) ஆகியவையே முறைகெட்ட செயலாட்சியாகும். இவற்றிற்கெதிரான புகார்களை விசாரித்து, குறைகளை களையும் அமைப்பே ஆம்புட்ஸ்மன் ஆகும்.

இங்கிலாந்து நாட்டில் ஆம்புட்ஸ்மன் முறை (The Ombudsman system in England):

இங்கிலாந்தில் ஆம்புட்ஸ்மன் **'பாராளுமன்ற ஆணையாளர்' (Parliamentary Commissioner)** என்று அழைக்கப்படுகிறார். இவர் முக்கியமாக முறைகெட்ட செயலாட்சியை குறித்த புகார்களை மட்டுமே விசாரணை செய்வார். எனினும், முறைகெட்ட செயலாட்சியினால் பாதிக்கப்பட்ட ஒருவர், ஆம்புட்ஸ்மனிடம் நேரடியாக புகார் செய்ய முடியாது. அவர் அப்புகாரை பொதுமக்கள் அவையின் ஒரு உறுப் பினரின் வழியாக ஆம்புட்ஸ்மனுக்கு அனுப்ப வேண்டும். வீணாண குற்றச்சாட்டுகள் கூறி அனுப்பப்படும் புகார்களை பரிசீலனை செய்து தடுப்பதற்காகவே மேற்கண்டவாறு பொதுமக்கள் அவையின் உறுப் பினர் வழியாக அனுப்பும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. புகார் செய் வதற்கான காலவரம்பு, முறைகெட்ட செயலாட்சி நடைபெற்றதாக கூறப்படும் தேதியிலிருந்து ஓராண்டு ஆகும். அதற்குள் புகாரை ஆம்புட்ஸ்மனுக்கு அனுப்புதல் வேண்டும்.

ஆம்புட்ஸ்மனின் அதிகார வரம்பிற்குள் வரக்கூடிய நிருவாகத் துறை அதிகார அமைப்புகள் குறித்து, 1967-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட

பாராளுமன்ற ஆணையர் சட்டத்தின் (The Parliamentary Commissioner Act, 1967) இரண்டாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன. பின்வரும் விஷயங்கள் ஆம்புட்ஸ்மனின் அதிகாரவரம்பிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளன. அவை குறித்து எந்த விசாரணையையும் அவர் மேற்கொள்ளமாட்டார். அவை (1) நாட்டின் பாதுகாப்பு; (2) வெளிநாட்டு விவகாரங்கள்; (3) பதக்கங்கள் மற்றும் பட்டங்களை அளித்தல்; (3) காலனி ஆட்சிப் பகுதியின் நிருவாகம்; (4) குற்றங்களைப் புலனாய்வு செய்தல்; (5) வெளிநாட்டு குற்றவாளிகளை மீட்டெடுப்படைத்தல்; (6) கருணை காட்டும் அரசுச் சிறப்புரிமைகள்; (7) வணிகம் மற்றும் ஒப்பந்தம் குறித்த நடைமுறைகள்; மற்றும் (8) அரசாங்க அலுவலர்கள் மற்றும் ஆயுதந் தாங்கிய படை வீரர்கள் குறித்த விஷயங்கள். மேலும் சாதாரண நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிற்குட்பட்ட விஷயங்கள் மீதும் ஆம்புட்ஸ்மன் எவ்வித நடவடிக்கையையும் பொதுவாக மேற்கொள்ள மாட்டார்.

இந்திய நாட்டில் ஆம்புட்ஸ்மன் முறை (The Ombudsman system in India):

பாராளுமன்ற சனநாயகத்தைப் (Parliamentary Democracy) பெற்ற நாடுகளாகிய இங்கிலாந்திலும், நியூசிலாந்திலும் ஆம்புட்ஸ்மன் (பாராளுமன்ற நிருவாகமுறை ஆணையாளர்) வெற்றிகரமாக செயல் பட்டு வரும் பொழுது, ஏன் அத்தகைய பாராளுமன்ற சனநாயகத்தைப் பெற்ற இந்திய நாட்டிலும் ஆம்புட்ஸ்மன் நியமிக்கப்படக் கூடாது என்ற வினா எழுந்தது.

எனவே, **நிருவாகமுறைச் சீர்திருத்த ஆணையம் (Administrative Reforms Commission)**, தன்னுடைய 1966-ஆம் ஆண்டின் **"குடிமக்களின் குறைகளைக் களைதல் பற்றிய பிரச்சனைகள்" (Problems of Redressal of Citizens Grievances)** என்ற தலைப்பிட்ட அறிக்கையில், தற்பொழுது மலிந்து காணப்படும் நிருவாகமுறை ஊழல்களையும் (administrative corruption), முறைகெட்ட செயலாட்சியையும் (mal-administration), தீச்செயல்களையும் (delinquencies), தவறவிட்ட நிலைகளையும் (lapses), தோல்விகளையும் (failures), தவறான ஒழுங்கு முறைகளையும் (improprieties) மற்றும் விரும்பப்படுகின்ற நிருவாக முறை நாணயம் (probity), ஒழுங்குமுறை (propriety), இயக்குதிறம் (efficiency) ஆகியவைகள் பற்றிய தரநிலைகளின் பற்றாக்குறைகளையும் (lack of standards) சேகரித்து எடுத்துக்காட்டி, அவைகளை ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. அது பிரச்சனையை இரண்டு நிலைகளாகப் பிரித்துக் கொண்டது. அவை,-

(1) அமைச்சர்களும், அவர்களோடு நெருங்கிப் பணியாற்றும் அரசாங்க செயலாளர்களும் தவறான ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்தல் மற்றும் தவறுகள் புரிதல்;

(2) அரசாங்க பொது அலுவலர்களும், அதிகாரத்தில் உள்ள மற்றவர்களும் தீச்செயல்கள் புரிதல்.

மேற்கண்ட இரண்டு நிலைகளிலும் தீச்செயல்கள் புரியப்படுகின்றன. இதனால் மக்கள் அவதியுறுகின்றனர். இரண்டு நிலைகளிலும் குற்றம் புரிபவர்களைத் தட்டிக் கேட்பதற்கும், மக்களின் உரிமைகளை மதித்து நடக்கச் செய்வதற்கும், மக்களின் குறைகள் களையப்படுவதற்கும் சுதந்திரமாக இயங்கும் ஆம்புட்ஸ்மன் போன்ற பாராளுமன்ற நிருவாக முறை ஆணையாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற முடிவிற்கு நிருவாகமுறைச் சீர்திருத்த ஆணையம் வந்தது. இதன் காரணமாக இந்தியாவில் மத்திய அரசைப் பொறுத்து **லோக்பால் (Lokpal)** என்ற ஆம்புட்ஸ்மனும், மாநில அரசாங்கங்களைப் பொறுத்து **லோகயுக்தா (Lokayukta)** எனும் ஆம்புட்ஸ்மனும் நியமிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்தது. இந்த இரண்டு ஆம்புட்ஸ்மன் முறைகள் குறித்து பின்வருமாறு சற்று விரிவாகக் காண்போமா?

லோக்பால் - மத்திய அரசு ஆம்புட்ஸ்மன் (Lokpal - The Indian Ombudsman):

நிருவாகமுறை சீர்திருத்த ஆணையம் மேற்கண்டவாறு செய்த பரிந்துரையானது இந்திய அரசால் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப் பட்டது. அந்த வகையில் லோக்பால் மற்றும் லோகயுக்தா எனும் ஆம்புட்ஸ்மன் அமைப்புகளை உருவாக்கிட மசோதா (Lokpal and Lokayukta Bill) ஒன்று 1968-ஆம் ஆண்டில் இந்தியப் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக 1969-ஆம் ஆண்டில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால், அம்மசோதா தவற விடப்பட்டது (allowed to lapse). பின்னர் 1971-ஆம் ஆண்டில் அம் மசோதா மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையும் அம் மசோதா தவறவிடப்பட்டது. பின்னர் 1977-ல் பதவி ஏற்ற சனதா அரசாங்கம் (Janata Government) அம்மசோதாவில் பல முக்கிய மாற்றங்களைச் செய்து, அதனை மீண்டும் அறிமுகப்படுத்தியது. ஆனால் பாராளுமன்றக் கலைப்பினால், இம்முறையும் அம்மசோதா தவற விடப்பட்டது. பின்னர், 1985-ஆம் ஆண்டில் அம்மசோதாவைப் போன்ற மற்றொரு மசோதா பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த மசோதாபடி, லோக்பால் எனும் மத்திய அரசு ஆம்புட்ஸ்மனின் அதிகாரவரம்பிலிருந்து பிரதம அமைச்சர் (Prime Minister) உள்ளிட்ட சிலர் விலக்கி வைக்கப்பட்டனர். எதிர்கட்சியினர், பிரதம அமைச் சரையும் லோக்பாலின் அதிகாரவரம்பிற்குள் சேர்க்க வேண்டும் என்று விவாதம் செய்தனர். மேலும் அம்மசோதாவில் சில திருத்தங்களையும் பரிந்துரைத்தனர். ஆனால் அவற்றை ஆளும் கட்சியினர் ஏற்றுக் கொள்ள வில்லை. எனவே அம்மசோதா பாராளுமன்றத்தின் கூட்டுத் தேர்வுக் குழுவின் (Joint Select Committee of the House) அபிப்பிராயத்திற் காக அனுப்பப்பட்டது. இந்நிலையில் நியாயமான எக்காரணமும்

இல்லாமல் திடீரென 1988-ஆம் ஆண்டில் அப்பொழுதைய அரசாங்கம் அம்மசோதாவை திரும்பப் (வாபஸ்) பெற்றுக் கொண்டது. எனவே மத்திய அரசில் லோக்பால் எனும் ஆம்புட்ஸ்மன் அமைப்பை உருவாக்கும் எண்ணமே ஆழக் குழி தோண்டி புதைக்கப்பட்டது. அம்மசோதாவை திரும்பப் பெற்றுக் கொள்வதில் அப்பொழுதைய அரசாங்கம் மிகவும் வேகம் காட்டியது. இந்த அதீத வேகம், இனிவரும் காலத்தில் மத்திய அரசில் லோக்பால் எனும் ஆம்புட்ஸ்மன் அமைப்பையே உருவாக்கக் கூடாது என்ற கருத்தையே சுட்டிக் காட்டுகிறது. எனினும் மாநிலங்களில் லோகயுக்த எனும் ஆம்புட்ஸ்மன் அமைப்பு உருவாக்கப்பட்டது.

லோக்பாலின் நியமனம், பணிகள் மற்றும் பதவிக்காலம்: நிருவாக முறை சீர்திருத்த ஆணையம் மேற்கண்டவாறு செய்த பரிந்துரையின்படி, லோக்பால் எனும் ஆம்புட்ஸ்மன் இந்தியக் குடியரசுத் தலைவரால் இந்திய பிரதம மந்திரியின் அறிவுரையின் பேரில் நியமிக்கப்படுவார். இவ்வாறு அறிவுரை வழங்குவதற்கு முன்னர், பிரதம அமைச்சர் இந்தியத் தலைமை நீதிபதியையும், பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவரையும் கலந்து பேசி முடிவெடுப்பார்.

லோக்பால் சுதந்திரமாக, அலுவலர்களின் இழுப்புக்கும், அழுத்தத் திற்கும் (pull and pressure) இளகாமல், நடுநிலையாகச் செயல்படுவார். அவருடைய பணி, அமைச்சர்கள் மற்றும் அரசாங்க செயலாளர்கள் குறித்து உரிய முறையீடுகளின் பேரில் புலனாய்வு (investigation) செய்வதும், தவறுகள் கண்டறியப்பட்டால் அவற்றை திருத்திக் கொள்ளக் கோருவதும், தீர்வழி கூறுவதுமாகும். யார் தீர்வழி அளிக்க வேண்டுமோ அவர் தீர்வழிக்கு வகை செய்யவில்லையானால் அல்லது தவறுகளை திருத்திக் கொள்ளாவிட்டால், அது குறித்து இந்திய பிரதம மந்திரிக்கு அல்லது மாநில முதலமைச்சருக்கு எது பொருந்துமோ அவ்வாறு அறிவிப்பார். இந்திய பாராளுமன்றத்திற்கும், மாநிலச் சட்டமன்றங் களுக்கும் அனுப்பப்படும் அறிக்கையிலும் அவைகளைப் பற்றி கூறியிருப் பார்.

அவர் சான்றுரைக்கச் சாட்சிகளை அழைப்பதற்கும், அரசாங்க பதிவேடுகளையும், ஆவணங்களையும் ஆய்வு செய்வதற்கும் அதிகாரம் படைத்தவர். செய்யப்படும் புகாரானது (Complaint), ஆதாரமில்லாமல் அமைச்சர்களுடைய அல்லது அரசுச் செயலாளர்களுடைய பெயருக்கு மாசு கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்பட்டிருந்தால், அதனை அவர் ஏற்க மறுத்துவிடுவார். மேலும் அவருடைய அதிகார வரம்பிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ள விஷயங்களின் மீதான புகார்களை அவர் ஏற்கமாட்டார். புகார்களுக்கு காரணங்களுடன் பதிலுரைப்பார்.

லோக்பாலின் பதவிக்காலம் அய்ந்தாண்டுகள் ஆகும். அவர் பதவி விலகிய பின்பு வேறு எப்பதவியையும் வகிக்கத் தகுதியற்றவராவார்.

லோகயுக்தா – மாநில அரசு ஆம்புட்ஸ்மன் (Lokayukta - The State Ombudsman):

முந்தய பத்திகளில் கூறப்பட்டபடி, மத்திய அரசில் லோக்பால் எனும் ஆம்புட்ஸ்மன் அமைப்பை உருவாக்கும் முயற்சிகள் தோல்வியடைந்தாலும், இந்தியாவின் பல மாநிலங்களிலும் லோகயுக்தா எனும் மாநில அரசு ஆம்புட்ஸ்மன் அமைப்பை உருவாக்கிட சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்த வகையில் 1970-ஆம் ஆண்டில் லோகயுக்தா எனும் ஆம்புட்ஸ்மன் அமைப்பை உருவாக்கிட சட்டம் (The Lokayukta Act) நிறைவேற்றிய முதல் மாநிலம் எனும் பெருமையை, ஒரிஸ்ஸா மாநிலம் தட்டிச் சென்றது. ஆனால் இதுகாறும் அங்கு எவரும் லோகயுக்தாவாக நியமனம் செய்யப்படவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. 1971-ஆம் ஆண்டில் மகாராஷ்டிரா மாநிலம் லோகயுக்தா சட்டத்தை நிறைவேற்றி, 1972-ஆம் ஆண்டில் தகுதி வாய்ந்த ஒருவரை முதல் லோகயுக்தா-வாக நியமனம் செய்தது. அதுபோல் 1973-ஆம் ஆண்டில் இராஜஸ்தான் மாநில அரசு லோகயுக்தா சட்டத்தை நிறைவேற்றி, அதே ஆண்டிலேயே ஒருவரை முதல் லோகயுக்தா-வாக நியமனம் செய்தது. உத்திரப்பிரதேசத்தில் 1975-ஆம் ஆண்டில் லோகயுக்தா சட்டம் நிறைவேற்றப்பட்டு, முதல் லோகயுக்தா 1977-ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்டார். கர்நாடக மாநிலத்தில் 1979-ஆம் ஆண்டில் லோகயுக்தா சட்டம் நிறைவேற்றப்பட்டு, அதே ஆண்டிலேயே முதல் லோகயுக்தா நியமனம் செய்யப்பட்டார். குஜராத்தில் 1975-ஆம் ஆண்டிலும், ஹிமாச்சல பிரதேசத்தில் 1975-ஆம் ஆண்டிலும், ஆந்திரப் பிரதேசத்தில் 1983-ஆம் ஆண்டிலும் லோகயுக்தா சட்டம் நிறைவேற்றப்பட்டது. மேற்கண்ட மாநிலச் சட்டங்களில், கர்நாடாக மாநில லோகயுக்தா சட்டத்தில் மட்டுமே, லோகயுக்தாவின் அதிகாரவரம்பிற்குள் அம்மாநில முதலமைச்சரும் சேர்க்கப்பட்டார். மேலும் சில மாநிலங்களில் **உப (துணை) லோகயுக்தா (Uplokayuktas)** நியமனம் செய்யப்பட்டனர்.

லோகயுக்தாவின் நியமனம், பணிகள் மற்றும் பதவிக்காலம்: நிருவாகமுறை சீர்திருத்த ஆணையம் செய்த பரிந்துரையின்படி, லோகயுக்தா, லோக்பாலின் அறிவுரையின் பேரில் இந்தியக் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவார். ஆனால் இந்தியாவில் லோக்பால் எனும் அமைப்பை உருவாக்கும் முயற்சி தோல்வியுற்றதால், பல்வேறு மாநிலங்களில் இயற்றப்பட்ட லோகயுக்தா சட்டத்தில் பொதுவாகக் கூறப்பட்டுள்ளபடி, மாநில ஆளுநர் மாநில உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியையும், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவரையும் கலந்தாலோசித்து தகுதி வாய்ந்த ஒருவரை லோகயுக்தா-வாக நியமனம் செய்வார். அவர் பாராளுமன்றத்திலோ அல்லது சட்டமன்றத்திலோ உறுப்பினராகவோ, அரசியல் கட்சிகளில் உறுப்பினராகவோ இருத்தல் கூடாது. பதவிக் காலத்தில் எத்தொழிலிலும் ஈடுபடக் கூடாது. ஊதியம் பெறும்

அலுவலிலும் ஈடுபடக் கூடாது. அவர் லோகயுக்தா-வாக அய்ந்தாண்டு காலம் பதவி வகிப்பார். பின்னர் அரசின் கீழ் வேறு எந்தப் பதவியையும் வகிக்கத் தகுதியற்றவராவார். அவருக்கு ஊதியமும் ஓய்வூதியமும் உண்டு. அவரது தவறான நடத்தை (misbehaviour) காரணமாகவோ அல்லது பதவி வகிக்க திறனின்மை (incapacity) ஏற்பட்டதன் காரணமாகவோ, அவரைப் அப்பதவியிலிருந்து நீக்கலாம்.

லோகயுக்தா பின்வரும் பணிகளைச் செய்வார். அவை, (1) மாநில அமைச்சர்கள், அரசாங்க செயலாளர், மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது வேறு எந்த பொது அலுவலர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது அவர்களது அனுமதியின் பேரில் மற்றவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கை பொது மக்களை பாதிக்கும்படியாக இருந்து, அப்பொதுமக்களில் ஒருவர் லோகயுக்தாவிடம் புகார் செய்வாரேயானால், அது குறித்து அவர் புலனாய்வு செய்வார். (2) நிருவாகத்துறை அதிகார அமைப்புகள் மற்றும் அதன் அலுவலர்களின் செயல்பாட்டை கண்காணிப்பார். (3) அரசாங்க அலுவலர்களின் ஊழல் குறித்த புகார்களை (corruption) புலனாய்வு செய்வார். (4) மாநில ஆளுநர் ஏவுரைக்கும் எந்த விஷயம் குறித்தும் புலனாய்வு மேற்கொள்வார்.

லோகயுக்தாவின் அதிகாரவரம்பிலிருந்து பின்வரும் விஷயங்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளன. அவை, (1) குற்றங்களைப் புலனாய்வு செய்தல்; (2) மாநிலப் பாதுகாப்பு; (3) ஒரு விஷயத்தை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லலாமா, கூடாதா என்பதைத் தீர்மானித்தல் பற்றிய நடவடிக்கை; (4) வணிகம் மற்றும் ஒப்பந்தம் குறித்த நடைமுறை; (5) அரசாங்கப் பணிகளில் அலுவலர்களை நியமித்தல் மற்றும் வேலை நீக்கம் செய்தல் பற்றிய நடவடிக்கை; (6) பொது விசாரணைக்கு (Public inquiry) உத்திரவிடப்பட்ட விஷயங்கள்; (7) 1952-ஆம் ஆண்டின் விசாரணை ஆணையங்கள் சட்டத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை.

மேலும் லோகயுக்தா போதுமான மாற்றுத் தீர்வழிகள் (adequate alternative remedies) உள்ள புகார்களையும், நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்யப்பட்ட புகார்களையும் தனது புலனாய்விற்கு எடுத்துக் கொள்ளமாட்டார். அதுபோல் அரசாங்கத்தின் எந்நடவடிக்கைக்காக புகார் கூறப்பட உள்ளதோ, அந்நடவடிக்கை குறித்து புகார்தாரரின் அறிவுக்கு எட்டிய தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் (இக்காலகட்டம் லோகயுக்தா குறித்து இயற்றப்பட்ட மாநிலச் சட்டங்களைப் பொறுத்து மாறுபடக் கூடியதாகும். இங்கு கூறப்பட்டுள்ள 'ஆறு மாத காலம்' கர்நாடக மாநில லோகயுக்தா சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரம்பாகும்.) அவர் லோகயுக்தாவிடம் புகார் செய்தல் வேண்டும். இக்காலத்தை கடந்து செய்யப்படும் புகார்களை அவர் ஏற்றுக் கொள்ள மறுக்கலாம். எனினும் காலதாமதம் ஏற்பட்டதற்கு போதுமான காரணங்கள் விளக்கப்பட்டால், அப்புகாரை லோகயுக்தா ஏற்றுக்

கொள்ளலாம். மேலும் ஆதாரமின்றி தீய நோக்கத்துடன் செய்யப்படும் புகார்களை லோகயுக்தா ஏற்க மறுத்துவிடுவார்.

சாட்சிகளை அழைப்பாணையின் பேரில் அழைத்து விசாரிப்பதிலும், அரசாங்க பதிவேடுகளையும், ஆவணங்களையும் பெற்று ஆய்வு செய்வதிலும் ஒரு உரிமையியல் நீதிமன்றத்திற்கு (Civil Court) எத்தகு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளனவோ, அதே அதிகாரங்களை லோகயுக்தா-வும் பெற்றவர் ஆவார். அவர் விசாரணை செய்யும் இடம் அனைவரின் பார்வைக்கும் திறந்து வைக்கப்படமாட்டாது. விசாரணை நடைமுறை, நீதிமன்ற நடவடிக்கையை ஒத்திருக்க வேண்டுமென்பதில்லை. அவரே வகுத்துக் கொண்ட நடைமுறைப்படி விசாரணை நடத்துவார்.

விசாரணைக்குப் பின் அவருடைய பரிந்துரைகள் மற்றும் தீர்வழிகள் அடங்கிய அறிக்கையை சம்பந்தப்பட்ட நிருவாகத்துறை அதிகார அமைப்பிற்கு அல்லது நிருவாகத்துறை அலுவலர்களுக்கு லோகயுக்தா அனுப்பி வைப்பார். அறிக்கையை பெறும் அதிகார அமைப்பு அல்லது அலுவலர், அவ்வறிக்கையை பெற்ற மூன்று மாதங்களுக்குள் அப்பரிந்துரைகளின்படியும், தீர்வழிகளின்படியும் செயல்பட வேண்டும். அப்படிச் செயல்படத் தவறினால், லோகயுக்தா மாநில ஆளுநருக்கு அறிவிப்பார். சட்டமன்றத்தின் இரு அவைகளின் முன்பும் அது பற்றிய விபரங்களை வைப்பார். அவர் மேலும் தனது பணி குறித்த ஆண்டறிக்கையை சட்டமன்றத்தின் முன் சமர்ப்பிப்பார்.

உபலோகயுக்தா (Uplokayukta): உபலோகயுக்தா என்பவர், லோகயுக்தாவின் கீழ் பணிபுரியும் ஆம்புட்ஸ்மன் ஆவார். இவரை மாநில ஆளுநர் லோகயுக்தா-வின் அறிவுரையின் பேரில் நியமனம் செய்வார். சம்பந்தப்பட்ட மாநில சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளபடியும், லோகயுக்தா விசாரணை நடத்தக் கோரும் விஷயங்கள் குறித்தும், உபலோகயுக்தா விசாரணை செய்வார். உபலோகயுக்தா, அவரிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதில் லோகயுக்தா போன்றே செயல்படுவார்.

லோகயுக்தா-வும், உபலோகயுக்தா-வும் எடுக்கும் அலுவல் நடவடிக்கைகள் குறித்து எவ்வித வழக்கும் நீதிமன்றத்தில் தொடர முடியாது.

முடிவுரை:

மத்திய அரசில் லோக்பால் எனும் ஆம்புட்ஸ்மன் அமைப்பை உருவாக்கிடும் முயற்சி தோல்வியுற்றாலும், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் லோகயுக்தா எனும் ஆம்புட்ஸ்மன் அமைப்பு செயல்படுவதை மேற்கண்டவாறு அறியும் பொழுது, லோக்யுக்தா நிருவாகத் துறையின் முறைகெட்ட செயலாட்சியினால் பாதிக்கப்பட்ட குடிமக்களின்

குறைகளை களைந்தெறிய அவதாரம் எடுத்த அவதார புருஷனாக, ஆபத்பாந்தவனாக, நண்பனாக உள்ளார் என்பது தெளிவாகிறது. முறைகெட்ட செயலாட்சியையும், ஊழலையும் தட்டிக் கேட்க வேண்டும் எனும் பெரும் நோக்கத்திற்காகத்தான், லோகயுக்தா எனும் அமைப்பு உருவாக்கப்பட்டு, லோகயுக்தா நியமனம் செய்யப்பட்டார். ஆனால் இந்த நோக்கத்தை முழுதளவில் லோகயுக்தா எனும் அமைப்பு பூர்த்தி செய்யவில்லை என்றுதான் கூற வேண்டும். அதற்குக் காரணங்களாவன,- (1) இது குறித்த இயற்றப்பட்ட சட்டத்தில் முழுமை இல்லை; (2) லோகயுக்தா-விற்கு உதவி செய்வதற்கென தனியாக புலனாய்வு அமைப்புகள் அமைக்கப்படாமை; (3) அரசாங்கத்தின் பல்வேறு துறைகளும் லோகயுக்தாவுடன் ஒத்துழைக்க மறுக்கும் மனப்போக்கு. எனவே, லோகயுக்தா-வின் அதிகாரவரம்பின் மீது சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள வரம்புகளும் தடைகளும் விலக்கிக் கொள்ளப்பட்டால் மற்றும் அரசாங்கத்தின் பல்வேறு நிருவாகத்துறை அதிகார அமைப்புகளும், முகவர் நிலைகளும் லோகயுக்தாவுடன் ஒத்துழைத்தால், இந்தியாவில் லோகயுக்தா எனும் ஆம்புட்ஸ்மன் அமைப்பு ஒரு சிறந்த முறையாகத் திகழும் என்பதில் எவ்வித அய்யப்பாடும் இல்லை. **அப்பொழுதுதான் நிருவாகத்தின் மீது ஆற்றல் மிக்க கட்டுப்பாடு வேண்டும் என்கிற வேட்கைதான் மக்களை ஆம்புட்ஸ்மேன் என்ற அமைப்பை மேற்கொள்ளச் செய்தது** எனும் கூற்றும் உண்மையாகும். மேலும் **இந்திய அரசியல் சூழ்நிலையில் ஆம்புட்ஸ்மன் பதவியும் வெற்றியடையும்.**

16 பொதுக் கூட்டு நிறுவனங்களும் பொதுக் கூட்டுருக்களும் [Public Undertakings and Public Corporations]

பொதுக் கூட்டு நிறுவனங்கள் [Public Undertakings]

56. Write an essay on Public Undertakings. (அரசின் கூட்டு நிறுவனங்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.)

(அல்லது)

What are the different types of Public Undertakings? How they are controlled? (பல்வேறு அரசு கூட்டு நிறுவனங்கள் யாவை? அவை எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றன?)

(அல்லது)

(a) What are the three organisational forms of Public undertakings?
(b) Explain how they are controlled.

(அ) அரசு நிறுமங்களின் மூவகை அமைப்பு வடிவங்கள் யாவை?
(ஆ) அவை எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றன என விளக்குக.

(அல்லது)

How public sector undertakings are classified? Explain. (அரசு நிறுவனங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன? விளக்குக.)

முன்னுரை:

இன்று இந்தியாவில் பொதுக் கூட்டு நிறுவனங்கள் பெரிய வளர்ச்சியைக் கண்டுள்ளன. இதற்கு முக்கியக் காரணம் யாதெனில், இன்றைய அரசு மக்கள் நல அரசாக மாறி, மக்களின் நலனிற்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட வேண்டும் என்று கருதியதுதான் என்று சொன்னால் அது மிகையன்று. இந்த மாற்றம், அரசாங்கத்தை மக்கள் நலனிற்காக பல்வேறு பணிகளில் ஈடுபட வைத்துள்ளது. அந்த வகையில் அரசாங்கம் இலாபம் தரும் வணிக நடவடிக்கைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. வணிகத்தின் மூலம் பெறப்படும் இலாபத் தொகைகள் மீண்டும் மக்கள் நலனுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன.

இன்று அரசாங்கமே பல்வேறு வணிகங்களை நடத்தி வருகிறது; பல தரப்பட்ட வியாபாரங்களைச் செய்து வருகிறது. பல்வேறு சமுதாயப் பணிகளை ஆற்றி வருகிறது. ஆனால் இப்பணிகளை எல்லாம் அரசாங்கத் துறைகளின் வாயிலாகச் செய்ய இயலாது. எனவே பல்வேறு பொதுக் கூட்டு நிறுவனங்களும் (Public Undertakings), பொதுக் கூட்டுருக்களும் (Public Corporations), அரசு நிறுவனங்களும் (Government Companies) சட்டத்தால் உருவாக்கப்பட்டு, அவற்றின் மூலமாக அரசாங்கம் தனது வணிகத்தையும், வியாபாரத்தையும் நடத்துகிறது.

பொதுக் கூட்டு நிறுவனங்கள் (Public Undertakings) - பொருள்:

ஒரு வணிகத்தை அல்லது வியாபாரத்தை அரசாங்கம் சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஒரு பொதுக் கூட்டுரு (Public Corporation) அல்லது ஒரு அரசு நிறுவனம் (Government Company) அல்லது ஒரு அரசுத் துறையின் (Government Department) மூலமாகச் செய்யலாம். அதாவது இந்த மூன்றில் ஏதேனுமொன்றின் வாயிலாக அரசாங்கம் தனது வணிக அல்லது வியாபார அல்லது சமூக சேவையைச் செய்யலாம். இந்த மூன்றுமே **'பொதுக் கூட்டு நிறுவனங்கள்' (Public Undertakings)** எனும் பதத்தில் அடங்குகின்றன.

பொதுக் கூட்டு நிறுவனங்கள் - வகைப்பாடு (Classification of Public Undertakings):

பொதுக் கூட்டு நிறுவனங்களின் செயல்பாடு மற்றும் கட்டமைப்பின் அடிப்படையில், அவற்றை பல வகைகளாக வகைப்படுத்தலாம். அவ் வகைப்பாட்டை பின்வருமாறு காண்போமா?

பொதுக் கூட்டு நிறுவனங்கள் செயல்படும் விதத்தின் அடிப்படையில் அவற்றின் வகைப்பாடு (Classification based on the functioning of Public Undertakings) - நான்கு வகை:

1. மேம்பாட்டு நிறுவனங்கள் (Development Undertakings): இவ்வகையான நிறுவனங்கள் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்கிறது. எடுத்துக்காட்டாக, மத்திய பண்டகசாலை கூட்டுரு நிறுவனம் (Central Warehousing Corporation), தேசிய சிறு தொழில் கழகம் (National Small Industries Corporation Ltd.), தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகம் (National Research Development Corporation Ltd.), தாமோதர் பள்ளத்தாக்கு கழகம் (Damodar Vally Corporation) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

2. நிதி நிறுவனங்கள் (Financial Undertakings): இவ்வகையான நிறுவனங்கள் மக்களின் நிதி சார்ந்த பணிகளை மேற்கொள்கிறது. எடுத்துக்காட்டாக, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (Life Insurance Corporation of India), இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of India), யுனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா (Unit Trust of India) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

3. வணிக மற்றும் தொழில் நிறுவனங்கள் (Commercial and Industrial Undertakings): இவ்வகையான நிறுவனங்கள் வணிக மற்றும் தொழில் பணிகளை மேற்கொள்கிறது. எடுத்துக்காட்டாக, அரசு வாணிபக் கழகம் (State Trading Corporation), இந்தியன் ஏர்லைன்ஸ் கழகம் (Indian Air-lines Corporation), ஏர் இந்தியா (Air India) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

4. பொதுப் பயன்பாட்டு நிறுவனங்கள் (Public Utilities): இவ்வகையான நிறுவனங்கள் பொதுமக்களுக்கு தேவைப்படும் அத்தியாவசிய சேவைகளை அளிக்கும் பணிகளில் ஈடுபடுகின்றன. இந்நிறுவனங்களின் நோக்கம் சிக்கனமான கட்டணத்தில் பொதுமக்களுக்கு சில சேவைகளை அளித்தலாகும். இலாபம் ஈட்டுவது இதன் முக்கியக் குறிக்கோள் அல்ல. எடுத்துக்காட்டாக, வீட்டு வசதி வாரியம் (Housing Board), மருத்துவமனை வாரியங்கள் (Hospital Boards) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

பொதுக் கூட்டு நிறுவனங்களின் கட்டமைப்பின் அடிப்படையில் அவற்றின் வகைப்பாடு (Classification based on the structure of Public Undertakings) - மூன்று வகை:

பொதுக் கூட்டு நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ள கட்டமைப்பின் கீழ் அவற்றை பின்வரும் மூன்று வகையாக வகைப்படுத்தலாம். அவை,

1. பொதுக் கூட்டுரு (சட்டப்படியான கூட்டுரு) (Public Corporation) (Statutory Corporation).

2. அரசாங்க நிறுவனம் (Government Company).

3. அரசாங்கத் துறை நிறுவனம் (Government Departmental Undertakings).

இவற்றை சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

1. பொதுக் கூட்டுரு (சட்டப்படியான கூட்டுரு) (Public Corporation) (Statutory Corporation):

(இதன் விளக்கத்தை அடுத்த வினாவின் விடையில் காண்க.)

2. அரசாங்க நிறுவனம் (Government Company):

அரசாங்க நிறுவனத்தின் வரையறை நிறுவனச் சட்டத்தின் 617-வது பிரிவில் கூறப்பட்டுள்ளது. அதன்படி, ஒரு நிறுவனத்திற்கு பங்குகளின் வாயிலாக செலுத்தப்பட்ட மூலதனத் தொகையில் (Paid-up Share Capital) 51% குறையாத தொகையை மத்திய அரசோ அல்லது மாநில அரசோ அல்லது அத்தொகையில் ஒரு பகுதியளவு மத்திய அரசும் மீதிப் பகுதியளவு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநில அரசுகளும் கொண்டிருப்பின், அந்நிறுவனம் அரசாங்க நிறுவனம் எனப்படும். இதில்

ஒரு அரசாங்க நிறுவனத்தின் துணை நிறுவனமும் (Subsidiary of a Government Company) அடங்கும். இந்நிறுவனமும், ஒரு தனியார் நிறுவனத்தைப் (Private Company) போலவே, நிறுவனச் சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். நிறுவனச் சட்டத்தின் 619, 620 ஆகிய பிரிவுகளில் கூறப்பட்டுள்ள வகைமுறைகள் அரசாங்க நிறுவனங்களுக்கு பொருந்தக் கூடியதாகும்.

3. அரசாங்கத் துறை நிறுவனம் (Government Departmental Undertaking):

அரசாங்கத் துறை நிறுவனம் முழுக்க முழுக்க அரசாங்கத்திற்குச் சொந்தமான மற்றும் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படுகின்ற ஒரு நிறுவனமாகும். சம்பந்தப்பட்ட அரசாங்கத் துறைக்கு அமைச்சராக விளங்குபவர், அந்நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பார். இவ்வகையான நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டாக, இரயில்வே துறை (Railway Department), தபால் மற்றும் தந்தித் துறை (Postal and Telegraph Department), தொலைபேசித் துறை (Telephone Department) (BSNL) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

பொதுக் கூட்டு நிறுவனங்களின் மீதான கட்டுப்பாடு (Control over the Public Undertakings):

பொதுக் கூட்டு நிறுவனத்தின் ஒரு வடிவமே, பொதுக கூட்டுரு (Public Corporation) ஆகும். எனவே அதன் மீதான கட்டுப்பாடே பொதுக் கூட்டு நிறுவனங்களுக்கும் பொருந்தும். (அக்கட்டுப்பாடுகள் அடுத்த வினாவில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. எனவே அங்கு படித்துக் கொள்க.)

பொதுக் கூட்டுருக்கள் [Public Corporations]

57. Explain the reasons for the growth of public corporations. Why is it said that it is a useful device for performing its welfare and development functions? How are they controlled? (பொதுக் கூட்டுருக்களின் வளர்ச்சிக்கான காரணங்கள் யாவை? அது ஏன் அரசின் நல்வாழ்வு மற்றும் முன்னேற்றப் பணிகளை செய்திட ஓர் பயனுள்ள அமைப்பு என்று கூறப்படுகிறது?)

(அல்லது)

Examine the rationale behind the establishment of public corporations and state the different kinds of control exercised over them. (பொது நிறுவனங்கள் அமைக்கப்படுவதின் அடிப்படைத் தத்துவத்தை விளக்கி, அவைகளின் மீது அனுமதிக்கப்பட்டுள்ள

கட்டுப்பாடுகளின் எல்லையை எடுத்துக் கூறுக.)

(அல்லது)

Examine the rationale behind the establishment of public corporations and state the extent of parliamentary control over them. (பொதுக் கூட்டு நிறுவனங்கள் அமைக்கப்படுவதின் அடிப்படைத் தத்துவத்தை விளக்கி அவைகளின் மீது பாராளுமன்ற கட்டுபாட்டின் எல்லையை விவரி.)

(அல்லது)

Explain the parliamentary and judicial control on public corporations. (பொது நிறுவனங்கள் மீதான நாடாளுமன்ற மற்றும் நீதிமன்ற கண்காணிப்பினைப் பற்றி விளக்கவும்.)

(அல்லது)

Write an essay on control of Public Corporations by the judiciary and the government. (பொது நிறுவனங்களை நீதித்துறையும் அரசும் கட்டுப்படுத்துவது குறித்து ஒரு கட்டுரை வரைக.)

(அல்லது)

Public Corporations - Write short notes. (பொதுக் கூட்டுருக்கள் - சிறு குறிப்பு வரைக.)

பொதுக் கூட்டுரு - பொருள் (Meaning of Public Corporation):

பொதுக் கூட்டுருவை **'அரசுக் கழகம்'** என்று நடைமுறை வழக்கில் அழைப்பதுண்டு. பொதுக் கூட்டுரு என்றால், சட்டத்தால் அல்லது சட்டப்படி உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். இது அரசாங்கத்திற்கு சொந்தமானதும், அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படுவதுமாகும். இதனிடம் பொது முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பணிகள் ஒப்படைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பொதுமக்கள் நலன் சார்ந்த மேலாண்மை நிருவாகப் பணிகள் (managerical functions), மேம்பாட்டுப் பணிகள் (developmental functions), பொருளாதாரப் பணிகள் (economic functions) ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

பொதுக் கூட்டுருவின் முக்கிய அம்சங்கள் அல்லது பண்புகள் (The Main Features or Characteristics of Public Corporation):

இது சட்டத்தால் உருவாக்கப்படும் ஒரு செயற்கை சட்ட நபர் ஆகும். இதன் உறுப்பினர்கள் மாறினாலும், மறைந்தாலும் இது தொடர்ந்து செயல்படும். இது ஒரு இயற்கை நபர் போலவே, சட்டத் தகுதி உடையது. எனவே இது ஒப்பந்தங்களில் ஈடுபடலாம், சொத்துக்களை வைத்திருக்கலாம் மற்றும் மாற்றலாம். இதன் உரிமைகள் பாதிக்கப்படும் பொழுது மற்றவர்கள் மீது வழக்கிடலாம். அது போல் இது

மற்றவர்களின் உரிமைகளை மீறினால், இதன் மீதும் வழக்கிடலாம். மேலும் சட்டத்தால் வழங்கப்படும் அனைத்து சிறப்புரிமைகளைத் துய்க்கவும், அதிகாரங்களைப் பயன்படுத்தவும் இதற்கு முழு உரிமை உண்டு. மேலும் இது, ஒரு அரசாங்கத் துறையின் (Government Department) பண்புகளையும், அதுபோல் ஒரு வணிக நிறுவனத்தின் (Business Company) பண்புகளையும் ஒருங்கே கொண்டதாகும். சுருங்கக் கூறின், இது ஒரு அரசாங்கத்துறை எனும் தந்தையும், வணிக நிறுவனம் எனும் தாயும் சேர்ந்து பெற்றெடுத்த கலப்பினக் குழந்தையாகும்.

பொதுக் கூட்டுருவின் வளர்ச்சிக்கான காரணங்கள் (Reasons for the Growth of Public Corporation):

(1) முன்பு அரசு **'தலையிடாக் கொள்கை' (Laissez faire)** எனும் சித்தாந்தத்தைப் (Government's philosophy) பின்பற்றி நாட்டின் பாது காப்பு, நீதி நிருவாகம் ஆகியவையே அரசாட்சி எனும் முறையில் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தது. மக்கள் நலனில் அக்கறை காட்டவில்லை. ஆனால் காலப் போக்கில் இச்சித்தாந்தம் மாறி, இன்று அரசுகள் **'மக்கள் நல அரசாக' (Welfare State)** செயல்படுகின்றது. மக்கள் நலனே பெரிது என்ற சித்தாந்தத்திற்கு மாறிவிட்டது. இதன் காரணமாக இன்று அரசாங்கத்தின் பணிகள் பெருகிவிட்டன. எனவே, அனைத்து பணி களையும் அரசாங்கத் துறைகளின் வாயிலாக நிறைவேற்ற இயலவில்லை. இதன் பொருட்டு பல பொதுக் கூட்டுருக்கள் உருவாக்கப்பட்டன. அவற்றிடம் பொது முக்கியத்துவம் பணிகள் ஒப்படைக்கப்பட்டன. அதன் மூலம் வணிகமும் அரசாங்கம் செய்து வருகின்றது.

(2) இந்திய நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்ததிலிருந்து, நாட்டில் **சமதர்ம நெறி சார்ந்த சமுதாயத்தை (socialistic pattern of society)** அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கொப்ப நமது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் (Directive Principles of State Policy) குறித்த ஷரத்துகள் சேர்க்கப்பட்டன. அவற்றில் ஷரத்து 39 (b), 39 (d) ஆகியவை நாட்டின் பொருள் வளங்கள் மீது உடைமையுரிமை பெற்று அதனைக் கட்டுப் படுத்தி, அவற்றை நாட்டு மக்களின் நன்மைக்காக பகிர்ந்தளிக்கும் வண்ணம் இந்திய அரசாங்கம் செயல்பட வேண்டும் என்றும், பொருளா தார வளம் ஒருவரிடமே குவிதலைத் தடுக்கும் வகையில் தனது பொருளா தார முறையை இந்திய அரசாங்கம் அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும், அதற்கொப்ப இந்திய அரசாங்கம் தனது கொள்கையை வகுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறது. இந்த நோக்கத்தை அடைவதற்காக, நமது இந்திய அரசாங்கம் வணிகம், வியாபாரம் ஆகிய துறைகளில் ஈடுபட்டது. அதற்குண்டான பணிகளை நிறைவேற்ற பல்வேறு பொதுக் கூட்டுருக்களை சட்டத்தின் மூலம் உருவாக்கியது.

3. 1956-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தொழிற் கொள்கைத்

தீர்மானமானது (The Industrial Policy Resolution, 1956), நாட்டில் பொதுக் கூட்டுருக்களை அமைத்திட வேண்டும் என்று வலியுறுத்தியது. மேலும், பொது முக்கியத்துவம் வாய்ந்த அல்லது பொது மக்களின் பொதுப் பயன்பாட்டுச் சேவைக்குரிய அனைத்து தொழிற்சாலைகளும் பொதுத்துறையின் (Public sector) வசம் இருத்தல் வேண்டும் என்று அத் தீர்மானம் திட்டவட்டமாகக் கூறியது. 1977-ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட புதிய தொழிற் கொள்கையும் (New Industrial Policy), 1977) பொதுத் துறையை விரிவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தியது. 1970-ஆம் ஆண்டில் கொணரப்பட்ட தொழிற் உரிமக் கொள்கையும் (Industrial Licensing Policy, 1970) பொது தொழிற் நிறுவனங்கள் (Public Enterprises) அமைக்கப்பட வேண்டியதின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தது. இவையெல்லாம் பொதுக் கூட்டுருக்கள் அதிக அளவில் ஏற்பட சாதகமான ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்தது என்று கூறலாம்.

4. 1967-ல் அமைக்கப்பட்ட நிருவாகமுறை சீர்திருத்த ஆணையம் (The Administrative Reforms Commission, 1967) தனது அறிக்கையில் அரசாங்கம், தனது வணிக நடவடிக்கைகளை பொதுக் கூட்டுருக்களை அமைத்து அதன் மூலம் நடத்துவது விரும்பத்தக்கது என்று பரிந்துரை செய்தது.

5. ஒரு பொதுக் கூட்டுரு தகுதி வாய்ந்த சட்ட நபர் (legal person) ஆகும். அதற்கென தனிப்பட்ட சட்டத் தகுதி உண்டு (separate legal entity). இதனால் அது தனது பெயரிலேயே ஒப்பந்தங்களில் ஈடுபடலாம். தனது பெயரில் சொத்துக்களை வாங்கலாம், துய்க்கலாம், விற்கலாம். இதனால் ஒரு பொதுக் கூட்டுருவின் சொத்தை எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது. அதுபோல் பொதுக் கூட்டுரு எவர் மீதும் வழக்கிடலாம்; அதன் மீதும் வழக்கிட முடியும் (can sue and be sued). இதனால் வழக்கிடுவதும், அதன் மீது தொடரப்பட்ட வழக்கை எதிர்த்து வழக்காடுவதும் எளிதாகவும், சிக்கனமானதாகவும், வசதியானதாகவும் உள்ளது. இதுவும் பொதுக் கூட்டுக்கள் அதிக எண்ணிக்கையில் மலர காரணமாக உள்ளது எனில் அது மிகையன்று.

பொதுக் கூட்டுருக்கள் அமைக்கப்படுவதின் அடிப்படைத் தத்துவம் (The rationale behind the establishment of Public Corporations):

அரசாங்கம் தனது வணிக நடவடிக்கைகளை நடத்துவதற்கு தனது ஒரு அரசாங்கத்துறையை விட அல்லது ஒரு அரசாங்க நிறுவனத்தை விட பொதுக் கூட்டுருக்களையே அதிகம் விரும்புகிறது. ஏனெனில், பொதுக் கூட்டுக்களின் மூலமாக நடத்தப்படும் வணிக செயல்பாடுகள் அதிக நன்மை அளிப்பதாக உள்ளன.

ஒரு அரசாங்கத் துறையுடன் அல்லது ஒரு அரசாங்க நிறுவனத்துடன் பொதுக் கூட்டுருவை ஒப்பிடும் பொழுது, அது தன்னாட்சி மிக்கதாக (more autonomy) உள்ளது. இதனால், பொதுக் கூட்டுரு

வானது தனது வணிகத்தை அல்லது வியாபாரத்தை மேம்படுத்துவதற் குண்டான முடிவுகளையும் நடவடிக்கைகளையும் விரைவாகவும், எளிதாகவும் எடுப்பதற்குண்டான வாய்ப்பைப் பெற்றதாக உள்ளது.

ஒரு வணிகமோ அல்லது வியாபாரமோ அரசாங்கத் துறையால் அல்லது அரசாங்க நிறுவனத்தால் நடத்தப்படுவதாக இருக்கும் பொழுது, அதில் அரசாங்கக் குறுக்கீடுகள் அடிக்கடி நிகழ வாய்ப்புண்டு. மேலும் அரசாங்க சிகப்பு நாடா நடைமுறைகளும் (rad tapism), அமைச்சர்களின் தலையீடும் (ministrial interference) சொல்ல முடியாத அளவில் இருக்கும். எனவே அரசாங்கத் துறையானது பல்வேறு நடைமுறைகளைக் கடந்து வந்த பிறகு, ஒரு முடிவை அல்லது நடவடிக்கையை எடுக்க முடியும். இதனால் முடிவு எடுப்பதில் அதிக கால தாமதம் ஏற்படுகிறது. இதனால் எந்த நோக்கத்திற்காக அந்த அரசாங்கத் துறை அமைக்கப்பட்டதோ, அந்த நோக்கத்தை எட்டுவதில் பல இடர் பாடுகள் ஏற்படுகின்றன. ஆனால் இவையெல்லாம் பொதுக் கூட்டுருவில் கிடையாது. அது அதிக தன்னாட்சி பெற்றதாக உள்ளது. இதனால், அது தனது இலாபத்திற்குண்டான, அதே சமயத்தில் பொது மக்களின் நலனிற்குண்டான முடிவுகளை விரைந்து எடுத்து தனது வணிகத்தை அல்லது வியாபாரத்தை நடத்துகிறது. இதனால்தான் இன்று அரசாங்கம் தனது வணிக நடவடிக்கைகளை பொதுக் கூட்டுருக்களின் மூலமே நடத்துகிறது. இதுவே பொதுக் கூட்டுருக்கள் இன்று அதிகளவில் அமைக்கப்படுவதற்கான அடிப்படைத் தத்துவமாகும்.

பொதுக் கூட்டுருக்களின் வகைப்பாடு (Classification of Public Corporations):

நாம் சென்ற வினாவின் விடையில் பொதுக் கூட்டு நிறுவனங்கள் (Public Undertakings) அது செயல்படும் விதத்தைப் பொறுத்து நான்கு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது என்று கண்டோம். அந்த வகைப்பாடே, பொதுக் கூட்டுருக்களுக்கும் பொருந்தும். ஏனெனில் பொதுக் கூட்டு நிறுவனங்களின் ஒரு கட்டமைப்பு வகையே, பொதுக் கூட்டுருக்களாகும். எனவே அவற்றை இங்கு மீண்டும் ஒருமுறை காண வேண்டியது அவசிமில்லை.

பொதுக் கூட்டுருக்களின் மீதான கட்டுப்பாடு (Control over Public Corporations):

பொதுக் கூட்டுருக்கள் அமைக்கப்படுவதின் அடிப்படை நோக்கம் யாதெனில், அரசின் வேறு துறைகளின் அல்லது முகவர் நிலைகளின் கட்டுப்பாடுகள் அதிகம் இல்லாமல், தன்னாட்சி பெற்ற அமைப்புகளின் மூலம் அரசாங்கம் தனது வணிக நடவடிக்கைகளை நடத்த வேண்டும் என்பதுதான். பொதுக் கூட்டுருக்கள் பொது மக்கள் பணத்தைக் கொண்டு பொதுச் செயல்களைச் செய்தால், அவை தேசியக் கொள்கைளை பின்பற்றுகிறதா என்றும், அதிகார துஷ்பிரயோகம் ஏதேனும் செய்கிறதா

என்றும் கண்காணிப்பதற்கு அவற்றின் செயல்பாடுகளின் மீது சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டியதும் அவசியமாக உள்ளது. அந்த வகையில் பொதுக் கூட்டுருக்களின் செயல்பாடுகளை பாராளுமன்றமும், அரசாங்கமும், நீதித்துறையும் கட்டுப்படுத்துகிறது. அவற்றை சற்று விரிவாகப் பின்வருமாறு காண்போமா?

(1) பொதுக் கூட்டுருக்களின் மீது பாராளுமன்றம் செலுத்தும் கட்டுப்பாடு (Parliamentary Control over Public Corporations):

பொதுக் கூட்டுருக்கள் பாராளுமன்றத்தால் அல்லது சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது. எனவே பொதுக் கூட்டுருக்கள் நீடித்திருப்பதும், ஒரு முடிவிற்கு வருவதும் சட்டத்தின் கைகளில் உள்ளது. பொதுக் கூட்டுருக்கள் செயல்படும் விதம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதம் செய்யவும், வினா எழுப்பவும் உரிமை படைத்தவர்கள். இதனால் பொதுக் கூட்டுருக்களின் அதிகார துஷ்பிரயோகத்தை ஓரளவு கட்டுக்குள் கொண்டு வர முடிகிறது.

பொதுக் கூட்டுருக்களின் மீதான பாராளுமன்றத்தின் பொதுக் கட்டுப்பாடு, அவ்வளவு வலிமையுடையதாக இல்லை. ஏனெனில், பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுக் கூட்டுருக்களின் தணிக்கைமற்றும் நிதி அறிக்கைகளைப் பரிசீலித்துப் பார்க்கும் அளவிற்கு நுணுக்கமான அறிவு பெற்றவர்களாக இல்லை. எனவே பொதுக் கூட்டுருக்களின் மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு பின்வரும் மூன்று குழுக்களின் வாயிலாகச் செய்யப்படுகிறது. இக்கட்டுப்பாடு உண்மையானதாகவும், வலிமையுடையதாகவும் உள்ளது என்று கூறலாம். அக்குழுக்கள், *(1)* பாராளுமன்ற மதிப்பீட்டுக் குழு (Estimates Committee); *(2)* பொதுக் கணக்குக் குழு (Public Accounts Committee); *(3)* பொதுக் கூட்டு நிறுவனங்களின் மீதான குழு (Committee on Public Undertakings). இந்தக் குழுக்கள், பொதுக் கூட்டுருக்கள் செயல்படும் விதம் குறித்து தலைமை தணிக்கையர் (Auditor General), இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் (Comprtoller and Auditor General of India), தலைமை கணக்காயர் (Accounts General) ஆகியோர் சமர்பிக்கும் அறிக்கைகளை பரிசிலனை செய்கின்றன. மேலும் இக்குழுக்கள், சிறந்த வணிகக் கொள்கை மற்றும் நடைமுறைகளின்படி பொதுக் கூட்டுருக்கள் இயங்குகின்றனவா என்பதையும் ஆராய்கிறது.

ஆனால், இக்குழுக்கள் அளிக்கும் பரிந்துரைகள், ஆலோசனை கூறும் தன்மையுடையதாக உள்ளதே தவிர, அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய விதத்தில் இல்லை. எனினும், இவற்றின் பரிந்துரைகளை பொதுவாக அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவே செய்கின்றது.

(2) பொதுக் கூட்டுருக்களின் மீதான அரசாங்கக் கட்டுப்பாடு (Governmental Control over Public Corporations):

பொதுவாக பொதுக் கூட்டுருக்களின் அன்றாட பணிகளில்

அரசாங்கம் தலையிடுவதில்லை. எனினும் அரசாங்கம் பொதுக் கூட்டுருக்களின் பணிகளின் மீது பொதுவான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. இக்கட்டுப்பாடு அனைத்து பொதுக் கூட்டுருக்களுக்கும் ஒரே மாதிரியானதாக இல்லை. பொதுக் கூட்டுருக்கள் செய்யும் அல்லது அவற்றிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளின் தன்மையைப் பொறுத்து, அரசாங்கம் செயல்படுத்தும் கட்டுப்பாடுகளின் தன்மையும் அளாவுகையும் வேறுபடுகிறது. பின்வரும் வழிகளில் ஏதேனுமொன்றின் வாயிலாக அரசாங்கம் பொதுக் கூட்டுருக்களைக் கட்டுப்படுத்துகின்றது. அவை

(1) ஏவுரைகளைப் பிறப்பிப்பதன் மூலம் (By issuing Directions): இது ஒரு முக்கியமான கட்டுப்பாடாகும். இதன் மூலம் கொள்கை சார்ந்த விஷயங்களில் (policy matters) பொதுக் கூட்டுருக்களுக்கு தக்க ஏவுரைகளை அரசாங்கம் பிறப்பிக்கிறது. ஆனால் இந்த ஏவுரைகள் பொதுக் கூட்டுருக்களின் தன்னாட்சியை மீறாத வண்ணம் பிறப்பிக்கப்படுகிறது.

(2) உறுப்பினர்களின் நியமனம் மற்றும் நீக்கம் (Appointment and Removal of Members): பொதுவாக பொதுக் கூட்டுருக்களின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிக்கும் மற்றும் நீக்கும் அதிகாரம் அரசாங்கத்திடம் உள்ளது என்று கூறலாம். எனவே பொதுக் கூட்டுருக்களின் செயல்பாடுகளை திறம்பட நடத்துவதற்கு உண்டான நபர்களை தேர்ந்தெடுக்கும் ஒரு முக்கியமான கட்டுப்பாடு அரசாங்கத்திடம் உள்ளது. சில நேர்வுகளில் பொதுக் கூட்டுருக்களின் பணிகள் திருப்திகரமாக இல்லையென்பதாக அரசாங்கத்திற்கு தெரிய வந்தால், அப் பொதுக் கூட்டுருவை அரசாங்கம் கலைக்கவும் அதிகாரம் கொண்டது.

(3) விசாரணைகள் நடத்த உத்திரவிடல் (Order Enquiries): பொதுக் கூட்டுருக்களின் செயல்பாடு குறித்து விசாரணைக்கு உத்திரவிடும் அதிகாரம் அரசாங்கத்திடம் உள்ளது. இந்த விசாரணைகள் மூலமாக பொதுக் கூட்டுருக்கள் தனது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்திருப்பின், அது வெளிச்சத்திற்கு வருகிறது. அதற்கொப்ப தகுந்த காப்பு மற்றும் தீர்வழி நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கிறது.

(4) நிதிக் கட்டுப்பாடு (Financial Control): பொதுவாக பொதுக் கூட்டுருக்களின் மூலதன உருவாக்கம், கடன் பெறுதல், செலவினங்கள் போன்ற நிதி சார்ந்த விஷயங்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் அரசாங்கத்திடம் உள்ளது. எனவே பொதுக் கூட்டுரு, தனது நிதி ஆதாரத்திற்கு அரசாங்கத்தை சார்ந்து உள்ளது. 'நிதி', ஒன்றின் 'விதி'யையும் தீர்மானிக்க வல்லது என்பதால், இக்கட்டுப்பாடு சிறந்ததாக உள்ளது.

(3) பொதுக் கூட்டுருக்களின் மீதான நீதிமுறைக் கட்டுப்பாடு (Judicial Control over Public Corporations):

பாராளுமன்றமும், நிருவாகத்துறையும் அரசின் முகவர் நிலைகளாகும். எனவே, இவை பொதுக் கூட்டுருக்களின் கொள்கையையும்,

அது செல்லும் பொதுவான இலக்கையும் மட்டுமே கட்டுப்படுத்த வல்லது. ஆனால் இவை பொதுக் கூட்டுருக்களின் அதிகார துஷ் பிரயோகத்திலிருந்து குடிமக்களை பாதுகாக்க முடியுமா என்பது கேள்விக் குறிதான். பொதுக் கூட்டுருக்கள் அதீதமாக வளர்ச்சியுற்று வருவதால், அதன் அதிகாரங்கள் குடிமக்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதிக்கும் நேர்வுகளும் வளர்ந்த வண்ணமே உள்ளது. இதனால் பொதுக் கூட்டுருக்களின் அதிகார துஷ்பிரயோகமும் தொடர் கதையாக உள்ளது. இந்த நிலைப்பாட்டை தடுக்க நீதித்துறை மட்டுமே, பொதுக் கூட்டுருக்களின் அதிகார துஷ்பிரயோகத்தை தட்டிக் கேட்டு அவற்றை சிறந்த முறையில் கட்டுப்படுத்த முடியும்.

வழிவழிவந்த மரபின்படி, பொதுக் கூட்டுருக்களின் மீதான கட்டுப் பாடு **அதிகாரவரம்பு மீறல் கோட்பாட்டின்** (Doctrine of Ultra vires) வாயிலாக நீதித்துறையால் கட்டுப்படுத்தப்படுகிறது. பொதுக் கூட்டுருக் கள் தங்களுக்கு சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்களை மீறி செயல் பட்டால் அல்லது நடவடிக்கை எடுத்தால், அவற்றை அதிகாரவரம்பு மீறியது என்று நீதிமன்றங்கள் விளம்புகின்றன. எனவே அந்நடவடிக்கை கள் இல்லாநிலையதாகின்றன.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் ஒரு குடிமகனுக்கு அளிக்கப் பட்டுள்ள அடிப்படை உரிமைகளை அரசாங்கம் மீறினால், அவற்றை நீதிமன்றங்கள் தட்டிக் கேட்க முழு உரிமை உண்டு. இங்கு சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட பொதுக் கூட்டுருக்கள் குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறினால், அவற்றை நீதித்துறை தட்டிக் கேட்க முடியுமா என்ற வினா எழுகிறது. ஏனெனில், அடிப்படை உரிமைகளை அரசாங் கத்திற்கு எதிராக மட்டுமே வலியுறுத்திச் செயல்படுத்த முடியும். அந்த வகையில், ஷரத்து 12-ல் வரையறை செய்யப்பட்டுள்ள, **'அரசு' (State)** எனும் பதத்தில் பொதுக் கூட்டுருவும் அடங்குமா என்ற வினா பல வழக்குகளில் உச்ச நீதிமன்றத்தின் முன் எழுந்தது. அப்பொழுது, பொதுக் கூட்டுருவும், 'அரசு' எனும் பதத்தில் அடங்கும் என்றும், எனவே பொதுக் கூட்டுருக்கள் அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள குடி மக்களின் அடிப்படை உரிமைகளை மீறினால், அவற்றின் நடவடிக்கை களுக்கு எதிராக ஷரத்து 226-ன் கீழ் உச்ச நீதிமன்றமும், ஷரத்து 32-வ் கீழ் உயர் நீதிமன்றங்களும் நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்க முடியும் என்று உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது. இதற்குச் சான்றாக பின்வரும் சில வழக்குகளைக் காண்போம்.

Rajasthan State Elecricity Board v. Mohanlal[1] - எனும் வழக்கில், இராஜஸ்தான் மாநில மின் வாரியம் எனும் பொதுக் கூட்டுரு, ஷரத்து 12-ன் கீழ் 'அரசு' எனும் பதத்தில் வருமா என்று வினா எழுந்தது. அப்பொழுது அது ஒரு 'அதிகாரஅமைப்பு' (Authority) என்றும்,

1. A.I.R. 1967 S.C. 1857.

இதனால் அது 'அரசு' எனும் பதத்தில் வரக் கூடியதே என்று உச்ச நீதி மன்றம் தீர்ப்புரைத்தது. இதற்கு காரணமாக பின்வரும் அறுதியுரை களைக் கூறியது. அஃதாவது, (1) முதற்கண் இராஜஸ்தான் மாநில மின் வாரியம் சட்டத்தால் உருவாக்கப்பட்டதாகும். (2) அதன் செயற்பாடுகள் அரசுத் தன்மையுடையதாக உள்ளன.

Sukhdev Singh v. Bhagatram[2] - எனும் வழக்கில் மேற்கண்ட இராஜஸ்தான் மாநில மின் வாரிய வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டு, எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் குழு, ஆயுள் காப்பீட்டுக் கழகம், தொழிற் நிதிக் கழகம் ஆகியவைகள் அதிகார அமைப்புகள் என்றும், எனவே அவை ஷரத்து 12-ன் கீழான 'அரசு' எனும் பதத்தில் வரக் கூடியவையே என்று தீர்ப்புரைக்கப்பட்டது.

இந்நிலைப்பாடு மேற்கண்ட வழக்குகளுக்கு பின்னர் எழுந்த பல வழக்குகளிலும் உச்ச நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டது. எனவே பொதுக் கூட்டுருக்கள், குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறி செயல்பட்டால், அவற்றிற்கெதிராக உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்களின் நீதிப்பேராணைகள் சீறிப் பாயும். இந்த வகையில் பொதுக் கூட்டுருக் களின் மீதான நீதித்துறையின் கட்டுப்பாடு மிகவும் சிறந்து விளங்குகிறது என்று சொன்னால் அதில் எள்ளளவும் மிகையில்லை.

2. A.I.R. 1974 S.C. 1331.

பிரச்சனைகளும் தீர்வுகளும்
[Problems and Solutions]

1. In the Parent Act there is a provision to publish the delegated legislation in the local Tamil daily before implemetation. The government published the delegated legislation in an English daily. Decide the validity of the delegated legislation.

அடிப்படை சட்டமானது அதன் கீழ் அரசால் உருவாக்கப்படும் விதி ஆக்கங்களை உள்ளூர் தமிழ் நாளேட்டில் வெளியிட வகை செய்கிறது. ஆனால் அரசானது அதனை ஆங்கில நாளேட்டில் வெளியிடுகிறது. அந்த விதிகளின் செல்லும் நிலையை ஆராய்க.

தீர்வு:

சட்டமன்றம் இயற்றிய தோற்றுவாய் சட்டத்தின் (Parent Act) கீழ் விதிகள் செய்யும் அதிகாரம் நிருவாகத்துறையிடம் (அரசிடம்) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தைக் கொண்டு, நிருவாகத்துறையானது அதிகாரவரம்பு மீறி விதிகள் ஏதும் செய்தல் கூடாது. இதனால் நிருவாகத்துறையின் விதியாக்க அதிகாரத்தின் மீது நீதித்துறையானது இரண்டு வழிகளின் வாயிலாக தனது கட்டுப்பாட்டை செலுத்துகின்றது. அவை (1) நிலைமுறை அதிகாரவரம்பு மீறல் (Substantive Ultravires) ; (2) நடைமுறை அதிகாரவரம்பு மீறல் (Procedural Ultravires) எனப்படுகிறது.

மேற்கண்ட இரண்டு வகையான அதிகாரவரம்பு மீறலில், நடைமுறை அதிகாரவரம்பு மீறல் மூன்று சூழ்நிலைகளில் எழுகிறது. அவற்றில் முதன்மையானது, நிருவாகத்துறை செய்யும் விதிகளை முன் வெளியீடு செய்தல் (Pre-publication of delegated legislation). அஃதாவது, நிருவாகத்துறையின் செய்த விதிகளை அமலுக்கு கொண்டு வரும் முன்னர், அவற்றைப் பற்றி பொது மக்கள் அறிந்து, அவர்களிடமிருந்து கருத்துக்களையும் ஆட்சேபணைகளையும் கோரிப் பெறுவதற்காக, அவற்றை நாளேட்டில் வெளியிட வேண்டும் வேண்டும் என்று தோற்றுவாய் சட்டத்தில் கூறப்பட்டிருப்பின், அவ்வாறு வெளியிட வேண்டும். இவ்வாறு வெளியிடாமல் அவ்விதிகளை அமலுக்கு கொண்டு வந்தால், அது நடைமுறை அதிகாரவரம்பு மீறலாகும். எனவே அவ்விதிகளை செல்லாதது என்று நீதிமன்றம் அறிவிக்கலாம்.

இனி மேற்கண்ட பிரச்சனைக்கு வருவோம். பிரச்சனையின்படி, தோற்றுவாய் சட்டத்தின் கீழ் அரசால் (நிருவாகத்துறை) செய்யப்பட்ட விதிகளை உள்ளூர் தமிழ் நாளேட்டில் வெளியிட வேண்டும் என்று அத்தோற்றுவாய் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் அரசு

அவ்விதியாக்கத்தை ஆங்கில நாளேட்டில் வெளியிட்டுவிடுகிறது. இங்கு தற்பொழுது எழும் கேள்வி யாதெனில், இது ஒரு நடைமுறை அதிகார வரம்பு மீறலாகுமா, அவ்விதிகள் செல்லுமா என்பதுதான்.

இதற்குத் தீர்வு காண, நாம் **Raza Buland Sugar Co. v. Rampur Municipality**[1] எனும் வழக்கின் பொருண்மைகளையும், அதில் வழங்கப் பட்ட தீர்ப்பையும் காண வேண்டியுள்ளது.

மேற்படி வழக்கின்படி, அரசு செய்த விதிகளை உள்ளூர் **ஹிந்தி** நாளேட்டில் வெளியிட வேண்டும் என்று தோற்றுவாய் சட்டத்தில் கூறப் பட்டிருந்தது. ஆனால் அரசு தனது விதிகளை, உள்ளூர் **உருது** நாளேட்டில் வெளியிட்டது. இந்நிலையை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம், 'விதிகளை நாளேட்டில் வெளியிட வேண்டும்' என்று தோற்றுவாய் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனை **வலியுறுத்தும் தன்மை யுடையது (Mandatory)** என்றும், விதிகளை ஹிந்தி நாளேட்டில் வெளியிட வேண்டும் எனும் நிபந்தனை **அறிவுறுத்தும் தன்மையுடையது (Directory)** என்றும் கூறியது. மேலும் வலியுறுத்தும் தன்மையுடைய நிபந்தனையை கண்டிப் பாக கடைப்பிடித்தே ஆக வேண்டும் என்றும், மீறினால், சம்பந்தப்பட்ட விதிகள் செல்லாது என்றும், ஆனால் அதே சமயத்தில் அறிவுறுத்தும் தன்மையுடைய நிபந்தனையை கடைப் பிடிப்பதில் ஏதேனும் மாறுபாடு ஏற்பட்டால், அதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை என்றும் கூறியது. இதனடிப்படையில், அறிவுறுத்தும் தன்மையுடைய நிபந்தனையான ஹிந்தி நாளேட்டில் விதிகளை வெளியிட வேண்டும் என்ற நிபந்தனைக்கு முரணாக, உருது நாளேட்டில் விதிகளை வெளியிட்டது நடைமுறை அதிகாரவரம்பு மீறியதாகாது என்றும், அவ்விதிகள் செல்லத்தக்கதே என்றும் உச்ச நீதிமன்றம் இறுதியாக தீர்ப்புரைத்தது.

இந்த தீர்ப்பின் அடிப்படையில், மேற்படி பிரச்சனையில் உள்ளூர் தமிழ் நாளேட்டிற்கு பதிலாக, உள்ளூர் ஆங்கில நாளேட்டில் விதிகளை அரசு வெளியிட்டதினால், அவ்விதிகள் செல்லாததாகிவிடாது; மாறாக செல்லத்தக்கதே என்று திட்டவட்டமாக தீர்வளிக்கலாம். விதிகளை நாளேட்டில் வெளியிட்டால் போதுமானது. அது எந்த மொழி நாளேடு என்பதை இங்கு கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. *(இப்பிரச்சனை தொடர்பான மேலும் விரிவான கருத்துக்களுக்கு இந்நூலின் 139-ஆம் பக்கத்தில் காண்க.)*

2. Parent Act is silent about the publication of the delegated legislation in any form. So without publishing the delegated legislation made under the statute, the government has started implementing it. Decide the validity of the delegated legislation.

தோற்றுவாய் சட்டத்தின் கீழ் அரசு உருவாக்கும் விதிகளை வெளியிடல் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. எனவே அரசு அந்த

1. A.I.R. 1965 S.C. 895.

சட்டத்தின் கீழ் இயற்றிய விதிகளை வெளியிடாமலே செயல்படுத்த முற்படுகிறது. இந்த விதிகளின் செல்லும் தன்மையை ஆராய்க.

தீர்வு:

இப்பிரச்சனைக்குத் தீர்வு காண நாம் பின்வரும் மூன்று முக்கியமான வழக்குகளைக் காண வேண்டியுள்ளது.

Harla v. State of Rajasthan[1] - எனும் வழக்கில் தோற்றுவாய் சட்டத்தின் கீழ் நிருவாகத் துறை (அரசு) செய்த விதிகளை வெளியிடல் குறித்து, அத்தோற்றுவாய் சட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே அவ்விதிகள் அரசால் வெளியிடப்படவில்லை. மேலும் வேறு எந்த வகையிலும் அவ்விதிகள் வெளியிடப்படவில்லை. எனவே அவ் விதிகள் குறித்து அறியும் வாய்ப்பு பொது மக்களுக்கு எந்த வகையிலும் கிடைக்கவில்லை. இவ்வாறு வெளியிடாமலேயே அவ்விதிகள் நிருவாகத் துறையால் அமல் செய்யப்பட்டன. ஆனால் இதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. தோற்றுவாய் சட்டத்தில் விதிகள் வெளியிடப்பட வேண்டியது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லையென்றாலும், இயற்கை நீதியின் அடிப்படையில் விதிகள் ஏதேனும் ஒரு நியாயமான வழியில் வெளியிடப் பட வேண்டியது அவசியமென உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியது. மேலும் அவ்வாறு வெளியிடப்பட்டால்தான் அவ்விதிகள் குறித்து மக்கள் அறிந்து கொள்ள முடியும் என்றும், அப்பொழுதுதான் எவரும் அரசு இயற்றிய சட்டங்கள் என்னவென்று தனக்குத் தெரியாது என்று கூறி தப்பவியலாது என்றும், இவ்வாறு வெளியிடப்படாத விதிகளின் அடிப்படையில் ஒருவரை பொறுப்புக்குள்ளாக்குவதும் அல்லது தண்டிப்பதும் இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு முரண்பட்டது என்றும் கூறி, அவ்விதிகளை செல்லாதவை என்று அறிவித்தது.

State of Maharashtra v. George[2] - எனும் வழக்கில் எந்த விதத்தில் விதிகள் வெளியிடப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அதன்படி, *(1)* தோற்றுவாய்ச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் அமலுக்கு வருவதற்கு முன்பு அவை வெளியிடப்பட வேண்டும் என்று அத்தோற்றுவாய் சட்டமே கூறாது போனாலும், விதிகள் வெளியிடப்படுதல் வேண்டும். *(2)* விதிகள் எந்த விதத்தில் வெளியிடப்பட வேண்டும் என்று குறிப்பிடாதபொழுது, அவைகளை வழக்கமாக வெளி யிடக் கூடிய முறையில் வெளியிடுதல் வேண்டும். *(3)* இந்திய அரசிதழில் (Gazette of India) வெளியீடு செய்தல், வழக்கமாக வெளியிடக் கூடிய முறையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிப்பு செய்வது போன்றதாகும்.

Narendra Kumar v. Union of India[3] - எனும் வழக்கில் நிருவாகத்

1. 1952 SCR 110 : A.I.R. 1951 S.C. 467.
2. A.I.R. 1965 S.C. 722.
3. A.I.R. 1960 S.C. 430.

துறை செய்த விதிகள் முறையாக வெளியிடப்படவில்லை எனும் அடிப்படையில், உச்ச நீதிமன்றம் அவ்விதிகளை செல்லாதவை என்று அறிவித்தது.

எனவே மேற்கண்ட வழக்குகளின் தீர்ப்புகளிலிருந்து கிடைக்கும் பொதுக் கருத்தின்படி நிருவாகத்துறை செய்யும் விதிகள் வெளியிடப்பட வேண்டுமா, வேண்டாமா என்பது குறித்து எதுவும் தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லையென்றாலும், அவ்விதிகள் குறைந்த பட்சம் அரசிதழிலாவது (Gazette) வெளியிடப்பட வேண்டும். இது ஒரு வலியுறுத்தும் தன்மையுடைய (Mandatory) நிபந்தனையாகும். இவ்வாறு வெளியிடப்படாத விதிகள், செல்லாதவை என்பதே மேற்படி பிரச்சனைக்கு ஏற்ற தீர்வாகும்.

3. The Parent Act has stipulated consultation with Mining Board before promulgating rules made under the Act. The Government has sent rules in draft form to the Board. Since the Board did't respond for some time the Government construed it to be consent for the rules and finally promulgated the rules. The rules are challenged as ultra vires. Decide.

சுரங்கத் தொழிலாளர் வாரியத்தை கலந்தாலோசித்து செய் விதிகளைச் செய்ய வேண்டும் என்று தாய் சட்டம் குறிப்பிட்டிருந்தது. விதிகளைச் செய்து அந்த வாரியத்தின் கருத்துக்களை அறிய அரசு அவ்விதிகளை அனுப்பி வைத்தது. சில நாட்கள் கழிந்தும் எவ்விதி தகவலும் அவ்வாரியம் தெரிவிக்கவில்லை. ஆகவே அரசு, வாரியம் அதனை ஏற்றுக் கொண்டு விட்டது எனக் கருதி இவ்விதிகளை நடைமுறைக்கு கொண்டு வந்தது. இவ்விதிகள் அதிகாரவரம்பந்தமை என வழக்கிடப்பட்டது. தீர்வு செய்க.

தீர்வு:

சட்டமன்றம் இயற்றிய தோற்றுவாய் சட்டத்தின் (Parent Act) கீழ் விதிகள் செய்யும் அதிகாரம் நிருவாகத்துறையிடம் (அரசிடம்) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தைக் கொண்டு, நிருவாகத்துறையானது அதிகாரவரம்பு மீறி விதிகள் ஏதும் செய்தல் கூடாது. இதனால் நிருவாகத் துறையின் விதியாக்க அதிகாரத்தின் மீது நீதித்துறையானது இரண்டு வழிகளின் வாயிலாக தனது கட்டுப்பாட்டை செலுத்துகின்றது. அவை *(1)* நிலைமுறை அதிகாரவரம்பு மீறல் (Substantive Ultravires) ; *(2)* நடைமுறை அதிகாரவரம்பு மீறல் (Procedural Ultravires) எனப் படுகிறது.

மேற்கண்ட இரண்டு வகையான அதிகாரவரம்பு மீறலில், நடைமுறை அதிகாரவரம்பு மீறல் மூன்று சூழ்நிலைகளில் எழுகிறது. அவற்றில் இரண்டாவது சூழலின்படி, நிருவாகத்துறை செய்யும் விதிகள் அமல்

செய்யப்படும் முன்னர், அதனால் பாதிக்கப்படுவோரை கலந்தாராய (Consultation of affected interests) வேண்டும் என்று கூறுகிறது. இதனால் அவ்விதிகளினால் பாதிக்கப்படுவோர்கள், அவ்விதிகளுக்கு எதிரான தங்களது கருத்துக்களையும், ஆட்சேபணைகளையும் கூற வாய்ப்பு பெறுகின்றனர். இவை பரிசீலிக்கப்பட்ட பிறகே நிருவாகத்துறை அவ்விதிகளை அமல் செய்வது குறித்து இறுதி முடிவு எடுக்கும்.

ஆனால் இந்தியாவில் பல தோற்றுவாய் சட்டங்களில் மேற்கண்ட நடைமுறை சேர்க்கப்படுவதில்லை. இவ்வாறு தோற்றுவாய் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தாலொழிய, நிருவாகத்துறையானது பாதிக்கப்படு வோரைக் கலந்து அவர்களது கருத்துக்களை கேட்டறிய வேண்டுமென்ற அவசியமில்லை. தோற்றுவாய் சட்டத்தில் மேற்கண்ட நடைமுறை சேர்க்கப்பட்டிருந்து, அது நிருவாகத்துறையால் பின்பற்றப்படவில்லை யானால், நிருவாகத்துறை செய்த விதிகள் அதிகாரவரம்பு மீறியதாகும். எனவே செல்லாதவையென நீதிமன்றத்தால் அறிவிக்கப்படும். இந்த நடைமுறை தோற்றுவாய் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால், அது வலியுறுத்தும் தன்மையுடையதாக (Mandatory) கருதப்படும்.

மேற்கண்ட பிரச்சனையில் வாரியத்திடமிருந்து எந்த தகவலும் வராத காரணத்தால், தொடர்புடைய விதிகளை அவ்வாரியம் ஏற்றுக் கொண்டு விட்டதாகக் கருதி அரசு அவற்றை அமல் செய்தது அதிகாரவரம்பு மீறியதாகும். ஏனென்றால் இத்தனை நாட்களுக்குள் வாரியம் தனது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று தோற்றுவாய் சட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே வாரியம் தகவல் தெரிவிப்பதற் குண்டான ஒரு நியாயமான காலம் வரை அரசு பொறுத்திருந்தே, அவ்விதிகளை அமலுக்கு கொண்டு வர வேண்டும். இங்கு நியாயமான காலம் என்பது 'மூன்று மாதங்கள்' என்று பல வழக்குகளில் நீதிமன்றத் தால் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இங்கு அவ்வாறு 'மூன்று மாதங்கள்' வரை அரசு, வாரியத்தின் தகவலுக்காக காத்திருந்தது என்று மேற்படி பிரச்சனையில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. எனவே வாரியத்தின் தகவல் பெறாமல் அவ்விதிகளை அமல் செய்தது செல்லாது; அவ்விதிகளும் செல்லாது. அரசின் இச்செயல்பாடு அதிகாரவரம்பு மீறியதே என்பதுதான் மேற்படி பிரச்சனைக்குத் தீர்வு. (தொடர்புடைய வழக்கிற்கு இந்நூலின் பக்கம் எண். 141-ல் இறுதிப் பத்தியைக் காண்க)

4. The Central Government issued the Drugs Price Control Order fixing the maximum price at which various indigenously manufactured drugs may be sold by the manufacturers. The manufacturers challenged the order for violation of Natural justice, since they were offered neither notice nor hearing before passing the order for fixing the price of Drugs. - Decide.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட பல்வேறு மருந்துகளை

தயாரிப் பாளர்கள் விற்பனை செய்வதில் அதிகப்படியான விற்பனை விலையை நிர்ணயித்து மத்திய அரசு மருந்துகள் விலைக் கட்டுப் பாட்டு ஆணையை பிறப்பித்தது. ஆனால் தங்களுக்கு அறிவிப்புக் கொடுக்காமலும், கேட்கப்படாமலும் விலை நிர்ணயம் செய்து ஆணை பிறப்பித்தது, இயற்கை நீதியைப் பாதிப்பதால் செல்லத் தகாதது என தயாரிப்பாளர்கள் வாதிடுகின்றனர். - தீர்வழி காண்க.

தீர்வு:

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவின் கீழ் நிருவாகத்துறை யானது விதிகள், ஒழுங்குமுறைகள், துணை-விதிகள், ஆணைகள் ஆகிய வற்றைச் செய்கின்றது. இது **நிருவாகத்துறையின் சட்டமியற்றும் பணி (legislative function of the administrative)** எனப்படுகிறது. எனவே நிருவாகத்துறை தோற்றுவாய் சட்டத்தின் கீழ் விதிகள், ஆணைகள் ஏதும் செய்தால் அது குறித்த அறிவிப்பை யாருக்கும் தர வேண்டியதில்லை. (ஆனால் அத்தோற்றுவாய் சட்டத்தில் வெளிப்படையாக குறிப்பிடப் பட்டிருந்தால் அவ்வாறு அறிவிப்பு தர வேண்டும்). எனவே பொதுவாக நிருவாகத்துறையின் நடவடிக்கை சட்டமியற்றும் தன்மையுடையதாக இருப்பின், யாருக்கும் அறிவிக்க வேண்டியதில்லை. யாரையும் கேட்க வேண்டியதில்லை. எனவே அங்கு இயற்கை நீதிக் கோட்பாடு கூறும் 'இருபுறங் கேட்டல் விதி' பொருந்தாது.

நிருவாகத்துறையானது தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட சட்ட மியற்றும் (அல்லது) விதியாக்க அதிகாரத்தைக் கொண்டு விலை நிர்ணயம் செய்கிறது, வரிகளை விதிக்கிறது, மாநகராட்சி அமைக்கிறது, சந்தையாக பயன்படுத்துவதற்கென இடத்தை ஒதுக்கிறது. நகராண்மைக் குழுவின் எல்லைகளை விரிவாக்குகிறது. இவையெல்லாம் நிருவாகத் துறையின் சட்டமியற்றுப் பணிகள் (legislative functions) ஆகும்.

இவற்றில் எல்லாம், எவரும் தங்களுடைய வாதம் கேட்கப்பட விலலையென்றோ அல்லது தங்களுக்கு அறிவிப்பு தரவில்லையென்றோ, இதனால் இயற்கை நீதிக் கோட்பாடுகள் மீறப்பட்டுவிட்டன என்று ஆட்சேபணை செய்ய முடியாது.

Bates v. Lord Hailsham[1] - எனும் வழக்கில் 'சட்டமியற்றும் பணி, அது முதன்மையானதாகவோ அல்லது ஒப்படைக்கப்பட்டதாகவோ எவ்வாறு இருப்பினும், அதில் இயற்கை நீதி விதிகள் செல்லாது' (the rules of natural justice do not run in the sphere of legislation, primary or delegated) என்று கூறப்பட்டது.

இதே கருத்தை அறிஞர் **வாடே (Wade)** என்பார், "சட்டத்தில் வகை செய்யப்படாத பொழுது சட்டமியற்றுதலுக்கு முன்பு, அது முதன்மை யானதாகவோ அல்லது ஒப்படைக்கப்பட்டதாகவோ எவ்வாறு

1. (1972) 3 All ER 1019 (1023-24) : (1972) 1 WLR 1373 (1378).

இருப்பினும், எவரும் தனது வாதம் கேட்கப்பட வேண்டும் என்ற கோர உரிமையில்லை" என்று கூறுகிறார்.

Prag Ice and Oil Mills v. Union of India[1] - எனும் வழக்கில் கடுகு எண்ணெயின் விற்பனை விலையை நிர்ணயித்துப் பிறப்பிக்கப்பட்ட ஒரு சட்டப்படியான ஆணை, நிருவாகத்துறையின் சட்டமியற்றும் பணியாகும் என்று கூறப்பட்டது. எனவே இந்த விலை நிர்ணயத்தில் இயற்கை நீதி மீறப்பட்டுவிட்டது எனும் அடிப்படையில் வினா எழுப்ப முடியாது.

S.I.Syndicate v. Union of India[2] - எனும் வழக்கில் 1966-ஆம் ஆண்டின் சர்க்கரை (கட்டுப்பாட்டு) ஆணையின் கீழ் [The Sugar (Control) Order, 1966] மத்திய அரசு அறிக்கை (notification) ஒன்றை வெளியிட்டது. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சர்க்கரை ஆலைகள் விற்க வேண்டிய சர்க்கரையின் ஆலை விலையானது அதில் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இது நிருவாகத்துறையின் சட்டமியற்றும் பணியாகும் என்றும், இதற்கெதிராக இயற்கை நீதி மீறப்பட்டுவிட்டது எனும் அடிப்படையில் எவ்வித வழக்கையும் எழுப்ப இயலாது என்றும் உச்ச நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது. (எனினும் அந்த விலை நிர்ணயம் நியாயமான அடிப்படையில் அமைந்ததாக இருக்க வேண்டும் என்றும் கருத்துரைத்தது.)

எனவே மேற்கண்ட கருத்துக்கள் மற்றும் வழக்குகளின் அடிப்படையில், மேற்படி பிரச்சனையில் மருந்துகளின் அதிகப்படியான விற்பனை விலையை நிர்ணயித்து மத்திய அரசு பிறப்பித்த விலைக் கட்டுப்பாட்டு ஆணை, சட்டமியற்றும் தன்மையுடையதாகும். நிருவாகத் துறையின் சட்டமியற்றும் பணிக்கு எதிராக இயற்கை நீதிக் கோட்பாடுகள் இயங்காது. எனவே தயாரிப்பாளர்களின் வாதம் ஏற்புடையதல்ல. அவர்களது வழக்கு தோற்றுப் போகும் என்பதே தீர்வு.

5. Air India in exercise of its Statutory powers, has framed service rules according to which the services of an air-hostess can be terminated on her first pregnancy. Decide the validity of the rule.

ஏர் இந்தியா நிறுவனம் சட்டத்தால் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பணி விதிகளின்படி ஒரு விமான பணிப்பெண் கருவுற்று விட்டாலேயே அவளை பணியிலிருந்து நீக்கலாம். இந்த விதியின் செல்லும் தன்மையை முடிவு செய்க.

தீர்வு:

தோற்றுவாய் சட்டத்தின் கீழ் நிருவாகத்துறை முகவர் நிலை களான நகராட்சிகள் (Corporations), இதர வட்டார அமைப்புகள் (other Lo-

1. A.I.R. 1978 S.C. 1296.
2. A.I.R. 1975 S.C. 460.

cal Bodies), பிற அதிகார அமைப்புகள் (other authorities) ஆகியவை செய்யும் ஒழுங்குமுறைகள் (Regulations), துணை விதிகள் (Bye-Laws) **நியாயமற்றவையாக (unreasonable)** இருப்பின், அவற்றை செல்லாதது, இல்லாநிலையது என்று நீதிமன்றம் அறிவிக்கலாம்.

Air India v. Nargesh Meerza[1] - எனும் வழக்கில் தோற்றுவாய் சட்டத்தின் கீழ் ஏர்-இந்தியா நிறுவனத்தால் ஒரு ஒழுங்குமுறை (regulation) விதி செய்யப்பட்டது. இதன்படி, ஒரு விமான பணிப்பெண் கர்ப்பவதியானால், அவளது பணி முடிவிற்கு வரும். இந்த ஒழுங்குமுறையானது ஏதேச்சதிகாரமானதாகவும், நியாயமற்றதாகவும், நாகரிமடைந்த ஒரு சமுதாயத்தின் கருத்துகளுக்கு களங்கம் கற்பிப்பதாகவும், மனித சுபாவத்தின் இயற்கையான நடைமுறைகளில் தலையீடுவதாகவும் உள்ளது என்றும், எனவே மேற்படி ஒழுங்குமுறை செல்லாது என்றும் உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

எனவே மேற்கண்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, மேற்படி பிரச்சனையில் உருவாக்கப்பட்டுள்ள விதி செல்லாது என்பதே தீர்வு. (மேலும் கருத்துக்களுக்கு இந்நூலின் பக்கம் எண். 135-ல் காண்க.)

6. Tender were requisitioned from qulified persons for running a canteen in the Chennai Air Port. Though there were other qualified persons 'A' was given license by the Air Port Authorities even though 'A' is not fulfiling the required qualifications. The unselected applicants wants to challenge it. Provide legal advise to them.

சென்னை விமான தளத்தில் சிற்றுண்டிச் சாலை நடத்துவதற்கு தகுதி படைத்த நபர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டன. தகுதி படைத்த பிற நபர்கள் இருந்த போதும் விமான தள அதிகாரிகள் போதுமான தகுதிகள் இல்லாதிருந்தும் 'அ' என்பவருக்கு சிற்றுண்டிச் சாலை நடத்துவதற்கான உரிமத்தை வழங்குகின்றனர். தேர்வு செய்யப் படாத மனுதாரர்கள் இவ்வாணையை மறுதலிக்க விரும்புகின்றனர். அவர்களுக்கு சட்ட ஆலோசனை வழங்கவும்.

தீர்வு:

பேராசிரியர். டைசி கூறிய சட்டத்தின் ஆட்சி என்பது, **'சட்டத்தின் முன் அனைவரும் சமம்'** என்பதாகும். அந்த வகையில் இந்திய அரசியலமைப்பின் 14-வது ஷரத்து, "இந்திய எல்லைக்குள் எந்த நபரின் சட்டத்தின் முன்பான சமத்துவத்தையோ அல்லது சட்டத்தின் சம பாதுகாப்பையோ அரசு மறுக்கக் கூடாது என்று கூறுகிறது".

இவ்வாறு சட்டத்தின் முன் சமநிலையை தோற்றுவிக்காமல் நிருவாகத்துறை (அரசு) எடுக்கும் நடவடிக்கைகள், **"நிருவாகத்துறையின்**

1. (1981) 4 SCC 335 : A.I.R. 1981 S.C. 1829.

பாகுபாடு காட்டும் செயல்கள்" (Administrative Discrimination) எனப் படுகிறது. இவ்வாறு பாகுபாடு காட்டும் அரசுச் செயல்களையும் முடிவு களையும் நீதிமன்றம் ஏற்பதில்லை. இல்லாநிலையது, செல்லாதது என்று விளம்புகின்றன. மேற்படி பிரச்சனையில் இத்தகு ஒரு பாகுபாடு காட்டப் பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக பின்வரும் மிக முக்கியமான வழக்கொன்றைக் கவனிப்போமா?

Ramana Dayaram Shetty v. International Airports Authority of India[1] - எனும் வழக்கில் பன்னாட்டு விமான போக்குவரத்து அதிகார அமைப்பானது (International Airports Authority) பம்பாய் பன்னாட்டு விமான நிலையத்தில் இரண்டாம் வகுப்பு உணவுச் சாலையையும் (second class restaurant), இரண்டு சிற்றுண்டிக் கடைகளையும் (snack bars) நடத்துவதற்கு "பதிவுபெற்ற இரண்டாம் வகுப்பு உணவகம் வைத்து நடத்துபவர்களிடமிருந்து" (registered second class hoteliers) ஒப்பந்தப் புள்ளிகளை (tenders) வரவேற்றது. அந்த ஒப்பந்த புள்ளிகளின் நிபந்தனையில், "ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்பது விமான நிலைய இயக்குநரின் முடிவிற்குட்பட்டதாகும்.....அவர் காரணம் ஏதும் கூறாமல் அனைத்து ஒப்பந்தப் புள்ளிகளையோ அல்லது அவற்றில் எவற்றை யாவதோ நிராகரிக்கும் உரிமையை பெற்றுள்ளார்" என்று குறிப்பிடப் பட்டிருந்தது. மேற்படி வழக்கில் அதிகபட்சமாக குறிப்பிடப்பட்ட ஒருவரின் ஒப்பந்தப் புள்ளி ஏற்கப்பட்டது. அவருக்கு உரிமம் வழங்கப் பட்டது. ஆனால் பிரச்சனை என்னவென்றால், அந்த ஒப்பந்தப் புள்ளியை அளித்தவர், ஒரு " பதிவு பெற்ற இரண்டாம் வகுப்பு உணவகம் வைத்து நடத்துபவர்" அல்ல. அதாவது ஒப்பந்தப் புள்ளி அளிக்க தகுதியற்ற ஒருவருக்கு விமானநிலையத்தில் உணவுச் சாலை வைத்து நடத்த அனுமதி வழங்கப்பட்டது. எனவே இதை எதிர்த்து ஒப்பந்தப் புள்ளி ஏதும் அளிக்காத மற்றும் "பதிவு பெற்ற இரண்டாம் வகுப்பு உணவகம் வைத்து நடத்துபவர்" அல்லாத ஒருவர் உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தார். அங்கு தோல்வி கண்ட அவர் உச்ச நீதிமன்றத்தில் உரிமையியல் மேல்முறையீடு (Civil Appeal) செய்தார்.

இந்த மனுதாரரின் வாதம் என்னவென்றால், யாருடைய ஒப்பந்தப் புள்ளி ஏற்கப்பட்டதோ அவரின் அதே நிலையில்தான் தாம் இருப்ப தாகவும், அவர் எப்படி ஒரு பதிவு பெற்ற இரண்டாம் வகுப்பு உணவகம் வைத்து நடத்துபவர் அல்லவோ, அவ்வாறே தானும் ஒரு பதிவு பெற்ற இரண்டாம் வகுப்பு உணவகம் வைத்து நடத்துபவர் அல்ல என்றும், தனக்கு அத்தகுதி இல்லாத காரணத்தால்தான், தான் ஒப்பந்தப் புள்ளி ஏதும் அளிக்கவில்லை என்றும், பதிவு பெறாதவர் அளிக்கும் ஒப்பந்தப் புள்ளி கூட மேற்கண்டவாறு ஏற்கப்படும் என்று தெரிந்திருந்தால், தானும் ஒப்பந்தப் புள்ளி அளித்திருப்பேன் என்றும், இதனால் ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்பதில் பாகுபாடு காட்டப்பட்டுள்ளது என்றும், இவ்வாறு

1. (1979) 3 SCC 489 : A.I.R. 1979 S.C. 1628.

பதிவு பெறாத, தகுதியற்ற ஒருவருக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டதால், தனக்கு அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ள சமத்துவ உரிமை மீறப் பட்டுள்ளது என்றும் அவர் வாதம் புரிந்தார். ஆனால் மனுதாரர் ஒப்பந்தப் புள்ளி ஏதும் அளிக்காதவர். எனவே அவருக்கு இதனால் எந்த பாதிப்பும் இல்லை. பாதிக்கப்படாதவர் வழக்கிட உரிமை இல்லை (no locus standi to file writ) என்று, உரிமம் பெற்ற நபர்கள் எதிர்வாதம் புரிந்தனர். ஆனால் மனுதாரரின் வாதத்தில் இருந்த சட்டத் தன்மையை உச்ச நீதிமன்றம் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டது. (ஆனால் வேறு காரணங்களின் அடிப்படையில் அந்த ஒப்பந்தத்தில் உச்ச நீதிமன்றம் தலையிட மறுத்து, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்து விட்டது.)

இந்த வழக்கின் அடிப்படையில் நமது மேற்படி பிரச்சனையில் தகுதியுடைய நபர்கள் இருந்தும் தகுதியற்ற 'அ' என்பவருக்கு சிற்றுண்டிச் சாலை வைத்து நடத்த சென்னை விமானதள அதிகாரிகள் வழங்கிய ஆணை, ஷரத்து 14-ன் கீழான சமத்துவ உரிமையை மீறியதாகும். எனவே செல்லாததாகும். இங்கு விமானப் போக்குவரத்து அதிகார அமைப்பு, (International Airports Authority) ஷரத்து 12-ன் கீழ் 'அரசு' (State) எனும் பதத்தில் வருகிறது. எனவே ஷரத்து 14-ன்படி அரசு ஒருவரின் சமத்துவ உரிமையை மீறக் கூடாது. பாகுபாடு காட்டக் கூடாது. சமமான சூழலில் உள்ளவர்களை சமமாக நடத்த வேண்டும். இங்கு அவ்வாறு நடத்தத் தவறிவிட்டது. எனவே தகுதியிருந்தும் தேர்ந்தெடுக்கப்படாத மனுதாரர் கள் மேற்கண்ட ஆணையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் நெறிமுறையுறுத்தும் மற்றும் தடையுறுத்தும் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்து தக்க நிவாரணம் பெறலாம். இதுவே அவர்களுக்கு அளிக்கப்படும் சட்ட ஆலோசனை ஆகும்.

7. While conducting interview for recruiting candidates for Indian Forest Service, one of the members of the interview panel offered himself as a candidate for selection. He was interviewed and found suitable for the post. He was selected along with some other candidates. An applicant who is not selected is challenging the selection. Will he be successful?

இந்திய வனத்துறைப் பணியிடத்திற்கான வாய்மொழித் தேர்வு நடத்துகின்ற குழுவில் இடம் பெற்றிருந்த உறுப்பினர் ஒருவர் தானும் மனு செய்தார். அவரை வாய் மொழித் தேர்வுக்கு அனுமதித்து தேர்வு செய்தனர். தேர்வு பெறாதவர் இந்த தேர்வு செல்லாத ஒன்று என வழக்கு தொடுக்கிறார். அவர் வெற்றி பெறுவாரா?

தீர்வு:

நிச்சயம் அவர் வெற்றி பெறுவார். மேற்படி பிரச்சனை **A.K.Kraipak v. Union of India**[1] எனும் வழக்கின் பொருண்மைகளை அப்படியே

1. (1969) 2 SCC 262 : A.I.R. 1970 S.C. 150.

அடியொற்றியதாகும். இவ்வழக்கில் பணியாளர் தேர்வு முறை, இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு மாறுபட்டு அமைந்திருந்ததால், அத்தேர்வு நடைமுறையை முற்றிலும் செல்லாதது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இவ்வழக்கிலும், மேற்படி பிரச்சனையிலும் தேர்வுக் குழுவில் இடம் பெற்றிருந்த ஒருவரே, அத்தேர்வுக்கு விண்ணப்பித் திருந்ததும், அவர் வாய்மொழித் தேர்வின் பொழுது தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டதும், தனிப்பட்ட மனச்சாய்வின்பாற்பட்டதாகும் (Personal Bias). இது இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு முரண்பட்ட தாகும். எனவே அந்த தேர்வு செல்லாத ஒன்று என்பதே மேற்படி பிரச்சனைக்கு உண்டான தீர்வாகும். *(மேற்படி வழக்கின் பொருண்மை களுக்கு இந்நூலின் பக்கம் எண். 186-ல் காண்க.)*

8. A committee was appointed to enquire into the allegations of professional misconduct by Mohan. The Committee conducted the enquiry and submitted its report. Mohan wants to file a petition praying Certiorari to quesh the report of the enquiry Committee, since one of the Committee members was having personal enmity with Mohan - Provide legal advise to Mohan.

மோகன் என்பவருக்கு எதிராக தொழில் சார்ந்த ஒழுக்கக் கேடுகள் குறித்து விசாரிப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டது. அவ்விசாரணைக் குழு நடத்தி அறிக்கை சமர்ப்பித்தது. அவ்விசாரணைக் குழுவில் உள்ள ஒரு உறுப்பினருக்கு மோகன் என்பவரின் மீது தனிப்பட்ட முறையில் பகைமை இருந்து வந்தது. எனவே அக்குழுவின் அறிக்கையை இரத்து செய்ய நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை வேண்டி மனு செய்ய மோகன் விரும்புகிறார். மோகன் என்பவருக்கு சட்ட ஆலோசனை வழங்கவும்.

தீர்வு:

மோகன் நீதிப்பேராணை கோரி தொடுக்கும் வழக்கில் வெற்றி பெறுவார். ஏனெனில் அவ்விசாரணைக் குழுவின் உறுப்பினருக்கும் மோகனுக்கும் இடையே தனிப்பட்ட பகைமை இருந்துள்ளது. இதன் அடிப்படையில்தான் அவ்வுறுப்பினர் தனக்கெதிராக அறிக்கை சமர்ப் பித்துள்ளார் என்னும் நியாயமான சந்தேகமும் (reasonable suspicion), நியாயமான அச்ச உணர்வும் (reasonable apprehension) மோகனுக்கு ஏற்பட்டுள்ளது. இது தனிப்பட்ட மனச்சாய்விற்கு (personal bias) வழி வகுக்கிறது. இதனால் இயற்கை நீதிக் கோட்பாடுகள் மீறப்பட்டுள்ளன. எனவே மோகன் அந்த அறிக்கையை இரத்து செய்ய நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை வேண்டி மனுச் செய்யலாம். வெற்றி நிச்சயம்.

இப்பிரச்சனை, **Manek Lal v. Dr. Prem Chand**[1] - எனும் வழக்கின் பொருண்மைகளை ஏறத்தாழ அடியொற்றியதாகும். இவ்வழக்கின்

1. 1957 SCR 575 : A.I.R. 1957 S.C. 425.

முடிவில் உச்ச நீதிமன்றம் மனச்சாய்வு குறித்த **அறிவுக்குப் பொருந்திய ஐய சோதனை (அல்லது) நியாயமான சந்தேகச் சோதனை (Reasonable Suspicion Test)** சோதனை ஒன்றைக் கூறியது. அதனடிப்படையில் தான், மனேக் லாலுக்கு எதிரான முறையீட்டை விசாரித்த தீர்ப்பாயத்தின் தலைவர், அப்பதவி வகிக்கத் தகுதியற்றவர் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும் நீதி செய்யப்பட்டால் மட்டும் போதாது; அது செய்யப்படுவதாக வெளிப்படையாகவும் அய்யத்திற்கிடமில்லாமலும் தோற்றமளிக்க வேண்டும் என்று **ஹீவார்ட் நீதிப் பெருமகனார்** கூறிய கருத்தையும் உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியது.

எனவே மேற்கண்ட சோதனையின் அடிப்படையில் மோகனுக்கு வெற்றி உறுதி. இதுவே மோகனுக்கு நாம் வழங்கும் சட்ட ஆலோசனை. *(மேலும் விளக்கத்திற்கு இந்நூலின் பக்கம் எண். 191 மற்றும் 192-ல் காணவும்.)*

9. A departmental enquiry against a head constable was held in the first instance by the Superintendent of Police. During the enquiry the Superintendent himself had to give evidence. At that time when it was done by the Deputy Superintendent of Police presided over the enquiry. The evidence was recorded by him. Finally the Superintendent dismissed him. The dismissal is challenged by the head constable. Will he succeed?

காவல் துறை கண்காணிப்பாளர் ஒருவரால் தலைமைக் காவலர் ஒருவர் மீது துறை விசாரணையொன்று நடத்தப்பட்டது. விசாரணையின் போது கண்காணிப்பாளர் சாட்சியம் அளிக்க வேண்டியிருந்தது. அச்சமயம் துணைக் கண்காணிப்பாளரே விசாரணைக்கு தலைமை தாங்கினார். சாட்சியங்கள் அவரால் பதிவு செய்யப்பட்டன. இறுதியாக கண்காணிப்பாளர் பணி நீக்க உத்திரவு பிறப்பிக்கின்றார். இவ் வுத்திரவினை எதிர்த்து தலைமை காவலர் முறையீடு செய்கிறார். அவர் வெற்றி பெறுவாரா?

தீர்வு:

தலைமைக் காவலர் வெற்றி பெறுவார். ஏனெனில் இங்கு தனிப் பட்ட மனச்சாய்வின் (Personal Bias) அடிப்படையில் விசாரணை நடந்துள்ளது. இப்பிரச்சனை **State of U.P. v. Mohd. Nooh**[1] - எனும் வழக்கின் பொருண்மைகளை அப்படியே அடியொற்றியதாகும். *(அவ் வழக்கு இந்நூலின் பக்கம் எண். 185-ல் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அங்கு காண்க.)*

10. An election petition was filed by an unsuccessful candidate before election Tribunal. The case was decided against him. He

1. A.I.R. 1958 S.C. 86.

challenged the same before the Supreme Court contending that the Judge was biased because his wife is a member of a political party in which his opponent also is a member. Decide.

தேர்தலில் தோல்வியுற்ற ஒருவர் தேர்தல் தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடுத்தார். வழக்கு அவருக்கு பாதகமாக முடிந்தது. அதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அவருடைய வாதமென்ன வென்றால் தீர்ப்பாயத்தின் நீதிபதியின் மனைவியும், தன்னுடைய எதிரியும் ஒரே கட்சியில் உறுப்பினர்களாக உள்ளதால் நீதிபதி மனச்சாய்வுடன் செயல்பட்டார் என்பதுதான். தீர்வு செய்க.

தீர்வு:

ஒரு வழக்கை விசாரிக்கும் நீதிபதிக்கு அவ்வழக்கின் கருப்பொருள் மீது மனச்சாய்வு (Bias as to Subject Matter) இருப்பின், அது அலுவல் சார்ந்த மனச்சாய்வு அல்லது கருப்பொருள் குறித்த மனச்சாய்வு எனப் படும். இதனால் அவர் அவ்வழக்கிற்கு நீதிபதியாக பதவி வகிப்பதற்கு தகுதியற்றவராகிறார். மேலும் அவர் வழக்கை விசாரித்து தீர்ப்பு ஏதேனும் வழங்கியிருப்பின், அது செல்லாததாகவும் ஆகிறது.

ஆனால் அறிஞர்கள் **Griffith and Street** அவர்கள், அலுவல் சார்ந்த மனச்சாய்வு மிகவும் அரிதான சூழல்களில் மட்டுமே வழக்கு நடவடிக்கை களையும், தீர்ப்பையும் செல்லாததாக்குகின்றது, என்று குறிப்பிடு கின்றனர். வழக்கின் கருப்பொருளில் ஒரு பொதுவான நோக்குடன் அக்கறை கொண்டிருப்பது ஒன்று மட்டுமே, அவ்வழக்கை விசாரிக்கும் நீதிபதியை பதவியிழக்குமாறு செய்யாது. மாறாக, அந்த அக்கறை அவ்வழக்குடன் நேரடியாக தொடர்புடையதாக இருத்தல் வேண்டும்.

Muralidhar v. Kadam Singh[1] - இவ்வழக்கில் **தேர்தல் தீர்ப் பாயத்தின் தலைவருடைய** மனைவி, காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர். அக்கட்சியின் ஒரு வேட்பாளர்தான், தேர்தலில் மனுதாரரைத் தோற் கடித்தார். இது சம்பந்தமாக தேர்தல் தீர்ப்பாயத்திடம் முறையீடு செய்யப் பட்டது. அதில் அம்மனுதாரருக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பை எதிர்த்து மனுதாரர் உச்ச நீதிமன்றத்திற்கு சென்றார். அங்கு தனது தேர்தல் எதிரியும், தேர்தல் தீர்ப்பாயத்தின் தலைவருடைய மனைவியும் ஒரே கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதால், தேர்தல் தீர்ப்பாயத்தின் தலைவர் கருப்பொருள் மனச் சாய்வின் அடிப்படையில் தனக்கு விரோதமாக மேற்படி முறையீட்டில் தீர்ப்பு வழங்கிவிட்டார் என்றும், எனவே அத்தீர்ப்பை இரத்து செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார். ஆனால் இந்த வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. தேர்தல் தீர்ப்பாயத்தின் தலைவர் தன் முன் எழுந்த மேற்படி முறையீட்டில் நேரடியான அக்கறை ஏதும் கொண்டிருக்க வில்லை என்றும், அங்கு உண்மையில் மனச்சாய்வு நிகழக் கூடிய

1. A.I.R. 1954 M.B. 111.

சாத்தியக் கூறு (real likelihood of bias) ஏதும் இல்லை என்றும் கூறி, தேர்தல் தீர்ப்பாயத்தின் தலைவர் அலுவல் சார்ந்த அல்லது கருப் பொருள் குறித்த மனச்சாய்வு கொண்டுள்ளதாக கருதுவதற்கில்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இத்தீர்ப்பை மேற்படி பிரச்சனையை தீர்ப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளலாம். பிரச்சனையின்படி, தேர்தலில் தோற்றுப் போனவர் செய்யும் மேற்படி வாதம் எடுபடாது. உச்ச நீதிமன்றம் அதை நிராகரித்து விடும். அவர் தனது மேல்முறையீட்டில் வெற்றி பெறமாட்டார் என்பதே தீர்வு.

11. A student was caught in the examination hall for using unfair means while writing the examination. Without hearing the student, the university authorities cancelled the examination result on the basis of the report filed by the examination hall superintendent. The order of the university was challenged by the student before the court. Will he succeed?

ஒரு மாணவர் தேர்வு அறையில் காப்பி அடித்ததற்காக பிடி-பட்டார். அவரை விசாரிக்காமல், பல்கலைக்கழக அதிகாரிகள் அவரது தேர்வு முடிவினை தேர்வு அறைக் கண்காணிப்பாளர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் இரத்து செய்தது. இந்த பல்கலைக் கழக உத்தரவை எதிர்த்து மாணவர் நீதிமன்றம் முன்பு மறுதலிக்கிறார். அவர் வெற்றி பெறுவாரா?

தீர்வு:

நிச்சயம் வெற்றி பெறுவார். இதற்கு ஆதாரமாக பின்வரும் வழக்கு அமைகிறது.

Board of Education v. Ghanshyamdas[1] - எனும் வழக்கில், தேர்வு எழுதுகையில் ஒரு மாணவர் காப்பி அடித்தார். ஆனால் அவரை விசாரிக்காமல், அவர் தனது வாதத்தை எடுத்துக் கூற வாய்ப்பளிக்காமல் அவருடைய தேர்வு முடிவு, கல்வி வாரியத்தால் இரத்து செய்யப்பட்டது. மேலும், அவர் அடுத்த தேர்வு எழுதுவதும் தடை செய்யப்பட்டது. இதை எதிர்த்து அம்மாணவர் உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். அங்கு **இருபுறங் கேட்டல் விதி (Audi Alteram Partem)** எனும் இயற்கை நீதிக் கோட்பாடு மீறப்பட்டுவிட்டது எனும் காரணங்காட்டி, கல்வி வாரியத்தின் தீர்ப்பு முடிவு இல்லா நிலையது (void) என்று உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

இந்நிலைப்பாடுதான் மேற்கண்ட பிரச்சனையிலும் உள்ளது மேற்படி பிரச்சனையின்படி காப்பியடிக்கும் பொழுது பிடிபட்ட அம் மாணவரை விசாரிக்காமல், தேர்வு அறைக் கண்காணிப்பாளர் கொடுத்த

1. A.I.R. 1962 S.C. 1110.

அறிக்கையின் அடிப்படையில், அவரது தேர்வு முடிவு இரத்து செய்யப் படுகிறது. இங்கு அம்மாணவருக்கு தனது தரப்பு வாதத்தை எடுத்துக் கூற வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அம்மாணவர் பல்கலைக்கழகத்தால் விசாரிக்கப்படவுமில்லை. இது இருபுறங் கேட்டல் விதி எனும் இயற்கை நீதிக் கோட்பாட்டை மீறியதாகும். எனவே பல்கலைக்கழகம் பிறப்பித்த உத்திரவை எதிர்த்து அம்மாணவர் தொடுக்கும் வழக்கில் அவர் நிச்சயம் வெற்றி பெறுவார். பல்கலைக்கழகத்தின் உத்திரவு இல்லாநிலையது என்று நீதிமன்றத்தால் அறிவிக்கப்படும் என்பதே தீர்வு.

12. In an enquiry against an illiterate person, he requested to engage a lawyer to represent his matter which was denied by the enquiry committee. Will it amount to violation of fair hearing?

படிப்பறிவில்லாத நபர் ஒருவர் மீது தொடங்கப்பட்ட விசாரணையில் தனக்கு வாதிட ஒரு வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ள அனுமதி கோரினார். அதனை விசாரணை அலுவலர் நிராகரிக்கிறார். இந்த செயல் நடுநிலை விசாரணை விதியை மீறுவது ஆகுமா?

தீர்வு:

நிருவாகத்துறை எடுக்கும் நடவடிக்கைகளில் இயற்கை நீதிக் கோட்பாடுகள் (Principles of Natural Justice) பின்பற்றப்பட வேண்டும். இல்லாது போனால் அந்த நடவடிக்கை இல்லாநிலையதென நீதிமன்றத்தால் அறிவிக்கப்படும். **மனச்சாய்விற்கெதிரான விதி (Rule against Bias)** மற்றும் **'இருபுறங் கேட்டல் விதி' (Audi Alteram Partem)** எனும் இரு பெரும் கோட்பாடுகளை, இயற்கை நீதி கூறுகிறது. இதில் இருபுறங் கேட்டல் விதி, ஒரு பிரச்சனையின் அல்லது வழக்கின் இரு தரப்பினரின் வாதங்களையும் கேட்டறிந்த பின்னரே, முடிவு அல்லது தீர்ப்பளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இவ்வாறு ஒரு தரப்பினர் தனது தரப்பு வாதங்களை எடுத்துக் கூற தனக்குச் சார்பாக வழக்குரைஞர் ஒருவரை நியமித்துக் கொள்ளலாமா **(Representation through a Counsel)** என்பதும், அவ்வாறு நியமித்துக் கொள்ள அனுமதி மறுக்கப்பட்டால் அது **நடுநிலை விசாரணை (Fair Hearing)** எனப்படும் இருபுறங் கேட்டல் விதியை மீறியதாகுமா என்பதும்தான் நமது பிரச்சனையில் தீர்க்கப்பட வேண்டிய கூறாகும்.

பொதுவாக நிருவாகமுறை நீதித் தீர்ப்பு நடவடிக்கைகளில் தரப் பினர் ஒருவர் தனது சார்பாக வழக்குரைஞர் ஒருவரை நியமித்து வாதிடும் உரிமை, நியாயமாகக் கேட்டலின் ஒரு முக்கிய உட்கூறாகக் கருதப் படுவதில்லை. இந்தியச் சட்டங்களும் பலவும் இதற்கு அனுமதிப்ப தில்லை. மேலும், சில நிகழ்வுகளில் இந்த உரிமையை அளிப்பது, நிருவாகமுறை நீதித்தீர்ப்பு கூறும் அமைப்புகளின் (Administrative Adjudicatory Bodies) தன்விருப்புரிமைக்குட்பட்டதாகவும் உள்ளது. இத்தோடு மட்டுமில்லாமல் சில சட்டங்களில் (ஆலைச் சட்டங்கள் -

Factory Laws) வழக்குரைஞரை நியமித்து வாதிடுவதே தடுக்கப் பட்டுள்ளது. மேலும் வேறு சில சட்டங்களில் (தொழிற் தகராறுகள் சட்டம், *1947* - Industrial Disputes Act, 1947).

எனினும், வழக்கின் ஒரு தரப்பினர் கல்லாதவராக இருந்தாலோ, அல்லது சம்பந்தப்பட்ட வழக்கு சிக்கல் மற்றும் நுட்பம் மிகுந்ததாக இருந்தாலோ, அல்லது அவ்வழக்கில் சட்டப் பிரச்சனை இருந்தாலோ அல்லது வழக்கின் ஒரு தரப்பினர் நன்கு அனுபவம் வாய்ந்த வழக்குரைஞரை நியமித்து அவர் மூலம் வாதங்களை எடுத்துரைத் தாலோ, அங்கு வழக்குரைஞரை நியமித்து வாதிடும் வாய்ப்பை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்குதல் வேண்டுமென இந்திய நீதிமன்றங்கள் பல வழக்குகளில் தீர்ப்புரைத்துள்ளன.

அந்த வகையில், **James Bukshi v. Collector of Customs**[1] - எனும் வழக்கில் சுங்க வரித்துறையினர் எடுத்த ஒரு நடவடிக்கையால் பாதிக்கப் பட்ட ஒருவர் படிப்பறிவில்லாதவர். எனவே அவருக்கு எதிராக நடக்கும் விசாரணையில் அவரது சார்பாக அவரது வாதங்களை எடுத்துக் கூற வழக்குரைஞர் ஒருவரை நியமித்துக் கொள்ள அனுமதி வேண்டி மனுச் செய்தார். ஆனால் அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இது இயற்கை நீதிக் கோட்பாடு கூறும் இருபுறங் கேட்டல் விதியை மீறிய தாகும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து, அவருக்கு வழக்குரைஞர் ஒருவரை நியமித்துக் கொள்ள அனுமதி வழங்கியது.

மேற்படி வழக்கின் தீர்ப்புப்படி., படிப்பறிவில்லாத ஒருவர், தனக்குச் சார்பாக வழக்குரைஞர் ஒருவரை நியமித்துக் கொள்ள கோரும் அனுமதியை, விசாரணை அலுவலர் மறுப்பது நடுநிலை விசாரணை விதி எனும் இருபுறங் கேட்டல் விதியை மீறியதாகும் என்பதே மேற்படி பிரச்சனைக்கு உகந்த தீர்வு.

13. Based on a complaint given by the principal of a college, the university examination conducted in that college was cancelled by the university on the ground of mass copying without hearing the students who wrote the examinations. The students contended that it is a violation of natural justice. Decide.

பல்கலைக்கழக தேர்வில் நடந்த மாணவர்களின் முறைகேடு தொடர்பாக கல்லூரி முதல்வரின் புகாரின் அடிப்படையில் பல்கலைக் கழகம் மாணவர்களை விசாரிக்காமல் தேர்வை இரத்து செய்து விடுகிறது. பாதிக்கப்பட்ட மாணவர்கள் இச்செயல் இயற்கை நீதிக்கு புறம்பானது என வாதிடுகிறார்கள். முடிவு செய்க.

தீர்வு:

நிருவாகத்துறை எடுக்கும் நடவடிக்கைகளில் இயற்கை நீதிக்

1. A.I.R. 1972 S.C. 2178.

கோட்பாடுகள் (Principles of Natural Justice) பின்பற்றப்பட வேண்டும். இல்லாது போனால் அந்த நடவடிக்கை இல்லாநிலையதென நீதிமன்றத்தால் அறிவிக்கப்படும். எனினும் சில விதிவிலக்கான சூழ்நிலைகளில் இயற்கை நீதிக் கோட்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியதில்லை. அதிலும் இயற்கை நீதி கூறும் இரண்டு கோட்பாடுகளில் **'இருபுறங் கேட்டல் விதி' (Audi Alteram Partem)** பின்வரும் சூழ்நிலையில் தளர்த்தப்படுகிறது.

அதன்படி, ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினர்கள் **அதிக எண்ணிக்கையில் (Innumerable number)** இருப்பின் அல்லது வழங்கப்பட வேண்டிய தீர்ப்பு பொதுவான தன்மை கொண்டதாக இருப்பின், அத்தரப்பினர்களின் விசாரணை கேட்கப்பட வேண்டும் என்று இயற்கை நீதி விதிக்கும், நிபந்தனை தவிர்க்கப்படுகிறது; தளர்த்தப் படுகிறது. இந்நிலைப்பாட்டை பின்வரும் வழக்கு விளக்குகிறது. மேலும் நமது மேற்படி பிரச்சனையும் பின்வரும் வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையில் அமைந்ததேயாகும்.

Bihar S.E. Board v. Subhash Chandra[1] -என்ற வழக்கில் ஒரு தேர்வு மையத்தில் தேர்வு எழுதிய மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் தேர்வுகள், அவர்கள் ஒட்டுமொத்தமாக 'காப்பி'யடித்து (mass copying) தேர்வுகளை எழுதியுள்ளனர் என்ற அடிப்படையில் கல்வி வாரியத்தால் இரத்து செய்யப்பட்டன. மேலும் அவர்களை அடுத்து வரும் துணைத் தேர்வில் (supplemetary examination) தேர்வில் மீண்டும் ஆஜராகி தேர்வு எழுதுமாறு மேற்படி வாரியம் ஆணையிட்டது. ஆனால் இவ்வாறு ஆணையிடுவதற்கு முன்பாக தங்களின் வாதத்தை மேற்படி வாரியம் கேட்கவில்லை எனும் அடிப்படையில் அம்மாணவர்கள் அந்த ஆணையை எதிர்த்து பாட்னா உயர் நீதிமன்றத்தில் வழக்கிட்டனர். வழக்கை விசாரித்த பாட்னா உயர் நீதிமன்றம் அந்த ஆணையை இரத்து செய்ய உத்திரவிட்டது. ஆனால் இதை எதிர்த்து கல்வி வாரியம் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தது. அங்கு, மேற்படி கல்வி வாரியம் பிறப்பித்த ஆணை, தன்மையில் பொதுவானது என்றும், எந்த ஒரு குறிப்பிட்ட மாணவர் மீதும் தனிப்பட்ட விதத்தில் காப்பியடித்த குற்றம் சாட்டப்படவில்லை என்றும், இம்மாதிரியான சூழ்நிலைகளில் அம் மாணவர்கள் ஒவ்வொருவரையும் காப்பியடித்த குற்றத்திற்காக விரிவாக விசாரணை செய்ய வேண்டும் என்று கல்வி வாரியத்தைக் கட்டாயப் படுத்துவது முறையாகாது என்றும், எனவே பாட்னா உயர் நீதிமன்றம் மேற்படி ஆணையை இரத்து செய்து பிறப்பித்த உத்திரவு இல்லா நிலையது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

எனவே இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள தீர்ப்பின் அடிப்படையில், தங்களை விசாரிக்காமல் பல்கலைக்கழகம் எடுத்த முடிவு இயற்கை நீதிக்கு புறம்பானது என்று பாதிக்கப்பட்ட மாணவர்கள் செய்யும் வாதம்

1. A.I.R. 1970 S.C. 1269.

எடுபடாது. பல்கலைக்கழகம் தேர்வை இரத்து செய்தது செல்லத்தக்கதே என்பதுதான் இப்பிரச்சனைக்கு தீர்வு.

14. A entered into a contract with the Director of Civil supplies to supply 100 tons of Sugar. The Director entered this contract without any authority from the government in this regard. A supplied the sugar, which was accepted and part payment was made. When the balance amount was claimed, the government contended that the contract is void since the Director was not authorised to enter that contract. Decide.

அ என்பவர் குடிமை பொருள் வழங்குதுறை இயக்குநரோடு 100 டன் சர்க்கரை விற்பது சம்மந்தமாக ஒப்பந்தம் செய்து கொள்கிறார். இயக்குநர் இந்த ஒப்பந்தம் அரசின் ஒப்புதல் இன்றி ஏற்படுத்தியுள்ளார். அ குறிப்பிட்ட 100 டன் சர்க்கரையை வழங்கிவிட்டார். அதனை ஏற்றுக் கொண்டு கொடுக்க வேண்டிய பணத்தில் பாதியை கொடுத்தனர். மீதி தொகை கேட்கும் போது அரசானது இந்த ஒப்பந்தம் செல்லத்தகாதது என வாதிடுகிறது. ஏனென்றால் துறை அதிகாரிக்கு இது சம்பந்தமாக எந்த அதிகாரமும் கொடுக்கவில்லை. முடிவு செய்க.

தீர்வு:

இங்கிலாந்தில் இயற்றாப் பொதுச் சட்டப்படி, அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தொடர்பாக எந்த உரிமையியல் வழக்கையும் அரசிற்கெதிராக நீதிமன்றங்களில் தொடர இயலாது எனும் சிறப்புரிமை அரசிற்கு வழங்கப்பட்டிருந்தது. இது 'மன்னர் தவறு செய்யார்' எனும் முதுமொழியின்படி எழுந்த சிறப்புரிமையாகும். ஆனால் காலப்போக்கில் இச்சிறப்புரிமை மறைந்து போனது. தற்பொழுது ஒரு சாதாரண நபரைப் போலவே ஒப்பந்தத்திற்கு அரசும் பொறுப்புடையதாக்கப்பட்டது. இந்நிலை இந்தியாவிலும் ஏற்கப்பட்டது. இன்று இந்தியாவில் அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் கூறப் பட்டுள்ள வகைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். அதே சமயத்தில், அதற்கும் கூடுதலாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 299(1)-வது ஷரத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளும் பின்பற்றப் பட்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்திய அரசுடன் அல்லது மாநில அரசுடன் செய்து கொள்ளும் ஒரு ஒப்பந்தம், செல்லத்தக்க ஒன்றாகும்.

ஆனால் ஷரத்து 299(1)-ல் பல கடுமையான நிபந்தனைகள் விதிக்கப் பட்டுள்ளன. (அந்நிபந்தனைகளை வினா எண். 49-ல் காண்க.) வளர்ந்து வரும் மக்கள் நல அரசுகள் அந்நிபந்தனைகளை எல்லாம் பின்பற்றி, எளிதில் தனியார்களுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள முடிய வில்லை. எனவே, இந்நிபந்தனைகளை தளர்த்தும் வண்ணம், நீதித்துறை

யானது பல வழக்குகளில் அரசுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கு பொருள் விளக்கம் அளித்து, அவை செல்லத்தக்கவையே என்று தீர்ப்புரைத்துள்ளன. அந்த வகையில் பின்வரும் வழக்கொன்றில் எழுந்த சூழலையும், அதில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் காண வேண்டியது இன்றியமையாததாகும். ஏனெனில், அவ்வழக்கின் பொருண்மைளை ஒட்டிய வண்ணமே, நமது மேற்படி பிரச்சனையும் அமைந்துள்ளது.

Bhikraj Jaipuria v. Union of India[1] - இந்திய அரசியலமைப்பின் ஷரத்து 299(1)-ன் மூன்றாவது நிபந்தனை, **குடியரசுத் தலைவரால் அல்லது ஆளுநரால் முறைப்படி இசைவாணை அளிக்கப்பட்ட ஒரு நபரால் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் (Contract must be executed by a person duly authorised by the President or the Governor)** என்று கூறுகிறது. இவ்வாறு இசைவு ஆணை அளிக்கப்படாத நபரால் எழுதிக் கொடுக்கப்படும் ஒப்பந்தம், செல்லாதாகும். மேற்படி வழக்கில் இந்த நிபந்தனை எவ்வாறு உச்ச நீதிமன்றத்தால் அணுகப்பட்டுள்ளது என்பதை அறிந்தால், நமது மேற்படி பிரச்சனைக்கும் தீர்வு கிடைத்து விடும்.

மேற்படி வழக்கில் இரயில்வே நிருவாகத்தின் கோட்டக் கண்காணிப்பாளருக்கும் (Divisional Superintendent), ஒரு தனிநபருக்கும் இடையே உணவுத் தானியங்களை இரயில்வேக்கு வழங்குதல் பற்றி ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் அவ்வாறு ஒப்பந்தத்தில் ஈடுபட அவருக்கு (கோட்டக் கண்காணிப்பாளர்) வெளிப்படையாக எந்த அதிகாரமும் (express authority) அளிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் வழக்கின் சூழ்நிலைகளிலிருந்து அவர் ஒப்பந்தத்தில் ஈடுபட அவருக்கு உட்கிடையான அதிகாரம் (implied authority) அளிக்கப்பட்டிருந்தது என்பதை உச்ச நீதிமன்றம் ஊகித்தறிந்தது. ஏனெனில், ஒப்பந்தத்தில் ஈடுபட்ட அத்தனிநபர் அளித்த உணவு தானியங்களை, இரயில்வே நிருவாகம் ஏற்றுக் கொண்டுள்ளது; மேலும் அந்த தானியங்கள் அதன் அலுவலர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான விலையில் ஒரு பகுதி அத்தனிநபருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவற்றைக் கொண்டு ஒப்பந்தத்தில் ஈடுபட அக்கோட்டக் கண்காணிப்பாளருக்கு அரசாங்கம் உட்கிடையாக அதிகாரம் (இசைவாணை) அளித்துள்ளது என்பதை உச்ச நீதிமன்றம் ஊகிந்தறிந்து, அவ்வொப்பந்தத்தில் ஈடுபட மேற்படி கோட்டக் கண்காணிப்பாளருக்கு அரசால் வெளிப்படையாக எந்த அதிகாரமும் அளிக்கப்படவில்லை, எனவே அவ்வொப்பந்தம் செல்லாது என்று அரசாங்கம் கூறிய வாதத்தை நிராகரித்தது. இந்த வகையில் அவ்வொப்பந்தம் செல்லத்தக்கதே என்று உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது. [ஆனால், அவ்வொப்பந்தம் (அப்பொழுதைய) இந்திய தலைமை ஆளுநரின் (Governor-General) பெயரால் எழுதிக் கொடுக்கப்படுகிறது

1. A.I.R. 1962 S.C. 113.

என்பதை வெளிப்படுத்தாத காரணத்தால், செல்லாதது என்று தீர்ப் புரைத்தது.]

மேற்படி பிரச்சனையில் 'அ' என்பவர் குடிமை பொருள் வழங்கு துறை இயக்குநரோடு 100 டன் சர்க்கரை விற்பது சம்மந்தமாக ஒப்பந்தம் செய்து கொண்டு, அவ்வாறே 100 டன் சர்க்கரையையும் வழங்கிவிட்டார். ஆனால், மேற்படி இயக்குநர் அரசின் ஒப்புதல் இன்றி 'அ' உடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளார். இங்கு மேற்படி ஷரத்து 299(1) கூறும் நிபந்தனை பூர்த்தி செய்யப்படவில்லை. எனவே இந்த ஒப்பந்தத்தை செல்லாதது என்று தீர்வளிக்கலாம். ஆனால் 'அ' வழங்கிய 100 டன் சர்க்கரையை குடிமைப் பொருள் வழங்குத்துறை ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும் 'அ'-க்கு கொடுக்க வேண்டிய பணத்தில், பாதி கொடுக்கப் பட்டுள்ளது. மீதி தொகையை கேட்கும் போது, அரசானது இந்த ஒப்பந்தம் செல்லத்தகாதது என வாதிடுகிறது. அதற்குக் காரணமாக குடிமைப் பொருள் வழங்குத் துறை அதிகாரிக்கு இது சம்பந்தமாக எந்த அதிகாரமும் கொடுக்கப்படவில்லை என்று கூறுகிறது. அரசின் இந்த வாதத்தை மேற்கண்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில், வழங்கப்பட்ட சர்க்கரையை ஏற்றுக் கொண்டு, அதற்குப் பாதிப் பணத்தையும் அரசு வழங்கியுள்ளது. இதிலிருந்து 'அ'-வுடன் ஒப்பந்தத்தில் ஈடுபட மேற்படி துறை இயக்குநருக்கு அரசாங்கம் உட்கிடையாக அதிகாரம் (இசைவாணை) அளித்துள்ளது என்பதை ஊகித்தறியலாம். 'அ'-க்கும், மேற்படி துறை இயக்குநருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்பதை மேற் கண்ட சூழல்கள் உட்கிடையாக உணர்த்துகிறது. எனவே அந்த ஒப்பந்தம் செல்லத்தக்கதே என்பதுதான் மேற்படி பிரச்சனைக்கு தீர்வாகும்.

15. 'A' was arrested on the ground of suspicion that he was a smuggler of gold. The gold ornaments were confiscated from him and were kept in the court's property section. After trial, he was acquited by the court giving him benefit of doubt. Subsequently, he filed a petition for return of his gold ornaments. They were found missing from the property section of the court. The state refused to accept liability on the ground that the function was sovereign in nature. Will the State succeed?

'அ' என்பவர் தங்கக் கடத்தல்காரர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்படுகிறார். அவரிடமிருந்து நகை மற்றும் ஆபரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவைகள் அனைத்தையும் நீதிமன்றத்தில் பொருட்கள் வைக்கும் அறையில் வைக்கப்பட்டன. விசாரணைக்குப் பிறகு, 'அ' என்பவருக்கு சந்தேகத்தின் பலனை அளித்து நீதிமன்றம் விடுதலை செய்கிறது. அதற்குப் பிறகு, அவர் தனது தங்க ஆபரணங்களை திரும்ப கேட்டு மனு தாக்கல் செய்கிறார். தங்க நகைகள் அனைத்தும் நீதிமன்ற

பொருட்கள் வைக்கும் அறையிலிருந்து காணாமல் போய்விட்டது. அரசு தன் செயல் இறைமைச் செயல் என்ற அடிப்படையில் பொறுப்பு நிலையை மறுக்கிறது. அரசு வெற்றி பெறுமா?

தீர்வு:

அரசு வெற்றி பெறும்.

இப்பிரச்சனை **Kasthuri Lal Ralia Ram Jain v. State of U.P.**[1] - எனும் வழக்கின் பொருண்மைகளை அடியொற்றியதாகும். இவ்வழக்கில் கொடுக்கப்பட்ட தீர்ப்பை மேற்படி பிரச்சனைக்கு பொருத்தினால், அரசு வெற்றி பெறும் என்பது தெளிவாகும். *(அவ்வழக்கை இந்நூலின் பக்கம் எண். 334-ல் காண்க.)*

16. In the year 2000, the government announced a 3 years tax holiday for those who set up industries in the industrially backward Districts. In the year 2001 the government withdraw this tax holiday. Those who set up industries challenge the order on the basis of promissory estoppel. Decide.

தொழிலில் பின்தங்கிய மாவட்டங்களில் தொழிற்சாலைகளைத் தொடங்குவோருக்கு 3 வருட வரிச்சலுகை 2000 ஆண்டில் அரசு வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் 2001-ம் ஆண்டில் அரசு அவ் வாணையை திரும்ப பெற்றது. தொழிற்சாலை தொடங்கியவர்கள் உறுதிமொழி முரண்தடை கோட்பாட்டின் அடிப்படையில் இரண்டாவது அரசாணையை எதிர்க்கிறார்கள். - முடிவு செய்க.

தீர்வு:

இப்பிரச்சனைக்குத் தீர்வு காண, நாம் சில விபரங்களையும், முக்கிய வழக்கொன்றையும் காண வேண்டியுள்ளது.

முதற்கண் **உறுதிமொழி முரண்தடை (Promissory Estoppel)** என்பதின் விளக்கத்தை நாம் அறிதல் வேண்டும். அஃதாவது, ஒருவர் தனது பேச்சால் அல்லது செயலால் வாக்குறுதி அல்லது உறுதியுரை ஒன்றைச் செய்துவிட்டு, அந்த வாக்குறுதியின் பேரில் மற்றொரு தரப்பினர் நடந்து அவருக்கு ஊறு ஏதேனும் ஏற்படுமானால், அவ்வாக்குறுதியை அல்லது உறுதியுரையைச் செய்தவர், அத்தகு வாக்குறுதி அல்லது உறுதியுரையிலிருந்து மாறிச் செல்ல அல்லது மாற்றிச் சொல்ல அனுமதிக்கப்படமாட்டார். அதாவது ஏற்கனவே கொடுத்த வாக்குறுதிக்கு அல்லது செய்த செயலுக்கு முரணாக சொல்ல அல்லது செயல்பட அனுமதியில்லை. இதுவே **'உறுதிமொழி முரண் தடை'** அல்லது **'வாக்குறுதி குறித்த முரண்தடை'** எனப்படுகிறது.

அடுத்ததாக இந்த உறுதிமொழி முரண்தடை அரசிற்கு பொருந்துமா

1. A.I.R. 1965 S.C. 1039.

எனும் கேள்வி எழுகிறது. ஆரம்ப காலகட்டத்தில் உறுதிமொழி முரண் தடையை அரசிற்கு எதிராக செயல்படுத்த முடியாது என்றும், அது தனிநபர்கள் அளிக்கும் வாக்குறுதிகளுக்கே பொருந்தும் என்றும், சில வழக்குகளில் நீதிமன்றங்களால் எடுத்துரைக்கப்பட்டது. (இது குறித்து நாம் ஏற்கனவே வினா எண். 39-ல் விரிவாகக் கண்டுள்ளோம்.)

ஆனால் காலப்போக்கில், உறுதிமொழி முரண்தடையை அரசிற் கெதிராகவும் செயல்படுத்தலாம் என்ற கருத்து உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளால் வலுப்பெற்றது. சம்பந்தப்பட்ட முக்கிய வழக்கு வருமாறு.

M.P.Sugar Mills v. State of U.P.[1] - எனும் வழக்கில், 1948-ஆம் ஆண்டின் உத்திர பிரதேச விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், உத்திரப் பிரதேசத்தில் தொடங்கப்படும் புதிய தொழிற்சாலைகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பதாக அம்மாநில அரசாங்கம் உறுதிமொழி அளித்தது. மேலும் அவ்வுறுதிமொழியை செய்தித்தாள்களிலும் விளம்பரம் செய்தது. இந்த விதிவிலக்கை பயன் படுத்திக் கொள்ளும் பொருட்டு, மனுதாரர்கள் அம்மாநிலத்தில் ஒரு சர்க்கரை ஆலையை ஆரம்பித்தனர். ஆனால் பின்னிட்டு, அம்மாநில அரசாங்கம் தனது மேற்படி உறுதிமொழியை பின்வலித்துக் கொண்டு, மனுதாரர்கள் மீது விற்பனை வரி விதித்தது. வழக்கை ஆய்ந்த உச்ச நீதி மன்றம் மேற்படி உறுதிமொழி முரண்தடைக் கோட்பாட்டைப் பயன் படுத்தி, மேற்படி சட்டத்திற்குட்பட்டு அரசாங்கம் கொடுத்த உறுதி மொழியிலிருந்து அது பின்செல்ல முடியாது என்றும், மனுதாரர்களிட மிருந்து வசூலித்த விற்பனை வரித் தொகையை மனுதாரர்களுக்குச் திரும்பிச் செலுத்தும்படியும் உத்திரவிட்டது.

இவ்வழக்கின் பொருண்மைகளை ஒத்தவாறு நமது மேற்படி பிரச்சனையும் அமைந்துள்ளது. பின்தங்கிய மாவட்டத்தில் தொழில் தொடங்குவோருக்கு 3 வருட வரிச்சலுகையை 2000-ஆம் ஆண்டில் அரசு வழங்கிவிட்டு, பின்னிட்டு 2001-ம் ஆண்டில் அவ்வரிச்சலுகையை திரும்பப் பெற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் தொழில் தொடங்கு வோர்கள், அரசு அறிவித்துள்ள வரிச் சலுகையை பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு தொழிற்சாலைகளை அங்கு அமைக்க முன் வருவர். அதாவது அரசின் உறுதிமொழியை அவர்கள் நம்பிச் செயல் படுகின்றனர். இந்நிலையில் அவ்வுறுதிமொழியை அரசு திரும்பப் பெற்றால், அவ்வுறுதிமொழியை நம்பி அங்கு தொழிற்சாலைகளை அமைத்தவர்களுக்கு பெரும் பாதிப்பும், இழப்பும் ஏற்படும். எனவே மேற்படி பிரச்சனையில் அரசாங்கம் கொடுத்த உறுதிமொழியை, தகைமை நெறி மற்றும் நியாயத்தின் அடிப்படையில், மீற முடியாது. உறுதிமொழி முரண்தடையால் அரசாங்கம் தடுக்கப்படுகிறது. எனவே வரிச் சலுகையை திரும்பப் பெற்று அரசாங்கம் இரண்டாவதாக பிறப்பித்த அரசாணை செல்லாது என்பதே தீர்வு. (மேலும் விபரங்கள்

1. A.I.R. 1979 S.C. 621.

தேவைப்பட்டால், பக்கம் எண். 353-ல் உள்ள வினா எண். 54-ன் விடையில் காணலாம்.)

17. The Central Government gave assurance that new industrial units established in rural areas will be exempted from income tax for three years. Acting on this assurance 'A' started an industry in a rural area. But in the next year due to difficult economic condition in the country the Government retracted from its assurance and imposed income tax on the proceeds of 'A' from his industry - Decide.

ஊரகங்களில் அமைக்கப்படும் புதிய தொழிற்சாலைகளுக்கு மூன்று வருடங்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்கல் அளிக்கப்படும் என்று மத்திய அரசு உறுதியளித்தது. இவ்உறுதிமொழியின் அடிப்படையில் "அ" என்பவர் ஊரகத்தில் ஒரு தொழிற்சாலையைத் தொடங்கினார். ஆனால் அடுத்த வருடத்தில் நாட்டின் இக்கட்டான பொருளாதார நிலையின் காரணமாகவும் கூடுதல் நிதியாதாரங்களை திரட்டுவதற் காகவும் மத்திய அரசு அதன் வாக்குறுதியிலிருந்து பின்வாங்கி "அ" அவரது தொழிற் சாலையிலிருந்து பெற்ற வருமானத்தின் மீது வருமான வரி சுமத்தியது. தீர்மானிக்க.

தீர்வு:

இப்பிரச்சனை, நாம் இதற்கு முன் கண்ட பிரச்சனையை ஒத்ததாக உள்ளது. எனவே அப்பிரச்சனையில் வழங்கப்பட்ட தீர்வையே இப் பிரச்சனைக்கும் வழங்கலாம். இங்கு உறுதிமொழி முரண்தடைக் கோட் பாடு, தான் கொடுத்த உறுதிமொழியிலிருந்து பின்செல்ல அரசாங்கத்தைத் தடுக்கிறது.

18. The estate manager of Bombay Port Trust has proposed to the tenants occupying the premises owned by the trust, if each of them deposit the amount of Rs. 1,000 with the trust, flats would be allotted to them on lease on reconstruction of the building. However the trust passed a resolution to allot the flats to its staff and not to the tenants who paid the deposits. Discuss its validity with the aid of decided cases.

பம்பாய் துறைமுக பொறுப்புரிமை அமைப்பின் சொத்து நிர்வாகி துறைமுக பொறுப்புரிமை அமைப்பிற்கு சொந்தமான சொத்தில் கட்டப்பட்டிருந்த வீடுகளின் குத்தகைதாரர்கள் ரூபாய் 1,000 வைப்புத் தொகை செலுத்தினால் வீடு மறுபடியும் கட்டிய பின் அவர்களுக்கு கொடுக்கப்படும் என்று அறிவித்தார். ஆனால் துறைமுக பொறுப்புரிமை அமைப்பு அவ்வாறு பணம் செலுத்திய குத்தகை தாரருக்கு வீட்டை ஒதுக்காமல் துறைமுக பொறுப்புரிமை அமைப்பில்

பணிபுரியும் பணியாளர்களுக்கு கொடுக்க தீர்மானம் நிறைவேற்றியது. முடிவான வழக்குகளைக் கொண்டு இதன் செல்லும் தன்மையை விவாதிக்க.

தீர்வு:

இப்பிரச்சனையில் நாம் காண வேண்டியது, பம்பாய் துறைமுக பொறுப்புரிமை அமைப்பின் சொத்து நிர்வாகி செய்த அறிவிப்பிற்கு **'உறுதிமொழி முரண்தடைக் கோட்பாடு' (Promissory Estoppel)** பொருந்துமா என்பதுதான். இதற்கு பின்வரும் வழக்கொன்றை காண வேண்டியது அவசியமாகும்.

Rachapudi Subrahmanyam v. District Collector, East Godavari[1] -எனும் வழக்கில் மாவட்ட ஆட்சியர் பலருக்கு நியாய விலைக் கடைகளை (fair price shops) ஒதுக்கீடு செய்வதாகக் கூறினார். இதன் அடிப்படையில் அவர்களில் ஒவ்வொருவரும் ரூ.1000/-த்தை வைப்புத் தொகையாக செலுத்தி, உடன்படிக்கை எழுதிக் கொடுத்தனர். ஆனால் அரசாங்கமானது நியாய விலைக் கடைகளை ஒதுக்கீடு செய்வதை நிறுத்தி வைக்குமாறு ஆட்சியருக்கு உத்திரவிட்டது. எனவே ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களில் சிலர், இவ்வுத்திரவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் அரசாங்கத்திற்கெதிராக நீதிப்பேராணைக்காக மனு செய்தனர். அம் மனுவில் மாவட்ட ஆட்சியர் நியாய விலைக் கடைகளை தங்களுக்கு ஒதுக்கீடு செய்து தருவதாகக் கூறியதை நம்பி தாங்கள் செயல்பட்டதாகவும், தொகை வைப்பீடு செய்ததாகவும், கொடுத்த உறுதிமொழியை, முரண்தடைக் கோட்பாட்டின்படி அரசாங்கம் மீற முடியாது என்றும் அவர்கள் வாதம் புரிந்தனர். ஆனால் இந்த வாதத்தை ஆந்திர பிரதேச உயர் நீதிமன்றம் நிராகரித்தது. மேற்படி மனுதாரர்களுக்கு தற்காலிகமாகத்தான் நியாய விலைக் கடைகள் ஒதுக்கீடு செய்யப் பட்டதாகவும், அந்த ஒதுக்கீடு அரசாங்கத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதென்றும், மாவட்ட ஆட்சியர் மனுதாரர்களிடம் எடுத்துரைத்த கூற்றுகள் தெளிவானதாகவோ, குழப்பமற்றதாகவோ இல்லையென்றும், இதனால் இங்கு அரசாங்கத்திற்கு எதிராக முரண்தடைக் கோட்பாட்டை செயல்படுத்த முடியாது என்றும் மேற்படி உயர் நீதிமன்றம் கூறி மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்தது.

மேலும் அதிகாரவரம்பு மீறிய நிலையில் அரசாங்க அலுவலர்கள் கொடுக்கும் உறுதிமொழிகளுக்கு அரசாங்கம் கட்டுப்பட்டதல்ல. அங்கு உறுதிமொழி முரண்தடைக் கோட்பாடு அரசாங்கத்திற்கு பொருந்தாது.

மேற்கண்ட வழக்கு மற்றும் கருத்துக்களின் அடிப்படையில் பம்பாய் துறைமுக பொறுப்புரிமை அமைப்பின் சொத்து நிர்வாகி செய்த அறிவிப்பிற்கு **'உறுதிமொழி முரண்தடைக் கோட்பாடு' (Promissory Estoppel)** பொருந்தாது என்றே தீர்வளிக்க வேண்டும். ஏனெனில் அவர்

1. A.I.R. 1974 A.P. 55.

ஒரு அரசு அலுவலர். அவர் அவ்வாறு உறுதிமொழி அளிக்க அரசாங்கத்தால் எவ்வித அதிகாரமும் வெளிப்படையாக அளிக்கப்படவில்லை. எனவே அவர் கொடுத்த அறிவிப்பிற்கு (உறுதிமொழிக்கு) அரசாங்கத்தை பொறுப்பாக்க முடியாது.

எனினும், தகைமை நெறியின் (Equity) அடிப்படையில் நீதி மன்றம் அரசாங்கத்தை (பம்பாய் துறைமுக பொறுப்புரிமை அமைப்பு) பொறுப்பாக்க முடியும். அது நீதித்துறையின் தன்விருப்புரிமைக்குட் பட்டதாக உள்ளது.

19. A is an undertrial prisoner. He was acquitted in the year 1988. But he has not been released from the prison till date. A files writ of habeas corpus and also seeks compensation against the state in the same writ petition. The state pleads that the petitioner cannot claim compensation in a writ petition. - Decide.

அ என்பவர் ஒரு விசாரணைக் கைதி. அவர் 1988ம் ஆண்டு விடுதலைச் செய்யப் பட்டார். ஆனால் இது நாள் வரை சிறையில் இருந்து விடுவிப்பு செய்யப்படவில்லை. எனவே அவர் ஆட்கொணர்க எனும் நீதிப்பேராணை மனு தொடர்கிறார். அதே மனுவில் அரசுக்கு எதிராக இழப்பீடும் கேட்கிறார். அரசு மனுதாரர் நீதிப்பேராணை மனுவில் இழப்பீடு கோர முடியாது என்று வாதிடுகின்றது. முடிவு செய்க.

தீர்வு:

இப்பிரச்சனை **Rudul Shah v. Bihar**[1] எனும் வழக்கின் சங்கதிகளை அப்படியே அடியொற்றி அமைந்த ஒன்றாகும்.

இவ்வழக்கில், குற்ற வழக்கு ஒன்றிற்காக சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ருடுல் ஷா என்பவரை பீகாரில் உள்ள முசாஃபிர் நகர் அமர்வு நீதிமன்றம் 1968-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் விடுதலை செய்து தீர்ப்புரைத்தது. ஆனால் அவரை சிறை நிருவாகம் 1982-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ஆம் நாளில்தான் சிறையிலிருந்து விடுவித்தது. அதுவும் ஆட்கொணர்வு நீதிப்பேராணை மனு ஒன்று அவருக்காக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிறகுதான் நடந்தது. இங்கு விடுதலை செய்யப்பட்ட பிறகு சுமார் 14 ஆண்டுகளுக்கும் மேலாக ருடுல் ஷா சிறையிலேயே அடைத்து வைக்கப்பட்டிருந்துள்ளார். இதற்கு எந்த சமாதானத்தையும் ருடுல் ஷா-வுக்காக தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனுவில் பீகார் அரசால் அளிக்க இயலவில்லை. இதற்கு பீகார் மாநில நிருவாகம் பொறுப்பு என்றும், விடுதலைக்குப் பிறகும் தன்னை சிறையில் அடைத்து வைத்திருந்தமைக்கு தனக்கு அது இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் மேற்படி நீதிப் பேராணை மனுவில் ருடுல் ஷா உச்ச நீதிமன்றத்திடம் கோரினார்.

1. A.I.R. 1983 S.C. 1086.

இந்திய அரசமைப்பின் சரத்து 32-இன் கீழ் தாக்கல் செய்யப்படும் நீதிப்பேராணை மனுவில் இழப்பீடு வழங்கப்படக் கூடாது; இதற்காக உரிமையியல் வழக்குதான் தொடர வேண்டும் என்பது வழிவழியாக வரும் நீதிமுறைக் கோட்பாடாகும்.

எனினும் ருடுல் ஷா-க்கு ஏற்பட்ட அவல நிலையை கருத்தில் கொண்டு, அவருக்கு இழப்பீடு வழங்குவது பற்றி உச்ச நீதிமன்றம் ஆய்வு செய்தது. முடிவில் அவருக்கு ரூ. 35,000/- இழப்பீடு வழங்க பீகார் மாநில நிருவாகத்திற்கு உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. அது தனது ஆணையில், "ருடுல் ஷா-க்கு இழப்பீடு வழங்க நீதிமன்றம் மறுக்குமானால், அது (குடிமக்களுக்கு) உள்ள அடிப்படை உரிமைகளுக்கு உதட்டளவில் மட்டுமே சேவை புரிந்ததற்கு ஒப்பாகும், குறிப்பாக அந்த உரிமைகளை ஒரு மாநில அரசு பெரிதளவில் மீறியுள்ள போது" என்று கூறியது. இவ்வாறு ருடுல் ஷா-வின் அடிப்படை உரிமை மீறலுக்கு தீர்வழி பகர வழிவழியாக வந்த நீதிமுறைக் கோட்பாட்டிலிருந்து உச்ச நீதிமன்றம் விலகிச் சென்று அவருக்கு இழப்பீடு வழங்கியது இந்த வழக்கின் சிறப்பம்சமாகும்.

எனவே இவ்வழக்கின் சங்கதிகளின்படி மேற்படி பிரச்சனையில் வரும் 'அ' எனும் விசாரணைக் கைதி தன்னை விடுவிக்கக் கோரும் நீதிப் பேராணை மனுவில் இழப்பீடு கோர உரிமையுண்டு என்பதே இங்கு நாம் அளிக்கும் முடிவாகும்.

20. The General Sales Tax Act empowers the government to impose Sales Tax on cellulose limiting that the percentage of tax shall not exceed 10%. Being affected by this Suresh Mills challenges this in the High Court stating that such power cannot be delegated to the government. Decide.

பொது விற்பனை வரிச் சட்டமானது செல்லுலோசுக்கு விற்பனை வரி விதிக்கும் அதிகாரத்தை அரசிற்கு அளிக்கின்றது. ஆனால் அது பத்து சதவிகிதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்று கட்டுப்படுத்துகிறது. இதனால் பாதிக்கப்படும் சுரேஷ் மீல் நிறுவனம் இவ்வதிகாரம் அரசிற்கு ஒப்படைக்கப்படக் கூடியது அல்ல என்று உயர் நீதிமன்றத்தில் வாதிடுகின்றது. தீர்மானிக்கவும்.

தீர்வு:

இப்பிரச்சனையில் சுரேஷ் மில் நிறுவனத்தின் வாதமானது பின்வரும் சூழ்நிலைகளிலும், விதிவிலக்கின்படியும் ஏற்புடையதல்ல. அதற்கான காரணங்கள் வருமாறு:-

1. வரி விதித்தல் என்பது ஓர் இன்றியமையா சட்டமியற் றும் பணியாகும் (Essential legislative function). அரசிய லமைப்புச் சட்டம் சரத்து 265-இன்படி எந்த ஒரு வரியும் சட்டப்படிதான் விதித்தல் வேண்டும். இங்கு 'சட்டம்' என்ற

பதம் சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டத்தைக் குறிக்கிற தேயன்றி, நிருவாக விதியாக்கத்தின் மூலம் அல்ல. எனவே விதியாக்கத்தின் மூலம் வரி விதித்தல் இயலாது என்பது பொதுவான நிலைப்பாடாகும்.

2. அதுபோல் நாடாளுமன்ற விதியாக்கக் குழுவானது (Committee on Subordinate Legislation) தனது முதல் மற்றும் இரண்டாவது அறிக்கைகளில் வரி விதித்தலைச் சட்ட மன்றங்களே சட்டத்தின் மூலம் செய்ய வேண்டும். மாறாக அந்த அதிகாரத்தை அரசு நிருவாகத்திடம் ஒப்படைவு செய்து விதியாக்கத்தின் மூலம் செய்யக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளது.

3. ஆனால் மேற்கண்ட நிலைப்பாடுகள் ஏட்டளவில் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் இருந்தாலும், மாறி வரும் சமுதாயச் சூழலில் நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாகி விட்டது. வரி விதித்தல் தொடர்பான சில சூழல்களில் நிருவாகத்தின் உதவி அவசியமாகிறது. ஏனெனில் எல்லா வற்றையும் சட்டமன்றமே செய்து கொண்டிருக்க இயலாது. ஆனால் இந்த அதிகாரத்தை சட்டமன்றம், நிருவாகத்துறை யிடம் ஒப்படைக்கும் போது, அதற்கான கொள்கைகளும், வழிகாட்டு நெறிகளும். தர நிலைகளும் சட்டமன்றத்தால் தோற்றுவாய்ச் சட்டத்திலேயே தெளிவாக வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவற்றின் வரம்பிற்குட் பட்டே நிருவாகத்துறையும் விதிகள், ஆணைகள், ஒழுங்கு முறை விதிகள் ஆகியவற்றைச் செய்தல் வேண்டும். எனவே பின்வரும் சில விதிவிலக்கான சூழ்நிலைகளில் வரி விதித்தல் தொடர்பாக விதி செய்யும் அதிகாரகளில் சிலவற்றை நிருவாகத்துறையிடம் ஒப்படைக்க முடியும். அவை,

(அ) **விலக்களிக்கும் அதிகாரம் (Power to give Exemption):** ஒருவரை வரிச்சுமையிலிருந்து விலக்களிப்பதற் காக முடிவு செய்யும் அதிகாரத்தை சட்டமன்றம் நிருவாகத் துறையிடம் ஒப்படைக்கலாம். ஆனால் எந்தெந்தச் சூழ் நிலைகளில் அத்தகைய விலக்கு வழங்கலாம் என்பதை தோற்றுவாய்ச் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

Orient Weaving Mills v. Union of India[1] எனும் வழக்கில் சம்பந்தப்பட்ட சட்டமானது. கலால் தீர்வையி லிருந்து (Excise Duty) சில பொருட்களை முழுவது மாகவோ அல்லது பகுதியளவிலோ விலக்களிக்க மத்திய

1. A.I.R. 1963 S.C. 89.

அரசுக்கு அதிகாரம் அளித்தது. இத்தகு அதிகாரம் அரசிடம் ஒப்படைக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

(ஆ) **சேர்ப்பதற்கான அதிகாரம் (Power to Include):** ஒருவரை வரிச்சுமையிலிருந்து விலக்களிப்பதைப் போல ஒருவரை அச்சுமையில் சேர்ப்பதற்கான அதிகாரத்தை நிருவாகத்திடம் ஒப்படைக்கலாம். ஆனால் தோற்றுவாய்ச் சட்டத்தில் எந்தெந்தச் சூழ்நிலைகளில் சேர்க்கலாம் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

Banarasidas v. State of M.P.[1] எனும் வழக்கில் சம்பந்தப்பட்ட சட்டமானது சில விற்பனைகளை மத்தியப் பிரதேச விற்பனை வரிச் சட்டத்திற்குள் கொண்டு வரும் அதிகாரத்தை நிருவாகத்திடம் ஒப்படைத்திருந்தது. இது செல்லத்தக்கது என உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

(இ) **அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வரி வீதத்திற்கு இடையிலான வரியைத் தீர்மானிக்கும் அதிகாரம் (Power of Determination of Tax between the Maximum and Minimum):** தோற்றுவாய்ச் சட்டத்தில் அதிகபட்ச மற்றும் குறைந்த வரி வீதத்தைக் குறிப்பிட்டு அதற்கு இடையில் ஒரு வரி வீதத்தை நிருணயிக்கும் அதிகாரத்தை நிருவாகத்திடம் ஒப்படைக்கலாம்.

இந்த இறுதி விதிவிலக்கில்தான் நமது மேற்படி பிரச்சனைக்கான தீர்வு அடங்கியுள்ளது எனில் அது மிகையன்று. நமது பிரச்சனையில், பொது விற்பனை வரிச் சட்டமானது செல்லுலோசுக்கு விற்பனை வரி விதிக்கும் அதிகாரத்தை அரசிற்கு அளிக்கின்றது. ஆனால் இங்கு அச்சட்டம் கூறியுள்ள ஒரு வழிகாட்டு நெறி யாதெனில், அவ்விற்பனை வரி பத்து சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்று கட்டுப் படுத்துகிறது. இவ்வாறு கட்டுப்படுத்தி வரி விதியாக்க அதிகாரத்தை ஒப்படைப்பது மேற்படி மூன்றாவது விதிவிலக்கின்படி செல்லத்தக்கதே. எனவே இவ்வதிகாரத்தை அரசிற்கு ஒப்படைக்கப்படக் கூடியதல்ல என்று சுரேஷ் மில் நிறுவனம் வாதுரைப்பது நிலைக்கத்தக்கதல்ல. (புரிந்துணருவதற்காக இப்பிரச்சனைக்கான தீர்வு இங்கு விரிவாக அலசப்பட்டுள்ளது. எனினும் தேர்வில் சுருக்கமாக எழுதினால் போதுமானது.)

21. The manager of Suma matriculation school contested in the Assembly election. He was defeated. His opponent, A, who won the election became the Education minister. He ordered to cancel the recognition given to the said school. The order was challenged

1. A.I.R. 1958 S.C. 909.

stating that it was biased. The government argues that bias should be proved beyond reasonable doubt. Decide.

சுமா மெட்ரிகுலேசன் பாட சாலையின் மேலாளர் சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைகின்றார். அவரை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்ற 'அ' என்பவர் கல்வி அமைச்சர் ஆகின்றார். அவர் மேற்கூறிய பாடசாலைக்கு வழங்கிய அங்கீகாரத்தை ரத்து செய்ய உத்தரவிடுகின்றார். இது மனச்சாய்வின் அடிப்படையில் அளிக்கப்பட்ட ஆணை என மறுதலிக்கப்படுகிறது. மனச்சாய்வு எனில் அதனை சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்க வேண்டும் என்று அரசு வாதிடுகின்றது. - தீர்மானிக்க.

தீர்வு:

மனச்சாய்வு எனில் அதனை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க வேண்டும் என்று அரசு வாதிடுவது ஏற்புடையதன்று. மனச்சாய்வை மெய்ப்பிக்க நியாயமான சந்தேகம் இருந்தாலே போதுமானது.

மனச்சாய்வு உள்ளதா என்பதைக் கண்டறிய இரண்டு விதமான சோதனைகள் உள்ளன. அவை (1) உண்மையான மனச்சாய்வு (real bias); (2) உண்மையாக இருக்கலாம் எனக் கூடிய மனச்சாய்வு (real likelihood of bias).

இந்திய உச்ச நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் வழங்கியுள்ள தீர்ப்புகளின்படி, நிருவாகத்துறை முடிவு ஒன்றை மனச்சாய்வின் அடிப்படையில் இரத்து செய்ய அங்கு அந்த முடிவு செய்யும் அதிகாரஅமைப்பிற்கு 'உண்மையான மனச்சாய்வு' இருந்ததாக மெய்ப்பிக்க வேண்டும் என்பதில்லை. 'உண்மையாக இருக்கலாம் எனக் கூடிய அளவில் மனச்சாய்வு' உள்ளது என்று மெய்ப்பித்தால் அதுவே போதுமானது. அதாவது மனச்சாய்வுடன் செயல்பட்டிருப்பதற்கு ஓர் குறைந்தப்பட்ச வாய்ப்பு உள்ளது என்று மெய்ப்பித்தாலே போதுமானது. வேறுவிதத்தில் கூறுவதெனில், காரண காரியங்கள் அறிந்த ஒரு நியாயமான மனிதனின் பார்வையில் அங்கு மனச்சாய்வு உள்ளது என்று கருதுமளவிற்கு அல்லது அச்சப்படுமளவிற்கு நிருவாகத்துறையின் செயல்பாடுகள் அமைந்திருந்தன என்று மெய்ப்பித்தால் போதும்.

மேற்படி பிரச்சனையில் தேர்தலில் தோல்வியுற்ற பள்ளி மேலாளர் ஒருவரது பள்ளியின் அங்கீகாரத்தை, அவரை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்று, பின் கல்வி அமைச்சராகிய ஒருவர் இரத்து செய்து ஆணையிடுகிறார். இவ்வாறு ஆணையிடுவதற்கு அம்மேலாளர் தன்னை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்ட காழ்ப்புணர்ச்சியும், பகைமை உணர்வும், மனச்சாய்வும்தான் காரணம் என்பதை நியாயமான மனிதன் ஒருவர் மிக எளிதாகக் கூறிவிடுவார். எனவே இங்கு அந்த மனச்சாய்வை சந்தேகத்திற்கிடமில்லாமல் மெய்ப்பிக்கத் தேவையில்லை. இதனால் அரசு தரப்பின் வாதம் நிலைக்கத்தக்கதல்ல.

22. A is an employee in the education department of the State. Charges were framed against him for receiving bribe. The photostate copy of the framed charges were given to A. But the letters in the photostate copy were not clear. A requested for another copy. It was denied. He wants to challenge the order. - Advise him.

'அ' என்பவர் அரசின் கல்வித் துறையில் பணி புரிகின்றார். அவர் லஞ்சம் வாங்கியதாக அவர் மீது புகார் தயார் செய்யப்பட்டது. அதன் நகல் அவருக்கு வழங்கப்பட்டது. அந்த நகலில் உள்ள எழுத்துக்கள் தெளிவாக இலலை. அரசிடம் தெளிவாக உள்ள நகலைக் கேட்டார். அது 'அ'விற்கு மறுக்கப்படுகின்றது. இதனை எதிர்த்து 'அ' வழக்கிட விரும்புகிறார். அவருக்கு ஆலோசனை கூறவும்.

தீர்வு:

'இருபுறம் கேட்க வேண்டும்' (Audi Alteram Partem) என்பது இயற்கை நீதிக் கோட்பாடு ஆகும். இதன் கீழ் 'நேரிய அல்லது நியாயமான விசாரணை' (fair hearing) எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்து பல விதிமுறைகள் உச்ச நீதிமன்றத்தால் வகுக்கப்பட்டுள்ளன. நிருவாகத் துறை ஒன்று விசாரணை செய்கின்றது என்றால் அது எதிர்த்தரப் பினருக்கு அறிவிப்பு அனுப்புவதிலிருந்து தொடங்குகின்றது என்று கூற லாம். அந்த அறிவிப்பில் என்ன குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டுள்ளன, எந்தத் தேதியில் விசாரணை நடக்கவுள்ளது என்பது போன்ற விவரங்கள் அடங்கியிருக்க வேண்டும்.

அதுபோல் அறிவிப்பைத் தொடர்ந்து அப்பிரச்சனை தொடர் பான புகார் மற்றும் இதர ஆவணங்களின் நகல்களை எதிர்த்தரப்பினருக்கு அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அத்துறை அளிக்க வேண்டும். ஓர் அறிவிப்பில் அல்லது புகாரில் அல்லது ஆவணங்களில் உள்ள வாசகங்கள் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு தெளிவற்றோ அல்லது இரு பொருள் தரக்கூடியதாகவோ இருப்பின், அதன் பேரில் பிறப்பிக்கப்படும் முடிவு இரத்து செய்யப்படக் கூடியது என்று உச்ச நீதிமன்றம் **Lawrence v. State of Bombay**[1] எனும் வழக்கில் தீர்ப்புரைத்துள்ளது.

மேற்படி பிரச்சனையில் அ என்பவருக்கு வழங்கப்பட்ட புகாரின் நகலில் உள்ள எழுத்துக்கள் தெளிவாக இல்லை என்பதால் அவர் தெளி வாக உள்ள நகலை அரசிடம் கோரினார். இது அவருக்கு மறுக்கப் படு கின்றது. இவ்வாறு மறுத்தது நேரிய அல்லது நியாயமான விசாரணைக்கு எதிரானதாகும். எனவே இங்கு இயற்கை நீதிக் கோட்பாட்டை அரசு மீறியுள்ளது என்று கூறி 'அ' என்பவர் உயர் அல்லது உச்ச நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யலாம். இதுவே நாம் அவருக்கு வழங்கும் ஆலோசனையாகும்.

1. AIR 1956 SC 531

23. The Ferry Services Act empowers the State to make rules to regulate proper maintenance of the ferries. The rules framed by the Government prohibited the operation of private ferry services. The private ferry service operator's association has resolved to challenge this in the court. Advise.

படகுத் துறை போக்குவரத்துச் சட்டமானது படகுத் துறை போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக விதிகளை ஆக்கும் அதிகாரத்தை அரசிற்கு ஒப்படைவு செய்கின்றது. அரசால் செய்யப்பட்ட விதிகள் தனியார் படகுகள் இயக்குவதைத் தடுக்கின்றது. தனியார் படகு இயக்குபவர்கள் சங்கமானது இதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடிவெடுக்கின்றது. ஆலோசனை வழங்கவும்.

தீர்வு:

இப்பிரச்சனையில் ஆலோசனை வழங்க நாம் இதையொத்த மற்றொரு வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை காண வேண்டும்.

Tamil Nadu v. M/s. Hind Stone[1] எனும் வழக்கில் 1957-ஆம் ஆண்டின் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டுச்) சட்டத்தின் 15-ஆம் பிரிவானது [Section 15 of the Mines and Minerals (Regulation and Development) Act, 1957], சுரங்க குத்தகை உரிமை வழங்கலை ஒழுங்குபடுத்துவதற்காக விதிகள் இயற்றும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கியுள்ளது. தமிழக அரசு இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி கறுப்பு கிரானைட் கற்களை வெட்டியெடுப் பதற்கான சுரங்க குத்தகை உரிமையை தனிநபர்களுக்கு வழங்குவதைத் தடை செய்தது. மேலும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு மட்டுமே அத்தகு உரிமை இனி வழங்கப்படும் என்றும் விதி செய்தது. இவ்வாறு இந்த விதியாக்க அதிகாரத்தின் வாயிலாக, தமிழக அரசானது சுரங்கத்திலிருந்து கிரானைட் கல் வெட்டியெடுப்பதற்கான தனிநபர் வணிகத்தை ஒழித்துக் கட்டி, அதனை அரசுரிமையாக்கியது. இதை எதிர்த்து தனியார் சுரங்க குத்தகையாளர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். அதில், சுரங்கங்களைப் பாதுகாத்து, அதைச் சமுதாயம் முழுவதற்கும் பயன் தரும் வகையில் வெட்டியெடுப்பதற்கு அரசு நிறுவனங்களுக்கு மட்டுமே உரிமையுள்ளது எனும் வகையில் தமிழக அரசு தனியாரின் குத்தகை உரிமையைத் தடை செய்து இயற்றிய மேற்படி விதியாக்கம் செல்லத் தக்கதே என்றும், மேற்படி சட்டத்தின் 15-ஆம் பிரிவில் வரும் 'ஒழுங்குபடுத்துவதற்காக' (regulating) எனும் பதத்தை பரந்த பொருளில் பொருள் கொள்ள வேண்டும் என்றும், அந்த வகையில் இப்பதத்தில் 'தடை செய்தலும்' (prohibiting) அடங்கியதே என்றும் தீர்ப்புரைத்தது.

1. AIR 1981 SC 711

மேலும் இவ்வாறு தங்கள் குத்தகை உரிமைகளை தடை செய்ய வேண்டுமெனில், அதற்கெனத் தனியாக ஒரு சட்டமியற்ற வேண்டுமே தவிர, 'விதியாக்கத்தின்' மூலம் இயலாது என்றும், ஏனெனில் இது மேற்படி சட்டத்தின் கொள்கையை மாற்றக் கூடியதாக உள்ளது (Change of policy of the Act could be done by the legislature only) என்றும் என்றும் சுரங்க உரிமையாளர்கள் வாதிட்டதை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது. இதற்கு உச்ச நீதிமன்றம் தனது ஆணையில் பதிலளிக்கையில், ஒரு குறிப்பிட்ட கனிமத்தை (கறுப்பு கிரானைட்) மட்டும் வெட்டியெடுக்கத்தான் தனியார் நபர்களுக்கு தடை விதித்து அரசு விதி செய்துள்ளதே தவிர, எல்லா வகைக் கனிமங்களையும் அல்ல என்றும், எனவே, இது சட்டத்தின் கொள்கையை மாற்றியதாகப் பொருளாகாது என்றும், எல்லா வகை கனிமங்களையும் வெட்டியெடுக்க தனியார்களுக்குப் பொதுவான தடை (general ban) விதித்திருப்பின் அதற்கு விதியாக்கம் செல்லாது என்றும், தனியாகத்தான் சட்டமியற்ற வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் விளக்கம் கூறியது.

ஆலோசனைகள்:

எனவே இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறிய தீர்ப்பு மற்றும் கருத்துக்களை கொண்டு ஆராய்கையில் நாம் பின்வரும் ஆலோசனைகளை தனியார் படகு இயக்குபவர்கள் சங்கத்திற்கு வழங்கலாம்.

1. படகுத் துறை போக்குவரத்துச் சட்டமானது படகுத் துறை போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக விதிகளை ஆக்கும் அதிகாரத்தை அரசிற்கு ஒப்படைவு செய்கின்றது. இவ்வாறு ஒப்படைப்பது முதற்கண் நிருவாகமுறைச் சட்டத்தின்படி செல்லத்தக்கதே.

2. அரசால் செய்யப்பட்ட விதிகள் தனியார் படகுகள் இயக்குவதைத் தடுக்கின்றது. மேற்கண்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, 'ஒழுங்குபடுத்துவதற்காக' எனும் பதம் 'தடை செய்தலையும்' உள்ளடக்கியது. எனவே தனியார் படகு இயக்குபவர்கள் சங்கம் இதை அந்த வகையில் எதிர்த்து வழக்கிட்டால் வெற்றி பெறும் வாய்ப்பு மிகவும் குறைவு.

3. எனினும், உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில் இம்மாதிரியான சூழல் எப்போது வழக்கிடும் முகாந்திரம் எழுகிறது என்பதை இரண்டாம் பத்தியில் கண்டவாறு சூசகமாகக் கூறியுள்ளது. எனவே, தனியார் படகு உரிமையாளர்கள் படகு இயக்கவே கூடாது என்பது ஓர் ஒட்டுமொத்தத் தடை. இதனை விதியாக்கத்தின் வாயிலாகச் செய்ய இயலாது. இதற்கு சட்டமன்றம் தனியாக சட்டமியற்றி இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் வேண்டுமானால் வழக்கிடலாம். மேற்படி சங்கமானது வழக்கை இந்தக் கோணத்தில் கொண்டு சென்றால் வெற்றி பெற வாய்ப்புண்டு அல்லது நிபந்தனை விதியாக்கத்திற்கு உடன்படுவதாகவும் அச்சங்கம் கூறலாம்.

24. Municipalities Act says that whoever wants to construct a building within the municipal limits, shall get the prior permission of the municipality. The government has decided to start a college at Sundar-puram, a municipal area and started the construction works. The municipality says that its prior permission shall be obtained by the government - Decide.

நகராட்சி சட்டமானது, நகராட்சி எல்லைக்குள் எவரேனும் கட்டிடம் கட்ட வேண்டுமெனில் அந்தந்த நகராட்சியின் அனுமதியைப் பெற வேண்டும் என்று கூறுகின்றது. அரசு சுந்தரபுரம் என்ற நகராட்சி உட்பட்ட பகுதியில் ஒரு கல்லூரி துவக்க முடிவு செய்து அதற்கான கட்டிடப் பணிகளை ஆரம்பிக்கின்றது. தன்னிடம் அனுமதி பெறாமல் அரசு கட்டிடம் கட்டக் கூடாது என்று நகராட்சி கூறுகின்றது. - தீர்மானிக்க.

தீர்வு:

இங்கிலாந்தின் "மன்னர் தவறு செய்யார்" (King can do no wrong) என்ற கோட்பாட்டின்படி, அரசாங்கத்தால் செய்யப்பட்ட சட்டம், அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தாது; அது அந்த அரசாங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்ட மக்களைத்தாம் கட்டுப்படுத்தும். அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட இச்சிறப்புரிமை சில காலம் இந்தியாவிலும் பின்பற்றப் பட்டது.

எனினும் **Director of Rationing and Distribution v. Corporation of Calcutta**[1] எனும் வழக்கில் உச்ச நீதிமன்ற நீதியரசர் வாஞ்சு வழங்கிய மாறுபட்ட தீர்ப்பின்படி, அரசாங்கத்திற்கு மேற்கண்டவாறு சட்டத்திலிருந்து விலக்கு பெறும் சிறப்புரிமை அக்குறிப்பிட்ட சட்டத் திலேயே வெளிப்படையாக அல்லது உட்கிடையாக கூறப் பட்டிருந் தாலன்றி, அத்தகு சிறப்புரிமைகள் அரசாங்கத்திற்குக் கிடையாது என்பது நிலைநிறுத்தப்பட்டது. இவ்வழக்கில் மாநகராட்சி சட்டப்படி நகராட்சி அங்காடியில் வணிகம் செய்ய உரிமம் பெற வேண்டும். ஆனால் இவ்வாறு எந்த உரிமத்தையும் பெறாமல் அரசானது அந்த அங்காடியில் வணிகம் மேற்கொண்டது. இதை எதிர்த்து அரசின் மீது கல்கத்தா மாநகராட்சி வழக்கிட்டது. அதில் அரசால் இயற்றப்பட்ட சட்டத்திற்கு அரசு கட்டுப்பட்டதல்ல என்றும், உரிமம் பெற வேண்டும் என்ற நிபந்தனை தனக்குப் பொருந்தாது என்று அரசு வாதம் புரிந்தது. ஆனால் இதை நீதியரசர் வாஞ்சு நிராகரித்து மேற்கண்டவாறு விளக்கம் கூறினார்.

நீதியரசர் வாஞ்சு வழங்கிய இத்தீர்ப்பானது இதையடுத்து எழுந்த **Superintendent and Remembrancer of Legal Affairs, West Bengal v. Corporation of Calcutta**[2] எனும் வழக்கில் பின்பற்றப்பட்டது. இதில்,

1. AIR 1960 SC 1355
2. AIR 1967 SC 997

ஓர் சட்டமானது வெளிப்படையாக அல்லது அவசியத்தின் காரணமாக உட்கிடையாக (by express or by necessary implication) அரசாங்கத்தின் சட்டக் கடப்பாடுகளிலிருந்து அதற்கு விதிவிலக்களிக்கப்பட வேண்டுமென்று உணர்த்தினாலொழிய, அரசானது சட்ட விதிவிலக்கு பெற சிறப்புரிமை பெற்றதல்ல என்று உச்ச நீதிமன்றம்அறுதியிட்டுக் கூறியது. இது பின்னிட்டு **Union of India v. Subbi**[1] எனும் வழக்கிலும் உச்ச நீதிமன்றத்தால் உறுதிபடுத்தப்பட்டது.

மேற்கண்ட வழக்குகள் மற்றும் சட்ட நிலைப்பாட்டின்படி நமது மேற்படி பிரச்சனையை பின்வரும் வழியில் தீர்க்கலாம். இதில் நகராட்சி சட்டமானது, நகராட்சி எல்லைக்குள் எவரேனும் கட்டிடம் கட்ட வேண்டுமெனில் அந்தந்த நகராட்சியின் அனுமதியைப் பெற வேண்டும் என்று கூறுகின்றது. இங்கு கவனிக்கத்தக்கது யாதெனில், ஒருவேளை அரசானது, நகராட்சி எல்லைக்குள் கட்டிடம் கட்டினால் அது உரிமம் பெற வேண்டியதில்லை என்று எந்த விதிவிலக்கும் வெளிப்படையாகவோ, உட்கிடையாகவோ அந்த சட்டத்தில் இல்லை. இந்நிலையில் அரசானது சுந்தரபுரம் என்ற நகராட்சி உட்பட்ட பகுதியில் ஒரு கல்லூரி துவக்க முடிவு செய்து அதற்கான கட்டிடப் பணிகளை ஆரம்பிக்கின்றது. ஆனால் இதற்கான உரிமத்தை நகராட்சியிடமிருந்து பெற்றிருக்கவில்லை. இங்கு அரசுக்கு சிறப்புரிமை ஏதும் சட்டத்தில் கொடுக்கப்படாத காரணத்தால், தன்னிடமிருந்து உரிமம் பெறாமல் கட்டிடம் கட்டக் கூடாது என்று நகராட்சி நிருவாகமானது அரசுக்கு எதிராக வழக்கிடலாம். அதில் நகராட்சிக்கு வெற்றி கிட்டும் என்பதே தீர்வு. *(மேலும் விளக்கமாக இப்புத்தகத்தின் பக்கம் எண். 340 மற்றும் 341-இல் காண்க).*

25. The Government of India appointed an investigation committee to investigate the affairs of the mill by name 'A' under section 15 of the Industries (Deve!opment and Regulation) Act 1951. The committee submitted its report to the Government after giving reasonable opportunity of hearing to the mill. But the report was not shown to the management. As a result of the report of the committee, the management of the mill was taken over by the Government. Now the mill wants to challenge the decision of the Government - Advise.

'A' என்ற ஆலையின் விவகாரங்களைக் குறித்து விசாரணை செய்வதற்காக இந்திய அரசு ஒரு குழுவைத் தொழில் (முன்னேற்றம் மற்றும் ஒழுங்குபடுத்தல்) சட்டம் 1951 கீழ் நியமித்தது. இக்குழு நியாயமான கேட்டறிதல் வாய்ப்பினை ஆலைக்கு அளித்த பின்பு தன் அறிக்கையினை மத்திய அரசுக்கு அளித்தது. அவ்வறிக்கை ஆலை நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்படவில்லை. அவ்வறிக்கையின் விளைவாக ஆலையின் முழுப்

1. AIR 1968 SC 360

பொறுப்பையும் அரசு ஏற்றெடுத்தது. ஆலை இதனை எதிர்த்து வழக்கு தொடர எண்ணுகின்றது. அறிவுரை வழங்கு.

தீர்வு:

இப்பிரச்சனை **Kesava Mills Co. Ltd. v. India**[1] எனும் வழக்கின் சங்கதிகளின் அடிப்படையில் அமைந்த ஒன்றாகும். இதில் 1951-ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் 15-ஆம் பிரிவின்படி ஓர் ஆலையின் விவகாரங்களை விசாரணை செய்ய புலன் விசாரணைக் குழு ஒன்றை இந்திய அரசாங்கம் நியமனம் செய்தது. இக்குழு அந்த ஆலையின் ஆட்சேபணைகளை கேட்டறிவதற்கான நியாயமான வாய்ப்பு ஒன்றை அதற்கு நல்கிய பிறகு தனது அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது. ஆனால் இக்குழு தனது மேற்படி அறிக்கையை அந்த ஆலையின் நிருவாகத்திடம் காண்பிக்க வில்லை. முடிவில் அந்த அறிக்கையின் விளைவாக ஆலையின் முழுப் பொறுப்பையும் மேற்படி சட்டத்தின் பிரிவு 18-A-யின் கீழ் அரசே ஏற்றுக் கொண்டது.

மேற்படி குழுவானது அறிக்கையை தங்களிடம் காண்பிக்காமல் அரசிடம் சமர்ப்பித்தது சரியல்ல என்று கூறி அந்த ஆலை இந்திய அரசாங்கத்திற்கு எதிராக வழக்கிட்டது. அதில் உச்ச நீதிமன்றமானது சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு விசாரணை அறிக்கையை காண்பிக்க வேண்டியது அவசியமா இல்லையா என்பது குறித்து கடுமையான விதிகள் எவற்றையும் வகுக்க இந்த நீதிமன்றம் தயாராக இல்லை என்றும் தரப்பினருக்கு அறிக்கையைத் தர வேண்டுமா இல்லையா என்பது வழக்கு ஒவ்வொன்றையும் மற்றும் அதன் நற்கூறுகளையும் சார்ந்து நிற்பதாகும் என்றும் கூறியது. மேலும் இவ்வழக்கில் குழுவின் அறிக்கையை ஆலைக்கு வழங்கப்படாததால் அதன் நிருவாகத்திற்கு எவ்விதமான குந்தகமும் ஏற்பட்டுவிடவில்லை என்றும், ஏனெனில் அந்த ஆலையை அரசு ஏற்றுக் கொள்வதற்கு முன்னதாக அதன் வழக்கை எடுத்துரைக்க அதற்கு போதுமான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறி, ஆலையின் வழக்கை தள்ளுபடி செய்தது.

எனவே நமது மேற்படி பிரச்சனையில் வரும் A எனும் ஆலை அரசுக்கு எதிராக வழக்கிட்டால், உச்ச நீதிமன்றம் வழங்கிய மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் அவ்வழக்கு நிலைக்காது; தோற்றுப் போகும் என்பதுதான் இங்கு நாம் அந்த ஆலைக்கு வழங்கும் அறிவுரையாகும்.

26. E has been detained under the conservation of Foreign Exchange and prevention of Smuggling Act. When the Advisory Board is to decide upon the extension of is detention, he seeks the permission of the Advisory Board for the assistance of a counsel, his friend

1. AIR 1973 SC 389

When permission was denied, E now questions this on the ground that his right to counsel is denied and hence denial of natural justice. Decide.

E அந்நிய செலவாணி பாதுகாப்பு மற்றும் கடத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். அவரது தடுப்புக் காவலை நீட்டிப்பதா வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க ஆலோசனைக் குழு கூடும் போது, தனது வழக்கை எடுத்துரைத்து வாதிட தனது நண்பரை அனுமதிக்க வேண்டும் என்று ஆலோசனைக் குழுவிடம் கேட்கிறார். அனுமதி மறுக்கப்பட்டது. தன் நண்பர் மூலம் வழக்கை எடுத்துரைக்க அனுமதிக்கப்படாததால் அவருக்கு இயற்கை நீதி மறுக்கப்பட்டதாக வழக் குத் தொடருகிறார். முடிவு செய்க.

தீர்வு:

A.K.Roy v. India[1] எனும் வழக்கில் உச்ச நீதிமன்றம் மேற்படி பிரச்சனை தொடர்பாக பின்வரும் கருத்துக்களை கூறியுள்ளது.

1. தடுப்புக்காவலில் வைக்கும் அதிகாரஅமைப்போ, அரசோ ஆலோசனைக் குழுவின் முன் தங்கள் தரப்பு வாதத்தை எடுத்துரைக்க சட்டத் தொழிலாற்றுநர் (legal practitioner) ஒருவரை நியமனம் செய்திருந் தால், அவ்வாறு ஒருவரை அமர்த்திக் கொள்ளும் உரிமை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவருக்கும் உண்டு. இந்த உரிமை மறுக்கப் பட்டால் அது இந்திய அரசமைப்பின் உறுபுகள் 14 மற்றும் 21-அய் மீறியதாகும்.

2. தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட ஒருவர் தனக்காக சட்டத் தொழிலாற்றுநர் ஒருவரை அமர்த்தி வாதிடக் கூடாது என்று சம்மந்தப் பட்ட சட்டத்தில் தடை விதிக்கப்பட்டிருந்தாலும், தடுப்புக் காவலில் வைக் கப்பட்டவர் தனது நண்பர் ஒருவரின் உதவியைக் கோரலாம். இதைத் தடுக்க வியலாது. அந்த நண்பர் உண்மையிலும் உள்ளடக்கத்திலும் ஓர் சட்டத் தொழிலாற்றுநராக இல்லாதுபோனாலும் கூட (The detenu should not be prevented to seek the assistance of a "friend who, in truth and substance, is not a legal practitioner).

3. தடுப்புக்காவல் நடவடிக்கைகளின் விளைவாக ஒருவரது உரிமைகள் மிகவும் பாதிக்கப்படும் என்றால், அவர் தனது நண்பரின் உதவியுடன் தனது வழக்கை எடுத்துரைக்கலாம். இவ்வசதி கோரப்படும் நேர்வில் இதனை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவருக்கு ஆலோசனைக் குழு வழங்கியே தீர வேண்டும்.

எனவே உச்ச நீதிமன்றத்தின் மேற்படி கருத்துக்களின் அடிப்படை யில் மேற்படி பிரச்சனையில் வரும் Z என்பவர் தனக்காக தனது வழக்கை

1.AIR 1982 SC 710

எடுத்துரைத்து வாதிட நண்பர் ஒருவரை அமர்த்திக் கொள்ளலாம். இவ்வுரிமை மறுக்கப்பட்டால், அது இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு எதிரானதாகும். எனவே இதை எதிர்த்து வழக்கிடலாம்.

Nand Lal v. Punjab[1] எனும் மற்றொரு வழக்கில் தடுப்புக் காவலில் வைக்கப்படும் அதிகாரஅமைப்பிற்கு வழக்கறிஞர் ஒருவர் ஆஜராகும் போது அத்தகு உரிமையை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவருக்கு மறுத்தால், அது இந்திய அரசமைப்பின் உறுபு 14-அய் மீறியதாகும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

எனவே தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர் கோரவில்லையானாலும் கூட, அவருக்கு அவரது வாதத்தை ஆலோசனைக் குழுவின் முன் எடுத்துரைக்க அவரது நண்பர் ஒருவரின் உதவியைப் பெற அவரை அனுமதிக்க வேண்டியது அவசியமானதாகும். இல்லாது போனால், இயற்கை நீதிக் கோட்பாடுகள் மீறியதாகிவிடும். இந்த ஒன்றின் அடிப்படையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவரின் மீதான நடவடிக்கைகள் கூட செல்லாததாகிவிடும்.

27. 'A' a contractor executed some construction work at the request of a Government officer. The building constructed by the contractor was accepted and used by the Government. But no payment was made to the contractor. In an action, the Government contended that, since the requirements of Art. 299 (1) of the Constitution has not been complied with, the contract was not enforceable. Advise 'A'.

ஒரு அரசு அதிகாரியின் வேண்டுகோளின் அடிப்படையில் 'அ' என்ற ஒரு ஒப்பந்தக்காரர் கட்டுமானப்பணி ஒன்றினை செய்து முடிக்கிறார். அக்கட்டிடம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசினால் பயன்படுத்தப்பட்டது. ஆனால் ஒப்பந்தக்காரருக்கு எந்த பணமும் வழங்கப்படவில்லை. ஒப்பந்தக் காரர் தொடுத்த வழக்கில் அரசு அரசமைப்புச் சட்டம் பிரிவு 299(1) பின்பற்றப்பட்டாத காரணத்தால் ஒப்பந்தம் செல்லாது என வாதாடுகிறது. 'அ'க்கு ஆலோசனை வழங்கவும்.

தீர்வு:

இப்பிரச்சனை இதற்கு முன் நாம் கண்டுள்ள 14-ஆவது பிரச்சனையை (பக்கம் எண். 401) ஒத்தவாறு அமைந்துள்ளதாகும். அதன் இறுதிப்பத்தியில் விவாதிக்கப்பட்டுள்ளவாறு இப்பிரச்சனைக்கும் ஆலோசனை வழங்கலாம். அதாவது அரசமைப்புச் சட்டத்தின் உறுபு 299(1)-இல் கண்ட நிபந்தனைகள் பின்பற்றப்படாத காரணத்தால், அரசு அதிகாரியுடன் ஒப்பந்தக்காரர் செய்து கொண்ட கட்டுமானப் பணி ஒப்பந்தம் செல்லாது என்று அரசு வாதிடுவது ஏற்கத்தக்கதல்ல. ஏனெனில்,

1. AIR 1981 SC 2041

ஒப்பந்தக்காரர் கட்டிக் கொடுத்த கட்டிடத்தை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது; பயன்படுத்தியுள்ளது. எனவே கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பந்தக்காரருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள அரசு அதிகாரிக்கு அரசாங்கமானது உட்கிடையாக அதிகாரம் (இசைவாணை) வழங்கியுள்ளது என்று அனுமானிக்கலாம். எனவே ஒப்பந்தக்காரருக்கு அரசு பணம் வழங்க வேண்டும். இந்நிலைப்பாட்டை ஒப்பந்தக்காரர் தனது வழக்கில் எடுத்துரைத்து வெற்றி பெறலாம் என்பதே இங்கு நாம் அவருக்கு வழங்கும் ஆலோசனையாகும்.

28. The Government entered into an agreement with a company, that the company could purchase its own forest land for drawing rew-material and there would be no intereference by the Government with such land for a period of 60 years. Acting on the agreement the company purchased land investing huge amount. However later on the Government acting in pursuance of a law passed by the legislature acquired the land for agrarian reforms before the stipulated period - Decide the legality of the Government's action.

அரசாங்கமானது ஒரு நிறுவனத்துடன் வனத்துறை நிலங்கள் சம்பந்தமான ஒரு ஒப்பந்தம் செய்தது. வனத்துறை நிலங்களை குத்தகைக்கு எடுக்கும் நிறுவனம் அரசின் தலையீடு இல்லாமல் அடுத்த அறுபது ஆண்டு காலங்களுக்கு அதிலிருந்து தமது நிறுவனத்திற்கு தேவையான மூலப் பொருட்களை எடுத்துக் கொள்ளலாம் என ஒப்பந்தத்தின் வாயிலாக முடிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிறுவனம் பெரும் தொகையை செலவு செய்து நிலத்தை வாங்கியது. சில காலத்திற்கு பிறகு அரசால் இயற்றப்பட்ட சட்டத்தின் வாயிலாக விவசாய சீர்திருத்தங்களுக்காக குத்தகை நிலத்தை குத்தகை காலம் முடியும் முன்னரே கையகப் படுத்தியது. அரசின் இத்தகைய நடவடிக்கையின் சட்ட முறைமையினை ஆய்க.

தீர்வு:

இப்பிரச்சனையில் ஒரு நிறுவனம் அரசின் வனத்துறை நிலங்களை குத்தகைக்கு வாங்க ஒப்பந்தம் செய்து கொள்கிறது. அந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி அந்நிறுவனம் அந்நிலங்களிலிருந்து மூலப் பொருட்களை 60 ஆண்டுகளுக்கு எடுத்துக் கொள்ளலாம். இதில் அரசு தலையிடக்கூடாது. இது அந்நிறுவனத்திற்கு அரசு அளித்துள்ள 'உறுதி மொழி' (promise) ஆகும். நிருவாகமுறைச்சட்டத்தின்படி,அரசு கொடுக்கும் உறுதிமொழிகளுக்கு முரணாகச் செயற்பட அரசு தடை செய்யப்படுகிறது. இது 'உறுதிமொழி முரண்தடை' (Promisory Estoppel) எனப்படும். (இது குறித்து விளக்கமாக பக்கம் 353-இல் காணலாம்).

நிலைப்பாடு இவ்வாறு இருக்க, மேற்கண்ட குத்தகைக் காலம் முடியும் முன்னரே அரசு சட்டமொன்றை இயற்றி, அந்நிலங்களை விவசாய

சீர்திருத்தங்களுக்காக கையகப்படுத்துகிறது. இதற்கிடையில் அந்நிறுவனம் அந்நிலங்களிலிருந்து மூலப் பொருட்களை எடுக்க பெரும் தொகை செலவு செய்திருந்தது. எனவே இங்கு அந்நிறுவனம் 'உறுதி மொழி முரண்தடைக் கோட்பாட்டின் அடிப்படையில்' அரசுக்கு எதிராக வழக்கிடும் சூழல் உருவாகிறது. (அதாவது தனக்கு குத்தகைக்கு விட்ட பிறகு, குத்தகை காலம் முடியும் முன்னரே அதற்குச் சம்மந்தப்பட்ட நிலத்தை கையகப்படுத்தற்காக சட்டமியற்றுவது செல்லாது என்று அந்நிறுவனம் வழக்கிடுகிறது என்று வைத்துக் கொள்ளலாம்.)

இந்நிலையில் பிரச்சனையின்படி அரசின் மேற்படி நில கையக சட்ட நடவடிக்கையின் சட்ட முறைமையை ஆராய வேண்டியுள்ளது. அரசு கொடுக்கும் உறுதிமொழிக்கு அது கட்டுப்பட்டது என்பதும், அதற்கு முரணாக அது செயல்பட முடியாது என்பதும் ஒரு புறம் உண்மையே. ஆனால் மற்றொரு புறம் அரசானது எல்லா சூழல்களிலும் தனது உறுதிமொழிக்கு அது கட்டுப்பட்டதா என்ற வினா எழுந்தால், 'இல்லை' என்றுதான் கூற வேண்டும். இங்கு சில விதிவிலக்குகள் உள்ளன. அவற்றில் ஒன்றின்படி, 'சட்டமியற்றும் பணிகளுக்கு எதிராக' (against legislative functions) உறுதிமொழி முரண்தடையை செயற்படுத்த இயலாது. இங்கு குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களை அரசு சட்டம் ஒன்றை இயற்றி அதன் வாயிலாக கையகப்படுத்துகிறது. இது அரசின் ஓர் அங்கமான சட்டமன்றத் தின் சட்டமியற்றும் பணியாகும். எனவே பாதிக்கப்படும் அந்நிறுவனம் உறுதிமொழி முரண்தடையைக் காட்டி, அச்சட்டத்தை செல்லாது என்று விளம்பக் கோரி அரசுக்கு எதிராக வழக்கிட முடியாது. அரசின் மேற்படி நடவடிக்கை சட்டப்படி செல்லத்தக்கதே.

அப்படியானல் பெரும் தொகையை செலவு செய்து வன நிலங்களை குத்தகைக்கு எடுத்த அந்நிறுவனத்திற்கு தீர்வழியே கிடையாதா என்ற மற்றொரு கேள்வியும் இங்கு எழுகிறது. இதற்கு 'உண்டு' என்று உச்ச நீதிமன்றம் **Radhakrishna Agarwal v. Bihar**[1] எனும் வழக்கில் கூறியுள்ளது.

இவ்வழக்கின் சங்கதிகள்படி, மாநில அரசானது வன நிலங்கள் சிலவற்றை ஒருவருக்கு 15 ஆண்டு கால குத்தகைக்கு விடுகிறது. அதன் நிபந்தனையின்படி அந்நிலங்களிலிருந்து சில வகை விதைகளை அவர் எடுத் துக் கொள்ளலாம். அதற்கான உரிமைப்பணத்தை (royalty) அவர் அரசுக்கு செலுத்தி வர வேண்டும். இந்நிலையில் அரசானது இந்த குத்தகையை அதன் காலம் முடியும் முன்னரே இரத்து செய்து, குத்தகைக்கு கட்டுப்பட்டிருந்த நிபந்தனைகளை (உறுதிமொழியை)அது மீறிவிடுகிறது. இங்கு உறுதி மொழி முரண்தடைக்கு அரசு கட்டுப்பட்டதா என்ற பிரச்சனை எழுந்தது. அப்போது, அரசுக்கும் குத்தகைதாரருக்கும் இடையே உள்ள உறவானது முழுக்க முழுக்க ஒப்பந்தத்தின் அடிப்படையிலானது என்றும், எனவே ஒப்பந்த மீறுகைக்காக இழப்பீடு கோரி மட்டுமே அரசின் மீது வழக்கிட முடியும் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

1. AIR 1977 SC 1946

எனவே இவ்வழக்கிலிருந்து நாம் அறிவது யாதெனில், மேற்படி பிரச்சனையில் பாதிக்கப்பட்ட நிறுவனம் ஒப்பந்த மீறுகைக்காக இழப் பீடு கோரி வேண்டுமானால் அரசுக்கு எதிராக வழக்கிடலாம் என்பதே. மற்றபடி அரசின் நடவடிக்கை சட்டப்படி செல்லத்தக்கதே.

29. Under the All India Services Rules, the Government is empowered to compulsorily retire a member of the service in public interest on reaching the age of 50 years. No guidelines were laid down under the rule regarding compulsory retirement. But the Government issued certain directions prescribing the procedure for the purpose. Discuss the binding nature of these directions.

அகில இந்திய பணி விதிமுறைகளின் கீழ் 50 வயது நிரம்பிய ஒரு ஊழியரை பொது நலன் கருதி கட்டாய ஓய்வில் செல்ல நிர்பந்திக்கும் அதிகாரம் அரசிற்கு உண்டு. கட்டாய ஓய்வு பற்றி எவ்விதமான வழி காட்டு நெறிமுறைகளும் இப்பணி விதிமுறைகளின் கீழ் வகை செய்யப்பட வில்லை. ஆனால் அதற்கான வழிமுறைகளை உள்ளடக்கிய சில ஏவுரைகளை அரசு வெளியிட்டது. இந்த ஏவுரைகளின் கட்டுப்படுத்தும் தன்மையினை விளக்குக.

தீர்வு:

நிருவாகத்துறை விதிமுறைகளில் ஒரு குறிப்பிட்ட செயலுக்கு வழிகாட்டு நெறிகள் ஏதுமில்லை என்றால், அங்கு அரசானது அவ்வழி காட்டு நெறிகளை வகுத்துரைத்து ஏவுரைகள் வெளியிடலாம். இதற்கு கட்டுப்படுத்தும் தன்மை உள்ளது. இவை உண்மையில் அவ்விதிகளில் உள்ள வெற்றிடத்தை நிரப்புகின்றன (Where the rules does not contain any guidelines and the administrative instructions or directions are issued to furnish the guidelines, the instructions or directions are usually held to be binding. Such instructions or directions, actually, fill in the gap in the rules) என்று **State of U.P. v. Chandra Mohan**[1] எனும் வழக்கில் நமது இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்துள்ளது.

இவ்வழக்கின் சங்கதிகளும் மேற்படி பிரச்சனையில் கொடுக்கப் பட்டுள்ள விவரங்களும் ஒன்றே. (எனவே வழக்கின் சங்கதிகள் இங்கு மீண்டும் விவரிக்கப்படவில்லை).

இப்படிப்பட்ட ஏவுரைகளால் விதிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றாமல் ஒருவரை பணியிலிருந்து கட்டாய ஓய்வு பெறும்படி ஆணையிடுவது இல்லா நிலையது என்று **Virendra Kumar v. India**[2] எனும் வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. எனவே அரசின் ஏவுரைகள் கட்டுப்படுத்தக் கூடிய தன்மை வாய்ந்ததே.

1. AIR 1977 SC 2411
2. AIR 1981 SC 947

30. The chairman of the Housing Board has proposed to the tenants occupying the houses owned by the Housing Board, if each of them deposit, the amount of Rs.1,00,000 with the Housing Board, flats would be allotted to them on ownership basis on reconstruction of the building. However the Housing Board passed a resolution to allot the flats to the public and not to the tenants who paid the deposits. Discuss its validity with the aid of decided cases.

வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான வீடுகளில் குடியிருக்கும் வாடகைதாரர்கள் ரூபாய் 1,00,000 வைப்புத் தொகை செலுத்தினால் அந்த வீடுகளை சீர்படுத்தி கட்டிய பின் அவைகளை அவர்களுக்கு சொந்தமாக்கி கொடுப்பதாக அறிவித்தார். ஆனால் வீட்டு வசதி வாரியம் அவ்வாறு பணம் செலுத்திய வாடகை தாரர்களுக்கு வீட்டை சொந்தமாக கொடுக்காமல் இதர பொது மக்களுக்கு கொடுக்க தீர்மானம் நிறைவேற்றியது. இதன் செல்லுந்தன்மையை முடிவான வழக்குகளின் தீர்ப்புகளின் உதவியுடன் விவாதிக்கவும்.

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வு பகர நாம் **Atam Nagar Co-operative House Building Society v. State**[1] எனும் வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பின் உதவியை நாட வேண்டும். இதில் உச்ச நீதிமன்றமானது உறுதிமொழி முரண் தடைக் கோட்பாட்டைப் **(Doctrine of Promissory Estoppel)** பின்பற்றி மனுதாரர்களுக்கு தீர்வழி அளித்தது.

இவ்வழக்கின் சங்கதிகள்படி, மாநகர மேம்பாட்டு அறக்கட்டளை யானது (City Improvement Trust) நில மேம்பாட்டிற்காக திட்டம் ஒன்றை வகுத்தது. இந்த அறக்கட்டளையின் தலைவரை சில நபர்கள் அணுகி தங்களுக்கு வீட்டு மனைகளை ஒதுக்கித் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். 'நீங்கள் அனைவரும் சேர்ந்து கூட்டுறவு சங்கம் ஒன்றை உருவாக் கினால், உங்களுக்கு வீட்டுமனைகளை ஒதுக்கித் தருகிறேன்' என்று அறக்கட்டளை தலைவர் அவர்களுக்கு உறுதிமொழி அளித்தார். இதன்படி அவர்கள் கூட்டுறவு சங்கம் ஒன்றை உருவாக்கி பதிவு செய்தனர். இதைத் தொடர்ந்து தான் அளித்த உறுதிமொழியின்படி அச்சங்கத்திற்கு 90 வீட்டு மனைகளை அறக்கட்டளை தலைவர் ஒதுக்கிக் கொடுத்தார். இச்சங்கமும் வீட்டு மனைகளுக்குரிய பணத்தை அறக்கட்டளைக்கு செலுத்தியது.

இந்நிலையில் அந்த வீட்டு மனைக்கான நிலத்தை மேற்படி அறக் கட்டளை கையகப்படுத்துவதில் சிக்கல்கள்சில எழுந்தன. இது தொடர்பாக எழுந்த வழக்கின் காரணமாக வீட்டு மனைகளை ஒதுக்கவியலாமல் காலம் கடந்து சென்று கொண்டிருந்தது. இதனால் இது சாத்தியப்படாது என்று கருதி மேற்படி அறக்கட்டளையானது வீட்டு மனை நிலங்களை ஒதுக்கித்

1. AIR 1979 P & H 196

தரும் திட்டத்தை கைவிட்டது.

பின்னிட்டு சில காலம் கழித்து, இதையொத்த மற்றொரு திட்டத்தை மேற்படி அறக்கட்டளை வகுத்தது. ஆனால் ஏற்கனவே வீட்டு மனைகளுக்காக பணம் செலுத்தியிருந்த மேற்படி சங்கத்தின் உறுப்பினர் களுக்கு வீட்டு மனைகளை ஒதுக்க அந்த அறக்கட்டளை மறுத்தது. முந்தைய திட்டம் கைவிடப்பட்டுவிட்டதால், அச்சமயத்தில் அறக் கட்டளையின் தலைவர் அளித்த உறுதிமொழியும் காலவதியாகிவிட்டது என்று அறக்கட்டளை தனது மறுப்பிற்கான காரணத்தைக் கூறியது.

அறக்கட்டளையின் மேற்படி முடிவால் பாதிக்கப்பட்ட மேற்படி கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்கள் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்த னர். இம்மனுவை பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு ஆணை பிறப்பித்தது. அதில் அறக்கட்டளை இரண்டாவதாக வகுத்த புதிய திட்டத்தின் செயற்பாட்டிலிருந்து கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் ஏற்கனவே வாங்கி நிலத்திற்கு விலக்களிப்பதற்காக அதன் வழக்கை மாநில அரசின் முடிவுக்கு சமர்ப்பிக்கும்படி அறக்கட்டளைக்கு பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் ஏவுரைத்தது.

இதற்கு உயர் நீதிமன்றம் கூறிய காரணங்கள் வருமாறு:- அறக் கட்டளையின் தலைவர் வீட்டு மனை நிலங்களை ஒதுக்கித் தருவதாக உறுதி மொழி அளித்ததின் பேரில்தான் கூட்டுறவு சங்கம் உருவாக்கப்பட்டது. வீட்டு மனைகளுக்கான தொகையை அச்சங்கமும் செலுத்திவிட்டது. இங்கு அறக்கட்டளையின் தலைவர் உறுதிமொழி அளித்திருக்காவிட்டால், அச் சங்கம் வீட்டு மனைகளை வாங்கும் நடவடிக்கையில் இறங்கியிருக்காது; மாறாக தங்களுக்கான வீட்டு மனைகளை வேறு வகையில் வாங்கிக் கொள்ள அச்சங்க உறுப்பினர்கள் முயற்சி செய்திருப்பார்கள்.

உறுதிமொழியின் பேரில் அச்சங்கம் செயற்பட்டால், அதற்கு இடர்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே அறக்கட்டளையின் தலைவர் ஏற்கனவே கொடுத்த உறுதிமொழியிலிருந்து பின்வாங்க அவர் தடை செய் யப்படுகிறார். நிலத்தைக் கையகப்படுத்தாமலே நிலத்தை ஒதுக்க நடவடிக்கை எடுத்து, அதில் காலதாமதம் ஆகிறது என்ற காரணத்தால் முந்தைய திட்டத்தை அறக்கட்டளை கைவிட்டது. எனவே தற்போது அறக் கட்டளையின் உறுதிமொழியை செயல்படுத்துவதிலிருந்து அதற்கு விலக்களித்து விட்டதால், அந்த அறக்கட்டளை கவனக்குறைவாக நடந்த தற்கு அதற்கு ஆதாயம் தருவதாக அமைந்துவிடும். எனவே உறுதி மொழி முரண்தடையின் அடிப்படையில் அக்கூட்டுறவு சங்கமானது தனக்கு ஒதுக்கப்பட்ட வீட்டு மனைகளைப் பெற உரிமையுடையது. இந்த உரிமை களைப் புறக்கணிக்க அறக்கட்டளை அனுமதிக்கப்படாது.

இந்த வழக்கின் சங்கதிகள் சற்றே நீண்டு இருந்தாலும், பாதிக்கப் பட்டோரின் உரிமைகளை உயர் நீதிமன்றமானது 'உறுதிமொழி முரண் தடைக் கோட்பாட்டின்' அடிப்படையில் நியாயமாக நிலைநிறுத்திய நல்லதொரு வழக்கு என்றே கூறலாம்.

இந்த வழக்கின் மேற்படி தீர்ப்பை நமது மேற்படி பிரச்சனைக்கு அப்படியே பொருத்தி தீர்வு பகரலாம். இதில் வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான வீடுகளில் குடியிருக்கும் வாடகைதாரர்கள் ரூபாய் 1,00,000 வைப்புத் தொகை செலுத்தினால் அந்த வீடுகளை சீர்படுத்தி கட்டிய பின் அவைகளை அவர்களுக்கு சொந்தமாக்கி கொடுப்பதாக அறிவித்தார்.

அதாவது இங்கு அத்தலைவர் வாடகை தாரர்களுக்கு உறுதிமொழி அளிக்கிறார். ஆனால் இதற்கு முரணாக வீட்டு வசதி வாரியம் அவ்வாறு பணம் செலுத்திய வாடகைதாரர்களுக்கு வீட்டை சொந்தமாக கொடுக்காமல் இதர பொது மக்களுக்கு கொடுக்க தீர்மானம் நிறைவேற்றியது. உறுதிமொழி கொடுத்ததால், வாடகைதாரர்கள் பணம் செலுத்துகின்றனர். இந்நிலையில் அவர்களுக்கு வீடுகளை சொந்தமாக்கிக் கொடுக்காமல் இதர பொது மக்களுக்கு வீடுகளைக் கொடுக்க தீர்மானம் நிறைவேற்றுவது உறுதி மொழி முரண்தடைக் கோட்பாட்டின் அடிப்படையிலும், பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் மேற்படி வழக்கில் வழங்கிய தீர்ப்பின்படியும் செல்லாது.

பணம் செலுத்திய வாடகைதாரர்களுக்கு வீடு சொந்தமாக்கப் பட வேண்டும் என்பதே இங்கு முடிவான தீர்வாகும்.

31. Section 3(1) of Essential Commodities Act, 1955 confers general power on the Central Government to pass orders providing for 'regulating' or 'Prohibiting' production, supply and distribution of an essential commodity and trade and commerce therein. Section 3(2)(d) provides for regulating by licenses, permits or otherwise the storage, distribution, disposal, acquisition or consumption of any essential commodity without prejudice to the generality of powers under section 3(1). Under an order, transport of sugar was banned out of certain towns in Tamil Nadu. Decide the legality of the order.

மத்திய அரசு இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955 பிரிவு 3(1)ன்படி பொருட்களை உற்பத்தி செய்தல், வழங்கல், வினியோகித்தல் ஆகியவற்றையும் அவற்றின் சந்தை மற்றும் வணிகத்தையும் ஒழுங்கு படுத்தவோ அல்லது தடை செய்யவோ ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் பெற்றிருந்தது. இப்பிரிவுக்கு எந்தவித குந்தகமும் இல்லாமல் இன்றியமையாப் பண்டங்களை வாங்கவும், இருப்பு வைக்கவும், வினியோகம் செய்யவும், பயன்படுத்தவும் அரசு உரிமம் அல்லது ஒப்புதல் வழங்க பிரிவு 3(2)(d) வழி செய்கிறது. தமிழ் நாட்டில் குறிப்பிட்ட நகரங்களிலிருந்து வெளி நகரங்களுக்கு சர்க்கரையை கொண்டு செல்ல அரசு தடையாணை பிறப்பித்தது. இந்த தடையாணையின் சட்டத் தன்மையை முடிவு செய்க.

தீர்வு:

இப்பிரச்சனையில் பிறப்பிக்கப்பட்ட தடையாணை செல்லத்

தக்கதே. அதற்கான காரணங்கள் வருமாறு:-

1. மத்திய அரசு இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955 பிரிவு 3(1)ன்படி பொருட்களை உற்பத்தி செய்தல், வழங்கல், வினியோகித்தல் ஆகியவற்றையும் அவற்றின் சந்தை மற்றும் வணிகத்தையும் ஒழுங்குபடுத்தவோ அல்லது தடை செய்யவோ ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் பெற்றிருந்தது. இது விதியாக்க அதிகார ஒப்படைவிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

2. அதேநேரத்தில் மேற்படி பிரிவுக்கு எந்தவித குந்தகமும் இல்லாமல் இன்றியமையாப் பண்டங்களை வாங்கவும், இருப்பு வைக்கவும், வினியோகம் செய்யவும், பயன்படுத்தவும் அரசு உரிமம் அல்லது ஒப்புதல் வழங்க பிரிவு 3(2)(d) வழி செய்கிறது.

3. பிரிவு 3(1)-இல் வரும் 'ஒழுங்குபடுத்தவோ', 'தடை செய்யவோ' எனும் பதங்கள் அப்பிரிவு மைய அரசுக்கு வழங்கியுள்ள அதிகாரங்களை எவ்வாறு செயலுறுத்த வேண்டும் என்பதற்கு வழிகாட்டு நெறியாக உள்ளது. இப்பிரிவுக்கு குந்தகம் ஏதும் வராமல் இன்றியமையாப் பண்டங்களை வாங்கவும், இருப்பு வைக்கவும், வினியோகம் செய்யவும், பயன்படுத்தவும் அரசு உரிமம் அல்லது ஒப்புதல் வழங்க பிரிவு 3(2)(d) வகை செய்துள்ளது. இங்கு சட்டமியற்றும் அதிகாரமானது நிருவாகத் துறைக்கு (மைய அரசுக்கு) அதிகப்படியாக ஒப்படைவு (excessive delegation of legislative power) செய்யப்பட்டுள்ளது என்று ஆட்சேபணை செய்வதற்கு ஏதுமில்லை.

4. பிரிவு 3(1)-இன்படி இன்றியாமைப்பண்டங்கள் வணிகத்தை மைய அரசு ஒழுங்குபடுத்தலாம் அல்லது தடை செய்யலாம். அதே நேரத்தில் இதற்கு குந்தகமின்றி அப்பண்டங்கள் தொடர்பான செயல்களுக்கு உரிமம் அல்லது ஒப்புதலும் வழங்கலாம். எனவே, பிரிவு 3(1)-இன்படி தமிழ் நாட்டில் குறிப்பிட்ட நகரங்களிலிருந்து வெளி நகரங்களுக்கு சர்க்கரையை கொண்டு செல்ல அரசு பிறப்பித்த தடையாணை செல்லத்தக்கதே. அதே சமயத்தில் இன்றியமையாப்பண்டங்கள் வணிகம் என்பது அரசின் முற்றுரிமைக்குட்பட்டது என்பதால், அது குறிப்பிட்ட சிலருக்கு உரிமம் வழங்குவதன் மூலம் சர்க்கரையை விநியோகிக்க அல்லது கொண்டு செல்ல ஆணை பிறப்பிக்கலாம். இது பிரிவு 3(2)(d)-ன் கீழான அதிகாரத்தின்பாற்பட்டது. இங்கு ஆணைகளைப் பிறப்பிக்க வழிகாட்டு நெறிகள் மேற்படி இன்றியமையாச் சட்டத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளதால், இப்பிரிவும் செல்லத்தக்கதே.

5. இப்பிரச்சனை **Harishankar Bagla v. State of M.P.**[1] எனும் வழக்கின் சாயலில் அமைந்ததாகும். (இதனை பக்கம் எண். 85-இல் காணலாம்.)

1 AIR 1954 SC 465

32. Ashok Kumar is working as demonstrator in a Government medical college. Earlier the Director of Medical Education assured the demonstrators that the post of lecturers will be filled by promotion. However now the government issued a notification for filling the post of lecturers through direct recruitment, which is the only method permitted by the statute. Ashok Kumar wants to challenge it on the basis of promissory estoppel - Advise.

அசோக்குமார் என்பவர் அரசு மருத்துவ கல்லூரியில் செயல்முறை ஆசிரியராக பணியாற்றி வந்தார். அப்போது மருத்துக் கல்வி இயக்குநர், விரிவுரையாளர் பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்படும் என உறுதியளித்திருந்தார். ஆனால் இப்போது விரிவுரையாளர் பதவிகளை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கு அரசு விளம்பரம் செய்துள்ளது. விரிவுரையாளர் பதவிக்கு சட்டத்தின் கீழ் நேரடி நியமன முறை மட்டுமே அனுமதிக்கப்பட்டதும் ஆகும். இத்தகைய நியமன நடவடிக்கையை உறுதி மொழி முரண்தடைக் கோட்பாட்டின் கீழ் அசோக் குமார் மறுதலிக்க விரும்பு கிறார். - ஆலோசனை வழங்கவும்.

தீர்வு:

இங்கு உறுதிமொழி முரண்தடைக் கோட்பாடு பொருந்தாது. இதற்கான காரணங்கள் வருமாறு:-

1. பொதுவாக அரசு அளிக்கும் உறுதிமொழிக்கு முரணாக அது செயல்பட முடியாது என்பது உறுதிமொழி முரண்தடைக் கோட்பாடு. ஆனால் இதற்கு சில விதிவிலக்குகள் உள்ளன. அவற்றில் ஒன்று **'அதிகார வரம்பு மீறிய உறுதிமொழி' (Ultra vires promise)**. அதாவது, அரசு அலுவலர் ஒருவர் சட்டத்தால் தனக்களிக்கப்பட்ட அதிகாரவரம்பை மீறி, உறுதிமொழி எதையும் அளிப்பாரானால், அங்கு 'உறுதிமொழி முரண் தடையை' செயற்படுத்த இயலாது. இது அரசாங்கத்தின் ஒரு குறிப்பிட்ட துறை அளிக்கும் அதிகாரவரம்பு மீறிய உறுதிமொழிக்கும் பொருந்தும்.

2. மேற்படி பிரச்சனையில் உறுதிமொழி அளிப்பவர் மருத்துவக் கல்வி இயக்குநர். அவருக்கு பிரச்சனையில் கண்டுள்ளவாறான உறுதி மொழி அளிப்பதற்கு எவ்வித அதிகாரமும் அரசால் அளிக்கப்படவில்லை. எனவே அவர் அளித்த உறுதிமொழி எடுபடாது.

3. மேலும் இங்கு விரிவுரையாளர் பதவிக்கு நேரடி நியமன முறை மூலம் மட்டுமே ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சட்டம் விதித்துள்ளது. இவ்வாறு இருக்க பதவி உயர்வு மூலம் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று மருத்துவக் கல்வி இயக்குநர் உறுதிமொழி அளிப்பது அதிகாரவரம்பை மீறிய செயலாகும். எனவே அசோக்குமார் உறுதி மொழி முரண்தடைக் கோட்பாட்டைச் சுட்டிக்காட்டி வழக்கிட்டால், அவர் தோற்றுப்போவது நிச்சயம். (இதையொத்த பிரச்சனைக்கு வழங்கப்பட்ட தீர்வை பிரச்சனை எண்.18-இல் பக்கம் எண்.406-இல் காண்க.)

33. An employee of a company which is a public undertaking was dismissed by the managing director of the company. An appeal from his order was also dismissed by the Board of Directors presided over by the very same Managing Director of the Company. Discuss the validity of the order.

பொதுத்துறையில் உள்ள ஒரு நிறுமத்தில் வேலை செய்யும் பணியாளர் ஒருவர் அந்நிறுமத்தின் நிர்வாக இயக்குநரால் பணி நீக்கம் செய்யப்பட்டார். இதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடும் அதே நிர்வாக இயக்குநரைத் தலைவராகக் கொண்ட அந்நிறுமத்தின் இயக்குநர்கள் குழுவால் தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வாணையின் செல்லும் தன்மையினை விவாதிக்க.

தீர்வு:

ஒரு வழக்கை விசாரிக்கும் நீதிபதிக்கு அவ்வழக்கின் கருப்பொருள் மீது மனச்சாய்வு இருப்பில், அது அலுவல் சார்ந்த மனச்சாய்வு அல்லது கருப்பொருள் குறித்த மனச்சாய்வு (Official Bias or Bias as to subject matter) எனப்படும். இதனால் அவர் அவ்வழக்கிற்கு நீதிபதியாக பதவி வகிப்பதற்குத் தகுதியற்றவராகிறார். மேலும் அவர் அவ்வழக்கை விசாரித்து தீர்ப்பு ஏதேனும் வழங்கியிருப்பின், அது செல்லாததாகவும் ஆகிறது. இது இயற்கை நீதிக் கோட்பாட்டின் அடிப்படையில் எழுவதாகும்.

K.Chelliah v. Chairman, Industrial Finance Corporation[1] எனும் வழக்கில் அரசு நிறுவனம் ஒன்றின் பணியாள் மீது அந்நிறுவனத்தின் தலைவர் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கிறார். இதன் விளைவாக அவர் பணி நீக்கம் செய்யப்படுகிறார். இதை எதிர்த்து அப்பணியாள் இயக்குநர் குழுவிடம் மேல்முறையீடு செய்ய சட்ட வகைமுறை உள்ளது. எனவே அப்பணியாள் தனது பணி நீக்கத்தை எதிர்த்து இயக்குநர் குழுவிடம் மேல் முறையீடு செய்கிறார்.

ஆனால் இந்த இயக்குநர் குழுவில், அப்பணியாளை பணி நீக்கம் செய்த நிறுவனத் தலைவரும் ஒரு உறுப்பினராக உள்ளார். இயக்குநர் குழுக் கூட்டத்தில் அப்பணியாளின் மேல்முறையீடு விசாரணை செய்யப்படும் போது, அதில் அத்தலைவரும் கலந்து கொண்டார். முடிவில் பணியாளின் மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. இதை எதிர்த்து அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் முறையிட்டார்.

அதில், மேல்முறையீடு விசாரணை செய்யப்படுகின்ற இயக்குநர் குழுக்கூட்டத்தில் நிறுவனத் தலைவரும் கலந்து கொண்டு, முடிவில் அது தள்ளுபடி செய்யப்பட்டதால், அங்கு "உண்மையில் மனச்சாய்வு நிகழக் கூடிய சாத்தியக்கூறு" (real likelihood of bias) இருந்திருக்கலாம் என்ற நியாயமான அச்ச உணர்வை அப்பணியாளின் மனதில் ஏற்படுத்தியுள்ளது

1.AIR 1973 Mad. 122

என்றே கருத வேண்டும் என்று கூறி, அவரது பணி நீக்க ஆணையை சென்னை உயர் நீதிமன்றம் இரத்து செய்தது.

எனவே இந்த வழக்கை ஒட்டி அமைந்துள்ள நமது மேற்படி பிரச்சனையில் பிறப்பிக்கப்பட்ட பணி நீக்க ஆணை செல்லாது. அப்பணியாள் உயர் நீதிமன்றத்தில் முறையிட்டால், அவருக்கு வெற்றி கிட்டும்.

34. A got 33 permits to run motor vehicles. There was a general complaint that his vehicles were not running intime. Stating this allegation in a notice all the 33 permits were cancelled. Provide legal advice whether he can quash this order through court.

'அ' என்பவர் இயக்கவூர்திகளை ஒட்டுவதற்கு 33 அனுமதிகளைப் பெற்றிருந்தார். அவரது ஊர்திகள் சரியான நேரத்தில் ஓடுவதில்லை என்ற பொதுப் புகார்கள் இருந்தன. இக்குற்றச்சாட்டை ஒரு அறிவிப்பின் வாயிலாக எடுத்துக் கூறி அவரது 33 அனுமதிகளும் இரத்து செய்யப்பட்டன. அவர் இந்த ஆணையை நீதிமன்றத்தின் வாயிலாக இரத்து செய்ய இயலுமா என்பதற்கு அவருக்கு சட்ட ஆலோசனை வழங்குக.

தீர்வு:

இங்கு இயற்கை நீதிக்கோட்பாடுகள் மீறப்பட்டுள்ளன. அதாவது "நியாயமாகக் கேட்டல்" எனும் விதி பின்பற்றப்படாமல் 33 அனுமதிகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன. எனவே இதனைச் சுட்டிக்காட்டி 'அ' என்பவர் வழக்கிட்டால் அவருக்கு வெற்றி கிடைக்கும். அந்த 33 அனுமதிகளையும் இரத்து செய்து பிறப்பிக்கப்பட்ட ஆணை நீக்கப்படும்.

35. The General Manager of the Telephones disconnected the petitioner's telephone by applying Rule 422 stating that it is used for wrong purpose. But the said rule permits for disconnection during emergency. Provide legal advice to the petitioner.

தொலைபேசியானது தவறான நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது என்று கூறி மனுதாரரின் தொலைபேசியை விதி 422-ஐப் பயன்படுத்தி தொலைபேசித் துறையின் பொது மேலாளர் துண்டித்து விடுகிறார். ஆனால் அவசரநிலையில் மட்டுமே தொலைபேசியைத் துண்டிப்பதற்கு அவ்விதி அனுமதிக்கிறது. மனுதாரருக்கு சட்ட ஆலோசனை வழங்குக.

தீர்வு:

ஒரு விதி எதற்காக அதிகாரத்தை ஒப்படைவு செய்கிறதோ, அதற்கு மேல் அந்த அதிகாரத்தை நிருவாகத்துறை பயன்படுத்துதல் கூடாது. இங்கு விதி 422-இல் அதிகாரமளிக்கப்பட்ட காரணத்திற்காக அல்லாமல் வேறொரு காரணத்திற்காக மனுதாரரின் தொலைபேசி துண்டிக்கப்பட்டுள்ளது.

எனவே மனுதாரருக்கு வழக்கில் வெற்றி நிச்சயம்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக வினாத்தாள்கள்
[Law University Question Papers]

மூன்றாண்டு சட்டக்கல்வி

(For the candidates admitted from 2009-2010 onwards)

B.L. DEGREE EXAMINATION, MAY 2016

(Three Year Regular Course)

Fourth Semester/Second Year

ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்க

1. Explain Separation of Powers. Explain its applicability in U.S.A. and India.

அதிகாரப் பிரிவுக் கோட்பாட்டை விளக்கி, அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் இந்தியாவில் அதன் பயன்பாட்டை விளக்கவும்.

2. Discuss the Judicial control of delegated Legislation in India with decided case laws.

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு குறித்தான நீதிமன்றக் கட்டுப்பாட்டை தீர்மானிக்கப் பட்ட வழக்குகளுடன் விவாதிக்கவும்.

3. Distinguish between quasi-Judicial function and administrative function. Discuss its applicability in the modern context.

நீதித்தன்மை வாய்ந்த செயல்பாடுகள் மற்றும் நிர்வாகச் செயல்பாடுகளை வேறுபடுத்திக் காட்டுக. தற்போதைய சட்ட வளர்ச்சியில் அதன் பயன்பாட்டை விவாதிக்கவும்.

4. Analyse with decided cases whether a state is bound by statutes.

அரசானது சட்டத்திற்கு கட்டுப்பட வேண்டுமா என்பதை முடிவு செய்யப்பட்ட வழக்குகளு டன் பகுத்துக் கூறவும்.

5. Narrate the advantages and disadvantages of Writ of Mandamus and Mandatory Injunctions.

நெறியுறுத்தும் நீதிப்பேராணை மற்றும் செயலுறுத்துக்கட்டளை ஆகியவற்றின் அனுகூலம் மற்றும் அனுகூலமற்ற தன்மைகளை எடுத்துக் கூறுக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short notes on EIGHT of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Conseil-de-etat.
கான்சில்–டி–இடாட்

(b) Power to include and exclude in a Schedule
அட்டவணையில் சேர்க்கவும் நீக்கவும் உள்ள அதிகாரம்

(c) Public Interest Litigation.
பொது நல வழக்கு

(d) Error of law apparent on the face of the record.
ஆவணத்தில் வெளிப்படையாகத் தெரியும் சட்டத் தவறு

(e) Personal hearing.
நேரடி விசாரணை

(f) Conditional legislation.
நிபந்தனைக்குட்பட்ட விதியாக்குதல்

(g) Malafide
தீய எண்ணம்

(h) Lok pal
லோக் பால்

(i) Union of India vs. Anglo Afgan Agencies
இந்திய அரசு எதிர். ஆங்கிலோ ஆப்கான் முகவர்கள்

(j) Maneka Gandhi vs. Union of India.
மேனகா காந்தி எதிர். இந்திய அரசு

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.
பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' was serving under the Border Security Force. He lead a mass strike claiming more benefits in salary. Immediately he wras dismissed from service without conducting proper enquiry. The Government contends that when security of the State is to be given primary importance hearing need not be given. Decide.

'A' எல்லை பாதுகாப்புப் படையில் பணி புரிகிறார். ஊதியத்தில் அதிக பலன்கள் கோரி அவர் ஒரு பெரிய வேலை நிறுத்தத்தை தலைமை தாங்கி நடத்துகிறார். எந்த விசாரணையும் இன்றி உடனடியாக அவர் பணி நீக்கம் செய்யப்படுகிறார். நாட்டின் பாதுகாப்பிற்கு முக்கியத் துவம் வழங்கும் போது விசாரணைத் தேவையில்லை என்று அரசு வாதிடுகிறது – முடிவு செய்க.

8. The Executive Magistrate while giving instructions to the typist regarding

the preventive detention of 'X', instructed to type the grounds for detention from the Goondas Act. The typist typed as 'X's behaviour is dangerous to public order or security of the state. 'X' contends that by simply typing the provision, the Executive Magistrate has not applied his mind over the facts of the case. The terms Public order or security of the state shows the indetermination of the executive magistrate — Decide.

ஆட்சித் துறை நடுவர், 'X' என்பவரை தடுப்புக் காவலில் வைக்க ஆணை பிறப்பிக்கின்ற போது, குண்டர்கள் சட்டத்தில் இருக்கும் காரணங்களை அப்படியே தட்டெழுத்திடக் கூறுகிறார். தட்டெழுத்தாளரும் 'X' செயல்பாடு நாட்டின் பாதுகாப்பிற்கு அல்லது பொது அமைதிக்கு ஆபத்தாக உள்ளது என அடிக்கின்றார். இவ்வாறு சட்டத்தின் வகையத்தை அப்படியே அடிப்பது, ஆட்சித்துறை நடுவர் வழக்கின் பொருண்மையின் மீது தனது மனத்தைச் செலுத்தாததைக் காட்டுகிறது என்றும், நாட்டின் பாதுகாப்பு அல்லது பொது அமைதி எனும் வார்த்தைகள் ஆட்சித் துறை நடுவர் இந்த இரண்டில் எது என்று முடிவு செய்யாததையே காட்டுகின்றது என 'X' வாதிட்டார். முடிவு செய்க.

9. 'A' was an under trial prisoner. He got bail within thirty days of his detention. But he was not released from the prison nearly for four yeais. Now 'A' claims damages for the unlawful detention against the State - Decide.

'A' என்பவர் ஒரு விசாரணைக் கைதியாவார். அவர் காவலில் வைக்கப்பட்டதில் இருந்து முப்பது நாட்களுக்குள் ஜாமீன் பெறுகின்றார். ஆனால் நான்கு ஆண்டுகளாகச் சிறையில் இருந்து விடுவிக்கப்படவில்லை. எனவே தவறாகக் காவலில் வைத்ததற்கு அவர் அரசிடம் இழப்பீடு கோருகிறார் – முடிவு செய்க.

10. 'A' is a government employee. He was dismissed from service due to misappropriation of funds. During the inquiry he stated that the records showing the accounts were in English language which he is not familiar with. Hence he asked for a translated record. The authorities did not furnish the same. He pleads, that he has not been given reasonable opportunity for explanation - decide.

'A' ஒரு அரசு ஊழியர் ஆவார். அவர் பணம் கையாடல் செய்ததாகப் பணி நீக்கம் செய்யப்படுகிறார். விசாரணையின் போது கணக்குகளைக் காட்டும் ஆவணங்கள் ஆங்கிலத்தில் இருந்தது. ஆங்கிலம் சரிவரத் தெரியாததால் அதனுடைய மொழி பெயர்ப்பு வேண்டும் எனக் கேட்டார். ஆனால் அதிகாரிகள் அதனை அளிக்கவில்லை. தனது வழக்கில் உரிய விளக்கம் அளிக்க வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்று வாதிடுகிறார். முடிவு செய்க.

11. The state called for tenders for the construction of a bridge. The tender prescribed the minimum qualification for the applicant as SSLC. The application of a person who did not pass SSLC was accepted by the state. One of the applicants who passed SSLC challenges this. Decide.

பாலம் ஒன்று கட்டுவதற்காக அரசு ஒப்பந்தப் புள்ளி கேட்டது. ஒப்பந்தப் புள்ளி விளம்பரத்தில் விண்ணப்பிப்பவர் SSLC தேர்வு பெற்றிருக்க வேண்டும் என கூறப்பட்டிருந்தது. SSLC தேர்வு பெறாத ஒருவரின் ஒப்பந்தப் புள்ளியை அரசு ஏற்றது. SSLC தேர்வு பெற்ற ஒரு விண்ணப்பதாரர் இதனை எதிர்த்து வழக்கு தொடர்கிறார். முடிவு செய்க.

12. 'A' is a servant of Life Insurance Corporation of India. According to the rules

framed by LIC an employee is to be provided gratuity. But it was denied to 'A'. 'A' files writ of Mandamus. LIC takes the defence that since LIC is not a government, the rules framed by it does not have the force of law. Hence Writ cannot be filed under Art 226. Decide.

'A' என்பவர் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் ஒரு பணியாளர் ஆவார். அதன் ஆக்கிய விதிகளின்படி பணியாளர்களுக்கு ஊதியக் கொடை வழங்க வேண்டும். ஆனால் 'A' க்கு வழங்கப்படவில்லை. 'A' செயலுறுத்தும் நீதிப் பேராணை உயர்நீதிமன்றத்தில் தொடருகிறார். ஆயுள் காப்பீட்டுக் கழகமானது அரசு அல்லாத காரணத்தினால் அது ஆக்கிய விதிகளுக்கு சட்டத்தின் வலிமை இல்லை. எனவே 'A' நீதிப் போராணை கேட்டு வழக்கு தொடர முடியாது என ஆயுள் காப்பீட்டுக் கழகம் பதில் அளிக்கின்றது. முடிவு செய்க.

(For the candidates admitted from 2009-2010 onwards)

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2016

(Three Year Regular Course)

Fourth Semester/Second Year

ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்க

1. Discuss rule of law with specific reference to modern concept of rule of law.

சட்டத்தின் ஆட்சியின் நவீன காலக்கருத்தமைவினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும்.

2. Explain the parliamentary control of delegated legislation.

சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு குறித்தான நாடாளுமன்றக் கட்டுப்பாட்டை விளக்கிக் கூறுக.

3. Explain the following with decided case laws

(a) Institutional decisions

(b) Official bias.

(அ) அமைப்பு வழித் தீர்ப்புகள்

(ஆ) அலுவல் சார் மனச் சாய்வு

4. Discuss with decided case laws about the tortious liability of the State.

அரசின் தீங்கியல் பொறுப்பு குறித்து தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விளக்குக.

5. Explain administrative tribunals. Discuss with decided case laws whether appeals can be filed in the High Court against the decision of the State Administrative Tribunal.

நிர்வாகத் தீர்ப்பாயங்களை விளக்கவும். மாநில நிர்வாகத் தீர்ப்பாயம் அளித்த தீர்ப்பில்

இருந்து உயர்நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்ய இயலுமா என்பது குறித்து தீர்மானிக்கப் பட்ட வழக்குகளுடன் விளக்குக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short notes on EIGHT of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Henry VIII clause.
ஹென்றியின் எட்டாவது விதி

(b) Improper purpose
தவறான நோக்கம்

(c) Speaking order
பேசும் ஆணை

(d) Administrative directions
நிர்வாகப் பணிப்புரைகள்

(e) Publication of Delegated legislation
அதிகார ஒப்படைவு விதிகளை வெளியிடுதல்

(f) Laches
கால தாமதம்

(g) Acting under dictation
ஆணையின்படி செயலாற்றுதல்

(h) Droit-Administratiff
ட்ராயட் அட்மினிஸ்டிரேட்டிப்

(i) Indira Gandhi vs Raj Narain
இந்திரா காந்தி எதிர். ராஜ்நாராயண்

(j) ADM Jabalpur vs Shiv Kanth Sukla
ADM ஜெபல்பூர் எதிர். சிவகாந்த் சுக்லா.

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.
பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' has been arrested under preventive detention. He studied only Vth standard. The grounds for his detention have been communicated to him in English language. 'A' says that he does not know English language. Decide the validity.

'A' என்பவர் தடுப்புக் காவல் சட்டத்தில் கைது செய்யப்படுகிறார். அவர் ஐந்தாவது வகுப்பு வரை மட்டுமே படித்தவர். அவர் கைது செய்யப்படுவதற்கான காரணங்கள் அவருக்கு ஆங்கிலத்தில் எடுத்துக் கூறப்படுகின்றது. 'A' தனக்கு ஆங்கிலம் தெரியாது எனக் கூறுகி

றார். இதன் சட்டரீதியான செல்லும் தன்மையை விளக்குக.

8. B, a Naval Officer, dies due to an accident in a submarine. B's wife claimed damages alleging that due to the negligent construction of the submarine, her husband died. She pleaded in the court to direct the state to produce the blue print of the submarine before the court to prove the negligent construction of the submarine. State contends that if the blue print was brought to light, it would affect the security of the State. Decide.

'B' என்ற கடற்படை அதிகாரி நீர்மூழ்கிக் கப்பலில் ஏற்பட்ட விபத்தில் இறந்து விடுகிறார். அந்த நீர்மூழ்கிக் கப்பலை உரிய கவனம் செலுத்திக் கட்டாததால் தான் விபத்து ஏற்பட்டது என்று கூறி, 'B' ன் மனைவி இழப்பீடு கோருகிறார். இதனை நிரூபிக்க கப்பலின் வரைபடத்தை அரசு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென நீதிமன்றத்தில் கோருகி றார். இவ்வாறு சமர்ப்பித்தால் நீர்மூழ்கிக் கப்பல் குறித்த ரகசியங்கள் வெளிவந்து விடும். இது நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படுத்தும் என்று அரசு வாதிடுகிறது. முடிவு செய்க.

9. The 'removal of difficulties' clause under the Factories Act says that the State can make any changes in the Factories Act for the better enforceability of the spirit of the Act. The government by using the clause brings a change so thst no opportunity is given to factory's owner before the cancellation of the licence under the act. Discuss whether the act of the government is valid?

ஆக்கத் தொழிலகச் சட்டத்தில் அமல் செய்யக் கடினமான விதிகளை அரசு மாற்றம் செய்யும் வகையம் உள்ளது. இதனைப் பயன்படுத்தி ஒரு ஆக்கத் தொழிலக உரிமத்தை ரத்து செய்யும் முன்பு உரிமையாளரிடம் விளக்கம் கேட்க வேண்டியத் தேவையில்லையென்று சட்ட திருத்தம் அரசால் செய்யப்படுகின்றது. அரசின் இச்செயலானது செல்லுபடியாகுமா என்பதை விளக்குக.

10. 'A' has been arrested under the Goon das Act as his presence in the society is dangerous to law and order. But under the relevant Act, he can be arrested if his presence is against public order. 'A' contends that he can be detained only when his presence is against public order. But he is detained on the gtuund of law and order. Government contends that law and order and public order or one and the same. Decide.

'A' என்பவர் சமுதாயத்தில் இருப்பது சட்டம் ஒழுங்கை பாதிக்கும் என்று குண்டர்கள் சட்டத்தில் கைது செய்யப்பட்டார். ஆனால் குண்டர்கள் சட்டத்தில் ஒருவர் சமூகத்தில் இருப் பது பொது அமைதியைப் பாதித்தால் மட்டுமே கைது செய்யப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது என்று 'A' என்று வாதிட்டார். சட்டம் ஒழுங்கு மற்றும் பொது அமைதி இரண்டுமே ஒன்று தான் என அரசு வாதிடுகிறது. முடிவு செய்க.

11. Y entered into a contract with Government of India for supplying tea cups to many government canteens. According to the rules the agreement is to be signed by the section officer on behalf of the Piesident of India. But the agreement was signed by Y and an assistant section officer Y supplied tea cups. Later the government refused to release the amount stating that since the agreement is signed by assistant section officer, the authorized person did not sign and hence money cannot be released. Decide the validity of the government contract.

அரசு உணவகங்களிடம் தேயிலைப் பருகும் குவளைகள் விநியோகம் செய்ய 'Y' என்பவர் அரசிடம் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டார். விதிகளின்படி ஒப்பந்த ஆவணங்களில் குடியரசுத் தலைவரின் சார்பாகப் பிரிவு அலுவலர் கையொப்பம் இட வேண்டும். ஆனால் இங்கு துணைப் பிரிவு அலுவலர் கையொப்பமிட்டார். 'Y' குவளைகளை விநியோகம் செய்தார். இது விதிகளுக்கு முரண்பட்டது. எனவே மதிப்புத் தொகையை அளிக்க இயலாது என்று அரசுத் தரப்பு கூறியது. அரசு ஒப்பந்தத்தின் செல்லுந் தன்மையை முடிவு செய்க.

12. Maintenance work was done at the Kolkata cricket stadium with thousand workers to conduct the world cricket match. The matches were over, but the workers were not given their wages. Seeing the plight of the workers an NGO called Peoples Union for Democratic Rights filed a writ petition on behalf of the workers for the release of wages. Govt. contends that PUDR has no locus standi to file this case. Decide quoting decided case laws.

உலக கிரிக்கெட் போட்டி நடத்துவதற்காக கொல்கத்தா கிரிக்கெட் விளையாட்டு அரங்க மானது ஆயிரம் பணியாளர்களால் புனரமைக்கப்பட்டு பின்பு போட்டியும் நடந்து முடிந்தது. ஆனால் இப்பணியாளர்களுக்கான கூலி வழங்கப்படவில்லை. இவர்களுக்காக மக்கள் ஜன நாயக உரிமைக் கழகம் என்ற அரசு சாரா அமைப்பு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. பாதிக்கப்பட்டவரே வழக்கு தொடர முடியும் என்றும், மேலும் இவ்வமைப்பு எவ்வகையிலும் பாதிக்கப்படவில்லை என்றும் அரசு கூறுகின்றது. முடிவு செய்யப்பட்ட வழக்குகளுடன் தீர்மானிக்கவும்.

(For the candidates admitted from 2009-2010 onwards)

B.L. DEGREE EXAMINATION, MAY 2017

(Three Year Regular Course)

Fourth Semester/Second Year

ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்க

1. Give an account of the development and the importance of Administrative law.

நிருவாக முறைச் சட்டத்தின் வளர்ச்சியையும், அதன் முக்கியத்துவத்தையும் மதிப்பீடு செய்க.

2. Discuss the law relating to judicial control of discretionary powers.

நிருவாகத்தின் உளத் தேர்வு அதிகாரத்தின் மீது நீதிமன்றங்களின் கட்டுப்பாடுகள் பற்றிய சட்டக் கூறுகளை விவாதிக்க.

3. "Bias vitiates all quasi-judicial proceeding" - Critically analyse the statement in the light of decided cases.

"மனச்சாய்வு நீதிப் போல்வு செயல் நடவடிக்கைகளைச் சீரழிக்கிறது" – தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் கண்ணோட்டத்தில் இக்கூற்றைத் திறனாய்வு செய்க.

4. "The rule of non enforceability of administrative directions is very well established" - Explain pointing out the exceptions if any.

"நிருவாக முறை ஏவுரைகளைச் செயலுறுத்தாமைப் பற்றிய விதி மிக நன்றாக நிலை நிறுத்தப்பட்டு விட்டது" – விளக்கவுரையுடன் விதிவிலக்குகள் இருப்பின் அவற்றையும் குறிப்பிடுக.

5. What is meant by Ouster clause? Examine how the court construes Ouster clauses.

ஆள்வரை விலக்கல் வகையம் என்பதனால் அறியப்படுவன யாது? அவ்வகையங்கள் எவ்வாறு நீதிமன்றங்களில் கருதப்படுகின்றன என்பதை ஆராய்க.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short notes on EIGHT of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Institutional decision.
அமைப்பமைத் தீர்ப்புகள்

(b) Mala fide.
தீய எண்ணம்

(c) Post decisional hearing.
தீர்ப்பிற்கு பின் கேட்டல்

(d) Alternate remedy
மாற்றுத் தீர்வழி

(e) Domestic tribunal
உள்ளகத்துத் தீர்ப்பாயம்

(f) Sovereign function
இறைமைச் செயல்

(g) Ramana Dayaram Shetty V International Airport authority.
ரமண தயாராம் ஷெட்டி எதிர். பன்னாட்டு வானூர்தி முனைய அமைவம்

(h) S.P. Gupta V Union of India
எஸ்.பி. குப்தா எதிர். ஒன்றியத்து இந்திய அரசு

(i) Ridge V Baldwin
ரிட்ஜ் எதிர் பால்ட்வின்

(j) State of Rajasthan V Vidhyawathi
ராஜஸ்தான் அரசு எதிர். வித்யாவதி

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.
பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Tamil Nadu Real estate Regulation act empowered the revenue secretary to prohibit any publication of advertisement by Real Estate Agencies to invest money for purchasing plots developed by them in order to earn manifold returns. No guidelines were formulated for the exercise of power by the revenue secretary. A Real Estate Company challenged this provision as invalid. Decide.

தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ் ரியல் எஸ்டேட் முகமைகள் தாங்கள் மேம்படுத்திய மனைகளை வாங்கி பண முதலீடு செய்து பன்மடங்கு லாபம் பெறும்படி பொதுமக்களைத் தூண்டிவிடும் விளம்பரங்களைத் தடை செய்யும் அதிகாரம் வருவாய் துறை ஆணையருக்கு அளிக்கப்பட்டிருந்தது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் ஏதும் இந்தச் சட்டத்தில் கொடுக்கப்படவில்லை. ரியல் எஸ்டேட் நிறுமம் ஒன்று இச்சட்டம் செல்லுந்தன்மையற்றது என மறுதளித்து வழக்கிட்டது. முடிவு காண்க.

8. A student was permitted to write University examination at the end of the course. The University cancelled his examination on the ground that he was admitted to the examination inspite of shortage of attendance. The student approached the High Court. Deeide.

மாணவர் ஒருவர் படிப்பு முடிந்து நடைபெறும் பல்கலைக்கழகத் தேர்வுகள் எழுத அனுமதிக்கப்பட்டார். அவர் வகுப்பிற்குப் போதிய வருகை புரியாததால் அவர் எழுதிய பல்கலை தேர்வை, பல்கலைக் கழகம் ரத்து செய்து விடுகிறது. அம்மாணவர் உயர்நீதி மன்றத்தினை அணுகினார். முடிவு காண்க.

9. The Chairman of the electricity board dismissed an employee. The order was challenged before the board by the employee. The chairman was an ex-officio member of the board. The board confirmed the order of the chairman. The employee challenged the Board's order. Will he succeed?

மின்சார வாரியம் ஒன்றின் தலைவர் பணியாளர் ஒருவரை பணி நீக்கம் செய்கிறார். இந்த ஆணையை மறுதளித்து பணியாளர் வாரியத்திற்கு முறையீடு செய்கிறார். அவ்வாரியத்தில் வாரியத்தின் தலைவர் அதன் பதவி வழி உறுப்பினராக உள்ளார். மின்சார வாரியம் வாரியத் தலைவரின் ஆணையினை உறுதி செய்கிறது. பணியாளர் மின்சார வாரியத்தின் ஆணையினை மறுதளிக்கிறார். அவர் வெற்றி பெறுவாரா?

10. John, an accused in a murder case was arrested by the police. While in jail, due to previous enemity some of his adversaries entered the jail and hurled bombs on John, leading to his death. His wife claimed compensation. Advise.

கொலைக் குற்றம் சாட்டப்பட்ட ஜான் என்பவர் காவல் துறையினரால் கைது செய்யப் பட்டார். அவர் சிறைக் காவலில் இருக்கும் போது முன்பகை காரணமாக அவரது எதிரிகள் சிலர் சிறைச்சாலைக்குள் புகுந்து ஜான் மீது குண்டு வீசியதால் அவர் இறந்தார். அவரது மனைவி இழப்பீடு கோருகிறார். ஆலோசனை வழங்குக.

11. Samuel, a sub-registrar working in registration department was allowed to retire. After few months, his involvement in under valuation of a land came to light. Registration department initiated disciplinary action against Samuel. Advise.

பத்திரப் பதிவுத் துறையில் சார்புப் பதிவாளராக பணியாற்றிய சாமுவல் என்பவர் ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டார். சில மாதங்களுக்குப் பின்னர், நிலம் ஒன்றினைக் குறைத்து மதிப்பீடு செய்த செயலில் அவரும் பங்கு பெற்றார் என்பது தெரிய வந்தது. பத்திரப் பதிவுத்

துறை அவர் மீது ஒழுங்கு நடவடிக்கையினைத் தொடங்கியது. ஆலோசனை வழங்குக.

12. A student was caught in the examination hall for using unfair means. His examination result was cancelled by the school authority without giving sufficient opportunity of hearing. The student challenged the order. Decide.

தேர்வு மையத்தில் நேர்மையற்ற வழியினைப் பயன்படுத்தியதாக ஒரு மாணவர் பிடிபட்டார். போதுமான கேட்டல் வாய்ப்பு அளிக்காமல் பள்ளி நிருவாகம் அந்த மாணவருடைய தேர்வு முடிவினை ரத்து செய்தது. பள்ளி நிருவாகத்தின் செயலை அம்மாணவர் மறுதளிக்கிறார். முடிவு காண்க.

(For the candidates admitted from 2009-2010 onwards)

B.L./LL.B. DEGREE EXAMINATION, NOVEMBER 2017

(Three Year Regular Course)

Fourth Semester/Second Year

ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்க

1. "The modern concept of the rule of law is wider than the concept formulated by Dicey" - Elucidate.

"சட்ட ஆட்சி பற்றிய நவீன கால கருத்தமைவு டைசியால் வடிவமைக்கப்பட்ட கருத்தமைவை விட விரிவானது" – விளக்கவுரை தருக.

2. Explain the permissible limits of delegation of legislative power with decided cases.

சட்டமியற்றும் அளிப்படையில் அனுமதிக்கப்படும் வரையறைகளை முக்கிய வழக்குகளுடன் விளக்குக.

3. "The dividing line between administrative power and Quasi judicial power is quite thin and is being gradually obliterated". Comment.

"நிருவாக முறை அதிகாரங்கள் மற்றும் நீதிமுறைப் போல்வு அதிகாரங்களைப் பிரித்துக் காட்டும் எல்லைக்கோடு மிகவும் மெல்லியதாகும். மேலும் அது படிப்படியாக மறைந்து வருகின்றது" – கருத்துரை வழங்குக.

4. Examine the scope of Estoppel Res judicata in administrative decisions.

நிருவாக முறை தீர்ப்புகளில் முரண்தடை மற்றும் முன் தீர்ப்புத் தடை ஆகியவற்றின் அளாவுகையை ஆய்வு செய்க.

5. Highlight the significance of the Writ of Certiorari as a means of control of administrative action.

நிருவாகத் துறைச் செயலகைக் கட்டுப்படுத்தும் ஒரு வழிவகையாக நெறிமுறை உறுத்தும் நீதிப் பேராணை அமைவதின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short notes on EIGHT of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் தருக.

(a) Acting mechanically.
அறிவுத் திறனற்ற செயல்

(b) Lokpal
லோக்பால்

(c) Speaking orders
பேசுமாணைகள்

(d) Conseil d'Etat
கான்சில் தி இதாத்

(e) Writ of Quo warranto
தகுதி வினவும் நீதிப்போராணை

(f) Crown privilege
அரசின் சிறப்புரிமை

(g) Committee on subordinate legislation
சார்பு சட்டமியற்றும் குழு

(h) Rudul Sah Vs State of Bihar
ருதுல் ஷா எதிர். பீஹார் அரசு

(i) Donoughmore Committee
டான்க்மோர் குழு

(j) People Union for Demociatic Rights Vs Union of India
மக்கள் ஜனநாயக உரிமைக் கழகம் எதிர். ஒன்றிய இந்திய அரசு

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.
பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A PWD contractor was blacklisted by government on the ground that there were reports that the contractor did not construct another building as per guidelines. The contractor challenged the action of the government on the ground that he was not given an opportunity to show cause. The government replied that it was free to enter into contract with whomsoever it likes and so there is no obligation to provide an opportunity - Decide.

பொதுப் பணித்துறை ஒப்பந்தகர் ஒருவர் வழிகாட்டு நெறிமுறைகள்படி வேறொரு கட்டடம் ஒன்றினை கட்டவில்லை என்ற அடிப்படையில் அரசு அந்த ஒப்பந்தகரை பொதுப் பணித் துறை ஒப்பந்தகர் பட்டியலிலிருந்து நீக்கியது. காரணம் காண்பிப்பதற்கு உரிய வாய்ப்பு அளிக்க வில்லை என்று ஒப்பந்தகர் அரசன் செயலை மறுதலித்து வழக்கு ஒன்று முன்னிட்டார். அதற்கு அரசானது யாருடன் வேண்டுமானாலும் ஒப்பந்தம் செய்வதற்கு அரசிற்கு உரிமையுள்ளது

என்றும், காரணம் காண்பிப்பதற்கு உரிய வாய்ப்பு வழங்கத் தேவையில்லை என்றும் அரசு தரப்பில் பதிலளிக்கப்பட்டது. முடிவு காண்க.

8. A state financial corporation promised to advance a loan of Rs. One crore to a hotel company to execute a project of setting up a Star Hotel. Acting on the promise the hotel company started the construction. But after payment of a few instalments the State Financial Corporation failed to pay the full loan amount. Provide legal advice to the Hotel Company.

மாநில நிதிக் கழகம் ஒன்று தங்கும் விடுதி நிறுவனம் ஒன்றிற்கு தங்கும் நட்சத்திர விடுதி கட்டும் திட்டத்திற்கு ரூபாய் ஒரு கோடி கடன் தொகை வழங்குவதாக உறுதியளித்தது. அவ்வுறுதியின் அடிப்படையில் அந்நிறுவனம் கட்டுமானப் பணிகளைத் தொடங்கியபது. ஆனால் சில தவணைத் தொகையை மட்டும் வழங்கிய பின்னர், அம்மாநில நிதிக் கழகம் முழு கடன் தொகையையும் வழங்கத் தவறி விட்டது. தங்கும் விடுதி நிறுவனத்திற்குச் சட்ட ஆலோசனை வழங்குக.

9. A private bus owner has more than ten bus routes to ply buses. There was some general allegations that the buses did not operate in time. Transport authorities cancelled all his permits. Advise him.

ஒரு தனியார் பேருந்து உரிமையாளர் பத்திற்கும் மேற்பட்ட வழித்தடங்களில் பேருந்தை ஓட்டுவதற்கு உரிமம் பெற்றிருந்தார். பேருந்துகள் நேரத்திற்கு ஓடவில்லை என்ற பொதுப்புகார் இருந்தன. போக்குவரத்து அலுவலர்கள் அவரது அனைத்து வழித்தட உரிமத்தையும் ரத்து செய்தனர். அவருக்கு ஆலோசனை வழங்குக.

10. The candidates at a school examination at one centre indulged in mass copying. The examination board cancelled the examinations of all the subjects at the centre concerned without providing an opportunity of hearing. Decide.

பள்ளித் தேர்வு ஒன்றில் குறிப்பிட்ட தேர்வு மையத்தில் பெரும்பாலான மாணவர்கள் தேர்வு முறையறு செயலில் ஈடுபட்டு பார்த்து எழுதினார்கள். மாணவர்களுக்கு வாய்ப்பளிக்காமல் தேர்வு வாரியமானது அந்த மையத்தில் நடைபெற்ற எல்லா பாடங்களுக்கான தேர்வுகளையும் ரத்து செய்தது. முடிவு காண்க.

11. Rose, a girl student, was provisionally admitted in the law degree course in a government college under eminent sports category. After admission, she did not participate in the sports events conducted at the Univeisity level. Principal at the college cancelled her admiss ion without hearing. Decide.

ரோஸ் என்ற மாணவி ஒருவர் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டில் அரசு கல்லூரி ஒன்றில் சட்டப் படிப்பில் சேர்ந்தார். சேர்க்கைக்குப் பின்னர் அம்மாணவி பல்கலைக் கழக அளவில் நடைபெற்ற எந்த விளையாட்டு போட்டிகளிலும் கலந்து கொள்ளவில்லை. அவரைக் கேட்டறியாமல் அவளது சேர்க்கையினை கல்லூரி முதல்வர் ரத்து செய்தார். முடிவு காண்க.

12. The Appellate commissionèr of sales tax hearing an appeal from the order of sates tax officer decides against the assessee after giving elaborate reasons. The Sales Tax Appellate Tribunal confirmed the order of the Appellate Commissioner without giving reasons. Decide.

வணிக வரி அலுவலரின் ஆணைக்கு எதிராக எழும்பிய மேல்முறையீட்டில் வணிக வரி மேல்முறையீட்டு ஆணையர் வரி விதிக்கப்பட்டவருக்கு எதிராக விரிவாகக் காரணங்கள்

கொடுத்துத் தீர்ப்பளிக்கிறார். வர்த்தக வரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் காரணம் ஏதும் காட்டாது மேல்முறையீட்டு ஆணையரின் ஆணையை உறுதி செய்தது. முடிவு செய்க.

(For the candidates admitted from 2009-2010 onwards)

B.L./LL.B. DEGREE EXAMINATION, MAY 2018.

(Three Year Regular Course)

Second Year - Fourth Semester

ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்க

1. "The rules of natural justice are not fixed one but they may vary depending upon the fact and circumstances of each ease". Explain the above statement with the help of leading cases.

"இயற்கை நீதியின் விதிகள் நிரந்தரமானவையல்ல. அவை ஒவ்வொரு வழக்கின் தன்மைகளை பொறுத்து மாறுபடும்" – மேற்கூறிய கூற்றினை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் மூலம் விவரிக்கவும்.

2. Discuss absolute discretion. Explain the attitude of the Judiciary to such discretion vested in administrative authorities?

நிகர் அற்ற விருப்புரிமையை விவரி. அப்படிப்பட்ட விருப்புரிமை உள்ள நிருவாகத்தினிடம் நீதிமன்றத்தின் அணுகுமுறை எவ்வாறு உள்ளது என்பதை விவரி.

3. Discuss the reasons for the creation of public corporations. Explain how does parliament control public corporations.

பொது நிறுவனங்கள் உருவாக்கப்படுவதற்கான காரணங்களை விவரி. பாராளுமன்றம் எவ்வாறு பொது நிறுவனங்களைக் கட்டுப்படுத்துகிறது என்பதை விளக்கவும்.

4. Examine the permissible limits on the delegated legislative power in India with the help of decided cases.

இந்தியாவில் ஒப்படைவு விதியாக்க அதிகாரத்தின் அனுமதிக்கப்பட்ட எல்லையினை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கொண்டு ஆய்வு செய்க.

5. Explain the importance of Administrative Tribunals in speedy disposa1 of cases.

வழக்குகளை வேகமாக முடிவுக்கு கொண்டு வருவதில் நிருவாகத் தீர்ப்பாயங்களின் முக்கியத்துவத்தை விளக்குக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short notes on EIGHT of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் தருக.

(a) Speaking order
காரணத்தோடு கூடிய ஆணை

(b) Administrative directions
நிருவாக ஏவுரைகள்

(c) Official Bias
அலுவல் சார் மனச்சாய்வு

(d) Quasi Judicial function
நீதிப் போல்வுச் செயல்கள்

(e) Franks Committee
பிராங்க்ஸ் குழு

(f) Lokayuktha
லோக யுக்தா

(g) Injunction
உறுத்துக் கட்டளை

(h) New Despotism
புதிய எதேச்சதிகாரம்

(i) Promissory estoppel
உறுதிமொழி முரண்தடை

(j) Alternate remedy
மாற்றுத் தீர்வழி

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The Bombay Police Act 1951 gave power to the Commissioner of police U/S 33 (1) of the Act to grant permission for the conduct of assemblies and processions on and along the streets. Rule 7 was made by him which provides that his prior permission is necessary before conducting meeting etc. This was challenged before the court. Decide.

பாம்பே போலீஸ் சட்டம் 1951 காவல்துறை ஆணையருக்கு பிரிவு 33(1)–ன்படி கூட்டம் மற்றும் ஊர்வலம் நடத்த அனுமதி வழங்கும் அதிகாரத்தை அளித்தது. விதி 7–னை இயற்றி ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டம் நடத்த தன்னிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்று வரையறுக்கிறார். இதனை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு எதிர்க்கப்படுகிறது. முடிவு காண்க.

8. State Govt, appointed a committee to select books for the libraries of schools and colleges. The committee selected books written by the same committee members. Those authors books were not selected challenged this derision. Decide.

பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் நூலகங்களுக்கு புத்தகங்களை தேர்ந்தெடுத்து வாங்குவதற்காக ஒரு குழுவை மாநில அரசு நியமித்தது. இந்தக் குழுவின் உறுப்பினர்கள் சிலர் அவர்கள் எழுதிய புத்தகங்களையே தேர்ந்தெடுத்தனர். தங்கள் புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப்படாத புத்தக ஆசிரியர்கள் குழுவின் முடிவை எதிர்க்கின்றனர். தீர்மானிக்கவும்.

9. Nawab Hussain is a sub-inspector of police. He was dismissed from service by D.I.G. of police. He filed a writ petition and the same was dismissed by the High Court. Now he wants to file a civil suit on the ground that I.G.P. is the competent authority and not D.I.G. to dismiss him from service. Advise Nawab Hussain.

நவாப் உசேன் என்பவர் சார்பு ஆய்வாளராகப் பணியாற்றுகிறார். அவரை பணி நீக்கம் செய்து காவல் துறை ஆணை ஆய்வாளர் உத்தரவிடுகிறார். இந்த உத்தரவினை எதிர்த்து நவாப் உசேன் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்கிறார். அதனை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து விடுகிறது. இப்பொழுது அவர் ஒரு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து அதில் தன்னை பணி நீக்கம் செய்யும் அதிகாரம் I.G.P.க்கு மட்டுமே உள்ளது. D.I.G.க்கு அதிகாரமில்லை என வாதிட விரும்புகிறார். ஆலோசனை நவாப் உசேனுக்கு வழங்குக.

10. A lecturer in a Government college filed a complaint with the principal against a student for his misbehaviour in the class-room. An enquiry committee was constituted. After enquiry the college expelled the student. He filed a case on the ground that he was not given opportunity to cross examine the lady lecturer. Will he succeed?

ஒரு பேராசிரியர் வகுப்பு அறையில் மாணவனின் தவறான நடவடிக்கை குறித்து கல்லூரி முதல்வரிடம் முறையீடு ஒன்றினை தாக்கல் செய்கிறார். ஒரு விசாரணைக் குழு அமைக்கப் படுகிறது. விசாரணைக்குப் பிறகு அம்மாணவன் கல்லூரியிலிருந்து நீக்கப்படுகிறார். மாணவன் வழக்கு தாக்கல் செய்து தனக்கு அப்பேராசிரியயையை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கவில்ல என வாதிடுகிறார். அவர் வாதத்தில் வெல்வாரா?

11. Kannan is an employee of the Government of Tamilnadu. Disciplinary proceedings have been initiated against him. He requires his service register which is in the custody of the state to prove his innocence. The state replies that since the service register is relating to the affairs of the state it cannot be disclosed to Kannan - Decide.

கண்ணன் என்பவர் தமிழ்நாடு அரசின் ஊழியராவார். அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவர் தான் நிரபராதி என்பதை நிரூபிக்க அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தனது பணிப் பதிவேட்டை கேட்கிறார். பணிப் பதிவேடானது அரசு விவகாரத்தைக் குறித்ததால் அதனை கண்ணனுக்கு காட்ட இயலாது என்று அரசு கூறுகின்றது. முடிவு செய்க.

12. Under section 37 of the Payment of Bonus Act 1965, power was given to the Central govt. to remove doubt or difficulties in giving effect to the provisions of the Act. This was challenged before the court. Decide.

பிரிவு 37, 1965 ஆம் ஆண்டு போனஸ் சட்டத்தின்படி மத்திய அரசுக்கு அந்த சட்டத்தினை செயல்படுத்தும் போது ஏற்படும் சந்தேகம் அல்லது இடர்பாடுகளை விலக்கிக் கொள்ள அதி காரம் அளிக்கப்படுகிறது. இந்த செயலானது நீதிமன்றத்தின் முன் எதிர்க்கப்படுகிறது. முடிவு செய்க.

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

B.L./LL.B. DEGREE EXAMINATION, NOVEMBER 2018

(Three Year Regular Course)

Second Year - Fourth Semester

ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்க

1. Discuss various types of delegated legislation and the validity of sub-delegation.

சட்டமியற்றும் அளிப்படைவு வகைகளை விவாதித்து, சார்பு அளிப்படைவு என்பது ஏற்கத் தக்கதா என்பதையும் விவாதிக்கவும்.

2. Examine the application of the principle of Natural Justice with decided cases.

தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் இயற்கை நீதி நெறிகளின் செயல்பாட்டினை ஆய்வு செய்க.

3. State the kinds of writs and analyse the writ of Hebeas Corpus.

நிர்வாகச் செயல்பாட்டில் நீதித்துறையின் சீராய்வின் தன்மை மற்றும் அதன் நோக்கெல்லை பற்றி விளக்குக.

4. Explain the scope and meaning of Judicial review under Administrative Process.

நிர்வாகச் செயல்பாட்டில் நீதித்துறையின் சீராய்வின் தன்மை மற்றும் அதன் நோக்கெல்லை பற்றி விளக்குக.

5. Explain the merits and demerits of the Administrative Tribunal.

நிர்வாகத் தீர்ப்பாயத்தின் மேன்மைகளையும், மேன்மையின்மைகளையும் விளக்குக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short notes on EIGHT of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Rule of Law
சட்டத்தின் ஆட்சி

(b) Doctrine of Exessive Delegation
மிகை அளிப்படைவு கோட்பாடு

(c) L. Chandra Kumar v. Union of India
எல். சந்திரகுமார் எதிர். இந்திய அரசு

(d) Ombudsman
குறை தீர்ப்பாளர்

(e) Discretionary Power
உளத் தேர்வு ஆற்றல்

(f) Doctrine of separation of Powers
அதிகாரப் பகிர்வு கோட்பாடு

(g) Lok pal and Lok Ayuktha
லோக்பால் மற்றும் லோக் அயூக்தா

(h) Writ of Mandamus
செயலுறுத்தும் நீதிப் பேராணை

(i) Quasi — Judicial function.
போல்வு நீதியமை செயல்பாடு

(j) Henry VIII clause
எட்டாம் ஹென்றி விதி

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Nagaraj challenged an ordinance issued by Govt. of Andhra Pradesh in which superannuation age was reduced with mala fide intention. Whether Nagaraj will get the remedy from the court — Decide.

நாகராஜ் என்பவர் ஆந்திர அரசின் அவசர சட்டத்தை எதிர்த்து வழக்கிடுகிறார். அதில் அரசு ஊழியரின் பணி ஓய்வு காலம் தீய நோக்க அடிப்படையில் குறைக்கப்பட்டதாகக் கூறுகிறார். அவருக்குரிய தீர்வழியை தீர்மானிக்க.

8. A committee was set up for selection of books for educational institutions in which one of the member himself was author of a selected book. Whether such process is valid — Decide.

கல்வி நிலையங்களுக்கு புத்தகங்கள் வழங்கிட ஒரு தெரிவு குழு அமைக்கப்பட்டது. அதில் அக்குழுவின் நபர் ஒருவரால் எழுதப்பட்ட நூலும் தெரிவு செய்யப்பட்டது. இச்செயல் முறை செல்லுந்தன்மையுடையதா? தீர்மானிக்க.

9. Rama Sugar Industries challenged Govt. order, to exempt any new sugar factory from the payment of tax for a period of 3 years. The Govt. said that the order issued by way of policy decision — Decide the validity of the order and whether the industry will succeed.

இராமா சர்க்கரை ஆலை அரசின் ஆணையை மறுதளித்து முறையிடுகிறது. அதில் புதியதாக தொடங்கும் சர்க்கரை ஆலைகளுக்கு மூன்றாண்டு வரி விலக்கு அளித்து அரசு ஆணைப் பிறப்பித்தது. இவ்வாணை மக்கள் நலனின் அடிப்படையில் முடிவு எடுக்கப்பட்டது என அரசு வாதிட்டது. ஆணையின் உறுதி தன்மையை தீர்மானித்து இச்சர்க்கரை ஆலை

இவ்வழக்கில் வெற்றி பெறுமா எனவும், தீர்மானிக்க.

10. A piece of land originally reserved for public park but subsequently such land was allotted to a Private Trust for the construction of nursing home. Decide the validity of such transfer of ownership by the Govt.

ஒரு குறிப்பிட்ட இடம் முதலில் பொது மக்கள் பயன்படுத்தும் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்டது. பின்னர் தனியார் மருத்துவமனை கட்டுவதற்கு தனியாரது அறக்கட்டளைக்கு அரசு ஒதுக்கியது. இந்நில உரிமை மாற்றத்தின் செல்லுந்தன்மையை தீர்மானிக்க.

11. Nandakumar (P) Ltd., Company, entered into a contract with Railway Board. The Board authorised its Director to enter into a contract on behalf of the President of India. But the contract was entered by the Secretary of Railway. The company contract was challenged — Decide the validity of the Contract.

நந்தகுமார் (தனியார்) நிறுவனம் இருப்பூர்தி ஆணையத்திடம் ஒரு ஒப்பந்தம் செய்கிறது. அவ்ஒப்பந்தத்தின்படி அதன் இயக்குநர் குடியரசுத் தலைவர் சார்பாக கையொப்பமிடலாம். இருப்பூர்தி ஆணையத்தின் இயக்குநருக்கு பதிலாக அதன் செயலர் ஒப்பந்தமிடுகிறார். ஒப்பந்தத்தின் செல்லுந் தன்மையை தீர்மானிக்க.

12. The Central Board of Excise and Customs granted exemption to certain goods from payment of duty. Subsequently the said benefit was cancelled — Is it promissory estoppel — Decide.

மத்திய கலால் மற்றும் சுங்கவரி ஆணையம் ஒரு சில பொருட்களுக்கு வரிவிலக்கு அளித்து ஆணையிட்டது. பின்னர் அதனை ரத்து செய்து விட்டது. இது முரண்தடையாகுமா? முடிவு செய்.

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

(For the candidates admitted during 2017 - 2018)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, MAY 2019.

(Three year Regular Course)

Second Year - Fourth Semester

ADMINISTRATIVE LAW

PART A - (2 x 12 = 24 marks)

Time : **2½ hours** Maximum : **70 marks**

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define 'Administrative Law'. Distinguish it from Constitutional law.

'நிர்வாகவியல் சட்டம்' வரையறு. அதனை அரசியலமைப்பு சட்டத்தில் இருந்து வேறுபடுத்துக.

2. "The Legislature picvides the gun and prescribes the target, but leaves to the

executive the task of pressing the trigger" - Discuss.

"சட்டமியற்றும் பிரிவு துப்பாக்கியையும், இலக்கையும் கொடுத்து விட்டு துப்பாக்கியின் விசையை இழுத்து விடும் அதிகாரத்தை செயலாக்க பிரிவிடம் விட்டு விடுகின்றது" – விவாதிக்க.

3. "No man shall be judge in his own Case" — Discuss with decided cases.

"ஒருவர் தன்னுடைய வழக்கில் தானே நீதிபதியாக இருக்க முடியாது" – தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கொண்டு விவாதிக்கவும்.

PART B - (2 x 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்,
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Discuss the liabilities of state for the torts committed by its servants in India.

இந்தியாவில் அரசு அலுவலர்களின் மூலம் ஏற்படும் தீங்கிற்கு அரசுக்குள்ள பொறுப்பு நிலையை விவாதிக்க.

5. "The theory of absolute separation of powers is not possible in the modern welfare state"—Discuss with Constitutional provisions.

"தற்கால மக்கள் நல அரசில் முழுமையான அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு என்பது சாத்தியமற்றது" – அரசியலமைப்பு வகையங்களுடன் விளக்குக.

6. Write a note on the historical development of the ombudsman system in India.

இந்தியாவில் ஆம்புட்ஸ்மேன் முறையின் வளர்ச்சி குறித்த வரலாற்றைப் பற்றி குறிப்புரை எழுதுக.

PART C - (5 x 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Alternate remedy
மாற்றுப் பரிகாரம்

(b) Administrative Tribunal
நிர்வாக தீர்ப்பாயம்

(c) Public Corporation
பொதுக் கூட்டமைப்பு

(d) Henry VIII clause
எட்டாம் ஹென்றி விதி

(e) Res judicata in administrative decisions
நிர்வாகத் தீர்ப்புகளில் முன் தீர்ப்புத் தடை

(f) Non-application of mind
கவனம் செலுத்தாமை

(g) Hiranath Misra v. Rajendra Medical College, Ranji.

ஹிராநாத் மிஸ்ரா எதிர். இராஜேந்திரா மருத்துவக் கல்லூரி, ராஞ்சி.

PART D - (2 x 6 = 12 marks)

Answer **TWO** of the following referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' was arrested unlawfully. His friend filed an application for Writ of Habeas corpus. The sanie was challenged on the ground of locus standi - Decide.

'A' என்பவர் சட்ட விரோதமாக கைது செய்யப்படுகின்றார். அவருடைய நண்பர் ஆட் கொணர்வு நீதிப் பேராணை மனு தாக்கல் செய்கின்றார். அந்த மனுவானது வழக்குரைக்கும் உரிமை அடிப்படையில் எதிர்க்கப்படுகிறது. தீர்மானிக்க.

9. Air India is exercise of its statutory powers has framed service rules according to which the service of Air Hostess can be terminated on her first pregnancy. Decide the validity of the rule.

ஏர் இந்தியா நிறுவனம் தனது சட்டத்தால் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் உருவாக்கப் பட்ட பணி விதிகளின்படி, ஒரு விமானப் பணிப் பெண் முதல் கருவுற்ற உடன் பணி நீக்கம் செய்யப்படுவார் என்ற விதியினை இயற்றியது. இந்த விதியின் செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

10. Against the orders passed by the EPF authorities Mr. Sundar filed a writ petition before the High Court. The writ petition was dismissed on merits. He filed another writ petition against the same order with some additional grounds. Decide.

திரு. சுந்தர் என்பவர் இ.பி.எப். அதிகாரிகள் பிறப்பித்த உத்தரவிற்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் ஒரு நீதிப்பேராணை மனு தாக்கல் செய்கின்றார். அந்த மனு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்படுகிறது. அவர் மீண்டும் அந்த உத்தரவினை எதிர்த்து சில கூடுதல் காரணங்களுடன் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்கிறார். தீர்மானிக்க.

(For the candidates admitted during 2017 - 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, NOVEMBER 2019.

(Three year Regular Course)

Second Year - Fourth Semester

ADMINISTRATIVE LAW

PART A - (2 x 12 = 24 marks)

Time : **2½ hours** Maximum : **70 marks**

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the principles of Audi Alteram partem referring to decided cases.
தரப்பினரை கேட்டல் என்ற கோட்பாட்டை முடிவுற்ற வழக்குகளைக் கொண்டு விவாதிக்க.

2. Explain the merit and demerits of delegated legislation.
ஒப்படைவு செய்யப்பட்ட சட்டமியற்றும் அதிகாரங்களின் நன்மை மற்றும் தீமைகளை விளக்குக.

3. Define 'Administrative Law'. Discuss its growth in India and England.
"நிர்வாகச் சட்டம்"வரையறு. இந்தியா மற்றும் இங்கிலாந்தில் அதன் வளர்ச்சியை பற்றி குறிப்பிடுக.

PART B - (2 x 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்,
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Discuss the nature and extent of judicial review on administrative discretion.
நிர்வாக உளத்தேர்வு மீது நீதிமுறை மேலாய்வின் அளவு அதன் இயல்பு ஆகியவற்றை விளக்குக.

5. Discuss the contractual liability of the state in India with decided cases.
தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கொண்டு இந்தியாவில் அரசுக்கான ஒப்பந்த பொறுப்பு நிலையை விவாதிக்க.

6. Explain the reasons for the growth of administration tribunals.
நிர்வாக தீர்ப்பாயங்களின் வளர்ச்சிக்கான காரணங்களை விளக்குக.

PART C - (5 x 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Laches
தாமதம்

(b) Types of public corporation
பொதுக் கூட்டமைப்பின் வகைகள்

(c) Ouster of Jurisdiction
அதிகார வரம்பை விலக்கல்

(d) Reasoned decision
காரணங்கள் கொண்ட முடிவு

(e) Sub delegation
துணை ஒப்பளிப்பு

(f) Declaratory action
விளம்புகை நடவடிக்கை

(g) Estoppel
முரண்தடை

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகைகாயங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தருந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A prisoner filed a writ petition in the Supreme Court alleging that unsatisfactory and in human condition were prevailing in the prison. The same was challenged on the ground of locus standi: Decide.

கைதி ஒருவர் சிறையின் உள்ளே உள்ள திருப்திகரமற்ற மற்றும் மனிதாபிமானமற்ற சூழ்நிலையையும் மேற்கோள் காட்டி உச்ச நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்கின்றார். அது வழக்கிடும் உரிமை அடிப்படையில் எதிர்க்கப்படுகின்றது. தீர்மானிக்கவும்.

9. 'X' filed a complaint against 'Y' an advocate for professional misconduct. A disciplinary committee was constituted with 'Z' as Chairman, who has already appeared for 'X' in a case. The enquiry was challenged by 'Y' - Decide.

தொழில்முறை ஒழுக்க கேட்டிற்காக 'Y' என்ற வழக்குரைஞர் மீது 'X' ஒரு புகார் கொடுக்கிறார். 'Z' தலைமையில் ஒரு ஒழுங்கு குழு அமைக்கப்படுகிறது. 'X' –க்காக வேறு ஒரு வழக்கில் 'Z' ஆஜராகியுள்ளார். இதனை மேற்கோள்காட்டி 'Y' அந்த ஒழுங்கு குழுவை எதிர்க்கிறார். முடிவு காண்க.

10. A statute had imposed a contribution of not exceeding 10% of its income on every religious institution payable to the government. This legislation was challenged on the ground that the levy is invalid. Decide.

ஓர் சட்டத்தின் வாயிலாக மத சம்பந்தப்பட்ட அமைப்புகள் அதனுடைய மொத்த வருமானத்திலிருந்து 10% மிகாமல் அரசிற்கு செலுத்த வேண்டுமென கூறப்பட்டிருந்தது. இச்சட்டம் செல்லாதென வழக்கொன்று தாக்கல் செய்யப்படுகிறது. முடிவு காண்க.

(For the candidates admitted during 2017 - 2018 onwards)

LL.B. (SEMESTER) DEGREE EXAMINATION, JANUARY 2021.

(Three year Regular Course)

Second Year / Fourth Semester

ADMINISTRATIVE LAW

PART A - (2 x 12 = 24 marks)

Time : **2½ hours** Maximum : **70 marks**

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "No man shall be a judge of his own cause". Discuss with decided cases.

ஒருவர் தன்னுடைய வழக்கில் தானே நீதிபதியாக இருக்க முடியாது என்ற கோட்பாட்டை

தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கொண்டு விளக்கவும்.

2. Classify the administrative action and Distinguish between administrative function and quasi - judicial function relying on decided case - laws with specific reference to Ridge Vs. Baldwin.

நிர்வாக செயல்பாடுகளை வகைமுறை செய்க மற்றும் ரிட்சு எதிர் பால்டுவின் வழக்கை முக்கியமாகக் குறிப்பிட்டு நிர்வாகச்செயல்பாட்டிற்கும், நீதிபோல்வு செயல்பாட்டிற்குமான வேறுபாட்டினை விளக்குக.

3. What are the privileges and immunities enjoyed by the Government in legal proceeding. Discuss with decided cases.

ஒரு வழக்கு நடவடிக்கையில் அரசாங்கத்தால் அனுபவிக்கப்படுகின்ற சிறப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகள் யாவை? தீர்மானிக்கப்பட்ட வழக்குகள் மூலம் விவாதிக்க.

PART B - (2 x 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்,
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Explain how for the system of Ombudsman is helped in controlling the acts of administrative authorities with special reference to India?

நிர்வாகத்துறையின் செயல்பாடுகளை எந்த அளவிற்கு அம்புட்சுமேன் முறை கட்டுப்படுத்துகிறது என்பதனை இந்தியாவை முக்கியமாகக் கருத்தில் கொண்டு விளக்குக.

5. An account of the parliamentary control of Delegated Legislation - Summarise.

அதிகார ஒப்படைவு குறித்தான பாராளுமன்றக்கட்டுப்பாட்டை தொகுத்து வழங்குக.

6. What are the various kinds of judicial remedies available to a person affected by Administrative actions. Explain with decided cases.

நிர்வாகத்துறையின் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பல்வேறு வகையான நீதிமுறை தீர்வழிகள் யாவை?

PART C - (5 x 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Locus standi in PIL (Public Interest Litigation)
பொதுநல வழக்குகளில் வழக்கீட்டுரிமை

(b) Conseil de etat
கன்சில் தி இதாத்

(c) M.H.George Vs. Union of India
எம்.எச்.ஜார்ஜ் எதிர் இந்திய அரசு

(d) Writ of Habeas Corpus
ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை

(e) Domestic Tribunals

உள்ளடக்குத் தீர்ப்பாயங்கள்

(f) Prominsory Estoppel

உறுதிமொழி முரண்தடை

(g) Franks Committee

பிராங்ஸ் குழு

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட விதிகளங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தருந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A Board is to be constituted to fix the minimum wages to the workers according to the minimum wages Act. The representatives of the workers are to be nominated to the Board according to the Act. The Board was convened without them and minimum wages were fixed. Decide the validity of the fixation wages.

குறைந்தபட்ச ஊதியச்சட்டத்தின்படி குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்ய ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். அக்குழுவில் இச்சட்டப்படி தொழிலாளர்களின் பிரதிநிதிகள் நியமனம் செய்யப்பட வேண்டும். ஆனால் அக்குழு அவ்வாறு பிரதிநிதிகள் நியமனம் செய்யப் படாமல் குறைந்தபட்ச ஊதியத்தை கூடி நிர்ணயம் செய்தது. இவ்வாறு முடிவு செய்யப்பட்டதின் செல்லும் தன்மையை முடிவு செய்யவும்.

9. 'X' brings gold from abroad when it was not prohibited in India. But before he comes to India a regulation was framed and published in the official gazette prohibiting such imports. Hence the gold was seized. He challenges it in the court on the ground that he was not aware of the new rule and it was never been brought to his notice. Decide.

வெளிநாட்டிலிருந்து தங்கம் இந்தியாவுக்கு கொண்டு வருவதற்கு தடை இல்லாத பொழுது 'X' தங்கம் கொண்டு வருகிறார். ஆனால் அவர் இந்தியாவுக்கு வந்து சேரும் முன்னே அதற்குண்டான தடை விதி ஏற்படுத்தப்பட்டு அது அரசாங்க கெஜட்டில் வெளியிடப்பட்டு இருந்தது. அதன்படி அவர் கொண்டு வந்த தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அவர் பறிமுதல் செய்வதை எதிர்த்து வழக்குத்தொடர்கிறார். தங்கம் இந்தியாவுக்கு கொண்டு வருகிறதை தடை செய்த விதி அவருக்குத் தெரியவும் செய்யாது. அவர் அறிமுகத்துக்கு கொண்டு வரப்படவும் இல்லை என்பது அவரது வாதம். தீர்ப்பு வழங்குக.

10. X is detained by the Executive Magistrate claiming that his presence is dangerous to the security of the State. Latter, finding that he was innocent, he was released. Now X claims damages for the illegal detention. Decide.

A ன் செயல்பாடு நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்கும் என ஆட்சித்துறை நடுவரால் காவலில் வைக்கப்பட்டுள்ளார். பின்பு அவர் அவ்வாறு ஆபத்து விளைவிக்காதவர் எனக்கண்டு விடுவிக்கப்பட்டார். தன்னை சட்டத்திற்குப்புறம்பாக காவலில் வைத்ததற்கு A இழப்பீடு கோருகிறார். முடிவு செய்க.

LL.B. (SEMESTER) DEGREE EXAMINATION, FEBRUARY 2022.

(Three year Regular Course)

Second Year / Fourth Semester

ADMINISTRATIVE LAW

PART A - (2 x 12 = 24 marks)

Time : **2½ hours** Maximum : **70 marks**

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically evaluate the concept of Rule of Law as enunciated by Dicey in the context of modern Administrative law.

தற்காலத்திய அரசாட்சி முறை என்ற கட்டத்தில் டைசி என்பவரால் வகுத்துரைக்கப் பட்டுள்ள சட்ட முறைமை என்ற கருத்தை ஆய்வு செய்து மதிப்பிடுக.

2. What are the reasons for the growth of Administrative Tribunals? Differentiate the Administrative Tribunals from the Court.

நிர்வாக தீர்ப்பாயங்களின் வளர்ச்சிக்கான காரணிகள் என்ன? நீதிமன்றத்தில் இருந்து நிர்வாக தீர்ப்பாயங்களை வேறுபடுத்திக்காட்டுக.

3. How far separation of powers theory is incorporated in the Indian and American Constitutions?

அதிகாரப்பிரிவினைக்கோட்பாடு எந்த அளவிற்கு இந்திய மற்றும் அமெரிக்க அரசியலமைப்புச் சட்டங்களில் இடம் பெற்றுள்ளது?

PART B - (2 x 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Discuss with the help of the decided cases, the judicial control over delegated legislation in India.

இந்தியாவில் விதியாக்கத்தின் மீதுள்ள நீதிமன்ற கட்டுப்பாட்டை முடிவுற்ற வழக்குகளின் உதவியோடு விவாதிக்கவும்.

5. What is the role of — Ombudsman in remedying citizens' grievances against the administration?

நிருவாகத்திற்கு எதிராக குடிமக்களின் முறையீடுகளை சரி செய்வதில் "ஆம்புட்ஸ்மேன்" என்பவரின் பங்கு என்ன?

6. Discuss the rights and liabilities of public corporations and the importance of such corporations in the modern Welfare State.

பொது கூட்டுறவமைப்புகளின் உரிமைகள், பொறுப்பு நிலைகள் மற்றும் தற்காலத்தில் ஆக்க நல அரசு ஒன்றில் அவ்வகை கூட்டுருவமைப்புகளின் முக்கியத்துவம் இவைகளை விவாதிக்கவும்.

PART C - (5 x 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Speacking orders
பேசுகின்ற கட்டளைகள்

(b) Procedural ultra vires
செயல்முறை வரம்பு மீறல்

(c) A.K.Kraipak vs. Union of India
A.K.கிரைபாக் எதிர் இந்திய யூனியன்

(d) Lok ayuktha
லோக் யுக்தா

(e) New Despotism
புதிய ஏதேச்சதிகாரம்

(f) Henry VIII Clause
எட்டாம் ஹென்றி பிரிவு

(g) Estoppel
முரண்தடை

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Santhosh was injured by the heap of sand and gravel left on the road by the road contractor. Santhosh filed a suit for damages against the State. Decide citing relevant cases.

சாலை போடும் ஒப்பந்தக்காரரால் சாலையில் போடப்பட்டிருந்த மணல் மற்றும் சரளைக் கல் குவியல் ஒன்றினால் சந்தோஷ் காயம் அடைந்தார். அரசிற்கு எதிராக இழப்பீடு கோரி சந்தோஷ் ஒரு வழக்கு தொடர்ந்தார். தொடர்புடைய வழக்குகளை குறிப்பிட்டு தீர்மானிக்கவும்.

9. State Government appointed a committee to select books and purchase for the libraries of schools and colleges. Some of the committee members selected books written by the same committee members. Those authors whose books were not selected challenged this decision. Decide.

பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் நூலகங்களுக்கு புத்தகங்களை தேர்ந்தெடுத்து வாங்குவதற்காக ஒரு குழுவை மாநில அரசு நியமித்தது. இந்தக் குழுவின் உறுப்பினர்கள் சிலர் அவர்கள் எழுதிய புத்தகங்களையே தேர்ந்தெடுத்தனர். தங்கள் புத்தகங்கள் தேர்ந்தெடுக்கப் படாத புத்தக ஆசிரியர்கள் குழுவின் முடிவை எதிர்க்கின்றனர். – தீர்மானிக்கவும்.

10. Nawab Hussain is a sub-inspector of police. He was dismissed from service

by D.I.G. of police. He filed a writ petition and the same was dismissed by the High Court. Now he wants to file a civil suit on the ground that I.G.P. is the competent authority and not D.I.G. to dismiss him from service. Advise Nawab Hussain.

நவாப் உசேன் என்பவர் சார்பு ஆய்வாளராகப் பணியாற்றுகிறார். அவரை பணி நீக்கம் செய்து காவல்துறை D.I.G. உத்தரவிடுகிறார். இந்த உத்தரவினை எதிர்த்து நவாப் உசேன் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்கிறார். அதனை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விடுகிறது. இப்பொழுது அவர் ஒரு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து அதில் தன்னை பணி நீக்கம் செய்யும் அதிகாரம் I.G.P. மட்டுமே உள்ளது, D.I.G.க்கு அதிகாரமில்லை என வாதிட விரும்புகிறார். ஆலோசனை நவாப் உசேனுக்கு வழங்குக.

LL.B. (SEMESTER) DEGREE EXAMINATION, JUNE 2022.

(Three year Regular Course)

Second Year / Fourth Semester

ADMINISTRATIVE LAW

PART A - (2 x 12 = 24 marks)

Time : **2½ hours** Maximum : **70 marks**

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Administrative Law is the law relating to the administration. It determines the organisation, powers and duties of administrative authorities". Elucidate.

"ஆட்சி முறைக்கு சம்பந்தமான சட்டமே நிர்வாக சட்டம். இது நிருவாகப் பொறுப்பிலுள் ளோர்களின் அமைப்பு, அதிகாரம் மற்றும் கடமைகளைை நிர்ணயிக்கின்றது" – தெளிவுபடுத் துக.

2. Describe the different modes of judicial control of delegated lagislation with the help of decided cases.

விதியாக்க ஒப்படைப்புக் குறித்தான வெவ்வேறு வகையான நீதித்துறை கட்டுப்பாட்டை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கொண்டு விவரி.

3. "No man shall be a judge of his own cause". Discuss with the help of decided cases.

ஒருவர் தன்னுடைய வழக்கில் தானே நீதிபதியாக இருக்க முடியாது என்ற கோட்பாட்டை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கொண்டு விவாதிக்கவும்.

PART B - (2 x 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும், ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Explain the applicability of 'estoppel' doctrine in administrative law with the

help of decided cases.

தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கொண்டு நிர்வாகவியல் சட்டத்தில் முரண்தடை கோட்பாட்டின் பயன்பாட்டினை விளக்குக.

5. Describe the privileges of government in legal proceedings.

சட்ட நடவடிக்கைகளில் அரசுக்குள்ள சிறப்புரிமைகளைப் பற்றி விவரிக்க.

6. Explain the elements of the principle of 'Audi Alteram Partem' with the help of decided cases.

"இரு பக்கம் கேட்டல் விதி" என்ற கோட்பாட்டின் காரணிகளை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கொண்டு விவரி.

PART C - (5 x 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Henry VIII Clause

ஹென்றியின் எட்டாவது விதி

(b) Governmental Control on public corporation

பொது நிறுவனங்களின் மீதான கட்டுப்பாடு

(c) S.P.Gupta V. Union of India AIR 1982 SC 149

எஸ்.பி.குப்தா எதிர் இந்திய ஒன்றிய அரசு AIR 1982 SC 149

(d) Post decisional hearing

முடிவுக்கு பின் விசாணை

(e) Judicial Review

நீதிமுறை மறுஆய்வு

(f) Writ of certiorari

ஆவணக்கேட்பு நீதிப்பேராணை

(g) Notice under Section 80 CPC 1908

உரிமையியல் நடைமுறை சட்டம், 1908 பிரிவு 80–ன் கீழான அறிவிப்பு

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Chairman of Industrial Finance Commission dismissed an employee. this order was challenged before the Board of the employee.The chairman was an ex-officio member of the Board. The Board also obtained chairman's opinion on the appeal preferred by the employee. Ultimately the order of Chairman was confirmed by the Board. The employee challenged the Board's order. Will he succeed?

தொழிற்துறை நிதி ஆணையத்தின் தலைவர், பணியாளர் ஒருவரை பணி நீக்கம் செய்கி

றார். இந்த உத்தரவை எதிர்த்து பணியாளர், வாரியத்திற்கு முறையீடு செய்கிறார். அவ்வாரியத்தில் ஆணையத்தின் தலைவர் பதவி வழி உறுப்பினராக உள்ளார். பணியாளரின் மேல்முறையீடு சம்பந்தமாக வாரியம், ஆணையத்தலைவரின் கருத்துக்களை கேட்கிறது. இறுதியாக ஆணையத் தலைவரின் உத்தரவினை வாரியம் உறுதி செய்கிறது. பணியாளர், வாரியத்தின் உத்தரவை எதிர்க்கிறார். அவர் வெல்வாரா?

9. 'X' was injured by the iron rods left on the road, by the road contractor X filed a suit for damages against the state - Decide.

சாலையோரம் ஒப்பந்தக்காரரால் போடப்பட்டிருந்த இரும்புக்கம்பிகளால் 'X' என்பவர் காயம் அடைந்தார். அரசுக்கு எதிராக இழப்பீடு கேட்டு 'X' என்பவர் வழக்கு தொடர்ந்தார். தீர்மானிக்கவும்.

10. Under the Essential Commodities Act, the authority has fixed the price of the essential commodities. 'X', a merchant, challenged the price fixation on the ground that he was not heard before fixing the price. Decide.

அத்தியாவசிய பொருள்கள் சட்டத்தின்படி ஒரு அதிகாரி அத்தியாவசிய பொருள்களின் விலையை நிர்ணயம் செய்கின்றார். X என்ற வியாபாரி விலை நிர்ணயம் செய்யப்படும் முன்பு தனது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று மறுதலிக்கின்றார். முடிவு செய்க.

ஐந்தாண்டு சட்டக்கல்வி

(For the candidates admitted during 2009 - 10 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATION, MAY 2016

(Five Year Regular Course)
Fourth Year - Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each
ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்க

1. Define Administrative Law. Discuss its growth in England, France and India.

நிர்வாக முறைச் சட்டம் என்பதனை வரையறுத்து இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் இந்தியாவில் அதன் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுக.

2. The Tremendous changes in the concept of "Locus Standi" is an impact of judicial Activism - Discuss.

"வழக்குத் தொடுக்கும் உரிமை"யில் ஏற்பட்டுள்ள அதீத மாற்றம் நீதித்துறை செயல் முனைப்பினால் ஏற்பட்டதே – விவாதிக்கவும்.

3. Write a note on Prof. A.V. Dicey's different views about Rule of Law and

Administrative Law.

'சட்டத்தின் ஆட்சி' மற்றும் 'நிர்வாக முறைச் சட்டம்' குறித்த பேரா A.V. டைசி-யின் வேறுபட்ட கருத்துக்களைப் பற்றிக் குறிப்பு வரைக.

4. What are the privileges and immunities enjoyed by the government in a Litigation?

ஒரு வழக்கு நடவடிக்கையில் அரசாங்கத்தால் அனுபவிக்கப்படுகின்ற சிறப்புரிமைகள் மற்றும் விலக்களிப்புகள் யாவை?

5. State the limitations on the Doctrine of "Promissory Estoppel".

"உறுதிமொழி முரண்தடை"யின் மீதான வரம்புகளைப் பற்றி குறிப்பிடுக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on <u>EIGHT</u> of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் <u>இரண்டு</u> பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் <u>எட்டுக்கு</u> குறுகிய விடைகள் தருக

(a) Parent Act
தோற்றுவாய்ச் சட்டம்

(b) Non-Application of mind
கவனம் செலுத்தாமை

(c) Menaka Gandhi vs. Union of India
மேனகா காந்தி எதிர். இந்திய யூனியன்

(d) Laying before Parliament
பாராளுமன்றம் முன் வைத்தல்

(e) Franks Committee Report
பிராங்க்ஸ் குழு அறிக்கை

(f) Subjective — Satisfaction Discretionary Power.
அக மன நிறைவுத் தன் விருப்புரிமை அதிகாரம்

(g) Statutory Tribunal
சட்டரீதியாக அமைக்கப்பட்ட தீர்ப்பாயம்

(h) Parliamentary Commissioner
பாராளுமன்ற ஆணையாளர்

(i) Laches
தாமதம்

(j) Hiranath Misra vs. Rajendra Medical College
ஹிராநாத் மிஸ்ரா – எதிர் – இராஜேந்திரா மருத்துவக் கல்லூரி

PART C - (4 x 4 = 16 marks)

Answer <u>FOUR</u> of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் <u>நான்கிற்கு</u> ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The Parent Act, while delegating power to the executive authority had prescribed certain procedures to be followed while implementing the provisions contained in the Act.

The procedure prescribed in the parent Act were not at all taken into consideration by the executive authority. Decide the validity of the action by the authority.

முதன்மைச் சட்டமானது நிர்வாகத் துறைக்கு அதிகாரத்தை ஒப்படைக்கும் பொழுது சில விதிமுறைகளை கடைபிடித்த பிறகே முதன்மைச் சட்டத்தின் ஷரத்துகள் அமுல்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டது.

முதன்மைச் சட்டத்தில் குறிப்பிட்ட வழிமுறைகளை கருத்தில் கொள்ளாமல் நிர்வாகத் துறை செயல்பட்டது. நிர்வாகத் துறையின் செய்கையின் செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

8. Mr. Mohan, aged about 55 years, who was compulsorily retired, challenged the order of the government on the ground that the enquiry officer's report which was used against him was not disclosed to him. Will he succeed?

மோகன் என்பவர் 55 பூர்த்தி செய்துவிட்டபடியால் அவருக்கு பணியிலிருந்து கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டது. இந்த ஆணையை பிறப்பிப்பதற்கு முன்பாக இது குறித்த விசாரணை அதிகாரியின் அறிக்கை தனக்கு காண்பிக்கப்படவில்லை என மோகன் எதிர்க்கிறார். அவர் வெற்றி பெறுவாரா?

9. Air India in exercise of its statutory powers, has framed service rules according to which the services of an air-hostess can be terminated on her first pregnancy - Decide the validity of the Rule.

ஏர் இந்தியா நிறுவனம் தனது சட்டத்தால் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் உருவாக்கப் பட்ட பணி விதிகளின்படி, ஒரு விமானப் பணிப் பெண் கருவுற்று விட்டாலேயே அவளை பணியிலிருந்து நீக்கலாம். இந்த விதியின் செல்லுத் தன்மையை முடிவு செய்க.

10. 'A' did not participate in the inquiry and therefore evidences of the witnesses were recorded in his absence. However he participated in the proceedings later. Decide, under these circumstances, how the enquiry officer should act?

'A' என்பவர் விசாரணையில் கலந்து கொள்ளாததால் சாட்சிகளின் வாக்குமூலங்கள் அவர் இல்லாமல் பதிவு செய்யப்பட்டன. ஆனால் பிறகு அவர் விசாரணையில் கலந்து கொண்டார். இச்சூழ்நிலையில் விசாரணை அதிகாரி எப்படி செயல்பட வேண்டும்?

11. 'P', an M.L.A., was arrested unlawfully. His wife filed an application for Habeas Corpus before High Court - Whether the writ will be allowed or not? Decide.

'P' ஒரு சட்டமன்ற உறுப்பினர். அவர் சட்ட முரணான வகையில் சிறை வைக்கப்பட்டார். 'P'–ன் மனைவி இதனை எதிர்த்து ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணையை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்கிறார். அந்த நீதிப்பேராணை மனு அனுமதிக்கப்படுமா அல்லது மறுக்கப்படுமா? தீர்மானி.

12. Tax assessment order was passed by the Sales Tax Officer against Ram. The order was challenged by Ram before the High Court by way of Writ Petition. The Writ Petition was dismissed on merits. He files another writ with some additional grounds. Will he succeed?

ராம் என்பவருக்கு எதிராக வரி விதித்து விற்பனை வரி அதிகாரி உத்தரவு பிறப்பிக்கிறார். ராம் அவ்வுத்தரவை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்கிறார். நீதிப் பேராணை மனுவானது நீதிமன்றத்தால் தகுதிப்பாடு செய்து தள்ளுபடி செய்யப்படுகிறது. அவர் மீண்டும் சில விபரங்களுடன் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்கிறார். அவர் வெல்வாரா?

(For the candidates admitted during 2009 - 10 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2016

(Five Year Regular Course)
Fourth Year - Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each
ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்க

1. What is meant by Ultra-vires? Distinguish between substantive Ultra-vires and Procedural Ultra-vires?

அதிகார வரம்பு மீறல் என்றால் என்ன? நிலைமுறை அதிகார வரம்பிகைந்தமையை டைமுறை அதிகார வரம்பிகைந்தமையிலிருந்து வேறுபடுத்துக.

2. The absolute "Theory of separation of powers" is not possible in the modern welfare. State — Discuss with Constitutional provisions.

தற்கால மக்கள் நல அரசில் முழுமையான "அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு" என்பது சாத்தியமற்றது என்பதை அரசமைப்பின் வகையங்களுடன் விளக்குக.

3. "No man shall be condemned unheard'— Explain this statement with exceptions.

"எவரொருவரும் விசாரிக்கப்படாமலேயே தண்டிக்கப்படக்கூடாது" – இக்கூற்றினை விதிவிலக்குகளுடன் விவரிக்கவும்.

4. Discuss the grounds for challenge of 'Administrative Discretion' with 'Prerogative Remedies'.

நிர்வாகத் துறையின் தன் விருப்புரிமை அதிகாரத்தை எக்காரணங்களின் அடிப்படையில் எதிர்க்கப்படலாம் என்பதனையும், அதற்கு ஏதுவான தனிப் பேரதிகார தீர்வழிகளையும் விவரிக்கவும்.

5. Explain the characteristics of Administrative Tribunal. Explain how does it differ from court.

நிர்வாக முறைத் தீர்ப்பாயங்களின் தன்மைகளையும், அது எவ்வாறு நீதிமன்றங்களிலிருந்து வேறுபடுகின்றது என்பதனையும் ஆராய்க.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டுக்கு குறுகிய விடைகள் தருக

(a) Pecuniary bias.
பணம் சார்ந்த மனச்சாய்பு

(b) Declaratory action.
விளம்புகை நடவடிக்கை

(c) Lok-Ayukta.
லோக் ஆயுக்தா

(d) Donoughmore Committee.
டுநோக்மோர் குழு

(e) Writ of Quo-warranto.
தகுதி நிலை வினவும் நீதிப் பேராணை

(f) Notice under Sec. 80 C.P.C, 1908.
உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 பிரிவு 80–ன் கீழான அறிவிப்பு

(g) Public Corporations.
பொதுக் கூட்டுரிமைக் குழுக்கள்

(h) State of Rajasthan vs. Vidyawathi AIR 1962 SC 933.
இராஜஸ்தான் மாநிலம் – எதிர் – வித்யாவதி AIR 1962 SC 933.

(I) Conseil de etat.
கன்சில் – தி – இதாத்

(j) Ultra vires promise.
அதிகார வரம்பு மீறிய வாக்குறுதி

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Rajan is a member of the Regional Transport authority. He granted license to his own transport concern. This was objected by other applicants. Decide whether they will succeed?

ராஜன் என்பவர் மண்டல போக்குவரத்து துறையில் உறுப்பினராக உள்ளார். அவர் தன்னுடைய சொந்த போக்குவரத்து நிறுவனத்திற்கு உரிமை வழங்குகிறார். அவரின் செயலானது மற்ற மனுதாரர்களால் எதிர்க்கப்படுகிறது – அவர்கள் வெல்வார்களா என்பதை முடிவு செய்யவும்.

8. A contract was entered into by the Govt., with the contractor for the construction of a building. After completion of the work, a dispute arose with regard to the payment of certain bill amount. The Suit was filed by contractor against the government, for the payment of amount. The suit was contested by the Govt, on the ground that- the executive engineer was not authorised by it to sign in the said contract Decide whether he will succeed.

ஒரு கட்டிட ஒப்பந்தத்தை அரசானது கட்டிட ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்திக் கொண்டது. அவ்வேலை முடிவு பெற்றவுடன் பணம் தருவது சம்பந்தமா பிரச்சனை ஏற்பட்டது. ஒப்பந்தக்காரர் அரசுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து தனக்கு சேர வேண்டிய பணத்தைக் கேட்கிறார். அரசானது, ஒப்பந்தத்தில் கையெழுத்து இடும் அதிகாரம் செயற்பொறியாளருக்கு தரப்பட வில்லை என வாதிடுகிறது. ஒப்பந்தக்காரர் என முடிவு செய்க.

9. The Central Government gave assurance that new industrial units established in rural areas will be exempted from income tax for three years. On the basis of this, "A" started an industry in a rural area. But in the n-xt year due to difficult economic condition in the country the government retracted from its assurance and imposed income tax on the proceeds of "A" fruin his industry — Decide.

ஊரகங்களில் அமைக்கப்படும் புதிய தொழிற்சாலைகளுக்கு மூன்று வருடங்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்கல் அளிக்கப்படும் என்று மத்திய அரசு உறுதியளித்தது. இவ்வுறுதிமொழியின் அடிப்படையில் 'அ' என்பவர் ஊரகத்தில் ஒரு தொழிற்சாலையைத் தொடங்கினார். ஆனால் அடுத்த வருடத்தில் நாட்டின் இக்கட்டான பொருளாதார நிலையின் காரணமாக, மத்திய அரசு அந்த வாக்குறுதியிலிருந்து பெற்ற வருமானத்தின் மீது வரி விதித்தது – தீர்மானிக்க.

10. 'P' met with an accident. He was hit by a Govt. vehicle. He was bed ridden for eight months. After recovery, he filed a petition against the government claiming compensation. The Govt, raised the objection of delay. Decide whether 'P' will succeed?

'P' என்பவர் அரசு வாகனத்தில் அடிப்பட்டு விபத்திற்குள்ளாகி சுமார் எட்டு மாதங்கள் மருத்துவப்பாதுகாப்பில் இருந்தார். பின்னர் உடல்நிலை குணமடைந்தவுடன் அவர் அரசுக் கெதிராக இழப்பீடு கோரி வழக்கு தொடர்ந்தார். அரசு கால தாமதம் என்ற காரணம் காட்டி அவரின் கோரிக்கையை மறுத்தது. 'P' வெற்றிப் பெறுவாரா என்பதை முடிவு செய்க.

11. "A" is an illiterate person. He requested to engage a lawyer to represent .his matter in an enquiry against him, which was denied by the -enquiry committee. Decide whether it will amount to violation of fair hearing?

'A' என்பவர் ஒரு படிக்காத நபர். அவருக்கு எதிரான விசாரணையில் அவர் வழக்கறிஞரை நியமித்துக் கொள்ள அனுமதி கோருகிறார். விசாரணைக் குழு அவரது கோரிக்கையை மறுக்கின்றது. இச்செயல் நியாயமானக் கேட்டல் மீறியதாகுமா என்று முடிவு செய்க.

12. A prisoner filed a writ petition in the High Court alleging that unsatisfactory and inhuman conditions were prevailing in the prison. Has he got any "locus standi" to file such writ petition and is it maintainable?

கைதி ஒருவர் சிறையின் உள்ளே உள்ள திருப்திகரமற்ற மற்றும் மனிதாபிமானமற்ற சூழ்நிலையை மேற்கோள் காட்டி உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனுத்தாக்கல் செய்கின்றார். அவ்வாறு வழக்கு தொடுக்க அவருக்கு "வழக்கிடும் உரிமை" உள்ளதா? அந்த வழக்கு நிலைக்குமா?

(For the candidates admitted during 2009 - 10 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATION, MAY 2017

(Five Year Regular Course)
Fourth Year - Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each
ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்க

1. Discuss Dicey's concept of rule of law and the modern concept of law.
டைசியின் சட்டத்தின் ஆட்சிக் கருத்தமைவு மற்றும் நவீன கால சட்ட ஆட்சியின் கருத்தமைவையும் விவாதிக்கவும்.

2. Discuss with decided cases and the circumstances in which natural justice need not be followed.
இயற்கை நீதியானது எந்தெந்தச் சூழ்நிலைகளில் பின்பற்றப்பட வேண்டாம் என்பதை முடிவு செய்யப்பட்ட வழக்குகள் வாயிலாக விவாதிக்கவும்.

3. Discuss Parliamentary control of delegated legislation.
விதியாக்கத்தின் மீது நாடாளுமன்றக் கட்டுப்பாட்டை விவாதிக்கவும்.

4. Discuss the extent of tortious liability of State. Refer to cases.
அரசின் தீங்கியல் பொறுப்புடைமையை விவரி. வழக்குகள் தருக.

5. What are the privileges of the State in legal proceedings?
சட்ட நடவடிக்கைகளில் அரசின் சிறப்புரிமைகள் யாவை?

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டுக்கு குறுகிய விடைகள் தருக

(a) Permissible delegation
அனுமதிக்கத்தக்க அளிப்படைவு

(b) Harbeas corpus case
ஆட்கொணர்வு வழக்கு

(c) Statutory remedy
சட்டத் தீர்வழி

(d) Henry VIII clause
எட்டாம் ஹென்றியின் வகையம்

(e) Laches
கால தாமதம்

(f) Govt. contracts
அரசு ஒப்பந்தங்கள்

(g) Malafide
தீய எண்ணம்

(h) Locus standi
வழக்கிடும் உரிமை

(i) Donoughmore Committee
டானோக்மோர் குழு

(j) Mandamus
செயலுறுத்தும் நீதிப் பேராணை

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The state Government appointed a committee to select books for supplying to library of schools and colleges. Few members of the committee were themselves authors of some books and therefore selected their books for purchase. The author whose books were not selected challenged the selection procedure - Decide.

பள்ளி மற்றும் கல்லூரி நூலகங்களுக்கு நூல்களைத் தெரிவு செய்து வாங்குவதற்கு ஒரு குழுவினை மாநில அரசு நியமித்தது. சில உறுப்பினர்கள் தாங்களே நூலாசிரியர்களாக எழுதிய நூல்களை வாங்குவதற்குத் தெரிவு செய்தனர். தெரிவு செய்யப்படாத நூலாசிரியர் தெரிவுக் குழுவின் நெறிமுறையை மறுதளித்து வழக்காடுகிறார். தீர்மானிக்கவும்.

8. A lady professor in a college complained against the misbehaviour of a male student inside the classroom. On complaint from her, the principal appointed a committee to enquire into the matter, which found the student guilty. He was dismissed from the college. He challenged the dismissal on the ground that he was not given an opportunity to cross examine the Professor. Will he succeed?

பேராசிரியை, மாணவர் ஒருவர் தன் கல்லூரி வகுப்பறையில் ஒழுக்கக்கேடாக நடந்து கொண்டார் என்று முதல்வரிடம் புகார் தெரிவித்ததன் அடிப்படையில் ஒரு விசாரணைக் குழு அமைக்கப்படுகிறது. அக்குழு, மாணவனைத் தவறிழைத்தவன் என அறிவித்ததன் அடிப்படையில் அவன் கல்லூரியை விட்டு நீக்கப்படுகிறான். பேராசிரியையைக் குறுக்கு விசாரணைச் செய்யும் வாய்ப்பு தனக்கு அளிக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டி நீக்கத்தை மறுதளித்து மாணவர் வழக்குத் தொடர்கிறார். அவர் வெற்றி பெறுவாரா?

9. Raja Mohammed is a Sub-inspector of police. He was dismissed from service by DIG of police. Raja Mohammed filed a civil suit challenging his dismissal stating that DIG is not the appointing authority. Will he succeed? Decide.

இராஜா முகமது என்பவர் காவல் துறையில் சார்பு ஆய்வாளராகப் பணியாற்றினார். அவரைப் பணி நீக்கம் செய்து காவல் துறை துணை ஆய்வாளர் நாயகம் ஆணையிடுகிறார். இராஜா முகமது பணி நீக்க ஆணையினை எதிர்த்து உரிமையியல் வழக்கு முன்னிடுகையில் பணியமர்த்தும் அலுவலரால் மட்டுமே பணி நீக்கம் செய்திட இயலும் என வாதிடுகிறார். அவர் அதில் வெற்றி பெறுவாரா? தீர்மானிக்க.

10. The General Sates Tax Act empowers the government to impose sales tax on cellulose limiting that the percentage of tax shall not exceed 10%. Being affected by the act Suresh Mills challenges this in the High court stating that such power cannot be delegated to the Government. Decide.

பொது விற்பனை வரிச் சட்டமானது மரக் கூறுகளுக்கு நார் பொருளுக்கு விற்பனை வரி விதிக்கும் அதிகாரத்தை அரசிற்கு அளிக்கின்றது. ஆனால் அது பத்து சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என நெறிப்படுத்துகிறது. இச்சட்டத்தினால் பாதிக்கப்படும் சுரேஷ் ஆலை இவ்வதிகாரம் அரசிற்கு அளிப்படைவு அளிக்கக் கூடியது அல்ல என்று உயர்நீதி மன்றத்தில் மறுதளிக்கின்றது. தீர்மானிக்கவும்.

11. A person was arrested unlawfully and detained. His wife filed a writ of Habeaus corpus before the High court. Whether the wiit will be allowed or not? Decide.

ஒரு நபர் சட்ட முரணான வகையில் கைது செய்யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டார். அவரின் மனைவி இதனை எதிர்த்து ஆட்கொணர்விக்கும் நீதிப் பேராணையை உயர்நீதி மன்றத்தில் முன்னிடுகிறார். அந்த நீதிப்பேராணை மனு அனுமதிக்கப்படுமா அல்லது மறுக்கப்படுமா? தீர்மானிக்கவும்.

12. Air India in exercise of its statutory powers, has framed service rules according to which the services of an air-hostess can be terminated on her first pregnancy. Decide the validity of the rule.

ஏர் இந்தியா நிறுவனம், சட்டத்தால் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் வகுக்கப்பட்ட பணி விதிகளின்படி, விமானப் பணிப்பெண் முதன்முறையாக கருவுற்றுவிட்டால் அவளைப் பணியி லிருந்து நீக்கலாம் என விதியாக்கம் செய்தது. இந்த விதியின் செல்லுந்தன்மையை முடிவு செய்க.

(For the candidates admitted during 2009 - 10 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2017

(Five Year Regular Course)
Fourth Year - Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each
ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்க

1. How far separation of powers theory is incorporated in the Indian Constitution? — Examine.

அதிகாரப் பகிர்வுக் கருத்தியல் எந்த அளவிற்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கம் பெற்றுள்ளது – ஆராய்க.

2. State the characteristics of Administrative Tribunal. How it is different from Court?

நிருவாகத் தீர்ப்பாயத்தின் இயல்புகளைக் கூறவும். அது நீதிமன்றத்தில் இருந்து எவ்வகையில் வேறுபடுகிறது?

3. "The term Locus Standi has been changed beyond recognition" — Elucidate.

"வழக்கிடும் உரிமை என்ற சொல் மாற்றத்திற்குட்பட்டு அங்கீகாரத்திற்கு அப்பால் உள்ளது" – எடுத்தியம்பவும்.

4. What is administrative discretion? How exercise of discretion is subjected to judicial scrutiny?

நிருவாக உளத்தேர்வு என்றால் என்ன? உளத்தேர்வு செயலாக்கம் எவ்வாறு நீதித்துறை ஆய்வுக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளது?

5. Give an account of judicial control of Public Corporation in India.

இந்தியாவில் பொது குழுமங்கள் மீதான நீதித்துறை கட்டுப்பாடுகளைத் தொகுத்து கூறுக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டுக்கு குறுகிய விடைகள் எழுதவும்.

(a) Speaking order.
பேசுமாணை

(b) Official bias.
அலுவல் சார் மனச்சாய்வு

(c) Herschel's doctrine.
கெர்சலின் கோட்பாடு

(d) Domestic Tribunal.
உள்ளகத்து தீர்ப்பாயம்

(e) Natural justice.
இயற்கை நீதி

(f) Droit administratiff.
டிராயிட் அட்மினிஸ்ட்ரேடிவ்

(g) Parliamentary Commissioner.
நாடாளுமன்ற ஆணையர்

(h) Parent Act
தோற்றுவாய் சட்டம்

(i) Franks Committee Report.
பிராங்க்ஸ் குழு அறிக்கை

(j) Promissory Estoppel.
உறுதிமொழி முரண்தடை

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.
பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு

மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Candidates at a school examination at one centre, indulged in mass copying. The board of examinations cancelled the examinations of all the subjects at the centre concerned without adhering to the principle of natural justice. But it permitted the examinees to reappear in the next examination. The examinees want to challenge it. Decide.

ஒரு பள்ளித் தேர்வு மையத்தில் பெரும்பான்மையான மாணவர்கள் பள்ளித் தேர்வில் பார்த்து எழுதினார்கள் என்பதற்காக அப்பள்ளித் தேர்வு மையத்தில் நடந்த அனைத்து தேர்வுகளும் தேர்வு வாரியத்தினால் ரத்து செய்யப்பட்டது. மாணவர்கள் அனைவரும் மறு தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டனர். தேர்வை ரத்து செய்யும் முன்பு இயற்கை நீதிக் கோட்பாடு பின்பற்றப் படவில்லை. எனவே மாணவர்கள் இதனை மறுதலித்து, வழக்குத் தொடர விரும்புகின்றனர். முடிவு காண்க.

8. A lady doctor in Government service was terminated on the ground that she had given a wrong date of birth at the time of joining service. She contended before the court that she was not given reasonable opportunity to disprove that allegation. Can she succeed in her argument?

பெண் மருத்துவர் ஒருவர் அரசுப் பணியில் சேரும்போது தவறான பிறந்த நாளை பதிவுருக்களில் பதிவு செய்த காரணத்தால் அவரை நீக்கம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. பணி நீக்கம் செய்யும் முன் அக்குற்றச்சாட்டுகளை பொய்ப்பிக்க வாய்ப்பு ஏதும் வழங்கவில்லை என வாதிடுகிறார். அவ்வாத வாயிலாக அவர் வெற்றி பெற இயலுமா?

9. Sekar filed a divorce petition against his wife Rathika. The judge of the court had once appeared on behalf of Rathika on a family dispute as her counsel. The divorce petition was dismissed. The dismissal order was challenged on grounds of bias. Decide.

சேகர் தனது மனைவி ராதிகாவிற்கு எதிராக மணமுறிவு மனுவினை முன்னிட்டார். அந்த நீதிமன்ற நீதிபதி முன்பொரு முறை ராதிகாவிற்காக அவரது குடும்பத் தகராறு வழக்கொன்றில் வழக்கறிஞராக வாதிட்டுள்ளார். இந்நேர்வில் மணமுறிவு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. அந்த ஆணை மனச்சாய்வு அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டதென மறுதலிக்கப்படுகிறது. தீர்மானிக்க.

10. The Revenue Minister of a state 'B', cancelled the licence for the lease of certain land. 'A' challenged the decision on the ground that, there was political rivalry between him and the minister — Decide.

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியின் குத்தகை உரிமத்தை 'B' என்ற அரசின் வருவாய்த் துறை அமைச்சர் ரத்து செய்தார். வருவாய்த் துறை அமைச்சர் அரசியல் போட்டி காரணமாக உரிமத்தை ரத்து செய்தார் என 'A' என்பவர் மறுதலித்தார் – தீர்மானிக்க.

11. Disciplinary proceedings were pending against a civil servant. but he was permitted by the Government to retire from service. Later the Government wants to continue the disciplinary proceedings. Provide legal advise to the civil servant.

ஒரு குடிமைப் பணியாரின் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருக்கும்போது, அரசு ஒய்வு பெற அவரை அனுமதிக்கிறது. மேலும் அரசு அவர் மீது அந்த ஒழுங்கு நடவடிக்கையைத்

தொடர விரும்புகிறது. அரசு அலுவலருக்குச் சட்ட ஆலோசனை வழங்கவும்.

12. The Parent Act, while delegating power to the executive authority bad prescribed certain procedures to be followed while implementing the provisions contained in the Act. The procedure prescribed in the Parent Act were not at. all taken into consideration by the executive authority. Decide the validity ofthe action by the authority.

முதன்மைச் சட்டமானது, நிருவாகத் துறைக்கு அதிகாரத்தை ஒப்படைக்கும் பொழுது சில விதிமுறைகளைக் கடைப்பிடித்த பிறகே முதன்மைச் சட்டத்தின் பிரிவுகள் அமுல்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டது. முதன்மைச் சட்டத்தில் குறிப்பிட்ட வழிமுறைகளை கருத்தில் கொள்ளாமல் நிருவாகத் துறை செயல்பட்டது. நிருவாகத்துறை செயல்பாட்டின் செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

(For the candidates admitted during 2009 - 10 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATION, MAY 2018

(Five Year Regular Course)
Fourth Year - Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each
ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்க

1. Examine the concept of Rule of Law.
சட்டத்தின் ஆட்சி கருத்தமைவினை ஆராய்க.

2. Discuss the various components of fair hearing.
நேரிய கேட்பு என்பதன் பல்வேறு உட்கூறுகளை விவரிக்க.

3. "Delegatus Non-Potest delegare" - Examine its application.
"அளிப்படைவு அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது" – இதன் செயலாக்கத்தை ஆராய்க.

4. Explain the necessity, scope and functions of Ombudsman.
குறை தீர்ப்பாளரது தேவையை நோக்கெல்லையை அவரது பணிகளை விளக்குக.

5. Discuss the nature and extent of Judicial Review on administrative discretion.
நிருவாக உளத் தேர்வு மீது நீதிமுறை மேலாய்வின் அளவு அதன் இயல்பு ஆகியவற்றை விளக்குக.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டுக்கு குறுகிய விடைகள் எழுதவும்.

(a) Colourable Exercise of power.
போலித் தோற்ற அதிகார ஆற்று முறை

(b) R.C. Cooper Vs. Union of India.
ஆர்.சி. கூப்பர் எதிர். இந்திய ஒன்றியம்

(c) Laying before the parliament.
நாடாளுமன்றம் முன்னிடல்

(d) Government contracts.
அரசு ஒப்பந்தங்கள்

(e) Election Commission.
தேர்தல் ஆணையம்

(f) Pecuniary bias.
பணம் சார் மனச்சாய்வு

(g) Administrative Tribunals.
நிர்வாகத் தீர்ப்பாயம்

(h) Injunction
உறுத்துக் கட்டளை

(i) Legislative functions of the administration.
செயலாட்சித் துறையின் சட்டமியற்கும் பணிகள்

(j) Ultra - Vires.
வரம்பு மீறல்

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. An unsuccessful candidate filed a petition before the election tribunal, and it was decided against him. He challenged before the Supreme Court that the tribunal was biased. The Reason is that the tribunal member's wife is a member of a political party in which his opponent is also a member — Decide.

தேர்தலில் தோல்வி தழுவிய ஒருவர் தேர்தல் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்தார். முடிவு அவருக்கு பாதகமாக அமைந்தது. உச்ச நீதிமன்றத்தில் அதனை மறுதலித்தார். அவருடைய வாதுரையானது தீர்ப்பாய உறுப்பினரின் மனைவியும், தன்னுடைய எதிரியும் ஒரே கட்சியில் உறுப்பினர்களாக உள்ளதால் தீர்ப்பாயம் மனச்சாய்வுடன் செயல்பட்டது என்பது – தீர்வு காண்க.

8. Meena, a student, wrote a. competitive examination and her results were withdrawn by the examination committee on the ground that she involved in malpractice at the examination hall. Meena felt aggrieved as she was not heard. — Advise her.

மீனா என்னும் மாணவி போட்டித் தேர்வில் தேர்வு முறையறு செயலில் ஈடுபட்டதால் தேர்வு முடிவினை தேர்வாணைக் குழு நிறுத்தி வைத்தது. மீனா தனது வாதத்தைக் கேட்கவில்லை

என்று அதிருப்தி அடைந்தார். அவருக்கு அறிவுரை கூறுக.

9. Geetha a selected candidate was closely related to the member of the selection committee. On behalf of the government it was contended that the candidate was not interviewed by that particular selection committee member and the selection is not vitiated - Decide.

நியமனக் குழுவால் தெரிவு செய்யப்பட்ட கீதா தெரிவுக்குழு உறுப்பினருடைய நெருங்கிய உறவினர் ஆவார். அந்த குறிப்பிட்ட தெரிவுக்குழு உறுப்பினர் நேர்காணலில் கலந்து கொள்ள வில்லை. இருப்பினும் தெரிவில் தவறு எதுவும் இல்லை என அரசு சார்பில் வாதிடப்பட்டது – தீர்மானிக்க.

10. In the Parent Act there is a provision to publish the delegated legislation in the local Tamil daily before implementation. But the government published the delegated legislation in an English Daily. Decide the validity of the delegated legislation.

முதன்மைச் சட்டத்தின் கீழ் அரசால் ஆக்கப்படும் விதிகளை உள்ளூர் தமிழ் நாளேட்டில் வெளியிட வேண்டும் என சட்டம் வகை செய்கிறது. ஆனால் அரசானது அதை ஒரு ஆங்கில நாளேட்டில் வெளியிடுகிறது – அளிப்படைவு விதிகளின் செல்லும் நிலைமையை ஆராய்க.

11. Air India in exercise of its statutory powers, has framed service rules according to which the service of an air-hostess can be terminated on her first pregnancy — Decide the validity of the rule.

ஏர் இந்தியா நிறுவனம் சட்டத்தால் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பணி விதிகளின்படி ஒரு விமானப் பணிப்பெண் கருவுற்று விட்டாலே அவளை பணியிலிருந்து நீக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த விதியின் செல்லும் தன்மையை முடிவு செய்க.

12. The Parent Act authorised the executive authority to prohibit manufacture of tobacco in certain areas during certain period. The authority issued a general order prohibiting all persons from carrying on that business - Discuss the validity of the order. Will he be allowed to do so?

முதன்மைச் சட்டம் புகையிலை தொழிலை சில சூழ்நிலைகளில் செயலாட்சித் துறை தடை செய்ய அனுமதி வழங்கியது. அச்சட்டத்தின் வாயிலாக செயலாட்சி ஒரு ஆணையை பிறப்பித்து அனைவரையும் அத்தொழிலை செய்ய விடாமல் தடுத்தது. இவ்வாணையின் செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

(For candidates admitted from 2009 - 2010 to 2015 - 2016)

B.A., B.L., / B.A., LL.B., DEGREE EXAMINATION, NOVEMBER 2018

(Five Year Regular Course)
Fourth Year - Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each
ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்க

1. The exercise of discretion must not be arbitrary, fanciful and influenced by extraneous considerations — Comment.

உளத் தேர்வின்படி செயல்படுத்தப்படும் அதிகாரத்தை தன்னிச்சையாக, கற்பனையாக மற்றும் உளப்போக்கில் தொடர்பற்ற காரணங்களை கருத்தில் கொண்டு செயல்படுத்தக் கூடாது – கருத்துரை தருக.

2. "The concept of Locus standi has been changed beyond recognition". Elucidate.

"வழக்கீடு உரிமை என்ற கருத்தமைவு அங்கீகரிப்பிற்கு அப்பால் மாற்றப்பட்டுள்ளது" – எடுத்துரைக்கவும்.

3. "Everything must be done according to Law". Explain this statement with the help of Dicey's "Rule of Law".

"அனைத்துச் செயல்களும் சட்டத்தின்படிதான் நிறைவேற்றப்பட வேண்டும்". இக்கூற்றினை 'டைசியின்' 'சட்டத்தின் ஆட்சி'க் கோட்பாட்டின் உதவியுடன் விவரிக்கவும்.

4. Narrate with decided cases the application of promissory estoppel in Administrative law and the circumstances under which promissory estoppel does not apply.

நிருவாகச் சட்டத்தில் உறுதிமொழி முரண்தடைக் கோட்பாட்டின் பயன்பாட்டையும் மற்றும் அதனை பின்பற்றுவதற்கான விதிவிலக்குகளையும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் எடுத்துக் கூறுக.

5. Explain the judicial control of delegated legislation in India.

இந்தியாவில் அதிகார ஒப்படைவு பெற்று ஆக்கப்படும் விதிகளை நீதிமன்றம் எவ்வாறு கட்டுப்படுத்துகின்றது என்பதை விளக்கவும்.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short notes on EIGHT of the following not exceeding 2 pages each.
பின்வருவனவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதவும்

(a) Franks Committee.
பிராங்க்ஸ் குழு

(b) Droit - Administratiff.
ட்ராயிட் அட்மினிஸ்ட்ரேடிவ்

(c) Henry VIII Clause.
ஹென்றியின் எட்டாவது வகையம்

(d) Ridge v. Baldwin.
ரிட்ஜ் எதிர் பால்ட்வின்

(e) Doctrine of legitimate expectations.
சட்ட வழி எதிர்பார்ப்புக் கோட்பாடு

(f) Soverign Functions
இறைமைச் செயல்

(g) Speaking order.
பேசும் ஆணை

(h) Domestic Tribunals
துறை சார்ந்த தீர்ப்பாயம்

(i) Personal Bias.
தன் மனச்சாய்பு

(j) Administrative Finality.
நிருவாக இறுதி முடிவு

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Vinod, an employee, was dismissed from service by the chairman of the company. Against this, Vinod preferred appeal to the Board of Directors. The chairman was ex-officio member of the Board. His opinion was obtained by the Board relating to this matter. Ultimately, the decision of the chairman was confirmed. Vinod challenged this before the court. Will he succeed in his attempt?

வினோத் என்ற பணியாளர் நிறுமத்திலிருந்து தலைவரால் நீக்கப்படுகிறார். இதனை எதிர்த்து வினோத் இயக்குநர்கள் குழுமத்திற்கு மேல்முறையீடு செய்கிறார். நிறுமத் தலைவரும் பதவி வழி அக்குழுமத்தில் பங்கு கொள்கிறார். அவருடைய கருத்தும் இது தொடர்பாக பெறப் படுகிறது. இறுதியாக தலைவரின் முடிவு உறுதி செய்யப்படுகிறது. இதனை எதிர்த்து வினோத் நீதிமன்றம் செல்கிறார். அவரின் முயற்சியில் வெல்வாரா?

8. The M.B.A. Entrance examination was cancelled due to mass copying at a particular centre. The university had decided to conduct fresh examination. Some of the students approached the court on the ground that they were not given opportunity to explain their case. Will they succeed?

வணிக மேலாண்மை நிறைஞர் படிப்பு நுழைவுத் தேர்வில் அதிகமானவர்கள் ஒரு குறிப்பிட்ட தேர்வு மையத்தில் தேர்வு முறையறு செயலில் ஈடுபட்டதால் அத்தேர்வானது நீக்கப்பட்டது. பல்கலைக் கழகம் மறுதேர்வு நடத்த முடிவு செய்தது. சில மாணவர்கள் தங்களின் விளக்கத்தை கேட்காமல் முடிவு செய்யப்பட்டதை எதிர்த்து நீதிமன்றத்தை நாடுகின்றனர். அவர்கள் வெற்றி பெறுவார்களா?

9. Sampath is an Income-Tax Assessee. An assessment order was made by Tax officer against Sampath. This order was challenged by him on the pound of violation of the principles of Natural Justice. The High Court dismissed it on merit. Sampath filed another writ petition with some additional points not raised in the earlier writ petition. Will he succeed?

சம்பத் என்பவர் வருமானவரி செலுத்துபவர். அவருக்கு எதிராக வருமானவரி அலுவலர் மதிப்பீட்டு ஆணை பிறப்பித்தார். அந்த ஆணை இயற்கை நீதி கோட்பாட்டிற்கு புறம்பானது என சம்பத் வழக்கிடுகிறார். உயர் நீதிமன்றம் அதனை ஆய்வு செய்து தள்ளுபடி செய்கிறது. சம்பத் மறுபடியும் வேறு ஒரு நீதிப் பேராணை மனுவை முன்னிட்டு முதல் மனுவில் கூறாத சில கேள்விக்குரியனவற்றை முன்னிடுகிறார். அவர் வெற்றி பெறுவாரா?

10. The 'Parent Act' authorised Deputy Commissioner to prohibit manufacture of Beedis in certain areas. A general notification was issued by him whereby he prohibited all persons from carrying on this business. This was challenged in a Court of Law. Decide.

"முதன்மைச் சட்டமானது" துணை ஆணையருக்கு சில இடங்களில் புகையிலை தொழில் செய்ய தடை செய்யும் அதிகாரத்தை வழங்குகிறது. ஒரு பொதுவான அறிவிப்பு வாயிலாக அனைவரையும் அந்த தொழிலினை செய்யாமல் தடுக்கிறார். இந்த ஆணையினை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு முன்னிடப்படுகிறது. முடிவு செய்க.

11. 'X' is detained by the executive magistrate claiming that his presence is dangerous to the security of the state. Later on, finding that he was innocent, he was released. 'X' claims compensation for the illegal detention — Decide.

'X' –ன் செயல்பாடு நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து விளைவிக்கும் என ஆட்சித்துறை நடுவர் வாயிலாக காவலில் வைக்கப்பட்டார். பின்பு அவர் அவ்வாறு ஆபத்து விளைவிக்கும் செயலில் ஈடுபடவில்லை என அறுதியிடப்பட்டதால் அவர் விடுவிக்கப்பட்டார். தன்னை சட்டத்திற்கு புறம்பாக காவலில் வைத்ததாக 'X' இழப்பீடு கோருகிறார். முடிவு செய்க.

12. Under the Essential Commodities Act, the authority has fixed the price of the essential commodities. Ravi, a merchant, challenged the price fixation on the ground that he was not heard before fixing the price. Decide.

இன்றியமையா பண்டங்கள் சட்டத்தின்படி ஒரு அலுவலர் இன்றியமையா பண்டங்களின் விலையை தீர்மானிக்கிறார். ரவி என்ற வணிகர் விலை தீர்மானம் செய்யப்படும் முன்பு தனது கருத்துக்களை எடுத்துரைக்க வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று மறுதலிக்கின்றார். முடிவு செய்க.

(For candidates admitted from 2009 - 2010 to 2015 - 2016)

B.A., B.L., / B.A., LL.B., DEGREE EXAMINATION, MAY 2019.

(Five Year Regular Course)
Fourth Year - Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each
ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்க

1. Examine the doctrine of Separation of Powers.
அதிகாரப் பிரிவினை கோட்பாட்டை திறனாய்வு செய்க.

2. Explain the rule against bias with the help of deckled case laws.
மனச்சாய்வுக்கு எதிரான விதியை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் உதவியோடு விளக்குக.

3. Distinguish between Delegated legislation and Administrative directions.
விதியாக்கத்தை செயலாட்சி ஏவுரையிலிருந்து வேறுபடுத்தி காண்க.

4. Explain the origin and scope of the "Ombudsman".
"குறை தீர்வாளர்" அமைப்பின் தோற்றம் மற்றும் நோக்கெல்லையை விளக்குக.

5. Discuss the liability of Government of India in respect of contracts entered by them.
ஒப்பந்தங்களின் வாயிலாக இந்திய அரசிற்கு எழும் கடப்பாடுகளைப் பற்றி விவாதிக்கவும்.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short notes on EIGHT of the following not exceeding 2 pages each.
பின்வருவனவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதவும்

(a) Henry VIII clause
எட்டாம் ஹென்றியின் வகையம்

(b) Subdelegation of Ministerial function.
சார்பு அடிப்படைவு வழி அமைச்சுப் பணிகள்

(c) Writ of Prohibition
தடுப்பு நீதிப் பேராணை

(d) Post decisional hearing
தீர்ப்புக்குப் பின் கேட்டல்

(e) Speaking orders
பேசும் ஆணைகள்

(f) Powers of the High Court Under Article 227 of the Constitution of India.
இந்திய அரசமைப்பின் பிரிவு 227–ன் கீழ் உயர்நீதி மன்றத்தின் சட்டத் திறன்கள்

(g) Donoughmore Committee
டோனாகுமோர் குழு

(h) Laches
கால தாமதம்

(i) Bonafide
நல்லெண்ணம்

(j) Public corporation.
பொதுக் குழுமம்

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகைபங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Siva was injured by the foundation stones left on the road by a road contractor. Siva filed a petition for damages againt the state - decide with relevant cases.

. சாலை ஒப்பந்தக்காரரால் அமைக்கப்பட்ட சாலையோரம் கிடந்த எல்லைக் கல்லால் சிவா என்பவர் காயமுற்றார். சிவா அரசிற்கு எதிராக இழப்பீடு கோரி வழக்கு தொடர்ந்தார் – தொடர்புடைய வழக்குகளை குறிப்பிட்டு தீர்மானிக்கவும்.

8. Inspite of Rajan's disciplinary proceedings he was permitted to retire from service. But later the government wants to continue the diciplinary proceedings against him. Advice Rajan.

ராஜனின் மீது ஒழுங்கு நடவடிக்கை இருந்தும் அவரை பிணியிலிருந்து ஓய்வு பெற அரசு அனுமதித்தது. ஆனால் பின்னர் அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை தொடர அரசு விரும்புகிறது. ராஜனுக்கு அறிவுரை கூறுக.

9. Police officers from the Central Reserve Police force resorted strike demanding various benefits from the Central Government. The police officers were dismissed without hearing by the Government. They challenged the dismissal. Decide.

மத்திய தனி பாதுகாப்பு படை காவல் துறை அலுவலர்கள் பயனுள்ள கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். அக்காவல் துறை அலுவலர்களை விசாரணையின்றி அரசு அந்த அலுவலர்கள் பணி நீக்கம் செய்தது – வழக்கு தொடர்ந்தார்கள் – தீர்மானிக்க.

10. The Indian Postal Department has taken a building for lease from one Raman. It was signed by the Additional Post Master but as per the Postal Departmental Rules the authorised signatory is the Post Master. Raman claims that the contract of lease is void. Decide.

ராமன் என்பவரிடமிருந்து இந்திய அஞ்சல் துறையானது ஒரு கட்டடத்தை குத்தகைக்கு எடுத்தது. அந்த ஆவணம் கூடுதல் அஞ்சல் துறை அலுவலரால் கையொப்பம் இடப்பட்டது. ஆனால் அஞ்சல் துறை விதிகளின்படி குத்தகை ஆவணத்தில் கையொப்பமிட அனுமதிக்கப் பட்டவர் அஞ்சல் துறை அலுவலர் ஆவார். ஆகையால் குத்தகை ஒப்பந்தமானது செல்லுபடி யாகாது என்று வாதிடுகிறார். ராமன் முடிவு செய்க.

11. The Central Government appointed a commit too to select books to be purchased for they Kendiriya Vidhyalaya Schools. Some of the members in the committee were themselves authors of some books and their books were also selected for purchase. Those authors whose books were not selected challenged the selection list. Decide.

கேந்திரிய வித்தியாலயா பள்ளிகளுக்கு நூல்களை தெரிவு செய்ய மத்திய அரசால் ஒரு குழு நியமிக்கப்பட்டது. சில நூல் ஆசிரியர்களும் அக்குழுவில் உறுப்பினர்களாக இருந்தனர். அத்தகைய உறுப்பினர்கள் எழுதிய நூல்களும் வாங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டன. தெரிவு செய்யப்படாத நூல் ஆசிரியர்கள் நூல் தெரிவு பட்டியலின் செல்லும் தன்மையை மறுதளிக்

கிறார். தீர்மானிக்க.

12. The Government of Maharashtra decided to construct a staff quarters in Mumbai without obtaining the permission from the concerned authorities. It started the construction work. The concern authorities questioned the validity of the construction work without permission. Decide.

மும்பையில் உரிய அலுவலரின் அனுமதி பெறாமல் மகாராஷ்டிரா அரசானது அலுவலர் குடியிருப்பை கட்ட தீர்மானித்தது. அனுமதி பெறாமலேயே கட்டிட வேலையை தொடங்கியது. அனுமதி பெறாமல் கட்டட வேலை எவ்வாறு தொடங்கியது என்று தொடர்புடைய அலுவலர்கள் கேள்வியெழுப்பினர். தீர்மானிக்க.

(For candidates admitted from 2009 - 2010 to 2016 - 2017)

B.A., B.L., / B.A., LL.B., DEGREE EXAMINATION, NOVEMBER 2019.

(Five Year Regular Course)
Fourth Year - Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each
ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்க

1. "The term locus standi has been changed beyond recognition" — Elucidate.

"வழக்கிடும் உரிமை என்ற சொல் மாற்றத்திற்குட்பட்டு அங்கீகாரத்திற்கு அப்பால் உள்ளது" – எடுத்தியம்பவும்.

2. Explain the different meanings of "Rule of Law".

"சட்டத்தின் ஆட்சி" என்பதின் பலவிதமான அர்த்தங்களை விளக்கி கூறுக.

3. Explain the Doctrine of Estoppel with the help or decided cases.

முரண்தடை கோட்பாட்டினை முடிவுற்ற வழக்குகளின் உதவியுடன் விளக்குக.

4. Explain Ombudsman system in India.

இந்தியாவில் ஆம்புட்ஸ்மேன் முறையை விளக்கவும்.

5. Critically examine the Government's liability for the torts committed by its servants.

தன் ஊழியர்களால் செய்யப்பட்ட தீங்கு செயல்களுக்கு அரசின் பொறுப்பைக் கூர்ந்தாராய்க.

PART B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டுக்கு குறுகிய விடைகள் அளிக்கவும்.

(a) Administrative directions
நிருவாக ஏவுரைகள்

(b) A.K. Kraipak u Union of India
A.K. கிரைபக் எதிர். இந்தியன் யூனியன்

(c) Re Delhi Laws case AIR 1951 (S.C.) 352
டெல்லி சட்டங்கள் வழக்கு AIR 1951 (S.C.) 352

(d) Election Commission
தேர்தல் ஆணையம்

(e) Laying before parliament.
நாடாளுமன்றம் முன் முன்னிடல்

(f) Bias
மனச்சாய்வு

(g) Franks Committee Report
பிராங்க்ஸ் குழு அறிக்கை

(h) Herschel's doctrine
கெர்சலின் கோட்பாடு

(i) Conseil-de-etat
கான்சில் தி இடாட்

(j) Alternate remedy
மாற்றுத் தீர்வழி

PART C - (4 x 4 = 16 marks)

Answer FOUR of the following not exceeding 2 pages each by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. Ramu, a sub-registrar working in registration department was allowed to retire. After few months, his involvement in under valuation of a land came to light. Registration department initiated disciplinary action against Ramu. Advise.

பத்திரப் பதிவுத் துறையில் சார்புப் பதிவாளராக பணியாற்றிய ராமு என்பவர் ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டார். சில மாதங்களுக்குப் பின்னர், நிலம் ஒன்றினைக் குறைத்து மதிப்பீடு செய்த செயலில் அவரும் பங்கு பெற்றார் என்பது தெரிய வந்தது. பத்திரப் பதிவுத் துறை அவர் மீது ஒழுங்கு நடவடிக்கையினைத் தொடங்கியது. ஆலோசனை வழங்குக.

8. An Air hostess has been terminated from service on her first pregnancy according to the service rules of the Airlines. Decide the validity of the rule.

ஒரு விமான நிறுவனம் தங்களுடைய சட்ட திட்டத்தின்படி முதன்முதலில் கருவுற்ற விமான பணிப் பெண்ணை வேலை நீக்கம் செய்தது. இந்த விதியின் செல்லுந் தன்மையை விளக்குக.

9. Salem & Co. set up its factory in the industrial area on the notification that no tax was payable for the goods exported from that area for 7 years. After 5 years,

export tax was imposed by another notification. The same was challenged. Decide.

தொழில்பேட்டை பகுதியில் அமைக்கப்பட்ட தொழிற்சாலையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு 7 ஆண்டுகளுக்கு வரி இல்லை என்ற அறிவிப்பின் அடிப்படையில் சேலம் & கோ தொழில் தொடங்குகிறது. 5 ஆண்டு முடிவில் வேறு ஒரு அறிவிப்பின் மூலம் ஏற்றுமதி வரி விதிக்கப்படுகின்றது. அது எதிர்க்கப்படுகின்றது – முடிவு காண்க.

10. In the Corporation of Chennai an unused multi- storied building which was about to collapse was demolished by the Corporation without notice to the owner. The same was challenged on the ground of violation of natural justice. Decide.

பயன்பாட்டில் இல்லாத உடைந்துவிழும் நிலையில் உள்ள ஒரு பன்மாடிக் கட்டிடத்தை சென்னை மாநகராட்சி அதன் உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுக்காமல் இடித்து விடுகின்றது. அதன் உரிமையாளர் இயற்கை நீதிக் கோட்பாடு மீறப்பட்டதாக வழக்கிடுகிறார். முடிவு காண்க.

11. A lady doctor in Government service was terminated on the ground that she had given a wrong date of birth at the time of joining service. She contended before the court that she was not given reasonable opportunity to disprove that allegation. Can she succeed in her argument?

பெண் மருத்துவர் ஒருவர் அரசுப் பணியில் சேரும் போது தவறான பிறந்த நாளை திவுருக்களில் பதிவு செய்த காரணத்தால் அவரை நீக்கம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. பணி நீக்கம் செய்யும் முன் அக்குற்றச்சாட்டுகளை பொய்ப்பிக்க வாய்ப்பு ஏதும் வழங்கவில்லை என வாதிடுகிறார். அவ்வாத வாயிலாக அவர் வெற்றி பெற இயலுமா?

12. Disciplinary proceedings were pending against a Government servant, but he was allowed to retire fiom service. Later the government wants to continue the disciplinary proceedings. Advise the Government Servant.

ஒரு அரசு அதிகாரிக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை பூர்த்தியாகாத நிலையில் இருக்கும் பொழுதே அவர் பணியிலிருந்து ஓய்வு பெற அரசு அனுமதித்தது. பின்னர் அவர் மீது அரசு ஒழுங்கு நடவடிக்கையை தொடர விரும்புகிறது. அரசு அலுவலருக்கு அறிவுரை வழங்கவும்.

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

(For candidates admitted from 2017 - 2018 onwards)

B.A., LL.B., DEGREE (SEMESTER) EXAMINATION, JANUARY 2021.

(Five Year Regular Course)
Fourth Year - Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Explain the Control exercised by the Parliament over delegated legislation.
நாடாளுமன்றம் ஒப்படைவு விதியாக்கம் மீது செலுத்தும் கட்டுப்பாடுகளை விளக்கவும்.

2. What are the Constitutional Remedies available to the citizens of India against Administrative Actions?
நிர்வாகத்துறையின் செயல்களுக்கு எதிராக இந்திய குடிமக்களுக்கு கிடைக்கக்கூடிய அரசியலமைப்புபடியான தீர்வழிகள் யாவை?

3. Discuss the Origin, appointment, object, powers and functions of Lokppal.
லோபாலின் தோற்றம், நியமனம், நோக்கம், அதிகாரங்கள் மற்றும் பணிகள் பற்றி விவாதிக்கவும்.

PART B - (2 x 7 = 14 marks)

4. Answer TWO of the following in about 300 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

(a) Distinguish between
(a) Judicial and Quasi - judicial functions
(b) Quasi-judicial and administrative funcions.
வேறுபடுத்திக்காட்டுக:
(அ) நீதித்துறைச்செயல் மற்றும் போல்வு நீதித்துறைச்செயல்
(ஆ) போல்வு நீதித்துறைச்செயல் மற்றும் செயலாட்சி செயல்

5. Write a note on the definition, characteristics and classification of Public Corporation.
பொது கூட்டுருக்களின் வரையறை, இயல்புகள், மற்றும் வகைப்பாடுகள் பற்றி குறிப்பு வரைக.

6. Examine the tortious liability of othe State in India by referring to decided cases.
முடிவுற்ற வழக்குகளின் உதவியோடு இந்திய அரசின் தீங்கியல் பொறுப்பு நிலையை ஆய்க.

PART C - (5 x 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Views of Montesquieu
மாண்டெஸ்கியூ–ன் கூற்றுகள்

(b) Ultra-vires in Delegated Legislation
சட்டமியற்றும் அதிகார ஒப்படைவில் அதிகாரவரம்பு மீறல்

(c) Welfare State
மக்கள் நல அரசு

(d) Statutory and Domestic Tribunals
சட்டப்படியிலான மற்றும் உள்ளகத்துத்தீர்ப்பாயங்கள்

(e) Right to post-decisional hearing
முடிவிற்குப் பின் கேட்கப்படுவதற்கான உரிமை

(f) Abuse of discretion
தன்விருப்ப உரிமையை துஷ்பிரயோகித்தல்

(g) S.P.Guptha -v.- Union of India
எஸ்.பி.குப்தா – எதிர் – இந்திய ஒன்றியம்

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The examination of the respondent Anitha was cancelled on the ground that she was short of attendence. The question was whether such shortage of attendance would disqualify her from the examination. The facts were that Anitha was suffereing from ill - health. Her examination was cancelled without giving her a reasonable opportunity of being heard. - Decide.

எதிர்மனுதாரர் அனிதா என்பவரின் தேர்வு போதுமான வருகைப்பதிவு இல்லாத காரணத்தால் இரத்து செய்யப்பட்டது. போதுமான வருகை பதிவு காரணத்தினால் தேர்விலிருந்து அவரை தகுதியிழக்கச் செய்ய முடியுமா? என்ற முக்கிய கேள்வி எழுந்தது. வழக்கின் பொருண்மையின்படி அனிதா உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்தார். அவரது தரப்பைக் கூற வாய்ப்பு கொடுக்கப்படாமலேயே அவரது தேர்வு இரத்து செய்யப்பட்டது – தீர்மானிக்க.

9. "P" an MLA was arrested unlawfully. His wife filed an application for Habeas Corpus before High Court - Whether the writ will be allowed or not? - Decide.

"P" ஒரு சட்டமன்ற உறுப்பினர். அவர் சட்டமுரணான வகையில் சிறை வைக்கப்பட்டார். "P" ன் மனைவி இதனை எதிர்த்து ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணையை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார். அந்த நீதிப்பேராணை மனு அனுமதிக்கப்படுமா? அல்லது மறுக்கப்படுமா? தீர்மானி.

10. The State Bar Council framed a rule as to "right to practice" legal profession and disqualified persons if they were engaged in any other Occupation. it was challenged by the petitioner who was in the medical profession. - Decide.

மாநில வழக்கறிஞர் மன்றமானது சட்டத்தொழில் புரிவது தொடர்புடைய விதிகளை உருவாக்கியது. அதில் வேறு தொழில்களை செய்பவர்கள் வழக்கறிஞராக தொழில்புரிய தகுதியற்றவர் என விளம்பியது. இவ்விதியை மருத்துவ தொழில்புரியும் மனுதாரர் எதிர்க்கிறார். தீர்மானிக்க.

(For candidates admitted from 2017 - 2018 onwards)

B.A. / L.L.B. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022

(Five Year Regular Course)
Fourth Year - Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Discuss the law relating to judicial control of discretionary powers.
நிர்வாகத்தின் உளத்தேர்வு அதிகாரத்தின் மீது நீதிமன்றங்களின் கட்டுப்பாடுகள் பற்றிய சட்டக் கூறுகளை விவாதிக்க.

2. "The rule of non enforceability of administrative directions is very well established". - Explain, pointing out the exception, if any.
"நிர்வாக முறை ஏவுரைகளைச் செயலுறுத்தாமைப் பற்றிய விதி மிக நன்றாக நிலைநிறுத்தப்பட்டு விட்டது" – விளக்கவுரையுடன் விதிவிலக்குகள் இருப்பின் அவற்றையும் குறிப்பிடுக.

3. Discuss rule of law with specific reference to modern concept of rule of law.
சட்டத்தின் ஆட்சி என்பதை அதன் நவீனகாலக் கருத்தமைவினை எடுத்துக்காட்டுகளுடன் விவாதிக்கவும்.

PART B - (2 x 7 = 14 Marks)

Answer **TWO** of the following in about 300 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the parliamentary control of delegated legislation.
சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு குறித்தான நாடாளுமன்றக் கட்டுப்பாட்டை விளக்கிக் கூறுக.

5. Explain administrative tribunals. Discuss with decided case laws whether appeals can be filed in the High Court against the decision of the State Administrative Tribunal.
நிர்வாகத் தீர்ப்பாயங்களை விளக்கவும், மாநில நிர்வாகத் தீர்ப்பாயம் அளித்த தீர்ப்பில் இருந்து உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்ய இயலுமா என்பது குறித்து தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விவாதிக்கவும்.

6. Explain the historical development of the ombudsman system. Discuss how far it is applicable in India.
ஆம்ப்புட்சுமேன் முறையின் வளர்ச்சி குறித்த வரலாற்றை விளக்கி, இந்தியாவில் அதன் பயன்பாட்டை விவாதிக்கவும்.

PART C - (5 x 4 = 20 Marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Sovereign function.
இறைமைச் செயல்.

(b) Henry VIII Clause.
ஹென்றியின் எட்டாவது விதி

(c) Speaking order.
பேசும் ஆணை.

(d) Laches.
காலதாமதம்.

(e) Droit-Administratif.
ட்ராயட் அட்மின்ஸ்டிரேட்டிப்.

(f) Right to personal hearing.
நேரடி விசாரணைக்கான உரிமை..

(g) Res judicata in administrative decisions.
நிர்வாகத் தீர்ப்புகளில் மறுதீர்ப்புத் தடை.

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A student was permitted to write University examination at the end of the course. The University cancelled his examination on the ground that he was admitted to the examination in spite of shortage of attendance. The student approached the High Court. Decide

மாணவர் ஒருவர் படிப்பு முடிந்து நடைபெறும் பல்கலைக்கழகத் தேர்வுகள் எழுத அனுமதிக்கப்பட்டார். அவர் வகுப்பிற்குப் போதிய வருகை புரியாததால் அவர் எழுதிய பல்கலைக்கழகத் தேர்வை, பல்கலைக்கழகம் ரத்து செய்து விடுகிறது. அம்மாணவர் உயர்நீதிமன்றத்தினை அணுகினார். முடிவு காண்க.

9. 'A', is the executive magistrate. He has got the authority to take disciplinary action against his subordinates. 'B' is the junior assistant working under him. He conducts an enquiry against him. When nobody comes forward to depose against 'B', 'A' himself stands up from his seat and gives evidence against him. Then he himself records the evidence. Advise 'B'.

'A' ஆட்சித்துறை நடுவராவார். அவருக்குக் கீழ் பணிபுரிபவர்கள் மீது ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்க அவருக்கு அதிகாரம் உள்ளது. 'B' அவர் கீழ் பணிபுரியும் இளநிலை உதவியாளராகும். 'B' மீது 'A' ஒழுங்கின்மை குறித்து விசாரணை நடத்துகின்றார். 'B'க்கு எதிராகச் சாட்சியம் அளிக்க எவரும் முன்வராத பொழுது, 'A' அவரது இருக்கையில் இருந்து எழுந்து 'B' க்கு எதிராக சாட்சியம் அளிக்கிறார். பின்பு அதனைப் பதிவு செய்கிறார். இது குறித்து 'B' க்கு ஆலோசனை வழங்கவும்.

10. The Goondas Act authorises the state 'A' to detain any person whose presence in the society is dangerous to public order. The executive magistrate passes a detention order against 'B' under the Goondas Act, stating that his

presence is dangerous to law and order. Decide the validity of the order.

'A' என்ற மாநிலத்தின் குண்டர்கள் சட்டம் பொது அமைதிக்கு பாதிப்பு ஏற்படுத்துகிறவர்களை தடுப்புக்காவலில் வைக்க அதிகாரம் அளிக்கின்றது. 'B' என்பவரின் செயல்பாடு சட்டம் ஒழுங்கிற்கு பாதிப்பு ஏற்படுத்துவதால் குண்டர்கள் சட்டத்தில் தடுப்புக்காவலில் ஆட்சித்துறை நடுவரால் வைக்கப்படுகிறார். இச்செயலின் செல்லும் தன்மையை முடிவு செய்க.

(For candidates admitted from 2017 - 2018 onwards)

B.A. / L.L.B. DEGREE EXAMINATIONS, JUNE 2022

(Five Year Regular Course)
Fourth Year - Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. What do you mean by 'Rule of Law' Examine the validity of Dicey's concept of the Rule of Law in modern times.

'சட்டத்தின் ஆட்சி' என்னும் கருத்மைவின் மூலம் நீவிர் அறிவதென்ன? டைசி அவர்களின் "சட்டத்தின் ஆட்சி" கோட்பாட்டின் நவீன காலப் பயன்களை ஆராய்க.

2. Elucidate the circumstances where natural justice need not be followed by the authorities while deciding disputes.

வழக்குகளுக்குத் தீர்வு காணும் போது எந்தெந்த சூழ்நிலைகளில் நிர்வாக அதிகாரிகள் இயற்கை நீதிக் கோட்பாட்டை பின்பற்ற வேண்டிய தேவையில்லை என்பதை விவரிக்கவும்.

3. The vital changes in the concept of "Locus Standi" is an impact of Judicial activism - Discuss.

நீதித்துறைச் செயல் முனைப்பு தாக்கமே "வழக்கிடும் உரிமை" கருத்தமைவு முக்கிய மாற்றமடைய வழிவகுத்தது – விவாதிக்கவும்.

PART B - (2 x 7 = 14 Marks)

Answer **TWO** of the following in about 300 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "The law relating to the tortious liability of the Government for the acts of its own servants has been developed in India in its own way' - Discuss.

"தனது ஊழியர்கள் செய்த செயலுக்கு அரசின் தீங்கியல் கட்டுப்பாடு குறித்த சட்டம் இந்தியாவில் தானாகவே வளர்ந்தது" – விவாதிக்கவும்.

5. Explain the reasons for the growth and development of Delegated legislation in India.

இந்தியாவில் அதிகார ஒப்படைவு விதியாக்கத்தின் வளர்ச்சிக்கான காரணங்களை விளக்குக.

6. Distinguish between Judicial and Quasi-judicial functions.
நீதிமன்ற நடைமுறைக்கும் நீதித்தன்மை வாய்ந்த அமைப்பிற்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.

PART C - (5 x 4 = 20 Marks)

7. Write short notes on FIVE of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Parent Act.
தோற்றுவாய்ச் சட்டம்.

(b) Laying before Parliament.
பாராளுமன்றம் முன் வைத்தல்

(c) A.K.Kraipak v.Union of India (1969) 2 SCC 262
ஏ.கே.கரியபாக் எதிர் இந்திய ஒன்றிய அரசு (1969) 2 SCC 262

(d) Delegatus non potest delegareLaches.
ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை மீட்டளிக்க இயலாது.

(e) Edward Mills v.State of Ajmer AIR 1955 SC 25.
எட்வர்டு மில்ஸ் எதிர் அஜ்மீர் மாநிலம் AIR 1955 SC 25.

(f) Error of Jurisdiction.
ஆள்வரைத் தவறு.

(g) Injunction.
உறுத்துக்கட்டளை.

PART D - (2 x 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The General Sales Tax Act empowered the Government of Rajasthan to impose sales tax on cellulose limiting that the percentage of tax shall not exceed 10%. Being affected by the Act Akash Mills challenges in the High Court of Rajasthan contending that such power cannot be delegated to the Government. Decide.

பொது விற்பனை வரிச்சட்டமானது மரக்கூறுக்களுக்கு நார்பொருளுக்கு விற்பனை வரி விதிக்கும் அதிகாரத்தை ராஜஸ்தான் அரசிற்கு அளிக்கிறது. ஆனால் அது பத்து சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என நெறிப்படுத்துகிறது இச்சட்டத்தினால் பாதிக்கப்படும் ஆகாஷ் ஆலை இவ்வதிகாரம் அரசிற்கு அளிப்படைவு அளிக்கக் கூடியது அல்ல என்று ராஜஸ்தான் உயர்நீதிமன்றத்தில் மறுதலிக்கின்றது. தீர்மானிக்கவும்.

9. 'X'and 'Y'are Assistant Commercial Tax Officers. 'X'is senior to 'Ý'. 'Ý'was promoted as Deputy Commissioner of Commercial Taxes. 'Y' assumed the charge. After two years, 'X' challenged the promotion of 'Y' in the court stating

that his seniority was overlooked. Decide.

'X' மற்றும் 'Y' ஆகிய இருவருக்கும் உதவி வணிக வரி அலுவலர்கள். 'X' என்பவர் 'Y' என்பவரைவிட பணி முதுநிலையில் உள்ளார். 'Y' வணிக வரி துணை ஆணையராக பணி உயர்வு செய்யப்பட்டார். அவர் அப்பணியில் பொறுப்பும் ஏற்றுக்கொண்டார். இரண்டு வருடங்களுக்கு பின்பு 'X' என்பவர் தன் பணி மூப்பை புறக்கணித்து 'Y' என்பவரை பணி உயர்வு செய்தது ஏற்கதக்கதல்ல என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடருகிறார் – தீர்மானிக்கவும்.

10. 'X' is an illeterate person. He requested to engage a lawyer to represent his matter in an enquiry against him, which was denied by the enquiry committee. Decide whether it will amount to violation of fair hearing?

'X' என்பவர் ஒரு படிக்காத நபர். அவருக்கு எதிரான விசாரணையில் அவர் வடிக்கறிஞரை நியமித்துக் கொள்ள அனுமதி கோருகிறார். விசாரணைக் குழு அவரது கோரிக்கையை மறுக்கின்றது. இச்செயல் நியாயமானக் கேட்டல் விதியை மீறியதாகுமா என்று முடிவு செய்க.

எமது சட்ட நூல்கள் கிடைக்கும் இடங்கள்

சேலம்

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்,
69/42–சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி,
சேலம் 636 007.
தொலைப்பேசி : 0427–2403402
செல்லிடபேசி : 9943025132
இணையதளத்தில் அஞ்சல் செலவு இலவசத்துடன் விரைவாக வாங்க :
www.shripathirajanpublishers.com

சென்னை

சென்னை லா ஹவுஸ்,
223, YMCA பில்டிங்ஸ், பிரான்சிஸ் ஜோசப் தெரு, சென்னை 600 001.
தொலைப்பேசி: 044 – 25390210. செல்லிடபேசி : 9940286311

சி.சீதாராமன் அண்டு கோ பி. லிட்.,
37, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை 600 014

பானுஷா லா புக் சென்டர்,
9, பிரான்சிஸ் ஜோசப் தெரு, சென்னை 600 001.
தொலைப்பேசி: 044 – 25360679.

மதுரை

நேஷனல் லா புக் டிரேடர்ஸ்,
ராஜா முத்தையா மன்றம் சாலை,
டாக்டர் தங்கராஜ் சாலை முதல் குறுக்குத் தெரு,
வினாயகா நகர், ஈகோ பார்க் பின்புற நுழைவாயில் எதிரில், மதுரை 625 020.
செல்லிடபேசி : 9344017798 & 9842117798

கிளை : மதுரை உயர் நீதிமன்ற அமர்வாயம் அருகில்,
பெட்ரோல் பங்க் எதிரில், உலகனேரி, மதுரை 625107

ஓ.பி. ராஜன் லா புக் சென்டர்,
பிளாட் நிர். 540, கே.கே.நகர், மகரிஷி வித்யாமந்திர் பள்ளி அருகில்,
மதுரை 625 020.
செல்லிடபேசி : 9842873176

சுக்லா லா ஹவுஸ்,
12/5, டாக்டர் எஸ்.வி.கே. தங்கராஜ்ரோடு,
அரசு சட்டக் கல்லூரி அருகில்,
விநாயகா நகர், மதுரை 625 020.
தொலைப்பேசி: 0452 – 2538170
செல்லிட பேசி : 94430 53817.

கோயம்புத்தூர்

வி.அங்கமுத்து லா புக் ஷாப்,
61, அரசு கலைக்கல்லூரி சாலை,
புதிய நீதிமன்ற கட்டடம் எதிரில்,
கோயம்புத்தூர் –18. பேசி: 0422 – 2301136
செல்லிட பேசி: 9443383047
மின்னஞ்சல் : angamuthulawbookshop@gmail.com

திருச்சி

பி.ஆர்.லா புக்ஸ் சென்டர்,
9, இப்ராஹீம் நகர்,
ஈவேரா கல்லூரி மற்றும் அரசு சட்டக் கல்லூரி அருகில்,
அண்ணா ஸ்டேடியம் மெயின் ரோடு,
காஜா மலை, திருச்சி 620023.
செல்லிட பேசி: 98421–89564.

விழுப்புரம்

புக் பார்க்,
171, ஆர்.கே.எஸ். காம்ளெக்ஸ், நேருஜி சாலை,
காந்தி சிலை அருகில்,
விழுப்புரம் 605602.
செல்லிட பேசி : 9944412800

திருநெல்வேலி

எம்எஸ்ஆர் லா புக் சென்டர்,
அரசு சட்டக்கல்லூரி எதிரில்,
ரஹாமத் நகர், திருச்செந்தூர் ரோடு,
திருநெல்வேலி 627 011.
செல்பேசி : 9443284358

சட்டக்கல்வியாளர் திரு. பி.ஆர்.ஜெ. எழுதிய பிற நூல்கள்

1.	இந்திய தண்டனைச் சட்டம் (திருத்திய பதிமூன்றாம் பதிப்பு)	420–00
2.	இந்திய ஒப்பந்தச் சட்டம் – I (திருத்திய பத்தாம் பதிப்பு)	300–00
3.	குறித்தவகை நிவாரணச் சட்டம் (திருத்திய ஒன்பதாம் பதிப்பு)	120–00
4.	இந்திய ஒப்பந்தச் சட்டம் – II (பத்தாம் பதிப்பு)	240–00
5.	நுகர்வோர் உரிமைகளும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமும்	240–00
6.	மொழி பெயர்ப்புக்குப் பயனாகும் முக்கிய சட்டத் தமிழ் பதங்களும் விளக்கமும்	185–00
7.	அளவையியல் (அல்லது) தருக்கவியல் (Logic)	55–00
8.	சட்ட மொழியும் சட்டம் வரைதலும்	100–00
9.	சொத்துரிமை மாற்றுச் சட்டம் (வசதியுரிமைச் சட்டத்துடன்)	380–00
10.	சட்டப் பொருள் விளக்கம் (ஏழாம் பதிப்பு)	430–00
11.	வங்கியியல் சட்டம் **(தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)**	230–00
12.	மாற்று முறையாவணங்கள் சட்டம்	150–00
13.	நிருவாகமுறைச் சட்டம் (ஐந்தாம் பதிப்பு)	395–00
14.	இந்திய அரசியலமைப்புச் சட்டம் I (மூன்றாம் பதிப்பு)	360–00
15.	இந்திய அரசியலமைப்புச் சட்டம் II (நான்காம் பதிப்பு)	395–00
16.	இந்திய சாட்சிய சட்டம் (பத்தாம் பதிப்பு)	460–00
17.	நிறுவனச் சட்டம் (பதினொன்றாம் பதிப்பு)	490–00
18.	இந்திய குடும்பச் சட்டம் I (ஒன்பதாம் பதிப்பு)	380–00
19.	இந்திய குடும்பச் சட்டம் II (திருத்திய எட்டாம் பதிப்பு)	370–00
20.	பொது நாட்டிடைச் சட்டம் (திருத்திய ஒன்பதாம் பதிப்பு)	320–00
21.	இசைவுத் தீர்ப்பு, சமரசம் மற்றும் மாற்றுவழியில் தகராறுகள் தீர்வு முறை	320–00
22.	உரிமையியல் நடைமுறைச் சட்டம் (பதிமூன்றாம் பதிப்பு)	330–00
23.	குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்திய பதினொன்றாம் பதிப்பு)	495–00
24.	குற்றவியல் தத்துவம் மற்றும் தண்டனையியல் (திருத்திய எட்டாம் பதிப்பு)	410–00
25.	வாதுரைச் சட்டம் (மாதிரி வரைவுகளுடன்)	165–00
26.	பத்திரமெழுதும் முறையும் மாதிரிப் பத்திரங்களும் (ஒன்பதாம் பதிப்பு)	195–00
27.	நீதிமன்ற விதிகள் (எட்டாம் பதிப்பு)	120–00
28.	Rules of Court	90–00
29.	பொது வகையங்கள் விளக்கச் சட்டம்	100–00
30.	நீதிமன்ற ஆணையர்கள் மற்றும் சொத்துப் பேணுநர்கள் தொடர்பான சட்டம்	165–00
31.	குடியுரிமை தொடர்பான சட்டங்கள்	100–00
32.	வணிக நீதிமன்றங்கள் சட்டம் (திருத்திய இரண்டாம் பதிப்பு)	180–00
33.	ஆதார் சட்டம்	210–00
34.	ஊனங்கள் கொண்ட நபர்களின் உரிமைகள் சட்டம் **(தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)**	200–00
35.	மனித உரிமைகளும் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டமும் **(தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)**	240–00
36.	தமிழ்நாடு கட்டட வாடகைச் சட்டம் (இரண்டாம் பதிப்பு)	160–00